சைவத் தோரணங்கள்

இரா. இராஜசேகரன்

C.S.S.

சைவத் தோரணங்கள்

இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த சைவ நூல்களின் தொகுப்பு

செந்தமிழ்ப்புரவலர், ஞானபாஸ்கரன்

இரா. இராஜசேகரன், பி.எஸ்.சி., பி.எல்.,

பூம்புகார்

பத்தினிக் கோட்டப் பதிப்பகம்
4/149, மேலத்தெரு, மேலையூர், பூம்புகார் - 609 107
தொலைபேசி : 04364 256118

திருமுறை ஆய்வு மாடங்களின் தோரணங்கள்;
இருபதாம் நூற்றாண்டுச் சைவ ஆய்வுகளின் தீபங்கள்.

Pages : 472
Price Rs : 300.00
Paper Used : 13.6 Kg. SPB NS

■ Saiva Thoranagal - a compilation of Saiva books released during twentieth century - in Tamil by R. Rajasekaran ■ First Edition : August 2008 ■ Published by R. Rajasekaran, Pathinikkotta Pathippagam, Melaiyur - 609 107 ■ DTP execution by : M. Xavier Raj, P.S. Muthu Graphics, Chennai - 600 015 ■ Printed at :The Safire Industries, Sivakasi. Ph:04562-320032,320033.

படையல்

வாழ்வில் முதல் நட்பாய் மலர்ந்து, போலித்தனமும், செயற்கைத்
தன்மையும், எதிர்பார்ப்பும் இல்லாமல் பழகி, இளவயதிலேயே
உதிர்ந்துபோய் நெஞ்சில் இன்றளவும் நிற்கும்

சொ. சண்முகசுந்தரம்

என் வாழ்வில் கடுமையான சிக்கல் நேர்ந்த சமயத்தில்
எனக்கு உறுதுணையாக இருந்து நுண்மாண் நுழைபுலத்தாலும்
அன்பாலும் காத்த

திரு. ஏ.எஸ். வெங்கடராம ஐயர் அவர்கள்
எம். ஞானசம்பந்தம், இரா. சிவபுண்ணியம்,
எஸ். நாராயணன்

நான் மேற்கொள்கின்ற செயல்பாடுகள் யாவினுக்கும்
தொடர்ந்து கைகொடுத்து உதவி வரும்.

மேலையூர் சீனிவாசா மேல்நிலைப்பள்ளி மேனாள்,
இந்நாள் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள்,
அலுவலகப் பணியாளர்கள்.

இவர்களுக்கு

என் அன்பின் படைப்பு.

உட்பொதிவு

(I) படையல் 3
(II) கையில் தவழும் ஒரு சைவ கங்கை 9
(III) முன்னுரை 11
(IV) அணிந்துரை – தவத்திரு ஊரன் அடிகள் 13

முதற்பகுதி

(I) கண்டன இலக்கியம் 22
(II) தலபுராணங்கள் 57
(III) சைவாகமங்கள் 61
(IV) பிற சைவ நூல்கள் 64
  1. பாலபாடம் – முதற்புத்தகம் 64
  2. பாலபாடம் – இரண்டாம் புத்தகம் 64
  3. பாலபாடம் – மூன்றாம் புத்தகம் 64
  4. பாலபாடம் – நான்காம் புத்தகம் 64
  5. பெரியபுராண வசனம் 64
  6. திருத்தொண்டர் புராண சூசனம் 64
  7. சைவ வினா விடை – முதற்புத்தகம் 66
  8. சைவ வினா விடை – இரண்டாம் புத்தகம் 66
  9. சிவபராக்கிரமம் 66
  10. மறைமலையடிகளின் சைவ நூல்கள் 66
  11. தேவாரம் – வேத சாரம் 86
  12. திரு.வி.க. நூல்கள் 87
  13. பெரியபுராண ஆராய்ச்சி 90
  14. சிவபூசை விளக்கம் 92
  15. சேக்கிழார் 92
  16. திருமுறை ஒலிநெறிநூல்கள் 93
  17. சிவன் 94
  18. பெரிய புராண ஆராய்ச்சி 94
  19. திருமந்திர மாநாட்டு மலர்கள் 97
  20. சம்பந்தரும் சமணரும் 100
  21. சைவ சமய வளர்ச்சி 100
  22. வேங்கடம் முதல் குமரி வரை 102
  23. நூற்றாண்டுகளில் தமிழ் 103

24. பன்னிரு திருமுறை வரலாறு 107
25. சைவ சித்தாந்தச் சிறுநூல்கள் 121
26. வாருங்கள் பார்க்கலாம் 125
27. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சி 125
28. ஆடல்வல்லான் 127
29. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் 128
30. தமிழ் இலக்கிய வரலாறு 135
31. திருவாசகமும் சிவராஜயோகமும் 138
32. பக்தி இலக்கியம் 139
33. திருமுறைக் கருத்தரங்க ஆய்வுரைகள் 141
34. குன்றக்குடி அடிகளாரின் நூல்கள் 147
35. தெய்வத்தமிழ் 148
36. சேக்கிழார் அடிச்சுவட்டில் 149
37. திருவைந்தெழுத்தின் திறவு 149
38. தமிழர் சமய வரலாறு 150
39. திருவாசகம் 151
40. திருவாசகத்தில் அருளியல் 152
41. சைவ சமயக் கையேடு 159
42. பெரியபுராணம் – ஓர் ஆய்வு 159
43. பதினோராம் திருமுறைத் திறன் 174
44. அறுவகைச் சமயம் – சைவ சித்தாந்தம் ஒப்பீடு 174
45. இந்து கலைக்களஞ்சியம் 174
46. சிவ வடிவங்கள் 176
47. இந்தியச் சிந்தனை மரபு 177
48. சிவநெறிக்கட்டுரைகள் 192
49. தமிழில் தலபுராணங்கள் 193
50. இலிங்கோத்பவர் 193
51. சித்தாந்தக் கட்டுரைகள் 193
52. ஸ்ரீ நடராசத் தத்துவம் 194
53. சேக்கிழார் தரும் செல்வம் 194
54. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் 196
55. இசைத்தமிழின் உண்மை வரலாறு 200
56. திருத்தொண்டருள் ஒரு சிறுத்தொண்டர் 201
57. திருவாசகம் – சில சிந்தனைகள் – 1 202
58. திருவாசகம் – சில சிந்தனைகள் – 2 203
59. திருவாசகம் – சில சிந்தனைகள் – 3 206

60. திருவாசகம் – சில சிந்தனைகள் – 4 213
61. திருவாசகம் – சில சிந்தனைகள் – 5 216
62. சிவபெருமான் கலைக்களஞ்சியம் 225
63. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் 226
64. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆய்வுமாலை 228

(V) பதிப்புகள்

1. பன்னிரு திருமுறைகளின் பதிப்பு வரலாறு 229
  1.1. பன்னிரு திருமுறை தருமை ஆதீனம் 230
  1.2. தேவாரப் பதிப்புகளின் வரலாறு 233
  1.3. திருவாசக மூலப் பதிப்புகள் 235
  1.4. திருவாசகக் குறிப்புரைகள் 235
  1.5. திருவாசக உரைகள் – நூல் முழுமை 236
  1.6. திருவாசகத்தின் சில பகுதிக்கான உரைகள் 236
  1.7. திருவாசகம் – மொழி பெயர்ப்புகள் 237
  1.8. திருக்கோவையார் பதிப்பு வரலாறு 238
  1.9. திருமந்திரம் மூலபாட ஆய்வுப் பதிப்பு 238
  1.10. திருமந்திரப் பதிப்புகள் 239
  1.11. பெரியபுராணம் பேருரை 241
  1.12. பெரியபுராணம் பதிப்புகள் 243
  1.13. பெரியபுராணம் – ஆங்கிலம் 245
2. சைவ சித்தாந்த சாத்திரங்களின் பதிப்பு வரலாறு 246
  2.1. சைவ சித்தாந்த சாத்திர உரைகளின் வரலாறு 247
  2.2. சிவஞானபோதம் பதிப்புகள் 248
  2.3. சிவஞானபோதம் சிற்றுரை 249
  2.4. சிவஞானமாபாடியம் பதிப்புகள் 250
  2.5. மாபாடியப் பதிப்பு வரலாறு 250
  2.6. சிவஞானபோதம் பற்றிய சில நூல்கள் 251
  2.7. பதினாறாம் நூற்றாண்டில் வெளிவந்த பிற உரைகள் 251

இரண்டாம் பகுதி

(I) சைவ சமய நூல்கள் - ஆங்கிலம்

1. The Siddhanta, the Universal Science, Evolution and Religion. 258
2. Studies in Saiva Siddhanta 263
3. Essentials of Hinduism in the light of Saiva Siddhanta 264

4. Dance of Shiva 268
5. A History of Indian Philosophy 270
6. Mohenjo - Daro and The Indus Civilisation 271
7. Studies and Translations - Philosophical and Religious 272
8. Grace in Christianity and Hinduism 273
9. Saiva Siddhantham in relation to Science 278
10. The Siva Purana 279
11. Love of God according to Saiva Siddhanta 280
12. Nataraja in art, thought, and Literature 282
13. The Tao of Physics 291
14. அகில உலக இந்து மாநாடு சிறப்புமலர் 294
15. Shiva and Dionysus 294
16. Experiencing Siva 301
17. The concept of Rudhra Through the ages 306
18. Songs of experience - The Poetics of Tamil Devotion 316
19. Siva Bhakthi 320
20. Philosophical Anthropology in Saiva Siddhanta 322
21. Agama Kosha 323
22. Ritual in an oscillating Universe 324
23. Thanjavur Brahadiswara 325
24. Sonic Theology - Hinduism and Sacred sound 326
25. The Homage of Dancing Siva 326
26. Sri Umapathi Sivacarya - His life, works and contribution to Saivism 326
27. The Dance of Siva 327
28. The emobodiment of Bhakthi 327
29. Saiva Siddhanta - An Indian School of Mystical thought 327
30. Sakthi Visishtadvaitatottvatraya Vimarsah 328
31. Motivation of temple architecture in Saiva Siddhanta 328
32. Mukutagama 329

(II) ஆங்கில நூல்கள் பட்டியல் 329

மூன்றாம் பகுதி

(I) சைவசமய இதழ்கள் 339

1. இந்து சாதனம் 342
2. The Siddhanta Deepika 343
3. ஞானசித்தி 347
4. சித்தாந்தம் 349
5. சைவம் 349
6. செந்தமிழ்ச்செல்வி 350

7. சிவநேசன் 352

8. ஞானசம்பந்தம் 352

9. தொண்டன் 353

10. குமரகுருபரன் 354

11. திருக்கோயில் 356

12. அருவோசை 357

13. மெய்கண்டார் 358

14. சைவ உலகம் 358

15. சிவ சிவ 359

(II) சைவசமய இதழ்கள் - சில குறிப்புகள் 361

(III) சைவசமய இதழ்கள் - காலவரிசை 366

(IV) மக்கள் இரசனை இதழ்கள் 368

1. கல்கி 368

2. கலைமகள் 371

3. ஓம் சக்தி 374

4. அமுதசுரபி 377

நான்காம் பகுதி

(I) 1900 ஆம் ஆண்டு வரை வெளியான நூல்கள் 379

(II) 1901 – 1910 தமிழ்நூல் விவர அட்டவணை 387

(III) 1911 – 1915 தமிழ்நூல் விவர அட்டவணை 398

(IV) 1916 – 1920 தமிழ்நூல் விவர அட்டவணை 404

(V) 1921 – 1930 தமிழ்நூல் விவர அட்டவணை 412

(VI) 1926 – 1930 தமிழ்நூல் விவர அட்டவணை 412

(VII) 1931 – 1935 தமிழ்நூல் விவர அட்டவணை 422

(VIII) 1936 – 2000 தமிழ்நூல் விவர அட்டவணை 426

(IX) திருவாவடுதுறை ஆதீன வெளியீடுகள் 433

ஐந்தாம் பகுதி

செயல்முறை ஆவணம் 470

■■■



கையில் தவழும் ஒரு சைவ கங்கை

திரு. இரா. இராஜசேகரன் அவர்களைச் சைவ உலகத்தின் தருமைக் குருமணி 'செந்தமிழ்ப் புரவலர்' என்று வாழ்த்தியருளினார்கள். வைணவ உலகின் ஜீயர் சுவாமிகள் 'ஞான பாஸ்கரன்' என்று வாழ்த்திச் சிறப்பித்தார்கள். கோவை இளங்கோ மன்றம் அவர்களைச் 'சிலம்பின் காவலர்' என்று சிறப்பித்தது. இவரால் இந்த விருதுகளுக்கே கூட ஒரு விழுப்பம் கிடைத்தது! பூக்களோடு மணம்; தமிழோடு இவர்! தாசில்பண்ணையின் இந்த 'இராஜசேகரம்' தமிழின் சேகரம்! இலக்கியச் சாகரம்!

'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'; இன்ப காவியம்; சிவஞான போதம் உரை; ஆசாரிய ஹிருதயம் தமிழ்வடிவம்; விஷ்ணுபுரம் ஒரு பார்வை; இவை இவர் எழுதிய இனிய நூல்கள்.

அப்பர் அருட்செய்தி; தத்துவமும் பக்தியும்; திருமந்திர நெறி, சிந்தனைச் சிலம்பு; தமிழ் நாவல் – ஐம்பது பார்வை; அறிவின் அறிவு; சிலம்பு என்று இவை இவர் பதிப்பித்த நூல்கள்!

சிலருக்கு ஒரூர்; சிலர் கேளிர், புரவலர்க்கு, ஒரூர் இல்லை; ஒரு பிரதேசம் இல்லை; அவர் ஊர் தமிழூர். அவர் உறவு தமிழ் உறவு; சுற்றும் முற்றும் அவர்க்குத் தெய்வத் தமிழ் மன்றம்; உழவாரம்; பத்தினிக் கோட்டம்; விழித்திரு; கல்வி நிலையங்கள்... என்று இப்படிப் பல அமைப்புகளோடு பன்முகச் சிறப்புகளோடு நிரந்தினிது வாழ்பவர்! இனிய இந்த மனிதரின் உள்ளே படைப்பாளி; விமர்சகன்; சாதனையாளி... என்று பலப்பலர் உலா வருவர்!

இவரது ''சைவப் பெருவெளி''.... எனும் இந்நூல் இவரது ஒப்பற்ற படைப்பு! சைவம்... அஃது அண்ட சராசரங்களை விடப் பெரியது; ஆகாயத்தை விட உயர்ந்தது... சமுத்திரங்களைக் கூடச் சைவம் திவலைகளாய் ஆக்கி விடும்! திரு. இராஜசேகரன் சைவத்தை – சைவ வரலாற்றை எழுத முனைந்தபோது அதற்குச் 'சைவப் பெருவெளி'... என்று பெயர் சூட்டியது அவர் கண்ட சைவ தரிசனத்தின் சுட்டாகும்! கயிலைத் தரிசனத்தை... அடடா! இவர் காலத்தின்

தரிசனமாகச் 'சைவப் பெருவெளி' ஆகக் கண்டிருப்பது... அதில் இராஜசேகரத்தையும் காண வைத்திருப்பது... அரிய முயற்சி!

'இறப்பு... நிகழ்வு... எதிர்வு... காலத்தின் இந்த நேற்று... இன்று... நாளைகளை... ஒரே நேரத்தில் காட்டுவது... புலப்படுத்துவது ஒரு சித்து வேலை மாதிரி... செந்தமிழ்ப் புரவலர் சைவத்தின் அட்ட மூர்த்தங்களையும் இந்தச் சைவப் பெருவெளியில்.. ஒரே நூலில் காட்டியிருப்பது வியப்புக்குரியது... சிவன் ''தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே'' என்பர். இந்நூல் அதுபோலத் தோத்திர – சாத்திர நூல்களாகி அவற்றின் விழுதுகளாகி... அவை பற்றிய எத்தனையோ நூல்களாகி அவற்றின் மாட்சிகளைக்... காட்சிகளைக் காட்டுவதாகி.. விளங்குகிறது.

நம்மாழ்வாரின் நெஞ்சினை... ஆசார்ய ஹிருதயத்தை தமிழ் வடிவில் தந்தபோது வைணவ உலகுக்குச் சேவை செய்தவராய்ப் புரவலர் உயர்ந்தார்! 'காலப் பெருவெளி' யைச் சைவப் பெருவெளியாய்த் தருகிற போது சைவத்துக்குத் தன் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று உயர்கிறார்.

'திருத் தொண்டத் தொகையால்' சுந்தரமூர்த்தி நாயனார் அன்று சைவப் பேரியக்கத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தினார். இன்று 'சைவப் பெரு வெளி' மூலமும்... உழவாரங்களின் மூலமும்... சைவத்தின் எழுச்சிக்கும்... இயக்கத்துக்கும் செந்தமிழ்ப் புரவலர் ஒரு மறுமலர்ச்சித் தென்றலாகியுள்ளார்! புத்தக வடிவில் சைவப் பெருவெளி... ஒரு சைவத்திருப்பள்ளி எழுச்சி! புதிய நோக்கில் 'கையில் தவழும்' ஒரு சைவ கங்கை!

அப்பாலுக்கு அப்பாலாய் பார்த்தது திருத்தொண்டத் தொகை; இப்பாலுக்கு இப்பாலாய்ப் பார்ப்பது இந்த உரைத் தொண்டத் தொகை – ''என்றுமுள சைவம்''. ''சென்ற காலத்தின் பழுதிலாத் திறனும், இனி எதிர்காலத்தின் சிறப்பும்'' எனக் கனவு கண்டார் சேக்கிழார். அவர் இயற்றிய பிறகு பல தொண்டர்கள் பற்றி உதிரி, உதிரியாகப் பாடப் பெற்றுள்ளன. எச்சங்கள் நிரம்ப உள்ளன. அவற்றை நிறைவு செய்கிறது ''என்றுமுள சைவம்'' என்ற இந்த உரைத் தொண்டத் தொகை.

சைவத் தோரணங்கள்

சைவ ஆய்வுலகில், இப்படைப்பே தனித்திறன் சான்றது இது, திருமுறை ஆய்வு மாடங்களின் தோரணங்கள் என்றால் வியப்பில்லை. இருபதாம் நூற்றாண்டுச் சைவ ஆய்வுகளின் தீபங்கள் என்றால் பொய்யில்லை அப்பப்பா! நமது தலைமுறையின் திருமுறை ஆய்வறிஞர்களின் சிந்தனைச் சாத்திரங்கள் எத்துணை! எத்துணை! அத்துணை பற்றியும் எடுத்தாய்ந்திருக்கும் திருமுறை ஆய்வுகளின் பேழை! ஆம்! சென்ற காலத்தின் பழுதிலாத் திறங்களை எதிர்காலத்துக்கு எடுத்துத்தந்து நெஞ்சில் சிவம் மணக்கும், திருமுறை முற்றங்களின் பூக்கள்!

அப்பாலுக்கு அப்பாலாய்... எப்பாலும்... எக்காலத்தும் நிகழும் திருநெறிய தமிழின் தடங்கள்... இதற்குள்ளே! (விசாலமாக).

நிஜமான கங்கைக்குக் கூட ஒரு சங்கமத்தில் நிறைவுண்டு; ஆனால் சைவ கங்கைக்குச் சங்கமங்கள் தொடர்கின்றன.

■■■

முன்னுரை

"இருபதாம் நூற்றாண்டு சைவ சமய வரலாறு'' என்ற வரிசையிலே ஐந்தாவது தொகுதியான இந்நூல் நிறைவுத் தொகுதி ஆகும். முதல் தொகுதி - "சைவப் பெருவெளியில் காலம்'' 1. தொன்மைக் காலம் முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை சைவ சமய வரலாறு, 2. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ அறிஞர்களின் வாழ்க்கைக்குறிப்பும், சைவப் பணிகளும், 3. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ அறிஞர்களின் வாழ்க்கைக் குறிப்பும், சைவப் பணிகளும்; இரண்டாம் தொகுதி - "என்றுமுள சைவம்'' 1, சைவத் திருமடங்களின் வரலாறும், பணிகளும், 2, சோழ, பாண்டிய, நடுநாட்டு மாவட்டங்களில் உள்ள மன்றங்கள், தொண்டர்களின் வரலாறும், சைவப் பணிகளும்; மூன்றாம் தொகுதி - "ஊரெல்லாம் சிவமணம்'' (தொண்டைமண்டலம், கொங்கு மண்டலம், சென்னை நகரம் ஆகிய பகுதிகளில் இயங்கிவரும் மன்றங்கள், தொண்டர்களின் வரலாறும், சைவப் பணிகளும்); நான்காம் பகுதி - "சொற்றமிழ் சூடுவார்'' (ஓதுவாமூர்த்திகளின் வரலாறும், பணிகளும்); ஐந்தாம் தொகுதி - "சைவத் தோரணங்கள்'' (பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த தமிழ், ஆங்கில சைவ நூல்கள்) என ஐந்து தொகுதிகளாக இருபதாம் நூற்றாண்டு சைவ வரலாறு எழுதப்பட்டு நிறைவு செய்யப்பெற்றுள்ளது,

இவ்வரிசை இருபதாம் நூற்றாண்டு சைவ வரலாறு அல்லவா என்பதனை அறிஞருலகம் தான் முடிவு செய்ய வேண்டும், தமிழர்கள் வரலாற்றுணர்வு அற்றவர்கள் என்றும், சமகாலத்திய வரலாற்றைத் தமிழர்கள் எழுதுவதும், ஆவணப்படுத்துவதும் இல்லை என்றும் குற்றச்சாட்டு இருந்து வருகிறது, அந்த வகையில் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த ஒருவன் பனிரண்டு ஆண்டுக்காலம் (5-3-1996 முதல் 31-5-2008 முடிய) தமிழ்நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட அறிஞர்கள், முந்நூறுக்கும் மேற்பட்ட அமைப்புகளின் பொறுப்பாளர்களை சந்தித்துத் தகவல்கள் சேகரித்தும் தமிழ்நாட்டில் 150க்கும் மேற்பட்ட சிற்றூர்கள், பேரூர்களுக்கு நேரிடையாகச் சென்றும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களைப் படித்தும் எழுதப்பட்ட வரலாற்று ஆய்வாகும் இந்நூல். அந்த வகையில் தமிழகம் இந்த ஆய்வை ஏற்றுக் கொண்டால் பெரிதும் மகிழ்வேன்.

சென்னை மறைமலையடிகள் நூலகம், சென்னை உ.வே. சாமிநாதையர் நூலகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம், கன்னிமாரா நூலகம், சென்னை மத்திய நூலகமான தேவநேயப் பாவாணர் நூலகம், கொட்டையூர் ரோஜா முத்தையா நூலகம் (தற்பொழுது சென்னையில் உள்ளது), எழும்பூர் பழஞ்சுவடிகள் நூலகம், தருமபுர ஆதீன நூலகம், திருவாவடுதுறை ஆதீன நூலகம், தவத்திரு ஊரன் அடிகள் நூலகம், தஞ்சை திரு டி.என். இராமச்சந்திரன் நூலகம், பூம்புகார் மேலையூர் இரா. இராஜசேகரன் நூலகம் – ஆகிய நூலகங்களில் உள்ள ஆயிரக்கணக்கான நூல்களை இந்த நூலிற்காகப் பயன்படுத்திக் கொண்டேன். இந்த நூலகங்களின் பணிகள் செயல்பாடுகள் குறித்து ‘‘சைவப் பெருவெளியில் காலம்’’ முன்னுரையில் விரிவுரையாக எழுதியுள்ளமையால் மீண்டும் இங்கு எழுதவில்லை. மேற்குறித்த நூலகங்களின் பொறுப்பாளர்கட்கும், நூலகர்கட்கும் மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள தவத்திரு ஊரன் அடிகளுக்கு என் நன்றி உரியதாகும்.

இந்நூலினை அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும் என் நன்றி உரித்து.

தாசில்பண்ணை,
மேலத்தெரு,
மேலையூர் – பூம்புகார் 609107

அன்புடன்
இரா. இராஜசேகரன்

■■■

அணிந்துரை

தவத்திரு. ஊரன் அடிகளார், வடலூர்

இந்நூலாசிரியர் ''சைவ வரலாற்று வள்ளல் ''திரு. இரா. இராஜசேகரன் அவர்கள் கருவிலே திருவுடையவர். இவரது தந்தையார் திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருத்தவத்துறை (லால்குடி) திரு. ஜி. வரதராஜபிள்ளை அவர்கள் திருக்குறள் திருமந்திரம் திருவாசகம் ஆகிய மூன்று நூல்களுக்கும் உரை எழுதியவர். இம்மூன்று நூல்களையும் வள்ளலார் கண்ட தமிழ்ப்பிரஸ்தானத்திரயம் என்று யாம் கூறுவதுண்டு. வரதராஜபிள்ளை எமக்கு நண்பர். சிறந்த சைவச் செல்வரும் மேற்குறித்த மூன்று நூல்களுக்கும் உரை எழுதியவருமான வரதராஜ பிள்ளையவர்களின் மகனாகப் பிறந்ததனாலே இவரைக் கருவிலே திருவுடையவர் என்றோம்.

வரதராஜபிள்ளை மகனார் இராஜசேகரனார் பூம்புகார் காவிரிப்பூம்பட்டினம் தாசில் பண்ணை திரு.கே.எஸ். இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்குச் சுவீகார மகனாகச் சென்றார்.

பிறந்த வீடு, சுவீகாரம் புகுந்த வீடு என்ற இரண்டாலும் சிறந்தவர் நம் இராஜசேகரனார்.

1. தெய்வத் தமிழ் மன்றம் (1970) – மயிலாடுதுறை
2. பத்தினிக்கோட்டம் (1972) – (கண்ணகி சிலை) காவிரிப்பூம்பட்டினம்
3. உழவாரம் (12984) – மயிலாடுதுறை
4. சிவஞான போதம் – உரை விளக்கம்
5. விஷ்ணுபுரம் – ஒரு பார்வை (நாவல்)
6. ஒன்றே குலம் (பள்ளி நீதி போதனை)
7. பெரியபுராணம் – வாழ்க்கை இலக்கியம் (பள்ளி மாணவர் பதிப்பு)
8. வாழ்வியல் சைவம் (பள்ளிமாணவர் பதிப்பு)
9. சைவப் பெருவெளியில் காலம் (கல்லூரி மாணவர் இளைஞர் பதிப்பு)

ஆகிய ஒன்பதும் நவமணிகளாக இவர் இயற்றிய நூல்கள்.

சொ. சிங்காரவேலரின் ''அப்பர் அருட்செய்தி''
ஜி.வரதராஜபிள்ளையின் ''திருமந்திர நெறி''
அ.ச. ஞானசம்பந்தனாரின் ''தத்துவமும் பக்தியும்''
''தமிழ்நாவல் – 50 பார்வை''
''சிந்தனைச் சிலம்பு''
''சிலம்பு''

ஆகியன இவர் பதிப்பித்த அருமையான நூல்கள்.

''செந்தமிழ்ப்புரவலர்'' – தருமபுர ஆதீனம்

''சிவத்திருத்தொண்டர்'' – திருவாவடுதுறை ஆதீனம்

''ஞான பாஸ்கரன்'' – ஸ்ரீரங்கம் ஜீயர் சுவாமிகள்

''சிலம்பின் காவலர்'' – இளங்கோ கலை மன்றம், கோவை

''சைவ வரலாற்று வள்ளல்'' – தவத்திரு ஊரன் அடிகள் என்பன இவர் பெற்ற விருதுகள்.

சீனிவாசா மேல்நிலைப்பள்ளி – மேலையூர்

மதுரம் துவக்கப்பள்ளி – மேலையூர்

இவை இவர் தொடங்கி நடத்திவரும் நல்ல கல்விக்கூடங்கள்.

இவையெல்லாம், இதுவரை கூறியனவெல்லாம், இவரது பணியில் பொது அதிகாரம் – இரா.இராஜசேகரன். நாம் இனிக்கூறப் போவதுதான் இவரது பணியின் சிறப்பதிகாரம் – சைவ இராஜசேகரன்.

15.05.1942–இல் பிறந்த இவருக்கு 2002–இல் அகவை 60 நிறைந்துவிட்டது. மணிவிழாக் கண்டுவிட்டார். 60–ஐ நெருங்கும் காலத்தில் இவர் எடுத்துக் கொண்ட பணிதான் எல்லாவற்றிலும் பெரிய பணி, சைவப் பெருவெளியை ஆராயும்பணி, அதுவும் காலம் காலமாகப் பிரித்து இணைத்து ஆராயும் பெரும் பணி.

இப்பெரும்பணி இருபெரும் நூல்களாய் முகிழ்த்து வெளிவந்துள்ளது. மூன்றாம் நூல் முகிழ்த்து, இதோ? இந்நூலாக வெளிவருகிறது.

முதல் நூல் : சைவப்பெருவெளியில் காலம் (2003)
2–ஆம் நூல் : என்றுமுள சைவம் (2006)
3–ஆம் நூல் : சைவத் தோரணங்கள் (2008)

இம்மூன்று நூல்களைக் குறித்துச் சுருக்கமாகச் சில வரிகள் –

முதல் நூல்

சைவப் பெருவெளியில் காலம் – பெருவெளி, காலம், இவ்விரண்டுமே எல்லையற்றவை. சைவப் பெருவெளி எல்லையற்றது. அப்பெருவெளியின் காலமும் எல்லையற்றது. தோன்றிய காலம் இன்னதெனக் காணொணாதது. ஈறில் காலமெல்லாம் நிலவக் கூடியது. சைவ உலகின், சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும் சைவ இராசசேகரனாரின் இந்நூலில் அடங்கிக் கிடக்கின்றன. இன்றைய இரண்டும் கெட்டான் நிலைக்கும் பரிகாரம் கூறப்பெறுகிறது. நூல் மூன்று பகுதிகளாக இயல்கிறது. மூன்றாம் பகுதி செயல்முறை ஆவணம். இதுதான் உண்மை அதிகாரம். 1. கொள்கைத் தெளிவு; 2. தனிமனிதன் செயல்பாடு, 3. சமுதாயம், 4. அரசு, 5. அறிஞர்கள், 6. இயக்கம், 7. நூல்கள், இதழ்கள், வெளியீடுகள், 8. ஆய்வாளர்கள் என்று எண்கோணமாய், எண் திசையையும் ஓர் திசையில் திருப்புவதாய் அமைந்துள்ள அற்புதப் புது ஆவணம். One Man Commission Report.

''காலத்துக்கேற்ற புதிய சிந்தனைகளுடன் – புதிய ஊற்றுக் கண்களைத் திறந்து சைவ சமய ஆய்விலும், சைவ உலகிலும் புதிய எழுச்சி காணவேண்டும். அதுவே இருபத்தோராம் நூற்றாண்டின் சிவதரிசனமாகும்.''

என்றுகூறிச் சைவப் பெருவெளியில் காலம் நூலை முடித்துவைத்து, சைவர்களுக்குச் சிவதரிசனம் செய்விக்கிறார் சைவ வரலாற்று வள்ளல் இராஜசேகரனார்.

இரண்டாவது நூல்

என்றுமுள சைவம். இதன் முதற்பகுதி சைவ ஆதீனங்களின் வரலாற்றைக் கூறுவது. யாம் எழுதி வெளியிட்ட சைவ ஆதீனங்கள் (2002) நூலை அப்படியே சுருக்கித் தந்திருக்கிறார். இரண்டாம் பகுதி தலங்கள்தோறும் சைவம் என்ற தலைப்பில் 69 ஊர்களில் உள்ள 69 சைவ மன்றங்களையும் மன்றத்தினரையும் படங்களுடன் விளக்குவது. சைவத்தின் அகலத்தையும் நீளத்தையும் ஆழத்தையும் அளந்து காட்டுவது.

மூன்றாவது நூல்

சைவத் தோரணங்கள் என்னும் இந்நூல். 1801 முதல் 2000 முடிய 200 ஆண்டுகள், இரண்டு நூற்றாண்டுகளின் சைவ நூல் வளர்ச்சி வரலாற்றை வகை தொகைப்படுத்தி விரிவாக அலசி ஆராயும் பெரும்பணி. தமிழ்நூல்கள், சைவ ஆகமங்கள், தலபுராணங்கள், பிற சைவ நூல்கள், பதிப்புகள் ஆங்கில நூல்கள், சைவ சமய இதழ்கள், நூல் விவர அட்டவணை என்று பல பகுதிகளாக, இயன்றுள்ள இந்நூலில் ஆசிரியரின் விமர்சனங்கள் மிகவும் அருமையாக நடுநிலையாக அமைந்துள்ளன.

இராஜசேகரனார் வழங்கும் செயல்முறை ஆவணம்

இந்நூல்களில் ஆங்காங்கே பல இடங்களில் இவர் வழங்கும் கருத்துரைகளும் செந்தொடர்களும் ஆய்வுரைகளும் அருமையிலும் அருமை. குன்றக்குடி அடிகளாரைக் குறிப்பிடும் தலைப்பு ‘‘சைவத் திருமடத்தில் ஒரு சமத்துவபுரம்’’ என்பது. இச்செந்தொடர் அடிகளாரை அப்படியே முழுமையாகப் படம்பிடித்துக் காட்டுகிறதன்றோ! தருமபுர ஆதீன குருமகாசந்நிதானத்தை, ‘‘சொக்கநாதனை நாளும் பிரியாத தருமைநாயகி’’ என்கிறார். இவ்வருமைப் பெயர் தருமபுரம் சந்நிதானத்துக்கு எவ்வளவு பொருத்தம். சொக்கநாதர் பூஜையை ஒரு நாளும் ஒருபோதும் தவிராத சந்நிதானத்தை வேறெப்படிச் சொல்வது!

சைவப் பெருவெளியில் காலம் என்ற முதல் நூலின் மூன்றாம் பகுதியான செயல்முறை ஆவணத்தைச் செயற்படுத்தினாலே போதும். சைவ உலகம் எங்கோ உச்சத்திற்குச் சென்றுவிடும். அப்பதினெட்டுப் பக்க ஆவணம் இன்றைய சைவ இளைஞர் உலகு விழிப்புணர்ச்சியும் எழுச்சியும் பெறுவதற்கு ஒரு சாதனம். வருங்காலச் சைவ உலகம் சாதிக்க வேண்முடும்.

இராஜசேகரனார் தமிழறிஞர்; சைவ அறிஞர்; சட்டக் கல்வி கற்றவர் என்பது மட்டுமன்று. வைணவமும் அறிந்தவர். நாவல், சிறுகதை முதலிய புதிய மரபுகளிலும் சிறந்த அறிவாற்றல் உடையவர்.

பொதுவாகச் சைவர்கள் வைணவத்தில் ஈடுபாடு கொள்வதில்லை. அவ்வாறே வைணவரும் சைவத்தில் ஈடுபாடு கொள்வதில்லை. இராஜசேகரனார் இதற்கு விதிவிலக்கு. வைணவ நூலாகிய ஆசாரிய ஹிருதயத்திற்கு ஓர் அருமையான தமிழ்ப் பதிப்பை ஆக்கி வெளியிட்டிருக்கிறார். அருமையான தமிழாக்கம். கண்ணுக்கு இனிய நூலமைப்பு. கருத்துக்கு இனிய உட்பொருள் அமைப்பு.

ஆசார்ய ஹிருதயம் – தமிழாக்கம் – இனிய வடிவம் என்ற பெயர் முற்றிலும் பொருந்தும். வைணவர்களே கூட இப்படி ஒரு பதிப்பை வெளியிட்டதில்லை.

பழைமையில் ஈடுபாடு கொண்டவர்கள் அநேகமாகப் புதுமையில் ஈடுபாடு கொள்வதில்லை. பழந்தமிழ் நூல்களில் ஈடுபாடு கொண்டவர்கள் நாவல் சிறுகதை முதலிய புதிய விஷயங்களில் ஈடுபாடு கொள்வதில்லை. இராஜசேகரனார் இதிலும் விதிவிலக்கு. சமயப் பற்றும் அறிவும் மிக்க இவர் நாவல் கருத்தரங்கையும் நாவல் நூற்றாண்டு விழாவையும் நடத்தினார். நல்லதொரு நாவலுக்குச் சிறந்த விமர்சனம் ஒன்றை எழுதினார். படிப்பாளி, படைப்பாளி, பதிப்பாளர், ஆய்வாளர், என்பதோடு சிறந்த விமர்சகரும் ஆவார். இராசசேகரனாரின் அறிவு பன்முக அறிவு. இப் பன்முக அறிவும், பரந்த உலகியலறிவும் இவரது ஆய்வுகளும் ஆய்வு முடிவுகளும் திறம்பட அமைவதற்குக் கைகொடுக்கின்றன என்பது எமது கருத்து.

முன்னைப் பழமையையும் பின்னைப் புதுமைகளையும் ஒருங்கே அறிந்த இவ்வாசிரியர் சைவத் தமிழுலகுக்கு ஓர் அச்சாணி, சிறந்த அணிகலன், வருங்கால இளம் ஆய்வாளர்கள் இவரை முன்னோடியாகக் கொள்ள வேண்டும்.

யாம் இவரை எம் இளைய சகோதரராகப் பாவிக்கிறோம். இவருடைய பழக்கம் நட்பு நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

சைவப் பெருவெளியில் காலம்
என்றுமுள சைவம்
சைவத்தோரணங்கள்

ஆகிய இவரது முப்பெரு நூல்களும் பல்கலைக்கழக நூலகங்களிலும், கல்லூரி நூலகங்களிலும் அரசு பொது நூலகங்களிலும் கட்டாயம் இடம்பெற வேண்டும். சைவர் இல்லங்கள் தோறும் இருக்கவேண்டும். சைவக் கோயில்களிலும், சைவ ஆதீனங்களிலும், சைவ சபைகள் மன்றங்கள் முதலிய அமைப்புகளிலும், கருத்தரங்கங்களாக, வகுப்புகளாக, தொடர் சொற்பொழிவுகளாக, வகுப்புகளாக, தொடர் சொற்பொழிவுகளாக அறிஞர்களால், தொண்டர்களால் நடத்தப்பெற வேண்டும் என்பது நம் பரிந்துரை.

இவரை இனி இரா.இராஜசேகரன் என்று யாம் வழங்கமாட்டோம். ‘‘சைவ இராஜசேகரன்’’ என்றே வழங்குவோம். உலகமும் அப்படி வழங்குவதாகுக.

‘‘சைவ வரலாற்று வள்ளல்’’ என்றொரு சிறப்பு விருதை இவ்வணிந்துரை மூலமாக இன்று யாம் இவருக்கு வழங்குகிறோம். முப்பெரு நூல்களை வழங்கி வள்ளற்பெயர் பெறும் சைவ வரலாற்று வள்ளல் சைவ இராசேகரனார் இன்னும் இவைபோன்ற பற்பல நற்பணிகளைச் செய்து நூறாண்டுகள் நிறைவாழ்வு வாழ எம்பெருமானை இறைஞ்சி வாழ்த்துகிறோம்.

வாழ்க சைவ இராஜசேகரன்!

வாழ்க சைவ வரலாற்று வள்ளல் இராஜசேகரனார்!

வாழ்க! வாழ்க!!

■■■

முதற் பகுதி

சைவ நூல்கள் - தமிழ்

(1801 - 2000)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் இரண்டு முக்கிய நிகழ்வுகள் நிகழ்ந்தன முதலாவது நிகழ்வு : 1835-ஆம் ஆண்டில் அச்சிடும் உரிமையை ஆங்கிலேய அரசு இந்தியருக்கு அளித்தது. இதனால் தமிழ் நூல்கள் பலவும் அச்சுக்கு வரலாயின.

மற்றுமொரு முக்கிய நிகழ்வு : 1812-ஆம் ஆண்டில் சென்னைக் கல்விச் சங்கம் (The College of Fort St. George) நிறுவப்பட்டது. இதன் சார்பாக நூல் நிலையம், அச்சகம், புத்தக விற்பனை நிலையம் நிறுவப்பட்டன. இச்சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் சுற்றி ஏடுகள் சேகரிக்கப்பட்டன.

1850-ஆம் ஆண்டில் சென்னைப் பாடசாலைப் புத்தகச் சங்கமும் (The Madras School Book Society), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகமும் (Government Oriental Manuscripts Library) துவக்கப்பட்டன. புத்தகச் சங்கம் பல நல்ல உரைநடை நூல்களை எழுதி வெளியிட்டதுடன் நல்ல உரைநடை செய்வோருக்குப் பொருள் உதவி, அன்பளிப்புகளையும் அளித்தது.

தமிழ் நூல்களின் வளர்ச்சியில் மெக்கன்சியின் பங்களிப்பு சிறப்பான ஒன்று ஆகும். 1782-ஆம் ஆண்டில் இந்தியா வந்த மெக்கன்சி தான் பணியாற்றிய முப்பத்தெட்டு ஆண்டுகளிலும் (1783-1821) பல்வேறு மாவட்டங்களையும் சுற்றிப் பார்த்துப் பல நூல்களைத் தொகுத்தார். மெக்கன்சி ஆய்வுக்கு உதவியவர் கர்னல் விக்ஸ் ஆவார். இந்நூல்களைச் சேகரிக்க பதினையாயிரம் பவுண்டு செலவாயிற்று. விக்ஸ் மறைந்தபின் 1828-ஆம் ஆண்டில் பேராசிரியர் வில்சன் இத்தொகுப்பினை வெளியிட்டார். இத்தொகுப்பில் தமிழில் 192 கையேட்டுப் படிகள் தொகுக்கப் பெற்றன. இவற்றில் புராணம் (44), கதை, பாட்டு, நாடகம் (சமய அறவாழ்வு பற்றி) (72), தத்துவம் (10) ஆகியன அடங்கும். இவையன்றி ஒவ்வொரு ஊரிலும் வழங்குகிற சிறுகதைகள், பழக்க வழக்கங்கள் பற்றியும் 255 தமிழ் நூல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன.

1865-ஆம் ஆண்டில் ஜான்மொர்டாக் என்பவர் தமிழ் மொழியில் அச்சேறி வெளிவந்த நூல்களையெல்லாம் தொகுத்து வெளியிட்டார். இத்தொகுப்பில் 1755 நூல்கள் உள்ளன. இவற்றில் 508 நூல்கள் இந்து சமய நூல்கள் ஆகும்.

1867-ஆம் ஆண்டுக்குப் பிறகு நாட்டில் அச்சாகும் நூல்களில் ஒவ்வொன்றின் படியும் அரசாங்கத்திற்கு (Registrar of Books) அனுப்பி வைக்க வேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டது. எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளியான நூல்கள் அனைத்தும் அரசாங்க முத்திரையைப்பெற்று வரிசைப்படுத்தப் பெற்றும் வகையாக எண்ணிடப் பெற்றும் சேர்த்து வைக்கப்பெற்றன. தமிழ்நாட்டு அரசினர் அவற்றைத் தொகுத்து (1867-1900) மூன்று பகுதிகளாக வெளியிட்டனர். இவை தமிழ் நூல் விவர அட்டவணை எனப் பெயரிடப்பட்டன.

இதன்பின் தொடர்ந்து 1901-1910, 1911-1915, 1916-1920, 1921-1925, 1926-1930, 1930-1935 வரை தமிழ் நூல் விவர அட்டவணைகள் வரலாயின. சைவ சித்தாந்த சாத்திரம், சைவசித்தாந்த தத்துவம்,

சைவ சமயம் – துதி நூல்கள், சைவசமய நெறிகள், சைவ புராணங்கள், திருமுறை இலக்கியம் எனும் ஆறு பிரிவுகளில் நூல்கள் பட்டியல் இடப் பட்டுள்ளன.

1964-ஆம் ஆண்டு முதல் 1980-ஆம் ஆண்டு வரை கன்னிமாரா நூலகத்திற்கு வந்த நூல்கள் பட்டியலிடப்பட்டு ''நூற்றொகை'' என்ற பெயரில் வெளி வந்தன. 1981-ஆம் ஆண்டு முதல் 2000-ஆம் ஆண்டு வரை நூலகத்திற்கு வந்த நூல்களின் பட்டியல் கையால் எழுதப்பட்டு வைத்துள்ளனர். அவற்றைப் பார்வைக்குத் தந்தனர்.

இவையல்லாமல் தருமையாதீன நூலகம், திருவாவடுதுறை ஆதீன நூலகம், கன்னிமாரா நூலகம், மறைமலையடிகள் நூலகம், உ.வே. சாமிநாதையர் நூலகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம், தேவநேயப்பாவாணர் மத்திய நூலகம் ஆகிய நூலகங்களில் உள்ள சைவ நூல்கள் அனைத்தும் பார்வையிடப்பட்டன. நான் கடந்த முப்பது ஆண்டுகளாகச் சேகரித்து வைத்து இருக்கும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களின் ஒரு பகுதியான சைவ நூல்களும் துணை நின்றன. வடலூர் தவத்திரு ஊரன் அடிகள் அவர்களின் நூலகமும் தஞ்சாவூர் வழக்கறிஞர் திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்களின் நூலகமும் பயனளித்தன.

சைமன் காசி செட்டியின் "The Tamil Plutarch" (1859), மயிலை சீனி. வேங்கடசாமியின் ''பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்'' (1962), கா.பொ. இரத்தினத்தின் ''நூற்றாண்டுகளில் தமிழ்'', அ.மு. பரமசிவானந்தத்தின் ''பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சி'' (1966), ச. சிவகாமியின் ''பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்'' (1994) ஆகிய நூல்கள் தமிழில் வெளிவந்த நூல்களைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளன.

தமிழ் இலக்கியத்தில் சமயம் பெரும் இடம் பிடித்திருப்பது மறுக்க முடியாவொன்று. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இவ்வாறே அமைந்துள்ளது. அச்சு இயந்திரம் பயன்பாட்டுக்கு வந்தமையால் ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயத்தைப் பரப்ப நூல்களை அச்சிட்டுக் கொணர்ந்தனர். அரசு கிறித்துவ சமய சார்புடையதாயிருந்தமையாலும், முதன் முதல் அச்சு இயந்திர வசதி கிறித்தவாகளுக்குக் கிடைத்தமையாலும் கிறித்தவ நூல்கள் நிரம்ப வெளிவரலாயின. தங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்பியதோடு இந்து சமயக் கொள்கைகளைக் கண்டனம் செய்யும் வகையாகவும் நூல்களை வெளியிட்டனர். சைவ சமய நூல்களும் இவ்வாறே அமைந்தன. கிறித்துவ சமய தூடணம், வைணவ தூடணம், வேதாந்த – சித்தாந்த தருக்கம் என அமைந்தன. ''கண்டன இலக்கியம்' என்றே தனி இலக்கிய மரபு தோன்றிவிட்டது. சாது இரத்தின சற்குரு என்ற தனியொருவர் மட்டுமே 24 கண்டன நூல்களைப் படைத்துள்ளார். 1854-ஆம் ஆண்டு முதல் 1930-ஆம் ஆண்டு வரை கண்டன இலக்கிய காலம் எனலாம்.

துதிப்பாடல்களும் இந்நூற்றாண்டில் பல்கிப் பெருகின. அகவல், அந்தாதி, திருப்புகழ், பதிகம் என்று பல வகையில் வெளிவந்தன. வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளும், வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளும் ஆயிரக்கணக் கில் பாடிக் குவித்தனர். தண்டபாணி சுவாமிகள் பாடியனவாக 49,000 பாடல்கள் இன்று நமக்குக் கிடைத்துள்ளன. வள்ளலார் அகப்பொருளாக 54 பதிகங் களும் இசை வடிவில் 51 பதிகங்களும் பாடியுள்ளார். பத்தொனபதாம் நூற்றாண்டின் தனிச் சிறப்பு தல புராணம் ஆகும். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை மட்டிலும் 22 தலபுராணஙகள் பாடியிருக்கிறார். இந்நூற்றாண்டில் 51 தல புராணங்கள் எழுந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டினைத் ''தலபுராணக் காலம்'' என்றும் கூறலாம்.

இந்நூற்றாண்டில்தான் உரைநடை என்ற புதிய வடிவம் தமிழ் இலக்கியத்தில் தோன்றியது. இதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டவர் நல்லூர் ஆறுமுகநாவலரே ஆவார். நாவலர் பெருமானின் பெரியபுராண வசனம் (1852- இல் வெளிவந்து 2000 வரை வெளியானமை 23 பதிப்புகள்), பாலபாடம் – முதல் புத்தகம் (1850 - 36 பதிப்புகள்), பாலபாடம் –

இரண்டாம் புத்தகம் (1850 - 24 பதிப்புகள்), பாலபாடம் – மூன்றாம் புத்தகம் (1882 - 15 பதிப்புகள்), பாலபாடம் – நான்காம் புத்தகம் (1865 - 32 பதிப்புகள்), சைவ வினா விடை – முதல் புத்தகம் (1873- 24 பதிப்புகள்) இக்காலகட்டத்திலே எழுந்தன. நாவலர் பெருமானின் நூல்களின் பதிப்புகள் இடையீடு இல்லாது தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் வரலாற்றினைப் பார்க்கும் பொழுது ஒரு நூல் அந்நூலாசிரியரின் வாழும் காலத்திலும், அவர் காலத்திற்குப் பிறகும் எவ்வாறு வெளியிடப்பட வேண்டும் என்பதற்கு நல்ல எடுத்துக் காட்டுகள் ஆகும்.

திருமுறைகளைச் சஞ்சிகை (இதழ்) வடிவில் கொண்டு வருவது இக்காலகட்டத்தில் வழக்கமாக இருந்திருக்கின்றது. இந்த அடிப்படையில் நாவலர் பெருமான் 1869-ஆம் ஆண்டில் பதினோராந் திருமுறையை 40 சஞ்சிகைகளுக்கு மேலாக வெளியிட்டுள்ளார். அதேபோல சுப்பராயச் செட்டியாரும் 1869-ஆம் ஆண்டில் பதினோராந் திருமுறையைச் சஞ்சிகைகளாக வெளியிட்டிருக்கிறார்.

இருபதாம் நூற்றாண்டில் கவிதையின் செல்வாக்கு குறைந்து உரைநடையின் செல்வாக்கு பெருகலாயிற்று. சமய விளக்க நூல்களும், திறனாய்வு நூல்களுமாக வெளிவரலாயின.

இந்நூற்றாண்டின் முற்பாதியில் மறைமலையடிகள், திரு.வி.க., சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஆகியோரின் நூல்கள் வெளிவந்தன. திரு.வி.க.வின் வாழ்க்கைக் குறிப்புகளும், உ.வே. சாமிநாதையரின் ''ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் வாழ்க்கைச் சரித்திரமும்'', ''என் சரித்திரமும்'', சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் பெரியபுராண உரையும் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

இந்நூற்றாண்டின் பிற்பாதியில் மா. இராசமாணிக்கனார் (பெரிய புராண ஆராய்ச்சி, சைவ சமய வளர்ச்சி), ஆ. வேலுப்பிள்ளை (தமிழ் இலக்கியத்தில் காலமும், கருத்தும், தமிழர் சமய வரலாறு), ப. அருணாசலம் (பக்தி இலக்கியம்), தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (சமணரும் சம்பந்தரும், அன்புமுடி, சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும்), அ.ச. ஞானசம்பந்தன் (தேசிய இலக்கியம், சேக்கிழார் தந்த செல்வம்), தவத்திரு குன்றக்குடி அடிகளார் (பல நூல்கள்) ஆகியோர் எழுதி வந்தனர். க. வெள்ளை வாரணனாரின் ''பன்னிரு திருமுறை வரலாறு'', அ.ச. ஞானசம்பந்தனாரின் பெரிய புராணம் ஓர் ஆய்வு, திருவாசகம் – சில சிந்தனைகள் (5 தொகுதிகள்), மு. அருணாசலத்தின் தமிழ் இலக்கிய வரலாறு - ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரை (11 தொகுதிகள்), வ.சு. செங்கல்வராய பிள்ளையின் திருமுறை ஒளி நெறி நூல்கள் (பெரியபுராணம் நீங்கலாக 9 தொகுதிகள்), ஜி. வரதராஜனின் திருமந்திர உரை (3 தொகுதிகள்) ஆகியன மகத்தான ஆக்கங்கள் ஆகும். தருமையாதீன வெளியீடான பன்னிரு திருமுறை உரை (பெரியபுராணம் நீங்கலாக 13 நூல்கள்) இந்நூற்றாண்டின் மகத்தான சாதனை ஆகும்.

தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் ''அன்புமுடி'' ஐந்து பதிப்புகள் வெளிவந்தன. நான்காம் பதிப்பு மட்டுமே 5000 பிரதிகளாக வெளிவந்தது. கே.எம். வேங்கடராமையா (கல்வெட்டில் தேவார மூவர்), அ. நடேச முதலியார் (அருளியலில் அறிவியல்), கு. முத்துராசன் (சேரமான் பெருமாள் நாயனார் பாடல்கள் – ஓர் ஆய்வு), மா.சு. சாந்தா (சிவப்பிரகாசரின் இலக்கிய நூல்கள் – ஒரு திறனாய்வு, காரைக்காலம்மையாரும் அக்கம்ம தேவியும், கன்னடத்தில் காரைக்கால் அம்மையார் வரலாறு), ப. கோபாலன் (திருவிளையாடற் புராணம் – இலக்கிய மதிப்பீடு), டாக்டர் இரத்தின கிருட்டின மூர்த்தி (பெரிய புராணத்தில் உருக்காட்சி) ஆகியோர் யாரும் தொடாத தலைப்புகளை எடுத்துக் கொண்டு விரிவாக ஆய்ந்துள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டில் சைவ நூல்கள் வெளிக்கொணருவதில் திருமடங்களின் பங்களிப்பு கணிசமானது. சாத்திர நூல்களும், திருமுறைகளும், திருமடங்களின் அருளாளர்களின் நூல்களுமாக அடுத்தடுத்து வெளியிட்டு வந்தனர். ஸ்ரீ தருமை

யாதீனத்தின் பன்னிரு திருமுறை உரை வெளியீடு பற்றி முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீன வெளியீடுகளாக திருமந்திர உரை (பஞ்சாக்கர தீபம்), ஸ்ரீநிவாசாச்சார்யாவின் சாத்திர உரைகள், ஆடல்வல்லான் போன்ற மூர்த்திகளைப் பற்றிய நூல்கள் தனித்து விளங்குகின்றன. திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் திருமுறைகளையும், சாத்திர உரைகளையும் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன. ஒரு காலகட்டத்தில் திருமுறை என்றால் ஸ்ரீகாசி மடத்துப் பதிப்பு மட்டுமே என்றிருந்தது. வெள்ளைவாரணனாரின் மகத்தான படைப்பான ''பன்னிரு திருமுறை வரலாறு'' – 2-ஆம் தொகுதி (1000 பக்கங்களுக்கு மேல்) ரூ.2.90 என மிகக் குறைந்த விலைக்கு வழங்கியது அக்காலத்தில் பெரிதும் பேசப்பட்டது. நிறுவனங்கள் என்ற நிலையில் சைவ சித்தாந்தப் பெருமன்றம் சாத்திரங்களையும், திருமுறைகளையும் மா.பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களைக் கொண்டு வெளியிட்டு ''மா.பா. பதிப்பு'' என்றே ஒரு பெயரினை பெற்றுவிட்டது. ஒரு கால கட்டத்தில் திருமுறை, சாத்திரம் மட்டுமல்லாது சைவ சமயம் தொடர்பாக எந்த ஒரு நூலாயினும் அந்நூல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வெளியீடாகத்தான் இருக்க முடியும் என்று இருந்தது. சைவ சமய விளக்க நூல்களும் தொடர்ந்து வெளியிட்டனர். கழகத்தின் பணி குன்றின் மேலிட்ட விளக்காய் ஒளிர்கின்றது.

■■■

I

கண்டன இலக்கியம்

தம் சமயக் கருத்துக்களை விளக்கமாக எடுத்துக் கூறுவதும், பிற சமயக் கருத்துக் களை மறுப்பதும் கண்டன இலக்கியம் ஆகும். கண்டன இலக்கியம் எழுத பல சமயங்களைப் பற்றிய ஆழ்ந்த தெளிவான அறிவும், தருக்கப் புலமையும் வேண்டும். மாற்றுச் சமயத்தார் ஒரு கருத்து தெரிவித் தால் அதனை உடனடியாக ஆதாரங்களோடு மறுக்கும் திறமை வேண்டும். வெறும் இழித்துரை மட்டும் கண்டன இலக்கியம் ஆகாது. முற்காலத்தில் எழுந்த கண்டனங் கள் விஷயங்களின் பொருந்தாமை மட்டுமே கூறும். எனவே இவை வரவேற்கத் தக்கன. பிற்காலத்தில் எழுந்த நூல்கள் வெறும் தூஷணைகள் நிரம்பியிருந்தன. இதனை எதிர் இலக்கியம் (Controversial Literature) என்பர்.

மணிமேகலை

தமிழில் எழுந்த முதல் கண்டன இலக்கியம் மணிமேகலை ஆகும். ''சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை''யில் மணிமேகலை உண்மைப் பொருளைத் தெரிந்து கொள்வதற்காகப் பல்வேறு சமயவாதிகளை அணுகுகிறாள்.

'நவை அறு நன் பொருள் உரைமினோ' என 'சமயக் கணக்கர் தம் திறம் சார்ந்து' (மணிமேகலை : சமயக் கணக்கர் தம் திறம் கேட்டகாதை; வரி *1, 2*)

வைதிக மார்க்கத்து அளவை வாதி (''நின் கடைப்பிடி இயம்பு''), சைவ வாதி (''பரசும் நின் தெய்வம் எப்படித்து?'') பிரமவாதி, வைணவ வாதி, வேதவாதி, ஆசீவகவாதி (''பேசும் நின் இறையார்? நூற்பொருள் யாது?''), நிகண்டவாதி (''நீ உரை நின்னால் புகழும் தலைவன் யார்? நூற்பொருள் யாவை? அப்பொருள் நிகழ்வும் கட்டும் வீடும் மெய்ப்பட விளம்பு''), சாங்கியவாதி, வைசேடிகவாதி (''வைசேடிக! நின் வழக்கு உரை''), பூதவாதி (''பூதவாதி! புகல் நீ'') எனப் பல்வேறு சமயவாதிகளிடமும் மணி மேகலை அவர்தம் சமயக் கருத்துக் களைக் கேட்டறிகிறாள்.

இங்கு மணிமேகலை சமய உண்மை களை அறிதலில் உள்ள நாட்டமே மிக்கு இருக்கிறது. மறுப்பு என்பது அதிகம் இல்லை.

''வேதபுருடனின் கைகள் கற்பம் என்பதான வேதங்களின் ஆறங்கம்; கால்கள் சந்தம்; கண்கள் எண்கள்; செவிகள் நிருத்தம்; மூக்கு சிகைஷ; சொல் இலக்கண மாகிய வியாகரணத்தை மூலமாகப் பெற்று, யாதொரு சார்பினையும் பற்றுதலாகக் கொள்ளாது தோன்றுதல் இல்லாத வேத புருடனுக்கு ஆதியும் இல்லை; அந்தமும் இல்லை. அவ்வேதங் கள் உரைப்பதே எந்நெறி'' என்கிறான் வேதவாதி. இதனை ''மெய்த்திறம் வழக்கு என்பவற்றோடு இவர் கருத்து இசைந்து வரவில்லை'' என்கிறாள் மணிமேகலை.

''கற்பம் கை சந்தம் கால் எண் கண்
தெற்றென் நிருத்தம் செவி சிக்கை மூக்கு
உற்ற வியாகரண முகம்பெற்று
சார்பின் தோன்றா ஆரண வேதக்கு
ஆதி அந்தம் இல்லை அது நெறியெனும்

வேதியன் உரையின் விதியும் கேட்டு
மெய்த்திறம் வழக்கு என விளம்புகின்ற
எத்திறத்திலும் இசையாது இவர் உரை''

[மணி; சமயக். வரி 100-107]

ஆசீவகன் தன் சமயக் கருத்தை முன் வைக்கிறான். அது முன்னுக்குப் பின் முரணாக இருப்பதாக மணிமேகலை கூறு கிறாள். ''சொல் தடுமாற்றத் தொடர்ச்சியை விட்டு'' *(மணி; சமய; 166)*

நிறைவாக எல்லா சமய நெறிகளையும் கேட்டு ''அவை ஏற்புடையன அல்லவா யினும் நான் மறுத்து உரையேன்'' என் கிறாள் மணிமேகலை.

''நன்று அல ஆயினும் நான் மாறு உரைக்கிலேன்'' *(மணி; சமய; வரி 278)*

பூதவாதி ''மறுபிறப்பு இல்லை'' என்று சொன்னமையால் மறுபிறப்பினை அறிந்தமையால் மறுத்து நகைக்கின்றாள். உடனே பூதவாதி ''மறுபிறப்பு ஐயத்திற்கு உரியது. உண்மையன்று'' என்கிறான். உடனே மணிமேகலை ''தாய் தந்தையாரை அனுமானத்தால் அறிவதன்றி வேறு எவ்வாறு அறிவாய்? மெய்ப்பொருள்களை அறிய அனுமானத்தின் உதவியில்லாமல் அறிய இயலாது'' என்கிறாள். இரு சமய வாதிகள் நேருக்கு நேர் தம் கருத்துக்களை முன்வைத்து மறுக்கும் நிகழ்ச்சி, தமிழ் இலக்கிய வரலாற்றில் இதுவே முதன்மையானதாகும்.

''பிறந்த முன்பிறப்பை எய்தப் பெறுதலின்
அறிந்தோர் உண்டோ?' என்று நக்கிடுதலும்,
'தெய்வமயக்கினும் கனா உறுதிறத்தினும்
மையல் உறுவார் மனம் வேறு ஆம் வகை
ஐயம் அன்றி இல்லை' என்றலும் நின்
தந்தை தாயாரை அனுமானத்தால் அல்லது
இந்த ஞாலத்து எவ்வகை அறிவாய்?
மெய்யுணர்வு இன்றி மெய்ப்பொருள் உணர்வரிய
ஐயம் அல்லது இது சொல்லப் பெறாய்'

[மணி; சமய; வரி 279-287]

ஞானசம்பந்தர்

அடுத்து, ஞானசம்பந்தர் காலத்திலே சமண – பௌத்த வைணவ சமயங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை வருகின்றது. வைணவ சமயத்தை ஞான சம்பந்தர் கடுமையாகத் தாக்கவில்லை. ''திருமாலாலும் தேட முடியாதவர் சிவ பெருமான்'' என்ற கருத்தினை ஒவ்வொரு பதிகத்திலும் ஒன்பதாவது பாடலில் அமைக்கிறார்.

''தாணுதல் செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல் செய்தொழிய நிமிர்ந்தான்
எனதுள்ளங்கவர் கள்வன்''

[ஞான. தேவா : 1.1.9]

அதேபோல இராமனுடன் போரிட்ட இராவணன் வலியை எளிதாக அடக்கி யவன் சிவபெருமான் என்ற செய்தியை ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடலில் பாடுகிறார்.

''வியரிலங்குவரை உந்திய தோள்களை வீரம் விளைவித்த
உயர் இலங்கையரையன் வலி செற்று
எனது உள்ளங்கவர் கள்வன்''

[ஞான. தேவா; 1.1.8]

சமண, பௌத்தரை ஒவ்வொரு பதிகத் திலும் பத்தாவது பாடலில் கடுமையாகத் தாக்குகிறார்.

''பிதற்றும் பேதையராம் சமண் சாக்கியர்'',

''மசங்கற் சமண் மண்டைக்கையர் குண்டக் குணமிலிகள்'', ''பொல்லா மனச் சமணர்'', ''மத்தம் மலி சித்தத்திறை மதியில்லாதவர் சமணர்'', ''பெருக்கப் பிதற்றும் சமணர் சாக்கியர்'', என்றெல்லாம் பாடலுக்குப் பாடல் சாடி, ''அவர் வாக்கைக் கொள்ளேல்'', ''வாய்மொழி காதல் செய்யாதே'', ''உரைகள் அவை கொள வேண்டா'', ''பேசும் பேச்சை மெய் யென்று எண்ணி அந்நெறி செல்லன்மின்'' என்று தடுத்தாட்கொள்கிறார்.

திருநாவுக்கரசர்

சமணர் தாக்கத்தினால் தமிழ்நாட்டில் விளைந்தகொடுமைகளை அப்பர் வரலாற்றில் காணலாம்.

சமணர்களால் நஞ்சூட்டப்படல், யானையால் இடறச் செய்தல், நீற்றறையில் அடைத்தல், கல்லில் கட்டிக் கடலில் தூக்கி எறியப்படுதல் எனப் பல்லாற்றானும் துன்புறுத்தப்பட்ட அப்பர் பெருமான் சமணர்களைச் சாடவேயில்லை. இந்தச் செய்திகளைப் பற்றிக்கூட அதிகம் பேச வில்லை. நஞ்சு தந்த செயலைக்கூட ''மாறிலா அமணர் செய்கை'' என்று வழக்கத்திற்கு மாறான செயலைச் செய்தனர் என்கிறார். வைதிகரையும், வைணவரையும் இரண்டொரு பாடல் களில் சாடுகிறார். அவ்வளவே.

''அங்கதிரோன் அவனை அண்ணலாக் கருத வேண்டா
செங்கதிரோன் வணங்கும்
திருச்சோற்றுத் துறையனாரே'' *(4.41.9)*

''அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்''

''அருக்கன் ஆவான் அரனுரு அல்லனோ'' *(5.100.8)*

இவ்விரண்டு பாடல்களும் வைதிகத்தைச் சாடியவை.

''எரிபெருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவருக்கமதாவது உணர்கிலார்''
(5.100.8)

''வேதம் ஓதிலென்? வேள்விகள் செய்யிலென்?
நீதிநூல் பல நித்தல் பயிற்றிலென்?
ஓதி சங்கம் ஓராறும் உணரிலென்?
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே'' *(5.99.4)*

''ஆலை வேள்வி அடைந்தது வேட்கிலென்
ஏல ஈசன் என்பார்க்கன்றி இல்லையே''
(5.99.6)

இந்த மூன்று பாடல்களும் சிவ வேள்வி யில்லாத வேள்வி செய்வோரைச் சாடுவன.

''செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்திசெய் மனப்பாறைகட்கு ஏறுமோ?''
(5.100.2)

''பேயர் பேய்முலை உண்டுயிர் போக்கிய
மாயன் மாயத்துட் பட்டமனத்தரே.''
(5.100.9)

இவ்விரண்டு பாடல்களும் வைணவத்தைச் சாடுவனவாம்.

ஆழ்வாராதிகள்

ஆழ்வார் பாடல்களிலும் இதே போன்ற சாடலைக் காணலாம்.

''அறியார் சமணர்; அயர்த்தார் பௌத்தர்;
சிறியார் சிவப்பட்டார் – வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை ஏத்தாத
ஈனவரே ஆதலால் இன்று.''
[நாலாயிரம்; 3489]

''குறைகொண்டு நான்முகன் குண்டிகை நீர்பெய்து
மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தக் – கறைகொண்ட
கண்டத்தான் சென்னிமேல் ஏறக் கழுவினான்
அண்டத்தான் சேவடியை ஆங்கு.''
[நாலாயிரம்; 3497]

என்று பாடுகிறார் திருமழிசை ஆழ்வார்.

மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகர், போற்றித் திருவகவலில் பல சமயங்களைப் பற்றியும் குறிப்பிட்டு, அவை தம்மைச் சூழ்ந்து அலைக் கழிப்பதாகக் கூறுகிறார். ''வேதியர்கள் நோன்பே முக்கியம் என்று சாத்திரங்களைக் காட்டுகின்றனர். பல்வேறு சமயவாதிகளோ தத்தம் சமயங்களே முடிந்த உண்மை என அரற்றுகின்றனர். மாயாவாதமோ சூறாவளிக் காற்றெனச் சுழன்று அடிக்கின்றது. உலோகாயதம் என்ற பாம்போ கலை வேறுபாடுகளுடைய கொடிய நஞ்சாக இருக்கின்றது. இத்தனை யும் என்னைச் சூழ்கின்றன'' என்கிறார்.

‘‘விரதமே பரமாக வேதியரும்
சரதம் ஆகவே சாத்திரம் காட்டினர்
சமயவாதிகள் தத்தம் மதங்களில்
அமைவதாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயாவாதம் என்னும்
சண்டமாருதம் அழித்தடித்து ஆர்த்து
உலகாயதன் எனும் ஒண்திறல் பாம்பின்
கலாபேதத்த கருவிடம் எய்தி
அதிற்பெருமாயை எனைப் பல
சூழவும்’’

(திருவாசகம்; போற்றித் திருவகவல்; 50-58)

சேக்கிழார்

சேக்கிழார் பெருமான் நாவுக்கரசர் வரலாற்றைக் கூறும்பொழுது

‘‘கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயம்’’,

‘‘தவமென்று பாயிடுக்கித் தலைபறித்து நின்றுண்ணும் அவமொன்று நெறி’’,

‘‘சார்பல்லா நெறி, ‘‘கொடிய அமண்’’,

என்று சமண சமயத்தைப் பற்றியும்,

‘‘பொய் தருமால் உள்ளத்துப் புன் சமணர்’’

‘‘புன்மையே புரி அமணர்’’,

‘‘கொலையும் பொய்மையும் இலமொன்று கொடுமையே புரிவோர்’’,

‘‘இன்னதன்மையில் இருட்குழாம்’’,

‘‘கொலைபுரியா நிலைகொண்டு பொய்யொழுகும் அமண்குண்டர்’’,

‘‘அறந்துறந்து தமக்குறுதி அறியாத புல்லறிவோர்’’,

‘‘மாபாவிக் கடையமணர்’’, ‘‘வஞ்சகர்’’,

‘‘காரிருண்ட குழாம்’’,

‘‘வெஞ்சமண் குண்டர்கள் செய்வித்த தீயமறைகள் எல்லாம்’’,

‘‘பற்றொன்றில் எவரும் பாதகராகும் அமணர்’’,

(பெரியபுராணம் – திருநாவுக்கரசர்)

எனச் சமணர் பற்றியும் குறிக்கின்றார்.

சம்பந்தர் சமணரோடு அனல்வாதம், புனல் வாதம் என்றெல்லாம் வாதிட்டுச் சமணரைத் தோற்கடித்தமையைச் சேக்கிழார் விரிவாகக் கூறுகிறார்.

‘‘அந்த அமண்கையர் வஞ்சனைக்கோர் அவதியில்லை’’,

‘‘பகல்வரக் கண்ட கழுதுபோல் வரும்
கார் அமண்
குண்டர்கள் கலங்கி இழுது மையிருட்டு
இருளென
ஈண்டினர் ஒருபால்.’’

‘‘அமண்கொடியோர்’’, ‘‘அமண் குண்டர்’’, அமணராகும் பாவகாரிகள்’’, ‘‘மானமில் அமணர்’’, ‘‘பொய் தவமாக் கொண்ட புன்றலைச் சமணர்’’, ‘‘வடிவு போல் மனத்து மாசு துன்னிய அமணர்’’, ‘‘மாசு மேனி நீசர்’’, ‘‘மையல் நெஞ்சுடை அமணர்’’, ‘‘அறிவிலா அமணர்’’ என்று சமணரையும், ‘‘அமண் இருள் மாய்ந்தது அன்றே’’, ‘‘ஊனமாரி சமணம்’’ என்று சமணத்தையும் சாடுகின்றார்.

மாணிக்கவாசகர் வரலாற்றில் தில்லைச் சிற்றம்பலத்தில் அவருக்கும், புத்த குரு ஒருவருக்கும் சோழ, ஈழ மன்னர்கள் முன்னர் நடந்த வாதத்தைத் திருவிளையாடற் புராணம், வாதவூரடிகள் புராணம் முதலியன கூறுகின்றன.

சிவஞான சித்தியார்

சிவஞான சித்தியார் என்ற சாத்திர நூலில் உலகாயதன் மதம், சௌத்திராந்தகம், யோகசாரம், மாத்தியமிகம் வைபாடிகம், நிகண்டவாதி, ஆசீவகன், பட்டாசாரியன், பிரபாகரன், சத்தப்பிரமவாதி, மாயாவாதி, பாற்கரியன், நீரிச்சுர மதம், சாங்கியன், பாஞ்சராத்திரி ஆகிய மதங்களின் கருத்துகளையும் அதற்கு மறுதலையான கருத்துகளையும் 301 பாடல்களில் விரிவாக அருணந்தி சிவம் விளக்குகிறார். பல் சமயங்களின் முழுமையான வாதப்பிரதிவாதங்கள் சிவஞான சித்தியாரில் கிடைக்கின்றன.

சங்கற்ப நிராகரணம்

அடுத்துச், சங்கற்ப நிராகரணம் என்ற சைவ சித்தாந்த நூல் மாயாவாதி, ஐக்கியவாதி, பாடாண வாதி, பேதவாதி, சிவசமவாதி, சங்கிராந்த வாதி, இசுவர அவிகார வாதி, நிமித்த காரண பரிணாம வாதி, சைவவாதி (இவர் சைவ சித்தாந்தியினும் வேறுபட்டவர்) எனப் பத்து சமயவாதிகளின் கருத்தைச் சங்கற்பம் என்று நிறுவி, அப்பத்துச் சமயவாதிகளின் கருத்தை நிராகரணம் என மறுத்தும் விரிவாகக் கூறுகின்றது.

சிவஞான முனிவர்

சிவஞான முனிவர் தமது சிவஞான மாபாடியம் முழுமையிலும் பிற சமயக் கருத்துகள் – அவற்றின் மறுப்பு என மிக விரிவாகக் கொண்டு செல்கிறார். அவையடக்கத் திலேயே ''கேளாம் புறன்'' என்ற சொற்களுக்கு ''புறன் – புறச்சமயம்'' என்று பொருள் கொண்டு உலகாயதம், பௌத்தம், மாத்யமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம், ஆருகதம் ஆகிய புறப்புறச் சமயங்களின் கருத்துகளையும் தருக்கம், மீமாஞ்சை, ஏகான்ம வாதம், பாற்கரிய வாதம் சாங்கிய மதம், யோகமதம், பாஞ்சராத்திரம் ஆகிய புறச் சமயங்களின் கருத்துகளையும், பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் ஆகிய அகப்புறச் சமயங்களின் கோட்பாடுகளையும் முனிவர் விரிவாக விளக்குகிறார்.

முதல் நூற்பா முதல் அதிகரணத்தில் சிவஞான முனிவர் மீமாம்சை, உலகாயதம், தருக்கம் ஆகிய மதங்களின் கோட்பாடு களைக் கூறி அவற்றை மறுத்து சைவ சித்தாந்தக் கொள்கையினை நிலை நாட்டுகிறார்.

இரண்டாம் அதிகரணம்; வைணவம், சிவாத்துவித சைவம் பற்றிக் கூறி மறுத்தல்.

மூன்றாம் அதிகரணம்; சிவ சமவாதி, சிவசங்கராந்த வாதி, உற்பத்திவாதி, ஆவேச வாதி பற்றிக் கூறி மறுத்தல்.

நூற்பா இரண்டு அதிகரணம் இரண்டில் ''உலகத் தோற்றத்திற்கு முதற் காரணம் மாயையே'' என்று நிறுவ சூனிய முதற் காரணவாத மறுப்பு, பரமாணு முதற் காரணவாத மறுப்பு, பிரகிருதி முதற் காரணவாத மறுப்பு, பிரம முதற்காரண வாத மறுப்பு ஆகிய கோட்பாடுகளை விரிவாகக் கூறி அவற்றை மறுத்துச் சைவ சித்தாந்தக் கொள்கையை நிறுவுகிறார். அதனைத் தொடர்ந்து மாயாவாதத்தையும் விளக்கி மறுக்கிறார்.

ஆன்மா முத்தி நிலை அடைதல் பற்றி ஒவ்வொரு சமயமும் கூறுவதை முனிவர் அடுத்து விளக்குகிறார்.

''உலகாயதர் பூதக்கூட்டவராகிய உடம்பே ஆன்மா என நிற்றலின் பூதங் களுக்கு மேலுள்ள தத்துவங்களை அறியும் ஞானம் இன்மையின், அவர் பூதவுலகத்தின் முத்தியைப் பெறுவர். பிராண வாயுவை ஆன்மா என நிற்கும் கடவுளரும் ஆண்டே முத்தியைப் பெறுவர்.

சோதிட நூலார் நாண் மீனுலகத்தில் சேறலே முத்தி என நிற்றலின் அவரும் பூதவுலகத்தில் முத்தியைப் பெறுவர்.

மிருதி நூலார் ஐம்பெரும் பூதத்திற்குக் காரணம் யாது அதுவே பிரமம் என நிற்றலின், ஐம்பெரும் பூதத்திற்குக் காரணம் தன் மாத்திரையேயாகலின் அதற்கு மேலுள்ள தத்துவங்களை உணராமையான், அவர் தன் மாத்திரை உலகத்தின் முத்தியைப் பெறுவர்.

உலகாயதரில் ஒரு சாரார் இந்திரியமே ஆன்மா எனவும், சித்தமே ஆன்மா எனவும், மனமே ஆன்மா எனவும், ஆங்காரமே ஆன்மா எனவும் நிற்றலின் அவர் அவ்வுலகத்தின் முத்தியைப் பெறுவர்.

புத்தர், நையாயிகர் முறையே புத்தி தத்துவத்தின் பரிணாமமாகிய ஞானமே ஆன்மா எனவும், ஆன்மாவின் குணம் எனவும் நிற்றலின் அவர் புத்தி தத்துவ உலகத்தின் முத்தியைப் பெறுவர்.

சமணர் உண்டுமாம் இல்லையுமாம் என்றற் தொடக்கத்து எழுவகையான் அநேகாந்தம் பேசி நிற்றலின், மிகினும்

குறைந்தும் நிற்றல் பற்றி அங்ஙனங் கூறுதலின், அதற்கேற்புடையது குண தத்துவமாகலின் அதனை ஆன்மா என மயங்கிக் கொண்டார் எனப்படுதலின், அவர் குணத்தத்துவ உலகத்தின் முத்தியைப் பெறுவர்.

பாஞ்சராத்திரிகள் நில முதல் இருபத்து நான்கு தத்துவத்திற்கு மேலுள்ள பொருளை நாராயணன் என்பர். இருபத்து நான்கு தத்துவத்திற்கு மேல் உள்ளது மூலப் பகுதியே ஆகலின், அதனை மயக்கத்துடன் நாராயணன் எனக் கொண்டார் என்பதன்றிப் பிறிது இன்மையின், அவர் மூலப்பகுதியின் முத்தியைப் பெறுவர்.

ஏகான்ம வாதிகள் பொதுவகையாலும், சிறப்பு வகையாலும் போத்திருத்துவம் எய்தி நின்ற புருட தத்துவத்தின் முத்தியைப் பெறுவர். சாங்கியர் பொது வகையால் போத்திருத்துவம் எய்தி நின்ற புருட தத்துவத்தின் முத்தியைப் பெறுவர். புருட தத்துவத்திற்கு மேல் உள்ள பொருள்களை அறியாமையான் என்க.

இவ்வாறே ஏனைப் புறச் சமயத்தாரும் அவ்வத் தத்துவங்களின் முத்தியைப் பெறுமாறு உய்த்து உணர்ந்துகொள்க. ஈண்டு விரிக்கின் பெருகும்.''

(''சிவஞான மாபாடியம்'' – சிவஞான முனிவர்)

இதே அதிகரணத்தில் பல இடங்களில் உலகாயதர், நையாயிகர், பௌத்தர், தார்க்கிகர், வைசேடிகர் கருத்துக்களை முனிவர் மறுக்கின்றார்.

நூற்பா 3; அதிகரணம் 1 : பௌத்தம் – மறுத்தல்.

நூற்பா 4, அதிகரணம் 2 : ஆருகதர், பாஞ்சராத்திரி, நையாயிகர்; ஐக்கியவாத சைவர் – மறுத்தல்.

நூற்பா 6, அதிகரணம் 2 : சிவசம வாதிகள், சிவாத்துவித சைவர். இந்த அதிகரணத்தில் சிவசமவாதத்தை மிக விரிவாகக் கூறி மறுக்கிறார்.

நூற்பா 7, அதிகரணம் 3 : சிவாத்துவித சைவர், சிவ சங்கிராந்த சைவர் – மறுத்தல்.

நூற்பா 9, அதிகரணம் 1 : சிவசமவாத சைவம் – மறுத்தல்.

நூற்பா 11, அதிகரணம் 1 : ஈசுவர அவிகார வாத சைவர், சிவாத்துவித சைவர் – மறுத்தல்.

சித்தாந்த மரபு – சில செய்திகள்

சிவஞான முனிவர் காலத்திற்கு சற்று முன்பாக ''சித்தாந்த மரபு'' என்ற நூல் வெளிவந்தது. இந்நூல் திருவாவடுதுறை ஆதீனச் சார்புடையது என்று ஒரு தவறான கருத்து நிலவி வந்தது. இதனை மறுத்து திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து வெளியான வெளியீடு குறிக்கின்றது. ''சித்தாந்த மரபு'' என்ற நூலினை மறுத்து சிவஞான முனிவர் காலத்தவரும், தருமபுர ஆதீனத்து மரபினருள் ஒருவருமான ஸ்ரீமத் சிதம்பர நாதத்தம்பிரான் என்பவர் ''சித்தாந்த மரபு கண்டனம்'' என்ற நூலினை வெளியிட்டார். ''சித்தாந்த மரபு கண்டனத்தை'' மறுத்துச் சிவஞான முனிவர் ''சித்தாந்த மரபு கண்டனக் கண்டனம்'' என்ற நூலினை வெளியிட்டார். இதுகாறும் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான கண்டன இலக்கிய வரலாறு கூறப்பட்டது.

கண்டன இலக்கியம்
எழுந்த காலமும், சூழலும்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கண்டன இலக்கியம் உச்சத்தில் இருந்தது. துல்லியமாகச் சொல்வதானால் *1854*-ஆம் ஆண்டு முதல் *1930*-ஆம் ஆண்டு வரை கண்டன இலக்கிய காலம் எனலாம். இதற்கு முக்கியக் காரணம் *1835*-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு அச்சு இயந்திரம் வந்ததே ஆகும். அடிப்படையான நூல்கள் அச்சாகி எளிதில் கிடைக்க ஆரம்பித்தன. படிப்பவர் எண்ணிக்கை கூடுதலாயிற்று. ஒவ்வொரு வரும் தாம் தாம் கொண்ட கருத்துகளை சரி என்று நிறுவலாயினர்.

முதலில் கிறிஸ்துவப் புத்தகங்கள் எழுந்தன. பதினெட்டாம் நூற்றாண்டிலேயே கிறிஸ்துவப் புத்தகங்கள் அச்சாகி வரலாயின. இவ்வாறு நூறு புத்தகங்களுக்கு

மேல் வந்துவிட்டன. கிறிஸ்துவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்ப இந்து சமயத்தைத் தாக்கிப் பேசவும், எழுதவும் ஆரம்பித்தனர். இதற்கு மறுப்பாகச் சைவர்களும் பேசவும், எழுதவும் தலைப்பட்டனர். இதில் முதன்மை வகித்தவர் ஆறுமுக நாவலர் அவர்கள் ஆவார்.

ஆறுமுக நாவலர்

இந்தியாவைக் காட்டிலும் இலங்கையில் கிறிஸ்துவப் பாதிரிமார் தம் சமயத்தைக் கடுமையாகப் பரப்பினர். ஆறுமுக நாவலர் அவர்கள் தனியொருவராக நின்று போராடினார். கிறிஸ்துவ சமயத்தில் உள்ள குறைகளையெல்லாம் எடுத்து மேடைதோறும் பேசினார். சுன்னாகத்தில் இருந்த முத்துக் குமார கவிராயரைக் கொண்டு ஞானக் கும்மி, யேசுமத பரிகாரம் முதலிய நூல்களை வெளியிடச் செய்தார். கிறிஸ்துவர்கள் சைவத்தின் மேல் தொடுக்கும் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் முகமாக 1854-ஆம் ஆண்டில் ''சைவ தூஷண பரிகாரம்'' எனும் துண்டுப் பிரசுரம் வெளியிட்டார். முருகக் கடவுளைத் தூற்றி எழுதிய பிரசுரத்திற்கு மறுப்பாக ''சுப்பிரபோதம்'' என்ற பிரசுரம் வெளியிட்டார். அதனையடுத்து ''வச்சிர தண்டம்'' என்ற நூலை வெளியிட்டார். ஆறுமுக நாவலரின் வாதத் திறமையைக் கிறிஸ்துவப் பாதிரிமார்களே பாராட்டி "HIndu Pastors" என்ற இதழில் Arumugavar, the most frequent and the presiding genius through all the movement" என்று எழுதியுள்ளனர்.

இதே காலத்தில் சுன்னாகம் சங்கர பண்டிதர் கிறிஸ்து மத கண்டனம், மிலேச்ச மதம் விகற்பம் என்ற நூல்களை வெளியிட்டார். நாவலரின் தூண்டுதலின் பேரில் காசிவாசி செந்திநாதையர் விவிலியத்தில் உள்ள குற்றங்களைச் சாடி ''விவிலிய குஞ்சிதம்'' என்ற நூலை வெளியிட்டார்.

கிறிஸ்துவப் பாதிரிமார்கள் சைவ சமயத்தைச் சாடி ''குருட்டு வழி'', ''மும்மூர்த்தி லட்சணம்'', ''துராசார விருத்தாந்தம்'' போன்ற நூல்களை வெளியிட்டனர். நாவலரவர்கள் இவற்றைக் கண்டித்துக் கிறிஸ்துவர்கள் இழைக்கும் கொடுமைகளை விளக்கி ''யாழ்ப்பாணச் சமயநிலை'' என ஒரு பிரசுரம் வெளியிட்டார்.

நாவலரவர்கள் கிறிஸ்துவ சமயத்தைக் கண்டிப்பதோடு நிறுத்தவில்லை. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் ஆகமத்திற்கு முரணாக வழிபாடு நடப்பதைக் கண்டு மனம் கொதித்து இரண்டு பிரசுரங்கள் வெளியிட்டார். கோயிலுக்குப் போவதையும் நிறுத்திக் கொண்டார். இதற்கு மறுப்பாகக் கோயிலார் பிரதி கண்டனம், பரிகண்டனம், சம்பாஷணை, வச்சிர குலிசம் என்ற நான்கு பத்திரிகைகளை வெளியிட்டனர். இவற்றையெல்லாம் மறுத்து நாவலரவர்கள் ''மித்தியவாத நிரசனம்'' என்ற துண்டுப் பிரசுரம் வெளியிட்டார்.

இராமலிங்க சுவாமிகளின் பாடல்களை அருட்பா எனக் கூறப்பட்டதும், அவற்றைக் கோயிலில் பாடச் செய்து தேவார திருவாசகங்களை ஓதவிடாமல் செய்யப்பட்டதும், அப்படி ஓதியவர்களை மிரட்டியதும், வள்ளலார் செத்தாரை எழுப்புவதாகச் சொல்லி எழுப்பாமல் போக, ''இதுபோலத் தானே உங்கள் நால்வர் பெருமக்களும் அற்புதங்கள் செய்தார்கள்'' எனக் கிறிஸ்துவப் பாதிரிமார் கிண்டலடிக்க இடம் கொடுத்ததும் நாவலரவர்களால் பொறுக்க முடியாததாகிவிட்டது. இவற்றையெல்லாம் மறுத்து ''போலியருட்பா மறுப்பு'' என்ற நூலை வெளியிட்டார். 1869-ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் வள்ளலாருடன் வாதிட்டார். அங்கே சிலர் நாவலரை அவதூறாகப் பேசினர். நாவலர் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்திலே கிரிமினல் வழக்கும் தொடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் பஞ்ச காலத்தில் பேதியும், நோயுமாக மக்களை அலைக்கழிக்க அவர்களுக்கு வந்து சேர்ந்த உதவிகளும் கிட்டாமல் போக நாவலர் அவர்கள் அதற்குக் காரணமான துவைனர் துரையையும், அரசையும் கண்டித்துச் ''சமயம் சமயம்'' ''இது நல்ல சமயம்'', வெகு சனத்துரோகம்'' என்று இதழ்களில் எழுதி வெளியிட்டார்.

சில கண்டன நூல்கள்

கிறிஸ்துவர்களும் சைவர்களும் முரண்பட்டுக் கண்டன நூல்கள் எழுதலாயினர்.

அருளப்ப முதலியார் ''அலங்காரப் பஞ்சகம்'' எழுதினார். இதற்கு மறுப்பாக முருகேச பண்டிதர் ''அலங்கார பஞ்சக சண்ட மாருதம்'' எழுதினார்.

''வைதிக காவிய தூஷண மறுப்பினையும்'', ''யேசுமத சங்கற்ப நிராகரணத்தை''யும் எழுதியவர் சபாபதி நாவலர்.

செந்திநாதையர்

தேவகோட்டையூர்ச் சந்நியாசி ஒருவர் ''ஆதி சைவ நாமக குலீன முகபங்க முத்திர'', ''தாந்திரிக துண்ட கண்டனம்'' எனும் இரு நூல்களை வெளியிட்டார். இவற்றுக்கு மறுப்பாகக் காசிவாசி செந்திநாதையர் முறையே ''வச்சிர தண்டம்'', ''தாந்திரிக துண்ட கண்டன கண்டம்'' என்பவற்றை எழுதினார். சாமுவேல் சற்குணர் எழுதிய ''சாணாரெல்லாஞ் க்ஷத்திரியர்'' எனும் நூலுக்கு மறுப்பாக ''சாணாரும் க்ஷத்திரியப் பிரசண்ட மாருதமும்'', ''சிவனும் தேவனா'' எனும் நூலுக்கு மறுப்பாகச் ''சிவனும் தேவனா எனும் தீயநாவுக்கு ஆப்பு'' என்ற நூலும், இவை தவிர ''வீரபத்திராஸ்திரம்'', ''ஞானபோத விளக்கச் சூறாவளி'' என்ற கண்டன நூல்களும் செந்திநாதையர் எழுதினார்.

சைவ மகத்துவம் - நூலும் எதிர் எதிர் மறுப்புகளும்

சைவ மகத்துவம் என்ற நூலை *1881*-ஆம் ஆண்டில் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் எழுதினார்கள். அந்நூலை ஆதரித்துப் பல நூல்கள் எழுந்தன. சைவ மகத்துவத்தையும், அதனை ஆதரித்து எழுந்த நூல்களையும் கண்டித்துச் சைவ மகத்துவதிக்காரம் (ஆசிரியர் அருளப்ப முதலியார்) சைவ மகத்துவ திமிரபானு, சைவ மகத்துவதிக்கார நிக்கிரக எதிரேற்று முதலிய கண்டன நூல்கள் எழுந்தன. சைவ மகத்துவத்தை ஆதரித்தும், அதனைக் கண்டித்த நூல்களை மறுத்தும் சைவ மகத்துவதிக்கார மகத்துவம், சைவ மகத்துவபானு, சைவமகத்துவபாநுபவம், பனவியாபாதானம், இருள்மதியடு சுடர், சைவ மகத்துவ பாச விளக்க மறுப்பு, சைவ மகத்துவ திக்கார நிக்கிரகம் முதலிய நூல்கள் எழுந்தன. வயித்தியலிங்கம் பிள்ளை சைவ மகத்துவபானு எழுதினார் (3 பாகங்கள்) அவர் காலம் - *1843-1900*.

சைவ மகத்துவதிக்காரம் என்ற நூலை மறுத்து வல்வை வைத்தியலிங்கம் என்பார் சைவ மகத்துவதிக்கார நிக்கிரகம் என்ற கண்டன நூலை எழுதினார். (வைத்திய லிங்கம் தோற்றம் *1789*).

அஞ்ஞானக்கும்மி மறுப்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்த சுன்னாகம் அ. முத்துக்குமார கவிராயர் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துவ மதம் பரவுவதைக் கண்டித்து ஞானக்கும்மி பாடினார்.

தருமபுரம் ஆதீனத் தம்பிரானாய் விளங்கிய ஆறுமுகத் தம்பிரான் *1836*-ஆம் ஆண்டில் கிறிஸ்துவ மதம் தழுவி வெஸ்லி ஆபிரகாம் என்ற பெயர் தாங்கி ஞானக் கும்மியை மறுத்து அஞ்ஞானக்கும்மி பாடினார். இது *1876*-ஆம் ஆண்டில் வெளிவந்தது.

அஞ்ஞானக் கும்மியை மறுத்துச் சொக்குவில் சி. சிலம்புநாதர் எழுதினார்.

தமிழ்நாட்டில் கண்டன இலக்கியம்

இலங்கை போல தமிழ்நாட்டிலே கண்டன அலை கிறிஸ்துவர்களை நோக்கி இருக்கவில்லை. இங்கு பெரும்பான்மை மாயாவாதிகட்கும், சைவசித்தாந்திகட்குமிடையே தான் வாதம் நிகழ்ந்தது. பல வாதங்கள் மேடைகளில் நிகழ்ந்தன. அவை நூல் வடிவம் பெற்றன. அவற்றிற்கு மறுப்பாக இதழ்களில் கட்டுரைகளாகவோ, மறுப்பு நூல்களாகவோ வெளிவந்தன. சைவ சமய இதழ்களான நாகை நீலலோசனி, திராவிட மந்திரி, ஞானாமிர்தம், விவேக திவாகரன், விஜயத்துவஜம், வெற்றிக்கொடியோன், இந்து சாதனம் (இலங்கை) ஆகியவையும் வேதாந்த

இதழ்களான பிர்ம்ம வித்யா, ஆரிய ஜனப்பிரியாவும் கண்டனக் கட்டுரைகள் வெளியிட்டு வந்தன. வைணவர்கள் இக் கண்டனங்களில் அதிகம் பங்குபெற வில்லை. வைணவர்கள் தங்கள் இலக்கியங் களைத் தவிர பிற இலக்கியங்களைப் படிப்பதில்லை என்பது ஒரு காரணம். மேலும் தமிழ்நாட்டில் வைதீகர்களும், சைவர்களும் மக்கள் தொகையில் வைணவர்களைவிட அதிக எண்ணிக்கை யில் இருந்தனர்.

கண்டன இலக்கியத்தின் உயர்ந்த தரம்

கண்டனங்களில் தாக்குதல்கள் இருந் தாலும் வேதாந்த – சித்தாந்த கருத்துக்கள் செறிந்து இருந்தன. ஒவ்வொரு கட்டுரை யும் அறிவுச் சுரங்கமாக உயர்ந்த தரத்தில் இருந்தன. நான்கு வேதங்கள், உபநிட தங்கள், சித்தாந்த சாத்திரங்கள், திருமுறை கள், புராணங்கள் என்று சான்றுகளும் நிரம்ப இடம் பெற்றிருந்தன. எடுத்துக் காட்டாக ''துவிதாத்துவித வாதம்'' என்ற 128 பக்க நூலில் ஒவ்வொரு பக்கமும், ஒவ்வொரு வரியும் புரிந்துகொள்ளவே பல் நூலறிவு வேண்டும்.

பெரும்பான்மை கண்டன நூல்கள் ''அத்வைதம் மாயா வாதம்'' என்பதனை நிறுவவும், அதனை மறுப்பதாகவுமே உள்ளன. இந்த வாதப்பிரதிவாதம் பல ஆண்டுகள் நிகழ்ந்தன. சில வாதங்கள் சைவ வைணவ தாக்குதலாக (''இராமர் சிவபூசை செய்தது'', விஷ்ணுவும் விபூதி உருத்திராக்க தாரணரே'') அமைந்து உள்ளன. அருட்பா – மருட்பா வாதமும் நிகழ்ந்தன. நாயக – நாயகி பாவம் பற்றிய விவாதமும் திருக் கோவையாரை அடியொற்றி எழுந்தது.

வள்ளற் பெருமானுக்கும் பிரமசமாஜி ஒருவருக்கும் விக்கிரக வழிபாடு பற்றிக் கடலூரில் நடந்த வாதம் மிகவும் அருமையானது ஆகும்.

''வேளாளருக்குக் குருத்துவம் உண்டா? இல்லையா?'', ''தீண்டாதார் ஆலயப் பிரவேச நிக்கிரஹம்'' போன்ற மாறுபட்ட விவாதங்களும் நடந்தன.

சோமசுந்தர நாயகர்

தமிழ்நாட்டில் கண்டன அணிக்குத் தலைமையேற்றவர் சோமசுந்தர நாயகர் (1846-1901) ஆவார். அவரைப் ''பர சமய கோளரி'' என்றே அழைத்தனர். தமிழ் நாட்டில் பெரும்பான்மை வாதங்கள் அவராலும், அவர்தம் சீடர்களாலும் நிகழ்ந்தன. இதனால் நீதிமன்ற வழக்கைக் கூடச் சந்திக்க நேர்ந்தது. இலங்கையைச் சேர்ந்த சபாபதி நாவலரும், செந்திநாதை யரும் தமிழ்நாட்டிலும் களம் கண்டனர்.

கதிரைவேற் பிள்ளை

சோமசுந்தர நாயகருக்கு 51 வயதாகும் பொழுது ஸ்மார்த்தர்களின் வாதங்களைத் தகர்க்க, கதிரை வேற்பிள்ளையும் களத்தில் இறங்கினார். சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் ''சிவன்யார்?'' என்று வாதிட்டோர் கேட்ட வினாக்களுக்குப் பதிலளித்தார். பிறிதொரு சமயம் காசிவாசி செந்திநாதையார் கதிரை வேற்பிள்ளைக்கு ''மாயாவாத தும்ச கோளரி'' என்ற பட்டத்தை அளித்தார்.

கதிரை வேற்பிள்ளை 1900-ஆம் ஆண்டில் வெளிவந்த ''சைவபூஷண சந்திரிகை''யில் ''விஷ்ணுவும் விபூதிருத் திராக்க தாரணரே'' என்று எழுதியது வைணவரிடையே பெரும் சினத்தைக் கிளப்பிவிட்டது. 1901-ஆம் ஆண்டு ஜூலை முதல் 1902-ஆம் ஆண்டு ஜனவரி வரையிலான ஏழு மாதங்களில் சென்னையில் பல இடங்களில் சைவ சித்தாந்த சஞ்சீவினி சபையாராலும், வேதாந்தப் பிரசங்க சபையினராலும் ''விபூதிருத்திராக்க விவாத சபை'' எனும் கூட்டம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு கூட்டத்திலும் கதிரைவேற்பிள்ளை ''விஷ்ணுவும் விபூதி ருத்திராக்க தாரணரே'' என்று நிறுவினார். வைணவர் மாயாவாதி கள் சிலரைத் துணையாகக் கொண்டு சிவ தூஷணமாகவும் நூலாசிரியர் தூஷண மாகவும் துண்டுப் பிரசுரங்கள் வெளி யிட்டனர்.

இவற்றிற்கு மறுப்பாகக் கதிரைவேற் பிள்ளை குழுவினர் ''விஷ்ணுவும் ருத்திராக்க தாரணரே'', ''சீதர தியான

நிரூபணம்'', தசாவதார சிக்ஷாரக்ஷணியம், திராவிட வேத விபரீதார்த்த திரஸ்கார கண்டனம், அரங்கேற்றாபாசம், சைவ பூஷண சந்திரிகைச் சயச் சிறப்பு, சிவசின்ன விஜயம், விவாத மத்தியஸ்த பத்ரம் வெளிப்படுத்தினார்க்கு ஓர் நல்விடை, ஆழ்வாரருளிச் செயல் பார்த்த விசார தண்டனம், சென்னை மகாவித்வ ஜனசபை, வைணவ விப்பிரலம்பம், போலி வைணவர்க்குப் புத்தி புகட்டல், ஐயத்துவச கண்டனம், அரக்க சைவாகம குதர்க்க நிர்த்தூளி, பாஷண்ட பீடாலம்ப தூஷண குஞ்சர பஞ்சாசானனம், வைணவப் போலியர் வாய் மதம் அடக்கல், சிவோ பாலம்பன திமிர பாஸ்கரம், வாதத்திற்குப் பயந்து ஒளித்த வைணவர்க்கு அறிக்கை, நீறு என்னும் சொல்லுக்கு இட்ட வைரக் குப்பாயம், கண்டிகை அநர்த்த கானன குடாரி, ஆழ்வார் சரித்திராரணிய மகாபரசு முதலிய பல கண்டனங்களை வெளியிட்டனர்.

1902-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ஆம் நாளில் சென்னை ஸ்ரீவேணு கோபால சுவாமி அரங்கத்தில் ஸ்ரீலஸ்ரீ ஞானானந்த சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ''விஷ்ணுவும் விபூதிருத்திராக்க தாரணரே'' என்று நிறுவப்பட்டது. பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் முதலியோர் கலந்துகொண்டு இதே கருத்தினை ஏற்றுப் பேசினர். இவ்விவாதத்திற்குப் பின் கதிரைவேற் பிள்ளையவர்கள் 1902-ஆம் ஆண்டில் சைவபூஷண சந்திரிகையை இன்னும் விரிவாக்கி வெளியிட்டார்.

கதிரைவேற்பிள்ளையவர்களின் கண்டனப் போர் வைணவத்தோடு நிற்க வில்லை. பௌத்த சமயத்திற்கு எதிராகவும் ''புத்தமத கண்டனம்'' என்ற நூலை இயற்றி மயிலாப்பூரில் வெளியிட்டார். இராயப்பேட்டையில் கண்டன சொற்பொழிவும் நிகழ்த்தினார்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வேளாளர் வைசியர் என்றும், சூத்திரர் என்றும் ஒரு வாதப்போர் நிகழ்ந்தது. கதிரை வேற்பிள்ளை ''வேளாளர் சூத்திரரே'' என்ற நாவலரின் கருத்தை அடியொற்றிப் பேசியும், எழுதியும் வந்தார். அவரை மறுத்து ''வருண சிந்தாமணி'' என்ற நூல் வெளிவந்தது. இந்நூலில் பெரும் பகுதி நாவலர், தாமோதரம் பிள்ளை ஆகியோரை வைவதாகவே முடிந்தது.

கதிரைவேற்பிள்ளையின் புகழைப் பொறாத சென்னைப் புலவர்கள் மாயா வாதிகள், வைணவர், பௌத்தர், வேளாளர், வைசியர் எனப் பல குழுக்களுடன் சேர்ந்து கொண்டு ''யாழ்ப்பாண அறிஞர்களைத் தாழ்த்திப் பேசினால் கதிரைவேற் பிள்ளை பொறுக்க மாட்டாது வாதிடுவார். இதனைப் பயன்படுத்தித் தமிழ்நாடு – ஈழநாடு என அபிமானத்தைக் கிளப்பி விட்டால் சென்னைப் பெரியவர்களும் சேர்ந்து கொள்வர்'' என்று திட்டமிட்டனர். இந்த சூழ்ச்சியான திட்டத்தின்படி மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது அருட்பா – மருட்பா விவகாரம்.

''மாயாவாத தும்ச கோளரியின் கீழ்ச் செந்தமிழ் உலகம் மிளிர்வதைக் கண்டபோலிப் புலவர்கள் பொறாமல் பொறாமையால் புதுச்சந்நிதியனைப் போற்றும் புலோலிப் புலவரேற்றின் புகழொளியைச் சிறுக்கப் பல சூழ்ச்சிகள் செய்த''தாகத் திரு.வி.க. அவர்கள் எழுதுகிறார்கள்.

கதிரை வேலரின் பகைவர்கள் சென்னை முல்லா வீதியில் ''ஓர் சபை சேர்த்து எம் குருநாதனையும், அவன் பரமாசாரியரையும் தூடித்து, (கதிரை வேற்பிள்ளையையும், அவரது குருநாதர் ஆறுமுக நாவலரையும்) இராமலிங்க பிள்ளை பாட்டை அருட்பா என்றும், அவரை ஐந்தாம் குரவர் என்றும் போற்றினர்.'' ''அப்பொழுதும் கதிரைவேற் பிள்ளை அவர்களை எதிர்க்கவில்லை. கதிரைவேற் பிள்ளை அவர்கள் பேசாது இருக்கவே எதிரிகள் பன்னிரு திருமுறைகளையும், நால்வர் பெருமக்களையும், நாவலரையும் தூற்றிக் கூட்டங்கள் போட்டனர். இதனைக் கேட்டு மனம் சகியாத சிந்தாதிரிப்பேட்டை வேதாகமோத்த சைவ சித்தாந்த சபையார் கதிரைவேற் பிள்ளை அவர்களிடம் ''திருமுறைக்குத் திருவருட்பா என்னும் திருப்பெயர் தொன்றுதொட்டு ஆன்றோர்

களால் வழங்கப்பட்டு வருவதைப் போதிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டனர்.

அதற்கு இசைந்த கதிரை வேற்பிள்ளை ''அருட்பா என்பது திருமுறையே'' என்று சென்னை சிந்தாதிரிப் பேட்டையிலும், பல இடங்களிலும் பேசினார். இவற்றைத் தொகுத்து ''இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு'' எனப் பெயரிட்டுச் சபையினர் வெளியிட்டனர்.

''மருட்பா மறுப்பினை'' மறுத்து வள்ளலாரின் தமையனார் தனயராய வடிவேற்பிள்ளை *1904*-ஆம் ஆண்டில் சென்னையில் வழக்குத் தொடுத்தார். *21.11.1905*-இல் உயர்நீதி மன்றத்தால் மேல் முறையீடு செய்யப்பட்டு அங்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

''போலியருட்பா மறுப்பிற்கு எதிராக வெளிவந்த நூல்கள் வருமாறு'' : 'போலியருட்பா மறுப்பின் கண்டனம் அல்லது குதர்க்காரணிய நாச மஹா பரசு', 'தீவாந்தர சைவ விநோதம்' முதலிய பனிரெண்டு கண்டன நூல்கள் வெளி வந்தன.

தமிழ்நாட்டில் கண்டன இலக்கியங்கள் அத்துவிதம், வைணவம், போலியருட்பா மறுப்பு அடிப்படையில் அமைந்தன. சாது இரத்தினகுரு *(1842-1901)* என்ற அத்துவைதி இருபத்து நான்கு கண்டன நூல்கள் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

சைவசித்தாந்த விளக்கத்தில் முரண்பாடு

1912-ஆம் ஆண்டில் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையைச் சேர்ந்த பொ. முத்தையா பிள்ளை, சுப்பிரமணிய பிள்ளை இருவரிடையேயும் ''அனைத்து ஆன்மாக்களும் ஏதோ ஒரு கால கட்டத்தில் விடுதலை அடையுமா?'' ''இறைவன் வடிவு சுத்த மாயையில் ஆனதா?'' என்பதில் கருத்து வேறுபாடு இருந்தது. இதனை ஜெ.எம். நல்லசாமி பிள்ளையவர்கள் தீர்த்து வைத்து தம் முடிபை வழங்குகிறார்கள்.

(ஜெ.எம்.என். வரலாற்றில் விரிவு காண்க - முதல் தொகுதி.)

1912-ஆம் ஆண்டில் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை துணைத் தலைவர்க்கும், செயலாளர்க்கும் சைவ சித்தாந்த விளக்கத்தில் இரண்டு இடங்களில் முரண்பாடு ஏற்பட்டு அம்முரண்பாடுகளுக்கு ஜெ.எம். நல்லசாமி பிள்ளை பதிலளித்தார்.

திராவிட இயக்கம் - புராண மறுப்பு

கண்டன இலக்கியம் இத்துடன் ஒருவாறு ஓய்ந்தது. பின்னர் ஈ.வே.ரா. பெரியாரின் திராவிட இயக்கம் தோன்றிய பிறகு புராண, கடவுளர் மறுப்பாகக் கண்டனம் வீறுகொண்டு எழுந்தது. பிள்ளையார் உடைப்புப் போராட்டம், புராண எரிப்புப் போராட்டமாக உருவெடுத்தது. அறிஞர் அண்ணா, நாவலர் இரா. நெடுஞ்செழியன், கலைஞர் மு. கருணாநிதி முதலியோர் இதில் இணைந்தனர்.

''சீரங்கநாதரையும் தில்லை
நடராசரையும்
பீரங்கி கொண்டு பிளப்பது
எக்காலமோ''

''ஏரோட்டும் மன்னரெல்லாம் ஏங்கித்
தவிக்கையில்
தேரோட்டம் ஏதுக்கு தியாகேசா''

என்ற முழக்கங்கள் கேட்கலாயின. விடுதலை, திராவிட நாடு போன்ற திராவிட இயக்கப் பத்திரிகைகள் இச்செய்திகளைப் பறைசாற்றின. ''கம்பரசம்'' ''தீ பரவட்டும்'' போன்ற நூல்களும் அறிஞர் அண்ணா அவர்கள் எழுதினார்கள்.

1928-1929-ஆம் ஆண்டில் பெரிய புராண எதிர்ப்புக் கிளர்ச்சி தீவிரமாக நடைபெற்ற பொழுது, ''அருகர் சிரங்களைச் சிந்த'' என்று ஞானசம்பந்தர் பாடலைத் திரித்துக் கூறி பேராரவாரம் செய்து வந்தனர். காஞ்சிபுரம் வழக்கறுத்தீசுவரர் கோயிலில் ஞானியார் சங்கச் சார்பில் நிகழ்ந்த கூட்டத்தில் திரு.வி.க. ''அருகர் திறங்களைச் சிந்த'' என்பதே பாடம். சிரங்கள் என்றால் என் சிரத்தை அறுத்துக் கொள்கிறேன்'' என மனமுருகிச் சொன்னார்கள்.

போராட்டம் உச்சநிலைக்கு வந்த பொழுது சென்னையில் அறிஞர் அண்ணா அவர்கள் ஒருபுறமும், சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார் மறுபுறமுமாக அணிவகுத்து வாதிட்டனர். முடிவு பற்றி இருதரப்பாரும் இருவேறுவித கருத்துக்களைத் தெரிவித்தனர். சொர்க்கவாசல், வேலைக்காரி, பராசக்தி போன்ற திரைப்படங்களும் ''எங்கே சொர்க்கம்'' என்று பாடல்கள் வாயிலாகவும், ''எங்கேயடா உன் அம்பாள்? அது கல். பேசாது'' என்ற கனல் கக்கும் வசனங்களாலும் தமிழகம் பரபரப்படைந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடக் கழகத்திலிருந்து பிரியவும், அடுத்து அரசியலில் ஈடுபாடு காட்டவும், இறுதியில் ஆட்சியும் பிடித்த பிறகு இந்தக் கண்டன வேகம் குறைந்தது.

1980-இல் தவத்திரு சுப்பிரமணிய சிவாய சுவாமி அவர்கள் ஹவாயில் நிறுவியுள்ள சைவசித்தாந்த சர்ச்சிலிருந்து "There cannot be only one conclusion" என்ற வெளியீடு வெளிவந்தது. சைவ சித்தாந்தம் முன்வைக்கும் முப்பொருள் உண்மையை மறுத்து, ஏகக் கொள்கையை (பொருள் ஒன்றே – Monism –) முன்வைத்தது. (முப்பொருள் – இறைவன், உயிர், உலகம்). இக்கோட்பாட்டை மறுத்து சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருளுண்மையை வலியுறுத்தும் வகையில் பல நூல்கள் வெளிவந்தன. 1983-ஆம் ஆண்டில் "Souls are beginningless", (ஆசிரியர் - விகே பாலசுந்தரம், கோலாலம்பூர்) 1984-ஆம் ஆண்டில் "There has always been only a pluralistic Saiva Siddhanta Philosophy" என்ற ஆங்கில நூல்களும், 1984-ஆம் ஆண்டில் டி.என். அருணாசலம் அவர்கள் எழுதிய, There can be only one conclusion" என்ற ஆங்கில நூலும் வெளிவந்தன. இந்த நூல்களில் தூற்றுதல்களோ, வசைகளோ இல்லாமல் தருக்க ரீதியான மறுப்புகள் மட்டுமே உள்ளன. அனைத்துக் கண்டனங்களும் அடங்கி ஓய்ந்து சுமூகமான சமயச் சூழ்நிலை நிலவிவந்த தமிழ்நாட்டில் 1985-ஆம் ஆண்டில் மு. தெய்வநாயகம் என்பார் ''விவிலியம், திருக்குறள், சைவ சித்தாந்தம் – ஒப்பாய்வு'' என்ற நூலில் சைவத்தின் மேல் சேற்றை வாரிப் பூசினார். இந்நூலுக்கு மறுப்பாக மூதறிஞர் சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் விரிவான பெருநூல் ஒன்று எழுதினார். இனி காலவாரியாகக் கண்டன நூல்களைப் பார்ப்போம்.

சைவ தூஷண பரிகாரம்

1853

(*வெளியீடு : யாழ்ப்பாணம் சைவப் பிரகாச சமாசீயர்*) அமெரிக்கா, இங்கிலாந்தில் உள்ள மிலேச்சர்கள் கிறிஸ்து சமயத்தைப் பரப்புகின்றனர். அங்கிருந்து வரும் பாதிரிமார்களே சிவன் கடவுள் அல்லர் என்றும், பிசாசு என்றும் கூறி வருகின்றனர். அன்னாரை மறுத்து சிவன் ஒருவரே பரமபதி என்று கூறுவது இந்நூலாகும்.

''சுப்பிர தீபம்''

1857

(*ஆசிரியர் :* By a native Christian) யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துவ மதபிரசாரகராகிய பாதிரிமார்களால் சைவ மதத்தார்கள் பெரிதும் துன்புறுத்தப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணம் வேத ஆகம உக்த சித்தாந்த சைவப்பிரகாச சமாசியரால் உண்மையோடு பல பொய்களையும் இணைத்து இயற்றப்பட்ட ''சைவ தூஷணம்'' என்ற நூலுக்குப் பரிகாரமாகப் பொய்களை எல்லாம் உண்மைச் செய்திகள் அடிப்படையாகக் கொண்டு கற்றவர்கள் இதன் உண்மையை உணர்ந்து மகிழும் வகையில் இயற்றப்பட்டது. இதன் கண் ஏசுபிரான் போற்றல் முதலியன விளக்கப்பட்டன.

சைவ மகத்துவம்

1867

(*ஆசிரியர் :* சி.வை. தாமோதரம் பிள்ளை)''சைவ மகத்துவம்'' என்ற நூலை தாமோதரம் பிள்ளையவர்கள் ஏன் இயற்றினார்கள்?

''பிராமாணாதி தேராது, யுத்தியாற் பாராது, தன் சமயத்தின் தன்மையும் ஓராது சாறுமிழ்ந்து கோதுண்ணும் பேறுடை

விலங்கொப்பத் தன் சமயத்திற்கு இணையில்லாததோர் பரசமயத்தை மெய்ச்சிப்புகும் அவிவிவேகிகளைக் கண்டு பச்சாத்தாபம் கொண்டு மேலுமேலும் பலரும் அவ்வாறு சென்று வழிமயங்காதுய்யும் பொருட்டு'' பிள்ளையவர்கள் ''சைவமகத்துவத்தை'' எழுதினார்கள்.

''சைவமகத்துவத்தின்'' பொருளடக்கம் தான் என்ன? ''சைவ மகத்துவம்'' சைவ சமய கிறிஸ்துவ சமயங்களின் தாரதம்மிய விளக்கம் ஆகும். சைவசமய கிறிஸ்துவ சமய போதனைகளுள் விசேடித்தனவற்றை ஒன்றோடொன்று எதிரெதிரே சைவ மகத்துவத்தில் தீட்டி இவை யுத்திக்கு இசைந்தன, இவை யுக்திக்கு மாறுபட்டன ஆதலில் இவையே கடவுளால் அருளப்பட்டிருத்தல் வேண்டுமென நாட்டித் தாரதம்மியத் தாழ்வால் கிறிஸ்துவ சமயம் ஈசுவர கிரந்தமாயிருக்கும் தகைமை உடையது அன்றெனக் காட்டினன்''.

கிறிஸ்துவ சமயத்திற்கும், சைவ சமயத்திற்கும் உள்ள வேறுபாட்டை, உயர்வு தாழ்வை கிறிஸ்துவ சமயத்திலிருந்து சைவத்திற்கு மதமாறிய பிள்ளையவர்களைத் தவிர வேறு யாரால் எடுத்துச் சொல்ல முடியும்?

''சைவ மகத்துவம்'' ஐந்து பாயிரங்கள், பதினைந்து விருத்தங்களும் கொண்டது. ஒவ்வொரு விருத்தத்திற்கும் கீழே பதவுரையும், விரிவான விளக்கமும் எழுதப்பட்டுள்ளது.

சைவமகத்துவத்தில் ஒன்பது உட்பிரிவுகள் உள்ளன.

பொதுப்பிரகரணம் பிரமாணாதிகளான் நிச்சயம் பெற்ற சாதன ஏது திருஷ்டாந்தங்களோடு கூடிய யுத்தியால் எச்சமயம் மெய்ச்சமயம் என்று தாபிக்கலாம் என்றும், வேதத்தால் இன்றியமையாது விளம்பப்படுவன யாவை என்றும் இரு விருத்தங்களிலே கூறுகின்றது.

அநாதிப் பிரகரணம் பதிபசு பாச மூன்றும் அநாதி நித்தியமாதலை மூன்று விருத்தங்களிலே உரைக்கின்றது.

செகத்துப் பிரகரணம் மாயையினாலே தனுகரண புவன போகங்கள் தோன்றும் என்பதையும், ஆன்மா பதியறிவு தலைப்படும் பொருட்டு பூமியிற் சடத்தோடு பலவகைப் பிறவிகளில் உற்பத்தியாகி வரும் என்பதையும் இருவகை விருத்தங்களிலே விளம்புகின்றது.

பாசப்பிரகரணம் மலம் அநாதி நித்தியமாய் ஆன்மாவிற் புணர்ந்த தன்மையையும் அது அநாதியாயினும் அழிதற்பாற்று என்பதையும் இரு விருத்தங்களிலே சொல்லுகின்றது.

நிவர்த்திப் பிரகரணம் ஆன்மா மல நிவர்த்தி அடைந்து முத்தி பெறுவதை உணர்த்துவதோடு கடவுளின் திவ்விய அனுக்கிரக சக்தியே ஆன்மா முக்தியடைவதற்கு முக்கிய காரணம் என்று இருவிருத்தங்களிலே செப்புகின்றது.

ஏனைய நான்கு உட்பிரிவுகளான முத்தி, நிரயம், சற்குரு, அந்தப் பிரகரணங்கள் ஒவ்வொரு விருத்தம் மூலம் முறையே முத்தி லக்ஷணம், நரக லக்ஷணம், சற்குருவின் இயல்பும் இன்றியமையாமையும், ஆசாராதிகளால் சமய உயர்வு தாழ்வு இன்மையும் உள்ளத்தில் கொள்ளும் அன்பின் பெருமையும் என்பனவற்றை விளக்குகின்றன.

"சைவ சூளாமணி"

1883

(**ஆசிரியர் :** ஸ்ரீலஸ்ரீ சூளை சோமசுந்தர நாயகர்)முடிச்சூர் முதலியார் என்பவர் லிங்கமத கண்டனம், கூரேச விஜயம், இருசமய விளக்கம் என்ற நூல்களில் சைவ சமய நிந்தை செய்கிறார். சிவனுக்கு ரிஷிகளால் இட்ட சாபத்தால் இற்று விழுந்தது ஆண்குறி'' ''விஷ்ணு சிவனால் பூசிக்கப் படுகிறார்''. திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய கதையையும் இராமனுக்கு பிரும ஹத்தி தொலைய இராமேஸ்வரத்தில் சிவபூசை செய்த கதையையும் முடிச்சூர் முதலியார் மறுக்கிறார். திருவண்ணாமலை, சிதம்பரம் கமலாலயம், காளத்தி, காசி முதலாய தலங்கள் விஷ்ணு தலங்கள் என்கிறார்.

இவை அனைத்தையும் மறுத்து சோமசுந்தர நாயகர் அவர்கள் சைவ சூளாமணி,

கூரேச விஜயபங்கம், இருசமயத் தெளிவு, சிவாதித்ய ரத்னாவளி – இரண்டு பாகம், சிவ பாரம்யப் பிரதசிரி என்ற நூல்களை வெளியிட்டார். நாயகர் அவர்கள் புராணங்கள், வேதம், சைவ வைணவ நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டி நிறுவுகிறார். நாயகர் அவர்களின் வடமொழிப்புலமை, சைவ, வைணவ தத்துவ அறிவு புலனாகிறது.

‘‘அஞ்ஞானமாகிய அழுக்கேறியிருக்கும் விஷ்ணு பரத்வம் என்னும் அழுக்கு மூட்டையை மௌட்டீகம் என்னும் முதுகின் மேற் சுமந்து, அவைதிகம் என்னும் குமார்க்கத்தில் நடந்தோடி, எரிவாய் நிரயம் என்னும் படுகுழியில் வீழ்ந்து அழிந்த வண்ணாரக் கழுதையாகிய அம்முடிச்சூர் முதலி விபவத்தை யாம் என்னென்று விரிப்போம்’’ இவ்வரிகள் கண்டனத்திற்கு நல்ல எடுத்துக் காட்டல்லவா?

‘‘சிவசமவாத உரை மறுப்பு’’

1886

ஆசிரியர் : அம்பலவாண தேசிகர்: பதிப்பாசிரியர் : சபாபதி நாவலர். இந்நூல் 18-ஆம் நூற்றாண்டில் சிவஞான யோகிகள் எழுதிய உரைக்கு மறுப்பாகும்.

இராம தத்துவ தீபிகையினது ஆபாச விளக்கம்

1888

ஆசிரியர் : சோமசுந்தர நாயகரின் மாணாக்கர் நல். சுப்பிரமணிய முதலியார்.

‘‘ஸ்ரீ இராமர் சிவபூசை செய்தது’’ எனும் தலைப்பில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்கள் ஸர்வதாரி வருடம் ஆடிமாதம் உயில் சென்னை முத்தியாலுப்பேட்டை ஸ்ரீ மல்லிகேஸ்வர ஸ்வாமி ஸந்நிதியில் இரண்டாயிரம் பிரஜைகள் சூழ இருந்து பிரஸங்கம் செய்து முடித்தார்கள். அது சிறு பத்திரிகையாக வெளியிடப்பட்டது.

அப்பத்திரிகையில் வந்த விஷயம் வருமாறு : ‘‘சென்னை ஸ்ரீமத் ஏகாம்பர நாதஸ்வாமி ஸந்நிதி மாடவீதியில் ஓர் சாஸ்திரியார் சில மாசங்களாக இராமாயணப் பிரசங்கம் செய்து வந்தார். சூதஸம்ஹிதா படநத்தைத் தூஷித்தார்.

சோமசுந்தரர் : ‘‘ஸ்ரீராமர் சீதையை மீட்டுக் கொண்டு வருகையில், சீதையைப் பார்த்து (அத்ர பூர்வம்) என்றார். இராமர் சிவனைப் பூசித்து வருகையில் சிவபெருமான் வெளிப்பட்டுப் பாசுபதம் முதலிய அஸ்திரங்கள் கொடுத்தார் என்று பாத்மத்தில் சொல்லப்பட்டு இருக்கின்றது. இவ்வுண்மை போதரவே ‘‘அத்ர பூர்வம்’’ பூர்வம் – இவ்விடத்தில் நான் சிவாராதனம் செய்தமையால், அப்போது மகாதேவர் உன்னை அடைவதாகிய பிரஸாதத்தை எனக்குக் கொடுத்து அருளினார் என்று கொள்வதே அமைவுடைத்து. நம்மவருக்கு அதிர்ஷ்டம் வைஸ்வதன் கிடைத்தான். எப்படி ஒதுங்கினாலும் சிவபூசை இராமரை விடாது தொடர்கின்றது’’.

‘‘இராமர் சிவபூசை செய்தார் என்று யாரும் கூறுதலால் இராமருக்கு ஸேவகத்வமும் சிவபெருமானுக்கு ஸேவ்யத்துவமும் ஸித்திக்கின்றன. இதனால் இராமரைக் காட்டிலும் சிவன் உயர்ந்தவரும், சிவனைக் காட்டிலும் இராமர் தாழ்ந்தவருமாகிய தாரதம்யமே வெளியாகின்றது.

‘‘சைவ வேடம் பூண்டு திரியும் சாஸ்திரியார் விஷயம் வேறு புருடனிடத்தில் அன்பு பாராட்டி, தன்புருடனை நிந்தை செய்யும் விபசாரி என்று பலரும் பழிக்கத் திரிவது போலன்றோ ஆயிற்று. இவர் ஸ்மார்த்தராகத் தன்னை எண்ணியிருப்பதாலும், தமது ஆசாரிய ஸ்வாமிகள் ஸ்ரீ சங்கர பகவத்பாதர் என மதித்திருப்பதாலும், உடம்பெல்லாம் சைவசின்னம் தாங்கியிருப்பதாலும் இவருக்குச் சிவ மகிமையாகிய சூதசம்கிதையில் ஹேய புத்தி வந்தது. அபராதம் என யாம் ஓர் பத்திரிகையில் நல்லறிவு சுடர் கொளுத்தினாம்’’.

சோமசுந்தர நாயகரின் இப்பத்திரிகைச் செய்தியை மறுத்துச் சிற்றாத்துக்காடு சீனிவாசாஸாரி என்பவர் வெளியிட்டார். சீனிவாஸாசாரியை மறுத்து நல். சுப்பிரமணிய முதலியார் ‘‘இராமத்தத்துவ தீபிகையினது ஆபாச விளக்கம்’’ பிரசுரித்தார். ‘‘இவர் புலம்பியன பல, இராமரைச் சிவ பூசையினின்றும் இவர்

தப்ப வைத்த பட்சத்தை மட்டும் ஈண்டு விசாரிப்போம்'' என்கிறார் சுப்பிரமணிய முதலியார்.

சுப்பிரமணிய முதலியார் நிறைய பிரமாணங்கள் கொடுத்து தருக்க ரீதியில் கொண்டு முடிக்கிறார். ''இராமரிடம் ஓரற்பமும் தெய்வத் தன்மை ஸித்தி ஆகாமையால் அவர் ஸாமான்ய பக்த ஜீவன் என்பது ஸித்தம். ஜீவனாகிய அவருக்கு ஹத்தி தொலைய அவர் சிவனைப் பூசித்தார் என்பது நிர்விவாத கிரஸ்தம் என்க''.

''தத்துவார்த்த தீபநிரசனம் ஆகிய பிரஹ்ம தத்வ நிரூபணம்''

1891

(ஆசிரியர் : சோமசுந்தர நாயகர். பக்கம்: 125) 'கைவல்ய நவநீதம்' என்ற ஏகான்ம வாத நூலுக்கு அருணாசல சுவாமிகளும், அவர் மாணாக்கர் சச்சிதானந்தம் பிள்ளையும் முன்னரே உரை எழுதியுள்ளாராக கோயிலூர் பொன்னம்பல சுவாமிகள் என்பவர் 'தத்துவார்த்த தீபம்' என்ற பெயரில் ஓர் உரை எழுதித் தீபம் ஒளியை பரப்புதலுக்கு மாறாக இருளைப் பரப்பும் வகையில் ஓர் உரை எழுதி அதன் கண் வியாசர் அபிப்பிராயம் அறியாமல், சைவர் ஆதியோர் துக்கிக்குமாறு அவர்களை மந்த அறிவுடையோர் என்று விளக்கிக் கூறிய அந்நூலில் அவர் குறிப்பிட்ட செய்திகளில் முன்னுக்குப் பின் முரணாயவற்றை எடுத்துக்காட்டி 'பிரஹ்ம தத்துவம்' இன்னது என்பதை உறுதி செய்வது இந்நூல்.

''வேதாந்த சங்கை நிவாரணம்''

1893

ஆசிரியர் ''அத்வைத சித்தாந்தி'' நந்தன வருடம் (1891) ஆனி மாதம் ''கேவலாத்துவித விசாரம்'' என்று பரசமய கோளரி என்ற பெயருடைய சைவர் இயற்றிய நூலில் ''கேவாலாத்துவிதம் என்ற சொல்லின் பொருத்தமின்மையையும், அத்துவிதிகளை மாயாவாதிகள் என்று கூறுவதன் பொருத்தமின்மையையும் சுஜாதி, விஜாதி, சுகத பேதங்கள் பற்றி அவர் கூறியன யாவும் அத்துவித சித்தாந்தத்திற்கு முரண்பட்ட சிந்தனைகள் என்பதையும், அத்துவிதத்தின் அடிப்படை நூல்களில் கூட அவருக்குப் பழக்கமில்லை என்பதையும், அத்துவிதத்தின் உண்மை அமைப்பு இது என்பதையும், சத்து, அசத்து, ஸதசத்து இவற்றின் விளக்கங்களையும் ஸதசத்து விலக்ஷண அநிர்வசனீயம் கூறுதலே அமைவுடைத்து என்றும் கடவுள், உயிர், உலகம் ஆகிய முப்பொருளுக்கும் சத்துத் தன்மை கூறி கடவுளுக்கு மூன்றில் ஒரு பங்கு இடத்தைக் கொடுக்கும் அந் நூலாசிரியர் மூன்றில் ஒரு பங்கு ஆத்திகராய் இரண்டு பங்கு நாத்திகராய் வெளிப்படுகிறது என்பதையும் விரித்துரைக்கும் நூல்.

''அத்வைத தூஷண பரிகாரம்''

1894

(ஆசிரியர் : ''ஓர் இந்து'' பக்கம் : 92) தூத்துக்குடியில் சைவப்பிரகாச சமாஜத்தார் ''மாயாவாதி மனக்குழப்பம்'' என நான்கு பக்கம் கொண்ட ஓர் சிறுபத்திரம் விஜய வருடம் ஆனிமாதம் 30-ஆம் தேதி பிரசுரித்திருக்கின்றார்கள். அதனை எழுதியவர் சோமசுந்தர நாயகர் ஆவார்.

சோமசுந்தர நாயகர் அத்வைத மதத்தை மாயாவாதம் என்கிறார். இந்த வாதம் ஐந்து வருடமாக நடந்து வருகின்றது. நாயகர் வலிந்து பேசி போலீசில் வலிக்கப்பட்டு தண்டும் இறுத்ததாக வந்துள்ளது. மாயாவாத மதத்தில் (அத்வைதம்) ''பிரமம் ஒன்றேயென்றும், ஜகஜீவ பரங்கள் மித்தையென்றும் சொல்லப்பட்டிருக் கின்றது'' என்றும் அந்தக் குறிப்பில் உள்ளது.

நூலில் ஆசிரியராகிய ''ஓர் இந்து'', ''உலகு அசத்து'' என்பதற்கு 64 மேற்கோள்கள் காட்டுகின்றார்.

''பிரம்மவித்யா'' ஆறாவது புத்தகம் 1-ஆவது, 14-ஆவது பத்திரிகைகளிலும் அதே புத்தகம் 20-வது முதல் 24-ஆவது பத்திரிக்கைகளிலும் '' அவைசத்துமல்ல, அசத்துமல்ல, சதசத்துமல்ல, சதசத் விலக்ஷண அநிர்வசனீயம்'' என இவருக்கு இடித்து இடித்துக் கூறியிருக்கின்றோம். நந்தன வருடம் ஆடி மாதம் ப்ரம்ம வித்யாவில் நாஸ்திகமாக்கிப் பேசிய போதும் அவ்வாறு பேசியிருக்கிறாரே.

1888-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதி பிரமவித்யாவிலும் இவருக்கு இவ்வாறே ''ஓர் நண்பர்'' கூறியிருக்கின்றாரே! ஸ்ரீ சபாபதி நாவலரவர்கள் மறுத்து ''வேதாந்த சங்கை நிவாரணம்'' என்னும் விஷயம் எழுதியபோதும் இதே மாதிரி சொல்லப்பட்டிருக்கின்றதே!

ப்ரம்ம வித்யா 1888-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதி ''ஓர் நண்பர்'' இவர்க்குக் கூறியது.

''இரஜ்ஜு (கயிறு)) வின் கண் தோன்றும் சர்ப்பம் சத்தா? சதசத்தா? இவ்வினாவுக்கு ''சத்தெ''னின் இரஜ்ஜு என்று அறிந்தபோது சர்ப்பம் தோன்ற வேண்டும். தோன்றாமையின் சத்தெனல் அமையாது. அசத்து என்பாம் எனில் மலடி மைந்தன் போல் தோன்றாமல் இருக்க வேண்டும். தோன்றுதலின் அசத்து என்றும் உரைத்தல் கூடாது. சதசத்து என்று உரைக்கப் படலாமோ எனில் மறுதலைப்பட்ட இரண்டு தருமம் ஒன்றின் கண் ஆகலின் சர்ப்பமானது சதசத்விலக்ஷணம் என்க. அன்றி இன்னதன்மைத்து என்று கணிக்கப் படாது எனப்பொருள் கொள்ளும் அநிர்வசனீயமுமாம். இவ்வாறே உலகமும் சதசத்விலக்ஷண அநிர்வசனீயம் என்க. முன்பு உலகை அசத்து என்று உரைத்தது யாதுக்கு எனில் உலகம் சத்து என்பாரை மறுத்தற்கு என்க. உலகம் அசத்து என்பது பூர்வபட்சமே அன்றிச் சித்தாந்தம் அன்று''.

யாழ்ப்பாணம் ''இந்துசாதனம்'' பத்திராதிபருக்குத் தத்துவ விசாரணை புரிவோன்'' என்பவர் கர வருட பிரமவித்தியாவில் பதில் கொடுத்துள்ளார்.

அத்வைத உண்மை
1895

ஆசிரியர் : ஆரியன்

''ப்ரம்ம வித்யா'' என்ற இதழில் 3.7.1894 முதல் 6.7.1895 வரை வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல்.

முதற் கட்டுரை – ''அற்பவிசாரணை அநர்த்தம் செய்யும்'' 1894 பிப்ரவரி 10-17-இல் ''திராவிட மந்திரி'' என்னும் பத்திரிகையில் ''குண்டோதர சிவாசாரியர்'' எனப் பெயர் பூண்டவர் சங்கராச்சாரியாரால் இயற்றப் பட்ட ''பாஷ்ய இருதயம்'' என்னும் நூலில் குற்றம் கண்டு எழுதினார். அவர் கூற்றைக் கருத்துக்குக் கருத்து (point by point) ''ஆரியன்'' என்பவர் மறுத்து சங்கராச்சாரியாரின் கருத்தை நிலைநாட்டுகிறார். அக்கருத்துத் தொகுப்பே இந்நூல்.

''போதாந்த மயமான பரமான்மா மாயையோடே கூடி ஈசுவரானார்'' ''பரமாத்மா அந்தக் கரணங்களோடு ஜீவன் ஆனார்''. ''யாதொரு பரமாத்மா நூற்பூச்சிபோல் விசுவத்தைச் சிருஷ்டித்து அதற்குள் சீவனாய் விளையாடுகின்றார்.''

இம்மூன்று செய்திகளையும் குண்டோதரர் தனது கட்டுரையில் கண்டித்திருக்கிறார். இவரை மறுத்து ''ஆரியன்'' சுருதி ஸ்மிருதி புராண இதிகாச தேவார திருவாசக திருமந்திர சிவஞானபோத நூற்பிரமாணங்களை எடுத்துக்காட்டி, ''பிரமமான சிவனே சக ஜீவ பரங்களாயானதாகச் சொல்லுகிறதே என்ன செய்யலாம்?'' என்று சாடுகின்றார்.

சங் : ''பரப்பிரமத்தில் மாயை உண்டாயிற்று'' ''மாயை, ஈசுவரன், ஜீவன், உலகு பொய்'', ''பரமாத்மா மாயைகளோடு கூடி ஈசுவரன், ஜீவன் உலகம் ஆகிறது.''

குண் : ''முன்னே மாயை அனாதியெனக் கூறி ஈண்டுப் பிரமத்தினின்றும் ஓர் காலத்தில் மாயை உண்டாயிற்று என்று முன்னொடு பின் முரணாகக் கூறியது இவ்விரண்டினுள் எதை உண்மையெனச் சொல்வது?''

ஆரியன் : ''குண்டோதரர் பக்ஷத்திலும் ஜீவர்கள் அநாதிதான். அந்த ஜீவர்கள் இலய காலத்தில் மாயையில் ஒடுங்கி சிருட்டி காலத்தில் வெளிப்படவில்லையா? சொற்பிரபஞ்சம் மாயையில் ஒடுங்கி வெளிப்படவில்லையா? ஆதி என்பது கொண்டு அநாதி என்று சொல்லப்படாதோ? மாயை யானது ஒரு காலத்தில் பிரமத்தினின்றும் வெளிப்படுவது காரணமாக ஆதியென்று சொல்லப்படினும் இருந்து வந்ததென்று சொல்லப்படும் காரணத்தினாலே அநாதியென்று சொல்வது குற்றமன்றே. பிரமத்தின் கணுள்ள மாயை ஓர் வித சக்தி. அது முன்

இல்லாமற் போதலன்று. ஆதலால் அநாதியேயாம்.

இதற்குப் பிரமாணமாக கூர்மபுராணம், இலிங்கபுராணம் போன்ற நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டுகின்றார்.

குண் : ''வேதாந்திகள் அசத்து, சூனியம் எனும் சொற்களுக்கு இல்பொருள் என்றே பொருள் கொள்வர். சற்காரிய வாதமாகிய எமது சைவ சித்தாந்தம் அவ்வாறு பொருள் கொள்ள இடம் தராது.

ஆரி : ''ஊனக்கண் பாசம் என்ற சூத்திரத்தால் நில முதல் நாத தத்துவம் ஈறாகயாவும் கானல் நீரைப் போன்றது என உவமானமுஞ் சொன்னமையால் மற்றச் சுருதியாதிகளுக்கு இணங்கச் சிவஞான போதம் உலகைப் பொய்யென்று சொல்வதாயிற்று.

கட்டுரை 2 : ''வெங்கட்டரமண தாசருக்குச் சாஸ்திர விசாரணை இல்லை'' ''ப்ரும்மவித்யா'' பத்திரிகையில் ''ஓர் இந்து'' என்பவரால் இயற்றப்பட்ட ''அத்வைத தூஷ பரிகாரம்'' என்று இரண்டொரு விஷயத்தினைப் போலியாக எடுத்து சாமக்குளம் வெங்கட்டரமண தாசர் என்பவர் ''திராவிட மந்திரி'' ''நாகை நீலலோசனி'' ஆகிய பத்திரிகைகளில் சில விஷயங்கள் பேசினார்.

அரூபத்திலிருந்து ரூபம் உண்டாவதற்கும், சுந்தரமூர்த்தி சுவாமிகள், பிரதிபிம்பமாவதற்கும் சிவன் இருபத்தைந்து மூர்த்தமாவதற்கும் இவர் கூறும் சாஸ்திரம் விரோதமாயிருக்கிறது.

வெங்கட்ட : ''எங்கும் நிறைந்த காற்று விசிறி கொண்டசைக்க அசைந்தபோதும் அதனிறைவுக்குக் குறைவு வராதற்போல வந்தார் போனார் என்னும் விவகாரம் நிகழ்தல் பற்றி அவரது பூரணத்திற்கு யாதோரிழுக்குமன்று. மாகேசுவர மூர்த்தங்கள் இருபத்தைந்தும் இவை என்றுணர்க.

ஆரியன் : வாதத்தில் இரண்டு பொருள் வேறுவேறாகச் சத்தியமாயும், ஒன்று அசத்தியமாயும் இருத்தல் வேண்டும். பிம்பப் பொருள் இன்னது பிரதிபிம்பப் பொருள் இன்னது ஆதாரப் பொருள் இன்னதெனக் காட்டவில்லை.

கட்டுரை : 3 ''கோயம்புத்தூர் பெருங்குறும்புப் புளியோரைக் கண்டரைப் பற்றியது'' ''ஓர் இந்து'' என்பவர் ''மாய வாத சைவ சண்டமாருதம்'' என்னும் விஷயத்தைப் ''பிரம்மவித்தை''யில் எழுதி வருவதை ''கோயமுத்தூர் புளியோரைக் கண்டனாகிய பெருங்குறும்பன்'', ''திராவிடமந்திரி''யில் தூஷித்து எழுதியுள்ளார். மேற்படியார் அரக்கோண வாசி வீரபத்திர மூர்த்தியைச் சூளைச் சோமசுந்தர நாயகர் எனவும் காட்டி வெளியில் இழுத்துவிட்டார்.

மகாராயஸ்ரீ சோமசுந்தர நாயகர் இனி இவ்வாதத்திற் பிரவேசிப்பதில்லை எனச் சேதுபதி மகாராஜா அவர்களிடம் கூறினாரென அவரே நீலலோசனியில் கூறியிருக்கின்றார். அதை மீறாமல் இருக்க மாற்றுப் பெயரில் நாயகர் எழுதியுள்ளார். அது வெளிப்பட்டுவிட்டது.

சோமசுந்தர நாயகர் வேதத்தில் பல தெய்வங்களைப் பரமாகக் கூறுகின்றது எனச் சொன்னதின் பேரில் ''ஓர் இந்து'' அதனை மறுக்க வந்தார் – ஆரியநேசன்.

கட்டுரை : 4 ''சித்தாந்தம் பூர்வபக்ஷமாதல்'' சில நாளைக்கு முன் ஞானாமிர்த பத்திராதிபரான ஸ்ரீ சபாபதி நாவலர்களை எட்டுவினாக்கள் வினவியதும் அதற்கு அவர் விடையளிக்க வில்லை. சூளை சோம சுந்தர நாயகர் அதற்கு விடையளித்தார். அதன்பேரில் ''பதி பசு பாச வாதம்'' என யாம் எழுதினோம். இப்போது ''சித்தாந்த சங்கர்'' என்பவர் எட்டு கேள்விக்கும் ''திராவிட மந்திரி'' 35, 36, 37 பத்திரிக்கைகளில் விடையிறுப்பாராயினர்.

க–வது வினாவுக்கு அவர் கொடுக்கும் விடை : ''பதிக்குப் பசு பின்னாபின்னம். ஈண்டுப் பின்னமாயிருத்தல் பெத்த நிலையினும், அபின்னமாய் இருத்தல் முத்தி நிலையினுமாம். பின்னம் பாசவசத்தால் பெறப்பட்டுள்ளது. அபின்னம் அருள் வசத்தால் பெறுவது. பாசவசத்தால் வேறுபட்டுள்ள பிறிதொரு பொருட்சார்பினாலே பதிக்குப் பூரணத்துவம் குறையாது என்பது

ஒவ்வாது. பசு, பாசவசம் ஒழிந்து, பதிவசமாய் அபின்னமாதலின், பதியே பசுவாகும் என்பதும் ஒவ்வாது. மேற்காட்டியவற்றானே இருவகை தோஷமும் பரிகரிப்புற்றன. பாசம், காலம் என்னும் கரணங்கள் பற்றி நேர்மறுதலையான இருவித தர்மங்கள் பசுவிடத்து அமைந்துண்மையின், ஒரு பொருளின் கண் நேர்விரோத இருவித தர்மம் இருத்தல் அமையாது என்னும் பொதுத் தருக்கத்தோடமும் ஈண்டு பரிகரிப்புற்றது என்க.

காலம் – பெத்த நிலை, முத்தி நிலை.

பாசம் – ஆணவம் , மாயை, கன்மங்கள்

இப்பாச காலங்களிலே பந்தப்படாத பதியை அப்பந்தங்களுள்ள பசுவோடு சமப்படுத்தி வினாவியதே பொருத்தமின்மையாம். - *8.5.1865.*

இந்த விடைக்கு ‘‘ஆரியன்’’ மூன்றுபக்க அளவில் விடைதருகிறார். இதுபோல எட்டு விடைகளும், ‘‘ஆரியன்’’ தரும் மறுப்புகளுமாக மிக உயர்ந்த தரத்தில் சைவசித்தாந்த – வேதாந்த கருத்துக்கள் செறிந்து உள்ளன.

கட்டுரை : 5 சபாபதி நாவலர் அவர்களும், பிரமம் துண்டு துண்டாய் அறுந்து விழுதலென்பதும் : யாழ்ப்பாணம் கோ.பா. சபாபதி நாவலர் அவர்கள் சென்னை நகரின் கண்ணும், மற்ற இடங்களிலும் பிரசங்கம் செய்யுங்காலும், பேசும் சமயத்திலும் வேதாந்தத்தைத் தூஷிக்க நேர்ந்த போதெல்லாம் பிரமன் ஜகஜீவ பரங்களாய் ஆகின்றது என வேதாந்திகள் சொல்வது தப்பெனக் கொண்டு, பிரமம் துண்டு துண்டாய் அறுந்து விழுகிறது என இகழ்ந்து பேசுகிறார்.

இதனை ‘‘ஆரியன்’’ பிரமாணங்களால் மறுக்கிறார்.

– ப்ரம்ம வித்யா *8.5.1895.*

கட்டுரை : 6 ‘‘சிவன் எவ்வாறு பூரணர்?’’ *31.3.1881*-ஆம் ஆண்டில் பிரசுரமான ‘‘சித்தாந்த ரத்னாகரத்தின்’’ ‘‘சிவபாரம்யப் பிரதரிசிநி’’ என்னும் சஞ்சிகையில் ‘‘சிவன் பூரணர் என்றது’’ என்னும் விஷயத்தைத் துவித சித்தாந்தத் திற்கு ஏற்ப சிவனுக்குப் பூரணத்துவம் கூறுகிறார். இது சுருதியுக்தி அனுபவ விரோதமாயிருப்பதால் அதன் தோஷத்தை விளக்கிக் காட்டினோம். மேற்படி துவித சித்தாந்தி கூறுவதாவது:

‘‘பூரணம் என்பது நிறைவு என்று பொருள்படும். நிறைவு எதில் நிறைவு? என்னும் வினா நிகழும். உலகத்தில் நிறைவு எனவும், சிவனுடைய நிறைவு எனவும் விடைவருமாற்றால், முதல் அவ்வுலகத்தை விசாரிக்கில் சரம், அசரம் என இருவகைப்படும். இவ்விரு பகுதியும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், நிலா, பகலோன், ஆன்மா என்னும் எட்டுப் பேதமாய் விரியும். இவ்வெட்டையன்றிப் பரமாணுவும் கிடையாது என்பது திண்ணம். இதனையே அட்டமூர்த்தம் என்று வேத சிவாகமங்கள் கூறும். எனவே சிவனுக்குத் திருமேனி என்பது பெறப்பட்டது. இதனால், சிவனுடைய நிறைவும் வெளிப்பட்டமை காண்க. சராசரங்களாயுள்ள அவற்றினுள்ளும் புறம்பும் அவர் கலந்து நிற்றலால் அலைகள் வியாத்தி வியாப்பியப் பொருள்களும், அவர் வியாபகப் பொருளுமாதல் சாலும். இதனால் வியாபகத்துக்கு இடமாகிய பொருள்களும் வியாபிக்கும் பொருளும் ஒரு பொருளாகாவாம்’’ என்பதாம்.

இதனை ‘‘ஆரியன்’’ 14 பக்கங்களில் மறுக்கிறார். முடிவில் ‘‘முடிவாகச் சொல்லுவது யாதெனில் பூர்வபக்ஷியார் சிவனுக்குக் கூறும் பூரணத்துவம் அபூரணத்துவமாக முடிகின்றமையாலும் இது கடவுளுக்கு இலக்கணம் ஆகாமையானும், உலகைச் சத்தாகக் கொள்ளுகிற வரையில் கடவுளுக்குப் பூரணத்துவம் சொல்ல இவர்கள் ஆகாமையினாலும் இப்படிப்பட்டவர் பாஞ்சராத்திகட்குப் பூரணத்துவம் கற்பிக்க போவது, குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவதை ஒக்கும். அத்வைதிகள் கடவுளுக்குப் பூரணத்துவம் சொல்லி உலகைச் சத்துப் போலியாய்ச் சொல்லுகின்றமையாலும் இது சுருதி, யுக்தி அனுபவங்கட்குப் பொருந்தி இருக்கின்றமையாலும் அத்வைதிகள் பிறர்க்குப் பூரணத்துவம் போதிப்பது கண்ணுடையார்

கண்ணுடையார்க்கு வழிகாட்டுவதை ஒக்கும்.''

– ஆரியன், ''ப்ரம்மவித்யா'', 6.7.1895.

கட்டுரை : 7 ''தந்திரத்தால் பிரமம் அறியப்படுமா?'' - ஆரியன், ''ப்ரம்ம வித்யா'', 6.7.1895.

சிவத்துரோக கண்டன திக்கார தண்டனம்

1896

ஆசிரியர் : யாழ்ப்பாணத்துச் சைவ பரிபாலன சபையின் கௌரவ பிரசாரகர். பக்கம் - 13.

வெற்றிவேற்பிள்ளையே, நீர் வெளிப்படுத்திய ''சிவத்துரோக கண்டனம்'' என்னும் அபத்த பரிபூரண பத்திரம் கண்டனம். அதன் கணுள்ள வாக்கியப் போக்குகள் அம்பலவாண பிள்ளையை அடிக்கடி வெளிப்படுத்துகிறது.

''பக்குவான்மா – சீவன்'' என்றும் நாயகி – பெண்டாட்டி'' என்றும் ''நாயகன் – புருஷன்'' என்றும் பதப்பொருள் உரைத்தீர்.

திருக்கோவையார் உண்மையிலேயே அற்பனாகிய பக்குவான்மாவை நாயகனாக்கி மகானாகிய சிவபிரானை நாயகியாக்கியது சிவத்துரோகம் என்றும், தேவார திருவாசகங்கள் அங்ஙனம் கூறாது சிவபிரானை நாயகனாகவும், சிவனை நாயகியாகவும் கூறுகின்றன என்றும் கூறினீர்.

கோவையாரில் சொல்லிய 'இரந்து பின்னிற்றல்', வருந்தி மடலேறுதல், வழிபடுதல் முதலிய இழிதொழில்கள் எல்லாம் நாயகன் பாலனவா? நாயகி பாலனவா? கோவையாரிலே ''சொற்பால முது இவள் யான் சுவை'' என்புழி நாயகியை அமுது என்றும் நாயகனைச் சுவை என்றும் கூறவில்லையா'' நாயகருக்கு இன்பம் கொடுப்பவர் நாயகிகள் அன்றோ? வருந்தி இரந்து வழிபட்ட ஆன்மாக்களுக்குப் பேரின்பம் கொடுக்கும் சிவபிரானை வருந்தி இரந்து வழிபட்ட நாயகனுக்குச் சிற்றின்பம் கொடுக்கும் நாயகியாகப் பாவிப்பதா? இரந்து பின்னிற்றல் முதலியன உடைய நாயகனாகப் பாவிப்பதா? இன்பசுகம் கொடுப்பவரினும் அதனைப் பெறுபவர் சிறந்தவரா? ''புணர்ச்சியில் ஆயிழை'' என்னும் திருமந்திரத்தையும் நோக்குக.

''பெண்ணோடு ஆண் அலியாய்ப் பிறவா உருவானவனே'' என்றதும் சிவத்துரோகம்.

(இதுபோல திருவாசகம், சித்தியார், திருமந்திரம், சிதம்பர செய்யுட்கோவை, திருவிளையாடல், பெரியபுராணம் அகிய நூல்களிலிருந்து சான்றுகளை எடுத்து வைத்துள்ளார்.)

“துவிதாத்துவிதவாதம்”

1896

(பக்கம் 130)

இந்நூல் கண்டன இலக்கியத்திற்கும் – கண்டன இலக்கியப் போக்கிற்கும் – வரலாற்றிற்கும் – அருமையான எடுத்துக்காட்டு ஆகும். அத்வைத சித்தாந்தத்தை முன் நிறுத்துவது ஆகும்.

19.9.1894-ஆம் ஆண்டில் குகதாசர் என்பவர் ''இந்து சாதனம்'' என்ற இதழில் ''பிரபஞ்ச விசாரம்'' எனத் தலைப்பட்டு, உலோகாயதர் பௌத்தர், கிறிஸ்துவர், வேதாந்திகள் கோட்பாடுகளை மறுத்துச் சைவ சித்தாந்தக் கருத்துகளை நிலைநாட்டி எழுதினார். அவரை மறுத்து ஓர் அத்வைதி ''பிர்மவித்யை''யில் கட்டுரை எழுதினார். இவ்விரண்டு இதழ்கள் மூலம் வெளியான வாதப்பிரதி வாதங்கள் இரண்டாண்டுகள் தொடர்ந்தன. இவற்றின் நூல்வடிவமே ''துவிதாத்துவித வாதம்'' ஆகும். இந்நூலைப் படித்தால் சைவ சித்தாந்த – அத்வைதக் கருத்துகளை முழுமையாக அறியலாம். ஒவ்வொரு கருத்தும் எவ்வாறு மறுக்கப்படுகிறது என்று அறிய உதவும். இந்நூல் தருக்க முறைக்கு மணிமகுடமாகத் திகழ்கிறது

இந்தக் கால கட்டத்தில் நடந்த வாதங்களையெல்லாம் தொகுத்து தத்துவவாதம், சங்கராசாரியார் அவதார மகிமை, வேதாந்த சங்கை நிவாரணம், சித்தாந்திகளும் ஏகாத்மவாதிகளே, அத்வைத தூஷண

பரிகாரம், பதிபசுபாச வாதம், துவித சைவரே மாயாவாதிகள், மாயாவாத சைவ சண்டமாருதம் என்ற அத்வைத தரப்பிலான நூல்கள் வெளிவந்தன.

இருதரப்பிலும் வேதம், உபநிடதம், திருமுறைகள், சாத்திரங்கள் என மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இனி ''சித்த மலமறுவித்துச் சிவமாக்கி'' என்ற திருவாசக வரிகளுக்கு சைவசித்தாந்திகளின் (''இந்து சாதனம்'' இதழ்) விளக்கமும் அதற்கு வேதாந்தியின் (''பிரம வித்யை'') மறுப்பும் எடுத்துக்காட்டுகளாகத் தரப்பட்டு உள்ளன. இது ''துவிதாத்துவித வாதம்'' நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

1895 வருடம் மே மாதம் 22–ஆம் தேதி இந்து சாதனம் (''துவிதாத்துவிதவாதம்'' – நூல்)

இதுகாறும் செய்த கண்டனை போக இனி *1895* வருட மே மாத 22-ஆம் தேதி ''இந்து சாதன'' முதல் கண்டனை செய்வோம்.

''உண்மை நாயன்மார் சிலர் ஓரோவிடத்து ''சித்தமலம் அறுத்துச் சிவமாக்கி'' எனக் கூறியுள்ள கூற்றை எடுத்து, இதனால் ஆன்மாக்கள் சிவமேயாய்விடுவர் என்பதன்றோ பெறப்படும் என்று நமது மாயாவாதநேசர் மயக்குற்றழிகின்றனர். இவர் எல்லாம் தாம் எடுத்தாளும் துறைகளைச் சிறிதேனும் உற்று நோக்கின்றிலர். ''சிவமாக்கி'' என்றாராகவே, அங்ஙனம் ஆக்குந் துணையும், அவர் எல்லாம் சிவம் அல்லரென்பதும், எனவே எல்லாம் சிவமே என்னும் கூற்று அந்த உண்மை நாயன்மாருக்கு உடன்பாடல்ல என்பதும் இனிது துணியப்படுமன்றே! இனிச் ''சிவமாக்கி'' என்றதனால், ஆன்மாக்கட்குரிய பசுகரணங்களைப் பதிகரணங்களாக்கிச் சிவானந்தானுபவத்துக்கியைந்த பக்குவத்தைத் தந்தருளினார் என்பதே பொருளாம். இங்ஙனமின்றி இவர் எல்லாம் பதித்துவத்தைப் பொருந்திச் சிவத்தோடு சிறிதும் பேதமில்லாத கடவுளர் ஆவர் என்பது பொருளாகாது. இது பொருளாமாயின் அனேகேச்சுர தோஷம் வந்தெய்துமென்க. ஆன்மாக்கள் முத்தி தசையின் கட் தாமோர் முதலாம் தன்மை கெட்டுச் சிவமேயாய் விடுவாராதலின் அனேகேச்சுரதோஷம் வந்து எய்துமாறு எங்ஙனம் என்பராயின் இரண்டு பொருள்கள் எக்காலத்தும் இரண்டு பொருளேயாம். இந்த இரண்டுங் கூடி ஒன்றாதல் எக்காலத்தும் இல்லையாம். இரண்டு இரண்டுதான். ஒன்று ஒன்றுதான். ஆகவே யாதொரு ஆன்மாவும் சிவமுமாகிய இரண்டு பொருள்கள் முத்தி தசைக்கண் ஒன்றாமென்பது தத்துவ சாத்திர நியதிக்குச் சிறிதும் சம்மதமாகாதென விடுக்க. இது சத்தியம். இது பற்றியே முத்திதசைக்கு முன்னும் ஆன்மாக்களைச் சிவமேயென்று நாம் கொள்ளுவது என்பீரேல், நுமது கொள்கை எங்ஙனமாயினுமாக, அது உண்மை நாயன்மார்க்கும் துணிபாமோ என்பதே நாம் ஈண்டுப் பேசுவது. உண்மை நாயன்மார் ''சிவமாக்கி'' என்றாராகவே, அங்ஙனம் ஆக்குதல் முன் சிவம் அல்லார் என்பதும், எனவே அவரும் சிவமும் வேறுவேறு பொருள்களாம் என்பதுமே நாயன்மார் கருத்தாம் என்பது கண்டடங்குக'' என்றார் குகதாசர்.

(இதுவரை குகதாசரின் வாதம் – சைவசித்தாந்தம் – எடுத்து வைக்கப் பட்டுள்ளது. இனி ''பிரும வித்யை'' மறுப்பு – அத்வைதம் - கூறப்படுகிறது.)

இவர் 'சிவமாக்கி' என்றதற்குப் பொருள் 'ஆன்மாக்கட்குரிய பசு கரணங்களைப் பதிகரணங்களாகச் சிவாநந்தானுபவத்துக்கியைந்த பக்குவத்தைத் தந்தருளினார் என்பதே பொருளாம்'' என்கிறார். இதனால் பசுவைச் ''சிவமாக்கி'' என்று சொல்லி விடலாமோ? பசுவுக்கு முன்னர்ப் பசுகரணமிருந்தது; பின்னர்ச் சிவகரண மாயிற்று. அப்போது சிவாநந்தானுபவத்துக்கியைந்த பக்குவம் வந்தது. கரணமென்பது சடமேயன்றிச் சித்தன்று. பசுவோ முன்னிருந்தபடி பசுவாகவேயிருக்கின்றது. இந்நிலையில் பசு சிவமாகவில்லை. இங்ஙனமாகப் பசுவைச் சிவமாக்கியென யாங்ஙனம் கூறற்பாலது? உலகையறிகிற வரையில் பசுவின் கரணத்துக்குப் பசுகரணமென்று பெயர்; சிவத்தையறியுங்கால் சிவகரணமென்று பெயர். பசு உலகையறியுங்கால் உலகாகுமானால் சிவத்தை அறியுங்கால் சிவமாகலாம். ஒரு பிராமணன் தோட்டியையறியுங்கால் தோட்டியும், இராஜனை

யறியுங்கால் இராஜனும், பறவையை யறியுங்கால் பறவையும், மிருகத்தை யறியுங்கால் மிருகமும், மீனையறியுங்கால் மீனும், கல்லையறியுங்கால் கல்லும் இவ்வாறு பிறவும் ஆவான் கொல்லோ? இப்படியாகுமென்று சொல்லிடினும் இதுகண்டப் பொருளில் வாய்க்குமேயன்றி நீக்கமற எங்கும் நிறைந்த பரிபூரணப் பொருளில் வாய்க்குமோ ? பந்தத்தில் அறிபடு பொருள் உலகு; முத்தியில் அறிபடுபொருள் சிவம். பந்தத்தில் பசு உலகாயின், முத்தியில் பசு சிவமாகலாம். பந்தத்தில் உலகை அறிவது கரணம். முத்தியில் சிவத்தையறிவதும் கரணம். பந்தத்தில் பசு உலகாகாதபோது முத்தியில் பசு சிவமாகுமோ? ஆகுமானால் சித்துத் தன்மை கெட்டுச் சடமாயிற்றா? கெடாது சடமாயிற்றா? கெட்டு ஆயிற்றெனின், சித்து சித்துத்தன்மை கெட்டுச் சடமாகுமேல், சடமும் சடத்தன்மை கெட்டுச் சித்தாகுமே. பசுவாகிய சித்துச் சடமாகுமாயின், சிவமாகிய சித்தும் சடமாகுமே. கெடாது ஆயிற்றெனின் சித்து சித்தாகவேயிருக்கின், சடமாதல் எங்ஙனம்? ஆதலால் உயிர்வேறு, சிவம் வேறு என்று சொல்லும் இவர் பக்ஷப்படி, உயிர் சிவமாதலென்று சொல்வது கூடாது. கரணங்காரணமாக வொன்று மற்றொன்றாம் என்பதும் பொருந்தாது. ஒரு மனிதன் அசுத்தப் பொருளையறிகின்றான்; அவனே சுத்தப் பொருளையும் அறிகின்றான். இரண்டையும் அறிந்த கரணம் ஒன்றேயாம். மேற்படி கரணம் அசுத்தம் ஆவதுமில்லை; சுத்தம் ஆவதும் இல்லை. அங்ஙனமே பாசமான உலகை அறிந்த கரணம் பசு கரணம் ஆவதுமில்லை; பாசரகிதமான சிவனை அறிந்த கரணம் சிவகரணம் ஆவதுமில்லை. உபசாரமாய் அப்படிச் சொல்லினும் உண்மையில் அப்படியாவதில்லை. சிவனை அறியுங்காரணத்தால், பசு சிவகரணம் பெற்றுச் சிவமாய் என்று சொல்லுங்கால் சிவன் அறிபொருளாயும் சடமாயும், அசுத்தமாயும் போம். எங்கே கரணமுண்டோ, அங்கே அறிபொருளுண்டு. அறிபொருள் சடமெனல் யாரும் அறிந்ததே. அதோடு ''உணருரு அசத்து'' என்னும் சிவஞானபோதப் பிரமாணப்படி அசத்தாம் என்க. இன்னும், இது விஷயமாகக் கூறுவாம். எங்கே கரணம் உண்டோ அங்கே திரிபுடி, துவிதம், மாயை, பந்தத் தன்மை, பேதத் தன்மை இவை உள்ளன. இவ்விஷயம் 'துவித சைவரே மாயாவாதிகள்' என்ற நூலின்கண் 49 முதல் 60-ஆவது பக்கம் வரையில் காண்க. அதை இவர் பார்த்திருப்பாராயின், சுருதி யுக்தி அனுபவ விரோதமாய் இவ்வாறு எழுத மாட்டார். 'சிவமாக்கி' என்ற சொல்லுக்கு இவர் கொண்ட பொருள் இவ்வளவு தோஷத்திற்கு இடனாகலின் அது பொருளன்று என்க. சுருதி யுக்தி அனுபவ விரோதமாய் வாயில் வந்தவாறு ஏதேதோ சொல்லி விட்டு, அது அதன் பொருள் என்கிறார். இது கூறிய பின்னர் 'இங்ஙனமன்றி இவர் எல்லாம் பதித்துவத்தைப் பொருந்திச் சிவத்தோடு சிறிதும் பேதமில்லாத கடவுளன் ஆவர் என்பது பொருளாகாது' என்கிறார். ஏன் ஆகாது?

ஆத்மபோதோபநிஷத் : நான் பிரமத்தை விட வேறல்லாத உத்தமன்.

சிவஞானபோதம் :

> ''அவனே தானே யாகிய அந்நெறி
> ஏகனாகி இறைபணி நிற்க
> மலமாயை தன்னொடு வல்வினை
> யின்றே.''

திருவாசகம் : ''பேசினேன் ஓர் பேதமின்மை.''

திருநாவுக்கரசு சுவாமிகள் : ''பிறருருவும் தம்முருவும் தாமேயாகி.''

(இதற்குச் சான்றுகளாக மேலும் சூதசங்கிதை, பிரமகீதை முண்டகோப உபநிடதார்த்தம், தேவாரம், திருமந்திரப் பாடல்களை மேற்கோள்களாகக் காட்டுகிறார்.)

சுருதி முதலிய மேற்படி பிரமாணங்கள்; ஜீவர்கள் சிவத்தை அடைந்து சிவசொரூபமாய் மாத்திரம் மிஞ்சுமென அபேதத்தைக் கூறும்போது இவரேன் அதற்கு மாறாகப் பேச வேண்டும்?

"அத்வைத தூஷண நிக்கிரக மர்த்தனம்

1896

இச்சிறு பிரசுரத்தை இயற்றியவர் மதுரை சாமிநாத பிள்ளை ஆவார். இதற்கு முன்னரே நாகையில் ஓர் பிரமவாதி ''அத்வைத தூஷண நிக்கிரகம்'' என்ற நூலை வெளியிட்டதாக இந்நூலில் உள்ளது. இந்நூலை அடுத்து, ''அத்வைத தூஷண நிக்ரக ஆபாச வினாவிடை'' என்ற நூல் வெளிவந்தது. கண்டன நூல்கள் அனைத்தும் ஒரு சங்கிலித் தொடராகவே அமைகின்றது.

"கீதார்த்த தீபிகாபாச நிரசநம்"

1897

ஆசிரியர் : சாமக்குளம் ப்ரம்மஸ்ரீ வெங்கடரமண தாசர் என்ற சுப்பிரமணிய *சர்மா, பக்கம் : 48*

''கீதார்த்த தீபிகை'' எனவொரு நூல் கோயமுத்தூர் குப்புசாமி ஐயரவர்களால் சில தினங்களுக்கு முன் வெளியிடப் பட்டது.

குப்புசாமி அய்யர் : ''கீதையில்'' ஈச்வரன் ஸர்வபூதாநாம்' என்று வரும் சுலோகத்தில் 'அவரை' என்பது ஈசுவரனைத்தான் குறிக்கின்றது. அந்த ஈசுவரன் கிருஷ்ணனே''

''அதற்கு முந்திய சுலோகத்தில் ஈசுவரன் சகல பிராணிகளுடைய இருதயத்திலிருந்து கருமங்களில் ஏவுகிறவராகச் சொல்லப் பட்டார். 'என்னை' என்று சொல்லாமல், 'அவரை' என்று சொல்லக் காரணம் என்ன எனில், அந்தர்யாமியாய் சகல பூதங்களிலுமிருந்து ஏவுகிற ஈசுவரன் கிருஷ்ணரை விடவேறல்ல. அந்த அந்தர்யாமி சுவரூபமும் பிரமமே என்று குறித்துக் காட்ட (தம்) அவரை என்கிற பதம் குறித்துக் காட்டப்பட்டது.''

இது குப்புசாமி ஐயரின் கூற்று: குப்புசாமி ஐயரின் இந்தக் கூற்றினைச் சர்மா மறுக்கிறார்.

சர்மா : ஈசுவரன் என்பது சிவனது ரூப நாமங்களில் ஒன்று. ஈசுவரன் – ஈசன் – ஈசானன் என்பவை விஷ்ணு நாமங்கள் அல்ல. தான் அந்த ஈசுவரன் அல்ல என்பதைக் காட்டவே (தம்) என்று கண்ணனும் படர்க்கையிடமாக அவரை என்று சுட்டிப்பிரகாசப்படுத்தினன் அந்தக் கண்ணன். 'உத்தம; புருஷஸ்த்வந்ய'; 'உத்தமனும், புருஷனும், அன்னியனும் என்று கண்ணன் கூறினமையால் ஈச்வரன் தனக்கு அந்நியமானவன் என்பதை இனிது பிரகாசப்படுத்தினர். 'தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே' என்று கண்ணன் கூறினமைக்கு அர்த்தம் 'அந்த ஆதி புருஷனையே நான் சரணம் அடைகின்றேன்.'

பகவத் கீதைக்கு 'கீதார்த்தப் பிரகாசிகை' என்றொரு வியாக்கியானம் எமது வைதீக சைவசித்தாந்தச் சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் செய்திருக்கின்றனர். அதனாதரவு கொண்டே யாம் இந்த நூல் செய்தது என அறிக.

திருமந்திர விசாரணை

1897

கோப்பாய் ஸ்ரீசபாபதி நாவலரவர்கள் தாம் வெளியிட்டு வரும் ஞானாமிர்தம் 2.7.1892 தேதியிட்ட இதழில் ''கேவலாத்து வித விசாரம்'' என்ற தலைப்பில் அத்துவித விரோதமாக ஒரு கருத்தினை வெளியிட்டார். அதற்கு ''அத்வைத சித்தாந்தி'' என்பார் ''வேதாந்த சங்கை நிவாரணம்'' என்று நாமமளித்து சிதம்பரத்திலிருந்து வெளிவந்த ''பிரமவித்யா''வில் சமாதானம் எழுதிப் பூர்த்தி செய்தார். அது 1893-ஆம் வருடம் தனிப் புத்தகமாக வெளிவந்தது. 'அந்நூலில் காட்டப்பட்டுள்ள பிரமாணச் செய்யுளை எடுத்துக்காட்டி காசிவாசி செந்திநாதையர் அவர்கள் ''இந்நூல் நம்மவர்க்குரியது'' என்று பேசினார். இவ்விவரம் *28.12.1896, 4, 11, 12 ஜனவரி 1897* தேதிகளில் வெளிவந்த நாகை நீலலோசனியில் வெளிவந்தது. அவ்விஷயம் முற்றும் தவறு என்று ''திருமந்திர விசாரணை'' கூறுகிறது.

பொய் மெய்யை மறைத்தல் : சபாபதி நாவலரவர்கள் பேசிய விஷயங்களில் பொய் மெய்யாய்ப் பரப்பிரமத்தை மறைத்து அங்ஙனம் விவரிக்கச் செய்ய வல்லதாதல் யாங்ஙனம்? என்பதொன்று. அதற்கு முன் அவர் எழுதிய சம்பந்தப்படி அதன் பொருள் பொய்யாகிய மாயை மெய்யாகிய பிரமத்தை எப்படி மறைக்கும்

யறியுங்கால் இராஜனும், பறவையை யறியுங்கால் பறவையும், மிருகத்தை யறியுங்கால் மிருகமும், மீனையறியுங்கால் மீனும், கல்லையறியுங்கால் கல்லும் இவ்வாறு பிறவும் ஆவான் கொல்லோ? இப்படியாகுமென்று சொல்லிடினும் இதுகண்டப் பொருளில் வாய்க்குமேயன்றி நீக்கமற எங்கும் நிறைந்த பரிபூரணப் பொருளில் வாய்க்குமோ ? பந்தத்தில் அறிபடு பொருள் உலகு; முத்தியில் அறிபடுபொருள் சிவம். பந்தத்தில் பசு உலகாயின், முத்தியில் பசு சிவமாகலாம். பந்தத்தில் உலகை அறிவது கரணம். முத்தியில் சிவத்தையறிவதும் கரணம். பந்தத்தில் பசு உலகாகாதபோது முத்தியில் பசு சிவமாகுமோ? ஆகுமானால் சித்துத் தன்மை கெட்டுச் சடமாயிற்றா? கெடாது சடமாயிற்றா? கெட்டு ஆயிற்றெனின், சித்து சித்துத்தன்மை கெட்டுச் சடமாகுமேல், சடமும் சடத்தன்மை கெட்டுச் சித்தாகுமே. பசுவாகிய சித்துச் சடமாகுமாயின், சிவமாகிய சித்தும் சடமாகுமே. கெடாது ஆயிற்றெனின் சித்து சித்தாகவேயிருக்கின், சடமாதல் எங்ஙனம்? ஆதலால் உயிர்வேறு, சிவம் வேறு என்று சொல்லும் இவர் பக்ஷப்படி, உயிர் சிவமாதலென்று சொல்வது கூடாது. கரணங்காரணமாக வொன்று மற்றொன்றாம் என்பதும் பொருந்தாது. ஒரு மனிதன் அசுத்தப் பொருளையறிகின்றான்; அவனே சுத்தப் பொருளையும் அறிகின்றான். இரண்டையும் அறிந்த கரணம் ஒன்றேயாம். மேற்படி கரணம் அசுத்தம் ஆவதுமில்லை; சுத்தம் ஆவதும் இல்லை. அங்ஙனமே பாசமான உலகை அறிந்த கரணம் பசு கரணம் ஆவதுமில்லை; பாசரகிதமான சிவனை அறிந்த கரணம் சிவகரணம் ஆவதுமில்லை. உபசாரமாய் அப்படிச் சொல்லினும் உண்மையில் அப்படியாவதில்லை. சிவனை அறியுங் காரணத்தால், பசு சிவகரணம் பெற்றுச் சிவமாய் என்று சொல்லுங்கால் சிவன் அறிபொருளாயும் சடமாயும், அசுத்தமாயும் போம். எங்கே கரணமுண்டோ, அங்கே அறிபொருளுண்டு. அறிபொருள் சடமெனல் யாரும் அறிந்ததே. அதோடு ''உணருரு அசத்து'' என்னும் சிவஞானபோதப் பிரமாணப்படி அசத்தாம் என்க. இன்னும், இது விஷயமாகக் கூறுவாம். எங்கே கரணம் உண்டோ அங்கே திரிபுடி, துவிதம், மாயை, பந்தத் தன்மை, பேதத் தன்மை இவை உள்ளன. இவ்விஷயம் 'துவித சைவரே மாயாவாதிகள்' என்ற நூலின்கண் 49 முதல் 60-ஆவது பக்கம் வரையில் காண்க. அதை இவர் பார்த்திருப்பாராயின், சுருதி யுக்தி அனுபவ விரோதமாய் இவ்வாறு எழுத மாட்டார். 'சிவமாக்கி' என்ற சொல்லுக்கு இவர் கொண்ட பொருள் இவ்வளவு தோஷத்திற்கு இடனாகலின் அது பொருளன்று என்க. சுருதி யுக்தி அனுபவ விரோதமாய் வாயில் வந்தவாறு ஏதேதோ சொல்லி விட்டு, அது அதன் பொருள் என்கிறார். இது கூறிய பின்னர் 'இங்ஙனமன்றி இவர் எல்லாம் பதித்துவத்தைப் பொருந்திச் சிவத்தோடு சிறிதும் பேதமில்லாத கடவுளன் ஆவர் என்பது பொருளாகாது' என்கிறார். ஏன் ஆகாது?

ஆத்மபோதோபநிஷத் : நான் பிரமத்தை விட வேறல்லாத உத்தமன்.

சிவஞானபோதம் :

''அவனே தானே யாகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை
யின்றே.''

திருவாசகம் : ''பேசினேன் ஓர் பேதமின்மை.''

திருநாவுக்கரசு சுவாமிகள் : ''பிறருருவும் தம்முருவும் தாமேயாகி.''

(இதற்குச் சான்றுகளாக மேலும் சூதசங்கிதை, பிரமகீதை முண்டகோப உபநிடதார்த்தம், தேவாரம், திருமந்திரப் பாடல்களை மேற்கோள்களாகக் காட்டுகிறார்.)

சுருதி முதலிய மேற்படி பிரமாணங்கள்; ஜீவர்கள் சிவத்தை அடைந்து சிவசொரூபமாய் மாத்திரம் மிஞ்சுமென அபேதத்தைக் கூறும்போது இவரேன் அதற்கு மாறாகப் பேச வேண்டும்?

"அத்வைத தூஷண நிக்கிரக மர்த்தனம்

1896

இச்சிறு பிரசுரத்தை இயற்றியவர் மதுரை சாமிநாத பிள்ளை ஆவார். இதற்கு முன்னரே நாகையில் ஓர் பிரமவாதி ''அத்வைத தூஷண நிக்கிரகம்'' என்ற நூலை வெளியிட்டதாக இந்நூலில் உள்ளது. இந்நூலை அடுத்து, ''அத்வைத தூஷண நிக்ரக ஆபாச வினாவிடை'' என்ற நூல் வெளிவந்தது. கண்டன நூல்கள் அனைத்தும் ஒரு சங்கிலித் தொடராகவே அமைகின்றது.

"கீதார்த்த தீபிகாபாச நிரசநம்"

1897

ஆசிரியர் : சாமக்குளம் ப்ரம்மஸ்ரீ வெங்கடரமண தாசர் என்ற சுப்பிரமணிய சர்மா, பக்கம் : 48

''கீதார்த்த தீபிகை'' எனவொரு நூல் கோயமுத்தூர் குப்புசாமி ஐயரவர்களால் சில தினங்களுக்கு முன் வெளியிடப் பட்டது.

குப்புசாமி அய்யர் : ''கீதையில்'' ஈச்வரன் ஸர்வபூதாநாம்' என்று வரும் சுலோகத்தில் 'அவரை' என்பது ஈசுவரனைத்தான் குறிக்கின்றது. அந்த ஈசுவரன் கிருஷ்ணனே''

''அதற்கு முந்திய சுலோகத்தில் ஈசுவரன் சகல பிராணிகளுடைய இருதயத்திலிருந்து கருமங்களில் ஏவுகிறவராகச் சொல்லப் பட்டார். 'என்னை' என்று சொல்லாமல், 'அவரை' என்று சொல்லக் காரணம் என்ன எனில், அந்தர்யாமியாய் சகல பூதங்களிலுமிருந்து ஏவுகிற ஈசுவரன் கிருஷ்ணரை விடவேறல்ல. அந்த அந்தர்யாமி சுவரூபமும் பிரமமே என்று குறித்துக் காட்ட (தம்) அவரை என்கிற பதம் குறித்துக் காட்டப்பட்டது.''

இது குப்புசாமி ஐயரின் கூற்று: குப்புசாமி ஐயரின் இந்தக் கூற்றினைச் சர்மா மறுக்கிறார்.

சர்மா : ஈசுவரன் என்பது சிவனது ரூப நாமங்களில் ஒன்று. ஈசுவரன் – ஈசன் – ஈசானன் என்பவை விஷ்ணு நாமங்கள் அல்ல. தான் அந்த ஈசுவரன் அல்ல என்பதைக் காட்டவே (தம்) என்று கண்ணனும் படர்க்கையிடமாக அவரை என்று சுட்டிப்பிரகாசப்படுத்தினன் அந்தக் கண்ணன். 'உத்தம; புருஷஸ்த்வந்ய'; 'உத்தமனும், புருஷனும், அன்னியனும் என்று கண்ணன் கூறினமையால் ஈச்வரன் தனக்கு அந்நியமானவன் என்பதை இனிது பிரகாசப்படுத்தினர். 'தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே' என்று கண்ணன் கூறினமைக்கு அர்த்தம் 'அந்த ஆதி புருஷனையே நான் சரணம் அடைகின்றேன்.'

பகவத் கீதைக்கு 'கீதார்த்தப் பிரகாசிகை' என்றொரு வியாக்கியானம் எமது வைதீக சைவசித்தாந்தச் சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் செய்திருக்கின்றனர். அதனாதரவு கொண்டே யாம் இந்த நூல் செய்தது என அறிக.

திருமந்திர விசாரணை

1897

கோப்பாய் ஸ்ரீசபாபதி நாவலரவர்கள் தாம் வெளியிட்டு வரும் ஞானாமிர்தம் 2.7.1892 தேதியிட்ட இதழில் ''கேவலாத்துவித விசாரம்'' என்ற தலைப்பில் அத்துவித விரோதமாக ஒரு கருத்தினை வெளியிட்டார். அதற்கு ''அத்வைத சித்தாந்தி'' என்பார் ''வேதாந்த சங்கை நிவாரணம்'' என்று நாமமளித்து சிதம்பரத்திலிருந்து வெளிவந்த ''பிரமவித்யா''வில் சமாதானம் எழுதிப் பூர்த்தி செய்தார். அது 1893-ஆம் வருடம் தனிப் புத்தகமாக வெளிவந்தது. 'அந்நூலில் காட்டப்பட்டுள்ள பிரமாணச் செய்யுளை எடுத்துக்காட்டி காசிவாசி செந்திநாதையர் அவர்கள் ''இந்நூல் நம்மவர்க்குரியது'' என்று பேசினார். இவ்விவரம் 28.12.1896, 4, 11, 12 ஜனவரி 1897 தேதிகளில் வெளிவந்த நாகை நீலலோசனியில் வெளிவந்தது. அவ்விஷயம் முற்றும் தவறு என்று ''திருமந்திர விசாரணை'' கூறுகிறது.

பொய் மெய்யை மறைத்தல் : சபாபதி நாவலரவர்கள் பேசிய விஷயங்களில் பொய் மெய்யாய்ப் பரப்பிரமத்தை மறைத்து அங்ஙனம் விவரிக்கச் செய்ய வல்லதாதல் யாங்ஙனம்? என்பதொன்று. அதற்கு முன் அவர் எழுதிய சம்பந்தப்படி அதன் பொருள் பொய்யாகிய மாயை மெய்யாகிய பிரமத்தை எப்படி மறைக்கும்

என்பது. இதனால் பொய் மெய்யை மறைக்காது என்பது அவருடைய வாதம். இதற்கு மறுப்பெழுதிய ''அத்வைத சித்தாந்தி'' பொய் மெய்யை மறைக்கும் என்பதற்குக் கயிற்றரவு காணீர். பல திருட்டாந்தங்களைச் சொல்லிப் பொய் யான மாயை, மெய்யான பிரமத்தை மறைக்கும் என்றார்.

"பரதத்துவப் பிரகாசிகை" - 1898

(ஆசிரியர் : சோமசுந்தர நாயகர்)

ஜயவருடம் ஆனி மாதம் 15-ஆம் தேதியில் நாமக்கார ரெட்டியார் ஒருவர் பிரகடனம் ஒன்று வெளியிட்டார். அதில் கிளியனூரில் ஏகாங்கி என்பவரைக் கொண்டு ஜய ஆனி 26-ஆம் தேதியில் ஒரு பிரசங்கம் செய்விப்பதாகவும், அதில் நாராயணனே ஜகத்காரண வஸ்துவென் றும், சிவனுக்கு எவ்வழியாலும் பரத்துவம் இல்லையென்றும் தாபிக்கப் போவதாகச் சொன்னார்.

அதன் விளைவாக இந்நூல் எழுந்தது. சில கேள்விகளை எழுப்பி அதற்கு அந்த ரெட்டியார் ஏகாங்கி மூலம் பதிலளிக்கட்டும் என்கிறது.

"மெய்கண்ட சிவதூஷண நிக்ரஹம்"
"மெய்கண்ட சிவஸ்தவம்"
1900

(ஆசிரியர் : சோமசுந்தர நாயகரின் மாணாக்கர் தி. முனிசாமி முதலியார்)

சைவ நிந்தையே தவமெனக் கொண்டு வாழும் ஒரு மாயாவாதியார் சிலரைக் கூட்டிக் கொண்டு சைவ சமயிகள் பிரசங்கங்கள் செய்யும் இடங்கள் தோறும் கலகம் விளைவித்து வருகின்றார்.

சிவநிந்தனை – சிவாகம நிந்தை கொண்ட சுவடிகளைக் கூட்டங்களுக்குக் கொண்டு வருவார். அதில் ஸ்ரீமெய்கண்ட சிவத்தைத் தூஷித்துள்ளது.

வேதாசலம் பிள்ளையவர்கள் (மறைமலையடிகள்) ஒரு வருடத்திற்கு முன் வெளிப்படுத்திய ''முதற்குறள் வாத நிராகரணம்'' என்பதனை மறுத்து ''முதற்குறள் வாத நிராகரண சத தூஷணி'' என்னும் நூலாகும் அது.

இந்த நூலின் உள்ளடக்கம் பூர்வபட்சம் ஆகும். (''முதற்குறள் வாதநிராகரண சத தூஷணி'' என்ற நூல்.) இந்நூலில் மெய்கண்டார் மெய்மையைக் கண்டனரா? மெய்கண்டார் நாஸ்திகர்; உலோகாயதர் என்றெல்லாம் இந்நூல் கூறுகின்றது.

''தோற்றமும் ஈறும் உள்ளதன் பாலே கிடத்தலின்'' என்ற வரிக்கு உள்ளதற்குத் தோற்றமும் ஈறும் இருக்க வேண்டும் என்று மெய்கண்டார் கூறுவதினால் தோற்றமும் ஈறும் இல்லாக் கடவுளை மெய்கண்டார் கண்டார். எனவே மெய்கண்டார் நாஸ்திகர் என்று சததூஷணி கூறுகின்றது. இது பூர்வபட்சம்.

இந்தக் கருத்தை ''மெய்கண்ட சிவ தூஷண நிக்கிரக'' ஆசிரியர் மறுக்கிறார். ''அனுவாத பூர்வபட்சம்'' என்று அம்மறுப்புக்குப் பெயர்.

இதுபோல, சத தூஷணியின் பல பூர்வபட்சங்களுக்கு இந்நூல் (நிக்கிரகம்) அனுவாத பூர்வபட்சங்களை மறுப்பாகத் தந்துள்ளது.

சைவ சமய சரபம்
1908

(ஆசிரியர் : பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்; வெளியீடு - பி.மா. சோம சுந்தரம், ராணிப்பேட்டை, பக்கம் - *348;* விலை ரூ.20/-)

சைவ – வைணவ போராட்டம் : *1904*-ஆம் ஆண்டில் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள பின்னத்தூர் என்ற ஊரில் பாம்பன் சுவாமிகள் எழுந்தருளியிருந்தார். அவ்வமயம் சுவாமிகள் அங்குள்ள சைவர்க்குச் சைவசித்தாந்தம் போதித்து வந்தார். அதுபோழ்து அவ்வூரில் வசித்து வந்த வ. இரத்தினசாமி பிள்ளை என்பார் சுவாமிகளை அணுகி, ''இவ்வூரில் உள்ள வைணவர்கள் இங்குள்ள சைவர்களிடம் சிவபெருமானையும், சிவ சின்னங்களையும் இழித்துக்கூறி அவர்களைத் தம் சமயத்துக்கு உட்படுத்துகிறார்கள். இதனைத் தெளிவு

படுத்த வேண்டும் என்று வேண்ட சுவாமிகள் அதற்குரிய நியாயங்களைப் போதித்து வரலாயினார். 23.12.1904 இல் வைணவர்கள் இதனை எதிர்த்து வாதிடத் துணிந்தனர். அச்சமயம் இரத்தினசாமி பிள்ளை ''வாதத்தில் வெற்றி தோல்வி விஷயமாக ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு ஒரு பத்திரத்தில் எழுதி ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டும்'' என்றார். வைணவர்கள் அப்பத்திரத்தைப் படித்து விட்டு வாளா இருந்துவிட்டனர்.

இதன் பின்னர் சைவர் ஒருவர் ''சிவ பரதத்துவ பிரபல சாஸ்திரப் பிரகடனம்'' என்ற துண்டுப் பிரசுரம் வெளியிட்டார். இப்பிரசுரத்தை மறுத்து 1.9.1906-இல் ''வாயீர்வாள்'' எனக் கண்டனம் ஏசி எழுதப்பட்டது. இத்தூஷணை அடங்கு மாறாக சுவாமிகள் ''சைவ சமய சரபம்'' என்ற நூலை இயற்றினார். 28.9.1908-இல் சிவநிந்தை பெரிதும் செய்து வைணவர் ஒரு பெரும் பத்திரிகை வெளியிட்டனர்.

இனி வாளா இருக்கக் கூடாது என்றறிந்த சுவாமிகள் நவம்பர் ஏழாம் தேதி ஒரு வழக்கு தொடுத்தார்கள். இதனையொட்டி இரு தரப்பிலும் பல வழக்குகள் தொடுக்கப்பட்டன. 4.10.1909-இல் வெளியிடப்பட்ட தீர்ப்பில் நீதிபதியவர்கள் வைணவர்கள் ஏழு பேருக்கு அபராதம் விதித்தார். சுவாமிகள் மேல் தொடரப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. இந்த வைணவப் போராட்டத்தால் 1904-ஆம் ஆண்டு முதல் 1911-ஆம் ஆண்டு வரை சுமார் ஏழாண்டுகள் சுவாமிகள் அலைச்சலால் அல்லலுற்றார்கள். காட்டுமன்னார்குடியைச் சேர்ந்த சில வைணவர்கள் சுவாமிகளைக் கொல்வதற்கும் முயன்றனர்.

சைவ சமய சரபம் : இனி நூலுக்குள் வருவோம். இந்நூல் புண்டர காண்டம். இதோபதேச காண்டம், ஆசாரிய விசார காண்டம், கைவல்லிய காண்டம் என்ற நான்கு காண்டங்களை உடையது.

புண்டர காண்டத்தில் சித்திரோர்த்துவ புண்டர தாரணம் (வைணவர்கள் தரிக்கும் திருநாமம்) அவைதிகம் என்றும், வேதத்தில் குறிக்கப்படவில்லை என்றும், இராமானுஜரால் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டது என்றும், ஆழ்வாராதிகள் எல்லாம் புண்டரதாரிகள் அல்லர் என்றும், புண்டரந்தரித்தல் பற்றி பிற்றை நாளில் பாஞ்சராத்திரத்தில் இடைச்செருகலாகத் திணிக்கப்பட்டது என்றும், நாராயண விக்கிரகத்துக்குச் சித்திரோர்த்துவ புண்டரம் இடல் கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது.

வைணவர் பேச்சைக் கேட்டுச் சில சைவர் சித்திரோர்த்துவ புண்டரம் அணிவதை 'இதோபதேச காண்டம், கண்டிக்கிறது. இந்தக் காண்டம் முழுவதையும் நிலையில் திரியும் சைவருக்கு அறிவுரையாக அமைந்துள்ளது.

ஆசாரிய விசார காண்டம் ஆழ்வாராதிகள், வைணவ ஆசாரியார்கள் வாழ்வையும்,வாக்கையும் கண்டிப்பதாக அமைந்துள்ளது.

கைவல்லிய காண்டத்தில் விபூதி, உருத்திராக்கம் பற்றிய கட்டுரைகள் இருந்தாலும் பிற கட்டுரைகள் வைணவ தூஷணையே ஆகும். சிவபெருமானே அனைத்து தெய்வங்களிலும் உயர்ந்தவன் என்று சிவாதிக்கிய விளக்கத்துடன் நிறைவு பெறுகிறது.

உபநிடதங்களிலிருந்தும், புராணங்களிலிருந்தும், வடமொழி இலக்கியங்களிலிருந்தும், சாத்திரங்களிலிருந்தும், திருமுறைகளிலிருந்தும் மேற்கோள்கள் நிரம்பத் தரப்பட்டுள்ளன.

பிரம்ம ஸமாஜ வேத ஸமாஜ கண்டனம்
1909

(ஆசிரியர் : பெங்களூர் ஏ. ஆண்டாள் அம்மாள். பக்கம் : 10)

அக்ஷயவருடம் தை மாதம் ருஉ-இல் கடலூரைச் சேர்ந்த திருப்பாதிரிபுலியூர்க்கு அடுத்த பெண்ணை நதித் தென்கரையில் உண்ணாமுலை செட்டிச்சாவடிக்குச் சமீபத்தில் ஓர் நைமித்தியத் திருவிழாவைப் பற்றி அறிவுடையோர் அநேகர் கூடினர். சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளையும் பிரமசமாஜம் சம்பேடு ஸ்ரீதரஸ்வாமி நாயக்கரும் இருந்தனர். கடலூரில் ஸ்ரீதரஸ்வாமி நாயக்கர் செய்த பிரசங்கத்தில் எழுந்த

சந்தேகத்தின் பேரில் இராமலிங்கம் பிள்ளையை நோக்கி, ''ஐயா பிரம்மத்தை நினைப்பது தகுதியென்றும், விக்கிரக ஆராதனை செய்வது தகுதியல்ல வென்றும் ஸ்ரீதரஸ்வாமிகள் சொன்னார். எங்களுக்குக் குழப்பம். விளக்க வேண்டும்'' என்று கேட்டனர். வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு விக்கிரக ஆராதனையைப் பிள்ளையவர்கள் நிறுவ நாயக்கர் ''முடியாது எழுதுகிறேன்'' என்று முடித்தார்.

சைவ சித்தாந்த முரண்பாடுகள்
1912

1912-ஆம் ஆண்டில் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் துணைத் தலைவர்க்கும், செயலாளர்க்கும் சைவ சித்தாந்த விளக்கத்தில் இரண்டு இடங்களில் கருத்து வேற்றுமை ஏற்பட்டுப் பெரும் பூசலாக மாறிவிட்டது.

''அனைத்து உயிர்களும் ஏதேனும் ஒரு காலகட்டத்தில் வீடுபேறு அடைந்து விடுமா?'' என்பது முதல் கேள்வி. ''இறைவனின் உருவம் சுத்தமாயையிலிருந்து உருவானதா?'' என்பது இரண்டாவது கேள்வி.

இரு கேள்விகளுக்கும் தக்க பதில்கள் கிடைக்காமையால் இருவருமே ஜெ.எம். நல்லசாமி பிள்ளையவர்களின் முடிவுரை – தீர்ப்புரையை நாடினார்கள்.

ஜெ.எம். என்னின் தீர்ப்பு வருமாறு :

''அனைத்து உயிர்களும் ஊழி கடந்தாலும் வீடுபேறு அடையா.''

''பரம்பொருள் ஆணவம், மாயை ஆகியவற்றினின்று நீங்கியது. எனவே அப்பரம்பொருள் மாயையிலிருந்து உருவாக முடியாது. அருட்சத்தியிலிருந்தே உருவம் பெறுகிறது.''

நூல் : ''நானா சீவ வாதக் கட்டளைச் சங்கை நிராகரணம்'' - 1919

(ஆசிரியர் : அ. பெரியசாமி முதலியார்; பெத்துநாயக்கன் பேட்டை, சென்னை, பக்கம் 160)

கிடைத்த இடம் : தருமை ஆதீன நூலகம்.

''நானா சீவ வாதக் கட்டளை'' என்றொரு சாத்திர நூல். தமிழ்நாட்டில் வேகமாக பரவி வந்தது. இதனை மறுத்து பூவாளூர் சைவ சித்தாந்த சபை அக்கிராசனாதிபதி ஸ்ரீமத் சு. சாமி ஐயா தேசிகர் ''மாயாவாத மத நிரசனம்'' என்ற ஒரு நூல் எழுதியுள்ளார். அதனை மறுத்து எழுந்ததே இந்நூல்.

24 செய்திகளுக்கு சு. சாமி ஐயா தேசிகர் மறுப்புத் தெரிவித்திருக்கின்றார். இதனை பூர்வபட்சம் என்கிறார் (பிரமாணம் இல்லாதது). அதற்கு விரிவாக பெரியசாமி முதலியார் பதிப்புத் தருகின்றார். இது சித்தாந்தம் (பிரமாணம் உடையது).

சாமி ஐயா தேசிகர் : மாயாவாதிகள் தம்மை வேதாந்திகள் என்றும், அத்வைதிகள் என்றும் பெருமையாகச் சொல்லிக் கொள்வர். வேதாந்தமாவது உபநிடதம். அவ்வுபநிடதங்கள் சிவமும் ஆன்மாவும் மலமுமான பொருள்களைப் பதி, பசு, பாசம் என வைத்து அவற்றின் இயல்பு கூறி பாச நீங்கி ஆன்மா சிவத்தை அடைதற்கு ஏற்ற உபாயங்களை விதிப்பன. மாயாவாதிகள் அவற்றை ஏற்றுக் கொள்ளாது ஈசனும் பொய் சிவனும் பொய் மாயையும் பொய் என்றும், ஈசுர உபாசனை வேண்டப்படுவதில்லை என்றும் உரைப்பவர். ஆதலால் மாயாவாதிகளுக்கும் வேதாந்தத்துக்கும் வெகு தூரமாம். இன்னும் பிரமம் ஏகமாம் இரண்டாவது பொருள் இல்லையென்பவர். அதனால் இரண்டன்மையை உணர்த்தும் அத்துவித நிலைக்கும் மாயாவாதிகட்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையாம்.''

பெரியசாமி முதலியார் : ''தத்துவமாகின்ற நாலேழ் வேதாந்தி'' என்று திருமந்திரம் கூறுவதால் வேதாந் திற்குரிய தத்துவம் 28, ''வயிணவர்க்கு ஆகின்ற நாலாறு ஐந்து மாயாவாதிக்கே'' என்றதனால் வைணவர்க்குரிய தத்துவம் 24, மாயாவாதிக்குரிய தத்துவம் 25 ஆம். 25 தத்துவம் கூறித் தம்மதத்தைச் சித்தாந்தம் செய்பவர் சாங்கியராவர்; மாயாவாதி என்பார் அவரேயாவர். சாங்கியர் அங்கீகரித்த தத்துவம் 25

ஆமென்பது திருக்குறள் ''சுவையொளி ஊறு'' என்னும் செய்யுளின் பரிமேலழகருரையாலும், சர்வதரிசன சங்கிரகம் சாங்கிய தரிசனத்தாலும் பிறவாற்றானும் விளங்குவதாம். வேதாந்திகள் அங்கீகரித்த தத்துவம் 28 ஆமென்பது ''இந்த இருபத்தெட்டுத் தத்துவமே சகம், சீவம், பரமென மூன்று பொருளாய் விளங்கும்'' என்று ஞானக் கட்டளை கூறுவதானும், பிறவாற்றானும் நன்கு விளங்குவதாம். சாங்கியர் பிரதானத்தை அஃதாவது மாயையை உலகத்திற்குக் கேவலம் முதற்காரணம் என்று கூறுவது பற்றி, அவர் மாயாவாதியென்று கூறப்படுகின்றனர். சைவரும் மாயையை உலகத் திற்குக் கேவலம் முதற்காரணம் என்று கூறுகின்றமையின், அவரும் மாயாவாதி யாவர்.

நூல் : "திருவாசக வேதாசல விரிவுரை மறுப்பு - 1922

ஆசிரியர் : நூலின் இறுதியில் ''இங்ஙனம் விருத்தஸாலா பிஜாத ஸ்ரீஜ்ஞான சம்பந்த பராசக்தி'' என்று எழுதியுள்ளது.

''எச்சரிக்கை சைவசமயிகனே; ஏமாந்து போகாதீர்கள் என்று தொடக்கம்.

''வேதாகமம் மக்கள் வாய்மொழி'' என்று மறைமலையடிகள் தனது திருவாசக விரிவுரையில் கூறியுள்ளதை மறுத்து வேதாகமம் சிவபெருமான் வாய்மொழி என்று திருவாசகம் மூலமாகவே சான்றுகள் காட்டி - மறைமலையடிகளை வாங்கு வாங்கு என்று வாங்குகிறார்.

''மாணிக்கவாசகருக்கும் அவர் சொல்லிய திருவாசகத்துக்கும், அதனை எழுதிய நடராஜ மூர்த்திக்கும், திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார்க்கும், பெரிய புராணம் கண்ட சேக்கிழார் பெருமான், அதனைக் கொண்ட அநபாய சோழர், எமது மெய்கண்ட சந்தான சைத்தாந்திக பூஜ்ய பாத துரீய பீடாதிபதி ஸ்ரீமதுமாபதிசிவனார் முதலிய அனுபவ தேசிகர்களுக்கும், முழு விரோதியாய்க் 'கிரகநக்ஷத்திர பரிபந்தி மலகிருமி நியாயமாகப் படையெடுத்து வந்து வேதாகமத்தை ஆக்கியோன் சிவபெருமான் அன்று என்று மனம் துணிந்து கிளம்பிய வேதாசலத்தினது நாய் தீண்டா, நரிதீண்டாப், பேய் தீண்டா, பைசாசந் தீண்டா, இரிவுரையைக் கண்ணாற் காணாதீர்கள்! கையாற்றீண்டாதீர்கள்! செவியால் கேளாதீர்கள்! மனசால் நினைக்காதீர்கள்.

இன்னும் அந்நூலுக்கு மதிப்புரை தந்த திரு.வி.க.வை பெரிதும் கண்டிக்கிறார்.

வெளியிட்டவர் : திருவரங்கம் பிள்ளை. அச்சிட்டவர் : சங்கர் கம்பெனி.

"தீண்டாதார் ஆலயப் பிரவேச நிக்ரஹம்"
1932

(ஆசிரியர் : சித்தாந்த சைவப் பிரசாரகர் மா. நீலகண்ட சித்தாந்தியார்.)

(1) பிறர் கூற்றை எடுத்துரைத்தல், (2) சித்தாந்தம் (3) தீண்டாமை பரதகண்டத்தின் மாத்திரமன்று உலகு முழுவதுமுளது, (4) அரசியல்வாதிகள் இனிச் செய்ய வேண்டிய கடமை, (5) சண்டாளர் முதலாயினார் ஆலயப் பிரவேசம் செய்யக்கூடாது என்பதற்குச் சிவாகம மேற்கோள், (6) விஷ்ணுவும் பாஞ்சராத்திராகமத்தில் உரைத்தல், (7) காந்தியைப் பின்னும் கண்டித்தல், (8) சிவாகமம் சிவவாக்கு ஆதலின் பரிபாகிகள் பொருட்டுச் சத்தியமே போதிக்கும் எனல், (9) சண்டாளர் என்னும் பதம் தீண்டாதாரையே குறிக்கும், (10) சண்டாளர் என்போர் யார், (11) வேதத்தில் சண்டாளன், (12) தமிழில் சண்டாளன், (13) கண்ணன் உபதேசத்திற்கும் காந்தியின் கூற்றிற்கும் பெரும் பேதம், (14) நந்தனாரை இழுத்தல், நெய்யைப் பிடித்துக் கொண்டு நெய்க்கிணற்றில் இறங்கியதை ஒக்கும் எனல், (15) முள்ளிச் செடிக்கும் முத்தி கொடுத்த மோன வள்ளலாராய உமாபதி சிவாசாரியார் மகிமை.

விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம் - ஒப்பாய்வு - 1985

(ஆசிரியர் : டாக்டர் மு. தெய்வநாயகம்; வெளியீடு : உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்; பக்கம் : 334; விலை : ரூ.20/-)

அச்சுவடிவத்தில் கண்டன இலக்கியமே அருகிப்போன காலகட்டத்தில் சைவர்கள்

மேல் இந்நூல் சேற்றை வாரி இறைத்துள்ளது. இந்நூலை வெளியிட்ட நிறுவனமோ மதச்சார்பற்ற (?) தமிழக அரசின் ஆதரவு பெற்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். ''சமய ஒருமைப்பாட்டுக்கு இந்நூல் ஒரு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும்'' என்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் ச.வே. சுப்பிரமணியத்தின் பட்டயம் வேறு. வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போல இவ்வாராய்ச்சியை எழுதியவர்க்கு டாக்டர் பட்டமும் தரப்பட்டுள்ளது.

''பேசுவது மதச் சார்பின்மை
பூசுவது சைவர் மேல் சாணம்
நன்றிது நம கொற்றம்'' எனப் பாடத் தோன்றுகிறது.

இந்நூலுக்கு மறுப்பாக சி. அருணை வடிவேல் முதலியார் எழுதியுள்ள நூலில் இந்நூலில் காணப்படும் செய்திகளைத் திரட்டித் தந்துள்ளார். அதனைப் படித்தாலே மேற்படி நூலின் போக்கு புரியும்.

தெய்வநாயகத்தின் நூல் பற்றிய தொகுப்புரை

1) சங்க காலத் தமிழகம் சமயத் தமிழகமாய் இல்லை; இயற்கை நெறித் தமிழகமாய் இருந்தது. கிறிஸ்துவின் மாணவர்களில் ஒருவராகிய 'தோமா' என்பவர் தமிழகம் போந்து மயிலாப்பூரில் தங்கிய பின்பே தமிழகம் சமயம் என்பதை உணர்ந்தது.

2) தோமையர் தமிழகம் போந்தது கி.பி. முதல் நூற்றாண்டில். திருவள்ளுவரும் அக்காலத்திலே பிறந்து, மயிலாப்பூரிலே வாழ்ந்தமையால் அவர் தோமையருக்குச் சீடராய், மெய்யறிவு பெற்றார்.

3) 'சமயம்' என்பதையோ, 'அறம்' என்பதையோ அறியாத தமிழகத்திற்கு அவைகளை முதல் முதலாக அறிமுகம் செய்து வைத்த பெருமை திருக்குறளையே சாரும்.

4) திருவள்ளுவர் தோமையரிடம் பெற்ற மெய்யறிவையே திருக்குறள் நூலாக வடித்துக் கொடுத்தார்.

5) திருக்குறள் கிறிஸ்துவ நூல் ஆதலின், அதனைப் பின்பற்றிய தமிழகத்தின் ஆதிச் சமயம் கிறிஸ்துவமே என்றாலும், நாளாவட்டத்தில் ஆரியர்கள் புகுந்து, 'வைதிகமே தமிழர் சமயம்' என்று நினைக்கும்படி செய்துவிட்டார்கள்.

6) கிறிஸ்துவத்திற்குக் 'கிறிஸ்துவம்' என்னும் பெயர் ஏற்படுவதற்கு முன்பே தோமையர் தமிழகத்திற்கு வந்துவிட்டமையால், திருக்குறளுக்குப் பின்னர்த் தமிழில் தோன்றிய சமய நூல்களிலும் 'கிறித்து' என்னும் பெயரோ, 'கிறிஸ்துவம்' என்னும் பெயரோ இடம்பெற வழியில்லை. திருக்குறளுக்கு உண்மைப் பொருள் காண்பதிலிருந்துதான் 'தமிழரது ஆதிச் சமயம்' கிறிஸ்துவம் என்பதை நாம் உணர வேண்டும். (ஒரு பொருட்கு வழக்கத்தில் உள்ள பெயரே எங்கும் காணப்படாத பொழுது அப்பெயருக்குரிய பொருள் இருந்தது என்பதை எப்படித் தெரிந்து கொள்வது? – சி. அருணைவடிவேல் முதலியார்).

7) 'ஐரோப்பியர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பே கிறிஸ்துவம் இந்தியாவில் தழைத்தோங்கியிருந்தது. அது திராவிட முறையிலே தழைத்தோங்கியிருந்தது. அந்தக் கிறிஸ்துவத்தை இன்று நாம் 'இந்துக் கிறிஸ்தவம்' எனப் பெயரிட்டுப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஐரோப்பியர்கள் வந்து, ஐரோப்பிய முறையில் கிறிஸ்துவத்தைப் பரப்பினர். அஃது ஐரோப்பியக் கிறிஸ்துவமாகும். (இந்த இரு கிறிஸ்துவத்திற்கும் கொள்கையில் என்ன வேறுபாடு என்பதை இவர் கூறவில்லை – அருணையார்).

8) 'இந்துக் கிறிஸ்துவம்' இந்து சமயத்தில் உள்ளடங்கிவிட்டது. பிற்காலத்தில் ஐரோப்பியக் கிறிஸ்துவம் ஐரோப்பியப் பண்பாட்டில் வளர்ந்தது. அதனால் இந்தியாவில் கிறிஸ்துவம் வேற்று மதமாக ஆகிவிட்டது.

9, 10, 11, 12) திருக்குறள் பற்றிய திரிப்புரைகள். விரிவஞ்சி விடப்பட்டது.

13) திருக்குறள் விவிலிய நூலே.

14) ''திருக்குறட் பாயிர முதல் மூன்று அதிகாரங்களில் திருவள்ளுவர் 'கடவுள்' பரிசுத்த ஆவி, மகன்' என்னும் மூவரையே வரிசையாக வைத்து வாழ்த்தினார். அந்த மூவரைத்தான் இல்வாழ்க்கை அதிகாரத்திலும் 'இயல்புடைய மூவர்' எனக் கூறினார்.

15) திருக்குறள் முதல் அதிகாரத்தில் அந்தக் கடவுளையும், மூன்றாம் அதிகாரத்தில் அந்தக் கடவுள் உருவங்கொண்டு அவதரித்த உருவக் கடவுளையும் திருவள்ளுவர் வாழ்த்தினார். அந்த உருவக் கடவுளே இயேசு கிறிஸ்து.

16) முற்காலத்தில் கடவுட் கொள்கையுடைய மதங்கள் யாவும் கடவுளுக்கு உயிர்ப்பலியிட்டு வந்தன. அதுவே 'வேள்வி' எனப்பட்டது. கடவுட் கொள்கையில்லாத மதங்கள் வேள்வியை எதிர்த்தன. இயேசு கிறிஸ்து அனைவரும் செய்ய வேண்டிய வேள்விதனைத் தாம் ஒருவரே சிலுவையில், தம்மைக் கடவுளுக்குப் பலியாக்கி வேள்வியை நிறைவேற்றி விட்டார். அதனால் அவருக்குப் பின் கடவுளுக்கு உயிர்ப்பலியிட வேண்டிய தேவை இல்லையாயிற்று. கிறிஸ்தவமும் வேள்வி நிறைவேற்றச் சமயமாய் விளங்குகின்றது.

17) மிகப் பிற்காலத்தில் தோன்றிய போதிலும் சைவ சித்தாந்த ஆசிரியர்கள் சிறப்பாகத் தமிழராகிய மெய்கண்டாரும், பஞ்சமர்களாகிய திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் ஆசிரியர்களும், தில்லை வாழ் அந்தணர்களால் சாதி நீக்கம் செய்யப்பட்ட உமாபதி தேவரும் தமிழரது சமயத்தின் உண்மையை உணர்ந்து நூல் செய்திருக்கிறார்கள். என்றாலும் இந்நூலின் பொருள்கள் திட்டமிட்டுத் திரிக்கப்பட்டு விட்டன.

18) பக்தி இயக்கமே இயேசு கிறிஸ்துவின் கல்லறையிலிருந்துதான் தோன்றிற்று. அது சைவத்தின் பக்தி இயக்க முதல்வியராகிய காரைக்கால் அம்மையார் இறைவன் சுடுகாட்டில் ஆடும் ஆடலைப் போற்றியதிலிருந்தே விளங்கும். சுடுகாட்டைப் புகழ்ந்து பாடினமை பற்றி உலகம் 'பேய்' என்று இகழ்ந்தது. இவ்வாறே வைணவ பக்தி இயக்க முதல்வர்களாகிய ஆழ்வார்களில் ஒருவரைப் 'பேய்' என்றும், மற்றொருவரைப் 'பூதம்' என்றும் உலகம் இகழ்ந்தது.

19) 'சைவத்தின் குமரன், முருகன் என வருவனவும் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பனவே. அதனால் குமரக் கடவுளாவர் இயேசு கிறிஸ்துவே.''

20) 'கடவுள், பரிசுத்த ஆவி, மகன் எனக் கிறிஸ்துவத்தில் சொல்லப்பட்ட மூவரே, இந்து சமயத்தில் மும்மூர்த்திகளாயினர்.

தெய்வநாயகம் அவர்கள் கூறும் சில சொற்பொருள்களும் திரிபுகளாகவே உள்ளன. கடவுள், ஆதிபகவன், வாலறிவன் – கிறிஸ்துவத்தில் சொல்லப்படுகின்ற அருவக் கடவுள்.

வான் – பரிசுத்த ஆவி.

நீத்தார் – இயேசு கிறிஸ்து.

திருவுந்தியாரில் வரும் 'அகளமாய் யாரும் அறிவரிது அப்பொருள் சகளமாய் வந்தது' என்றதும், 'கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்' என்றதும் 'உய்ய வந்தான்' என்றதும் மெய்கண்டார் 'குரு' என்றதும் இயேசு கிறிஸ்துவேயாகும். உமாபதிதேவருக்கு ஞானம் கொடுத்த மறைஞான சம்பந்தரும் இயேசு கிறிஸ்துவே. ஆலமர் செல்வனும் இயேசுவே.

தெய்வநாயகம் அவர்கள் சைவர்கள் மேல் சேற்றை மட்டும் வாரி இறைக்கவில்லை; நஞ்சையும் கொட்டியிருக்கிறார். அவை வருமாறு :

1) சைவத்தை வடமொழி ஆதிக்கத்திற்கு உட்படுத்திய பெருமை திருஞான சம்பந்தரையே சாரும்.

2) ஞானசம்பந்தரின் குறிக்கோள் வேத வேள்வியைப் பரப்புவதன்றி சைவ சமயத்தைப் பரப்புவதன்று.

3) வேத வேள்வி நெறி, சமண பௌத்தப் பெண்களைக் .... வேண்டுமெனத் துணிக்கின்றது. சீர்காழியில் ஆண்டுதோறும் நடைபெறும் திரு முலைப்பால் விழாவில் 'சமணப் பெண்களை ....' என

இசையோடு கூவி சொல்லொணா வார்த்தைகளால் பெண்களின் தலை முதல் கால் வரை ஒவ்வொரு அங்கத்தையும் குறிப்பிட்டுப் பாடுகின்றனர், என்ற டி.எஸ். ஸ்ரீபால் அவர்களின் கருத்தினை மேற்கோள் காட்டுகிறார்.

4) சைவ சமயத்தினுள் திருஞானசம்பந்தர் வந்து சேர்ந்தவுடன் அது வன்முறைச் சமயமாக மாற்றப்பட்டது.

5) திருஞானசம்பந்தர் வரவால், தமிழர் எண்ணாயிரம் பேர் கழுவிலேற்றப் பட்டதுடன், தமிழராகிய திருநாவுக்கரசரும் இழிவுபடுத்தப்பட்டார்.

6) சைவம், ஆரிய சூழ்ச்சிக்கு உட்பட்டு விட்டபடியால், சைவ சமய எழுச்சிக்குக் காரணமாயிருந்த திருநாவுக்கரசராகிய தமிழர், மனம் நொந்த நிலையில் மீண்டும் சமண சமயத்திற்குச் சென்றதாகவும், சைவர்கள் அவரைக் கொன்றதாகவும் ஒரு செய்தி கூறப்படுகிறது.

7) அப்பரைத் தொடர்ந்து சம்பந்தராகிய பிராமணர் பணிபுரிந்தது போலவே, மெய்கண்டாரைத் தொடர்ந்து அருணந்தி சிவாசாரியாராகிய பிராமணர் பணிபுரிகிறார். பிறமதக் காய்வு, சம்பந்தரில் அதிகம் காணப்பட்டது போலவே, பிறமதக் கண்டனம் அருணந்தி சிவாசாரியாரிடம் காணப்படுகிறது.

8) சமயக் குரவர்களில் முதல்வரான அப்பருக்கு ஏற்பட்ட நிலை, சந்தான குரவர்களில் முதல்வரான மெய்கண்டாருக்கும் ஏற்பட்டது. முதலில் மெய்கண்டாரை எதிர்த்த அருணந்தி சிவாசாரியார், பின்னர் மெய்கண்டாருக்கு மாணவராயினார் எனவும், மெய்கண்டார் இளமையிலேயே இறந்து போனார் எனவும் சொல்லப் படுகின்ற நிலைகள் எண்ணிப் பார்க்கத் தக்கன.

மு. தெய்வநாயகம் ‘இந்து கிறிஸ்துவம்’ என்ற புதிய சமயத்தை முன் வைக்கிறார். அதற்குப் பின்வரும் காரணங்கள் கூறுகிறார்.

(1) சைவ சித்தாந்தம் மற்ற இந்துக்களால் வெறுக்கப்படும் கொள்கை என்பதாலும், (2) 14 சாத்திரங்களில் முதல் நூலாகிய திருவுந்தியார், தீண்டாத சாதியினர் எனப் படும் பஞ்சம வருணத்தாரால் இயற்றப் பட்டது என்பதாலும், (3) பஞ்சமரின் மாணவர் எழுதிய திருக்களிற்றுப் படியார் சிதம்பரம் கோவில் பிராமணரால் வீசியெறியப்பட்டது என்பதாலும், (4) சந்தானக் குரவரில் இவர்கள் இருவரும் சேர்க்கப்படாமல் திட்டமிட்டு வேண்டுமென்றே விடப்பட்டதாலும், (5) இவர்களின் வழியில் வந்து சைவ சித்தாந்தத்தின் முழுமையை எடுத்துக் காட்டிய மெய்கண்டார் பிராமணராகிய சிவாக்கிரயோகியால் வேண்டுமென்றே பாராட்டப் படாமல் விடப்பட்டதுடன் இவருடையது மொழிபெயர்ப்பு என்ற கருத்துப் பரப்பப் பட்டமையாலும். (6) மெய்கண்டாரின் வழியைப் பின்பற்றி யமைக்காகப் பிராமணராகிய சிதம்பரம் உமாபதி சிவாசாரியர் சாதியிலிருந்து தள்ளி வைக்கப்பட்டமையாலும், (7) இன்றுவரை சைவ சித்தாந்தம் மற்ற இந்தியக் கொள்கைகளால் ஒதுக்கப் பட்டுச் சதி செய்யப்படுவதாகச் சைவர்கள் உணர்வதாலும், (8) பிற்காலத்தில் தமிழகத்துக்கு வந்த ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் இந்தியக் கொள்கைகளில் இதுவே சிறந்தது எனப் பாராட்டுவதாலும், (9) திருக்குறளும் சைவ நூல்களும் மேலை மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, மற்ற நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களும் அவற்றைப் படிப்பதற்கு வழிவகுக்கப் பட்டமையாலும், ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்டதும், தோமையரால் தமிழகத்தில் – திராவிட நாட்டில் பரப்பப்பட்டதுமான இந்துக் கிறிஸ்துவமாக இது ஏன் இருக்கக் கூடாது?

விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்தம் ஒப்பாய்வின் மறுப்பு நூல்

1991

(ஆசிரியர் : சி. அருணைவடிவேல் முதலியார்; வெளியீடு : அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்; பக்கம் : 332; விலை : ரூ.20/-)

மு. தெய்வநாயகம் அவர்களின் நூலுக்கு மறுப்பாக இந்நூல் எழுந்தது. மு. தெய்வநாயகம் அவர்களின் திரிபாராய்ச்சிக்குப் பதிலளிக்கிறது இந்நூல்.

1) சைவம், வைணவம் இரண்டிற்குமே பொதுவான ஒரு மூல மதம் இருந்திருக்க வேண்டும் என நிலைநாட்டுகின்ற நிலைமையில், அந்த மூலமதத்தின் பெயரைக் குறிப்பிட இயலாத பொழுது, அதனை ஆதி இந்து மதம் என்றுதான் இவர் ஆங்காங்குக் குறிக்க வேண்டுமே தவிர, 'தோமாவின் சமயம்' என 'அநாமதேயமாகவும்', 'ஆதிக்கிறிஸ்துவம்' எனக் கிறிஸ்துவமாகவும் குறிப்பிடுதல் சிறிதும் பொருந்தாத ஒரு நெறிமுறையாகும்.

2) இவராகச் சிருட்டித்துள்ள 'இந்துக் கிறிஸ்துவமதத்தை எங்காவது, யாராவது கேள்விப்பட்டதுண்டா? 'இந்துக் கிறிஸ்துவம்' என்று சொல்லப்படுமாயின், அது 'முன்பு' இந்துக்களாய் இருந்து, பின்பு கிறிஸ்தவர்களாக மாறியவர்களது மதம் என்றுதான் பொருள்தரும்.

3) 'வேள்வி நிறைவேற்றுக் கோட்பாட்டினை உடைய மதம்' என்று புதிதாகச் சிருட்டிக்கின்றார். வேள்வி மறுப்புக் கோட்பாடு என்பதனை ஓரளவு நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. ஆனால், வேள்வி நிறைவேற்றக் கோட்பாடு என்ன என்பதனை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. 'வேள்வி' என்பது ஏதோ ஓர் இலட்சியத்திற்காகத் தொடங்கப்பட்டதா? அந்த இலட்சியம் முடியும் வரையில் அது நடைபெற்று வந்து இலட்சியம் முடிந்தவுடன் நிறைவேற்றப்பட்டுவிட்டதா?

4) வேள்வி என்றால் உயிர்ப்பலி இடுதலை மட்டும் குறிப்பதில்லை. வேள்வியில் உயிர்ப்பலி உள்ளது. ஆயினும் உயிர்ப்பலி இல்லையென்றால் வேள்வியில்லை என்று கூறுவது பிழையாகும். வேள்வி ஐந்து வகைப்படும். பிரமயாகம் (வேதம் ஓதுதல்), தேவயாகம் (ஓமம் வளர்த்தல்), மானுட யாகம் (விருந்தோம்புதல்), பிதிர் யாகம் (பிதிர்க்கடன் ஆற்றல்), பூதயாகம் (அஃறிணை உயிர்கட்கு உணவளித்தல்) என விளக்கம் தரப்படுகின்றது. உயிர்க்கொலை செய்து வேட்கப்பட்டது என்றில்லை. பெரும்பான்மையாகவோ அல்லது சிறுபான்மையாகவோ, ஊனை அவியாகச் சொரியாமல், நெய், பால் இவற்றையும் சேர்த்து இடப்பட்ட அடிசில் முதலியவற்றையுமே அவியாகச் சொரிந்து வேள்விகள் செய்யப் பட்டன.

'ஊனொடு உண்டல் நன்றென,
ஊனொடுண்டல் தீதென' [சம்பந்தர்]

'அவன் உகந்து இட்ட இறைச்சி எனக்கு நன்
மாதவர் இட்ட நெய் பால் அவியே.'
[திருக்கண்ணப்பர் திருமறம்]

என்றெல்லாம் வருவதால் வேள்வியிலும் இருவகையுள்ளமை புலப்படும். ஞானசம்பந்தர் வேள்வியை விரும்பாது திருமணத்தைத் தவிர்த்து இறைவனோடு கலந்தார்.

5) 'ஞானசம்பந்தர் சைவப் பிரசாரம் செய்யவில்லை. வேள்விப் பிரசாரம்தான் செய்தார்' என்கிறார். ஞானசம்பந்தர் எந்த ஒரு பாடலிலும் வேள்வியைச் சிறப்பித்துப் பாடவில்லை. வேள்வியை இகழ்பவரை வெறுத்தும், வேள்வி செய்பவரைச் சிறப்பித்தும் ஒன்றிரண்டு பாடல்களில் பாடியுள்ளார். இதற்குப் பெயர்தான் வேள்வி பிரசாரமோ? ஞானசம்பந்தர் இறைவனை மலர்தூவி வழிபடும்படிதான் வற்புறுத்தி உபதேசிக்கின்றார். ஆனால், ஓரிடத்திலாவது 'வேள்வி செய்து நலம் பெறுக' என உபதேசித்தார் என்று காட்ட முடியுமா?

6) ''அருகர் சிரங்களைச் சிந்த'' என்று ஞானசம்பந்தர் பாடியதாகக் கூறுகிறார். ''அருகர் திறங்களைச் சிந்த'' என்பது தான் மூலபாடம். பாடத்தையே திரிக்கின்றார்.

7) ''பெண்ணகத்தெழில் சாக்கியப்பேயமண்
தெண்ணர் கற்பழிக்கத் திருவுளமே''
என்ற சம்பந்தர் பாடலுக்கு விபரீதமாகப் பொருள் கொள்கிறார். 'தெண்ணர் கற்பு' என்பதற்கு 'அறியாமை மிகுந்தவரது கல்வி' என்பது பொருள்.

8) கிறிஸ்துவின் மரணம் தெய்வப் பலியா? கிறிஸ்துவினிடத்தில் வெகுளி கொண்ட ஓர் அரசர் அவர் மீது குற்றங்களைக் கண்டதாகக் கூறி அவற்றிற்குத்

தீர்வாக விதித்த ‘மரண தண்டனையின் படி தானே மரணம் அடைந்தார். இது எப்படி வேள்வியாகும்?

9) பழங்கதைப்படி திருவள்ளுவர் சைவரே. திருவள்ளுவர் ஓதாதே எல்லாம் உணர்ந்தவர். திருவள்ளுவரைத் தெய்வப் புலவர் என்றே தமிழர்கள் கருதுகின்றனர். இவரா தோமையரின் பின்னே திரிந்து ஒரு சிறிது அறிவு பெற்றுக் கொண்டவர்? திருவள்ளுவர் மயிலாப்பூரில் வாழ்ந்தவர் என்பது அனைவரும் ஏற்கும் கருத்தன்று.

10) சங்க காலத்தில் சமயம் இல்லை. நாத்திக காலம் என்கிறார். தொல்காப்பியத்தில் கடவுள் பற்றியும், சங்க இலக்கியங்களில் சிவன் பற்றியும் குறிப்புகள் வருகின்றன.

11) ‘தோமா தமிழகத்திற்கு வந்தார்’ என்பதே உண்மை வரலாறுதானா? அவர் வாழ்ந்த காலத்தில்தான் திருவள்ளுவர் வாழ்ந்தாரா? தோமையர் தமிழகத்திற்கு உண்மையாகத்தான் வந்தாரா’ என்று ஆராய வேண்டிய நிலையில், பெயரளவாக ஒரு சிலரால் அறியப்பட்டுள்ள தோமையர் என்ற ஒருவர் ‘தமிழ்ப்பணி’ என்று குறிப்பிடும்படி ஒன்றையும் செய்யாமலே ஒரு சில ஆண்டுகள் எவற்றையோ சொல்லியிருந்த காரணத்தால், காலங் காலமாக ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரோடி நிலையில் திரியாது வாழும் தமிழர்தம் பண்பாட்டின் ஆணி வேரே பெயர்ந்து, அந்தப் பண்பாடே தலைகீழாய்ச் சாய்ந்துவிட்டது என்றும், ‘அச்சாய்வினால் திருவள்ளுவர் தோமையரது பரமசிஷ்யராகி அவரிடம் உபதேசம் பெற்று, அந்த உபதேசங்களைத் தொகுத்தே திருக்குறள் என்னும் நூலாகச் செய்தார்’ என்றும், கூறும் இவர் தம் உரை எத்துணை விநோத விசித்திர உரை என்பது அறிவுடையோர்க்கு விளங்காமற் போகாது.

12) ‘பேதுரு, பவுல் இவர்களால் பரப்பப்பட்ட நற்செய்தி கிரேக்க மொழியில் எழுதப்பட்டு, கிரேக்கப் பெயர்களுடன் காணப்படுவதைப் போலவே, தோமாவால் திராவிட மக்களிடையே பரப்பப்பட்ட நற்செய்தி தமிழ்மொழியில் எழுத்துருவம் பெற்றுத் தமிழ் மொழி பெயர்களுடையனவாக எழுந்திருத்தல் இயல்பே. இந்த நோக்கோடு பார்க்குங்கால் சைவ, வைணவத் தொகுப்பு நூல்களாகிய பன்னிரு திருமுறையும், நாலாயிர திவ்வியப் பிரபந்தமும் தமிழ் மொழியில் நம் முன் காட்சியளிக்கின்றன எனக் கூறினார்.

இவர் முதலில் ஏதோ ‘அறநூல்’ என்றும், ‘பொதுமறை’ என்றும் சொல்லப் படுகின்ற திருக்குறளை ‘விவிலிய மறை’ என்ற அளவுதான் சொல்கின்றார் என எண்ணத்தக்க முறையில் பேசத் தொடங்கி, பின்பு ‘சைவசித்தாந்த’ சாத்திரங்களும் விவிலிய சாத்திரங்கள் தாம் எனச் சொல்லிக் கடைசியாகச் சைவ வைணவ சாத்திரங்கட்கு மூலங்களாகக் கருதப் படுகின்ற பன்னிருதிருமுறை, நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ஆகிய அருள் நூல்களையே ‘கிறிஸ்துவ வேதங்கள்’ என்று சொல்லத் தொடங்கிவிட்டார். இது முற்றிலும் சைவ வைணவ தமிழ் மறைகளைப் பறித்துத் தமது மதமறைகளாக்கிக் கொள்ளும் வழிப்பறியேயாகும்.

13. மு. தெய்வ நாயகம் : ‘ஞான சம்பந்தரது கூற்றுக்களையும், செயல்களையும் ஆழ்ந்தறிந்த சுந்தரர் இவைகள் குற்றங்கள் என்றே பாடியுள்ளார்.

‘நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்
குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டு’

என்பது சுந்தரர் தேவாரம்.

அருணையார் : மேற்குறித்த பாடலில் சுந்தரர் ‘குற்றம்’ எனக் கூறியது, ‘உலகியல் நோக்கில் பார்க்கும் பொழுது குற்றமாய்த் தோன்றும்’ எனவும், ‘குணம்’ எனக் கூறியது. ‘இறைநெறி’ நோக்கில் பார்த்தால் அவை குணமேயாகிவிடும்’ எனவும் கூறியனவேயாம்.

ஞானசம்பந்தர் குற்றம் செய்ததாகக் கூறியது வாதில் தோற்ற சமணர்களை அரசன் கழுவேற்றும்படிக் கட்டளை யிட்டபொழுது அவனைத் தடுக்காமல் இருந்ததைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது.

'வாதில் தோற்றவர்கள் கழுவேற வேண்டும்' என்னும் நிபந்தனையை ஞான சம்பந்தரோ அல்லது அரசனோ சொல்ல வில்லை. சமணர்கள் தான் அவ்வாறான ஒரு நிபந்தனையை ஏற்படுத்தினார்கள்.

அதுமட்டுமன்று. வாதில் தோற்பதற்கு முன்பே சமணர்கள் ஞானசம்பந்தர் தங்கி யிருந்த திருமடத்திற்கு நள்ளிரவிலேயே சென்று தீக்கொளுவினார்கள். 'அரசன் நீதிபரிபாலனத்தின் பொருட்டு ஒரு செயலை மேற்கொள்கிறான்' என்றால் அதில் குறுக்கிடச் சமயத் தலைவர் ஒருவருக்கு என்ன இடம் இருக்கிறது? தரும சங்கடமே.

14. தெய்வநாயகம் : அருணந்தியார் மெய்கண்ட தேவரை முதலில் எதிர்த்துப் பின்பு அவருக்கு மாணவர் ஆயினார்.

அருணையார் : அருணந்தி தேவர் மெய்கண்டார் தம் தந்தையாருக்குக் குலகுரு. அவர் காட்டிய வழியில் தந்தையார் இறைவனை வழிபட்டே மெய்கண்டாரை மகனாகப் பெற்றார். மெய்கண்டார் தம் குலகுருவாகிய அருணந்தி தேவரைச் சென்று வணங்க வில்லை. தமக்குக் குலகுருவாயும் தம் பிறப்பிற்கு வழிகாட்டியவராயும் உள்ள ஒரு பெரியவரைச் சென்று காணவில்லை என்றால் அந்தப் பெரியவருக்குச் சிறிது மன வருத்தம் தோன்றுதல் இயல்புதானே? அந்நிலையிலும் அவரே அச்சிறுவரிடம் சென்றது அவர் பெருந்தன்மையைக் காட்டுகிறது. அருணந்தி தேவர் எழுப்பிய வினாவிற்கு மெய்கண்டார் விடையளித்த வுடன் வயதில் சிறியவர் என்றும் பாராமல் அவர் காலடியில் வீழ்ந்தார் என்றால் அருணந்தி தேவரின் ஞானவேட்கையைத் தானே காட்டுகிறது.

15) **தெய்வநாயகம் :** திருஞானசம் பந்தரது பல்லக்கைத் திருநாவுக்கரசர் சுமந்தார் எனச் சேக்கிழார் கூறியது, தமிழர் திட்டமிட்டுத் (ஆரியருக்குக் கீழ்ப்படும் படி) தாழ்த்தப்பட்டவர் என்பதைக் காட்டுன்றது.

அருணையார் : திங்களூரில் அப்பூதி யடிகள் என்ற அந்தணர் தம் குடும்பத் தாரோடு திருநாவுக்கரசர் காலில் விழுந்து பாத பூசையும் செய்ததாகச் சேக்கிழார் கூறுகிறாரே அது ஏன்?

அடுத்து தெய்வநாயகத்தின் திருக்குறள் திரிப்புரைக்கு அருணையார் நீண்ட மறுப்பு எழுதியுள்ளார். அது இங்கு கூறப்பட வில்லை.

16) கிறிஸ்துவ மதத்தில் படைப்பு ஒன்று மட்டுமே கடவுள் தொழில். இதையும் அவர் ஒரு முறை செய்ததோடு சரி காப்பதைக் கடவுள் தொழிலாக வைத்துக் கொண்டாலும் கொள்ளலாம். அழிப்பதைக் கடவுள் ஒருபோதும் செய்யார். இன்னும் கிறிஸ்துவ மதக் கடவுள் மனித குலத்தில் முதல் ஆண்மகன் ஒருவனையும், முதற் பெண்மகள் ஒருத்தியையும் மட்டுமே படைத்தார். அவர்கள் வழியாக மனித குலம் விருத்தியாயிற்று. இந்தியக் கடவுள் அனைத்து மனிதர்களையும் படைத்தார். படைக்கின்றார். படைப்பார்.

17) உலக மக்களின் ஆதிப்பெற்றோர் ஆதாமும், ஏவாளும் ஆவர். இவர் மதத்தில் மக்கள் தாம் ஆன்மாக்கள். மற்ற உயிர் இனத்தில் யாதொன்றும் ஆன்மா அன்று. தமிழர் மதம் அல்லது இந்திய மதத்தில் ஓரறிவுடைய மரம் முதல் ஆறறிவுடைய மக்கள் ஈறாக உள்ள அனைத்துயிர்களும் ஆன்மாக்களே.

18) **தெய்வநாயகம் :** ஆதாம், ஏவாள் என்பவர்கள் முதலில் முத்தி நிலையில் கடவுளோடு இருந்தார்கள். அவ்வாறு இருந்து கொண்டிருக்கும்போது தீமை வந்து அவர்களைப் பற்றிக் கொண்டது.

அருணையார் : கடவுளோடு கூட இருந்தவர்களைத் தீமை வந்து பற்றிக் கொண்டது என்றால் பின்பு அவர்கள் மீண்டும் கடவுள் பக்கத்தை அடைந்தாலும் அவர்களை அந்தத் தீமைபற்றாது என்பது என்ன நிச்சயம்?

தெய்வநாயகம் : அந்த உலகம் நன்மை யுலகம், தீமையுலகம் என இரண்டு வகைப் படும். நன்மையுலகம் முத்தி; தீமையுலகம் சகசமலம். நன்மையுலகம் முடிந்துவிட்டது. உடனே தீமையுலகம் தோன்றிவிட்டது.

அருணையார் : 'சகசம்' என்பதற்கு 'உடன் தோன்றியது' என்பது சொற்பொருள். ஆதாம், ஏவாள் என்பவர்கள் ஏதோ ஒன்றின் சொற்படி உண்ணக் கூடாத பழத்தை உண்டதனால் அவர்களிடம் தீமை புகுந்தது என்றால் அந்தத் தீமை அவர்களுக்குச் சகசமாய் இல்லாமல் இடையிலே வந்தது என்று சொல்ல வேண்டும்.

19) **அருணையார் :** சிவஞானபோத முதற் சூத்திரத்தில் 'அவன் அவள் அது' என்னும் சுட்டுப் பெயர்கள் மற்ற இடங்களில் வரும் சுட்டுப் பெயர்கள் போல எந்த ஒரு குறிப்பிட்ட மகன் மகள் அஃறிணைப் பொருள் என்பவற்றைக் குறிக்கவில்லை. இங்ஙனமாக இவர் 'அவன்' ஆதாமையும், 'அவள்' ஏவாளையும், 'அது' உலகத்தையும் குறிக்கும் என்கிறார்.

20) **அருணையார் :** அதே சூத்திரத்தில் 'அவை மூவினைமையின் தோற்றிய திதியே' என்று வருகிறது. 'மூவினைமை' என்றால் தோன்றுதல், நிற்றல், மறைதல் ஆகும். இவரோ ஆதாம் ஒரு வகைப் படைப்பு முறையிலும், ஏவாள் ஒருவகைப் படைப்பு முறையிலும், உலகம் ஒருவகைப் படைப்பு முறையிலும் படைக்கப் பட்டதைத்தான் 'மூவினைமை' எனப் பட்டது என்கிறார்.

21) ''தானாகத் தந்தது'' (திருவுந்தியார்)

தெய்வநாயகம் : பரம்பொருள் பிறரால் அனுப்பப்படாமல் தானாகவே பூமியில் மனிதனாக வந்து தன்னைச் சிலுவையில் உலகத்திற்குக் கொடுத்துவிட்டது.

அருணையார் : பரம்பொருள் குருவாகி வந்து ஆட்கொண்டு என்னை அது தானாகவே ஆக்கிக் கொண்டது என்பது உண்மையுரை.

இப்படி திருவுந்தியார், திருக்களிற்றுப் பாடியாரில் வரும்பல பாடல்களுக்கு இவர் திரிபாக விளக்கங்கள் தந்துள்ளார்.

22) **அருணையார் :** தென்முகக் கடவுளைப் பற்றிய செய்திகள் தமிழகத்திலே சங்க காலம் முதலாகவே கூறப்பட்டு வருகிறது. தோமா வந்த பிறகு தான் தென்முகக் கடவுள் பெயர் தமிழ் நாட்டில் பேசப்படலாயிற்று என்கிறார். கொடுமை கொடுமை பெருங் கொடுமை.

23) எல்லாவற்றையும்விட, இவர் செய்த பெரும் புரட்டு 'உமாபதி தேவரின்' குருவாகிய மறை ஞான சம்பந்தர் இயேசு கிறிஸ்து தான் என்பது.

24) **தெய்வநாயகம் :** உயிர்களை இறைவன் படைத்தான்.

அருணையார் : சைவசித்தாந்தத்தின்படி பதி, பசு, பாசம் ஆகிய மூன்று பொருள்களும் தோற்றமும், அழிவும் இல்லாதவை.

"காஞ்சி வாசியாரின் மாயாவாதக் கோண் மறுப்பு"

இருபதாம் நூற்றாண்டு

ஆசிரியர் : ''சத்திய வாக்கி'' பக்கம் : 56

இது ''லோகோபகாரியில்''வெளிவந்த மாயாவாதி இன்னாரென்று சத்தியவாக்கி எழுதிய கட்டுரைக்கு மறுப்பாக வந்த காஞ்சி ஆசாரியார் தொடர்புடைய கட்டுரைச் செய்திகளை மறுக்க எழுந்தது. இந்நூலில் மறுப்பு எழுதப் புகுந்தவர் மறுக்கப்படுபவருடைய ஒவ்வொரு கருத்தையும் தனித்தனியே எடுத்துக்காட்டி அவர் காட்டும் மேற்கோள்கள் பொருத்த மற்றவை என்பதை நிறுவி அக்கருத்துக்கு மாறாகத் தாம் கூறும் கருத்துக்களைத் தக்க சான்றுகளால் மெய்ப்பித்து ஒழுங்கு பெற எழுதாமல் மனம் போனபடி எழுதி மறுப்பு நூலுக்கு உரிய எந்த நெறியும் கடைப் பிடிக்காமல் தாம் கொண்டதே முடிவு என்று வரைந்த செய்திகள் யாவும் தக்க சான்றுகளால் தகர்க்கப்பட்டுள்ளன.

"அத்வைத தூவுண நிக்கிரக மர்த்தனம்"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர் நாகப்பட்டினம் ஸ்ரீ காயாரோகண சுவாமிகள் சந்நிதியில் சரியை கிரியை யோகம் ஞானம் வீடுபயப்பவை என்று உரையாற்றி அதனை ஒரு துண்டுப் பிரசுரமாக நாகை நீலலோசனி இதழாசிரியர் வெளியிட்டார். ''நாயகரின் பேச்சு வேத விரோதமானவை'' என்று சாடி நாகையிலோர் பிரமவாதி எனப் பெயரிட்ட

வர் ''அத்வைத தூஷண நிக்கிரகம்'' என்ற பிரசுரம் வெளியிட்டார். அந்நூலின் மறுப்பாக எழுந்ததே இந்நூல்.

''அத்வைத தூஷண நிக்கிரக வினாவிடை''

ஆசிரியர் : நாகை நீலலோசனி பத்திராதிபரும், தமிழ்ப் பண்டிதரும்.

''அத்வைத தூஷண நிக்கிரகம்'' என்ற புத்தகத்தின் கருத்துக்களைச் சாடி மாயாவாதி, பிரமவாதி என்ற இருவர் வினாவிடையாகப் பேசுவது போல அமைந்துள்ளது. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அழகுபட விளக்கப் பட்டுள்ளன.

மற்றும் சில கண்டன நூல்கள்

1) ''சித்தாந்திகளும் ஏகான்ம வாதிகளே'' 1891.

ஆசிரியர் : வேதாந்தி என்பவரால் பிர்ம்மவித்யாவில் எழுதப்பட்டது.

பொருளடக்கம் : சைவரில் ஒருசாரார் அத்துவைதிகளை ஏகான்மவாதி என்கின்றனர். அப்படி சொல்கின்றவர்களே ஏகான்ம வாதிகள் எனக் கூறும் நூல்.

2) ''பதிபசு பாச வாதம்'' 1894.

ஆசிரியர் : ஆரியன் : பிர்ம்ம வித்யாவில் எழுதியது. பக்கம் – 70

ஞானாமிர்தம் பத்திராதிபருக்கு ஆரியன் என்பவர் பிர்ம்ம வித்தியாவில் ''பதிக்குப் பசு பின்னமா? அபின்னமா? பின்னா பின்னமா? முதலான எட்டுக் கேள்விகள் கேட்டிருந்தார். அதற்கு சோமசுந்தர நாயகர் நாகை நீலலோசனியில் பதில் அளித்தார். அதற்கு விடையளிக்கும் முகத்தான் இந்நூல் எழுந்தது.

3) ''துவித சைவரே மாயாவாதிகள்'' 1894.

ஆசிரியர் : ஓர் இந்து.

4) ''பசு சச்சிதானந்தம் உடையதா?'' 1896.

ஆசிரியர் : ''ஆரியன்''.

பத்திரிகை: ஆரிய ஜனப்பிரியன்.

5) ''துவிதாத்துவித வாதம்'' 1896.

ஆசிரியர் : ஆரியன் பக்கம் : 130

குகதாசர் 19.9.1894-ஆம் ஆண்டில் இந்து சாதனத்தில் ''பிரபஞ்சவிசாரம்'' என்ற பெயரில் வேதாந்தியைத் தாக்கி எழுதினார். அதற்குப் பதிலாக எழுந்தது இந்நூல்.

6) ''வேதாந்த சங்கை நிவாரணி'' 1897.

ஆசிரியர் : ''அத்வைத சித்தாந்தி''

பத்திரிகை : பிர்ம்ம வித்யா.

''ஞானாமிர்தம்''பத்திரிகையில் ''கேவலாத்துவித விசாரம்'' என்ற தலைப்பில் ''பரசமயகோளரி'' (சபாபதி நாவலர்) என்ற பெயரில் வேதாந்திகளைக் கேவலாத்து விதம் என்றும் மாயாவாதம் என்றும் சாடி எழுதி உள்ளார்.அதனைக் கண்டித்து ''சைவ சித்தாந்தம்'' தான் உலகம் மாயையிலிருந்து தோன்றியதாகச் சொல்கிறது. எனவே சைவ சித்தாந்தம் தான் மாயா வாதம்'' என்று இக்கட்டுரை வெளிவந்தது.

7) ''மாயாவாத சண்டமாருதம்''

ஆசிரியர் : வீரபத்திரமூர்த்தி பக்கம் : 190

''வேதாந்திகளே மாயாவாதிகள்'' என்று வேதாந்த சங்கை நிவாரணிக்குப் பதிலளிக்கிறது.

''சூத்திர கிரகஸ்தாசாரிய நிர்ணய மறுப்பு''

19-ஆம் நூற்றாண்டு

ஆசிரியர் : ஆடூர் சு. கணபதி பிள்ளை, சிதம்பரம்

நான்காம் வருணத்து இறுதி வரை பிரமசரியம் அனுஷ்டித்தார்க்கு அன்றி இல்லறத்தார்க்கும் குருத்துவம் இன்று என விலக்கிய காமிக ஆகமம் பொருளை விளக்கிய சிவஞான பாடிய கூற்றுக்கு மறுப்பாக, ஆறுமுக நாவலர் அவ்விதி முதல் மூன்று யுகத்தாருக்கே அன்றி வேளாள பிரமசாரியர் மிக அருகிய இக்காலத்திற்கு ஏலாது என்று சைவ சமய நெறியிலும், நான்காம் பாலபாடம் என்னும்

நூலில் எழுதியிருப்பதை, மேற் கோளாகக் கொண்டு வேளாளரில் இல்லறத் தாருக்கும் குருத்துவம் உண்டு என்பதைக் கூறினாலன்றி தமக்கு வாழ்க்கை நடத்த வாய்ப்பு இன்றாகும் என்று முத்துக் கற்பகத்து ஐயா என்பவர் வெளியிட்ட ''சூத்திர கிருகஸ்தாசார்ய நிர்ணயம்'' என்பது காமிகாகமம் நெறிக்கு முரண் பட்டதால் அது பொருந்தாது என்று சிவஞான முனிவர் பாடியத்தில் கூறிய செய்தியே உண்மை என்று நிறுவுவதற்கு எழுந்தது இந்நூல். இந்நூலாசிரியர் கூற்றுக்குக் காமிகாகமச் செய்திளந்த விதத்திலும் உதவுவதன்று என்று நிறுவப்பட்டுள்ளது.

குருத்துவம் காமிகாகமத்தில் கூறப்படவில்லை என்றார் சிவஞான முனிவர். ''முதல் மூன்று யுகத்திற்குப் பொருந்தும். இந்த யுகத்திற்குக் குருத்துவம் இருப்பதாக வைத்துக் கொள்ளலாம்'' என்று காலதேசவர்த்தமானத்துக் கேற்ப ஆறுமுக நாவலர் அனுசரித்து விளக்கம் கூறினார். இந்த அனுசரிப்பை வைத்து முத்துக் கற்பகத்து ஐயா ''குருத்துவம் வேளாளருக்கு உண்டு'' என்றார். கணபதிபிள்ளை ''வேளாளருக்குக் குருத்துவம் இல்லை என்று சிவஞான முனிவர் சொன்னதே காமிகாகமம்'' என்று நிறுவுகிறார்.

(பெரும்பான்மை கண்டன நூல்கள் தருமையாதீன நூலகத்திலும், மறைமலையடிகள் நூலகத்திலும் பார்வையிடப்பட்டன)

■■■

II

தலபுராணங்கள்

12-ஆம் நூற்றாண்டு

புராணம் : புராணம் என்றால் பழங்கதை என்று பொருள். ''வழிவழிவந்த மரபு வரலாறு'' (Traditional History) என்பார் தலபுராண ஆய்வாளர் மாதவன். இதிகாச புராணங்களை ஐந்தாவது வேதம் என்பர் அறிஞர். குணம் குறிகளற்ற இறைவனை மனதில்நிறுத்த முடியாது. எனவே ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லா இறைவனுக்கு ஆயிரம் நாமங்கள் கற்பிக்கப் பட்டன. உருவமும் தரப்பட்டது. உருவம் உடைய இறைவனைச் சுற்றிக் கோயில், தலம், தீர்த்தம், தலவிருட்சம் என எழுந்தன. பாமர மக்களுக்கும் கண்ணுக்குப் புலனாகும் உருவத்தை மனதில் வாங்க முடிந்தது. தத்துவக் கருத்துக்களை நேரிடையாகச் சொன்னால் புரியாத நிலையில் கதைகளோடு வைத்துக் கூறப்பட்டன. இதனால் மக்களுக்கு எளிதில் தத்துவச் சிந்தனைகளும், அறக்கருத்துக்களும் விளங்கலாயின. இந்தக்கதைகள் முதலில் தெய்வங்களைச் சுற்றியே அமைந்தன. இப்படித்தான் சிவமகா புராணம், இலிங்க புராணம், விஷ்ணு புராணம் போன்ற புராணங்கள் எழுந்தன.

தலபுராணங்கள் : அடுத்த கட்டமாக மக்களுக்குத் தங்கள் தலம், தங்கள் கோயில் பற்றிக் கேட்கவும், அவற்றைப் பற்றிப் பாடச் செய்யவும் எண்ணம் எழுந்தது. தலபுராணங்கள் எழுந்த காலத்திலே தேவார ஆசிரியர்கள் தலங்கள் தோறும் உள்ள இறைவனையும், தலத்தையும் பாடிப் பரவினர். அது மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. தங்கள் ஊருக்குச் சிறப்புச் செய்ய வேண்டும் என்ற சிந்தனை புறநானூற்றுக் காலத்திலேயே வந்து விட்டது. எனவே இது தமிழ் மரபே. அந்த மரபினை அடியொற்றியே தல புராணங்கள் எழுந்தன.

தலபுராணங்களின் பயன்கள் : ''புராணங்கள் புனைந்துரை; மூட நம்பிக்கைகளைக் கொண்டவை'' என்பது சரியல்ல. கற்பனை கலந்த வரலாறு எனலாம். தல புராணங்களின் பயன்கள் பற்றி ஆய்வாளர் வே. இரா. மாதவன் தனது நூலில் விரிவாகக் கூறுகிறார். அவை வருமாறு : 1) தல புராணங்கள் கோயில்கள் பற்றிய கருவூலங்கள். 2) பாமர மக்களையும் படித்த மக்கள் ஆக்குகின்றன. 3)கலைகள் வளர்ச்சிக்கு வித்திடுவன. 4) தலப்பயணங்களுக்கு ஊக்கம் ஊட்டுவன. 5) வசதியற்ற வரையும் வாழவைப்பன. 6) தேசிய ஒருமைப் பாட்டுக்கு வழிவகுப்பன. 7) கடையருக்கும் இங்கு கடைத்தேற்றம் (சிலந்தி, எறும்பு). 8) நல்லொழுக்கம் வளர வழி வகுப்பன.

தமிழுக்கே உரியது : சங்க இலக்கியத்திலே ஊர்களைச் சிறப்பித்தல் – பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகிய சங்க இலக்கியங்கள் முருகன், திருமால் தலங்களைக் கூறுதல் – திருமுறை ஆசிரியர்களால் பாடல் பெற்ற தலங்கள் எனவிதந்தோதப்படுதல் – ஐயடிகள் காடவர் கோன் என்ற அரசர் க்ஷேத்திரக்கோவை என்ற நூல் இயற்றுதல் – தலபுராணங்களில் (தமிழோ, வடமொழியோ) தமிழ்நாட்டுத் தலங்களைப் பற்றியே கூறுதல் – இவை

யெல்லாம் நோக்கும் பொழுது தல புராணங்கள் தமிழுக்கே உரியது என்பது புலனாகும்.

தலபுராணங்கள் சைவத்திலே மிகுதி : தமிழில் சைவ புராணங்களே மிகுதியாக – நூற்றுக் கணக்கில் – உள்ளன. வைணவ புராணங்கள் அவற்றைவிட மிகக்குறைவே. இதற்கு மாதவன் பலகாரணங்கள் கூறுகிறார்.

1) தமிழ்நாட்டில் சிவாலயங்கள் பல்லாயிரக் கணக்கில் உள்ளன. வைணவ ஆலயங்கள் குறைவே.

2) பதினாறாம் நூற்றாண்டில் வைணவர்கள் நாலாயிர திவ்யப் பிரபந்தங்களின் பெருமையும் சாத்திரங்கள் வியாக்கியானங்களின் பெருமையும் போற்றிய அளவிற்குத் தலங்களின் பெருமையை மிகுதியாகப் போற்றவில்லை.

3) அக்காலகட்டத்தில் சைவம், வைணவம், சங்கரரின் அத்வைதநெறி – ஆகியமூன்றுமே பரவி இருந்தன. ஸ்ரீ வைணவர்கள் – பிராமணர்கள் – சாத்திர முதலிகள். இவர்களிடையே சாத்தாத முதலிகளான பிராமணர் அல்லாதார்க்கு எந்த இடமும் இல்லை. சைவத்திலே சிவவேதியராக இருந்த தமிழ்ப் பிராமணர் சங்கரரின் அத்வைத நெறி வந்த பிறகு ஸ்மார்த்த அத்வைதிகளாயினர். இவர்களுக்கு ஆலய வழிபாடு முக்கியமல்ல. இந்த அடிப்படையிலே பிராமணர் அல்லாத மக்களே ஆலயவழிபாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தனர். அவர்கள் பெரும்பாலும் சைவர்களே. எனவே சைவத் தல புராணங்கள் மிகுதியாக எழுந்தன. பிராமணர் ஆலய வழிபாட்டிற்கு முக்கியம் தராததால் – வைணவத்தில் பிராமணர்களே அன்று இருந்ததினால் – அவர்கள் தலபுராணங்கள் பாடவில்லை.

இனித்தல புராணங்களின் வரலாற்றைப் பார்ப்போம்.

முதல் தமிழ்த் தலபுராணமாகத் தெரிய வருவது கி.பி. பனிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரைத் தலைவன் பரசமயக் கோளரி இயற்றிய கன்னிவன புராணம் ஆகும். இது கிடைக்கவில்லை. நமக்குக் கிடைத்துள்ள பெரும் பற்றப் புலியூர் நம்பி இயற்றிய திருவாலவுடையார் திருவிளையாடல் எனும் நூல்கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். கோயிற் புராணம் என்னும் சிதம்பர புராணம் கி.பி.பதினான்காம் நூற்றாண்டில் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் அவர்களால் இயற்றப் பெற்றது.

பதினாறாம் நூற்றாண்டில் இருபத்திரண்டு ஆசிரியர் செய்த நாற்பத்தோரு தல புராணங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் 36 சைவ புராணங்கள் ஆகும். இவற்றுள் 26 தலபுராணங்கள் ஆகும். பதினாறாம் நூற்றாண்டைப் புராண காலம் – தலபுராணக்காலம் – என்றே கூறலாம். பதினேழாம் நூற்றாண்டில் சைவ எல்லப்ப நாவலரும், சிவப்பிரகாச சுவாமிகளும், பரஞ்சோதி முனிவரும் சிறப்பிடம் பெறுகின்றனர். பதினெட்டாம் நூற்றாண்டில் சிவஞான முனிவரும் கச்சியப்ப முனிவரும் தலபுராணங்கள் பாடியுள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இருபத்திரண்டு தலபுராணங்களைப் பாடி அழியாப் புகழ்பெற்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு தலபுராணங்கள்

1) அம்பர்ப் புராணம், *2)* ஆற்றூர்ப் புராணம், *3)* உறையூர்ப் புராணம், *4)* கண்டதேவிப் புராணம், *5)* காசி ரகசியம், *6)* குறுக்கைப் புராணம், *7)* கோயிலூர்ப் புராணம், *8)* சூரைமாநகர்ப்புராணம், *9)*தனியூர்ப் புராணம், *10)* தியாகராச லீலை, *11)* திருக்குடந்தைப் புராணம், *12)* திருத்துருத்திப் புராணம், *13)* திருநாகைக் காரோணப் புராணம், *14)* திருப்பெருந்துறைப் புராணம், *15)* திருமயிலைப் புராணம், *16)* திருவரன் குளப்புராணம், *17)* பட்டீச்சரப் புராணம், *18)* மண்ணிப் படிக்கரைப் புராணம், *19)*மாயூரப் புராணம், *20)* வாளொளிப் புற்றூர்ப் புராணம், *21)* விளத்தொட்டிப் புராணம், *22)* வீரவனப் புராணம்.

இந்த 22 புராணங்களையும் இயற்றிய வர் : மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள்.

சோழ நாட்டுத் தலபுராணங்கள்

1) இடும்பவனப் புராணம் (19-ஆம் நூற்றாண்டு).... தலைப்புள்ளி பின்னத்தூர் நாராயண சாமி அய்யர்.

2) கோட்டாற்றுப் புராணம் .... அப்துல் காதிறு நாவலர்.

3) கோட்டாற்றுப் புராணம் (19-ஆம் நூற்றாண்டு) .... சுப்பிரமணிய கவிராச மூர்த்தி.

4) திருக்கோட்டூர்ப் புராணம் (19-ஆம் நூற்றாண்டு) .... பாலகிருட்டிண தீட்சிதர், நாராயணசாமி அய்யர்.

5) திருநள்ளாற்றுப் புராணம் (19-ஆம் நூற்றாண்டு) ....
சுப்பிரமணியக் கவி ராச மூர்த்தி.

6) திருநாகேச்சுரப் புராணம் (19-ஆம் நூற்றாண்டு) .... மூவா. ப.சிங்கார வேற் பிள்ளை.

7) திருமருகற் புராணம் (19-ஆம் நூற்றாண்டு) .... சுப்பிர மணிய ஐயர்.

8) திருவேட்டக்குடிப் புராணம் (19-ஆம் நூற்றாண்டு).... வேலுச்சாமி பிள்ளை.

9) பரிதியப்பர் தல புராணம் (19-ஆம் நூற்றாண்டு) ... நாராயணசாமி நாயக்கர்.

பாண்டிநாட்டுத் தலபுராணங்கள்

10) கொடுங்குன்றப் புராணம் (19-ஆம் நூற்றாண்டு) .... மங்கை பாகக் கவிராயர்.

11) காளையார் கோயிற் புராணம் (19-ஆம் நூற்றாண்டு) .... தஞ்சாவூர் சதாவதானம் சுப்பிரமணிய ஐயர்.

12) திருச்சுழியற் புராணம் (19-ஆம் நூற்றாண்டு) .... ஆராவமுதாசாரியார்.

13) திருமலைத் தல புராணம் .... முருகதாசக் கவிராயர் என்னும் சிவராம லிங்கம் பிள்ளை.

14) திருநெல்வேலித் தல புராணம் (19-ஆம் நூற்றாண்டு) .... கவிராச நெல்லையப்பன் கவிராயர்.

தொண்டை நாட்டுத் தல புராணங்கள்

15) திருமாற்பேறு புராணம் .... பானுகவி அழகர்.

16) வடதிருமுல்லைவாயிற் புராணம் .... திருமயிலை சண்முகம் பிள்ளை.

17) திருமயிலைத்தலபுராணம் (இரண்டு) .... 1) அமிர்தலிங்கத் தம்பிரான், 2) நாதமுனி முதலியார்.

18) திருவான்மியூர்த் தலபுராணம் .... பூவை கல்யாண சுந்தர முதலியார்.

19) திருக்கச்சூர் ஆலக்கோயில் புராணம் .... வேலுச்சாமிப் பிள்ளை.

20) வில்லைப் புராணம் .... வீரராகக் கவி.

21) காமநகர்ப் புராணம் (இரண்டு) .... 1) சுந்தர முதலியார், 2) ஆ.மா. சிவஞானம் (கிடைக்கவில்லை)

நடுநாட்டுத் தலபுராணங்கள்

22) திருக்கூடலையாற்றுப் புராணம் .... சூரியமலை சந்திரசேகர நாயகர்

23) திருவாமாத்தூர்புராணம் .... வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்.

24) ஆதிபுரத் தலபுராணம் .... பண்ணுருட்டி சுப்புராய செட்டியார்.

கொங்குநாட்டுத் தலபுராணங்கள்

25) திருச்செங்கோட்டுப் புராணம் : வீரகவிராச பண்டிதர்.

26) திருப்பாண்டிக் கொடுமுடிப் புராணம் : சாமக்குளம் வேங்கட ரமணதாசர்.

27) பூந்துறைப் புராணம் : காளியண்ணப் புலவர்.

28) கௌசைப் புராணம் : கந்தசாமி சுவாமிகள்.

29) அப்பிரமேயத் தலபுராணம் : இளையான் கவிராயர்.

30) திருவள்ளூர்ப் புராணம் : அட்டாவதானம் சொக்கலிங்கப் புலவர்.

31) சிவமலைத் தலபுராணம் : அம்பலவாணக் கவிராயர்.

32) அன்னியூர்த் தலபுராணம் : கந்த சுவாமி சுவாமிகள்.

33) அவிநாசிப் புராணம் :இளையான் கவிராயர்.

இருபதாம் நூற்றாண்டு தலபுராணங்கள்

பாண்டி நாட்டுத் தல புராணங்கள்.

1) திருவேடகப் புராணம் :திரு. சுப்பிரமணிய ஐயர்.

தொண்டை நாட்டுத் தலபுராணங்கள்

2) திருப்பனசைப் புராணம் : திரு. அ. நாராயணசாமி முதலியார்.

3) திருப்பாச்சூர்ப் புராணம் : திரு.கோ.கந்தசாமிமுதலியார்.

4) அயன்புரத் தலபுராணம்: தி.வே. தணிகைவேள் பாரதியார். (அச்சாகவில்லை)

5) காங்கேய நல்லூர்ப்புராணம், வேலூர்ப் புராணம் : கிருபானந்த வாரியார் (அச்சாகவில்லை)

நடுநாட்டுத் தல புராணங்கள்

6) திருவரத்துறைப் புராணம் : அரங்கசாமி ஐயங்கார்.

7) திருச்சோழபுரப் புராணம்: சொக்கலிங்கஞ் செட்டியார்.

8) திருவதிகைப் புராணம் :வாகீசபக்தநாவலர் எனும் அப்பாவையர்.

9) திருவிடையூர்த் தலபுரணம் : அசலாம்பிகை அம்மாள் குழந்தைவேலுப் பிள்ளை.

10) தாராபுரத் தலபுராணம் : வேலாயுத பண்டிதர்.

11) திரிமூர்த்தி மலைப் புராணம் : வேலாயுத பண்டிதர்.

12) காரமடைப் புராணம்: இராமானுச நாவலர்.

துணை நூல் : ‘‘தமிழில் தலபுராணங்கள்’’ – வே. இர. மாதவன்.

■ ■ ■

III

சைவாகமங்கள் (1887 முதல்)

சைவஆகமங்கள் 28, உபாகமங்கள் 207-லே சில ஆகமங்களே கிடைத்துள்ளன. அவற்றுள் சிலவே அச்சிடப்பட்டுள்ளன. சில மூலத்துடனும்,சில தமிழ் மொழி பெயர்ப்பாகவும், சில ஆங்கில மொழி பெயர்ப்பாகவும், சில விளக்கங்களுடனும் வெளி வந்துள்ளன.

1. காமிகாகமம் :

அ) தமிழ் : பூர்வபாகம் : உரையுடன் 1901-ஆம் ஆண்டில் கே. சண்முக சுந்தர முதலியாரால் வெளியிடப் பட்டுள்ளது.

ஆ) இதே மொழி பெயர்ப்பு 1977-ஆம் ஆண்டில் சென்னை தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தால் வெளியிடப் பட்டது.

இ) (உரையில்லாமல்பூர்வபாகம்) மூலம் மட்டும்1975-ஆம்ஆண்டில் சென்னை தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தால் வெளியிடப் பட்டுள்ளது.

ஈ) உத்தரபாகத்தின் மூலம் 1909-ஆம் ஆண்டில் கே. சண்முக சுந்தர முதலியாரால் வெளியிடப் பட்டுள்ளது.

2. காரணாகமம் :

அ) இவ்வாகமத்தில் நித்யார்ச்சனை விதி படலம் மட்டும் தமிழில்மொழி பெயர்க்கப்பட்டு 1969-ஆம் ஆண்டில் திருப்பூர் ராஜலிங்க குருக்களால் வெளியிடப்பட்டுள்ளது.

ஆ) இவ்வாகமத்தின் நித்ய பூஜாவிதி படலம் மட்டும் 1974-ஆம் ஆண்டில் ஜே.டபிள்யூ.வி. கர்ட்டிசால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, சென்னை ஹோ & கம்பெனியாரால் வெளியிடப் பட்டுள்ளது.

இ) இவ்வாகமத்தின் பூர்வபாகத்தின் மூலம்மட்டும் 1920-ஆம் ஆண்டில் கே. சண்முக சுந்தர முதலியாரால் பார்வையிடப்பட்டு எம். அழகப்ப முதலியாரால் வெளியிடப்பட்டு உள்ளது.

ஈ) இவ்வாகமத்தின் உத்தரபாகம் மூலம் மட்டும் 1928-ஆம் ஆண்டில் கே. சண்முக சுந்தர முதலியாரால் பார்வை யிடப்பட்டு எம்.அழகப்ப முதலியாரால் வெளியிடப் பட்டுள்ளது.

(காரணாகமம்பூர்வபாகம், உத்தர பாகம் 1900-ஆம் ஆண்டில் சிவஞான போதம் அச்சகத்தில் வெளியிடப் பட்டிருக்கின்றது. இந்த அச்சகம் சே. சண்முகசுந்தர முதலியார்க்கு உரிமை யானது. ஒருவேளை முதற்பதிப்பாக இருக்கலாம்.)

3. சகஸ்ராகமம் :

இவ்வாகமத்தின் அஷ்டபந்தன விதிப் படலத்தின்தமிழாக்கம் 1970-71-ஆம் ஆண்டில் ''ஞானசம்பந்தம்'' இதழில் தருமபுரம் சுவாமிநாத குருக்களால் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது.

4. ம்ருகேந்திர ஆகமம் :

அ) இவ்வாகமத்தின் வித்யாபாதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு – பட்ட நாராயண காந்தனின் உரையுடன் 1926-ஆம் ஆண்டில் கே. சண்முக சுந்தர

முதலியாரால் பார்வையிடப்பட்டு மயிலை அழகப்ப முதலியாரால் வெளியிடப் பட்டுள்ளது.

ஆ) இவ்வாகமத்தின் வித்யா பாதத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு 1900-1-ஆம் ஆண்டில் ''சித்தாந்த தீபிகை'' ஆங்கில இதழில் கே.நாராயணசாமி ஐயரால் தொடர்ந்து எழுதப் பட்டுள்ளது.

இ) இவ்வாகமத்தின் வித்யாபாதம், யோக பாதம் ஆகிய இரு பகுதி களையும் இரு உரைகளுடன் 1928-ஆம் ஆண்டில் தேவகோட்டை சிவாகம பரிபாலன சங்கம் வெளியிட்டுள்ளது.

இதே இரண்டுபகுதிகளும் 1930-ஆம் ஆண்டில் பம்பாயில் பண்டிட் மதுசூடன் கே.சாஸ்திரியால் வெளியிடப்பட்டது.

ஈ) இவ்வாகமத்தின் சரியாபாதம், கிரியா பாதம் ஆகிய இரு பகுதிகளும் பட்ட நாராயண காந்தனின் உரையுடன் 1962-ஆம் ஆண்டில் பாண்டிச் சேரி இந்தியவியல் பிரஞ்சு நிறுவனத் தாரால் வெளியிடப்பட்டுள்ளன.

5. பௌஷ்கர ஆகமம் :

அ) இவ்வாகமத்தின் வித்யாபாதத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு 1918-ஆம் ஆண்டில் சண்முக சுந்தர முதலியாரால் வெளியிடப்பட்டது.

ஆ) இவ்வாகமத்தின் மூலம் உமாபதி சிவத்தின் உரையுடன்1925-ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் அம்பல வாண நாவலரால் வெளியிடப் பட்டது.

(1881-ஆம் ஆண்டில் இவ்வாகமத்தின் முதற்பதிப்பினை சண்முக சுந்தர முதலியார் வெளியிட்டுள்ளார்.)

6. அஜிதாகமம் :

இதன் கிரியாபாதத்தின் மூலம் முதற் பாகம் 1964-ஆம் ஆண்டிலும் இரண்டாம் பாகம் 1977-ஆம் ஆண்டிலும் பாண்டிச்சேரி இந்திய வியல் பிரெஞ்சு நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

7. சுப்ரபேத ஆகமம் :

சுப்ரபேத ஆகமத்தின் மூலம் 1929-ஆம் ஆண்டில் எம். அழகப்ப முதலியாரால் வெளியிடப் பட்டுள்ளது.

8. ரௌரவஆகமம் :

இவ்வாகமத்தின் வித்யா பாதம் - முதற்பாகம் மூலம் 1961-ஆம் ஆண்டிலும் இரண்டாம் பாகம் 1972-ஆம் ஆண்டிலும் பாண்டிச்சேரி இந்தியவியல் பிரெஞ்சு நிறுவனத் தாரால் வெளியிடப் பட்டுள்ளது.

9. மாதங்க பரமேசுவர ஆகமம் :

இதன் வித்யா பாதம் (மூலம் மட்டும்) 1928-ஆம் ஆண்டில் தேவகோட்டை சிவாகம பரிபாலன சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாகமத்தின் வித்யா பாதம் பட்டராம காந்தனின் உரையுடன் 1977-ஆம் ஆண்டில் பாண்டிச்சேரி இந்திய ஆய்வியல் நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

10. மகுடாகமம் :

பூர்வபாகம் ....கிரியா பாதம் (மூலம்) ஆண்டு 1977...தென் இந்திய அர்ச்சகர் சங்க வெளியீடு.

11. கிரணாகமம் :

(மூலம்): 1932-ஆம் ஆண்டில் தேவகோட்டை சிவாகம பரிபாலண சங்கம் வெளியிட்டது.

12. வாதுள சுத்தாக்ய ஆகமம் :

அ) 1921-ஆம் ஆண்டில் எம்.அழகப்பா முதலியாரால் உரையுடன் வெளியிடப்பட்டது.

ஆ) 1958-ஆம் ஆண்டில் தலக்காடு கிருஷ்ண சாஸ்திரிகளால் வெளியிடப் பட்டது.

13. குமாரதந்திரம் :

முதலில் கே.சண்முக சுந்தர முதலியாராலும் 1974-ஆம் ஆண்டில் தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தாலும் வெளியிடப்பட்டது.

14. சதரத்ன சங்கிரஹம் :

அ) 17-ஆம் நூற்றாண்டில் சிவப்பிரகாச சுவாமிகளால் ''சதமணிமாலை'' என்று தமிழாக்கம் செய்யப்பட்டு 19-ஆம் ஆண்டில் மயிலம் வீரசைவ மடத்தால் வெளியிடப்பட்டது.

ஆ) இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு 1973-ஆம் ஆண்டில் பி. திருஞான சம்பந்தம் அவர்களால் செய்யப்பட்டு சென்னை பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

15. சித்தாந்த சாராவளி :

இதன் தமிழ் மொழி பெயர்ப்பு 1887-ஆம் ஆண்டில் கே. சண்முக சுந்தர முதலியார் அவர்களால் வெளியிடப் பட்டுள்ளது.இதே மொழி பெயர்ப்பு 1975-ஆம் ஆண்டில் சென்னை தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தால் வெளியிடப்பட்டது.

16. சகலாகமசார சங்கிரகம் :

இதன் மூலம் 1900-ஆம் ஆண்டில் கே. சண்முக சுந்தர முதலியாராலும், 1974-ஆம் ஆண்டில் தென் இந்திய அர்ச்சக சங்கத்தாலும் வெளியிடப் பட்டுள்ளது.

துணை நூல் : "Saiva Agamas" - M. Arunachalam.

■■■

IV

பிற சைவ நூல்கள்

1. பாலபாடம் :

முதற்புத்தகம்: ...

(ஆசிரியர் – ஆறுமுகநாவலர்: வெளியீடு – ஸ்ரீ ஆறுமுகநாவலர் வித்தியாநு பாலன அச்சகம், சென்னை; பக்கம் – 34; விலை – ரூ. 1.00)

இந்நூலைச் சைவக் குழந்தைகளுக்காக, ஆறுமுக நாவலர் அவர்கள் நான்கு பகுதிகளாக வெளியிட்டார்கள். முதற் புத்தகம் அன்றாட ஒழுக்கங்களைக் கூறுகிறது. 1997 வரை 36 பதிப்புகள் வந்துள்ளன.

2. பாலபாடம் :

இரண்டாம் புத்தகம்: ...

(பக்கம் – 98; விலை ரூ. 1.50; 1977-ஆம் பதிப்பு)

நீதிவாக்கியங்கள், கதைகள், பூமி, காற்று போன்ற பொது அறிவுக் கட்டுரைகள், நித்திய கருமவிதி, ஆத்திசூடி முதலியவற்றைக் கொண்டது.

1997 வரை 24பதிப்புகள் வந்துள்ளன.

3. பாலபாடம் :

மூன்றாம்புத்தகம் : ...

(பக்கம் – 92; விலை ரூ. 7.00; 14-ஆம் பதிப்பு; 1995)

இந்நூல் ஒழுக்க நெறிகளையும், பொது அறிவுக் கருத்துக்களையும் கொண்டது.

4. பாலபாடம் :

நான்காம் புத்தகம் : ... 1865.

(பக்கம் – 292; விலை ரூ. 15/- ; 1993 -ஆம் ஆண்டு பதிப்பு)

அருள், அழுக்காறு என்று ஒழுக்கங்களைக் கூறுவதாக 39 பாடல்கள் உள்ளன. 1998 வரை 32 பதிப்புகள் வந்துள்ளன.

ஒவ்வொரு புத்தகமும் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக 32, 36 பதிப்புகளாக வெளிவந்திருப்பதனால் இவற்றின் செல்வாக்கு எளிதில் புலனாகும்.

5. பெரிய புராண வசனம் : ... 1852.

(ஆசிரியர் – நாவலர்; வெளியீடு – ஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளை, சிதம்பரம்; பக்கம் – 432; விலை ரூ. 15/-)

பெரிய புராணம் உரைநடையில் சொல்லப்பட்டுள்ளது. 1997-ஆம் ஆண்டுவரை 23 பதிப்புகள் வந்துள்ளன.

6. திருத்தொண்டர் புராண சூசனம் : ... 1852.

(ஆசிரியர்– ஆறுமுக நாவலர்; வெளியீடு – சைவப் பிரகாச வித்தியா சாலை அறக்கட்டளை; பக்கம் – 152; விலை ரூ. 22/-; பத்தாம் பதிப்பு (2000-ஆம்ஆண்டு))

இது பெரிய புராண வரலாறு கூறும் நூலன்று. நாயன்மாரைப் பற்றிய செய்திகளைப் பத்துப் பதினைந்து வரிகளில் ஆசிரியர் கூறிவிடுகிறார். பெரியபுராண வரலாறுகளைக் கொண்டு நாம் அறிய வேண்டிய சைவ உண்மைகளை – நாயன்மாரின் அருஞ்செயலுக்கு நுண்பொருள்களை (சிவனடியார்க்கு மனைவியைத் தரல்; மகனைத் தேர்க்காலில் இடுதல்) – நாவலர் பெருமான் நமக்கு வழங்குகிறார். தம் கருத்துக்களுக்கு அரணாகச் சாத்திரங்கள்,

திருமுறைகள், சைவ இலக்கியங்கள் உபநிடதங்கள் ஆகியவற்றிலிருந்து சான்றுகளும் தருகின்றார்.

சூசனம் என்பது வரலாறுகளால் வலியுறுத்தப்படும் கருத்துக் கோவை யாகும். சூசனம் முழுமை பெறாமல் காரைக்காலம்மையார் புராணத்துடன் முடிவடைந்து உள்ளது.

உபோற்காதம் என்ற தொடக்கப் பிரிவில் இறைவனின் ஐந்தொழில்கள், இறைவனின் குணங்கள், சரியை, கிரியை, யோகம், ஞானம் என இறைவனை அடையும் நால்வழிகள், வல்வினை, மெல்வினை ஆகிய சாத்திரக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

இரண்டாவது சூசனத்தில் சிவனது பரத்துவம், திருத்தொண்டர் சரித்திர வரலாறு, சிவபுண்ணியம் செய்யும்போது நினைவு வேறாதல் ஆகாது எனல் ஆகிய மூன்று பிரிவுகள் உள்ளன.

மனுநீதிகண்ட புராண சூசனத்தில் செங்கோன்மைச் சிறப்பு, தன்னுயிர் விடுத்தல் இவ்விடத்துப் பாவமும் இவ்விடத்துப் புண்ணியமுமாகுமெனல் என இரண்டு பிரிவுகள் உள்ளன. மனுநீதிச் சோழன் மகனைத்தேர்க்காலிலிட்டமைக்கு நாவலர் பெருமான் நுண்பொருள் தருகின்றார்.

''இவர் தம்முடைய மகனைத் தேர்க்காலில் வைத்து ஊர்ந்தமையால், அவனிடத்து இரக்கமில்லாதவரென்பது பெறப்படுமன்றோவெனின், அற்றன்று, பூமியிலே வெளிப்படப்பாவஞ் செய்தவர்களைத் தண்டித்தல் அரசனுக்கும், வெளிப்படாமல் பாவஞ் செய்தவர்களையும் வெளிப்படப் பாவஞ் செய்தவர்களுள் அரசனாலே தண்டிக்கப்படாதவர்களையும் மறுமையில் நரகத்தில் தண்டித்தல் இயமனுக்கும், கடனாம் ஆதலாலும்; தாம் செய்த பாவத்தின் பொருட்டு இம்மையிலே அரசனாலே தண்டிக்கப்பட்டவர்கள் அப்பாவத்தின் பொருட்டு மறுமையில் நரகத்திலே தண்டிக்கப்படார்கள் ஆதலாலும்; தம்முடைய மகன் பசுக் கொலைக் குற்றத்தின் பொருட்டு மறுமையில் நரகத் துன்பம் அடையா வண்ணம் தாமே இம்மையில் அவனைத் தண்டித்து அப்பாவத்தை ஒழித்தார். ஆதலால் அவ்வுயிர்த் தண்டத்துக்குக் காரணம் அவனிடத்தில் வைத்த இரக்கம் என்றே துணியப்படும்.''

''இவர் தம்மகனுக்குச் செய்த இவ்வுயிர்த் தண்டம் இவர் கீழ் வாழும் பிறரெல்லாம் உயிர்களுக்கு இடுக்கண் செய்தற்கு அஞ்சி அஃதொழிந்து உய்தற்கும், அவ்வாறாகவே உயிர்க ளெல்லாம் பிறரால் இடுக்கண் அடையாது இனிது வாழ்தற்கும், ஏதுவாமன்றோ; அதனாலும் இவரது சீவ காருண்ணியம் துணியப்படும்.

தில்லை வாழந்தணர் புராணத்திற்கு மட்டும் நாவலர் பெருமான் சுமார் இருபது பக்கங்கள் செலவிடுகிறார். சிதம்பரத்தினது மகிமை, தில்லை வாழந்தணர்களது மகிமை, வேதவுணர்ச்சி, சைவாகமவுணர்ச்சி என்ற நான்கு பிரிவுகளில் ஆகமங்களைப் பற்றிச் சாறாகப் பிழிந்து தருகிறார்.

இயற்பகை நாயனார் வரலாற்றினை விளக்குவது சற்று கடினமான ஒன்று. சிவனடியார்க்குத் தன் மனைவியையே தந்தவர் இயற்பகையார். நாவலர் பெருமான் அதற்கும் நுண்பொருள் காண்கிறார். ''ஒரு காமக் கிழத்திமேல் அதி தீவிரமாய் முறுகி வளரும் காமத்தினாலே விழுங்கப்பட்ட மனசை உடைய ஒருவன், தனக்கு உரிய எப்பொருளையும்தான் அனுபவித்தலினும், அவள் அனுபவிக்கக் காண்டலே தனக்கு இன்பமாகக் கொள்ளுதல் போல தமக்குச் சிவன் எனவே தோன்றும் சிவனடியார்கள் மேலே அதி தீவிரமாய் முறுகி வளரும் அன்பினாலேயே விழுங்கப்பட்ட மனசை உடைய இந்நாயனார், தமக்கு உரிய எப்பொருள்களையும் தான் அனுபவித்தலினும், அவ்வடியார்கள் அனுபவித்தலைக் காண்டலே தமக்கு இன்பமாகக் கொள்ளும் இயல்புடையார், ஆதலாலன்றோ, தம்மிடத்துள்ள பொருள்களுள் அவ்வடியார்கள் கேட்பனவையோ அவை எல்லாம் சிறிதாயினும் மறாது, உண் மகிழ்ச்சியோடு கொடுக்கும் பெருந்தகை மையிற் சிறந்து

விளங்கினார். இவரிடத்துள்ள இம் மெய்யன்பைச் சர்வான்மாக்களும் உணர்ந்து உய்யும்படி, உணர்த்துதற்குத் திருவுளங் கொண்ட கிருபா சமுத்திரமாகிய சிவன், ஆன்மாக்களுக்கு உலகத்துப் பொருள்களுள் மனைவியினும் இனியபொருள் பிறிது இல்லாமையால், சிவனடியார் வேடங் கொண்டு வந்து, இவரிடத்தே இவர் மனைவியை கேட்க, இவர் கற்பினில் சிறந்து விளங்கும் அம்மனைவியையும் மறாது பெரு மகிழ்ச்சியோடு கொடுத்தார்''.

இந்நாயனார் பிறர் மனை நயத்தல் சிவாகமங்களில் விலக்கப்பட்ட பாவம் என்பது நோக்காது தமது மனைவியைத் தரும்படி கேட்டவரை, சிவனடியார் என்று கொண்டமை குற்றமாகாதோ எனின், ஆகாது. காமக்கிழத்தியர் வடிவிற் காணப் படும் ஆடை, சாந்து, ஆபரணம் முதலாயின, காமுகரை வசீகரித்து, நினைக்குந்தோறும் காணுந்தோறும் இன்பம் ஜனிப்பிக்குமாறு போல; விபூதி ருத்திராக்ஷம் முதலிய சிவவேடமானது, மெய்யன்புடையாரை வசீகரித்து, நினைக்குந்தோறும், காணுந் தோறும் இன்பம் ஜனிப்பிக்கும். விபூதி ருத்திராக்ஷம் முதலிய சிவ வேடத்தை கண்டவுடனே அதனால் வசீகரிக்கப்பட்டு, இன்பம் மேலிடப் பெறுதலால் தம்வயத்த ரல்லராவர். ஆகவே, அச்சிவவேடத்தை உடை யாரிடத்துக் குணங்குற்றம் ஆராயும் ஆராய்ச்சி இவருக்கு எப்படிக் கூடும் என்க. அதி தீவிர பத்தி உடையாருக்கு அடியார்களிடத்தில் குணங்குற்றம் ஆராய்தல் கூடாமையாகும்''.

நாவலர் பெருமான் அருளிய ''திருத்தொண்டர் புராண சூசனம்'' பெரிய புராணத்திற்குச் சூட்டப்பட்ட மணிமுடி யாகும். இந்நூல் முழுமை பெறாதது சைவவுலகிற்குப் பெரும் இழப்பாகும்.

7. சைவவினாவிடை :
முதற்புத்தகம் : ... 1873.

(ஆசிரியர் –ஸ்ரீ ஆறுமுக நாவலர்; வெளியீடு –ஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப் பிரகாச வித்தியா சாலை அறக்கட்டளை, சிதம்பரம்; பக்கம் – 38; விலை ரூ. 1.75; 32-ஆம்பதிப்பு– 1989)

இந்நூல் கடவுள் இயல், புண்ணிய பாவ இயல், விபூதி இயல், சிவமூலமந்திர இயல், நித்திய கரும இயல், சிவாலய தரிசன இயல், தமிழ்வேத இயல் என ஏழு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

கேள்வி, பதில் வடிவில் எளிமையான முறையில் மாணவர்களுக்குப் புரியும் வகையில் அமைந்துள்ளது. எடுத்துக் காட்டு :

1. உலகத்துக்குக் கருத்தா யாவர்? சிவபெருமான்.

8. சைவவினா விடை :
இரண்டாம் புத்தகம் : ... 1873.

(பக்கம் – 110; விலை ரூ. 4.25; 24-ஆம்பதிப்பு; 1989).

பதி இயல், பசு இயல், வேதாகமஇயல், சைவபேத இயல், விபூதி இயல், உருத்திராக்ஷ இயல், நித்தியகரும இயல், சிவாலய கைங்கரிய இயல், சிவாலய தரிசன இயல், குரு சங்கம சேவை இயல், மாகேசுர பூசை இயல், விரதவியல், அன்பியல் என 16 பிரிவுகளைக் கொண்டது இந்நூல். எளிய கேள்வி – பதில்கள் மூலம் சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்குவது இந்நூல். இந்நூலிற்கு 27 பதிப்புகள் வந்துள்ளன.

9. சிவ பராக்கிரமம் : 1989

(ஆசிரியர் : இரத்தினவேலு முதலியார் : பதிப்பு : அ. முத்து வடிவேல் முதலியார், சென்னை, மூன்றாம் பதிப்பு விலை ரூ. 2/- பக்கங்கள் 30)

அஷ்டாஷ்ட மூர்த்தம் என்று சொல்லப் படும் சிவபெருமானின் அறுபத்து நான்கு மூர்த்தங்கள், அந்த மூர்த்தங்கள் பற்றிய விளக்கங்கள் – அவற்றோடு தொடர்புடைய புராணக் கதைகள் – படவிளக்கங்கள் – மூர்த்தத்திற்குரிய வடமொழி சுலோகங்கள், திருமுறைப் பாடல்கள் அடங்கிய அரிய கருவூலம்.

10. மறைமலையடிகளின் சைவநூல்கள் :
.... 1898 முதல் 1968 வரை.

1) சித்தாந்த ஞானபோதம் ... *1898.*

2) சிற்றம்பல நாடி ... 1898.

3) ஞானசேகர வெண்பா ... 1898.

4) துகளறுபோதம் – உரை ... 1898.

5) பஞ்சாக்கரமாலை ... 1898.

6) வேதாந்த விசாரம் ...

7) வேதசிவாகமப் பிரமாண்யம் ... 1900.

8) திருவொற்றியூர் முருகர் மும்மணிக் கோவை ... 1900.

9) சோமசுந்தரக் காஞ்சியாக்கம் ... 1901.

10) முன்பனிக்கால உபந்நியாசம் ... 1906.

11) சைவசித்தாந்த ஞானபோதம் ... 1906.

12) சிறுதேவதைகட்கு உயிர்ப்பலி இடலாமா? ... 1923.

13) திருக்கோயில் வழிபாடு ... 1925.

14) சைவசமயப் பாதுகாப்பு ... 1927.

15) மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், இரண்டு தொகுதி ... 1930.

16) ''பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்''; திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்; தொல்காப்பியத்தில் காணப் பெறும் குறிப்புகளைக் கொண்டு பண்டைத் தமிழ் மக்களின் கொள்கைகளை ஆராய்வது; ... 1930.

17) ''கடவுளுக்கு அருளுருவம் உண்டு'' ... 1934.

18) ''மாணிக்கவாசகர் மாட்சி'' ... 1935.

19) ''சீர்திருத்தக் குறிப்புகள்'' ... 1940.

20) ''Saiva Siddhanta as a Philosophy of Philosophical practical knowledge'' ... 1940.

21) ''மாணிக்கவாசகர்வரலாறு''(பக்கம் 165; விலை ரூ. 3.50; கழகம்) ... 1952.

22) ''சோமசுந்தர நாயகர்வரலாறு'' (பக்கம் 105; விலை ரூ. 2.25; கழகம்) ... 1957.

23) ''சிவஞானபோத ஆராய்ச்சி'' (பக்கம் 268; விலை. 6.75; கழகம்) ... 1958.

24) ''கடவுள் நிலைக்கு மாறான கொள்கை சைவம் ஆகா''(பக்கம் 113; விலை ரூ. 3.50; கழகம்) ... 1968.

பௌத்த சமண ஒழுக்க முறைகள் உலகத்தவரைத் திருத்தமாட்டாமை, கடவுள் நிலைக்கு மாறான புராணங்களும், மாறாகாத சிலபழம் புராணங்களும், தக்கன் வேள்வி அழித்த கதையின் உண்மையும் பொய்ம்மையும், விநாய்க் கடவுளைப் பற்றிய கதைகளின் பொய்ம்மை, முருகப் பிரான், திருமால், சிவபெருமான், விநாயகர் ஆகியோர் திருவுருவங்களின் வழிபாட்டு உண்மை ஆகிய தலைப்புகளில் மறைமலையடிகள் ஆய்வுகள் நிகழ்த்தியுள்ளார் ... 1948.

25) ''திருவாசக விரிவுரை'' (பக்கம் 30; விலை ரூ. 10.00; கழகம்).

26) ''சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்''.

27. ''தமிழர் மதம்'' தமிழர் சடங்குகளில் பழையன எவை, புகுந்தன எவை என்று அடிகள் ஆராய்ந்து தெளிவு படுத்துகிறார்.

28. சைவ சித்தாந்த ஞானபோதம் 1906
(ஆசிரியர் : மறைமலையடிகள்.)

மறைமலையடிகளின் ''சைவ சித்தாந்த ஞான போதத்''தைப் படித்தால் சைவத்தின் பெருமை, உருவவழிபாடு ஏன், சிவலிங்க தத்துவம், நடராஜத் தத்துவம் முதலான அடிப்படைச் செய்திகளைத் தெள்ளத் தெளிவாக ஐயம் திரிபறத் தெரிந்து கொள்ளலாம்.

சைவசமயமாட்சி : ''சைவ சமய மாட்சி'' என்ற பகுதியில் சிவனார்க்குப் பெயர் அமைந்த ஒன்றிலேயே சைவத்தின் பெருமை புலனாகிறது என்கிறார் அடிகளார். உயிர்களின் நாட்டம் இன்பம் என்பதும், பிற சமயக் கடவுளர் பெயர்கள் எல்லாம் வல்லவர் என்ற பெயரினாலும், வேறு சில அவரை எங்கும் நிறைந்தவர் என்னும் பெயரினாலும், மற்றும் சில அவரை எல்லாத் தலைமையும்உடையவர் என்னும் பெயரினாலும், ஏனைச் சில அவரை எல்லாம் கடந்தவர் என்னும் பெயரினாலும், மற்றைச் சில அவரைப் பெரியதில் பெரியவர் என்னும் பெயரினாலும், இன்னும் சில அவரை ஒளியுருவினர் என்னும் பெயரினாலும், மற்றும் பலவற்றானும் வழங்குகின்றனவே ஒழிய அவரை இன்ப வடிவினர் என்று கூறவில்லை. துன்பத்தில் கிடந்து உழலும் உயிர்கள் பேரின்பத்தைப் பெறுதல் ஒன்றிலே மட்டும் கருத்துடையோம் ஆதலால், நமது கருத்துக்கும் நோக்கத்திற்கும் இணக்கமாய் வேண்டப்படாத மற்றத் தன்மைகளைப் பற்றி பேசி நமக்கு ஆவது என்ன? ஏனைய பெயர்களால் இறைவனை வழங்குதல் தவறில்லை என்றாலும் துன்பத்தைப் போக்கி இன்பத்தைத் தரும் இன்ப உருவினர்என்று அவரை வழங்குதலே நாம் கடைத்தேறுவதற்கு வழியாதலால் அப்பெயரிட்டு அழைத்தலே நமக்கு இன்றியமையாத கடமையாகும்.

சிவம் என்னும் சொல்லை வடமொழி என்று எடுப்பினும் தமிழ்மொழி என்றெடுப்பினும், அது மங்கலம்சுகம் பாக்கியம் பேரானந்தம் என்னும் இன்பப் பொருளையல்லாமல் வேறு பொருளைத் தரக்காண்கின்றிலேம்.

ஆத்திக மதக் கொள்கைகள் ஒன்றுக்கும் இணங்காத நாத்திக சமயிகளும்கூட ''எல்லையற்ற அன்பின் உருவே கடவுள்'' என்று மொழிந்தால் அதனை உடனே தழுவிக் கொள்வர். இதனைத் தெற்றென உணர்ந்தே மாணிக்கவாசகப் பெருமானும் திருமூல நாயனாரும் அங்ஙனம் கடவுளை ''ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடை அன்பே'' எனவும் ''அன்பே சிவமாவது'' எனவும் முறையே அருளிச் செய்தனர்.

இந்து சமய உண்மைகள் : இப்பகுதியில் பிற சமயக் கருத்துக்களை எல்லாம் எடுத்துரைத்து அவையனைத்தும் தழுவியிருப்பது சைவசமயம் என்கிறார் அடிகளார்.

உலகம் உள்பொருளாதல் சாருவாகத் தானும், அறிவும் சடமும் வேறுவேறாதல் பௌத்தத்தானும், உயிரும் இருவினையும் உளவாதல் சமணத்தானும், கடவுள் அருவ நிலையினராய் நிற்றல் மாயாவாதத் தானும், கடவுள் உருவத் திருமேனி உடையராதல் வைணவத்தானும் பெறப் படுகின்றன ஆகலின் இவை அனைத்தும் இந்து சமயப் பிரிவுகளாதற்கு இயைந்தன வேயாம்.

சமரச சன்மார்க்கம் : இறைவனது உண்மைப்பெருநிலையை இனிதுணர்ந்து, அவ்வுணர்ச்சி வலியால் இரக்கமும் அன்பும் அருளும் முதிருமாறு இவ்வுலகத் தின் கண் உள்ள எல்லா உயிர்களையும் இறைவற்கு இருப்பிடமாய்க் கண்டு பழகவே எல்லாரும் துன்பத்தின் நீங்கிப் போரின்பததில் வைகுவர். இதுதான் எத்திறத்தவரும் உடன் பட்டுத் தழுவுவதற் குரிய 'சமரச சன்மார்க்கம்' என்னும் முடிந்த பேருண்மை நெறியாம் என்க.

கடவுளுக்கு அருளுருவம் உண்டு : கடவுளின் உண்மை நிலையை நுணுகி ஆராயும்கால் அவர்க்கும் உருவம் உண்டென்பது புலனாகின்றது.

உருவம் மூன்று வகைப்படும்; அறிவில்லாத கல், மண், நீர், நெருப்பு முதலியவற்றின் கண் அமைவதூஉம், அறிவோடு கூடிய உயிர்களுக்கு இருப்பிடமான பலவகை உடம்புகளில் அமைவதூஉம், இவற்றிலெல்லாம் மேலதான அறிவின்கண் அமைவதூஉம் என மூன்றாம்.

அறிவில்லாப் பொருள்களில் அமைந்த உருவமானது அப்பொருள்கள் கலங்கலாய் நின்ற நிலையை விட்டு ஓர் ஒழுங்கு பட்டவிடத்தே உளதாவதாம். வடிவு தெரியாமல் நின்ற நீராவியானது குளிரால்

இறுகி நீராய் இறங்கும் போது வடிவுடைய தாகின்றது. நுண்ணிய அழல் உருவாயிருந்த ஆவியிலிருந்து இந்த நிலவுலகமும் ஞாயிற்று மண்டிலம் திங்கள் மண்டிலம் முதலியனவும் உருவாய்த் திரண்டு தோன்றிய பின்னர்த் தாம் அவை மக்களும் பல்லுயிர்களும் உயிர் வாழ்தற்கு இடமாய்ப் பயன்படுவனவாயின. இங்ஙனமே ஆவியாயிருந்த எல்லாப் பொருள்களும் உருவாய்த் திரண்டு வெளிப்பட்ட பின்னரே அவை பயன் பெரிதுடையவாதல் தேறற்பாற்று.

மக்கள் உடம்பில் அமைந்த கண் செவி முதலான உறுப்புக்கள் எத்துணை வியப்பான உருவ அமைப்போடு பொருந்தி மக்கள் அறிவு விளக்கத்திற்கு உதவியாய் நிற்கின்றன! இவ்வுருவ அமைப்புகளும், உடம்புகளும் இல்லாது ஒழியின் மக்கள் அறிவு நிலை என்னாம் என்பதனை நாம் எடுத்துச் சொல்லுதலும் வேண்டுமோ? கண்பழுதான குருடனும், காது கேளாத செவிடனும், வாய்பேசாத ஊமனும், கைகால் குறைந்த முடவனும் எவ்வளவோ அறிவு விளக்கத்தை இழந்து எவ்வளவு துன்புறுகின்றார்கள்! இதனால் உருவ அமைப்புகள் திருத்தமாய் முதிரமுதிர மக்கள் அறிவும் முதிரும் என்பதும் புலனாகின்றது அன்றோ?

இனி அறிவின்கண் அமைந்த உருவத்தின் மேன்மையும் ஒரு சிறிது ஆராய்தல் வேண்டும். தாயின் கருப்பையிலிருந்து பிறந்த மகவுக்கு உள்ள அறிவின் நிலைமையை நினைத்துப் பாருங்கள்! அதன் அறிவு எவ்வளவு மழுக்கம் அடைந்திருக்கின்றது! அங்ஙனமிருந்த அம்மகவு பசியால் உந்தப்பட்டுப் பால் பருகியும், அப்பாலைத் தரும் அன்னையை அறிந்தும், அதன்பின் தந்தையையும் உலகத்துப் பல பொருள்களையும் படிப்படியே அறிவதாகியும் சிறிது சிறிதாய் அறிவு விளங்கப் பெறுகின்றது. அங்ஙனம் அதன் அறிவு மழுங்கி இருந்த நிலைக்கும் விளங்கி வரும் நிலைக்கும் வேறுபாடு என்னையெனின்; அழுக்குப் படிந்த கண்ணாடியில் ஏதோர் உருவமும் தோன்றாது இருந்தமையே மழுங்கிய நிலையென்றும், இனி அஃது உலகத்துப் பொருள்களை அறிய அறிய அப்பொருள்களின் வடிவத்தோடு ஒத்த உருவம் அதன் அறிவின்கண் விளைதலின் அதுவே அதன் அறிவு விளங்கும் நிலையென்றும் பகுத்துணர்ந்து கொள்ளல் வேண்டும். எனவே, அறிவில் உருவங்கள் தோன்றாது இருந்த வரையில் அவ்வறிவு மழுங்கிக் கிடக்கும் என்பதும், அவ்வுருவங்கள் தோன்றத் தோன்ற அவ்வறிவு மிகுதியும் விளக்கம் உடையதாம் என்பதும் இது கொண்டு அறியற்பாலனவாம்; எவனுடைய அறிவு திருத்தமான உருவங்கள் மிகுதியும் உடையதாகின்றதோ அதுவே மிகச் சிறந்த அறிவாய்த் திகழ்கின்றது. ஆதலால் அறிவும் ஓர் ஒழுங்குபட்ட உருவமுடையதாய்த் திகழத் திகழ அதுவும் மிகச் சிறப்பெய்துமாறு உணரற்பாற்று.

இங்ஙனமாக அறிவில்லாப் பொருளும், அறிவுள்ள உயிரோடு கூடியஉடம்பும், மக்கள் அறிவும் உருவுடையன ஆகஆக நிரம்பவும் திருத்தமுற்றுப் பயன்படுதலும் விளக்கம் எய்துதலும் நமது வழக்கத்தில் மறுக்கப்படாத உண்மையாய் இனிது அறியப்படுதலின், உருவம் பெற்றிருத்தல் குற்றமாம் என்று கூறுவது பொருந்தா உரையாம். அறிவுப் பொருளிலும் அறிவில்லாப் பொருளிலும் காணப்படும் உருவங்களே குற்றம் இல்லாதனவாய்ப் பயன்மிக உடையனவாய் விளங்குமாயின் பேரறிவுப் பொருளாய் எல்லாம் வல்லதாய் உள்ள கடவுளிடத்தே காணப்படும் உருவம் குற்றம் உடையது ஆகுமோ? இனி அறிவில்லாப் பொருள்களில் காணப்படும் உருவங்களைக் காட்டினும் அறிவுள்ள உயிரோடு சேர்ந்த உடம்புகளில் காணப்படும் உருவங்கள் சிறந்தனவாய் இருத்தல் போலவும், உடம்புகளில் காணப்படும் உருவங்களைக் காட்டினும் உயிர்களின் அறிவிற் காணப்படும் உருவங்கள் மிகச் சிறந்தனவாய் இருத்தல் போலவும் பேரறிவுப் பிழம்பான இறைவனிடத்தே காணப்படும் உருவங்கள் மிகமிகச் சிறந்தனவாய் இருக்கும் என்பதை யாம் உரைத்தலும் வேண்டுமோ?

எ. திருவுருவ வழிபாடு : காண்பதற்கெல்லாம் அப்பாலாய்க் கேட்பதற்

கெல்லாம் அப்புறமாய், உரையளவு சென்று முடிவிடங் கடந்ததாய், மன உணர்வு சென்று பற்றுதற்கு ஏலாததாய், அறிவினுள் அறிவாய், உயிரினுள் உள்ளுயிராய், எல்லா உலகங்களும் எல்லா உயிர்களும் தனது அருள் வெளிப்பரப்பின் கண்ணே மடங்கி அடங்கிக் கிடப்ப அவற்றின் மேல் விரிந்து சென்று முடிவிடம் அறியப்படாத பெரும் பரப்புடையதாய், அறிவும் இன்பமுமாய் வடிவ உண்மைப் பொருளாய், எல்லா ஆற்றலும் உடையதாய்ப் பேரின்பம் நிரம்பித் ததும்பும் பெரும் கடலாய்ப் பேரருட் களஞ்சியமாய் விளங்கும் முழுமுதற் கடவுளைச் சிறுகிய அறிவும் சிறுகிய தொழிலும் சிறுகியறிந்த தனையும் மறந்து மறந்தறிதலும் மயங்கி அறிதலுமுடைய சிற்றுயிர்கள் உணர்ந்து வழிபடுதல் கூடாமையால், அருட்பெருங் கடலாகிய அவ்விறைவன் தன்னை அவ்வுயிர்கள் உணர்ந்து வழிபட்டு உய்யும் பொருட்டு ஓரோரு காலங்களில் ஓரொரு இடங்களில் ஓரோர் அன்பர்க்குக் கன்றை நினைந்து வரும்புனிற்றாப் போலவும், விறகின்கண் பிறந்த தீப்போலவும், மோரின்கண் திரண்ட வெண்ணெய் போலவும், வித்தின்கண் பிழிந்தெடுத்த எண்ணெய் போலவும் வெளிப்பட்டு அவர்க்கு அருள் செய்த அருட்டிரு கோலங்களை மெய்யன்புடையராகி மன ஒருமைப்பாடு கொண்டு நினைந்து நாவுரை குழறக் கண்ணீரும் கம்பலையும் தங்குறிப்பின்றியே நிகழ வழிபட்டுச் சிற்றறிவுத் தன்மை விட்டு சிவவறிவுத் தன்மை பெற்று நலமுறுதற்கு வாயிலான நன்முறைதான் திருவுருவவழிபாடு ஆகும்.

ரோம், கிரீசு, எகிப்து முதலிய நாடுகளில் உள்ளவர்கள் செய்யும் விக்கிரக ஆராதனை போல்வதன்றி இந்நாவலந் தீவின்கண் உள்ள நன்மக்கள் செய்து போதரும் திருவுருவ வழிபாடு, ஆழ்ந்த கருத்துடையதாய் முதல்வன் ஓரோர் அன்பர் பொருட்டு ஓரோரு காலங்களில் மேற்கொண்டு வந்த அருட்டிருவுருவ வழிபாடாகலின், அது மெய்யன்புடையார் மெய்ம்மையான் வழிபடுதற்குரிய மேம்பாடு உடைத்தாம். பிற நாடுகளில் உள்ள மக்கள் இறைவன் அங்ஙனம் திருமேனி கொண்டு அருள் செய்யும் திருக்கோலங்களை ஒரு காலத்தும் கண்டு அறியாமையின் அவர் தாம் தாம் அறிந்தவாறே ஒவ்வொரு சித்திரப் பாவைகளை அமைத்துக் கொண்டும், பூனை, பாம்பு, சுண்டெலி, முதலை முதலிய உயிர்களின் வடிவங்களை நிறுத்திக் கொண்டும் வழிபட்டு அவ் அறிவில் உருவப் பொருள்களின்கண் அன்புடையராய் இறைவனை அறிந்து வழிபடுதற்குரிய நல்வினையாளராய் வாழுவார் ஆயினர். அப்பிற நாடுகளினும் ஒவ்வொரு காலங்களில் அபரஞானப் பேறு கைவந்தவர்களாகிய தீர்க்கதரிசிமார் சிலர் தோன்றி தமக்கு அவ்விறைவன் வான் முகிலில் மறைந்து நின்று அருள் செய்தனன் என்றும், அடவிகளிலும் மலைக்குகைகளிலும் தாம் இயங்கிக் கொண்டிருந்த காலங்களில் இறைவன் தம்மோடு உரையாடிய ஞானஒலி கேட்டாரென்றும் அவர் சமய நூல்களில் சொல்லப்பட்டதன்றி, அவ்விறைவனே உருவம் கொண்டு அவர் கண்ணெதிரே தோன்றி அருள் செய்தான் என்றும் அவ்வாறு அருள் செய்த முதல்வன் திருவடையாளங்கள் இவை என்றும் குறிப்பிடப்படாமையான் அவரெல்லாம் இறைவன்றன் அருட்கோலங்களைக் கண்டு வழிபடும் முறைமை அறியார் ஆயினர். அங்ஙனம் அறியமாட்டாத அபர ஞான தீர்க்கதரிசிமார் கூறிய அறிவுரைகளைக் கடைப்பிடித்து ஒழுகிய மக்கள் அவர் கூறிய நன்னெறிப் பொருள்களை மனம் பொருந்த அமைத்து அவற்றின் வழிநடந்து, இறைவனை உண்மையான ஒரு திருவுருவத்தின் வைத்து வழிபடும் முறைமை தமக்கு விளங்காமையால் தமக்கு விளங்கியவாறெல்லாம் வேறு பிற உருவங்களை அவ்விறைவன் அருளுருவங்களாகப் பிறழக் கொண்டு அவை தம்மையே வழிபடுகின்றனர். இனி நாவலந் தீவினராகிய நன்மக்களோ இறைவன் ஒவ்வோர் அன்பர் பொருட்டு ஒவ்வொரு காலங்களில் கொண்ட அருட்கோலங்களாகிய சதாசிவன், மகேசுரன், அம்மையப்பர், காளி, துர்க்கை, உமை, பிள்ளையார், முருகன், வைரவன் முதலியவற்றையே உண்மையான் வழிபடுகின்றனர்.

அங்ஙனம் வழிபடப்படுவனவாகிய அருட்கோலங்கள் தாமும் மெய்யன்புடையார்க்கன்றி ஏனையோர்க்கு எளிய வந்து விளங்குவன அல்லவாகலான் அவை வெளி வந்து அருள் செய்யப் பெற்ற மெய்யன்பர் தாம் கண்டவாறே அவ்வருட்கோல அடையாளங்களை அன்பு ததும்பி வழிய அறிவுவடிவாய் விளங்கும் தம் திருமொழிகளால் வகுத்துக் கூறிய முறை பற்றி மக்கள் எல்லாரும் தாமும் உய்யும் நெறி தேடல் வேண்டிக் கல்லினாலும் செம்பினாலும் திருவுருவங்கள் அமைத்து அவற்றை மறைபொருள் நுட்பங்களோடு கட்டப்பட்ட திருக்கோயில்களில் எழுந்தருளச் செய்து வழிபாடாற்றி வருகின்றனர்.

இவ்வாறு இவர் வழிபடும் போதெல்லாம், கல்லினாலும் செம்பினாலும் அமைக்கப்பட்ட பல்பொருள் வடிவான அத்திருவுருவங்கள், அவ் அடையாளங்களை உடைய அறிவுப் பொருள் வடிவான அருட்கோலங்களை நினைவூட்டி, அவ்வருட்கோல வழி பாட்டின்கண் அவர் அறிவைப் பதியச் செய்து அவருக்கு உறுதி தருதலான் அது திருவுருவ வழிபாடு என்று வழங்கப் படுகிறது.

இனிப் பிறநாடுகளில் உள்ள மக்களுக்கு உருவ அருட்கோலம் கொண்டு இறைவன் அருள் செய்ததில்லை ஆதலால் அவர் தமக்குத் தோன்றியவாறெல்லாம் கற்பித்துக் கொண்ட பருப்பொருள் வடிவங்கள் தம்மை முதலாக உடைய அறிவுப் பொருள் உருவ அருட்கோலங்களை அவர்க்கு நினைவில் எழுப்பவும் அவரறிவை அவற்றின்கண் பதியுமாறு செய்யவும் மாட்டாது ஒழியும். ஒழியவே, அவர் கல்லானும் செம்பானும் இயற்றிய வடிவங்களில் செய்யும் வழிபாடெல்லாம் அவ்வடிவங்களைக் கடந்து அறிவுருவ இறைவன் அருட்கோலத்தின் கண்செல்லாவாய் மடங்கி அப்பருப் பொருள் வடிவங்களின் கண்ணேயே செல்லுதலால் அவை விக்கிரகாராதனை என்று வழங்கப் படுகின்றன.

இதுபற்றியன்றே மாக்ஸ்மூலர் ''நாவலந் தீவினரால் தழுவப்படும் விக்கிரகாராதனையும் வேறே, ரோம் முதலிய நாடுகளில் தழுவப்படும் விக்கிரகாராதனையும் வேறே, முன்னையதில் கடவுளின் உடம்புகளாக விக்கிரகங்கள் வணங்கப்படுகின்றன. பின்னையதில் விக்கிரகங்களே அவ்வாறு வணங்கப் படுகின்றன; இங்ஙன மாயின் இந்து மக்களை நாம் குறை கூறுதல் என்னை?''

இறைவன் அருட்கோலம் தாங்கி வெளிப்படுங்கால் தன் பரப்பு முழுமையும் சுருக்கிக் கொண்டு போதருவானல்லன்; கன்றுஈன்ற புனிற்றாவின் புனித உடம்பெங்கும் நிறைந்த நுண் அமிழ்தம் தீஞ்சுவைப் பாலாய் மடியினின்றும் பொழியுமாறு போலவும், விரிதிரைக் கடலில் குளிர்மிகும் ஓரோவிடங்கள் பனிக்கட்டிகளாய் உறைந்து கிடக்குமாறு போலவும் யாண்டும் விரிந்த இறைவன் திருவருள் மெய்யன்பர் பொருட்டு ஓரோவிடங்களின் முனைந்து உருவாக, அதன் கண்ணேயிருந்து முதல்வன் அருள் புரிவான் என்று உணர்க.

இறைவன் கொள்ளும் உருவத் திருமேனிக்கும் நம்மனோர் எடுக்கும் பருவுடம்பிற்கும் வேறுபாடு என்னையெனின், நம்மனோர் உடம்புகள் எல்லாம் வினைவழிப்பட்டுப் பிறரால் படைக்கப்படும் வரையறைப் பொருளாய் நிலையுதலின்றி அழிவுபாடு எய்தும் இயல்பினவாம்; இறைவனுடைய திருமேனியோ அருளே வடிவாய் அவன் நினைந்தாங்குத் திரண்டெழூஉம் திருஉருவாம்; இறைவனது அருட்டிருமேனி அவன்றன் பெரும்பரப்பு முழுவதூஉம் தொடர்புற்று ஒருவாற்றால் சிறிதாதலும் ஒருவாற்றால் பெரிதாதலும் உடையதாம். யாங்ஙனம், எனின்; நெடுங்கடற்பரப்பில் ஆங்காங்கு உறைந்த பனித் துண்டங்கள் அக்கடல் நீரோடு இயைபுடையவாமாறு போல என்க.

பருப்பொருள் வடிவாய் விளங்கும் இவ்வுலகத்தின் இயல்பே அறியமாட்டாத சிற்றறிவினராகிய நாம் மனமொழிகளுக்கு எட்டாது விளங்கும் இறைவன் தன் திருக்கோல இயல்பை அறியுமாறு யாங்ஙனம்? மின்னாற்றல் இன்னது என்று அறிந்துள்ளோம். அதன் உண்மை இயல்பு இன்னதென்று அறியேம்; விசும்பு என்பது

ஒன்று உண்டென்பது அறிவோம். அதன் உண்மை இன்னதென அறியமாட்டோம்; இரும்பைக் காந்தம் இழுப்பது கண்டு காந்தக் கல்லின் ஆற்றலை அறிவோம். அவ்வாற்றலின் உண்மைத் தன்மை இன்னதென்று அறியும் ஆற்றல் உடையோம் அல்லோம்; இவ்வாறே உருவருவாய் உள்ள மண்புனல் அனல் கால் முதலிய பொருள்களின் உண்மை இன்னது என்று அறிய மாட்டாத சிற்றறிவினராகிய நம்மனோர் இறைவன் இயல்பை உணர்வேம் என்றல் குழறுபாடாய் முடியும். ஆழ்கடல் நீரில் ஆழவமுக்கு முகந்தாலும் நாழி நால்நாழி தண்ணீரை முகவாது, நாழித் தண்ணீரையே முகக்கும்; அந்த நாழிபோல் சிறிதான உயிரின் உணர்வு கடல்போல் பரந்த இறைவன் இயல்பை யாங்ஙனம் அளந்தறியும்? ஆகலின், உயிரினறிவு விரியும் துணையே இறைவன் அருட்கோல இயல்பு விளங்குதலல்லாது மேற்சிறிதும் விளங்காது என்றுணர்க.

இனி வழிபாடு என்பதுதான் யாது? மனமுதலிய பல்பொருட் கருவிகள் எல்லாம் புறப்பொருளில் சென்று பதிந்து விரியாது மடங்கி இறைவன்றன் அருட்டிரு உருவின்கண் சென்று பதிந்து உயிரை இறைவன் மாட்டு ஒருமை உறுத்துவதாம் அன்றோ? அறிபொருளான இரண்டு ஒருங்கு சேர்ந்து ஒருமையுறுதற்கு இடைநின்று கூட்டுவிப்பன பல்பொருட் கருவிகளும் அவற்றை உடைய உடம்பும் அல்லவோ? என்னை? இன்ப வடிவான அருட்கோலத்தைக் காண்டலும் அதன் கண்ணே மனவுணர்வு சென்று பற்றும், பற்றுதலும் அக்கோலத்தின் கண் நிறைந்த இறைவன் மாட்டு உயிர் ஒன்றி ஒன்றாமாதலின்.

இன்பம் தோன்றுதற்கு இருபொருட் சேர்க்கை இன்றியமையதாகலானும், அச்சேர்க்கைதானும் இருவகை உடம்புகளையே நிலைக்களனாகக் கொண்டு நிகழ்தலானும் இறைவனை வழிபட்டு அவனை ஒன்றியைந்து இன்ப நுகர்கின்ற உயிருக்கு ஒருடம்பும் அங்ஙனம் தொழப்படும் முதல்வனுக்கு ஓர் உடம்பும் வேண்டும் என்பது சொல்லாமே அமையும்.

குழவிப்பருவம் தொட்டு முதுமைப் பருவம் காணும் உலகியற் புறப்பொருளோடு மனவுணர்வு ஒற்றுமையுறுகின்ற நெறியானே மக்கள் எல்லாரும் அறிவு விளக்கமும் நாகரிக வளர்ச்சியும் எய்தி வருகின்றார். ஆதலான், மக்கள் மன உணர்வு எக்காலத்தும் உலகியற் புறப் பொருள் ஒன்றனைப் பற்றியே நிற்கு மல்லது, தானே வேறு பிரிந்து தனித்து நிற்கும் தனி முதல் அன்றாம். மனஉணர்வு ஒன்றையும் பற்றாவாறு வேறு பிரித்துத் தனியே ஒருவழி நிறுத்துவேம் என்பாருரை வெறும் சொல்லளவேயன்றி அஃது அவர் கூறுமாறு அடங்கும் இயல்பிற்றன்று.

இத்தகைய மனவுணர்வின் பெற்றி தேறாது யாம் அருவமாகக் கொண்டு இறைவனை வழிபடமாட்டுவேம் என்பார் என் கடவர் என்க. அவர் இருவிழியினையும் மூடிக்கொண்டு வானத்தை நோக்கி நிற்பாராயினும் அவர் மனவுணர்வும் அங்ஙனம் நில்லாது; மற்றைத் தேயத்திலிருக்கும் அவர் மனைவியை நாடிச் செல்லும்; மைந்தரை நாடிச் செல்லும், பிறரை நாடிச் செல்லும்.

இங்ஙனம் உலகியற் பொருள்களைப் பற்றியன்றி மனவுணர்வு நில்லாமையானும், அம்மன உணர்வும் ஒப்புமைப் பற்றியன்றிப் பெருகாமையானும் இறைவனை உருவத்திருமேனியிற் கொண்டு வழிபடும் முறையே உண்மையாம்.

அ. சிவலிங்க உண்மை : 'சிவம்' என்பது முழுமுதற் கடவுளை உணர்த்தும் சிறப்புப் பெயராகும்; 'லிங்கம்' என்பது அக்கடவுளின் உண்மைத் தன்மையை அறிவிக்கும் குறி அல்லது அடையாளத்தைக் காட்டுவது ஆகும்.

நம்முடைய அறிவினால் அறியப்படும் பொருள்கள் எல்லாம் நிலன், நீர், நெருப்பு, காற்று, விசும்பு என்னும் ஐந்து பெரும் பகுப்பில் அடங்கி நிற்கின்றன.

நிலன், நீர் : கடவுள் ஒளிவடிவினராய்த் திகழா நிற்க, நிலனும் நீரும் ஒளி வடிவினவாய்த் திகழக் காணோம். கடவுள் என்றும் தூயராயிருக்க, நிலனும் நீரும் தூய்மை கெட்டு அழுக்குற்று நிற்கவும்

காண்கின்றோம். கடவுள் அருவும் உருவும் அருவுருவும் என்னும் மூன்று தன்மையிலும் நிற்பவராக, நிலனும் நீரும் பற்றுதற்கு எளிய உருவாகவே நிற்கின்றன. கடவுள் ஆண்டன்மை பெண்டன்மைகள் ஒருங்குடையராய் இருக்க, நிலம் அத்தன்மைகள் இலவாயும் நீர் பெண்டன்மை ஒன்றே உளதாயும் நிற்பக் காண்டும் கடவுள் வெப்ப தட்பங்களும் செம்மை நீலங்களும் உடையராயிருக்க, நிலம் தன்னியற்கையாகவே அவை தம்மை உடையது அன்றாயும் நீர் தட்பமும் நீலமுமே உடையதாயும் காணப்படுகின்றன.

வான், காற்று : இனி, வானும் காற்றும் உற்று நோக்குவோமாயின், அவையும் ஒளியும் உருவும் வெப்ப தட்பங்களும் பிறவும் இல்லாதவையாயிருக்கின்றன. காற்றின் கண் புலனாகும் வெப்ப தட்பங்கள் தீ நீர் என்பவற்றின் சேர்க்கை யால் உண்டாவனவே அன்றி, அவை தமக்கு இயற்கையிலேயே உரியன அல்ல.

தீ : எல்லாம் வல்ல இறைவன் அருள் ஒளி வடிவினனாய்த் திகழ்தல் போலவே தீயும் பொருளொளி வடிவினதாய்த் திகழா நிற்கின்றது. இறைவன்றன் அருளொளிக்கு முன் ஆணவ வல்லிருள் இருந்த இடமும் தெரியாமல் மறைதல் போலவே, தீயொளிக்கு முன்னும் உலகிருள் சுவடு தெரியாமல் மறைந்து போகின்றது. இறைவனிடத்துள்ள தூய தன்மையானது எத்தகைய அழுக்கையும் தூயதாக்கித் தானும் எஞ்ஞான்றும் தூய இயல்பிற்றாய் விளங்குதல் போலவே, தீயும் எத்துணைப் பெரிய அழுக்கின் குவியலையும் எரித்துத் தூய சாம்பலாக்கித் தானும் எந்நாளும் தூயதாகவே விளங்கா நிற்கின்றது. இறைவன் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களைச் செய்தல் போலவே, கதிரவனாகிய தீயின் வெம்மையும் எல்லா உயிர்ப்பொருள்களையும் தோற்றுவித்து அவற்றைச் சிலகாலம் வரையில் காத்து அவற்றின் உடம்புகள் வலிதேய்ந்து பழுதுபட்டவழி அவை தம்மை அழித்து விடுகின்றது.

இறைவன் எங்கும் நிறைந்து நிற்கும் நிலையில் கட்புலனாகா அருவினனாய் இருத்தல் போலவே, தீயும் எல்லாப் பொருட்களிலும் மறைந்து நிறைந்து நிற்கும் நிலையில் கட்புலனாக அருவ இயல்பிற்றாய் நிற்கின்றது. இறைவன் தன்னைப் பேரன்பால் நினைந்து குழைந்துருகும் அடியார்க்கு அவர்தம் கண்ணெதிரே எழில் கனிந்த பழுதறும் உருவில் தோன்றி அருள் செய்தல் போலவே, தீயும் தன்னை இன்றியமையாது வேண்டி நிற்கும் மக்களின் கண்ணெதிரே சிவந்த ஒளிவடிவினதாய்த் தோன்றி நிற்கின்றது. இறைவன் அருவுக்கும் உருவுக்கும் இடைப்பட்ட பிழம்பு வடிவம் உடையராதல் போலவே, தீயும் கட்புலனாகா அருவுக்கும் கட்புலனாகும் மக்கள் உருவுக்கும் இடைப்பட்டதாகிய பிழம்பு வடிவம் உடையதாய் இருக்கின்றது. இனி எல்லாம் வல்ல முதல்வன் அப்பனும் அம்மையுமாயும், ஆண்டன்மைக்கு ஏற்ற வன்மையும் பெண்டன்மைக்கு ஏற்ற மென்மையும் சிவப்பு நீலங்களும் உடையனாயும் இருத்தல் போலவே, தீயும் தன்கண் சூடும் குளிர்ச்சியுமாம் ஆண்டன்மை பெண்டன்மைகளும் சிவப்பு நீலநிற நிறங்களும் உடையதாய்த் துலங்கா நிற்கின்றது.

இறைவன் எல்லாப் பொருள்களிலும் எங்கும் நிறைந்து நிற்பினும், தன்னியல்போடு ஒருங்கொத்த தீப்பிழம்பின் கண்ணே இயற்கையாகவே தோன்று கின்றான். ஆதலால், அனற்பிழம்பு ஒன்றுமே இறைவனது விளங்கிய இருப்புக்கு இசைந்த தூய உடம்பாகும்.

இங்ஙனம் தன்னியல்புகளோடு பெரும்பாலும் ஒத்த தீப்பிழம்பின் கண்ணே விளங்கித் தோன்றி நமக்கு அணுக்கனாய் நிற்கின்றனன் ஆகலின், இத்தீப்பிழம்பே எல்லாம் வல்ல சிவனை அறிந்து வழிபடுதற்குச் சிறந்த 'இலிங்கம்' அல்லது 'குறி' அல்லது 'அடையாளம்' ஆமென்றுணர்தல் வேண்டும். இறைவனைக் காட்டும் மெய்க்குறியாய் இருத்தல் பற்றியே தீப்பிழம்பு 'சிவலிங்கம்' எனப்படுவதாயிற்று.

உலகமும், உடம்பும் : வடிவத்தால் பெரிது சிறிதாய் இருப்பினும், உலகத்தில் உள்ள அமைப்புகள் உடம்பிலும் உடம்பில் உள்ள அமைப்புகள் உலகத்திலும் காணப்படுகின்றன. உலகத்தில் வான், வளி, தீ, நீர், மண் என்னும் ஐம்பெரும் பொருள்கள் இருத்தல் போலவே, உடம்பிலும் வெளியும் மூச்சும் சூடும் செந்நீரும் எலும்பு தோல் நரம்பு தசை, முதலான மண்ணின் கூறுகளும் அமைந்திருக்கின்றன. உலகில் மலைகளும் மரங்கள் அடர்ந்த காடுகளும் இருத்தல் போலவே, உடம்பில் என்புகளும் மயிர் தொகுதிகளும் அமைந்திருக்கின்றன. உலகில் பொன் வெள்ளி இரும்பு ஈயம் கந்தகம் முதலான முதற்பொருள்கள் ஆங்காங்கு உளவாதல் போலவே, உடம்பிலும் பொன் வெள்ளி இரும்பு ஈயம் கந்தகம் முதலான முதற்பொருள்கள் பொருந்தியுள்ளன. உலகில் கடல்களும் ஆறுகளும் அமைந்திருத்தல் போலவே, உடம்பில் தீனிப்பை குண்டிக்காய் முதலான நீர்நிலைகளும், குருதியோடும் நரம்புக் குழாய்களும் அமைந்திருக்கின்றன. உலகில் ஞாயிறு திங்கள் தீயென்னும் முச்சுடர்கள் காணப்படுதல் போலவே, உடம்பில் வலக்கண் இடக்கண்ணும் புருவத்திற்கு நடுவே நெற்றிக்கண்ணும் காணப்படு கின்றன. உலகில் அனல் காற்றும் குளிர் காற்றும் வீசுதல் போலவே, உடம்பின் வலது மூக்கில் அனல்வளியும் இடது மூக்கில் குளிர் வளியும் வீசுகின்றன. உலகம் எங்கும் வான் வெளி பரந்திருத்தல் போலவே, உடம்பெங்கும் வான்வெளி பரந்திருக்கின்றது. இவ்வாற்றான் உலகினைப் பேருலகு என்றும், உடம்பினைச் சிற்றுலகு என்றும் கூறுதல் இழுக்கு ஆகாது.

நெஞ்சத் தாமரையில் திருக்கூத்து : விழிப்பின்கண் மூளையில் முளைத்து நின்ற உயிர் உறக்கத்தின்கண் நெஞ்சப் பையினுட் சென்று அடங்கிவிட, அதனை அங்கே சில நாழிகை நேரம் இளைப்பாற அடக்கி வைத்து அவ்விளைப்புத் தீர்ந்த வுடன் அதனை ஆண்டு நின்றும் மேல் எழுப்பி விடும் இறைவனது அருட்பெருஞ் செயல் நெஞ்சத் தாமரையினுள்ளே தான் ஓவாது நடைபெறுகின்றது.

தில்லைச் சிற்றம்பலம் : இந்நிலவுருண்டையின் ஒரு பாதியில் இவ்விந்திய நாடு நடுவே அமைந்து இருத்தலும், இத்தென்றமிழ்நாடு அதில் ஒரு தாமரை முகைவடிவாய்த் தொங்கிக் கொண்டிருந்தாலும், அத்தாமரை முகையின் உள்ளே தில்லைச் சிற்றம்பலம் திகழ்ந்து கொண்டிருத்தலும் கண்கூடாய்க் காணக்கிடக்கும். எனவே, நமது உடம்பின் அகத்தே நெஞ்சத் தாமரையினுள் நுண்ணிய வெளியிலே அஃதாவது சிற்றம்பலத்திலே இறைவனது அருளொளி முனைந்து விளங்கி இயங்கும் இயக்கத்தால் நம்முடம்பும் உயிரும் இயக்கப்படுதல் போலவே, இவ்வுலகின் புறத்தேயும் தாமரை முகிழ்வடிவாய் அமைந்த இத்தென்றமிழ் நாட்டில் தில்லைச் சிற்றம்பலமாகிய நுண்வெளியிலே இறைவனது அருளொளி அசைவாகிய திருக்கூத்து நடைபெற்று இவ்வுலகினை இயக்கா நிற்கின்றது.

அமெரிக்காவிலும் திருக்கூத்து : இதேபோல இந்நிலவுலகின் மறுபாதியில் நெஞ்சத் தாமரையென விளங்கும் நடு அமெரிக்காவின் (மெக்சிகோ, பேரு என்னும் நாடுகளில் ஏழாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே பழைய சிவபிரான் திருக்கோயில்கள் உண்டு) ஒரு பழம்பெரும் திருக்கோயிலின் பொன்னம்பலத்தேயும் இறைவன் தன் திருக்கூத்து நடைபெறுகின்றது.

உடம்பே ஆலயம் : கால்கள் இரண்டும் கோபுரங்கள் ஆகும்; அக்கால்களில் இடைவழியே கோபுரங்களின் வாயிலாகும்; அக்காலிரண்டன் ஊடே சென்று எருவாய் கருவாய்க்கிடையேயுள்ள மூலத்தில் சென்று சேர்வதே கோபுர வாயிலினூடே சென்று மூத்த பிள்ளையாராகிய யானை முகக் கடவுளின் இருக்கையைச் சென்று சேர்வதாகும்; மூலத்தே பாம்பு சுருண்டாற்போல் இருக்கும் குண்டலி உருவினை வணங்குவதே, அம்முதலிருக்கையில் ஓங்கார வடிவாய் அமர்ந்திருக்கும் பிள்ளையாரை வணங்குவது ஆகும்; அம்மூல குண்டலியை எழுப்பி அதனுடன் சென்று, கொப்பூழ்க்குக் கீழே மிக நுண்ணிய ஒலிகள் மயில் முட்டையுள் பல நிற நீர்போல்

நிற்கும் கீழ்வயிற்றினுட் சேர்ந்து, ஆண்டுள்ள இறைவனை இறைஞ்சுவதே, அப்பிள்ளையார் இருக்கையைக் கடந்து சென்று பன்னிற மயில் மேல் அமர்ந்திருக்கும் முருகப் பிரான் இருக்கையை அடைந்து அவனை வணங்குவது ஆகும். அக்கொப்பூழின் கீழ்வயிற்றினை அந் நுண்ணிய ஒலியுடன் கடந்து மேலேறி மேல் வயிற்றினுட் சென்று ஆண்டுத்தன் இருவகைச் செருக்கினையும் ஒழித்து இறைவன் திருவருள் கீழ்நிற்றலே, அம் முருகப்பிரான் இருக்கையைக் கடந்து பலிமேடையின் அடிக்கீழ் விழுந்து வணங்குவது ஆகும்; இனி, அம்மேல் வயிற்றினையும் கடந்து மேலேறி நெஞ்சத் தாமரையில் சென்று சேர்வதே, பலிமேடையைக் கடந்து எருது வடிவாய் அமர்ந்திருக்கும் நந்தியைச் சேர்வது ஆகும்; நெஞ்சத் தாமரை முகிழ் இறைவற்கு இருப்பிடம் ஆகலின், அதுபோல் இறைவற்கு ஊர்தியாகிய நந்தியை வணங்கிக் கொண்டு மிடற்றினூடே செல்வது போல், இறைவன் எழுந்தருளியிருக்கும் கருவறை வாயிலினூடே நுழைந்து, புருவ நடுவிற்கு நேரே தலையின் நடுவானதான சிற்றறையினுட் சென்றடைதல் போல் அக்கருவறை நடுவில் சேர்ந்து அத்தலைநடுச் சிற்றறையினுள் விளங்கா நின்ற ஒளியுருவில் சிவபிரானை வழிபடுதல் போல் அக்கோயிற் கருவறையில் அவ்வொளிப் பிழம்பின் அடையாளமாக நிறுத்தப் பட்டிருக்கும் அருட்குறியை வணங்கி வழிபட்டு நிற்றலாகும் என்க.

தீ வழிபாடு : பண்டை மக்களில் அகக்கண் திறக்கப் பெற்றுப் பேரறிவுடையராய் விளங்கிய சான்றோர்களும் அவர்களைச் சூழ்ந்திருந்த அம்மக்களும் மலைகளையே இருப்பிடமாகக் கொண்டு உயிர் வாழ்ந்தார்கள் ஆதலின், அவர்கள் தாமிருந்த மலைகளின் முகடுகள் மேல் சென்று அங்கிருந்த படியே பகற் காலத்தில் கதிரவனையும் இராக்காலத்தில் நிலவோனையும் நிலவோனும் இல்லாத இராக்காலத்தில் தீயினையும் வணங்கி வரலானார்கள்.

அத்துணைப் பழைய காலத்திற்குப்பின், மலை மீதுறைந்த மக்களில் பெரும்பாலோர் கீழிறங்கி, ஆற்றோரங்களிலும் ஏரியோரங்களிலும் குடியேறி உயிர் வாழத் துவங்கியபின், தாம் முன்னர் மலைமேல் செய்து போந்த அனல் வழிபாட்டை மரச் செறிவுகளின் கீழ்ச்செய்து வரலாயினர். நாளேற நாளேறப் பகலவனிலும் நிலவோனிலும் இறைவனை வைத்து வணங்கும் வணக்கத்தை மெல்ல மெல்லக் கை நெகிழ விட்டுத் தீவடிவில் வைத்து இறைவனை வணங்கும் முறை யினையே மிகுதியாய்க் கடைப்பிடிக்க லாயினர்.

இடைக்காலத்துச் சான்றோர்கள் இறைவனை நெருப்புருவில் வைத்து வழிபடுதலையே பெரும்பான்மையாய்க் கைப்பற்றி ஒழுகலாயினர். அதனால், அவர்கள் குடியேறி வைகிய இடங்களில் செறிந்த சோலைகள், இளம் மரக்காக்கள், தோட்டங்கள், தோப்புகள், பொழில்களில் எல்லாம் மரங்களின் கீழ்க் குழிகள் அகழ்ந்து அவற்றின் கண் எரியோம்பி இறைவனை வழுத்துதலும் வாழ்த்துதலும் மேற்கொண்டனர்.

ஆரியர் வேள்வி : இவ்வாறு இவ்விந்திய நாட்டில் வடக்கே இமய மலை முதல் தெற்கே பொதியமலை வரையிலிருந்த தமிழ் மக்கள் எல்லாம் முத்தீயோம்பி இறைவனை வழிபட்டு வந்த பல நூற்றாண்டுகளுக்குப் பின்னே இந்திய நாட்டின் எல்லைக்கு புறம்பே ஆடுமாடு மேய்த்துக் கொண்டும் அவற்றின் ஊனைத் தின்று கொண்டும் வாழ்நாள் கழித்து வந்த ஆரியர், தென் தமிழ் நாட்டினுள் புகுந்து நிலைத்தனர். தமிழ் நாட்டில் தம்மை வரவேற்ற தமிழ் மக்கள் கல்வியிலும் ஏனைச் செல்வ வளங்களிலும் நிரம்பினவராய், முத்தீவேட்டு வருதலைக் கண்டு அவரினும் மிகுதியாய் அழலோம்புதலை மேற்கொண்டார். கொள்ளவே தம் ஆரியப் பிரிவினருக்குத் தலைவராய் இருந்து இறந்து பட்ட ‘இந்திரன்’, ‘வருணன்’, ‘மித்திரன்’, ‘அரியமான்’ முதலானவர் ஆவிகளை வழிபடுதல் நினைந்து, எரிவளர்த்து, ஆடு மாடு குதிரை முதலிய விலங்குகளை வெட்டி அவற்றின் ஊனையும் சோமப்பூண்டின் கள்ளினையும் அதன் முன்னே வைத்துப் படைத்துப் பின்னர் தாமும் தம்மினத்தவருமாக

அவற்றை அடுத்து அருந்திக் களித்து வந்தனர்.

தீவேட்டலே சிவலிங்கம் : உயிர்க் கொலைக்கும் வெறியாட்டுக்கும் இடனாக ஆரியரால் திரிபு படுத்தப்பட்ட தீவேட்டலையே முற்றும் ஒழிப்பான் வேண்டித் தீவளர்க்கும் குழிக்கு அறிகுறியாக ஒரு வட்டக்கல் வடிவும், அக்குழியில் வளர்க்கப்படும் தீயினுக்கு அறிகுறியாகக் குவிந்து நீண்டதொரு கல்வடிவும் வகுத்து அவை இரண்டனையும் ஒருங்கு பொருத்தி நிறுத்திய சிவலிங்கத்தின் எதிரே, முன்னே வேள்வியில் வெட்டக் கொணர்ந்த மாட்டினுக்கு அறிகுறியாக ஒரு நந்தி உருவினையும் அமைத்து, முன்னே அம் மாட்டினை வெட்டிய பலிமேடைக்கு அறிகுறியாக அந்நந்தியுருவின் பக்கத்தே ஒரு பலிபீடத்தினையும் எழுப்பிச் சிவபிரான் திருக்கோயில்களை ஆங்காங்கு எடுப்பிக்கலாயினர்.

மெய்ப்பொருள் : இவ்வாறு எடுப்பிக்கப் பட்ட அமைப்புக்கு மெய்ப்பொருளும் கூறலாயினர். இறைவன் திருவடையாளமே சிவலிங்கம்; இறைவனல்லாத சிற்றுயிரின் அடையாளம் நந்தி; அவ்வுயிரினால் கழிக்கப்பட்ட அறியாமையாகிய மலமே பலிபீடம்;

திருக்கோயிலில் இறைவனைத் தொழுதற்குச் செல்லும் ஒருவர் பலிபீடத்தினருகே சென்றதும் தமக்குள்ள யான் எனது என்னும் இரு வகைச் செருக்கினையும் வெட்டிப் பலியாகச் செலுத்துதற்கு அடையாளமாகவே அவர் அதன் பக்கத்தே நீளக் கிடந்து வணங்குதல் ஆகும். அங்ஙனம் வணங்கிய அவரது உயிர் அதனால் அவ் விருவகைச் செருக்கும் தீர்ந்து தூயதாகி இறைவனை நோக்கிச் செல்லும் அடையாளமாகவே பசுவின் வடிவினதான நந்தி சிவலிங்கத்தின் எதிரே நிறுத்தப் பட்டதாகும். சிவலிங்க வடிவு தூயஒளி உருவில் முனைத்து நிற்கும் சிவமாம் எனவும் அவ்வொளி உருவில் ஒன்றி இரண்டறக் கலக்கும் தூயவுயிர் அதில் கரைந்து கலக்குமாறு இதுவாம் எனவும் காட்டுதற் பொருட்டே, இறைவனைத் தொழப் போவார் முன்னிலையில் கருப்பூர ஒளிகாட்டும் முறையினைத் தமிழ்ச் சான்றோர் வகுக்கலாயினர். கருப்பூரம் இருவகைப் பற்றும் விட்டு இறைவனோடு ஒன்றி இரண்டறக் கலக்கப்போம் தூய உயிர்க்கு அஃது அடையாளமாயிற்று; அக்கருப்பூரத்தில் கரைத்துத் தனதாக்கும் நிலை, ஒளியுருவினனான இறைவன் அத்தூய உயிரைப் பற்றித் தனதாக்கும் நிகழ்ச்சிக்கு அடையாளம் ஆயிற்று.

பண்டை நாளில் ஆரியர் செய்து போந்த உயிர்க் கொலை வேள்வியை அடியொடு நிறுத்தித் திருக்கோயில் எடுப்பித்த தொல்லாசிரியர், முத்தீ வேட்ட வேள்விக் குழிக்கு அறிகுறியாகவே வட்டக்கல் வடிவும், அதில் வளர்த்த அனற்பிழம்புக்கு அறிகுறியாகவே அதுபோல் நீண்டு குவிந்ததொரு கல்வடிவம் வகுத்து, அவையிரண்டையும் பொருந்திய சிவலிங்கத்தின் எதிரே, முற்காலத்து ஆரிய வேள்விக் களத்தில் வெட்டுண்ட எருதுக்கு அறிகுறியாகவே எருது வடிவான நந்தியை நிறுத்தி, அவ்வெருது வெட்டுண்டு பலிமேடைக்கு அறிகுறியாகவே அதனை ஒத்த பலி பீடத்தை எழுப்பிச் சிவபிரான் திருக்கோயில் அமைத்தனர்.

29. மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் முதற் பகுதி 1930

(ஆசிரியர் : – மறைமலையடிகள் : வெளியீடு – திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை : இரண்டு தொகுதிகள்)

மறைமலையடிகளின் சங்க இலக்கியம் முதல் சமய இலக்கியம் வரையிலான பரந்துபட்ட இலக்கிய அறிவு, மும்மொழி அறிவு, ஆழ்ந்த படிப்பு, கடினமான உழைப்பு, பல்துறையறிவு, தனித் தமிழ் உணர்வு – ஆகியவற்றின் ஒட்டு மொத்தமான உருவாக்கமே இந்நூல் ஆகும். இன்றைய நாளில் மறைமலை யடிகள் போன்ற ஆன்றவிந்தடங்கிய ஆன்றோர்கள் இல்லாததினால் இன்றைக்கு எழும் பல கேள்விகளுக்கு, பிரச்சினைகளுக்கு – தமிழில் குடநீராட்டு விழா, ஆகமங்களின் நிலைப்பாடு, வேதங்களின் சாரம் – விடைகள் கிடைக்காமலே போகின்றன. ஆனால் இந்த

நூலின் முடிந்த முடிபான மாணிக்கவாசகரின் காலம் கி.பி.மூன்றாம் நூற்றாண்டு என்பது ஏற்றுக் கொள்ளப்பட வில்லை என்பது தனிச்செய்தி. ஆனால் அதற்காக மறைமலையடிகள் முன் வைத்திருக்கும் கருத்துக்கள் அழுத்த மானவை ஆகும்.

முதல் இயல் : மாணிக்கவாசகர் பிறப்பும், திருப்பெருந்துறையில் அருள் பெற்றமையும்.

இரண்டாம் இயல் : அருள் பெற்ற வரையில் நிகழ்ந்தவற்றின் ஆராய்ச்சிகள்.

இப்பகுதியில் வரும்மாணிக்கவாசகர் வரலாறு கூறும் பெரும்பற்றப் புலியூர் நம்பியாரின் திருவிளையாடலில் வருவனவும், கடவுள் மாமுனிவரின் ''திருவாதவூரர் புராணத்தில்'' வருவனவுமாகிய செய்திகளில் எவை ஏற்புடையன, எவை ஏற்புடையன அல்ல என்று ஒவ்வொரு நிகழ்வாக எடுத்துக் கொண்டு அகச்சான்றுகள், திருமுறைப் பாடல்களைக் கொண்டு முடிவு கட்டுகிறார்.

இப்பகுதியில் மணிவாசகர் அரச செல்வத்தை அவன் பணித்தவாறு செலவிடாமல் கோயில் கட்டி செலவிட்டது சரியா என்ற கேள்விக்கு விடை பகருகின்றார்.

''அற்றன்று, அடிகள் அமைச்சராய் நின்ற நிலையில் அரசனது பொருளைத் தாம் வேண்டியவாறு செலவழித்தார் அல்லர்; குருவடிவிற் போந்த இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றுத் தமது பழைய நிலைமாறி அவன்றன் திருவடித் தொண்டரான பின் தமது முன்னை நிலையை முற்றும் மறந்து அன்பு வடிவினரானமையின், அஞ்ஞான்று தம்மையும் தம்மோடு உடனிருந்தவைகளையும் தம்மை அடிமை கொண்ட தலைவற்கு உரிமையாக்கிப் பின்னர் அத்தலைவன் ஏவியபடியே தம்பாலுள்ள பொருள் முழுதும் செலவிட்டார். அன்பு வடிவாய்த திரிபுற்ற அடியவர் செயலும், பேய் பிடியுண்டோர், மருள் கொண்டோர், இளஞ்சிறார் என்னும் இவர் செயலும் தம்முள் ஒக்கும்''. இந்த வரலாற்று நிகழ்வுகளை மறைமலையடிகள் பதினெட்டு இயல்களில் ஆய்வு செய்கிறார். ஒவ்வொரு பதிகமும் எந்தெந்தத் தலத்தில் பாடப்பட்டது என்று சான்றுகளுடன் நிறுவுகிறார். அடிகளாருக்கு மனைவி மக்கள் இருந்ததாக முடிவு கட்டுகிறார்.

பத்தாம் இயலில் புத்த சமயக் கோட்பாடுகளை எடுத்து விளக்குகிறார். பதினோராம் இயலில் அவற்றிற்கு மறுப்பாகச் சைவசமயக் கோட்பாடுகளை எடுத்து வைக்கிறார். இவ்வியலில் இறைவன் உலகுயிர்களுள் ஒன்றாய் உடனாய் வேறாய் இருத்தல்; ஆண் பெண்ணாய் அம்மையப்ப சொரூபமாய் விளங்கல்; உருவாய் அருவாய் அருவுருவாய் இருத்தல் முதலான சைவக் கோட்பாடுகளை விளக்குகிறார். இப்பகுதியில் இறைவன் எடுக்கும் திருவுருவம் தீயினோடு ஒப்பதாகும் என்று மிக அழகாக – விரிவாக விளக்குகிறார்.

''அனற் பிழம்பையே எம் ஐயனுக்கு ஒரு திருமேனியாகவும் அறிவு நூல்கள் கூறா நிற்கும். மண் புயல் அனல் கால் வெளி என்னும் ஐம்பெரும் பகுப்பிலும், உயிரிலும் எல்லாப் பொருள்களும் அடங்கும்; இவற்றில் அனல் கொழுந்து மட்டும் கையால் பற்றப்படாமையானும், கையால் பற்றப்படாதாயினும் கட் புலனுக்கு விளங்கித் தோன்றும் உரு உடைமையானும், உடன் தோன்றி உடன் மறையும் தன்மைத்தாகலானும் அஃதொன்றுமே இறைவனது உருவத் திருமேனியோடு ஒப்பதூஉம் அதற்கு இடமாவதூஉம் ஆம்''.

''அதுவேயுமன்றி, இறைவன் இயற்கை ஒளி உடையனாய் உயிர்களின் அகவிருளாகிய அறியாமையை நீக்கி அறிவொளி தோற்றுவித்தல் போலத் தீக்கொழுந்தும் இயற்கையொளி உடைத்தாய்க் கண்ணை மறைக்கும் புறவிருளை ஓட்டி எவற்றையும் விளங்கச் செய்தலானும், இறைவன் படைத்தல் காத்தல் அழித்தல் அருளல் என்னும் தொழில்களைச் செய்தல் போலத் தீயும் ஒரெல்லையுள் நின்று உயிரோடு உடம்புகளைத் தோற்றி நிலைபெறுவித்துத் தன்னெல்லை கடந்த வழி அவற்றை யழித்து உயிர்கட்கு அறிவு விளங்கச் செய்தலானும், கட்புலனாய்த் தோன்றும்

இறைவன் உடனே மறைந்து எங்கும் அருவமாய் நிற்றல் போலக் கட்புலனாய்த் தோன்றும் தீயும் மறைந்தவழி எங்கும் உளதாகலானும், இறைவன் தான் தூயனாய் நின்றே தூயவல்லாப் பொருள்களோடு விரவிய வழியும் தான் அவற்றால் பற்றப்படானாய் அவற்றின் தூவாமை நீக்கித் தூய்மை செய்தல் போலத், தீயும் தான் தூயதாய் நின்றே தூயவல்லாப் பொருள்களோடு கூடியக்காலும் தான் அவற்றால் அழுக்கடையாது அவற்றின் அழுக்கையெல்லாம் எரித்துத் தூய சாம்பலாக்குதலானும், அருவும் உருவும் ஒளியும் ஒருங்குடைய இறைவனைப் போலவே அனற் கொழுந்தும் அருவும் உருவும் ஒளியும் ஒருங்குடையதாய் நிற்றலானும் கட்புலனாய் தோன்றும் தீயே கட்புலனாகா இறைவனது அருளுருவத் திருமேனி விளக்கத்திற்கு இடமாமென்று தெளியற்பாற்று. இது பற்றியன்றே, உலகத்தின் கண் ஆண்டாண்டிருந்த பண்டை மக்கள் எல்லாரும் தீவடிவினும், தீயின் கூறான ஞாயிறு திங்கள் வடிவினும் வைத்து இறைவனை வழிபட்டு வரலாயினரென்க. இன்னும் ஆண்டன்மைக்கு அடையாளமான கடுந்தன்மை உடைய தீ சிவந்த நிறம் உடையதாதல் பற்றியே ஆண் உருவினனாகிய சிவபிரானுக்குச் சிவந்த திருமேனியும், அத்தீயின் கண் அடங்கித் தோன்றும் குளிர்ந்த நீர் வடிவு நீல நிறமுடையதாதல் பற்றியே இறைவனாகிய சிவபெருமானின்கண் அடங்கி மிளிரும் மெல்லிய அருட்பெரும் பெண்டன்மையுடைய இறைவிக்கு நீலநிறத் திருமேனியும் நூல்களுட் கூறப்படுவ வாயின. உலகத்துள்ள எல்லா உயிர்களும், பொருள்களும், பொருட்டன்மைகளும், நிறங்களும், ஆண் பெண், தீ நீர், வெப்பம் தட்பம், செம்மை நீலம் என இரு பெரும் பகுப்பில் உள்ள இயல்பினை நுனித்து ஆராயுங்கால், இவை எல்லாவற்றிற்கும் முதலாய் நிற்கும் இறைவனும் இறைவியும் அவ்விருவகையியல்பும் உடையராம் உண்மை தானே விளங்கா நிற்கும். இனித் தீயின்கண் இறைவன் முனைத்து விளங்குதல் பற்றியே அத்தீப்பிழம்பின் வடிவாகத் திரண்டு நீண்டு குவிந்த சிவலிங்கத் திருவடிவம் திருக்கோயில்கள் தோறும் நிறுத்தி வழிபாடு செய்யப்படுகின்றதெனவும், சிவமாகிய நெருப்பில் படிந்த அடியார்க்கு அவரைப் பற்றிய மும்மலங்களும் அதனால் எரிக்கப் பட்டுத் தூயவாய் அவரை வருத்தாது ஒழிய அவரும் முற்றும் தூயராகிச் சிவபெருமான் திருவருளில் தோய்ந்து பேரின்பம் நுகர்ந்திருத்தலைத் தெரிக்கும் அடையாளமாகவே ஆவின் சாணத்தை நெருப்பிலிட்டுச் சாம்பராக்கி மூன்று வரியாக நெற்றி மேலிட்டும் மெய்யெங்கும் பூசியும் வெண்ணிய தூய ஆனேற்றினை அச் சிவலிங்க வடிவின் முன் வைத்தும் ஆன்றோரெல்லாம் பண்டுத் தொட்டுத் திருக்கோயில் வழிபாடு ஆற்றி வருகின்றனர் எனவும் உணர்ந்து கொள்க''.

இதேபோல மறைமலையடிகள் நெஞ்சப்பையை சிதம்பரத்தோடு இயைபுபடுத்துவது மற்றுமொரு அரிய விளக்கம் ஆகும்.

''இனி உடம்போடு கூடி இயங்கும் எல்லா உயிர்களும் விழித்திருக்கையிலும் உறங்குகையிலும் அவை தம் உடம்புள்ளிருந்து ஓவாது அசைவது நெஞ்சப்பை ஒன்றுமே ஆகும். இவ்வசைவு அவ்வுடம்புகளிலிருந்து பலவகை முயற்சிகளைப் புரியும் உயிர்கள் தம்மால் நடத்தப்படுவதன்று. தம் உடம்புக்குள் இருக்கும் நெஞ்சப்பையின் அமைவும், அஃது எங்ஙனம் நடைபெறுகின்றதென அதன் ஏதுவும் உணரமாட்டாத உயிர்கள் அதனை அங்ஙனம் ஓவாது அசைக்கவல்லவாதல் எவ்வாறு கைகூடும்? அந்நெஞ்சப்பை அசையும்காறும் உயிர்கள் உடம்புகள் நிலைபெறுதலும், அதன் அசைவு நின்றவுடனேயே உயிர் உடம்பை விட்டு நீங்குதலும் கண்கூடாக அறியக்கிடந்த உண்மைகளாம். இவ்வாறு உயிர்கள் நிலைபெறுதற்கும் நீங்குதற்கும் முதல் ஏதுவாய் நடைபெறும் நெஞ்சப்பையின் அசைவு அந்நெஞ்சப்பையைத் தமக்கு உரிமையாயுடைய உயிர்கட்கே ஒரு சிறிதும் விளங்காமையானும், விளங்காததோடு அதனை அசைக்கும் ஆற்றலும் அவை தமக்கு இல்லாமையானும், எல்லா ஆற்றலும்

உடைய ஓர் அறிவுப் பொருள் அசைந்தாலன்றி அவ்வசைவு நடைபெறுதல் ஒருவாற்றானும் ஆகாமையானும் எல்லாம் வல்ல இறைவனே அந்நெஞ்சப்பை தோறும் முனைத்து விளங்கி நின்று அவை தம்மை இயக்கி, அவ்வாற்றால் உயிர்கள் உடம்புகளில் நிலைபெற நின்று அறிவும் தொழிலும் உடையராய் போதர உதவி செய்து வருகின்றான் என்று தெளிமின்? இங்ஙனம் எல்லா உயிர்களின் அகத்தே நெஞ்சத் தாமரையின்கண் சிவபிரான் முனைத்து நின்று ஆடி அதனை ஆட்டுவிக்கும் அருள் நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து மக்கள் எல்லாரும் அதன்கண் தமது உணர்வினை ஒடுக்கி வழிபடுதற்கு எளிதாம் பொருட்டே, புறத்தே இந்நில மடந்தைக்கு நெஞ்சத்தாமரை போல் வயங்குவதாகிய இத்தில்லை அம்பலத்தே அவ்வாண்டவன் அருட்கூத்தின் நிலை எம்முன்னோரால் அமைத்துக் காட்டப் பட்டதென்று உணர்க. அகத்தே உடம்பி லும் புறத்தே உலகத்திலும் எம்மையன் இங்ஙனம் திருக்கூத்து நிகழ்த்தி அவை தம்மை இயக்குதல் பற்றியே அவன் ''அம்பலக் கூத்தன்'' எனவும் பெயர் பெறுவன் என்க''.

பதின்மூன்றாம் இயலில் பௌத்தகுரு மொழிந்த புத்தசமயக் கோட்பாடுகளை மறுத்துரைக்கின்றார். இதற்காக பிடக நூல்களில் ஒன்றான தீகநாயகத்தின் ஒரு பகுதியினை மொழி பெயர்க்கிறார். அதன்படி கௌதம சாக்கியரின் அறிவுரை பழைய சைவசமயக் கொள்கைகளோடு ஒத்து இருக்கிறது என நிறுவுகிறார். வேதம் வேறு, தமிழர் கூறும் நான்மறை வேறு என நிறுவுகிறார். தமிழ் நான்மறைகள் ஆரிய வேதங்களின் வேறாக அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களை உணர்த்துவன என்கிறார்.

''அங்கமாய் ஆதியாய் வேதம் ஆகி
அருமறையோடு ஐம்பூதம் தானே ஆகி''

(நாவுக்கரசர்)

பதினாறாம் இயலில் பௌத்த சமயக் கொள்கைகளை ஒவ்வொன்றாக எடுத்து மறுக்கிறார். பதினேழாம் இயலில் சைவ சமயக் கோட்பாடுகளை எடுத்துரைக்கிறார்.

மாணிக்கவாசர் காலம் : முதல் இயல் : ''தமிழ் ஆராய்ச்சிகள்'' என்னும் ஆங்கில நூலை எழுதிய எம். ஸ்ரீநிவாச ஐயங்காரும் தமிழ் வரலாறு என்னும் நூலை எழுதினோரும் மாணிக்க வாசகர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு என்று கூறுகின்றனர். அக்கூற்றுகளை மறுத்து மாணிக்கவாசகர் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு என மறைமலையடிகள் நிறுவுகிறார்.

திருத்தொண்டத்தொகையில் நக்கீரர், இடைக்காடர், கபிலர், வரகுணபாண்டியர், கல்லாடர், ஔவையார், பாணபத்திரர் என்று பல சிவனடியார்களைப் பற்றிக் கூறப்படவில்லை. எனவே ''இந்த அடியாரைச் சொல்லவில்லை, அந்த அடியாரைச் சொல்லவில்லை'' என்ற பேச்சு எழவில்லை.

தமிழர் வரலாற்றினை ஆறு காலமாக மறைமலையடிகள் பிரிக்கிறார்.

1. **தனித்தமிழ்க் காலம் :** பாரதப் போர் நிகழ்ந்த போது உடனிருந்த முரஞ்சியூர் முடிநாகராயர் காலம் தொட்டு கி.பி. முதல் நூற்றாண்டு வரை.

2. **புத்த காலம் :** கி.பி. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை.

3. **சமண காலம் :** கி.பி. நான்காம் நூற்றண்டு முதல் கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரை.

4. **சைவ வைணவ காலம் :** கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கி.பி. பதினான்காம் நூற்றாண்டு வரை.

5. **பார்ப்பன காலம் :** கி.பி. பதினான்கு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை.

6. **ஆங்கில காலம் :** கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு முதல் இதுகாறும் வரை.

கல்லாடம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி அல்லது ஆறாம் நூற்றாண்டின் துவக்கத்திலாதல் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்கிறார்.

''மாணிக்கவாசகர் ''திருக்கோவையாரில்'' குறிப்பிடும் வரகுணபாண்டியன் தமிழ்நாட்டில் கல்வெட்டுகள் உண்டாதற்கு

முன் அதாவது கி.பி. நான்காம் நூற்றாண்டிற்கு முன் இருந்தவன்''

ஐந்தாம் இயல் : ''பா வகையாலும் திருவாசகம் தேவாரத்திற்கு முந்தையது. திருவாசகத்தில் புதிய கட்டளைக் கலித்துறையும் விருத்தமும், பழைய தமிழ் பாக்களாகிய அகவல், வெண்பா, கலி என்பவற்றோடு விரவி வந்துள்ளது. எனவே திருவாசகம் ஒன்றரைப் பங்கு பண்டைய தமிழ்ப்பாவினங்களாலும், ஒரு பங்கு புதிது தோன்றிய விருத்தப்பாக்களாலும் ஆக்கப்பட்டிருத்தலால் பண்டைத் தமிழ் வழக்குச் சிறிது சிறிது வீழ்ந்து புதிய கலவை வழக்கு மெல்ல மெல்லத் தோன்றும் ஒரு காலத்தே திருவாசகம் இயற்றப் பட்டதாதல் நன்கு விளங்கும்.

ஆறாம் இயல் : ''திருவாசகத்தில் இருப்பது போல அம்மானை வரி, ஊசல் வரி சிலப்பதிகாரத்தில் உள. அவ்வாறே திருச்சாழல், திருக்கோத்தும்பி முதலியன பண்டை இசைத்தமிழ், நாடகத்தமிழ் நூல்களில் உள''.

''கட்டளைக் கலித்துறை கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் புகுந்த தமிழ்யாப்பேயாதல்; தேவாரத்தில் பழைய தமிழ்ப்பா வகைகள் காணப்படாமல் புதுத்தமிழ்ப் பாவாகிய விருத்தமே காணப்படுதல்''.

''திருவாசகம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலும், கல்லாடம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலும் படுதல்''.

ஏழாம் இயல் : ''திருவாதவூரடிகள் குறிப்பிட்ட 'வரகுணபாண்டியன்' இத் தமிழ்நாட்டில் கல்வெட்டுகள் உண்டாவதற்கு முன் இருந்தோன் என்பது''.

''கடைச்சங்கமும் உக்கிரப் பெருவழுதியும் இல்லையாய்ப் போனபின் அரசுக்கு வந்தோன் 'வரகுணபாண்டியன்' ஆதலும், அவன் சிவபெருமான் திருவடிக்கண் பேரன்புடையோன் ஆதலும்''.

''இவ்வரகுணனுக்குப் பின் வந்த பாண்டியனிடத்தேதான் மாணிக்கவாசகர் அமைச்சராய் இருந்தனர்''.

''கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்ட வரகுணபாண்டியர் இருவரும் கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவராதலும், இவ்விருவருக்கும் முற்பட்டவனே திருவாதவூரர் குறித்த வரகுணன் ஆதலும்''.

''மிகு சிவபக்தனான இவன் மாணிக்கவாசகரைத் துன்புறுத்தி இருப்பானா?''

ஒன்பதாம் இயல் : ''திருநாவுக்கரசு நாயனார் தமது தேவாரத்தில் குறிப்பிட்ட சில திருவிளையாடல்கள் மாணிக்கவாசகர் பொருட்டே நிகழ்ந்தன''.

''நரியைக் குதிரை செய்வான்'' என்கிறார் நாவுக்கரசர். இது மாணிக்கவாசகர் வரலாறே. எனவே மணிவாசகர் காலம் நாவுக்கரசர்க்கு முற்பட்டதாகும்.

''மணியார் வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமும் தோன்றும்'' என்கிறார் அப்பர் பெருமான். வைகைக் கரைமேல் இறைவன் ஒரு கொற்றாளாய்ப் பிட்டுக்கு மண் சுமந்த கோலம் அல்லவா இது!

பத்தாம் இயல் : மாணிக்கவாசகர் மூன்றாம் நூற்றாண்டினராயின் சிலம்பு, மேகலை காலத்தைய பௌத்தகுரவர் அல்லவா மணிவாசகரோடு வாதிட்டிருக்க வேண்டும். இலங்கை பௌத்தகுரு வாதிட்டது எவ்வாறு? என்ற கேள்விக்குப் பதில் அளிக்கிறார்.

மறைமலை : இந்தியாவில் பெரிதும் பரவியிருந்தது மகாயானம். அது சைவ சமயத்திற்கு ஏற்புடையதாய் இருந்தது. இலங்கையில் இருந்தது ஹீனயானம். அது சைவத்திற்கு முரண்பட்டது. எனவே இந்திய மகாயான பௌத்தகுரு வாதிடாமல் இலங்கை ஹீனயான பௌத்தகுரு வாதிட்டார்.

மணிவாசகர் ''மிண்டிய மாயாவாதம் என்கிறார். மாயாவாதம் பௌத்த சமயம் ஆகும். முதலில் புத்த சமயத்திற்குப் பெயராய் வழங்கியது, அப் புத்த சமயம் ஒடுங்கி அதனோடு ஒப்பதாகிய ஏகான்மவாதம் தலையெடுத்துப்பரவத் துவங்கிய பின் அதற்கும் பெயராய் வழங்கலாயிற்று, மணிவாசகர் காலத்து வழங்கிய மாயாவாதமும், சங்கரர் காலத்து வழங்கிய மாயாவாதமும் வெவ்வேறாகும்.

''சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனை ஆண்ட''

என்று மாணிக்கவாசகர் ''சிவமாக்கி'' என்பதால் ஏகான்மாவாதம் என்றும் ''சிவமாக்கி'' என்று அப்பர் பெருமானோ ஞானசம்பந்த பெருமானோ கூறவில்லை என்றும் கருதப்படும் கருத்திற்கு மறைமலையடிகள் மறுப்பு தெரிவிக்கிறார்.

மறைமலை : ''தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும் யானும் ஆகின்ற தன்மையனை'' என்கிறார் அப்பர் பெருமான். ''அப்பரிசிற் பதியான அணிகொள் ஞானசம்பந்தன்'' என்கிறார் ஞானசம்பந்தர். மேலும் ஏகான்மவாதிகள் பரம்பொருளுக்கு ''சிவம்'' என்ற சொல்லைப் பயன்படுத்தமாட்டார்கள். ''பிரமம்'' என்றே சொல்வார்கள்.

பதினோராம் இயல் : இவ்வியலில் மறைமலையடிகள் ''சிவம் ஆதல்'' என்பதற்கு உண்மையில் உரிய சைவ சித்தாந்தப் பொருள் கூறுகிறார்.

உயிர்கள் மலத்தினின்றும் நீங்கச் சிவத்தைத் தலைக்கூடிச் சிவமாதலையே சைவசித்தாந்தம் ''சிவமாதல்'' என்கிறது. ஒருகால் சிவம் ஆகாவாயிருந்து பின்னர் ஒருகால் சிவமாக நிலைமாறுவனவற்றையே சிவமாதல் எனச்சொல்லுதல் ஏற்புடைத்து. ஒன்றும் இரண்டும் ஆகாமல், சிவத்தொடு இரண்டறக் கலந்த தூய உயிர்கள் சிவவுருவம் நிற்கும் வீடுபேற்றின் நிலையே, ''சிவமாதல்'' என்னும் சொற்றொடரால் அறிவுறுத்தப்படும். சைவ சித்தாந்த முடிபொருளாதலின் அம்முடிவு தேற்றிச் ''சிவமாக்கி எனையாண்ட'' எனக் கூறிய மாணிக்கவாசகப் பெருமானை மாயாவாத வாடை வீசப் பெற்றார் எனக் கூறுதல் வெறும் பதர்ச் சொல்லாம்.

நிலம் நீர் நெருப்புயிர் நீள்விசும்பு
நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோடு எண் வகையாய்ப்
புணர்ந்து நின்றான்!
உலகேழெனத் திசைபத்தெனத்தான்
ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம்
ஆடாமோ''

என்ற இப்பாடல் பிரமம் ஒன்றே உலகுயிர்கள் எனப்பலவாய்த் தோன்றா நின்றது என்னும் மாயாவாதக் கோட்பாட்டிற்குச் சான்று என்பர். அற்றன்று, இறைவன் எல்லாப் பொருள்களிலும் பிரிவின்றிக் கலந்து நிறைந்து நிற்கும் இயல்பு பற்றி, அவன் ஒருவனுமே பலவாகி நின்றான் எனக் கிளர்ந்தது அல்லாமல், அவனையன்றி வேறேதொரு பொருளும் இல்லாதிருக்க, அவன் ஒருவனே பலபொருளுமாய்க் காணப்படுகிறான் என்னும் கொள்கைபற்றியன்று. ஒன்றே பலபொருள்களிலும் கலந்து நிற்கும் முறைபற்றி அவ்வாறு அடிகள் ஓதினார் என்பதற்கு, அவர் ''எண் வகையாய்ப் புணர்ந்து நின்றார்'' என்றதே சான்றாகும். ''புணர்ந்து நிற்றல்'' என்பது ''கூடி நிற்றல்'' எனும் பொருளாகும்.

''இன்று எனக்கு அருளி இருள்கடிந்து
உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பு அற
நினைந்தேன்
நீ அலால் பிறிது மற்று இன்மை
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து
தேய்ந்து ஒன்றாம்
திருப்பெருந்துறையுறை சிவனே
ஒன்று நீ அல்லை அன்றி ஒன்று இல்லை
யார் உன்னை அறியகிற்பாரே''.

என்ற திருவாசகப் பாடலுக்கு அரிய விளக்கம் தருகின்றார்.

''சூரியன் எழும்பொழுது பக்கத்தில் நிழல் இருக்கின்றது. தலை உச்சிக்கு வரும்போது நிழல் இல்லையாகிப் போகிறது''.

பளிங்குக் கண்ணாடி பக்கத்தில் பலவண்ண மலர்கள் இருப்பின் அவற்றின் பிரதிபலிப்பு பளிங்கில் தெரியாமல் போகிறது.

இவ்வளவும் கதிரவன் உச்சிப் போதில் வருந்துணையும் நிகழும் நிகழ்ச்சியாம்.

உயிரின் முன் இறைவன் அருள் ஒளியோடு தோன்றுதலும், ஆகையால் இருள் பெரும்பான்மையும் மறைந்து

போகிறது. இறையொளி மேல் எழுந்து தோன்றும் வரை உடம்பாகிய மாயா மலமும், இருவினையாகிய நிழலும் பக்கத்தில் தோன்றும். இறைவன் ஒளிநேர் தோன்ற இருவினைநிழல் முற்றும் அற்றுப் போகும்.

தம்மை பிணித்த பசுத்தன்மை பாசத் தன்மைகளை அறுத்து இறைவன் தனது திருவடிக்கண்ணே தம்மைப் பிணிப்பித்துக் கொண்டவாற்றினையும், அவ்வாறு செய்த அதுவே தம்மைப் பிணிப்பித்துக் கொண்ட வாற்றினையும், அவ்வாறு செய்த அதுவே தம்மை சிவமாக்கி ஆண்டமை ஆதலையும்

> ‘‘சித்தமலம் அறுவித்துச்
> சிவமாக்கி எனை ஆண்ட
> அத்தன் எனக்கு அருளியவாறு
> ஆர் பெறுவார் அச்சோவே’’

என்கிறார். அங்ஙனம் உயிர் சிவமாக்கப் பட்ட வழியும், அஃது இறைவனைப் போல படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் தொழில்களை செய்யமாட்டாதாய், இறைவனது திருவடி பேரின்பத்தில் திளைத்தபடியாய் ஆண்டவனுக்கு அடிமையாகவே நிற்கப் பெறும் எனும் உண்மை ‘‘சிவம் ஆக்கி’’ என்றதனொடு அமையாது ‘‘எனை ஆண்ட’’ எனக்கூறி ஆண்டும் அடிமைத் திறம் பேணிக்கிடக்கும் இயல்பினை அடிகள் அருளிச் செய்தவாற்றால் நன்கு புலப்படும்.

க உ. சமணர்கள் தமிழ் ஆகமங்களை அழித்தமை : திருமூலரால் குறிப்பிடப் பட்ட ஆகமங்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னரே இயற்றப்பட்டன. அவர் மொழிந்த ஆகமநூல்களும் இப்பொழுது வட மொழியில் காணப்படும் ஆகமநூல்களும் ஒன்றாகா. திருமூலரால் குறிக்கப்பட்ட ஆகமநூல்கள் வேதாந்த சித்தாந்த உண்மையை ஒன்றாக முடித்துக் காட்டும் தூய சைவ சமய ஞானம் ஒன்றையே விளக்கும்.

மற்றும் பிற்காலத்து வடமொழியில் வழங்கும் காமிகம், காரணம் முதலான ஆகமநூல்களோ சிவபிரான் திருக்கோயில்களை அமைக்கும் முறைகள், வழிபாடு, ஆற்றும் முறைகளை விளக்குவதுவேயன்றி வேதாந்த சித்தாந்த மெய்பொருளாராய்ச்சி விரிக்கக் காண்கிலேம்.

> ‘‘பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்’’

என்ற பாடல் திருமூலர் பாடியதல்ல.

கட்குடிப்பாட்டும் சூதாட்டப் பாட்டும் இருக்கு வேதத்தில் காணப்படல் ‘திருக்குறள்’, ‘நாலடியார்’ முதலான ஒழுக்க நூல்கள் தோன்றினவென்பது; ஆரிய மீமாஞ்சரும் பின்னர்ப் பௌத்தருங் கடவுளை இன்றியே வீடுபேறு எய்தலாம் என்றதையும், உயிர்க் கொலை குற்றமன்று என்றதையும் ‘திருவள்ளுவர்’, ‘திருமூலர்’ என்னும் ஆசிரியர் மறுத்தல்; ஆரிய நூல்களான இருக்கு, எசுர் முதலியன வெல்லாம் உயிர்க் கொலை நிரம்பி யிருத்தல்; ஆரியப் பார்ப்பனர் தம்மைத் தேவரினும் உயர்ந்தோராக உயர்த்துக்கூறித் தாம் எத்தகைய தீயசெயலும் செய்யலாம் என்று ஆரிய நூல்களில் எழுதிவைத்தமையும், அங்ஙனம் எழுதிய அவர்தம் தீதுகளைத் தமிழ்ச் சான்றோர் மறுத்தமையும் கட்குடியனான ஆரியன் ஒருவன் தான் குடித்த கள்வெறி யால் பாடிய பாட்டும் சூதாடுவோனான ஆரியன் மற்றொருவன் தானாடும் சூதாடு காய்களை உயர்த்துப் பாடிய பாட்டும் இருக்கு வேதத்தில் உண்மை; இத்தகைய இழிந்த பாட்டுகளையுடைய இருக்கு முதலிய ஆரிய நூல்களுக்கும், இஞ் ஞான்றை இழிசினர்க்குள் வழங்கும் ‘கள்ளுக் கடைசிந்து’ முதலிய பொல்லாப் பாட்டுகட்கும் ஏதொரு வேறுபாடும் இல்லையாகவும், இவை தம்மை ஆராய்ந்து பாராது இந்நூல்களை எல்லாம் சிவபிரானுரை என்பாருரையின் இழுக்கு; ஆரியத் தலைவரின் காமவெறி; தமிழ்த் தெய்வமான சிவபிரான் காமனை எரித்தமை; தமிழ் மக்கட்குரிய சிறந்த காதல் ஒழுக்கம்; ஆரிய மாதர்தம் கற்பில்லா காமநெறி; நல்லொழுக்கமும் இரக்கமும் இறைவனிடத்து அன்பும், உயர்ந்த நோக்கமும் ஆரியர் உடையரல்லாமை; பண்டைத் தமிழர்தம் காதல் அன்பின் ஐந்திணை வாழ்க்கை; ஆரியர் வந்தபின் தமிழர் மாட்டுப் பொய்யும் வழுவும் தோன்றினமையும், அவற்றைக்

கடியவே ஒழுக்க நூல்கள் தமிழின்கண் மிகுந்து தோன்றலான மையும்.

மந்திரம் என்னும் சொல் தூயதமிழ்ச் சொல் :

> **‘‘நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த**
> **மறைமொழி தானே மந்திரம் என்ப’’**

என்று தொல்காப்பியர் காலத்திலேயே மந்திரம் தமிழ்ச் சொல்லாக இருந்துள்ளது.

வடமொழியில் மந்திரம் என்ற சொல் வேதங்களில் இல்லை. அதர்வ வேதத்தில் மட்டும் ‘‘வேண்டு கோளுரை’ என்ற பொருளில் வந்திருக்கின்றது.

மேலும் பார்ப்பனர், அகத்தியனார் தென்னாடு போந்து தமிழ்க்கு இலக்கணம் செய்த பின்னரே தமிழ் சீர்த்திருத்தமுற்று நடைபெறலாயிற்று எனவும் பார்ப்பன முனிவராகிய தொல்காப்பியர் செய்த நூலே தமிழுக்குச் சிறந்த இலக்கணம் எனவும் கூறுகின்றார்கள். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு பின் எழுந்த நூல்களில்தான் (ஆரியர் தமிழ் நாட்டில் நிலைபெற்றப் பின்னர் தான்) இக்கட்டுக்கதைகள் வழங்கலாயிற்று.

மணிமேகலையில் அகத்தியனார் பற்றி இருந்தாலும், அவர் தமிழுக்கு இலக்கணம் செய்தார் என்பதும் அவர் மாணாக்கர் தொல்காப்பியனார் என்றும் சொல்லப்படவில்லை.

தொல்காப்பியர் அகத்தியர் பற்றித் தம் நூலில் (குருநாதர்) யாண்டும் கூறவில்லை.

இருக்கு வேதகால அகத்தியர் வேறு; நக்கீரர் காலத்திய அகத்தியர் வேறு; நக்கீரர் காலத்திய அகத்தியரே தமிழ்நாடு புகுந்தார்.

மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் (இரண்டாம் பகுதி) (ஆசிரியர் மறைமலையடிகள்)

கரு. மாணிக்க வாசகரும் நம்மாழ்வாரும் இப்பகுதியில் அம்மையப்பர் தத்து வத்தை மறைமலையடிகள் விளக்கி யிருப்பது மிகச் சிறப்பான ஒன்று.

‘‘உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் தீயின் கூற்றிலும் நீரின் கூற்றிலும் அடங்கும். தீயும் நீரும் ஒன்றியைந்து நிற்குங்காறும் படைத்தல் காத்தல்கள் நிகழும்; தீ மிகுந்தவிடத்து நீரை உரிஞ்சி எல்லாப் பொருள்களையும் அழித்துவிடும். எனவே, படைத்தல் காத்தல்களச் செய்வது தீயும் நீரும் சேர்ந்த சேர்க்கையேயாதலும், அழித்தலைச் செய்வது தீ நீரில் பிரிந்து மிகுதலேயாதலும் தெற்றென விளங்கும். விளங்கவே படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிற்கும் ஏதுவாவன தீயும் நீரும் என்னும் பொருள்கள் இரண்டே அல்லாமல் மூன்றல்லாமையும் புலனாம். இத்தீயும் நீரும் அறிவில்லாப் பொருள்கள் ஆதலால் அவற்றை இயக்குதற்கு அறிவுடைய முதல்கள் இரண்டு இன்றியமையாது வேண்டப்படும். தீயினுள் விளங்கும் அறிவுடைப் பொருளே சிவம் என்றும், நீரினுள் விளங்கும் அறிவுடைப் பொருளே அம்மையென்றும் அறிவு நூல்கள் நுவலா நிற்கும். இவ்வாறு இவற்றுள் விளங்குதல் பற்றியே தீயின் நிறமான சிவப்பு வடிவு சிவபிராற்கும், நீரின் நிறமான நீலவடிவு அம்மைக்கும் உரியனவாகச் சொல்லப்பட்டன.

தீ தனித்து எரியும்கால் ஏதொரு பொருளும் அதன்முன் நிற்கலாற்றாது அழிந்துபடும். மற்றுஅது நீரொடு கலந்து தனது வெம்மை குறைந்து ஓர் அளவில் நிற்குங்கால், அது பல செயற்கரும் தொழில்களெல்லாம் செய்யவல்லதாகும். தீயும் நீரும் ஒருங்கு கலத்தலால் தோன்றும் நீராவி பல வகைப் பொறிகளையும் இயக்கிப் பல்வேறு வியத்தகு தொழில்கள் எல்லாம் செய்தலை இஞ்ஞான்று உலகம் எங்கணும் காண்கின்றோம் அல்லோமோ? தீயின் சேர்க்கையின்றி நீர் உறைந்து பனிக் கட்டியாயவிடத்தும், நீரின் சேர்க்கையின்றித் தீயேமிக்கெழுந்து எல்லாவற்றையும் எரிக்குமிடத்தும் உலகின்கண் ஏதேனும் நடைபெறுமா? நடைபெறாதன்றோ. உலகினும் உலகத்தில் இயங்கும் உயிர்களின் உடம்புகளினும் தீயும் நீரும் கலந்து நிற்க வேண்டுமளவுக்குக் கலந்து நிற்றலினால் தான் உலகுயிர்களின் தோற்றமும் அவற்றின் நிலைபேறும் காணப்படுகின்றன. ஆகவே, அம்மையப்பரது சேர்க்கையே படைப்புக்கும் காப்புக்கும் ஏதுவாகும். அல்லது,

நான்முகனும் திருமாலும் தனித்தனியே அவை தமக்கு ஏதுவாகார் என்க.

சைவசமயச் சான்றோர், பொய்கையாழ்வார் கருத்தொருமை : முன்னெல்லாம் தமிழ்ச் சான்றோர்கள் சிவபிரானையும் திருமாலையும் ஒன்றாகவே வைத்து வழிபட்டு வந்தார்கள். 'சைவம்', 'வைணவம்' என்ற இருவகைச் சமயப் பகுப்பு அக்காலத்தில் இத்தமிழ் நாட்டின் கண் இருந்ததேயில்லை. வடக்கிருந்து வந்த ஆரியப் பார்ப்பனர், தமிழ் நன்மக்களுள் இருந்த ஒற்றுமையைத் தமக்கெல்லாம் தாமே மேலாக நிற்றல் வேண்டியே, திருமாலை உயர்த்திப் புராணக் கதைகளைப் படைத்து 'வைணவம்' என்னும் ஒரு மதத்தையும் தனியே உண்டாக்கினர்.

பண்டைத் தமிழ் மக்களால் ஒரே தெய்வமாக வைத்து வணங்கப்பட்டு வந்த 'அம்மையப்பரே' பின்னர் இருவேறு தெய்வங்களாகப் பிரிந்ததும், அவ்விரண்டுள் 'திருமால்' தமது பண்டை முழுமுதற்றன்மை இழந்து கண்ணன் இராமன் என்பாரினும் தாழ்ந்த நிலைமையை அடைந்ததும், அதனால் முன்னர் ஓர் இனத்தினராயிருந்த தமிழ் நன்மக்கள் பின்னர்ச் 'சைவர்', 'வைணவர்' என இருவேறு பகுப்பினராய்ப் பிரிந்து வேறுபட்டதும் ஆரியப் பார்ப்பனர், 'மாபாரதக் கதை'யினையும், 'இராமாயணக் கதையினை'யும் தென் தமிழ் நாட்டிற்குக் கொணர்ந்து பரப்பிய காலம் முதல் முறையே நிகழ்ந்த வளர்ந்தனவாகும்.

க எ. நாச்சியார், பெரியாழ்வார் : சுந்தரமூர்த்தி நாயனார் காலம் வரையில், திருமாலும் சிவபிரானோடு சேர்த்துச் சைவர்களாலேயே வழிபாடு செய்யப்பட்டு வந்தமையின் திருமாலுக் கென்று வேறு தனிக் கோயில்கள் கட்டப்படாமல், சிவபிரான் திருக்கோயில்களினுள்ளேயே திருமாலின் திருவுருவம் வைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்தது. பின்னர்ச் சிவபிரானை விட்டுத் திருமாலை மட்டும் வழிபடுவோர் தொகை பெருக பெருகத் திருமாலுக்கென்றே தனிக்கோயில்களும் அமைக்கப்பட்டு அவற்றின் தொகையும் பெருகலாயிற்று.

20-இல் பன்னீராழ்வார்களின் கால வரையறையை மறைமலையடிகள் நிர்ணயிக்கிறார். இப்பகுதியில் திருமுறைகளையும் திவ்யப்பிரபந்த பாசுரங்களையும் அடிகளார் ஒப்பிடுகின்றார்.

உஉ. முச்சங்க வரலாறும் தொல்காப்பிய காலமும் கொடிநிலை – வெஞ்சுடர் மண்டிலம்

வள்ளி – தண்கதிர் மண்டிலம்

கந்தழி – தீப்பிழம்பு

இவற்றை அடிகளார் சான்றுகளுடன் விளக்குகிறார்.

''இறைவனை நெருப்பொளியில் கண்டு வணங்கும் முறையுணர்ந்த பரதர் இந்தியா முழுதும் பரவியிருந்ததனால் பரதகண்டம் எனலாயிற்று''.

மநு தமிழ்முனிவர் என்று சான்றுகளுடன் விளக்குகிறார். தமிழ் முனிவராகிய மநுவும், அவர் வழித்தோன்றி ஐந்து நாடுகளில் குடியிருந்த 'பஞ்ச திராவிடர்' எனப்படும் பண்டைத் தமிழ் மரபினருமே, முழுமுதற் கடவுள் தீ வடிவில் விளங்கித் தோன்றுதலை முதல் முதல் கண்டறிந்தவர். இவ் ஐவகை தமிழ் மரபினர்க்குத் தலைவராய் இருந்து அரசு புரிந்தவர்கள் பரதன் என்னும் தமிழ் வேந்தன் மரபில் வந்தவரான பரதர்களே ஆவர். ஆரியர் இந்நாட்டில் நுழையாமல் தடுத்தவர் பரதர். பரத மரபினரின் குரு விசுவாமித்திரர் ஆவார்.

''தமிழ்ச் சான்றோர்கள் வேட்டுவந்த வேள்விகள் அத்துணையும் கொலையும் குடியும் இல்லாதனவாய்ச் சிவபிரான் ஒருவனை மட்டுமே வணங்குதற் பொருட்டு வேட்கப்பட்டன; ஆரியர் வேட்ட வேள்விகளோ பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் கொன்றும் தொட்டி தொட்டியாகச் சோமப் பூண்டில் இறக்கிய கள்ளை உண்டும் இந்திரன் வருணன் முதலான சிறு தேவதைகளை வணங்குதற் பொருட்டாகவே வேட்கப் பட்டன''.

''தஸ்யுக்களில் பெரும்பாலார் விசுவாமித்திரர் வழித்தோன்றினமை ஐதரேய

பிராமணம் ஏழாம் இயலில் தெளித்துரைக்கப் பட்டிருக்கின்றது. ஆரியர் அல்லாத தஸ்யுக்கள் எல்லார்க்கும் பிறப்பிடம் ஆவார் விசுவாமித்திர மரபினர். தஸ்யுக்களில் சிறந்த பரதர்க்கு முதற் குரவர் விசுவாமித்திரர். விசுவாமித்திர மரபினரான காதினர்க்கு ஆரிய வேதங்களின் வேறாகத் தெய்வத் தன்மை பொருந்திய மற்றொரு வேதம் இருந்ததென்பதனை ஐதரேய பிராமணமே நன்கு உரை தருகின்றது.

‘‘தைவ வேதேச காதி நாம்’’
– ஐதரேய பிராமணம் எ. க. அ.

இவ் விசுவாமித்திர மரபினர்க்குரிய தெய்வீக வேதமே அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற் பொருளியல்புகளையும், சிவபிரானையும், அவன் முனைத்து விளங்கும் முத்தீ வழிபாடுகளையும் உணர்த்தும் பண்டைத்தமிழ் வேதமாதலும் தானே பெறப்படும்.

கொல்லாமை தமிழர் நெறி – தொல் காப்பிய நெறி ஆகும். அதனைப் பின் பற்றியது சமணம். மகாவீரரும், கௌதம சாக்கியரும் வைசிய க்ஷத்திரிய அல்லது தமிழ் வேளாள அரச மரபில் பிறந்தவர்கள். வடநாட்டில் தமிழ் வேளாளரே ஆட்சி செய்தனர்.

தொல்காப்பியர் சமணர் அல்லர் எனச் சான்றுகளுடன் விளக்குகின்றார்.

திருத்தொண்டத் தொகையும் திருவாதவூரடிகளும் : பொய்யடிமை யில்லாத புலவர் மாணிக்கவாசகர் ஆவார்.

நால்வரில் ஞானசம்பந்தரை முதலில் வைத்த காரணம் சிறப்பு பற்றியே ஆம். அப்பர் பெருமான் சிறிது காலம் சமணத்தில் இருந்தார். சம்பந்தர் பிறக்கும் பொழுதே அருளுடன் பிறந்தார். சமண சமயத்தை வென்றார். இதுவே சிறப்பு.

உ எ. அப்பர், சம்பந்தர் இருந்த கால ஆராய்ச்சி : மாணிக்கவாசகர் மகேந்திர மலை பற்றி பல இடங்களில் குறிப்பிடுகின்றார். மாணிக்கவாசகர் பிள்ளைமைப் பருவத்தில் அங்கு தங்கியிருந்து பின்னர் திருவாதவூர் வந்திருக்க வேண்டும். மகேந்திரமலை வடக்கே கஞ்சம் மாகாணத்தில் பெர்ஹாம் பூருக்குத் தென்மேற்கே 32 கல் இடைவழி கழிந்த ஓரிடத்தில் இருக்கின்றது. இம் மலையில் சிவன் கோயில்கள் நிரம்ப உள்ளன. இம்மலை இமயமலை அன்று.

மாணிக்கவாசகர் வீரசைவ மரபினர் ஆவார்.

மாணிக்கவாசகர் காலத் திட்ட முடிவு : மாணிக்கவாசகரின் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி என்கிறார் மறைமலையடிகள்.

மாணிக்கவாசகர் காலத்தே தில்லையின் அருகே கடல் இருந்தது. சம்பந்தர் காலத்தே அக்கடல் ஒருகல் பின்னிட்டது. இற்றை நாளில் ஏழுகல் பின்னிட்டுள்ளது. இப்படி பின்னிட உஉரு ஆண்டுகளாவது ஆகியிருக்கும். அப்படியானால் மாணிக்கவாசகர் காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டுக்கு முன் இருக்க வேண்டும். திருப்பெருந்துறையும் மணிவாசகர் காலத்தே கடற்பட்டினமாக இருந்து இப்பொழுது 14 கல் விலகிச் சென்றுள்ளது.

திருவாசகத்தில் ‘‘ஆணவம்’’ என்ற சொல் காணப்படவில்லை. ஆனால் திருமந்திரத்தில் உள்ளது. எனவே திருவாசகம் திருமந்திரத்துக்கு முற்பட்டது ஆகும்.

திருவாசக வரிகள், சொற்றொடர்கள் பிற்றைநாள் தேவாரத்தில் வருகின்றன. திருவாசகத்தில் கண்ணப்பர், சண்டேசுவர நாயனார் ஆகியோர் பற்றி மட்டுமே வந்துள்ளன. தேவாரத்தில் பதினான்கு அடியார்கள் இடம் பெற்றுள்ளனர்.

பாவகையானும் திருவாசகம் தேவாரத்திற்கு முந்தையது ஆகும். கட்டளைக் கலித்துறை திருவாசகம் திருக்கோவையாரில் முதலில் காணப்படுகிறது. இது சங்கப் பாடலில் வழங்கும் கலிப்பாவின் தொடர்ச்சி ஆகும். இப்பா தேவாரத்தில் விருத்தப்பா ஆகிறது. கலிப்பா வழக்கம் அற்றுப்போவது ‘கி.பி. 2ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலாம்’ விருத்தப்பா வழக்கம் மிக்குப் பெருகலானது கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதலேயாம். இவ்விரண்டு வரம்புக்கும் இடைப்பட்ட

காலத்தில் கலிப்பாவோடு ஒட்டி அதனில் தோன்றியது கட்டளைக் கலித்துறை ஆகும்.

கோச்செங்கணான் காலத்திற்கு முன் கி.பி. முதலாம் நூற்றாண்டில் இருந்த சிவன் கோயில்கள் சிலவே. கோச் செங்கணான் எழுபது கோயில்கள் கட்டினான். அவனுக்குப் பின் எழுபதுக்கு மேல் பெருகின. அப்பர் – சம்பந்தர் வாழ்ந்த கி.பி. 6-ஆம் 7-ஆம் நூற்றாண்டுகளில் கோயில்கள் நூற்றுக் கணக்கில் பெருகின. (275 + வைப்புத் தலங்கள்). மாணிக்க வாசகர் காலத்தில் இத்தனை கோயில்கள் இருந்திருந்தால் பாதியாவது குறிப்பிட்டி ருப்பார். ஆனால் மாணிக்கவாசகர் 54 கோயில்களைப் பற்றி மட்டுமே குறிப்பிடு கின்றார். எனவே, இத்துணை கோயில்கள் எழுப்பப்படும் முன் மாணிக்கவாசகர் தோன்றியிருப்பார்.

இன்னோரன்ன காரணங்களினால் மாணிக்கவாசகர் காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு என மறைமலையடிகள் முடிவு கட்டுகிறார்.

11. தேவாரம் : வேதசாரம் ... 1917.

(ஆசிரியர் : காசிவாசி செந்திநாதையார்; முதற்பதிப்பு ஆண்டாளம்மை எனப் பெயரிய மங்கையர்க்கரசியாரால் வெளியிடப்பட்டது. மறுபதிப்பு 1996-ஆம் ஆண்டில் தஞ்சாவூர் கலாசம்ரக்ஷண சங்கத்தால் வெளியிடப்பட்டது. பக்கங்கள் – 408; விலை ரூ. 110/-)

'The book before the reader (தேவாரம் வேதசாரம்) deserves to be inscribed on plates of gold with letters set in diamonds'' என்கிறார் திரு. டி.என். இராமச்சந்திரன் அவர்கள்.

இந்த நூலில் அப்படி என்ன வைரங்கள் கொட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. ''தேவாரம் வேதசாரம்'' என்றமையால் வேதத்தின் மொழிப் பெயர்ப்புதான் தேவாரமோ எனின், அங்ஙனமன்று; பின் அதன் கருத்து என்னையெனில், வேதம் என்று மேலே நிரூபிக்கப்பட்ட வேதம், வேதாந்தம், ஆகமம், ஆகமாந்தம், இதிகாச புராணம் என்பவைகளிலே இலைமறைகாய்கள் போன்றும், மணன்மலையில் பொற்கொடிகள் போன்றும் அங்கங்கே இலங்கும் சீவான்ம பரமான்மாக்களின் ஐக்கியத்தினால் நேர்ந்த ஆனந்த நிலைகளையும், சிவபெருமானது அளவிறந்த குணாதிசயங்களையும், இலக்கணங்களையும், எந்தத் தேவராலும் முடிக்க இயலாதவனாய், அச்சிவபிரான் ஒருவராலே முடிக்கப்பட்டனவாயுமுள்ள அளவிறந்த வீரச்செய்கைகளையும், பிறவற்றையும் குணோபசங்காரக்கிரமத்தினால் (குணோபசங்காரம் – குணங்களைத் தொகுத்துக் கூறுதல்) ஆதராம் கொண்டியைத்துப் புகழ்ந்து தேவாரம் துதிப்பதினால் அது வேதசாரம் எனப்படும்'' என்கிறார் செந்திநாதையர்.

இருக்கு முதலான நால்வேதங்கள், இலிங்க புராணம் முதலான புராணங்கள், சுவேதாசுவதர உபநிடதம் போன்ற உபநிடதங்கள் வாயுசங்கிதை கைலாச சங்கிதை போன்ற நூல்கள் காலோத்தராகமம் முதலான ஆகமங்கள், கூறுகின்ற கருத்துக்களுக்கு ஒப்பவரும் தேவார, திருவாசகங்கள் உள்ளிட்ட திருமுறைப் பாடல்களை எடுத்துக்காட்டிச் செந்திநாதையர் ஒப்புமைப்படுத்துகிறார்.

அந்தரியாமி, அஷ்டமூர்த்தி, சிவபெருமான், நாராயணர்க்கு மேலானவர் சிவபெருமான், உருத்திராக்ஷம் கிரியை சரியை, சிவபெருமான் ஒருவரே வழிபடற்பாலர், சிவபெருமான் முதல் இறுதி இல்லாதவர், ஞானம், பஞ்சாக்ஷரம், யோகம், விபூதி, வேதத்தின் உட்பொருள் சிவபெருமான் என 112-க்கு மேற்பட்ட பொருள்களில் ஒப்புமைப்படுத்துகிறார்.

வடமொழி எழுத்து, பின் அடுத்து அதனைத் தமிழில் அப்படியே transliteration பிறகு translation, ஒப்பான திருமுறைப் பாடல்கள் என்று வடமொழி, தமிழ் இருமொழி வல்லார்களும் பயன்பெறுமாறு அமைத்துள்ளார். ஓர் எடுத்துக்காட்டு கீழே தரப்பட்டுள்ளது.

பஞ்சாக்ஷரம்

''நமஸ்ஸிவாய ச ஸிவதராய ச:''

– யசுர் வேதம், ச.ரு. அ.க.

‘‘ஸர்வலிங்காய நம: ஸிவாய நம: ஸிவலிங்காய நம:’’

– தைத்திரீய ஆரணியகம்

என்று யசுர்வேத மத்தியிலுள்ள உருத்திராத்தியாயத்து மத்தியினும், தைத்திரீய ஆரணியகத்தினும் ஸ்தூல சூக்கும பஞ்சாக்ஷரங்கள் முறையே கூறப்பட்டுள்ளன.

‘திரயீ’ எனப்படும் இருக்கு யசுர் சாமம் என்பவற்றின் நடுக்கணுள்ளது யசுர்வேதம்; யசுர்வேத ஏழுகாண்டங்களின் நடுக்கணுள்ளது நான்காவது கண்டத்து ஐந்தாம் பிரசினமாகிய ஸ்ரீருத்திரம்; இந்த ஸ்ரீருத்திரத்துள்ளது.

நம: ஸோமாயச என்னும் அநுவாகத்திலுள்ள நம: ஸிவாய என்பது; இதன் மத்தியிலுள்ளது சிவனார் திருநாமமாகிய சிவ என்னும் ஈரெழுத்தாம்; ஆகலின் வேத புருஷனுக்குக் கண்ணாயது உருத்திரம்; கண்மணியாயது பஞ்சாக்ஷரம்; மணியாடு பாவையாயுள்ளது சிவனார் திருநாமமாகிய சிவ என்னும் ஈரெழுத்தாம்.

இதனைத் தொடர்ந்து தரும சங்கிதை வாயு சங்கிதை ஆகிய நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டியுள்ளார்.

அடுத்துத் திருமுறைகளிலிருந்து நமச்சிவாயத் திருப்பதிகம், திருவாசகம் பதினோராந்திருமுறை ஆகியவற்றிலிருந்து மேற்கோள்கள் காட்டியுள்ளார்.

12. திரு.வி.க. நூல்கள்

சைவத் திறவு : ... *1929*

ஆசிரியர் : திரு.வி.கல்யாணசுந்தரனார் *(பக்கங்கள் 60)*

‘‘இன்றெனக்கருளி’’ என்ற திருவாசகப் பாடலில் ‘‘சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்’’ என்ற வரிக்கு திரு.வி.க. அழகாக விளக்கம் கூறுகிறார். முதல் ‘‘சென்று’’ பருவுடலினின்று நுண்ணுடலுக்குச் செல்வதைக் குறிப்பது. இரண்டாவது ‘‘சென்று’’ நுண்ணுடலினின்று முதல் (காரண) உடலுக்குச் செல்வதைத் தெரிவிப்பது. முதலுடல் காட்சி பெற்றதும் கன்ம உடல் தேய்வுறும். கன்மம் ஒடுங்கியதும் ஆணவம் தேய்வுறும். ‘‘தேய்ந்து தேய்ந்து’’ என்னும் இரண்டில் முன்னது கன்மத் தேய்வு; பின்னையது ஆணவத் தேய்வு. என்ன அருமையான விளக்கம்!

இயற்கை இறைவனது உடல். நமது நாட்டின் இயற்கை நிலை வெம்மை. வெம்மைக்குரிய வடிவம் நெருப்பு. அந்நெருப்பு மேனியை நமது அருளாளர்கள் போற்றினார்கள். வெம்மை நெருப்பின் நிறம் செம்மை. அச்செம்மையைச் சேய் என்றும் சிவம் என்றும் நம்முன்னோர்கள் போற்றினார்கள்.

உள்ளப்படாத திருஉருவைக் கட்டுப்பட்ட உள்ளமுடையோர் எங்ஙனம் உள்ளுவது, என்ற கேள்வியை எழுப்புகிறார் திரு.வி.க. என்போன்றார் அப்பெருவடிவை உள்ளும் முறையில் நினைப்பற நினைந்து இறைவனல்லால் பிறிது மற்றின்மை கண்ட அகக் கண்ணாளர்கள் அருள்வழி கோலியிருக்கிறார்கள். அவ்வழியே சைவ சமயத்தின் திறவு என்கவென்று முடிவு கட்டுகிறார் திரு.வி.க.

ஆலமும், அமுதமும் : *(பக்கங்கள் 38; 1944)*

‘‘உலக வாழ்க்கையைச் சித்தாந்தம் வெறுக்கவுமில்லை; துறக்கவுமில்லை. உயிர்களின் விடுதலைக்கு உலக வாழ்க்கை இன்றியமையாக் கருவி என்பது சித்தாந்தத்தின் உட்கிடக்கை’’

‘‘கீழ்நாட்டு நாகரிகம் சமயத்தை வேறாகவும், அரசியல், வாணிபம், தொழில் முதலியவற்றை வேறாகவும் பிரிக்கவில்லை; எல்லாம் சமயத்தில் ஒன்றி நிலவுமாறு செய்தது; வாழ்க்கைக் கூறுகளெல்லாம் சமயமே’’ என்று கொண்டது.

‘‘இப்பொழுதும் ஒரு பெரும் புரட்சி தேவை. அது அன்புப் புரட்சி, அதற்கு மனம் திரும்பிப் பாவங்களை முறையிட்டு அழும்பணி வேண்டும். அப்பணி செய்ய விரைவோமாக!’’

‘‘இமயமலை அல்லது தியானம்’’ : *(பக்கங்கள் 56; 1931)*

‘‘இமயவுருவம் சிவவுருவம். உலகிலுள்ள பெரிய ஒன்று அதனிலும் பெரிய

ஒன்றை உணர்த்துவதாகும். ஆதலால் சிவவுணர்விற்கு இமயமலை கருவியாக நின்றிருக்குமென்று கோடல் தவறாகாது''.

''இமயம் மூன்று -கூறுடையது. முதலில் பசுங்காடு; பின்னர் கரும்பாறை; முடிவாக வெண்பனி. நம்மை ஆராயின் நாமும் ஓர் இமயமாயிருத்தல் உணரலாம். பசுமை கருமை வெண்மையென்னும் மூன்றும் இமயத்திலும் உண்டு; நம்மாட்டுமுண்டு, பசுமை மாயையைக் குறிப்பது. கருமை ஆணவத்தைக் குறிப்பது. கர்மம் மாயையி னின்றும் ஆணவக் கூட்டுறவால் பிறப்ப தொன்றாகலின், அதனைப் பசுங் கருமையில் சேர்த்து விடலாம். ஆணவப் பாறையைக் கடந்தால் மெய்யறிவொளி விளங்கப் பெறுகிறோம். இமயத்தின் வெள்ளொளி புறக்கயிலாயம். இங்கே மெய்யறிவொளி அகக்கயிலாயம்.

''மலை, தியானம்போல் நிற்கிறது. தியானம் போலவா தியானமாகவே நிற்கிறது. மலை, தியானத்தை அறிவுறுத்துகிறது. இமயத் தியானத்தில் அமருங்கள். இமயப் பசுங்காடு தோன்றி மறைகிறது. அதாவது மாயை ஒதுங்குகிறது. நம்பாலுள்ள கரடி புலி முதலியன ஓடுகின்றன. கடும்பாறை தோன்றி இரிகிறது. அதாவது ஆணவம் ஒதுங்குகிறது. நம்பாலுள்ள கழுகு அண்ட பேரண்டம் முதலியன பறந்தோடுகின்றன. வெண்கயிலை – புண்ணியத் திரட்சி தோன்றுகிறது. அதாவது நிர்வாணம் அல்லது சத்திநிபாதம் உறுகிறது. உற்றதும் இமயக் கொடியின் தவக்கோலம் காட்சியளிக்கிறது. அமைதிப் பெண்மை கூடுகிறது. புற இமயத்துடன் அகத்தைத் தொடர்புபடுத்தி, உயிர்களை, இமயமாக்குவது இமயத் தியானம்''.

நாயன்மார் திறம் : (பக்கங்கள் 32; 1922) ''நாயன்மார் அறுபத்து மூவரும் தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில், பல்வேறு மரபுகளில், பல்வேறு சாதிகளில் தோன்றினவர். அவர்தம் தொண்டுகளும் பல திறப்பட்டவை. நாயன்மார் இடத்தாலும், மரபானும், சாதியானும், தொண்டானும், தொழிலானும், கோலத்தானும் வேறுபட்டவராயினும், கடவுளிடத்தில் அன்பு செலுத்துவதில் அவரெல்லாரும் ஒன்றுபட்டவரேயாவர். இவ்வாறே நமது தேசத்தில் வாழும் மக்கள் பிறப்பாலும், சிறப்பாலும் பிறவற்றாலும் வேறுபடினும் பொது ஜன சேவையில் ஒன்றுபட்டவர்களாயிருத்தல் வேண்டும். கடவுள் சேவை யில் நாயன்மார் வேறுபடாது ஒன்றுபட்ட மையான் அவர் வீடுபேறெய்தினர். அவர் இன்னும் ஆலயங்களில் பூசிக்கப் படுகின்றனர். அறுபத்து மூவர் நினைவு தோன்றுங் காலத்து, அவர் தம் தொழில், சாதி முதலியன மனத்தில் தோன்றுகின்றனவோ? இல்லையே. அவரெல்லாருஞ் சிவனடியார் என்னும் ஓரெண்ணமே உள்ளத்தில் எழுந்தது.

''அறுபத்து மூவர் அனைவருக்கும் ஒரேவித பூசை, விழா, வணக்கம் முதலியன நடைபெறுகின்றன. கண்ணப்பரை வேடரென யாவராயினுங் கழிக்கின்றனரோ? திருக்குறிப்புத் தொண்டரை வண்ணாரென யாராவது ஒதுக்குகின்றனரா? திருநாளைப் போவாரைப் பஞ்சமரென யாராவது தள்ளுகின்றனரோ? இவரனைவரையும் இன்றுங் கோயில்களில் பிராமணரல்லரோ பூசிக்கின்றனர்? இந்நாயன்மாரைப் போல இந்நாள் வாழும் பாரத மக்களும் தேச சேவையில் ஒன்றிய அன்பு கொள்வார்களாயின் உலக இன்பம் விரைவில் எளிதில் கிடைக்கும்.

அறுபத்து மூவருள் வேதியர் இருந்தனர்; சாலியர் இருந்தனர்; பரதவர் இருந்தனர்; வண்ணார் இருந்தனர்; வேடர் இருந்தனர்; வேறுபல சாதியாரும் இருந்தனர். இப்பெரியவர்கள் தாங்கள் பிறந்த சாதியில் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொண்டு தாங்கள் செய்த சேவையில் ஒருவரோடொருவர் மலைந்து பூசல் விளைத்தார்களோ? எல்லோரும் ஆன்மநேய ஒருமைப்பாட்டில் கட்டுப்பட்டுக் கிடந்தனர். அவர் தம் வழிவழிவந்த தமிழ் மக்கள் இப்பொழுது சாதிப் பகைமையில் தலைசிறந்து விளங்குகிறார்கள். என்னே காலம்!

''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' : (பக்கங்கள் 64; 1952) அப்பர் பெருமான் கூற்றினை அடிப் படையாகக் கொண்டு நாட்டுப் பணியே தற்காலத்திற்குத் (காலம் தோறும் பணிமாறும் என்றும் கூறுகிறார்) தேவை என்கிறார் திரு.வி.க.

''முருகன் அல்லது அழகு'' : *(பக்கங்கள் 152; 1925)* ''இயற்கை பல அழகிய வடிவங்களாய் காட்சியளிக்கிறது. அக்காட்சியை மறுப் போரில்லை. இயற்கையைக் கூர்த்த மதியால் ஆராய ஆராய அதன் உள்ளுறை யொன்று உணர்வில் உறுகிறது. இயற்கை உடல்; அதன் உள்ளுறை உயிர், உயிரை முருகு அல்லது முருகன் என்று தமிழ் நாட்டார் கொண்டனர்''.

''பழந்தமிழர் முருகை மணமும் இளமையும் கடவுட்டன்மையும் அழகு முடைய செம்பொருளாகக் கொண்டனர். இவ்விழுமிய கொள்கை நாட்டில் நிலைபெறின், நாட்டுக்குப் பலவழியிலும் நலன் விளையும்''.

இந்த நூல் 1994-ஆம் ஆண்டுக்குள் பதினெட்டு பதிப்புகளில் வெளிவந்து உள்ளது.

''கடவுள் காட்சியும் தாயுமானாரும்'' : *(பக்கங்கள் 40; 1928)*

''ஐவகையெனும் பூதம் ஆதியை'' என்ற தாயுமானவரின் ஒரே பாடலுக்குக் கடவுள் துணை – உயிர் முயற்சி – உயிர்கள் அடையும் பேறு என்று மூவகையாகப் பிரித்துக் கொண்டு பலமேற்கோள்களுடன் விரிவாக திரு.வி.க. எழுதியுள்ளார்.

''திருத்தொண்டர் புராணம்'' – அரும்பத ஆராய்ச்சி விசேடக் குறிப்பு : *1934.* பெரிய புராணத்திற்கு திரு.வி.க. அவர்கள் எழுதிய அரும்பதவுரை ஆகும். இதில் அரும்பதங்கள் விளக்கம் செய்யப் பட்டுள்ளன. உரை காணப்பெறாத அரும் பதமில்லை எனலாம். சில இடங்களில் தற்கால விஞ்ஞான நுட்பங்கள் தெளிவு செய்யப்பட்டுள்ளன. ஆராய்ச்சிக் குறிப்புகள், தேவார அகச்சான்றுகள் ஆகியனவும் இடம் பெற்றுள்ளன.

பெரிய புராணத்தில் வரும் சமணர் பற்றிய குறிப்புகள் அரிய ஆராய்ச்சியாகும். பல தவறான கருத்துக்களை இவ்வாராய்ச்சி உடைக்கிறது. இதற்காக ஆசிரியர் சமண நூல்கள் பலவற்றின் கருத்துக்களைக் கேட்டும், படித்தும் அறிந்து இருக்கின்றார். ''சமணமும் சிவநெறி'' ''சைவமும் சிவநெறி'' ''சிவகதி அடைய லாமே'' *(சிந்தாமணி)* ''சிவகதி நாயகன்'' *(சிலப்பதிகாரம்)* போன்ற நூல்களின் சான்றுகளைத் தருகிறார். ''சைவ சமணப் போராட்டம் தமிழ் நாட்டுச் சமணர்களுக்கு எதிரானது அல்ல'' போன்ற கருத்துக்களைத் தெளிவு செய்கிறார்.

ஓலைப் பிரதிகள் பலவற்றை ஆய்ந்து மூலபாடத்தைச் செப்பம் செய்திருக்கின்றார்.

முதலில் 1907-ஆம் ஆண்டிலிருந்து இவ்வரும்பதவுரை மாதந்தோறும் சஞ்சிகையாக வெளிவந்து 1910-ஆம் ஆண்டு முற்றுப் பெற்றது. 1934-ஆம் ஆண்டு முழுநூலாக வெளிவந்தது.

''தமிழ்ச் சோலை'' [முதல் பகுதி] : *(பக்கங்கள் 400; முதற் பதிப்பு 1935)* **இரண்டாம் பகுதி** : *(பக்கங்கள் 382; முதற் பதிப்பு 1935)*

''நவசக்தி'' இதழில் பல்வேறு கால கட்டங்களில் ஆசிரியர் எழுதிய அரசியல், இரங்கல், அன்றாடப் பிரச்சினைகள் பற்றிய கட்டுரைகள் இதில் அடங்கி யுள்ளன. ஒரு சில கட்டுரைகளே சைவ சமயம் பற்றியவையாக உள்ளன.

''நாயன்மார் வரலாறு'' : *(பக்கங்கள் 320; 1937)* பெரியபுராணம் நாயன்மார் வரலாறுகளை உரைநடையில் திரு.வி.க. தந்துள்ளார். தாம் முன்பு வெளியிட்ட பெரிய புராண அரும் பதவுரையில் முன்பகுதியாக இது சேர்க்கப்பட்டிருந்தது. தனி நூலாகவும் 1937-ஆம் ஆண்டில் இது வெளியானது.

''திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் : *(பக்கங்கள் 856; முதற் பதிப்பு 1944) 1883* முதல் 1944 வரை தமிழ் நாட்டுச் சைவ சமய வரலாறு இந்நூல் எனலாம். அக்கால கட்டத்தில் வாழ்ந்த சைவப் பெரியவர்கள் (கதிரைவேற்பிள்ளை முதல் அ.ச. ஞானசம்பந்தனார் வரை) பற்றிய ஆசிரியரின் பதிவுகள் நம் நெஞ்சில் பதிவன. திரு.வி.க. உரையாற்றிய சமய அமைப்புகளின் செயல் முறைகள், அருட்பா – மருட்பா வழக்கு போன்ற

சமயச் சூழல் இந்நூலில் படம் பிடிக்கப் பட்டுள்ளன.

தனி மனிதன் வாழ்க்கையில் சைவமாய் வாழும் நிலை ஒவ்வொரு வரியிலும் காணப்படுகின்றது. சாதாரண நிலையில் பிறந்து – வறுமையில் வாடி – மனைவி இழந்து – ஒரு குலத்துக்கு ஒரு மைந்தனை (அண்ணன் மகனை) இழந்து – தொழிலாளர் சங்கத்தை முன்னின்று நடத்தி – அரசியலில் ஈடுபட்டு – செய்தித்தாள் நடத்தி – ஒவ்வொரு நிமிடமும் சிவசிந்தனையராய் வாழ்ந்த மகானின் அற்புதக் காவியம் இது.

ஒவ்வொரு சைவனும் தினமும் படித்து வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அரியநூல் ஆகும்.

13. பெரிய புராண ஆராய்ச்சி : 1924.

(ஆசிரியர் : வா. மகாதேவ முதலியார்; வெளியீடு – சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்; பக்கம் – 160)

பெரிய புராணத்தைப் பற்றி முதன் முதல் தமிழகத்தில் வெளிவந்த ஆராய்ச்சி நூல் இதுவேயாகும்.

இந்நூலின் பொருளடக்கத்தைப் பார்த்தாலே வியப்பாக இருக்கும். எழுபத் தைந்து ஆண்டுகட்கு முன்பாகவே இப்படி ஒரு விரிவான ஆராய்ச்சி வந்திருப்பது போற்றுதற்குரியது.

(i) நூல் வரலாறு, (ii) நூலாசிரியர் வரலாறு, (iii) நூற்பெயர், (iv) நூற்பொருளும் ஆசிரியர் திறமும், (v) காலம், (vi) நூற்பாயிரம், (vii) செய்யுள் நலம், (viii) சிறப்புச் செய்கைகள், (ix) ஆசிரியர் திருமனப் பாங்கு, (x) ஆசிரியர் பன்முக ஞானம், (xi) சில தடைகளுக்கு விடை.

இந்நூலின் எட்டாவது தலைப்பாகிய சிறப்புச் செய்கைகள் அருமையான பகுதி யாகும். 39 தலைப்புகளில் 101 பக்கங்களில் விரிவாக ஆய்ந்துள்ளார்.

(viii) சிறப்புச் செய்கைகள் :

1) முன்னோன் வாக்கினை மூவிடத்து அமைத்தல்.
2) முன்னோர் நூல்களை அடியொற்றல்.
3) தேவாரப் பதிக முதற்குறிப்புடன் அப்பதிகம் அருளிச் செய்த சமயங் கூறல்.
4) தேவாரப் பாசுரங்கட்குச் சொற்பயன் விரித்தல்.
5) பிறர் மதம் மறுத்தல்.
6) புராணக் கதைகளை இயைத்தல்.

   (உபமன்னியு கதையை வாயுசங்கிதையிலிருந்து எடுத்துக் கூறுகிறார்)
7) சில தலபுராணக் கதைகளை விடுத்தல்.
8) சில தல புராணக் கதைகளோடு மாறுகொளல் (7, 8 தலைப்புகளில் நூலாசிரியர் பல்புராணங்களையும் படித்தறிந்தமை தெரிகிறது).
9) தல நாயகர் பெயர் மொழிதல்.
10) ஆலயங்களின் பெயர் சாற்றல்.
11) சில ஆலயங்களின் முன்னை நிலைமை தெரித்தல்.
12) சிவத் தலங்களுண்மை காட்டி நிலச் சிறப்புரைத்தல்.
13) கண்ணுதற் பெருமான் காட்சி முறை கூறல்.
14) வடநூற்பொருளோடு ஒப்புக்கூறல்.
15) திருக்குறளின் கண் மொழிகளையும் பொருளையும் பொன்னே போல் போற்றல்.
16) பாடுவித்தோன் புகழ் பாவின் நிறுத்தல்
17) நாயன்மார்க்கு அடியார் மாட்டுப் பரிவினை விளக்கல்.
18) நாயன்மார் அநுபவம் கூறல்.
19) நாயன்மார் பெருமை விளங்கச் சொற்பொருள் விரித்தல்:

‘‘நாயனார் ஒருவர் வரலாறு கூறும்வழி எவ்வெச் சொல்லையும் எவ்வெப் பொருளையும் எவ்வெவ் விடத்திற் பொருத்தின் நாயனார் செயலின் அருமைப்பாடு இனிதின் விளங்குமோ அவ்வச் சொல்லையும்,

அவ்வப் பொருளையும் அவ்விடத்திற் பொருத்துவதும் ஆசிரியர் செய்கைகளில் ஒன்றாம்''.

என்று கூறி எடுத்துக்காட்டாக திருநீலகண்ட நாயனார் புராணத்தை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு சொல்லாக விரிவாக விளக்குகிறார்.

20) கதைக்கேற்ப அடிப்படை இடுதல்.

21) நாயன்மார்க்கு நேர்ந்த தீங்கினைக் குறிப்பிற் சாற்றல்.

22) நாயன்மார்க்குத் தீங்கிழைத்த பகைவரை வைதல்.

23) காரணமின்றியே காதல் கூர்ந்தார் எனல்.

24) இடத்திற்குத் தக ஈசற்குப் பெயர் வைத்தல்.

25) கூறுவான் தகுதிக்கேற்ற மொழிகளைப் பொருத்தல்.

26) நாட்டிற்கேனும் நகர்க்கேனும் ஓரியல் கூறி அரும்பொருள் ஒன்று தோற்றுவித்தல்.

27) பழமொழிகள் உரைத்தல்.

28) இடுபொருள் பெறவைத்தல்.

29) பல்பொருள் பெறவைத்தல்.

30) குறிப்புப் பொருள் பெற வைத்தல்.

31) உள்ளுறை பெற வைத்தல்.

32) கருத்துடை அடையும் தகுஞ் சொல்லும் புணர்தல்.

33) ஒருசொல் பலவாறு பிரிந்து பலபொருள் பட மொழிதல்.

34) அரும்பதப் பிரயோகம் (64 சான்றுகள் காட்டியுள்ளார்).

35) அருந்தொடர்ப் பிரயோகம் (56 சான்றுகள்)

36) வடசொற் பிரயோகம் (56 சான்றுகள்)

37) அரிய இலக்கணம் (23 சான்றுகள்)

38) அநுவயம்.

39) அலங்காரம்.

மேற்கூறிய முப்பத்தொன்பது தலைப்புகள் ஒவ்வொன்றினைப் பற்றியும் தனித் தனியாக ஆய்வு செய்யலாம்.

''ஆசிரியர் திருமனப் பாங்கு'' என்ற ஒன்பதாவது தலைப்பில் எட்டு உட்தலைப்புகள் உள்ளன.

1) தேயப்பற்று

2) குலப்பற்று

3) மொழிப்பற்று

4) புலவர் மாட்டுப் பற்று

5) நூற்பற்று

6) சைவப் பற்று

7) சிவபத்தி

8) அடியார் பத்தி

''ஆசிரியர் பன்முக ஞானம்'' என்ற ஒன்பதாவது தலைப்பில் எட்டு உட்தலைப்புகள் உள்ளன.

1) இசைநூல் ஞானம்

2) மருத்துவ நூல் ஞானம்

3) கணிதநூல் ஞானம்

4) மானச தத்துவநூல் ஞானம்

5) வியவகார ஞானம்

6) உறுப்பு நூல் ஞானம்

7) திருக்கோயில் அமைப்பு நூல் ஞானம்

8) நீற்றியல் ஞானம்

''சில தடைகளுக்கு விடை'' என்ற பத்தாவது தலைப்பில் நான்கு தடைகளுக்கு விடைகள் தந்துள்ளார். தடைகளாவன:

1) சிவகுமாரன் கருவிலிருந்து அவதரித்தான் எனல் அடாது.

2) திருஞானசம்பந்த அடிகள் சமணரைக் கழுவேற்றினர் எனல் அடாது.

3) குங்குலியக் கலய நாயனார் தாலி விற்றமை கூறிய ஆசிரியர் மீட்டும் அதனைப் பெற்றமை குறிப்பானுங் கூறாமை முறையன்று.

4) மங்கையர்க்கரசியார்க்குக் கணவன் வழிச்சேறல் கடனாயிருப்ப அவற்கு விருத்தமாகச் சைவ சமயத்தில் நின்றமை அடாது.

14. சிவபூசை விளக்கம் : 1928.

(ஆசிரியர் : யாழ்ப்பாணம் அச்சுவேலி ஸ்ரீலஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், வெளியீடு – காந்தளகம், சென்னை; பக்கம் – 180; விலை ரூ. 50/- இரண்டாம் பதிப்பு 1999)

சிவ பூசை செய்யும் ஒவ்வொரு வரிடமும் இருக்க வேண்டிய நூல்.

பொருளடக்கம் : 1) சிவபூசையின் பொதுவிதி, 2) சூரிய பூசை, 3) சகளீகரணம், 4) துவார பூஜை, 5) பூதசுத்தி, 6) தூலதேக சுத்தி, 7) தானசுத்தி, 8) திரவிய சுத்தி, 9) மந்திர சுத்தி, 10) இலிங்க சுத்தி, 11) அபிஷேகம், 12) சிவாசன உறுப்பு, 13) சிவாசனம், 14) சக்தி மண்டலம், 15) சிவ மூர்த்தி, 16) நிஷ்கள சிவம், 17) நிஷ்கள சத்தி, 18) அருவுருவத் திருமேனி, 19) அங்கபேதம், 20) மந்திர மூர்த்தி, 21) கலா மூர்த்தி, 22) அத்துவா மூர்த்தி, 23) மாத்ருகா மூர்த்தி, 24) மனோன்மணி, 25) மகேசுவர மூர்த்தி, 26) இருபத்தைந்து மூர்த்தங்கள், 27) கணேசர், 28) வல்லபை, 29) சுப்பிரமணியக் கடவுள், 30) ஒடுக்க முறை என்று தலைப்புகள் அமைந்துள்ளன.

15. சேக்கிழார் : 1933

(ஆசிரியர் : சி.கே. சுப்பிரமணிய முதலியார்; வெளியீடு – கோவை தமிழ்ச் சங்கம்; பக்கம் – 248; விலை ரூ. 3/-)

''சேக்கிழார்'' நூல் சிவக்கவிமணி அவர்கள் சென்னை பல்கலைக்கழகத்தில் 1930-ஆம் ஆண்டு ஜனவரி 31, பிப்ரவரி 1, 3 ஆகிய மூன்று நாட்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் நூல் வடிவம் ஆகும்.

''பெரிய புராண ஆசிரியரும் அவர் காலமும்'' என்பது முதல் நாள் சொற்பொழிவின் கட்டுரை வடிவம். சேக்கிழார் காலத்திய அநபாயன் இரண்டாம் குலோத்துங்கனே என்று இலக்கிய, கல்வெட்டு சான்றுகளால் சிவக்கவிமணி நிறுவுகிறார். அக்காலக் கட்டத்தில் எங்கும் சமண சமயம் என்பதனை விரிவாக விளக்குகிறார்.

''பெரிய புராணமும் அதன் கலை ஞானங்களும்'' என்பது இரண்டாவது கட்டுரையாகும். அறுபத்து நான்கு கலைகளும் பெரியபுராணத்தில் எவ்வாறு காணக் கிடக்கிறது என்று எழுதுகிறார். முதலில் அரசியல், அரசமரபினர், அரசியல் நெறி முறைகள், அமைச்சர் பணிகள், நீதி செலுத்தும் முறை அரசன் கடமைகள் ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

இந்தக் கட்டுரையை அரசியல் – சமூக இயல் என ந. சஞ்சீவி இரண்டாகப் பிரிப்பர். அப்படியானால் இரண்டாம் பகுதி சமூக இயல் ஆகும். இதில் முதலில் வருவது ''இல்லற வாழ்க்கையும், இல்லற நிலையும்'' ஆகும். திருமணம் நிகழும் முறை, மனைவியின் கடமைகள் முதலிய செய்திகள் பெரிய புராணச் சான்றுகளுடன் கூறப்பட்டுள்ளன. சமூக இயலின் முக்கிய அங்கமான சாதி ஒழிப்பு, தீண்டாமை பற்றியும், இசை, கூத்து முதலிய கலைகள் பற்றியும் விளையாட்டுக்கள் பற்றியும், மருத்துவ முறை பற்றியும் கூறுகிறார். அகப்பொருளை இல்லற இயலோடு சேர்க்காமல் ஏனோ இறுதியில் சேர்த்திருக்கிறார். உண்மை வரலாற்றின் பின்னணியில் பெரிய புராணம் எழுந்தது என்ற செய்தியினைக் கட்டுரையின் நிறைவில் வைக்கிறார். பரஞ்சோதி, குணபரன், கரிகாலன், அதிகன், மலாடர் கோமான் ஆகியோர் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும், தேவாரம் முதலிய திருப்பதிகங்களையும் ஆதாரங்களாக முன் வைக்கிறார்.

மூன்றாம் கட்டுரை ''கவிச் சிறப்பும் பயனும்'' என்பதாம். இதில் அணிகள், உவமை, உருவகம், பத்திச் சுவை, நாடக இயல், நடைச் சிறப்பு, செய்யுள் நடை உரைநடையே, படிப்போரை உயர்ந்த நோக்கத்தில் செலுத்துதல், சொல்லும் பொருளும் ஒத்தியலுதல், பெருங்காவியம், காவிய இலக்கணம் (வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல், முதல் – வழி – சார்பு; தொகை – வகை – விரி; நூற்பயன் – அறம் – பொருள் – இன்பம் – வீடு; தலைவன் – தலைவியர்; குறிஞ்சி – மருதம்

– முல்லை – நெய்தல்; பெரும்பொழுது, சிறுபொழுது, பிற அமைப்புகள்) தமிழ்மொழிப்பற்று, தமது நாட்டினைப் பாராட்டுதல், தாய் நாட்டின் சேவை, அரசனைப் பாராட்டல், முன்னோர் மொழிபேணல், பின்வந்த தமிழ்வாணர் பாராட்டிய முறை, இடைச் செருகல்கள் என முழுமையாக ஆய்வு செய்கிறார்.

இதன் மற்றொரு உட்பிரிவான ''பயன்''இல் அறிவின் முடிபுகள் சித்தாந்தம், சித்தாந்தங்களின் இலக்கியம் பெரியபுராணம், தீமையும் நன்மையும் யாவை யாவை, சைவ உண்மைகளின் விளக்கமும் புறமதக் கண்டனமும், மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன், உலக மேனிலைக்கும் அன்பே காரணம், அன்பே சிவமாவது, சிவத்தன்மை அளிப்பது பெரியபுராணம் என முடிக்கிறார்.

''இடைச் செருகல்கள்'' என்ற தலைப்பில் *33* பாடல்களை மிகவும் அச்சத்துடன் ஒதுக்குகிறார். இடைச் செருகல்கள் எனக் கண்டுபிடித்து சிவக்கவிமணி மேற்கொண்ட அளவுகோல்கள்; வாக்கும் பாட்டின் போக்கும், சேக்கிழாரது பிறநயப் பாடுகளும் இட அமைதியும், பல பிரதிகளின் ஒப்புமையும் பிறவுமாம்.

16. தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளை அவர்களின் திருமுறை ஒளிநெறி நூல்கள் :

வெளியீடு – சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை)

பன்னிரு திருமுறைகளிலும் ஒவ்வொரு திருமுறையாக எடுத்துக்கொண்டு அதில் கையாளப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லும் எந்த எந்த பதிகத்தில் வருகிறது என்று திருமுறைக் கலைக்களஞ்சியமாகத் தணிகைமணியவர்கள் தந்துள்ளார்கள்.

தேவார ஒளிநெறி – சம்பந்தர் : தொகுதி *1 (350* பக்கம் *1946)*

தொகுதி *2 (593* பக்கம் *1950)*

தொகுதி *3 (1954)*

இம்மூன்று தொகுதிகளிலும் *466* ஆராய்ச்சித் தலைப்புகள் தரப்பட்டுள்ளன.

முதல் பாகத்தில் கணபதி, அக்கினி, அகப்பொருள், அங்கங்களின் பயன், அடியார், அடியாரும் இறைவனும் இறைவன், அடுக்குச்சொற்கள், அரக்கர், அரசர், அருவி, அருள், அறம், அன்பு, ஆலயங்கள், ஆற்றுப்படைகள், ஆறுகள், இசை, இந்திரன் முதலான *100* தலைப்புகள் ஆராயப்பட்டுள்ளன. கணபதி என்ற சொல் *5* பாடல்களில் வந்துள்ளன என்கிறார் ஆசிரியர்.

இரண்டாம் பாகம் ''சிரி'' முதல் ''தெ'' வரை *165* தலைப்புகளைக் கொண்டது. ''திருநாமங்கள்'' என்ற தலைப்பில் ''தந்த மதத்தவன்'' என்ற சொல்லும் ''திரு உருவம்'' என்ற தலைப்பில் ''தடக்கை'' என்ற சொல்லும் எங்கெங்கு வந்துள்ளன என்று ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். இது போல ஏனைய *163* தலைப்புகளும் ஆராயப் பட்டுள்ளன.

இம்மூன்று தொகுதிகளும் *1600* பக்கங்களைக் கொண்டவையாகும்.

தேவார ஒளிநெறி – அப்பர்

தொகுதி *1 1962.*

தொகுதி *2 1962.*

1086 பக்கங்களைக் கொண்ட இவ்விரண்டு தொகுதிகளிலும் *190* தலைப்புகள் ஆராயப்பட்டுள்ளன.

ஒளிநெறி – சுந்தரர் : *1962.*

கணபதி முதல் ஜீவராசிகள் வரை *244* தலைப்புகள் ஆராயப்பட்டுள்ளன.

திருவாசக ஒளிநெறி : *1987.*

சிவபிரான் பகுதியில் *113* தலைப்புகளும், மணிவாசகப் பகுதியில் *33* தலைப்புகளும், திருவாசக ஆய்வில் *51* தலைப்புகளும், திருவாசக ஆய்வில் *51* தலைப்புகளும், பிற பொருட்பகுதியில் *231* தலைப்புகளும், இலக்கணப் பகுதியில் *33* தலைப்புகளும் ஆராயப்பட்டுள்ளன.

ஒப்புமைப்பகுதியில் அப்பர், தேவாரம், திருப்புகழ், திருக்குறள், சிந்தாமணி, சங்க இலக்கியம், கந்தபுராணம், சிலப்பதிகாரம், சாத்திரங்கள் ஆகியவற்றுடன் திருவாசகம் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது.

திருக்கோவையார் ஒளிநெறி : *1970* *(பக்கம் 380)*

சிவபிரான் பகுதியில் 44 தலைப்புகளும், தில்லை முதலாம் தலப்பகுதியில் 10 தலைப்புகளும், அகப்பொருள் பகுதியில் 118 தலைப்புகளும் பிறபொருட்பகுதியில் (அக்னி முதல் சீவராசிகள் வரை) 142 தலைப்புகளும், இலக்கணப் பகுதியில் 58 தலைப்புகளும் ஆராயப்பட்டுள்ளன. ஒப்புமைப் பகுதியில் திருக்கோவையாருடன் பிற இலக்கியங்கள் மேற்கோள்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளன.

திருவிசைப்பா ஒளிநெறி : *(பக்கம் உஅசு)*

ஒப்புமைப்பகுதி *(28 தலைப்புகள்)*, சிவபிரான் பகுதி *(80)*, தலப்பகுதி *(22)*, அகப்பொருள்பகுதி *(7)*, பாடினோர் பகுதி *(9)* இலக்கணப் பகுதி *(34)*, பிறபொருட்பகுதி *(206)* என ஆராயப்பட்டுள்ளன.

17. சிவன் : 1947

(ஆசிரியர் : ந.சி. கந்தையா, பக்கங்கள் 100; விலை ரூ. 1; வெளியீடு – சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.)

இந்நூல் அளவில் சிறியதாக இருந்தாலும், வரலாற்று நோக்கில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மிகப் பழங்காலம் தொட்டுச் சைவசமயம் – சிவ வழிபாடு – உலகின் பல பாகங்களில் பரவியிருந்தது என்பதனைப் பல சான்றுகளுடன் ஆசிரியர் நிறுவுகிறார். இதன் உண்மையை மேலும் ஆய்ந்து வரலாற்று ஆசிரியர்கள் இக்கருத்துக்களை ஒட்டியோ, மறுத்தோ ஆய்வுகள் வெளியிட்டிருக்க வேண்டும். ஏனோ ஒரு நூல்கூட அப்படி வரவில்லை. அதுவரை நாம் இந்நூலின் கருத்துக்களுக்கு முதன்மை கொடுக்க வேண்டும்.

18. பெரிய புராண ஆராய்ச்சி : 1948

(ஆசிரியர் : மா. இராசமாணிக்கனார்; வெளியீடு – பாரி நிலையம்; பக்கம் – 400)

''பெரிய புராணத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களில் இராசமாணிக்கத்தின் ஆராய்ச்சியே விழுமியது – விரிந்தது – பொருள் செறிந்தது. அவர் தம் முயற்சியால் பெரிய புராணம் மீண்டும் சரித்திரப் புராணமாய் உயிர்த்தெழுந்தது.''

''பெரிய புராணம் ஒரு பெருஞ்செழும்புலம் – தமிழ்ப்புலம், அதை உழுவதற்கு வெறும் கல்வி கேள்வி மட்டும் போதா; வேறு பல பண்பாடுகள் தேவை – புலவர் இராசமாணிக்கம் அஞ்சா நெஞ்சம் கொண்டு பெரிய புராணப் புலத்தில் இறங்கினர்; ஊக்கமும் உறுதியும் கொண்டு அதை உழுதனர். அதில் அன்பு விதை விதைத்தனர். அருள் நீர் பாய்ச்சினர். கலைக்கதிர் பொழிந்தனர். எழுந்தது ஆராய்ச்சிப் பயிர். விளைந்தது சரித்திரச் சாலி. அமுதப் பசும் பரவை காட்சியளிக்கிறது. கண்ணுக்கும் கருத்துக்கும் மூளைக்கும் விருந்து; நல்விருந்து.''

''பெரிய புராண ஆராய்ச்சி காலக் கணக்கின் மீது பெருங்கவலை செலுத்தியிருந்தது. காரணம் நமது நாட்டுச் சரித்திரக் காலங்கள் கருக் கொண்டுள்ளமையும், அவை இன்னும் நன்முறையில் உருக் கொள்ளாமையுமாகும். இந்நூலாசிரியர் கருவை உருவாக்க விண்ணும் மண்ணும் அதிரச் சுழன்று சுழன்று உழைத்த உழைப்பு அதிகம்''. என்று திரு.வி.க. அவர்களாலேயே இந்நூல் பெரிதும் போற்றப்பட்டது என்றால் இதனைப் பற்றி வேறு என்ன சொல்ல இருக்கின்றது? நூலில் தொட்ட தொட்ட இடமெல்லாம் வரலாற்று ஆய்வுகள்; கல்வெட்டுச் செய்திகள்.

''பெரிய புராணம் தமிழர் வரலாற்றில் 600 வருடகால விவரங்களை ஓரளவு அறிவிக்கும் ஆதார நூல் என்றால் தவறாகாது'' என்கிறார் மா. இராசமாணிக்கனார். அது எவ்வாறு என்பதனை மேலும் விளக்குகிறார்.

''பெரிய புராணத்தில் காணப்படும் போர்கள் – பஞ்சங்கள் – ஊராட்சி முறை – நாணய முறை – சமுதாய வாழ்க்கை – சமயநிலை முதலியன பல்லவர் கால உண்மை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை என்பதை அறிந்தேன்''.

இராசமாணிக்கனார் பல்வேறு ஆராய்ச்சி நூல்களையும், பல்லவர் காலப் பட்டயங்

களையும், கல்வெட்டுகளையும், இலக்கிய நூல்களையும் படித்துவந்தபொழுது மூவர் திருமுறைகளில் வரும் சில குறிப்புகளும், பெரிய புராணத்தில் வரும் பல குறிப்புகளும் கல்வெட்டு – பட்டயக் குறிப்புகளுடன் ஒன்றுபடுதலைக் கண்டு வியந்து இவ்வாராய்ச்சியைத் தொடங்கினார். முழுமையாக அனைத்துக் குறிப்புகளையும் ஒரு சேரப் பார்த்து ஆய்ந்து ''சோழப் பெருநாட்டின் முதலமைச்சராக இருந்து தாம் பல வழிகளில் அறிந்த பிற செய்திகளைக் கொண்டுமே சேக்கிழார் வரலாற்றுப் பகுதிகளை தமது பெருநூலில் பாடினார் என்பது விளக்கமாயிற்று'' என்று முடிவு கட்டுகிறார்.

இந்நூல் பதினோரு தலைப்புகளைக் கொண்டது.

1. ஆராய்ச்சிக்கு உரிய மூலங்கள்.

2. சேக்கிழாரும் அவர் காலமும்:

ஆய்வு முடிபுகள் : சேக்கிழார் இயற்பெயர் 'இராமதேவன்' என்பதாகலாம். சேக்கிழார் காலத்து அரசன் 'அநபாயன்' என்ற பெயர் சிறப்புப் பெயர் கொண்ட இரண்டாம் குலோத்துங்கன் ஆவான். சீவக சிந்தாமணி பற்றி எழுந்தது பெரிய புராணம் என்ற கூற்று பொருந்தாது. சேக்கிழார் புராண ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார் என்ற கூற்று பொருந்தாது.

3. சுந்தரர் காலம்:

ஆய்வு முடிபுகள் : சுந்தரர் மூன்றாம் நந்திவர்மன் காலத்தவர். இந்த ஒரு ஆய்வை மாதிரிக்குப் படித்துப் பார்த்தாலே ஆய்வறிஞரின் கடும் உழைப்பு தெரியவரும். தன் முன் கிடைத்த பல்வேறு ஐயங்களையும் தொகுத்து ஒவ்வொன்றாக விலக்கி முடிவு செய்கிறார்.

4. நம்பியாண்டார் நம்பி காலமும், திருமுறைத் தொகுப்பும்:

ஆய்வு முடிபுகள் : நம்பி தொகுத்தவை முதல் ஏழு திருமுறைகளே. நம்பிக்குப் பிற்பட்டவர் என்று கருதத்தக்கவர் பாடல்களை எல்லாம் நம்பியே தொகுத்தார் என்பது தவறான கூற்று. *8, 9, 10, 11*-ஆம் திருமுறைகளின் முறை வைப்புத் தவறானது. அவை நம்பிக்குப் பின் கி.பி. *11, 12, 13* -ஆம் நூற்றாண்டுகளில் நாளடைவில் திருமுறைகளாகச் சேர்க்கப் பட்டிருத்தல் வேண்டும்.'

5. அறுபத்து மூவர் காலம் : *(கி.பி 350 – 860)*

ஆய்வு முடிபுகள் : (i) அப்பர் – சம்பந்தர்க்கு (கி.பி. *400–600*) முற்பட்டவர் *17* பேர் (ii) அப்பர் – சம்பந்தர் காலத்தவர் (கி.பி. *600–660*) *11* பேர் (iii) சுந்தரர் காலத்தவர் (கி.பி. *840–865*) *13* பேர் (iv) ஏனைய 22 பேரும் அப்பர் – சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தினர் (கி.பி. *660–840*)

அறுபத்து மூவரையும் பட்டியலிட்டு யார் யார் எந்த எந்தக் காலம் என்று குறிக்கிறார். (v) கோச்செங்கணான் காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி எனலாம்.

6. பல்லவர் காலச் சைவ சமய நிலைமை : கி.பி. *400* முதல் *900* வரை ஆண்ட பல்லவ மன்னர்களைக் குறிப்பிட்டு அவர்கள் சைவத்திற்கு ஆற்றிய தொண்டுகளையும், அக்கால கட்டத்தில் நாயன்மார் வழிபாடு, மக்களுக்கு நாயன்மார் பெயர் இருத்தல் ஆகிய செய்திகளைக் கல்வெட்டுகளின் துணை கொண்டு நிறுவுகிறார்.

7. சோழர் காலத்துச் சைவ சமயநிலை : *(கி.பி. 900 – 1133)*

ஆய்வு முடிபுகள் : இப்பகுதியில் சோழர் புதினவாக எடுப்பித்த கற்றளிகள், சிற்றரசரும் பிறரும் எடுப்பித்த கற்றளிகள், புதுப்பிக்கப் பெற்ற கோவில்கள், செம்பியன் மாதேவியார் புதுப்பித்த – சிறப்பித்த கோவில்கள், விழாக்கள் நடைபெற்ற கோவில்கள், மடங்கள் இருந்த பதிகள், சிவயோகியரை உண்பித்த கோவில்கள், தவசியாரை உண்பித்த கோவில்கள், மாகேசுவரரை உண்பித்த கோவில்கள், அபூர்விகளை உண்பித்த தலங்கள், நாயன்மார் பூசிக்கப் பெற்ற கோவில்கள், திருப்பதிகம் ஓதப்பெற்ற கோவில்கள், நடனமாதரைப் பெற்றிருந்த கோவில்கள், கல்லூரிகள், கோவில்களில் விளக்கப் பெற்ற நூல்கள், நரலோக வீரன்

திருப்பணிகள், திருக்கைக் கோட்டி நாயன்மார் சிற்பங்கள், கீழக் கடம்பூர்ச் சிற்பங்கள், கங்கை கொண்ட சோழபுரம் சிற்பங்களின் காலம், நாயன்மார் பற்றிய ஓவியங்கள், இவற்றின் காலம் – என்ற உட்தலைப்புகளில் 243-க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்களின் துணைகொண்டு ஆய்ந்திருக்கின்றார். அது மட்டுமல்லாது 155-க்கும் மேற்பட்டவர்களுடைய பெயர்கள் அக்கால கட்டத்தில் நாயன்மார் பெயர்களைக் கொண்டிருந்தன என்று கல்வெட்டுகளின் சான்றுகளோடு கூறுகிறார்.

8. நாயன்மார் வரலாறுகட்குரிய மூலங்கள் : (i) திருமுறைகள் (ii) கல்வெட்டுக்களில் கண்ட நூல்கள் (இராஜராஜ விஜயம், இராஜராஜேசுவர நாடகம், கன்னிவன புராணம், பூம்புலியூர் நாடகம், நீடூர் புராண மாளிகை) (iii) பல்லவர் – சோழர் காலத்துப் பிற தமிழ் நூல்கள் (நந்திக் கலம்பகம், தில்லை உலா) (iv) வடமொழி நூல்கள் (மத்த விலாசம், அவந்தி சுந்தரீ கதா) (v) சமண பௌத்த சமய நூல்கள்.

9. மூலங்களுக்கும் பெரிய புராணத்திற்கும் உள்ள வேறுபாடுகளும் அவற்றின் காரணங்களும் :

ஆய்வு முடிபுகள் :

(i) முன்னோர் குறியாத பல புதிய செய்திகளைக் கூறுதல்; இதில் 13 செய்திகள் புதியன என்கிறார் இராசமாணிக்கனார்.

(ii) முன்னோர் குறிப்பாகக் கூறியவற்றைத் தெளிவாக விளக்குதல்; 8 செய்திகள் உள.

(iii) முன்னோர் குறித்த சிலவற்றை மாற்றிக் கூறுதல்; 5 செய்திகள் உள.

10. வரலாற்றுச் சிறப்புடைய நாயன்மார் பற்றிய செய்திகள் : *(கி.பி. 400 – 865)* நாயன்மார் வரலாறுகளை எடுத்துக் கொண்டு அவர் தம் வரலாற்றுச் செய்திகள் சேக்கிழார் கூற்றோடு, கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், பிற இலக்கியங்கள் எவ்வாறு இயைபுபடுகின்றன என்பதை மிக ஆழமாக இராச மாணிக்கனார் விவரித்துள்ளார். ஒவ்வொரு சைவரும் ஆழ்ந்து அனுபவிக்க வேண்டிய பகுதி ஆகும் இது. எடுத்துக்காட்டாக ஐயடிகள் காடவர்கோனைப் பற்றி ஆசிரியர் எவ்வாறு வரலாற்றோடு பொருத்திக் காட்டுகிறார் என்று பார்ப்போம்.

(i) **''ஐயடிகள் காடவர் கோன்'' :**

''இவர் வடமொழி, தென் மொழிகளில் வல்லவர்; வடபுலம் கைக்கொண்டவர்; மகனிடம் அரசை ஒப்புவித்துச் சிவத்தல யாத்திரை செய்தவர் என்பன நுட்பமான செய்திகள். இவை சேக்கிழார்க்கு எங்ஙனம் கிடைத்தன?''

''பல்லவப் பேரரசு ஒழிந்த பிறகு அம்மரபினர் ஆதித்தன் கால முதல் சோழப் பேரரசில் உயர் அலுவலாளராக வேலை பார்த்து வந்தனர். அவருள் சேக்கிழார் காலத்துப் பல்லவன் – மோகன் ஆட்கொல்லி என்ற குலோத்துங்க சோழக் காடவராயன் என்பவன். அவன் நிலைமை சேக்கிழார் காலத்தில் படிப்படியாக உயர்ந்தது என்பது அவனுடைய கல்வெட்டுக்களால் நன்கு புலனாகிறது. அக்காடவராயன் திருநாவலூர், திருவதிகை, திருமுதுகுன்றம் முதலிய இடத்துச் சிவன் கோவில்கட்குத் திருப்பணி செய்த சிவபக்தன். அவன் காஞ்சிப் பல்லவர் மரபினன். ஆதலின் சேக்கிழார் அவன் வாயிலாக, அவன் முன்னோரான ஐயடிகள் காடவர் கோனைப் பற்றி அவன் மரபில் வழிவழியாகச் சொல்லப்பட்டு வந்த வரலாற்றைத் தெரிந்திருக்கலாம்.

(ii) சிறுத்தொண்டர் வரலாற்றில் உள்ள தெய்வீகச் செயல் ஒழிந்த ஏனைய அனைத்தும் கல்வெட்டுச் சான்று கொண்டன என்று நிரூபிக்கிறார்.

(iii) ''நெல்வேலி வென்ற நின்ற சீர் நெடுமாறன்'' என்பார் சுந்தரர். இந்த நெல்வேலிப் போரை விளக்கமாகச் சேக்கிழார் ஐந்து பாடல்களில் பாடியுள்ளார். சேக்கிழார் குறிக்கும் நெல் வேலிப்போர் வர்ணனையும் கூரம் பட்டயம் குறிக்கும் பெருவளநல்லூர்ப் போர் வருணனையும் பல இடங்களில் ஒன்றுபட்டிருத்தல் படித்து இன்புறத்தக்கது.

(iv) ''பூசலார் கோயில் கட்ட விரும்பிப் பொருள் தேடமுயன்றும் கிடைக்கவில்லை என்பது சேக்கிழார் கூற்று. இதற்கு இராச சிம்மன் காலத்தில் உண்டான கொடிய பஞ்சமே காரணம் ஆகும். அப்பஞ்சத்தின் கொடுமையை அவனது அவைக்களப் புலவரான தண்டி தாம் இயற்றியுள்ள அவந்தீசுந்தரி கதையில் விளக்கியுள்ளார்.

இப்படி ஒரு சிறு செய்தியாக இருந்தாலும் இராசமாணிக்கனார் தேடிப் பிடித்துப் பொருத்துகிறார்.

(iv) **கழற்சிங்கர் :**

''கழற்சிங்கர் பட்டத்தரசி உரை சிறந்து உயர்ந்தவள்; சாயல் மாமயில் போல்வாள்; மதுமலர்த் திருஒப்பாள்; காதல் மாதேவி'' என்பன சேக்கிழார் தரும் குறிப்புகள்.

இவற்றை விளக்க வந்தது போல் உள்ள பாகூர்ப்பட்டயக் கூற்றுக் காண்க. ''திருமாலுக்கு அமைந்த இலக்குமி போல இராட்டிர கூடர் குடும்பத்திற் பிறந்த சங்கா என்ற மெல்லியலாள் நந்திவர்மர்க்கு மனைவியாக வாய்த்தாள். அவள் பொறுமையில் நிலமகளை ஒத்தவள். தம் தாய் எனக் குடிகளாற் பாராட்டப் பெற்றவள்; அரசனது நற்பேறே உருவெடுத்தாற்போல வந்தவள்; பல கலைகளிலும் வல்லவள்; அவள் பெற்ற மகனே நிருபதுங்கவர்மன்''.

ஒரு அரசியை வருணிப்பதில் கூட சேக்கிழார் பெருமான் பட்டயச் சான்றுகளைக் கொண்டிருக்கிறார் என இராசமாணிக்கனார் வியக்கிறார். நாமும் சேர்ந்து வியக்கிறோம். ''இதைப் பொருத்திக் காட்டினாரே'' என்று அவரையும் நினைந்து வியக்கிறோம்.

(vi) மனுநீதிச் சோழன் வரலாறு அப்படியே திருவாரூர்க் கல்வெட்டில் உள்ளது.

''சேக்கிழார் வாதாபிப் போரைக் குறியாதிருப்பின் சம்பந்தர் காலம் அறிந்திருத்தல் இயலாது; அங்ஙனமே 'குணபர ஈசுவரம்' குறித்திராவிடில் அப்பர் காலம் அறிந்திருத்தல் இயலாது. சேக்கிழார் வரலாற்று உணர்ச்சிஉடையவர் என்பதற்கு இவ்விரண்டு சிறந்த வரலாற்றுக் குறிப்புகளே போதிய சான்றாகும்'' என்று இப்பகுதியை முடிக்கிறார் இராசமாணிக்கனார்.

2. சேக்கிழாரது நூலாசிரியப் பண்பு :

இப்பகுதியில் சேக்கிழாரின் தமிழ் நூல் புலமை, சமயநூற் புலமை, பலகலைப் புலமை, சேக்கிழார் செய்யுட் சிறப்பு இடம் பெற்றுள்ளன.

இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் கீழ்வரும் செய்திகள் காணப்படுகின்றன.

1. அறுபத்து மூவர் ஊர் – மரபு – தொண்டு – காலம் 2. அறுபத்து மூவர் – பலவகைத் தொண்டர் 3. அடியார் – அரசர் காலவரையறை 4. அடியார் பெயர்கள் 5. நாயன்மார் மரபுகள் 6. பல நாட்டு அடியார்கள் 7. அப்பர், சுந்தரர் செய்த சிவத்தல யாத்திரைக் குறிப்பு 8. சுந்தரர் தொகை பாடிய சந்தர்ப்பம் 9. இராசராசபுரத்துச் சிற்பங்கள் 10. ஆளுடை நம்பி ஸ்ரீ புராணம்.

இப்பிற்சேர்க்கையைப் பற்றித் திரு.வி.க. தனித்துப் பாராட்டியுள்ளார். ''நூலின் இறுதியில் ஓர் அரிய சேர்க்கை பொலிவு தருகிறது. அஃது ஆராய்ச்சியாளர்களுக்குக் கொழு கொம்பாகும். அது திறம்படத் தொகுக்கப் பெற்றிருக்கிறது''.

பெரிய புராணம் ஒரு வரலாற்றுப் பெட்டகம் என்று நூலில் ஒவ்வொரு பக்கமும் பறை சாற்றுகின்றது. இந்நூலைத் தாண்டி வரலாற்றுச் செய்திகள் தாங்கி இன்னொரு நூல் இதுவரை வரவில்லை என்பதே இந்நூலுக்குப் பெருமையாகும்.

19. திருமந்திர மாநாட்டு மலர்கள்

திருவாவடுதுறை ஆதீன வெளியீடு 1954 முதல் 1964 முடிய

திருமந்திர இலக்கிய வரலாறு எழுதப் பெற்றால் 1954 முதல் 1964 முடிய உள்ள காலத்தைப் பொற்காலம் என்று கூறலாம். இக்காலகட்டத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தில் ஆண்டு தோறும் ஜனவரி மாதம் நடைபெற்ற மூன்று நாள் திருமந்திர

மாநாட்டு நிகழ்ச்சிகளில் திருமுறைகளில் ஊறித் திளைத்த பேரறிஞர்கள் அனைவரும் பங்கு பெற்றனர். அப்பேரறிஞர்களின் பேச்சுகள் கட்டுரை வடிவம் பெற்று முழு நூலாக வெளிவந்தது சைவவுலகு பெற்ற பெரும் பேறாகும். பதினோரு ஆண்டு மாநாட்டுக் கட்டுரைகளை ஒட்டு மொத்தமாகத் தொகுத்து பெருநூலாக வெளியிட்டால் திருமந்திரக் களஞ்சியமாக அமையும்.

முதல் மாநாட்டு மலர் மட்டும் மாநாடு நடைபெற்ற ஆண்டு *(1954-ஆம் ஆண்டில்)* வெளியிடப்பட்டது. பிறமலர்கள் மாநாடு நடந்த ஆண்டிற்கு அடுத்த ஆண்டு *(1955-ஆவது ஆண்டு நிகழ்ச்சிகள் 1956-ஆம் ஆண்டில் நூலாக வெளிவந்தது)* நூலாக வெளிவந்தன.

முதல் மாநாட்டு மலர் (1954)

31.1.1954 ... ஆறுமுக நாவலர் (தலைமை); க. வச்சிர வேல் முதலியார் (முதல் தந்திரம்); ஜி. சுப்பிரமணிய பிள்ளை (இரண்டாம் தந்திரம்) இ.எஸ். வரதராஜையர் (ஐந்தாம் தந்திரம்).

1.2.54... ஈசான சிவாசாரியார் (தலைமை); ச. தண்டபாணி தேசிகர் (மூன்றாம் தந்திரம்); முத்து சு. மாணிக்க வாசக முதலியார் (ஆறாம் தந்திரம்) சி. அருணைவடிவேல் முதலியார் (எட்டாம் தந்திரம்),.

2.2.54... ஆறுமுக நாவலர் (தலைமை); இளவழகனார் (ஒன்பதாம் தந்திரம்); கி.வா.ஜகந்நாதன் (ஏழாந்தந்திரம்); ச. தண்டபாணி தேசிகர் (நான்காம் தந்திரம்).

இரண்டாவது மாநாட்டு மலர் (1956)

21.1.55 ....கே.எஸ். இராமசாமி சாஸ்திரி (தலைமை); த.ச. மீனாட்சி சுந்தரம் (தொடக்க உரை); ஆறுமுக நாவலர் (ஒழுக்க நிலை); லெ.ப. கரு. இராமநாதன் செட்டியார் (ஐந்தொழில்); ச. தண்டபாணி தேசிகர் (அட்டாங்க யோகம்).

22.1.55 .... A. இராமநாதன் பிள்ளை (தலைமை); ஈசான சிவாசாரியார் (யந்திரமும் மந்திரமும்); ஜி. சுப்பிரமணிய பிள்ளை (நால்வகை நெறி); த.ச. மீனாட்சி சுந்தரம் (சிவகுருதரிசனம்).

23.1.55 .... ஈசான சிவாசாரியார் (தலைமை); தே.ஆ. ஸ்ரீநிவாசாசாரியார் (இறைவனும் ஆன்மாவும்); வீர. சிவ சுப்பிரமணியம் (அவஸ்தைகள்); கி.வா. ஜகந்நாதன் (திருவைந்தெழுத்தும் திருக்கூத்தும்)

மூன்றாவது மாநாட்டு மலர் (1957)

11.1.56 ... எஸ். ராமசாமி நாயுடு (தலைமை); எஸ். கோபாலஐயர் (தொடக்க உரை); க. வச்சிரவேல் முதலியார் (உபதேசம்); ச. தண்டபாணி தேசிகர் (அதோமுக தரிசனம்); பாலகவி வே. இராமநாதன் செட்டியார் (அட்டாங்க யோகம்).

12.1.56 ... எஸ். ராமசாமிநாயுடு (தலைமை); ஈசான சிவாசாரியார் (திருவம்பலச்சக்கரம்); தே.ஆ. ஸ்ரீநிவாசா சாரியார் (ஞானம்); வ.ஆ. தேவசேனாபதி (திருவடிப்பேறு).

13.1.56 ... தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் (தலைமை); கி.வா. ஜகந்நாதன் (இதோபதேசம்); டி.எம்.பி.மகாதேவன் (சோதனை); ஆறுமுக நாவலர் (சூனிய சம்பாஷணை).

நான்காவது மாநாட்டு மலர் (1958)

28.1.57 ... பா. நடராஜன் (தலைமை); ஈசான சிவாசாரியார் (சிவவேடம்); கி.வா. ஜகந்நாதன் (புராண தத்துவம்).

29.1.57 ... கருமுத்து தியாகராஜச் செட்டியார் (தலைமை); ஜி. சுப்பிரமணிய பிள்ளை (சமயபேதங்கள்) ஈசான சிவாசாரியார் (புவனாபதி சக்கரம்); ச. தண்டபாணி தேசிகர்.

30.1.57 ... தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (தலைமை); மா. இராசமாணிக்கனார் (ஒழுக்கநெறிகள்); லெ.ப.கரு. இராமநாதஞ் செட்டியார் (ஒழுக்க நெறிகள்); ஜி. வரதராஜன் (அடியார் பெருமை).

ஐந்தாவது மாநாட்டு மலர் (1959)

18.1.58 ... பா. நடராஜன் (தலைமை); ஈசான சிவாசாரியார் (நவகுண்டம்); முத்து

சு. மாணிக்கவாசக முதலியார் (திரிபுரைச் சக்கரம்); பாலகவி வே. இராமநாதஞ் செட்டியார் (சாம்பவி மண்டலச்சக்கரம்); த.ச. மீனாட்சி சுந்தரம் (புவனாபதி சக்கரம்).

19.1.58 ...வி.பி.வி. ராஜன் (தலைமை); க. வச்சிரவேல் முதலியார் (ஆதார ஆதேயம்); ச. தண்டபாணி தேசிகர் (புராணசக்தி); தே.ஆ. ஸ்ரீநிவாசாசாரியார் (ஏரொளிச்சக்கரம்); ஈசான சிவாசாரியார் (வயிரவிமந்திரம்).

20.1.58 ... ஈசான சிவாசாரியார் (தலைமை); ஜி. சுப்பிரமணிய பிள்ளை (அருச்சனை); பாலூர் கண்ணப்ப முதலியார் (வயிரவச்சக்கரம்); ஆறுமுக நாவலர் (நவாக்கரி சக்கரம்).

ஆறாவது மாநாட்டு மலர் (1960)

18.1.59 ... தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (தலைமை); கி.வா. ஜகந்நாதன் (வேதச் சிறப்பு); ஈசான சிவாசாரியார் (ஆகமச் சிறப்பு); ஜி. சுப்பிரமணியபிள்ளை (குரு பாரம்பரியம்).

19.1.59 ... ப. சந்தானம் (தலைமை); முத்து சு. மாணிக்கவாசக முதலியார் (திருமூலர் வரலாறு); தே.ஆ. சீனிவாசா சாரியார் (அவையடக்கம்); க. வச்சிரவேல் முதலியார் (திருமந்திரத் தொகைச்சிறப்பு); லெ.ப. கரு. இராமநாதன் செட்டியார் (குருமட வரலாறு).

20.1.59 ... ஈசான சிவாசாரியார் (தலைமை); பாலூர் கண்ணப்ப முதலியார் (உபதேசம்); ஆர். விசுவநாத ஐயர் (யாக்கை நிலையாமை); டி.எஸ். தியாகராஜ தேசிகர் (செல்வ நிலையாமை); த.ச. மீனாட்சி சுந்தரம் (இளமை நிலையாமை).

ஏழாவது மாநாட்டு மலர் (1961)

25.1.60 ... மீ.ப. சோமு (திறப்புரை). பா. நடராஜன் (தலைமை); ஈசான சிவாசாரியார் (உயிர் நிலையாமை); துரைசாமி ஐயர் (கொல்லாமை); கா.பொ. இரத்தினம் (புலால் மறுத்தல்); ரா. விசுவநாத ஐயர் (பிறர்மனை நயவாமை.)

26.1.60 ... தெ.பொ. மீனாட்சிசுந்தரம் (தலைமை); ந.ரா. முருகவேள் (மகளிரிழிவு); ச. சிவகுமார் (நல்குரவு); தே.ஆ. ஸ்ரீநிவாசாசாரியார் (அக்கினிகாரியம்); தி.சா. தியாகராச தேசிகர் (அந்தணர் ஒழுக்கம்).

27.1.60 ... ம.பொ. சிவஞானம் (தலைமை); கி.வா.ஜகந்நாதன் (இராச தோடம்); ஜி. சுப்பிரமணியபிள்ளை (வான்சிறப்பு); ஔவை சு. துரைசாமி பிள்ளை (இரந்தார்க்கீதல்); லெப. கரு. ராமநாதன் செட்டியார் (அறஞ்செய்யான் திறம்).

எட்டாவது மாநாட்டு மலர் (1962)

14.1.61 ... லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் (திறப்புரை); டி.எம்.பி. மகாதேவன் (தலைமை); ச. தண்டபாணி தேசிகர் (அன்புடைமை); ஈசானிய சிவாசாரியார் (அன்பு செய்வாரை அறிவான் சிவன்).

15.1.61 ... ஈசான சிவாசாரியார் (தலைமை); ச. சிவகுமார் (கேள்வி); அ.ச. ஞானசம்பந்தம் (கல்லாமை); ஜி. சுப்பிரமணியபிள்ளை (நடுவு நிலைமை); தே.ஆ. ஸ்ரீநிவாசாசாரியார் (கள்ளுண்ணாமை).

16.1.61 ... தெ.பொ. மீனாட்சி சுந்தரம் (தலைமை); மீ.ப. சோமு (அகத்தியம்); கி.வா. ஜகந்நாதன் (அட்ட வீரட்டம்); ஆறுமுக நாவலர் (தக்கன் வேள்வி).

ஒன்பதாவது மாநாட்டு மலர் (1963)

5.1.62 ... வி. பலராமையா (தலைவர்); மீ.ப. சோமு (பிரளயம்); ஈசான சிவாசாரியார் (சக்கரப்பேறு); கி.வா. ஜகந்நாதன் (அடிமுடி தேடல்).

6.1.62 ... தெ.பொ.மீனாட்சி சுந்தரம் (தலைவர்); ச. தண்டபாணி தேசிகர் (சர்வசிருஷ்டி); தே.ஆ. ஸ்ரீநிவாசாசாரியார் (திதி); ஜி. சுப்பிரமணியபிள்ளை (சங்காரம்).

7.1.62 ... டி.எம்.பி. மகாதேவன் (தலைவர்); அ.ச.ஞானசம்பந்தம் (திரோபாவம்); ச. சிவகுமார் (அநுக் கிரகம்);

லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் (கர்ப்பக்கிரியை.)

பத்தாவது மாநாட்டு மலர் (1964)

22.1.63 ... லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் (திறப்புரை); வி. சந்தானம் (தலைமை); ச. தண்டபாணி தேசிகர் (மூவகை ஆருயிர் வர்க்கம்); தே.ஆ. ஸ்ரீநிவாசாசாரியார் (பாத்திரம்); த.ச. மீனாட்சி சுந்தரம் (அபாத்திரம்).

23.1.63 ... ஈசான சிவாசாரியார் (தலைமை); மீ.ப. சோமு (தீர்த்தம்); க. வச்சிரவேல் முதலியார் (திருக்கோயில் இழிவு); ஜி. சுப்பிரமணிய பிள்ளை (அதோமுக தரிசனம்).

24.1.63 ... தெ.பொ. மீனாட்சி சுந்தரம் (தலைமை); அ.ச. ஞானசம்பந்தம் (சிவ நிந்தை); கி.வா. ஜகந்நாதன் (குருநிந்தை); வரதராஜ ஐயங்கார் (மயேசுரநிந்தை).

பதினோராவது மாநாட்டு மலர் (1965)

13.1.64 ... லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் (தொடக்க உரை); டி.எம்.பி. மகாதேவன் (தலைமை); அ.ச. ஞான சம்பந்தம் (பொறையுடைமை); தே.ஆ. ஸ்ரீநிவாசாசாரியார் (அட்டாங்கம்).

14.1.64 ... ஆறுமுக நாவலர் (தலைமை); த.ச. மீனாட்சி சுந்தரம் (இயமம்); சிவகுமார் (நியமம்).

15.1.64 ... தெ.பொ. மீனாட்சி சுந்தரம் (தலைமை); மீ.ப. சோமு (பிராணாயாமம்); கி.வா. ஜகந்நாதன் (பிரத்தியாகாரம்); ச. தண்டபாணி தேசிகர் (தாரணை).

20. "சம்பந்தரும் சமணரும்"

1957

(ஆசிரியர் : தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்; ருத்திரா பதிப்பகம், பக்கம் 160)

சமணர் கழுவேறிய கதை குறித்து மிகவிரிவாக – ஆய்வுக் கண்ணோட்டத்துடன் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (1) கடவுட் பேராறு (2) சமணரும் கடவுளே (3) பேய்த்துறவு (4) போலித்துறவு (5) கழுவேற்றிய கதை (6) வெறுப்பின் விளக்கம் என ஆறு தலைப்புகளில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்நூலிலிருந்து சில முக்கிய ஆய்வுகள் வருமாறு:

"சம்பந்தர் பழிப்பது உண்மைச் சைனரை அன்று; குண்டர்களையே. குண்டர்களைப் பழித்தாலும், அடிப் படையில் பிறரிடம் அந்நாளில் சைவர்க்கு இருந்த வெறுப்பே இவ்வாறு இரக்கமாகக் கலைவடிவம் பெறுகிறது. இரங்கத்தான் நாம் யார்? ஆனால் அந்நாளில் இந்த வெறுப்புக்குக் காரணம் சமயம் மட்டுமா? பல அரசியல் சூழ்ச்சிகளும் இடம் பெற்றிருக்கும். சான்றுகள் கிட்டவில்லை. இங்கு ஆராயப் பெறுவது சைவர் கொண்ட எரிவு மட்டுமன்று. சமணர் முதலியோர் கொண்ட எரிவுமே ஆம்".

"கழுவேற்றிய கதை நம்பியாண்டார் நம்பி நாளில் தான் வழங்கியது. இக்கதை தேவாரத்தோடு முரண்படுவதைச் சேக்கிழார் காண்கிறார். அதனை மாற்றியமைக்கிறார். எண்ணாயிரவர் எப்படி கழுவேற முடியும்?"

சம்பந்தர் பாடலில் "தெண்ணர் கற்பழிக்கத் திருவுள்ளமே" என்றுதான் பாடுகிறார். "கழுவேற்றத் திருவுள்ளமே" என்று பாடவில்லை. "அருகர் சிரங்களைச் சிந்த" என்பது தவறான பாடம். அச்சுக் கோர்ப்பவர் செய்த பிழை. "அருகர் திறங்களைச் சிந்த" என்று இருக்க வேண்டும்.

அப்பரும் சுந்தரரும் இதனைப்பற்றிச் சொல்லவில்லை. இக்காலகட்ட அரசனான குணபரன் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் இச்செய்தி இடம் பெறவில்லை. இது போன்ற செய்திகளைப் பதிவு செய்யும் யுவான் சுவாங்கும் கூறவில்லை. அந்நாளைய சமணர் நூல்களிலும் இச்செய்தி காணப்படவில்லை.

21. சைவ சமய வளர்ச்சி

1958

(ஆசிரியர் : மா. இராசமாணிக்கனார்; வெளியீடு – ஔவை நூலகம், சென்னை; பக்கம் 322; விலை 65/-)

வரலாற்றுணர்வே இல்லாத தமிழ்ச் சமுதாயத்தில் கி.பி. 300 முதல் கி.பி. 1300 வரையில் தமிழ்நாட்டில் சைவசமய வரலாறு எழுதவேண்டுமானால் அது அசாத்தியமான முயற்சியாகத்தான் இருக்க முடியும். அம் முயற்சியில் வெற்றி கண்டவர் வரலாற்றறிஞர் மா. இராச மாணிக்கனார் ஆவார்.

பன்னிரண்டு தலைப்புகளில் ஆசிரியர் இந்நூலை உருவாக்கியுள்ளார்.

ஆராய்ச்சிக்கு உரிய மூலங்கள்

1. **சோழர் காலம் :** *(கி.பி. 900 – 1300)* தென் இந்திய வரலாற்றின் பொற் காலம் ஆகும்.

ஆய்வு முடிபுகள் : டாக்டர் பந்தர்கர் போன்ற அறிஞர்களின் ஆராய்ச்சிகள், வால்மீகி இராமாயணம், வியாச பாரதம், கல்வெட்டுக்கள், கட்டப்பட்டுள்ள சிவன் கோயில்கள், சைவ இலக்கியங்கள், வைணவ – சமண – பௌத்த சமய நூல்கள், யுவான் சுவாங் போன்ற அயல்நாட்டு யாத்திரிகரின் பயணக் குறிப்புகள் ஆகியன.

2. **பல்லவர்க்கு முற்பட்ட சைவ சமயம் :** *(கி.பி. 300க்கு முன்)*

ஆய்வு முடிபுகள் : இக்கால கட்டத்தில் சைவ வைணவ வேறுபாடு பாராட்டப் படவில்லை. வால்மீகி இராமாயணத்தில் 'சுவேதாரண்யத்தில் ருத்திரனால் எரிக்கப் பட்டு யமன் மாய்ந்தாற் போல'' என வருகிறது. இது திருவெண்காடு ஆகும். வியாச பாரதத்தில் தெற்கே வந்து பல கோயில்களைத் தரிசித்தான் என்று வருகிறது. அவன் காலத்திய பாண்டிய மன்னர் தன் முன்னோர்கள் சிவனைப் பூசித்ததாகக் கூறுகிறார். வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள செங்கத்தை (பழைய காலத்தில் ''செங்கண்மா'' எனப்பட்டது) ஆண்ட நன்னனது நவிரம் என்ற மலையில் காரியுண்டிக் கடவுள் எனப்பட்ட சிவபிரான் கோயில் இருந்தது. சேலம் மாவட்டம் தர்மபுரி தாலுக்கா – அதமன் கோட்டையில் உள்ள 'மயின்டீச்சுரம்' என்ற சிவன் கோயில் ஔவையார் காலத்ததாக இருக்கலாம். குடிமல்லம், களத்தூர், குடுமியான்மலை என்னும் இடங்களில் உள்ள பழைய கோயில்களில் உள்ள லிங்கங்கள் கி.மு. 2-ஆம் நூற்றாண்டின.

தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் சிவன், சிவன் கோயில்கள், விழாக்கள், லிங்க வழிபாடு, மக்களுக்குச் சிவனார் பெயர்கள், ஆடல், பாடல் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளமையை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

3. **முற்காலப் பல்லவர் காலத்தில் சைவ சமயம் :** *(கி.பி. 300 – 600)*

ஆய்வு முடிபுகள் : க்ஷேத்திர வெண்பா பாடிய ஐயடிகள் காடவர் கோன் மூன்றாம் சிம்மவர்மனே (கி.பி. 550 – 575). ஐயடிகள், காரைக்கால் அம்மையார், நக்கீரதேவன், கபிலதேவர், கல்லாட தேவர் என்ற அடியார்களின் பாடல்கள் ஏறத்தாழ 70 சிவன் கோவில்களைக் குறிக்கின்றன.

இக்காலத்தில் வாழ்ந்த நாயன்மார், அடியார்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

4. **திருமந்திரம்**

ஆய்வு முடிபுகள் : காஷ்மீரத்தில் தான் ஆகமாந்தா எனும் சைவ சித்தாந்தம் தோன்றியது. சைவ சித்தாந்தம் காஷ்மீரில் பிரத்ய பிஞ்ஞான தரிசனம் எனப்பட்டது. அதுவே தென்னாட்டில் சுத்த சைவ தரிசனம் எனப் பட்டது. திருமந்திரத்திற்கும் பிரத்ய பிஞ்ஞான தரிசனத்திற்கும் ஒற்றுமை காணப்படுகிறது.

திருமந்திரச் சுருக்கமும், திருமூலர் குறிக்கும் சமயப் பாதைகளும், சைவத்தின் பிரிவுகளும் விளக்குகிறார்.

''ஆகமாந்தா'' அல்லது சைவ சித்தாந்த சாத்திரங்கள் சுமார் கி.பி. 4 அல்லது 5-ஆம் நூற்றாண்டில் சிறப்புற்றன எனலாம். இந்த 4, 5, 6-ஆம் நூற்றாண்டுகளில் திருமூலர் ஒரு நூற்றாண்டைச் சேர்ந்தவராதல் வேண்டும்.

மிகப்பழைய லிங்கங்களுள் கேதாரத்தில் உள்ள லிங்கம் ஒன்று. காசி, ஸ்ரீசைலம் கோவில் லிங்கங்களும் மிகப்பழைமை யானவை. அசோகன் கி.மு. 249-இல் தன் மகளான சாருமதி என்பவளுடன் நேபாளத்

திற்குச் சென்றான். அங்கு காட்மண்டுவில் பாசுபதச் சைவர் மடம் இருந்தது.

5. பிற்காலப் பல்லவர் காலத்தில் சைவ சமயம் 1 : *(கி.பி. 600 – 900)* பிற்காலப் பல்லவ மன்னர்களின் சைவப் பணிகளைச் சான்றுகளுடன் விரிவாக விளக்குகிறார்.

6. பிற்காலப் பல்லவர் காலத்தில் சைவ சமயம் 2

இலக்கியத்தில் சைவம் : *(கி.பி. 600 – 900)* இக்காலத்தில் வாழ்ந்த நாயன்மார் பற்றியும், சைவ இலக்கியங்கள் பற்றியும், சிவன் கோயில்கள் பற்றியும் எழுதியுள்ளார்.

7. சோழர் காலச் சைவ சமயம் : *(கி.பி. 900 – 1300)*

ஆய்வு முடிபுகள் : கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முடியக் காஷ்மீரில் சுமார் 70 சிவன் கோவில்கள் தோன்றி வளர்ச்சி பெற்றன. கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் முதல் இராசேந்திரனது எண்ணாயிரம் கல்வெட்டே முதன் முதலாக அம்மன் தனிக்கோயிலைப் பற்றிக் கூறுகிறது. அதன் பிறகே அம்மனுக்குத் தனிக்கோயில்கள் எடுக்கப்பட்டன.

இக்கால சோழ அரசர்களின் சைவப் பணிகள், கோவில்களின் வளர்ச்சி பற்றி விரிவாகச் சான்றுகளுடன் கூறுகிறார்.

8. கோவில்கள் – மடங்கள் : சமய நிகழ்ச்சிகள் :

தமிழ் நாட்டுச் சிவன் கோவில்களில் உள்ள சிற்பங்கள், பூசை, விழாக்கள், ஆடல், பாடல், நாடகம், கோவில்களில் திருமுறைகள் என கல்வெட்டுச் சான்றுகளுடன் விளக்குகிறார்.

9. மடங்களும் குகைகளும் : அக்கால கட்டத்தில் மடங்கள், மக்கள் கொண்ட நாயன்மார் பெயர்கள், நாயன் மார் பெயர் கொண்ட இடங்கள், இறைவன் பெயர் கொண்ட மக்கள், இடங்கள் பற்றிக் கல்வெட்டுச் சான்றுகளுடன் விளக்குகிறார்.

10. சோழர் காலச் சைவ இலக்கியம் : இக்காலக் கட்டத்தின் சைவ இலக்கி யங்கள் பற்றி விரிவாகக் கூறுகிறார்.

11. சைவ சித்தாந்த வளர்ச்சி :

12. சைவரது சமுதாய வாழ்க்கை : இராசமாணிக்கனாரின் ஆய்வு முழுமையான ஆய்வு; வரலாற்று ஆய்வு; கல்வெட்டான ஆய்வு.

22. வேங்கடம் முதல் குமரி வரை

பாகம் 1	*1960*
பாகம் 2	*1960*
பாகம் 3	*1961*
பாகம் 4	*1962*

(ஆசிரியர் : தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்; பாகம் *1* (பக்கம் *248* .. விலை ரூ. *65*); பாகம் *2* (பக்கம் *288* .. விலை ரூ. *80*); பாகம் *3* (பக்கம் *316* .. விலை ரூ. *95*); பாகம் *4* (பக்கம் *260* .. விலை ரூ. *70*).

தமிழ் நாட்டில் உள்ள 121 சைவ, வைணவ திருக்கோயில்களைப் பற்றிய சுவைமிக்க கட்டுரைகளைக் கொண்டது இந்நூற்றொகுதி.

இக்கட்டுரைகள் ''கல்கி'' இதழில் தொடராக வந்தபொழுது, தமிழ் நாட்டையே ஒரு கலக்கு கலக்கியது. ''பொன்னியின் செல்வனும்'' ''தில்லானா மோகனாம்பாளும்'' தமிழ் நாட்டைக கலக்கிக் கொண்டிருந்த காலம். அந்த நாவல்களுக்கு இணையாக – இக்கட்டுரைகள் – அதுவும் சமயக் கட்டுரைகள் – மக்களைப் பரவசப்படுத்தின. ''ஏதோ சினிமா பத்திரிகைகளைப் படிக்க மக்கள் அடிபிடி போட்டுக் கொள்வதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் கல்கியில் கோயில்களைப் பற்றிவரும் கட்டுரைகளைப் படிப்பதில் ''நான்முந்தி நீ முந்தி'' என்று கணவர்களும் மனைவியரும் கிழவர்களும் குழந்தைகளும் போட்டி போடுவதைப் பார்க்கும்போது அதிசயப்பட வேண்டியிருக்கிறது'' என்று அதிசயிக்கிறார் ஜஸ்டிஸ். எஸ். மகராஜன்.

'கல்கி'யில் அந்தந்த வாரம் வரும் கட்டுரைகளைப் படித்துவிட்டு அவை வெளிவந்த மறுவாரம் பலரும் அந்தந்தத் தலங்களைப் பார்க்கக் கிளம்பி விடுவர்.

இப்படி ஒரு புரட்சியினை இந்த கட்டுரைகள் செய்தன.

அப்படி என்னதான் இந்நூலில் பொதிந்து கிடக்கின்றன? இலக்கியப் பூங்கா ஒருபுறம்; சிற்பக்கலைக்கூடம் மறுபுறம்; ஆராய்ச்சிப் பட்டறை இன்னொரு புறம்; பக்திப்பஜனைக் கூடம் வேறொரு புறம்; வரலாற்றுக் கதைக் கூடம் பிறிதொருபுறம்.

சரி. இவை எப்படி நமக்குச் சுவை தருகின்றன? இந்தப் புத்தகத்தைக் கோயிலுக்குப் போவதற்கு முன்பு படித்தால் ஒரு வகை இன்பம் உண்டாகும். போய் விட்டு வந்து படித்தால் இந்த இன்பம் பின்னும் பன்மடங்காகும். வெறும் ஆராய்ச்சியானால் அலுப்புத் தட்டும்; புராணமானால் சுவை இராது; சமய நூலானால் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தோன்றும்; சரித்திர நிகழ்ச்சியானால் அவசியமானபோது புரட்டிப் பார்க்கலாம் என்று வைத்துவிடுவோம். பாடல்களானால் அமைதியாக இருந்து பார்த்தால் தான் விளங்கும் என்று அச்சம் உண்டாகும். இந்த நூலில் இவை எல்லாம் இருக்கின்றன. ஆனால் படித்து முடித்துவிட வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகின்றன; படித்தபிறகோ பல தலங்களுக்குப் போய்ப் பல மூர்த்திகளை வழிபட்டு வந்த மனநிறைவு உண்டாகிறது.

இது எப்படி பாஸ்கரத் தொண்டைமானால் முடிந்தது? அவருடன் கல்பேசும்; செம்பு இசைபாடும்; கதைகள் எல்லாம் நடமாடும். அவற்றை எல்லாம் அவர் காண்பார்; நோக்குவார்; தேர்ந்து தெளிவார். அத்துடன் அமைவாரா? நண்பர் களை எல்லாம் கையைப் பிடித்து இட்டுச் செல்வார். சில முரண்டுகளைக் காதைப் பிடித்து இழுத்தும் செல்வார். கலைச் செல்வங்களின் முன்னே கொண்டு நிறுத்தி எல்லோரையும் துய்க்கும்படியும் செய்து விடுவார். தாமின்புறுவதைக் கண்டு உலகின்புறச் செய்யும் வித்தையிலும் கை தேர்ந்தவர் சகோதரர் பாஸ்கரன்'' என்கிறார் கம்பன் அடிப்பொடி சா. கணேசன்.

ஆசிரியரின் நடை அவருக்கு எப்படி கை கொடுக்கிறது? அவருடைய தமிழ் நடை முதலிலிருந்து கடைசி வரை துள்ளி விளையாடிக் கொண்டே செல்கிறது.

பம்முவதும், பாய்ச்சல் காட்டுவதும், கர்ணங்கள் போடுவதும், பல்டி அடிப்பதும், ஹாஸ்யங்களை உதிர்ப்பதும், பக்தி வெள்ளத்தில் வாசகர்களை முக்கி முக்கி எடுப்பதுமாக இந்த ''பாஸ்கரத் தமிழ்'' செய்கிற ஜாலவித்தைகள் பலப்பல.

''ஆசாமி பொல்லாதவர். விளையாட்டுப் போக்கிலேயே பல அரிய உணர்ச்சிகளைப் புகட்டுகிறார். மேனி சிலிர்க்கச் செய்கிறார். புராணக் கதைகளைப் பக்தியோடு சொல்கிறார்; அதே மூச்சிலேயே புராணங்களுக்குப் பகுத்தறிவு முலாமும் பூசுகிறார்'' என்கிறார் ஜஸ்டிஸ் மகராஜன்.

நூலைத் தொட்ட இடமெல்லாம் கற்பூர வாசனை வீசுகிறது. சந்தனமும் ஜவ்வாதும் மணக்கிறது.

இதனை விடச் சிறந்த பாராட்டு வேறென்ன இருக்கிறது?

(கருத்து : நூல்களின் அணிந்துரைகள்)

23. நூற்றாண்டுகளில் தமிழ்

கா.பொ. இரத்தினம்

1961

இந்நூலில் சங்ககாலம் தொட்டு இருபதாம் நூற்றாண்டு வரை வந்த நூல்களை கா.பொ. இரத்தினம் விரிவாகத் தொகுத்துத் தந்துள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு

நூல் : ஆசிரியர்

1) தஞ்சைப் பெருவுடையார் உலா, சரபேந்திர பூபால குறவஞ்சி, கோடீச்சரக்கோவை – கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர்.

2) திருமுல்லைவாயில் மாசிலாமணியீசர் பதிகம், திருமயிலைக் கபாலீசர் பதிகம் திருமயிலையில் வாழ்ந்த தாச்சி அருணாசல முதலியார்.

3) திருவிளையாடல் நாடகம் – திருநயம் கிருட்டிணபாரதி.

4) பூம்பாவை விலாசம் எனும் நாடகம் – தொண்டை நாட்டுக் கருவம் பாகையில் பிறந்த வரகவி ஆறுமுக முதலியார்.

5) திருவெண்ணெய்க் கலம்பகம், மனுநீதி சதகம், திருநாவலூர்ப் புராணம் – திருவெண்ணெய் நல்லூர் இராசப்ப நாவலர்.

6) பூவைப்புராணம் – சுவாமிநாத கவிராயரின் மகன் சிவசுப்பிரமணிய கவிராயர்.

7) திருக்கோவையாருண்மை – சுந்தரதேசிகர்.

8) மாணிக்கவாசகர் விலாசம் – கதுமலை இராமலிங்கம் பிள்ளை.

9) சிவஞானசித்தியார் – பதவுரை – திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிர மணிய தேசிகர்.

10) சைவமஞ்சரி, துதிமஞ்சரி – சிவஞான யோகிகள்.

11) சிவகாசிப்புராணம், குறுக்குத்துறை சிலேடை வெண்பா, முதலிய கவிதை நூல்கள்; திருப்பரங்கிரிப்புராணம், திருக்குற்றாலப் புராணம் நூல்களின் உரைநடை; நெல்லை வருக்கக் கோவை, திருக்குற்றாலக் குறவஞ்சி பதிப்பு – மு.ரா. அருணாசலக் கவிராயர்.

12) விவேகபானு எனும் ஏடு; திருப் பேரூர்த்திரிபந்தாதி – மு.ரா. கந்தசாமிக் கவிராயர்.

13) சிவத்தல மஞ்சரி, திருநீடூர்த்தல புராணம், மானாமதுரைத் தல புராணம், திருத்தருப்பூண்டித் தல புராணம் பிரமோத்திர காண்டம் என்பவற்றின் உரைநடை – செங்கற் பட்டுச் சுப்பிரமணிய பிள்ளை.

14) சைவ சமயவிளக்க வினாவிடை, திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, பிரமோத்தர காண்டப் பொழிப்புரை – காஞ்சிபுரம் மகா வித்துவான் சபாபதி முதலியார்.

15) அருணாசலபுராண உரை – மழவை மகாலிங்க ஐயர்.

16) கொங்கு நாட்டுச் சிவப்பதிகளின் தலபுராணங்கள், திருப்பேரூர்க் கிள்ளை விடு தூது, திருப்பேரூர் மும்மணிக்கோவை, திருப்பேரூர் மாலை ஆகிய கவிதை நூல்கள், கொடுமுடிப்புராணத்தில் சில பகுதிகள் – சி.கே.எஸ். அவர்களின் தந்தையார் இ.கெ. சுப்பிரமணிய முதலியார்.

17) மாணிக்க வாசகர் நான்மணி மாலை, காளையார் கோயிற்புராணம், கோட்டூர்ப் புராணம், உப்பூர்ப் புராணம், இலுப்பைகுடிப் புராணம், திருவேடகப் புராணம், திருமருகற் புராணம், மாற்றூர்ப்புராணம் எனும் ஏழு புராணங்கள் – தஞ்சை சுப்பிரமணிய ஐயர்.

18) திருவிளையாடல் கீர்த்தனை, கூடல் திருவிளையாடல், திருமெய்யம் ஈசுவரன் கோவில் தல புராணக் கீர்த்தனை – மழவைச் சுப்பிரமணிய பாரதியார் என்ற இசைத்தமிழ்ப் புலவர்.

19) சபாநாதர் பதிகம், மல்லிங்க நாதர் சிலேடைப்பதிகம், சிவபிரான் யமக வந்தாதி – திருமலை சக்கையா கவுடர்.

20) திருமயிலைக் கலம்பகம் என்ற பிரபந்தம்; திருக்கைலாய ஞானவுலா உரை, பொன் வண்ணத்து அந்தாதி உரை, திருவாரூர் மும்மணிக்கோவை உரை – திருமயிலை சண்முகம் பிள்ளை.

21) நஞ்சுண்ட கூடற் புராணம், திருமுருகன் பூண்டிப் புராணம், பவானிப் புராணம், அவிநாசி கலித்துறை அந்தாதி – செட்டிப் பாளையம் வாசுதேவ முதலியார்.

22) சிவராத்திரி நாடகம் – ஆனைமலை வேலாயுதக் கவிராயர்.

23) நீலகண்டேசுரக் கோவை, இறைய னாராற்றுப்படை, இடும்பாவன

புராணம், நரிவிருத்தம், தென் தில்லைக் கலம்பகம், தென்தில்லை உலா – பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்.

24) அருணை வெண்பாமாலை, காஞ்சி வெண்பாமாலை, திருப்போரூர் முருகனைப் பற்றிய பல நூல்கள் – புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார்.

25) திருவேண்காட்டடிகள், பெரிய புராண வசனம், திருத்தணிகை முருகன் பற்றிய பல நூல்கள் – தொழுவூர் வேலாயுத முதலியார்.

26) பெரியபுராணக் கீர்த்தனை, பார்வதி சரித்திரக் கீர்த்தனை – இராமசாமி ஐயர்.

27) திருப்புன்கூர்ப்புராணம், குழூமூர்ப் புராணம், கங்கை கொண்ட சோளேச் சரபுராணம், உடையார் பாளைய் புராணம், பெண்ணையாற்றுப் புராணம், திருக்களப்பூர்ப்புராணம் எனும் ஆறு புராணங்கள்; பெரிய புராணச் சுருக்கக் கலிவெண்பா – உடையார் பாளையம் கனகசபைக் கவிராயர்.

28) பூந்துறைப்புராணம் – காளியண்ணப் புலவர்.

29) திருநாகைக் காரோணக்குமரப்பா மாலை, திருப்பேரூர்க் கலித்துறை யந்தாதி, திருப்பேரூர் கலம்பகம், பத்திரகிரியார் புராணம் ஆகிய செய்யுள் நூல்கள்; மார்க்கண்டேயர் சரித்திரம், சிவஞான முனிவர் சரித்திரம் எனும் நூல்கள்; தேவாங்கப் புராணம், திருப்பேரூர்ப் புராணம் என்பவற்றுக்கு உரை – கும்பகோணம் ரா. சபாபதிப் பிள்ளை.

30) திருக்குறிப்புத் தொண்ட நாயனார் சரித்திரக் கீர்த்தனை காசிமேட்டின ரான வைரக்கல் வேலாயுதப்பாவலர்.

31) சிதம்பர சபாநாதர் புராணம், திரு விடை மருதூர்ப்பதிற்றுப் பத்தந்தாதி, திருச்சிற்றம்பல யமக அந்தாதி – வடகோவைச் சபாபதி நாவலர்.

32) சேதுபுராண உரைநடை, கண்ணப்பர் நாடகம், மனுநீதி கண்ட சோழன் நாடகம் – மாறகல் ஏரம்பையர்.

33) சைவசந்திரிகை சைவசித்தாந்தச் சுருக்கம் – யாழ்ப்பாணத்துப் புலோலி யூர் நா. கதிரைவேற் பிள்ளை.

34) திருத்தில்லைப்பல் சந்தமாலை – யாழ்ப்பாணத்துக் காரைத் தீவு கார்த்திகேயப்புலவர்.

35) சைவமகத்துவதிக்கார நிக்கிரகம் – வல்வை வயித்தியலிங்கம்.

இருபதாம் நூற்றாண்டு

1) சுத்தாத்துவித சைவசித்தாந்த பரபோதம் – கன்னிப்புத்தூர் அப்பாச்சாமி முதலியார்.

2) பெரியபுராண பாடியம், திருச்சுழியற் புராணம் – யாழ்ப்பாணத்து வட்டுக் கோட்டை அம்பலவாண நாவலர்.

3) பேரூர் உலா, அவிநாசி உலா – கொங்குநாட்டு வடவழியைச் சேர்ந்த அருணாசலக் கவிராயர்.

4) பெரியபுராண விருத்தியுரை, காஞ்சிப் புராண உரை, திருவுந்தியார் உரை, திருக்களிற்றுப்படியார் உரை, சிவ ஞானபோத நுட்பம் – காஞ்சிபுரம் ஆலாலசுந்தரம் பிள்ளை.

5) சிவகலைப்புராணம் – திருநெல் வேலி ஆறுமுக நயினார் பிள்ளை.

6) சிவமாபுராணம், சிவபராக்கிரமம் மொழிபெயர்ப்பு, காசிகாண்டம், பரஞ்சோதி திருவிளையாடல் பதிப்பு – ஈக்காடு இரத்தின வேலு முதலியார்.

7) பேரூர்க் கலம்பகம், பேரூர்க் கோவை, அன்னியூர்த்தல புராணம், காரமடைத் தலபுராணம், கௌசைக் தலபுராணம், பேரூர்சாந்தலிங்கர் பிள்ளைத்தமிழ் அவிநாசிப் பிரபந்தத் திரட்டு – கொங்குநாட்டுக் கணபதி யூர்க் கந்தசாமி அடிகள்.

8) காஞ்சி அத்திகிரி அந்தாதி, கேதார விரதம், பிரமநகர் நடேசர் பஞ்ச

ரத்தினம், பிரமநகர் பிரமபுரீசுவரர் பதிகம் – அத்தி எனும் ஊரைச் சேர்ந்த கு. கந்தசாமிப்பிள்ளை.

9) திருவான்மியூர்ப்புராணம், மாசிலாமணி ஈசர் பதிகம், சித்தாந்த சாதகக் கட்டளை, சித்தாந்த தச காரியக் கட்டளை, சேக்கிழார் வரலாறு; காளத்திப்புராண வசனம், திருவொற்றியூர்ப்புராண வசனம், திருவேற்காட்டுப்புராண வசனம், திருப்பாசூர்ப் புராண வசனம், திருவலிதாய புராண வசனம் எனும் உரைநடை நூல்கள், பூவை கல்யாண சுந்தர முதலியார்.

10) மயூரகிரிநாதர் வண்ணம், பெரிய புராணக் கீர்த்தனை – மழவராயனேந்தலைச் சேர்ந்த சிதம்பர பாரதியார்.

11) மதுரையமக அந்தாதி, மயூரகிரிக் கலம்பகம் – வயிநாகரம் அ. இராமநாதச் செட்டியார்.

12) திருக்குடவாயிற் புராணம், திருவாடானைப் புராணம், கோகர்ணத் தலபுராணம், கண்டியூர்ப் புராணம் – மஞ்சக்குப்பம் வ.சு. சண்முகம் பிள்ளை.

13) திராவிட வேதத்திரட்டு, தலமான்மியச் சுருக்கம், அகத்தியர் தேவாரத் திரட்டுக்கு விரிவுரை, மூவர் தேவாரங்களைப் பதிப்பித்தல், சேக்கிழார் பிள்ளைத் தமிழுக்குக் குறிப்புரை – கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார்.

14) சீவான்மபோதம், ஈச்சுர நிச்சயம், பண்டைத் தமிழரின் சமயக்கொள்கை, நல்லை நான்மணிமாலை – யாழ்ப்பாணத்துக் கொக்குவில் சபாரத்தின முதலியார்.

15) சிவஞான மாபாடியம், தேவார அடங்கன் முறை, திருக்கோவையார் உண்மை, திருவிளையாடற்புராணம், குமரகுருபரர் பிரபந்தம், சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தம், சைவநூற்சார சங்கிரகம் – யாழ்ப்பாணம் கந்தர் மடத்துச் சுவாமிநாத பண்டிதர்.

16) சிவப்பிரகாசம், தேவாரங்கள் சிலவற்றுக்கு உரை – செப்பறைச் சிதம்பர சுவாமிகள்.

17) கோயிலூர் நான்மணி மாலை, சைவத் தெளிவு, சிவஞான போதசாரம், திருவொற்றியூர் மான்மியம் – சோழநாட்டு ஆயக்காரம் புலத்திலே தோன்றிய சிவானந்த யதீந்திரர்.

18) மயிலைநான்மணிமாலை மயிலாப்பூர் சீனி. கோவிந்தராசனார்.

19) சிவநாம சங்கீர்த்தனம் – திருமயிலை வி. சுந்தர முதலியார்.

20) சரண்சத்திரியப் பிரசண்டமாருதம், ஞானபோத விளக்கச் சூறாவளி, சிவனும் தேவனா எனும் தீய நாக்குக்கு ஆப்பு, வீரபத்திராத்திரம், விவிலிய குற்சித் கண்டனதிக்காரம், தாந்திரிக துண்டகண்டன கண்டனம், வச்சிரதண்டம் முதலிய மறுப்புரை நூல்கள்; கந்தபுராண விளக்கம், ஞானரத்தினாவளி, சீகாழிப் பெருவாழ்வின் சீவகாருணிய மாட்சி, தேவார வேதசாரம், தத்துவவிளக்கம் மூலமும் உரையும், நீலகண்ட பாடியத்தமிழ் மொழி பெயர்ப்பு – செந்திநாதையர்.

21) திருப்புத்தூர்ப்புராணம், திருக்கழுக்குன்ற மான்மியம், ஞான சம்பந்தர் சிலேடை வெண்பா, திருநாவுக்கரசர் பிள்ளைத்தமிழ், மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ், சுந்தரமூர்த்தி பிள்ளைத்தமிழ், மயின் மலைச்சந்த விருத்தம் – காரைக்குடி சொக்கலிங்கச் செட்டியார்.

22) ஆயிரத்தெட்டுச்சிவசேத்திரமாலை – திருப்பதி வேங்கடாசல பதியாச்சாரி.

23) சேந்தனார் புராணம், நால்வர் நான்மணிமாலைக்கு உரை – க.வ. திருவேங்கடநாயுடு.

24) சைவ சித்தாந்த நூல்கள் பதினான்கு – உரையுடன்; பன்னிரு திருமுறை, காஞ்சிப்புராணம், தாயுமானவர் பாடல், சிவஞானபோதச்சிற்றுரை பதிப்பித்தல்; திருவெறும்பியூர்ப் புராணம் – காஞ்சி நாகலிங்க முனிவர்.

25) திருவோத்தூர் நான்மணிமாலை, திருமாற்பேறு புராணம் முதலிய செய்யுள் நூல்கள்; சிவபராக்கிரமம் முதலிய உரைநடை நூல்கள்.

26) திருமயிலைத் தலபுராணம் – மயிலைநாதமுனி முதலியார்.

27) திருத்தொண்டர் சதகம் – கொடுமுடி மலைக்கொழுந்து கவிராயர்.

28) கிருத சிவ தாண்டவதோத்திரம் – தமிழ் மொழிபெயர்ப்பு – முத்தானந்த அடிகள்.

27) பசுபதீசுவரன் அந்தாதி சிவபெருமான் அலங்காரம் – யாழ்ப்பாணத்துப் புலோலியில் தோன்றிய முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்.

28) சிவஞானமாபாடியம், சிவாக்கிரபாடியம் – முத்துக்குமாரத்தம்பிரான்.

29) திருமுல்லைவாயிற்புராணம், திருப்பறியலூர்ப் புராணம், தில்லையாடிப் புராணம் – பரங்கிப்பேட்டை முத்துத் தாண்டவராயபிள்ளை.

30) தசகாரிய விளக்கம், சிவஞான சித்தியார் பொழிப்புரை, பல மறுப்புரைகள் – தூத்துக்குடி பொ. முத்தையாபிள்ளை.

31) நடராசப்பத்து, சிவமகாமந்திரம் – சிறுமணவூர் முனிசாமி முதலியார்.

32) தொண்டைநாட்டுத் திருப்பதிக் கோவை – மோசூர் முனிசாமி முதலியார்.

33) திருநல்லூர்க்கலம்பகம், மங்கை நகர் பதிற்றுப்பத்தந்தாதி தொண்டை நாட்டு அரண் வாயிலூரினரான அ. வேங்கடசுப்புபிள்ளை.

34) சிவமகாபுராணம், தாராபுரத்தலபுராணம் – கொங்கு நாட்டுத் தாராபுரத் தலபுராணம் – கொங்கு நாட்டுத் தாராபுரம் வேலாயுத பண்டிதர்.

35) சுந்தர மூர்த்தி சுவாமிகள் பிள்ளைத்தமிழ் – பாலூர் வேலுத் தேசிகர்.

36) கருவைத் தலபுராணம், திருக் கருவைச் சந்தப்பா, கருவை மும்மணி மாலை – பாண்டி நாட்டு எட்டிசேரியூரினரான திருமலைவேற் கவிராயர்.

37) திருவாதவூர்ப்புராணம், புலியூர் அந்தாதி உரை; புலோலிவயிரவக் கடவுள் தோத்திரம் – எழுதியநூல்; வேதாரணிய புராணம் சிவகாமியம்மைசதகம் பதிப்பித்தல்; மட்டுவில் க. வேற்பிள்ளை.

38) சைவசித்தாந்த வரலாறு – திருநெல்வேலியினரான அனவரத விநாயகம் பிள்ளை.

24. பன்னிரு திருமுறை வரலாறு

(1962)

முதல் பகுதி : *(1962)* இரண்டாம் பகுதி : *(1980)*

(ஆசிரியர் : க. வெள்ளைவாரணன். வெளியீடு – அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம். 1. 744 பக்கங்கள், 2. 1340 பக்கங்கள்)

சைவர்கள் ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்க வேண்டிய நூல் வெள்ளை வாரணனாரின் ''பன்னிரு திருமுறை வரலாறு'' ஆகும். அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் முதல் பதிப்பினைத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் பெருங்கொடையோடு மிகக் குறைந்த விலையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வெளியிட்டார்கள். 1340 பக்கங்கள் மற்றும் படங்கள் கொண்ட இரண்டாம் பாகத்தின் விலை ரூ. 2 பைசா 90 மட்டுமே.

பன்னிரெண்டு திருமுறைகளைப் பற்றி என்னென்ன செய்திகள் என்னென்ன விளக்கங்கள் வேண்டுமோ அத்தனையும் இந்த ஒரே நூலில் தொகுக்கப்பட்டுத் தரப்பட்டுள்ளன. திருமுறை, தேவாரம் விளக்கம், திருமுறை கண்டது, பண்ணமைத்தது, திருமுறை ஓத அரசர்கள் நிபந்தங்கள் அமைத்தமை, செப்பேடுகளில் பேணியமை, மூவர் வரலாறு என்று தொட்ட இடமெல்லாம் செய்திகளைக் குவித்துள்ளார் ஆசிரியர்.

திருமுறை கண்டவன் முதலாம் இராசராசசோழன் என்று கூறுவது தவறு என்கிறார் ஆசிரியர். திருமுறைகளை மீட்டுத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி முதல் ஆதித்த சோழன் ஆட்சிக் காலத்திலும், முதற் பராந்தக சோழனாட்சி முற்பகுதியிலும் வாழ்ந்தவர் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும்) என்று முடிவு கட்டுகிறார்.

திருநாவுக்கரசர் பெருமான் அவதாரம் கி.பி. 575 என்றும், திருஞான சம்பந்தப் பெருந்தகை அவதாரம் கி.பி. 638 என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அவதாரம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி. 8-அம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் என்று இலக்கிய, வரலாற்று கல்வெட்டுச் சான்றுகளுடன் நிறுவுகிறார். சுந்தரர் காலத்தை நிறுவும்பொழுது தஞ்சாவூர் சீனிவாசம் பிள்ளை, மா. இராசமாணிக்கனார் கருத்துக்களை ஆறு காரணங்களை முன்வைத்து மிக விரிவாக மறுக்கிறார்.

திருஞானசம்பந்தர் முருகன் அவதாரம் என்பதனையும் மறுக்கிறார்.

யாப்பமைதி, இசையமைதி என்ற பகுதி இசைக்களஞ்சியமாக அமைந்துள்ளது. இது ஓதுவா மூர்த்திகள் ஒவ்வொருவரும் பேணிப் போற்ற வேண்டிய பகுதியாகும். ஒவ்வொரு பண்ணும் கூறி அதற்குரிய கட்டளைகளும் கூறி அதற்குரிய பதிகங்களை விரிவாக விளக்குகிறார். சாரங்க தேவர் இயற்றிய சங்கீதரத்னாகரம் என்ற நூலையும், விபுலானந்தரின் யாழ் நூலையும் அடிப்படையாகக் கொண்டு தேவாரப் பண்களோடு இயைபுபடுத்துகிறார்.

ஞானசம்பந்தர் :

ஞானசம்பந்தப் பெருந்தகையின் அனைத்துப் பாடல்களையும் 22 பொதுத் தலைப்புகளில் அடக்கிக் கருத்து விளக்கம் செய்கிறார். ஞானசம்பந்தர் பதிகங்கள் ஒவ்வொன்றிலும் எட்டாவது பாடல் கயிலைமலையைப் பெயர்க்க முயன்ற இராவணனைத் தன் பெருவிரலால் சிவபெருமான் நசுக்கிய செய்தி வருதல் உயிர்கள் தன் பிழையறிந்து ஏசறுதல் என்றும், ஒன்பதாவது பாடலில் திருமாலும் பிரமனும் அடிமுடிதேடல் பாசஞானத்தாலும், பசு ஞானத்தாலும் காண்டற்கரியன் என்றும், பத்தாவது பாடலில் பௌத்த சமணரைக் கடிதல் இறைவனருளிய மெய்ம்மையான ஒழுக்கநெறியன்றிச் சிற்றறிவுடைய மக்கள் தம் ஆன்ம போதம் ஒன்றினாலேயே அமைத்துக் கொண்ட புறச் சமயச் செயல்கள் புன்னெறியிற் செலுத்துவனவே என உணர்ந்து அவற்றை யொழுகுதல் என்றும் விளக்குகிறார்.

ஏகபாதம், எழு கூற்றிருக்கை, மொழி மாற்று, மாலைமாற்று, வழிமொழி, போன்ற சித்திரக்கவிகள் பற்றியும் தெளிவாக விளக்குகிறார்.

வேதத்தின் பெருமை, சமண பௌத்தம், இயற்கையழகு – பற்றிக் கூறும் வரிகளை எடுத்துக் கொண்டு விரிவாக ஆய்கிறார்.

அப்பர் சுந்தரர் : இதே போல திருநாவுக்கரசர், சுந்தரர் பாடல்களையும் விரிவாக ஆய்வு செய்கின்றார். சுந்தரர் பாடல்களையும் ஒப்புமை காட்டுகிறார். மூவர் தேவாரத்தையும், திருக்குறள் சங்க இலக்கியத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்.

மூவர் நெறி, மூவர் பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள், சிவ வழிபாடு, சிவன் கோயில்கள் பற்றிய வரலாறு என திருமுறைகள் பற்றிய அனைத்து ஆய்வுகளுக்கும் தொடக்க ஆய்வாக – பேராய்வாக – இந்நூல் அமைந்துள்ளது.

திருவாசகம் : ''பன்னிரு திருமுறை வரலாற்றின்'' இரண்டாம் பகுதி மாணிக்கவாசகரின் திருவாசகத்துடன் தொடங்குகிறது.

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணம், திருவாதவூரர் புராணம், திரு உத்தர கோசமங்கைப் புராணம் திருப்பெருந்துறைப் புராணம் ஆகிய இலக்கியங்கள் திருவாதவூரர் வரலாற்றினை கூறுமாற்றால் கூறுகிறார். பின்னர் திருவாசகம் திருக்கோவையாரில் வரும் அகச்சான்றுகளைக் கொண்டு திருவாதவூரர் வரலாறை நெறிப்படுத்திக் கூறுகிறார்.

மாணிக்கவாசகர் காலம் : மாணிக்க வாசகர் காலம் பற்றிய ஆய்வில் வெள்ளை வாரணனாரின் நுண் மாண் நுழைபுலம் தெளிவாகத் தெரிகிறது. மாணிக்கவாசகரின் காலம் பற்றிய ஆய்வுகளில் பல வேறு பாடுகள் இருக்கின்றன. திருமலைக் கொழுந்து பிள்ளை (கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டு), மறைமலை யடிகளார் – கா. சுப்பிரமணியப் பிள்ளை (கி.பி. 3-ஆம் நூற்றாண்டு), கே.ஜி. சேஷையர் (கி.பி. 4-ஆம் நூற்றாண்டு), டி.வி. சதாசிவ பண்டாரத்தார் (கி.பி. 792 – 835), தஞ்சை சீனிவாச பிள்ளை – தெ.பொ.பழநியப்பப் பிள்ளை (கி.பி. 862 – கி.பி. 880 வரை) கோபிநாதராயர் (கி.பி.10-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத் திலும்) ஆகியோர் கருத்துக்களையெல்லாம் ஆய்ந்து ஒவ்வொன்றாக மறுக்கிறார். இந்தக் கால ஆராய்ச்சி ஒன்றே வெள்ளை வாரணனாரின் கடும் உழைப்பையும், பரந்த ஆழ்ந்த அறிவையும் வெளிக் காட்டும்.

மாணிக்கவாசகர் தேவார மூவர்க்கும் முற்பட்டவர் என்று கூறும் மறைமலை யடிகள் முதலானோர் கருத்தை முதலில் மறுக்கிறார்.

(i) மறைமலை : சிவபெருமானுக்கு அணுக்கராய் இருக்கும் சிவத்தொண்டர்கள் ''கணங்கள்'' எனப்படுவர். அக்கணங்களின் தலைவர் ''நந்தி''. அந்த நந்திகளுள் ஒருவர் மாணிக்கவாசகர் என்பார் மறைமலை யடிகள். ''குடமுழநந்தீசனை வாசகனாக் கொண்டார்'' என்று அப்பர் பெருமான் குறிப்பிடுவது மாணிக்க வாசகரையே.

மறுப்பு : திருவாதவூரடிகள் வரலாறு கூறும் அனைத்துப் புராணங்களும் கணநாதர் ஒருவர் மாணிக்கவாசகராக வந்து பிறந்தார் என்கின்றனவே ஒழிய நந்திகளுள் ஒருவர் என்று கூறவில்லை. நந்தீசர் என்பது நந்திகளின் தலைவர். அவ்வாறாயின் அனைத்துப் புராணங்களும் இம்முக்கிய செய்தியினைக் கூறியிருக்கும்.

நந்திகள் நால்வர் எனக்கூறிய திருமூல தேவ நாயனாரும் சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிரர் ஆகிய மூவரோடு தன்னையும் சேர்த்துக் கூறுகிறாரே ஒழிய திருவாதவூரடிகளைச் சேர்க்கவில்லை.

மேற்கூறிய அப்பர் பாடலில் ''வாசகன்'' என்ற சொல் சிவபெருமான் திருக்குறிப்பு அறிந்து ஏவல் செய்யும் தூதுவர் என்று நந்திதேவரின் பதவி நிலையைக் குறித்த பெயரே ஒழிய மாணிக்கவாசகப் பெரு மானைக் குறிப்பதன்று என்கிறார் வெள்ளை வாரணனார்.

(ii) மறைமலை :

''நரியைக் குதிரை செய்வானும்'' எனத் திருவாரூர்த் திருப்பதிகத்திலும், ''மணியார் வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமும்'' எனத் திருப்பூவணத் திருத்தாண்ட கத்திலும் திருநாவுக்கரசர் குறிப்பிட்ட செய்திகள் மாணிக்கவாசகர் பொருட்டு ஆலவாய்ப் பெருமான் நரியைப் பரி யாக்கிய திருவிளையாடலையும் பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடலையும் குறிப்பன ஆதலால் மாணிக்கவாசகர் அப்பர் பெருமானுக்கு முற்பட்டவர்.

மறுப்பு : இழிதொழிலை உடைய நரியையும் உயர்ந்தோர் மதிக்கும் குதிரை யாகத் திருத்திப் பணிகொள்ளவல்ல தன் வயத்தனாகத் திகழ்பவன் என்று இறை வனின் குணத்தைத்தான் அப்பர் பெருமான் கூறுகிறார். திருவிளையாடலை அல்ல. ''செய்வான்'' என எதிர்காலத்தில் கூறி யிருப்பதே சான்று ஆகும்.

திருப்பூவணத்து இறைவர் வைகைக் கரையிலே தமக்குக் காட்சி அளித்ததைத் தான் ''வைகைத் திருக்கோட்டில் நின்ற தோர் திறம்'' என்கிறாரே ஒழிய பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடலை அப்பர் பெருமான் குறிக்கவில்லை.

(iii) மறைமலை : ''பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்'' என்று சுந்தரர் கூறியிருப்பது மாணிக்கவாசகரையே. எனவே மாணிக்கவாசகர் சுந்தரர்க்கும் முற்பட்டவர்.

மறுப்பு : ''பொய்யடிமையில்லாத புலவர்'' என்பது தனி அடியார் அல்ல; மெய்ம்மை நெறி நின்று இறைவனைப் போற்றிப் பரவும் பெரும் கூட்டத்தினர்.

இதனைத் தெளிவாக நம்பியாண்டார் நம்பிகளும், சேக்கிழார் பெருமானும் கூறியிருக்கிறார்கள். தாராசுரம் பெரிய புராணச் சிற்பங்களில் ''பொய்யடிமை இல்லாத புலவர்'' குறித்த சிற்பத்தில் அடியார் பலர் இருக்கின்றனர். அது மட்டுமல்லாது அத்துணை அடியார்களின் பெர்களைக் கூறி வழிபட்ட ஆரூரர் அருஞ்செயல்கள் பலபுரிந்த மாணிக்க வாசகரின் பெயரை வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பால் கூறினார் என்பது பொருத்தமன்று.

(iv) மறைமலை : மாணிக்கவாசகர் தேவார மூவர்க்கும் பிற்பட்டவராயின் அம்மூவரையும் உளமுருகப் போற்றியிருப்பார். அப்படிப் பாடாமையால் தேவார மூவர்க்கு முற்பட்டவரே.

மறுப்பு : ''மாணிக்கவாசகர் ''எழுபது சிவன் கோயில்களை எழுப்பிய'' கோச்செங்கட்சோழனைக் (காலத்தால் மிகவும் முற்பட்டவன்) கூடப் பாடவில்லை. அதனால் அச்சோழனுக்கும் முற்பட்டவன் என்று கூறமுடியுமா?

உலகத்தாரைப் பார்க்காமல் இறைவனையே பார்த்திருந்து உள்ளமுருகப் பாடிய மாணிக்கவாசகர் தமக்குக் காலத்தால் முற்பட்ட அடியார்கள் அனை வரையும் பாடியிருப்பார் என்று கூறுவது பொருத்தமன்று.

(v) மறைமலை : கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் ஆனைமுகக் கடவுள் வழிபாடு தோன்றியது. மாணிக்க வாசகர் ஆனைமுகக் கடவுளைப் பாட வில்லை. எனவே கி.பி. 6-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர்.

மறுப்பு : திருமுறை ஆசிரியர்கள் சிவபெருமானையே தெய்வமாகக் கொண்டு பாடியவர்கள். பரிவார தெய்வங்களைப் பாடவேண்டிய நிலைப்பாடு எடுக்காதவர்கள். இதனைக் கொண்டு கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் எனக் கூறமுடியுமா?

(vi) மறைமலை : திருக்கோவையாரில் ''கடற்றில்லை'' என்றெல்லாம் வருகிறது. அப்பர், சம்பந்தர் பாடல்களில் ''வயற்றில்லை'' ''கழி சூழ்தில்லை'' என்று வயல் சூழ்ந்ததாக வருகிறது. மாணிக்கவாசகர் காலத்தில் தில்லைக்கு அருகில் கடல் இருந்திருக்கின்றது. அப்பர், சம்பந்தர் காலத்தில் கடல் தில்லையை விட்டு ஒரு கல் தொலைவில் விலகிச் சென்றிருக்கிறது.

மறுப்பு : கடலுக்கு ஐந்தாறு கல் தொலைவில் இருந்தாலும் கடற்கரை ஊராகச் சிறப்பிப்பது வழக்கம். சீகாழிப் பதிக்குக் கிழக்கே ஐந்தாறு கல் தொலைவில் கடல் அமைந்திருப்பினும் ''தண்கடல் சூழ்ந்த பூம்புகலி நகர்'' என்று ஞான சம்பந்தர் பாடியிருக்கிறார்.

மாணிக்கவாசகரே வயல் சூழ்ந்த தில்லை எனும் பொருள்பட

''பொழில் சூழ்தில்லை''

''தண்பணை சூழ்தில்லை''

என்றெல்லாம் திருக்கோவையார் திருவாசகத்தில் பாடியுள்ளார்.

(vii) மறைமலை : கல்லாடம் ஆசிரியர் மாணிக்கவாசகரை மட்டுமே குறிப்பிடுகின்றார். தேவார மூவரைக் குறிப்பிட வில்லை. எனவே கல்லாடம் தோன்றிய காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு என்றும் அந்நூலுக்கு முன்பே மாணிக்கவாசகர் தோன்றிவிட்டார் என்றும் மறைமலையடிகள் கூறுகிறார்.

மறுப்பு : கல்லாடம் நூல் திருவிளையாடல்களைப் பற்றிக் கூறும் பொழுது சுந்தரர் காலத்தவராகிய சேரமான் பெருமாள் நாயனாரைப் பற்றிய செய்தி களைக் கூறுகின்றது. எனவே கல்லாடம் சுந்தரர்க்குப் பின் எழுந்த நூல் ஆகும்.

(viii) மறைமலை : மாணிக்கவாசகர் புத்தரோடு வாது செய்திருக்கின்றார். பௌத்த சமயம் கி.பி.5-ஆம் நூற்றாண்டில் தான் தமிழ் நாட்டில் தலைதூக்கியது. எனவே மாணிக்க வாசகர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர்.

மறுப்பு : திருவாதவூரடிகளுடன் வாதம் செய்தவர்கள் தமிழ் நாட்டவர்கள் அல்லர். அவர்கள் ஈழநாட்டவர்கள்.

இதுகாறும் மாணிக்கவாசகர் தேவார மூவர்க்கு முற்பட்டவர் அல்லர் என வெள்ளைவாரணனார் நிறுவிய கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. இனி மாணிக்க வாசகர் தேவார மூவர்க்குப் பிற்பட்டவர் என அவர் கூறும் காரணங்களைக் காண்போம்.

(i) வைப்பு முறை : சைவசமய குரவர் நால்வரைப் பற்றிக் கூறும் பொழுது உலக வழக்கில் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்று அவர்கள் திரு அவதாரம் செய்த கால அடைவினை ஒட்டியதாகக் கூறப்படுகிறது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என நூல்களில் வழங்கும் வைப்புமுறை, திருமுறைகளைத் தொகுத்த முறை ஆகியன அவ்வருளாசிரியர் நால்வரும் சிவபெருமான் திருவடி நிழலை அடைந்த காலஅடைவை ஒட்டி அமைந்தது ஆகும். எனவே மாணிக்க வாசகர் தேவார மூவர்க்குப் பிற்பட்டவர்.

(ii) சுந்தரர் குறிக்கவில்லை : சுந்தரர் அடியார்களைப் பற்றித் தொகுத்துக் கூறும் பொழுது, மாணிக்கவாசகரைச் சேர்க்க வில்லை. எனவே மாணிக்க வாசகர் சுந்தரர் காலத்திற்குப் பிற்பட்டவர்.

(iii) தில்லையில் பெருமாள் சந்நிதி : கி.பி. 710 முதல் கி.பி. 775 வரை ஆட்சிபுரிந்த நந்திவர்ம பல்லவ மன்னனே தில்லைத் திருக்கோயிலில் கோவிந்தராசப் பெருமாள் சந்நிதியை அமைத்தார்.

''வரம் கிடந்தான் தில்லையம்பலம் முன்றில் அம்மாயவனே'' என இச்செய்தியை மாணிக்கவாசகர் திருக்கோவையாரில் பாடியருளுகிறார். எனவே மாணிக்கவாசகர் காலம் இப்பல்லவ மன்னனுக்குப் பிற்பட்டதே ஆகும்.

(iv) வரகுண பாண்டியன் காலம் – இருவர் : மாணிக்கவாசகர் தமது பாடல்களில் வரகுணன் என்ற பாண்டியனைப் பற்றியும் அவனது சிவபக்தியைப் பற்றியும் குறிப் பிட்டுள்ளார். பாண்டிய மரபில் வரகுணன் என்ற பெயரில் கி.பி. 792 முதல் கி.பி. 835 வரையில் ஒரு அரசனும், கி.பி. 862 முதல் 880 வரையில் ஒரு மன்னனும் ஆக இருவர் ஆட்சி புரிந்திருக்கின்றனர்.

மாணிக்கவாசகர் குறிப்பிடும் வரகுணன் முதல் வரகுணவர்மனே என்பார் சதாசிவ பண்டாரத்தார்.

சோழ நாட்டில் கிடைத்துள்ள பல கல்வெட்டுக்களின் மூலம் சோழமண்டலம் முழுதும் முதல் வரகுண வர்மனது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது எனத் தெரிய வருகிறது. அதே கால கட்டத்தில் (கி.பி. 795 முதல் கி.பி. 846) அரசு புரிந்த நந்திவர்ம பல்லவனுடைய கல்வெட்டுக்கள் சோழ நாட்டில் காணப்படவில்லை. இக்காலத்தில்தான் முதலாம் வரகுண பாண்டியன் சோழ நாட்டில் படையெடுத்து வென்றிருக்க வேண்டும். இம்மன்னன் சோழ நாட்டுச் சிவன் கோயில்களுக்குப் பல நிவந்தங்கள் அளித்துள்ளான். இவன் திருவிடைமருதூர் இறைவன்பால் பேரன்பு வைத்து ஒழுகியிருக்க வேண்டும்.

''வரகுணனாம் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்'' என நிகழ் காலத்தில் மாணிக்கவாசகர் திருக்கோவையாரில் பாடியிருப்பதால் மாணிக்கவாசகர் இவன் காலத்தவரே.

(v) சங்கரருக்குப் பிற்பட்டவர் : ஏகான்ம வாதம் என்ற மாயாவாதத்தை நிறுவிய ஆதிசங்கரர் ஞானசம்பந்தருக்குப் (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு) பின் தோன்றியவர். மாணிக்கவாசகர் ''மிண்டிய மாயா வாதம்'' எனக் கூறுவதால் சங்கரர்க்குப் பிற்பட்டவரே.

(vi) சிராப்பள்ளி : சிராப்பள்ளி திருத்தலம் நாவுக்கரசர் காலத்துக்கு முன் சமணப் பள்ளியாக இருந்தது. நாவுக்கரசரால் சைவனாக மாற்றம் பெற்ற மகேந்திர வர்மன் காலத்தில் சிவன் கோயிலாக மாற்றப் பட்டது.

அச்சிராப்பள்ளித் தலத்தை ''சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி'' என மாணிக்க வாசகர் போற்றுவதால் நாவுக்கரசர் காலத்திற்குப் பிற்பட்டவர் ஆவார்.

(vii) அரிகேசநல்லூர் : பாண்டி நாட்டில் உள்ள அரிகேசநல்லூர் என்ற சிவத்தலத்தை ''கலையார் அரிகேசரி யாய் போற்றி'' என்று மாணிக்கவாசகர் பாடுகிறார். அரிகேசரி என்ற

பெயருடைய மன்னன் ஞானசம்பந்தப் பெருந்தகையால் சைவத்துக்கு மாறினான். எனவே மாணிக்கவாசகர் ஞானசம்பந்தர் காலத்திற்குப் பின்தோன்றியவர்.

(viii) தேவாரத் திருமுறைகள் கூறாத செய்திகள் : தேவாரத் திருமுறைகளில் வழங்கப் பெறாத அஞ்ஞானம், இருதயம் முதலான பன்னிரெண்டு வட சொற்களும், அச்சன் போன்ற நான்கு திசைச்சொற்கள் குதுகுதுப்பு போன்ற எட்டு பிற்காலச் சொற்களும் திருவாசகத்தில் காணப்படுகின்றன.

தேவாரத் திருமுறைகளில் காணப்படாத ''கோகழி'' முதலான பனிரெண்டு ஊர்களும் சில தலபுராண வரலாறுகளும், தசாங்கம் முதலிய பிரபந்த வகைகளும், புதிய யாப்பு விகற்பங்களில் சிலவும், பஞ்சமலம், வினையொப்பு முதலிய தத்துவ விளக்கங்களும் திருவாசகத்தில் காணப்படுவதால் தேவார மூவர்க்குப் பின்தோன்றியவர்.

இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்த்தால் அடிகள் வாழ்ந்தகாலம் கி.பி. 792 முதல் 835 வரை ஆட்சி புரிந்த முதல் வரகுண பாண்டியனது ஆட்சிக் காலமே ஆகும்.

அடுத்து வெள்ளைவாரணனார் ''திருவாசகம்'' எனும் பகுதியில் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக உள்ள திருவாசகப் பாடல்களின் கருத்துப் பொழிவினைத் தருகிறார்.

திருவாசகத்தின் முதற்கண் உள்ள சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல் என்ற நான்கும் திருக்குறளின் பாயிரமாகிய கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் போல திருவாசகத்திற்குப் பாயிரமாக எவ்வாறு அமைந்துள்ளன என்று நூலாசிரியர் விளக்குகிறார். 'திருவெம்பாவை' பகுதியில் சங்க இலக்கியங்கள் கூறும் தை நீராடலே மார்கழி நோன்பாகும் என்று சான்றுகளுடன் விளக்குகிறார். திருவம்மானையைச் சிலப்பதிகார அம்மானைப் பாடலோடு ஒப்பிடுகிறார்.

திருவாசகத்தில் 'திருப்படையாட்சி' எனும் பதிகத்திற்குப் பொருள் காண்பது மிகச் சிரமம். ஒவ்வொரு அடியின் இறுதியிலும் ''ஆகாதே'' என்று முடிவுபெறும். இதற்கு ''அல்லவா'' என்று பொருள் காண்கிறார் ஆசிரியர். ''காரிகை யார்கள் தம் வாழ்வில் என் வாழ்வு கடைப்படும் ஆகாதே'' எனவும் ''என்னணியார் முலை ஆகம் அளைந்துடன் இன்புறும் ஆகாதே'' எனவும் அடிகள் தம்மை இறைவனைக் காதலித்த நாயகியின் நிலையில் வைத்துக் கூறியிருத்தலும், இவ்வாறே ''செந்துவர்வாய் மடவார் இடரானவை சிந்திடும் ஆகாதே சேலன கண்கள் அவன் திருமேனி திளைப்பன ஆகாதே'' எனவும், ''மின்னியல் நுண்ணிடையார்கள் கருத்து வெளிப்படும் ஆகாதே'' எனவும், ''செங்கயல் ஒண்கண் மடந்தையர் சிந்தை திளைப்பன ஆகாதே'' எனவும், தம்மை ஒத்த அடியார்களையும் இறைவனைக் காதலித்த மகளிர் நிலையில் வைத்துக் கூறியிருத்தலும் மாணிக்கவாசகர் சன்மார்க்க நெறியில் நின்றவர் என்பதனைப் புலப்படுத்துவனவாகும் என்கிறார் ஆசிரியர். இப்பாடல்களுக்குப் பலரும் பலவாறு விளக்கங்கள் தந்து இடர்ப்படுவர். வெள்ளைவாரணனார் சிக்கல்கள் நீக்கித் தெளிவான உரை தருகிறார்.

அடுத்துத் ''திருச்சிற்றம்பலக் கோவையார்'' எனும் பகுதியில் கோவைக்கு விளக்கம் தந்து, திருக்கோவையாரின் துறைகளுக்கு விளக்கம் தந்து, திரண்டகருத்து எடுத்துரைத்து, நூலின் உரையாசிரியர் பேராசிரியரின் உரைச் சிறப்பையும் எடுத்துரைக்கிறார்.

திருக்கோவையாருக்குப் பிற்காலச் சான்றோர் ஒருவர் பேரின்பப் பொருள் காண்கிறார். அவர் கூற்று ''நாயகியைச் சிற்றம்பலம் போல வருணிக்கையால் நாயகி பரம்பொருளாயிற்று. பெறுவான் நாயகனும் பேறு நாயகியுமாக இரசமும் நாவும் போல இருத்தலாலும், கொத்தும் துறையும் கருப்பொருளும் உரிப்பொருளும் இடமும் எல்லாம் அருளின்பமெனக் கொள்க.''

இக்கூற்றினை வெள்ளைவாரணனார் கடுமையாக மறுக்கிறார். ''இது சைவ நன்னூல்களில் காணப்படாத புதுமை உடையது. இறைவனே ஆன்மநாயகன்; உயிரே அவனைத் தலைப்பட்டு மகிழ விழைந்த தலைவி. 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' எனும் அப்பர் பாடலும் பிற அருளாசிரியர்கள் பாடலும் தலை மகள் நிலையில் தங்களை வைத்துப் பாடியவையாகும்.

''தலைவியை அவளிருக்குமிடம் நாடி அடைந்து மணக்கும் தலைமைப்பாடும் ஊற்றமும் தலைவனுக்கே உண்டு. அது போல் ஆன்மாக்களை வலியவந்து ஆட்கொண்டருளும் தலைமையும் தகவும் உயிர்த்தலைவனாகிய இறைவன் ஒருவனுக்கே உரியது.''

''மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இறைவனைத் தலைவனாகவும் உயிராகிய தம்மை தலைவியாகவும் வைத்தே பாடியுள்ளார். அன்றியும் திருக்கோவையாரில் தலைவியைப் 'பெருந்துறைப் பிள்ளை' என்றே குறித்துள்ளார். 'பெருந்துறைப் பிள்ளை' என்பது மாணிக்கவாசகரின் பெயர் என்பது திருவெண்காட்டு அடிகள் வாக்கால் உணரலாம்'' என்று ஆசிரியர் முடிவுகட்டுகிறார்.

அடுத்து இடம்பெற்றுள்ள திருவாசகமும் கோவைத் திருவாசகமும், தொல்காப்பியமும் திருக்கோவையாரும், இறையனார் களவியல் உரையும் திருக்கோவையாரும், சங்க நூல்களும் திருக்கோவையாரும், திருக்குறளும் திருக்கோவையாரும், தேவாரமும் திருக்கோவையாரும் ஆகிய விரிவான கட்டுரைகள் அனைத்தும் ஒப்பியல் ஆய்விற்கு முடிமணியாகத் திகழ்கின்றன.

இப்பகுதியின் நிறைவுக் கட்டுரையான ''திருவாதவூரடிகள் மேற்கொண்டு ஒழுகிய சிவநெறிக் கொள்கை'' சைவ சித்தாந்தக் கருத்துக்களை உடையது. ''தான் ஒருவனுமே பலவாகி நின்றான்'' (திருத்தோணோக்கம் பாடல் 5) என்ற அடிக்கு ''இறைவன் ஒருவனே உலகுயிர்களாகிய பலபொருள்களுமாய்க் காணப்படுகின்றான்'' என்ற வேதாந்தப் பொருள் காண்பர் சிலர். ''இறைவன் ஐம்பூதங்கள் ஞாயிறு, திங்கள், ஆன்மா ஆகிய எல்லாப் பொருள்களிலும் பிரிவின்றி கலந்து நிற்கின்றான்'' என்று சைவசித்தாந்தக் கருத்தை வெள்ளைவாரணனார் நிலை நாட்டுகிறார். ஒரு பொருளே பல பொருளாகத் தோற்றுதலும், ஒரு பொருளே பல பொருள்களிலும் ஊடுருவி நிற்றலும் தம்முள் மாறுபட்ட இருவேறு தன்மைகளாகும். இத்திருப்பாடல் இரண்டாவது நிலையையே குறிக்கின்றது என்கிறார். இதே பாடலில்

''எண் வகையாய்ப் புணர்ந்து நின்றான்''

என்கிறார். ''புணர்ந்து நிற்றல்'' என்றது ''ஒரு பொருள் தானல்லாத வேறு பொருளுடன் கூடி நிற்றல்'' என்றே பொருள்படும். ''ஒரு பொருள் பலவாக விரிந்து நிற்றல் அல்ல'' என்கிறார் ஆசிரியர். அவ்வாறு ஒரு பொருள் பலவாக விரிந்து நிற்றல் எனக் கூற நினைந்திருந்தால் ''எண் வகையாய் நின்றான்'' என்று பாடியிருப்பார் என்கிறார்.

இதே போல ''இன்றெனக்கருளி'' என்ற பாடலுக்கு ஆசிரியர் அளிக்கும் விளக்கம் மிகச் சிறப்பானது. விரிக்கிற்பெருகும். ''சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்'' என்ற அடியில் ''சிவமாக்கி'' என்றதனால் ஆன்மா சிவத்தோடு ஒன்றியைந்து சிவமாகிய நிலையிலும் இறைவனுக்குரிய ஐந் தொழில்களைச் செய்யாமல் அம்முத்தி நிலையிலும் இறைவனுக்கு அடிமையாக இருந்து சிவானுபவம் ஆகிய நுகர்ச்சியை உடையது ஆன்மா என்பதனால் 'சிவமாக்கி' என்பதோடு நிறுத்தாமல் ''எனையாண்ட'' என்றும் கூறியருளுகிறார் மணிவாசகர்.

இவ்வாறு திருவாசகப் பொருள் காணும் பொழுதும்மிண்டிய மாயாவாதம் துன்புறுத்தாமல் தண்ணிய சைவசித்தாந்த நிழலைத் தருகிறார் வெள்ளைவாரணனார்.

ஒன்பதாம் திருமுறை : திருமாளிகைத் தேவர் முதல் சேந்தனார் ஈறாக ஒன்பதின்மர் பாடியருளிய இருபத்தெட்டு திருப்பதிகங்கள் திருவிசைப்பா ஆகும். சேந்தனார் பாடியருளியது திருப் பல்லாண்டு ஆகும்.

திருமாளிகைத் தேவர் : இவர் தில்லைப் பதியை உறைவிடமாகக் கொண்டவர். இவர் போகநாதர் மாணவர் என்ற கூற்றினையும், திருமாளிகைத் தேவரும் சேந்தனாரும் ஒருவரே என்ற கூற்றினையும் வெள்ளை வாரணனார் மறுக்கிறார். இவரது இயற்பெயர் ஜயந்தனாகவும், பிறந்த ஊர் திருவீழிமலைக்கு அருகில் உள்ள ஊராகவும், திருவாவடுதுறையில் இறைவனுடன் கலந்திருக்கலாம் என்றும் கருதுகிறார்.

சேந்தனார் : இவரது ஊர் திருவிடைக் கழிக்கு அருகில் உள்ள பிடவூருடன் தொடர்புடையதாக இருக்கலாம். இவர் முதல் கண்டராதித்த சோழருக்கு முற்பட்டவர். இவர் திருவிசைப்பா பாடியுள்ளார்.

கருவூர்த் தேவர் : இவர் கருவூரில் வேதியர் குலத்தில் பிறந்தவர். வேதிய மரபு தவறாதவர். இவர் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். இவர் பாடியருளிய கோட்டூர் தலம் தஞ்சை ஜில்லா மன்னார்குடி தாலுகாவில் உள்ள கோட்டூர் என்றும், 'திருமுகத்தலை' என்ற தலம் திருத்துறைப் பூண்டியில் உள்ள பன்னத் தெரு என்றும், மண்ணிநாட்டு ஏமநல்லூர் என்ற தலம் திருப்பனந்தாளுக்கு அருகில் உள்ள திரைலோக்கி என்றும் வாரணனார் முடிவுகட்டுகிறார்.

பூந்துருத்தி நம்பிகாடநம்பி : இவர் திருவையாற்றுக்கு அண்மையில் உள்ள திருப்பூந்துருத்தியிற் பிறந்தவர். காடன் என்னும் இயற்பெயரை உடையவர். இவரது காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதி ஆகும். முதல் இராசாதிராசன் காலத்துக் கல்வெட்டில் குறிக்கப்பட்ட நம்பிகாடநம்பி இவரே என்ற கூற்றையும், திருவிசைப்பா பாடிய நம்பிகாடநம்பி இரண்டாம் இராசராச சோழன் காலத்தவர் என்ற கூற்றையும் சான்றுகளுடன் மறுக்கிறார்.

கண்டராதித்தர் : இவர் சோழர் குடியிற் பிறந்து முடிவேந்தராய் ஆட்சி செய்தவர். கண்டர் என்பது சோழ மன்னர்களுக்குரிய பொதுப் பெயர். ஆதித்தர் என்பது இவரது இயற் பெயர். கி.பி. 950 முதல் கி.பி. 957 வரை ஆட்சி புரிந்தவர். இவரது மனைவியார் செம்பியன் மாதேவியார் ஆவார். திருவிசைப்பா பாடியவர் இரண்டாம் கண்டராதித்தர் என்று சில ஆய்வாளர்கள் கூறுவதை இவர் மறுத்து முதற்கண்டராதித்த சோழரே என்று இவர் சான்றுகளுடன் நிறுவுகிறார்.

வேணாட்டு அடிகள் : இவர் தென் திருவாங்கூர்ப் பகுதியிலுள்ள வேணாட்டில் அரசர் குடும்பத்தில் பிறந்த குறுநில மன்னர் ஆவார்.

திருவாலி அமுதனார் : இவர் சீர்காழிக்கு அருகில் உள்ள திருவாலி என்னும் ஊரில் பிறந்தவர். அந்தண மரபினர். முதல் இராசராசன் காலத்திலோ அதற்கு முன்னோ வாழ்ந்தவர்.

புருடோத்தம நம்பி : இவர் இயற்பெயர் புருடோத்தமன்; வேதியர் குலத்தில் பிறந்தவர். கி.பி. பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

சேதிராயர் : சேதி நாட்டை ஆண்ட குறுநில மன்னரின் குடும்பத்தில் பிறந்தவர். இந்நாட்டின் தலைநகர் திருக்கோவலூர். கி.பி. பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

பதினோராம் திருமுறை : ஒன்பதாம் திருமுறையைப் போலவே பதினோராம் திருமுறையும் ஏனைத் திருமுறைகளைப் போல யாது காரணம் பற்றியோ அறிஞர்கள் மத்தியில் கூட பேசவும் படவில்லை. எழுதவும் படவில்லை. அந்த வகையிலும் இந்நூல் பெருந்தொண்டு புரிந்திருக்கிறது.

''பதினோராந்திருமுறை'' கட்டுரையில் முதலில் பதினோராந்திருமுறை பற்றி பொதுவான கருத்துக்கள், யாப்பு, பொருள்வகை என முன்னுரை தருகின்றார். அடுத்து திருவாலவாயுடையார் பாடலை ஆய்கிறார்.

காரைக்காலம்மையார் : 'காரைக்காலம்மையார்' கட்டுரையில் வரலாறு. அம்மையார் காலம் (கி.பி.4 அல்லது 5-ஆம் நூற்றாண்டு), அம்மையார் பாடல்களின்

திரண்ட கருத்து என முறையாக முன் வைக்கிறார். அம்மையாரும், பூதத்தாரும் சேர்ந்து ''கறைப்பற் பெருமோட்டுக் காடு'' என்ற ஆரிட வெண்பாப் பாடல் பாடியதாக யாப்பருங்கலவிருத்தி உரையாசிரியர் கருத்தைத் தக்க காரணங்களுடன் மறுக்கிறார். ''பேயார்'' என்ற அம்மையார் பெயருக்கு நல்ல விளக்கம் தருகிறார். ''இவர் பேய் வடிவம் பெற்றனர் என்றது உடலில் தசை மிகவும் குறைந்து போக ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக எற்புடம்பினராக நிலவினர் என்பதை உணர்த்துவதாகும். இப்பேய் வடிவம், பேராசையால் விரும்பி யவற்றை நுகரப் பெறாது அலைந்து திரியும் அழுக்குடைய உயிர்களுக்கு அமைந்த இழிதகவிற்றாகிய பேய்வடிவம் அன்று என்பதும், சிவபெருமானைச் சூழ்ந்து நின்று பரவிப்போற்றும் தூய்மை வடிவின ராகிய பதினெண்கணங்களுள் ஒன்றாகிய மேன்மை உடையதாம்'' என்கிறார்.

ஐயடிகள் காடவர்கோன் : ''ஐயடிகள் காடவர்கோன் நாயனார்'' கட்டுரையில், இராசசிம்ம பல்லவனுடைய தந்தையாகிய பரமேசுவர வர்மனே காடவர் கோன் என்று வெள்ளை வாரணனார் நிறுவுகிறார். இவனது தந்தை இரண்டாம் மகேந்திரன் என்றும், இவனது ஆட்சிக்காலம் கி.பி. 670 முதல் கி.பி. 685 என்றும் கல்வெட்டுகளின் சான்றுகள் கொண்டு முடிவு கட்டுகிறார். அடுத்து இந்நாயனார் வரலாறும், இவர் பாடி அருளிய க்ஷேத்திர வெண்பாவின் கருத்துப் பொழிவும் இடம் பெறுகின்றன.

சேரமான் பெருமாள் நாயனார் : ''சேரமான் பெருமாள் நாயனார்'' கட்டுரையில் சேரர் குடியிலே பிறந்த பெருமாக் கோதையாரே சேரமான் பெருமாள் நாயனார் என்று கூறிவிட்டு அவரது வரலாற்றையும் ஆசிரியர் முன் வைக்கிறார். இதனைத் தொடர்ந்து சேரமான் பெருமாள் நாயனார் இயற்றி அருளிய ''பொன் வண்ணத்து அந்தாதி'' நூலுக்குக் கருத்து விளக்கம் தந்து, ''ஓதவன் நாமம்'' என்ற அகத்துறைப் பாடலுக்குப் பேரின்ப விளக்கம் தருகிறார். பொன் வண்ணத்து அந்தாதி பாடல்களுக்கு ஒப்பாக அப்பர் பெருமான் பாடலையும், ஞானசம்பந்தப் பெருந்தகை பாடலையும் எடுத்துக் காட்டுகிறார். ''மும்மணிக் கோவை'' என்ற பகுதியில் கோவைக்கு இலக்கணம், நாயனார் எழுதியருளிய ''திருவாரூர் மும்மணிக் கோவை'' நூலின் திரண்ட கருத்து – எடுத்துரைத்து பின்னர் திருக்கோவையார், அகநானூறு, குறுந்தொகை முதலான பாடல்களுடன் ஒப்பாய்வு செய்கிறார். நாயனார் பாடியருளிய ''திருக்கயிலாய ஞான உலா'' பகுதியில் முதலாவதாக உலா இலக்கணத்தை வச்சணந்தி மாலை, தொல்காப்பியம் கொண்டு வரையறைப் படுத்துகின்றார். உலா பரத்தையர்க்கன்றி குலமகளிர்க்கல்ல என்ற நச்சினார்க்கினியர் கருத்தினைத் தெளிவுபடுத்துகிறார். பிரபந்தங்களில் இவ்வுலா ஆதி உலா என்றும், இதனை ஒத்து சுவையுடைய மற்றொரு நூல் இதுகாறும் தோன்ற வில்லையாதலின் பிரபந்த வளர்ச்சியில் இவ்வுலாவே முடிந்த நிலையில் விளங்குவது என்றும் முடிந்த முடிபாகக் கூறுகிறார். இவ்வுலாவின் கண் கூறப்படும் எழுவகைப் பருவத்து மகளிர் எழுவகைத் தோற்றத்தனவாகிய உயிர்கள் என்றும், பேதை முதல் தெரிவை ஈறாகச் சொல்லப்பட்ட அறுவரும் ஓரறிவு உயிராகிய புல்முதல் ஆறறிவு உயிராகிய மக்கள் ஈறாக உள்ள அறுவகை உயிர்கள் என்றும், பேரிளம் பெண் என்றது தேவர், முனிவர் முதலிய சிறப்புடைய உயிர்கள் என்றும் சான்றோர் கூற்றாகப் பேரின்பப் பொருள் தருகின்றார். நூலின் கருத்துப் பொருளும், குறள், அப்பர் தேவாரம், காரைக்காலம்மையார் பாடல் ஆகியவற்றின் ஒப்பாய்வும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நக்கீரதேவநாயனார் :

நக்கீரர் பற்றிப் பெரும்பற்றப் புலியூர் கூறுவன, பரஞ்சோதி முனிவர் கூறுவன, கல்லாட நூலாசிரியர் கூறுவன, சிவப்பிரகாச சுவாமிகள் கூறுவன, நிரம்ப அழகிய தேசிகர் கூறுவன அனைத்தையும் நூலாசிரியர் வெள்ளை வாரணனார் தொகுத்துக் கூறி, முடிவாக நக்கீரர் இருவர்

என்றும், பதினோராம் திருமுறையில் இடம் பெற்றவர் திருமுருகாற்றுப்படை ஆசிரியர் அன்று என்றும், அவர் தேவார மூவர்க்கும் பிற்பட்டவர் என்றும், அவர் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு என்றும் தக்க சான்றுகளுடன் கூறுகிறார்.

நக்கீரர் இருவர் என்பதற்கான காரணங்கள் முறையே பின்வருமாறு :

திருமுருகாற்றுப்படை

அ) பொருள் அமைதி, வரலாற்று நிகழ்ச்சிகளால் வேறுபாடு

ஆ) குறைந்த வடசொற்கள்

இ) கண்ணப்பர் வரலாறு இல்லை

ஈ) தமிழ்நாட்டுப் பழங்குடி மக்கள் போற்றிய வழிபாடு

உ) செறிவும், திட்பமும் வாய்ந்த சொல் நடை

பதினோராந் திருமுறை பிரபந்தங்கள் :

ஆ) கூடுதலான வடசொற்களும் , பிற்காலச் சொல் வழக்குகளும்.

இ) கண்ணப்பர் வரலாறு முதலான பல்வேறு புராணச் செய்திகள், பிற்கால வரலாறுகள்.

ஈ) ஆகமச் செயல் முறைகளைக் கொண்ட வழிபாடு

உ) இளகிய எளிய நடை.

பதினோராந்திருமுறை ஆசிரியர் தேவார திருவாசகச் சொற்றொடர்களையும் கருத்துக்களையும் அப்படியே எடுத்தாண்டிருப்பதால் இவர் தேவார மூவர்க்குப் பிற்பட்டவர் என்கிறார் ஆசிரியர்.

''பணிந்தேன்'' என்று தொடங்கும் பாடலில் ''என் மேல் மெய்யெரிவு தீரப் பணித்தருளு'' என்று வருவதனால் நக்கீரர் மேல் சினமுற்ற சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணைக் காட்ட அவர் தம் கண் அழலால் நக்கீரர்க்குண்டாகிய அழற்சியே இப்பாடலில் மெய்யெரிவு எனக் குறிக்கப் பட்டதெனச் சிலர் கருதுவதை வாரணனார் மறுக்கிறார். ''மெய்யெரிவு'' என்பது ''வெப்பு நோய் போல்வதோர் உடற் பிணி'' என்கிறார்.

இறைவன் பாடித்தந்த தமிழ்ச் செய்யுளை நக்கீரர் பழித்தனர் என்பதற்கு ''அருந்தமிழ் பழித்தனன் அடியேன்.'' என்ற பெருந்தேவ பாணியை அகச்சான்றாகக் காட்டுவர். இப்படிப் பொருள் கொண்டால் ''வேண்டுமது இனிவேண்டுவன் விரைந்து'' என்ற வரிக்கும் அருந்தமிழ் பழித்தலையே மீண்டும் வேண்டினேன் என்று நக்கீரர் கூறுவதாக முடியும். எனவே ''பழிச்சினன்'' என்றால் ''தமிழ்ப் பாடல்களால் போற்றித் துதித்தேன்'' எனப் பொருள் கொள்ள வேண்டும் எனத் தெளிவுபடுத்துகிறார்.

1) நக்கீரர் எழுதிய ''கைலை பாதிகாளத்தி பாதி'' என்ற நூலாய்வில் காளத்திக்கும் கயிலைக்கும் உள்ள தொடர்பினை ''கயிலாயத்து உச்சியுள்ளான் காளத்தியான்'' என்ற அப்பர் பாடலை மேற்கோளாகக் காட்டி, உணர்த்துகிறார். பின்னர் அப்பர் தேவாரம், திருவாசகம், சம்பந்தர் தேவாரம், திருக்குறள், புற நானூறு, திருமுருகாற்றுப் படை, முத்தொள்ளாயிரம் ஆகியவற்றுடன் இந்நூலை ஒப்புமைப்படுத்துகிறார். நூலின் திரண்ட கருத்தினையும் கூறுகிறார்.

2) ''திருஈங்கோய்மலை எழுபது'' என்ற நூல் சங்க இலக்கியமான பரிபாடல் தொகையினை அடி ஒற்றியது என்ற கருத்தினை முன் வைக்கிறார். பின்னர் நூலின் திரண்ட கருத்து, யாப்பருங்கல விருத்தி, சம்பந்தர் தேவாரம், ஐங்குறுநூறு, பரிபாடல் ஆகிய இலக்கியங்களுடன் ஒப்பு எனத் தொடர்கிறார்.

''கல்லாக் குரங்கு'' என்ற பாடலில் குரங்குகள் கனியின் நிழல் படிந்த பளிங்குப் பாறையினைக் கனியென்றே கருதித் தம் கைவிரல் நகங்கள் வருந்த விரைந்து தோண்டும் பேதைமைக்கு ''இவ்வுலகில் இன்பமில்லாத போலித் தோற்றங்களை உண்மை என நம்பி ஒருநிலைப் படாது அலமந்து திரியும் பேதை மாந்தரது இழிதகவு'' எனக் குறிப்புப் பொருள் காண்கிறார்.

இதே போல ''வழகிதழ்'' என்ற பாடலுக்கும் குறிப்புப் பொருள் தருகிறார். ''வளர்ந்த இளங்கன்னி'' என்ற பாடலின் சிலேடை நயத்தையும் புலப்படுத்துகிறார்.

இதனையடுத்துத் திருவலஞ்சுழி, மும்மணிக்கோவை, திருவெழு கூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப் பிரசாதம், காரெட்டு, போற்றித் திருக்கலிவெண்பா ஆகிய நூல்களை ஆய்கிறார்.

''திருமுருகாற்றுப்படை'' என்ற பகுதியில் இதனைப் பாடிய நக்கீரரும், நெடுநல்வாடை பாடிய நக்கீரரும் ஒருவரே என்று நிறுவுகிறார். திருமுறையாசிரியர்கள் மேற்கொண்டு ஒழுகிய சைவ சமயக் கருத்துக்கள் இந்நூலில் இடம் பெற்றிருத்தலாலும், சிவபெருமானும் முருகனும் ஒருவரே என்பது பழந்தமிழர் கொள்கையாதலாலும் முருகனைப் பற்றிய இந்நூல் பதினோராந் திருமுறையில் இடம் பெற்றது என்கிறார்.

''திருக்கண்ணப்பதேவர் திருமறம்'' என்ற கட்டுரையில் அருளாளராகிய கண்ணப்பர் தன் கண்ணைப் பெயர்த்து தந்த அன்புச் செயல் எப்படி ''மறம்'' எனப்பட்டது என்பது கேள்வி. சிக்கல்களையே எடுத்து அவிழ்க்கும் வல்லவரான வெள்ளை வாரணனார் இதற்கும் பதில் அளிக்கிறார். ''தம்மால் வழிபடப்பெறும் திருக்காளத்தி இறைவருடைய கண்களில் குருதி நீர் வழிதலைக் கண்டு சிறிதும் பொறாராய் அத்துன்ப நிலையைக் கண்கொண்டு காண்பதை விடக் கண்ணையிழந்து இறத்தலே நலமென்று எண்ணித் தமது கண்ணைத் தோண்டிக் காளத்தி இறைவனது கண்ணில் அப்பிய பேரன்பின் பாற்பட்ட வீரச்செயல் போரில் உயிர் துறத்தலாகிய வீரச் செயலோடு ஒத்தது ஆகலின் இதனை 'மறம்' என்றார்'' என்கிறார் ஆசிரியர்.

கல்லாட தேவ நாயனார் :

இப்பகுதியில் நான்கு கல்லாடர்களைப் பற்றி ஆசிரியர் ஆய்கிறார். கடைச் சங்க காலப் புலவரான கல்லாடனார் மொழி நடையும் ஏனைய மூவர் மொழிநடையும் முற்றிலும் வேறுபட்டவை. எனவே சங்க காலக் கல்லாடர் வேறு; நாயனார் வேறு. திருமுறையில் இடம் பெற்ற கல்லாடர் நூலும் கல்லாடர் பாடிய கல்லாடம் நூலும் மொழிநடையில் சிறிது வேறுபட்டுள்ளது. அது மட்டுமன்று. இருவரும் ஒருவரே எனின் சிவபெருமானைப் பற்றிப் பாடப் பட்டுள்ள கல்லாடமும் பதினோராந் திருமுறையில் இடம் பெற்றிருக்கும். எனவே கல்லாடம் நூல் எழுதிய கல்லாடர் பிற்பட்டவரே. தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய கல்லாடர் இளம் பூரணர்க்குக் காலத்தால் பிற்பட்டவர் என்பது முடிந்த முடிபு.

கபிலதேவர் பாடல்களை இளம்பூரணர் தனது உரையில் குறிப்பதால் இளம் பூரணரும், தொல்காப்பிய உரை எழுதிய கல்லாடரும், நாயனாருக்குப் பிற்பட்டவரே. எனவே, நான்கு கல்லாடர்களும் தனித்தனி பெருமக்களே என்று நிறுவுகிறார்.

கல்லாடம் என்பது தமிழகத்தில் உள்ளதோர் ஊர். செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த மீஞ்சூரில் உள்ள வரதராசப் பெருமாள் கோயில் கல்வெட்டில் ''கல்லாடீச்சுர முடையார் கோயில்'' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இராசராசேச்சுரம் எப்படி இராசராசன் பெயரால் அமைந்ததோ, அது போல கல்லாடீச்சுரம் கல்லாடர் பெயரில் அமைந்திருக்க வேண்டும். அக்கோயில் எங்குள்ளது என்பது தெரியவில்லை. கல்லாடம் என்ற ஊர் இறைவர்க்குக் கல்லாடர் என்ற திருப்பெயரும், அவ்வூர் வாழ்மக்களுக்கு அவ்விறைவன் பெயரும் வந்திருக்க வேண்டும் என்கிறார் ஆசிரியர்.

கல்லாட தேவ நாயனார் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு ஆகும். இவர் இயற்றிய திருக்கண்ணப்ப தேவர் திருமறம் பற்றி அடுத்து இந்நூலில் ஆய்வு செய்யப் பட்டுள்ளது.

பரணர் முதலானோர் :

அடுத்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பரணதேவநாயனார் பற்றியும், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த இளம்பெருமானடிகள் பற்றியும், இதே காலத்தில் வாழ்ந்த அதிராவடிகள் பற்றியும் ஆய்வு செய்யப் பட்டுள்ளது.

பட்டினத்தடிகள் : பட்டினத்தடிகள் என்று அழைக்கப் பட்ட திருவெண்காட்டடிகள் பற்றிப் பலகதைகள் வழங்குகின்றன. அவை அனைத்தையும் ஆசிரியர் எடுத்துக் கூறி பதினோராம் திருமுறை ஆசிரியர் பிற ஆசிரியர்களினும் வேறுபட்டவர் என்று அவர்கள் பாடல்கள், சொல், நடை, பொருளமைதி கொண்டு நிறுவுகிறார். அவர் தம் பாடல்களில் உள்ள அகச்சான்றுகளைக் கொண்டு சில செய்திகளை மட்டுமே ஆசிரியர் முழுமையாக ஏற்கிறார். அவை பின் வருமாறு :

1) பெயர் திருவெண்காடன்.
2) கப்பல் யாத்திரையில் நிரம்ப பயிற்சி உள்ளவர்.
3) உழவுத் தொழில் தெரிந்தவர்.
4) சிவபெருமான் ஆசிரியத் திருமேனி கொண்டு ஆட்கொண்டு அருளினன்.
5) ''காதற்ற ஊசியும்'' வரலாறு பொருத்தமன்று.
6) திடீரென்று துறவெய்தவில்லை; மனை வாழ்க்கையில் முறைப்படி வாழ்ந்து முறையாகத் துறவடைந்தவர்.
7) திருவெண்காட்டடிகள் காலம் வேறு; பத்திரகிரியார் காலம் வேறு.
8) திருவொற்றியூரில் சிவப்பேறு அடைந்தார்.

நிறைவாக திருவெண்காட்டடிகள் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி பத்தாம் நூற்றாண்டின் தொடக்கம் என நிர்ணயிக்கிறார்.

அடுத்து திருவெண்காட்டடிகள் அருளிய நூல்களையும் நம்பியாண்டார் அருளிய நூல்களையும் ஒவ்வொன்றாக எடுத்து விளக்குகின்றார்.

நம்பியாண்டார் நம்பி : இவர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும்.

சேக்கிழார் : ''சேக்கிழார் புராணத்தை'' உமாபதி சிவம் பாடியிருக்க முடியாது என மா. இராசமாணிக்கனார் நான்கு காரணங்களைக் கூறுகிறார்.

1) சிந்தாமணியைச் சோழன் படித்து இன்புற்றதை மாற்றச் சேக்கிழார் பெரிய புராணம் பாடியதாகக் கூறுவதற்குப் பெரிய புரணத்தில் ஆதரவு இல்லை.
2) இடங்கழியார் முடிமன்னர் என்கிறது சேக்கிழார் புராணம்; ஆனால் அவர் சிற்றரசரே.
3) ஐயடிகள் காடவர் கோன், கழற்சிங்கர் என்ற பல்லவப் பெருவேந்தர்களைச் சேக்கிழார் புராணம் சிற்றரசர் என்கிறது.
4) சுந்தரரை இசைத் தமிழில் வல்லவராகச் சேர்க்கவில்லை. திருநாளைப் போவாரை இசைத்தமிழ் வல்லோராக இந்நூல் கூறுகிறது. இரண்டு கருத்துக்களும் தவறு என்கிறார் இராசமாணிக்கனார்.

இராசமாணிக்கனாரின் நான்கு கருத்துக்களையும் வெள்ளை வாரணனார் மறுத்து சேக்கிழார் புராணம் உமாபதி சிவம் பாடியதே என நிறுவுகிறார்.

1) சிந்தாமணிக் கதையை மெய்யென நம்புதல் கூடாது என்று சேக்கிழார் விலக்கியதாகச் சேக்கிழார் புராணம் கூறுகிறதே ஒழிய, அதன் காவியச் சுவைகளை இழித்துரைக்கவில்லை.
2) இடங்கழி நாயனார் சோழர் குடியில் பிறந்தவர் என்று சேக்கிழாரும், நம்பியாண்டார் நம்பியுமே பாடியிருக்கிறார்கள். எனவே அவர் மூவேந்தருள் ஒருவர் என்று கூறியதில் தவறில்லை.
3) பல்லவவேந்தரைத் தமிழ் மூவேந்தர் போலப் பழங்குடியெனத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை. எனவே ஐயடிகள் காடவர்கோன், கழற்சிங்கன் என்ற இரு பல்லவ வேந்தர்களையும் சிற்றரசர் எனச் சேக்கிழார் புராணம் குறித்ததில் தவறில்லை.

4) நந்தனார் ஆடுதலும் பாடுதலும் செய்தார் எனச் சேக்கிழார் கூறுகிறார். எனவே அவர் இசையில் வல்லவர்.

அடுத்து ஆசிரியர் சேக்கிழார் காலத்தை நிர்ணயம் செய்கிறார்.

1) கோயமுத்தூர் மாவட்டம் முத்தூர் சிவாலயத்தில் உள்ள வீர ராஜேந்திர சோழன் கல்வெட்டில் ''உத்தம சோழப் பல்லவராயனுடைய மைந்தர்'' என்று இருப்பதைக் கொண்டு, வீரராஜேந்திரன் கங்கை கொண்ட சோழனின் மகன் என்றும், உத்தம சோழப் பல்லவராயர் சேக்கிழார் என்றும் கொண்டு, சேக்கிழார் கங்கை கொண்ட சோழன் காலத்தில் இருந்திருக்க வேண்டும் என்று ஒரு அறிஞர் கூறுகிறார்.

இங்கு சொல்லப்பட்ட வீரராஜேந்திரன் கி.பி. *1207* முதல் *1252* வரை ஆண்ட கொங்குச் சோழன் என்றும், இவன் குலோத்துங்கனுக்குப் பின்வந்தவன் என்றும் இவன் குலோத்துங்கனுக்கு முன் ஆண்ட வீரராசேந்திரன் அல்ல என்றும், மு.இராகவையங்கர் கூறிப் பின் ''இதனால் இங்கு கூறப்படும் உத்தம சோழப் பல்லவ ராயன் சேக்கிழார் அல்ல'' என்கிறார்.

2. அ. கோபிநாதராயர் கூற்று : முதற் குலோத்துங்க சோழன் வேண்டுகோளின் படி சேக்கிழார் பெரிய புராணம் பாடினார்.

வெள்ளை வாரணனார் மறுப்பு : சேக்கிழார் பெரிய புராணத்தில் தாம் வாழ்ந்த காலத்திய அரசனை ''அநபாயன்'' என்கிறார். இரண்டாம் குலோத்துங்க சோழனுக்குப் பின்னரே ''அநபாயன்'' என்ற பெயர் வழங்கலாயிற்று. சேக்கிழார் அநபாயனைப் பற்றிக் கூறும் கருத்துக்களும், ஒட்டக்கூத்தர் தம்மை ஆதரித்த இரண்டாம் குலோத்துங்கனாகிய அநபாயனைப் பற்றிய கருத்துக்களும் ஒத்து இருக்கின்றன.

இரண்டாம் குலோத்துங்கன் மகனாகிய இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்திய திருமழபாடிக் கல்வெட்டில் ''ஜயங் கொண்ட சோழ மண்டலத்துக் குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் ராமதேவனான உத்தம சோழப் பல்லவ ராயன்'' என்று இருக்கிறது. சேக்கிழான் மாதேவடிகள் இராமதேவன் என்பார் சேக்கிழார் குடியில் வந்தவர். இவர் இரண்டாம் குலோத்துங்கனுக்கு மகனாகிய இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்திலும் வாழ்ந்தவர் என்பது புலனாகின்றது.

எனவே இம்மூன்று செய்திகளாலும் சேக்கிழாரைக் கொண்டு பெரிய புராணம் பாடுவித்தவன் இரண்டாம் குலோத்துங்க சோழன் என்பது துணியப்படும்.

3) இரண்டாம் இராஜராஜ சோழன் ஆட்சிக் காலத்தில் குன்றத்தூர்ச் சேக்கிழார் பாலறாவாயன் களப்பாளன் திருவரத்துறை கோயிலுக்கு நிலமளித்துள்ளார். இவரே மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கோட்டூர் கோயிலுக்குப் பொற்காசுகள் வழங்கியுள்ளார். இச்சாசனங்களில் குறிக்கப்பட்டவர் சேக்கிழாரின் தம்பி பாலறாவாயர் ஆவார். இச்சாசனங்களால் இவர் இரண்டாம் குலோத்துங்கன் காலம் (கி.பி. *1133 – 1146*) தொடங்கி மூன்றாம் குலோத்துங்கனது ஆட்சித் தொடக்கம் வரை *35*, *40* ஆண்டுகள் வாழ்ந்தவர் எனத் தெரிகிறது.

சதாசிவ பண்டாரத்தார் கருத்து : சேக்கிழாரை ஆதரித்தவர் மூன்றாம் குலோத்துங்கன் என்பது டி.வி. சதாசிவ பண்டாரத்தார் கருத்து ஆகும். (i) இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் இருந்தவர் ஒட்டக்கூத்தர் ஆவார். இவர் சிவபக்தி நிறைந்தவர். இவர் காலத்தில் பெரிய புராணம் பாடப்பட்டிருந்தால் சேக்கிழார் பற்றித் தமது நூலில் குறிப்பிட்டி ருப்பார். (ii) அநபாயன் தில்லையில் பொன் வேய்ந்தான் என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். தில்லையில் பொன் வேய்ந்தவன் மூன்றாம் குலோத்துங்கன் ஆவான். (iii) சேக்கிழார் தம் சொந்த ஊராகிய, குன்றத்தூரில் திருநாகேச்சரம் என்ற கோயிலைக் கட்டினார். அத்திருக் கோயிலில் மூன்றாங் குலோத்துங்கனது 2-ஆம் ஆண்டு முதல் 33-ஆம் ஆண்டு வரையமைந்த கல்வெட்டுக்கள் தொடர்ச்சியாக அமைக்கப் பட்டுள்ளன. (iv) மூன்றாம் குலோத்துங்கன் மூன்று வயதிலேயே பட்டத்திற்கு வந்தான்.

இளம் வயதில் சீவக சிந்தாமணி பால் ஈர்ப்பு இருந்திருக்கலாம். அவன் மனதை மாற்றச் சேக்கிழார் சிவகதை பாடினார் என்ற ''சேக்கிழார் புராணக்'' கதைக்கு இடமிருக்கின்றது. இரண்டாங் குலோத்துங்கன் சிந்தாமணி படிக்க நேர்ந்தது என்று சொல்ல இடமேயில்லை.

பண்டாரத்தாரின் மேற்கூறிய கருத்துக்களை வெள்ளை வாரணனார் ஏற்றுக் கொண்டு ''இரண்டாம் குலோத்துங்கனுக்கு மகனும் மூன்றாங் குலோத்துங்கனுக்குத் தந்தையும் ஆகிய இரண்டாம் இராசராச சோழனின் திருமழபாடிக் கல்வெட்டில் ''ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழார் மாதேவடிகள் ராமதேவனான உத்தம சோழப் பல்லவராயன் என்பவரே என அனைவரும் ஏற்றுக் கொண்டமையால் சேக்கிழார் இரண்டாங் குலோத்துங்கன் ஆட்சியில் முற்பகுதியிலும் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில் பிற்பகுதியிலும் வாழ்ந்தவர்'' என்று முடிவு கட்டுகிறார்.

அடுத்து வெள்ளைவாரணனார் நூலுக்குள் செல்கிறார். நூலமைப்புப் பகுதியில் சிலப்பதிகாரம் பெரிய புராணம் பற்றி ஒப்புமை, தொகை நூல், வகைநூல், பெரிய புராணச் சிறப்பு, காப்பியத் தலைவர் சுந்தரர் ஆகியன கூறப்பட்டுள்ளன. பின்னர் பெரிய புராணச் சுருக்கமாக நாயன்மார் வரலாற்றினைச் சுருக்கித் தருகிறார் வெள்ளை வாரணனார்.

அடுத்து பெரிய புராணத்தில் போற்றப் பெற்ற நாயன்மார்களின் காலத்தை ஆதாரங்களுடன் ஆசிரியர் நிர்ணயிக்கிறார்.

1) அறுபத்து மூவர்கள் வாழ்ந்த காலம் – இரண்டாம் நரசிங்க வர்மனாகிய இராசசிங்க பல்லவன் வாழ்ந்த எட்டாம் நூற்றாண்டு முடியவுள்ள காலம்.

2) கோச்செங்கணான் – சங்க காலம்.

3) சண்டீசர், கண்ணப்பர் பன்னூறு ஆண்டுகள் – தேவார ஆசிரியர்களுக்குப் முற்பட்ட தொன்மை.

4) மூர்த்தி நாயனார் – களப்பிரர் காலம்; கி.பி. மூன்றாம் நூற்றாண்டு.

5) திருமூலர் – கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு.

6) காரைக்காலம்மையார் – கி.பி. ஆறாம் நூற்றாண்டு.

7) கணம்புல்லர், சாக்கியர், அமர்நீதியார், தண்டியடிகள், நமிநந்தியடிகள், ஏறிபத்தர் – அப்பருக்கு முன், கி.பி. ஆறாம் நூற்றாண்டு.

8) அப்பூதியடிகள், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநீல நக்கர், முருகர், சிறுத் தொண்டர், குங்குலியக் கலயர், குலச்சிறையார், மங்கையர்க்கரசியார், நின்றசீர் நெடுமாறர் – கி.பி. ஏழாம் நூற்றாண்டு, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் காலத்தவர்கள்.

9) ஐயடிகள் காடவர் கோன், கணநாதர், காரியார், அதிபத்தர், கலிக்கம்பர், கலியர், அரிவாட்டாயர், கூற்றுவ நாயனார், வாயிலார், முனையடுவார், இடங்கழியார், இயற்பகையார், நேச நாயனார், இளையான் குடிமாறனார், மெய்ப்பொருள் நாயனார், திருநாளைப் போவார், ஏனாதிநாதர், ஆனாயர், உருத்திர பசுபதியார், திருக்குறிப்புத் தொண்டர், மூர்க்க நாயனார், சிறப்புலி நாயனார், திருநீலகண்டக் குயவனார், புகழ்த் துணையார் – அப்பர், சம்பந்தர் காலத்திற்குப் பிற்காலம், சுந்தரர்க்கு முற்காலம்.

10) சடையனார், இசைஞானியார், நரசிங்க முனையரையர், விறல் மிண்டர், கோட்புலியார், ஏயர்கோன் கலிக்காமர், மானக்கஞ்சாறர், பெரு மிழலைக் குறும்பர், சோமாசிமாறர், சேரமான் பெருமாள், கழற்சிங்க நாயனார், பூசலார், செருத்துணையார் – சுந்தரர் காலம்.

திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, நக்கீரதேவர், கல்லாடதேவர் பாடல்கள், பட்டினத்தார், பாடல்கள் – ஆகியவற்றின் கருத்துக்களுக்கும் பெரிய புராணத்திற்கும் முரண்பாடில்லை என்று ஆசிரியர் சான்றுகளுடன் விளக்குகிறார்.

சேக்கிழார் பெருமான் முன்னூல்களான தொல்காப்பியம் (12), திருக்குறள் (2), திருமுருகாற்றுப்படை (1), சிறு பாணாற்றுப்படை (2), பெரும் பாணாற்றுப்படை (1), பட்டினப்பாலை (4), கலித் தொகை (1) அகநானூறு (2), புறநானூறு (8), சிலப்பதிகாரம் (20), இறையனார் களவியல் (2), திருக்கோவையார் (1), சிந்தாமணி (4), கலிங்கத்துப்பரணி (1) ஆகியவற்றிலிருந்து தாம் உணர்ந்த நயங்களை மேற் கொண்டதை வெள்ளை வாரணனார் விரிவாக விளக்குகிறார். இதுவே ஒரு தனி ஆய்வாக அமைந்துள்ளது. பேராசிரியர் வெள்ளை வாரணனாரின் பரந்த இலக்கிய அறிவு புலனாகிறது.

''திருத்தொண்டர் புராணச் சிறப்பு'' என்ற நிறைவுப் பகுதி மற்றுமொரு முனைவர் பட்ட ஆய்வேடு எனலாம். பெரிய புராணத்தின் சிறப்புக்களையெல்லாம் சாறாகப் பிழிந்து தந்திருக்கின்றார் ஆசிரியர். ''உலகெலாம்'' என்ற முதற் பாடலுக்கு விளக்கம், பன்னிரு திருமுறைகளும் பிரணவ வடிவில் அமைந்தமை, திருவைந்தெழுத்தின் பெருமை, திருநீற்றின் பெருமை, சைவ சமய நால்வகை நெறிகள், சைவசித்தாந்த உண்மைகள் (இது ஒரு தனி ஆய்வாகும். எட்டு வகையில் விளக்கியுள்ளார்), சமண, பௌத்த கோட்பாடுகள், வரலாற்றுப் புலமை, நிலநூற் பயிற்சி, இயலிசைப் புலமை, நாடகப் பாங்கு, கல்விப் பயிற்சியின் இயல்பு, திருமுறைப் புலமை, அரசியற் புலமை, நாடறிபுலமை, சமுதாயச் சித்தரிப்பு, மொழித்திறம், சமுதாயத்திற்கேற்ற உயர்ந்த கருத்துக்கள் (இப்பகுதியே தனி ஒரு நூலாக ஆக்கத் தகுதி வாய்ந்தது), திருக்குறளுக்கு விளக்கவுரை, திருமுறை உரை விளக்கம், பொருளணி, சொல்லணி என முழுமையாக வெள்ளைவாரணனார் வடித்துத் தந்துள்ளார்.

இத்தகைய அரிய நூலைத் தந்த பேராசிரியர் வெள்ளைவாரணனாரைத் தமிழுலகம் என்றும் மறவாது.

25. சைவ சித்தாந்தச் சிறுநூல்கள்

1966

(ஆசிரியர் : மு. அருணாசலம்; பக்கங்கள் – 46, ; நாராயணசாமி நாயுடு, மணிவிழா மலர்)

இந்நூல் சிறியதாயினும் காரம் பெரிது. மு. அருணாசலம் அவர்களின் கடுமையான உழைப்பு புலப்படுகிறது. ஆய்வாளர்களுக்கு அருந்துணையாயது.

பெருநூல்கள்

நூலின் பெயர், ஆசிரியர் பெயர், காலம், அச்சிட்ட ஆண்டு, சிறப்புச் செய்திகள்.

1) தத்துவப் பிரகாசம், தத்துவப் பிரகாசர் – பரம முனிவர் உரையுடன் கூடியது, 14-ஆம் நூற்றாண்டு ... 337 பாடல்கள்.
2) சிவநெறிப்பிரகாசம், சிவாக்கிரக யோகி – நந்தி சிவாக்கிரக யோகியின் உரையுடன் கூடியது, 16-ஆம் நூற் ... 215 பாடல்கள்.
3) சைவசமய நெறி, மறைஞான சம்பந்தர் – ஆறுமுக நாவலர் உரை, ..., ..., 727 குறட்பாக்கள்.
4) சிவதருமோத்தரம், மறைஞான சம்பந்தர், 16-ஆம் நூற் ..., 1269 விருத்தப் பாக்கள்.
5) திருவாவடுதுறைப் பண்டார சாத்திரங்கள், திருவாவடுதுறை ஆதீன ஆசாரியரும் அடியவருமாய் இருந்த பலர் ..., ..., 14 சிறு நூல்கள்.
6) வள்ளலார் சாத்திரம், சிவஞான வள்ளல், 15-ஆம் நூற் ...., 20 சிறு நூல்கள்.
7) மெய்ம்மொழிச் சரிதை, இளங் காரிகுடி மெய்ம்மொழித் தேவர், கி.பி. 1400 ...., 486 பாடல்கள்.
8) தத்துவரத்தினாகரம்; கோகழியடிகள்; 17-ஆம் நூற்; ..., 1016 பாடல்கள்.

சிறுநூல்கள்

சரியை கிரியை :

1) நித்யகன்மநெறி, சிதம்பரநாத முனிவர், 17-ஆம் நூற் ..., 75 குறட்பாக்கள்.
2) புட்பவிதி, கமலை ஞானப் பிரகாசர், 16-ஆம் நூற்; ..., 56 விருத்தப்பாக்கள்.
3) பூமாலை, கமலை ஞானப் பிரகாசர்;
4) புட்பபலன்; .....; 17-ஆம் நூற்; 1906; 149 பாடல்கள்.
5) சைவானுட்டான அகவல்; கமலை ஞானப்பிரகாசர், ..., ..., 118 அகவற்பா வரிகள்.
6) சிவபூசை அகவல்; கமலை ஞானப் பிரகாசர்; ..., ..., 172 + 444 வரிகள்.
7) சிவபூசை அந்தாதி; மதுரைச் சிற்றம் பலவன் பெற்ற அழகிய சொக்கநாத வரோதயன், 19-ஆம் நூற்; 1880; 127 பாடல்கள்.
8) முத்திரா லக்ஷணம்; ..., ..., 1925;
9) குருமொழி, மனவாசகம் கடந்தார்; 16-ஆம் நூற்; ....., 64 ஆசிரியப்பா வரிகள்.
10) நியதிப் பயன்; காழி – கண்ணுடைய வள்ளல், 15-ஆம் நூற்; ..., 103 கட்டளைக் கலித்துறை.
11) ஞானபூஜாகரணம், அருள் நமச்சிவாய தேசிகர், ..., ..., 30 விருத்தப்பாடல்.
12) ஞானபூசை; ....., ..., 18 விருத்தப் பாடல்.
13) ஞானதீட்சாவிதி; ...., ..., 8 விருத்தம்.
14) ஞான அந்தியேட்டி; 2 பாடல்.
15) போசன விதி; 4 செய்யுள் 11, 12, 13, 14, 15 ஆகிய ஐந்து நூல்களும் செய்தவர் – அருள் நமச்சிவாய தேசிகர்; காலம் – 14-ஆம் நூற்றாண்டு.
16) ஆசௌச தீபிகை; நெல்லை தமிழாகர முனிவர்; ...., ..., 175 விருத்தப் பாடல்கள்.
17) சிவபுண்ணியத் தெளிவு; கமலை ஞானப் பிரகாசரின் மாணாக்கர்; 16-ஆம் நூற்; ..., 145 பாடல்கள்.
18) மறைஞானசம்பந்தர் நூல்கள்; ...., 16-ஆம் நூற்; 1901, 1954.

அ) வருத்தமற உய்யும்வழி; 25 குறட் பாக்கள்

ஆ) மகாசிவராத்திரி கற்பம்; 30 குறள்

இ) மாத சிவராத்திரி கற்பம்; 14 குறள்

ஈ) சோமவார சிவராத்திரி கற்பம்; 17 குறள்

உ) சோமவார கற்பம்; 216 குறள்

ஊ) உருத்திராக்க விசிட்டம்; 109 வெண்பா

எ) திருக்கோயில் குற்றம்; 2 ஆசிரிய விருத்தம்

ஏ) நித்தியகருமவிதி, மாயூரப் புராணம்

யோகம் :

1) அட்டாங்க யோகக்குறள்; ..., ..., 1923;
2) பிராசாத அகவல்; காவை அம்பல நாதத் தம்பிரான்; 14-ஆம் நூற்; ..., 159 வரிகள்.
3) பிராசாத தீபம்; காழி கண்ணுடைய வள்ளலின் மாணாக்கர்; 15-ஆம் நூற்; 1933; 39 விருத்தங்கள்.
4) பிராசாத மாலை; கமலை ஞானப் பிரகாசர்; 16-ஆம் நூற்; 1925; 12 விருத்தம்.
5) பிராசாத விருத்தம்; குருஞான சம்பந்தர்; 16-ஆம் நூற்; 1931; விருத்தம்.
6) பிராசாதவிதி; ..., 18-ஆம் நூற்; 1940.
7) வடமொழி நூல்கள்; (அ) பிராசாத ஷட் சுலோகி (6 சுலோகங்கள்) (ஆ) பிராசாத சந்திரிகை (155 சுலோகங்கள்)

(i) ஞானம் :
சிறப்பான சைவ நூல்கள் :

1) சிவானந்த மாலை; சம்பந்த முனிவர்; 14-ஆம் நூற்; 1910; 424 வெண்பாக்கள்.

2) தத்துவ விளக்கம்; சம்பந்த சரணாலயர்; 14-ஆம் நூற்; 1918; 51 கட்டளைக் கலித்துறை.

3) திருநெறி விளக்கம்; கண்ணுடைய வள்ளலின் மாணாக்கர்; ..., ..., 117 விருத்தங்கள்.

4) சதாசிவ ரூபம்; சட்டைநாத வள்ளல்; 15-ஆம் நூற்; ..., 151 அகவற்பா, 640 அடிகள்.

5) அவ்வை குறள்; பிற்கால அவ்வையார்; 14-ஆம் நூற்; ...., 310 குறட்பாக்கள்.

6) தேவிகாலோத்தரம்; ...., 14-ஆம் நூற்; 73 விருத்தங்கள்.

7) சர்வ ஞானோத்தரம்; ....; ....; 1904; பிரகரணம் விருத்தம் 71.

(ii) தசகாரியம் பற்றிக் கூறும் ஞான நூல்கள்:

1) தசகாரியம்; களந்தை ஞானப் பிரகாச பண்டாரம்; கி.பி. 1475; 1911; 302 விருத்தப்பாக்கள்.

2) சித்தாந்த சாரம்; பரமமுனிவர்; 14-ஆம் நூற்; ...., 32 எண் சீர்விருத்தங்கள்.

3) உரூப சொரூப அகவல்; காவை அம்பலவாணத் தம்பிரான்; 14-ஆம் நூற்; ..., 104 வரிகள்.

4) திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்; குருஞானசம்பந்தர்; 16-ஆம் நூற்; ..., 136 வரிகள்.

5) சிவானந்த போதசாரம்; ..., 16-ஆம் நூற்; ....,

6) தசகாரியம்; .....;.....; ......; 62 வரிகள்.

7) உபதேச மாலை; சிவஞான வள்ளல்; ....; 1907; 100 வெண்பா.

(iii) கண்டன நூல்கள் :

1) சங்கற்பநிராகரணம்; கண்கட்டிமடம் மறைஞான தேசிகர்; ..., ..., 424 குறள் வெண்பாக்கள்.

2) பரமத திமிரபானு.

3) பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம்; அப்பய்ய தீக்ஷிதர் வடமொழியில் இயற்றினார். யாழ்ப்பாணத்துச் சபாபதி நாவலர் தமிழில் மொழி பெயர்த்தார்; 15-ஆம் நூற்; 1876; செய்யுட்கள் முறையே 21, 31.

4) சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் ஹரதத்தர் (வடமொழி) வீரபத்திரர் (தமிழ்), ..., ..., 287 விருத்தப் பாக்கள்.

5) அரிகர தாரதம்மியம்; அப்பய்ய தீக்ஷிதர் (வடமொழி); திருஞான சம்பந்தம் பிள்ளை (தமிழ்); ....; 1865; 111 பாடல்கள்.

6) பரப்பிரம்ம விளக்கம்; காளமேகப் புலவர் (?); 15-ஆம் நூற்; 1891; 85 வெண்பா.

7) சிவதத்துவ விவேகம்; அப்பய்ய தீக்ஷிதர் (வடமொழி) சிவஞான சுவாமிகள் (தமிழ்); ...., 1923; 70 விருத்தங்கள் .

8) சுலோக பஞ்சகம்; கஞ்சனூர் ஹரதத்த சிவாசாரியார்; ....; ...; 32 அடிகள்.

பிற நூல்கள் (ஞானம்)

1) சத்தி நிபாத அகவல்; காவை அம்பல வாணத் தம்பிரான்; 14-ஆம் நூற்; ....; 76 அடிகள்.

2) ஒழிவிலொடுக்கம்; கண்ணுடைய வள்ளல்; ...; ...; 253 வெண்பா.

3) சிவபோகசாரம்; குருஞான சம்பந்தர்; 16-ஆம் நூற்; .....; 139 வெண்பாக்கள்.

4) சிற்றம்பல நாடி நூல்கள் :

அ) துகளறுபோதம்; 101 வெண்பாக்கள்.

ஆ) இரங்கல் மூன்று; 54 + 50 + 49 கண்ணிகள்.

இ) திருப்புன்முறுவல்; 11 விருத்தம்.

ஈ) சிற்றம்பல நாடிகள் கலித்துறை, அனுபூதி விளக்கம்; சிற்றம்பல

நாடிகள் மாணாக்கர்; 54 கலித்துறை + 65 கண்ணி.

உ) சிற்றம்பல நாடி தாலாட்டு, வெண்பா; சம்பந்த முனிவர்; 63 கண்ணி + 65 வெண்பா.

5) அத்துவிதசாரம்; கமலை ஞானப் பிரகாசர்; 16-ஆம் நூற்; ....; 64 பாடல்கள்.

6) பஞ்சாக்கரமாலை; கண்ணுடைய வள்ளல்; 60 வெண்பா.

7) வள்ளல் ஞானசாரம்; கண்ணுடைய வள்ளல்; 14-ஆம் நூற்; 118 விருத்தப் பாடல்கள்.

8) மாயப் பிரலாபம்; கண்ணுடைய வள்ளல்; ...; 1899; 83 வெண்பா;

9) பஞ்ச மலக்கழற்றி; கண்ணுடைய வள்ளல்; 14-ஆம் நூற்; ....; 5 வெண்பா

10) பரமோபதேசம்; மறைஞான சம்பந்தர்; ....., ..., 41 குறள்.

11) ஐக்கிய வியல்; மறைஞானசம்பந்தர்; ..., ..., 15 வெண்பா.

12) பதிபசு பாசப் பனுவல்; 336 குறள் வெண்பா.

13) சகலாகமசாரம்; களந்தை ஞானப் பிரகாசர்; 15-ஆம் நூற்;

14) இறைவனூற்பயன்; மறைஞான சம்பந்த தேசிகர்; 16-ஆம் நூற்.

15) பதிபசு பாசத் தொகை; ...; ...; 1903; 25 குறட்பாக்கள்.

16) முத்திநிலை; கண்கட்டி மறைஞான சம்பந்தர்; 16-ஆம் நூற்; 19 வெண்பா.

17) முத்திநிச்சயம்; குருஞான சம்பந்தர்; 16-ஆம் நூற்; 19 வெண்பா.

18) சிவஞான தீபம்; ரேவணசித்தர்; 16-ஆம் நூற்; 1910; 127 விருத்தங்கள்.

19) திருமெய்ஞ்ஞானப் பயன்; 100 குறள்.

20) சைவ சித்தாந்த சாரம்; சிவானந்த முனிவர்; 18-ஆம் நூற்; 1934; 51 விருத்தப்பாக்கள்.

21) சித்தாந்த நிச்சயம்; திருநாவுக்கரசு தேசிகர்; 18-ஆம் நூற்; 1928; 99 விருத்தப் பாக்கள்.

22) சம்பிதாய தீபம்; சிவானந்த முனிவர்; ....; 186 வெண்பா

23) முனிமொழி முப்பது; 30 அறுசீர் விருத்தங்கள்.

24) திருஞானசாகரம்; பரஞ்சோதி முனிவர் சீடர்; 18-ஆம் நூற்; 1952; 101 வெண்பா.

25) திருவருட்பயன் உதாரணக் கலித்துறை; காவை அம்பலவாணர்; 18-ஆம் நூற்; 1940; 100 பாடல்கள்.

26) சிதம்பர விலாசம்; 144 அடிகள்.

27) பிராயச்சித்த சமுச்சயம்; வைத்திய நாத தேசிகர்; 18-ஆம் நூற்.

28) ஆன்மலிங்கமாலை; திருவாரூர்ச் சிதம்பரநாத தேசிகரின் மாணாக்கர்; 16-ஆம் நூற்; 11 ஆசிரிய விருத்தப்பா.

29) பஞ்சாக்கர அனுபூதி; சொர்க்கபுர ஆதீனம் சரவண தேசிகர்; 86 அடி

30) அனுக்கிரக சாரம்; 141 வெண்பா

31) சுகாதீத மணிமாலை; 17-ஆம் நூற்; 50 வெண்பா

32) திரிபதார்த்த தீபம்; அழகிய திருச்சிற்றம்பல தேசிகர்; 18-ஆம் நூற்

33) பேரானந்த சித்தியார்; 108 விருத்தம்

34) சிவஞான விளக்கம்; 18-ஆம் நூற்; 120 வெண்பா

35) சிவானந்த போதம்; 100 விருத்தப் பாடல்கள்

36) அறிவானந்த சித்தியார்; வலங்கை மீகாமன்; 343 விருத்தம்

வசன நூல்கள்

சிவப்பிரகாசக் கட்டளை, அதன் சிந்தனை, ஞானாமிர்தக் கட்டளை, திருவாலவாய்க் கட்டளை, சிற்றம்பலநாடி கட்டளை என்னும் மெய்கண்ட சாத்திரக் கட்டளை, சித்தாந்த மரபு, அதை ஒட்டி

எழுந்த மறுப்பு நூல்கள் இரண்டு, திரிபதார்த்த சிந்தனை, சித்தாந்த தத்துவ லட்சணம், மரபு என்னும் சைவ சித்தாந்த சாரம், சித்தாந்தப் பிரகாசிகை, உயிர் அட்டவணை என்னும் பூப்பிள்ளை அட்டவணை, பதிபசு பாசப்பனுவல், சித்தாந்தக் கட்டளை, சித்தாந்த சாதனக் கட்டளை, சித்தாந்த தசகாரியக் கட்டளை, துகளறு போதக் கட்டளை, அத்துவாக் கட்டளை, அவத்தை தரிசனம், அளவை அட்டவணை, தத்துவானுபோகக் கட்டளை, மெய்ப்பொருள் ஐந்தின் தசக்கிரமக் கட்டளை, பிராசாத விதி, சித்தாந்த வசன பூஷணம்.

26. வாருங்கள் பார்க்கலாம் : 1966.

(ஆசிரியர் : கி.வா. ஜகந்நாதன்; வெளியீடு; அமுத நிலையம், சென்னை; பக்கம் – *348*; விலை ரூ. *15.00*)

சமய குரவர்கள் அவதரித்த தலங்கள், வீடுபேறடைந்த தலங்கள், அவர்கள் வரலாற்றோடு தொடர்புடைய பிறதலங்கள் பற்றி பயணக் கட்டுரை போல, சுவைபட ஆசிரியர் எழுதியுள்ளார். தலங்களைப் பற்றிய செய்திகள், தலபுராணங்கள், தொடர்புடைய திருமுறைப் பாடல் விளக்கங்கள், தலங்களில் உள்ள கோயில்கள், இன்றைய நிலை என கதைபோல– நாமே நேரில் உடன் செல்வது போல – ஆசிரியர் எழுதியுள்ளார்.

27. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சி

அ.மு. பரமசிவானந்தம்

1966

சென்னை பல்கலைக்கழகத்தில் கல்கி நினைவுச் சொற்பொழிவுகளின் தொகுப்பு இந்நூல் ஆகும். 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நூல்கள், இதழ்கள் பற்றிய விவரங்கள் உள்ளன.

இதழ்கள்

19-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டிலிருந்து 66 இதழ்களும் தமிழ்நாட்டுக்கு அப்பாலிருந்து 15 இதழ்களும் வெளிவந்துள்ளன. சில இதழ்கள் மட்டும் சைவம், கிறித்துவம் என்று குறிப்பிட்டு உள்ளார். பலவற்றிற்கு எந்த குறிப்பும் இல்லை. சில இதழ்களின் பெயர்களைக் கொண்டு சைவம் என்று ஒருவாறு முடிவு கட்டலாம்.

1) சித்தாந்த பூஷணம் (*1881*)
2) சித்தாந்த ரத்நாகரம் (உத்தம வாத தூபவாதூலம்) (*1881*)
3) சித்தாந்த ரத்நாகரம் (ஆபாச ஞானநிரோதம்) (*1883*),
4) சித்தாந்த ரத்நாகரம் (ஆசார்யப் பிரபாவம்) (*1884*)
5) சிவரத்நமகுடம் (*1891*)
6) சிவரத்நமகுடம் (*1892*)
7) சைவ உதயபாநு (கிழமை) (*1882*)
8) சித்தாந்த தீபிகை (திங்கள்) (*1897*)
9) சிவபக்தி சந்திரிகை (*1890 – 93*)

ஞான போதினி (*1897 – 1905*); ஞானாநீலலோசனி (கிழமை) (*1890*); ஞானாமிர்தம் (*1883*); ஞானபானு (திங்கள்) (*1894*); ஆகிய இதழ்கள் இன்ன சமயம் என்று அறியமுடியவில்லை சைவமாகவும் இருக்கலாம்.

தமிழ்நாட்டுக்கப்பால்

1) இந்து நேசன் (*1888*); பினாங்கு;
2) திராவிடப் பிரகாசிகை (*1899*); ஆசிரியர் சபாபதி நாவலர்.

நூல்கள்

உரைகள் :

1) திருவிளையாடற் புராண உரை
2) பெரியபுராண உரை
3) சைவசமய நூல்களுக்குத் தெளிந்த உரைநடை நூல்கள்
4) ஆறுமுக நாவலர் எழுதிய ''பெரிய புராணம் – சூசனம்''

5) சமயம் பற்றி ஆறுமுக நாவலர் எழுதியுள்ள பல நூல்கள்

6) இராமலிங்க அடிகளாரின் ஆறுதிரு முறைகள்; அடிகளாரின் கட்டுரைகள், கடிதங்கள்.

7) சபாபதி நாவலர் சிவஞான முனிவருடைய நூல்களைத் தொகுத்துள்ளார். இவர் சித்தாந்த மரபு கண்டன கண்டனம் வைரக்குப்பாயம், சிவசமவாத உரை மறுப்பு முதலிய சமயக் கண்டன நூல்களை எழுதியுள்ளார்.

8) ''வைதீக சைவ சித்தாந்த சண்ட மாருதம்'' எனப்பட்ட சூளை சோமசுந்தர நாயகரும், அவரது மாணவர்கள் சிலரும் சைவ சமயம் பற்றி நல்ல நூல்கள் எழுதியுள்ளனர் . சைவ சமயத்தை மறுப்பாருக்குப் பதிலாகத் தர்க்க முறையிலும் பல உரைகள் எழுதியுள்ளனர். சமயக் கண்டனங்களும், மறுப்பு நூல்களும் வெளிவந்துள்ளன. வைரக்குப்பாயம், குதர்க்க விபஞ்சனி, கண்டனம், கண்டன கண்டனம் என்ற வகையில் பல உள்ளன.

9) சோமசுந்தர நாயகரின் மாணவராகிய மறைமலையடிகளார் ''துகளறு போதம்'' என்ற சைவசித்தாந்த நூலுக்கு உரை எழுதினார்.

10) மற்றொரு மாணவராகிய பச்சையப்ப நாயகர் ''பரதத்துவப் பிரகாசிகை'' என்று நூலை வெளியிட்டார்.

சூளை சோமசுந்தர நாயகர் எழுதிய சமய தர்க்க நூல்கள் பல. அவற்றுள் சில வருமாறு :

1) சுக்லாம் பரதர சுலோக விசாரம்

2) சிவதத்வ சிந்தாமணி

3) சிவபாரம்யப்பிரதரிசினி

4) சமரச ஞான தீபம்

5) ஆபாசஞான நிரோதம்

6) ஸ்ரீசேக்கிழார் திருவாக்குண்மை

7) ஆசார்யப் பிரபாவம்

8) சித்தாந்த சேகரம்

9) சிவாதித்ய ரத்னாவலி

10) பிரஹ்மதத்வ நிரூபணம்

11) சித்தாந்த ரத்நாகரம் – பிரம்ம வித்யா விகற்ப நிரசநம்.

கண்டன நூல்கள்

சைவ சித்தாந்த – வேதாந்த கருத்துப்போர்கள், கண்டனங்கள், தருக்கங்களாக பல நூல்கள் வெளிவந்தன. சோமசுந்தர நாயகர் மாணவருள் பலர் இதில் ஈடுபட்டனர்.

எடுத்துக்காட்டு :

1) மெய்கண்ட சிவதூஷண நிக்ரகம் (1900) (சைவசித்தாந்த ஆதரவு)

2) குதர்க்க வாத விபஞ்சனி (1878) (வேதாந்தம் ஆதரவு)

இதே முறையில் இராமலிங்க அடிகளாருடைய ''அருட்பாவி''னுக்கு யாழ்ப்பாணம் கதிரைவேற்பிள்ளையினுடைய ''மருட்பா'' வாதம் பற்றிய உரைநடை நூல்களும், கட்டுரைகளும் வெளிவந்தன.

கிறித்துவச் சமய மறுப்புவாதங்கள் எழுந்தன.

(1) கிறிஸ்து மத கண்டனம் – ஸ்ரீ சிவ சங்கர பண்டிதர் – 1882. இவ்வாறு இவர்களேயன்றி காஞ்சி சபாபதி முதலியார், காசி விஸ்வநாத முதலியார், வேறு சிலதுறவிகளும் எழுதியுள்ளார்.

பிறநூல்கள்

1) திராவிடப் பிரகாசிகை – சபாபதி நாவலர்.

2) பெரிய புராண வசனம் – ஆறுமுக நாவலர்.

3) மெய்ஞ்ஞான பானு – சபாபதி முதலியார் – 1891.

28

ஆடல்வல்லான்

(ஆசிரியர் – மகாவித்வான் ச. தண்டபாணிதேசிகர், வெளியீடு திருவாவடுதுறை ஆதீனம்; பக்கங்கள் - 356)

நாட்டில் பல்வேறு திருக்கோயில்களில் இருக்கும் நடராஜப் பெருமானின் திரு உருவப் படங்களும், நூற்றெட்டுத் தாண்டவ பேதங்களின் படங்களுமாக வெளிவந்துள்ள அரியகருவூலம் ஆகும் இந்நூல்.

திருமுறைகளிலும், சைவசித்தாந்த சாத்திரங்களிலும் துறைபோகிய தண்டபாணி தேசிகர் அவர்கள் தமக்கு முற்றிலும் தொடர்பில்லாத நாட்டிய சாஸ்திரத்தை முறையாகப் படித்து தத்துவ விளக்கங்களும் தந்திருக்கின்றார்.

''கல்'' என்ற சொல்லிருந்து ''கலை'' என வந்து ''படிப்பால் விளைவது'' எனப் பொருள் கொள்கிறார். அதுவிரிந்து கண்ணாலும், கருத்தாலும் கவரத்தக்க தொழில் எல்லாம் 'கலை' என்கிறார். அடுத்து கிரேக்கக் கலை உள்ளதை உள்ளபடியே காட்ட முற்படும். நம் கலை அதிலிருந்தும் மேலே போய் தெய்வீக உணர்ச்சியையும் கருத்தின் உட்கிடையையும் உணர்த்தும் என்று வேறுபடுத்திக் காட்டுகிறார்.

''நாட்டியக் கலையின் பிறப்பும் வளர்ச்சியும்'' என்ற பகுதியில் ''ஒரு காலத்து வரையறையில்லாது, இறைவன் அருளால், உயிருணர்வால் எழுந்த கூத்து, பாவ, ராக தாளங்களோடு கூடியபோது பரதம் அல்லது நடனம் ஆகிறது.

அடுத்து நாட்டிய சாஸ்திரப்படி நாட்டிய அங்கங்களை விளக்குகிறார். ''நாட்டிய வகைகள்'' என்ற பகுதியில் நவ தாண்டவம், ஏழுவகைத் தாண்டவங்கள், நூற்றெட்டுத் தாண்டவ பேதங்களை விளக்குகிறார். கலித்தொகை, சிலப்பதிகாரம், திருமுறைகள் ஆகிய இலக்கியங்களில் கூறப்படும் சிவதாண்டவத்தை விளக்குகிறார்.

நடராச தத்துவம் பகுதியில் இறைவன் ஆடும் இடம் எட்டும் இரண்டும் உருவான இலிங்கம் ஆகும். எட்டும் இரண்டும் பத்து, பத்தின்தமிழ் வடிவம் 'ய'. 'ய' உயிரைக் குறிக்கும். உயிரின் இடமாக மந்திர சொரூபியாக ஆடுகிறார்'' என்கிறார். பின் ''ஊன நடனம்'', 'ஞானநடனம்', 'ஐந்தொழில்களைக் குறிக்கும் ஐந்து வகையான தாண்டவங்கள் ஆகியவற்றை விளக்குகிறார். இறைவனுடைய திருமேனியில் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் தத்துவ நுட்பம் தருகிறார்.

கூத்தப் பெருமானைப் பற்றிய வரலாறுகள், வழிபட்டுப் பேறு பெற்றோர், அசபா நடனம் முதலான பிற தாண்டவங்கள் ஆகியன பற்றி எழுதுகின்றார்.

எழுவகைத் தாண்டவங்களின் நுட்பங்களை விளக்குகிறார்.

1. ஆணந்த தாண்டவம் : எல்லா உயிர்களுக்கும் அவரவர்கள் பரிபாக நிலைக்கு ஏற்ப ஆணவமல இருளைப் போக்கி, வினைகளை நுகர்வித்துப் பேரின்ப நிலையை எய்துவிக்கின்ற பெருங்களிப்பால் இறைவன் ஆடுகின்ற தாண்டவம் ஆனந்ததாண்டவம். இது ஐந்தொழிலையும் ஒருசேர இயற்றுவதால் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் எனவும் வழங்கப் பெறும். எடுத்துக்காட்டு: தில்லைத் திருவுரு.

2. காளிகா தாண்டவம் : படைத்தல் தொழிலைக் குறிக்கும். எடுத்துக்காட்டு – நல்லூர்.

3. கௌரி தாண்டவம் : காத்தல் தொழில்; எடுத்துக்காட்டு – காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள கூரம்.

4. சந்தியா தாண்டவம் : இது பிரதோஷ நடனம்; எடுத்துக்காட்டு – எல்லோராவில் உள்ள கைலாசநாதர் கோயில்.

5. சங்கார தாண்டவம் : அழித்தல் தொழில், எடுத்துக்காட்டு– திருச்செங்காட்டாங்குடி.

6. திரிபுரதாண்டவம் : முப்புரம் எரித்த காலத்தில் இறைவன் வெற்றிக் களிப்பில்

ஆடியது. இது ''கொடு கொட்டி'' எனவும் படும்.

பாண்டரங்கமும் திரபுரதாண்டவம் தான். எடுத்துக்காட்டு – திருவதிகை, காஞ்சி கைலாசநாதர் கோயில்.

7. ஊர்த்துவ தாண்டவம் : காலை மேலே தூக்கி நின்றாடுதல்; எடுத்துக்காட்டு – தென்காசி, சிதம்பரம், திருவாலங்காடு.

''சிற்றம்பலநாதன் லயசிவமே'' என்ற பகுதி ஆழ்ந்து படிக்க வேண்டிய ஒன்று. பல கேள்விகளை எழுப்பி விடை காண்கிறார் ஆசிரியர். ''எங்கும் சிதம்பரம்'' என்பதோடு கட்டுரைப் பகுதி முடிகிறது.

இதனையடுத்து அந்தகாசுரவத தாண்டவம், காலசங்கார தாண்டவம், கஜசங்கார தாண்டவம், திரிபுரசங்கார தாண்டவம், ஆனந்த தாண்டவம் ஆகியவற்றை இந்தியாவில் உள்ள இருநூறுக்கும் மேற்பட்ட சிற்பங்களின் புகைப்படங்களுடன் ஆசிரியர் விளக்குகிறார்.

இதனைத் தொடர்ந்து நூற்றெட்டுத் தாண்டவபேதங்களின் வரைபடங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

நிறைவாக விரதம், உபாசனை, யந்திர பூசனையோடு நூலை நிறைவு செய்கிறார் தேசிகர்.

29

தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்

1969

(ஆசிரியர் – டாக்டர் ஆ. வேலுப் பிள்ளை; இலங்கை; வெளியீடு – பாரி புத்தகப் பண்ணை, சென்னை; பக்கங்கள் 212; விலை ரூ. 7/-)

இந்நூல் சைவத்திற்கென தனிப்பட்ட முறையில் எழுதப் படவில்லையென்றாலும், சைவ சமயச் சிந்தனை – தோற்றம் முதல் வளர்ச்சி வரை – பற்றி அறிய உதவுவதாகும். சங்ககாலம் முதல் இக்காலம் வரை தமிழ்ச்சிந்தனை காலம்தொறும் எப்படி மாறி – வளர்ந்துள்ளது என அறியலாம். கால நெடும் பாதையில் தமிழரசி ஊர்வலம் என்று கூடச் சொல்லலாம். அவ்வகையில் இந்நூல் சைவ சமய வரலாற்றில் முக்கிய இடம் பெறுகிறது.

இந்நூல் கால நெடும் பாதையை இயற்கை நெறிக்காலம். அறநெறிக்காலம், சமய நெறிக் காலம், தத்துவ நெறிக்காலம் அறிவியல் நெறிக்காலம் என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கிறது.

1) சங்க காலத்தை இயற்கை நெறிக்காலம் என்கிறார் ஆசிரியர். இக்காலத்தில் தமிழ் மக்களுடைய வாழ்க்கை தமிழ் நாட்டுச் சூழலுக்கு ஏற்ப அமைந்திருந்தது. பிறநாட்டினர் செல்வாக்கு தமிழ்நாட்டில் அதிகம் இடம் பெறவில்லை. உலகியல் வாழ்க்கையில் தமிழ் மக்களிடையே பூரண நம்பிக்கை நிலவியிருந்தது.

சோழநாடு – மருதநிலம்; சேரநாடு – குறிஞ்சி; பாண்டி நாடு – முல்லை; தமிழ்நாட்டைச் சுற்றிச் கடல்; எனவே கடலோரப் பகுதி – நெய்தல்.

சங்ககால மக்கட் பாகுபாடும் ஒழுக்கமும் நில இயற்கைக்கு ஏற்பவே அமைந்திருந்தன. இயற்கை நெறிக்கால இலக்கியம் மக்கள் ஒழுக்கத்தையே பொருளாகக் கொண்டது. மக்கள் யாவருக்கும் இயல்பாக அமைந்த காதல் உணர்ச்சியும், வீர உணர்ச்சியுமே அக்கால இலக்கியங்களில் சிறப்பிக்கப் பெற்றன.

சங்ககாலத் தமிழகத்தில் சமயநெறியைப் போற்றிய ஆரிய நாகரிகம் மிக்க செல்வாக்குப் பெற முடியாமல் போனமைக்கு உலகியலைப் போற்றிய யவனர் நாகரிகத்திற்குத் தமிழ்நாட்டில் இருந்த செல்வாக்கும் ஒரு காரணம் ஆகலாம்.

புறநானூற்றுக் காலத் தமிழகத்தில் உலகியல் வாழ்க்கை, அறவாழ்க்கை, வைதீக சமயம் சம்பந்தப்பட்ட கருத்துக்கள் ஆகியன ஒன்றொடொன்று மோதின. வேதநெறியும், அறநெறியும் புகுந்து விட்டாலும் தமிழர் இயற்கை நெறியிலேயே இருந்தனர் என்று இப்பகுதியை முடிக்கிறார்.

2) அடுத்து, அறநெறிக் காலம் ஆகும். சங்கமருவிய காலத்தில் களப்பிரராகிய அன்னியர் தமிழ்நாட்டைக் கைப்பற்றி கொடுங்கோல் ஆட்சி செய்ய, அவர்கள் காலத்திலே தமிழ்ச் சமுதாயம் சீர் கேடடைந்தது. ஆதலினால் தமிழ் மக்கள் வாழ்க்கையை உயரச் செய்வதற்காக திருக்குறள் முதலிய அறநூல்கள் தோன்றின என்ற கருத்து ஓரளவு ஏற்கக் கூடியதே. சங்ககால வாழ்க்கை முறையில் காணப் பட்ட குறைபாடுகளால் மனம் நொந்த மக்களுக்கு வேறு வாழ்க்கை முறை தேவைப்பட்டது. பொறியாலும், புலனாலும் கவர்ச்சியுற்று, காதல் வாழ்க்கை வீர வாழ்க்கைகளில் ஊக்கம் மேலிட்டு நின்று வாழ்ந்து அவ்வாழ்க்கைகளிலே துன்பத்தைக் கண்ட தமிழ் மக்கள் கட்டுப்பாடுகள் நிறைந்த வாழ்க்கையையும், ஒழுக்கத்தையும் அவாவினர். சமண பௌத்தக் கொள்கைகள் செல்வாக்கு பெற்ற நிலை இவ்வாறுதான் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

அறநெறிக் காலத்தையே சங்ககாலம் என்று கூறவேண்டும் என்கிறார் வேலுப் பிள்ளை. சங்கம் என்ற சொல் சமண பௌத்தருக்கு உரியதேயன்றி சைவ வைணவருக்கு ஆதியில் உரியதன்று என்று சான்றுகளுடன் விளக்குகிறார். (சங்கம் சரணம் கச்சாமி) இயற்கை நெறிக்காலத்திற்குச் சங்ககாலம் என்ற பெயர் ஏற்பட்டமைக்குக் காரணம் இயற்கை நெறி இலக்கியங்கள் களப்பிரர் காலத்தில் தொகுக்கப்பட்டமையே என்கிறார்.

திருக்குறள் இயற்கை நெறிக்கால வாழ்க்கை முறையைக் கண்டனம் செய்ய எழுந்த நூல் எனலாம். போர், காதல், ஆறலைத்தல், இறைச்சியும் மீனும் உண்ணல், மதுவருந்தல் முதலியன இயற்கை நெறிக்காலச் செய்யுட்களில் சிறப்பாகப் பேசப்பட்டன. கொலை, காமம், களவு, புலால், கள் என்பன குறளுள் கடியப்பட்டன.

புறநானூறு வீரத்தைப் பாட திருக்குறள் போருக்குரிய காரணங்களை இல்லாமல் செய்து விட முனைந்தது. காமத்தைக் கண்டிப்பதனாலும் வெஃகாமை, அவாவறுத்தல் என்பவற்றை உபதேசிப்பதாலும் குறள்போருக்குரிய காரணங்களை நீக்கிவிட முயன்றது. பொறையுடைமை, வெகுளாமை என்பன கடைப்பிடிக்கப் பட்டால் போருக்கு இடமிராது என வள்ளுவர் கருதியிருக்கின்றார். அழுக்காறாமை, கள்ளாமை என்பனவும் போருக்குரிய மனநிலை தோன்றாமல் செய்வதற்காகக் கூறப்படுகின்றவையே. வள்ளுவர் இதனை நேரடியாகக் கண்டித்துள்ளார். இன்னா செய்யாமை, கொல்லாமை என்பனவற்றை மக்கள் கடைப்பிடித்தால் போர்க்களங்களில் எதுவுமே நடைபெற முடியாது. இவையாவற்றையும் மீறிப்போர் ஏற்பட்டால், போரை வெற்றிகரமாக நடத்த வேண்டிய வழிகளையும் வள்ளுவர் கூறியுள்ளார்.

காதல் ஒழுக்கத்தை அறநூல்கள் நேரடியாகக் கண்டிக்கவில்லை. ஆறலைத்தல், சூறையாடுதல், கடியப்பட்டதால் பாலையொழுக்கமும், பரத்தமை கண்டிக்கப்பட்டதால் மருத ஒழுக்கமும், உயிர்க்கொலையாகிய மீன் பிடித்தல் விலக்கப்பட்டதால் நெய்தல் ஒழுக்கமும், போர் ஒதுக்கப்பட்டதால் வினைவயின் பிரிதலுக்கு இடமின்றி முல்லை ஒழுக்கமும் பாதிக்கப்பட்டன. பழைய அன்பின் ஐந்திணை மரபு சிதைந்து கொண்டிருந்தது.

காதல் வாழ்க்கையையும் உயர்ந்த குறிக்கோள் உடையதாகக் கூறுகிறார் வள்ளுவர். பரத்தையிற் பிரிதலால் வரும் ஊடலுக்குப் பதிலாக வளர்ந்த இரண்டு உள்ளங்கள் படிப்படியே (உ-ம் தும்முதல்) ஊடாடுதலைச் சித்தரிக்கிறார். இது பெரும் புரட்சி. புலவிநுணுக்கம் வள்ளுவர் கூறிய புதுவகை மருதமாகும்.

அறவழியில் இல்வாழ்க்கை நடத்திப் பெற முடியாத எந்த ஒன்றையும் துறவறத்தில் பெற்றுவிட முடியாது என்ற வள்ளுவரின் துணிகரமான கருத்து இந்தியச் சிந்தனையில் புதுமை எனலாம்.

மக்கள் ஒழுங்காக வாழ்ந்து உலகியலின்பத்தைத் துய்த்தல் வேண்டும் என்பது தான் வள்ளுவர் காட்டும் வாழ்க்கைத் தத்துவம்.

3) அடுத்தது சமயநெறிக்காலம். தமிழ் நாட்டில் அறநூல்களைத் தொடர்ந்து தோத்திரப் பாடல்கள் எழுந்தன. தோத்திரப் பாடல்கள் அறநூற் கருத்துக்களை நேரடியாகக் கண்டிக்கவில்லை. ஆனால் அறநூற் கருத்துக்கள் தமிழ்நாட்டில் கால் கொள்வதற்குப் பெரிதும் காரணமாக இருந்த சமண பௌத்த மதங்கள் கண்டிக்கப்படுகின்றன.

சமண பௌத்தங்கள் அறவழியைப் பிரசாரம் செய்து பழந்தமிழர் வாழ்க்கை முறையைக் கண்டனம் செய்ய, வைதிக சமயத்தினர் தமிழ்நாட்டுப் பழைய தெய்வங்கள், வழிபாட்டு முறைகள் என்பவற்றைத் தங்களுக்கேயுரிய வழிபாட்டு முறைகளோடும், தெய்வங்களோடும் இயன்றவரை ஒன்றுபடுத்தினர். பழைய வைதீக நெறி குப்தர்காலத்தில் வட இந்தியாவில் பௌராணிக மதமாக மாறுதலடைய, தமிழகத்தில் பௌராணிக மதம் தமிழகத்துப் பழைய சமய முறைகளோடு சேர்ந்து பல்லவர்கால இந்து சமயம் ஆகியது. பல்லவர்காலத்தில் ஏற்பட்டது வைதீக சமய எழுச்சி என்று கூறப்படாமல், வைதிக சமய மறுமலர்ச்சி என்று கூறப்படுவது இத்தகைய வளர்ச்சியினாலேதான். வைதிக சமயம், பழந்தமிழ் சமயம், பௌராணிக சமயம் என்று மூன்றும் கலந்த நிலையில் உருவான பக்தி மார்க்கமே பல்லவர் காலத்தில், சமண பௌத்தங்களை வென்று வாகை சூடியது.

பல்லவர் காலச் சமய மறுமலர்ச்சி பக்தியியக்கமாகப் பரிணமித்தது. அது, பக்தி உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. பக்தியியக்கம் புராணக் கதைகளைச் சிறப்பாகப் பயன்படுத்தியது. சமணரின் தருக்க அறிவும் ஒழுக்க உயர்வும் பக்தியுணர்ச்சிப் பிரவாகத்தில் தலைதூக்க மாட்டாமல் ஆழ்ந்துவிட்டன.

பக்தியியக்கத்தின் செல்வாக்கு தமிழ் நாட்டை மூன்று வழிகளில் ஆக்ரமித்தது எனலாம். முதலாவது, பக்தர்களின் வாழ்க்கைச் சம்பவங்கள். இரண்டாவது இகபரசாதனமாயுள்ள நெறிமுறையறங்களுடன் கடவுள் பக்தி வழிபாடுகளைத் தூண்டும் தோத்திர ரூபமான பக்திப் பாடல்கள். மூன்றாவது பக்தி நலங்கனிந்த பெரியபுராணம், கம்பராமாயணம் என்ற காவியங்கள்.

சமயநெறிக்காலம் தொடங்கும் முன்னர் வெறும் அறவழியை, வாழவேண்டிய நெறியாகக் கருதி, வாழ்க்கைப் போரிலே தமிழ் மக்கள் தடுமாறிக் கொண்டிருந்தனர். சமண இலக்கியங்கள் நிலையாமையை வலியுறுத்தின. புறநானூற்றுக் காலத்திலேயே ஈமப்புறங்காட்டைச் சுட்டி வாழ்க்கை நிலையாமை பேசப்பட, மணிமேகலையிலே சக்கரவாளக் கோட்டத்தில் அதே பிரசாரம் நடைபெற்றுள்ளது. இவ்வாறு மக்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை தளர்ந்து கொண்டிருந்த சமயம், காரைக்கால் அம்மையார் பாடல்கள் புதிய வலிமையையும் புதிய நம்பிக்கையையும் தருவதாக அமைந்தன. பயந்த சுபாவமுள்ளவர் என்று சாதாரணமாகக் கணிக்கப்படும் தமிழ்நாட்டுப் பெண்மணிகளுள் ஒருவர். தமிழ் மக்களை நீண்ட காலமாகப் பயமுறுத்தி வந்த ஈமப்புறங்காட்டை இறைவனுடைய நடன அரங்காகக் காணத் தொடங்கிவிட்டார். ஈமப்புறங்காடு இறைவனுடைய கோவிலாகக் காட்சி தரத் தொடங்கியதும் வாழ்க்கையில் ஓர் ஒளி, நம்பிக்கை சுடர்விட ஆரம்பித்தது.

பக்தி இயக்கம் இரண்டும் (சைவம், வைணவம்) பரந்துபட்ட மக்கள் இயக்கங்களாக வளர்வனவாயின. தீண்டக்காதவர் என்று கருதப்படும் சாதியினருள் சிலர் இரண்டு பக்தி இயக்கங்களிலும் காணப்பட்டனர். வைதிக சமய இயக்கங்கள் ஆனதால் அந்தணரும் முன் நின்றனர். அந்தணரல்லாத தமிழ்மக்களும் சிறப்பிடம் பெற்றனர். தமிழ்நாட்டில் அக்காலத்தில் வாழ்ந்த பல்வேறு சாதியாருள்ளும் சிலர் சிவபக்தர்களாக வாழ்ந்தனர். சமண சமயத்தில் மூலபலம் எப்பொழுதும் வணிக சாதியினரிடையே இருந்தது என்பர். சமணத்தைத் தமிழ்நாட்டில் நிலைகுலையச் செய்த சைவ பக்தி இயக்கத்தைத் தொடங்கி வைத்தவர் வணிக குலத்துப் பெண்மணியான காரைக்காலம்மையார் ஆவார்.

காரைக்காலம்மையார் தொடங்கி வைத்த பணியைத் திலகவதியாரும், மங்கையர்க்

கரசியாரும் தொடர்ந்து செய்தனர். தமிழ்ப் பெண்கள் சைவ மறுமலர்ச்சியில் பெற்ற முக்கியத்துவம் ஆராயப்படவேண்டியது. ஆணைத் துறவியாகவும் பெண்ணைப் பர்த்தாவிற்கேற்ற பதிவிரதையாகவும் மாற்ற முயன்ற சமணம் பெண்களின் வெறுப்பைத் தேடிக் கொண்டது. பெண்ணானவள் துறவியாக வாழ்ந்தால், உதயகுமாரன் போன்றோரால் துன்பமுறுவதற்கு ஏதுவாகும் என்பது பௌத்த மதமணிமேகலையினால் தெரிய வருகிறது. காதல் வாழ்வில் கண்ட மகிழ்ச்சியும், இல்லற வாழ்வில் பெற்ற பாதுகாப்பும் சமண பௌத்த மதங்களின் போதனையினால் பறிபோனதைக் கண்ட பெண்கள் அச்சமயங்களுக்கு எதிராக நடந்த சைவ மறுமலர்ச்சிக்கு முன் நின்று உழைத்திருக்கலாம்.

சமணத்தின் வாழ்க்கை நோக்கும் (நிலையாமை, வாழ்க்கை மேல் வெறுப்பு) சைவத்தின் பக்தி நெறியும் பிணையும் அழகு அப்பருடைய பக்திப் பாடல்களில் தெரிகிறது. இந்தப் பிணைப்பு அப்பருடைய பக்திப் பாடல்களுக்கு தனிக் கவர்ச்சி தருகிறது. பாசுபதம், காபாலிகம், காளாமுகம் எனப் பல்வேறு தீவிரவாதப் பிரிவுகளை உடையதாய், சமண பௌத்த மதங்களில் பலத்த கண்டனத்துக்கு ஆளாகி வந்த சைவத்தை அப்பர் இந்த வகையிற் செய்த தொண்டு தமிழகத்திலே பரவிய பிறசமயங்களை வெல்ல வல்ல சமயமாக மாற்றியது. அப்பர் உள்ளத்திலே, உருவான சைவ நெறி, சமணம் என்ற தனிச்சமயம் வேண்டியதில்லை என்ற மனநிலையைத் தமிழ்நாட்டு வடபகுதியில் வாழ்ந்த மக்களுள் பெரும்பாலோருக்கு உண்டாக்கியது.

சம்பந்தர் தமது சைவ சமய பிரச்சார நோக்கத்தின் சாதனமாக பதிகத்தின் பொருளமைப்பு தனித்தன்மை உடையதாய் அமைத்திருக்கிறார் போலத் தெரிகிறது.

சம்பந்தர் பாடல்கள் ஒவ்வொன்றிலும் பெரும்பாலும் இரண்டு வரிகள் அந்தந்தத் தலங்களின் இயற்கை வருணனையாகவும் இரண்டு வரிகள் இறைவனைப் பற்றிய வனாகவும் அமைகின்றன. தம் பிரதேசத்தைப் பற்றிப் பிறர் புகழத் தாம் கேட்டு மகிழ்தல் எனும் மனநிலையைப் – பிரதேச உணர்ச்சியைப் – பயன்படுத்திச் சைவ சமய மறுமலர்ச்சியில் மக்களை முன் நின்று உழைக்கச் செய்யச் சம்பந்தர் இந்த முறையைக் கையாண்டிருக்கிறார் போலத் தெரிகிறது.

சம்பந்தர் பதிகம் ஒவ்வொன்றிலும் எட்டாம் பாட்டில் இராவணனைப் பற்றிய குறிப்பு வருகிறது. இராவணன் ஒரு பேரரசன்; சிவனை மதியாதவனாய்ச் சிவன் வாழ்விடத்தையே அப்புறப்படுத்தப் பார்த்தான். அதன் பயனாய்ச் சிவனால் நசியுண்டான். சிவனருள் பெற்றமையினாலேயே அவன் பின்பு உய்வடைந்தான். அப்பர் – சம்பந்தர் காலத்திலே தான், தமிழ்நாட்டில் பல்லவப் பேரரசு, பாண்டியப் பேரரசு என இரு பேரரசுகள் தோன்றின. புதிதாகப் பேரரசு கண்டு வாழ்பவர்கள் இராவணன் போலச் செருக்குறுவது இயல்பு. மேலும் இரு பேரரசுகளையும் ஆட்சி புரிந்தவர்கள் சமண சமயத்தவர்கள். இப்பேரரசர்கள் அப்பர் – சம்பந்தர் சைவ இயக்கத்தை எதிர்த்தால் இராவணன் போலத் துன்பமடைய நேரிடும் என உணர்த்துகிறார்.

ஆளுடைய பிள்ளையார் ஒவ்வொரு பதிகத்திலும் ஒன்பதாம் பாட்டில், திருமாலும் பிரமனும் சிவனின் அடி முடியைத் தேடியும் காண இயலாதவராயினார் என வரும் புராணக் கதையைப் பற்றிய குறிப்புத் தருவர். சிவன், திருமால், பிரமன் என்று மூன்று தெய்வங்களையும் சமமாகக் கருதும் மனப்பான்மை அக்காலத்துப் பலரிடையே காணப்பட்டிருக்க வேண்டும். மேலும் பல்லவர் காலத்தில் வைணவ சமய எழுச்சியும் நிகழ்ந்தது. மக்கள் வைணவத்தை நாடாமற் செய்ய, சைவத்திற்கு ஏற்றம் கொடுப்பதற்காகச் சம்பந்தர் மும்மூர்த்திகளில் ஏனைய இருவரையும் தாழ்த்திக் கூறுகிறார்.

பிள்ளையாரின் பத்தாம் பாடலில், சமண பௌத்தர் இழித்துக் கூறப்படு கின்றனர். சமண பௌத்தத்தை இழித்துக் கூறுதல், அவர் போலி வேடம், ஒழுக்கக்கேடு என்பவற்றைப் பொது மக்களிடம் அம்பலப்படுத்தி அப்பொது மக்களை

இச்சமயங்களிடமிருந்து விடுபடுவிக்க உதவியிருக்கும்.

திருஞான சம்பந்தர் திருக்கடைக் காப்புச் செய்யுட்கள் பலவற்றில் தமிழ் ஞான சம்பந்தன், நற்றமிழ் ஞானசம்பந்தன் என்றெல்லாம் தமிழுடன் தம்மை ஒன்று சேர்த்துக் கூறும் பண்பு காணப்படுகிறது. செந்தமிழ்ப் பாண்டி நாட்டிலே தமிழ்ச் சங்கமிருந்த மதுரையிலே, குறள், சிலம்பு, தொல்காப்பியம் கொடுத்து தமிழ் வளர்த்த சமணரை எதிர்த்துப் போராட வேண்டியிருந்ததனாற்போலும், சங்கத மொழியைப் போற்றும் பிராமண குலத்துதித்த சம்பந்தர் தமது தமிழார்வத்தை உணர்த்த வேண்டி ஏற்பட்டது.

அப்பரும் சம்பந்தரும் தமிழ் நாட்டில் சைவத்தை நிலைநிறுத்த வேண்டியிருந்தது. சுந்தரர், மாணிக்கவாசகர் என்போர் புறப் பகையின் தாக்கம் அதிகம் இல்லாததால், அகப்பகையை வெல்வதிலேயே அதிகக் கவனம் செலுத்தினர். மேலும் சுந்தரர் நாட்டுப் பாடல் ஓசைகளைத் தழுவியும், மாணிக்கவாசகர் ஊசல், சுண்ணம், சாழல் முதலிய நாட்டுப் பாடல்களைத் தழுவியும் பாடியுள்ளனர். தங்களுடைய பாடல் முன்பு எழுந்த பக்திப் பாடல்களிலும் வேறுபட வேண்டும், சிறப்புற வேண்டும் என்ற எண்ணமே இவர்களை இவ்வாறு செய்வித்திருக்கலாம்.

சம்பந்தர் - அப்பர் பாடல்களில் இறைவன் மேல் உள்ள மரியாதை மாணிக்கவாசகர் பாடல்களில் இறைவனிடம் உள்ளதான நெருங்கிய உறவாகப் பூரணத்துவம் பெறுகிறது. மனத்தை முழுக்க முழுக்கப் பறி கொடுத்துத் தவிக்கும் நிலை மாணிக்கவாசகரது. மாணிக்கவாசகர் இறைவனைக் காதலனாகவும் தம்மைக் காதலியாகவும் முழுக்க முழுக்கப் பாவித்ததனாலேயே பெண்கள் விளையாட்டு வகைகளையும், பொழுது போக்கு வகைகளையும் கையாண்டு தோத்திரப் பாடல்கள் பாடுவாராயினரென்றும் கூறலாம்.

சுந்தரருடைய திருத்தொண்டத் தொகை மற்றைத் தேவார திருவாசகங்களில் இல்லாத தொண்டர் துதி என்ற புது வகுப்பு ஒன்றைச் சிருட்டி செய்கிறது.

பல்லவர் காலச் சைவ வைணவ எழுச்சியால், குன்றுதலுற்ற சமண பௌத்த மதங்கள், சோழப் பெருமன்னர்களின் பரந்த மனப்பான்மை காரணமாக மீளவும் தலையெடுக்கலுற்றன. அவற்றின் வளர்ச்சியைத் தடை செய்து சைவம் பெற்றுவிட்ட வெற்றியை நிலைநிறுத்த வட இந்தியாவில் முன்பு புராணங்கள் தோன்றியது போலத் தமிழ் நாட்டிலும் சோழர் காலத்திலே புராணங்கள் சில தோன்றின. இவற்றுள் சேக்கிழாரின் பெரியபுராணம் தனிச் சிறப்புக்கள் சிலவற்றை உடையதாக விளங்குகிறது.

4. தத்துவ நெறிக்காலம் : சோழப் பேரரசு காலப் பிற்பகுதியில், சோழப் பேரரசின் வீழ்ச்சிக்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்து விட்டன. காவியக் கற்பனை சிதறித் தத்துவ ஆராய்ச்சி இடம் பெற்றதற்கு இந்தச் சூழ்நிலை ஓரளவு காரணமாக வேண்டும்.

சமணர் தங்கள் சமயத்தைப் பரப்புவதைக் காட்டிலும் சமூக வாழ்க்கையைச் சீர்திருத்துவதே அவர்கள் நோக்கமாக இருந்திருக்கிறது. பிறமதங்களை, அவர்கள் நேரே பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. பௌத்தரோ பல்வேறு மதக்கொள்கைகளை எடுத்துக் காட்டி, அவற்றின் சிறப்பின்மையை விளக்கிப் பௌத்த தத்துவத்தின் உயர்வை எடுத்துக் காட்டினர். பௌத்தர்களைக் கண்டிக்க வேறு தத்துவமுறை வேண்டியிருந்தது. எனவே சங்கரர், மத்துவர், இராமானுஜர் வேதாந்தத்திற்குத் தர்க்க முறையிலே நெறியான உருவம் கொடுத்தனர்.

ஆனால், சங்கரரது தத்துவமுறை பக்தி மார்க்கம் தழைத்தோங்கிய தமிழ்நாட்டுக்கு ஏற்றதாக அமையவில்லை. ' பக்தி மார்க்கமும், பௌராணிக மதமும் போதித்த நெறி சங்கரரால் தாழ்ந்தபடியில் வைக்கப்பட்டுள்ளது. எனவே தமிழ்ச் சூழலுக்கு ஏற்ற ஒரு தத்துவ முறை வகுக்கப்பட்டது. சமண பௌத்தத்தை எதிர்த்துச் சைவத்தை நிலை நாட்டிய

தேவார திருவாசகங்கள் – அதன் பின் வந்த பெரியபுராணம் – சிவஞான போதம் எழுதப் படுவதற்குப் பெரும் துணையாக இருந்தன. திருமுறைகளில் ஆங்காங்கு காணப்படும் கருத்துக்களைத் தொகுத்தும் விரித்தும் மெய்கண்டார் சிவஞான போதம் எழுதினார். திருமுறைகள் சிவஞான போதத்திற்கு மூலம் என்று கூறப்படுவது போல வடமொழியில் பக்திப் பாடல்கள் எதுவும் இல்லை.

அப்பரைத் தொடர்ந்து சம்பந்தராகிய பிராமணர் பணிபுரிந்ததுபோல மெய்கண்டாரைத் தொடர்ந்து அருணந்தி சிவாச்சாரியாராகிய பிராமணர் பணிபுரிகிறார். பிற மதக் காய்வு சம்பந்தரில் அதிகம் காணப்பட்டதுபோல, பிற மதக் கண்டனம் அருணந்தி சிவாச்சாரியாரில் காணப்படுகிறது. அதே சமயம் கன்னட நாட்டிலே சமணத்தை வென்ற வீர சைவ எழுச்சியில், பிராமணர் முக்கிய பங்கு வகிக்காததினால் வீர சைவம் வேதத்தையும் வருணாச்சிரம தர்மத்தையும் ஏற்காததாகவும் பிராமணீயத்தை ஒதுக்குவதாகவும் அமைந்தது.

பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்ததாகக் கருதப்படும் கந்த புராணம் பல்லவர் காலப் பக்தி இயக்கத்தின் விளைவு எனலாம். நாயக்கர் காலத்தில் இஸ்லாமியர் படையெடுப்பினாலே, கோவில்கள் அழியும் நிலை தோன்றியதால், கோவில்களின் பெருமைகளை எடுத்துக் கூறிக் கோவில்களுக்கு ஆதரவாக மக்களைத் திரட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே தமிழிலே தல புராணங்கள் தோன்றின. இஸ்லாமியப் படையெடுப்பின் தாக்கம் மறைமுகமாகவும் ஏற்பட்டது எனலாம். முருகன் அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காப்பாற்றியது போல இறைவனே இஸ்லாமியர் படையெடுப்பை முறியடித்துக் காப்பாற்ற வேண்டும் என விரும்பினர். அச்சூழலில் அருணகிரியார் முருகனின் வீரச் செயல்களை நினைவு கூர்ந்தார். கந்தபுராணம் இஸ்லாமியர் படையெடுப்பிற்கு பின் நிகழ்ந்தது என்பர் சிலர். வில்லிப்புத்தூரார் பாரதப் போரில் கண்ணன் செயல்களைக் கூறுகிறார். இதனால்தானோ தமிழ்நாட்டிலும் வீர சைவம் தோன்றலாயிற்று. இக்காலத்திய சிவப்பிரகாச சுவாமிகள் ஒரு வீர சைவர். சமய வணக்கத்தில் ஒரு வீர யுகம் போல இருக்கிறது.

தமிழ்நாட்டை ஆண்ட விசயநகர மன்னரும், நாயக்க மன்னரும் வைணவர் அல்லது வீர சைவராக இருந்ததால், சைவ சித்தாந்தத்திற்கு சிறப்பான அரசியல் ஆதரவு கிடைக்கவில்லை. எனவே, தமிழ் நாட்டில் முடிவில்லாத சமய வாதங்கள் நடைபெற்றன. வீண் வாதங்களினால் சலிப்பே மிகுந்தது. சமய அனுபவமே முக்கியம் என்றுணர்ந்த சைவப் பெரியார்கள் சமரசம் போதிக்கத் தொடங்கினர். தாயுமானவர் வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை கண்ட வித்தகச் சித்தர் மரபினைப் போற்றியுள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க சுவாமிகள் சுத்தசன்மார்க்கத்தை முன் வைத்தார்.

தத்துவ வாதங்கள் ஒருபுறம் நடைபெற, மக்களில் பெரும் பகுதியினரின் மனம் அவற்றில் ஈடுபடாது அலையத் தொடங்கியது. மரணத்தின் பின் அடையும் கதியிலும் பார்க்க, இவ்வுலக வாழ்க்கையை ஒழுங்குபடுத்தத்தக்க அறநெறியை மக்கள் அவாவி நின்றிருக்கின்றனர். அதனாலே தத்துவ நெறிக் காலத்திலேயே நன்னெறி, நீதி நெறி விளக்கம், வெற்றிவேட்கை, கொன்றை வேந்தன், ஆத்திசூடி, மூதுரை, நல்வழி என்னும் ஏழு நூல்கள் எழுந்தன. இந்த அறநூல்களில் காணப்படும் போதனை, இயற்கை நெறி வாழ்க்கையை ஒழுங்குபடுத்தத் தோன்றியதே என்ற உணர்வு சிலரிடம் விளங்கியது. பள்ளு, குறவஞ்சி என்ற பிரபந்தங்கள் மக்கள் இயற்கை நெறி வாழ்க்கையைத் திரும்பவும் நாடத் தொடங்கியமைக்குச் சான்றுகளாகும். இதே காலத்திலேயே தோன்றிய பதினென் சித்தர்கள் பாடல்கள் சில வைதிகச் சமயத் தத்துவங்களை – சாதி வேற்றுமையை – உருவவழிபாட்டைக் – கண்டித்தன. சித்தர்கள் நோயின்றி இளமையுடன் வாழ யோகப் பயிற்சியை வலியுறுத்துகின்றனர். அதையும் மீறி நோய் ஏற்படின் சித்த வைத்தியத்தை முன் வைக்கின்றனர்.

5. நிறைவாக அறிவியல் நெறிக் காலத்திற்கு வருகின்றோம். நாயக்கர் காலத்திலேயே இஸ்லாமும், கிறிஸ்துவமும் தமிழ் நாட்டில் புகுந்துவிட்டன. இந்து மதத்தையோ பழைய தமிழ் சமுதாய அமைப்பையோ கண்டித்து இஸ்லாமியர் நூல் எழுதவில்லை. இஸ்லாமியருக்கும், இந்துக்களுக்கும் வாதப் பிரதிவாதங்கள் ஏதும் நடைபெறவில்லை.

ஆனால் கத்தோலிக்கக் குருமாரும், கிறிஸ்தவப் பாதிரிமாரும் இந்து மதத்தைக் கண்டித்து மதமாற்றத்தை நோக்கமாக வைத்துப் பிரசாரம் செய்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பியர் ஆட்சி தமிழ் நாட்டில் ஏற்பட்டதும் மேனாட்டுச் செல்வாக்கு – மக்களாட்சி வாதம் – பொதுவுடைமை வாதம் – அறிவியல் முன்னேற்றத்தால் உலகம் நெருங்கி வருதல் – ஆங்கில மொழிக்கல்வி – ஆகியன தமிழ் நாட்டிலே தீவிரமாக இடம் பெற்றன. பழமைக்கும் புதுமைக்கும் மோதல்கள் ஏற்பட்டன. கிறிஸ்துவம் ஓரளவு வெற்றி பெற்றது. தமிழ் மக்களில் சிறுபான்மையினர் கிறித்துவத்தைத் தழுவினர். மெல்ல மெல்ல பழமை – புதுமை மோதல் நீங்கி ஒருவித இணைப்பைப் பெறுகின்றன.

கிறித்துவப் பிரச்சாரம் தமிழரிடையே – குறிப்பாக யாழ்ப்பாணம் – விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. ஆறுமுக நாவலர் பழமையைக் காக்கப் புதிய போராட்ட முறைகளைக் – கிறித்தவர் கையாண்ட முறைகளை – கையாண்டு கிறித்துவர் ஆக்கிரமிப்பைத் தடுத்துச் சைவ மறுமலர்ச்சிக்கு உழைத்தார். சைவம் அழியக் கூடும் என்ற நிலை நீங்கியது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்திய விடுதலை இயக்கம் தமிழ் நாட்டைப் பாதிக்கத் தொடங்கிவிட்டது. தமிழ்நாட்டில் பாரதியுகம் தோன்றுகிறது. தமிழ்ச் சமூக ஒற்றுமை சர்வசமய சமரசத்திலேயே கட்டி எழுப்பப்பட வேண்டும் என்று உணர்ந்த பாரதியார் சைவம், சாக்தம், வைணவம், வேதாந்தம் என்று தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் முதலியோர் விளம்பிய சமரச சன்மார்க்க வழி சென்று இன்னும் ஒருபடி மேலே சென்று கிறித்துவ இஸ்லாமியக் கடவுளரையும் பாடினார். பழமைச் சிறப்பு பெற்ற தமிழர் புதுமைச் சிறப்பும் பெற வேண்டும் என்று பாரதியார் ஆசைப்பட்டார். உலகம் பொய் என்றதனை மறுத்தல் – தீண்டாமை, பெண்மை ஒறுத்தல் – புதுமைப் பெண்ணைக் காணல் – சாத்திரங்களைக் கண்டித்தல் – வாழ்க்கை இன்பம் எனக் கூறல் – எட்டுத்திக்கும் சென்று கலைச் செல்வங்கள் கொணரச் சொல்லல் – காந்தீயம் ஏற்றல் – என்று இன்று பாரதியார் கருத்துக்கள் அனைத்து துறையினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு எல்லாருடைய மதிப்புக்கும் பாரதியார் பாத்திரராகி விட்டார்.

தமிழ்நாட்டுச் சூழ்நிலையில் இந்திய விடுதலை இயக்கமும் சமூகச் சீர்திருத்த இயக்கமும் பிரிந்தியங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தணர் தாம் ஆரியர் என்றும், தாம் தமிழர் யாவரிலும் உயர்ந்த வர் என்றும் தம்மைப் பிரித்து வைத்து இருந்தனர். ஆங்கிலேயேர் ஆட்சிக் காலத் திலும் பொருளாதாரத்திலும் அரசியல் துறையிலும் உயர்ந்தனர். விடுதலை இயக்கத்திலும் முன் நின்றனர். பெரியார் ஈ.வே.ரா. காங்கிரசில் சேர்ந்து உழைத்து மனம் வெறுத்து நீதிக்கட்சியில் சேர்ந்தார். நீதிக்கட்சியில் இருந்தவர்களே திராவிட இயக்கத்தினைத் தொடங்கினர். பெரியார் இக்கழகத்தின் தலைவர் ஆனார். வடவர் - அந்தணரை இவ்வியக்கம் வெறுத்தது. தனி நாடு கேட்டது. இக்காலத்தில் பாரதிதாசன் திராவிடக் கழகத்தின் கவிஞர் ஆனார். பாரதிதாசன் சீர்திருத்த இயக்கம், திராவிட இயக்கம், நாத்திக இயக்கம், பொதுவுடைமை இயக்கம் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டவர். இவை அனைத்திற்கும் மேலாகத் தமிழ் இயக்கமே இவரது உயிர்மூச்சு. பாரதிதாசனின் அந்தணர் எதிர்ப்பு இந்து சமய எதிர்ப்பாகவும் மாறியது. அந்தணர் தமிழ்நாட்டில் செல்வாக்கு பெற உதவிய சமய நெறியையும், தத்துவ நெறியையும் பாரதிதாசன் முற்றாக வெறுத்தார். இயற்கை நெறி, அறநெறியோடு கூடிய தமிழர்நெறி, தமிழ், தமிழ்நாடு என்று உணர்ச்சி பொங்கப் பாடினார்.

இன்னொருபுறம் மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கம் பாரதியார் காலத்திலேயே தோன்றிவிட்டது. இது ஒரு வகையில் அந்தணருக்கு எதிராக நடந்த இயக்கமாகவும் இருந்தது. தமிழ் சைவ சமய மொழிக்குச் சங்கத மொழி (சமஸ்கிருதம்) வேண்டியதில்லை எனக் காட்டினார். சங்கதமொழி தொடர்பு வேண்டாத தமிழ்ச் சைவத்தைப் பிரசாரம் செய்தார்.

அரசியல், சமூகச் சீர்திருத்தம் என்பவற்றின் இயக்கங்களோடு நேரடியாகச் சம்பந்தப்படாது சமூக வாழ்வில் தம் சிந்தனையைச் செலுத்திய எழுத்தாளர் பலர் 'மணிக்கொடிக் குழுவினர்' எனப்படுகின்றனர். இக்குழுவினருள் வ.ரா. தலைசிறந்த சீர்திருத்தவாதி என்றும், புதுமைப்பித்தன் தலைசிறந்த இலக்கிய கர்த்தா என்றும் கொள்ளப்படுகின்றனர்.

வ.ரா.வின் படைப்புகளில் சீர்திருத்தக் கருத்துக்களே விஞ்சி நிற்கின்றன. சமூகச் சீர்திருத்தத்தை நேரடியாகக் கூறாமல் சமூக வாழ்க்கையைத் தாம் கண்ட மாதிரியும், கேட்ட மாதிரியும் சித்தரிக்க முனைந்தவர் புதுமைப்பித்தன் எனலாம். இவர் கதைகள் சமூக ஊழல்களை எடுத்துக் காட்டுவன. தம் காலத் தமிழ் மக்கள் வாழ்க்கை எப்படி அமைந்திருக்கிறது எனக் காட்ட முனைந்தவர் இவர்.

இன்று அறிவியல் தாக்கம் கிராமங்களில் காணப்படுகிறது. அறிவியல் நோக்கு வளர்ச்சி பெறுகிறது. அறிவியல் நெறி தொடர்கிறது.

தொல்காப்பியம் முதல் புதுமைப்பித்தன் வரை தமிழ்ச்சிந்தனை எப்படி வளர்ந்து வந்துள்ளது என்பதான முழுப் பார்வையிலான ஒரு நூல் இதுபோல இதுவரை வந்ததில்லை. சைவ, வைணவ, சமண, தற்கால இலக்கியம் என அனைத்து இலக்கியங்களையும், ஒரு சார் கண்ணோட்டத்துடன் பார்க்காமல் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் பார்த்து கருத்துக்களை உள்வாங்கி ஆசிரியர் எழுதியிருக்கிறார். இலக்கியம் உருவான காலம் பற்றியும் வரலாற்று ரீதியான ஒரு பின்புலத்தை உருவாக்கி அந்தப் பின்னணியின் தாக்கம் எந்த அளவு அவ்வக்கால இலக்கியங்களைப் பாதித்திருக்கிறது என்றும் கூறுகிறார். இதுநாள் வரை உள்ள இலக்கியங்கள் பேசப்பட்டாலும் மேற் கோள்கள் அருகியே இருப்பது இந்நூலின் புதுமை.

30

தமிழ் இலக்கிய வரலாறு பதினோராம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு முடிய 1969 முதல் 1977 முடிய

(ஆசிரியர் : மு. அருணாசலம்)

தமிழில் இலக்கிய வரலாறுகள் அதிகம் இல்லை. அவ்வாறு வந்த நூல்களும் விரிவாக இல்லை. அப்படியிருக்க பதினோராம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரை பேரறிஞர் மு.அருணாசலம் அவர்கள் தனியொரு மனிதராக – தன் சொந்த முயற்சியில் – எட்டு நூல்கள் வெளியிட்டிருப்பது பெரும் சாதனையாகும். கி.பி. 8–ஆம் நூற்றாண்டு முதல் வெளியிட உள்ளதாகக் கூறியுள்ளார். பிற நூல்கள் வெளிவந்த விவரம் தெரியவில்லை.

சரித்திரச் சான்றுகள், சாசனக் குறிப்புகள், வழக்காறுகள், கதைகள், அகச்சான்றுகள், சொல்லாராய்ச்சி கொண்டு நூலாசிரியர்களின் காலத்தை அறிஞர் மு.அ. அவர்கள் நிர்ணயிக்கிறார்கள். அந்தக் காலகட்டத்தில் எழுந்த பல நூல்களின் பெயர்களே நமக்குத் தெரியாது. ஆசிரியர்களைக் கண்டு பிடிக்கவே முடியாது.

காலத்தை அறிவதோ மிகச் சிரமம். அப்படியிருக்க நூலாசிரியர் களின் காலம், இயற்றிய நூல்கள், நூற் பொருள், நூல்களின் பதிப்புகள் என்று ஆசிரியர் வழங்கியிருப்பது தமிழகம் பெற்ற கொடையாகும். தொடர்பற்ற செய்திகளை ஒருமுகப்படுத்துகிறார்.

தமிழ் இலக்கிய வரலாறாக இருந்தாலும், பாதிக்கு மேல் சைவ இலக்கிய வரலாறாக இவரது நூல்கள் மலர்ந்துள்ளன.

தமிழ் இலக்கிய வரலாறு
பதினோராம் நூற்றாண்டு - 1971
(பக்கங்கள் - 446)

இந்நூலில் ஆசிரியர் சைவ இலக்கியம் பற்றி 81 பக்கங்கள் எழுதியுள்ளார். பூந்துருத்தி காட நம்பியின் காலம் கி.பி. 1030–க்கு முன் என்றும், புருடோத்தம நம்பி யின் காலம் பதினோராம் நூற்றாண்டின் தொடக்கம் என்றும், சேதிராயரின் காலம் 1010–இலிருந்து 1030–க்குள் என்றும், கருவூர்த் தேவரின் காலம் கி.பி. 1000–இலிருந்து கி.பி.1040–க்குள் என்றும் ஆசிரியர் முடிவு கட்டுகிறார்.

பூந்துருத்தி காடநம்பியின் காலத்தைக் கல்வெட்டினைக் கொண்டும், சேதிராயரின் காலத்தை அரச மரபுகளைக் கொண்டும், கருவூர்த்தேவரின் காலத்தை அவர் காலத்தில் வாழ்ந்த அரசர்களின் காலத்தைக் கொண்டும் (கங்கை கொண்ட சோழபுரம் எழுந்த காலம் கி.பி. 1040. அக்கோயிலை இவர் பாடியமையால் கி.பி. 1040–க்கு முன்) நிர்ணயிக்கிறார். கருவூர்ச் சித்தர் வேறு; கருவூர்த் தேவர் வேறு என்றும், இவர் அந்தணர் அல்லர் என்றும் பாடல்களைக் கொண்டு முடிவு கட்டுகிறார்.

ஔவை சு.துரைசாமிபிள்ளை, டி.வி. சதாசிவ பண்டாரத்தார், க.வெள்ளை வாரணனார் ஆகியோர் கூற்றுகளைக் கல் வெட்டுகள், அரசமரபு, திருமுறைச் செய்திகள் ஆகிய சான்றுகளைக் கொண்டு மறுத்து, நம்பியாண்டார் நம்பி காலத்தை இராஜராஜ சோழன் ஆட்சிமுறை அடிப்படையில் கி.பி. 1012 முதல் கி.பி. 1044–க்குள் இருக்கலாம் என முடிவு கட்டுகிறார். நம்பியாண்டார் நம்பி முதலாம் ராஜராஜன் காலத்திலும், அவன் புதல்வன் முதலாம் ராஜேந்திரன் காலத்திலும் வாழ்ந்தவர் எனக் கூறுகிறார். திருமுறைகண்ட சோழன் ஆதித்தன் என்ற சோமசுந்தர தேசிகர் கருத்தை மறுத்து ராஜராஜசோழன் என்று நிறுவுகிறார்.

பனிரண்டாம் நூற்றாண்டு
முதல் பாகம் (பக்கம் - 516)

சைவ இலக்கியம் (சேக்கிழார்) பற்றி 234 பக்கங்களில் ஆசிரியர் ஆய்வு செய்துள்ளார். சேக்கிழார் காலம் முதலாம் இராசேந்திர சோழன் காலம் என்ற சோமசுந்தர தேசிகர் கருத்தையும், இரண்டாம் ராஜராஜசோழன் காலம் என்ற தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் கருத்தையும், மூன்றாம் குலோத்துங்கன் காலம் என்ற டி.வி.சதாசிவ பண்டாரத்தார் கருத்தையும் மறுத்து கி.பி. 1133 முதல் கி.பி. 1150 வரை ஆண்ட இரண்டாம் குலோத்துங்கன் காலமே என்று ஆசிரியர் நிர்ணயிக்கிறார். உமாபதிசிவம் சேக்கிழார் புராணம் பாடவில்லை என்ற மா.இராச மாணிக்கனார் கருத்தையும் மறுக்கிறார்.

பனிரண்டாம் நூற்றாண்டு
இரண்டாம் பாகம் (பக்கம் - 996)

முப்பத்தைந்து பக்கங்களில் இடம் பெற்றுள்ள ‘சைவ இலக்கியம்’ என்ற பகுதியில் உய்யவந்த தேவர் இருவர் என்றும், திருக்களிற்றுப்படியார் காலம் பற்றியும், ஞானாமிர்தம் எழுதிய வாகீச முனிவர் காலம் பற்றியும் (கி.பி. 1254) ஆசிரியர் குறிக்கின்றார்.

இருபத்து நான்கு பக்கங்களில் இடம் பெற்றுள்ள ‘பிரபந்த இலக்கியம் – சைவம்’ பகுதியில் ‘தில்லையுலா’ என்ற நூலின் காலம் கி.பி. 1150 என்றும், ‘திருப்புகலூர் அந்தாதி’ எழுதிய நெற்குன்ற வாணர் காலம் பி.பி. 12–ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்றும் முடிவு கட்டுகிறார்.

பதின்மூன்றாம் நூற்றாண்டு
(பக்கம் - 518)

சைவ இலக்கியம் பற்றிய 31 பக்கங்களில் மெய்கண்டார் (கி.பி. 1238) பற்றியும் அருணந்தி சிவாசாரியார் பற்றியும் ஆசிரியர் ஆய்வு செய்துள்ளார்.

பதினான்காம் நூற்றாண்டு

(பக்கம் - 456)

தமிழ் இலக்கிய வரலாறு எழுதியவர்கள் 13, 14, 15 நூற்றாண்டுகளில் எந்தவித வளர்ச்சியுமில்லை என்று எழுதியுள்ளார்கள். ஆனால் ஆய்வறிஞர் மு.அ. அவர்களோ மூன்று நூற்றாண்டுகள் பற்றியும், 400, 500 பக்கங்களுக்கு மேல் தனித்தனியாக மூன்று நூல்கள் தந்துள்ளார்கள். இதுவொன்றே மு.அ. அவர்களின் முழுமையான ஆய்விற்குத் தக்க சான்றாகும். மு.அ. அவர்களின் நூல்கள் இல்லையென்றால் இந்த நூற்றாண்டுகள் பற்றி நாம் தெரிந்து கொள்ளவே முடியாது.

இந்நூலில் கச்சியப்பர் (28 பக்கங்கள்), சைவ இலக்கியம் (141 பக்கங்கள்), சித்தர் பாடல் (53 பக்கங்கள்) ஆகியன இடம் பெற்றுள்ளன.

கச்சியப்ப சிவாசாரியார், சிற்றம்பல நாடிகள், சம்பந்த முனிவர், தத்துவப் பிரகாசர், கண்ணுடைய வள்ளல், சிவஞான வள்ளல், சிவாலய முனிவர், தத்துவராயர், தேவேந்திர முனிவர், கடவுள் மாமுனிவர், காலோத்தர ஆசிரியர், சித்தர்கள் முதலியோரின் காலங்களை முதன் முதலாக ஆசிரியர் நிர்ணயிக்கிறார். கச்சியப்பர் கந்த புராணத்தில் சாத்திரக் கருத்துக்கள் இருப்பதால், அவரது காலம் சாத்திர நூல்களுக்குப் பிற்பட்டது என்று முடிவு கட்டுகிறார். மறைஞான சம்பந்தர், அருள் நமசிவாயர் நூல்கள் எழுதியிருப்பதாகக் கூறியிருப்பது முற்றிலும் புதிய செய்தியாகும்.

சிற்றம்பலநாடிகள், காஞ்சி ஞானப் பிரகாசர் ஆதீன பரம்பரை, திருவாவடுதுறை ஆதீன பரம்பரை, தருமை ஆதீன பரம்பரை என்ற குருசீட பரம்பரை அட்டவணைகள் தந்திருப்பது இந்நூலின் தனித்தன்மையாகும்.

பதினைந்தாம் நூற்றாண்டு

(பக்கம் - 408)

இந்நூலில் அருணகிரி (41 பக்கங்கள்), காளமேகம் (32 பக்கங்கள்), புராணம் (25 பக்கங்கள்), சைவ இலக்கியம் (70 பக்கங்கள்), சித்தர் பாடல் (22 பக்கங்கள்) ஆகியன இடம்பெற்றுள்ளன.

அருணகிரியார், காளமேகம், கடவுள் மாமுனிவர், ஞானவரோதயர், சத்தியஞான பண்டாரம், களந்தை ஞானப்பிரகாசப் பண்டாரம், மதுரை ஞானப்பிரகாசர், மதுரை சிவப்பிரகாசர், காழிகண்ணுடைய வள்ளல் முதலியோரின் காலங்களை ஆசிரியர் நிர்ணயிக்கிறார்.

சிவப்பிரகாசர், ஞானப்பிரகாசர் என இக்காலகட்டத்தில் ஒரே பெயரில் பலர் இருந்திருக்கின்றனர். அவர்களை இனம் பிரித்துக் காட்டியிருப்பது ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலத்துக்கு நல்ல எடுத்துக் காட்டாகும்.

பதினாறாம் நூற்றாண்டு

(பக்கம் - 496)

இந்நூலில் சைவ புராணம் பற்றி 272 பக்கங்களில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது. பதினாறாம் நூற்றாண்டு வரலாறு எழுதியுள்ள ஆய்வறிஞர் சோமசுந்தர தேசிகரின் கருத்துக்களைச் சில இடங்களில் ஆசிரியர் மறுக்கின்றார்.

36 சைவ புராணங்கள் பற்றி ஆசிரியர் கூறுகிறார். புராணங்கள் பற்றியும் தல புராணங்கள் பற்றியும் ஆசிரியர் உயர்வாகக் கூறியிருப்பது அவை பற்றிய தவறான கருத்துக்களை நீக்க உதவுகிறது.

''புராணமும் காப்பியமே. மக்களை நல்வழிப்படுத்த புராணங்கள் எழுந்தன.''

''தலபுராணம் எழுதியவர்கள் மனோதத்துவம் மிக்கவர்கள். கடையவர்களையும் கடைத்தேற்ற தலபுராணங்கள் எழுதினர். இவை வாழ்க்கையில் திருப்தியும், சாந்தியும் தந்தன. மக்களிடம் சீலமான வாழ்க்கையையும், தேசிய ஒருமை உணர்வையும் தர இவை காரணமாக இருந்தன.''

வடமொழிப் புராணங்கள் பற்றிக் கூறிப் பின்னர் தமிழ்ப் புராணங்கள் பற்றிக் கூறுகின்றார். தந்திவனப்புராணம், இறைசைப்புராணம், திருவையாற்றுப் புராணம், திருச்செங்காட்டாக் குடிப் புராணம்

போன்ற கிடைக்காத புராணங்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றைப் பற்றிக் கூறுகின்றார்.

வரகுணராம பாண்டியர், வரதுங்கராம பாண்டியர், அதிவீரராம பாண்டியர் ஆகிய மூவரும் சகோதரர்களே என்று அறுதியிட்டுக் கூறி அவர்களின் காலங்களையும் முதன்முதலாக நிர்ணயிக்கிறார்.

தாழை எல்லப்ப நயினார் வேறு, எல்லப்ப நாவலர் வேறு என்ற சோமசுந்தர தேசிகரின் கருத்தை மறுத்து இருவரும் ஒருவரே என முடிவு கட்டுகிறார். இதற்காக கல்வெட்டுகள், அகச்சான்றுகள் என எட்டு சான்றுகள் தருகின்றார். ஆறு புராணங்களையும் இவரே பாடினார் என்று அவர் புராணங்களிலிருந்து 8 சான்றுகள் தருகின்றார்.

கமலைஞானப்பிரகாசர் வழியையும் நெறிப்படுத்துகின்றார். புராணத் திருமலைநாதர், அனதாரியப்பர் போன்ற பெயர் தெரியாத புலவர்களையும் விட்டு வைக்கவில்லை.

பதினாறாம் நூற்றாண்டு
இரண்டாம் பாகம் (பக்கம் - 390)

இந்நூலில் சைவ இலக்கியத்திற்கு 161 பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

''பதினாறாம் நூற்றாண்டு அளவு கடந்த சைவ சமய எழுச்சியான காலம். 14 – 16–ஆம் நூற்றாண்டுகள் சைவ சமயத்தின் பொற் காலங்களில் ஒன்றாகும். தென்காசிப் பாண்டியர் மூவர் தொடங்கி ரேவண சித்தர் ஈறாக 15 பேர் 40 புராணங்கள் இயற்றியுள்ளனர். இவர்கள் பாடிய பாடல்கள் ஐம்பதாயிரம் ஆகும். சைவத்தின் மிகப் பெருஞ்சாதனை'' என்கிறார் மு.அ.

''சைவ சித்தாந்தக் கருத்துக்கள் சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் என்று தொடங்கி துகளறு போதம், தத்துவப் பிரகாசம் என்று முறையாக வளர்ந்தும் விரிந்தும் வந்த நிலையில் சிவநெறிப்பிரகாசம் பின்னும் வளர்ச்சி பெற்று மற்றொரு நிலையை நமக்குத் தருகின்றது'' என்று தத்துவ வளர்ச்சி பற்றிய முழுப்பார்வையைப் பேரறிஞர் தருகின்றார்.

மறைஞான சம்பந்தர், சிவாக்கிரக யோகிகள், கமலை ஞானப்பிரகாசர், குரு ஞான சம்பந்தர் ஆகியோரின் காலம், வரலாறு முதலியவற்றை நிர்ணயித்து விளக்குகிறார்.

மறைஞான சம்பந்தர் நூல்கள், சூரியனார் கோவில் ஆதீன மரபு, ஞானப் பிரகாசர் அட்டவணை (இதே பெயரில் 14 பேர்கள் இருந்தமையைத் தெளிவுபடுத்து கிறார்.) கமலைஞானப்பிரகாசர் அட்டவணை என்று வரலாற்று விளக்க அட்டவணைகள் இந்நூலின் தனிச்சிறப்பு ஆகும்.

பதினாறாம் நூற்றாண்டு
மூன்றாம் பாகம் (பக்கம் - 518)

இந்நூலில் சைவ சாத்திர உரைகள் (பக். 90), தோத்திர இலக்கியம் (பக். (96), சித்தர் பாடல்: பக்கம் 36), பிரபந்த இலக்கியம் (பக். 63) ஆகியன இடம் பெற்றுள்ளன.

சித்தர்பாடல்களும், மூவர் அம்மானையும், சைவ சாத்திர உரையும் முதன் முதலாக ஆராயப்படுகின்றன.

31
திருவாசகமும் சிவராஜயோகமும்
1973

(மா. இரத்தின சபாபதி பிள்ளையவர்கள். பக்கம் – 360; விலை ரூ. 60/-). இந்நூலில் சிவயோகியார் திருவாசகத்தில் சிவ புராணம் முதலான முதல் நான்கு அகவல்களுக்குத் தன் அனுபவத்தில் கண்ட யோகப்பொருள் தந்துள்ளார்கள். சிவயோகியார் குண்டலினி சக்தியை எழுப்பும் ஆற்றல் உடையவர்கள். இதனை நேரிடையாகத் தானே அனுபவித்தவர்களான தொண்டை மண்டல ஆதீனம் ஞானப் பிரகாச சுவாமிகள் அவர்கள் (பூர்வாசிரமப் பெயர் முத்து சு.மாணிக்க வாசக முதலியார்) வாக்குப்படி 'இந்நூல் விளக்கம் இதுவரை யாரும் கூறாதது.''

யோகியாரிடம் யோகப் பயிற்சி பெற்ற நீதிபதி எஸ்.மகராஜன் அவர்கள் ''ஸ்வானுபவம் நிறைந்த இந்நூல் ஆசிரியர் ஒளிவு மறைவு இல்லாமலும், வஞ்சகமில்லாமலும் கண்ணே அனைய பரமரகசியங்

களை எல்லாம் எடுத்து விளக்கி இந்நூலின் மூலம் உலகத்துக்கே பறை சாற்றிவிட் டார்'' என்கிறார்.

ந.ரா.முருகவேள் : திருவாசகத்திற்கு ஞான யோக அனுபவ நுண்பொருள் தத்துவக்குறிப்புகளை எழுதப்பெறா குறை இருந்து வந்தது. இந்நூல் அதனைப் போக்குகிறது.

கிருபானந்தவாரியார் : இவ்வருட் பெருங்குரவர் பல பிறவிகளில் செய்த தவப்பயனால் சிவயோக அனுபவம் பெற்றவர். அடியேன் இவரிடம் தீட்சை பெற்று அந்நெறி உய்ந்தேன்.

32

பக்தி இலக்கியம்

1973

(ஆசிரியர் – டாக்டர் ப.அருணாசலம்; வெளியீடு – தமிழ்ப் புத்தகாலயம்; பக்கங்கள் 356; விலை ரூ. 8/-)

சைவ நெறி தமிழர்கள் நடுவே வளர்ந்த வரலாற்றை விரிவாகக் கூறும் முதல் நூல் இதுவெனலாம். சிந்து வெளி நாகரிகத்தில் சிவ வழிபாடு இருந்தமை; இந்து சமயம் வேத காலத்திற்கே முன்பே இருந்தமை; ஆகம நெறியே – ஆரியர் அல்லாதார் நெறியே – இந்து சமயத்தில் சிறந்து நிற்றல்; அப்படியிருக்க இந்து சமயத்தை, ஆகம நெறி என்று கூறாது வைதீக நெறி என்று கூறுவானேன்? இந்து மதம் சிறந்த தத்துவ அடிப்படையை அமைத்துக் கொண்டு தன்னை விளக்க வைதீக நிழலைத் தேர்ந்தெடுத்தது என்கிறார் ப.அருணாசலம்.

சைவம் தமிழர் சமயமா? என்ற கேள்வியை எழுப்புகின்றார் ஆசிரியர். தமிழர் சமயம் என்றால் இந்தியாவின் தென் பகுதியில் வாழும் தமிழ் மொழி இனத்தவர்க்கு சிறப்பான உரிமை உடைய ஒன்றாக இருக்க வேண்டும். மேலும் இந்தியாவில் பல இடங்களிலுமாக வாழும் இம்மக்களில் பெரும்பாலோர் இன்று சிவனை வழிபடு கடவுளாகவும் கொள்ளவில்லை. இவர்களனைவரையும் தமிழரென்றோ, திராவிடரென்றோ கருதுவோருமில்லை. இந்தியாவைத் தமிழ்நாடு என்றும், இந்தியநாடு முழுவதும் பரவியிருக்கும் பண்பாட்டைத் தமிழர் பண்பாடென்றும் விளக்குவதில் உணர்ச்சி மிகுந்திருக்குமளவு உண்மையிருப்பதாகக் கூறமுடியுமா? என்கிறார் ஆசிரியர். பின் இதற்கு என்னதான் பதில். இதனையும் ஆசிரியர் விளக்குகிறார். ஒரு காலத்தே திராவிடர்கள் நடுவே வழங்கப்பட்ட வழிபாடாகக் கொண்டாலும் அவ்வழிபாடு அவ்வினக் கால்வழியே நம்மை வந்தடையவில்லை. பல பண்பாட்டுச் கலப்புக்களால் புத்துருவம் பெற்றே நம்மிடம் வந்து சேர்ந்துள்ளது'' என்கிறார். என்ன ஒரு கருத்துத் தெளிவு! துணிவான ஆராய்ச்சி முடிபு!

சிவ வழிபாட்டினைத் தமிழர் நெறி எனக் கூறுவதுபோல சைவ சித்தாந்தத்தைத் தமிழர் தம் கூர்த்த அறிவின் படைப்பு எனக் கூறுகின்றனர். சித்தாந்தக் கோட்பாடுகளை விளக்குவதற்கெனத் தமிழர் பயன்படுத்தும் நூற்கள், சித்தாந்த சாத்திரங்கள் பலவும் தமிழ் மொழியிலேயே இருப்பதனால் இவ்வாறு கூறுகின்றனர். ''ஆகமங்கள் வடமொழியிலேயே உள்ளன. ஆகமாந்தப் பொருளை விளக்கும் தத்துவ நூற்கள் பல தமிழில் சித்தாந்த சாத்திரங்கள் தோன்றுவதற்கு முன்பே வடமொழியில் காணப்படுகின்றன. மேலும் தமிழிலுள்ள சாத்திரங்கள் உணர்த்தும் சித்தாந்த சைவத்துக்கும், காஷ்மீர சைவத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்பும், சித்தாந்த உண்மைகளைத் தமிழில் முதன்முதலாகப் பேசும் திருமந்திரத்தைத் தந்த திருமூலர் காஷ்மீரப் பகுதியிலிருந்து வந்ததாகக் கூறப்படும் வரலாறும், இக்கோட்பாடு தென்னிந்தியாவின் ஒரு பகுதியில் வாழும் தமிழினத்திற்கே உரியதெனக் கூறத் தடையாகவுள்ளது. சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் பல விளக்கங்கள் பிறவிடங்களில் காணப்படுவனவே. (உ-ம் முப்பத்தாறு தத்துவங்கள்) ''ஆகமாந்தத்தையே சைவ சித்தாந்தம் பேசுவதாகக் கூறிக் கொண்டாலும் சித்தாந்தத்தை விளக்கும் சந்தானாசாரியர்கள் வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத்தையே விளக்குகின்றனர். ''அத்துவைதம்'' என்ற வேதாந்தக் கோட்

பாட்டுகளுக்குத் தரும் புது விளக்கமே சித்தாந்தம் எனலாம். இம்முயற்சியும் வைதீக நிழலில் நிலைத்து நின்ற வளர்ச்சியினையே காட்டும்'' என்கிறார் ஆசிரியர்.

வேத நெறிக்கு உட்பட்ட நெறியாகவே சைவத்தை ஞானசம்பந்தப் பெருமானும், சேக்கிழாரும் கருதுகின்றனர் என்று எடுத்துக் காட்டுகளுடன் கூறுகின்றார்.

தேவாரங்களில் குறிப்பிடப்படும் புராண இதிகாச மாந்தர்கள், வழிபட்ட திருப்பதிகளையும், புராண இதிகாசத் தொடர்புடைய திருத்தலங்களையும் பட்டியலிட்டுக் காட்டியிருப்பது நல்ல முயற்சி.

சைவ வைணவ நெறிகள் இந்தியா முழுவதும் பரவியிருந்த ஒரு பண்பாட்டின் விளக்கங்களாக வளர்ந்தன என்கிறார். வட நாட்டினைச் சேர்ந்த பல சைவப் பிரிவினர் திருவாரூரில் இருந்தனர் என்ற அப்பர் பாடலையும், சுந்தரர் பாடலையும் எடுத்துக் காட்டுகளாகக் காட்டுகிறார். சிவாசாரியார்கள் தமிழகத்தில் புகுந்தமையும், கோளக மடம், வீர சைவ மடம், காபாலிகர் மடம் தமிழ்நாட்டில் தோன்றியமையும் பிற உதாரணங்கள் ஆகும்.

இறைவனைப் பாடுதலை இரண்டு வகையாக ஆசிரியர் பிரிக்கின்றார். ஒன்று உலகியல் வட்டத்திலிருந்து பாடுதல், பிறிதொன்று இறை வட்டத்திலிருந்து பாடுதல். இதற்கு உதாரணமாக வள்ளலார் பாடல்களை மெய்யுணர்வுப் பாடல்கள் என்றும், மீனாட்சி சுந்தரம் பிள்ளளை பாடல்களை உலகியற் பாடல்கள் என்றும் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

பக்தி வேறு; ஞானம் வேறு அல்ல என்கிறார் ப.அருணாசலம். ''பக்தி என்பது ஞானத்தின் விளைவாக இறைவனிடம் உணர்ச்சி ஒன்றி நிற்றல் ஆகும்.'' அடுத்து ப.அருணாசலம் அருட்கவிஞர்களின் பக்தி அனுபவத்தைப் புலப்படுத்துகிறார். காரைக்காலம்மையார் பேய் வடிவம் வேண்டிப் பெற்றது உலகியலார் கண்ணுக்கு அழகிய பெண் வடிவில் தோன்ற அம்மையார் விரும்பவில்லை என்பதன்று. இறைவனைப் பேய்க் கணங்களின் தலைவனாகக் கண்ட காட்சியினால் அக்கணத்தில் ஒன்றாகி அவன் திருவடியைப் போற்ற விரும்பியதே காரணம். எனவே பேய்க்கணங்களுள் ஒன்றான நிலை, ஞானத்தை வெளிப்படுத்திய நிலை.

காரைக்காலம்மையார் கொண்ட பேய் வடிவத்திற்கு எப்படி ப.அருணாசலம் அவர்கள் புது விளக்கம் தந்தார்களோ, அதேபோல திருமந்திரத்தில் வரும் நீதிப் பாடல்களுக்கும் நல்ல விளக்கம் தருகிறார். ''தாம் பெற்ற தெய்வ அனுபவத்தைத் தெய்வ நீதியாகவே உணர்த்துகிறார். சில பாடல்கள் உலகியல் – அறம் – அளவில் காணப்படினும் அவர் முழுமையான சிந்தனை தெய்வ இயலோடு கலந்து நிற்கும் உலகியலே. தாம் வற்புறுத்தும் தெய்வ நீதி உலக நீதியோடு பிரிப்பின்றி உள்ளது என்னும் கருத்தினராதலின் திருமூலர் சில பாடல்களை, நீதி நூற் பாடலா, திருமந்திரப் பாடலா என்ற வேறுபாடுதானும் தோன்றாத அளவுக்குப் பாடிச் செல்கிறார். தமிழில் பெரும்பாலான நீதி இலக்கியங்கள் கடவுட் சார்பற்றனவே. இவை சமணர்களால் படைக்கப்பட்டமையே காரணம். திருமூலரைப் பொறுத்த அளவில் நீதி கடவுள் இயல் அடிப்படையில் அமைந்த ஒன்றே. சைவநீதியே நீதி; அது உலகமெல்லாம் விளங்கப்பாடுகிறார். திருமந்திரம் தெய்வத்தை மறந்த நீதி இலக்கியங்களுக்கு எதிராக உண்மையான நீதி தெய்வ நீதியே என்பதை உணர்த்த எழுந்தது போலத் தோன்றுகிறது. திருவள்ளுவர் கூறும் சமுதாயத் தொடர்பாகத் திருமந்திரம் அன்பைக் கூறவில்லை. திருமூலருக்கு அன்பு சிவசொரூபமாகக் காட்சியளிக்கிறது.

அருட்கவிஞர்களின் தனித்தன்மையை டாக்டர் அருணாசலம் அவர்கள் அழகுடன் சுட்டிக் காட்டுகிறார். ஞானசம்பந்தர் பாடல்கள் பற்றி இவ்வாறு கூறுகிறார். ''சிவன் அருட்செயல்கள், அவன் அருட்டிரு மேனி, அவன் ஒளி பரவி நிற்கும் இயற்கை காட்சிகள் இவற்றில் தோய்ந்து பெற்ற அனுபவ வெளிப்பாடே சம்பந்தர் பாடல்கள். பிறிதொரு வகையாகக் கூறுவ தென்றால் இயற்கைக் காட்சிகளில் தோய்ந்தெழுந்த அழகனுபவம்,

இறைவன் அருட் செயல்களிலும், அருட்டிருமேனியிலும் கொண்ட காதலனுபவம், இறைவன் திருக்கோயில்களையே சிவன் எனக் கண்டு தெளிந்த ஞான அனுபவம் ஆகிய இம்மூன்று அனுபவங்களையும் கொண்டு விளங்கும் அழகுக் கவிதைகளை, ஞானப் பாடல்களைச் சம்பந்தர் பாடினார் எனல் வேண்டும்.''

அப்பர்பெருமான் பற்றி ''அனுபவத்தால் தாம் வாழ்வில் உணர்ந்த உலகியல் வெம்மையும், ஞானத்தால் உணர்ந்த திருவடி நிழல் தண்மையும், உள்ளத்தில் ஏற்படுத்திய போராட்டத்தின் விளைவாகவே உலகியல் வெம்மையிலிருந்து விடுபடத் துடிக்கும் துடிப்பும் இவர் பாட்டின் உயிர் நாடியாக அமைகிறது என்கிறார்.

சுந்தரரின் பாடல்களில் தோழமையின் குரலைவிட அடிமையின் குரலே அதிகமாக எதிரொலிக்கிறது என்கிறார்.

மணிவாசகரின் பாடல்களைத் தேவார மூவரின் பாடல்களிலும் வேறுபடுத்திக் காட்டுகிறார் ஆசிரியர். (1) 'சூடுவேன்' என்ற திருச்சதக அகப்பாடல் அகத்திணை மரபை ஏற்றுப்பாடிய பாடல் என்று கூறுவதை விடவும், 'நாயகி பாவத்தில் திளைத்து நின்று பெற்ற பேரின்ப அனுபவத்தை கிளர்ச்சியோடு பாடுவதாகவே கூற வேண்டும். தேவாரப் பாடலாக ''நீர் பரந்த நிமிர் புன்சடை'' என்ற ஞானசம்பந்தர் பாடலை எடுத்துக் கொள்கிறார். (2) மாணிக்கவாசகர் தேவார ஆசிரியர்களைப் போல் திருக்கோவில்களையே மையமாகக் கொண்டு தம் கவிதைகளை வெளிப்படுத்தியவரல்லர். (3) புராண உணர்ச்சி தேவார மூவரினும் அருகிய நிலையிலேயே மாணிக்க வாசகரிடம் உள்ளது. (4) இறையனுபவத்தை வெளிப்படுத்தும்போது திருவடி நிழல், நிழல் மறைவு இம்முரணே மாணிக்கவாசகர் அனுபவத்தை நன்கு வெளிப்படுத்துகின்றன. இவ்வுணர்ச்சிவேக அடிப்படையில் நால்வரையும் கூறுவதாக இருந்தால் மணிவாசகர், அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்ற வரிசையிலேயே குறிப்பிட வேண்டும். இவ்வேகம் – இறைவனைப் பிரிந்து ஆற்றாத நிலையில் மணிவாசகர் பாடலில் அழுகையாக வெளிவருகிறது. தேவார ஆசிரியர்களிடத்தும் பிற அருட் கவிஞர்களிடத்திலும் 'அழுகை ஒலி' ஒரோவிடத்து கேட்க முடிந்தாலும் திருவாசகத்திலேயே இவ்வொலி பரவலாகக் கேட்கிறது எனல் வேண்டும்.

இவ்வாறு சைவ சமயம் பற்றி ஆய்வுக் கண்ணோட்டத்துடன் தெளிவாகக் கூறும் நூல்கள் வெகு சிலவே. அவற்றுள் டாக்டர் ப.அருணாசலம் அவர்கள் 'பக்தி இலக்கியம்' குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும்.

33

திருமுறைக் கருத்தரங்க ஆய்வுரைகள்

1973

(வெளியீடு – திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கப் பெருமான் திருக்கோவில்; பக்கங்கள் 350)

இந்நூல் 1971-இல் திருவிடைமருதூரில் நடைபெற்ற திருமுறைக் கருத்தரங்கில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகளின் தொகுப்பு. 38 பேரறிஞர்களின் கட்டுரைகளைக் கொண்டது. முப்பத்தெட்டு அறிஞர்களும் சைவ உலகில் உச்சத்தில் இருந்தவர்கள். அத்துணை பெருமக்களையும் ஒருசேர இணைத்து உரையாற்றச் செய்து நூலாகவும் அமைப்பாளர்கள் தந்துள்ளனர். நூலைப் புரட்டினாலே மலைப்பாக உள்ளது. இனி இப்படி ஒரு கருத்தரங்கு நடத்தவும் முடியாது; இப்படி ஒரு நூலும் கொண்டுவரமுடியாது. நூல் கொண்டுவர முயன்றாலும் இத்துணை திருமுறை அறிஞர்கள் இன்று எங்கே உளர்? இருபதாம் நூற்றாண்டில் சைவ சமயம் – திருமுறை பிரச்சாரம் – உச்சத்தில் இருந்தது என்பதற்கு உரைகல் இந்நூல்.

தொடக்கக் கட்டுரையே தெ.பொ. மீனாட்சி சுந்தரனாருடையது ஆகும். கேட்கவா வேண்டும்? ''தஸ்கரஸ்ய தஸ்கர'' என்ற வேதவாக்கைத் திருடனுக்குத் திருடன் என்று தவறாக மொழி பெயர்த்துள்ளார்கள்.

இறைவன் திருடனா? ''என் உள்ளம் கவர் கள்வன்'' என்கிறார் ஞானசம்பந்தர். ''மற்ற மற்ற திருடர்களுக்கு எல்லாம் கைவரப்பெறாத கலைமனத்தையே திருடிச் செல்லும் முறையாகும்.''

திருஞானசம்பந்தர் இலக்கிய நோக்கு பற்றி சொ. சிங்காரவேலன், பாலூர் கண்ணப்ப முதலியார் ஆகியோரும், ''சம்பந்தர் தமிழில் சாத்திரநோக்கு'' பற்றி க. வச்சிரவேல் முதலியார் அவர்களும் கட்டுரை வரைந்திருக்கின்றார்கள்.

''திருநாவுக்கரசர்'' அமர்வுக்குப் பார்வையாளராகப் பொறுப்பேற்ற தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் தங்களுக்கே உரித்தான ஆய்வுப் பார்வையிலே ஐந்து பாட பேதங்களை முன் வைக்கிறார்கள். சாத்திரக் கருத்துக்களையும், இலக்கியச் செய்தி களையும் எடுத்துரைக்கிறார்கள். ''இந்த உடம்புக்குள் இறைவன் புகுந்திருந்தால் இந்த உடம்பே பெரிய விமானம் ஆகி விடும். ஆகவேதான் இதை சாதாரண ஊன் உடம்பாக வைத்துக் கொள்ளாமல் சிவதேகமாக ஆக்க வேண்டும்'' என்று முத்தாய்ப்பாக அருள்பாலிக்கிறார்கள். இந்த அமர்வில் ''இடையறாப் பேரன்புப் பாடல்'' என்ற தலைப்பில் கு. நடேசக் கவுண்டரும், ''திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய நோக்கு'' என்ற தலைப்பில் சாரதா நம்பியாரூரனும் ''அப்பர் தேவாரத்துள் சித்தாந்தம்'' என்ற தலைப்பில் ரா. சண்முக சுந்தரம் செட்டியாரும் கட்டுரைகள் வழங்கியிருக்கின்றார்கள். கு. நடேசக் கவுண்டரின் ''இடையறாப் பேரன்புப் பாடல்'' ஓர் அருமையான கட்டுரையாகும். ''ஏறதேறும் இடைமருதீசனார்'' என்ற தேவாரப் பாடலுக்கு இலக்கிய நயமும், சாத்திர விளக்கமுமாகப் பிழிந்து கொடுத்திருக்கிறார்.

''சுந்தரர்'' அமர்வில் கு. நம்பி ஆரூரன் ''சுந்தரர் இலக்கிய நோக்கும், சாத்திர நோக்கும்'' என்ற தலைப்பிலும், வி. சா. குருசாமி தேசிகர்'' ''சுந்தரர் தேவாரத்தில் இலக்கிய நோக்கு'' என்ற தலைப்பிலும் கு. சுந்தரமூர்த்தி ''ஏழாம் திருமுறையில் சாத்திர நோக்கு'' என்ற தலைப்பிலும் கட்டுரைகள் தந்திருக்கின்றனர். பார்வையாளர் ந. சஞ்சீவி அவர்கள் தம் முடிவுரையில் ''சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பெருங்கொடை எது என்று கேட்டால், அவருக்கு முன்னே இருந்த இரு பெரியவர்களும் பகை போக்கினார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தொகை ஆக்கினார்கள். ஒரு நல்ல வாழ்வுக்கு இன்றியமையாமை பகை போக்குதலும், தொகை ஆக்குதலும். தீமையிலிருந்து விலக வேண்டும். நன்மையோடு மருவ வேண்டும். அதுதான் இந்த மூன்று பெரியவர்களும் நமக்குக் காட்டிய வழி. அவற்றுள்ளும் ஒரு நயம் இருப்பது போல இருக்கிறது. பகை முடிக்க இருவர் தேவை. தொகை முடிக்க ஒருவர் போதும்.

''திருவாசகம்'' அமர்வில் க. வெள்ளை வாரணன் ''மணிவாசகமும் மூவர் தமிழும்'' என்ற தலைப்பிலும், இரத்ன நவரத்னம் "The Fundamental Principles underlying Tiruvacagam" என்ற தலைப்பிலும், அருள் தியாகராஜா ''மணிவாசகர் – ஒரு சிந்தனை'' என்ற தலைப்பிலும் எழுதியுள்ளனர். சா. கணேசனும், அழகரடிகளும் பார்வையாளர்களாகப் பணியாற்றியுள்ளனர்.

''திருக்கோவையார்'' அமர்வுக் கட்டுரைகள் அனைத்துமே சுவை பயப்பன. திருக்கோவையாரைப் பற்றி அதிகம் நூல்கள் வராத காலத்தில் வந்தமையால் அனைத்துக் கட்டுரைகளுமே புதியவையாய் இருக்கின்றன. டாக்டர் வ. சுப. மாணிக்கம் ''திருக்கோவைப் புரட்சி'':

''அகத்துறைக்கண் பாலைப்பாடல் போலச் சமயத்துறையில் திருவாசகம் பாலைப்பாடல்''. ''மற்றுள்ள வாசகம் மாண்டு'' என்று திருத்தெள்ளேணத்தில் பாடுகின்றார். இவ்வேக உணர்வுக்குப் பின் தொல்காப்பியத்தையும் சங்க அகப் பாடல்களையும், அகவிலக்கணங்களையும் தொகுத்து ஆராய்ந்து துறைகளை நிரல்பட வகுத்துத் தொடர் நிலைச் செய்யுள் எனத்தகும் நானூறு பாடல் யாத்து, ஒரு கோவைப்பட எழுதும் உலக மனவியல் அடிகளாருக்கு வாராது. சட்டெனப் பிரிந்து மறைந்த பெரியோன் கழலைக் காணுமதே துடிப்பாகக் கொண்ட மணிவாசகர் அலறி உலறி எவ்விடத்தான் சிவன் எவர்கண்டனர்

என்று ஓடிப்பாடித் திரிந்த அடியவரேயன்றி அதன் பின்னர் ஓரிடத்து அமர்ந்து ஒரு தொடர் நூல் எழுதிய புலவர் அல்லர். ஆதலின் இறையுணர்வு அரும்பி வளரும் நிலையில் கோவை இயற்றப்பட்டது.''

''அகப்பாடலில் முதல் கரு உரி மூன்றிலும் மக்களே இடம்பெறுவர். தலைவன் தலைவி தோழி அன்னை முதலான கிளவிப் பாத்திரங்கள் இயற்பெயர் பெறுவதில்லை. திருக்கோவையிலோ இவ்வுலகத்தின் தில்லை பேசப்பட்டாலும், பாட்டுடைத் தலைவனாக வருபவன் மாந்தனல்லன்; இறைவன். பாட்டுடைத் தலைவன் தில்லைக்கூத்தப்பிரான் என்பது மட்டுமன்று. கூத்தப்பிரானின் திருவிளையாடல்களோடு இணைத்துப் பேசப்படும் தில்லை என்தை அறிய வேண்டும்.

''பாட்டுடைத் தலைவன் செயல்கள் பெரும்பாலும் தில்லைக்கு அடையாக வருகின்றன. சங்கப் பாடல்கள் போல் இயற்கையடை இல்லை என்னும் அளவுக்குக் குறைவு. எனவே கோவையின் கருப்பகுதி அல்லது செம்பாகம் இடைக் காலத்து வளர்ந்த சமயநிலைக்கு ஏற்ப, தெய்வப் பான்மையாகவும், உரிப்பகுதி முன்போல் மனிதப்பான்மையாகவும் அமைந்தன என்று அறிய வேண்டும். இது கால மாற்றத்தால் விளைந்த மாற்றம்.''

''திருக்கோவையாரில் கிளவித் தலைவனும் தலைவியும் பாட்டுடைத் தலைவன் தலைவியாகவே பார்க்கப் பெறுவது அகவிலக்கணத்தில் ஒரு பெரிய புரட்சியாகும்.''

''இளங்கோ காப்பிய மரபில் புரட்சி செய்தவர் என்பது போல மணிவாசகரும் அகத்திணை மரபில் அடிப்படைப் புரட்சி செய்தவர். அகத்துறைகள் பல என்பதும், அவற்றைத் தனித்தனி நிகழ்ச்சியாகவே கருத வேண்டும் என்பதும், காதல் நிகழ்ச்சிகளை வரிசையாகக் கோவைப் படுத்தக்கூடாது என்பதும் தொல் காப்பியமும் சங்க இலக்கியமும் காட்டிய அகமரபு. முதற்பாட்டு ஒரு கைகோளாக ஒரு துறையாக அடுத்தபாட்டு வேறொரு கைகோளாக வேறொரு துறையாக இங்ஙன் தொடர்பு இன்றியே செல்லுவதை அறிகின்றோம். துறைத்தனிமை சங்கப் பாங்கு; துறைக்கோவை சங்கப்பாங்கன்று.

''சமய எழுச்சிக்குப் பின்னர்த் தோன்றிய அகத்துறை செய்யுட்களில் முதல் கரு என்ற இரண்டின் இடத்தைச் சமயம் கைப்பற்றிக் கொண்டது. இப்பகுதியில் சமய மெய்ம்மைகளும், புராணக் கதைகளும் புகலாயின. இவற்றின் அடிப்படையில் கற்பனைகளும், சொல்நயங்களும் புனையப்பட்டன. மேலும் தலைவன் தலைவி முதலான அகமாந்தர்களும் ஒரு சமயம் தழுவிய மக்களாகக் கொண்டமையின் உரிப்பொருளிலும் சமயம் கலப்பதாயிற்று. எனவே சங்கத்துப் பின் எழுந்த அகப் பாடல்கள் அகம் என்ற இலக்கணத்தைப் பெற்றிருந்தாலும் சமய முதன்மைப் பாடல்களாயின. சமயம் முதற் பொருளாயிற்று. அதனைச் சொல்லிப் பரப்புதற்கு உரிப்பொருள் சார்புப் பொருளாயிற்று. இவ்வகைப் பொருள் மாற்றத்திற்கு முன்னோடியாகத் திகழ்பவர் மணிவாசகர். சமயத்துறையில் அன்புப் புரட்சிகண்ட அடிகளார் இலக்கியத் துறையிலும் நீடிய பெரும் புரட்சி செய்தார். அப்புரட்சி பின்னைப் புலவர் எல்லாரும் மேற்கொள்ளத்தக்க மரபு ஆயிற்று. கோவை மரபு மணிவாசகர் கண்ட புதிய இலக்கிய மரபு.''

ஔவை சு. துரைசாமி பிள்ளை தனது ''திருக்கோவையார்'' கட்டுரையில் ''கோவையார் தோன்றிய காலத்தில் சங்க கால அகப்பொருள் நிலை மாறி விட்டமையும், ஆயிரம் ஆண்டுகள் இடையில் கழிந்து விட்டமையும், சமுதாயத்திலே பல வேறுபாடுகள் தோன்றிவிட்டன என்பதையும் நினைவு கொள்ளுதல் வேண்டும். இந்த முறையிலே திருக்கோவையாரில் சொல்லப்படுகிற அகப்பொருள் உண்மைப் பொருளன்று என்பதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒருவனும் ஒருத்தியுமாக வெவ்வேறு இடங்களில் பிறந்து, வளர்ந்து, காதல் கொண்டு கணவன் மனைவியாகிய சங்க கால அகப்பொருள் நெறியை உண்மைக்கு மாறாக இல்பொருளாக – வெறும் கற்பனையாகப் பிற்காலத்தார் ஆக்கிவிட்டார்கள். ஆகவே, இப்போது கோவையாரில் வருகிற அகப்

பொருள் வெறுங்கற்பனை என்பதை நாம் நினைவில் நிறுத்துதல் வேண்டும். திருக்கோவையார் 400 பாடல்களையும் பிடித்துக் கொண்டு உலுக்கினால் 200, 250 சங்கநூற்பாடல் களின் கருத்துக் கிடைக்கும் என்று கூறும் ஔவையார் (ஔவை சு. துரைசாமி பிள்ளை) இரண்டு பாடல்களை மட்டுமே உலுக்கியுள்ளார். எஞ்சிய 398 பாடல்களை உலுக்க ஔவையார் இல்லையே என்று மனம் ஏங்குகிறது.

வ.ஆ. தேவசேனாபதியின் ‘‘திருக்கோவையார் – மெய்ப்பொருள் நோக்கு’’ கட்டுரையில் கடவுட் கொள்கை, முழுமுதற் கொள்கை என இருவகையாகப் பிரித்து சில திருக்கோவையார் பாடல்களில் இருவகைக் கொள்கைகளையும் பொருத்திக் காட்டுகிறார். ‘‘இருவர் ஒன்று சேரும்போது தான் இன்பம் பிறக்கிறது. ஒருவரே உள்ள இடத்தில் இன்பம் இல்லையென்பது கடவுட்கொள்கை, இறைவனும் உயிரும் சேரும்போது உண்டாகிற இன்பமே பேரின்பம். இறைவன் மட்டுமோ உயிர் மட்டுமோ இருப்பதனால் அங்கே புணர்ச்சியில் உண்டாகும் இன்பம் எழாது என்று கடவுட் கொள்கையினர் கருது கின்றனர்.

முழுமுதற் கொள்கையினர் இதனை மறுத்து இருவர் அல்லது இருமை உள்ளவரை நிறைவு அல்லது முழுமை கிடையாது. இருமையைக் கடந்த நிலையே நிறைவான நிலை. ஆற்றுநீர் கடல் நீருடன் கலந்துவிட்டால்' பிரித்தறிய முடியாதது போல உயிர் இறைவனுடன் ஒன்றி விட்டால் உயிர் எனவும் இறைவன் எனவும் பேசுவதற்கில்லை. முடிவான உண்மை உள்பொருள் ஒன்றே என்பதுதான்’’ என்று இருகொள்கைகளையும் விளக்கிச் ‘‘சொற்பால் அமுது இவள் யான் சுவை’’ என்ற திருக்கோவையார் பாடலில் இரு கொள்கைகளும் பொருந்துவதை விளக்குகிறார்.

சு. சாமி ஐயாவின் ‘‘திருக்கோவையாரும் திருவாசகமும்’’ என்ற கட்டுரையில் திருக்கோவையாரும் திருவாசகமும் ஞான நூல்களே என்றும் திருக்கோவை யாரைப் பாடியருளியவர் மாணிக்கவாசகரே என்றும் நிறுவுகிறார். அதன்பின் இருநூல் களுக்கும் உள்ள ஒற்றுமைகளைப் பலசான்றுகள் காட்டி விளக்குகிறார்.

ஒன்பதாம் திருமுறை அமர்வில் பார்வையாளராகப் பணியாற்றிய மு. அருணாசலம் ‘‘தொல்காப்பிய அகப் பொருள் இருந்திருந்தால் இறையனார் அகப்பொருள் ஏன் வரவேண்டும்? பாண்டிய மன்னன் எழுத்தும், சொல்லும், யாப்பும் இருக்கின்றன. பொருள்நூல் கிடைக்க வில்லையே என்று வருந்தினான் என்பதாக இறையனார் அகப்பொருள் உரையிலேயே வருகின்றது என்றால் அகப்பொருள் எங்கே போயிற்று? ஒருவனும் ஒருத்தியும் சந்தித்துக் காதலராகி மணந்து வாழ்கிற நெறியைச் சொல்வது அகப்பொருள். அப்போதிருந்த களப்பிரர்களாகிய ஜைனர்களுக்குப் பெண்கள் தாம் கூடாதே. தொல்காப்பிய அகப்பொருள் ஒழிக்கப்பட்டது.

‘‘இளங்கோவடிகள் ஜைனர் என்பார்கள். ஆனால் அவர் பாடியுள்ள சிலப்பதிகாரம் இசைப்பாடல்கள் நிறைந்திருக்கிறது. மேலும் கண்ணகியின் சிறப்பை அது கூறுகின்றமையினால் எப்படி ஜைனராக இருக்கக் கூடியவர் அதைச் செய்வார்? திருமாலையும், அம்பிகையையும், மற்ற தெய்வங்களையும் அடிகள் கூறுகிற சிறப்பு, நூல் அமைப்பு ஆகியவற்றை கொண்டு அவர் சைவராகத்தான் இருக்க வேண்டும் என்கிற கருத்து எழுகிறது.’’

‘‘ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகிய இரண்டையும் பாடியவர்கள் ஒன்பது பேர். ஆனால் எல்லோரும் சிதம்பரத்தைப் பாடினார்கள். ஏன்? முதற்பராந்தக சோழர் சிதம்பரத்தில் பொன் வேய்கிற காரணத்தினால் தன் மகனார் கண்டராதித்தரைச் சிதம்பரத்தில் தங்க வைத்திருந்தார். அப்படி இவர் சிதம்பரத்தில் தங்கியிருந்த காலத்தில்தான் அங்கே வந்த புலவர்களை அந்தத் தில்லைப் பதிக்குப் பதிகம் பாடச் செய்தார். அப்படிப் பாடிய பதிகங்கள் தாம் அவை’’.

‘‘திருவிசைப்பா திருப்பல்லாண்டு எழுந்த காலம் பத்தாம் நூற்றாண்டின் நடுப்பாதியிலிருந்து அடுத்த நூற்றாண்டின்

நடுப்பாதி வரை எனலாம். நம்பியாண்டார் நம்பி முதல் எட்டுத் திருமுறைகளையும் இசைப்பாடல்கள் என்பதினால் ஒன்பதாம் திருமுறையாக திருவிசைப்பாவையும் களை வைத்தார். 10-ஆம் 11-ஆம் திருமுறைகளாக மற்ற இயற்பாக்களை வைத்தார்.

''திருவிசைப்பா சாத்திர நோக்கு'' என்ற தலைப்பில் ந. ரா. முருகவேள் கட்டுரை படைத்துள்ளார்.

''திருமந்திரம்'' அமர்விற்குப் பார்வையாளரான ஜி. வரதராஜன் ''திருமந்திரம் வாழ்க்கை நூல்; இல்வாழ்க்கையில் இருந்தும் மெய்நெறியை அடைய முடியும். மெய்ந்நெறி என்பது பிரணவ யோகம்'' என்று கூறி திருவைந்தெழுத்து, திருக்கூத்து பற்றியும் விளக்கியுள்ளார்.

''திருமந்திரம் – பொருள் நிலை'' – அ.ச. ஞானசம்பந்தன். ''பிறநாட்டாரையும், பிறசமயத்தாரையும் எடுத்துப் பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். கால, தேச, வர்த்தமானங்களைக் கடந்து அவர்கள் தம் நாகரிகம் அறியாத பிறமக்களிடத்தில் சென்று அவர்களோடு தங்கி, அவர்களிடைத் தம் சமயத்தைப் பரப்புகின்றனர். நம்மைப் பொறுத்த வரை நிலை என்ன? ஏற்கனவே சமயத்தை ஓரளவு அறிந்தவர்களிடம் மட்டுமே சென்று நம் கருத்தை வியாபாரம் செய்கிறோம். அதுமட்டுமன்று எத்துணை அளவு பதிபசுபாசம் பற்றிப் பேசினாலும் இந்நாளைய தேவைக்கு அவை பயன்படக்கூடிய நிலையில் பேசுகிறோமோ என்றால் அதுவும் இல்லை. பிறசமயத்தார்கள் அணுயுகத்திற் கேற்பத் தம் சமயக் கருத்துக்களுக்கு வேற்றுருவம் தந்து பரப்புகின்றனர். நம் காலத்தில் நம் கண் எதிரில் வாழும் இளைஞர்கட்குக்கூட நாம் அமைதி தேடித்தர முடியவில்லை.''

''திருமந்திரமாகிய பெருநூலை ஆக்கித் தந்த பெருமகன் எங்கோ இருந்து இறைவனில் ஈடுபட்டிருக்க வேண்டியவர் ஏன் இங்கு வந்தார்? இறந்து போதல் என்பது இவ்வுலகின் இயல்பு என்று அவருக்குத் தெரியாதா? ஏன் இறந்தவன் உடம்பில் அவர் புக வேண்டும்? பின்னர் ஏன் இத்துணைப் பாடல்களை ஆக்க வேண்டும்? நம்மாட்டுக் கொண்ட கருணையினால் தான் இவற்றைச் செய்தார் என்று கூறத் தேவையில்லை. திருமூலர் அளவிற்கு நாம் செல்லாவிடினும் இன்றைய சமுதாயத்திற்கு எது தேவை என்பதை அறிந்து அதையாவது பூர்த்தி செய்ய முயல்கிறோமா?''

''ஒன்றுக்கொன்று முரணாகக் காணக் கூடியவற்றைக் கூட திருமூலர் பேசியுள்ளார். உடம்பிலுள்ள உயிர் பிரிந்தால் இறைப்பொழுதும் அதனை வைத்திருக்க மாட்டோம் என்று பேசும் அவரே உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்று பாடுவது யாது கருதி? உடம்பெடுத்த தன் பயன் பிறர் பொருட்டுப் பயன்படுதற்காக. ஆனால் அப்பயன் விளையாத பொழுது அந்த உடம்பு பாரமாகி விடுகிறது. உடம்பை வளர்ப்பது எப்போது? திடம்பட மெய்ஞ்ஞானம் சேரும் வழிக்கு உடம்பு உதவியாக இருக்கும் பொழுது''.

''வாழ்க்கை எத்துணை மென்மையானது; எவ்வளவு விரைவில் முடியக் கூடியது; பிறவியைப் போக்க வேண்டும் என்பதைக் காட்டும் திருமூலர் மனிதன் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழவும் முடியும் என்பதையும் எடுத்துக் கூறி உள்ளார். திருமூலர் பிறவியை அறுக்க வேண்டும் என்பது வெறும் உடம்பை ஒழிக்க வேண்டும் என்ற பொருளில் அல்ல. பிறவியில் ஏற்படும் துன்பத்தைப் போக்க வழியறியார் பிறவியையே போக்க நினைத்தார். உடம்பெடுத்ததன் பயனை அடையக்கூடுமானால் உடம்பையும் அதற்குரிய பிறப்பையும் யாரும் கடிவதில்லை. அவ்வாறானால் உடம்பின் பயன் என்று இவர்கள் எதனைக் கருதினார்கள்? கூடும் அன்பினில் கும்பிடுவதையே பயன்' என்று கருதினர். இந்தப் பயன் உடம்பெடுத்தவர்கட்குக் கிடைக்கவில்லை யெனில் பிறவி வீணாகி விடுகிறது; துன்பம் நிறைந்ததாகி விடுகிறது. பிறவி பயன்படுமானால் அதனைப பாதுகாக்க வேண்டும். என்ன பயனை விளைக்கிறது எனில் வணக்குதலாகிய பயனை அளிக்கிறது.

''அன்புடன் கலத்தல் என்பது அன்பே வடிவமாக ஆதல் எனப் பொருள்படும்.

அன்பு வடிவமாக ஆகிறவர்கள் பிறர் பொருட்டாக வாழுகின்ற பெரியோர்களே ஆவர். எனவே பிற உயிர்கட்குத் தொண்டு செய்வதே அன்புடன் கலத்தல் அல்லது சிவத்துடன் கலத்தல் என்று தருக்க ரீதியாகக் கூறிவிடலாம்.

''சிவவழிபாடு என்பது உயிர்கள் மாட்டு அன்புகொண்டு தொண்டு செய்தலே என்பதை இத்துணை அழகாகவும், தருக்க முறையிலும் கூறியுள்ளனர் நம் முன்னோர் என்பதை இக்காலத்துக்கேற்ப எடுத்துக் காட்டாத நாம் சைவர்களா? இல்லை; சைபர்கள்.''

''இத்துணை உயர்ந்த நிலையிலிருந்த சைவம் அடுத்த காலகட்டத்தில் வெள்ளியில் இலிங்க வடிவம் வைத்து வழிபட்டால் என்ன பயன்? தங்கத்தில் வைத்து வழிபட்டால் என்ன பயன்? என்றும் வெள்ளை மலரால் அருச்சித்தால் என்ன பயன் கிட்டும்? சிவப்பு மலரால் அருச்சித்தால் என்ன பயன் கிட்டும் என்றும் சாத்திரம் வகுக்கத் தொடங்கிவிட்டது. சிவபூசையை ஒரு வியாபாரமாக்கிய பெருமை பிற்காலச் சாத்திரங்கட்கு உரியதாகும். யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை என்று மூலர் கூறவும் மிக உயர்ந்த நிலையில் இருந்த சைவ சமயம் இன்ன பூவுக்கு இன்ன பயன் என்று கூறும் இழிநிலைக்கு வந்தமையாலே இன்று அது கேட்பாரற்றுக் கிடக்கிறது.

''அப்பாலும் அடிச்சார்ந்தார் அனைவரையும் உளப்படுத்திக் கொண்டு அகில உலகத்திலும் உள்ளார் அனைவர்க்கும் பொதுவாக இருந்த சமயம் இன்று இருக்கும் நிலையாது? இன்று சைவ சாப்பாடு என்று கூறுகின்ற முறையில் சாப்பாட்டுச் சைவமாகி நிற்கும் அவலநிலை ஏன்?

சி. அருணை வடிவேல் முதலியார் ''உலகியலும் மெய்ந்நெறியும்'' என்ற தலைப்பிலும், ப. இராமநாத பிள்ளை ''திருமந்திரமும் திருத்தொண்டர் புராணமும்'' என்ற தலைப்பிலும் கட்டுரைகள் யாத்துள்ளார்கள்.

''பதினோராந் திருமுறை'' அமர்வுக்குப் பார்வையாளராக தவத்திரு சபாபதி சுவாமிகள் பணியாற்றியிருக்கின்றார்கள். கி.வா. ஜகந்நாதன் ''பதினோராந் திருமுறை – இலக்கிய நோக்கும் சாத்திர நோக்கும்'' என்ற கட்டுரையில் ''பன்னிரு திருமுறைகளின் அமைப்பு முறைக்கு பொருள் பாங்கொன்று எளியேனுக்குத் தோன்றுகிறது. முதல் 8 திருமுறைகள் சிவபெருமானைப் பற்றிச் சொல்வன. 9-ஆம் திருமுறை சிவபெருமானோடுகூட அவர் குடும்பத்துப் பிள்ளையாகிய முருகப் பெருமானையும் சேர்த்துச் சொல்வது. 10-ஆம் திருமுறையாகிய திருமந்திரம் விநாயகப் பெருமானையும், யந்திர வகையினாலே அம்பிகையையும் இணைத்துச் சொல்கிறது. 11-ஆம் திருமுறை சிவபெருமான் பெற்ற பிள்ளை களும், சிவபெருமானை அடைந்த பிள்ளை களும் சொல்லுகிறது. அடியார்கள் அடைந்த பிள்ளைகள் ஆவர். 12-ஆவது திருமுறை அடியார்களை – அடைந்த பிள்ளைகளை – மட்டுமே கூறுகின்றது.

''அப்பா அம்மா என்ற சொல் அப்பனையும், அம்மையையும் உடையவர்கள் பேசுகின்ற சொல். இறைவனோ அப்பனும் அம்மையும் இல்லாதவன். அவற்றைப் பேசமுடியாது. ஆனாலும் உலக வழக்கில் தன் பிள்ளையை அப்பா என்றும், தன் பெண்ணை அம்மா என்றும் சொல்கிற வழக்கம் உண்டு. முருகப் பெருமானும், விநாயகப் பெருமானும், சிவபெருமானின் பிள்ளைகள். ஆதலாலே அவர்களை அப்பா என்று அழைத்திருக்கக் கூடும். சிவபெருமானுக்குப் பெண் குழந்தை இல்லாமையினால் 'அம்மா' என்ற சொல் அவன் திருவாக்கில் வரவேயில்லை. இறைவன் திருவாக்கில் எல்லாச் சொற்களும் வர 'அம்மா' என்ற சொல் மட்டும் வாராமையினால் தனக்கு அந்த பாக்கியம் கிட்டவில்லையே என்று அந்தச் சொல் அழுததாம். அம்மா என்ற அந்தச் சொல்லும் அந்தப் பெருமானுடைய திருவாக்கில் வரும்படி செய்துவிட்டார் காரைக்காலம்மையார்.

''சிங்கார மடந்தையர் தீநெறிபோய்
மங்காமல் எனக்கு வரம் தருவாயே''

இதுபோன்ற பாடல்களை அருணகிரியார், மணிவாசகர் ஆகியோர் பாடியிருப்பதனால் அவர்கள் காமவயப்பட்டனர் என்று சிலர் சொல்கின்றனர். அது அப்படியல்ல. நம்முடைய குற்றங்களையெல்லாம் தம்முடைய குறைகளாக ஏற்றுக் கொள்கிறார்கள். உலகத்திலுள்ள மனைவியையும் மக்களையும் பற்றுக்கோடாக நினைத்து இறைவனை நினையாமல் வாழ்கிறாயே என்று காரைக்கால் அம்மையார் பேசுகிறார். அவரே பெண்ணாக இருக்கும்போது அவருக்கு எங்கே மனையாள்? அம்மையார் நம்முடைய குற்றங்களைத் தம்முடையனவாகச் சொல்கிறார்.''

''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும்
மிக்குச் சோதிக்க வேண்டா''

'மிக்கு' என்பதில்தான் நயம் இருக்கிறது. சோதிக்காமல் இருக்கக் கூடாது. சோதிக்காமல் இருப்பது விலங்கின் செயல். வழியைச் சோதிக்க வேண்டும். அனுபவ நிலத்தில் புகுந்துவிட வேண்டும். நூலறிவுக்கு வேலையில்லை. ஆகவேதான் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ''நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக.''

அடுத்துத் திருமுருகாற்றுப்படையின் ''உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன்தாள் செறுநர்த் தேய்த்து செல் உறழ் தடக்கை'' என்கிறார் நக்கீரர். முருகனுடையதாள் எல்லோரையும் தாங்குகிறது. அவன் கை செறுநர்த் தேய்க்கிறது என்றால் ஏதோ முரண்பாடு போலத் தோன்றும். நாம் கையாலே தாங்கிக் கொள்ளவும் காலினாலே தேய்க்கவும் தான் பழகியவர்கள். ஆண்டவன் திருவடி எல்லாத் தத்துவங்களையும் சர்வப் பிரபஞ்சத்தையும் தாங்குகிறது. எல்லாவற்றுக்கும் அது ஆதாரமாக இருக்கிறது.''

எச். வேங்கடராமன் ''பதினோராந் திருமுறையும், பெரியபுராணமும்'' பற்றி கட்டுரை வடித்துள்ளார்கள்.

''பெரியபுராண'' அமர்விற்கு தவத்திரு சுந்தர சுவாமிகள் பார்வையாளராகப் பணியாற்றியுள்ளார்கள். சுந்தர சுவாமிகள் என்றாலே பெரிய புராணம் தான் நினைவுக்கு வரும். அப்படியே சாறாகப் பிழிந்து தந்துள்ளார். த.ச. மீனாட்சி சுந்தரம்பிள்ளை ''பெரியபுராணம் வாழ்வியல் நோக்கு'' என்ற தலைப்பிலும் ஜி. கல்யாணம் ''பெரிய புராணம் – இலக்கிய நோக்கு'' என்ற தலைப்பிலும் கே. எம். வேங்கடராமையா ''பெரிய புராணம் – வரலாற்று நோக்கு'' என்ற தலைப்பிலும் கட்டுரைகள் படைத்துள்ளார்கள்.

இந்நூலில் உள்ள முப்பத்தெட்டு கட்டுரைகளும் ஒவ்வொரு சுவை. ஒவ்வொரு கட்டுரையும் ஆய்வு, நயம், வரலாற்று அடிப்படை, சமுதாயப் பார்வை, சமயக் கோட்பாடு, தத்துவ விளக்கம் எனப் பரந்து விரிந்து இருக்கின்றது. அந்தந்தத் தலைப்பிற்கு அந்தந்தத் திருமுறையில் ஆழமாகப் படித்தவர்களைக் கட்டுரைகள் படைக்க அமைத்திருப்பது பெருஞ் சிறப்பு. எடுத்துக்காட்டாக வ.சுப. மாணிக்கனார் சங்க இலக்கியம் தவிர அதிகம் சமய இலக்கியம் பேசியது இல்லை. அவருக்குச் சங்க இலக்கியத்தோடு தொடர்புடைய 'திருக்கோவையார்' தரப்பட்டுள்ளது. ஜி. வரதராஜன் பிள்ளை திருமந்திர உரை கண்டவர்கள். அவர்கள் திருமந்திர அமர்வின் பார்வையாளர். சுந்தர சுவாமிகள் பெரியபுராணத்தைக் கரைத்துக் குடித்தவர்கள். இவ்வாறாக எல்லா வகையினும் உயர்ந்த இந்நூலைப் படித்தவர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

34

குன்றக்குடி அடிகளாரின் நூல்கள்

(புனிதநெறி)

(1973 பக்கங்கள் 120 வெளியீடு, கலைவாணி புத்தக நிலையம்)

இந்நூல் அப்பர், சம்பந்தர் பாடல்களுக்கு விளக்கமாக எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டது.

சமய இலக்கியங்கள்

1981

(பக்கங்கள் – 122; வெளியீடு – இந்தியா புக் ஹவுஸ், சென்னை)

சேக்கிழார் காட்டும் சமுதாயம், சமய இலக்கியங்கள், சித்தாந்தச் செந்நெறி, சமய இலக்கியங்களில் அறநெறி என்ற நான்கு கட்டுரைகளைக் கொண்டது இந்நூல்.

ஆலயங்கள் – சமுதாய மையங்கள்

1987

(பக்கங்கள் 180; வானதி பதிப்பகம், சென்னை)

தமிழகத் திருக்கோயில்கள் ஒரு கால கட்டத்தில் தமிழ்ச் சமுதாயத்தின் மையமாக – தமிழர்களின் அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்த பெரு அமைப்பாக – இருந்ததை விரிவாக, இலக்கிய, வரலாற்றுச் சான்றுகளுடன் இந்நூல் விளக்குகிறது.

அப்பர் விருந்து

1990

(பக்கங்கள் 150; கலைவாணி புத்தகாலயம் சென்னை)

ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய அப்பர் பெருமானின் சிந்தனைகள் இருபதாம் நூற்றாண்டுச் சிந்தனையாளர்கள் கருத்துக்களையும் விஞ்சியிருப்பதை இந்நூல் வெளிப்படுத்துகிறது.

சைவ சித்தாந்தமும் சமுதாய மேம்பாடும்

1990

(கலைவாணி புத்தகாலயம், சென்னை)

(பக்கங்கள் 120... விலை ரூ. 15/-)

''சைவ சித்தாந்த வரலாறு'', ''சைவ சித்தாந்தத் தத்துவம்'', ''சைவ சித்தாந்தமும் சமுதாய மேம்பாடும்'' என்று மூன்று அரிய கட்டுரைகளைக் கொண்டது இந்நூல். ''சைவ சித்தாந்த வரலாறு'' என்ற கட்டுரை சிந்து சமவெளி நாகரிகத்தில் பின்பற்றப்பட்ட சிவவழிபாடு முதல் தற்கால மடங்கள் வரை ஒரு பரந்துபட்ட – முழுமையான – வரலாற்றுப் பார்வையாக அமைந்துள்ளது. ''சைவ சித்தாந்தத் தத்துவம்'' என்ற இரண்டாவது கட்டுரை அடிகளாருக்கே உரிய சிந்தனைச் செறிவுடன் – அழகு தமிழில் – எளிமையான முறையில் சைவ சித்தாந்தத் தத்துவத்தை முழுமையாக விளக்குகிறது. ''சைவ சித்தாந்த தத்துவமும் சமுதாய மேம்பாடும்'' என்ற கட்டுரை சாதி வேறுபாடும், பொருளாதார வேறுபாடும் சிவநெறிக்கு மாறானவை என்றும், சைவ சித்தாந்த தத்துவம் மார்க்சிய கருத்துகளுக்கு மிகநெருங்கி உள்ளது என்றும், சைவ சமயத்தில் களையப்பட வேண்டிய குறைகள் பற்றியும் தெளிவாக கூறுகிறது.

35

“தெய்வத் தமிழ்”

1975

(பதிப்பாசிரியர் – டாக்டர் ந. சஞ்சீவி; வெளியீடு – சென்னைப் பல்கலைக் கழகம்; பக்கம் – 584; விலை ரூ. 25/-)

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையினர் 1973-ஆம் ஆண்டில் நடத்திய பத்து நாள் பொது நிலைக் கருத்தரங்கின் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். பத்து கட்டுரைகளில் ஏழு கட்டுரைகள் சைவ சமயத்தைச் சேர்ந்தவை. அவையில் எழுப்பப்பட்ட வினாக்களும், அவற்றிற்கு கட்டுரையாளர்கள் அளித்த விடைகளும் இடம் பெற்றிருப்பது தனிச் சிறப்பு. இதுபோல முன்னும் செய்யப்பெறவில்லை. பின்னும் செய்யப் பெறவில்லை. கட்டுரையாளர்கள் எழுவரும் சைவ சமயத்தின் தலைமக்கள் ஆவர். இவர்கள் கட்டுரைகள் தரும் பயன் விழுமியது.

1) முதல் மூன்று திருமுறைகள் – டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்.

2) நான்கு ஐந்து ஆறாம் திருமுறைகள் – சொ. சிங்காரவேலன்

3) ஏழாந்திருமுறை – மு. சண்முகம் பிள்ளை.

4) எட்டாந் திருமுறை – செ. வேங்கடராமச் செட்டியார்.

5) ஒன்பது, பதினொன்றாந் திருமுறைகள் – அ.ச. ஞானசம்பந்தன்

6) பத்தாந்திருமுறை – ச. தண்டபாணி தேசிகர்.

7) பன்னிரண்டாம் திருமுறை – டாக்டர் சுப. அண்ணாமலை.

36

சேக்கிழார் அடிச்சுவட்டில்

1978

(ஆசிரியர் – சொ. சிவபாதசுந்தரம்; வெளியீடு – வானதி பதிப்பகம்; பக்கம் – *400*; விலை ரூ. *52/-*)

சேக்கிழார் அடிச்சுவட்டில் – நாயன்மார் அவதரித்த – அவர்கள் வாழ்க்கையில் தொடர்புடைய – தலங்களுக்கு நேரில் சென்று அங்குள்ள கோயில் அமைப்பு, நாயனார் திருவுருவம் இருக்கும் இடம், கோயில் ஐதீகங்கள், ஊரில் வழங்கும் வழிவழிச் செய்திகள் இவற்றோடு பெரிய புராண வரலாற்றையும் குழைத்து ஒரு கதை போல, சுவைபட ஆசிரியர் வழங்கியிருக்கின்றார்.

''இந்த நூல் பெரிய புராணத்துக்கே ஒரு சிறந்த உரை விளக்கம். சுந்தரர் வாழ்வின் திறவுகோல். அடியவர்களின் வாழ்வைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடி. தமிழ்நாட்டையும் தமிழ்க்கோயில்களையும் கொண்டு சென்று காட்டும் வழிகாட்டி. தமிழ் வரலாற்றையும், தமிழ் இலக்கிய வரலாற்றையும் தமிழ்க் கலைகளின் வரலாற்றையும் கூறிவரும் பிரமாண்ட புராணம்''.

''இது ஒரு சிறந்த பயண இலக்கியம்; தூய தெய்வ மணம் கமழும் பயண இலக்கியம். இந்தப் பயணத்தில் தமிழ்நாட்டின் இக்காலப் போக்கையும் மக்களது வாழ்வையும் தம்மோடு பிணைத்துக் கூறிவருவதால் இது ஒரு வாழ்க்கை வரலாறாகவும் இருக்கின்றது.''

''காரோட்டியும் குறிப்பெழுதி வைத்து உதவுகின்ற நண்பரும் அங்கங்கு வரும் குருக்கள்மாரும் பிறரும் சேர்த்து பலபல நாடகங்களையே உருவாக்குகிறார்கள். இவையெல்லாம் சிவபாதசுந்தரம் செய்யும் செப்பிடுவித்தை, ஆதலால் தான் இந்த நூல் முதலிலிருந்து முடிவு வரை சுவை நிறைந்தே செல்கிறது.

''இதுவெறும் கதையல்ல. அவர் அங்கங்கே பிடித்த படங்களே இந்த உண்மையை நிலைநாட்டும். இவர் கண்ட புதுமைகளும் பலப்பல. ஆதனூரைக் கண்டு பிடித்தார். இளையான்குடியை நிலை நாட்டியுள்ளார். கோவை சுப்பிரமணிய முதலியாரைத் துணைகொண்டு சென்றாலும் அவருக்கும் வழிகாட்டுகிறார். பழைய குணபரவீச்சுரத்தையும் புதியதாகப் படம் பிடித்து வந்துள்ளார். இப்படி எத்தனை எத்தனையோ ஆராய்ச்சி முடிவுகள் வெளியாகின்றன.''

''இப்படியெல்லாம் சிறந்த ஒரு நூலை நான் படிக்கும்படிச் செய்த சிவபாத சுந்தரனாருக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? வாழ்க அவர் நூல். தமிழர் ஒவ்வொருவர் கையிலும் இது கூத்தாடுவதாக'' என்று தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரே கூறிவிட்ட பிறகு நாம் என்ன புதிதாகக் கூறமுடியும்? இந்நூலைப் பற்றிய முழுமையான பார்வையை வேறு யாராலும் இந்த அளவு தர முடியாது.

37

"திருவைந்தெழுத்தின் திறவு"

(ஆசிரியர் ...ஊரன் அடிகள்; பக்கம் *110*; விலை ரூ. *20.00*)

பொருளடக்கம்

1) ஓங்காரம் திருமூலர், மாணிக்க வாசகர், வள்ளலார் கூற்று.

அ) வள்ளலார் பெற்ற ஓங்கார அனுபவங்கள்

ஆ) வள்ளலார் அருளிய பிரணவ உபதேசம்.

2) எட்டும் இரண்டும் (திருமூலர், மாணிக்கவாசகர், வள்ளலார்)

3) பஞ்சாக்கரம் (திருமூலர், நால்வர், வள்ளலார்.)

தூல பஞ்சாக்கரம்

திருவருட்பாவில் பஞ்சாக்கரம்

38

தமிழர் சமய வரலாறு

(ஆசிரியர் – டாக்டர் ஆ. வேலுப் பிள்ளை; இலங்கை; வெளியீடு; – பாரிபுத்தகப் பண்ணை, சென்னை; பக்கங்கள் 240; விலை ரூ. 10/-)

இந்நூலினை முழுமையான சைவநூல் என்று சொல்ல முடியாது. அது மட்டுமல்லாது பெரும்பாலான கட்டுரைகள் ஆசிரியரின் முன்னைய நூலான ''தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்'' என்ற நூலில் இடம் பெற்றுள்ளன. இருப்பினும் பெரும்பகுதி சைவம் பற்றிக் கூறுகிறது. அதைவிட இந்நூல் நெடுகிலும் புதிய சிந்தனைகளும், சைவம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளும், அவற்றிற்குத் தீர்வும் விரவிக் கிடக்கின்றன.

''சமயங்கள் அற்புத நிகழ்ச்சிகளுக்கு முதன்மை கொடுத்தது ஒரு காலத்தில் தேவையாக இருந்திருக்கலாம். சமய உணர்வு குன்றிய நிலையில் இவ்வற்புத நிகழ்ச்சிகளை வலியுறுத்தினால் சமய வெறுப்பு தோன்றும் போல இருக்கிறது. இந்நோக்கு இன்று தேவையா?' என்று முதல் கட்டுரையிலேயே (சமய இலக்கியமும் கால மாறுதலும்) ஆசிரியர் தோற்றுவாய் செய்து விடுகிறார்.

அடுத்து சங்ககாலம் முதல் இன்றைய நாள் வரை சமயம் காலத்துக்கேற்ப பெற்ற மாறுதல்களை வரலாற்று ரீதியாக – சமூக இயல் கண்ணோட்டத்துடன் – வழங்குகிறார். இந்த வரலாற்று ஆய்வினை ஒட்டி சமயத்தில் (இங்கு சைவம் வைணவம் என்று பிரிக்கவில்லை) எவ்வெவ் அம்சங்கள் சாடப்படுகின்றன என்று பட்டியல் இடுகிறார்.

கடவுள் உண்டா அல்லது இல்லையா என்று வாதிப்பவர் மிகச்சிலரே. ஆசிரியர் வகைப்படுத்தும் காரணங்கள் வருமாறு:

1) பௌராணிகக் கதைகளே பெரும்பாலும் கண்டனத்துக்கு உள்ளாகின்றன.

2) அந்தணர் தமிழ்ச் சமூகத்திலிருந்து சாதி அடிப்படையிலே பிரிந்து ஆரிய மரபினரென உயர்ந்தோராக வாழ்வதாலும், சமயத்தின் பெயராலும் சாதியின் பெயராலும் பெருஞ்செல்வம் பெற்றுச் செல்வாக்கோடு வாழ்வதாலும் பிராமணிய வெறுப்பும் கோவில் நிறுவன வெறுப்பும் தமிழ்நாட்டில் காணப்படுகின்றன.

3) சமயத்தத்துவக் கொள்கை பற்றி ஒருவித அசட்டை காணப்படுகிறது. சமயத்தத்துவத்தை அறிந்து கொள்ள விரும்புபவர்கள் குறைவு. அறிவியற் கருத்துக்கள் போதும், தத்துவக் கருத்துக்கள் வேண்டாம் என்று கூறுவது இக்கால மனப்பான்மை எனலாம்.

4) இக்காலத்தில் இன்னொரு முரண்பாடு காணப்படுகிறது? அறிவியல் துறையில் உள்ளவர்களில் சிலர் சமய நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கின்றனர். சமய இலக்கியங்கள் படிப்பவர்கள் பலர் அறிவியல் நோக்கு என்ற பெயரில் சமயத்தின் சில கூறுகளில் நம்பிக்கையற்று இருக்கின்றார்கள்.

5) இறைவன் எல்லாம் வல்லவன்; பேரருளாளன்; திருவுளம் வைத்தால் எத்தகைய ஆன்மாவையும் ஈடேற்ற வல்லவன் என்று கூறி உலக வாழ்க்கை துன்பமயமானது, உயிர்களுக்குப் பிறவியைக் கொடுப்பது இறைவன் திருவிளையாடல் என்று கூறும்போது முரண்பாடு காணப்படுகின்றது.

ஆசிரியர் கண்டனங்களைக் கூறுவதோடு நிறுத்திவிடாமல் அவற்றிற்கான தீர்வுகளையும் தருகிறார்.

1) சமயம் என்ற பெயரில் முன்னோர் விட்டுச் சென்ற கருத்துக்களில் இக்காலக் கல்வித் துறைகளுக்கு நேரே எதிரிடையாகத் தோன்றும் பகுதிகளை விட்டுவிட வேண்டும்.

2) சமயத்தில் எவ்வெவ் அம்சங்கள் நன்மை பயக்குமெனக் கருதுகின்றோமோ அவ்வவ் அம்சங்களையே வற்புறுத்தி வரவேண்டும்.

3) மூட நம்பிக்கைகள் என்று பகுத்தறிவுக்குப் புலனாகுபவை – அறிவியல் நோக்குப் பொருந்தாத

கருத்துக்கள் – சமயத்துக்கு அத்தியாவசியம் என்று சாதிக்க முனைந்தால், சமய நம்பிக்கையை இக்கால மக்களிடமிருந்து சிதைக்க முனைந்த குற்றம் வரும். அத்தகைய நம்பிக்கைகள் அறிவுக்கும் பொருந்தக் கூடியவாறு விளக்கப்பட வேண்டும்.

4) சமயம் உயிர்த் துடிப்புடையதாக வருவதற்கு அது இக்காலச் சூழ்நிலைக்கு ஏற்றதாக மாறவேண்டும்.

‘‘சைவமும் பௌத்தமும்’’ என்ற கட்டுரையிலே ‘‘இந்தியாவில் இந்து மதத்திலே பௌத்தம் அமிழ்ந்துவிட்டது என்று கொண்டால், இந்தியாவுக்கு வெளியேயுள்ள சில நாடுகளிலே பௌத்த மதத்திலே சைவம் அமிழ்ந்துவிட்டது’’ என்கிறார். இதைவிட அழகாக – ‘அமிழ்ந்துவிட்ட’ என்று ஆழம் பொருந்தியதாக – கவித்துவமாக – உள்ள நிலையைக் கூறமுடியாது. மேலும் இந்த கட்டுரையில் ‘‘அளவையியல் (தருக்க) சாஸ்திரத்தில் அருணந்தி சிவாச்சாரியர் பௌத்த சமயத்துக்குக் கடன் பட்டிருக்கிறார்’’ என்று கூறி அதற்கான சான்றுகளும் தருகிறார்.

‘‘ஆறுகோடி மாயாசத்திகள்’’ என்ற கட்டுரையில் சைவசமயத்தில் இன்றைய நிலையை – குறிப்பாகக் கோவில்கள் ‘இருள் அடர்ந்த குகைகள்’ போல் இருக்கும் நிலையை – விரிவாகக் கூறுகின்றார். சமய உணர்வு உலகெங்கும் பொதுவாகவே குறைந்துவிட்டது என்ற வாதத்தை முன் வைக்கும் வேலுப்பிள்ளை ‘‘சமய எழுச்சி இன எழுச்சியோடு தொடர்புற்றிருக்க வேண்டும். சிங்கள மக்களின் இன எழுச்சியும் பௌத்த மத எழுச்சியும் பிணைந்து காணப்படுகின்றன. சிங்கள மக்கள் உயர்வு பெற, பௌத்தமும் வளரும். சைவத்திற்கு இத்தகைய வாய்ப்பு இல்லை. தென் இந்தியாவில் இன எழுச்சி திராவிடர் இயக்கமாகப் பரிணமித்து விட்டது. சைவமதம் திராவிடருக்குரியதல்ல. அது அழியட்டும் என்கின்றனர் திராவிட இயக்கத்தினர். தனிச் சைவ எழுச்சி இன உணர்ச்சியோடு பிணைவதற்கு எங்கும் இடமில்லை. இது சைவத்திற்கு ஒரு குறை என்கிறார்.

‘‘இந்து சமயத்துக்குப் புதிய விளக்கம் வேண்டும்’’ என்ற கட்டுரையில் இந்து சமயத்தில் சாதி வேற்றுமை – ஏற்றத் தாழ்வு இருக்கிறது என்றும் அதனால் மதமாற்றம் ஏற்படுகிறது என்றும் மதம் மாறியவர் மீண்டும் இந்துவாக விரும்பினால் எந்த சாதியில் சேருவது என்ற குழப்பம் இருக்கிறது என்றும் கூறுகிறார். இந்துக்களுக்கு மூன்று வழிகள் இருக்கின்றன என்கின்றனர். ‘‘முதலாவது வழி இருந்தது போல இருந்து வருவது, சூழ்நிலையை நோக்க மறுப்பது. எமக்கு முன் இருந்தவர்கள் இந்து சமயத்தை எவ்வாறு பேணி வந்தார்களோ அவ்வாறே அதைப் பேணிவருவது.

இரண்டாவது வழி, பிற சமயங்களோடு ஒப்பிடும்போது இந்து சமயத்திலே குறைகள் காணப்பட்டால், அவையாவற்றையும் களைவது. பிறசமயங்களைப் பின்பற்றிக் குறைகளை நிவர்த்தி செய்வது. மூன்றாவது வழி, இந்து சமயத்தின் தனிச்சிறப்பைப் பேணுவது. குறைகள் என்று இன்று தோன்றுவனவற்றையே சிறப்புகளாக மாற்றுவது. காலப் போக்கிலே இந்து மதத்திலே மாற்றங்கள் ஏற்பட்டு வந்தவற்றை அனுசரித்து அதே முறையில் மாற்றத்தைப் புகுத்துவது. இந்து சமயத்தின் தனித்துவத்தைப் பேணுவது. பிற சமயங்களுக்கு வழிகாட்டியாக விளங்குவது. மூன்றாவது வழியே மிகச் சிறந்ததாகத் தெரியவருகிறது.

நிறைவாக ‘‘இந்து சமயத்தை விளக்குவதற்கு அறிவியல் நெறிக் காலத்துக்கேற்ற தத்துவமுறை வேண்டும்’’ என்று முடிகிறார்.

சைவ (இந்து) சமயத்தில் காணப்படும் குறைகளைக் கண்டறிந்து நோய் நாடி நோய் முதல் நாடி அதற்கான மருந்தினையும் கொடுக்க முயன்றிருக்கின்றார் வேலுப்பிள்ளை.

39

திருவாசகம்

(ஆசிரியர் – ந.ரா. முருகவேள்; வெளியீடு – அண்ணாமலைப் பல்கலைக் கழகம்; பக்கம் – *112*);

ஒரு பல்கலைக் கழகச் சொற்பொழிவு எப்படி அமையவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டு இந்த நூல். இயல்பாகவே முருகவேளின் நூல்கள் செறிவும், ஆழமும், கனமும் கொண்டவை. இவையத்தனையும் இங்கே காணக் கிடக்கின்றன.

இந்நூலில் ஐந்து கட்டுரைகள் உள்ளன. முதற்கட்டுரை 'திருவாசகச் சிறப்பு' ஆகும். முதலில் கவிதை இன்பத்தை விளக்குகிறார். ஜான்ரஸ்கினை மேற்கோள் காட்டி திருவாசகம் இயற்கைக் குரல் நூல் என்கிறார். அடுத்து சிறந்த கவிதை நூல், அருளனுபவப் பெருநூல் என்று நிறுவி திருவாசக மேற்கோள்களைக் காட்டுகிறார். திருவாசகத்தின் சிறப்புத் தன்மைகளாக உருக்கத்தன்மை (15 மேற்கோள்கள்), அயரா அன்பு (8 மேற்கோள்கள்) தாழ்வெனும் தன்மை (19 மேற்கோள்கள்), பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடர் (7 மேற்கோள்கள்), மகளிர் விளையாடல்கள், திருவாசகமும் பழமொழிகளும் (42 மேற்கோள்கள்), திருவாசகத் தேன் (15 மேற்கோள்கள்) ஆகியவற்றைக் கூறுகின்றார். ஒவ்வொரு உட்தலைப்பை யுமே ஒரு கட்டுரையாக – ஏன் ஒரு நூலாகவே ஆக்கலாம்.

''திருவாசகத்தின் இலக்கியத்திறன்'' என்ற இரண்டாவது தலைப்பில் இலக்கிய நலக் கூறுகள், தெய்வீக நலம் இலங்கு நூல், ஓதும்தொறும் உயிர் அனுபவம், சிறந்த கவிதையும் நிறைந்த பொருளும், கவியரசரும் கவிதையரசும், இலக்கியத் திறன், இலக்கியச் சுவைத்திறன் என்ற உட்தலைப்புகளில் திருவாசகத்தை விளக்குகிறார். இலக்கியநலக் கூறுகள் அறிவு நலக்கூறு, உணர்ச்சி நலக் கூறு,கற்பனை நலக்கூறு, கலைநலக் கூறு என நான்கு வகைப்படும் என மேனாட்டுத் திறனாய்வாளர்களின் கருத்தினை முன் வைக்கிறார். தெய்வீக நலம் என்ற ஐந்தாவது கூறினை முருகவேள் புதியதாகத் தமிழ் மரபை ஒட்டிக் கூறுகிறார். இலக்கியத்திறன் தலைப்பில் திருவண்டப் பகுதியில் இடம் பெற்றுள்ள ''அண்டத்து அரும்பெறல் மேகன்'' (வரி 66–95) பகுதியை மிக விரிவாக விளக்குகிறார். இலக்கியச் சுவைத்திறன் என்ற தலைப்பில் ''இன்றெனக்கருளி'' என்ற இருதய சுலோகத்தினையும், ''ஏசினும் யான் உன்னை ஏத்தினும்'' என்ற நீத்தல் விண்ணப்பம் பாடலையும் சொல்லுக்குச் சொல்லாக அற்புதமாக விளக்கி எவ்வாறு இலக்கியச் சுவை நிரம்பியவை என்று காட்டுகிறார்.

''திருவாசகமும் திருவருட்பாவும்'' என்ற மூன்றாவது தலைப்பில் இரண்டு நூல்களிலிருந்தும் பத்து பத்து பாடல்களை எடுத்து ஒப்புமைப்படுத்துகிறார்.

''திருவாசகமும் திருக்கோவையாரும்'' என்ற நான்காவது கட்டுரையில் ஐந்து பாடல்களை ஒப்புமைப்படுத்துகிறார். திருக்கோவையார் பாடல்களுக்கு அகப்பொருள் மட்டுமல்லாது ஞானப் பொருளும் தந்திருப்பது தனிச்சிறப்பு. இவ்வாறு ஞானப் பொருள் யாரும் இதுவரை தந்ததாகத் தெரியவில்லை. (காழித் தாண்டவராயர், தண்டபாணி தேசிகர் தவிர)

''திருவாசகத்தில் சைவ சித்தாந்தம்'' என்ற நிறைவுக் கட்டுரையில் பதின்மூன்று திருவாசகப் பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் நிரம்பியிருப்பதைச் சான்றுகளுடன் விளக்குகிறார்.

இலக்கியச் சுவை, பக்தி அனுபவம், தத்துவப் பார்வை, ஒப்புமை என்று இந்நூலைச் சுவைக் கனியாக ந.ரா. முருகவேள் அவர்கள் வழங்கியிருக்கிறார்.

40

திருவாசகத்தில் அருளியல்

(ஆசிரியர் – டாக்டர் திருமதி. ராதா தியாகராஜன்; வெளியீடு – வானதி பதிப்பகம்; பக்கம் 328; விலை ரூ. 25/-)

மேலைநாட்டு அருளாளர்கள் அனுபவத்தையும், மணிவாசகப் பெருந்தகையின் அனுபவத்தையும் ஒரு சேர இணைத்துப் பார்ப்பது இந்நூல். எல்வின் அண்டர்ஹில் என்னும் அம்மையாரின்'' "Mysticism" எனும் நூலை அடியொற்றி இந்நூல் உருவாக்கப் பட்டுள்ளது.

அண்டர்ஹில் அம்மையார் இறையனுபவம் பெற்ற அருளாளரின் நிலைகளை

ஐந்து படி முறைகளாக வகுத்துக் கூறுகின்றார். அவையாவன: 1) ஆன்மீக விழிப்பு (Awakening of the soul) 2) பற்று அறக் கழிதல் (Purgative way), 3) உள்ளொளி பெறுதல் (Illuminative way), 4) இருளிரவு (Dark Night of the Soul), 5) ஒன்றி நிற்றல் (Unitive Way)

‘‘அருளியலும் இலக்கியமும்’’ என்ற முதற் கட்டுரையில் “Mysticism” என்ற ஆங்கிலச் சொல்லின் விளக்கப்படி மேலை நாட்டுத் தத்துவ ஞானிகளின் அருளியல் அனுபவங்களை ஆசிரியர் விளக்குகிறார். ‘‘வேர்ட்ஸ் வொர்த் (Wordsworth) இயற்கையில் மட்டுமே இறைமையைக் கண்டார். பிளேக் (Blake) குக்கோ இயற்கை ஒரு தடையாகவே இருந்திருக்கின்றது. கற்பனையே அவரது உண்மைக் காட்சிக்கு வாயில். இவ்வாறு மாறுபட்டாலும், அனைத்து அருளியலாரும் அருளியற் காட்சியில் ஒரு குறிப்பிட்ட பண்பை ஒப்புக் கொண்டு, உணர்ச்சி பொங்க வலியுறுத்திக் கூறுகின்றனர். ‘‘வேற்றுமையினூடே ஓர் ஒருமைப்பாடு இழையோடுகிறது என்பதே அப்பண்பு!’’

‘‘ஆன்ம அறிவால் ஒன்றை அறிதல் என்பது அதுவாகவே ஆகிவிடுதல் ஆகும். இதை விடுத்து அதை வாளா நோக்குதலும், அதைப் பற்றிப் பேசுதலும் பயன்படா. இனமேதன் இனத்தை அறியும். ஆகவே, அறிபவன் அறியப்படும் பொருளுடன் ஒத்து நின்றால் தான், அதை அறிய முடியும் என்கிறார் போர்ஃபிரி (Porphyry).

‘‘குருடர்களின் கூட்டத்தில் ஒருவனுக்கு மட்டும் திடுமெனப் பார்வை வாய்ந்ததைப் போன்றது அருளியலாளனின் நிலை. குருடன் தனக்குப் புதிதாக வாய்ந்த கண்ணொளியால் ஞாயிற்றின் எழுச்சியைப் பார்த்துப் பார்த்து, வியப்புடனும் மகிழ்ச்சியுடனும் தன் புதிய அனுபவத்தை நண்பர்களுக்குச் சொல்லத் தட்டுத்தடுமாறி முயல்கிறான். ஆனால் அவர்கள் அதை நம்பவில்லை. அவன் உளறுகின்றான் என்று கூறுகின்றனர்’’.

‘‘நாம் இறையழகைக் காண்பதற்கு வேட்கை கொண்டு அதில் உண்மை அன்பு வைத்து, உலகத்தைச் சிறிது நேரமாவது மறந்து, அந்த அழகைச் சிறிது நேரமாவது கண்டுவிட்டாலும் நம் வாழ்வின் நிறைவை எட்டிவிட்டோம் என்பதில் தடையில்லை. இறுதியில் இந்த இறையழகைக் கண்டு கொள்வதற்கும் படிப்படியாக உதவுபவையே பிற அழகு எல்லாம். முதலில் நம் கண்ணைக் கவர்வது உருவழகு. அதைத் தொடக்கப் படியாகக் கொண்டு, பிற பொருள்களில் உள்ள அழகையெல்லாம் ஒவ்வொன்றாகக் கண்டு, இன்புற்றுப் பின்பு அழகிய நெறிகளில் ஈடுபட்டு, இறுதியாக சார்பிலாப் பேரழகை தானே தனித்து விளங்கும் இறையழகைக் கண்டு அதை அனுபவிப்பது தான் இறை வளர்ச்சி.’’

பிளாட்டினஸ் அனுபவங்கள்

அடுத்து ஆசிரியர் ஐரோப்பிய நாட்டு அருளியலாரான பிளாட்டினஸின் அனுபவங்களை அவரது வரலாற்றை வரைந்த போர்பிரி வார்த்தைகள் மூலம் விளக்குகிறார். ‘‘உயிர்கள் தமக்குக் கிடைத்த சுதந்திரத்தாலும் சூழ்நிலையாலும் முதலில் ஈர்க்கப்பட்டுத் தாம் இறைவனிடமிருந்து தோன்றியதை மறந்திருக்கின்றன. அவை இறைவனிடமிருந்து பெரிதும் விலகியிருக்கின்றன. தாழ்ந்ததான இல்வாழ்வின் சுகங்கள், கவர்ச்சிகளுடன் தம்மைப் பிணைத்துக் கொண்டுவிட்டன. ஆனால், இன்று இவை அவற்றிற்கு நிறைவளிப்பதும் இல்லை. உயிர், தனது வீட்டை அடைய வந்தவழியே மீளவேண்டும்’’ இந்த மேல் நெறியின் முதற்கட்டம் ‘பற்றுவிடல்’ ஆகும்.

‘‘அடுத்த கட்டம் ‘பேருயிர்’ எனப்படும் மாசற்ற எண்ண உலகிற்கு உயர்தல். தன் நினைவுடன் அடையத் தகும் மிக்க உயர்நிலை இதுவே. இதனை ‘ஒளிநெறி’ என்பர். மனம், புத்தி, சித்தம் மூன்றையும் இறைவனிடம் இடையீடின்றிச் செலுத்துதல் என அதனைப் பொதுவாகக் கூறலாம்.

‘‘இறுதியாக உள்ளது ‘ஒன்றும் நெறி’. இது முழுதும் இறை நினைவேயாதல்; இறைவனுடன் இணைய ஆன்மா முனைந்து நிற்றல். இந்நிலையை ஆன்மா எய்தும் பொழுது பரம்பொருள் கதுமெனக் காட்சித் தருகின்றார்.’’

மேலை, கீழைநாட்டு அருளியல் சிந்தனை வேறுபாடுகள்

‘‘கீழை நாட்டு அருளியற் சிந்தனை, உடலை ஒழித்து உயிர்நினைவில் நிலை நிற்றலை வலியுறுத்துவது; உடலைப் பொய்யென ஒதுக்கி, உண்முகப் பார்வையால் ஒளிபெற வேண்டும் எனக் கூறுவது. இதற்கு மாறாகக் கிறிஸ்துவம், கடவுள் சதையும் குருதியுமான உடலோடு பிறந்தார். மானுட வடிவில் வந்து உலகிடை உலவினார் என்னும் கோட்பாட்டை மையமாகக் கொண்டது. ஆகவே மனித உடலும், அன்பும் தூயவையாகக் கருதப் பெற்றன. தெய்வ நிலை வெளிப் படுவதற்குரிய வாயில் எனக் கொள்ளப் பெற்றன.’’

‘‘எதையெல்லாம் கீழைநாட்டுச் சிந்தனையாளன் தடை, திரை எனக் கருதினானோ அதையெல்லாம் மேலைநாட்டுச் சிந்தனையாளன் ஆன்மீக உயர்வுக்குரிய ஏணிப்படியெனக் கொண்டான். இறைவனோடு ஒன்றி உணர்தலைக் குறிக்கோளாகக் கொண்டான் முன்னவன். பின்னவனோ முடிவிலாப் பரம்பொருளை உலகப் பொருள்களில் எல்லாம் காண்பவனே இறைவனைக் காண்பதாக நம்புகின்றான்’’.

இதனைத் தொடர்ந்து மேலைநாட்டு அருளியல் சிந்தனை – சிந்தனையாளர்கள் – வளர்ச்சியினை வரலாற்று ரீதியாக விளக்குகிறார்.

அருளியலும் குறியீடுகளும்:

‘‘அருளியல் அனுபவம் புலன்களுடன் தொடர்புடையது அன்று. ஆதலின், புலன் உணர்வை வெளியிடப் பயன்படுத்துவதாகிய மொழி இவ்வனுபவத்தை வெளியிடப் பயன்படாது ஒழிகின்றது. ஆனால், அருளியலாளர் கவிஞராக இருப்பின், தம் அனுபவத்தை எங்ஙனமேனும் வெளியிடவே விரும்புவர். அதற்குக் குறியீடுகள் (Symbols) அவர்களுக்குக் கை கொடுக்கின்றன என்று விளக்கி எடுத்துக் காட்டுகளாக தாகூரின் கீதாஞ்சலியிலிருந்து சில பாடல்களை ஆசிரியர் முன் வைக்கிறார்.

அடுத்து ‘‘தமிழிலக்கியத்தில் அருளியல்’’ என்ற பகுதியில் தேவார மூவர் தொடங்கி வள்ளலார் வரை தெளிவுபட விளக்குகிறார். ‘‘பக்தி நெறியில் மணி வாசகரது வாழ்க்கையில் முருகி வளர்ந்து, நம்மாழ்வாரின் வாழ்வில் தழைத்தோங்கிய அருளியற் கவிதை, இவர்கள் காலத்திற்குப் பின் யோகம், தத்துவ ஆய்வு முதலிய நெறிகளின் வளர்ச்சியால் தடைப்பட்டுப் பின்னர் அருணகிரியாரும், தாயுமானாரும் பக்தி நெறியுடன் இணைந்து வளர்த்தமையால் மீண்டும் தலையெடுத்து, வள்ளலாரின் வாக்கில் முழு நிறைவு பெற்றது.

ஆன்மிக விழிப்பு

மூன்றாவது பிரிவில் மாணிக்கவாசகர் வரலாறு பற்றியும், நான்காம் பிரிவில் அவர் அகப்போராட்டம் பற்றியும், ஐந்தாம் பிரிவில் பெருந்துறைக் காட்சி பற்றியும் ஆசிரியர் விளக்குகிறார். பெருந்துறைக் காட்சி அண்டர்உறில் அம்மையார் முன் வைத்த ஐந்து கருது கோள்களுள் ஒன்றான ‘‘ஆன்மிக விழிப்பில்’’ அடங்கும்.

பற்றுவிடல்

அண்டர்ஹில் அம்மையார் அருளியல் அனுபவத்தில் இரண்டாவது கருதுகோளாக ‘‘பற்றுவிடல்’’ பற்றிக் கூறுகிறார். ‘‘அருளியல் முறையில் இறைக்காட்சி வாய்க்கப்பெற்று, அது காலைக் கிடைத்த மெய்யுணர்வு அனுபவத்தை நுகர்ந்தோர், அது மறைந்தவுடன் அதன் விளைவாக மேற்கொள்ளும் முயற்சியே பற்றுவிடல் ஆகும்.

பற்றுவிடலை மேற்கொள்ளுகையில் அருளியலார் அளவு கடந்த துயரமும், வேதனையும் அடைகின்றனர். இவை இரண்டு காரணங்களால் விளைவன.

1) அளவில்லா இன்பம் தந்த அருட்காட்சி மறைந்தமையால் வரும் துயரம்.

2) அருட்காட்சியிற் கண்ட உண்மைப் பொருளின் நுண்ணிய பேரொளிக்கும் இருள்படிந்த மனத்தின் – அறிவின் – வளைவுகளுக்கும் (Clouded Contours) உள்ள வேறுபாடும், ‘நான்’ என்னும் உணர்வைச் சுற்றியே அமைந்து, நிலை அற்றதாய், குழப்பம் மிக்கதாய் உள்ள தமது

பொய்யான வாழ்விற்கும், தாம் சற்று நேரம் ஆழ்ந்து போயிருந்த இறைக்காட்சியில் அனுபவித்த தெளிவான, உயர்ந்த நிலைக்குச் செல்லக்கூடிய, ஆன்மிக மறுமலர்ச்சிக்கும் (Becoming) உள்ள வேறுபாடும் அவர்களுக்குப் புலப்படு கின்றன.''

பற்றுவிடல் முயற்சியில் ஈடுபடும் அருளியலாளரின் உணர்வில் இரண்டு கூறுபாடுகள் உள்ளன என்று உணரலாம்.

முதற் கூறுபாடு

1) மேற்கூறிய இரண்டு காரணங்களால்– ஒன்று இயல்பாக – மற்றொன்று தாமே வருவித்துக் கொள்வதால் – வரும் துயரமும் வேதனையும் வருத்தமும்.

இரண்டாம் கூறுபாடு

2) இறைவன் மீது பெருகி வரும் அன்பும் அவனைக் காண முருகி எழும் வேட்கையும் (Fervour), ஏக்கம் கலந்த துயரும் (Anguish).

இவ்விரண்டில் முதற்கூறுபாடு மணிவாசகர் அனுபவித்த துயரமும் வேதனையும் வருத்தமும் ஆகும்.

முதற்கூறுபாட்டின் முதற்பிரிவு - துயரம்

துயரம், அளவில்லாத இன்பம் தந்த அருளியற்காட்சி மறைந்தமையால் மணிவாசகர் உற்றதாகும். மணிவாசகரின் துயரை வெளிப்படுத்துவது திருச்சதகம் ஆகும். திருச்சதகப் பாடல்களை விரிவாக விளக்கி மணிவாசகர் அடைந்த துயரை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

முதற்கூறுபாட்டின் இரண்டாம் பிரிவு - வேதனை

மனத்தின் நிலைகளை அறிந்து, அந்த நிலைகளில் கிடக்கும் காரணத்தால், அஃது இறைக்காட்சிக்குத் தகுதியற்ற தன்மையுடையதாகவே தொடர்ந்து – பெருந்துறைக்காட்சிக்கு முன்னும் பின்னும் – இருந்து வரும் உண்மையை மாணிக்கவாசகர் உணர்ந்து வேதனைப்படுகிறார்.

முதற்கூறுபாட்டின் மூன்றாம் பிரிவு - வருத்தம்

இது பற்று நீக்கும் முயற்சி தொடங்கிய பின் நிகழ்வது; அம்முயற்சியின் பகுதியாக நிகழ்வது; மனத்தோடும் உடலோடும் தொடுக்கும் போராட்டத்தில் விளைவது தாங்கொணாத வருத்தமே.

இரண்டாம் கூறுபாடு - அன்பு

பற்று நிறைந்த வாழ்வால் மறைக்கப் பட்டாலும், இறைவனை நினைத்து ஓரொருகால் தம் மனத்தில் தோன்றும் அன்பு பெருகினால்தான் மற்ற அடியார்கள் அவனை அடைந்தது போல தாமும் அவனை அடைய முடியும் என்று மணிவாசகர் கருதினார். இப்பெருகிய அன்பைப் பெறுவதற்கு அவர் மேற்கொண்ட செயல்கள் மூன்று. அவையாவன:

1) இறைவனை வழிபட்டமை 2) இறைவனின் அடியார்களின் கூட்டத்தில் அடிக்கடி சேர்ந்திருந்தமை 3) பெருகிய அன்பைத் தன் மனத்தில் உண்டாக்குமாறு இறைவனை மனமார வேண்டிக் கொண்டமை.

பற்றுகள் நீங்குதல்

பற்றுகள் நீங்குதல் என்பதை அண்டர்ஹில் இரண்டு கூறுபாடுகள் உடையது என்று கூறுகிறார். அவை 1) தொடர்பு அறுத்தல் 2) புலனடக்கம் என்பவை.

தொடர்பு அறுத்தலுக்கான திருவாசகச் சான்றுகளை முன் வைக்கிறார்.

புலனடக்கத்தில் ஈடுபடும் அருளியலாரிடம் காணப்படுகின்ற பற்றறுதிக் கூறுபாடுகள் பின் வருமாறு: 1) தற்சாவு (Dying unto self) 2) தீமையுடன் போராடி நன்னெறியில், – நன்மையை – அறத்தைக் கடைப்பிடிக்கின்றோம் என்னும் உணர்வும் அழிதல்.

தற்சாவு : நான் என்னும் உணர்வு சாதல். மணிவாசகர் இவ்வுடலை விட்டு, இறைவன் திருவடியை அடைவதற்குக்கூட அவனை வேண்டிக் கொள்ளக் கருதாத நிலையை – தற்சாவு நிலையை – மிக்க தன்னடக்க நிலையை அடைகிறார்.

"வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ."

2) இந்தத் தற்சாவு உணர்வு, செயலாக மாறுவதே அடுத்த கூறுபாடு ஆகும். அங்ஙனம் செயலாக மலர்வதற்குப் பெயர் 'இறைவன் பணிவழி நிற்றல்' (to act in tune with the divine will) ஆகும். அறத்தை வேண்டுதலும் தீமையை வேண்டாமையும் இல்லாத – விருப்பு வெறுப்பு இல்லாத – மனநிலை ஆகும் இது. மணிவாசகர் அறச் செயல்களைச் செய்தார். ஆனால் தாம் செய்வதாக உணராமல் இறைவன் தம்மைக் கொண்டு அவற்றைச் செய்வதாக உணர்ந்தார். தாம் தீமையும் செய்யலாம்; ஆனால் அது தம் செயல் அன்று. இறைவனே அதைச் செய்விக்கிறான் என்று உணர்ந்தார்.

"நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே".

ஒளிநெறி

அண்டர்ஹில் அம்மையாரின் கருத்துப்படி இறையனுபவத்தின் மூன்றாம் நிலை உள்ளொளி பெறுதல் ஆகும்.

அருளியலாளர் இறைப் பொருளை ஒளி வடிவாய்க் காணுதலானும், அக்காட்சிப் பயனாய் அவர் அறியாமையை விலக்கும் அறிவு ஒளி தோன்றுதலானும், அவ்வொளியை மீண்டும் மீண்டும் பெறும் வழியைக் கண்டு, அதில் அவர்கள் ஒழுகுதலானும் அஃது ஒளிநெறி எனப்படுகிறது என்று கருதலாம்.

இயல்பான மன உணர்வுடன் நோக்கிய பொழுது துன்பக் காடாக மணிவாசகருக்குக் காட்சியளித்த உலகம், உயர் உணர்வுடன் – நடப்பு உணர்வுடன் – நோக்கியபோது, முழுவதும் மாறி, இறைவன் மையமாக நின்று இயக்க, தம் போன்ற அடியவர்கள் அவனை உணர்ந்து முக்தியடைவதற்கு உதவும் இடமாகப் பெருவாழ்க்கை நடக்கும் ஓர் இடமாகக் காட்சி தந்தது.

ஒளிநெறி அனுபவத்தில் தான் அனுபவிக்கிறோம் என்ற உணர்வு இருக்கும்.

ஒளிநெறி அனுபவத்தை அண்டர்ஹில் மூவகைப்படுத்துகின்றார்.

1) பரம்பொருட்காட்சி.

2) உலகைத் தெளிவுறக் காணல். (இயற்கையின் சிறப்பையும், மெய்ம்மையும் காணல்.)

3) உயிரின் ஆற்றல் பெருகுதல்.

மணிவாசகருக்குப் பரம்பொருள் காட்சி படிநிலை வளர்ச்சியாகக் கிடைக்கிறது. முதலில் சோதிக் காட்சி; இரண்டாவதாக திருவடிக் காட்சியும், உருவகக் காட்சியும் பெற்றமை; மூன்றாவதாக சக்தியோடு வந்து ஆட்கொண்டமை.

அடுத்தது கடப்பு நிலைக் காட்சி. மணிவாசகர் இறைவனை ஒருகால் கலப்பு நிலைக் காட்சியாகவும் (Immanent aspect), ஒருகால் கடப்பு நிலைக் காட்சியாகவும் (Transcendent aspect) கண்டார். உருவம் இல்லாமை கடப்பு நிலையைக் காட்டுவது ஆகும். அளவற்றுப் பரந்து, அளவற்றுப் பெரிய பொருளாய் இருப்பதே உருவமற்ற நிலை. இவ்வெல்லையில்லாமையை மணிவாசகர் கடப்பு நிலைக் காட்சியாகக் கண்டார். இதனையே வள்ளலார் முதலில் தோன்றும் கடப்பு உணர்வைப் 'பரவெளி' என்றும், அதைவிட நுண்ணிய உணர்வு நிலைகளை முறையே பரம்பரவெளி பராபரவெளி என்றும் குறிப்பிடுகிறார்.

அடுத்து இறைக்காட்சி பெற்ற பின்னர் மணிவாசகர் அடைந்த இன்பத்தையும் அவரது அன்பின் ஆழத்தையும் ஆசிரியர் விளக்குகிறார்.

இக்கட்டுரையின் நிறைவாக ஒளிநெறி அனுபவத்தின் மற்றொரு கூறுபாடான நாதங்கள் கேட்டலைப் பற்றி ஆசிரியர் விளக்குகிறார்.

இருளிரவு

அண்டர்ஹில்லின் கோட்பாடுபடி அருளியலார் அனுபவத்தின் நான்காவது நிலை இருளிரவு ஆகும்.

ஒளிநெறி, ஒன்றும் நெறி ஆகிய அனுபவ நிலைகட்கு இடையே ஒளிநெறிக்கு மறுதலையாய்த் துயரம் நிறைந்ததாய் வந்து வாய்ப்பது இருளிரவு ஆகும்.

"The renewed and ecstatic awareness of the Absolute which resulted (from the purgative way) and which was the governing characteristic of illumination, brought its own negation the awareness that is to say of the self's continued separation from the incompatibility with that Absolute which it has perceived... The state of illumination begins to break up, the complementary negative consciousness appears and shows itself as an overwhelming sense of darkness and deprivation. This sense is so deep and strong that it inhibits all consciousness of the Transcendent; and plunges the self into the state of negation and misery which is called the "Dark Night" - Elwyn Underhill.

மணிவாசகர்க்குத் திருப்பெருந்துறையிலே இருளிரவு அனுபவம் தோன்றி நிலை பெற்றது. அவர் திருவாரூர் சென்று பின் தில்லையை அடைந்து, சிறிது காலம் வாழும் அளவும் அது அவர்பால் நின்றது என அறியலாம்.

அ. திருப்பெருந்துறையில் பாடியன

1) செத்திலாப் பத்து 2) வாழாப் பத்து 3) அருட்பத்து 4) குழைத்தப் பத்து 5) பிரார்த்தனைப் பத்து.

ஆ. திருவாரூரில் பாடியது

1) திருப்புலம்பல்.

இ. தில்லையில் பாடியன

1) எண்ணப் பதிகம் 2) ஆனந்த மாலை 3) கோயில் மூத்த திருப்பதிகம்.

ஒன்றும் நெறி

அருளியலின் ஐந்தாவது படிநிலை ‘ஒன்றும் நெறி’ ஆகும்.

‘ஒன்றும் நெறி’யில் மனித ஆளுமையில் ஆழ்ந்து மறைந்து கிடந்த வளமான பகுதிகள் இப்போது தலையெடுக்கின்றன. ஆன்மா புதியதாக மாறுகிறது. தனது பெருமுயற்சியின் வெற்றியாக அது தன்னை ஒன்றுபடுத்திக் கொண்டுவிட்டது. அதைப் பற்றியிருந்த அழுத்தங்கள் நீங்கி விட்டதால், அதன் ஆற்றல் வெளிப்பட்டுப் புதிய நோக்கங்களை அடையப் பயன்படுகிறது.

அருளியலார் தரும் சான்றுகளை ஆய்ந்தால்; அவர் இருவகையான குறியீடுகளைக் கொண்டு, தம் ‘ஒன்றும் நெறி’ அனுபவத்தை விளக்குவது புலனாகும். ஒரு குறியீடு, தத்துவநெறி சார்ந்த கடப்பு நிலை அனுபவம் பெற்ற அருளியலார் பயன்படுத்துவது. மற்றொன்று, நேர்முகமான – நெருக்கமான அனுபவம் பெற்ற அருளியலாளர் கூறுவது;

1) பரம்பொருள் வடிவம் அற்றது; கடந்து நிற்பது என்று கொள்ளும் தத்துவ நெறி அருளியலாளன், அப்பரம் பொருளைத் தான் அடையும் அனுபவத்தை, ‘தெய்வ நிலை எய்துதல்’ அல்லது ஆன்மா ‘வேதிக்கப்பட்டு இறையாதல்’ என்று வருணிப்பான்.

2) பரம்பொருளை நெருக்கமான ஒன்றாகக் கண்டு அதனுடன் கலந்து நிற்றலால் அதனை உணரும் அருளியலாளன். அந்தக் கலப்பின் நிறைவை – அதன் முழுமையான, நிலைத்த வடிவை – ‘இறைவன் தன்னை மணம் புணர்ந்தான்’ என்று வருணிப்பான்.

அண்டர்ஹில் குறிப்பிடும் இரு குறியீடுகளையும் மணிவாசகர் கையாளுகிறார்.

தெய்வநிலை எய்துதல் என்ற முதல் நிலையில் – செய்தலோ, செய்யாது விடுதலோ – எதுவும் தம் செயலாகக் கொள்ளாமல் ‘எல்லாம் இறைவன் செயலே’ என்று தற்சுதந்திரம் அற்று இருத்தல் நிலை தோன்றும். இந்நிலையில் யாதுமற்ற உயிரின் வெறுமையிலுள்ள கடப்பு நிலைப் பரம்பொருள் மெல்ல, மெல்லக் கலந்தது. இதனை மணிவாசகர் வாழ்வில் காணலாம்.

‘‘பூவார் அடிச்சுவடு என்தலைமேற்
பொறித்தலுமே
தேவானவா பாடித் தெள்ளேணம்
கொட்டாமோ’’ என்கிறார்.

மணிவாசகர் பாடல்களில் வரும் ‘எண் குணம் பெறுதல்’, ‘தேவு ஆனமை’, ‘சிவம்

ஆனமை' என்பவை தெய்வநிலைக் குறியீடுகள் என்பதில் ஐயமில்லை.

இக்குறியீட்டை நன்கு பயன்படுத்தும் ரூஸ்புருக் என்னும் அருளியலாளர் ''எனினும் படைக்கப்பட்ட ஜீவன் இறைவனாகி விட்டது என்பதில்லை. ஏனென்றால், இறைவனது அருளாலும், ஆதாரமாகிய அவனிடம் நாம் கொள்ளும் பர அன்பினாலும் தான் அவனுடன் நாம் கலக்கும் அனுபவம் வாய்க்கின்றது. எனவே, அவனும் சீவனும் ஒருவர் அல்லர். தற்போதம் இழந்து, இறைவனுடன் கலந்து நின்றாலும், ஜீவனது உள்ளுணர்வில், எங்கோ ஓர் இடத்தில், 'நாம் வேறு' என்னும் ஒரு நுண்ணிய நினைவு இருக்கத் தான் செய்யும்'' என்கிறார்.

''அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன் யாது நீ பெற்றது ஒன்று என்பால்'' என்று மணிவாசகர் பாடும் பொழுது தாமே ஆனந்தம் பெற்றார்; இறைவன், தம்மிடம் பெறுவதற்கு ஒன்றும் இல்லை என்று கூறுகின்றார். 'தாமே இறைவன் ஆனார்' என்பது உண்மையில் அவரது கருத்தாயின், இப்பாடலில், 'ஒருவர் ஆனந்தம் பெற்றார்; ஒருவர் பெறவில்லை' என்று கூறுவது பொருந்தாமற்போகும். ஆகவே இறையும் உயிரும் வேறு வேறு என்பதே அவரது அனுபவத்தால் பெறப்படுகிறது. இங்கே ரூஸ்புருக் கூற்றும் மணிவாசகர் கூற்றும் ஒத்துப் போகிறது.

இதன் பின்னர் இறைக் கலப்பில் மணிவாசகர் மனம் உற்ற இன்பத்தைப் பல பாடல்களைக் கொண்டு ஆசிரியர் விளக்குகிறார்.

இறைவன் மணம் புணர்தல் என்ற இரண்டாவது குறியீட்டினை மணிவாசகர் பாடல்களில் பொருத்திக் காட்டுகிறார்.

மணிவாசகர் தம் ஒன்று நெறி அனுபவத்தை இறைக்காதல் மொழியில் வெளிப்படுத்தித் 'திருக்கோவையார்' பாடினார். மணிவாசகர், காதல் மொழியையே அமைத்துக் கூறும் மற்றொரு முறை, தம்மையே இறைவனின் காதலியாகக் கொள்வதற்கு மாறாக, மற்றொரு பெண்ணின் மீது தம் அனுபவத்தை ஏற்றிக் கூறுதல் ஆகும். திருவெம்பாவை என்னும் தொகுதியில் ஒரு பெண்ணின் இறைக் காதலை, அவருடைய தோழியர் எடுத்துக் கூறி உரையாடுவது போலப் பாடல் அமைக்கிறார். இறைக்காதல் மொழியில் மணிவாசகர் குயிற்பத்து, திருப்பூவல்லி, திருக்கோத்தும்பி, திருப்பொன்னூசல் முதலிய பகுதிகளைப் பாடி அருளினார். திருப்பொற்சுண்ணமும் அவ்வாறே அமைந்துள்ளது.

ஒன்று நெறியில் மற்றொரு பகுதி 'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்' என்ற பாடலில் கூறப்படும் நிலையாகும். மணிவாசகர்க்கு ஒன்று நெறியில் புத்தாற்றல் வாய்த்தமையை திருப்படையாட்சி என்னும் பதிகத்தில் 'எண்ணிலியாகிய சித்திகள் வந்தெனை எய்துவது' என்று அவர் கூறுவதால் அறியலாம். சித்திகள் என இங்குக் குறிப்பிட்ட ஆற்றல்களைக் கொண்டு அவர் செயல் வாழ்வில் ஈடுபட்டிருந்தார் என்பது 'சிவம் வந்து நம்மை உருக்கும், பணி கொள்ளும்' என்னும் திருத்தெள்ளேணம் அடியால் காணப்படும். அவர் செயலாற்றிய துறை யாதாக இருக்கலாம் என்று அவர் பாடல்களைக் கொண்டு யூகிக்கலாம்.

அவை மூன்று வகைப்படும் :

1) அடியார்கள் வழியைப் பின்பற்றிச் செயலாற்றுதல்.

2) சைவ சமயத்தை உலக மக்களிடையே பரப்புதல்.

3) பௌத்த சமயத்தாருடன் வாதிடுதல்.

குறியீட்டு ஆட்சி

மணிவாசகர் கையாளும் குறியீடுகளை 'வாழ்வியல் உணர்ச்சி மொழி' என்கிறார் ராதா தியாகராஜன்.

முதலாவதாக, மணிவாசகர் தம் அருளியல் காட்சியில் கண்ட இறைவனை, கவிதையில் சுட்டுவதற்கு மட்டும் 'குரு' என்னும் குறியீட்டைப் பயன்படுத்துகிறார்.

அடுத்து இறைப் பொருளுடன் முன்பு அவர் கொண்ட 'குரு – மாணவர்' உறவு, 'பெற்றோர் – பிள்ளை' உறவாக மலர்ந்தது.

மூன்றாவதாக சுட்டப்படும் குறியீடு ''திருப்பொற் கண்ணத்தில்'' பேசப்படும் சிவசக்திகள் ஆகும்.

இவ்வாறாக எல்வின் அண்டர்ஹில்வின் ''Mysticism'' என்ற நூலை அடியொற்றி மணிவாசகரின் அருளியல் அனுபவத்தை நூலாசிரியர் மிக விரிவாக இந்நூலில் விளக்கியுள்ளது ஒரு புதிய பாதையாகும்.

41

சைவ சமயக் கையேடு (1986)

(தொகுப்பாசிரியர் – ஆ.இராசரத்தின முதலியார்; வெளியீடு – சைவ சித்தாந்தப் பெருமன்றம்; பக்கம் – 174; விலை ரூ.15/-)

திருமுறைகள், சாத்திரங்கள் பற்றிய செய்திகள், வரலாறு, சிவத்தலங்களின் அட்டவணை, சிறப்புத் தலங்கள் பற்றிய குறிப்புகள் (உ – ம் பஞ்சபூதத் தலங்கள்) அடியார்கள் என முதல் இரண்டு பகுதிகள் அமைந்துள்ளன. பொதுப் பகுதியில் திருக்கோவில் அமைப்பு தத்துவம், தேங்காய் உடைப்பதன் தத்துவம் என 32 பல்வேறு பட்ட செய்திகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு சைவனிடமும் இருக்க வேண்டிய Ready Reckoner ஆகும் இந்நூல்.

42

பெரிய புராணம் ஓர் ஆய்வு (1987)

(ஆசிரியர் – அ.ச.ஞானசம்பந்தன்; வெளியீடு – தமிழ்ப் பல்கலைக் கழகம்; பக்கம் – 784; விலை ரூ. 103/-)

இப்பேராய்வுப் பெருநூலில் காலகாலமாக எழுப்பப்பட்டு வந்த கேள்விகளுக்குப் பதில்கள் தருகின்றார் மூதறிஞர் அ.ச.ஞா. பல புதிய ஊற்றுக் கண்களைத் திறக்கிறார். பலருக்கு வியப்பும், சிலருக்குத் தடுமாற்றமும் தருவன. இங்கே விரிவாக விளக்காமல் ஐயங்களும், விடைகளும் தரப்படுகின்றன. அவையே பேசும்.

சங்ககாலத் தடை

''தொல்காப்பியர் கூறும் இந்திரன், வருணன் இலக்கியத்தில் இடம்பெறவில்லை: வேதத்தில் இடம் பெறாத மாயோனுக்கும், சேயோனுக்கும் தொல்காப்பியத்தில் இடம்; சிவபெருமானைப் பற்றி தொல்காப்பியர் கூறவே இல்லை'' இவையெல்லாம் சங்ககாலத் தடைகள் ஆகும்.

இந்திரன், வருணனுக்கு தமிழ் இலக்கியத்தில் இடம் இல்லை

வேதத்தில் காணப்பெறும் இந்திரன் புராண இதிகாச காலங்களில் தாழ்ந்து விட்டதுபோல, வேதத்தில் காணப்பெறும் வருணன் பின்னர் சிறு தெய்வங்களுள் ஒருவனாகிவிட்டான். எனவேதான் சங்கப் பாடல்களில் வருணன் பற்றி ஒரு குறிப்பும் இல்லை. ஆனால் தொல்காப்பியர் வருணன், இந்திரன் பற்றிக் குறிக்கின்றார். தொல்காப்பியர் தம் காலத்தில் வேத வழக்கொடுபட்ட தெய்வங்கட்கும் இங்கு இடம் உண்டு என்ற கருத்தைக் காட்ட வேண்டி குறித்திருக்கலாம்.

மாயோன், சேயோனுக்குத் தொல்காப்பியத்தில் இடம்

மாயோனும், சேயோனும் வேதத்தில் காணப்படாத தெய்வங்கள். ஆனால் தமிழகத்தில் வேரூன்றி இருந்த சமயக் கருத்துக்களின் மையமாக உள்ளவர் இவ்விருவரும். எனவே தமிழ் இலக்கியங்களில் இவர்கள் பற்றி பரவலாகப் பேசப் படுகின்றன.

தொல்காப்பியர் சிவபெருமானைப் பற்றிக் கூறாதது ஏன்?

சிவபெருமான் வேதத்தில் போற்றப் படும் நிலையில் இல்லை: தொல்காப்பியரும் குறிக்கவில்லை. இது சிக்கலான கேள்வி. நால்வகை நிலத்துக்குக் கூறப் பெற்றவர் அவ்வந் நிலத் தெய்வங்களாவர். ஆனால் சிவபெருமான் முழுமுதற் கடவுள் என்று கருதப்பட்டதால் அவர் பற்றித் தொல்காப்பியர் கூறாதிருக்கலாம் என்றும் கொள்ளலாம்.

அ.ச.ஞா.வின் பெரும் தொண்டு

''வேதத்தில் ருத்ரன்'' என்ற பகுதி பலரது புருவத்தை நெரிய வைக்கலாம். இதுவரை தமிழில் யாரும் வெளியிடாத செய்திகளை மூதறிஞர் அ.ச.ஞா. முன் வைக்கிறார். இதற்காகவே நண்பர் ஒருவர் உதவியுடன் வேதங்களைப் படித்துப் பொருள் தெரிந்து கொண்டார். பேராசிரியர் இந்த முயற்சி எடுத்திருக்கவில்லையெனில் வேதம் பற்றிய பல செய்திகளைத் தமிழுலகம் தெரிந்து கொள்ளாமலே போயிருந்திருக்கும்.

வேதத்தில் இழிவாகப் பேசப்படும் ருத்ரன்

ரிக் வேதம் ருத்ரனைப் பற்றி தாழ்வாகவே பேசுகிறது. வாஜஸநேய ஸம்ஹிதை ருத்ரனைக் கொள்ளைக்காரன், ஏமாற்றுபவன், திருடர்தலைவன் என்றெல்லாம் பேசுகிறது. ருத்ரன் யாகங்களில் ஒதுக்கப்படுகிறான். சிவன் தென்னாட்டுக் கடவுள் ஆவான். எனவே தம் பகைவர்களுடைய சிவனை வெறுத்து ஒதுக்க முயன்றது நியாயமே என்கிறார் பேராசிரியர்.

வேதகுருமார்கள் ருத்ரனை ஏற்க வேண்டிய கட்டாயம்

ருத்ரனின் தோற்றம், பண்பு என்பவை வேதக்காரர்களால் ஏற்க முடியாதவையாக இருந்தன. என்றாலும் அவர்களைச் சுற்றி இருந்தவர்களிடம் அவன் செல்வாக்கு மிக்கிருந்தமையில் அவனுக்கு இடம் கொடுக்காமல் இருக்க முடியவில்லை. வேறு வழியின்றி வேண்டா வெறுப்புடனும், சந்தேகத்துடனும் தம்முள் நுழையவிட்ட ருத்ரன், பிற்கால இந்து சமயத்தில் மிக வலுப் பெற்றுவிட்டான். தொல் பழங்காலத்தில் இந்தியா முழுதும் பரவியிருந்த – மொகஞ்சதாரோ காலத்தில் இருந்த – தெய்வமே – ருத்ர – சிவனாக ஏற்க வேண்டியதாகிவிட்டது. இன்றுள்ள இந்து மதத்தில் ஆரியவேத சமயத்தின் செல்வாக்கைவிட அத்தொல் பழங்கால சமயத்தின் செல்வாக்கே பல மடங்காக உள்ளது என்று முடிவு கட்டுகிறார்.

சங்க இலக்கியம் லிங்க புராணக் கதைகளை ஒதுக்கியது ஏன்?

''சங்கத் தமிழர் கண்ட சிவன்'' என்ற நான்காவது பகுதியில் சங்க இலக்கியங்கள் சிவபெருமானைப் பற்றி கூறும் செய்திகள் தரப்பட்டுள்ளன. ''காப்பிய காலம் வரை சிவன்'' என்ற ஐந்தாவது பகுதியில் ''வேதகால ருத்ர சிவனைச் சங்கப் பாடல்கள் குறிக்கவில்லை. புராண காலச் சிவனே இங்கே இடம் பெறுகிறான். லிங்க புராணக் கதைகளைச் சங்கப் பாடல்கள் ஒதுக்கியுள்ளன. இதற்குக் காரணம் என்ன? என்று வினவுகிறார் பேராசிரியர். ''சிவபிரான் பற்றிப் பேசும்பொழுது ஒரு மரியாதை கலந்த அச்சத்துடன் பார்ப்பது போலத் தெரிகிறது. சிவபிரான் மூல பரம்பொருள் என்பதனையும், முத்தொழில் புரிபவன் என்பதையும் சங்ககாலத் தமிழர் அறிந்திருந்தனர். இந்த அறிவே அவர்கள் ஏனைய தெய்வங்களைப் போலச் சிவபிரானைப் பற்றிய (லிங்கபுராணம், சிவபுராணம் போன்றவற்றில் வரும்) கதைகளைப் பாடாமல் தடுத்துவிட்டது.

''சிவன்'' – சங்க இலக்கியத்தில் இல்லை

''சிவன் என்ற தமிழ்ப் பெயரைச் சங்கப் பாடல்கள் கூறாதது ஏன்?'' என்று அடுத்த வினா எழுப்புகிறார். ''எல்லாக் கொடுமைகட்கும் உறைவிடமானவன்; விலங்குகளுக்குத் துன்பஞ் செய்பவன்; வேள்வியில் தரையில் உதிரும் பலிக்குரியவன் என்றெல்லாம் ரிக்வேதம் ருத்ரனைப் பற்றி இழிவாகக் கூறிவிட்டு அடுத்து அத்துடன் சிவனைச் சேர்த்து ருத்ரசிவன் என்று கூறிவிட்டமையால் அந்தச் சிவன் என்ற சொல்லே இத்தமிழர்கட்கு வேண்டாத சொல்லாகப் போய்விட்டது. எனவே சிவன் என்பது தங்கள் சொல்லாயினும் அது வடக்கே சென்று வேறு வேடத்துடன் திரும்பி வந்தவுடன் அச்சொல்லைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் விட்டுவிட்டனர்'' என்கிறார் பேராசிரியர்.

''தேவார காலத்துக்கு முந்தைய சிவன்'' என்ற ஆறாவது பகுதியில் இளங்கோவடிகள் கூறும் மதுராபுரித் தெய்வம் மதுரை

யம்பதியில் குடிகொண்டிருக்கும் மீனாட்சியம்மையாக இருக்கலாம் என்கிறார்.

சோழ நாட்டில் மட்டும் சிவன் கோயில்கள் அதிகம் ஏன்?

''மூவர் காலப் பின்னணி'' என்ற ஏழாவது பகுதியில் ''சோழ நாட்டில் பல சிவன் கோயில்கள் இருப்பவும், பாண்டிய, பல்லவ நாடுகளில் ஏன் குறைந்துள்ளன?'' என்ற வினாவினை எழுப்புகிறார் பேராசிரியர். ''பாண்டியநாடு, கொங்குநாடு என்ற இரண்டும் களப்பிரர் நேரடித் தாக்குதலுக்கு இலக்கானவை. ஆனைமாமலை போன்ற இடங்களில் ஆயிரக்கணக்கான சமணர் தங்கி வாழ்ந்ததாலும், நெடுமாறன் போன்ற பேரரசனே இவர்கள் பக்கம் இருந்ததாலும் சிவன் கோயில்கள் அருகி விட்டன. அடுத்துத் தொண்டை நாட்டிலும் அவர்கள் செல்வாக்கு மிக்கிருந்தமையின் அங்கும் சிவன் கோயில்கள் அருகி விட்டன. இவற்றின் எதிராக சோழ நாட்டில் சமணர்களின் ஆதிக்கம் அதிகம் இல்லை. மேலும் பல்லவர், பாண்டியன் காலத்தில் சோழ நாட்டில் பெருமன்னர் என்பார் யாரும் இல்லை. ஆதலால் அரசனைத் தம்வயப்படுத்தி மக்களை ஈர்க்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது போலும். எனவேதான் அங்கு இத்தனை அதிகமான சிவன் கோயில்கள் இருந்தன என்று கருத இடம் உண்டாகிறது'' என்கிறார்.

ஞானசம்பந்தர் தேவாரப் பதிகத்தில் 8-வது, 9-வது, 10-வது, 11-வது பாடல்

''ஞானசம்பந்தர் ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடலில் இராவணன் சிவ பக்தன் என்பதையும், ஒன்பதாம் பாடலில் நாரணன், நான்முகன் காணாதவன் சிவபெருமான் என்பதனையும், பத்தாம் பாடலில் புத்தர், சமணர் என்ற சமயவாதிகளைத் தாக்குவது என்பதனையும் கொள்கையாகக் கொண்டு பதினொன்றாம் பாடலில் பதிகம் பாடுவதனால் ஏற்படும் பலனையும் கூறுவதை வரன்முறையாகக் கொண்டிருந்தார். இது ஏன்?'' என்பது அடுத்த கேள்வி. இக் கேள்விக்குப் பலர் பதில் தந்துள்ளார்கள். பேராசிரியர் பதில் வருமாறு: திருஞானசம்பந்தர் தோன்றிய கால கட்டத்தில் சமணம், பௌத்தம், வைணவம், வைதீக சமயம் என்பவற்றின் இடைப்பட்டுச் சைவ சமயம் நெருக்குண்டு வலி இழந்து காணப்பெறுநிலை இருந்தது. இந்தச் சூழ்நிலையில் புரட்சி ஒன்றைத் தொடங்கிச் சைவத்தின் பழம்பெருமையை நாட்ட விரும்புகிறார் பிள்ளையார். புறப்பகைகளாகிய சமணம், பௌத்தமதம் என்பவற்றை நேரிடைத்தாக்குதல் மூலம் சாடத் தொடங்குகிறார். வைணவத்தைப் பொறுத்த மட்டிலும் வேறு வழி காணாமை யின் நேரிடைத் தாக்குதலுக்கு உட்படுத்து கிறார். புராண இதிகாசக் கதைகளைத் தாராளமாக எடுத்துப் பயன்படுத்தும் பிள்ளையாருக்கு அடிமுடி தேடிய கதை, சக்கரம் மாலுக்கு ஈந்த கதை, திரிபுரம் எரித்த கதை, பிரமனின் தலையைக் கிள்ளிய கதை என்பவை பெரிதும் உதவ லாயின. இம்மூன்று சமயங்களையும் தாக்குவதை ஒரு பணியாகக் கொண்ட அந்தப் புரட்சி வீரர் ஒவ்வொரு பதிகத் திலும் இத்தாக்குதலை விடாது தொடர் கிறார். பதினோராவது பாடலில் பலன் கூறுகின்றார். சமணம், பௌத்தம், வைதீகம், வைணவம் என்பவை ஒவ்வொன்றும் தத்தம் கொள்கைகளே உண்மையானவை: உய்கதி அடைய விரும்புவோர் தம்மிடமே வரவேண்டுமென்று ஆளுக்கு ஒரு பக்கம் இழுக்கையில் இதனிடையே அகப்பட்டு எது வழி என்று தெரியாமல் அல்லல்பட்டுக் கலங்கி நிற்கும் மக்கட்கூட்டத்தை நெறிப்படுத்த ஒருவர் வந்தால் முதலாவது அம்மக்கள் மனத்தில் ஊட்ட வேண்டியது வலுவான நம்பிக்கையாகும். எனவே அந்த நம்பிக்கையை ஒவ்வொரு பதிகத்திலும் நிறைவுப் பாடலில் 'துன்பம் நீங்கும்; துயரம் போக்கும்' என்று கூறுவதுடன் 'ஆணை நமதே' இதை நம்பலாம் என்று சத்தியவாக்காக சமுதாயத்திற்கு ஊன்றுகோலாக அமைத்தார்.''

வைதீகரையும் எதிர்த்தல்

பேராசிரியர் அ.ச.ஞா. இதனையும் தாண்டி ஒரு புதிய செய்தி (வரலாற்றில் நிகழ்ந்த ஒன்றே. ஆனால் நமக்குத்தான்

புதியதாக உள்ளது.) கூறுகின்றார். ஞான சம்பந்தப் பெருந்தகை வைதிகத்தையும் தாக்குகின்றார் என்பதே அச்செய்தி. வைதீக வழியில் பற்றுள்ள பல்லவர்கள் தமிழ் நாட்டில் உள்ள வேதியர்களை நம்பாமல் வடநாட்டிலிருந்து வேதியர்களை இறக்குமதி செய்தனர். இவர்கள் தமிழர்களின் வழிபாட்டுமுறை, பக்திமுறை, நேரே சென்று அபிடேகம் செய்தல், தாய் மொழியில் வழிபாடு செய்தல் என்பவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கருத வேண்டியுள்ளது. பல்லவர்களும் பிற்காலச் சோழர்களும் தமிழ்நாட்டில் உள்ள சிவ வேதியர்களை விட்டுவிட்டு வடக்கே இருந்து வந்த வைதீகர்களைக் கோயில் பூசைக்கு நியமித்தனர். எனவே தமிழர் சமய நெறியை – சைவ நெறியை – நிலை நிறுத்த இந்த வைதீகர்களையும் ஞானசம்பந்தர் எதிர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஞானசம்பந்தப் பெருந்தகை பிற சமயங்களை நேரிடைத் தாக்குதல் செய்ததுபோல வைதீக சமயத்தைத் தாக்க முடியாது. காரணம் சிவ பெருமானை அவர்கள் ஓரளவு ஏற்றுக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் அவர்கள் கூறும் வேதம் முதலியவற்றை ஏற்றுக் கொள்ளாதவர் களைப் பௌத்தர்கள் என்ற பெயரிட்டு ஒதுக்கிவிடுவர். அவ்வாறு அவர்கள் ஒதுக்க இடந்தரக்கூடாது. பௌத்த, சமணர்களால் அல்லலுற்ற ஒரு சமுதாயத்தைக் கைதூக்கி விட வரும் பெரியவரை வைதிகர்கள் பௌத்தர் என்று ஒதுக்கிவிட்டால் மக்கள் மத்தியில் அவர் ஒன்றும் செய்ய முடியாமற் போய்விடும். எனவே பிள்ளையார் மிக மிகக் கவனத்துடன் வேதத்தை ஏற்றுக் கொண்டே பாடுகிறார்.

வேத வேள்வியைச் சிவ வேள்வியாக்கினார்

‘‘ஞானசம்பந்தர் காலத்தில் பல்லவர்களால் வேதம் போற்றி வளர்க்கப்பட்டது. மக்களிடையேயும் வேள்வி, சடங்குகளில் பெரும் ஈடுபாடு இருந்தது. சமுதாயச் சிந்தனைக்கு எதிராக வேள்வியை எதிர்த்து ஒரு பயனும் விளையப் போவதில்லை. எனவே ஞான சம்பந்தர் மடைமாற்றம் செய்கிறார். வேத வேள்வியைச் சிவ வேள்வியாகக் குறிப்பிடுகிறார். 21 வேள்விகளில் எதுவுமே சிவ வேள்வி இல்லை. அனைத்துமே இந்திரன் முதலான தேவர்களை நோக்கிச் செய்வன. அந்தத் தேவர்களே வானுலகைவிட்டு இறங்கி சீர்காழியில் சிவபரம்பொருளைக் குறித்துச் செய்யப்படும் வேள்வியில் தாமே இருந்து அப்பணியில் ஈடுபடுவதாகச் சொல்கிறார் சம்பந்தர். ‘‘மேலை இமையோர்களும் ஞாலமிசை வந்து ஓமவினை செய்தார்’’ என்கிறார் சம்பந்தர்.

வேதத்தினும் உயர்ந்தது நாதன் நாமமே

அடுத்து ஞானசம்பந்தப் பெருந்தகைக்கு உபநயனம் செய்விக்க அவர்தம் தந்தையார் முடிவு செய்கிறார். வேள்வியை பெருந்தகையாரால் போக்க முடியவில்லை. அந்த வேள்வியையே தனக்குச் சாதகமாக்கிக் கொள்கிறார். மந்திர உபதேசம் செய்த வேதியர்களுக்கே பெருந்தகை புனித வேதம் ஓதினார். இதனால் வேதியர்களின் சிந்தை மயக்குறும் ஐயம் தீர்ந்தது’’. இந்த இடத்தில் அ.ச.ஞா. ‘‘மயக்குறும் ஐயம் என்ன’’ என்று விளக்குகிறார். வேள்வி செய்யப்படும் காலங்களில் ஒரு சமயம் இந்திரனை உயர்த்துவதும், மற்றொரு சமயம் அக்னியை உயர்த்துவதும், பிறிதொரு சமயம் வருணனை உயர்த்துவதும் உண்டு. இந்த மயக்கத்தைத் தீர்க்கும் முகமாக அனைவர்க்கும் மூலமானவன் சிவபெருமான் என்று அவர்கள் ஐயத்தை சம்பந்தர் தீர்த்தார்.

“மந்திரம் நான்மறையாகி, வானவர்
சிந்தையுள் நின்று அவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே”.

‘‘அந்தணர்கள் அந்தி நேரத்தில் ஓதவேண்டிய மந்திரம் அஞ்செழுத்து என்று வலியுறுத்திவிட்டார். பிராணாயாமம் செய்பவர்களையும் அழைத்து

“ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, ஒளிசுடர்
ஞான விளக்கினை ஏற்றி, நன்புலத்
தேனை வழி திறந்து, ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே”

என்று கூறுகிறார். வேதத்திற்கு மேற்பட்டவை எதுவுமே இல்லை என்று கூறிக் கொண்டிருந்த இந்நாட்டில் வேதம் நான்கினை விட மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே என்ற கருத்தை முதன் முதலில் பரவவிட்டுப் புரட்சி செய்தார் ஞானசம்பந்தப் பெருந்தகை.''

சைவ உலகிற்கு மூதறிஞரின் பங்களிப்பு

ஞானசம்பந்தப் பெருந்தகையின் உள்ளக் கருத்தை மூதறிஞர் மிகத் தெளிவாக – யாரும் இதுவரை சொல்லாத வகையில் – எடுத்துரைக்கின்றார்கள். இந்த ஒரு கருத்திற்காகவே மூதறிஞர் அ.ச.ஞா. அவர்களைச் சைவ உலகம் போற்றி வணங்க வேண்டும். பேராசிரியர் அவர்கள் பாணியில் சொல்வதனால் இக்கருத்தினை அவர்கள் கூறவில்லை. அவர்களையும் மீறிய சக்தி ஒன்று அவர்கள் மூலமாகச் சொல்ல வைத்திருக்கிறது எனலாம்.

பெரியபுராணம் தோன்றியது ஏன்?

''சேக்கிழார் கண்ட சைவம்'' என்ற ஒன்பதாவது பகுதியில் ''ஏழாம் நூற்றாண்டில் புரட்சி வீரர் கட்டிய சைவக் கோட்டை அப்படியே வளர்ந்த நிலையில் இருந்தாலும் உள்ளீடு இல்லையோ என்று ஐயுறவு ஏற்படுகிறது. மக்கள் உண்மையான சமய வாழ்க்கையில் ஈடுபடாமல் போலியான மேலோட்டமான சமய வாழ்வில் ஈடுபடுகின்றனர் என்று சேக்கிழார் நினைக்கிறார். இடைக்காலச் சோழர் ஈடு இணையின்றி பெற்ற வெற்றிகளால் மக்கள் வாழ்க்கையில் இன்ப வேட்டை இடம் பெற்றுவிட்டது போலும். எனவே சமய வாழ்க்கை உள்ளீடற்றதாய்ப் போய்விட்டது. இந்த நேரத்தில் சேக்கிழார், 'நாயன்மார்களின் வரலாறு இன்ப வேட்டையாடும் மக்களைத் தட்டி எழுப்பி, வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் வேண்டும் என்ற எண்ணத்தை அவர்களிடம் 'உண்டாக்கும்' என்ற முடிவுக்கு வந்தார். அதன் பயனாகத் தோன்றியதே பெரிய புராணம் என்கிறார் பேராசிரியர்.

தனிமனித வரலாற்றைப் பாடாதது ஏன்?

''சேக்கிழாரின் படைப்பாற்றல் என்ற பத்தாவது பகுதியில், ''தொண்டாகிய பண்பே காப்பியத் தலைமை பெறுகிறது. தனி மனித வரலாற்றைக் காவியமாகப் பாடினால் இவரைப் போல அருஞ் செயல்கள் நம்மால் செய்ய இயலாது' என்று மக்கள் மனம் கலங்கிவிடுவர். எனவே தனிமனிதரைப் பற்றிக் காவியம் பாடாமல் பல தொண்டர்களைப் பற்றிக் காவியம் பாடினார். அவருள்ளும் ஏகாலியர், குயவர், வலைஞர், நெசவாளி என சாதாரண மக்களைத் தேர்ந்தெடுத்து அவர்களது ஒப்பற்றத் தொண்டினைப் பாடினார். இந்தச் சாதாரண மக்களைப் போல நாமும் ஏன் தொண்டு புரியக்கூடாது என மக்களைத் தூண்ட வைத்தார்.

புறத்துறவு, சாதிப் பிரிவினை தொல் சைவத்தில் இல்லை

''அடியார்கள் யார்?'' என்ற பதினோராவது பகுதியில் ''துறவு என்று மேனாட்டார் கூறும் புறத்துறவை சைவம், வைணவம் என்ற இரண்டுமே ஏற்கவில்லை. இன்னுங் கூற வேண்டுமாயின் சைனம், பௌத்தம் என்பவற்றின் செல்வாக்கால்தான் பிற்காலத்தில் புறத் துறவு சைவ வைணவங்களுள் புகுந்தது. இத் தமிழகத்தில் தொல் பழஞ்சமயமாகிய சைவத்தில் வைதிக நெறியின் செல்வாக்காலும் சைன, பௌத்தச் செல்வாக்காலும் நால்வகை வருணம், நால்வகை ஆஸ்ரமங்கள், புறத்துறவு என்பவை புகுந்தன. நான்கு வகையான புருஷார்த்தங்கள் என்று கூறும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற கொள்கையும் பிற்காலத்ததே ஆகும். அன்றைய சமுதாய நிலையில் பல்லவர்கள் வேத வழக்கொடு பட்டு நின்றமையால் இந்த வருணப் பிரிவினை, அதனை அடுத்த சாதிப் பிரிவினை என்பவை வலுப் பெற்றிருக்க வேண்டும்'' என்கிறார் பேராசிரியர்.

சேக்கிழார் தொண்டு என்ற சொல்லுக்கு விரிவான பொருள் தருவதாக பேராசிரியர்

கூறுகின்றார். (தொண்டு நெறியே சைவ நெறி - பனிரெண்டாவது பகுதி) தொண்டில் அன்பும் அடங்கும் என்றும் அந்த அன்பு இறைவன் மாட்டு அன்பு, உயிர்கள் மாட்டு அன்பு என்று பிரித்தறிய வேண்டிய தேவை இல்லை; எல்லா உயிர்களும் இறைவன் உறைகின்ற கோயில் என்றும் விளக்கம் தருகிறார்.

இதனையடுத்து பெரியபுராணத்தில் வரும் சில சிக்கலான பகுதிகளைப் பேராசிரியர் எடுத்துக் கொண்டு ஒவ்வொரு முடிச்சாக அவிழ்க்கிறார்.

பெரியபுராணத்தில் சோறிடுதல் முதலிய மக்கள் தொண்டு பேசப்படும் இடங்களில் சிவனடியார்களுக்குச் சோறிட்டார் என்று தானே குறிக்கப்பட்டிருக்கின்றன. சிவ பக்தர்கள் சிவனடியார்க்குச் சோறிடுதல் என்பது அவர்கள் குடும்பத்துள் ஒருவருக்கு உணவிடுதல் போலத்தானே ஆகும். இதனை எவ்வாறு மக்கள் தொண்டு என்று கூறமுடியும்? என்பது பேராசிரியர் எழுப்பும் வினா. பேராசிரியர் இளையான் குடிமாற நாயனார் வரலாறை எடுத்துக் கொண்டு ''நேர வந்தவர் யாவராயினும்'' என்ற அடிகளுக்கு தெருவில் செல்பவர்கள் யாவராயினும் – முன் பின் தெரியாதவர்களாயினும் – அவர்களும் சிவபெருமானின் அடியவர்கள் என்று இளையான்குடியார் நினைத்த காரணத்தால் (தன்மையால்) அவர்களிடம் குளிரப்பேசி உணவுக்கு அழைத்து வந்தார்.'' என்று பொருள் காண்கிறார். பேராசிரியர் ''பசித்தவர் அனைவர்க்கும் மாறனார் சோறிட்டார். இதே உணவிடும் தொண்டை ஏறத்தாழ 27 அடியார்கள் செய்தனர்'' என்று விளக்கம் காண்கிறார்.

அன்பின் வெளிப்பாடு வன்முறையில் வெளிப்படலாமா?

இது நியாயமான கேள்வி. சிவகாமி ஆண்டாருக்குத் துன்பம் விளைத்த பட்டத்து யானையை எறிபத்தர் வாள்வீசிக் கொல்கிறார். இது கொலையல்லவா? எப்படி தொண்டாகும்? ''பிறருக்கு ஏற்படும் இன்னல் களைவதும் தொண்டு எனப்படும். அறுவை மருத்துவர் செயல் நோயாளியின் சாவில் முடிந்தாலும் யாரும் மருத்துவரைக் குறை கூறுவதில்லை. எறிபத்தர் அழித்தல் தொழிலில் பகைமை முதலிய எந்த உணர்வும் இல்லை. காரணம் அவர் தம் பொருட்டாக எதனையும் செய்யவில்லை. கொலைத் தொழிலில் ஈடுபடும்பொழுது கூட 'ஐயோ பாவம் இதனைச் செய்ய வேண்டியுள்ளதே' என்று அவ்வுயிர்கள் மாட்டு அருள் உள்ளம் கொண்டுதான் தண்டனை வழங்குகிறார்' நடைபெறுவது கொலையாக இருக்கலாம். ஆனால் அதனைச் செய்பவர் மனத்தில் இருப்பது அருள்தான்.''

சோழர்கள் தவிர பிற மன்னர்களைப் போற்றாதது ஏன்?

மனுநீதி, கோச்செங்கணான், புகழ்ச் சோழர் என்பவர்களைப் போற்றியது போல ஏனைய மன்னர்களைச் சேக்கிழார் பாராட்டியதாகத் தெரியவில்லை. வரலாற்றுச் செய்திகளையும், கல்வெட்டுச் செய்திகளையும் நுட்பமாகக் கண்டறிந்த சேக்கிழார் பெருமான் நாவுக்கரசரைத் துன்புறுத்திய பல்லவன் பெயரையும், சிறுத்தொண்டரைச் சேனாதிபதியாக வைத்திருந்த பல்லவன் பெயரையும் பெரியபுராணத்தில் கூற மறுக்கிறார். இதன் காரணம் என்ன என்ற கேள்வியினை பேராசிரியர் எழுப்புகிறார்.

''சோழர்கள் தவிர சேக்கிழார் தன்நூலினில் குறித்துள்ள பிற மன்னர்கள் (ஏழு பேரரசர்கள், நான்கு சிற்றரசர்கள்) அனைவரும் ஒன்று தாம் சமணராக இருந்து பின்னர்ச் சமயம் மாறியவர்; இன்றேல் அவர்கள் முன்னோர்கள் சமயம் மாறியவர்களாக இருந்துள்ளனர். களப்பிரராக இருந்துச் சைவத்தைத் தழுவின கூற்றுவரை ஏற்றிப் புகழும் பெருமான் பல்லவர்களை ஏற்றிப் புகழ மறுக்கின்றார். காடவர் கோனை 8 பாடல்களிலும் கழற்சிங்கனை 13 பாடல்களிலும் முடித்து விடுகின்றார். பூசலார் காலத்து வாழ்ந்த இராசசிம்மன் தமிழ்கூறு நல்லுலகம் காணாத ஒப்பற்ற கோயிலைக் கட்டியிருந்தும் அவன் பெயரைக் கூறக்கூட மறுப்பது ஏன்? சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கச்சி அநேக

தங்காவதம் என்ற சிறிய கோயிலைப் பாடியவர் கயிலாயநாதர் கோயிலைப் பாட வில்லை. ஆம். அக்கோயிலைக் கட்டியவன் தன் அகங்காரத்துக்குக் கோயில் கட்டினான். மேலும் பூசலார் நாயனார் வரலாறு படி இறைவனே ஒதுக்கிவிட்ட கோயில் ஆதலாலும், தமிழரல்லாத பல்லவர்கள் கட்டிய கோயிலாகலாலும், சுந்தரராலேயே ஒதுக்கப்பட்டவன் என்பதாலும் அவனைத் தான் ஏன் பாட வேண்டும் என்று சேக்கிழார் நினைத்திருக்கலாம். திருநாவுக்கரசர் வரலாற்றில் வரும் பல்லவன் குணபரேச்சரம் கோயில் கட்டியிருந்தாலும், நாவரசர்க்குக் கொடுமை விளைத்தமையின் அவன் பெயர் கூறப்பட வில்லை. பாண்டியன் நெடுமாறன் சமயம் மாறியவனாயினும், பிள்ளையார் மடத்துக்குத் தீவைக்க உடந்தையாக இருந்திருந்தாலும் ஞான சம்பந்தராலேயே எற்றுக் கொள்ளப்பட்டவன். எனவே அவனைக் குறிக்கிறார்'' என்கிறார் அ.ச.ஞா.

''தமிழகத்தில், தமிழர்களிடையே வாழ்ந்து பாடும் இப்பெரியார் ஓயாமல் தமிழுடன் ஏன் தம்மைத் தொடர்பு படுத்திப்பாட வேண்டும்? என்பது அடுத்த வினா. ''தமிழை ஏற்காமலும் இறைவனுக்குப் பூசனை புரிவதற்குத் தமிழ் தகுதியற்றது என்றும் வேள்வி முதலியன செய்பவர்கள் தமிழைப் போற்றிக் கற்க வேண்டியதில்லை என்றும் கூறும் கூட்டம் ஒன்று அரசியல் வலுவுடன இங்கு இருந்திருக்க வேண்டும். அவர்கள் வாயை அடைக்கவே பிள்ளையார் இவ்வாறு ஓயாமல் தமிழைத் தம்முடன் தொடர்பு படுத்திக் கூறியிருத்தல் வேண்டும். வடமொழி வேதத்துக்கும், தமிழ் மறைக்கும் வேறுபாடில்லை என்பதைச் சுட்டவே அவர் முயன்றிருக்கிறார்'' என்பதே பதிலாக அமைகிறது.

சமணர் கழுவேற்றம் சரிதானா?

சமணர் கழுவேறியது சரிதானா? சிறிய பெருந்தகையராகிய புரட்சி வீரர் 'நிலையிலா அமணர்க்கு என்றும் யான் எளியேன் அல்லேன்' என்று கூறி அனல் புனல் வாதங்கட்கு மார்தட்டிப் புறப்படுபவர். அவர் மேற்கொண்ட பணி அதுவாதலின் யார் யாரைத் திருத்த வேண்டுமோ அதனைச் சிறிதும் கருணைகாட்டாது செய்பவர். ''கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ் களை கட்டதனொடு நேர்.'' என்ற குறளுக்கு இலக்கணமாக அமைந்தவர். இனை நமக்கு நினைவூட்டவே பிள்ளையார் பல இடங்களில் புகலிவேந்தர், காழியர் கோன், கொச்சை வேந்தன் என்றெல்லாம் கூறிச் செல்கிறார். புரட்சி செய்ய வந்த வேந்தன் சாம, தான, பேத, தண்டம் என்ற வழிகளை மேற்கொள்ளுதல் சரியே என்கிறார் சேக்கிழார். மதுரையில் சமணர் கழுவேற்பதைத் தடுத்திருக்கலாம். ஆனால் மன்னராகிய இவர் தீயிட்ட குற்றத்துக்குத் தக்க தண்டனை அதுவே என்று நினைத்து அரசன் செயலைத் தடைசெய்யாது இருந்து விட்டார் என்று சேக்கிழார் கூறுகிறார். சமணர் கழுவேற்றம் என்பதை உறுதிப் படுத்தத் தேவாரம் முதலியவற்றில் வேறு அகப்புறச் சான்றுகள் எதுவும் இல்லை. சமயப் போராட்டம் என்று வந்துவிட்ட பிறகு படுகளத்தில் ஒப்பாரிக்கு வேலை இல்லை. இதனால் ஒரு நாட்டையும் நாகரிகத்தையும், பண்பாட்டையும் தொல் பழஞ்சமயமாகிய சைவத்தையும் மீட்கலாம் எனக் கருதிய பாண்டியன் இக்கழுவேற்றம் செய்தான் என்கிறார் சேக்கிழார். ஆனால் திருஞானசம்பந்தர் இதில் நேரிடையாகப் பங்கு கொள்ளவில்லை; என்றாலும் அதனைத் தடுத்திருக்கலாமே என்று பேசுகிறவர்கட்கு ஓர் அரசன் மற்றைய அரசன் பணியில் தலையிடுவதில்லை என்ற பெரிய உண்மையைச் சேக்கிழார் கூறுகிறார்.'' – அ.ச.ஞா.

சிறுத்தொண்டர் மகனை அரிந்தது சரியா?

அடுத்து சிறுத்தொண்டர் மகனை அரிந்த வரலாறு. சிறுத்தொண்டர் இச்செயலை எவ்வாறு செய்ய முடிந்தது? நான் எனது எனப்படும் அகங்காரமமகாரங்களை அறவே போக்கியவர்களே அடியாராக முடியும். இவை இரண்டையும் போக்கி விடுதல் என்பது அவ்வளவு எளிதானதன்று. என்றாலும் இவற்றை ஒழிக்கும் முயற்சியில் வெற்றி பெற்றவர்கள்

மட்டுமே அடியார் என்ற பட்டத்துக்கு உரியவராவர். நான், எனது என்ற இரண்டையும் நீக்கி ஒருவர் செய்யும் செயல்களை, இவை இரண்டாலும் நிரம்பியுள்ள நாம் இவை இரண்டின் அடிப்படையில் வைத்துக் கொண்டுள்ள அளவுகோலைக் கொண்டு அளப்பது பெரும் தவறாக முடியும். அகங்கார மமகாரம் அற்றவர்கட்கு, நான் எனது என்பவற்றைத் துறந்தவர்கட்குப் பிள்ளை, மனைவி என்ற உறவுகள் ஏது? நான் என்பது இருந்தால் தானே என் மனைவி, என் மக்கள் என்ற உறவுகள் உண்டா கின்றன. இவை போய்விட்ட பிறகு மனைவி, மக்கள் என்ற முறைப் பெயர்கள் அர்த்தமற்ற சொற்கள். இதனை விளங்கிக் கொண்டாலொழிய அடியார்களின் வாழ்க்கை நுட்பத்தை அறிய முடியாது.

இயற்பகையார் வரலாறு

இன்று பலராலும் விமர்சிக்கப்படுகின்ற வரலாறு இயற்பகையார் வரலாறு ஆகும். இயற்பகையார் கொண்ட குறிக்கோள், உயிரினும் மேம்பட்டதாக அவர் நினைத்தது, அடியார் மனத்து நினைத்தயாவற்றையும் செய்து முடிப்பதுதான் என்பதாகும். தூர்த்த வேடத்துடன் வந்த ஒருவர் இயற்பகையாரிடம் ஒரு பொருளைக் (மனைவியை) கேட்கிறார். அதற்கு இயற்பகையார் அப்பொருள் எதுவாக இருப்பினும் அவரிடமிருந்தால் அதற்குச் சொந்தக்காரர் அவர் அல்லராம். எம்பிரான் அடியார் தாம் அதற்கு உரிமை யாளராம். இயற்பகையாரைப் பொருத்த வரை அடியார்கள் தவறு செய்ய மாட்டார் கள். உலகத்தார் அதனைத் தவறு என்ற கருதினாலும் கூறினாலும் இயற்பகையார் அதில் தவறு காணப்போவதில்லை. வந்தவர் 'உன் மனைவி' என்று கூறியும் கூட இது என்னிடம் முன்பே உள்ளது என்று அஃறிணையில் இயற்பகையார் பேசுவதால் அவரைப் பொறுத்தவரை அவர் வீட்டிலிருக்கும் தட்டுமுட்டுச் சாமானுக்கும் மனைவிக்கும் எவ்வித வேறுபாடும் பாராட்டாத நிலையில் உள்ளார் என்பதை நாம் உணருமாறு செய்கிறார் கவிஞர். இறைவனே பார்த்துச் செயற்கருஞ் செய்கை செய்த தீரன் என்று கூறும் அளவிற்கு இவர் தொண்டு சிறந்து நிற்கிறது என்று முடிக்கிறார்.

மனுநீதி கதை ஏன்?

''தேவார மூவர் கூறாத – திருத்தொண்டத் தொகையிலோ திருத்தொண்டத் திருவந்தாதியிலோ கூறப்படாத - மனு நீதிக் கதையைச் சேக்கிழார் ஏன் எடுத்து ஓதுகிறார்?'' என்பது அடுத்த கேள்வி. இப்படி ஒரு கேள்வி நம் மனதில் எழுந்ததே இல்லை. கேள்வி எழுப்பவும் ஒரு ஞானம் வேண்டும்.

வைதீக நெறியை மறுத்தது தமிழ் நெறியை உணர்த்தவே

சோழர்கள் பெருமை பேசும் வாய்ப்புடையது என்ற காரணத்துக்காகவும், ஏனைய பல்லவ, பாண்டிய மன்னர்களுடன் ஒப்பிட்டுச் சோழர் எவ்வளவு உயர்ந்தவர்கள் என்று காட்டவும், வேத வழக்கை மிகுதியும் போற்றிய பல்லவர், சோழர், பாண்டியர்கட்குப் பழந்தமிழ் மன்னர்கள் பிராயச்சித்தம் என்பது பற்றி என்ன நினைத்தார்கள் என்பதை அறிவிக்கவும் இக்கதையைக் பயன்படுத்தி இருக்கலாம். பிராயச்சித்தம் என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டதால் என்ன தவறையும் செய்துவிட்டு அதற்குக் கழுவாய் தேடிக் கொள்ளலாம் என்ற மன நிலையில் இருந்த பொழுது – வைதீகச் சிந்தனையில் இருந்த பொழுது – அதற்கு அடிகொடுக்கவே கவிஞர் இத்தகைய கதையை எடுத்துக் கொள்கிறார். தமிழர் அறநெறி வைதீக அறநெறியில் மாறுபட்டது என்பதைக் காட்டவே இக்கதை. வைதீகம் பிராயச்சித்தம் செய்துவிட்டால் பாபம் போய் விடும் என்கிறது. தமிழர் நெறி அதுவன்று. பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றுதல் தமிழர் நெறி, வைதீக நெறிக்கும், பழைய தமிழர் அறநெறிக்கும் இடையே நடந்த போராட்டத்தின் விளைவு தான் மனுநீதி கதை. பசுபடும் துயரத்தைத் தானும் பட வேண்டும் என்று மன்னன் முடிவு செய்தான்'' என்று முடிக்கிறார்.

வைதீகம் – தமிழர் தம் சைவம்; மறைமுகப் போராட்டம்

வைதீக சமயத்துக்கும், தமிழரின் தொல் பழஞ்சமயமாகிய சைவத்துக்கும் இடையே ஞானசம்பந்தர் காலத்தில் தோன்றிய மறைமுகப் போர் – வேதம், ஆறங்கம், நீதி நூல்கள் என்பவை பற்றி ஓயாது பேசி வந்த பிள்ளையார் சமயம் வந்தவுடன் நீதி நூல்கள் கூறிய சாதி வேறுபாட்டை தூக்கி எறிதல்; வேதங்கள் கனவிலும் நினையாத விக்கிரக வழிபாடு, அபிடேகம், அர்ச்சனை என்பவற்றுடன் இவை தமிழிலேயே செய்யலாம் என்று கூறுதல்; சிவபெருமானைப் போற்றாத வேதங்கள் ஓதும் வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்து என்று உபதேசித்தல்; திருநாவுக்கரசர் 'வேதம் ஓதில் ஏன்? வேள்விகள் செய்யில் என்ன?' என்று கடுமையாகச் சாடுதல்; சிவவேதியராகிய சுந்தரரோ தேவதாசியர் குலத்தில் தோன்றிய பரவையாரை மணத்தல் – இவை யாவும் சேக்கிழார் காலத்தில் ஒரு வடிவம் கொடுக்கப் பெறுகின்றது.

இதே பேராசிரியர் 20, 30 ஆண்டுகளுக்கு முன் இதே கதையைத் தனது ''தேசிய இலக்கியம்'' என்ற நூலில் எப்படி கையாண்டார்? இப்பொழுது எப்படி கையாளுகிறார்? அது ஒரு இமயம் எனில் இது ஒரு இமயம்.

''புரட்சியின் இரண்டாவது வழி'' பதின் மூன்றாம் பகுதியாகும். இதில் வல்வினை, மெல்வினை பற்றி விளக்குகிறார் பேராசிரியர்.

விதிவழியைவிட அன்பு வழியே சிறந்தது

''இருவழிகளின் போராட்டம்'' என்ற பதினான்காவது பகுதியில் விதி மார்க்கம் - பக்தி மார்க்கம் என்பவற்றை விளக்கி விதி வழியைவிட அன்பு வழியே உயர்ந்தது என்கிறார் அ.ச.ஞா.

1) விதி வழியே பூசனை புரிந்த நீல நக்கரைவிட சிவலிங்கத்தின் மேல் சிலந்தி இருக்கிறதே என்று வாயினால் ஊதிய நீல நக்கரின் மனைவியின் அன்பு.

2) கல்லெறிந்து வழிபட்ட சாக்கியரின் அன்பு. சாக்கியரின் கதையில் ஒரு புதுமையைச் சுட்டிக் காட்டுகிறார் பேராசிரியர். ''எந்த ஒரு சமயமும் தன் உறுப்பினர்கள் தான் வகுத்துள்ள புற, அகக் கோலத்துடன் இருக்க வேண்டும் என்று தான் வற்புறுத்தும். ஆனால் சைவ சமயம் புறக் கோலத்துக்கு அதிக மதிப்பு தந்ததாகத் தெரியவில்லை. சாக்கியர் தமது பௌத்த உடைகளைத் துறக்கவில்லை. சிவனடியார்களாக, தொண்டர்களாக, அன்பர்களாக இருப்பதுதான் முக்கியம். எந்நிலையில் நின்றாலும், எக்கோலம் கொண்டாலும் சங்கரன்தாள் மறவாமை ஒன்றுதான் பொருளாகும். இந்த அகில உலகமும் இறைவனது உடைமை என்கிற பொழுது இதில் பௌத்தர் உடை, சிவனடியார் உடை என்ற வேறுபாடு இல்லையல்லவா? மெய்ப்பொருள், ஏனாதி, கலிக்கம்பர் புற வேடத்துக்கு மதிப்பு கொடுத்தது அவர்கள் தனிப்பட்ட கொள்கையாகும். 12–ஆம் நூற்றாண்டிலேயே சைவ சமயம் எவ்வளவு விரிந்தும், சகிப்புத் தன்மையுடனும் வளர்ந்துவிட்டது என்று பார்க்க வேண்டும். சைவம் என்பது நிறுவப்பட்ட சமயமாக இல்லாமல் பரந்துபட்ட உலகம் தழுவிய சமயமாக இருத்தல் வேண்டும் (Universal Religion) என்பதைச் சேக்கிழார் விரும்புவது புலனாகிறது.

3) விதி மார்க்கத்தைவிட பக்தி மார்க்கத்தையே இறைவனும் ஏற்றுக்கொள்கிறான் என்பதை விளக்கவும், பக்தி மார்க்கத்தில் செல்கின்ற ஒருவனுடைய வளர்ச்சி எவ்வாறு இருக்கும் என்பதை விளக்க எழுந்ததே கண்ணப்பர் புராணம் ஆகும். இத்துடன் முதல் பாகம் முடிகிறது.

முதல் பாகம் சமய அடிப்படையிலும் இரண்டாம் பாகம் இலக்கிய அடிப்படையிலும் அமைந்துள்ளது. ''தமிழ்க் காப்பியங்களின் தோற்றமும், வளர்ச்சியும் என்ற பதினைந்தாம் பகுதியில் (2–ஆம் பாகம் - முதற்பகுதி) தெரியவரும் செய்திகள் வருமாறு:

1) சங்க இலக்கியப் பாடல்கள் வாய்மொழிப் பாடல்கள் அல்ல.

2) தண்டி போன்ற நூல்கள் தமிழில் உள்ள காப்பியக் கூறுகளை நன்கு ஆய்ந்து காப்பிய இலக்கணம் வகுக்கவில்லை.

3) போர் புரிவதும் வெற்றி பெறுவதுமே வாழ்வின் குறிக்கோள் என்று கருதிய பண்பாட்டுக்கு விடை கொடுத்து மதுரைக் காஞ்சியில் புதிய திருப்பத்தை உண்டாக்கியவர் மாங்குடி மருதனார்.

4) மாங்குடி மருதனார் செய்த புரட்சியின் பயனாகவே குடிமக்களைத் தலைவர்களாகக் கொண்ட சிலம்பும், மேகலையும் தோன்றின. இரண்டாவது திருப்பத்தை ஏற்படுத்தியவர் இளங்கோவடிகள். சிலம்பில் மாபெரும் செல்வத்தில் பிறந்தும், ஒரு செல்வனை மணந்தும் வாழ்க்கையைத் துய்க்க முடியாமல் இழந்த ஒரு பெண் தன் நெஞ்சு உரம் ஒன்றையே துணையாகக் கொண்டு ஒரு மாபெரும் அரசை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுகின்றாள். மணிமேகலையில் உதயகுமாரன் கேவலமாகப் பேசியும் அவன்பால் தன் உள்ளம் ஈர்க்கப்படுவதாகக் கூறிய மணிமேகலை உயர்ந்து வீடு பேறு அடைகிறாள். இவற்றிற்குக் காரணம் என்ன? உற்றநோய் நோற்றல், தன் நெஞ்சுரம் ஒன்றே துணையாகக் கொண்டு எதிர்வரும் துன்பங்களை அமைதியுடன் ஏற்று வாழ்தல், பிறர் துயர் துடைத்தல்; ஒரு குறிக்கோளைக் கொண்டு வாழ்க்கையை நடத்துதல் ஆகியன அத்தலைவிமார்களின் பொது இயல்புகள். இவை சேக்கிழாரைக் கவர்ந்திருக்க வேண்டும்.

5) சேவடி படர்ந்த செம்மல் உள்ளமொடு வாழ வேண்டும் என்று திருமுருகாற்றுப் படைகோடிட்டுக் காட்டியது.

6) 'குறிக்கோளுடன் வாழ்வதே மனித வாழ்க்கையின் தனிச்சிறப்பாகும்' என்ற உண்மையை மதுரைக் காஞ்சி முதன் முதலாக அறிவிக்க, அக்குறிக்கோள் எத்தகையதாக இருத்தல் வேண்டும் என்பதைத் திருமுருகாற்றுப்படை விளக்கம் செய்ய, அத்தகைய குறிக்கோளை மேற்கொண்டு வாழ்பவர்கள் பெண்களாயினும், சமூகம் ஒதுக்கும் கணிகையராயினும் அவர்கள் உயர்ந்து யாவராலும் தோழப்படுவர் என்பதைச் சிலம்பும் மேகலையும் விவரிக்க இக்கருத்து தமிழ்ப் பண்பாட்டின் சாரமாக வளர்ந்து வந்ததை அறிய முடிகிறது. இடைக்காலத்தில் இது மறக்கப்பட்டாலும் சேக்கிழாரால் மறுபடியும் அறியப் பெற்று அவருடைய காப்பியத்தில் புத்துயிர் பெறுகிறது.

தொண்டு என்ற பண்பே காப்பியத்தலைமை

''சேக்கிழார் வகுத்த காப்பிய நெறி'' என்ற பகுதியில் கிடைக்கும் செய்திகள் :

''சேக்கிழார் காப்பிய நாயகராகச் சுந்தரரைக் கொள்ளவில்லை. தொண்டு என்ற பண்பே காப்பியத் தலைமை பெறுகின்றது.''

அகப்பகை வெல்பவர்களே வீரர்கள்

''பிற மனிதனிடம் போர் செய்வது வீரமன்று. இதன் எதிராக மனிதன் தன்னுள் பதுங்கி நின்றும் அல்லல் விளைவிக்கும் பொறி புலன்களுடன் போர் செய்து அவற்றை வெற்றி கொள்வது தான் வீரம். அகப்பகையை வெல்பவர்களே தொண்டர்கள். அவர்களே வீரர்கள் என்கிறார் சேக்கிழார்.

சோழர்க்கு அறிவு புகட்டவே பாடினார்

''சோழப் பேரரசின் வீழ்ச்சியின் தொடக்கத்தில் தோன்றியது பெரிய புராணம். போர் வெறியிலும் வெற்றி எக்களிப்பிலும் மிதக்கும் இக்குலோத்துங்கர்களையும், தமிழக மக்களையும் எவ்வாறு தட்டி எழுப்புவது? நெடுஞ்செழியனுக்கு மதுரைக்காஞ்சி பாடி மாங்குடி மருதனார் அறிவு கொளுத்தியது போலச் சேக்கிழார் பெரிய புராணம் பாடிச் சோழர்கட்கு அறிவு புகட்ட வந்தார்.''

''இத்தகைய பெருங்கவிஞர் இயற்றும் நூல்கட்கு இலக்கணம் அவர்கள் வகுப்பதேயாம். மனிதனை அல்லாமல் தொண்டு என்ற பண்பைக் காப்பிய நாயகன் இடத்தில் வைத்துப் பாடினார் என்றால் அதுவே இலக்கணமாகும்.''

பெரிய புராணம் மூலங்கள்

''பெரிய புராண மூலங்கள்'' என்ற பதினேழாவது பகுதி ''சமணர் கழுவேற்றம் பற்றித் தமிழகத்தில் மூலங்கள் – தேவாரத்திலோ, கல்வெட்டுகளிலோ இல்லை. கருநாடகத்தில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. அவற்றைச் சேக்கிழார் எடுத்துக் கொண்டார் என்று கொள்வதில் தவறு இல்லை.

தில்லை எப்பொழுது சிறப்பு பெற்றது?

தில்லை எப்பொழுது சிறப்பு பெற்றது? காரைக்கால் அம்மையார் காலத்தில் தில்லையோ ஆனந்த தாண்டவமோ குறிக்கப்படவில்லை. அம்மையார் குறிப்பிடுவது ஆனந்ததாண்டவமே. அம்மையார் காலத்தில் சிறப்பிடம் பெறாத தில்லைக்குச் சேக்கிழார் சிறப்பிடம் தருவானேன்? தில்லை நடனம் அமைதியைத் தருவது. ஆலங்காட்டு நடனம் கொடுமையான தாண்டவம் ஆகும். ஓயாத ஒழியாத போர்களில் ஈடுபட்டு அமைதியை இழந்து தவிக்கும் சோழர்கட்கும், தமிழ் மக்கட்கும் வேண்டப் படுவது அமைதியே. ஆதலின் ஆலங்காட்டைப் பெரிது படுத்தாமல் சேக்கிழார் தில்லையைப் பெரிது படுத்திப் பாடியிருத்தல் வேண்டும். அடுத்து நாயன்மார்கள் மூவரும், மணிவாசகரும் தில்லையையே பெரிதும் போற்றிப் பாடினர். சேக்கிழார் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த சோழ மன்னர்கள் அனைவரும் தில்லையிலேயே பெரிதும் ஈடுபாடு கொண்டு பலமுறை அக்கோயிலைப் பொன் வேய்ந்தனர். இக்காரணங்களால் சேக்கிழார் பெருமான் சிதம்பரம் கோயிலில் ஈடுபட்டுப் பாடியிருத்தல் வேண்டும்.

அறிவு நெறி, அன்பு நெறி, கிரியை நெறி

''தமிழர் கண்ட இறையன்பு (பக்தி)'' என்ற பதினெட்டாவது பகுதி : ''ஆன்மீக வழியில் செல்பவர்கள் மூன்று பிரிவுகளில் அடங்குவர்.''

1) அறிவு வழியில் ஆழ்ந்து இருத்தல் (தத்துவவாதிகள்) 2) மன உணர்ச்சி மிகுந்தவர்கள் பக்தி நெறியில் நிற்றல். 3) கிரியைகள் மூலம் செயல்படுதல் (பட்டினி, தல தரிசனம்). அறிவு, ஈடுபாட்டை ஏற்படுத்தாது; உணர்வு மூலம் எற்படுகின்ற பக்தியில் விளைகின்ற இன்பத்தை அறிவுவாதம் தர முடியாது. உணர்வு மூலம் செல்லும் வழி மனிதன் விரும்பிய வழியில் செல்வதற்கு வேண்டிய மன உறுதியையும் நெஞ்சு உரத்தையும் தருகிறது. கிரியா மார்க்கம் எவ்விதப் பயனையும் தராமல் சாதகனைப் புறப்பட்ட இடத்திலேயே இருக்குமாறு செய்து விடுகிறது.

ஞானம் விளைந்து பக்தியாக முதிர்தல்

அறிவு (knowledge), உணர்ச்சி (Feeling), மனத்திட்பம் (will) என்ற மூன்றும் தம்முள் அளவொத்து அமைய வேண்டும். முதல் வழியில் அறிவு விரிந்து செல்லச் செல்ல ''நான் உண்மையைக் காண முயல்கிறேன் உண்மையைக் காண என்னால் முடிகிறது'' என்ற அகங்கார வளர்ச்சி ஏற்படுவதைத் தடை செய்ய முடியாது. எனவே தான் இராமானுஜர் ஞானம் விளைந்து பக்தியாக முதிர்வதைப் பெரிதும் பாராட்டினார். முதிர்ந்த பக்தியில் பரஞானம் இருக்கத்தான் செய்கிறது. பரஞானம் இருப்பதால் ஆலய வழிபாடு முதலியவற்றை இது தடை செய்வதில்லை. மேலும் மக்களுள் பெரும்பாலோர் தம்முடைய உணர்ச்சிகட்கு அடிமையாய் இருத்தலின் பக்தி மார்க்கத்தை அவர்கள் ஓரளவு எளிதாகக் கடைப்பிடித்துக் காட்ட முடியும். எந்த உணர்ச்சிக்கு அவர்கள் ஆட்பட்டுள்ளார்களோ அந்த உணர்ச்சியின் பற்றுக் கோட்டை மாற்றி அமைப்பதன் மூலம் உணர்ச்சிப் பிண்டமாக உள்ள ஒருவன் பெரும் பக்தனாக மாறிவிட வாய்ப்புகள் மிகுதியாக உண்டு. இதனையே 'மடைமாற்றம்' (Transformation) என்று கூறுவர்.

பக்தனுடைய அனுபவம்

''மின் ஆற்றல் உடைய இரண்டு முனைகள் சேர்ந்துவிடாமல் இடையே தடைப்பொருள் (Insulation) இருக்கிறது.

இந்த இரு பொருள்களும் ஒன்றையொன்று நெருங்குமானால் ஒரு குறிப்பிட்ட தடையையும் தாண்டிச்சென்று மின் ஆற்றல் அதிகம் உள்ள முனையிலிருந்து குறைந்துள்ள முனைக்குப் பாய்கிறது. அதேபோல, ஆன்மா பரம்பொருளை நோக்கி நெருங்க நெருங்க இடையே உள்ள தடைப்பொருள்களாகிய உடம்பு, உலகம் என்ற அனைத்தையும் தாண்டிக் கொண்டு இறையருள் ஆன்மாவிடம் பாய்கிறது.

சேக்கிழார் திருக்கூட்டச் சிறப்பிலே அடியார்களுக்குக் கூறும் இலக்கணங்கள் வருமாறு :

1) அடியவர் மேனி மேல் நீறு பூசியுள்ளனர்.
2) அகில காரணர் தாள் பணிபவர்.
3) கைத்திருத்தொண்டு செய்கடப் பாட்டினார்.
4) உள்ளும் புனிதர்கள்.
5) மாதொர்பாகர் மலர்த்தாள் மறப்பிலார்.
6) கோதிலா குணப் பெருங்குன்றனார்.
7) கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்.
8) ஓடும் செம்பொனும் ஒக்க நோக்குவார்.
9) கும்பிடலேயன்றி வீடும் வேண்டா தவர்.
10) ஆரம் கண்டிகை ஆடைகந்தை.
11) பாரம் ஈசன் பணி அலது ஒன்றிலார்.
12) ஈர அன்பினர்.
13) யாதும் குறைவிலார்.
14) வீரர்.

இவற்றில் 1, 5, 10–இல் பாதி – ஆரம் கண்டிகை மட்டும் சைவர்க்கு உரியவை ஆகும். ஏனைய 11½ இலக்கணங்கள் எந்த நாட்டுப் பக்தருக்கும் எந்த சமயத்தைச் சேர்ந்த பக்தருக்கும் பொருந்தும். இவை அனைத்துலகுக்கும் பொதுவான இலக்கணங்கள் ஆகும். (Universal Definition) சேக்கிழார் பார்வை அனைத்துலகப் பார்வை என்று இதனால் புலனாகிறது.

இந்த அனைத்துலகப் பார்வைக்கு முன்னோடி சுந்தரமூர்த்தி சுவாமிகளே ஆவார். இவர் அடியார்களைப் பற்றிப் பாடும் பொழுது ''பத்தராய்ப் பணிவார்'' என்ற பாடலில் கீழ்வரும் கூட்டத்தாரைப் பற்றிக் கூறுகின்றார்.

1) பத்தர்களாகிப் (இறைவனைப்) பணிகின்றவர்கள்.
2) பரமனையே பாடுகின்றவர்கள்.
3) சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர்கள்.
4) திருவாரூர்ப் பிறந்தவர்கள்.
5) மூன்று வேளையும் திருமேனி (இறைவன் திருவுருவை) தீண்டுபவர்கள்.
6) முழு நீறு பூசிய முனிவர்கள்.
7) அப்பாலும் அடிசார்ந்தவர்கள்.

இதில் 3, 6 மட்டுமே சைவர்களைக் குறிப்பன. 5 உருவவழிபாடு செய்யும் அனைத்துச் சமயத்தாரையும் குறிக்கும். ஏனைய நான்கும் உலகில் உள்ள எல்லாப் பக்தர்களுக்கும் பொருந்தும். ''அப்பாலும்'' என்றால் காலம், தேசம் இரண்டிற்கும் அப்பால் என்ற பொருளாகும். அதாவது இந்த உலகில் மட்டுமன்று, இறைவன் படைத்த அண்டத்தில், எந்தக் காலத்திலும், இறந்த காலத்திலோ, இன்றோ, நாளையோ வாழ்பர்கள் இறைவன் திருவடியை நாடுபவர்களாக இருப்பினும் அவர்கட்கும் தாம் அடியேன் என்றல்லவா சுந்தரர் பாடுகிறார். இதைவிட அனைத்துலகத்தையும் தழுவிய பார்வையை வேறு எங்கே சென்று தேட முடியும்? இந்த நுணுக்கத்தைச் சேக்கிழார் தெரிந்து கொண்டார்.

''பெரிய புராண அமைப்பு'' என்ற பத்தொன்பதாவது பகுதி; ''காப்பியக் கதையைத் தேர்ந்தெடுத்ததில் மில்டனும் சேக்கிழாரும் ஒற்றுமை உடையவர்கள். இந்த இரண்டு காப்பியங்களும் மனிதனின் வீழ்ச்சியையும் அவன் மாட்சியையும் முறையே கூறுகின்றன. அதுமட்டுமல்ல. அதுவரை உலகம் முழுவதும் எதனை வீரம் என்று கருதி மரியாதை செலுத்தி வந்ததோ

அதனை ஒதுக்கிவிட்டுப் பொறுமை, சகிப்புத் தன்மை, பிறர் செய்த இன்னா பொறுத்தல், தன்னலத் துறவு, பிறர்க்கு உதவுதல் என்பவையே வீரம் என்று கூறும் புதுமையிலும் இந்த இரண்டு காப்பியப் புலவர்களிடையேயும் ஒற்றுமை காணப்படுகின்றது.''

''மில்டனுக்கு முன்னோடியாக இருந்தவர் வர்ஜில் (Virgil) ஆவார். வீர காப்பியத்தின் இலக்கணங்கட்கு மாறுபட்டு, பக்தியையும் காப்பியத் தலைவன் பண்பாக ஏற்றி, முதல் முயற்சியாகக் கையாளுகிறார் வர்ஜில். ஏனியடிடம் (Aeneid) இன்ப, துன்ப நடுநிலைக் கோட்பாடே (Stoic) இருந்தது. ஏறத்தாழ இந்தக் கோட்பாட்டை உடைய பெண் ஒருத்தியைத் தலைவியாகக் கொண்டு தோன்றியதுதான் சிலப்பதிகாரம். நடுநிலைக்கோட்பாட்டை வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட ஒரு தலைவியை உடைய காப்பியம் மக்களிடைச் செல்வாக்குப் பெறுமா? என்ற சோதனையில் புறப்பட்டதுதான் சிலப்பதிகாரம்.''

''மேனாட்டுக் காப்பியங்களைப் பொறுத்த மட்டில் வர்ஜிலும், இளங்கோவும் தம் தம் முறைகளில் புதுவழி வகுத்தனர். புதுவழிச் செல்வதில் தவறில்லை. சேக்கிழார் புது வழியை வகுத்துக் கொண்டு, தொண்டு என்ற பண்பைக் காப்பியப் பொருளாக்கினார்.

பக்திச் சுவை

''ஒன்பதாவது சுவை'' என்ற இருபதாம் பகுதியில் பெரியபுராணத்தில் எண் சுவைகள் பற்றி எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி 'பக்தி' என்பது ஒன்பதாவது சுவையாகச் சேக்கிழார் பெருமானால் கையாளப்படுகிறது என்று பேராசிரியர் விளக்குகிறார்.

சமுதாய வாழ்க்கை

''பெரிய புராணம் காட்டும் சமுதாய வாழ்க்கை'' என்ற இருபத்தொன்றாம் பகுதியில் பெறப்படும் செய்திகள் :

வரலாற்று இலக்கியம்

''அறுபத்து மூவர் வரலாற்றையே கூறும் என்றாலும் அவர்தம் சரிதம் (Biography), தமிழகச் சமுதாய வரலாறு (Social History), ஆகியவற்றுடன் தமிழ்நாட்டு வரலாறு (History of Tamil Country) என மூன்றையும் ஒரு குறிப்பிட்ட அளவில் ஒன்று கலந்து யாக்கப் பெற்றதே பெரியபுராணம்.

சாதி வேற்றுமை உடைத்தல்

''நாயன்மார் வாழ்ந்த காலங்களில் சாதி வேற்றுமை என்பது சமுதாயத்தில் இருந்திருப்பினும் அதனை உடைத்துச் செல்லும் ஆற்றலும், பழக்கமும் உள்ளவர்கள் நிறைந்து இருந்தனர் என்று கொள்ள இடமுள்ளது.

மன்னர்களிடமும் சமுதாயத்திலும் சமய அழுத்தம் இல்லை

''பல்லவ மன்னன் மகேந்திர வர்மனோ சோழ மன்னர்களோ தம் வெற்றியைப் பாட்டாகப் பாடிக் கல்வெட்டுக்களில் சேர்த்துக் கொண்டனரேயன்றி மூவர் முதலிகளின் அருளிச் செயல்கள் பற்றி ஒன்றும் கூறவில்லை. சோழர்கள் திருக்கோயில்கள் பலவற்றைக் கட்டினது உண்மைதான். ஆனால் அவற்றுக்கு வைத்த பெயர்களைப் பார்த்தால் இக்கோயில்கள் இறைவனுக்காகக் கட்டப்பட்டனவா? அன்றி இவர்கள் வெற்றிச் சிறப்பையும் செல்வச் சிறப்பையும் எடுத்துக் காட்டவா? என்பதும் சிந்தனைக்குரியதாகும். மன்னர்கள் சமய வாழ்வில் அழுத்தம் இல்லாமல் இருந்தமையாலேயே, அக்காலச் சமுதாய மக்களும் அழுத்தம் இல்லாமல் வாழ்ந்தனரோ? என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

வைதிகர் - சைவர் போராட்டம்

ஏழாம் நூற்றாண்டிலிருந்து பனிரெண்டாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் விளைந்த சமய மாறுதல்களைப் பேராசிரியர் அ.ச.ஞா. அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

''சிவனை முழுமுதற் பொருளாக ஏற்காத வேதியர்களைப் பல்லவர்கள் வரவழைத்து – தமிழகத்தில் தொன்று தொட்டு இருந்து வந்த அந்தணர்கள் வேதங் கற்றிருந்தாலும் ஆகமங்களை ஏற்றுக் கொண்டு சிவனையே பரம்பொருள் என்று ஏற்றிருத்தல் – இவர்களுக்கிடையே ஆரவார மில்லாத ஒரு வகையான போராட்டம் – வரவழைக்கப்பட்ட வேதியர்கள் ஒரு காலகட்டத்திற்கு மேல் சிவழிபாட்டை ஒதுக்க முடியாத நிலை – மேலும் சமண வாதிகட்கு எதிராக இவ்விரு வகையினர் இணையும் முயற்சி ஏற்படுதல்– சோழர்கள் காலத்தில் வைதிக சைவ வேறுபாடு பெரிதும் மறைந்து, வேதங்களையும் அதன் அங்கங்களையும் ஆகமங்களுடன் இணைந்து ஏற்றுக் கொள்கிற சூழ்நிலை முற்றிலும் நிலைபெறுதல் – திருஞான சம்பந்தர் தாம் ஒருவராகவே நின்று பழைய வைதிக மார்க்கத்தின் அடிப்படையை இந்நாட்டுச் சைவத்துடன் இணையுமாறு செய்தல் – இந்த இணைப் பின் பயனால் வைதிகர் – சைவர் போராட்டம் ஒழிதல்.''

இவையல்லாமல் இந்த நீண்ட பகுதியில் பேராசிரியர் பெரிய புராண காலத்திய சமுதாய பழக்க வழக்கங்கள், சாதிப் பிரிவுகள், அவை கண்டிக்கப்படுதல், கலப்புத் திருமணம் முதலான செய்திகளைப் பல்வேறு எடுத்துக்காட்டுகளுடன் கூறுகிறார்.

அக்கால கட்ட வைதிகர் – சைவர் போராட்டம் பேராசிரியர் அவர்களின் கவனத்திற்குப் பெரிதும் உட்பட்டுள்ளது. ''கொள்கைப் போராட்டம்'' என்ற தனித் தலைப்பிலே இருபத்திரண்டாம் பகுதியை எழுதியுள்ளார்.

பக்தி இயக்கப் புயல் பத்தாம் நூற்றாண்டில் தளர்ச்சி அடையப் பல காரணங்கள் உண்டு. 8–ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தோன்றிய சங்கரர் தோற்றுவித்த அத்வைதப் புயல் வெகு வேகமாக நாட்டை ஆட்கொள்ளத் தொடங்கியது. அறிவு வாதத்தை அடிப்படையாகக் கொண்ட சைனம், பௌத்தம் என்ற இரண்டின் பிடியிலிருந்தும் சைவம் வெளிவர அன்பை அடிப்படையாகக் கொண்ட நாயன்மாரின் பக்தி இயக்கம் உதவிற்று. மேலும் சைவம், பௌத்தம் இரண்டும் கடவுளை ஏற்க வில்லை. ஆனால் பிரமம் என்ற முழுமுதற் பொருளை நிறுவி விட்டுச் சங்கரர் அத்வைத அறிவுவாதம் பேசும்பொழுது அதனைச் சாடுவது கடினமாக ஆகிவிட்டது. அது மட்டுமல்லாது சங்கரர் சிவானந்த லஹரி, சௌந்தர்ய லஹரி, பஜகோவிந்தம், தட்சிணாமூர்த்தி அஷ்டகம் போன்ற பாடல்களை இயற்றியதன் மூலம் பக்தி மார்க்கத்துக்குத் தாம் பகைவர் அல்லர் என்றும் வெளிப்படுத்திவிட்டார். இதனால் சைவ சமயத்தில் தளர்ச்சியும் வேத மார்க்கத்தின் வளர்ச்சியும் ஏற்பட்டது. இதன் பயனாக அன்பு வழியாகிய பக்தி மார்க்கத்துக்கும் வைதிக அடிப்படையில் தோன்றிய விதி மார்க்கத்துக்கும் ஓர் அமைதியான போட்டி உருவாகி வளரலாயிற்று.

''கோவிலில் வழிபாடு செய்யும் உரிமை பெற்ற சில பிராமணர்கள் தாங்கள் செய்யும் பூஜைக்குப் பழமையான நூல்களில் ஆதாரம் உண்டு என நிரூபிக்க ஆகமங்களை ஏற்றுக் கொண்டனர். வேதம் போற்றும் இந்திரன், அக்கினி முதலியோரை ஆகமங்கள் ஏற்பதில்லை. எனவே கோவில் வழிபாடு செய்யும் சிவபிராமணர்கள் வேதங்களை ஏற்றுக் கொண்டாலும், வாயளவில் நின்றுவிட்டது. ஆனால் வேத வழிபட்ட வைதிகர்கள் வாயளவில்கூட ஆகமங்களை ஏற்கவில்லை.

வைதிகர்களிடையே நடந்த கொள்கைப் போராட்டம் சண்டேசர் புராணத்தில் பேசப்படுகிறது என்கிறார் பேராசிரியர். அதனால் தான் அபிடேகத்துக்குரிய பால் என்று கருதாமல் சண்டேசுரரின் தந்தை பால் குடத்தைக் காலால் எட்டி உதைத்தான் என்கிறார்.

சிவவழிபாட்டிலும் அன்பு வழிபாட்டை ஏற்காத ஆகம வழிபாட்டை மட்டுமே ஏற்பவர்களும் இருந்தனர். இவ்வேறுபாடு கண்ணப்பர் – சிவகோசரியார் வரலாற்றில் காணப்படுகிறது. திருநீலநக்கர் வரலாற்றிலும் நீலநக்கரின் மனைவியார் சிவலிங்கம் மேல் இருந்த சிலந்தியைத் தள்ள வாயால் ஊதினார் எனக்

கூறப்படுகிறது. இங்கு அன்புக்குத் தான் முதலிடம்.

பொய்யடிமை இல்லாத புலவர் – மணிவாசகர்

''வழி நூலும் விரி நூலும் என்ற இருபத்து மூன்றாம் பகுதியில் பொய் அடிமையில்லாத புலவர்'' என்ற திருத்தொண்டத் தொகை வரியை விரிவாக ஆய்கிறார். இவ்வரி சங்கப் புலவர்களைக் குறிக்கும் என்ற நம்பியாண்டார் நம்பி கருத்தினை மறுக்கிறார். ''பொய்யன்'' என்ற தன்னைப் பல இடங்களில் மணிவாசகப் பெருந்தகை கூறிக் கொள்வதையும், அடியார் வரலாறுகளை மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது மனதில் பதியும் கருத்துக்கள் தவாறானவையாகவும், ஆழ்ந்து கவனிக்கும்போது உண்மை புலப்படும்படியாகவும் ஆரூரர் அடைமொழிகள் வழங்குவதைச் சுட்டிக் காட்டுவதையும் ''பொய்யடிமை இல்லாத புலவர்'' மணிவாசகராக இருக்கலாம் என்கிறார் பேராசிரியர். தண்டியடிகள் வரலாற்றை மேலோட்டமாகப் பார்த்தால் பார்வையற்றவர் எனத் தெரியவரும். அவருக்கு ''நாட்டமிகு தண்டி'' என்று அடைமொழி கொடுக்கிறார். அதுபோல ''ஆவணி மூலத்தில் குதிரைகள் வரும் என்ற மணிவாசகர் கூற்று பொய்யாகத் தோன்றும். இக்கருத்தினை நீக்க 'பொய்யடிமை இல்லாத புலவர்' என்ற அடைமொழியைப் பயன்படுத்தியிருக்கலாம். சேக்கிழாருக்கு இக்கருத்து தெரிந்திருந்தும் நம்பியாண்டார் நம்பியை மறுக்க முடியவில்லை. எனவே 'சங்கப் புலவர்' என்ற நம்பி கருத்தை ஏற்காமல் 'இறைவன் புகழ்பாடும் அடியவர்' என்று குறிப்பாக விட்டு விடுகின்றார்.

''புலமைநயம்'' என்ற இருபத்து நான்காவது பகுதியில் சேக்கிழாரை பிற காப்பியப் புலவருடன் ஒப்பிடுதல் கூடாது என்று கூறி அதற்கான காரணங்களைப் பேராசிரியர் முன் வைக்கிறார்.

1) கம்பனுக்குக் கிடைத்தது போன்ற கதை சேக்கிழாருக்குக் கிடைக்கவில்லை.

2) காப்பியம், இலக்கியமாக விளங்க வேண்டும் என்பதே கம்பனின் தலையாய குறிக்கோள் ஆகும். சேக்கிழாரின் குறிக்கோளோ மக்கள் வாழ்க்கையில் ஒரு குறிக்கோளுடன் வாழ்வது ஆகும்.

3) பிற காப்பியப் புலவர்கள் எடுத்துக் கொண்ட பொருள் கற்பனையில் விளைத்தது. எனவே தம் விருப்பம்போல் கற்பனையை வளர்க்கவும், பாடவும் முடிந்தது. பெரியபுராணம் வரலாற்றுக் காப்பியம். எனவே வரலாற்றுக்கு உட்பட்டே பாட வேண்டிய சூழ்நிலை.

4) மன்னனை மாற்ற மட்டுமே சேக்கிழார் பாடியிருந்தால் ஞானசம்பந்தர் வரலாற்றை மட்டுமே பாடியிருக்கலாம். மக்கள் மனதை மாற்ற சேக்கிழார் விரும்பினார். அதனால் சாதாரண மக்கள் எனக் கருதப்பட்ட 63 தொண்டர்களின் உதிரிக் கதைகளை எடுத்துக் கொண்டார்.

5) பெரிய புராணத்தின் பாவிகம் ''தொண்டில் விளைந்த வீரம்'' ஆகும்.

6) ''சொல் புதிது, பொருள் புதிது, சுவை புதிது'' என்ற பாரதி கூற்றுக்கு இலக்கணமாய் விளங்குவது பெரிய புராணம் ஆகும்.

சேக்கிழார் தன் காவியத்தில் காட்டிய புதுமைகளாகப் பின்வருவனவற்றை அ.ச.ஞா. அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

1) காப்பியத்தில் அதுகாறும் பின்பற்றப்பட்டு வந்த உயர்வு நவிற்சியை விட்டு விட்டுத் தன்மை நவிற்சியைப் பின்பற்றியது.

2) காப்பியத்துக்கேற்ற சூழ்நிலையை அமைத்தல்.

3) நாட்டு வருணனை, ஆற்று வருணனை ஏன் பரத்தையர் வீதியைக் கூடப் பக்தி நலத்துடன் வருணித்தல்.

4) பாத்திர உரையாடலைக் கூறும் பொழுதே கூட அவற்றில் எண்ண ஓட்டங்களைக் குறிப்பாக விளக்குகிறார்.

5) மனவியல் அறிஞராகக் காட்சி தருகிறார் (பைரவர் – சிறுத்தொண்டர் உரையாடல்)

6) வழக்குகளை விசாரிப்பதில் வழக்கறிஞராகவே ஆகிவிடுகிறார்.

7) உவமை கூறுவதில் இணையற்ற தன்மை; உருவகம் செய்யும் ஆற்றல்; இயற்கையின் இறந்த நிகழ்ச்சிகளை இயல்பாகக் கூறும் தன்மை; ஓசை நயம் அமையப் பாடும் திறம்; பொருளை ஓசையாலும் அகராதிப் பொருளாலும் விளக்கும் திறம்; ஓசையை மாற்றுவதன் மூலம் விளைவை ஏற்படுத்துதல்; தேவாரப் பதிகங்களுக்கு விரிவுரை.

பெரிய புராணத்திற்கு இந்நூல் போன்ற முழுமையான ஆய்வு இதுவரை வந்தது மில்லை. இனி வரப்போவதுமில்லை. நமக்குப் பெரியபுராணத்தில் என்னென்ன ஐயங்கள் வருமோ அத்தனைக்கும் பேராசிரியர் அவர்கள் விடை தந்துள்ளார்கள். வரலாற்றில் நிகழ்ந்த சில சிக்கலான முரண்பாடுகளுக்கு துணிச்சலாக விளக்கம் தந்துள்ளார்கள். இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த சைவ நூல்களுள் இந்நூல் இடம்பெறும் என்பதில் ஐயமில்லை.

43

பதினோராம் திருமுறைத் திறன் - 1987

(ஆசிரியர் – டாக்டர் வெ.சு.அழகப்பன்; பக்கம் – 352; விலை – ரூ.40/-)

பொருளடக்கம்

1) ஆசிரியர்கள் வரலாறும், காலமும்.

2) பதினோராந்திருமுறையின் இலக்கிய வகைகளும், யாப்பும்.

3) பதினோராந் திருமுறை ஆசிரியர்களின் இலக்கியப் போக்கு.

4) பதினோராம் திருமுறையில் அகத்திணை.

5) சமயக் கருத்துக்கள்.

44

அறுவகைச் சமயம் - சைவ சித்தாந்தம் ஒப்பீடு - 1988

(ஆசிரியர் – கு.சுந்தரமூர்த்தி, வெளியீடு- தருமையாதீனம்; பக்கம் – 238; விலை – ரூ.12/-)

சைவ சித்தாந்த மாலை நேரக் கல்லூரி பாடத்திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட நூல் ஆகும் இது.

இந்நூல் உலகாயதம், பௌத்தம், சமணம், தருக்கம், மீமாம்சை, ஏகான்ம வாதம், சாங்கியம், யோகம், வைணவம், பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வயிரவம், ஐக்கிய வாத சைவம், பாடாண வாத சைவம், ஈசுவர அவிகார பாதசைவம், சிவாத்துவித சைவம், கிறிஸ்துவம், இசுலாம் ஆகிய புறப்புறச் சமயங்கள், புறச் சமயங்கள், அகப்புறச் சமயங்கள், அகச் சமயங்கள் பற்றிய தத்துவ விளக்கங்களும் அவற்றின் மதிப்புகளும் கூறப்பட்டுள்ளன.

45

இந்துக் கலைக் களஞ்சியம்

பகுதி *1 – 1990*
பகுதி *2 – 1992*
பகுதி *3 – 1996*
பகுதி *4 – 1998*

(இந்து சமய, இந்து கலாச்சார இராஜாங்க அமைச்சு, கொழும்பு – 2.)

சைவ சமயத்திற்கு ஈழம் தந்த கொடை இந்நூற்றொகுதி எனலாம். சைவம் தோன்றிய தமிழ்நாட்டிலேயே கூட இப்படி ஒரு முயற்சி எடுக்கப்படவில்லை. சைவம் என்றில்லாமல் இந்துக் கடவுளர், பெரியோர், நாடு, தலம், நூல், சஞ்சிகை, விழா, விரதம் ஆகியன இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

பகுதி 1 (அ முதல் ஈ வரை)

பதிப்பாசிரியர் பொ. பூலோகசிங்கம்

பக்கங்கள் *236*, விலை ரூ. *250/-* (இலங்கை ரூபாய்)

இத்தொகுப்பினை பேராசிரியர் பூலோக சிங்கம் தனியொருவராகச் செய்து முடித்துள்ளார். முதல் தொகுப்பிலே 670 தகவல்கள் தந்துள்ளார்.

அக்கமகாதேவி, அக்கினி புராணம், அகச்சமயம், அகத்தியர் தேவாரத்திரட்டு, அகத்தியான் பள்ளி, அகப்புறச் சமயம், அகப்பேய்ச்சித்தர், அகிலேச பிள்ளை, அகோர சிவாசாரியார், அகோரபத்ததி, அகாரமூர்த்தி, அச்சிறுபாக்கம், அசலாம்பிகை அம்மையார், அசுத்தமாயை, அஞ்ஞானக் கும்மி மறுப்பு, திரு அஞ்சைக்களம், அட்டசுயம்புத்தலம், அட்டமூர்த்தி, அட்டவீரட்டானம், அட்டாங்க யோகம், அடங்கன் முறை, திருவண்ணாமலை முதலான தலங்கள், அண்ணாமலைக் கோவை முதலான நூல்கள், அத்துவசுத்தி, அத்துவிதம், அதர்வவேதம், அதிபத்தர், அதிரா அடிகள், அதிவீரராம பாண்டியன், அந்தகக் கவி வீரராகவ முதலியார் போன்ற புலவர்கள், அந்தக்கரணம், அநபாயன் முதலான அரசர்கள், அநுபூதி, அப்பர் சுவாமிகள், அப்பர், தேவாரம், அபரமுத்தி, அர்த்த நாரீச்சுவரர், அரசஞ் சண்முகனார் போன்ற அண்மைக்கால சைவ அறிஞர்கள், அவத்தை, அறுபத்துநான்கு திருவிளையாடல், அறுபான் மும்மை நாயன்மார், அறுவகைச் சமயம், அறுவகை தரிசனம், அனாவர்த்தம் அஜபாநடனம், ஆகமம், ஆகாமியம், ஆங்கர்வாட், ஆச்சிரமம், ஆடிப்பூரம் போன்ற விழாக்கள், ஆணவம், ஆறுதத்துவங்கள், ஆறுபடைவீடு; ஆறுமுகம், ஆன்மா, ஆனந்த தாண்டவம், ஆனைக்கா உலா, இட்டலிங்கக் குறுங்கழிநெடில், இடபாரூடர், இலிங்கம் முதலான 670 கட்டுரைகள்.

பகுதி 2 (உ - ஔ)

பதிப்பாசிரியர் – சி. பத்மநாபன் (பக்கங்கள் 198) ... விலை ரூ. 250/-

400 சொற்களுக்கான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. உக்கிரசிரபன் போன்ற புராணப் பாத்திரங்கள், உக்கிரபாண்டியன் போன்ற அரசர்கள், உசாத்தானம் போன்ற தலங்கள், உண்மை விளக்கம் போன்ற சாத்திர நூல்கள், உத்தர மீமாம்சை போன்ற தத்துவ நூல்கள், உத்தர சைவம் காஷ்மீர சைவம் போன்ற சமய நெறிகள், சோடாசோபசாரம் போன்ற வழிபாட்டு முறைகள், உபநிடதங்கள், உமாபதி சிவம் போன்ற பண்டை அருளாளர்கள், உயிர் போன்ற தத்துவ விளக்கங்கள், ஏகதாளம் போன்ற இசை வகைகள், ஊரன் அடிகள் போன்ற தற்கால சைவப் பெரியார்கள் பற்றியெல்லாம் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. திருவொற்றியூர் போன்ற தலங்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது எப்பொழுதும் கூறப்படும் புராணச் செய்திகள், தலவரலாறுகள் மட்டுமல்லாது அத்தலம் பற்றிய அனைத்துக் கல்வெட்டுச் செய்திகளும் குறிப்பிட்டுள்ளது அருமைப்பாடு உடைத்து. ''ஓம்காரம்'' பற்றிய நான்கு பக்க விளக்கத்தில் பல செய்திகள் வேறெங்கும் காண முடியாதவையாகும்.

பகுதி 3 (க)

பதிப்பாசிரியர் – சி. பத்மநாபன் (பக்கங்கள் 256)

இதில் 146 கட்டுரைகள் உள்ளன. கங்காளமூர்த்தி போன்ற மூர்த்தி பேதங்கள், கங்கை போன்ற நதிகள், கங்கை கொண்ட சோழன் போன்ற அரசர்கள், கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது போன்ற இலக்கியங்கள், கண்கட்டி மறை ஞானசம்பந்தர் போன்ற அருளாளர்கள், கதகளி போன்ற நடன வகைகள், சுவை போன்ற தத்துவ விளக்கங்கள், திரு. வி. கலியாண சுந்தரர் போன்ற அண்மைக்கால பெரியார்கள் பற்றி இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அரிய படங்களும் உள்ளன.

பகுதி 4

பதிப்பாசிரியர் – சி. பத்மநாபன் (பக்கங்கள் - 236)

இதில் 160க்கும் மேற்பட்ட கட்டுரைகளும், படங்களும் உள்ளன. காசி போன்ற தலங்கள், காசிக்கலம்பகம் போன்ற இலக்கியங்கள், காசிபர்போன்ற புராணச் செய்திகள், காட்சியளவை போன்ற தத்துவ விளக்கங்கள், காணாபத்யம் போன்ற சமய நெறிகள், காம்போதி போன்ற இசைக்

குறிப்புகள், காமிகாகமம், காழித்தாண்டவராயர் போன்ற அருளாளர்கள், கும்பாபிஷேகம் போன்ற வழிபாட்டு முறைகள், குமாரசுவாமிப் புலவர் போன்ற அண்மைக் கால அறிஞர்கள் பற்றி இந்நூலில் கூறப் பட்டுள்ளன.

காயத்ரீ மந்திரம் பற்றி விரிவாக எழுதப் பட்டுள்ளது. காயத்ரீ மந்திரத்தில் 24 எழுத்துக்களை உச்சரிக்கும் பொழுது 24 தெய்வ சக்திகள் விழிப்படைகின்றன. 24 தெய்வ சக்திகளும் 24 நன்மைகள் தருகின்றன. 24 மந்திர எழுத்துக்களின் பீஜ அட்சரங்கள், 24 எழுத்துக்களுக்குரிய தேவதைகள், பலன்கள், 24 தெய்வ காயத்ரீ மந்திரங்கள் அவற்றை எப்படி ஜபிக்க வேண்டும் என்றெல்லாம் கூறப்பட்டு உள்ளது.

காவடி பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. காவடியாட்டத்தின் தோற்றம், காவடி என்ற சொல்லின் விளக்கம், காவடி எடுப்பதன் காரணம், காவடி எடுப்பவரின் பண்பு, காவடியின் அமைப்பு, காவடி வகைகள், காவடியாட்டத்தில் இசைக் கருவிகள், காவடியாட்டத்தில் காவடிச்சிந்து, காவடியின் தத்துவ விளக்கம், ஈழம், மலேசியா, தமிழ்நாடு, சிங்கப்பூர், சுமத்ரா தென்னாப் பிரிக்காவில் காவடி என விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

46

சிவ வடிவங்கள்

(ஆசிரியர் மா. சிவகுருநாத பிள்ளை; வெளியீடு : தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை; பக்கங்கள் – *324*; விலை ரூ. *50/-*)

இந்நூல் சிவவடிவங்கள், அருஉருவம், உருவம், அருவம், இலக்கிய வடிவம் என ஐந்து இயல்களைக் கொண்டது.

சிவலிங்கம் பற்றிய தத்துவக் கருத்துக்கள், அறிவியற் கருத்துக்கள் சிவலிங்கத்தின் அமைப்புப் பற்றி யெல்லாம் விரிவாகக் கூறுகிறது. எடுத்துக் காட்டாக பாணத்தின் அளவுத்தோற்றம் எட்டு வகை இலிங்கங்கள் என்று அவற்றின் பெயர்களைக் கூறி, அந்த அளவுகளும் கூறி ஒவ்வொன்றும் பூமிக்குள் – ஆவுடைக்குள் – உச்சியில் எத்தனை பாகம் இருக்கும் என்று கூறி, இத்தகைய இலிங்கங்கள் தமிழ் நாட்டில் எங்கெங்கு இருக்கின்றன என்றும் (படங்களுடன்) விளக்கிக் கூறுகிறார். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. இதுபோல ஒவ்வொரு செய்தியும் மிக விளக்கமாக ஆகம, தத்துவ, இலக்கிய அடிப்படைகளில் விளக்கப் படுகிறது.

அடுத்து ‘லிங்கம் செய்பொருள்கள்’ தலைப்பில் லிங்கம் எவ்வெவற்றால் செய்யப்பட்டுள்ளன என விரிவான விளக்கம்; எண் வகை சிவவடிவங்கள் (அட்டமூர்த்தம்), முகலிங்கங்கள், பிர்ம லிங்கம் முதலான ஒன்பது லிங்கங்கள், பன்னிரு சோதிலிங்கங்கள், தமிழ்நாட்டுக் கோவில்களில் லிங்கங்கள், லிங்கத் தொகுதிகள் என்று இரண்டாம் இயல் முடிகின்றது.

மூன்றாம் இயலில் (உருவம்) மூவகைச் சிற்பங்கள், முக்குண வடிவங்கள், மூவகைக் கோலவடிவங்கள், சிவவடிவ உறுப்புகள், அணிகள், திருக்கையிலுள்ள பொருள்கள், சதாசிவ வடிவம், மகேசுவர வடிவங்கள் (*25*), சிவபராக்கிரமத்தில் 64 வடிவங்கள், அட்டவீரட்ட வடிவங்கள் இடம் பெற்றுள்ளன.

நான்காம் இயலில் (அருவம்) தியான வடிவம், மந்திரவடிவம், யந்திர வடிவங்கள், எழுத்து வடிவம், ஆகம வடிவம் இடம் பெற்றுள்ளன.

ஐந்தாம் இயலில் (இலக்கிய வடிவம்) திருவிளையாடற்புராணத்தில் சிவவடிவம், திருத்தொண்டர் புராணத்தில் சிவவடிவம், பெண் வடிவம், சரபம் போன்ற பிற வடிவங்கள், இயற்கை வடிவங்கள் (உ.ம். வேப்பங்கனியும் சிவலிங்கம்) செயற்கைப் பொருள் வடிவம் ஆகிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

மொத்தத்தில் இந்நூல் சிவவடிவங்கள் பற்றிய களஞ்சியம் எனலாம். இந்நூலைப் படித்துப் புரிந்து கொள்ளவே தனித்தகுதி வேண்டும். அத்துணை ஆழமும், நுண்மையும் உடைய நூலாகும்.

47

இந்தியச் சிந்தனை மரபு (1993)

(ஆசிரியர்கள் : நா. சுப்பிரமணியன் கௌசல்யாசுப்பிரமணியன் : வெளியீடு – சவுத் ஏசியன் புக்ஸ் : பக்கங்கள் 216: விலை : ரூ. 45.00)

இந்தியச் சிந்தனை மரபு வேத மரபு என்றும் அதற்குப் புறம்பான சிந்தனைகளாகவும் பிரிந்து வேதகாலம் தொட்டு குன்றக்குடி அடிகளார் வரை எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதனை முழுமையாக இந்நூல் காட்டுகிறது. அவ்வக்காலத்தில் எழுந்த சிந்தனையின் விழுப்பொருள், அச்சிந்தனை எழுந்த சூழல், ஏன் எழுந்தது? எதனால் எழுந்தது? அச்சிந்தனையால் நிகழ்ந்த சமூகத் தாக்கங்கள், அச்சிந்தனையின் குறை நிறைகள் ஆகியவற்றைப் பாரபட்சமின்றி எடுத்துரைக்கும் முதல் நூல் இதுவாகும்.

இந்நூல் வேதமரபும் அதற்குப் புறம்பான சிந்தனைகளும், கீதையும் குறளும், பக்திநெறியும் தத்துவ விரிவும், மரபு – தேசிய – ஆன்ம நேயம் என நான்கு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இயல் 1 : வேதமரபும் அதற்கு புறம்பான சிந்தனைகளும்

இறைச் சிந்தனை, உயிர் பற்றிய வேத சிந்தனையை இவ்வியலின் தொடக்கத்தில் ஆசிரியர் கூறுகிறார். ''வேத கதையிலிருந்து உபநிடதங்கள் வரையான சிந்தனை வரலாற்றை நோக்கினால் தொடக்கத்திலே நம்பிக்கை, வழிபாடு ஆகிய நிலைகளில் மிகுதியும் ஈடுபாடு கொண்டிருந்த சமுதாயம் காலகதியில் அறிவுத் தேட்டம், புலனொடுக்கம், ஒழுக்க நெறிகள் என்பவற்றில் நாட்டம் கொள்ளத் தொடங்கியமையை அவதானிக்க முடிகிறது. பிற்கால உபநிடதங்களில் – குறிப்பாக முண்டக உபநிடதத்தில் வேள்வி முறைகட்கு எதிரான கண்டனக்குரல் ஒலிப்பதைக் கேட்க முடிகின்றது.

புராணங்கள், ஆகமங்கள் எழுந்த சூழல்

''இச்சிந்தனைகள் (இறை, உயிர்) சராசரி பொது மனிதனுக்குச் சென்று சேர அக்காலத்தில் வாய்ப்பு இருந்ததா என்று தெரியவில்லை. எனவே, புராணங்களும் இதிகாசங்களும் எழுந்தன. வேத மரபு பௌராணிகமாகப் பரிணாமம் பெறத் தொடங்கிய காலகட்டத்தில் பல்வேறு சமயக் கூறுகளின் கோட்பாடு அடிப்படைகளையும் ஆலய அமைப்புடன் அமைந்த வழிபாட்டு முறைகளையும் வரையறை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனை ஆகமங்கள், தந்திரங்கள் என்பன ஆற்றின.''

வேத மரபுக்குப் புறம்பான சிந்தனைகள்

''வேத இலக்கியத்தின் சிந்தனைகளின் வரலாற்றுக்கு அப்பாலான சிந்தனைகள் பலவும் உருவாகி வளர்ந்து வந்துள்ளன. இவற்றுட் சில வேதமரபு தழுவியனவாகத் தம்மை இனங்காட்டிக் கொண்டாலும் அம்மரபின் அடிப்படைகள் சிலவற்றில் முரண்படுபவை. இன்னொரு வகையின வேதமரபுக்கும் புறம்பாக நிலவிய சிந்தனைகள். மேற்சுட்டியவற்றுள் முதல் வகையில் அமைவன சாங்கியம், யோகம், வைசேடிகம், நையாயிகம், (பூர்வ) மீமாம்சை ஆகிய ஐந்துமாகும். இரண்டாவது வகையில் உலகாயதம். சமணம், பௌத்தம் ஆகியன அமைவன.''

''வேதமரபு தழுவி அமைந்தனவாக அறியப்படும் இச்சிந்தனைகள் (சாங்கியம் முதலான ஐவகை தரிசனங்கள்) அடிப்படையிலே வேத மரபின் முதன்மைக்கூறான கடவுள் அல்லது பிரம்மம் தொடர்பான சிந்தனைகளுக்கு அப்பாலான வேறொரு வேதமரபுச் சூழலில் பெற்ற தொடர்புகளால் இவற்றில் கடவுட் சிந்தனை இடம் பெறத் தொடங்கியிருக்கலாம்.''

வேத மரபுக்கு மாறான சமணம்:

''சமணரின் அஹிம்சை நோன்பு வேத மரபு சார்ந்ததான (உயிர்ப் பலியோடு கூடிய) வேள்வி முறைகளுக்கு முற்றிலும் அப்பாற்பட்டது என்பது தெளிவு. அன்றி

யும் வேள்விமுறையின் அடிப்படை நோக்கமாகக் கொள்ளப்படும் உலகியல் சார் தேவைகள் சமணத்தின் புலன் ஒடுக்கம், மெய் வருத்தும் நிலை என்பவற்றால் அர்த்தமற்றவையாகிவிடக் காணலாம். மேலும் சமணர் கடவுள் பற்றிய சிந்தனையிலும் வேதமரபினின்று தெளிவாக விலகி நிற்கின்றமை தெரிகிறது.''

புத்தர் கொண்ட முரண்நிலை :

''வேத மரபுடன் புத்தர் கொண்டுள்ள முரண் நிலைகளில் முக்கியமான இரண்டை இங்கு நோக்கலாம். அவற்றுள் ஒன்று வேத மரபின் கடவுள் அல்லது பிரம்மம் தொடர்பான கருத்து நிலைகளை ஒப்புக் கொள்ளாமை, மற்றது (உயிர்ப்பலியோடு கூடிய) வேத வேள்வி முறைக்கு எதிரான நிலைப்பாடு ஆகும்.''

உபநிடதங்களில் கண்டனக்குரல்:

''இருக்கு வேதகாலத்தில் தொடக்க நிலையில் காணப்பட்ட வேள்வி முறையானது பின்வந்த வேதகாலங்களிலும் பிராமணங்கள் எழுந்த சூழலிலும் மிகப் பெரும் வளர்ச்சி எய்தியது. பெரும் பொருட்செலவிலும் பெருந்தொகையான ஆடு மாடு முதலியவற்றைப் பலியிட்டும் வேள்விகள் நிகழ்த்தப்பட்டன. அதிகார ஆசை, அந்துஸ்துணர்வு ஆகிய உலகியல் நோக்கங்கள் இவற்றுக்கு அடிப்படையாக அமைந்திருந்தன. இவ்வாறான ஒரு (வேத) வேள்விக் கலாசாரத்தைக் கண்டிக்கும் நோக்கை முதன்மைப் படுத்தியே சமணம், பௌத்தம், ஆசீவகம் ஆகிய சிந்தனைகளும் உலகாயதமும் கூட குரல் கொடுத்தன. இவ்வாறு இவை புறத்தே நின்று கண்டித்த மேற்படி வேள்விக் கலாசாரத்தை, வேத மரபுக்கு உள்ளே நின்று திசைதிருப்பும் நோக்கை மேற்கொண்டனவே உபநிடதங்கள் ஆகும். உபநிடதங்களிலே வேள்வி மரபுக்கு எதிரான கண்டனக்குரல் ஒலிக்கிறது.

வேதமரபு சமண, பௌத்தக் கொள்கைகளை உள்வாங்கிய நிலை :

''வேத மரபானது பௌராணிகமாக வளர்ச்சி பெற்ற வரலாற்றிலே சமணம், பௌத்தம் என்பவற்றின் உயர் விழுமியங்களை – அஹிம்சை, நல்லொழுக்கம், துறவு, முதலியவற்றை – தன்னுள் ஏற்றுக் கொண்டது; தன்வயமாக்கிக் கொண்டது. தன்னை வளப் படுத்திக்கொண்டது''

இயல் 2 : கீதையும் குறளும்

''இந்தியச் சிந்தனை வரலாற்றில், மேலே நாம் நோக்கிய வேதமரபு, அதற்குப் புறம்பான சிந்தனைகள் என்பன தொடக்கத்தில் உலகம், உயிர், இறை, அறிவு, ஒழுக்கம் முதலியன தொடர்பான பார்வைகளாக வெளிப்பட்டன. இவற்றுள் சில நாளடைவில் வாழ்க்கைத் தத்துவங்களாக வளர்ச்சி எய்தின. அவ்வாறான வளர்ச்சியின் வரலாற்றிலே உருவான இரு பெரும்நூல்கள் ஸ்ரீமத் பகவத் கீதையும், திருக்குறளும் ஆகும். பகவத் கீதை, வேதமரபின் ஒரு வளர்ச்சிக் கட்டமான பௌராணிக மரபின் வாழ்வியலுக்கு வடிவம் தந்தது. திருக்குறள், வேதமரபு சமணம் பௌத்தம் முதலிய அனைத்து சிந்தனைகளையும் உள்வாங்கி, தமிழ் மரபின் தளத்தில் நின்று, உலகப் பொது மறை எனத்தக்க வகையில் உருப்பெற்றது. இவ்விரு ஆக்கங்களும் இந்தியச் சிந்தனை மரபிலே சிகரங்கள் ஆகும்.''

கீதை தோன்றிய காரணம்

''ஆளும் வர்க்கத்தின் மீதான நம்பிக்கையை வலியுறுத்தவும், வர்ணாசிரம தர்மத்தைக் கட்டிக்காக்கவும் தெய்வ நம்பிக்கையுடன் கூடிய ஒரு தத்துவ விளக்கம் தேவைப்பட்டது. இவ்விரு வகைத் தேவைகளையும் நிறைவு செய்யும் நோக்கில் உருவான நூலே கீதை. இது ஒரு வகையில் வேதமரபின் வாரிசாகவும், இன்னொரு வகையில் புராண மரபின் சாரமாகவும், வேறொரு வகையில் தர்ம சாத்திரங்களை நியாயப்படுத்தும் தத்துவமாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது.''

குறள் தோன்றிய சூழல்

''அடிக்கடி நிகழ்ந்த போர்களால் ஏற்பட்ட அழிவுகள், பரத்தை ஒழுக்கம்

என்பவற்றால் சமுதாயநிலை மிகவும் பாதிப்புற்றிருந்தது. அந்நியராட்சி – களப்பிரர் ஆட்சி - தோன்றுவதற்கான அறிகுறிகள் ஏற்படலாயின. இத்தகையதொரு சூழ்நிலையில் வாழ்க்கை பற்றிய நோக்கு, வாழும் முறை,பேணிக்கொள்ளத் தக்க விழுமியங்கள் (Values), ஒதுக்கத்தக்க குறைபாடுகள் என்பன தொடர்பாக தமிழக மக்கள் மத்தியில் கருத்துக் குழப்பம் நிலவியது. இவ்வாறான ஒரு கருத்துக் குழப்பநிலை உருவான சூழலில் தமிழ்மரபின் மனிதநேய விழுமியங்களில் காலூன்றி நின்று, அயல்மரபின் உயரிய பண்புகளை உள்வாங்கிக் கொண்டு, அனைத்துலக மானுடத்துக்கும் பொதுவானதாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட வாழ்வியல் நூலே திருக்குறள்.''

''உபநிடதம் கூறிய பிரம்ம தத்துவத்தைச் சராசரி மக்கள் நிலைக்கு அறிமுகம் செய்யும் பணியைக் கீதை மேற்கொண்டது.''

குறள் தமிழரின் பாரம்பரிய அன்பையும் அறத்தையும் மீட்டெடுத்து, புதிய காலச் சூழலுக்கு ஏற்ப அறிமுகம் செய்து, தத்துவ நிலைப்படுத்தி, போதனைகளை வழங்க முற்பட்டது.

குறள் - கீதை ஒப்புமை:

''இந்தியச் சிந்தனை வரலாற்றை ஆன்மிகத்துக்கும் உலகாயதத்துக்குமான போராட்ட வரலாறாகக் காண்பது மரபு. ஆன்மீக அணி பிரம்மம் மட்டுமே உண்மை என்ற தீவிர நிலையை நோக்கி வளர்ந்தது. உலகாயதம் உலகம் மட்டுமே உண்மை என்ற நேரெதிர் நிலையில் நின்றது. இவ்விரண்டு அணிகளுக்கும் இடையில் இவற்றின் சிறப்பான கூறுகளை ஏற்று ஒரு மூன்றாவது அணி உருவாகியது. கடவுள், உயிர், உலகம் என்பவற்றை முரண்பாடின்றி ஏற்றுக்கொண்ட இந்த அணி அறம், ஒழுக்கம் என்பவற்றை இவற்றுடன் இசைவித்தது. இவ்வாறு உருவான அணிக்குத் தலைமை ஏற்றுத் தத்துவத்தளம் அமைத்த பெருமைக்குரிய ஆக்கங்களே கீதையும் குறளும் ஆகும். கீதை வேதமரபின் வாரிசாக வந்து அதனைச் செய்தது. குறள் தமிழ் பாரம்பரியத்தினூடாக வந்து அதனைச் செயற்படுத்தியது. இறை நம்பிக்கை, சேவை மனப்பான்மை, உலகியல் அனுபவங்களை மதித்து ஏற்றல், அறத்தையும் ஒழுக்கத்தையும் வற்புறுத்தல் என்பனவாக இவை ஒருங்கிணைத்த கூறுகளின் இசைவாக்கம் இந்தியச் சிந்தனை வரலாற்றில் தனிக் கணிப்புக்குரியது. இவ்வகையில் இவ்விரு நூல்களும் பதித்துள்ள வரலாற்றுத் தடம் மிக ஆழமானது. இவை இவ்விரண்டின் பொதுமை.''

குறள் கீதை வேறுபாடு

1) கீதை ஒரு சமய நூல். குறளுக்குச் சமய எல்லை இல்லை.

2) கீதையில் வருணச்சார்பு நலன் இருப்பதைக் காணலாம். குறளின் உள்ளீடு ஒட்டுமொத்தமாக மக்கள் நலன் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

3) குறளைப் பொறுத்தவரை கடவுள் என்பது அன்பு அறம் என்பவற்றுக்குப் பற்றுக்கோடான ஒரு உணர்வு நிலை மட்டுமே. ஆனால் கீதையில் கடவுள்தான் யாவுமே என்ற நிலை காணப்படுகிறது.

4) கீதை வாழ்க்கையை முழுநிலையில் தரிசிக்கவில்லை. அது ஒரு பிரச்சினையை மையப்படுத்தி நின்றே தன் பார்வைக்கு எட்டிய வரையில் நோக்கியது. குறளின் பார்வைப்பரப்பு மிகப்பெரியது. கீதையில் ஒருவர் தமக்குரிய கடமை எது எனத் தீர்மானிப்பதற்கான உரிமை வழங்கப்படவில்லை. கண்ணன் – சமூக நலத்தின் ஒட்டு மொத்த வடிவாக நின்று கட்டளையிடுகிறான். அர்ச்சுனன் அதனை ஏற்றுக் கொள்கிறான். ஆனால் குறளில் சுய அறிவைப் பயன்படுத்தித் தனது முடிவுகளை மேற்கொள்ளும் உரிமை புலப்படுத்தப்பட்டுள்ளது. 'எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்' அறிவால் மெய்ப்பொருள் காணும்படி அது கூறுகின்றது.

5) இவை எல்லாவற்றுக்கும் மேலாகக் குறளில் காணப்படும் முக்கிய உணர்வோட்

டம் சமகால சமுதாயத்தின் ஆதிக்க சார்பான நிலைகளுக்கு எதிரான தெளிவான நிலைப்பாடு ஆகும்.

இயல் 3 : பக்திநெறியும் தத்துவ விரிவும் பக்தி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்:

''வேத இலக்கியத்திலே கடவுள் மீது கொண்ட அன்புணர்வாகப் புலப்படத் தொடங்கிய பக்தியானது கீதையிலே முழு ஒப்படைப்பாக எய்திய வளர்ச்சியைக் கடந்த இயலில் அவதானித்தோம். தனி மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையிலான இந்த உணர்வானது ஒரு மக்கள் இயக்கமாகப் பரிணாமம் பெற்ற நிலையே பக்தி இயக்கம் ஆகும்.''

கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் பௌத்தமும் கி.பி. 6 ஆம் 7 ஆம் நூற்றாண்டுகளில் சமணமும் செல்வாக்கு பெற்றிருந்தன. வேத மரபுசார் சிந்தனைகளும் மக்கள் மத்தியில் படிப்படியாகச் செல்வாக்கு பெறத் தொடங்கின. இவ்வாறு பல்வேறு மதங்களும் தத்தம் செல்வாக்கைப் பரப்பி வந்த ஒரு சூழலில்தான் திருக்குறளில் அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்ட வாழ்வியல் நோக்கம் முன் வைக்கப்பட்டிருந்தது. அந்நோக்கு மனிதநேய அடிப்படையில் மிக உயர்வானதாகக் கருதப்பட்டதாயினும் சிந்தனையாளர் மட்டத்தில் பேணப்பட்டு வந்த ஒன்றாகவே தெரிகிறது. சமயச்சார்பான சிந்தனைகளே சமூகத்தின் பல நிலை மக்களதும் செல்வாக்கைப் பெறப் போட்டியிடலாயின. இப்போட்டியில் சைவ, வைணவ சமயங்கள் வெற்றி பெற்ற வரலாறே பக்தி இயக்கத்தின் வரலாறு ஆகும். இவ்வாறு இவை வெற்றி பெற்றமைக்கான காரணிகளில் முக்கியமான சிலவற்றை இங்கு நோக்குவது அவசியம்.

சைவம், வைணவம் வெற்றி பெற்றமைக்கான காரணிகள்:

''சமணம், பௌத்தம் ஆகிய இரண்டும் வாழ்க்கையைத் துன்பியலாக நோக்குபவை என்பதும், வாழ்க்கைக்குப் புறம்பே நின்று அதனை அவதானிப்பவை என்பதும் முன்னரே நோக்கப்பட்டன. இதனால் இவை நோயுற்ற சமுதாயத்துக்கான மருந்தாக சிலகாலம் செல்வாக்குப் பெற்றிருக்கத்தக்கனவேயன்றி உலகியலைத் துய்த்து வாழவிரும்பும் சமுதாயத்துக்கான உணவாக – உணர்வாகத் – திகழவல்லன அல்ல என்பது தெளிவு. மேலும் சமணம், பௌத்தம் என்பன சுட்டும் ஆன்ம விடுதலைகள் முறையே அறிவுநிலை, நிர்வாணம் என்பனவாகச் சுட்டப்படுவன. இவற்றை எய்துவதற்குக் கடும் நோன்பு, பற்றறுத்தல் என்பன அவசியம். ஆனால் ஆகமங்கள், புராண – இதிகாசக் கதைகள் என்பவற்றினூடாக வேதமரபுசார் சமய நிலைகள் சுட்டும் வீடுபேறானது பேரின்பமயமானது எனக் கற்பனை செய்யப்படுவது. இதனை எய்த பக்தி என்ற அன்பு நிலை ஒன்றே முக்கியம். இவ்வாறான நிலை சராசரிமனிதனை சமணம், பௌத்தம் என்பவற்றை விட சைவம், வைணவம் என்பவற்றை நோக்கியே செலுத்த வல்லது என்பது தெளிவு''

நால்வர் நெறி

''தமக்கு முன்னரே தமிழகத்தின் சில பகுதி மக்கள் மத்தியில் கருக் கொண்டிருந்த சைவ பக்திச் செயற்பாடுகளை உரியவாறு பரந்த சமூக மட்டத்துக்கு எடுத்துச் சென்றவர் என்ற வகையில் நாவுக்கரசர் வரலாற்று முக்கியத்துவம் உடையவர் ஆகிறார். நாவுக்கரசர் மேற்படி இயக்கத்திலே ஒரு தொண்டர் என்ற நிலையில் செயற்பட்டவர். நாவுக்கரசர் சமணரின் கொடுமைகளைச் சகிப்புத் தன்மையால் வென்றார்.''

''ஆனால், சம்பந்தர் இயக்கத்தின் தலைவராகவே செயற்பட்டார். சில சந்தர்ப்பங்களில் 'ஆணை நமதே' எனக் கட்டளையிடும் பாங்கிலும் செயற்பட்டவர். மேலும் பாண்டிய நாட்டில் சமணருடன் நேருக்கு நேர் போராடி – பாண்டியனது நோய்குணப்படுத்தியமை, அனல்வாதம், புனல்வாதம் ஆகிய செயற்பாடுகள் என்பவற்றினூடாக – வெற்றி பெற்றவர். அத்துடன் புத்த மதத்தினரையும் தோற்கடித்தவர். இவ்வாறு இவர்களிருவரும்

மேற்கொண்ட பக்தி இயக்கப்பணியைத் தொடர்ந்து மேற் கொள்ள முன் வந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். அவர்களைப் போலவே ஊர்தோறும் நடைப்பயணம் மேற்கொண்டவர். சிவன்புகழைப் பாடுவதோடு அமையாமல் சிவனடியார் புகழையும் பாட முற்பட்ட வகையில் மேற்படி இருவரிலிருந்து இவர் குறிப்பிடத்தக்க அளவு வேறுபட்டவராகிறார். மாணிக்கவாசகர் மேற்படி மூவரையும் விட அனுபவ நிலையில் வேறுபட்டு உயர்ந்து நின்றவர். மேற்படி மூவரும் இறையருளை நாடி நின்றவர்களே. ஆனால் மாணிக்கவாசகர் அந்த அருளைப் பெற்றுத் திளைத்தவர். அவ்வவ்வூர்களில் கோயில் கொண்ட இறைவனைப் பாடுவதே மூவரும் மேற்கொண்ட நடைமுறை ஆகும். ஆனால் மாணிக்கவாசகர் அவ்வவ்வூரின் பழக்க வழக்கங்கள், விளையாட்டுக்கள் முதலியவற்றை அவதானித்தவர். இவ்வகையில் இவர் பாடிய 'திருப்பூவல்லி', 'திருச்சாழல்', முதலிய பாடற் பகுதிகள் குறிப்பிடத்தக்கன. இவை மக்களின் அனுபவத்துக்குள்ளே சைவ சமயத்தை இட்டுச் செல்லும் முயற்சிகள் ஆகும்.''

சராசரி மனிதனைச் சென்றடைந்த சைவநெறி:

துறவு நெறியை முதன்மைப்படுத்தி நின்ற சமணர், பௌத்தர் ஆகியோர் வாழ்ந்த சூழலிலே, நாயன்மார் பலரும் இல்வாழ்க்கையைச் சிறப்பாகப் பேசினர். பக்தியுணர்வு, இறை திருநாமத்தை உச்சரித்தல் ஆகிய இலகுவான அணுகு முறைகளைச் சைவமும், வைணவமும் பேசின. ஒருவர் இறைவன் மீது அன்பு செலுத்துபவராக இருப்பின் அவர் (சூழ்நிலைக் காரணிகளால்) எத்தகு தொழிலைச் செய்ய நேர்ந்தாலும் உய்தி அடைய அவை தடையாகா என்பது பக்தி இயக்கத்தின் அடிநாதமான குரலாக அமைந்தது.

சமகால சமூகத்தின் முரண்பாடுகள் பலவற்றை அவர்கள் நோக்கியுள்ளனர். அவை தொடர்பான தமது மனிதநேய உணர்வலைகளை வெளிப்படுத்தியுள்ளனர். சாத்திரமும் கோத்திரமும் குலமும் பேசி நின்ற அக்கால வருணதர்ம நிலையினரை நோக்கிய கண்டனக் குரலாகவே திருநாவுக்கரசர் குரல் திகழ்ந்தது. பக்திபணியில் பல்வேறு சமூகத்தினரும் சாதி வேறுபாடின்றி – அந்தணரான திருஞானசம்பந்தர் முதல் தாழ்த்தப்பட்டவரான திருநாளைப் போவார் (நந்தனார்) வரை தொண்டக்குலமாகவும் தொழுகுலமாகவும் திகழ்ந்த சூழலுக்கு இந்த மனித நேய உணர்வே அடிநாதமாக அமைந்தது என்பது உய்த்துணரற்பாலது. இந்தத் தொண்டக் குலம் சமூகத்தின் பொய்மையாளரை வெறுத்தது. அப்பொய்மையாளர் பணம் படைத்தவர்களாக இருந்தாலும் அவர்களைப் புறக்கணித்தது. இவ்வாறாக இவையெல்லாவற்றையும் தொகுத்து நோக்கும் போது இந்தியச் சிந்தனை வரலாற்றிலே முதன் முதலாக இக்கால கட்டத்தில்தான் உயர் நிலைச் சிந்தனைகள் சராசரி மனிதனது உணர்வுகளுக்கு மிக நெருக்கமாக வருவதையும் அவற்றுடன் ஒன்றிக்கலக்க முற்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

கோயில்களின் எழுச்சி

கோயில் அமைப்புக்கு அடிப்படையான விக்கிரக வழிபாட்டு முறைமை வேதமரபு சார்ந்ததல்ல. அது வேதகால ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே அங்கு வாழ்ந்திருந்த தொல்குடி மக்கட் குழுவினரிடம் பயின்று வந்த ஒரு முறைமை ஆகும்.

உபநிடதங்களில் கருத்து நிலையில் பேசப்பட்ட பிரம்மத்துக்கு காட்சிப் பரிமாணம் தரமுற்பட்ட புராணங்களும் இதிகாசங்களும் மேற்படி மக்கட் குழுவினரிடம் பாரம்பரியமாக நிலவிவந்த மேற்சுட்டிய உருவவழிபாட்டுக் கூறுகளை உள்வாங்கித் தமது நோக்கை நிறைவு செய்ய முற்பட்டிருக்கலாம். இவ்வாறாக புராண இதிகாச மரபில் தனிக்கவனத்தைப் பெறத் தொடங்கிய விக்கிரக வழிபாட்டுச் சிந்தனை கோயில் என்ற நிறுவனக் கட்டமைப்புக்கு வழி வகுத்தது.

இறைவடிவங்களைப் புனிதமானவையும், இயற்கையெழில் பொருந்தியனவு

மான சூழல்களில் பொருத்தி வழிபடும் நோக்கே இதன் அடிப்படை. மலைச் சிகரங்கள், ஆற்றோரங்கள், கடற்கரைகள் முதலியன இவ்வாறான சூழல்களாகக் கருதப்படலாயின. இவ்வாறான சூழல்களில் கோயில்களை அமைத்து பூஜைகள் புரிவதும், இவற்றை நோக்கி நடைப் பயணங்கள் மேற்கொண்டு புனிதமாகக் கருதப்படும் நீர்நிலைகளில் நீராடி வழிபாடுகளை மேற்கொள்வதும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் பரவலாகக் காணப்படும் செய்திகளாகும். இவ்வாறான நடைப்பயணங்கள், தலயாத்திரை, தீர்த்த யாத்திரை என்பனவாகச் சுட்டப்பட்டன.

கலைபயில் கூடங்கள்

மேற்சுட்டியவாறு மக்களின் நடைமுறை வாழ்க்கையுடன் இணைத்துச் சிந்திக்கப்பட்ட கோயில்கள் வழிபாட்டிடம், என்ற நிலைக்கு மேலாகக் கலைபயில் கூடங்களாகவும் அமைந்தன. வழிபட வருகின்ற மக்கள் இசைக்கலை, கூத்துக்கலை சார்ந்த உணர்வுகளை வெளிப்படுத்தவும் சுவைக்கவும் ஏற்ற களங்களாகக் கோயில்கள் திகழ்ந்தன.

சமுதாய மைய நிலையங்கள்

இவ்வாறாக பக்தி இயக்க காலத்தில் மக்களின் நடைமுறை வாழ்க்கையுடன் இணையத் தொடங்கிய கோயில்கள் சமுதாய மையநிலையங்களாக – தொழில் வழங்கும் நிலையமாக, கல்விக்களமாக, அரும் பொருட்காட்சி அகமாக, மருத்துவ நிலையமாக, அன்னசத்திரமாக மக்கள் பல்வேறு தேவைகளுக்கும் ஒன்றுகூடும் ஒரு பொதுநிலையமாக – வளர்ச்சி பெறுவதைச் சோழப்பெருமன்னர் காலத்தில் நோக்கலாம்.

மடங்களின் எழுச்சி

கோயில்கள் உருவாகி வளர்ந்த காலப் பகுதியில் உருவான இன்னொரு நிறுவன அமைப்பு மடம் ஆகும். பக்தி இயக்கத்தில் ஈடுபட்ட அடியார்கள் தங்கும் இடமாகவும், ஒன்று கூடும் இடமாகவும் பயன்படத் தொடங்கிய இவை நாளடைவில் சமய தத்துவச் சிந்தனைக்களங்களாகப் பரிணாமம் பெற்றன.

ஆதிசங்கரர்

கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து இந்திய சிந்தனை வரலாற்றில் ஒரு புதிய எழுச்சி உருவாகியது. இதற்குத் தோற்றுவாய் செய்தவர் ஆதிசங்கரர் (கி. பி. 788 – 820) ஆவர். அக்காலத்தில் நிலவி இருந்த பூர்வமீமாம்சை கடவுள் தன்மையின் உயர்நிலையை ஏற்காதது. பெருவளர்ச்சி பெற்றிருந்த பௌத்தமும் உலகாயதமும் கடவுள் என்ற எண்ணத்துக்கே எதிரானவை. இம் மூன்றுக்கும் மத்தியில் பிரமம் மட்டுமே உண்மை என்று சங்கரர் நிறுவ வேண்டிய சூழல் ஏற்பட்டது. அக்காலப் பகுதியில் நிலவிய வேறு தத்துவங்களான சாங்கியம், வைசேடிகம் முதலியன உலகம் ஒரு உள்பொருள்; பிரகிருதி எனும் மூலப் பொருள் உலகிற்கு அடிப்படை எனக் கூறுவன. பிரகிருதியை ஒப்புக் கொள்வது பிரமத்தின் முழுமுதல் நிலைக்கு ஊறு விளைக்கும் என்று சங்கரர் கருதியிருக்க வேண்டும். பூர்வ மீமாம்சகர் கிரியை முறையை வற்புறுத்திய சூழலை மறுத்து ஞானத்தை முதன்மைப் படுத்து வதற்கு உயிர் என்பது பிரம்மத்தின் வேறானது அல்ல எனவாதிடுவது அவருக்கு அவசியமாக இருந்திருக்கலாம்.

இராமானுசர், மத்துவர்

தென்னாட்டில் பக்தி இயக்கம் நன்கு வளர்ச்சி அடைந்து கோயில் வழிபாடு செழித்தோங்கிய காலப்பகுதியில் சமய – தத்துவப்பணி புரிந்தவர்கள் இராமானுசரும், மத்துவரும். சங்கரர் செயற்பட்டமை போல் சூனியவாதிகள், பூர்வமீமாம்சைகள், உலகாயதர் என்போருக்கு எதிராக வலிந்து பிரம்மத் தத்துவத்தை நிலை நாட்ட வேண்டிய நிலை அன்று இல்லை. சங்கரர் ஏற்கனவே அச்சாதனையைப் புரிந்து வேதமரபுசார் சிந்தனைகளுக்கு வலுவான அடித்தளம் இட்டிருந்தார். அந்தத் தளத்தின் மேல் நின்று தத்துவம் பேசமுற்பட்டவர்கள் இவர்கள். மேலும் சங்கரர் உண்மைப் பொருளைப் பேசவந்த தத்துவ ஞானி மட்டுமே. ஆனால் இராமானுசர், மத்துவர்

ஆகிய இருவரும் அந்த உண்மைப் பொருளைத் தெய்வமாகவும் தரிசித்தவர்கள். புராணங்கள், இதிகாசங்கள் என்பவற்றினூடாக வளர்ந்திருந்த சமய சார்பான சிந்தனைகளில் காலூன்றி நின்றவர்கள். இச்சிந்தனைகள் உயிர்களின் இயல்பு, ஒழுக்கநிலை, உலகியற்கை என்பன தொடர்பாக விரிவாகப் பேசுவன. பிரம்மம் (கடவுள்) மட்டுமன்றி உயிர் உலகம் என்பன தொடர்பான எண்ணங்களும் மக்கள் மத்தியில் உணர்வு பூர்வமாக நிலவத் தொடங்கியிருந்தன. இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டிருந்த மேற்படி இருவரும் உயிர், உலகம் என்பவற்றை உள்பொருள்கள் அல்ல என மறுப்பது காலத்துக்கு ஒவ்வாத நிலை என நன்கு உணர்ந்திருப்பர். இவ்வாறு நோக்கும் பொது இவ்விருவரும் சங்கரரிலிருந்து வேறுபட்டு கால வளர்ச்சியோடு ஒட்டி சிந்திக்க முற்பட்டுள்ளனர் என்பது தெரிகிறது.

சைவ தத்துவங்கள்

கடவுள், உயிர், உலகு என்பவற்றை உள்பொருளாக ஏற்க வேண்டிய சூழ்நிலையில், அம்மூன்றையும் திட்டவட்டமாக வேறுபடுத்திக் காட்ட – அல்லது காண – விரும்பாத சிந்தனைப் போக்குகளை காகமீர சைவர், இராமானுசர், வீரசைவர் ஆகியோர் புலப்படுத்தி நிற்கின்றனர். மத்துவர், சைவசித்தாந்திகள் இருசாராரும் இவற்றை வேறுபடுத்துவதில் தயக்கம் காட்டவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆகமங்கள்

ஆகமங்கள் – குறிப்பாக சிவாகமங்கள் – உருவவழிபாட்டை அடிப்படையாகக் கொண்டவை. கடவுளரின் உருவமைப்பு, அவர்களை நிறுவுவதற்குரிய கோயில்களின் அமைப்பியல், அவற்றின் செயற்பாடு முதலியனவே சிவாமகங்களிற் சிறப்பாகப் பேசப்படுவன. ஆகவே இவற்றை வேத இலக்கியங்களுடன் தொடர்புபடுத்துவதை விட உருவவழிபாட்டைச் சிறப்பாகப் பேசும் இதிகாசங்கள் புராணங்கள் என்பவற்றுடன் தொடர்புபடுத்தி நோக்குவதே பொருத்தமானதாக அமையும். தமிழ் நாட்டில் பக்தி இயக்கம் உருவான காலப் பகுதியில் – பெருந்தொகையாகக் கோயில்கள் உருவான காலப்பகுதியில் – அவ்வுருவாக்கத்துக்கு வாய்ப்பாக ஆகமக்கல்வி வளர்ந்திருக்க வேண்டும் என்பது தெளிவு. இவ்வாறு உருவாகி நிலைத்த ஆகமங்களே சைவசித்தாந்தம், வீரசைவம் என்பன உருவாவதற்கு வித்திட்டன எனலாம்.

சைவ சித்தாந்தம்

ஒரு வரலாற்றுக் குறிப்பு

தமிழ்நாட்டில் சங்க இலக்கிய காலத்திலே சிவவழிபாடு நிலவியமைக்குச் சான்றுகள் உள. எனினும் சைவம் என்ற சமயநிலைக்கான தத்துவ விளக்கத்தை நாம் முதன் முதலில் சங்க நூல்களுக்குப் பிற்பட்டதான மணிமேகலையில் தான் பெற முடிகிறது. திருக்குறள் பொதுமை நூலாக இருந்தாலும், சைவ சித்தாந்தம் உருவாவதற்கான எண்ணக் கருக்களை வழங்கியிருக்கலாம். திருமுறைகளில் குறிப்பாக மூவர் தேவாரங்களிலும் மாணிக்கவாசகரது திருவாசகத்திலும் சைவசித்தாந்தக் கோட்பாடுகள் பல உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தப் பட்டுள்ளமையை அவதானிக்க முடியும். இவ்வாறு பலபடிநிலைகளில் கருவாகி உருவாகிவந்த சிந்தனைகள் திரண்டு நிறைநிலை அடைந்த சூழலில் அவற்றை விளக்கும் வகையிலேயே மெய்கண்ட சாத்திரங்கள் எழுந்தன.

வீர சைவம்

இந்திய சமயவரலாற்றிலே சமணம், பௌத்தம் என்பன வேதமரபுக்கெதிராக சமூக ஏற்றத்தாழ்வுகள் கடந்த மனிதநேய நோக்கிலான அணுகுமுறையை மேற்கொண்டன என்பதை அறிவோம். ஆனால் அவை இல்வாழ்க்கையை அதன் புறத்தே நின்று நோக்கியமை போலன்றி வீரசைவம் இல்வாழ்க்கை உள்ளே இருந்து நோக்கி, அனைவரையும் தழுவும் பண்புடையதாகவும் கடவுள் நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டதாகவும் திகழ்வது. கர்நாடகப் பிரதேசத்தில் இச்சிந்தனைப்

பிரிவு உருவாவதற்கு அதற்கு முன் தமிழ் நாட்டில் நடைபெற்ற பக்தி இயக்கம் ஒரு முன்னோடி முயற்சி ஆகும். நாயன்மார் அறுபத்துமூவரையும் வீரசைவம் தனக்கு முன்னோடிகளாக ஏற்றுள்ளது.

தமிழ்நாட்டில் மனிதநேய அணுகுமுறைகள்

தமிழ்நாட்டிலே பக்தி இயக்க காலத்தில் காணப்பட்டதான எல்லோரும் ஓர் குலம் – தொண்டக்குலம் – என்பதான சமநிலை நோக்கு தத்துவ உருவாக்க காலத்தில் உரியவாறு பேணப்பட்டதாகத் தெரிய வில்லை. சோழப்பேரரசின் எழுச்சிச் சூழலில் இத்தகு சமநிலை நோக்கிற்கு வாய்ப்பு இருக்கவில்லை என்றே தெரிகிறது. கர்நாடக பிரதேசத்தில் வீரசைவம் உருவானதைப் போல தமிழகத்தில் ஒரு மனிதநேய சமயநிலை அக்காலத்தில் உருவாகத் தடையாக அமைந்த காரணிகள் தனி ஆய்வுக்குரியன. பிராமணரான உமாபதி சிவாசாரியார் தமது குலத்துக்குரிய ஆசாரநிலைகளை விட்டுக் கீழிறங்கி செங்குந்தர் இல்லத்தில் தன் குரு அருந்திய கஞ்சியின் மிச்சிலை அருந்திய வரலாறு அவர் வாழ்ந்த காலப்பகுதியில் – கி.பி. *14*-ஆம் நூற்றாண்டில் – ஒரு மனிதநேயப் பெருஞ்சாதனை ஆகும்.

''கோயிலுக்கு வழங்குவது அடியவர்க்குச் சென்று சேராது'' ''அன்பே இறையுணர்வு'', ''உடம்பே கோயில்'' என்ற திருமந்திரச் சிந்தனைகளைச் சிந்திக்கும் பொழுது பக்தி இயக்கத்தின் மனிதநேய அடித்தளத்தைப் பாதுகாக்கும் வகையில் சிந்தித்த முதல்வராக – முதற்சித்தராக – திருமூலரைக் கணிக்க இடமுண்டாகிறது.

இதனை அடுத்து வந்த சித்தர் பாடல்கள் சமய உணர்வின் அடித்தளத்தில் தான் எழுந்தவை. ஆனால் சமகால கிரியை முறைகளை எள்ளி நகையாடுபவை. பக்தி இயக்கம் சராசரி மனிதனிடம் இட்டு வந்த இறையுணர்வுக்கு கிரியை முறைகளின் பெருக்கத்தினாலும் புறநிலை ஆசாரங்களாலும் தடைகள் ஏற்பட்ட சூழ்நிலைகளில் அவற்றை விமர்சித்து உண்மையைப் பற்றி நிற்க வற்புறுத்தும் அணுகுமுறையைச் சித்தர்கள் புலப்படுத்தினர்.

இயல் 4 : மரபு - தேசியம் - ஆன்மநேயம்

மரபுணர்ச்சி : கி.பி. *14*-ஆம் நூற்றாண்டு வரை வளர்ந்து சென்ற சிந்தனைகள் அதன் பின்னர் மரபு பேணும் வரலாறாகவே தொடர்கிறது. இவ்வாறு மரபு பேணும் நிலையில் முதல் 400 ஆண்டு காலம் பண்பாட்டுப் பாதுகாப்பு என்ற உணர்வுத் தளத்தில் அமைந்தது. *1800*-ஆம் ஆண்டை அடுத்து அம்மரபுணர்ச்சியானது தேசிய உணர்வெழுச்சிக்கான உள்ளீடாக அமையலாயிற்று. அந்நிலையில் சமூக உணர்வு, ஆன்மநேயம் ஆகிய கூறுகள் அதில் முக்கியத்துவம் பெறத் தொடங்கின.

அந்நிய மதங்கள் வேரூன்ற முற்பட்ட சூழலில் உருவான தற்காப்பு நோக்கு மரபுணர்ச்சி சிந்தனைக்கு முக்கிய காரணி எனலாம். இந்த நிலையில் மடம், ஆதீனம், ஆசாரிய பீடம் முதன்மை எய்த, பாரம் பரியங்களை மதித்தல், நயத்தல், பேணிக் கொள்ளல், விளக்கியுரைத்தல் ஆகிய செயல்முறைகள் மேற்கொள்ளப் பட்டன. ஆராய்ந்து தெளிதல், புதுமை நாடல் ஆகியன தேக்கம் அடையலாயின. இவ்வாறான தேக்கம் தென்னிந்தியாவிலே பெரிதும் காணப்பட்டது. வட இந்தியப் பகுதிகளில் நிலவி வந்த பக்திச் சூழல் இஸ்லாமியத்துடன் உறவுகொள்ளத் தொடங்கியது.

சமய சமரசநிலை

கபீர்தாஸர், குருநானக் ஆகியோரின் சமய சமரச நிலை, ஒப்பீட்டு அணுகுமுறை ஆகியன பயிலப்படலாயிற்று. சமூகத்தின் பல தளங்களைச் சேர்ந்த இராமானந்தர் (பிராமணர்), இரவிதாஸர் (சக்கிலியர்), மீரா (அரசகுலம்), நாமதேவர் (தையற்காரர்), துகாராம் (ஏழை விவசாயி), கபீர் (நெசவாளர்) ஆகியோரின் பக்தி எழுச்சி தோன்றலாயிற்று. வடஇந்திய பக்தி இயக்கம் சமூக சீர்திருத்த அடிப்படை கொண்ட எழுச்சியாக அமைந்தாலும் சமுதாயப் பரப்பின் ஒட்டுமொத்தமான

சிந்தனை ஓட்டத்தில் பெருமாற்றம் விளைவிக்கவில்லை.

சமூகம், நாடு

ஐரோப்பியர் தொடர்பால் அறிமுகமான அச்சியந்திர முறை, கல்வி முறை, சுதந்திரம் – சமத்துவம் – சகோதரத்துவம் முதலிய சமூக சிந்தனைகள், சமூகம், நாடு ஆகிய உணர்வுகளை நோக்கி விரிவடைய வித்திட்டன.

சமய மரபுகள், தர்ம சாத்திர மரபுகள் என்பனவற்றில் பின்னிப்பிணைந்து காணப்பட்ட சமூகக் கொடுமைகளாவன :

1) பல்வேறு துறைகளிலும் வளமிக்க பாரம்பரியங்களைச் சமூகத்தின் அனைத்துப் பகுதியினரும் அணுகிக் கற்கும் வாய்ப்பு தரப்படாமை,

2) வருணப் பாகுபாடு,

3) பெண்கள் மீதான அடக்குமுறை.

ஐரோப்பியர் வரவால் அனைத்துலகக் கருத்துத் தொடர்புக்கான வாயில்கள் திறக்கப்பட்டன. கிறிஸ்துவமதம் காலூன்றி கிறிஸ்தவத் தொண்டர்கள் கல்வி, மருத்துவ வசதி எனச் செயல்படலாயினர். பல்வேறு சுரண்டல்களுக்கு ஆளாகியிருந்த மக்களில் ஒரு பகுதியினர் மத்தியில் இம்முயற்சிகளுக்கு வரவேற்பு கிடைத்தது.

இவ்வாறான சூழ்நிலையில் இம்மண்ணில் பாரம்பரியத்தில் நம்பிக்கை கொண்டோர் மரபினைப் பேணி நின்றனர். அதே சமயம் அறிஞர்கள் மத்தியில் மாற்றம் தேவை என உணரத் தலைப்பட்டனர். இவ்வாறான உணர்வுகள் செயல்பெற்ற நிலையில் சில இயக்கங்கள் உருவாயின. இவ்வியக்கங்கள் இரு முக்கிய கடமைகளை எதிர்கொண்டன.

1) மண்ணின் பண்பாட்டு மூலவேரை கண்டறிந்து வெளிப்படுத்தல்.

2) சமகால சமய மரபுகள் சடங்குகள் சம்பிரதாயங்கள் என்பவற்றை மனித நேயம், ஜீவகாருண்யம், அறிவியல் பார்வையில் விமர்சித்தல், மாற்றியமைக்க முற்படல்.

பிரம்ம சமாஜம் – ராஜாராம் மோகன்ராய்

ஒரே கடவுள் என்ற கோட்பாட்டை முன்வைத்த ராம்மோகனர் உருவ வழிபாட்டை மறுத்தார். இக்கருத்துக்கள் சமயப் பொதுமையைக் காண வழிவகுத்தன. மேலும் இவர் சாதி ஏற்றத்தாழ்வு, பெண்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள், ஸதி என்ற உடன்கட்டை ஏறுதல் ஆகியவற்றை மறுத்தார். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார். இவ்வாறான பகுத்தறிவுப் பார்வையும் மனித நேய அணுகுமுறையும் சமூக உணர்வும் சார்ந்த சிந்தனை, செயல்முறை என்பவற்றின் மூலம் இந்திய சமுதாயத்துக்கு ஒரு புதிய – காலத்திற்கு ஏற்றதும் மலரப்போகும் மக்களாட்சியை எதிர்கொள்ளத் தக்கதுமான – தோற்றத்தை அவர் கொடுக்க முனைந்துள்ளார் என்பது தெரிகிறது.

ராம்மோகனருடைய சிந்தனை, செயல்முறை என்பன இந்தியப் பண்பாட்டுத் தளத்தில் நின்று அனைத்துலக பண்பாட்டுத் தளத்தை நோக்கி விரிந்து செல்வதாகத் - இந்திய தேசியத்துக்குள் சர்வ தேசியத்தை நாடுவதாக – திகழ்வதை அவதானிக்கலாம். கபிர்தாஸர், குருநானக், அக்பர், தாராஷுகோ ஆகியோர் இந்தியச் சிந்தனை மரபுக்கும், இஸ்லாத்துக்கும் இடையே பொதுமை நாட்டியவர்கள். ராம்மோகனர் அனைத்துலகச் சமயப் பொதுமையை நாடியவர். குருநானக், அக்பர் ஆகியோரின் செயற்பாடுகள் புதிய மதப் பிரிவுகளாகத் தோற்றம் கொண்டன. ஆனால், ராம்மோகனரின் செயற்பாடுகள் பிரம்ம தத்துவத்தில் எல்லாச் சமயங்களுக்கும் அமைதி காணும் முறைமையில் பாரம் பரியம் தொடர்பான மீள் கண்டுபிடிப்பாக – மீட்டுருவாக்கமாக வெளிப்பட்டன என்பது கவனித்தற்குரியது.

இராமகிருஷ்ணர் - விவேகானந்தர்

ராம்மோகனர் கண்டுகாட்டிய தேசிய பண்பாட்டு அடையாளங்கள், தயானந்தர் அழுத்தம் கொடுத்த வேதப்பழமை என்பவற்றின் உள்ளீடான பிரம்மஞான அனுபவத்தை ஆன்மிகப் பயிற்சியால் எய்தியவர் இராமகிருஷ்ணர். அவரிடமிருந்து அந்த அனுபவத்தை உள்வாங்கித் தனது

ஆய்வறிப்பார்வையூடாக உரைகளிலும், எழுத்துக்களிலும் வெளிப்படுத்தியவர் விவேகானந்தர். இருவருமே சராசரி மனிதரைக் கருத்திற் கொண்டு செயற்பட்டதன் மூலம் சமய – தத்துவச் சிந்தனைகளைப் பொது மனிதனை நோக்கி இட்டு வந்தவர்கள்.

ஆதி சங்கரரால், குறிப்பிட்ட ஒரு வருணத்தினர் மட்டுமே உணர்ந்து கொள்ளத்தக்கது எனச் சுட்டிக்கூறப்பட்ட அத்வைதம் விவேகானந்தரால் பரந்த பொது ஜன சமூகத்தை நோக்கி விரித்துப் பேசப் படலாயிற்று. ஒரு பொருள் மட்டுமே உண்மை என்பதை உறுதி செய்வதற்குப் பயன்பட்டு வந்த அத்தத்துவம் (அந்த அடிப்படையை விட்டு விலகாமலே) அனைத்து மாந்தரின் ஆத்மவளர்ச்சிக்கும் பயன்படுவதாக விளக்கம் பெறலாயிற்று. இவையாவும் வேதாந்தத்துக்குப் பொது மனிதனை நோக்கிய பரிமாணத்தைக் காட்டி நின்றன. இதன் நிறுவன நிலையாக இராமகிருஷ்ண இயக்கம் அமைந்தது.

வள்ளலார்

வடஇந்திய மண்ணில் முளைவிட்ட மேற்படி போக்குகள் அனைத்திந்திய நிலையில் பரவிக் கொண்டிருந்த சூழலில் தமிழ்நாட்டில் தனித்தன்மையோடு முகிழ்த்த அணுகுமுறை : 'ஆன்மநேய நோக்கு' ஆக அமைந்தது. வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் *(1825-1873)* சிந்தனைகள், செயல்கள் என்பவற்றில் இந்நோக்கு நிலை வடிவம் பெற்றது. அவர் மனித குலத்தை மட்டுமன்றி அனைத்து உயிரினங்களையும் நேசித்தார். ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வை வெளிப்படுத்தினார்; துயருறும் உயிர்களைக் கண்டபோது துவண்டார்; ஆன்மநேய உணர்வுக்குத் தடையான அனைத்துக் கூறுகளையும் வள்ளலார் வெறுத்தார்; விமர்சித்தார். குறிப்பாக சமூகத்தில் காணப்பட்ட சாதி ஏற்றத்தாழ்வுகள், சமயநடைமுறைகளில் காணப்பட்ட பல்வகை முரண்பாடுகள் இவரது கண்டனங்கட்கு உள்ளாயின. வேறுபாட்டு உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு முழுமையான சமயநோக்காளராக – சமரச நோக்கினராகத் தன்னைப் புலப்படுத்திக் கொள்கிறார்.

சமணம், பௌத்தம் ஆகிய மதங்களின் அடிப்படைகளான அகிம்சை, கருணை; 'பசிப்பிணி மருத்துவர்'களாகவும், 'பாண்பசிப் பகைஞர்'களாகவும் திகழ்ந்த வள்ளல் பெருமக்களின் சிந்தனைகள்; அமுதசுரபி ஏந்தி உலகுக்கு அன்னமூட்டும் பணியில் ஈடுபட்ட மணிமேகலையின் துறவுக்கோலம்; வள்ளுவர் காட்டிய அறம்; சித்தர்கள் உணர்த்திய மனித நேயம் – இவை அத்தனைக்கும் வாரிசாக பன்னெடுங் காலமாக இந்தியச் சிந்தனை மரபில் பல்வேறு மட்டங்களில் வெளிப் பட்டு நின்ற ஆன்மநேய உணர்வுகளின் திரண்ட வடிவமாக வள்ளலார் அமைந்தார்.

ஈழத்தில்

ஈழத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் *(1822-1879)* அவர்கள் முனைப்பாக மேற்கொண்ட செயற்பாடுகள் அந்நிய மத ஆதிக்கத்தினின்று சுதேச மதத்தைச் – சைவத்தை – காப்பாற்றும் தேசியப்பணியாக அமைந்தது. இவரது சமய நோக்கிலான செயற்பாடுகள் மூன்று முக்கிய குறிக்கோள்களை முதன்மைப்படுத்தி அமைந்தன.

(அ) சைவசமயிகளுக்கு அவர்களது சமயத்துவ நிலையையும், ஒழுக்க நிலையையும் தெளிவுறுத்தல்.

(ஆ) கிறிஸ்துவத்தின் பிரசார முயற்சிகளுக்கு எதிராகச் சைவத்தை விழித்தெழச் செய்தல்.

(இ) தமிழ்ச்சிறார் தமது பாரம்பரிய – சைவசமயத் தளத்தினின்று விலகாமலே உயர்கல்வி – ஆங்கிலக்கல்வி – பெற வாய்ப்புகள் ஏற்படுத்தல்.

நாவலர் அன்று கோரியது மாணவன் தனது மதச் சூழலிலேயே ஆங்கிலம் கற்க வசதியிருத்தல் வேண்டுமென்பதுதான். இன்றைய நிலையில் இது புரட்சிகரமாகத் தோன்றாதுதான். ஆனால், இந்தக் கோரிக்கை காரணமாகவே இலங்கை (மேற்கிந்தியத் தீவுகள், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் இழந்தது போன்று) தனது

பாரம்பரிய பண்பாட்டை இழக்காது நிற்கின்றது.

மேனாட்டு மயப்படுத்தலினால் பண்பாட்டுச் சிதைவு ஏற்படாது தடுப்பதற்கு நாவலரது போராட்டம் உதவிற்று.

இவ்வகையில் வட இந்திய மண்ணில் தயாநந்த சரஸ்வதி அவர்கள் வகித்தது போன்ற ஒரு வரலாற்றுப் பாத்திரத்தையே நாவலர் ஈழத்தில் வகித்தார் எனக் கருத வேண்டியுள்ளது. அவர் ''வேதத்துக்குத் திரும்புங்கள்'' என்றார். இவர் ஆகம அடிப்படையிலான சைவத்தை மீட்க முயன்றார். இவையே வேறுபாடு.

வள்ளலார், நாவலர் இருவரையும் நோக்கும்போது இருவருமே மனிதநேயம், அதை உள்ளடக்கிய ஆன்மநேயம் ஆகிய உணர்வுநிலைகளை நிறைவாகக் கொண்டிருந்தமை புலனாகும்.

இருவருக்குமே சைவ பாரம்பரியத்தைக் கூறும் இலக்கிய மூலங்களில் மிகுந்த புலமை இருந்தது; ஈடுபாடும் இருந்தது. ஆனால், இருவரது தளங்களும், பார்வைகளும் வேறுபட்டன. தாம் வாழ்ந்த இந்து சமயச் சூழலில் காணப்பட்ட பல நிலை உள்முரண்பாடுகளைக் களையும் நோக்கில் சமரசம், ஆன்மநேயம் என்பவற்றை முதன்மைப்படுத்தினார் வள்ளலார். இதனால் பாரம்பரியத்தை ஓரளவு விமர்சன நோக்கில் பார்க்க அவரால் முடிந்தது. சித்தர் பாரம்பரியம் அதற்கான தளத்தை ஏற்கனவே இட்டிருந்தது.

ஈழத்தில் நாவலர் எதிர்கொண்ட சூழல் சைவப் பாதுகாப்பு என்ற பாரிய பணியை அவர் தோளில் சுமத்தியிருந்தது. அவரது ஈழத்தின் கல்விச் சூழலும், தமிழகத்தில் அவர் தொடர்புகொண்ட ஆதீனச்சூழலும் சைவ பற்றுறுதியை மிகுவிப்பனவாகவே அமைந்திருந்தன. எனவே சைவ மரபை மதித்தல், நயத்தல், பேணுதல், விளக்கியுரைத்தல் ஆகிய வகைகளில் செயல்பட்டு நின்ற அவர், அவற்றுக்கு அப்பால் கால உணர்வுடன் விமர்சித்தல் என்ற வகையில் பார்வையைச் செலுத்தவில்லை. இவை வள்ளலார் – நாவலர் இருவரிடையிலான அடிப்படை முரண்நிலை எனலாம்.

நிறைவுரைக்குப் பதிலாக...

1] தேசிய, ஆன்ம நேய உணர்வுகளின் தொடர்ச்சியும், வளர்ச்சியும் :

கடந்த நூற்றாண்டிலே ராம்மோகனர், வள்ளலார், விவேகானந்தர் முதலியோரின் முயற்சிகளில் முனைப்பாக வெளிப்பட்ட தேசியம், ஆன்ம நேயம் ஆகிய உணர்வுகள் இந்த நூற்றாண்டிலும் தொடர்ந்தன. அவ்வாறு தொடரும் நிலையிலே அவை தேச விடுதலைக்கான அரசியல் நடவடிக்கைகளாகவும் மாநிலம் பயனுற வாழ்தல் என்ற சமூகப் பயன்பாட்டுக் குறிக்கோளாகவும் பரிணாமம் எய்தின. இவ்வாறான வரலாற்றுப் போக்கை முன்னெடுத்தவர்கள் என்ற வகையில் மகாத்மா காந்தி *(1879-1948)*, மகாகவி சுப்பிரமணிய பாரதி ஆகிய இருவரது சிந்தனைகள், செயற்பாடுகள் என்பன தனிக்கவனத்திற்குரியன.

இந்து மதத்தின் தளத்தில் ஆழமாகக் காலூன்றி நின்று செயல்பட்ட இவ்விருவரும் அதில் காலத்துக்குக் காலம் நிகழ்ந்த குறைபாடுகளையும் உணர்ந்தவர்கள் ஆவர். அவ்வகையில் அவர்கள் அதனை விமர்சித்தவர்கள்; ஏனைய மதங்களையும் மதித்தவர்களும் கூட.

காந்தியடிகள், பாரதி ஆகிய இருவரிடமும் பொதுவாகக் காணப்பட்ட மற்றொரு முக்கிய பண்பு அனைத்து உயிர்களையும் சமமாக மதித்தல் என்ற ஆன்மநேய நிலை ஆகும்.

இவ்வாறு எல்லாவற்றையும் நேசிக்கும் மனப்பக்குவத்தின் ஒரு கூறான மனித நேயம் என்ற தளத்தில் நின்று காந்தி, பாரதி இருவரும் சமகால சாதி ஏற்றத்தாழ்வுகளை கண்டித்தவர்கள்.

பாரதியின் சிந்தனையோட்டத்தை இரு வேறு தளங்கள் கொண்டதாக இனங் காண முடிகின்றது. ஒன்று சங்கரரது அத்வைதத்தை முழு நிலையில் ஒப்புக் கொண்டு உணர்வுகளை வெளிப்படுத்தும் நிலை; மற்றது, அத்வைதத்தின் முக்கிய அடிப்படைக் கூறுகளிலிருந்து விடுபட்டு – குறிப்பாக மாயை தொடர்பான சிந்தனைகளிலிருந்து விடுபட்டு – உலக இருப்பை

யும், உயிர்களின் அனுபவத்தையும் உண்மையாக ஒப்புக் கொண்டு சிந்தித்துச் செயற்படும் நிலை. இந்நிலையிலே தெய்வ நம்பிக்கை, உலகியல் தேவைகள், அநுபவங்கள் என்பன ஒன்றோடொன்று முரண்படா வகையிலான தத்துவத்தளத்தை நோக்கிப் பாரதியின் சிந்தனை விரிவும், வளர்ச்சியும் எய்துகிறது எனலாம்.

'சர்வ மங்களமாகிய ஜகத்' என்பதன் மூலம் உலக இருப்பை ஒப்புக்கொண்ட நிலையைப் பாரதி உணர்த்துகிறார். அதன் மூலம் சங்கரரிலிருந்து வேறுபடுகிறார். மாயை என்பது ஜீவனின் கற்பனை என அத்வைதம் கூறியதாகத் தெரியவில்லை. எனவே பாரதி இவ்வகையில் புதிய கருத்தை முன்வைக்கிறார் எனக் கருத இடம் உண்டு.

பாரதியார் சங்கரரின் அத்வைத சார்பான தளத்திலும், அதற்கு அப்பாலான தளங்களிலும் நின்றிருந்தமை புலனாகிறது.

பாரதியார் உலக இருப்பு, உயிர்களின் உண்மை என்பவற்றை ஒப்புக் கொள்பவராகச் சிந்தனை மாற்றம் எய்தியமைக்கும், மாயை பொய் என்பதை மறுத்தமைக்குமான அடிப்படைகள் அவரது தமிழகத்தின் தத்துவ பாரம்பரியத்திலிருந்து அவருக்குக் கிடைத்திருக்கலாம்.

சுய விமர்சனச் சூழல்

மேற்கண்டவாறான சிந்தனைப் போக்குகளும், தத்துவவிவாத சூழலும் நிலவி வந்த காலத்தில் இந்தியச் சிந்தனை மரபில் இந்து மதம் தன்னைத் தானே 'சுய விமர்சனம்' செய்துகொள்ள வற்புறுத்தும் வகையிலான சிந்தனைகளும் முனைப் புற்றன.

இந்த சுய விமர்சனத்துக்கான சூழல் மூன்று முக்கிய தளங்களில் கால் கொண்டதாகும்.

(அ) அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விழிப்புணர்வு.

(ஆ) திராவிட – தமிழின – உணர்வு.

(இ) மார்க்சியம்.

சாதியமைப்பின் விளைவாகப் பல நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பல்வேறு கொடுந்துயரங்களை அநுபவித்து வந்த தாழ்த்தப்பட்ட சமூக மக்களின் எழுச்சியாக வெளிப்பட்டது மேற்காட்டிய முதலாவது நிலை.

இந்த விழிப்புணர்வுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்களில் முக்கியமானவர்கள் ஜோதிராவ் புலே, பி.ஆர். அம்பேத்கார் *(1891 – 1956)* ஆகியோர் ஆவர்.

அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் பிறந்து பல கொடுமைகளை அநுபவித்தவர். இந்து தத்துவங்களின் முக்கிய அடிப்படைகளான உபநிடதங்கள், உணர்த்தும் பிரம்மம், ஆத்மா என்பவற்றின் நிலை தொடர்பான விளக்கங்களுக்கும், சமத்துவமின்மை பேசும் தர்ம சாத்திரங்களின் அடிப்படையிலான வாழ்க்கை முறைகளுக்கும் இடையிலான முரண் நிலைகளை அவர் இனம் கண்டு காட்டினார்.

அம்பேத்காருக்கு ஏறத்தாழச் சமகாலத்தினரான காந்தியடிகள் சாதி ஏற்றத் தாழ்வு முறையைக் கண்டித்து நின்றவர் என்பதை அறிவோம். அவர் நின்று செயற்பட்ட தளத்துக்கும் அம்பேத்காரின் சிந்தனைத் தளத்துக்கும் இடைவெளி பெரிது. காந்தியடிகள் வர்ணப்பாகுபாட்டை ஏற்று நின்று சாதிமுறையைக் கண்டித்தவர்; வர்ணாசிரம தர்மங்களுக்கு ஆதாரமான தர்ம சாத்திரங்களை இந்து சமூகத்துக்கு அவசியமான மூலாதாரங்களாகக் கருதியவர்.

அம்பேத்கார் சாத்திரங்களின் ஆதிக்கத்தை வெறுத்தவர்; சாத்திரங்களின் புனித ஆட்சி தூக்கி எறியப்படவேண்டும் என்றும் அதன் மூலமே சாதி, வர்ணம் என்பனவற்றின் மதரீதியான முக்கியத்துவம் ஒழிக்கப்பட முடியும் என்றும் வலியுறுத்தியவர்.

உயர் சாதியினர் தமது வருண தர்மதளத்தில் நின்றுகொண்டே தாழ்சாதி யினரை அணைத்துச் சமநிலைப்படுத்த வேண்டும் என்பது காந்தியடிகளின் ஆர்வமாக இருந்தது. தாழ்த்தப்பட்டோரின் உணர்வுகளையும் உரிமைகளையும் மதிக்கும் வகையில் உயர்சாதியினர் மனம் மாற வேண்டும் அல்லாவிடில் தாழ்சாதியினர் மதம் மாற நேரும் என அறைகூவல் விடுத்தவர் அம்பேத்கார்.

அவ்விவருவரும் மறைந்து ஏறத்தாழ நாற்பதாண்டுகளுக்குப் பின்னர் இன்றும் கூட அம்பேத்காரின் எதிர்நிலைச் சிந்தனைகளுக்கு இந்து சமூகம் உரியவிடை அளிக்கவில்லை. உரிய முறையில் சுய விமர்சனம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவில்லை.

சுய விமர்சனச் சூழலின் மற்றொரு முனைப்பான 'திராவிட உணர்வெழுச்சி' யானது தமிழர் பண்பாட்டின் தொன்மையையும் தனித்தன்மையையும் மீளக் கண்டறியும் தேடலாக உருப்பெற்றதாகும்.

சமஸ்கிருத மொழி 'தேவபாஷை' எனக் கணிக்கப்பட்டு வந்த நிலை. அம்மொழியினதும் பண்பாட்டுக் கூறுகளினதும் தொடர்பால் தமிழும் அதன் பண்பாடும் பாதிக்கப்பட்டு விட்டன என உணரப்பட்ட நிலை மேற்படி சிந்தனையோட்டத்துக்கு எதிர்மறைக் காரணிகள் ஆகும்.

தமிழர் பண்பாடு தனித்தன்மை கொண்டது. சமஸ்கிருத மொழியை விடத் தமிழ் சிறப்புடையது என ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான சிந்தனைப்போக்கு இந்து மதம் தொடர்பாக வெவ்வேறு அணுகுமுறைகளை முன் வைத்தது. அவற்றுள் முக்கியமானவை.

அ) சைவ சித்தாந்தத்தைத் தமிழர் தத்துவம் எனக் காணும் நோக்கு நிலை.

ஆ) திருக்குறளைத் தமிழ் மறையாகவும் உலகப் பொதுமறையாகவும் காணும் நோக்கு நிலை.

இ) கடவுள், மதம் என்பவற்றை மறுக்கும் நோக்கு நிலை.

சிவ வழிபாடு, ஆகம மரபு என்பன ஆரியர் வருகைக்கு முற்பட்ட தொல்குடிகளின் பண்பாட்டு மூலங்கள் என்ற ஆய்வு முடிவுகள் மேற்படி சிந்தனையை வலுவுறச் செய்வன.

இந்து மதத்தின் தர்ம சாத்திர சார்பான வர்ணாசிரம தர்ம முறைகளுக்குப் புறம்பான பண்பாட்டுத் தளத்தை நாட முற்பட்டவர்களுக்கு குறளின் பொதுமை அறம் தக்கதொரு மாற்றுதளமாகக் கவனத்தைப் பெற்றது. அக்காலம் வரை பல்வேறு சமயப்பிரிவினராலும் உரிமை கொண்டாடப்பட்டு வந்த அந்த நூலை அத்தகு நிலையினின்று வேறுபடுத்தி நோக்கி, தமிழரின் பொதுவான மறை நூலாகக் காணும் சிந்தனைகள் முளைவிட்டன.

தமிழ் இன உணர்வு அடிப்படையில் அமைந்த மூன்றாவது அணுகுமுறையான 'கடவுள், மதம்' என்பவற்றை மறுக்கும் நோக்கு நிலையானது தமிழரின் தொல்நிலையை உலகாயதச்சார்பானது எனக் கொண்டு அமைவது. இவ்வாறான சிந்தனையின் அடிப்படையில் உருவானதே ஈ.வே. இராமசாமிப்பெரியாரின் திராவிட இயக்கம் ஆகும். பெரியார் நிகழ்த்திய பேருரைகள் தமிழக மக்களைச் சமய நம்பிக்கைகளுக்கு எதிராகவும் வர்ண, சாதி முறைகளுக்கு எதிராகவும் சடங்கு ஆசாரங்களுக்கு எதிராகவும் கிளர்ந்தெழச் செய்தன.

தமிழ் இன உணர்வுத் தளத்திலான மேற்குறித்த மூவகை நோக்கு நிலைகளுள் முதலாவதான ''சைவசித்தாந்தம் தமிழர் தத்துவம்'' என்ற நோக்குநிலை முற்று முழுதாக ஒரு சமய வடிவிலேயே அமைந்தது. குறளைத் தமிழ் மறையாகக் காணும் நிலை சமயம் என்ற நிலைக்கு அப்பால் பொதுவான கடவுள் நம்பிக்கையுடனான வாழ்வியல் அறம் நாடுவது. ஆனால், சமய எதிர்ப்புணர்வு அல்ல. பெரியாரது சிந்தனை முழுமையான சமய எதிர்ப்புத் தளமேதான்.

இக்காலகட்டத்தில் இந்திய மண்ணில் காலூன்றி முளைவிடத் தொடங்கிய தத்துவமே மார்க்சியம். சமூகத்தின் அனைத்துப் பிரச்சினைகளையும் வர்க்க முரண்பாடு என்ற தளத்தில் பொருத்தி நோக்கித் தீர்வு காண முயலும் இத்தத்துவம் சமுதாய வரலாற்றுப்போக்கை வர்க்கப் போராட்ட வரலாறாகவே காண்பது, இத்தத்துவத்தின் அடித்தளம் உலகாயதமே.

பண்டைய உலகாயதம் பொருள்களுக்கும் உணர்வுநிலைக்குமான உறவைத் தெளிவு படுத்தவில்லை. மனித வாழ்க்கையில் சிந்தனையின் பங்கு, பாத்திரம்

என்பன பண்டைய உலகாயதத்தில் விளக்கப்படாதவையாகவே இருந்து வந்தன. மார்க்சியம் மேற்படி சிந்தனையின் பங்கை ஆராய்வதை ஒரு முக்கிய நோக்காகக் கொண்டது. உலகப் பொருட்களிலும் மனித சிந்தையிலும் இடையீடின்றி மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன என்பதும் அவற்றின் விளை பொருளாகவே சமுதாய வளர்ச்சி நிகழ்கிறது என்பதும் மார்க்சியத்தின் இயக்கவியல் பார்வை தரும் தெளிவு ஆகும்.

இந்தியப் பண்பாட்டுத் தளத்தில் நின்று மார்க்சியத்தை உள்வாங்கிக் கொண்டவர்களில் எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் திரு. வி. கலியாணசுந்தரனார் ஆவார். ‘என் கடன்பணி செய்து கிடப்பதே’ என்ற நாவுக்கரசரின் தேவார அடிக்கு சமூக – தேசிய நோக்கில் விளக்கம் தந்தவர்.

இதுவரை நோக்கப்பட்ட, ‘தாழ்த்தப்பட்ட – அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விழிப்புணர்வு’, ‘தமிழ் இன உணர்வெழுச்சி’, ‘மார்க்சியப் பார்வை’ என்பவற்றின் மத்தியில் இந்து மதம் தன்னைத் தானே சுய விமர்சனம் செய்து கொள்ள முற்படும் வரலாறே இந்த நூற்றாண்டின் பிற்பகுதி ‘இந்திய சிந்தனை வரலாறு’ ஆகும்.

மத எதிர்ப்புணர்வுகளின் மூலங்களை உரியவாறு இனம் கண்டு அவற்றை உரியவாறு எதிர்கொள்வதன் மூலமும் திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலமும் மத நிலைப்பாட்டைப் பேணி வளர்த்துக் கொள்ளும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. தமிழகத்தைப் பொருத்தவரை இவ்வாறான பார்வை அணுகுமுறை என்பவற்றை மேற்கொண்டு செயற்பட்டு வருபவராக – சமகாலத்தில் சுட்டத் தக்கவராக – யாமறிந்த பெரியார் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆவர்.

சைவ சித்தாந்தம் பேணும் ஆதீன மரபில் மகாசந்நிதானம் என்ற தலைமைத் தகைமையுடன் திகழும் தவத்திரு அடிகளாரால் அந்த ஆதீன மரபுக்குச் சமகாலத்துக்கேற்ற வடிவம் தரமுனைந்து செயற்பட்டு வருபவராகக் காட்சி தருகிறார். தமது ஆதீனச் சூழலில் உள்ள கிராம மக்களைக் கூட்டுறவு மூலம் ஒன்று திரட்டிக் கிராமவளர்ச்சிக்கான செயல் திட்டங்களை அறிவியல் பூர்வமாக வகுத்து அமைத்துச் செயற் படுத்தி, அதன் மூலம் பொருளாதாரத் தன்னிறைவுக்கு வழிகாட்டி நிற்கும் அவர்; அத்துடன் அனைத்து மதச் சார்பினரையும் மதித்து அனைத்து மனிதநேயத்தை வளர்ப்பவர். இவ்வாறு இவர் செயற்படுவதற்கு அடிப்படையாகவுள்ள காரணி, அவர் சமய தத்துவங்களை மட்டுமன்றிப் பொது அறமாகிய குறளையும் சமூக அறிவியலான மார்க்சியத்தையும் கற்று அவையனைத்தையும் ஒப்புநோக்க முற்பட்டுள்ளமையே ஆகும். மனிதநேயம் என்ற பொதுத் தளத்திலேயே இவையனைத்தும் முகிழ்த்தன என்பதை அவர் சரியாகவே உணர்ந்து கொண்டு உள்ளார்.

இவ்வாறாக மார்க்சியத்தை மனித நேயம், ஆன்மீகம் என்பவற்றின் ஊடாகக் கண்டு காட்டும் அடிகளார் அதற்கும் சைவசித்தாந்தத்துக்கும் உள்ள பொதுமைகளையும் சிந்தித்துள்ளார்.

‘‘சைவ சித்தாந்தம் கடவுளை நம்புகிறது. மார்க்சியம் கடவுளை நம்பவில்லை. இஃது ஒரு முக்கியமான வேறுபாடு. மற்றபடி உலகத்தின் தோற்றம். உயிர்களின்நிலை, இந்த உலக வாழ்க்கை, உழைப்பின் சிறப்பு, உழைப்பாளர் தகுதி ஆகியவற்றில் சைவசித்தாந்தமும் மார்க்சியமும் ஒன்றுபட்டு வருகின்றன. கார்ல்மார்க்சுக்குச் சைவசித்தாந்தத் தத்துவத்தை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்திருந்தால் அவருடைய அணுகுமுறை அல்லது தத்துவ இயலின் போக்கு எப்படி இருந்திருக்கும் என்று இன்று உய்த்துணர்ந்து கொள்ள முடியும்.’’

இன்னும் நுட்பமான பொதுமைகளையும் அவர் இரண்டிலும் அவதானித்துள்ளார். சைவ சித்தாந்தத்தில் காலத்துக்கேற்ற வகையில் மாற்றங்களையும் எதிர்பார்க்கிறார் அடிகளார்.

வீடுபேற்றுக்கு வழிகாட்டும் சமய பாரம்பரியத்தின் காவலாகத் திகழும் ஒருவர் இவ்வுலக வாழ்வின் சமுதாய வளர்ச்சிக்குப்

பயன்படும் ஒரு சமூக விஞ்ஞானத்தை எவ்வாறு தரிசிக்கிறார். என்பதாகும். இவ்வாறான தரிசனம் இன்றைய காலத்தின் கட்டாயம்; சுய விமர்சனச் சூழலின் எதிர்பார்ப்பு. அதனை உரியவாறு உணர்ந்து சிந்தித்துச் செயற்படுகிறார் என்ற வகையிலேயே அடிகளார் வரலாற்று முக்கியத்துவம் உடையவர் ஆகிறார். திரு. வி. க. மார்க்சியம் பற்றிக் கொண்டிருந்த பார்வை அடிகளாரால் வளர்த்தெடுக்கப்பட்டதாகக் கருதலாம்.

சைவத் தளத்தில் – ஆதீன பாரம்பரியத்தில் – நின்று அடிகளார் புலப்படுத்தியுள்ள மேற்சுட்டியவாறான சிந்தனைகள், செயல்முறை என்பவற்றை நோக்கும்போது சைவ சித்தாந்தச் சிந்தனை மரபானது காலத்துக்கு ஏற்றவாறு தன்னைத்தானே நெகிழ்த்துக் கொள்ள வேண்டும் என்பதை உணரத் தொடங்கி விட்டமையை உய்த்துணர முடிகின்றது.

ஈழத்திலே மேலே நாம் நோக்கியதைப் போன்ற சுய விமர்சனச் சூழல் உண்டெனினும் அது இந்திய மண்ணில் நிலவுவது போன்று தீவிரமான ஒன்றாக இல்லை. அங்கும் சாதி ஏற்றத் தாழ்வு முறை பெரும் பிரச்சினை என்பதை மறுப்பதற்கில்லை. ஆயின் அது சமய அடிப்படையைத் தாக்கும் அளவுக்கு தீவிர கோலம் கொண்டதாகத் தெரியவில்லை. கோயில்களில் தாழ்த்தப்பட்டோர் நுழைவதற்கான வாய்ப்பு தொடர்பான போராட்டங்களாகவே அவை முனைப் புற்று வந்துள்ளன. திராவிட – தமிழின உணர்வு அடிப்படையிலான கடவுள் மறுப்புப் பார்வையும் அங்கு காலூன்ற வில்லை. மார்க்சியப் பார்வை வளர்ந்துள்ள போதும் மத நம்பிக்கையுடன் அது முரண் நிலையில் தொழிற்படவில்லை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் கடந்த நூற்றாண்டில் ஆற்றிய சைவக் காவற் பணியின் தொடர்ச்சியாகப் பாடசாலைகளின் கல்வித்திட்டத்தில் சமயபாடம் ஒரு கட்டாயக் கல்வி நெறியாக நிலைத்த வாழ்வு பெற்றுள்ளது. தொடக்க வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை சமயபாடம் ஆக இது தொடர்கிறது. இந்து சமயம் – சைவ சமயம் ஆகிய பெயர்களில் இப்பாடப்பகுதி அமைந்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தில் இந்து நாகரிகம், இந்துப் பண்பாடு ஆகிய பெயர்களில் ஆய்வுக்குரிய ஒரு கல்வித் துறையாக இந்து சமய பண்பாட்டுப் பாரம்பரியம் வாழ்வு பெற்றுள்ளது. எனவே இந்து மத சிந்தனையின் ஈழத்து வரலாறானது. நம்பிக்கையுடன் பேணப்படும் ஒரு பாரம்பரியம் என்ற நிலைக்கு அப்பால் அறிவியல் முறையில் ஆராய்ந்து தெளிதற்கான ஆய்வுப் பொருளாகவும் பரிமாணம் எய்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தெல்லிப்பழையில் உள்ள துர்க்கா தேவி தேவஸ்தானம் ஒரு அறச்சாலை என்ற வகையில் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. ஆதரவற்றோர்க்கு வாழ்வளிக்கும் அன்பு இல்லமாகவும் தொழிற்படும் அந் நிறுவனம் மதம் என்றால் மனித நேயம் என்பதைப் பறைசாற்றி நிற்பது. ஈழத்தின் முக்கிய ஆதீனமாகத் திகழும் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் ஒரு சமய நிறுவனம் என்ற எல்லைக்கு அப்பால். சமூக ஏற்றத் தாழ்வுகளைக் கடந்த பொதுவான சிந்தனைக் களமாகவும் கலையரங்கமாகவும் செயற்பட்டு வருகின்றது.

இந்தியச் சிந்தனை மரபில் உள்ளீடான – உயிரோட்டமான – பண்பு ஆன்ம வளர்ச்சி என்பது தெளிவு. எல்லா உயிர்களிடமும் அன்புசெலுத்துவதே இதன் தெளிபொருள். இந்த ஆன்ம வளர்ச்சி நோக்கை நடைமுறை வாழ்க்கைத் தேவைகளுடன் எந்த அளவு இணைத்துச் சமப்படுத்துவது என்பதிலேயே பல்வேறு பார்வைகள் அமைந்தன. சமயங்களும் தத்துவங்களும் பிறந்தன. இவற்றினடியாக உருவான ஆசாரங்கள், சடங்கு – சம்பிரதாயங்கள் என்பன நிறுவன அமைப்பாகி மனிதனைக் கட்டுப்படுத்தின. இதனால் பிரிவுணர்வுகள் உண்டாகி ஆன்ம வளர்ச்சி தடைப்பட்டது. சாத்திரங்கள் சம்பிரதாயங்கள் என்ற வேலிகளுள் ஆன்மா சிறைப்பட்டது. இவ்வாறான சிறையிலிருந்து ஆன்மா விடுதலை பெறும் போது தான் அதன் வளர்ச்சி சாத்தியம். சகமனிதர்

களிடமும் ஏனைய உயிர்களிடமும் ஒருவர் அன்புசெலுத்துவதற்குத்தான் சமயம், சடங்குகள், ஆசாரங்கள் என்பன துணை புரிய வேண்டுமேயன்றி வேறுபடுத்தி நோக்குவதற்குக் காரணமாதல் கூடாது. ஆனால் நடைமுறை வாழ்க்கையில் இதற்கு எதிர்மறையான நிலைதான் மிகுதியும் காணப்படுகின்றது.

இதனை இன்று இந்திய மண்ணின் கற்றறிந்தோர் உணரத் தலைப்பட்டுள்ளனர். அருகருகே ஏனைய மதப்பிரிவினருடன் இணைந்து வாழும் சூழலிலும், வெளிநாடுகளில் பிற பண்பாட்டினருடன் தொடர்பு கொண்டு வாழும் சூழலிலும் சாத்திரங்கள், சம்பிரதாயங்கள் என்பவற்றுக்கப்பாலான மனித நேய உணர்வைப் புலப்படுத்த முற்பட்டுள்ளனர். இன்றைய அறிவியல் – சமூக சிந்தனைகளின் வளர்ச்சி இவ்வாறான மனவிரிவுக்குப் பெருமளவு துணை புரிந்து உள்ளது. அவ்வகையில் மதம் கடந்த ஆன்மீக உணர்வோட்டம் இன்றைய கால கட்டத்தில் முதன்மை எய்தி வருகின்றது என்பது தெளிவு. ஆயினும் கற்றறிந்தோரில் ஒரு சாரார் மத்தியிலும் பெரும்பான்மையான பொதுமக்கள் மத்தியிலும் சாத்திரங்கள், பாரம்பரியமான நம்பிக்கைகள், சடங்காசாரங்கள் முதலியவற்றை எந்த அளவுக்குப் பேணி நெகிழ்த்த வேண்டும் என்பதில் ஒரு தெளிவற்ற நிலையே காணப்படுகின்றது. குறிப்பாக தர்மசாத்திரங்களின் பிடியிலிருந்து இத்தகையவர்களது உணர்வுகள் இன்னமும் விடுதலை பெறவில்லை என்பதே புலப்படும் உண்மையாகும். சமூக வளர்ச்சிக்குப் பணிபுரியும் மிகப் பெரும்பான்மையான சமய நிறுவனங்கள் கூட தர்மசாத்திர மரபு என்ற தளத்தின் மீது நின்றே செயற்பட்டு வருகின்றன. இதனால் தனி மனித நடைமுறை வாழ்க்கைக்கும் பொதுவான ஆன்மநேயப் பார்வைக்கும் இடையிலே ஒரு முரண்நிலை காணப்படுகின்றமை தெளிவு. கால மாற்றங்கள், சமுதாய அறிவு வளர்ச்சி என்பவற்றுக்கு ஏற்ப தர்ம சாத்திர மரபு வளரவில்லை, தேக்கமுற்ற நிலையிலேயே உள்ளது. இதுவே முரண்நிலைகளுக்குக் காரணம். இந்த முரண்பாடு நீக்கப்படவேண்டும். இதற்கு ஒரே வழி தர்ம சாத்திர மரபை முற்றுமுழுதாக ஆராய்ந்து விமர்சித்து காலத்துக்கு ஏற்ற வாறான சரியான நடைமுறைப் பாதையை வகுத்துக்கொள்வது தான். இந்திய சிந்தனை மரபை அதன் உயர்நிலையில் – உயிர் நிலையில் – பேணிக் கொள்ள விழைவோர் முன்னுள்ள பாரிய கடமை இது.

கலாநிதி நா. சுப்பிரமணியனின் இவ்வரிய நூல் முக்கிய பகுதிகளை இனம் கண்டு பிரித்தெடுக்க முடியாத அளவுக்கு அத்தனை சத்தான கருத்துகளைத் தாங்கியுள்ளது. அது மட்டுமல்ல. இடையிடையே விமர்சனமோ கருத்து விளக்கமோ கூடச் சொல்ல முடியவில்லை. அந்த அளவிற்கு செறிவாக அமைந்துள்ளது. வடமொழி, தமிழ்மொழி இலக்கியங்களை முழுதும் அறிந்து அவ்விலக்கியங்கள் எவ்வாறு இந்தியச் சிந்தனையை வளர்த்துள்ளன என்றும், இந்தியச் சிந்தனை எழுந்த இந்திய, தமிழ்நாட்டு சமுதாயச் சூழலையும் ஆய்ந்து காலத்துகேற்ப எவ்வாறு சிந்தனைகள் மாற்றமும் வளர்ச்சியும் பெற்றுள்ளன என்றும் நா. சுப்பிரமணியம் கூறுகிறார். அது மட்டுமல்ல. இன்றுள்ள நிலையையும் முழுமையாக விளக்கிக் குறைபாடுகளை முன் வைத்து அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைக்கிறார். கலாநிதி அவர்கள் முன் வைத்துள்ள கருத்துகள் சிலருக்கு ஏற்புடையனவாக அல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர் செய்த முயற்சி முழுமையானது; முதன்மையானது; இதுவரை யாரும் செய்யாது இருந்தது.

48

"சிவநெறிக் கட்டுரைகள்"

1994

(ஆசிரியர் – சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்; வெளியீடு – அருள்நூல் பதிப்புக்குழு (சேலம்), சென்னை; பக்கம் 376; விலை ரூ. 50/-)

இந்நூலில் ஞானசம்பந்தர் தேவாரம் பற்றி 13 கட்டுரைகளும், அப்பர் தேவாரம் பற்றி 9 கட்டுரைகளும், திருவாசகம் பற்றி 19 கட்டுரைகளும், திருக்கோவையார் பற்றி 5

கட்டுரைகளும், திருமந்திரம் பற்றி 6 கட்டுரைகளும் உள்ளன. அனைத்துக் கட்டுரைகளும் சுவாமிகளின் அருளனுபவமும், அறிவாய்வும் கொண்டவை. திருமந்திரக் கட்டுரைகள் திருமந்திரப் பாடல்களின் பாட பேதங்களை விளக்குவன. இக்கட்டுரைகள் திருமந்திரம் செம்பதிப்பிற்குத் துணையாவன. கொக் கிறகு, ஏழில் என்று சொல் விளக்கங்களாக இரண்டு கட்டுரைகள் வந்துள்ளன. இவை அரிய ஆய்வுகள் ஆகும்.

49

"தமிழில் தலபுராணங்கள்"

1995

(ஆசிரியர் – வே.இரா. மாதவன், முதற் பகுதி – 420 பக்கங்கள்; இரண்டாம் பகுதி – 274 பக்கங்கள்; பாவை வெளியீட்டகம், தஞ்சாவூர்)

கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டு வரை தமிழில் வெளிவந்துள்ள தலபுராணங்கள் அத்துணை பற்றியும் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு இந்நூல் வெளிவந்திருக் கின்றது. சைவ புராணங்கள், வைணவ புராணங்கள், இஸ்லாமியத் தலபுராணங் கள், தெலுங்கில் உள்ள தலபுராணங்கள், ஈழ நாட்டில் உள்ள தலபுராணங்கள் என ஆசிரியர் ஒரு தலபுராணத்தையும் விட்டு வைக்கவில்லை உரையாசிரியர்கள், சுவடிகள், பதிப்புகள் ஆகியவற்றையும் சேர்த்துள்ளார். ஒவ்வொரு தல புராணம் பற்றியும், ஒவ்வொரு தல புராண ஆசிரியர் பற்றியும் தனித்தனியாக எழுதியுள்ளார். தலபுராணங்கள் என்றால் ஒதுக்கும் மனப்பான்மை உள்ள இந்நாளில் இப்படி ஒரு முழுமையான ஆய்வு நூல் வந்துள்ளது சைவ சமயத்திற்குப் பெருங்கொடை யாகும்.

50

"இலிங்கோத்பவர்"

1995

(ஆசிரியர் – சு. நாராயணசுவாமி; வெளியீடு – திருவாவடுதுறை ஆதீனம்; பக்கங்கள் – 228; படங்கள் – 51; விலை ரூ. 90/-)

இந்நூலைப் படிப்பதற்கே தனியறிவு – மொழியறிவு, ஆகமநூல் அறிவு, திருமுறை அறிவு, சைவசித்தாந்த அறிவு – தேவைப்படும். நம் சிற்றறிவிற்கு எதுவும் புலப்படா. பொருளடக்கத்தைப் படித்துப் பார்த்தாலே நூலின் வீச்சு தெரியும். (1) சிவலிங்க (மூர்த்தி) பேதங்கள், (2) தேவ கோஷ்ட அமைப்பும் – பரிவார மூர்த்தங்களும், (3) மகேசுவர வடிவங்கள், (4) புராண வரலாறு, (5) திருமந்திரத்தில் அடிமுடிதேடலின் மெய்ப் பொருளியல், (6) காமிகாகமம், (7) காராணாகமம், (8) அஜிதாகமத்தில் இலிங்கோத்பவர் உருவமைதி, (9) சுப்ரபேதாகமத்தில் இலிங்கோத்பவர் திருமேனி, (10) பிரதிமா லட்சணத்தில் இலிங்கோத்பவர், (11) சிறந்த நூற்குறிப்புகள், (12) இலிங்கோத் பவர் திருமேனியில் ஆபரணங்களும் முத்திரைகளும், (13) சிற்ப நூல்களில் இலிங்கோத்பவர், (14) இலிங்கோத்பவ மூர்த்தி சிற்பங்களில் உருவமைதிகள், (15) Iconography , (16) திருவண்ணாமலைத் தலச்சிறப்பு, (17) கல்வெட்டுக்கள், (18) சிவராத்திரி வழிபாடு, (19) பௌர்ணமி வழிபாடு, (20) திருமுறைப் பதிகங்கள், (21) அஷ்டோத்தர சதநாமாவளி, (22) சகஸ்ர நாமாவளி.

51

சித்தாந்தக் கட்டுரைகள்

1996

(ஆசிரியர் – சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்; வெளியீடு – அருள் நூல் பதிப்புக்குழு (சேலம்), சென்னை: பக்கம் – 332; விலை ரூ. 125/-)

இருபத்தெட்டுச் சைவசித்தாந்த சாத்திரக் கட்டுரைகளைக் கொண்டது இந்நூல். ''திருவருட்பயன்'' என்ற கட்டுரை அந்நூலில் உள்ள பாடபேதங்களை விளக்கும் அரிய ஆய்வு ஆகும்.

''உண்மை விளக்கம் – நாதாந்த நாடகம்'' என்னும் கட்டுரை சிவமே நேர் நின்று உணர்த்துவதாக உத்தியமைத்து எழுதப்பட்டது போல் தோன்றுகிறது. ஆனால் இது உத்தியன்று; உண்மையே என்பது

சுவாமிகளிடம் நேரே சாத்திரம் கேட்டவர் அறிவர் என்று சுவாமிகளிடம் பாடம் கேட்ட ர. வையாபுரி எழுதுகிறார். இதனை விடச் சிறப்பாக இக்கட்டுரை களைப் பற்றி யார்தான் என்ன எழுத முடியும்?

52

ஸ்ரீ நடராசத் தத்துவம்

1996

(ஆசிரியர் – டாக்டர் வை. தட்சிணாமூர்த்தி; வெளியீடு – வானதி பதிப்பகம், சென்னை: பக்கங்கள் – 276; விலை ரூ. 80/-)

இந்த நூலும் ஆழமான, நுண்மையான ஒன்று ஆகும்.

சிவ தாண்டவ மூர்த்தங்களின் ஆத்மக, தெய்வ, பௌதிகத் தத்துவங்களை சமய நூல்களாய சாத்திரங்கள், தோத்திரங்கள் புராணங்கள் முதலியவற்றின் வழி ஆய்வு செய்கிறார். அஷ்டாஷ்ட மூர்த்தங்களும் சிவதாண்டவ மூர்த்தங்களும், சிவ தாண்டவ மூர்த்தங்களின் தத்துவங்கள், சிவதாண்டவ மூர்த்தங்களின் வழிபாட்டு முறைகளின் தத்துவச் சிறப்புகள், நூற்றாண்டுகளில் சிவதாண்டவச் செய்தி வளர்ச்சி, திருவருட் பிரகாச வள்ளலாரின் நடராச அனுபவம் என ஐந்து இயல்களாக இந்நூல் பகுக்கப் பட்டுள்ளது.

இந்நூல் ஆழ்ந்து படிக்க வேண்டிய நூலாகும்.

53

சேக்கிழார் தந்த செல்வம்

1997

(ஆசிரியர் – அ.ச.ஞானசம்பந்தன்; வெளியீடு – கங்கை புத்தக நிலையம், சென்னை: பக்கங்கள் – 432; விலை ரூ. 85/-)

சேக்கிழார் பெருமானின் புராண மணி மகுடத்திற்கு இலக்கியப் பார்வையாக ''தேசிய இலக்கியம்'', ஆய்வுப் பார்வை யாக ''பெரிய புராணம் – ஓர் ஆய்வு'' சமுதாயப் பார்வையாக ''சேக்கிழார் தந்த செல்வம்'' என மூன்று நோக்குகளாய் – மும்மணிகளாய் – மூதறிஞர் அ.ச.ஞா. அழகு சேர்த்து இருக்கிறார். இந்நூல் மூன்றாவது மணியாகும்.

சமுதாயத்திற்குக் குறிக்கோளாகத் தொண்டினை வலியுறுத்தும் பெரிய புராணம், சட்டி கொடுத்தல், துணி வெளுத்தல் ஆகிய வற்றையெல்லாம் சொல்கின்றதே, இவை உணவு படைத்தல், மருந்து கொடுத்தல் போல தொண்டு ஆகுமா என்ற கேள்வியினை எழுப்புகிறார் மூதறிஞர். தொண்டு மனப்பான்மை தான் முக்கியமே தவிர அத்தொண்டு எவ்வாறு செய்யப்பட்டது என்பது முக்கியம் அல்ல என்று விடையும் பகருகிறார். இதனைத் தாண்டி திருக்கோயிலில் அலகிடுதல், மெழுகுதல், புல் செதுக்குதல், சாம்பிராணி போடுதல், நந்த வனம் அமைத்தல் முதலியவை எவ்வாறு மக்கள் தொண்டு ஆகும் என்ற கேள்வியை எழுப்புகிறார் பேராசிரியர். திருக்கோயிலுக்கு மக்கள் பலர் (அந்நாளில்) வருவர். கருவறையும் மூன்று பக்கமும் மூடப் பட்டிருக்கும். எனவே சுற்றுச் சூழல் மாசுபடுதல் இயல்பு. தரை மாசைப் போக்க அலகிடுதல், மெழுகுதல் செய்யப் பெற்றன. காற்றில் ஏற்படும் மாசைப் போக்கக் கிருமிகளை அழிக்க – கிருமி நாசினிகளாக சாம்பிராணிப் புகையும், குங்குலியப் புகையும் பயன்படுத்தப் பட்டன. எனவே இவை மக்கள் தொண்டே என்கிறார்.

பேராசிரியர் வழங்கும் கருத்து மணிகள்:

1) வெறும் தொண்டு செய்வதைவிட பக்தியோடு செய்யும் தொண்டில் தன் முனைப்பு இருக்காது.

2) பெரியபுராண அடியார்கள் யாரும் இறைவனை நாடிப் போகவில்லை. இறைவனே அவர்களை நாடி வந்தான்.

3) தொண்டு செய்ய வறுமையோ, செல்வமோ தடை இல்லை. நந்தனார் ஏழை; அமர்நீதியார் செல்வர்.

4) பெரியபுராணம் பக்திக்காக மட்டும் எழுந்ததல்ல; பக்தி நெறியில் தோன்றிய தேவார, திருவாசகமே போதும். ஏன்? திருவாசகம் ஒன்றே போதும், சமுதாயத்

திற்குப் பாடம் புகட்டவே பெரிய புராணம் எழுந்தது.

5) அப்பர் பெருமான் கைத்திருத் தொண்டு செய்த திருவதிகையில் தன் பாதம் பட நடக்க மாட்டேன் என்று கருதி சுந்தரர் திருவதிகைக்குள் நுழையவில்லை. பெரியவர்களுக்குச் சுந்தரர் வைத்திருந்த மதிப்பு சேக்கிழார் தரும் முதல் செல்வம் ஆகும். கிழவேதியர் ஒருவர் இளைஞரான சுந்தரரைப் பலகாலும் மிதித்தாலும் சுந்தரர் பொறுமையுடனும், மரியாதையுடனும் ''என்னை மிதித்த நீயாரையா?'' என்று கேட்டமை சேக்கிழார் தரும் செல்வத்தின் இரண்டாவது பகுதியாகும்.

6) ''ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள'' என்ற பாடலைப் பெரிய புராணத்தில் தலையாய பாடல் என்று எடுத்துக் கூறி மிக அருமையாகவும், விரிவாகவும் விளக்குகிறார் பேராசிரியர். இப்பாடல் எல்லாக் காலத்தவர்க்கும் எல்லா சமயத்தார்க்கும் ஏற்ற பாடல் என்கிறார்.

7) சுந்தரர் பதியிலார் குலத்தைச் சேர்ந்த சங்கிலியாரைக் கலப்பு மணம் செய்தது முதல் புரட்சியாகும், அதிகாரத்தில் – அரச பீடத்தில் உள்ளவர்களை இன்றுவரை புகழ்ந்து பாடியே வரும் தமிழ் சமுதாயத்தினரை நோக்கி ''அப்படிப்பட்டவர்களைப் பாடாதே; இறைவனையே பாடு. சோறும், கூறையும் கிடைக்கும்'' என்று ஒரு பதிகமே பாடுகிறார். இது இரண்டாவது புரட்சி ஆகும்.

8) தோழனே ஆனாலும், அடியாரே ஆனாலும் தவறு செய்தால் தண்டனை பெறுவர் என்பதனைச் சுந்தரர் வரலாற்றிலும் (கண் இழந்தார்), மணிவாசகர் வரலாற்றிலும் (பதினான்கு நாட்கள் கடுந்தண்டனை) காணலாம். இது சேக்கிழார் தரும் நான்காவது செல்வம் ஆகும்.

9) அகப்பற்றை வென்றவர்க்கு யாருமே பகைவர் இல்லை என்பதற்கு இலக்கியமாகத் திகழ்பவர்கள் இயேசுபிரான், அப்பர் பெருமான், காந்தியடிகள் ஆவர்.

10) அப்பர் பெருமான் ஏன் சமண சமயம் புகுந்தார்? ''சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்'' பாடலுக்கு என்ன விளக்கம்? அகிம்சையைப் போற்றிய தமிழ் நாட்டுச் சமணர்கள் வேறு; அப்பர் பெருமானுக்குத் துன்பம் விளைத்த வெளிநாட்டுக் களப்பிரரான அமணர் வேறு என்று பேராசிரியரின் ஆய்வுகளுக்கும் இந்நூலில் பஞ்சமில்லை.

11) பெரியபுராணத்தில் அடியார்க்கு நிகழ்கின்ற சிக்கல்கள் எல்லாம் இறைவன் அடியார்களைச் சோதனை செய்வதற்காகச் செய்தான் என்பர் சிலர். சோதனை செய்பவன் இறைவனாக மாட்டான். பின் ஏன் இவ்வாறு நிகழ்ந்தன? மாபெரும் தீரச்செயல்களைச் செய்த இந்த அடியார்களிடம் அவர்களையும் அறியாமல் ஏதோ ஒரு மாசு இருந்து கொண்டு அவர்களை வளரவிடாமல் செய்கிறது. இறுதியாக உள்ள அந்த மாசைப் போக்கத்தான் இத்தகைய நிகழ்ச்சிகள் இறைவன் அருளால் நிகழ்கின்றன.

12) தனது இழிகுலப் பிறவி பற்றி நந்தனாருக்கு இருந்த தாழ்வு மனப்பான்மை தில்லைக்கு வந்தபின் விஸ்வரூபம் எடுத்து அவரை முழுமையாக ஆட்கொண்டு விட்டது. இறைவனைப் பற்றிய நினைவைக்கூட அமுக்கி, சாதி பற்றிய கவலை அடியாரை முழுவதும் ஆட்படுத்தி விட்டது. அந்தப் பிறவியாகிய தடையைப் போக்க முனைந்தான் பெருமான். எனவே திருநாளைப் போவார் தீக்குளிக்க நேர்ந்தது.

13) உலக இலக்கியங்களில் காணப்படும் இறை அடியார்கள் அனைவரும் இந்தப் பிறவி போய் நீங்க, இறைவனடியைச் சென்றடைய வேண்டும். அவனோடு இரண்டறக் கலக்க வேண்டும் அல்லது மோட்ச சாம்ராஜ்யத்தில் இடம்பெற வேண்டும் என்பதற்காகவே தங்களுடைய வாழ்நாளைக் கழித்தார்கள். இதனுடன் மாறுபட்டு, மோட்சத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இறைவனுடைய திருவடிகளைச் சேரவேண்டும் என்ற எண்ணங்கூடப் பெரிதாக இல்லாமல் இந்த உலகத்தில் இருந்தபடியே இறையன்பர்களுக்கு உதவுவதையே ஒரு பெரும் குறிக்கோளாகக் கொண்டு இருந்தவர்கள் தான் அறுபத்து மூன்று நாயன்மார்கள்.

14) சேக்கிழாருடைய குறிக்கோளாக விளங்கியது சைவ சமயத்தை வளர்ப்பதற்கு முக்கியம் தருவதாக மட்டும் தெரியவில்லை. சைவத்தின் பெருமையைப் பெரிய புராணம் பேசுகின்றது என்பதில் கருத்து வேறு பாடில்லை. ஆனால் அதை விட முக்கியமாகத் தமிழகத்தில் வாழுகின்ற மக்களைத் திருத்துவது தான் அதனுடைய முக்கிய குறிக்கோளாகும். ஆகவே சமய நோக்கத்தைவிட சமுதாய நோக்கம்தான் அவருடைய முக்கிய குறிக்கோளாக இருந்தது.

54

சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் (1997)

(தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்; வெளியீடு – வர்த்தமானன் பதிப்பகம், பக்கங்கள் – 444 விலை ரூ. 95/-)

தனியொரு நாயனாரைப் பற்றி இத்தனை பெரிய நூல் வந்திருப்பது வியப்பினைத் தருவதாகும். கண்ணப்ப நாயனார் பற்றி யாரெல்லாம் பாடி இருக்கின்றார்களோ அத்தனை பெரியவர்களின் பாடல் களையும் தொகுத்து விளக்குகிறார் தெ.பொ.மீ. அவர்கள். அதுவும் தனது 27 வயதில் எப்படி இந்த அளவுக்குப் படித்து அவற்றை மேற்கோள்களாகவும் தந்திருக்கின்றார் என்று வியக்கின்றார் மூதறிஞர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள். பெரிய புராணத்தின் பழைய வரலாற்றுக்கு இப்படி ஒரு புதிய வடிவமா என்று மலைக்கின்றார் பெரிய புராணத்திற்குப் புதிய பார்வை கண்ட அ.ச.ஞா.

''கண்ணப்பர் முன்பிறவி என்ன? அவர் வழிபட்ட கடவுள் யார்? பெரியபுராணம் பெயரெச்சத் தொடரா? வினையெச்சத் தொடரா? என்று எல்லாம் ஆராய வேண்டுவதில்லை'' என்ற ஒரு சாடலோடு நூலைத் தொடங்குகிறார் தெ.பொ.மீ. இவர் அறிவாய்விற்குப் போகவில்லை. அன்பாழத்திற்குப் போகிறார் என்று எடுத்த எடுப்பிலேயே தெரிகிறது. கண்ணப்பரை அன்பு கொண்டு உணராமல் அறிவு கொண்டா பார்க்க முடியும்?

நூலிற்குப் புகுமுன் பாட்டின் சுவை அறிந்தால் தான் நூலைச் சுவைக்க முடியும் என்று கட்டியம் கூறுகிறார். அந்தச் சுவை பிறப்பதற்கு அடித்தளமாக முதல், கரு, உரிப்பொருள் வேண்டும் எனத் தொல்காப்பியம் மூலம் விளக்குகிறார். முதல், கரு உரிப் பொருளுக்கு இணையான ஆலம்பன விபவம், உத்தீபன விபவம் மற்றும் வியபிசாரி பாவம் (உள்ளக் கிளர்ச்சி) ஸ்தாயிபாவம் (குறிப்பு), ரஸானுகூல விகாரம் (மாறுபட்ட மனத்தின் வேறுபட்ட நிலை) ஆகிய வடநூலாரின் கருத்துக்களை விளக்குகிறார்.

''எண் சுவைகள்'' என்ற முதற் பகுதியில் எண்வகைச் சுவைகளான உவகை, வெகுளி, பெருமிதம், இளிவரல் (முதற் சுவைகள்) நகை, அழுகை, மருட்கை, அச்சம் (வழிச்சுவைகள்) பற்றி தொல் காப்பிய விளக்கத்தைக் கூறி ஒவ்வொரு சுவையின் பிறப்பும் கூறி அதற்கான மேற்கோள்களையும் எடுத்துக் காட்டுகிறார். இந்த எண் சுவைகளுக்கு இணையான சிருங்காரரசம் முதலானவை பற்றியும் வடநூல் வழக்கை ஒட்டிக் கூறுகிறார்.

''புனைந்துரையும் பொய்யுரையும்'' என்ற பகுதி அச்சுவடிவம் பெற நாம் பேறு பெற்றவர்கள் ஆவோம். அத்துணைச் சிறந்த பகுதி. பொய்யுரைக்கும் புனைந் துரைக்கும் வேறுபாடு காட்டுகிறார். பாடுபட்டுத் தேடிப் பலநாள் சேர்த்து பலநாள் பொன்போலப் புதைத்து வைத்த உள்ளுணர்வு என்னும் ஒப்புயர்வில்லாத ஒண்பொருள்களை, அறிவாழத்தால் வேண்டியபடி மாற்றி வைத்துச் சூதாடுவதே பொய்யுரை (கற்பிதம்) ஆகும். உள்ளுணர்வுகளத் தேடி ஒன்றாகத் திரட்டி உருக்கிவார்த்து அழகிய பதுமைகளாக அமைத்து வைப்பதே புனைந்துரை (கற்பனை) ஆகும்''. அடுத்து புலனுணர்வையும், உள்ளுணர்வையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். புலனுணர்வு உருவற்றுக் கலங்கிய நிலையில் மனத்துள் அமிழ்ந்து கிடக்கும், உள்ளுணர்வாய் நாம் கண்ட பொருளோ உருப்பெற்று விளங்குகிறது என்கிறார். அப்படி உள்ளுணர்வால் கண்ட

பொருள் வெளிப்படவேண்டும். இல்லையேல் அது வெறும் புரட்டு என்கிறார்.

ஆசிரியர் இப்பொழுது சுவைக்கு வருகின்றார். சுவை பாட்டின் உட்பொருள், அவற்றின் வேறுபாடு அவற்றின் வடிவ வேறுபாடேயாகும். உள்ளக் குறிப்பு உருப்பெற்று எழுந்து உயிர் பெற்று உலவுவதை ஆராய்ந்தறிய வேண்டும் என்கிறார். இந்தச் சுவை நமக்குள் எவ்வாறு எழுகிறது. கதையிலே வருவாரது கருத்திலே கருவாகி உருப்பெற்ற உள்ளக்குறிப்பு நமது உள்ளத்திலே புகுந்து ஒன்றுபடும் முறைதான் என்ன என்கிறார். இதனைச் 'சுவை கோடல்' என்கிறார். தெ.பொ.மீ.. இந்தப் பகுதியைச் சிவஞானமாபாடியம் படிப்பது போல பக்தியோடு ஒருமுறைக்கு இருமுறை எழுத்தெண்ணி படிக்க வேண்டும்.

கடவுளைப் பற்றி மீமாம்சகர் போன்றோர் பலவிதமாக ஆராய்வது போல சுவையினைப் பற்றியும் பலவித மாக வடமொழி அறிஞர்கள் ஆய்கின்றனர். மீமாம்சகர்களுக்கு வேள்வி செய்தாலே போதும்; மேலுலகம் கிடைத்துவிடும். உள்ளநிலையைப் பற்றிக் கவலையே இல்லை. அதே போலக் கூத்தினுள்ளும், முதற்பொருளும் கருப்பொருளும், உரிப்பொருளும் கண்டபோதே சுவையும் பிறக்கின்றது. கூற்றும் நிலையும் விறலுமே நமக்கு வேண்டியவை. அவர்களது உள்ள நிலையைப் பற்றி ஆராய வேண்டியதில்லை. இது பட்டலொல்லடர் என்ற வடமொழி ஆசிரியர் கருத்து.

''போலியாக உள்ள பொருளானது உண்மையாக உள்ளது போல சுவையை விளைவிக்குமா?'' என்பது இந்த அணுகுமுறைக்குத் தடையாகிறது. சங்குகர் முதலான வடநூலார் நையாயிகரை ஒட்டி அநுமான வாயிலாகச் சுவையினை அறிகின்றோம் என்கின்றனர். நையாயிகர் கள் பொருள்களை அறிந்து கொள்ளும் முறையில் உய்த்தறிதலே சிறந்தது என்பார்கள். இதனை அடியொற்றிச் சங்குகர் முதலியோர் புகை கண்ட வழி நெருப்புண்டு என்று உய்த்துணர்தல் போல முதல், கரு, உரிப் பொருள்கள் கண்டவழி சுவையினை உய்த்துணர்கின்றோம் என்கின்றனர். கதையில் வரும் தலைவனும் கூத்தில் வரும் பொருநனும் வேறு என்று நாம் எண்ணுவதில்லை.

இதிலும் ஒருமுறை உள்ளது. நேரே கண்ட பொருளைப் போல உய்த்துணர்வு வாயிலாக அறிந்த பொருள் அத்துணை சுவை நிரம்பியதாகுமோ? ஆகாதன்றே என்கிறார் தெ.பொ.மீ. தத்துவநிலையில் சாங்கியர் ''வீட்டின்பமானது புறத்தே உள்ள பொருள்களைப் பற்றியதல்ல. உள்ளுக்குள்ளே ஒளிர்வது'' என்கின்றனர். இதே அடிப்படையில் சுவையினை ஆராயும் பட்ட நாயகன் முதலாயினார் புறவாராய்ச்சியை விட்டொழித்தே உள்ளத்துள் புகுந்து சுவையினை உணர்கின்றனர்.

த்வனிகாரர் முதலியோர் இதனை இன்னும் விரித்துரைத்துள்ளனர். சொற்கள் தமது பொருளைக் குறிப்பாலும் வெளிப்படையாலும் உணர்த்துகின்றன. பாவலன் கையில் அச்சொற்கள் அருமையானவையாக அழகிய உலகங்களை எதிர்கொண்டு வந்து காட்டுகின்றன. பாவலனது உள்ளுணர்வின் ஆற்றலால் உயரிய பொருள்களை வெளியிடுகின்றன. இவ்வாறு வருவதை ''த்வனி'' அல்லது உள்ளுறை என்பர். அதுவே பாட்டுக்கு உயிர்நிலை.

த்வனிகாரர் வந்த முடிவுக்கே தமிழரும் வருகின்றனர் என்கிறார் தெ.பொ.மீ. ''இவற்றைச் சுவைகோடல் என்பது என்னை எனின், நகையும் அச்சமும் முதலாகிய உணர்வு முற்காலத்து உலகியலான் அறிவான் ஒருவன், அவற்றிற்கு ஏதுவாகிய பொருள் பிறகண்டவழி தோன்றிய பொறியுணர்வுகள் அவயவிச் சுவை எனப்படும்'' என்ற பேராசிரியர் கருத்தைச் சுட்டுகிறார். மேலும் ''உலகிலே பொருள்கள் முதற்பொருளும் வழிப்பொருளுமாய்க் காரணகாரியம் என்னும் தொடர்போடு விளங்குகின்றன. இத் தொடர்பு பாட்டுலகில் இல்லை. பாட்டுலகம் பெருவகையில் மண்ணுலகினும் வேறாகி அதனின்றும் உயர்ந்திருப்பதொரு பொன்னுலகம். உள்ளுணர்வால் ஒன்றுபட்டு விளங்கும் பல பொருள்கள் கொண்டு திகழ்வது. அப்பொருள்களுக்கு அங்குள்ள தொடர்ப்பாடுதான் என்ன? கண்டோர்

மனதிலும் கேட்டோர் மனதிலும் உள்ளக் கிளர்ச்சியை எழுப்பிச் சுவையை ஊட்டும் தொடர்ப்பாடேயாகும். இஃது உள்ளுணர்வால் ஒன்றாகும் தொடர்ப்பாடாகும். எனவே முதல், கரு, உரிப்பொருள்களை நாம் தனித்தனியாக உணர்வதில்லை. இவையெல்லாம் ஒன்றாக இயைந்து ஓருருப் பெற்று ஒரு சுவையாகி ஒளிர்கின்றன.

அடுத்து ''த்வனி காரரை உள்ளிட்டோர் வேதாந்திகளைப் பின்பற்றித் தம் சுவை ஆராய்ச்சியைச் செய்து வந்தனர். ப்ரஹ்மாஸ்வாதமும் ரஸாஸ்வாதமும் ஒத்திருக்கின்றன என்பர். எந்நாளும் தானாக விளங்கிய கடவுளைத் தானாக அறிவதே மெய்யுணர்வு. எந்நாளும் நம்முள்ளேயே பதிந்து கிடந்த சுவையினை உள்ளுக்குள்ளே ஒளிர்வதாக உணர்வதே சுவையுணர்வு. தானென்பது அறியாமை என்னும் மறைப்பாகிய தடையால் வந்தது; அந்தத் தடை போனதும் வருவது மெய்யுணர்வு. சிற்றறிவினவாயும் சிற்றளவினதாயும் உள்ள சிறப்புணர்வு நீங்குவதே சுவையுணர்வில் தன்னிழப்பாம்''. சுவையாராய்ச்சியின் அருமையைத் தொல்காப்பியர் வாக்கு மூலம் கூறி முடிக்கிறார். ''கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும் உணர்வுடை மாந்தருக்கல்லது தெரியின் நனியைப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே''.

அடுத்து ''அன்பே சுகம்'', ''அன்பே இன்பம்'', ''அன்பே சிவம்'' என்று மூன்று நிலைகளில் அன்பை விளக்குகிறார். பக்தியையும் அன்பையும் வெகு அழகாக வேறுபடுத்திக் காட்டுகிறார். ''நாலுபேர் சென்றதால் நன்றாகத் தேய்ந்த வழியில் நடந்து செல்வது பக்தி. அன்பிற்கோ தேய்ந்த வழியென்றும் பழகிய வழியென்றும் இல்லை. கண்டதெல்லாம் வழிதான். காடுமேடெல்லாம் தவிடு பொடிதான். காற்றில் பறப்பார்க்குக் காடென்ன? மேடென்ன? அன்பிற்கு வழியும் இல்லை. வாய்க்காலும் இல்லை. அணையும் இல்லை. அளவும் இல்லை'' என்கிறார். தெ.பொ.மீ. அவர்களின் உணர்ச்சிப் பெருக்கு கவித்துவமாக மலர்கிறது. காதல் பாட்டெல்லாம் அகப்பாட்டல்ல. அன்பு எங்கு மலர்கின்றதோ அங்கே தான் அகப்பாட்டு பிறக்கிறது என்கிறார். ''அன்புதான் தமிழர் அறிந்த கடவுள். நமது உள்ளக் குகையில் அணுவளவாகியுள்ள சாளரத்தின் வழியாக அவ்வன்பு 'இல்நுழை கதிரே' போல நுழைகிறது. அச்சாளரத்தைச் சிறுகப் பெருக வைத்து நம்முள்ளத்தையே வெட்ட வெளியாக்க உள்ள முழுதும் அன்பாக, அன்பு வெள்ளத்தில் அழுந்தி இறைவனோடு இயைந்து இழைந்து போதலே இன்பவழி'' என்கிறார்.

''குறளும் அன்பு வழியும்'' என்ற பகுதியில் பல குறட்பாக்களுக்கு அன்பு நெறியில் பொருள் தருகின்றார். ''அன்பே சிவம்'' என்று கொண்டு திருமூலரில் நிறுத்துகிறார்.

இந்த அடிப்படையில் அப்பர் பெருமான், ஞானசம்பந்தப் பெருந்தகை, நம்பியாண்டார் நம்பி, சுந்தரமூர்த்தி சுவாமிகள், மணிவாசகப் பெருந்தகை, சிவப்பிரகாச சுவாமிகள், பட்டினத்தடிகள் ஆகியோர் கண்ணப்பர் வரலாற்றை உள்ளுறைப் பொருளாகவும், ஒவ்வொருவர் பாடலுக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுவதாகவும் ஆய்வு நிலையில் விளக்குகிறார் தெ.பொ.மீ.

இதே வரலாற்றை உள்ளுறை அணி அடிப்படையில் – உவமை – கந்த புராணம், மருதவன புராணம், தியாகராஜ லீலை, பெருந்துறைப் புராணம், குற்றாலப் புராணம், திருவாரூர்ப் புராணம் எப்படி அணுகியிருக்கின்றன என்றும் அவற்றில் கந்த புராணப் பாடல் மருதவனப் புராணப் பாடலைவிட எப்படி சிறந்து விளங்குகிறது என்றும் மிக விரிவாக அற்புதமாக ஆசிரியர் விளக்கியுள்ளார். படித்து அனுபவிக்க வேண்டும்.

வேடர் பெருமான் வரலாற்றை உள்ளுறைச் சுவைபட, நகைச் சுவையாக எள்ளலாக – இகழ்ச்சியாக – இரங்கலாக – ஏச்சாக – இழிப்புரையாக சிவப்பிரகாச சுவாமிகளும், காளமேகப் புலவரும் பாடிய பாடல்களை எடுத்து விளக்குகிறார்.

நக்கீரர் திருமறத்திலும் கல்லாடனார் திருமறத்திலும் கண்ணப்பர் வரலாறு

என்னென்ன சுவைகளுடன் எடுத்தாளப் பட்டிருக்கிறது என்று விளக்கி, இரண்டு நூல்களிலும் மருட்கை மீதூர்ந்து இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றார் தெ.பொ.மீ. சேக்கிழார் பெரிய புராணத்தில் இவ் வரலாறு எவ்வாறு பேசப்படுகிறது என்று விளக்குவதற்கு முன்பாகவே அன்பு எனும் உவகைச் சுவையே மிகுந்துள்ளது என்று இப்பகுதியை முடிக்கிறார். திருவள்ளுவர் அன்பும் அவாவும் கலந்து நின்ற கடைச்சரக்கை நறுக்கி அடித்து நன்றாய்ச் சலித்துத் தெள்ளிப் போகின்றார். கூடியவரையில் கரடுமுரடான அவா எனும் சரக்கெல்லாம் மசித்து அன்பெனும் திருமணம் வீசும் அழகிய சுண்ணப்பொடி ஆகின்றது. அவற்றினைக் கைக்கொண்டு திப்பியாய் நின்றவற்றை வெளியில் எறிந்து விடுகின்றனர். அவாவெனும் பழத்திலே உள்ள அன்பெனும் சாற்றைப் பிழிந்து எடுத்துக் கொண்டு கோதை அப்புறம் எறிந்து விடுகின்றார். சாற்றில் கொட்டை கோதில்லாதபடி வடிகட்டி வடிகட்டித் தேட்டையாகத் தெளிய வைக்கின்றார்'' என்று முழு திருக்குறள் நூலுக்கும் தெ.பொ.மீ. அவர்கள் இரத்னச் சுருக்கமாக – அற்புதமாக – ஒரு அன்பு வடிவம் – இன்ப வடிவம் கொடுத்து விடுகிறார்.

சங்க இலக்கியம் – தொல்காப்பியம் ''பிறப்பே குடிமை'' என்ற நூற்பா இலக்கணம் – கூறும் காதல் வாழ்க்கையை எடுத்துக் காட்டுகிறார்.

அன்பின் அருநிலை தன்னுணர்வற்ற நிலை என்கிறார் தெ.பொ.மீ. அடுத்து இந்த நிலையை – உளவியல் ரீதியாக – மிக அற்புதமாக விளக்குகிறார். இந்த அன்பினை எவ்வாறு அறிவது என்ற வினாவை எழுப்புகிறார். ஆர்வலர் புன் கண்ணீரிலா? சாவில் காதல், பிரிவு நனி இரங்கலிலா? காதலனுக்கு எந்த நோய் வந்ததோ அந்த நோயே காதலிக்கு வந்தால் ஓரளவு அன்புருவம் சிறிது புலப்படு கின்றது எனலாம். அன்பொழுக்கத்தில் ஓருயிர் ஈருடல் என்பதோடு நிற்பதில்லை. ஈருடலும் ஒருடலாகின்றது எனலாம். ஐந்திணை ஒழுக்கமே அன்பொழுக்கம் என்கிறார் தெ.பொ.மீ. சங்கப் பாடல் – காதல் பாடல் அன்பின் பாட்டு – சிவன் பாட்டு என்கிறார். காதல் வாழ்வில் மட்டுமின்றி, பெற்றோர் – பிள்ளைபாசம் (இராமன் பிரிவில் தயரதன் உயிர் விடுதல்) நட்பு (கோப் பெருஞ்சோழன் உயிர் துறக்க, பிசிராந்தை யாரும் உயிர் துறத்தல்), நிலைகளிலும் அன்பு முகிழ்ப்பதை இலக்கியச் சான்று களுடன் நிறுவுகிறார். சங்கப் பாடலையே சிவப்பாட்டு என்ற தெ.பொ. மீ. திருமுறை அகத்துறைப் பாடல்களைப் பற்றி என்ன சொல்லியிருப்பார் என்று கூறவும் வேண்டுமோ?

இருநூறு பக்கங்கள் சுவை, அன்பு ஆகியவற்றை எல்லாம் விளக்கிவிட்டு பெரிய புராணச் செய்திக்குள் நுழைகிறார் தெ.பொ.மீ. ''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை'' என்ற பகுதியில் கண்ணப்பரின் மனமாறுதல் முற்று மாறிய நிலை என்று கூறி, இவ்வாறு முற்றும் மாறுதல் எவ்வாறு நிகழும் என்று உளவியல், உலகியல் அடிப்படையில் விளக்குகிறார். கண்ணப்பன் இறைவனோடு கூடிய நிலையை அகத்துறையாகவே சித்தரிக்கிறார் தெ.பொ.மீ.

''உயிர் தவழும் உடலம்'' என்ற பகுதியில் கண்ணப்பநாயனார் வரலாற்றில் பிற செய்திகளையும் எடுத்துரைக்கிறார். கண்ணப்ப நாயனார் வரலாற்றையும் அப்புராணத்தில் வரும் பாத்திரங்களின் பண்புகளைப் பற்றியும் நூறு பக்கங்களில் விரிவாகக் கூறுகிறார்.

நிறைவுப் பகுதியில் பெரிய புராணத்தில் வரும் கண்ணப்ப நாயனார் புராணத்துடன் திருக்காளத்திப் புராணத்தையும் சீகாளத்திப் புராணத்தையும் பல்கலைச் செல்வர் ஒப்பிடுகிறார். ஒப்பாய்வின் முடிவாக, ''சேக்கிழார் எழுதியதொன்று தான் அன்பின் கதை என்பதாயிற்று. ஆகவே, அதில் ஓர் எழுத்தை மாற்றினாலும் அது அன்பின் கதையாகாது. வேறொன்றன் கதையாக முடியும் என்பதும் உண்மையாதல் வேண்டும். அவ்வாறானால், மற்றையோர் எழுதிய கண்ணப்பர் கதைகள் உயரிய அன்பின் கதையாதல் எப்போதும் இல்லையாம். திருக்காளத்திப் புராணத்திலும் சீகாளத்திப் புராணத்திலும்

கண்ணப்பர் தம் கதை வந்துள்ளது. ஆனால் அக்கதைகள் நாம் அறிந்த கண்ணப்பர் கதையும் அல்ல; அன்பின் கதையும் அல்ல; வேறொர் கண்ணப்பரது கதை என்றே முடிவு கட்டி விடலாம். இதனால் அந்நூல்களுக்கு ஏற்படுவதோர் இழுக்கு ஏதும் இல்லை. வேறுவகையில் மேலான அக்கதையை விளக்குகின்றன, என்று ஆறுதல் சொல்லிக் கொள்வோம்.''

தெ.பொ.மீ. அவர்களின் இந்த அன்பு நூலைப் புலன் உணர்வோடு படிக்காது உள்ளுணர்வோடு படிக்க வேண்டும். அப்பொழுது தான் அன்பும் புரியும்; கண்ணப்பரும் புரிவார்.

55

இசைத் தமிழின் உண்மை வரலாறு (1997)

(ஆசிரியர் : பி.டி.ஆர். கமலத் தியாகராஜன், பக்கம் – *172*; விலை ரூ. *127*)

''இசைத் தமிழின் உண்மை வரலாறு என்ற தலைப்பே பல கேள்விகளை எழுப்புகிறது. அப்படியானால் இதுவரை கூறப்பட்டு வந்த இசைத்தமிழின் வரலாறு உண்மையானது அல்ல என்று ஆகின்றது. இதனை நிறுவுபவர் ஒரு இசைக் கலைஞரோ இசைத் தமிழ் ஆசிரியரோ அல்ல. ஒரு பொறியியல் வல்லுநர் என்பதுதான் சிறப்பு.

கமலத் தியாகராசன் அவர்களுக்கு கருநாடக இசையின் வரலாற்று ஆசிரியர்களின் நூல்களும் நிறைவு தரவில்லை. தமிழிசை வரலாற்று ஆசிரியர்களின் நூல்களும் நிறைவு தரவில்லை. ''ஏதோ ஒரு அசைக்க முடியாத நம்பிக்கையில் கருநாடக இசை தமிழிசை என்று கூறுகிறார்களே ஒழிய அதற்குரிய காரணங்களை அவர்கள் எடுத்துரைக்கத் தவறியது மட்டுமின்றி இசையை ஒரு சந்தேகக் கண்ணுடனேயே பார்க்கிறார்கள்'' என்கிறார்.

தமிழிசையை முழுமையாக ஏற்றுக் கொள்ளாத சென்னை மியூசிக் அகாதமியில் "Contribution of Tamil to Karnatic Music" என்று நூலாசிரியரைப் பேச அழைத்த பொழுது தலைப்பினையே மாற்றி "New light on the Musical History of TamilNadu" என்று பேசி பரபரப்பினை ஏற்படுத்தினார். அப்பேச்சில் ''திருஞான சம்பந்தர் என்று 'யாழ்முரி' பாடி கமகத்திற்கு ஓர் ஏற்றத்தைக் கொடுத்தாரோ அந்த நாளிலேயே அவர் கருநாடக சங்கீதத்திற்கு வித்திட்டார். கருநாடக இசை மரபுக்கு அவர்தாம் காரண கர்த்தா. கருநாடக இசைக்குப் புரந்தரதாசர் தாம் பிதாமகர் என்று பலர் கூறிவருவது வரலாற்றடிப் படையில் ஏற்கத்தக்க வாதமாக அமைய வில்லை'' என்கிறார்.

அடுத்து கமலத்தியாகராஜன் அவர்கள் மிக முக்கியமான கேள்வியினை எழுப்புகிறார். ''பதினான்கு நூற்றாண்டுகளாக நிலை பெற்று இந்த நாட்டின் தொன்மையான இசை வடிவங்கள் என்று போற்றப் படும் தேவாரப் பதிகங்கள், அவை பாடப் பெற்ற ஓரிரண்டு நூற்றாண்டுகளில் ஏன் வழக்கிலிருந்து மறைந்தன? அவற்றைத் தேடியெடுத்து நிலைநிறுத்த வேண்டிய ஓர் இன்றியமையாமை எதனால் ஏற்பட்டது? திருமுறை கண்ட சோழன் நம்பியாண்டார் நம்பிகளின் உதவியுடன் தேடி எடுத்த பதிகங்களைப் பாடுவதற்கு நிவந்தங்கள் ஏற்படுத்தி ஓதுவார்களை நியமித்துப் பதிகங்களைக் காத்தார் என்று ஒன்று போல கூறுகின்றார்களே இப்படிக் காக்க வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது?'' என்று கேள்விகளை எழுப்புகிறார். இதுவரை இக்கேள்விகளை யாரும் எழுப்பவில்லை. கமலத் தியாகராஜன் கேள்விகள் எழுப்புகிறார்; பதில்களும் தருகிறார். அதுவே இந் நூல்.

ஞானசம்பந்தர் யாழ்முரிப் பதிகம் பாடிய நிகழ்ச்சியை ஆசிரியர் எடுத்துக் கொள்கிறார்.

''யாழ்முரிப் பதிகம் நிகழ்ச்சியால் நாமறிவது திருநீலகண்ட யாழ்ப்பாணரின் வேண்டுகோளுக்கிணங்க யாழில் அடங்கா வண்ணம் சம்பந்தர் பதிகம் பாடினார் என்பது. அன்றைய நாள் யாழ்க்கருவியில் பெரும் விற்பன்னர் திரு நீலகண்ட யாழ்ப் பாணர் தாம். அப்படிப்பட்டவர் வாசிக்க முடியாதபடி சம்பந்தர் என்ன பாடினார்?''

''நமக்கு இங்கே தெரிவது அது பாணரின் குறையினால் அன்று. கருவியின் குறைபாடே. யாழ் ஒரு விட்டிசைக்கும் கருவி. விட்டிசைக்கும் கருவியில் கமகம் வாசிக்க முடியாது. சம்பந்தர் அன்று கமகத்துடன் பாடினார்.

இப்படி நாம் கூறும்போது இதில் பல உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. 1) உலகத்தில் முதன் முதலாகப் பாரோர் அறியும்படிக் கமகத்தில் பாடியவர் திருஞானசம்பந்தர். 2) அன்றுவரை வேத அடிப்படையில் எழுந்த இசை நூல்களில் கமகத்துடன் வாசிப்பதற்கு ஏதுவில்லை. 3) மிடற்றிசையிலும் அதுவரை கமகத்துடன் பாடும் வழக்கில்லை 4) சம்பந்தர் தாம் யாழின் குறையைக் கோடிட்டு காட்டுவதற்காக முதலில் கமகத்துடன் பாடினார் என்றால் அவர்தாம் இன்றைய கர்நாடக இசை மரபுக்கு வித்திட்டார் எனலாம் 5) இந்த நிகழ்ச்சி இசைத் தமிழில் ஒரு புரட்சி 6) இத்தனை உண்மைகளையும் அன்று மட்டுமன்று. இன்றுவரை உணராத காரணத்தால்தான் இசைத் தமிழின் இலக்கியமும் (சம்பிரதாயம்) இலக்கணமும் வேறு வேறு பாதையில் சென்று ஒன்றுக்கொன்று முரணாக இன்றுவரை இருக்கின்றன.

யாழ் கைவிடப்பட்டது

''அன்று தருமபுரத்தில் யாழ் முரிப்பதிகம் பாடியதால் விட்டிசைக்கும் கருவி வாய்ப்பாட்டிற்குத் துணைக் கருவியாக உதவாது என்று கைவிடப்பட்டது. அப்படிக் கைவிட்டதால் இசைத்தமிழுக்கு உலக இசை மரபுகளில் காணப்படாத ஒரு தனித்தன்மை ஏற்பட்டது. உலக இசை வரலாற்றில் இதுபோல ஒரு நிகழ்ச்சி நடந்ததில்லை.''

''இந்த நிகழ்ச்சியின் முதல் விளைவு இசைத் தமிழில் வாய்ப்பாட்டிற்கும் கமகத்திற்கும் அவ்விசைக்கு ஒரு தனித்தன்மையும் ஏற்பட்டது. அடுத்த விளைவு யாழ் என்ற கருவி வழக்கிழந்தது. இதையடுத்து யாழ்களின் அடிப்படையில் ஏற்பட்ட 'பண்திற' வழக்கும் ஒழிந்தது. 'பண்திற' அடிப்படையில் பாடப்பட்ட தேவாரப் பாடல்களும் ஆழ்வார்ப் பாசுரங்களும் வழக்கொழிந்தன.'' எனத் தேவாரம் தற்காலிகமாக மறைந்ததற்கான காரணங்களை ஆசிரியர் முன் வைக்கிறார். இக் காரணங்களை முன் வைக்க ஆசிரியர் தமிழ் இலக்கியங்கள், இசை நூல்கள், மேனாட்டு இசை நூல்கள் எனப் பலவற்றைச் சான்றுகளாகக் காட்டுகின்றார். அடியார்க்கு நல்லார். அரும்பத உரையாசிரியர், விபுலானந்தர், வெள்ளை வாரணனார், ஆபிரகாம் பண்டிதர், வீ.ப.கா. சுந்தரனார், டாக்டர் எஸ் ஜயலட்சுமி, டாக்டர் து. ஆ. தனபாண்டியன் ஆகியோர் கருத்துக்களை மறுக்கிறார். அத்துணைப் பேரும் இசைக் கலையில் ஊறிப் போனவர்கள். இவர்களை மறுக்க வேண்டுமானால் அதற்கான ஆளுமையும், ஆழமான இசைப் பயிற்சியும், இசைக் கல்வியும் வேண்டும். அது கமலத்தியாகராஜன் அவர்களிடம் இருந்தமையினால் தமிழ் இசைக் கலைக்கு ஒரு அணிகலன் கிடைத்திருக்கின்றது.

56

திருத்தொண்டருள் ஒரு சிறுத்தொண்டர்

(1998)

ஆசிரியர் : டாக்டர் கா.பெ. சந்திரசேகரன்; பக்கங்கள் – 432; விலை ரூ. 75/- வெளியீடு – செம்மலர் பதிப்பகம், சென்னை.

எண்பத்து எட்டுப் பாடல்களைக் கொண்ட சிறுத் தொண்டர் புராணத்தைப் பற்றி விரிவாக 432 பக்கங்களில் ஆய்வு செய்திருப்பது இந்நூலின் சிறப்பு ஆகும். இது எப்படி ஆசிரியர்க்குச் சாத்தியமாயிற்று? ''பக்தி இயக்கமும் சிறுத்தொண்டரும்'' என முதலில் களம் அமைக்கிறார். அடுத்து சிறுத்தொண்டர் மரபு பற்றி இலக்கியச் சான்று, கல்வெட்டுச் சான்றுகளுடன் ''யானைத் தலைவர்'' என்று அறிஞர்களும் வியக்கும் வகையில் நிறுவுகிறார். சிறுத்தொண்டர் கல்வி பற்றிக் கூறுகையில் பெரியபுராணம் நெடுகிலும் மேற்கோள்கள் காட்டுகிறார். வாதாபிப் போரின் காலம், சிறுத்தொண்டரின் காலம்

பற்றியெல்லாம் செப்புப் பட்டயங்கள், திருமுறை அகச் சான்றுகள் கொண்டு நிறுவுகிறார். சிறுத்தொண்டர் பெயர் பற்றி மட்டுமே பதினான்கு பக்கங்களுக்கு விரித்துரைக்கின்றார். சிறுத்தொண்டர் மனையறம் பற்றிக் கூறும் பொழுது பெரிய புராண மங்கையர்கள் அனைவரும் நமக்குக் காட்சியளிக்கின்றனர். அதே போல உணவு படைத்த முப்பத்தாறு நாயன்மாரும் தரிசனம் தருகின்றனர். கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் நிலவிய பஞ்சமும், பசியும் பக்தி இயக்கம் மலரத் துணையாயின என்பதற்கு எடுத்துக் காட்டாக இச்சோறிடும் பணியை முன் வைக்கிறார். கணபதீச்சரம் பெயர்க் காரணமும், தமிழ் நாட்டில் கணபதி வழிபாடு பற்றியும் கூறுகின்றார். வல்வினை புரிந்த நாயன்மாரின் ஒப்புமையும், கிறிஸ்துவ ஆபிரகாம், இஸ்லாமிய இப்ராகிம் வரலாற்று ஒப்புமையும் முழுமையாகத் தந்துள்ளார். சைவர்களில் பயிரவப்பிரிவினர் அடங்குவர் என்றும் புறச் சமயம் அன்று என்றும், இப்பிரிவினரின் ஆசாரம் வள்ளுவர், பண்டாரம் ஆகிய பிரிவினரோடு ஒத்து இருத்தலையும் எடுத்துரைக்கின்றார். நிறைவுப் பகுதியில் ஞானசம்பந்தர் தொடங்கி கண்ணதாசன் வரை பாடியனவும், பல்வேறு சிறுத்தொண்டர் நாடகங்கள், ஏடுகளில் உள்ள வெளிவராத நூல்கள், சிறுத்தொண்டர் விழா நடைபெறும் இடங்கள், பிறமொழிகளில் சிறுத்தொண்டர் வரலாறு, பட்டிமன்றங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், கல்வெட்டுக்கள் ஆகியனவும் பற்றி முழுமையாக ஆய்வு செய்கிறார். நூலைப் படித்து முடித்தவுடன் பெரிய புராணம் முழுமையும் படித்த நிறைவு வருகின்றது.

57

திருவாசகம் – சிலசிந்தனைகள்-1

1999

(ஆசிரியர் – அ.ச. ஞானசம்பந்தன்; பக்கங்கள் 349; விலை ரூ. 70; வெளியீடு – கங்கை புத்தக நிலையம், சென்னை).

1950-ஆம் ஆண்டிலேயே தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் விஞ்ஞானக் கண்கொண்டு திருவாசகத்திற்கு உரை எழுத வேண்டுமெனறு பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களிடம் கூறியிருந்த போதிலும், திருவாசகம் அனுபவப் பிழிவு என்பதினால் எப்படி அந்நூலுக்கு உரை காண்பது என்ற அச்ச உணர்வோடு பேராசிரியர் அவர்கள் தன் குருநாதரின் கட்டளையை நிறைவேற்றாமலேயே இருந்து வந்துள்ளார்கள். அதன் பிறகு 49 ஆண்டுகள் கழித்து தன் கண்பார்வை நீங்கிய நிலையிலே பேராசிரியர் அவர்கள் திருவாசகம் முதல் நான்கு அகவல்களுக்குப் இப்பேருரையை வழங்கியிருக்கிறார்கள்.

திரு.வி.க. அவர்கள் கருத்துப்படியே விஞ்ஞான விளக்கங்கள் (Theory of Evolution - ''புல்லாகிப்'' Expanding Universe - திரு அண்டப் பகுதி) பலவற்றைக் கொண்ட அனுபவ உரையாகவே இந்நூல் மிளிர்கிறது. சைவசித்தாந்த தத்துவம் என்ற எல்லையையும் தாண்டி மகத்தான பரம்பொருளின் தரிசனமாகவே பல இடங்களில் பொருள் காண்கிறார். பல்வேறு சமயத்தவர்க்கும் – தத்துவ நூலார்க்கும் இறைவன் அகப்பட மாட்டான் என்று வரும் திருவண்டப் பகுதிக்கு உரை காணும் பொழுது, ''தந்திரம்'' (வரி – 131) என்பதற்குச் சைவ ஆகமங்களையும் சேர்த்து ஆகமங்களுக்கும் இறைவன் அகப்படமாட்டான் என்று அ.ச.ஞா. பொருள் காண்கிறார். பிற ஆசிரியர்கள் 'சைவ ஆகமங்கள் நீங்கலாக' என்று பொருள் காண்கின்றனர். போற்றித் திருவகவலில் ''விரதமே பரம் என்று வேதியர் சாத்திரம் காட்டினர்'' என்பதில் ''சாத்திரம்'' என்பதற்குப் ''பூர்வ மீமாம்சை'' எனப் பிற உரை ஆசிரியர்கள் பொருள் காண, அ.ச.ஞா. அவர்கள் வரலாற்று அடிப்படையில் ஆய்ந்து ''புராணங்கள்'' என்ற முடிவுக்கு வருகிறார்.

இந்நூலில் சமய அனுபவத்திற்கே முதன்மை கொடுத்து இருப்பதனால் புராண, இலக்கியச் சிந்தனைகளைக் கூட ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டார். அதனால் தானோ என்னவோ புராணப் பகுதிகள் நிரம்பிய கீர்த்தித் திருவகவலைப்

பெரியதாக விளக்காமல் கோடி காட்டி விட்டு போய்விடுகிறார். திருவண்டப் பகுதியில் அரிய முற்றுருவகமான ''அரும் பெறல் மேகன்'' (வரிகள் 66 – 182) என்ற பகுதிக்குச் சில வரிகளே செலவிடு கின்றார். திரு அண்டப் பகுதியில் ''அற்புத மான அமுததாரைகள் எற்புத் துளை தொறும் ஏற்றினன்'' (163–182) என்ற மணிவாசகரின் இன்ப அனுபவத்தை அப்படியே அ.ச. ஞா பிழிந்து தந்து விடுகிறார்.

பதவுரை, பொழிப்புரை என்றெல்லாம் அமைக்காமல் கட்டுரை வடிவிலே வந்துள்ள இந்த நூலைத் தந்தமைக்காக மூதறிஞர் அ.ச.ஞா.-விற்கு சைவ உலகம் கடமைப்பட்டுள்ளது.

58

திருவாசகம் – சில சிந்தனைகள்-2

1999

(ஆசிரியர் : அ.ச.ஞானசம்பந்தன்; பக்கம் 398; விலை ரூ. 75/- வெளியீடு : கங்கை புத்தக நிலையம், சென்னை.)

''திருவாசகம் – சில சிந்தனைகள்'' இரண்டாம் பாகம் திருச்சதகம் முதல் திரு அம்மானை வரை கொண்டது. முதல் பாகத்தைப் போலவே பல புதிய கருத்துக்களும், வேறுபட்ட உரையும், புரட்சிகரமான சிந்தனைகளும் கொண்டதாகவும், ஆயவு அடிப்படையிலே அதே சமயம் பேராசிரியர் அவர்களின் அனுபவ வெளிப்பாடாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

உள் தலைப்புகளை மறுத்தல்

ஒவ்வொரு பதிகத்திற்கும் தரப்பட்டுள்ள உள் தலைப்புகளை ஆசிரியர் காரண காரியத்தோடு மறுக்கிறார். (எடுத்துக் காட்டு : திருச்சதகத்தில் 'ஆத்ம சுத்தி' என்ற உட்தலைப்பு) பதிகங்களின் வைப்பு முறையையும் மாற்றுகிறார்.

மாறுபட்ட பொருள் காணுதல்

பிற உரைகள் எல்லாம் சைவ சித்தாந்த அடிப்படையிலே அமைய பேராசிரியர் உரை மாறுபட்டு இருக்கிறது. ''ஐயா நீ ஆட்கொண்டு அருளும்'' எம்கோனும் போன்று இசைந்த பொங்குமடு'' என்ற திருவெம்பாவை வரிகளுக்கு மாறுபட்ட பொருள் காண்கிறார்.

துணிவான முடிவுகள்

சில இடங்களில் பாரம்பரியமாகக் கூறப்பட்டு வரும் கருத்துக்களை மீறி துணிச்சலுடன் சில கருத்துக்களை முன் வைக்கிறார். ''கேடு என்றனக்கே சூழ்ந்தேனே'' என்ற திருச்சதக வரிக்கு ''அடிகளாரின் மனத்தில் ஒரோ வழித் தோன்றிய எண்ணங்களின் பிரதிபலிப்பாகவும் இருக்கலாம்'' என்கிறார். ''யானே பொய் என் நெஞ்சும் பொய்'' (திருச்சதகம்) என்ற வரிக்கு ''ஏதோ ஒரு பொய் அவர் வாழ்வில், உள்ளத்தின் அடித்தளத்தில் போக்க முடியாத பெருந்துயரத்தை உண்டாக்கியுள்ளது'' என்கிறார். ''கார் உறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய் வேர் உறுவேனை விடுதி கண்டாய்'' என்ற நீத்தல் விண்ணப்ப வரிக்கு (பா 3) ''பெருங்குடியில் பிறந்து, ஒரு பேரரசின் அமைச்சராகவும் இருந்த ஒருவர், திருப்பெருந் துறை நிகழ்ச்சிக்கு முன்னர் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபட்டிருத்தல் இயல்பேயாகும்'' என்கிறார். திருவெம்பாவையில் ஒரு விளக்கம் சொல்ல வருகையில், ''அடிகளார் அட்டமூர்த்தக் கருத்தை அடியோடு மறுத்து விடுகிறார். ஐம்பெரும் பூதங்களுக்குரிய சந்திரர்களும் அவற்றின் இயல்புகளும் இறைவனால் படைக்கப்பட்டனவே தவிர அவை அவனன்று'' என்கிறார். ''திருவாசகப் பாடல்களைப் படிக்கும்போது பழைய மரபு பற்றியே அப்பாடல்களுக்குப் பொருள் செய்து கொள்கிறோம். அவற்றில் ஏதேனும் புதுமை இருக்கின்றதா என்று நாம் சிந்திப்பது இல்லை. பழைய மரபை விட்டு விட்டுப் பாடல்கள் அனைத்தையும் ஒன்றாக வைத்து, இவற்றில் ஏதேனும் புதிய சிந்தனையை அருளாளராகிய அடிகளார் தருகிறாரோ என்று சிந்திக்கத் தொடங்கினால், பல புதுமைகளைக் காண முடியும்'' என்று ஒரு குட்டும் வைக்கிறார். இவை போன்ற துணிவான கருத்துக்களைப் பேராசிரியர் ஒருவரே முன் வைக்க முடியும்.

உரையின் தொடர்ச்சி

பேராசிரியர் (அ.ச.ஞா) உரையில் முத்துச்சரம் போல ஒரு தொடர்ச்சி உரை நெடுக இருக்கின்றது. ''அடிகளாருக்கு இறையனுபவம் கிடைத்தது. அதுமறைந்த நிலையில் மீண்டும் பெற முடியாதோ என்று அரற்று கிறார். இவ்வாறு தோன்றிய எண்ணம் நீத்தல் விண்ணப்பத்தில் விரிந்து செல்வதைக் காணலாம்'' என்கிறார். ''திருவெம்பாவையின் முதல் பாடல்கள் ஒருவரை ஒருவர் எழுப்புவதாகவும், அடுத்து வரும் பாடல்கள் தன் குழந்தை, தன் கணவன், என தன்னலம் உள்ளதாகவும், நிறைவுப்பாடல் எல்லா உயிர்களும் அவன் அருளைப் பெற வேண்டும் என வேண்டுவதாகவும் வளர்ந்து செல்கிறது.

''மெய்தான் அரும்பி'' என்று தொடங்கும் திருவாசக முதல் பாடல் இறையனுபவத்தின் உச்ச கட்டத்தில் தோன்றிய பாடலாகும். இதற்கு நேர் எதிராக ''துணையிலி பிணநெஞ்சே'' என்று வரும் பகுதி அனுபவத்தை இழந்து வருந்தும் ஒரு நிலையாகும். மணிவாசகப் பெருமானைப் பொறுத்த மட்டில் திருச்சதகம் அனுபவ ஏற்ற இறக்கத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டும் பகுதியாகும்.

ஒப்பாய்வு

பேராசிரியரின் ஆய்வுப் புலமையும் – ஒப்பாய்வு – இந்நூலில் காணக் கிடக்கிறது. ''முதல் ஏழு திருமுறைகளும் இறைவன் புகழைப் பாடுவன. திருவாசகம் முழுவதும் மணிவாசகர் பெற்ற இறையனு பவத்தைப் பிழிந்து பாடல்களாகத் தருவதாகும்.''

புதிய பார்வை

நுண்மாண் நுழைபுலம் மிக்க பேராசிரியர் பல பாடல்களுக்குப் புதிய விளக்கங்கள் தருகின்றார். அவை இந்நூலுக்குத் தனிச் சிறப்பு ஆகும்.

1) ''யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என்கடவேன்'' (திருச்சதகம்) என்ற வரிகளுக்கு ''பிறப்பு இறப்பு என்னும் சுழற்சியில் சிக்குவதாகப் பாடியுள்ளதாகப் பொருள் கொள்வது சிறப்புடையதாகத் தோன்றவில்லை. குருநாதரின் திருவடிக் காட்சியை இப்பிறப்பிலேயே பெற்றதால் பிறப்பு அஞ்சேன் என்று உறுதியாகப் பாட முடிந்தது. ''அது மீண்டும் கிடைக்காமலேயே இறந்துபடும் நிலைமை எய்துமோ'' என்று தோன்றலாயிற்று. அப்படி இறப்பு ஏற்பட்டால் அதனைத் தடுக்கும் ஆற்றல் தம்பால் இல்லை என்ற நினைத்தவுடன் ''இறப்பதனுக்கு என் கடவேன்'' என்று பாடுகின்றார் என பேராசிரியர் புது விளக்கம் தருகிறார்.

2) திருவெம்பாவையில் ''அன்னவரே எம் கணவர் ஆவார்'' என்று கூறி விட்டு அதே கருத்தை எதிர்மறை முகமாக ''எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க'' என்று கூறக் காரணம் என்ன என்ற கேள்வியை எழுப்புகிறார் பேராசிரியர். ''பாவைப் பெண்களின் கண்கள் முன் காரைக் காலம்மையார் நிற்கிறார். இறையன்பு இல்லாத ஒருவனுக்கு அவர் பணிபுரிந்தார். இருந்தும் அம்மையாரால் வெற்றி கொள்ள முடிந்தது. இப்பெண்களோ பேதையர். தங்களால் அவ்வாறு வெற்றி கொள்ள முடியாது என்று அஞ்சினர். எனவே சேரற்க, செய்யற்க என்று எதிர்மறையாக வேண்டினர்'' என்கிறார் பேராசிரியர். ''தத்தம் மனத்தன பேச எஞ்ஞான்று கொல் சாவதுவே'' என்ற திருச்சதக வரிக்கு ''சாவது என்ற சொல் இங்கே மரணத்தைக் குறிக்கவில்லை. பிறர் அவமதித்துக் கூறும் சொற்கள் காதில் விழாத நிலை, விழுந் தாலும் அதைப் பற்றி கவலைப்படாத நிலை என்ற இரண்டு நிலைகளையுமே குறிக்கின்றது. எனவே 'சாவது' என்ற சொல் அகங்கார மமகாரங்களை அறவே ஒழித்து நிற்கும் நிலையைக் குறிப்பதாகும்'' என்று விளக்குகிறார்.

அரிய விளக்கம்

பேராசிரியர் அவர்கள் திருவாசகப் பாடல்கள் பலவற்றுக்குப் புதிய விளக்கங்கள் தந்திருப்பதோடு அரிய பெரும் விளக்கங்களும் தந்து பேருபகாரம் செய்திருக்கிறார்.

1) ''பானல் ஆர் கண்ணியர்க்கும்
பதைத்து உருகும் பாழ்நெஞ்சே
ஊன் எலாம் நின்று உருகப்
புகுந்து ஆண்டான்''
(திருவாசகம் –19)

என்ற வரிகளுக்கு ''மகளிர் மேல் கொண்ட காம இச்சை உள்ளே புகுந்த வுடன் நெஞ்சு பதைத்து உருகிறது. அடிகளாருக்குக் குரு நாதர் அருள் செய்தவுடன் ஊனெல் லாம் நின்று உருகிற்று. சிற்றின்பத்தில் நெஞ்சு மட்டும் உருகிற்று. பேரின்ப அனு பவத்தில் பருப் பொருளான உடம்பின் உருக்கத்தைக் கூறினார்'' என்று விளக்கம் தருகிறார்.

''புகுந்து ஆண்டான்'' என்று மணிவாசகர் கூறும்போது இறைவனை அல்லவா குறிப்பிடுகின்றார். எங்கும் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கின்ற ஒரு பொருளல்லவா இறைவன். அப்படி யானால் மணிவாசகரின் உள்ளத்தில் புகுந்து ஆண்டான் என்றால் அதற்கு முன்னர் அந்த உள்ளத்தில் அவன் இல்லையா? இறைவன் உள்ளே இருப் பினும் அவன் இருக்கின்றான் என்ற நினைவு அவர்பால் முன்னரில்லை. திருவடி தீட்சை பெற்ற பிறகு புறத்தே குருவடிவில் இருக்கின்ற இறைவன் இப்பொழுது தம்முள் புகுந்ததாக அவர் உணர்கின்றதே ஆகும்'' என்கிறார்.

2) ''மலங்கள் ஐந்தால் சுழல்வன் தயிரில் பொருமத்து உறவே'' (நீத்தல் – 29) என்ற வரிகளுக்குத் 'தூய்மையான மத்து தயிரைக் கடைய முற்பட்டதால் அத்தயிர் மத்து முழுவதிலும் ஒட்டிக் கொள்கிறது. அன்றியும் ஒருமுறை இடமிருந்து வலமும், மறுமுறை வலமிருந்து இடமும் சுழலும் இயல்புடையது. 'தயிரில் பொரு மத்து' என்ற இந்த உவமையின் மூலம் மத்தில் தயிர் ஒட்டிக் கொள்வது போலத் தூய்மையான ஆன்மாவில் மேலே கூறிய ஐந்து குற்றங்களும் (மலங்களும்) ஒட்டிக் கொள்கின்றன. அன்றியும் இடம், வலம் என்று மாறி மாறி மத்துச் சுற்றுவது போல் உலக பந்தங்களிலிருந்து விடுபட்டு முன்னேற முயலும் ஆன்மா ஓரளவு சென்று விட்டு மறுபடியும் இந்த ஐந்து குற்றங்களுக்கே திரும்பி விடுகிறது'' என்று விளக்கம் தருகிறார்.

3) ''வாழைப் பழத்தின் மனம் கனிவித்து'' (நீத்தல் – 34) என்ற வரிக்கு ''வாழைப் பழங்கள் பச்சை, மஞ்சள் என்ற இரண்டு நிறங்கள் உடையன. நன்கு பழுத்த நிலையிலும் பழுக்காத நிலையிலும் தோல் பகுதி அதே நிறத்தில்தான் இருக்கும். திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பின்னர் திருவாதவூரரின் உடலமைப்பில் எந்தவித மாறுதலும் இல்லை. ஆனால் அவர் மனம் கனிந்து விட்டது'' என்று விளக்கம் தருகிறார்.

4) ''பொதும்பு உறுதீப்போல் புகைந்து
எரிய புலன் தீக்கதுவ
வெதும்புறுவேனை விடுதி கண்டாய்''
(நீத்தல் – 36)

விளக்கம்

''பொதும்புறு தீ'' என்பது காட்டுத் தீயைக் குறிக்கும். காட்டுத் தீக்கு ஒரு தனி இயல்பு உண்டு. ஓர் இடத்தில் பற்றி எரிகின்ற தீ, திடீரென்று அணைந்துவிடும். அணைந்துவிட்டது என்று நினைக்கும் பொழுது திடீரென்று பற்றி எரியும். தீயைத் தடுக்கச் சுற்றியுள்ள மரங்களையெல்லாம் வெட்டி இடைவெளி ஏற்படுத்துவர். ஆனால் இங்கிருந்த ஒரு தீப்பொறி யார் கண்ணுக்கும் புலப்படாமல் காற்றினால் நெடுந்தூரம் சென்று பற்றி எரியும்.

பொறிபுலன்களும் இதே போல சேட்டை செய்வன. ஒரு பொறி அல்லது புலன் திடீரென்று செயலிழந்து நிற்கும். அடங்கிவிட்டது என்று நினைக்கையில் திடீரென்று அப்பொறியோ புலனோ பெரும் துன்பத்தை விளைக்கும்.

தொடர்புடைய பொருளைக் கண்டோ, கேட்டோ அனுபவிக்கிற வேளையில் தான் இத்துன்பம் விளைகின்றது என்று நினைத்தால் அது தவறு. மிக நீண்ட தூரத்தில் அடைய முடியாத இடத்தில் உள்ள ஒரு பொருளைப் பற்றிக் கொண்டு இப்பொறி, புலன்கள் துன்பம் தருவதும் உண்டு.

5) ''கல்லைப் பிசைந்து கனி ஆக்கித் தன்
கருணை வெள்ளத்து அழுத்தி''

(திருஅம்மானை – 5)

விளக்கம்

''இறைவன் கல்போன்ற மனதைப் பிசைந்து கனியாக்கினான். கனிவிக்கப் பட்ட மனம் ஒரு சில இடங்களில் பழைய கல் தன்மைக்குப் போய்விடும் அல்லவா? இவ்வாறு நிகழாமல் இருக்க வல்லாளன் அக்கனியைத் தன் கருணை ஆகிய வெள்ளத்துள் அழுத்தினான்.''

''இன்றும் கூட பழம் முழுச்சுவை பெறுவதற்கும், தன் நிலை கெடாமல் நீண்ட நாள் இருப்பதற்கும் பழத்தைத் தேனுள் அமிழ்த்தி வைக்கிற பழக்கம் உண்டு. அதனை 'முரபா என்று கூறுவர்'' என்கிறார்.

இவ்வாறு பேராசிரியர் வாழைப்பழம் நிறம் மாறாதிருத்தல், காட்டுத் தீ திடீர் திடீரென்று பற்றி எரிதல், பழம் கெடாமல் இருக்கத் தேனுள் அமிழ்த்து வைத்தல் என்று பல திறப்பட்ட உலகியற் செய்தி களை தன் பரந்துபட்ட அனுபவத்தினைக் கொண்டு திருவாசகப் பாடல்களை விளக்குகிறார்.

6) ''ஓயாது உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச் சேயானை''

(திருவம்மானை -7)

விளக்கம்

ஒருவனே சிலருக்குச் சேயானாகவும், ஒரு சிலருக்கு நெருங்கியவனாகவும் எப்படி இருக்க முடியும்? ''ஓயாது உள்குதல்'' என்ற பைனாகுலரை வைத்துப் பார்க்கும் பொழுது இறைவன் நெருங்கிய வன் ஆகிறான்.

மரபினை உடைக்கும் கருத்துக்களும், புதிய நோக்கும். அரிய பொருள் விளக்கங் களுமாகப் பேராசிரியர் இந்நூலைத் தந்து உள்ளார்.

59

திருவாசகம் சில சிந்தனைகள் - 3

2000

(ஆசிரியர் : அ.ச.ஞானசம்பந்தன்; வெளியீடு : கங்கை பதிப்பகம்; சென்னை; பக்கங்கள் : 424; விலை ரூ.80/-)

இந்நூல் 'திருப்பொற் சுண்ணம் முதல் கோயில் திருப்பதிகம்' வரை கொண்டது.

இந்நூலிலும் உட்தலைப்புகளைப் பேரா சிரியர் மறுக்கிறார். பதிக வைப்பு முறை யையும் மாற்றுகிறார்.

பிற உரைகளிலிருந்து வேறுபடுதல்

1] இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன்
மகன், தகப்பன், தமையன்''

(திருப்பொற்சுண்ணம் - 13)

இவ்வரிகளுக்குச் சைவ சித்தாந்த உரை யிலிருந்து பல்வேறு உரைகள் வந்துள்ளன. பேராசிரியர் அனைத்திலும் மாறுபடு கின்றார்.

அ.ச.ஞா. விளக்கம்

மூலப்பொருளை அதன் இயல்பை அறியமாட்டாத உயிர்கள், அப்பொருள் தமக்குச் செய்த பேருபகாரத்தைக் கருதி, தாய் என்று கூறி வழிபட்டன. இந்த உறவு முறை விரிவடையும்போது, வேறு உறவுப் பெயர்களும் அங்கு இடம் பெறலாயின. உள்ளது ஒரே பொருளாதலின் அதனைத் தாய் என்று கூறினாலும் தந்தை என்று கூறினாலும், தமையன் என்று கூறினாலும் குறிக்கப்படும் பொருள் ஒன்றே. இத்தனை உறவுப் பெயர்களுக்கும் மூலமாக இருப் பவன் எம் ஐயனே.''

2] ''நான் ஆர் என் உள்ளம் ஆர்
ஞானங்கள் ஆர் என்னையார் அறிவார்
வானோர்பிரான் என்னை
ஆண்டிலனேல் மதிமயங்கி''

(திருக்கோத்தும்பி - 2)

அ.ச.ஞா.

''வானோர்பிரான் என்னை ஆண்டில னேல் என் மதிமயக்கத்தால் நானார் என் உள்ளமார் ஞானங்களார் என்ற வினாக் களுக்குப் பொருள் தெரியாமல் இருந்திருப் பேன். அன்றியும் யார் என்னை அறிந்து கொள்ள முடியும் என்ற இறுமாப்பும் அங்கு இருந்திருக்கும்.''

3] ''தான் அந்தம் இல்லான் தனை
அடைந்த நாயேனை

ஆனந்த வெள்ளத்து அழுந்துவித்தான்
காண் ஏடி''
(திருச்சாழல் –10)

''அடிகளாருக்கு அத்துணைப் பெரிய தலைவன், தம்மையும் ஒரு பொருளாக்கி இறையனுபவம் பெறுமாறு செய்தது நினைவுக்கு வருகிறது. அந்நினைவு தோன்றியவுடன் எழுந்த இப்பாடலில் வினாவோ விடையோ ஏதுமில்லை. நிகழ்ந்தது கூறப்பெற்றுள்ளது. அதனால் வியப்பே மேலிடுகிறது. அந்த வியப்பைத் தோழிக்குச் சொல்வது போன்று அமைந்துள்ளது பாடல்.''

''திருச்சாழல் முழுதும் வினாவிடையாக அமைந்திருக்க வேண்டும் என்ற கருத்தில் இதற்கு உரை கண்ட உரைகாரர்கள், எவ்வித வினாவும் இல்லாத 10–ஆம் மற்றும் 16–ஆம் பாடல்களுக்கும் அவற்றை வினாக்களாகக் கொண்டே உரை வகுத்துள்ளனர்.''

4] ''தன் பெருமை தான் அறியாத்
தன்மையன்'' (திருச்சாழல் – 19)

அ.ச.ஞா.

''தனக்கு என்று பெருமை, சிறுமை முதலிய எதுவும் இல்லாதவன். ஆதலால் அந்தப் பெருமையை அவன் அறியுமாறில்லை.''

''இவ்வாறில்லாமல் தன் பெருமையின் எல்லையை அறியாதவன் என்று பொருள் கூறுவேமேயானால் அவன் பெருமைக்கு ஓர் எல்லை வகுத்த தவற்றைச் செய்கிறோம். அதுவுமின்றி அறியாதவன் என்ற சொல்லால் அறியாமையை அவனுக்கு உரிமையாக்குகின்றோம். இவ்விரண்டும் இங்குப் பொருந்தாமை அறிதல் வேண்டும்.''

5] ''இந்நாதனார் அன்னே என்னும்''
(அன்னைப்பத்து –1)

அ.ச.ஞா.

''அன்னே!'' என்று வரும் ஒரு சொல்லை வைத்துக் கொண்டு, தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது என கூறுவது பொருத்தமாக இல்லை.

சங்கப் பாடல்களில் வரும் அன்னை, அன்னாய் என்ற சொற்களுக்கும், இப்பகுதியில் வரும் அன்னை, அன்னே என்ற சொற்களுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

இறையுணர்வில் ஈடுபட்டு முற்றிலும் அதனுள் அமிழ்ந்து விடாமலும் அதனை விட்டு வெளியே வந்து 'தான்' என்ற தன் முனைப்புடன் தொழிற்படுகின்ற நிலைமை இல்லாமலும், இரண்டினுடைய எல்லையிலும் நின்று பேசும் ஒருத்தியின் கூற்றாகும்.

இதில் வரும் 'அன்னே' என்ற சொல் ஆற்றாமை பற்றி வரும் 'அம்மா' என்ற சொல்லின் மற்றொரு வடிவமாகும்.

6] ''கேட்டு அறியோம் உனைக் கண்டு
அறிவாரை''
(திருப்பள்ளியெழுச்சி – 5)

அ.ச.ஞா.

'பெருமானே! உன்னைக் கண்டேன்' என்று சொல்லிக் கொள்பவர்கள் எவரையும் நாங்கள் கேட்டது கூட இல்லை என்று இதுவரை பலரும் பொருள் கூறி யுள்ளனர்.

இறையடியார்கள் அனைவரும் இறைவனைத் தம் கண்களால் கண்டது உண்மைதான். ஆனால் இவர்கள் யாரும் அவனை முழுவதும் அறிந்தார்கள் இல்லை. காரணம், அவனே 'தம் பெருமை தான் அறியாத தன்மையன்' ஆவான். இதை விளங்கிக் கொண்டால், பூதங்கள் தோறும் நிற்கின்ற அவனைக் கண்டவர்களைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை என்பதே இதன் உண்மையான பொருளாகும்.

7] ''உடையான் உன் தன் நடுவு
இருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி''
(கோயில் மூத்த திருப்பதிகம் – 1)

அ.ச.ஞா.

''அவன் நடுவுள் நீ இருக்கின்றாய். உனது நடுவில் அவள் இருக்கின்றாள் என்றால் என்ன பொருள்?

ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களை யும் (பூப் பக்கம், தலைப்பக்கம்) மனத்துள் கொண்டு வர வேண்டும். நாம் புரிந்து கொள்வதற்கு பூப்பக்கம், தலைப்பக்கம் என்ற குறிப்பிடுகின்றோமே தவிர, உண்மை யில் இவை இரண்டும் சேர்ந்ததே நாணய மாகும். இவை இரண்டு பக்கங் களையும் தவிர்த்து நாணயம் என்று தனியே இல்லை. நாணயத்திலிருந்து எவ்வாறு ஒரு பக்கத் தைப் பிரித்து எடுக்க முடியாதோ, அதே போன்று சிவத்திலிருந்து சக்தியை யும், சக்தியிலிருந்து சிவத்தையும் பிரிக்க முடியாது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். உடையாளும், உடையானும் சிவசக்தி சொரூபமாக உள்ளனர்.

துணிச்சலான முடிபுகள்

பேராசிரியருக்கே உரித்தான துணிச்ச லான முடிபுரைகள் நூல் முழுவதும் இடம் பெற்றுள்ளன.

1) 'சித்தம் சிவமாக்கி' என்ற தொடரும், 'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை யாண்ட' (திருவாசகம் – *650*) என்ற தொடரும் எந்த அளவிற்கு இந்த நாட்டுச் சைவசித்தாந்தக் கொள்கையோடு பொருந் தும் என்பது தெரியவில்லை. (திருத்தோ ணோக்கம் – பா *6*)

2) விசாரசருமன் பூசையில், அவன் தன்னை இழக்கவேயில்லை. திண்ணனார் செய்த ஆறுநாள் வழிபாட்டில் திண்ணனார் என்ற ஒருவர் இல்லவேயில்லை.

3) பாட்டு என்ற ஒன்று தோன்றினால், பாடுபவர் ஒருபுறமும், பாடப்பட்டவர் அல்லது பாடப்பட்ட பொருள் ஒரு புறமும் நின்று, பாடுபவர், பாட்டு, பாடப்படு பொருள் என்ற மூன்று நிலை தோன்றி விடும்.

தேவாரம் முதலிய பாடல்களில் இந்த மூன்று நிலை தொடர்ந்து இருப்பதைக் காண முடியும். ஆனால் திருவாசகத்தில் பாடப்படு பொருளும், பாடுபவரும் ஒன்றினுள் ஒன்று மறைய பாடுபவர் பெறும் ஆனந்தம் ஒன்றே மிஞ்சுகிறது.

4) திருத்தசாங்கத்தில் இறைவனுடைய நாடு கூறவந்த இடத்திலும் 'தென் பாண்டி நாடே தெளி' என்று கூறிவிட்டார். 'ஏழ் பொழிற்கும்' தலைவனாக உள்ளவன் தென் பாண்டி நாட்டிற்கு உரியவன் என்று கூறுவது முரணுடையதாகும்.

இவற்றையெல்லாம் மனதுட்கொண்டு சிந்தித்துப் பார்த்தால் ஏனைய பாடல் களிலுள்ள பக்திச் சுவையோ இறை யனுபவச் சுவையோ இல்லாத தசாங்கத்தை அடிகளார் ஏன் பாடினார் என்று விடை காண்பது கடினமாக உள்ளது.

(திருத்தசாங்கம்)

உரைத் தொடர்ச்சி

பேராசிரியர் அவர்களின் விளக்கத்தில் மற்றுமொரு தனிச் சிறப்பு உரைத் தொடர்ச்சி ஆகும்.

அ.ச.ஞா.

திருச்சாழல், திருவுந்தியார், திருத்த சாங்கம் ஆகியவற்றை ஏனைய திருவாசகப் பாடல்களோடு வைத்துப் பார்க்கும்போது திருவாசகத்தின் அடிப்படைக்கும், போக் கிற்கும் மாறுபட்ட முறையில் இம் மூன்றும் அமைந்துள்ளன என்று எண்ணத் தோன்றுகிறது.

முன்னருள்ள அகவல்களில் உணர்ச்சிப் பெருக்கிற்கு அதிக இடமில்லை. செய்தி களை விரைவாக அடுக்கிக் கூறும் ஆற்றல் அகவலுக்கு உண்டு. அதனை அறிந்த அடிகளார் மிகுதியான செய்திகளை அகவல்களில் தந்துள்ளார்.

'மெய்தானரும்பி' என்று தொடங்கும் திருச்சதகத்தின் முதற்பாடலிலிருந்து திருத்தெள்ளேணம் முடியவுள்ள 250 பாடல்களும் அடிகளாரின் இறையனுபவத் தையும் அதனால் அவர் பெற்ற ஆனந்தத் தையும் மாறி மாறிக் கூறி வருகின்றன.

மாபெரும் தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கிய திருவெம்பாவைப் பாடல் கள் கூட இறையனுபவத்திற்கு முதலிடம் தந்து, தத்துவத்திற்கு இரண்டாம் இடமே அளித்துள்ளது.

பௌத்தர்களும் நாத்திக வாதத்தினரும், சிவபெருமானையும், உமையொரு பாக

னையும் எள்ளி நகையாடி ஆங்காங்கே பேசியிருப்பர் போலும். அதனாலேயே திருச்சாழல் போன்ற பகுதிகள் இங்கு இடம் பெறலாயின.

திருச்சாழல், திருவுந்தியார் என்ற பகுதிகள் அறிவுக்கு விருந்தாக அமைந்துள்ளன.

அறிவியல் கருத்துக்கள்

பேராசிரியர் அவர்கள் அறிவியல் சிந்தனையில் திளைப்பவர்கள். அதனைத் தம் திருவாசக விளக்கத்தில் முழுமை யாகப் பயன்படுத்துகிறார்கள்.

1] ''மலைஅரையன் பொன் பாவை
வாள்நுதலாள் பெண் திருவை
உலகு அறிய தீ வேட்டான் என்னும்
அது என் ஏடி

உலகு அறிய தீவேளாது ஒழிந்தனனேல்
உலகு அனைத்தும்

கலை நவின்ற பொருள்கள் எல்லாம் கலங்கிடும் காண்சாழலோ'' [திருச்சாழல் – 13]

அ.ச.ஞா.

உலகில் தோன்றிய கலை ஞானங்கள் அனைத்தும் எல்லாப் பொருள்களையும் இரட்டையாகவே கண்டன. ஒன்றுக்கொன்று மாறுபட்ட இயல்புடைய இரண்டு பொருள்கள் சேரும்போது தான் ஒரு புதிய பொருள் தோன்றுகிறது. பொருள் ஒன்றாகவே இருந்து விட்டால் அதனுள் இருக்கும் சக்தி வெளிப்பட்டு இயங்குவதில்லை. சக்தி வெளிப்பட்டு இயங்கும் போது பொருள் (சிவம்) தெரிவ தில்லை. பொருளிலிருந்து சக்தியைப் பிரிக்க முடியாது என்றாலும், இயக்கம் நடைபெற வேண்டுமானால் சக்தி மேம்பட்டுப் பணிபுரிய வேண்டும். கலைஞானம் கண்ட உண்மை இதுவே யாகும். அதனைக் கண்டோர், அவை இரண்டும் ஒன்று என்பதை அறியாமல் இரண்டே என்று கருதுகின்றனர். கலை ஞானம் கூறும் இரட்டைகள் ஒன்று சேர்ந்தே தீர வேண்டும் என்பதை அறிவிப்பதற்காகவே மலை மகளை மணமுடித்தான்!

2] ''தேன் புக்க தண்பனை சூழ்
தில்லைச் சிற்றம்பலவன்
தான் புக்கு நட்டம் பயிலும் அது என்
ஏடீ
தான் புக்கு நட்டம் பயின்றிலனேல்
தரணி எல்லாம்
ஊன் புக்க வேல் காளிக்கு ஊட்டு
ஆம் காண் சாழலோ''
(திருச்சாழல் – 14)

அ.ச.ஞா.

அணுவுக்குள் இருக்கும் சக்தி வெளிப்பட்டு ஓர் எல்லைக்குள் இருக்கும்போது பேருதவி புரிகின்றது. அந்த சக்தி எல்லை மீறுகின்றபோது அணுகுண்டாக மாறி அழிவைச் செய்கின்றது. இதே கருத்தைத் தான் காளி வெறி கொண்ட கதை புலப்படுத்துகின்றது. சிவத்திலிருந்து வெளிப்படும் சக்தி எல்லை மீறுமேயானால் சிவம் அதனை அடக்கி ஆளுகிறது.

2] ''புவனியில் போய்ப் பிறவாமையின்
நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவம் உய்யக் கொள்கின்ற ஆறு''
(திருப்பள்ளி – 10)

அ.ச.ஞா.

கதிரவனுடைய ஒளிக்கதிர்கள் அவனிடமிருந்து புறப்பட்டு, பலகோடி மைல்கள் தாண்டிப் பூமியை வந்து அடைகின்றன. பூமியில் பட்டவுடன் அதில் உள்ள பொருட்களை ஒளிபெறச் செய்து விளக்குகின்றன. அதுவரை அப்பொருளிடம் காணப்படாத சூட்டையும், அப்பொருட்களிடத்து ஏற்றுகின்றன. ஆனால் இந்த ஒளிக்கற்றை பூமியிலோ வேறு கிரகங்களிலோ படுவதற்கு முன்னர் பல ஆயிரம் காததூரம் கடந்து வந்ததே! அந்த இடைவெளியை ஒளிமயமாக ஆக்கிற்றா? இல்லை. அந்த இடைவெளியைச் சூடேற்றியதா? இல்லை. ஒளியேற்றுதலும் சூடேற்றுதலும் கதிரவன் கதிர்களுக்கு இயல்பாயினும், பூமியில் வந்து அவை படும் வரை இந்தப் பணியைச் செய்வதில்லை.

சூரியக் குடும்பத்தில் இப்பூமியை அல்லாமல், செவ்வாய், புதன், குரு ஆகிய பல கோள்கள் இருக்கின்றனவே. இவைகளும் அந்த ஒளிக்கற்றைகள் வரும் வழியில் தானே இருக்கின்றன. அக்கோள்களுள் சில கடுங்குளிருடன் எப்பொழுதும் இருக்கின்றன. அதே ஒளிக் கற்றைகள். செவ்வாய், புதன் ஆகிய கோள்களில் படும்பொழுது அளவுக்கதிகமான தாங்கமுடியாத சூட்டை உண்டாக்கு கின்றன. பூமி ஒன்றில் தான் ஒளி, உஷ்ணம் என்பவை ஓர் அளவுக் குட்பட்டு உயிர்கள் வாழ உதவி புரிகின்றன.

இதப் பூமி, 'சிவனுய்யக் கொள்கின்ற ஆறு' என்கிறார். அதாவது இந்தப் பூவுலகம் தான் சிவன் வந்து உயிர்களை ஆட்கொள்கின்ற இடமாக அமைந்துள்ளது.

4] ''சென்று சென்று அணுவாய்த்
தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்
நின்ற நின் தன்மை.''
(கோயில் திருப்பதிகம் – 7)

அ.ச.ஞா. : பொருள்களைப் பிரித்துக் கொண்டே சென்றால் எஞ்சுவது அணுவே யாகும். இந்த நூற்றாண்டின் முற்பகுதிவரை அணுதான் மூலப்பொருள், உடைக்க முடியாது என்றும் பொருளின் இறுதியான வடிவு அணுவே என்றும் விஞ்ஞானம் கூறி வந்தது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்விஞ்ஞான முடிவு தகர்க்கப்பட்டு அணுவுக்குள் ஒரு தனி உலகமே இருக்கின்றது என்று கண்டுபிடிக்கப்பட்டது. இன்று வரையில் இதன் முடிவான பொருள் இது என்று விஞ்ஞானத்தால் கூற முடியவில்லை. சென்ற பத்தாண்டுகளில் இறுதியாக எஞ்சி நிற்கும் பொருளுக்கு நெகடிவ் பார்ட்டிகிள் (Negative Particle) என்று கூற முன்வந்தனர்.

அருளாளராகிய அடிகளார் ''சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து, ஒன்றாம் நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்'' என்று கூறுவது அணுவின் இறுதி வடிவமாக இருக்கும் இந்த நெகடிவ் பார்டிகிள் என்று நினைப்பதில் தவறில்லை.

5. அ.ச.ஞா. : திருச்சாழல் இறைவனை ஆண், பெண் வடிவாகக் காணுதலும் சக்தியும் சிவமும் சேர்ந்திருக்கும் அர்த்தநாரி வடிவமாகச் சிந்தித்தலும் இந்நாட்டில் தோன்றிய சைவத்தின் தனிச் சிறப்பு ஆகும். பிரபஞ்சம் முழுவதிலும் நிறைந்துள்ள எல்லாப் பொருள்களும் நேர் ஆற்றல் (Positive Force) எதிர் ஆற்றல் (Negative Force) என்ற முறையில் தான் அமைந்துள்ளன என்ற பேருண்மையை என்றோ கண்டுகொண்ட நம் முன்னோர் இவை அனைத்திற்கும் மூல காரணமாக வுள்ள இறைவனும் சிவம், சக்தி என்ற இரண்டின் கூட்டமாகவே அமைந்துள்ளன என்று கண்டனர்.

புதிய பார்வை

பேராசிரியர் அ.ச.ஞா. என்றும் புதியவர்; அவர் பார்வை என்றும் புதியது. இந்த நூலும் அதற்கு விலக்கன்று.

1] ''நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்ற வாழ்த்தி''
(திருப்பொற்சுண்ணம் – 4)

அ.ச.ஞா. : நேசமுடைய அடியவர்கள் என்ற தொடருக்கு இறைவன் பால் நேசம் உடைய அடியவர்கள் என்று கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. காரணம், நேசமில்லா அடியவர்கள் என்பது பொருத்தாக் கூற்று ஆகும். அடியவர்கள் என்ற சொல்லே இறையன்பில் தலைநின்றவர்கள் என்ற பொருளைத் தரும். எனவே 'நேசமுடைய' என்ற சொல் வேறொரு பொருளைக் குறிக்கின்றது என்பதை எளிதில் விளங்கிக் கொள்ளலாம். உண்மையான இறையன்பு உடையவர்கள் தங்கள் சமயத்தவர், தங்களுக்கு வேண்டியவர் என்ற சிறிய கட்டிற்குள் அகப்படாமல் இறைவனால் படைக்கப் பெற்ற ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை உள்ள எல்லா உயிர்களையும் நேசிப்பவர்கள் ஆவார்கள். இவர்களையே 'நேசமுடைய அடியவர்கள்' என்கிறார் அடிகளார்.

2] ''ஆனந்தம் ஆக்கும் என் சோதி''
(கோயில் திருப்பதிகம் – 8)

அ.ச.ஞா. : 'சோதி' என்ற பெயர் இறைவனுக்குத் தரப் பெற்றிருப்பது பொருத்தமானதேயாகும். ஆனால் எல்லாவற்றையும் படைத்து அனைத்திலும் ஊடுருவியும் அவற்றிலிருந்து தனித்தும் உள்ள ஜோதி வடிவமான இறைவன், யாவர்க்கும் யாவைக்கும் பொதுவானவன் அல்லனோ? அப்படிப் பொதுவாக உள்ள இறைவனை ''என் சோதி' என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

அடிகளாரின் 'என் சோதி' என்பது பரமாத்மாவிலிருந்து ஜீவாத்மாவைப் பிரித்துக் காட்டும் 'என்' ஆகும். சோதி என்பது அவன். அந்தச் சோதியோடு பெரும் தொடர்புடையதாய், வேறு எவ்விதத் தொடர்பும் இல்லாததாய் விளங்கும் ஜீவாத்மாவையே 'என்' என்ற சொல்லால் அடிகளார் இங்கு விவரிக்கின்றார். அந்தச் சோதி வழங்கும் அருள் அனுபவத்தைப் பெற்று அதனுள்ளேயே அமிழ்ந்துவிடும் ஜீவாத்மாவைத்தான் 'என்' என்ற சொல்லால் குறிப்பிட்டார்.

அருமைப்பாடுடைய விளக்கம்

திருவாசகப் பாடல்களுக்குப் பேராசிரியரின் விளக்கம் அருமைப்பாடு உடையதாகும். ஊனக் கண்ணால் காணப் பெற்ற விளக்கமன்று. அனுபவநிலை வந்திருக்க வேண்டும். இல்லையேல் 85 வயதில் – கண் பார்வை இழந்த நிலையில் எப்படி இவ்வாறு விளக்க முடியும்?

1] **''சித்தம் சிவனொடும் ஆட ஆட**
செம்கயல் கண்பனி ஆட ஆட
பித்து எம்பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட''
(திருப்பொற்கண்ணம் – 10)

என்ற வரிகளின் விளக்கத்தை எழுதி மாளாது. அத்துணை அற்புதமானது. சுருக்கவும் முடியாது.

2] **''வாய்திறந்து அம்பவளம் துடிப்பப்**
பாடுமின்'' (திருப்பொற் – 11)

அ.ச.ஞா. : நன்கு வாய் திறந்து பாடும் பொழுது உதடுகள் ஓரளவு அசையுமே தவிரத் துடித்தல் இயலாத காரியம்.

வாய் திறந்து பாட வேண்டும், உதடும் துடிக்க வேண்டும் என்றால் அந்தப் பாடலின் அடித்தளத்தில் இறைவன் மேல் கொண்ட காதல் பொங்கித் ததும்ப வேண்டும். அந்த உணர்வு வெளிப்படும் பொழுது உதடுகள் துடிக்கின்றன. அந்த உணர்வில் தோய்ந்து வெளிவரும் சொற்கள் அடக்க முடியாத உணர்ச்சியுடன் இணைந்து வருதலின் வாயை நன்கு திறந்தே அவை வெளிவர வேண்டியிருக்கிறது.

3] **''கறங்கு ஓலை போல்வது ஓர்**
காயப்பிறப்போடு இறப்பு என்னும்
அறம்பாவம் என்னும் இரண்டு
அச்சம் தவிர்த்து''
(திருத்தெள்ளேணம் – 8)

அ.ச.ஞா. : சிறுவர்கள் கையில் வைத்து விளையாடும் ஓலைக் காற்றாடியில் காற்றுப் பட்டவுடன் நான்கு பக்கமும் நீட்டிக் கொண்டிருக்கும் ஓலை வெகு வேகமாகச் சுழல ஆரம்பிக்கும். இந்த நான்கில் ஒரு பக்கத்து ஓலையைப் பார்த்தால் அது ஒரு விநாடி கீழேயும், அடுத்த விநாடி மேலேயும் அதற்கு அடுத்த விநாடி கீழேயும் மாறி மாறிச் சுழன்று வரும். இந்தக் காற்றாடியை (ஓலையை) கையிலுள்ள குச்சியோடு பொருந்தியிருக்கும் முள் அல்லது ஆணி எவ்வித அசைவும் இல்லாமல் அப்படியே இருக்கும். கையிலுள்ள குச்சியும் அப்படியே இருக்கும். ஆனால் இதன் மேலுள்ள காற்றாடி ஆகிய ஓலை தான் மட்டும் சுற்றுகிறது. அதுபோல ஆன்மா என்பது குச்சியைப் போலவே அதில் செருகப்பட்ட முள்ளைப் போலவோ இருக்கிறது. அதற்குப் பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை. குச்சியின் மேலுள்ள (ஓலை) காற்றாடியைப் போன்றது உடம்பின் தோற்றமும் மறைவும். இந்தக் காற்றாடி சுற்ற வேண்டுமானால் அதன் மேல் காற்றடிக்க வேண்டும். அதே போலப் பிறப்பும் இறப்பும் மாறி மாறி வர வேண்டுமானால் அறம் அல்லது பாவம் என்ற காற்றுத் தேவைப்படுகிறது. அறம், பாவம் என்பவற்றை ஒரு பிறப்பில் செய்தோர் அதற்கேற்ற மறுபிறப்புப் பெறுவர்.''

4] ''புத்தி புகுந்தவா''

(திருப்பூவல்லி – 19)

அ.ச.ஞா. : மனத்திலும், சித்தத்திலும் ஒரு பொருள் சென்று தங்க முடியும். அதன் எதிராக, இந்த மனமும், சித்தமும் தாங்கள் சென்று ஒரு பொருளைப் பற்றிக் கொண்டு அதன் மாட்டு நிற்பதில்லை.

ஆனால் புத்தி தானே சென்று ஒரு பொருளிடத்துத் தங்கும் இயல்புடையது. மனம், சித்தம் என்பவை போல எந்த ஒன்றையும் அப்படியே ஏற்றுக் கொள்ளும் இயல்பு புத்திக்கில்லை. அதன் மறுதலையாக எந்த ஒரு பொருளையும் சென்று ஆராயும் இயல்புடையது புத்தி. ஆதலால் அந்தப் புத்தியிடம் எந்த ஒன்றும் புகுந்து தங்க முடியாது. இது புத்தியின் இலக்கணம்.

ஆனால், இந்த இலக்கணத்தை மீறக் கூடியவன் ஒருவனுண்டு. அவன் ஒருவனே புத்தியினுள் புக முடியும். அதனையே அடிகளார் 'புத்தி புகுந்தவா' என்று பாடுகிறார். தன் நிலையை விட்டு நீங்கி பொருளினிடம் சென்று அதுபற்றி ஆராயும் இயல்புடையது புத்தி. பொருள்களை ஆராயும் புத்தியின் உள்ளேயே ஒருவன் புகுந்துவிட்டான் என்றால், அந்த மனிதனுடைய நான்கு அந்தக் காரணங்களில் மூன்று அவன் வசமில்லாமல் நழுவிவிட்டது என்று பொருள்.

5] ''உரை உணர்வு இறந்து நின்று உணர்வது ஓர் உணர்வே''

(கோயில் திருப்பதிகம் – 3)

அ.ச.ஞா. : அடிகளார் கூறும் மூன்று உணர்வுகளையும் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். முதலாவது உணர்வு (உரை உணர்வு) பொறி, புலன்கள், தான் என்பவற்றோடு தொடர்புடையது. அவர் கூறும் இரண்டாவது உணர்வு ('உரையிறந்த உணர்வு') 'நான்' முதலிய எதனோடும் சம்பந்தப் படாமல் நிற்கும் ஓர் உணர்வாகும். இந்த உணர்வு ஒன்றினால் மட்டுமே இறைவனை அனுபவிக்க முடியும். அறிதல், தெளிதல், கேட்டல், சிந்தித்தல் ஆகிய ஒன்றும் இந்த இரண்டாவது உணர்விற்கு இல்லை. இறைப்பொருள் தவிர்த்த எந்த ஒன்றையும் அது அனுபவிக்கவோ உணரவோ செய்யாது. இறைப்பொருளில் ஈடுபட ஈடுபட அது இறையனுபவமாகப் பழுத்து விட்ட நிலையில் (முழு அனுபவ நிலை) இரண்டாவது உணர்வு இறையனுபவம் ஒன்றில் அமிழ்ந்து தன் தனித் தன்மையை இழந்து விடுகிறது. உப்புப் பொம்மை தண்ணீருக்குள் அமிழ்ந்தது போல இந்த இரண்டாவது உணர்வு இறையனுபவத்தில் மூழ்க மூழ்க இரண்டும் ஒன்றாகி விடுதலின் 'நின்று உணர்வதோர் உணர்வே' என்கிறார் அடிகளார். இதுவே மூன்றாவது நிலை.

6] ''நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்''

(கோயில் திருப்பதிகம் – 7)

அ.ச.ஞா. : உலகியலில் ஒன்றை நினைந்தேன் என்றால் முன்னர் மறந்து இப்பொழுது நினைந்தேன் என்று பொருள்படும். அதாவது உள்ளத்து எழுந்து அங்கேயே நிலைகொண்டுள்ள ஞாயிற்றை ஒரோ வழி மறந்து ஒரோ வழி நினைக்கும் தவறு நேர்ந்துவிடலாம் அல்லவா? அதனைப் போக்குவதற்காகவே 'நினைப்பற நினைந்தேன்' என்கிறார். நினைதல் என்ற நிகழ்காலத் தொழிற்பெயர், நினைப்பாக மாறும் பொழுது, அது இறந்த காலம் ஆகிவிடுகிறது. மறந்துவிட்ட அந்த நினைப்பு மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வர நேரிடுகிறது. தோன்றுதலும் மறைதலும் ஆகிய இரண்டும் ஒழிந்து நினைவு மாறாமல், மறையாமல் மறுபடியும் புதிதாகத் தோன்றாமல் இருக்கும் நிலையை 'நினைப்பு அறநினைந்தேன்' என்கிறார்.

இவ்வாறு உலகியலும், உளவியலும், உடற்கூற்று இயலுமாகக் கலந்து ஓர் தெய்வீக அனுபவத்தைப் பேராசிரியர் நம் கண்முன் நிறுத்துகிறார்.

பேரசிரியரின் இந்நூல் மற்றுமோர் திருவாசக இன்ப அனுபவம்.

60

திருவாசகம் – சிலசிந்தனைகள் –4 (2000)

(ஆசிரியர் – அ.ச. ஞானசம்பந்தன்; வெளியீடு – கங்கை புத்தக நிலையம்; பக்கங்கள் – 480; விலை – ரூ. 100/-) இந்நூல் செத்திலாப் பத்து முதல் திருப்புலம்பல் வரை கொண்டது. இப்பகுதியிலும் பேராசிரியர் உட்தலைப்புகளை மறுப்பதோடு செத்திலாப் பத்து, திரும்புலம்பல் என்ற பதிகத் தலைப்புகளின் பொருத்தமின்மையையும் சுட்டுகிறார். பதிக வைப்பு முறையையும் மாற்றுகிறார்.

விளங்காமை

''வெகுளி வலையில் அகப்பட்டு'' (அடைக்கல ... 7) ''உற்ற ஆக்கையின்'' (அதிசய... 9; முழுப்பாடல்) என்ற பகுதிகள் விளங்கவில்லை என்று வெளிப்படையாக எழுதுகிறார்.

மாறுபட்ட பொருள்

''இறுமாந்து இருந்தேன்'' (திருஏசறவு – 5) என்ற தொடருக்கு ''அரசன் முதலியோரை மதியாமல் இருத்தல்'' என்று புராணக்காரர்கள் பொருள்கூற, பேராசிரியர் ''முழு நிறைவு பெற்றுப் பெருமகிழ்ச்சியடைதல்'' என்று பொருள் காண்கிறார்.

''மறுமாற்றத்திடையான்'' என்பதற்கு (உயிருண்ணி – 509) உரையாசிரியர் பலரும் ''மற்று'' என்ற சொல்லின் இடைக்குறை என்று பொருள் கூறினார். பேராசிரியர் ''மறுமாற்றம்'' என்பதை அப்படியே எடுத்துக் கொண்டு ''மறுமாற்றம் வினாவின் எல்லைக்குள் நிற்பதாலும் மாற்றத்துக்குரிய சிறப்பு அதன்பால் இல்லையென்றாலும் அந்த மறுமாற்றத்தில் கூட இறைவனே உள்ளான் என்று கூறுவதால் 'மாற்றம்' 'மறுமாற்றம்' என்று இரண்டிலும் அவனே உள்ளான் என்ற நுண்மையான கருத்தைப் பெற வைக்கிறார்'' என்று மாற்றுப் பொருள் கூறுகிறார். இதனை விரிவாகவும் விளக்கி உறுதிப்படுத்துகிறார்.

துணிச்சலான முடிபுகள்

''வெகுளி வலையில் அகப்பட்டு'' (அடைக்கல ...7) என்ற தொடருக்கு அடிகளாரின் சொந்த வாழ்வில் காம அனுபவங்கள் கிட்டியிருப்பதில் வியப்பொன்றுமில்லை என்கிறார்.

''விழுங்குகின்றேன் விக்கினேன்'' என்ற தொடருக்கு (அடைக்கல ... 10) ''திருவாதவூரர் இரண்டு தவறான காரியங்களைச் செய்தார். ஒன்று, வாயின் அளவுக்கு ஏற்றுக் கையில் எடுக்காமல் வாரிக் கொண்டார். மற்றொன்று மென்று சுவைத்து உண்டால், காலதாமதம் ஆகும் என்று கருதி விழுங்கத் தொடங்கினார். கிடைக்கும் உணவைக் கூட முறைப்படி எடுத்து உண்ணாமல் வாரி விழுங்கினால் விக்கத்தானே செய்யும்?'' இவ்வாறெல்லாம் மரபுவழி உரைக்காரர்கள் கூறவே தயங்குவார்கள்.

'செத்திலாப் பத்து' பதிகம் முழுவதுமே அடிகளார் தெளிந்த நோக்குடன் பாடவில்லையோ என்று பேராசிரியர் கூறுகிறார். ''முன்னர் கிடைத்த அருளனுபவம் இப்பொழுது போய்விட்டது என்றால், அதனை மீட்டும் தருவாயாக என்று தானே கேட்க வேண்டும். அதனை விட்டு விட்டுச் 'செத்திலேன்' (398) என்றும், 'உடல் தனைச் செற்றிலேன்' (399) என்றும், 'செத்திடப் பணியாய்' (400) என்றும் பாடியதன் அடிப்படை யாது?'' என்ற கேளவியும் எழுப்புகிறார்.

''அச்சப்பத்தில் எந்த ஒரு பாடலிலும் அன்பைப் பெருக்கும் வாய்ப்போ நெஞ்சை உருக்கும் இயல்போ இல்லை'' என்கிறார் பேராசிரியர். ''இப்பதிகப் பாடல்களுக்கு இதுவரை பொருள் செய்யும் முறையில் பிழை செய்து விட்டோம்'' என்கிறார். ''வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால்'' என்பதற்குச் சைவ சமயத்தைச் சேராத பிறரை என்று பொருள் கொள்வது முற்றிலும் பொருந்தாதது ஆகும். சேவடி பரவாமல் நெற்றியில் மட்டும் வெண்ணீறு அணியும் போலிகளையே 'சேவடி பரவி வெண்ணீறு அணிகிலாதவர்' என்கிறார். இத்தகைய போலிகள் சமுதாயத்தையே ஏமாற்றுபவர்கள் ஆதலின் அடிகளார்

அஞ்சுகிறார்'' என்று புதிய விளக்கம் தருகிறார் பேராசிரியர்.

உரைத் தொடர்ச்சி

அடைக்கலப் பத்தில் ''காமச்சுறவெறிய அழிகின்றனன்'' *(411)* ''இருள் புரியாக்கையில் கிடந்து எய்த்தனன்'' *(412)* ''தாழியைப் பாவு தயிர் போல் தளர்ந்தேன்'' *(413)* ''வலையில் அகப்பட்டுப் புன்கணனாய்ப் புரள்வேன்'' *(414)* என்ற பாடல்களினை *411, 414, 413, 412,* மாற்றியமைத்துக் கருத்திலே ஒரு தொடர்ச்சியைப் பேராசிரியர் காட்டுகிறார்.

ஆசைப் பத்தில் ''கூவிக் கொள்ளாய் கோவேயோ'' *(419)*

''சிறுகுடில் இது சிதையக் கூவாய் கோவே'' *(420)*

''ஆ ஆ என்ன ஆசைப்பட்டேன்'' *(420)*

''அளியன் என்ன ஆசைப்பட்டேன்'' *(422)*

அஞ்சேல் என்ன ஆசைப்பட்டேன்'' *(427)*

''இங்கே வா என்று அங்கே கூவும் அருளைப் பெறுவான் ஆசைப்பட்டேன்'' *(418)* என்ற முறையில் வரிசைப்படுத்தி, அடிகளாரின் ஆசை முளையாகத் தொடங்கி ஆறாவது கட்டத்தில் எப்படி விருட்சமாக விரிந்து விடுகிறது என்பதனைப் பேராசிரியர் விளக்குகிறார்.

புணர்ச்சிப் பத்திலும் *443, 445, 445, 438, 442, 439, 446, 447, 444, 441, 440* என்று பாடல்களை வரிசைப்படுத்தித் தொடர்ச்சியாக விளக்கவுரை கொடுக்கிறார்.

திருக்கழுக்குன்றப் பதிகத்தை விளக்கும் பொழுது பேராசிரியர், இறையனுபவம் கூட ஏறி இறங்கும் இயல்புடையது என்று கூறி அதனை விளக்கும் முகமாக ''இப் பகுதியில் ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய பாடல்களில் தொடங்கிய இறையனுபவ நிலை ஆறாவது பாடலில் *(473)* முற்றிலும் இழக்கப் பெற்றுச் சாதாரண உலகியல் நிலைக்கு வந்து மறுபடி ஏழாவது *(474)* பாடலில் ஒன்று, இரண்டு, மூன்றில் சொல்லப் பெற்ற உணர்வு நிலைக்குத் திரும்புகிறது. இந்த உணர்வு நிலையின் உச்சக்கட்டம் ஒன்றிலும், ஏழிலும் *(468, 474)* நிலை பெற, இறங்கு முகத்தின் எல்லை ஆறாம் *(473)* பாடலில் வெளிப்படுகிறது.

ஆய்வு நோக்கு

1. கண்டபத்து :

''ஒரு விநாடி நேரம் பின்னோக்கிப் பார்க்கும் போது உருத்தெரியாக் காலத்திலேயே தில்லைக் கூத்தன் உள் புகுந்தான்; உளத்தில் மன்னினான்; கருணையினால் ஆண்டு கொண்டான்''

''இத்தகைய பின்னோக்குப் பார்வை இன்றுள்ள திருவாசக வைப்புமுறையில் 'நீக்கி முன்னெனை *(435)* உற்ற ஆக்கையின் உறுபொருள்' *(436)*, 'உருத் தெரியாக் காலத்தே' *(477)*, 'மானேர் நோக்கி மணவாளார்' என்று தொடங்கும் பாடல்களில் வருவதைக் காணலாம். ஆக, இந்த நான்கு பாடல்களையும் தனியே எடுத்துவிட்டால் திருவாசகப் பாடல்கள் ஏறத்தாழ ஒரே திசையில் செல்வதைக் காண முடியும்'' என்கிறார். இப்படி மொத்த திருவாசகப் பாடல்களிலிருந்தும் நான்கு பாடல்களை மட்டும் பிரித்து எடுக்க வேண்டும் என்று சொல்வதினால் பேராசிரியர் அவர்களின் விரல் நுனிகளில் திருவாசகப் பாடல்கள் இருக்கின்றன என்றாகிறது. அத்துணைப் பாடல்களும் அவர்களது மனத் திரையில் நிழலாடியிருக்க வேண்டும். அப்படி இருந்ததினால்தான் இவ்வளவு அழுத்த மாகச் சொல்ல முடிந்திருக்கிறது.

2. பிடித்த பத்து :

''இதுவரை அடிகளார் கூறிவந்த கருத்துக்குப் பெரிதும் மாறுபட்டு நிற்பதாகும் இப்பதிகம். 'தானே வந்து என் உள்ளம் புகுந்து' *(555)*, 'அகம் நெகவே புகுந்தாண்டான்' *(33)* என்று இறைவன் தானாக ஆட்கொண்டான் என்று கூறிவந்த அடிகளார் இப்பதிகம் நெடுகிலும் தான் வலிய சிக்கென இறைவனைப் பிடித்துக் கொண்டதாகப் பாடுகிறார்.''

3. பிரார்த்தனைப் பத்து :

இதில் நான்காவது பாடல் (''வேண்டும்'' என்று தொடங்குவது) இடைச்செருகல் என்று விரிவான ஆய்வுக்குப் பின் முடிவுகட்டுகிறார்.

4. உயிருண்ணிப் பத்து :

''பழைய அருளாளர்கள் பாடல்களில் இறைவன் அவர்கள் உள்ளத்திலே புகுந்து உறைவதாகப் பாடியுள்ளனர். ஆனால் இவர்கள் யாரும் அவர்கள் பூத உடம்பில் அவன் புகுந்தான் என்றோ, பூத உடம்பில் சில மாற்றங்களைத் தந்தான் என்றோ பாடவேயில்லை. இறையருளில் மூழ்கியிருக்கும்போது மனம் பெற்ற மகிழ்ச்சி, உள்ளம் பெற்ற ஆனந்தம், உடம்பு பெற்ற இன்பம் என்ற மூன்றையும் தனித்தனியே விரிவாகப் பாடியுள்ளவர் அடிகளாரே ஆவார். ''ஊனார் உடல் புகுந்தான்; உளம்பிரியான் உயிர் கலந்தான்''

புதிய பார்வை :

1. ஆசைப்பத்து

இப்பதிகத்தில் 5ஆவது பாடலில் ''புளியம்பழம் ஒத்து இருந்தேன்'' என வருகின்றது. பேராசிரியர் புளியம் பழத்தைப் புளியங்காய் என்றே கொண்டு ''புளியங்காயைப் போல உடம்பு, ஆன்மா என்ற வேறுபாடின்றி நான் ஒட்டிக் கொண்டிருந்தும் கூட அது பற்றிக் கவலைப் படாமல் என்னை ஆண்டு கொண்டாய்'' என்று பொருள் காண்கிறார்.

2. உயிருண்ணிப் பத்து :

'கற்று ஆங்கு அவன் கழல் பேணினரோடும் கலந்தே கூடுமின்' என்று கூறியதால் பற்றற்ற துறவியர்களும் கூடத் தனித்தனியே நிற்பார்களாயின் மனம் அவர்களை எளிதில் ஏமாற்றிவிடும். எனவே நன்கு கற்று இறைவன் கழல் பேணிடும் அடியார்களோடு உளங்கலந்து கூடிவாழ முற்படுங்கள் என்ற எச்சரிக்கையை விடுக்கின்றார். தமிழகத்தில் சைவப் பெருமக்கள் பாடல்களில் அதிகம் இடம் பெறாத ஒரு புதிய கருத்தாகும் இது.

அரிய விளக்கம் :

அடைக்கலப் பத்தில் ''தாழியைப் பாவு தயிர்'' ''பா இடை ஆடு குழல்போல்'' பிரார்த்தனைப் பத்தில் ''ஓர் தோளாச் சுரை ஒத்தால்'' உயிருண்ணிப் பத்தில் ''அடவி மரம் ஆனேன்'' என்ற தொடர்களுக்கு நடைமுறை அனுபவத்தோடு பேராசிரியர் அவர்கள் விரிவான விளக்கங்கள் தந்திருப்பவை படித்து அனுபவிக்க வேண்டியவை.

அடைக்கலப் பத்தில் ''மறிவு அறியாச் செல்வம் வந்து பெற்றார்'' (பா-9) என்ற வரியில் ''வந்து'' என்ற சொல்லுக்கு ''வந்து'' என்ற ஓர் சொல் உடம்பு புடைபெயர்தலைக் குறிப்பதன்று. உடம்பு புடைப்பெயர்ச்சி இல்லாமல் ஆன்மப் புடைப்பெயர்ச்சி நடைபெறுகிறது'' என்கிறார்.

அருட்பத்தில் ''சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே'' என்ற தொடரில் சோதி, சுடர், விளக்கு என்ற மூன்றையும் வேறுபடுத்தி இறைவனின் மூன்று நிலைகளுக்கும் பொருத்திக் காட்டுவது நினைந்து நினைந்து மகிழ வேண்டிய ஒன்று.

சோதி :

பற்றுக்கோடு இல்லாததாய் உருவோ, வடிவோ எதுவும் இல்லாததாய், எங்கும் நிறைந்ததாய் இருக்கின்ற பேரொளியாகும்.

நாமரூபம் அற்றதும், பிரபஞ்ச காரணமாய் இருப்பதுமான பரம்பொருளை எவ்வித அடைமொழியும் இல்லாமல் 'சோதியே' என்று கூறுகிறார்.

சுடர் :

ஏதோ ஒன்றைப் பற்றி நின்று எரியும் தீப்பிழம்பு

சக்தியோடு சேர்ந்துள்ள சிவன்.

சூழ் ஒளி விளக்கு :

சுடரை விடச் சிறியதாய், சிறியதொரு திரியைப் பற்றுக் கோடாகக் கொண்டு, ஓர் அழகிய விளக்கினுள் அமர்ந்து எரியும் சிறு ஒளிப்பிழம்பு. இலிங்கத் திருமேனி.

மேலே தந்திருப்பவை சுருக்கம்தான். பேராசிரியர் இன்னும் விரிவாக விளக்கு கிறார். இந்த ஒரு விளக்கத்துக்காகவே பேராசிரியர் அவர்கள் இருக்கும் திசை நோக்கிக் கும்பிட வேண்டும்.

61

திருவாசகம் : சில சிந்தனைகள் 5

2001

(ஆசிரியர் – அ.ச. ஞானசம்பந்தன்; வெளியீடு – கங்கை புத்தக நிலையம்; பக்கம் – 456; விலை ரூ. 90/-)

இந்நூல் 2001-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டாலும், தொடர்ச்சி கருதி இந்நூலையும் ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இந்நூலில் குலாப்பத்து முதல் அச்சோப் பதிகம் வரை இடம் பெற்றுள்ளது.

தலைப்புகளில் மாற்றம்:

இந்த நூலிலும் உட்தலைப்புகளின் பொருத்தமின்மை கூறப்படுகின்றது. ''சென்னிப்பத்து'' என்ற தலைப்பிற்குப் பதில் ''திருவடிப் பத்து'' என்றும் ''ஆனந்த மாலை'' என்ற பதிகத்திற்கு ''திருப்புலம்பல்'' என்றும் தலைப்பு தந்தால் பொருத்தமாக இருக்கும் என்று பேராசிரியர் கூறுகிறார்.

பதிக வைப்பு முறை :

''பதிக வைப்பு முறை'' என்ற கட்டுரை இந்நூலுக்கு மணி முடி என்று சொல்லலாம். 107 பக்கங்களில் இத்தலைப்பு மிக விரிவாகவும், ஆழமாகவும் ஆராயப்பட்டு உள்ளது.

பதிக வைப்பு முறையைப் பேராசிரியர் அவர்கள் மாற்றியமைக்கிறார்கள். அப்படி மாற்றத் தாம் கொண்டுள்ள நெறிமுறைகளையும் முன் வைக்கிறார்கள்.

''ஒரே கருத்து பல பதிகங்களில் இடம் பெற்றுள்ளது. ஆனால் அவை ஒன்றன் பின் ஒன்றாக அமையவில்லை. ஒரு கருத்து ஒரு பதிகத்தில் பேசப் பெற்று மற்றொரு பதிகத்தில் அதே கருத்து வளர்ச்சி பெற்று வருவதைக் காணலாம். ஆனால் இப்போது உள்ள வைப்பு முறையில் இவ்விரண்டு பதிகங்களும் வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ளன. வேறு கருத்துக்களைப் பேசும் பதிகங்கள் இடையே அமைக்கப் பெற்றுள்ளன. அதனாலேயே ஒத்த கருத்துடைய பாடல்களை ஒன்றாகச் சேர்க்கும் முறை யில் இத்தலைப்புகளுள் அப்பதிகங்களைத் தொகுக்க முயன்றுள்ளேன்'' என்கிறார்.)

அ.ச.ஞா. அவர்களின் பதிக வைப்பு முறை

இன்றுள்ள திருவாசகப் பதிப்புகளில் காணப்படும் பதிக எண்கள் அடைப்புக் குறிக்குள் தரப்பெற்றுள்ளன.

1. **இணையாத பாடல்கள்**
    - *1) திருத்தசாங்கம் (19)*
    - *2) அச்சப்பத்து (35)*
    - *3) திருப்படையாட்சி (49)*
2. **நீத்தல் விண்ணப்பம்**
    - *1. நீத்தல் விண்ணப்பம் (6)*
3. **இறைவன் பெருமை பேசுதல்**
    - *1. கீர்த்தித் திருவகவல். (2)*
    - *2. திரு அண்டப் பகுதி (3)*
    - *3. திரு ஏசறவு (38)*
    - *4. போற்றித் திருவகவல் (4)*
4. **உறுதிப்பாடு உணர்தல்**
    - *1. திருச்சதகம் (5)*
    - *2. திருப்பாண்டிப் பதிகம் (36)*
    - *3. குலாப்பத்து (40)*
    - *4. திருவார்த்தை (43)*
    - *5. உயிருண்ணிப்பத்து (34)*
    - *6. திருப்புலம்பல் (39)*
    - *7. சென்னிப் பத்து (42)*
    - *8. பிடித்த பத்து (37)*
5. **கூடிப்பாடி ஆடுதல்**
    - *1. திரு அம்மானை (8)*
    - *2. திருத்தெள்ளேணம் (11)*
    - *3. திருத்தோணேக்கம் (15)*
    - *4. திருப்பொற்சுண்ணம் (50)*
    - *5. திருப்பூவல்லி (13)*

6. திருப்பொன்னூசல் (16)
7. திருச்சாழல் (12)
8. திருஉந்தியார் (14)
9. திருவெம்பாவை (7)
10. திருப்பள்ளியெழுச்சி (20)

6. ஆண்டு கொண்ட அதிசயம் :

1. அதிசயப் பத்து (26)
2. அற்புதப்பத்து (41)
3. கோயில் திருப்பதிகம் (22)
4. திருவெண்பா (47)

7. உயிர் வர்க்கத்தை விளித்தல் :

1. திருக்கோத்தும்பி (10)
2) குயிற் பத்து (18)

8. இறையுணர்வில் ஈடுபட்ட தலைவியின் கூற்று :

1. அன்னைப் பத்து (17)

9. ஆழமான ஏக்கம் :

1. ஆனந்த மாலை (50)
2. அடைக்கலப் பத்து (24)
3. வாழாப்பத்து (28)
4. செத்திலாப்பத்து (23)

10. மிகு அவா :

1. கோயில் மூத்த திருப்பதிகம் (21)
2. புணர்ச்சிப் பத்து' (27)

11. காட்டியதும் கண்டதும் :

1. திருக்கழுக் குன்றப்பதிகம் (30)
2. கண்ட பத்து (31)

12. பிரார்த்தனை :

1. ஆசைப்பத்து (25)
2. பிரார்த்தனைப் பத்து (32)
3. எண்ணப் பதிகம் (44)
4. அருட்பத்து (29)
5. குழைத்த பத்து (33)
6. பண்டாய நான்மறை (48)

13. புதிய திருப்பம் :

1. யாத்திரைப் பத்து (45)
2. திருப்படையெழுச்சி (46)
3. சிவபுராணம் (1)
4. அச்சோப்பதிகம் (51)

பதிகவைப்பு முறையை மாற்றி அமைத்த பின் பேராசிரியர் தான் மாற்றி அமைத்ததன் காரணங்களை விரிவாக விளக்குகிறார்.

பொருள் விளங்காமை

சில பாடல்களுக்குப் பொருள் விளங்கவில்லையென்று வெளிப்படையாகவே பேராசிரியர் சொல்லி விடுகின்றார். குலாப்பத்தில் ''கொம்மை வரி'' என்று தொடங்கும் பாடல் பண்டாய நான்மறையில் ''காணும் கரணங்கள்'' என்று தொடங்கும் பாடல், திருப்படை ஆட்சி முழுப் பதிகம், அச்சோப்பதிகத்தில் ''சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி'' என்ற தொடர் இவையாவும் தனக்கு விளங்கு மாறில்லை என்கிறார் பேராசிரியர்.

உரை மாறுபாடு

1. திருப்படை ஆட்சி

''மின் இயல் நுண்ணிடையார்கள் கருத்து வெளிப்படும் ஆகாதே'' (பா-6) என்ற வரிகளில் ''கருத்து'' என்பதற்கு உரையாசிரியர்கள் பலரும் ''வஞ்சனை'' என்று பொருள் காண்கின்றனர். பேராசிரியர் இதற்கு மாறாக ''மனத்தின் ஆழத்தில் தோன்றும் கருத்துக்கள் வெட்ட வெளிச்சமாக வெளிப்பட்டுத் தோன்றும்'' என்கிறார்.

2. திருப்படை ஆட்சி :

அ.ச.ஞா

''சங்கு திரண்டு முரன்று எழும் ஓசை'' என்பதற்குப் பல சங்குகள் ஒன்றாகச் சேர்ந்து ஒலிக்கும் ஒலி என்று பொருள் கூறியது அவ்வளவு முழுமையானதாகப் படவில்லை. சங்கு முரன்றெழும் இசை தளர்ச்சியடையாமல் மேலும் மேலும் தழைப்பதாக இருப்பின் அது எவ்வாறிருக்குமோ அதுபோல ஆதிநாதம் முரன்று எழும் ஓசையாய்த் தழைக்கும் என்று பொருள் காண்பதே சரியானதாகும்.

''சிவமாக்கி'' என்பதற்குப் பொருள் :

அ.ச.ஞா.

மணிவாசகரைச் சைவ சித்தாந்தக் குப்பிக்குள் அடைக்க விரும்புபவர்கள்

'சிவமாக்கி' என்பதற்குச் சிவபெருமானின் வியாபகத்தில் இவரை உட்படுத்தினான் என்று பொருள் கூறுவர். ஆக்கல் என்ற சொல் முன்னரே வேறொரு வடிவில் இருந்த ஒரு பொருளை மற்றொரு பொருளாக மாற்றுவதைக் குறிப்பதாகும். 'சோறு ஆக்கினான்' என்றால் அரிசியைச் சோறாக மாற்றினான் என்ற பொருளையே தரும். அந்த முறையில் பார்த்தால் சீவனாக இருந்த இவரைச் சிவனாக ஆக்கிவிட்டான் என்ற பொருளையே இத்தொடர் தந்து நிற்கின்றது. 'சீவன்' 'சிவன்' ஆகலாம். அந்த 'ஆதல்' அவனுடைய திருவடியில் தங்கித் திருவருளில் கலந்து விடுதலைப் பெற்ற சிவனாக ஐக்கியமாகி அவன் இயற்றும் ஐந்தொழிலில் இதுவும் பங்கு கொள்ளும் என்று நினைப்பது தவறு''

திருக்கோத்தும்பி :

அ.ச.ஞா :

உரையாசிரியர் பலரும் திருக்கோத்தும்பிப் பதிகம் முழுவதும் தலைவி வண்டைத் தூதாக அனுப்பும் செய்தியைக் கூறுவதாகும் என்ற கருத்தில் உரை எழுதினர். 227, 233 ஆகிய இரண்டு பாடல்களைத் தவிர ஏனைய பாடல்களில் வண்டினைத் தூதாக அனுப்பும் செய்தி இடம் பெறவே இல்லை.

கண்டபத்து :

''அந்தம் இலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே'' (பா 1) பேராசிரியர் இதுவரை பிற உரையாசிரியர்களிலிருந்து தாம் மாறுபடும் கருத்தைக் கூறிவந்தார். இந்தப் பாடலுக்கு நான்காம் பாகத்தில் தான் கண்ட உரைக்கு மாற்றாக ஐந்தாம் பாகத்தில் உரை காண்கிறார்.

அ.ச.ஞா. :

இப்பாடலுக்கு உரை எழுதிய காலத்தில் (பகுதி 4) 'கண்டேன்' என்று பொருள் கூறத் தேவையில்லை. 'கருத்தில் உணர்வில் கண்டேன் அல்லது உணர்ந்தேன் என்பது பொருளாம் என்று கூறியுள்ளேன். இப்பொழுது அதற்கு முரணாக இப்புதிய பொருளையும் கூறியுள்ளேன்.

கூத்தனுடைய வடிவத்தையும் கடந்து நிற்கும் ஆனந்த சொரூபத்தைக் கண்களால் கண்டார் என்று பொருள் கொள்வதே சிறப்பாகத் தோன்றுகிறது. பண்புகளையும் கண்ணால் காணும் ஆற்றலை அடிகளார் பெற்றுள்ளார். திருவாதவூரராகவோ மணிவாசகராகவோ உள்ள நிலையில் ஆனந்தத்தை கண்ணால் காண முடியாது. 'சிவமாக்கி எனையாண்ட பிறகு சிவமாக ஆக்கப்பட்ட நிலையில் எதிரே உள்ள ஆனந்த சொரூபத்தை அவரால் காண முடிந்தது.

பிற உரையாசிரியர்களிலிருந்து பேராசிரியர் எவ்வாறு வேறுபடுகின்றார் என்பதற்கான காரணத்தையும் அவரே கூறுகின்றார். ''உரைகண்ட பெருமக்கள் தனிப்பட்ட பாடலுக்கு உரை எழுதும் பொழுது அதில் வரும் சொற்களுக்கும் தொடர்களுக்கும் அப்படி அப்படியே பொருள் கூறிச் சென்றனர். இவர்கள் தனி மரங்களைக் கவனித்தார்களேயன்றி மரங்கள் நிறைந்த தோப்பைக் கவனிக்க வில்லை என்பது தெரிகிறது. தனிமரம் தோப்பின் ஒருங்கிணைந்த ஒரு பகுதி என்பதை ஏனோ இவர்கள் கவனிக்கவில்லை. தனிப்பட்ட பாடல்களுக்கு இவர்கள் எழுதிய உரைகள் பல இடங்களில் பொருந்துமாறில்லை. இவ்வுரை ஆசிரியர்கள் மணிவாசகரின் தனித் தன்மையை மனத்தில் வாங்கிக் கொண்ட தாகத் தெரியவில்லை.''

துணிபான முடிபுகள்

1. அற்புதப்பத்து :

''தையலார் எனும் சுழித்தலைப்பட்டு நான் தலைதடுமாறாமே'' (569) மற்றும் 570, 572, 574, 575, 577, 578 ஆவது பாடல்களில் இதே கருத்து.

அ.ச.ஞா :

அடிகளாரைப் பொறுத்தமட்டில் மேட்டுக் குடிகளில் ஒன்றாகிய ஆமாத்திய குலத்தில் பிறப்பு, பெருங்கல்வி பெற்ற சிறப்பு, அதனைத் தொடர்ந்து வந்த பதவிச் சிறப்பு ஆகிய அனைத்தும் இளமையிலேயே இருந்துவிட்டமையின் மகளிர் தொடர்பு சற்று அதிகமாகவே இருந்திருக்க வாய்ப்புண்டு.

2. அற்புதப்பத்து :

''அடித்து அடித்து அக்காரம் முன்தீற்றி''

அ.ச.ஞா :

சர்க்கரை கலந்த பண்டத்தை யாரும் விரும்பி உண்பர். அப்படியிருக்க அடித்து, அடித்து அக்காரம் தீற்ற வேண்டிய தேவை என்ன? இந்த உவமையில் அக்காரம் என்பது திருப்பெருந்துறையில் அடிகளாருக்குக் கிடைத்த இறையனுபவமே ஆகும்.

சர்க்கரைப் பண்டமாகிய இறையனுபவத்தைப் பெற்றுவிட்ட பிறகு அதனுள் மூழ்கியிருப்பதற்குப் பதிலாக அதனை விட்டு வெளியே வந்து உலகியல் நினைவில் ஓரிருமுறை அடிகளார் சுழன்றிருப்பாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

3) ''திருவாதவூரடிகள் புராணம் குழப்பத்திற்கு ஒரு கொள்கலம் என்று சொன்னால் மிகையாகாது.''

4) ''எல்லாப் பதிகங்களுக்கும் யாரோ ஒருவர் தலைப்பு தந்து, திருவாசகத்தில் இடம் பெற்றிருக்கிறது என்ற காரணத்தால் ஒரு 'திரு'வையும் சேர்த்துவிட்டார். பல சந்தர்ப்பங்களில் இந்தத் 'திரு' பொருத்தமற்றதாகவும் சில இடங்களில் நகைப்பைத் தருவதாகவும் அமைந்திருக்கின்றது.''

5) திருத்தசாங்கம் பஞ்சாங்கம் போல் நாடு, மலை, ஆறு என்ற செய்திகளைக் கூறுகின்றது.

மேலே கூறப்பட்டுள்ள செய்திகள் யாவும் மரபுச் சைவர்களுக்கு அதிர்ச்சி தருவனவாகும். இருப்பினும் பேராசிரியர் தன் கருத்துக்களைத் துணிச்சலாக முன் வைக்கிறார்.

உரைத் தொடர்ச்சி

1. எண்ணப் பதிகம் :

இப்பதிகத்தில் திருவாசகத்தில் வேறு எங்கும் இடம் பெறாத மூன்று நான்கு செய்திகள் இடம் பெற்றுள்ளன. (இப்பதிகத்தில் உள்ள ஆறுபாடல்களும், ஏனைய திருவாசகப் பாடல்களோடு ஒட்டுவதாகத் தெரியவில்லை.)

2. அச்சோப்பதிகம் :

திருவாசகத்தின் முடிமணி அச்சோப் பதிகம். அச்சோப் பதிகத்தின் முடிமணி ''அம்மை எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவோர் அச்சோவே'' (பா-9) என்ற அடி.

திருவாசகத்தின் பிற பகுதிகள் காணாமல் போய்விட்டாலும் அச்சோப் பதிகமும், இந்த இறுதிப்பாடலும் நிலை பெற்றிருக்குமாயின் நம் போன்ற நொந்தவர்களுக்குக் கலங்கரை விளக்கமாக – நம்பிக்கை நட்சத்திரமாக – உலகம் உள்ளளவும் நிற்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

3. யாத்திரைப் பத்து :

மானுட சமுதாயம் மூன்று வகையாகக் காட்சியளிக்கின்றது. அருளாளர் நிலையில் உள்ளவர்களுக்கு இப்பதிகத்தில் முதல் பாடலில் 'காலம் வந்தது காணப் போவோம் ஒருப்படுமின்' (605) என்று பாடிவிட்டார். இரண்டாவது நிலையில் உள்ளவர்கள் சாதகர்கள். அவர்களுக்காக 606, 607, 608–ஆம் பாடல்கள் பாடப் பெற்றன. இனிவரும் பாடல் மூன்றாவது வகையினரான நம் போன்றவர்களுக் காகும்.

திருவாசகத்திலுள்ள 658 பாடல்களிலும் இந்த யாத்திரைப் பத்தின் பத்துப் பாடல்கள் தனித்து விளங்குகின்றன. அருளாளர்கள், சாதகர்கள், சாதாரண மக்கள் ஆகிய மூன்று தரத்தாருக்கும் பத்தே பாடல்களில் வழி கூறிய பெருமை யாத்திரைப் பத்து ஒன்றிற்கு மட்டுமே உண்டு.

4. அச்சோப் பதிகம் :

யாத்திரைப் பத்து, அச்சோப் பதிகம் என்ற இரண்டும் தவிர ஏனைய பாடல்கள் யாவும் இறையனுபவத்தை இழந்த அடிகளார் அதனை மீண்டும் பெற அவாவிய பாடல்களாகவே அமைந் துள்ளன. இந்த நிலைமை முற்றிலும் மாறி யாத்திரைப் பத்தும், அச்சோப்பதிகமும் வெளிவருகின்றன. ஒரு ஊருக்குச் சென்ற வர் அங்குச் செய்ய வேண்டிய பணியை முடித்தவுடன் திரும்பவும் தம்முடைய ஊருக்குப் புறப்பட ஆயத்தம் செய்வதைப் போல் அமைந்துள்ளது யாத்திரைப் பத்து. ''நிற்பார்

நிற்க, நில்லா உலகில் நில்லோம் இனி நாம் செல்வோமே'' (611) என்றும் ''போவோம் காலம் வந்தது காண் பொய் விட்டு உடையான் கழல் புகவே'' (605) என்றும் பாடியுள்ளார். ஆதலின் சாதி சமய வேறுபாடுகளை எல்லாம் கடந்து மனித சமுதாயம் முழுவதையும் உடன் செல்ல அழைக்கின்றார்.

யாத்திரைப் பத்தோடு திருவாசகம் நின்றிருக்கலாம். இந்த அளவிலேயே கூட அடிகளாரின் பரந்த உள்ளமும், உயிர்கள் மாட்டுப் பொங்கி வழியும் கருணையும் முழுவதுமாக வெளிப்படக் காண்கிறோம். அப்படியானால் அச்சோப் பதிகம் எதற்கு? திருவாசகத்தின் உயிர் நாடியாக விளங்கும் இந்த அச்சோப் பதிகம் அடிகளாரின் கருணைக்குத் தனியான ஓர் எடுத்துக் காட்டாகும்.

அடிகளாரால் அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் ஒரே மனநிலையில் உள்ளவர்கள் அல்லர். பலருடைய மனத்தில் அடிகளாருடன் போவதற்குத் தங்களுக்கு தகுதியுண்டா என்ற ஐயம் விசுவரூபம் எடுக்கிறது. தங்கள் குற்றங்களை நோக்கி ஐயமுற்று அலமருகின்றனர்.

ஒன்பது பாடல்களிலும் அடுக்கப் பெற்றுள்ள குற்றங்களை ஒரு சேர எண்ணிப் பார்த்தால், மக்கள் சமுதாயம் முழுவதும் இதனுள் அடங்கிவிடக் காணலாம். ஆகவே, அஞ்சித் தளர்ந்து 'இனி என்னே உய்யுமாறு' என்று எண்ணி அலமரும் மனித சமுதாயம் முழுவதையும் உளப்படுத்தி, அவர்கட்கு ஒரு நம்பிக்கையை உண்டாக்க வேண்டி இறைவன் அருளால் இப்பதிகத்தை அடிகளார் பாடியருளினார் என்று நினைப் பதில் தவறில்லை.

குற்றமே புரிந்துழலும் கடையனும் கடைத்தேற வழிகாட்டுவது அச்சோப் பதிகம் ஆகும். அதனால் தான் அதனைத் திருவாசகத்தின் முடிமணி என்று கூறுகிறோம்.

5. நீத்தல் விண்ணப்பம் :

திருப்பெருந்துறை நிகழ்ச்சி நடந்து முடிந்தவுடன் முதல் முதலாக அடிகளார் வாய்விட்டு அரற்றியது நீத்தல் விண்ணப்பமாக வெளிவந்தது. முதற்பாடலிலேயே தாம் கடையவன் என்றும் குருநாதர்தான் கருணை காரணமாகத் தம்மை ஆட்கொண்டார் என்றும் முதலிரண்டு அடிகளில் கூறிய அடிகளார் நான்காவது அடியில் தம்முடைய நிலையை 'தளர்ந்தேன்' என்ற ஒரே சொல்லில் அற்புத மாக வெளிப்படுத்துகிறார்.

'தளர்ந்தேன்' என்ற இச்சொல்லின் விரிவுதான் நீத்தல் விண்ணப்பத்தின் முதல் நாற்பத்தேழு பாடல்களில் (105 – 151) பேசப் பெறுகின்றது. அடுத்த இரண்டு பாடல்களில் (152, 153) இவருடைய மன நிலையில் ஒரு மாற்றத்தைக் காண முடிகிறது. தாம் தளர்ந்ததாகவும், தம்மை அவன் தாங்கிக் கொள்ள வேண்டும் என்று கெஞ்சிக் கூத்தாடுவதாகவும் பாடிக் கொண்டு வந்த அடிகளார் 152, 153–ஆம் பாடல்களில் இந்த வழியையே மாற்றி விடுகின்றார். 47 பாடல்கள் பாடுகின்ற வரையில் அவன் எதிர்ப்படவும் இல்லை. தம்மைத் தாங்கிக் கொள்ளவும் இல்லை. எனவே கெஞ்சும் பாணியை விட்டுவிட்டு, புதிய முறையில் அவனை அச்சுறுத்துகிறார். 'நீ என்னை ஆட்கொள்ளாவிட்டால் உலகவர் முன் உன் மானத்தை வாங்கி விடுவேன்' என்ற முறையில் பாடுகிறார். இவை இரண்டு பாடல்களும் நம்பிக்கை முற்றும் இழந்த நிலையில் தோன்றும் ஒரு புதுத் தைரியத்தில் எழுந்த பாடல்கள் ஆகும்.

இந்த இரண்டு பாடல்களில் காணப் பெறும் தைரியம் 50–ஆவது பாடல் தொடங்குகையில் வடிந்து விடுகின்றது. தம்மைத் தாமே நொந்து கொண்டு பழைய முறையில் கெஞ்சும் பாடலாக இறுதிப் பாடல் (154) வெளிப்படுகிறது.

6. குழைத்த பத்து :

குழைத்த பத்து பதிகம் முழுவதும் அடிகளார் இறைவனடி சேர்வதற்குச் சில காலம் முன்னர் இந்த மக்கட் சமுதாயத்திற்காகப் பாடியதாகும். அமைதியாக வாழச் செய்ய வேண்டும். குறிக்கோளோடு வாழக் கற்றுத் தர வேண்டும். இறுதியாக

வீடுபேற்றை அடையும் வழியையும் காட்ட வேண்டும் என்று கருதிய அடிகளார் இவை அனைத்தையும் பத்தே பாடல்களில் மருத்துறை போல (Capsule) குழைத்த பத்துப் பாடல்களில் தந்துள்ளமைக்கு மனித சமுதாயம் என்றும் கடப்பாடு உடையதாகும்.

ஒவ்வொரு பதிகம் முடிந்ததும் திருவாசகப் பாடல்கள் அனைத்தும் தம் மனத்திரையில் ஓடவிட்டு ஒவ்வொரு பாடலையும் ஒவ்வொரு பதிகத்தையும் தொடர்புபடுத்தியும், இன்ன இன்ன பாடல்களில் அடிகளாரின் ஆன்மீக வளர்ச்சியைச் சுட்டியும், இன்னபாடல் மணிமுடி என்று எடுத்துரைத்தும் தமிழன்னைக்குப் பேராசிரியர் அழகிய மணியாரமாக வழங்கி உள்ளார்.

ஆய்வு நோக்கு

1. அச்சோப் பதிகம்

இப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் முதற்பகுதி திருவாதவூரர் வாழ்க்கையை படம் போலச் சித்தரிக்கின்றது. பிற்பகுதி குருநாதர் அருள் பெற்ற மணிவாசகர் வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றைச் சித்தரிக்கிறது.

முதலிரண்டு அடிகளில் கூறப்பெறும் திருவாதவூரர் வாழ்க்கையையும், பின்னிரண்டு அடிகளில் கூறப்பெறும் மணிவாசகரின் வாழ்க்கையையும் காண்பவர் யார்? இந்த இரண்டுக்கும் வடிவு கொடுக்கும் பாடல்களைப் பாடியவர் யார்? மணிவாசகரே பாடினார் என்றுதான் நம்மில் பலரும் கூறுவர். என்னைப் பொறுத்த வரை இந்த முடிவை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

இவை இரண்டையும் மணிவாசகரே கண்டு பாடினார் என்று கூறினால், இது சராசரி மனிதரின் வாழ்க்கை போலாகி விடும்.

எனவே, இந்த இரண்டு வாழ்க்கையையும் அதில் சற்றும் சம்பந்தப்படாமல், புறத்தே நின்று ஓர் அருளாளர் பார்க்கின்றார்.

திருவாதவூரர் வாழ்க்கையில் ஒரு வெறுப்போ மணிவாசகர் வாழ்க்கையில் ஒரு விருப்போ இதனைச் காண்கின்ற அருளாளருக்கு இல்லை. புறநிலையில் நின்று நடந்ததை அப்படியே எடுத்துச் சொல்வதுதான் பாடலைப்பாடும் அருளாளர் வேலை.

யாத்திரைப் பத்து பாடும்போது மணிவாசகரும் அவருடைய ஆன்மாவும் ஒன்றாகத்தான் இருந்தன. அச்சோப் பதிகத்தின் தொடக்கத்தில் மணிவாசகருடைய ஆன்மா புறத்தே தனித்து நின்று திருவாதவூரர், வாழ்க்கை மணிவாசகர் வாழ்க்கை என்ற இரண்டையும் அடுத்தடுத்துக் காண்கிறது. அடிகளார் கண்ட காட்சிக்கு ஒரு வடிவு கொடுக்க முற்படுகிறது அந்த ஆன்மா! துரதிருஷ்டவசமாக இந்த வடிவைச் சொற்களால் வடிக்கும் ஆற்றல் அந்த ஆன்மாவிற்கு இல்லை.

எனவே அந்த ஆன்மா தான் கண்ட காட்சிக்கு வடிவு கொடுக்க மணிவாசகரையே துணைக்கு அழைக்கின்றது.

அச்சோப் பதிகத்தின் பாடல்கள் அனைத்தும் அடிகளாரின் அத்தராத்மாவின் ஏவலின்படி அடிகளார் பாடியவையாகும்.

2. ''பிறவியை வேரறுத்தான்'' ''உடலம் சிதையச் செய்யாய்'' – முரணா?

'பிறவியை வேரறுத்தான்' 'இனிப் பிறவாமல் காத்தாண்டு கொண்டான்' என்று இறந்தகால வாய்ப்பாட்டில் கூறும் அடிகளார், திடீரென்று 'செடிசேர் உடலம் இது சிதையச் செய்யாய்', 'உன் அருளார் அமுதத்தை வாரிக் கொண்டு விழுங்குகிறேன்' என்று நிகழ்கால வாய்பாட்டாலும் பாடுவது எவ்வாறு பொருந்தும்?

பிறவியை வேரறுத்தான், வினையைச் சுட்டெரித்தான் என்பவை உறுதியாக நிகழ்ந்தவை. ஆனால், இவை நடைபெற்றவுடன் வீடு பேற்றை அடைந்திருக்க வேண்டுமே. அது இன்னும் நடைபெறவில்லையே; அது நடைபெறாதிருக்க, இந்த உடல்தான் காரணம். ஆக்கவே அதைப் போக்க வேண்டும் என்று வேண்டுகிறார்.

அதேபோல இறையனுபவத்தில் மூழ்கித் திளைக்கிற ஒருவருக்கு ஒரு விநாடி அதைவிட்டு வெளியே வந்தாலும் அது ஒரு ஊழியாகத் தெரிகிறது. ஆகவேதான் 'அருளார் அமுதத்தை வாரிக் கொண்டு விழுங்குகின்றேன்; விக்கினேன் வினை யேன் விதியின்மையால்' *(417)* என்று பாடுகிறார். வினை குருநாதரால் சுட்டெரிக் கப்பட்டு விட்டது என்பதை நன்றாக உணர்ந்திருந்தாலும் கூட அந்த இடை நேரத்தில் வினை தம்மிடம் இருப்பதாகவே நினைத்து வினையேன் என்று கூறி வருந்துகிறார்.

வினையைச் சுட்டெரித்து விட்டான் பிறவியை வேரறுத்தான் என்பதை நன்கு அறிந்த அடிகளார் மனப்பிரமை காரண மாக 'வினையேன்' என்றும் 'விக்கினேன்' என்றும் 'செடிசேர் உடலம் இன்னும் இருக்கிறது' என்றும் வருந்துவதில் தவறோ வியப்போ ஒன்றுமில்லை.

தேவார, திருவாசக வேறுபாடு

1) மூவர் முதலிகள், ஆழ்வார்கள் ஆகிய அனைவரும் பக்தி வலையில் பட்டவர்கள் என்பதில் ஐயமேயில்லை. ஆனால் இறைப் பிரேமை (divine ecstasy) என்பதில் இப்பெருமக்கள் எவ்வளவு தூரம் மூழ்கி னார்கள் என்பதைத் தெரிய முடியவில்லை. திருவாசகம் பெற்றுள்ள தனிச்சிறப்பு எது வென்றால் இந்த இறைப் பிரேமையில் மூழ்கித் திளைத்த ஒரு பெருமகனார் அதிலிருந்து விடுபட்டு வந்து அந்த அனுபவத்தைத் திரும்பிப் பார்த்துப் பாடியதாகும்.

2) தேவாரப் பாடல்களில் பாடிய அடியார்கள், பாடல்கள், இறைவன் என்ற மூன்றும் பெருத்த இடைவெளி எதுவு மில்லை என்றாலும் தனித்தனியாகத்தான் இருந்தன. அதாவது இப்பாடல்களைப் பாடியவர்கள் எல்லாப் பாடல்களிலும் கரைந்துவிடவில்லை.

திருவாசகப் பாடல்கள், அதனைப் பாடுகின்ற அடிகளார், பாடுபொருளாக உள்ள இறைவன் ஆகிய மூன்றையும் தனியே பிரித்துக் காண்டல் கடினம். பாடிய அடிகளாரும் இறைவனும் ஒரு சில தவிர ஏனைய பாடல்களில் மறைந்து விடு கின்றனர். இப்பாடல்களில் சொல், சொல் தரும் பொருள், அப்பொருள் தோற்று விக்கும் உணர்வு என்ற முறையில் தொடங்கி, சொல்லும் பொருளும் மறைந்து உணர்வு ஒன்று மட்டுமே நின்று விடுகிறது. ஆதலால் திருவாசகப் பாடல்கள் ஏனைய பக்திப் பாடல்களைப் போல் அல்லாமல் தனித்து விளங்கு கின்றன.

பொது ஆய்வுகள்

மணிவாசகரின் காலம், குலம், தொழில், திருப்பெருந்துறைக் கோயில், தோன்றிய காலம், திருமுறைகள் வகுக்கப்பட்ட காலம் பற்றியெல்லாம் பேராசிரியர் அவர்கள் மிக விரிவாக ஆய்வு செய்து கீழ்க்காணும் முடிவு களை முன் வைக் கிறார்கள்.

காலம் : அடிகளார் 9–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இரண்டாம் வரகுண பாண்டியன் காலத்தில் வாழ்ந்தார்.

குலம் : அடிகளார் ஆமாத்தியர் குலத்தைச் சேர்ந்தவர். ஆமாத்தியர் தமிழர் பழங் குடியைச் சேர்ந்தவர் அல்லர். இவர் கள் அமைச்சர் தொழில், படைத் தலைவர் தொழில் ஆகிய இரண்டு தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். அடிகளார் அமைச்சராக இருந்திருப்பார்.

திருப்பெருந்துறைக் கோவில் : இது தொடர்பாக மூன்று கருத்துக்கள் நம் சிந்தனைக்குரியன. ஒன்று; அடிகளார் பாடும்போது திருப்பெருந்துறையில் ஒரு திருக்கோயில் இருந்திருக்க வேண்டும். இரண்டு; அடிகளார் காலத்துக்குப் பின் வந்தவர்கள் அவர் வரலாற்றை அடித்தள மாகக் கொண்டு இன்றுள்ள ஆவுடையார் கோயிலைக் கட்டியிருக்க வேண்டும். மூன்றாவது; அடிகளார் காலத்திருக்கோயில் சேதமடைந்துவிட, அக்கோயில் இருந்த இடத்திலேயே இப்புதிய கோயிலை நிறுவியிருக்க வேண்டும்.

திருமுறைகள் வகுக்கப்பட்ட காலம்

உமாபதி சிவத்திற்கும் திருமுறை கண்ட புராணத்திற்கும் எவ்விதத் தொடர்பும்

இல்லை. இன்னும் கூற வேண்டுமானால், நம்பியாண்டார் நம்பிக்கும் திருமுறைத் தொகுப்பிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. முதலாம் இராஜராஜன் காலத்தில்தான் தொகுக்கப்பட்டது என்பது அத்தை பாட்டி கதையாகும்.

கால வரிசைப்படி பார்த்தால் எட்டாவது இடத்தைத் திருமந்திரத்திற்கும் ஒன்பதாவது இடத்தைத் திருவாசகத்திற்கும் பத்தாவது இடத்தைத் திருவிசைப்பா, திருப்பல்லாண்டுக்கும் அல்லவா தந்திருக்க வேண்டும்.

திருமுறைகள் வகுக்கப்பட்ட காலம் மிக மிகப் பிற்காலத்தில் இருக்குமோ என்ற ஐயம் வலுவடைகிறது.

புதிய பார்வை

1. திருவார்த்தை

''சங்கம் கவர்ந்து'' *(பா. 10)*

அ.ச.ஞா.

'வளையல்களை கவர்ந்தான்' என்று பொருள் கொண்டு பெண்களைக் காதல் கொள்ளச் செய்தான் என்று பலரும் பொருள் கூறி வருகின்றனர். இதற்கு வேறு வகையில் பொருள் கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

மதுரைச் சொக்கனைக் கண்டவர்கள் உள்ளம் ஒருமுகப்படுகின்றது. ஒரு வகைத் தளர்ச்சி ஏற்படுகின்றது. இதனால் கை வளையல்கள் கழலுகின்றன.

உயிர்க்குத் தலைவன் உலாவரும் பொழுது கண்டோர் அனைவருடைய உடல்களும் குழைகின்றன. ஆண்களுக்கும் இது உண்டு. அவர்கள் இளைப்பைக் காட்ட வளையல் முதலிய அணிகள், அவர் பால் இல்லை. அதனால் அவர்கள் இளைப்பு புறத்தே தெரிவதில்லை.

2. எண்ணப் பதிகம்

''பிறப்பு அற வேண்டும்
பத்திமையும் பெற வேண்டும்'' *(பா. 1)*

அ.ச.ஞா.

அடுத்த பிறப்பில் பத்திமையும் அடியார் நடுவுள் இருக்கும் சிறப்பும் வேண்டும் என்று பலர் பொருள் கொண்டுள்ளனர்.

இப்பிறப்பில் எஞ்சிய நாட்களில் முழு நேரம் பக்தி செய்வதிலும் அடியார் நடுவுள் இருப்பதிலும் கழிய வேண்டும். இன்றேல் ஐம்பூதங்களோடு தொடர்புடைய இந்தப் பிறப்பு அழிந்து ஒழிய வேண்டும் என்று பொருள் கொள்வதே பொருந்தும்.

3. அச்சோப் பதிகம்

''ஆர் பெறுவார் அச்சோவே''

அ.ச.ஞா.

'என்னையன்றி யார் பெற்றார்கள்' என்ற பொருள் கூறியவர்கள் உண்டு.

'எந்தக் கடையனுக்கும் அவன் அருள் கிட்டும்' என்று கொள்வதே பொருத்தம்.

4. அச்சோப் பதிகம்

''ஓங்காரத்து உட்பொருளை ஐயன் எனக்கு அருளியவாறு'' (பா – 7)

அ.ச.ஞா.

'உள்ளத்தில் ஓங்காரமாய் நின்றான்' என்று சிவபுராணத்தில் கூறிய அடிகளார் இப்பொழுது 'ஓங்காரத்து உட்பொருளை எனக்கு அருள்' என்று பாடுகிறார்.

'ஓம்' என்ற ஒலி ஆதி நாதத்தின் அடையாள ஒலி ஆகும். பிரபஞ்சம் தோன்றுவதற்கு ஆதிகாரணமாய் உள்ளது ஒலியே என்பதை நம் முன்னோர் என்றோ கண்டு கூறினர். மேலைநாட்டு வான நூலாரும் அதற்கு 'மிகப்பெரிய சப்தக் கொள்கை' (big bang theory) என்று பெயரிட்டனர்.

இனி, இந்த ஆதிநாதத்திற்கு இரண்டு இயல்புகள் உண்டு. ஒலி வடிவாக அமைந்திருப்பது ஓர் இயல்பு. இந்த ஒலிக்கு ஓர் உட்பொருளும் உண்டு.

ஒலி வடிவாக உள்ளே நின்றதும், உட்பொருளை விளக்கினதும் மணிவாசகர் என்ற அருளாளரின் வாழ்க்கையில் இரண்டு நிலைகளைக் குறிப்பதாகும். இவை இரண்டையும் சேர்த்தே 'நாத தரிசனம்' என்று கூறுவர்.

அரிய விளக்கம்

1. அற்புதப் பத்து

''ஆசை தீர்த்து அடியார் அடிக்கூட்டிய அற்புதம் அறியேனே'' (பா – *8*)

அ.ச.ஞா.

'ஆசை தீர்த்து' என்ற தொடருக்கு பற்று, பாசம் ஆகியவற்றைப் போக்கினான் என்பதோடு சேர்த்து மனத்தில் தோன்றும் ஆசைகளையும் போக்கினான் என்று பொருள் கொள்வது சரியாகப்படவில்லை.

ஆசை அறுத்து அல்லது ஆசை அழித்து என்று அடிகளார் கூறியிருப்பின் இப்பொருள் பொருந்தும். 'ஆசை தீர்த்து' என்றல்லவா கூறியிருக்கிறார். ஆசைப் பட்டது கிடைத்தவுடன் 'ஆசை தீர்ந்தது' என்று சொல்லுகிறோம். இந்த அடிப்படையில் பாடலின் நான்காவது அடியைக் கொண்டு கூட்டுச் செய்து கொண்டால் பொருள் நன்கு விளங்கும். அடியரோடு கூட வேண்டும் என்ற அடிகளாரின் நீண்ட நாள் ஆசையைப் பெருந்துறைக் குருநாதர் தீர்த்து வைத்த அற்புதம் தெரியவரும்.

2. திருப்படை எழுச்சி : ''ஆன நீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்'' (பா – *1*)

அ.ச.ஞா.

கவசம் அணிதல் என்று கேள்விப் பட்டிருக்கின்றோம். 'கவசத்தில் புகுதல்' என்பது புதிய சொல்லாட்சியாகும். தலை, மார்பு, முழங்கை, முழங்காலிற்கும் கீழ் உள்ள பகுதிகளில் அணிவதாகும். ஆனால் அடிகளார் கூறும் கவசம் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரை அணிந்து கொள்ளப்படும் கவசம் ஆகும்.

ஒன்றினுள் புகுந்துவிடுதல் என்றால் சரணாகதி அடைதல் என்பதே பொருளாகும். இரும்புக் கவசத்திடம் யாரும் சரணடைவதில்லை. ஆனால் திருநீறு ஆகிய கவசத்திடம் யாரும் தாராளமாகச் சரணடையலாம்.

3. திருப்படை ஆட்சி : ''பெண் அலி ஆண் என நாம் வந்த பிணக்கறும் ஆகாதே'' (பா – *5*)

அ.ச.ஞா.

நாம் என்ற தற்போதம் எம் உள்ளே இருக்கின்ற காரணத்தால், எம்மினும் வேறுபட்டு எதிரே நிற்பவர்களைப் பெண் என்றும் ஆண் என்றும் அலி என்றும் வேறு பிரித்துக் காண்கிறோம். இறைவன் வெளிப்பட்ட காரணத்தால் முதலில் 'நாம்' அழிகிறது. அது அழியவே பெண், ஆண், அலி என்ற மாறுபாடுகள் புலப்படாமல் பொய்விடுகின்றன.

4. யாத்திரைப் பத்து : ''புயங்கன் தாளைப் புந்தி வைத்திட்டு''

அ.ச.ஞா.

மனம் என்பது வடிவில்லாத நுண்பொருள். புயங்கன் தாள் என்பதும் வடிவு கடந்த நுண்பொருள். ஒரு பருப்பொருளில் மற்றொரு பருப்பொருளை வைக்கலாம். ஒரு நுண்பொருளில் மற்றொரு நுண்பொருளை எப்படி வைக்க முடியும்.

எதற்குள் வேண்டுமானாலும் அதற்குள் செல்லக்கூடிய இயல்பு புயங்கன் தாளுக்கு உண்டு. அடியார்களுடைய புந்திக்குள் செல்வதில் தாளுக்கு எவ்விதப் பிரச்சினையுமில்லை. பிரச்சினையெல்லாம் நம்முடைய புந்தியில்தான். பலருடைய புந்தி அடிப்பாகம் இல்லாத ஓட்டையான பாத்திரம் போன்றது. புந்திக்கு ஒரு அடிப்பாகம் இட்டு உள்ளே நுழைந்த பொருள் வெளியே பொய்விடாமல் இருக்கச் செய்ய வேண்டும். அடுத்த படியாக விநாடிக்கு விநாடி மாறிவரும் அதன் வடிவைச் செப்பஞ் செய்து ஒரே வடிவுடன் இருக்குமாறு செய்ய வேண்டும். இவ்வாறு செய்துவிட்டால் உள்ளே சென்ற தாள் அங்கேயே தங்கிவிடும்.

5. புகுந்து ஆண்டான் : 'புகுதல்' என்று கூறியவுடன் புறத்தே இருக்கும் பொருள் உள்ளே புகுதலைத் தான் குறிக்கின்றோம். முனியன் என்பவன் புறத்தே இருக்கும் போது உள்ளே இல்லை. உள்ளே புகுந்த போது புறத்தே இல்லை. முனியன் என்ற பருப்பொருளுக்கு இந்த விதி பொருந்தும்.

காற்று உள்ளே புகுந்தது என்று சொல்லும்பொழுது எங்கும் நிறைந்திருக்

கின்ற காற்று வெளியே இருக்கின்ற அதே நேரத்தில் உள்ளேயும் இருக்கின்றது. அந்த நேரத்தில் வெளியே இருக்கும் காற்றின் ஒரு பகுதி உள்ளேயும் புகுகின்றது. அதேபோல எங்கும் நிறைந்தவனாகிய இறைவன் புறத்தேயும் உள்ளான். அகத்தேயும் உள்ளான். அறையினுள் இருப்பவர் காற்றினிடையே தான் இருக்கிறார். அதே நேரத்தில் புறத்தேயிருந்து வீசுகின்ற காற்று மேலே வீசுவதையும் உணர்கிறார். அதேபோல இறைவன் உள்ளேயும் இருக்கின்றான். புறத்தே இருக்கின்ற இறைவன் உள்ளே புகுவது போல அடிகளார் உணர்கின்றார்.

6. இறைப்பிரேமையும், இறையனுபவமும் : எல்லாம் அடங்கிய நிலையில் ஆனந்த சாகரத்தில் மூழ்கி 'நான்', 'எனது' என்ற அகங்கார மமகாரங்கள் அறவே அற்று இன்னது செய்கிறோம் என்ற சிந்தனையே இல்லாமல் திடீரென்று 'எம்பெருமான்', 'எம்பெருமான்' என்று அரற்றுவதும் கண்ணீர் ஆறாய்ப் பெருகுவதும் இறைப்பிரேமையின் இயல்புகளாகும். (divine ecstasy) இந்த நிலையிலிருந்து படிப்படியாக இறங்கும்போது சிரித்தல், களித்தல், தம்மையொத்த பிற அருளாளர்களோடு கலந்து உரையாடி மகிழ்தல் என்ற நிலைகள் படிப்படியாகத் தோன்றும். இதனை இறையனுபவம் என்று (divine experience) குறிக்கலாம். இறைப்பிரேமைக்கும் இறையனுபவத்திற்கும் உள்ள ஒரே ஒரு வேற்றுமை முன்னதில் 'நான்' இல்லை. பின்னதில் 'நான்' ஓரளவு தலை தூக்கி இருக்கும். நான் அனுபவிக்கிறேன் என்ற எண்ணம் அடிப்படையில் இருப்பதால் தான் இதனை முன்னையதி லிருந்து பிரித்து இறையனுபவம் என்று பெயரிட்டுள்ளோம்.

7. 'என் சென்னிக்கண் திருவடி மலருமே' : மலர் நன்கு மலர்ந்திருக்கிறது என்றால், தண்டு பதிந்துள்ள சேற்றுப்பகுதி வளமானது என்பது பெறப்படும். அதே போலச் சென்னிக்கண் திருவடியாகிய மலர் நிலைபெற்று மலர்ந்து உள்ளது என்றால் அதன் பொருள் என்ன? அந்தத் திருவடி தங்கியுள்ள இவரது தலை அத்திருவடிகள் மலர்வதற்குத் தக்க இடமாக அமைந்துள்ளது என்று தானே பொருள்.

8. வண்டு, குயிலை விளித்தல் : வண்டையும், குயிலையும் விளித்துப் பாடுவதின் நோக்கம் ஒன்று உண்டு. ஒன்று ஓயாது திரிந்து கொண்டே இருப்பது, மற்றொன்று இருந்த இடத்திலேயே அமைதியாக இருப்பது. உயிர்கள் அனைத்தும் இந்த இரண்டு தொகுப்புகளில் அமையும்.

9. திருவார்த்தை : ''ஆதிப்பிரமம் வெளிப்படுத்த அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே'' - *1*

அ.ச.ஞா.

வேதகாலத்தில் பிரமத்திற்கு இவ்வளவு சிறப்பு இல்லை. சுவேதாஸ்வதர உபநிடதத்தில் பெரும் சிறப்பைப் பெறுகிறது. சிவபெருமானை மூலப்பொருள் என்று கூறி அதுவே பிரமம் என்கிறது.

இந்த பிரமத்தின் இயல்பை உணர்ந்தவர்கள் தம்மால் வழிபடப்படும் இறைவனாகவே கருதப்படுவர் என்ற புதுமையான கருத்தை 'அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே' என்ற தொடரில் குறிப்பிடுகிறார்.

10. திருப்படையாட்சி

இப்பதிகத்தில் வரும் எட்டாவது பாடலான ''சங்கு திரண்டு முரன்று எழும் ஓசை'' என்பது திருவாசகத்திலேயே மிகவும் கடினமான பாடலாகும். இப் பாடலுக்குப் பேராசிரியர் அரியதொரு விளக்கம் தந்துள்ளார்.

இவ்வாறு பேராசிரியரின் இந்த ஐந்து தொகுதிகளும் திருவாசகப் பாடல்களுக்கு - வேறு யாரும் தராத வேறுபட்ட உரையாக – மரபுக்கு மாறாக இருந்தாலும் துணிச்சலான முடிவுகளை உடையதாக – விரிவான ஆய்வுக் கண்ணோட்டத்துடன் கூடியதாக – முற்றிலும் புதிய நோக்கு கொண்டதாக – அரிய விளக்கங்கள் தருவதாக – அமைந்துள்ளன.

62

சிவபெருமான் - கலைக்களஞ்சியம்

(ஆசிரியர் : சிவ.திருச்சிற்றம்பலம்; வெளியீடு : பாலாஜி பதிப்பகம், கும்பகோணம்; பக்கம் : 542; விலை : ரூ.120/-)

பெயருக்கு ஏற்றவாறு இந்நூல் ஒரு கலைக் களஞ்சியமே. பதினாறு தலைப்புகளல் உருவாக்கப்பட்டுள்ளது.

1) சைவ சமயத்தின் தொன்மை – (27 உட்தலைப்புகள் உள்ளன.)

2) பன்னிரு திருமுறை அமைப்பும், சிறப்பும் (44 உட்தலைப்புகள்)

3) மெய்கண்ட சாத்திர நூல்களும், தத்துவங்களும் (66 உப தலைப்புகள்)

4) சிவ வடிவங்கள் (87 உப தலைப்பு கள்)

5) சிவ குடும்பக் கடவுளர்கள் (5 உப தலைப்புகள்)

6) சிவன் திருத்தலங்கள் (99 உப தலைப்புகள். பாடல் பெற்ற தலங்கள் பஞ்ச பூதத்தலங்கள் என மிக விரிவாக எழுதப் பட்டுள்ளது. பிற மாநிலங்களில் உள்ள சிவத் தலங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது இந்நூலின் தனிச்சிறப்பு.)

7) சைவ சமய விரதங்கள் (15 உப தலைப்புகள்)

8) சைவத் திருமடங்கள்.

9) சிவ பூசனைக்கான மலர்கள்.

10) பஞ்சபுராணம் ஓதும் மரபு (5 உப தலைப்புகள்)

11) சமயச் சான்றோர்கள் (6 உப தலைப்புகள்)

12) சிவன் கோயில் விழாக்கள்.

13) சைவத் தொகை அகராதி (26 உப தலைப்புகள்)

14) சிவாலய வழிபாட்டு முறை.

15) வள்ளுவர் வாய்மொழிப் போற்றி அகவல்.

16) லிங்காஷ்டகம்.

63

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

2000

(பதிப்பு : கற்பகம் அறக்கட்டளை, கோவை; பக்கம் : 476; விலை ரூ.80/-)

''இன்றைய வாழ்வில் காணப்படும் சிக்கல்களுக்குப் பக்தி இலக்கியம் தீர்வு நல்குமா?'' என்ற மையப் பொருளை வைத்து தமிழகப் பேராசிரியர்களிடம் நூறு கட்டுரைகளைப் பெற்று அவற்றில் 65 கட்டுரைகளின் தொகுதியாக இந்நூல் வெளிவந்திருக்கின்றது.

பன்னிரு திருமுறைகளும் கலந்து வர வேண்டும் என்பது பதிப்புக் குழுவின் நோக்கமாக இருந்தாலும், அவர்களே கூறியிருப்பது போல திருமந்திரம், பெரிய புராணம் பற்றியே பெரும்பான்மை கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றிலும் ஒரு கட்டுரையில் இடம் பெற்றுள்ள செய்தி மறுகட்டுரையிலும், இடம் பெற்றுப் பல கட்டுரைகள் கூறியது கூறலாக அமைந்துள்ளன.

65 கட்டுரைகளில் பெரும்பான்மைக் கட்டுரைகளில் திருமுறைகளைப் பற்றியும், திருமுறை ஆசிரியர்களைப் பற்றியும் சொல்லப்பட்ட செய்திகளே மீண்டும், மீண்டும் வருகின்றன. ஆறு பக்கங்களில் ஓரிரண்டு பக்கங்கள் இதற்கே போய்விடுகின்றன. கா.முத்துசாமியின் ''மனம் வெளுக்க மருந்து'' கட்டுரை போல நேரடியாக மையப் பொருளைப் பற்றிக் கூறுவதாகப் பிற கட்டுரைகளும் அமைந் திருக்க வேண்டும்.

திருமந்திரம் தொடர்பாக 18 கட்டுரைகள் வந்துள்ளன. தா.ஈசுவர பிள்ளையின் 'திருமூலரின் சாதி எதிர்ப்புச் சிந்தனைகள்' கட்டுரை தனித்து விளங்குகிறது. சமுதாயம், சமயம், நிறுவனங்கள், சமுதாயத் தரப்பிரிவுகள் என்பவற்றைப் பற்றியெல்லாம் மேனாட்டு அறிஞர்களின் மேற்கொள்களோடு விளக்கித் திருமந்திர அடிப்படையில் சாதி எதிர்ப்புச் சிந்தனை

களை விளக்குகிறார். தே.வீ.சுமதியின் ‘திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்’ கட்டுரையில் ‘இயற்கை சாராத வாழ்க்கை’, ‘தீவிரவாதம்’, ‘எயிட்ஸ்’ என்று புதிய தலைப்புகளில் பழைய செய்திகள் தரப்பட்டுள்ளன. சையத் அகமது பிரோசுவின் ‘திருமந்திரம் காட்டும் பொருளியல் மதிப்புகளில்’’ ‘‘ஒழுக்கம் குறைந்தோர்க்குத் தானம் தராமை’’, ‘‘ஒழுக்கமற்றோரின் ஈகையை மறுத்தல்’’, ‘‘புரோகிதத் தொழில் மறுப்பு’’, ‘‘ஆடம்பரம் வேண்டாமை’’, ‘‘வட்டி மறுப்பு’’, ‘‘விலைவாசியில் நியாயத்தின் முக்கியத்துவம்’’ என இதுவரை எடுத்தாளப்படாத செய்திகள் கூறப் பட்டுள்ளன. சே.பிரேமா, ச.ரங்கராஜன் ஆகியோர் இணைந்து எழுதிய கட்டுரையில் ‘‘காயகற்பம்’’, ‘‘மருந்தியல்’’, ‘‘கருவியல்’’, ‘‘வானவியல்’’, ‘‘அணுஇயல்’’, ‘‘அண்டமும் பிண்டமும்’’, ‘‘சுற்றுப்புறச் சூழல்’’ எனப் புதிய செய்திகளாக மலர்ந்துள்ளன. இரு ஆசிரியர் களும் சித்த மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரிய புராணம் பற்றி 13 கட்டுரைகள் வெளியாகியுள்ளன. வெ.திருநாவுக்கரசு தன் கட்டுரையில் பொது இடங்களில் ஆக்கிரமித்தலுக்குப் பெரிய புராணம் என்ன தீர்வு தருகின்றது என்பதனைத் தண்டியடிகள் வரலாற்றினை விளக்குவதன் மூலம் எடுத்துரைக்கின்றார்.

நாவுக்கரசர் பற்றி 8 கட்டுரைகள் வந்து உள்ளன. பி.கிருஷ்ணமூர்த்தியின் ‘‘பணியுமாம் என்றும் பெருமை’’ முழுமையானது. ‘‘தன் முனைப்பின்றித் தாழல்’’, ‘‘புலமையின் அடக்கம்’’, ‘‘மன அடக்கத்தினைப் புலப்படுத்தும் மாண்பு’’, ‘‘தவறுணர்ந்து தாழும் தகைமை’’, ‘‘எல்லா உயிரும் இறையெனக் கருதி இறைஞ்சியது’’, ‘‘பிறப்பின் பெருமை பணிந்தேத் தல்’’, ‘‘தொண்டர்க்குத் தொண்டராம் தொழும்பு வேண்டல்’’ என்று ஏழு உப தலைப்புகளில் விளக்கியுள்ளார்.

மாணிக்கவாசகர் பற்றி 5 கட்டுரைகள் வந்துள்ளன. டாக்டர் சி.சுப்பிரமணியனின் ‘‘திருவாசகத்தில் இன்றைய அறிவியல் கூறுகள்’’ என்ற கட்டுரையில் ‘‘பாரிடை ஐந்தாய் பரந்தாய்’’, ‘‘புல்லாகிப் பூடாகி’’ என்று தொடங்கும் வரிகளுக்கு அறிவியல் ரீதியாக விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. க.ஞானப் பூங்கோதையின் ‘‘மணிவாசகர் கண்ட மனிதப் பிறப்பு’’ கட்டுரையில் ‘‘மாதா உதரத்து ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்’’ என்ற போற்றித் திருவகவல் அடிகளுக்கு ஒவ்வொரு மாதமும் குழந்தை அடையும் வளர்ச்சியைப் பற்றி விரிவாக விளக்கப்பட்டு உள்ளது.

ஞானசம்பந்தர் (4), சுந்தரர் (3), ஏனை அருளாளர்கள் (14) பற்றியும் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. மு.பெ.சத்தியவேல் முருகனாரின் ‘‘பதினோராந் திருமுறை யின் பன்முகச் சிறப்பு’’ ஓர் அரிய கட்டுரை. ஆரியர் தமிழர் இனப் பிரச்சினையில் நக்கீரர் ஆரியரைச் சாடாமல் ஆரியரல்லாதாரைச் சாடுவதனை ‘‘தவறு பெரிதுடைத்தே தவறு பெரிதுடைத்தே’’ என்ற பாடலைக் கொண்டு கட்டுரை ஆசிரியர் விளக்குகிறார். ‘‘ஆரியர்கள்’’ தமது வழக்கப்படி சிறு தேவர்களை வணங்குவது அவர்களது விருப்பம். அதில் நாம் தலையிட முடியாது. ‘‘ஆனால் அதைக் கேட்டு அயர்ந்து நிற்கிற தமிழா! உனக் கெங்கே போயிற்று புத்தி என்று தான் நக்கீர தேவநாயனார் ஆரியரல்லாதாரை இடித்துக் கூறுகிறார்.’’ பா.சிவநேசனின் ‘‘பட்டினத்து அடிகளும் மனித மேம்பாடும்’’ கட்டுரை யில் உட்தலைப்புகளாக ‘‘தூயமனம் பெறுதல்’’, ‘‘முயற்சி செய்க’’, ‘‘குற்றம் உணர்க’’, ‘‘பெரியோரைப் போற்றிவாழ்’’, ‘‘காலம் தேர்க’’, ‘‘ஒப்பக்கருதுக’’, ‘‘செருக்கு விடல்’’, ‘‘காமத்தைக் கடிக’’, ‘‘சமநிலை தேடல்’’, ‘‘அருளுணர்வை நாடல்’’, ‘‘சமயப் பரப்புநரைச் சாராமை’’, ‘‘அருளியலில் மேம்பாடு’’ என அத்தனைச் செய்திகளும் புதியனவாய் உள்ளன. பட்டினத்தார் பற்றிய கட்டுரைகளே இதுவரை வராமை ஒரு காரணமாக இருக்கலாம். கு.சிவலிங்கத்தின் கட்டுரையும் இதனைப் போலவே அமைந்துள்ளது. தெ.முருகசாமியின் ‘‘ஆழ்க தீயது’’ கட்டுரையில் ‘‘ஆழ்க தீயது’’ என்ற ஒரு தொடரை வைத்துக் கொண்டு மிக அருமை யாக விளக்கம் தரப்பட்டுள்ளது. இதுபோல கட்டுரைகள்

வந்திருந்தால் ஒரு பன்முகப் பார்வை கிடைத்திருக்கும். கூறியது கூறல் நிகழ்ந்திருக்காது.

இத்தொகுதியிலேயே மிகப் புதுமையானதும், பெரிதும் விவாதத்திற்கு உட்படக் கூடியதுமான கட்டுரை இரா.விமலாவினுடைய ''உளப் பகுப்பாய்வுப் பெண்ணிய நோக்கில் காரைக் காலம்மையார் படைப்புகள்'' கட்டுரை யாகும். கட்டுரைத் தலைப்பே சற்று சிக்கலானது. அம்மையாரின் பாடல்கள் நம்பிக்கை, விரக்தி, மகிழ்ச்சி, துன்பம் என அவர் தம் உள்மனத் தேடலுக்குத் தக்கவாறு அமைந்துள்ளன என்கிறார். பிறகு மனோவியல் ரீதியாகப் படிமங்களைப் புகுத்துகிறார். ''இங்கு 'லிங்கம்' என்ற சொல்லாட்சி குறியீட்டுப் படிமம். நேரடியாக அது ஆணின் இயற்கை குறிப்பது அன்று. எங்கும் முழுமையாக நிறைந்ததை குறிப்பதற்கான படிமம்.''

''பாம்புப் படிமம்'' - ஆண் குறியீடு. கணவன் என்னும் ஆண் மீது கொண்ட எதிர்ப்புணர்வின் குறியீடாக அது படிந்துள்ளது. கணவன் வாழ்க்கையின் இடையில் பிரிந்து சென்றாலும், சமூகம், பண்பாடு, கற்பு நெறி சார்ந்த நனவு மனம் எதிர்க்கவோ, கோபப்படவோ இடம் அளிக்கவில்லை. ஆனால் அவரின் நனவிலி மனத்திலுள்ள எதிர்ப்புணர்வு, கோபம், பழிவாங்கும் எண்ணம் ஆகியன 'பாம்பு' குறியீட்டின் மூலம் பிரதிபலித்துள்ளமையைப் பல பாடல்களில் காண முடிகிறது.'' இக்கருத்தினை அடியொற்றி அம்மையார் பாடல்களை விளக்குகிறார். ஒரு வியத்தகு கட்டுரை.

64

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆய்வு மாலை (தொகுதி 1, 2)

2000

(பதிப்பாசிரியர் : ச.மெய்யப்பன், ச.வே.சுப்பிரமணியன், வே.இரா.மாதவன்; வெளியீடு : மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இலக்கிய ஆய்வு மாநாட்டு வெளியீடு; பக்கம் - 678; விலை : ரூ.200/-)

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பற்றி திருவாவடுதுறை ஆதீனமும், உலகத் தமிழ்க் கல்வி இயக்கமும், மெய்யப்பன் தமிழாய்வகமும் இணைந்து நடத்திய மாநாட்டின் வெளியீடு இந்நூல் ஆகும். 102 கட்டுரைகளைக் கொண்ட இந்நூல் பிள்ளையவர்களுக்குச் சிறந்த அஞ்சலி ஆகும். பிள்ளையவர்களின் வாழ்க்கை வரலாறு, இலக்கிய நோக்கு, ஒப்பாய்வு, சமுதாயப் பார்வை, உளவியல் பார்வை என்றெல்லாம் பல் திறப்பட்ட கட்டுரைகள் அமைந்துள்ளன. ஏனைய கட்டுரைகள் எல்லாம் பிள்ளையவர்களின் படைப்புகளைப் பற்றிக் கூறுவன. படித்து அனுபவிக்க வேண்டிய நூல்.

■■■

V

பதிப்புகள்

I

பன்னிரு திருமுறைகளின் பதிப்பு வரலாறு

பன்னிரு திருமுறைகளின் பதிப்பு வரலாற்றில் தலையாய இடம் பெறுவது தருமையாதீனத்தின் பன்னிரு திருமுறை – உரையுடன் கூடிய – வெளியீடாகும். இவ்வெளியீடு தமிழ் நாட்டில் திருமுறை களில் தோய்ந்து ஆழங்கால்பட்ட பேரறிஞர்களின் உரைகளுடன் வெளிவந்த பெரும்படையல் ஆகும். பன்னிரு திருமுறைகளையும் இடையறவுபடாது வெளியிட்ட பெருமை திருப்பனந்தான் ஸ்ரீ காசி மடத்தைச் சாரும். ஸ்ரீ காசி மடம் பன்னிரு திருமுறைகள் வெளியிட்ட விவரம் வருமாறு :

திருஞானசம்பந்தர் தேவாரம் (ஆறு பதிப்புகள் – 18000 பிரதிகள்); திருநாவுக்கரசர் தேவாரம் (ஏழு பதிப்புகள் – 21000 பிரதிகள்); சுந்தரர் தேவாரம் (எட்டு பதிப்புகள் – 24000 பிரதிகள்); திருவாசகம் (பதினோரு பதிப்புகள் – 64000 பிரதிகள்); திருக்கோவையார் (நான்கு பதிப்புகள்) ; திருமந்திரம் (ஏழு பதிப்புகள் – 18000 பிரதிகள்); பெரிய புராணம் (எட்டு பதிப்புகள் – 24000 பிரதிகள்). சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமும், வர்த்தமானன் பதிப்பகமும் பன்னிரு திருமுறைகளையும் உரையுடன் வெளியிட்டனர். சைவ சித்தாந்த மகாசமாஜம் என்ற பெருமன்றம் பன்னிரு திருமுறைகளையும் (உரையில்லாமல்) வெளியிட்டது. சமாஜப் பதிப்பு – மா.பா. பதிப்பு என்று அறிஞருலகில் முத்திரை பதிக்கப் பெற்று சிறப்புடன் திருத்தமாக – செம்பதிப்பாக – வெளியிடப்பட்டது.

திருமுறைகளில் பல பதிப்புகளும், பல்லாயிரக்கணக்கான பிரதிகளும், பல்வேறுபட்ட உரைகளும் கொண்ட பெருமை திருவாசகத்தையே சேரும். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் மட்டுமே பதினோரு பதிப்புகளாக 64000 பிரதிகள் வெளியிட்டது. அதே போல சித்பவானந்த ரின் உரையும் பல பதிப்புகளாக – பல்லாயிரக்கணக்கான பிரதிகளுடன் – வெளிவந்து கொண்டிருக்கின்றது. பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தனார் அவர்கள் பதவுரை, பொழிப்புரையாக வெளியிடா விட்டாலும் அவற்றை யெல்லாம் தாண்டிய நிலையில் பெரு விளக்க உரை – பேராய்வு உரை – முற்றனுபவ உரையாக ஐந்து தொகுதிகளாக கங்கை பதிப்பகம் மூலம் வெளியிட்டார்.

திருமந்திரம் பல பதிப்புகளைப் பெற்றது. திருவாவடுதுறை ஆதீனம் பஞ்சாக்ஷர தீபஉரை (ச. தண்டபாணி தேசிகர் – முதல்தந்திரம் முதல் எட்டாம் தந்திரம் வரை – ஒன்பது நூல்கள்; த.ச. மீனாட்சி சுந்தரம் – 8-ஆம் தந்திரம் – நான்கு நூல்கள்; க. வச்சிரவேல் முதலியார் – 8, 9-ஆம் தந்திரங்கள் – நான்கு நூல்கள்), திருமந்திரக் கட்டுரை (தே.ஆ. ஸ்ரீநிவாசச் சாரியார் – பாயிரம் முதல் மூன்றாம் தந்திரம் வரை – 12 நூல்கள்; பொன். சுப்பிரமணிய பிள்ளை – 3, 4, 5-ஆம் தந்திரங்கள் – 6 நூல்கள்), திருமந்திரம் மூலம் எனப் பல நிலைகளில் திருமந்திரத்தை வெளியிட்டார்கள். சுப. அண்ணாமலையின் பதிப்பு முழுமையாக – பல்வேறு பதிப்புகள், சுவடிகளை ஆய்வு செய்து பாடபேதம் கண்டறிந்து – வெளியான செம்பதிப்பு ஆகும். மா.பா. பதிப்புக்கு இணையான பதிப்பு என அறிஞர்கள் மத்தியில் பாராட்டப்படுகின்றது. திருக்குறள்வேள் ஜி.

வரதராஜன் அவர்களின் உரை தனித்து நிற்கிறது. உரைகளில் பல பதிப்புகள் வெளிவந்தது இவர்கள் உரையே ஆகும்.

ஒன்பதாம் திருமுறை, பதினோராம் திருமுறைகள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப் படவில்லை. இவ்விரு திருமுறைகளும் மக்கள் மத்தியில் அதிகம் பயிலப்பட வில்லை. எனவே பல்வேறு திறத்த பதிப்புகள் வரவில்லை. தருமையாதீன உரை, ஸ்ரீ காசிமடம், கழகம், சமாஜம், வர்த்தமானன் ஆகிய நிறுவனங்களின் பன்னிரு திருமுறை வெளியீட்டில் இவைகள் இடம் பெற்றுள்ளன.

திருவாசகத்தை அடுத்து பல பதிப்புகளைப் பெற்றது பெரிய புராணம் ஆகும். ஆனால் பெரிய புராணம் திருவாசகம் போல பல்வேறு தரத்திய உரைகளைப் பெற வில்லை. இன்னும் சொல்லப்போனால் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெரியபுராண உரையே இல்லாமல் போய் விட்டது. ஆறுமுக நாவலரின் சூசனம் காரைக்காலம் மையார் புராணம் வரைதான் உள்ளது. திரு.வி.க.வினுடையது குறிப்புரை மட்டுமே. பெரிய புராண உரைகளில் – திருமுறை உரைகளில் – ஈடு இணையற்று தனித்து விளங்குவது சி.கே.எஸ். அவர்களின் பேருரையாகும்.

பதிப்பு வரலாறு தமிழ் நாட்டில் அண்மையில் தீவிர கவனம் காட்டப்படும் துறையாகும். இத்துறையில் இரா. சுந்தரமூர்த்தியின் ''தமிழ் வளர்க்கும் திருவாசகமும்'', அரங்க சுப்பையாவின் ''பெரிய புராணப் பதிப்பு வரலாறு''ம் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய நூல்கள் ஆகும்.. இந்நூல்கள் வெளிவருவதற்கு தஞ்சை டி.என். இராமச்சந்திரன் அவர்களின் நூலகம் பெரிதும் பயன் பட்டது. தி.வே. கோபாலய்யரின் சம்பந்தர் தேவார முன்னுரை (French Institute of Indology) தேவார பதிப்புகளைப் பட்டியலிட்டது. டி.என். இராமச்சந்திரன் அவர்களின் திருக்கோவையார் (தருமை யாதீனம்) ஆய்வுரை திருக்கோவையார் பதிப்புகள் பற்றியும், திரு. நாராயணசாமி அவர்களின் தமிழ்ப் பொழில் கட்டுரை (1937-38), பா. மதிவாணனின் ''பெரிய புராணம் சுவடிவழி ஆய்வுப் பதிப்பிற்கான வழி'' பெரியபுரணம் பதிப்புகள் பற்றியும் அறிய வழிகாட்டுகின்றன.

1.1

பன்னிரு திருமுறை - உரையுடன்; தருமை ஆதீன வெளியீடு

1997

பன்னிரு திருமுறைகளையும் உரையுடன் ஒரே சமயத்தில் கொண்டு வந்திருப்பது இந்நூற்றாண்டின் மிகப் பெரும் சாதனையாகும். ச. தண்டபாணி தேசிகர், சி. அருணை வடிவேல் முதலியார், முத்து சு. மாணிக்கவாசக முதலியார், கு. சுந்தரமூர்த்தி, க. வச்சிர வேல் முதலியார் போன்ற சைவ சித்தாந்தத் தத்துவத்தில் கரை கண்டவர்கள் உரை தந்திருப்பது கற்பனைக்கும் அப்பாற்பட்ட ஒன்று. ஒவ்வொரு திருமுறை உரையிலும் முன்பகுதிகளில் அவ்வத் திருமுறைகளின் சிறப்புகள் பற்றி ஆய்வுக் கட்டுரைகள் இணைத்திருப்பது முழுமை யான பயனைத் தருகின்றது. 1953-ஆம் ஆண்டிலேயே முதல் திருமுறை முதல் பதிப்பு வெளிவந்து விட்டது. பின்னர் தொடர்ந்து ஒவ்வொரு திருமுறையும் உரையுடன் 1995 வரை வெளிவரலாயின. ஒரே சமயத்தில் பன்னிரண்டு திருமுறைகளுக்கும் இரண்டாம் பதிப்பாக 1997-ஆம் ஆண்டில் உரை வெளிவந்துள்ளது. இங்கு 1997-இல் வெளியான தொகுதி பற்றிய குறிப்புகள் தரப்படுகின்றன.

முதல் திருமுறை

(பக்கங்கள் 1290) முதற் பதிப்பு ... 1953.

1) விளக்கக் குறிப்பு ... ச. தண்டபாணி தேசிகர்.

2) பொழிப்புரை ... வி.சா. குருசாமி தேசிகர்.

3) தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ இருபத்தாறாவது குருமகாசந்நிதானம் அவர்களின் ஆசியுரை தனி ஆய்வாகவே மிளிர்ந்துள்ளது.

ஆய்வுக்கட்டுரைகள்

1) முதல் திருமுறையின் உரைத்திறன் ... தி.வே. கோபாலய்யர்.
2) தலங்களின் வரலாற்றுக் குறிப்புகள் ... சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார்.
3) ஞானசம்பந்தர் வரலாறு ... வி.சா. குருசாமி தேசிகர்.

இரண்டாம் திருமுறை

(பக்கம் 1217) முதற்பதிப்பு ... 1954.

1) விளக்கக் குறிப்புரை ... முத்து சு. மாணிக்கவாசக முதலியார்.
2) பொழிப்புரை ... வி.சா. குருசாமி தேசிகர்.

ஆய்வுக்கட்டுரைகள்

(பக்கம் 270)

1) ஆசியுரை ... தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ 26-ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள்.
2) முதற்பதிப்பின் மதிப்புரை ... அ. கந்தசாமி.
3) குறிப்புரை மாட்சி ... சொ. சிங்காரவேலன்.
4) வரலாற்றுக் குறிப்புகள் ... சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார்.

மூன்றாம் திருமுறை

(பக்கங்கள் 1412 முதற்பதிப்பு 1955)

1) விளக்கக்குறிப்புரை ... அ. கந்தசாமி.
2) பொழிப்புரை ... கோமதி சூரியமூர்த்தி.

ஆய்வுக்கட்டுரைகள்

(பக்கம் 384)

1) ஆசியுரை ... தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ 26-ஆவது குருமகா சந்நிதானம்.
2) மூன்றாம் திருமுறையின் உரைத்திறன் ... தி.வே. கோபாலய்யர்
3) அடியார் பெருமை ... முத்து சு. மாணிக்கவாசக முதலியார்.
4) இயற்கைப் பொருளின்பம் ... சொ. சிங்காரவேலன்.
5) இன்பஉணர்ச்சியில் திளைத்தல் ... வி.சா. குருசாமி தேசிகர்.
6) நால்வர் காலம் ... என். சேதுராமன்
7) வரலாற்றுக் குறிப்புகள் ... சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார்

நான்காம் திருமுறை

(பக்கம் 1410; முதற்பதிப்பு 1957)

1) விளக்கக் குறிப்புரை ... முத்து சு. மாணிக்கவாசக முதலியார்.
2) பொழிப்புரை ... தி.வே. கோபாலய்யர்

ஆய்வுக்கட்டுரைகள்

(பக்கம் 294)

1) ஆசியுரை
2) முதற்பதிப்பின் மதிப்புரை ... மாண்புமிகு எம். பக்தவச்சலம் அவர்கள்
3) முதற்பதிப்பின் அணிந்துரை ... சொ. சிங்காரவேலன்
5) தலங்களின் வரலாற்றுக் குறிப்புகள் ... சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், சுந்தரேச வாண்டையார், வி.சா. குருசாமி தேசிகர்.

ஐந்தாம் திருமுறை

(பக்கம் 900, முதற்பதிப்பு ... 1961)

1) விளக்கக் குறிப்புரை ... க. வச்சிரவேல் முதலியார், வி.சா. குருசாமி தேசிகர்.
2) பொழிப்புரை ... சொ. சிங்காரவேலன்.

ஆய்வுக்கட்டுரைகள்

(பக்கம் 246)

1) ஆசியுரை
2) உரைச்சிறப்பு ... சி.அருணைவடிவேல்முதலியார்.

3) வரலாற்றுக் குறிப்புகள் ... சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், வை. சுந்தரேச வாண்டையார், வி.சா. குருசாமி தேசிகர்.

ஆறாந் திருமுறை

(பக்கம் 1422; முதற்பதிப்பு 1963)

1) விளக்கக் குறிப்புரை ... சி.அருணை வடிவேல் முதலியார்.

2) பொழிப்புரை ... தி.வே. கோபாலய்யர்.

ஆய்வுக்கட்டுரைகள்

(பக்கம் 352)

1) ஆசியுரை

2) அப்பர் தேவாரத்தில் இலக்கியப் பண்புகள்... சொ. சிங்கார வேலன்

3) நாவுக்கரசர் அருளிய நன்ஞானம் ... சி. அருணைவடிவேல் முதலியார்.

4) புராண வரலாற்றுக் குறிப்புகள் ... வி.சபேசன்.

5) நாயன்மார் வரலாற்றுக் குறிப்புகள் ... வி.சபேசன்.

6) தலங்களின் வரலாற்றுக் குறிப்புகள் ... சி.எம்.இராமச்சந்திரஞ் செட்டியார்.

ஏழாம் திருமுறை

(பக்கம் 1340; முதற்பதிப்பு 1964)

1) விளக்கக் குறிப்புரை, பொழிப்புரை ... சி. அருணைவடிவேல் முதலியார்.

ஆய்வுக்கட்டுரைகள்

(பக்கம் 420)

1) ஆசியுரை.

2) இலக்கிய இன்பம் ... ப.நீலா.

3) பொருளாராய்ச்சி ... சொ. சிங்கார வேலன்.

4) புராண வரலாற்றுக் குறிப்புகள் ... வி. சபேசன்.

5) நாயன்மார் வரலாற்றுக் குறிப்புகள் ... வி. சபேசன்.

6) தலவரலாற்றுக் குறிப்புகள் ... சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், சுந்தரேச வாண்டையார், வி.சா. குருசாமி தேசிகர்.

எட்டாம் திருமுறை - 1 (திருவாசகம்)

(பக்கம் 936; முதற்பதிப்பு 1966)

1) விளக்கக் குறிப்புரை ... சி. அருணைவடிவேலு முதலியார்.

2) பொழிப்புரை ... எம். சிவச்சந்திரன்.

ஆய்வுக்கட்டுரைகள்

(பக்கம் 82)

1) ஆசியுரை ... தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்.

2) அணிந்துரை ... குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்.

3) முதல் பதிப்பின் முகவுரை ... சி. அருணவடிவேலு முதலியார்.

4) குறிப்புரை மாட்சி ... சொ. சிங்கார வேலன்.

5) ஆராய்ச்சியுரை ... தி.ந. இராமச் சந்திரன்.

எட்டாம் திருமுறை - 2 (திருக்கோவையார்)

(பக்கம் 657; முதற்பதிப்பு 1977)

1) உரை ... பேராசிரியர் உரையும் பழைய உரையும்.

ஆய்வுக்கட்டுரைகள்

(பக்கம் 74)

1) ஆசியுரை ... தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்.

2) அணிந்துரை ... இராதா தியாகராஜன்

3) உரைமாட்சி ... தி.வே. கோபாலய்யர்

4) ஆராய்ச்சியுரை ... தி.ந. இராமச் சந்திரன்

ஒன்பதாம் திருமுறை

(பக்கங்கள் 514; முதற்பதிப்பு 1969)

1) விளக்கக் குறிப்புரை ... சி. அருணை வடிவேல் முதலியார்.

2) பொழிப்புரை ... தி.வே. கோபாலய்யர்.

ஆய்வுக்கட்டுரைகள்

(பக்கங்கள் 174)

1) ஆசியுரை ... தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்.

2) ஆய்வுக்கட்டுரைகள் ... சொ. சிங்கார வேலன், ப. நீலா, வை. சுந்தரேச வாண்டையார், வி.சா. குருசாமி தேசிகர்.

பத்தாம் திருமுறை - 1 (திருமந்திரம்)

(பக்கங்கள் 940; முதல் பதிப்பு 1974)

1) விளக்கக் குறிப்புரை, பொழிப்புரை ... சி. அருணைவடிவேல் முதலியார்.

ஆய்வுக்கட்டுரைகள்

(பக்கங்கள் 69)

1) ஆசியுரை ... தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

2) முதல் பதிப்பின் பதிப்புரை ... சி.அருணைவடிவேல் முதலியார்.

3) முதல் பதிப்பின் முன்னுரை ... க. வச்சிரவேல் முதலியார்.

4) முதல் பதிப்பின் மதிப்புரை ... பா. நடராசன்.

5) திருமூலர் வரலாறு ... க. வெள்ளை வாரணன்.

பத்தாம் திருமுறை - 2 (திருமந்திரம்)

(பக்கங்கள் 844; முதற்பதிப்பு 1984)

1) தெளிவுரை, விளக்கக் குறிப்புரை ... சி. அருணைவடிவேலு முதலியார்.

ஆய்வுக்கட்டுரைகள்

(பக்கங்கள் 167)

1) ஆசியுரை ... தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்.

2) முதல் பதிப்பின் அணிந்துரை ... மீ.ப. சோமசுந்தரம்.

3) முதல் பதிப்பின் மதிப்புரை ... டி.வி. வேங்கடராமன்.

4) திருமந்திர உரைமாட்சி ... சொ. சிங்காரவேலன்.

5) ஆராய்ச்சிக் கட்டுரைகள் ... (1) கு. சுந்தர மூர்த்தி, (2) ந. இராம கிருஷ்ணன், (3) தி.வே. கோபாலையர்.

பதினோராந் திருமுறை

(பக்கங்கள் 1030; முதற்பதிப்பு 1995)

1) தெளிவுரை, குறிப்புரை ... சி. அருணைவடிவேல் முதலியார்.

ஆய்வுக்கட்டுரைகள்

1) ஆசியுரை

2) ஆராய்ச்சி முன்னுரை ... கு. சுந்தர மூர்த்தி.

3) நூலாசிரியர்கள் வரலாறு ... வி.சா. குருசாமி தேசிகர்.

4) உரைமாட்சி ... சொ. சிங்காரவேலன்.

1.2

தேவாரப் பதிப்புகளின் வரலாறு

எண், நூல், வெளியிட்டவர், ஆண்டு விவரம் முறையே வருமாறு :

1) திருஞானசம்பந்தர் தேவாரம்- முதல் மூன்று திருமுறை - காஞ்சிபுரம் - சபாபதி முதலியார் – திருமயிலை சுப்பராய ஞானியார் – 1864.

2) சுந்தரர் தேவாரம் - சபாபதி முதலி யார் ஆய்வு – திருமயிலை சுப்பராய ஞானியார் – 1865.

3) திருநாவுக்கரசர் தேவாரம் - 4,5,6, திருமுறைகள் - சபாபதி முதலியார் ஆய்வு – திருமயிலை சுப்பராய ஞானியார் – 1866.

4) திருஞானசம்பந்தர் தேவாரம் - 2-ஆம் பதிப்பு – திருமயிலை சுப்பராய ஞானியார் – 1875.

5) சுந்தரர் தேவாரம் - 2-ஆம் பதிப்பு – திருமயிலை சுப்பராய ஞானியார் – 1875.

6) திருநாவுக்கரசர்தேவாரம் - காஞ்சி புரம் திருச்சிற்றம்பல ஞானியார் ஆய்வு – பாதரக்குடி ஆ. சொக்க லிங்கம் பிள்ளை – 1879.

7) தேவாரம் முழுமையும் - தலமுறை – திருவாவடுதுறை ஆதீனம் அருளாணைப்படி மதுரை இராம சாமிப் பிள்ளை என்னும் ஞான சம்பந்தம் பிள்ளை – 1881.

8) தேவாரம் முழுமையும் - தலமுறை – தருமையாதீனத் தலைவர் அருளாணைப்படி திருமயிலை செந்தில்வேல் முதலியார் – 1894.

9) மேற்படி - 2-ஆம் பதிப்பு – .... – 1905.

10) பண்முறைத் தேவார அடங்கன் முறை - திருவேங்கடநாயுடு பார்வை – சண்முக முதலியார் – 1898.

11) பண்முறைத் தேவார அடங்கன் முறை - திருமயிலை சண்முகபிள்ளை பார்வை – எஸ்.பி. ராஜாராம் – 1906.

12) மேற்படி - மறுபதிப்பு – நமசிவாய முதலியார் – 1917.

13) பண்முறை தேவாரம் – பங்காளம் அப்புபிள்ளை – 1907.

14) சுந்தரர் தேவாரம் - நாகலிங்கம் முதலியார் – ஆதிமூலம் செட்டியார் – 1908.

15) மூவர் தேவாரம் – யாழ்ப்பாணத்து வண்ணை நகர்ச் சாமிநாத பண்டிதர் ஆய்ந்து வெளியிட்டது – 1911.

16) சுந்தரர் தேவாரம் - ஸ்ரீமத் இராமா நந்த யோகிகளின் பதவுரை, பொழிப் புரை, கருத்துரை, விசேடவுரை– பு. சண்முக முதலியார் – 1913.

17) திருஞானசம்பந்தர் தேவாரம் - கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் பார்வை – சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் – 1927.

18) திருநாவுக்கரசர் தேவாரம் - கயப் பாக்கம் சதாசிவச் செட்டியார் பார்வை சை.சி. நூற்பதிப்புக் கழகம் – 1928.

19) சுந்தரர் தேவாரம் - கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் பார்வை – சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் – 1929.

20) பண்முறைத் தேவாரம் - மலிவுப் பதிப்பு – சைவசித்தாந்த சமாஜம் – 1929-31.

21) அடங்கன்முறைத் தேவாரம் - இளமுருகனார் 1953.

22) தேவாரம் - முதல் ஏழு திருமுறைகள் - ஒவ்வொரு திருமுறையும் தனித் தனியாக - விரிவான உரை – தருமை ஆதீனம் – 1953-1964.

23) தலமுறைத் தேவாரம் - ஒரே தொகுப்பு – திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் – 1968.

24) திருஞானசம்பந்தர் தேவாரம் - தலமுறை (ஒவ்வொரு பதிப்பும் 3000 பிரதிகள் வீதம் ஆறு பதிப்புகள்) – திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் – 1961, 1971, 1979, 1981, 1992, 1996.

25) திருநாவுக்கரசர் தேவாரம் - தலமுறை (மூன்றாம் பதிப்பிலிருந்து ஒவ்வொரு பதிப்பும் 3000 பிரதிகள் - ஏழு பிரதிகள்) – திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் 1957, 1961, 1970, 1976, 1986, 1992, 1999.

26) சுந்தரர் தேவாரம் – தலமுறை (இரண்டாம் பதிப்பிலிருந்து ஒவ்வொரு பதிப்பும் 3000 பிரதிகள் – எட்டு பதிப்புகள்) – திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் – 1958, 1965, 1971, 1978, 1987, 1992, 1995, 1999.

27) திருநாவுக்கரசர் தேவாரம் - பண் முறை - உரையுடன் – பூம்புகார்க் கல்லூரி – 1979-80.

28) சுந்தரர் தேவாரம் - பண்முறை – திருவாவடுதுறை ஆதீனம் – 1981.

29) திருநாவுக்கரசர் தேவாரம் – திருவாவடுதுறை ஆதீனம் – 1982.

30) திருஞானசம்பந்தர் தேவாரம் – திருவாவடுதுறை ஆதீனம் – 1984.

31) அப்பர், சுந்தரர் தேவாரம் – French Institute of Indology Pondicherry – 1985.

32) பன்னிரு திருமுறைகள் - உரையுடன் - இருபத்து நான்கு தொகுதிகள் – வர்த்தமானன் பதிப்பகம் – 1995.

33) ஞானசம்பந்தர் தேவாரம் – French Institute of Indology – 1997.

34) தேவாரத் திருப்பதிகங்கள் - முதல் ஏழு திருமுறைகள் – கங்கை வெளியீடு – 1998.

35) ஏழு திருமுறைகள் - தனித்தனி தொகுதியாக - உரையுடன் – தருமை ஆதீனம் – 1999.

துணை நூல்கள் :

1) திருஞானசம்பந்தர் தேவாரம், French Institute of Indology Pondicherry – தி.வே. கோபாலய்யர் முன்னுரை.

2) திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் மேலாளர் அனுப்பிய நூற்பட்டியல்,

3) தேவாரத் திருப்பதிகங்கள் - கங்கை பதிப்பகம், 4) பன்னிரு திருமுறைகள் - வர்த்தமானன் பதிப்பகம்

1.3

திருவாசக மூலப்பதிப்புகள்

எண், நூல், வெளியிட்டவர், ஆண்டு, விவரம் முறையே வருமாறு :

1) திருவாசகம் – கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகர் – 1835.

2) திருவாசகம் - பழவேற்காடு சிங்கார வேலு முதலியார் பார்வை – பி. சிதம்பர முதலியார் – 1892.

3) திருவாசகம் – பி. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ் – 1892.

4) திருவாசகம் – சைவசித்தாந்த மகா சமாசம் – 1941, 1968, 1978.

5) திருவாசகம் – மர்ரே.எஸ். ராஜம் – 1956.

6) திருவாசகம் – சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் – 1961, 1974.

7) திருவாசகம் – திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் 1957 (2000 பிரதிகள்), 1962 (10000 பிரதிகள்), 1969 (1000 பிரதிகள்), 1975 (5000 பிரதிகள்), 1981 (3000 பிரதிகள்), 1986 (3000 பிரதிகள்), 1992 (3000 பிரதிகள்), 1993 (10000-கையடக்கம்), 1995 (5000) 1999 (3000) 1999 (10000-கையடக்கம்).

8) திருவாசகம் – திருவாவடுதுறை ஆதீனம் – 1985.

9) திருவாசகம் – மணிமேகலைப் பிரசுரம் – 1986.

10) திருவாசகம் – கங்கை புத்தக நிலையம் – 1998.

1.4

திருவாசகக் குறிப்புரைகள்

எண், நூல், வெளியிட்டவர், ஆண்டு, விவரம் முறையே வருமாறு :

1) சிவ. அருணகிரி முதலியார் – 1927.

2) அ. சோமசுந்தரம் செட்டியார் – 1938.

3) ச. தண்டபாணி தேசிகர் – தருமையாதீனம் – 1949.

4) நீ. கந்தசாமிப்பிள்ளை – அண்ணாமலைப் பல்கலைக்கழகம் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் அறக்கட்டளை – 1964.

5) சி. அருணைவடிவேல் முதலியார் – தருமையாதீனம் – 1966.

6) இராய. சொக்கலிங்கம் – ...– 1974.

7) கோ. வன்மீகநாதன்பிள்ளை – 1985.

1.5

திருவாசக உரைகள்

(நூல் முழுமைக்கும்)

எண், நூல், வெளியிட்டவர், ஆண்டு, விவரம் முறையே வருமாறு :

1) திருவாசகம் - சில வித்துவான்கள் உரை – ப. வாசுதேவ முதலியார் – 1897.

2) திருவாசகம் - உரை – பிருங்கி மாநகரம் இராமசாமி முதலியார் – 1897.

3) ஈசுந்தர மாணிக்க யோகீசுவரர் - உரை – பிரம்ம வித்தியாசங்கம், சென்னை – 1939.

4) கா. சுப்பிரமணியப் பிள்ளை - உரை – சைவசித்தாந்த மகா சமாஜம் – 1933.

5) சீகாழித்தாண்டவராயர் - உரை – உ.வே. சாமிநாத அய்யர் நூல் நிலையம், அடையாறு – 1954.

6) க.சு.நவநீதகிருஷ்ண பாரதியார் – பத்மா பதிப்பகம், இலங்கை – 1954.

7) வீரபாகுப்பிள்ளை உரை – பத்மா பதிப்பகம், இலங்கை – 1957.

8) புலியூர்க்கேசிகன் தெளிவுரை (பல பதிப்புகள்) – பாரிநிலையம் – 1963.

9) ப. இராமநாதன் பிள்ளை உரை – சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் – 1963.

10) ச. தண்டபாணி தேசிகர் உரை – திருவாவடுதுறை ஆதீனம் – 1964.

11) மெய்கண்டஉரை - தி.இரா. அண்ணாமலைப் பிள்ளை, பு.சி. புன்னைவனநாத முதலியார், வே. மாணிக்கவாசகப்பிள்ளை, ஆ. அருளப்பன், டாக்டர் மு. சுப்பிரமணியப்பிள்ளை – திருநெல்வேலி சென்னை தமிழ் மாகாணசங்கத்தார் – 1967.

12) சுவாமி சித்பவானந்தர் உரை (பல பதிப்புகள்) – ஸ்ரீராமகிருஷ்ணதபோவனம், திருப்பராய்த்துறை – 1968.

13) ஜி. வரதராஜன் உரை - நான்கு பதிப்புகள் – பழனியப்பா சகோதரர்கள் – 1971, 1978, 1987, 1995.

14) சு. அருளம்பலவனார் உரை - இரண்டாம் பாகம் – திருமதி. அருளம்பலவனார், இலங்கை – 1966, 1973.

15) ஏ.எஸ். வழித்துணைராமன் உரை - பாரதி பதிப்பகம், சென்னை – 1987.

16) திருவாசகன் உரை – அருள்சுடர் பதிப்பகம், சென்னை – 1991.

17) நாராயணன் வேலுப்பிள்ளை உரை – வர்த்தமானன் பதிப்பகம் – 1993.

18) டாக்டர் ஆர். ராஜகோபாலன் உரை – 1994.

19) எம். அண்ணாமலை தெளிவுரை - 2000.

1.6

திருவாசகத்தின் சில பகுதிகளுக்கான உரைகள்

எண், நூல், வெளியிட்டவர், ஆண்டு, விவரம் முறையே வருமாறு :

1) நீ. கந்தசாமிப்பிள்ளை (பள்ளியெழுச்சி) – திருவாவடுதுறை ஆதீனம் – 1931.

2) மறைமலையடிகள் (முதல் நான்கு அகவல்கள்) – சங்கர் கம்பெனி – 1948.

3) வே.மு. சீனிவாசா முதலியார் (சிவபுராணம்)

4) கமலா (சிவபுராணம்) – பைலட் பப்ளிகேஷன்ஸ் – 1981.

5) அடிகளாசிரியர் (சிவபுராணம்) – சித்தநாகேசசுர ஆதீனம், குகையூர் – 1986.

6) புகழ் முத்து சுவாமிப்பிள்ளை (திருச்சதகம்) – சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் –1946.

7) பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் (திருச்சதகம்) – 1947.

8) மு. கதிரேசன் செட்டியார் (நீத்தல் விண்ணப்பம்) – 1950.

9) ந.ரா. முருகவேள் (நீத்தல் விண்ணப்பம்) – சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் – 1974.

10) மு. கதிரேசன் செட்டியார் (திருவெம்பாவை) – 1953.

11) கீ. இராமலிங்கம் (திருவெம்பாவை) – தருமையாதீனம் – 1953.

12) பி.ஸ்ரீ. (திருவெம்பாவை) – அமுத நிலையம் – 1960.

13) ஆர்.வி. (திருவெம்பாவை) – 1964.

14) திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி – தருமையாதீனம் – 1950.

15) ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் – சைவசித்தாந்த மகா சமாசம் – 1955.

16) திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி – திருவாவடுதுறை ஆதீனம் – 1961.

17) முதல் நான்கு அகவல்கள் - மா. இரத்தின சபாபதி பிள்ளை - 1973

18) குன்றக்குடி அடிகளார் (பாவை - பள்ளியெழுச்சி) – அருள்நெறித்திருக் கூட்டம் – 1976.

19) சரவணானந்தா (பள்ளியெழுச்சி) – இராமலிங்கர் மணி மன்றம் – 1978.

20) அடிகளாசிரியர் (கோயில் திருப்பதிகம்) – சித்தநாதேச்சுராதீனம் – 1981.

21) கண்ணாயிரம் உரை (முதல் பகுதி) – 2000.

(துணைநூல்கள் : 1. தமிழ் வளர்க்கும் ''திருவாசகம்'' – இரா. சுந்தரமூர்த்தி)

1.7

திருவாசகம் மொழிபெயர்ப்புகள்

எண், மொழிபெயர்ப்பாளர், வெளியிட்டவர், ஆண்டு, விவரம் முறையே வருமாறு :

1) ஜி.யு. போப் (முழுமையும்) – 1900.

2) கிங்ஸ்பரியும், பிலிப்ஸூம் (59 பாடல்கள்) – 1921.

3) பொன்னம்பலம் அருணாசலம் (சில பாடல்கள்) – 1937.

4) என். நாராயணன் (முதல் நான்கு அகவல்கள்) – 1939.

5) திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியன் (முழுமையும்) – 1958.

6) இரத்ன. நவரத்னம் – பாரதீய வித்யா பவன் – 1963 - 1975 - மறுபதிப்பு.

7) ஜி. வன்மீகநாதன் – 1971 - மறுபதிப்பு - 1980.

8) நார்மன் கட்லர் (திருவெம்பாவை) – 1979.

9) Albrecht Fenz & பி. நாகராஜன் (ஜெர்மன் மொழிபெயர்ப்பு) – 1977.

10) டே ஸினி – 1986.

11) எஸ்.எம். பொன்னையா (சில பாடல்கள்) – 1988.

12) சி. ஏகாம்பரம் (சிவபுராணம்) – 1990.

13) சி. சீனிவாசன் (முழுமைக்கும்) – 1991.

14) டாக்டர் ரவீந்தரகுமார்சேட் (இந்தியில் - சில பாடல்கள்) – 1993.

15) நாகேஸ்வர்சுந்தரம் – (இந்தியில் - திருச்சாழல் வரை) 1997.

16) எஸ். சீனிவாசன் (முழுமை) – 1999.

17) இறையன்பன் (முழுமை) – 1999.

18) எஸ்.ஏ. சங்கரநாராயணன் (முதல் ஐந்து பாடல்கள்) – 2001.

(இரா. சுந்தரமூர்த்தி அவர்கள் ''தமிழ் வளர்க்கும் திருவாசகம்'' என்ற அரிய நூலில் திருவாசகம் மூலம், உரைகள், குறிப்புரைகள் என்று தனித்தனியே தலைப்புகள் தந்து முழுவிவரங்கள் தந்துள்ளார். டி.என். இராமச்சந்திரன் அவர்கள் தனது திருவாசகம் ஆங்கில மொழி பெயர்ப்பில் முன்னுரையாக திருவாசகம் பற்றி வெளிவந்த ஆங்கில நூல்கள்

திருவாசக உரைகள், மொழி பெயர்ப்புகள் ஒன்றுவிடாமல் இணைத்துள்ளார்கள். இவ்விரு பெரு மக்களுக்கும் சைவ உலகம் நன்றிக் கடன்பட்டுள்ளது. டி.என். இராமச்சந்திரன் முன்னுரைப்படி காழித் தாண்டவராயர் தனது அநுபூதி உரையை *1833*-ஆம் ஆண்டில் எழுதத் தொடங்கி *1835*-ஆம் ஆண்டில் முடித்தார். நூல் *1954*-ஆம் ஆண்டில் அச்சில் வந்தது. ராஜதுரை பிள்ளை என்பவர் திருவாசக உரை எழுதி யுள்ளதாக உ.வே.சா.அவர்கள் தனது வரலாற்று நூலில் குறிப்பிடுகிறார். *1906*-ஆம் ஆண்டில் இரங்கூன் சன்மார்க்க சங்கம் வெளியிட்ட பன்னிரு திருமுறைத் திரட்டில் திருவாசகம் முழுமையும் இடம் பெற்றுள்ளது.)

1.8

திருக்கோவையார் பதிப்பு வரலாறு

எண், பதிப்பாசிரியர்/உரையாசிரியர், வெளியிட்டவர், ஆண்டு, விவரம் முறையே வருமாறு :

1) புதுவை நயநப்ப முதலியார் – *1841*.

2) ஆறுமுக நாவலர் – நச்சினார்க்கினியர் உரை (பேராசிரியர் உரையே ஒரு காலத்தில் நச்சினார்க்கினியர் உரை என்று கருதப்பட்டு வந்தது) – *1860*. விசுவநாதம்பிள்ளை (நான்காம் பதிப்பு) – *1922*. சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலைத் தருமபரி பாலகர்கள் (ஐந்தாம் பதிப்பு) – *1932*. வீ. பொன்னுஸ்வாமி (ஆறாம் பதிப்பு) – *1954*. வீ. பொன்னுஸ்வாமி (ஏழாம் பதிப்பு) – *1957*.

3) சி. தம்பையாபிள்ளை – *1894*.

4) விசாகப்பெருமாளையர் விளக்கம் – *1897*.

5) திருமயிலை செந்தில்வேலு முதலியார் – திருவாவடுதுறை ஆதீனம் – *1900*.

6) வீ. பவானந்தம் பிள்ளை – லாங் மென்ஸ் கிரீன் & கம்பெனி – *1917*.

7) கா. நமசிவாய முதலியார் – *1927*.

8) சோமசுந்தரம் செட்டியார் (அரும் பொருள் விளக்கவுரை) – சைவ சித்தாந்த மகா சமாஜம் – *1939*.

9) பழைய உரை – சரசுவதி மஹால் நூல்நிலையத்தார் – *1951*.

10) பேராசிரியர் உரை – திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் – *1952, 1960, 1972 & 1991*.

11) ச. தண்டபாணிதேசிகர் உரையுடன் – திருவாவடுதுறை ஆதீனம் – *1965*.

12) சி.அருணைவடிவேல் முதலியார் குறிப் புரை – தருமபுர ஆதீனம் – *1966*.

13) எம். நாராயணவேலுப்பிள்ளை – வர்த்தமானன் பதிப்பகம் – *1995, 1998*.

(தருமை ஆதீன வெளியீடான ''திருக்கோவையாரி''ல் (1997) டி.என். இராமச்சந்திரன் அவர்களின் ஆய்வுரையிலிருந்து எடுக்கப்பட்டது.)

1.9

"திருமந்திரம் மூலபாட ஆய்வுப்பதிப்பு"

1997

பதிப்பாசிரியர் – டாக்டர் சுப. அண்ணாமலை

வெளியீடு – விலை – ரூ. *480*/- முதல் பகுதி – பக்கங்கள் *664*. இரண்டாம் பகுதி – பக்கங்கள் *540*. மூன்றாம் பகுதி – பக்கங்கள் *652*.

பதிப்பு வரலாற்றில் உ.வே.சா. பதிப்பு, மா.பா. பதிப்பு என்ற வரிசையிலே சுப. அண்ணாமலையின் பதிப்பும் இணைந்து நிற்கிறது. ''தமிழ்ப் பெரும் நூலொன்று, இத்தகைய அறிவியல் சார்ந்த மூலபாட ஆய்வியல் முறைப்படியும், மீட்டுருவாக்க நெறிப் படியும் முதன் முதலாகச் செவ்விய – திருந்திய – தெளிவான வடிவம் பெற்றுள்ளது எனலாம்'' என்கிறார் தமிழண்ணல்.

முன்னர் வெளிவந்த பதினோரு பதிப்புகள், பதினைந்து பழைய சுவடிகள் இவற்றை ஆய்ந்து, பாடவேறுபாடு

கண்டறிந்து, சரியான பாடம் என்று கருதத்தக்க பாடம் இங்கு மூலபாடமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனைய பாடங்கள் அடிக் குறிப்பில் வேறுபாடமாகக் காட்டப்பட்டுள்ளன.

பாடவேறுபாடு காணும்போது பெரும்பான்மையான பதிப்புகள் சுவடிகளில் காணப்பட்டதை எடுத்துக் கொண்டாலும், பல இடங்களில் பொருள் கொள்ளுவது சரியாக இல்லையென்றால் பெரும்பான்மை பாடத்தை விட்டு விடுகின்றார். எப்படி பாடபேதத்தேர்வு செய்தார் என்று எடுத்துக்காட்டுகளும் தருகின்றார். பாடபேதம் செய்யும் போது ''ஐயம் எழும் இடங்களில் பாடற்பொருள், அதிகார இயைபு, முழுமைப் பார்வை, யாப்பமைதி, நடை, நூலாசிரியர் கலைச்சொல் வழக்கும், இலக்கண கூறுகளும் ஆகிய இவற்றைக் கொண்டு உண்மை காண வேண்டும். இவ்வாறு மீட்டுருவாக்கம் செய்யும் பணியை ஆசிரியர் மேற் கொண்டு உள்ளார்'' என்கிறார் தமிழண்ணல்.

பதிப்பாசிரியர் பொருள் விளங்குமாறு பிரித்தும் யாப்புப் பிசகாமல் சொற்பிரிவின்றியும் இருமுறை பாடல்களைப் பதிப்பித்துள்ளார். ஒவ்வொரு பாடலுக்கும் தலைப்பு, கருத்து, சிறப்புக் குறிப்புகள் தந்துள்ளார்.

பல பாடல்களை இடைச் செருகல்கள் என்று தள்ளிவிடுகின்றார். இடைச் செருகல்கள் என்பதற்கு இருபத்தோரு காரணங்களைக் கூறுகிறார். மொத்தத்தில் 2558 பாடல்களே மூலபாடல்கள் என்று முடிவுகட்டுகிறார்.

சில கடினமான கருத்துக்களையும் முன்வைக்கிறார். ''நூலின் பெயர் திருமந்திரமன்று, சதாசிவ ஆகமம் ஆகும்''. ஒன்பது ஆகமங்களின் மொழிபெயர்ப்பு ஒன்பது தந்திரம் என்ற கருத்தினையும் மறுக்கிறார். நூலினை ஒன்பது தந்திரமாகவே பிரிக்கவில்லை. திருமந்திரம் (மூவாயிரம்), திருமந்திரமாலை (முந்நூறு), உபதேசம் (முப்பது) ஆகிய மூன்று தனிநூல்கள் என்கிறார். ''திருமூலர் சிவாத்துவிதர் அல்லர்; காபாலிக சைவர் அல்லர்; இலகுலீச பாசுபதர் அல்லர்; சாக்தர் அல்லர்; வைதீக நெறியும், தமிழ் நெறியும் கலந்து உண்டாகிய திருநெறி என்ற சுத்த சைவ நெறியின் முதற் பேராசிரியர் திருமூலர்'' என்கிறார். இருபதாம் நூற்றாண்டு திருமுறைப் பதிப்பிற்கு அணி சேர்க்கும் நூலாகும் இது.

1.10

திருமந்திரப் பதிப்புகள்

எண், உரையாசிரியர் [பார்வையிட்டவர்], வெளியிட்டவர், ஆண்டு விவரம் முறையே வருமாறு :

1) திருமந்திரம் மூவாயிரம் – கொ. சண்முக சுந்தர முதலியார் – *1887.*

2) சுப்பராயத் தம்பிரான் – திருவாடுதுறை ஆதீனம் – *1897.*

3) மாவை. வே. விசுவநாதப்பிள்ளை – *1912.*

4) திரு.வி.க. – *1909.*

5) வீ. உலகநாத முதலியார் – விவேக போதினி.

6) எஸ். சங்கரலிங்க முதலியார்– *1934.*

7) துடிசை கிழார் அ. சிதம்பரம் – சைவசித்தாந்தம் நூற்பதிப்புக் கழகம் – *1942.*

8) கைலாயச் சித்தர் உரை – திருவாவடுதுறை ஆதீனம் – *1954.*

9) திருமந்திரமாலை – திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் –1956. (1956 - 1000 பிரதிகள், *1960 - 2000* பிரதிகள், *1963 - 3000* பிரதிகள், *1976 - 3000* பிரதிகள், *1991 - 3000* பிரதிகள், *1994 - 3000* பிரதிகள், *1997 - 3000* பிரதிகள்).

10) ஜி. வரதராஜன் உரை - முதல் மூன்று தந்திரங்கள் – முதற் பதிப்பு - ஆசிரியர்; – 1971. பின்வந்த பதிப்பு கள் பழனியப்பா பிரதர்ஸ், சென்னை – *1978, 1983, 1989, 1994, 1999.*

ஜி. வரதராஜன் 4, 5, 6 தந்திரங்கள் – *1972, 1983, 1989, 1993, 1997.*

ஜி. வரதராஜன் 7, 8, 9 தந்திரங்கள் – *1974, 1985, 1993, 1998.*

(திருமந்திர உரை முதற்பதிப்பு ஆசிரியருடையது என்பதும், வெளிவந்த ஆண்டுகள் *1971, 1972, 1974* என்பதும், உரையாசிரியரின் மகன் என்ற முறையில் நேரிடையாக எனக்குத் தெரிந்த செய்தி.)

11) சி. அருணைவடிவேல் முதலியார் - தருமை ஆதீனம் *1, 2, 3* தந்திரங்கள் – *1984*

4, 5, 6 தந்திரங்கள் – *1995*

7, 8, 9 தந்திரங்கள் – *1991.*

12) ஆங்கில மொழிபெயர்ப்பு - பா. நடராஜன் – ஸ்ரீராமகிருஷ்ண மடம் – *1995.*

13) வர்த்தமானன் உரையுடன் – வர்த்தமானன் பதிப்பகம் – *1998.*

14) பஞ்சாக்ஷர தீப உரை – திருவாவடுதுறை ஆதீனம்

தண்டபாணி தேசிகர் :

முதல் தந்திரம் – *1958*

2-ஆம் தந்திரம் – *1959.*

3-ஆம் தந்திரம் – *1960*

5-ஆம் தந்திரம் – *1963*

6-ஆம் தந்திரம் – *1965*

7-ஆம் தந்திரம் (i) – *1966*

7-ஆம் தந்திரம் (ii) – *1968*

8-ஆம் தந்திரம் (i) – *1968)*

த.ச. மீனாட்சி சுந்தரம் :

8-ஆம் தந்திரம் (ii) – *1969*

8-ஆம் தந்திரம் (iii) – *1970*

8-ஆம் தந்திரம் (iv) – *1971*

8-ஆம் தந்திரம் (v) – *1972*

க. வச்சிரவேல் முதலியார் :

8-ஆம் தந்திரம் (vi) – *1973*

8-ஆம் தந்திரம் (vii) – *1973*

9-ஆம் தந்திரம் (i) – *1974*

9-ஆம் தந்திரம் (ii) – *1975*

15) திருமந்திரக் கட்டுரை - திருவாவடுதுறை ஆதீனம்

தே.ஆ. ஸ்ரீனிவாசாச்சாரியார் :

பாயிரம் - *1959*

முதல் தந்திரம் - *1960*

2-ஆம் தந்திரம் (i) - *1961*

2-ஆம் தந்திரம் (ii) - *1962*

2-ஆம் தந்திரம் (iii) - *1962*

3-ஆம் தந்திரம் (i) - *1963*

3-ஆம் தந்திரம் (ii) - *1963*

3-ஆம் தந்திரம் (iii) - *1964*

3-ஆம் தந்திரம் (iv) - *1964*

3-ஆம் தந்திரம் (v) - *1965*

3-ஆம் தந்திரம் (vi) - *1966*

3-ஆம் தந்திரம் (vii) - *1967*

பொன் சுப்பிரமணிய பிள்ளை :

3-ஆம் தந்திரம் (ix)- *1968*

3-ஆம் தந்திரம் (x)- *1969*

3-ஆம் தந்திரம் (xi)- *1971*

3-ஆம் தந்திரம் (xii)- *1972*

4-ஆம் தந்திரம் - *1975*

5-ஆம் தந்திரம் - *1976*

(துணை நூல்கள் :

(i) திருமந்திரம் (i, ii, iii) – சுப. அண்ணாமலை;

(ii) திருவாவடுதுறை ஆதீன வெளியீடுகள்

(iii) திருப்பனந்தாள் ஆதீன வெளியீடுகள்

(iv) ஜி. வரதராஜனின் "திரு மந்திரம்")

1.11

பெரியபுராணம் - பேருரை

1937

(ஆசிரியர் : சிவக்கவிமணி, சி.கே. சுப்பிரமணிய முதலியார்).

சி.கே.எஸ். என்று அழைக்கப்பட்ட சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் பெரிய புராண உரை இதுகாறும் தமிழிலே வந்த மிக விரிவான உரையாகும். உரைப்பகுதி மட்டும் பொடி எழுத்துக்களால் சுமார் 5600 பக்கங்களைக் கொண்டதாகும். இற்றை நாள் அச்சு முறைப்படி பெரிய எழுத்துக்களைப் பயன்படுத்தினால் இன்னும் இரு மடங்கு பெரிதாகி விடும். உரை யல்லாமல் முன்னால் இணைக்கப்பட்டுள்ள பல்வேறு பகுதிகளைச் சேர்த்தால் இன்னும் கூடுதலாக 500 பக்கங்கள் சேர்க்க நேரிடும்.

அது மட்டுமல்ல. பெரியபுராணத்தை உரையுடன் படிக்க இற்றைநாளில் கிடைக்கும் நூல் இது ஒன்றேயாகும்.

இந்நூலைச் சேக்கிழார்க் களஞ்சியம் – அல்லது பெரியபுராணக் களஞ்சியம் – என்றே கூறலாம். பெரியபுராணம் பற்றிய அனைத்துச் செய்திகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. உமாபதிசிவம் எழுதிய திருப்பதிகக் கோவை (2), உமாபதிசிவம் எழுதிய திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருத்தொண்டர் புராண வரலாறு, ஸ்ரீமாதவச் சிவஞான முனிவர் அருளிய திருத்தொண்டர் திருநாமக்கோவை, மீனாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றிய சேக்கிழார் சுவாமிகள் பிள்ளைத்தமிழ்த் திரட்டு, சேக்கிழார் சுவாமிகளின் சரித ஆராய்ச்சிக் குறிப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியாரின் வரலாற்று ஆராய்ச்சியும், கல்வெட்டுகளும் நூலுக்கு அணி சேர்க்கின்றன. நாயன்மாரின் அவதாரத்தலங்கள் பல இருக்குமிடம் தெரியாத நிலையில் அவற்றைத் தேடிப் பிடித்து வரைபடங்களோடு தந்திருப்பது இந்நூலின் தனிச்சிறப்பு ஆகும். இந்த வரைபடங்கள் இல்லையென்றால் பல தலங்களைக் கண்டு பிடிக்கவே முடியாது.

தேவாரத் திருப்பதிகங்கள் பாடியருளிய செய்தி வரலாற்றில் வரும் பொழுது, அத்திருப்பதிகங்களின் முதலாவதும், இறுதியில் உள்ளதுமான பாடல்களை எடுத்தாண்டு முழு உரையும், பதிகப் பாடல்கள் அனைத்திலும் உள்ள அருஞ் சொற்களுக்குக் குறிப்புரையும் தரப்பட்டுள்ளது.

நாயன்மாரின் பழந்திருவுருவப் படிமங்கள், அவதரித்த தலங்கள், வழிபட்ட தலங்கள், சுந்தரர், சம்பந்தர், நாவுக்கரசர் தலயாத்திரை வரைபடங்கள் என அரிய படங்களும் இந்நூலில் இடம் பெற்று உள்ளன.

ஒவ்வொரு நாயனாரின் புராணம் முடிவில் புராணச் சுருக்கம், தலவிசேடம், கற்பனை என சேர்க்கப்பட்டுள்ளது.

வான சாத்திர நுட்பம், பரத நூல்நுட்பம், உடல் நுட்பம், சட்ட நுணுக்கம், சாத்திரக் கருத்து, சங்க நூல் எடுத்துக்காட்டு, பிற நாட்டார் கொள்கையொப்பு – என நூலின் மாட்சி விரிந்து கிடக்கிறது.

சிவக்கவிமணி அவர்களின் உரைச் சிறப்பைச் சுவைக்க கண்ணப்ப நாயனார் புராணத்தை எடுத்துக்காட்டாகப் பார்ப்பது உதவியாக இருக்கும்.

திண்ணனார் வில்பிடிக்கும் நிகழ்ச்சியை சேக்கிழார் பெருமான் கூறுகிறார்.

''தேனலர் கொன்றையார்தந் திருச்சிலைச்
செம்பொன் மேரு
வானது கடலி னஞ்ச மாக்கிட லவர்க்கே
பின்னுங்
கானவூ னமுத மாக்குஞ் சிலையினைக்
காப்பு செய்தார்''

(பெரியபுராணம் – கண்ணப்பர் –
பாடல் 32)

''சிவபெருமான் ஏந்திய வில்லாகிய மேருமலை தேவர்கள் திருப்பாற்கடல் கடைந்த காலத்து மத்தாக நின்றது. அது போழ்து நஞ்சு எழுந்தது. தேவர்களைக் காக்கும் பொருட்டு அதனைச் சிவபெரு

மான் உண்டு கண்டத்து அடக்கித் திருநீல கண்டராய் விளங்கினார். தேவர்கள் நஞ்சினால் சாவாது காக்கப்பட்டுப் பின்னர் அமுதம் உண்டனர் என்பது வரலாறு. ஆதலின் 'மேரு கடலின் நஞ்சம் ஆக்கிட' என்றார்.''

''அந்த மேருவே பின்னர் இங்கு நாயனாரது கையிற் சேர்ந்த போது சிவபெருமானுக்கு ஊனினை அமுதமாக்கிக் கொடுத்தது என்றபடி சிவபெருமானது திருச்சிலை கடல் கடைந்த தேவர்களது கரத்தில் நின்ற போது விரும்பத்தக்க நல்ல அமுதத்தை விடமாக்கியது. அதுவே நாயனார் திருக்கை யில் வந்தபோது விரும்பத்தகாத தீமை பயப்பதாகிய – விலக்கப்பட்ட பொருளாகிய ஊனினை அமுதமாக்கி உதவிற்று என்றதொரு நயமும் காண்க.''

செய்யுள் இலக்கணம் பற்றி சிவக்கவிமணி அவர்களின் பேரறிவு எண்ணி மகிழ்தற்குரியது.

பாடல் 691 – ''வண்ண வெஞ்சிலையும்'' முதல்

பாடல் 782 – ''ஏறுகாற் பன்றியோடு'' வரை

''691 முதல் 705 வரை கதை சொல்லிச் செலுத்தும் வகையால் யாப்புச் சென்றது. இங்கு நாயனார் வேட்டைக் கோலம் பூண்டு புறப்படும் வரை 706 முதல் 716 வரை பாட்டுக்கள் சித்திரித்துப் புறப்படும் பொருள் குறிக்கும் வகையால் இயன்ற ஐஞ்சீர் விருத்தத்தாற் கூறினார். அதன்மேல் 717 முதல் 727 வரை உள்ள பாட்டுகள் வேடர் கூட்டம் ஊக்கத்துடன் வேட்டைக்கு எழுந்து செல்வதால் அதற்கேற்ற வலிய ஓசை மிக்க எழுசீர்ச் சந்தப்பாவிலும், அதன் மேல் வேட்டை யாடி ஓடிக்கொல்லும் வேட்டை வினைகளை 728 முதல் 740 வரை பாட்டுகளில் அவற்றிற்குரிய தங்கிசை, முடுகிசை கலந்த நாற்சீர் சந்தப்பாவிலும், யாத்த இசையும் சொல்லும் பொருளும் பொருந்தும் அமைதியும் காணத்தக்கன. அதன் மேல் ஆற்றோழுக்கில் செல்லும் அறுசீர் விருத்தத்தால் 741 முதல் 782 வரையில் உள்ள பாட்டுக்களால் கூறினார்''.

வேடர்கள் வேட்டையாடும் காட்சியைச் சிவக்கவிமணியவர்கள் அழகுற இன்ன வகை உவமக் காட்சி என்று தெரிவு செய்கிறார்.

''அம்புபட்டுப் புலிவாயிற் சேர்ந்த பன்றியைப் புலி கவர்வன போன்றது என்றதும் (பாடல் 729), எய்யப்பட்ட தலைகள் எதிரெதிர் பொருவன போல்வன என்றதும் (730) உலக நிலை உவமக்காட்சி, இரவொடு பகல் அணைவன என (731), உழையைப் பணி தொடர்நிலை கொள (732), கடல் புனல் கொளவரு முகிலென (733), என்றவை கவிநிலை உவமக் காட்சி, நாய்கள் மனனிடை தடை செய்த பொறிகளின் அளவுள (734) என்றது ஞானநிலை உவமக்காட்சி''.

''முன்பு செய் தவத்தின் ஈட்டம்'' என்ற வரிக்குச் சிவக்கவிமணி அவர்கள் ஒரு பெரும் ஆய்வே படைத்து விடுகிறார். ''அருச்சுனனாய் இருந்து இவர் செய்த தவங்களின் தொகுதி'' என்று உரை வரைந்து விட்டு அதற்கு அரணாக பாரதம், ஞானசம்பந்தர் தேவாரம், பெரியபுராணம், பதினோராம் திருமுறை, சீகாளத்திப் புராணம் ஆகியவற்றிலிருந்து எடுத்துக் காட்டுகளும் முன் வைக்கிறார்.

இறைவனுக்கு ஊன் ஊட்டியது சரியே என நியாயப்படுத்தும் முகத்தான் சிவக்கவி மணியவர்கள் இவ்வாறு கூறுகின்றார்.

''அன்பின் வழிநின்று நூல்கள் விதித்த விதியொழுக்கமும், உலகை மறந்து விதிகடந்த ஒழுக்கமுமாகிய இரண்டும் உயிர்களின் பக்குவநோக்கி இறைவன் அருளுதலால் இவையிரண்டும் அவன் விரும்புவனவேயாம். இச்சரிதத்தில் அன்பு பற்றி விதி வழி ஒழுகிப் பூசித்த சிவகோசரியாரையும், அவ்வன்பே பற்றி விதிகடந்து பூசித்த திண்ணனாரையும் இறைவன் ஆட்கொண்டமை காண்க''.

இறைக்காட்சி கிடைக்கும் பாடலில், இறைவன் திண்ணனாரை ''என்வலத்தின் மாறிலாய் நிற்க'' என்கிறார் சேக்கிழார் பெருமான். இதற்குச் சிவக்கவிமணியவர்கள் உரை வருமாறு :

''என்வலத்தில் – வலத்தில் – வலப் பக்கத்தில்; இடப்பக்கத்தில் உமையம்மை யாரும் திருமாலும் உள்ளார்கள் என்ற குறிப்பினால் வலத்தில் என்றார். இடம் அம்மையாரது பாகமாக, வலம் தமது பாகமாதலின் அதனில் நிறுத்தினார் என்பதுமாம். அம்மையாருக்கு இடமே இடமாகக் கொடுத்தவர் இவர்க்கும் வலமே இடமாகக் கொடுத்தார் என்ற நயமும், சக்கரம் வேண்டித்தமது ஒரு கண்ணைத் தோண்டி அருச்சித்த திருமாலுக்கு எளிய இடப்பாகமும், தனக்கென ஒன்றும் வேண்டாது இறைவன் திருக்கண்ணில் வந்த ஊறுகண்டு அஞ்சி அதன் பொருட்டே தமது ஒரு கண்ணை அப்பி உதவியும் மற்றொரு கண்ணையும் உதவ நின்றும் பணி செய்த இவர்க்கு வலப் பாகமும் கொடுத்தனர் என்ற நயமும் காண்க. வலம் – மேம்பாடு – வெற்றி – எனக்கொண்டு அன்பே சிவமாவது சிவத்தின் வலமாதலால் அதனில் நீ நிற்பாய் என்றார் என்ற குறிப்புமாம்''.

''வலத்தின் நிற்க – எனப்பிரித்து, வலம் – வல்லமை, இன் – உவம உருபு எனக் கொண்டு, அருள் வடிவாகிய சக்தி 'நீரின் தண்மை அனல் வெம்மையென' அகலாது சமவாயமாக நீக்கமின்றி நிற்றல் போல, அன்பு வடிவமாகிய நீ பிறிவறியாது அத்துவிதமாக நிற்க என்பதும் குறிப்பு''.

''எய்திய சீர் ஆகமம்'' எனவரும் (பா-784) பாடலுக்கு ஆகமம் பற்றி முழு விளக்கமும், ''முன்பு திருக்காளத்தி முதல்வனார்'' என வரும் (பா-803) பாடலுக்குச் சைவசித்தாந்தப் பெரு விளக்கமும் சிவக்கவிமணியவர்கள் தந்திருக்கின்றார்கள்.

சில இடங்களில் விளக்கம் வேண்டி மகாலிங்கையர், இராமநாதச் செட்டியார், சுப்பராயச் செட்டியார் ஆகியோரின் உரைகளையும் எடுத்து ஆண்டிருக்கிறார்.

இவ்வுரையில் பதார்த்த குணச் சிந்தாமணி, சிலப்பதிகாரம், கந்தபுராணம், சிவஞானபோதம் என சிவக்கவிமணியவர்களின் பலநூல் அறிவும், மருத்துவ அறிவும் காணக்கிடைக்கின்றன.

கண்ணப்ப நாயனார் புராணத்திற்கான சிவக்கவிமணி அவர்களின் உரை மட்டுமே தனி ஆய்வேடாக – இற்றைநாள் முனைவர் பட்டம் பெறக்கூடியதாக உள்ளது.

இப்பேருரையின் முதற்பதிப்பு வெளி வந்த காலவரிசை : முதற்பகுதி *15.9.1937*; இரண்டாம் பகுதி *1940*; மூன்றாம் பகுதி – பகுதி-1 *1943*; மூன்றாம் பகுதி – பகுதி 2 *1946*; நான்காம் பகுதி *3.2.1949*; ஐந்தாம் பகுதி *3.2.1949*; ஆறாம் பகுதி *1.6.1950*; ஏழாம்பகுதி *1954*; முதற் பதிப்பினை வெளியிட்டவர்கள் கோவை தமிழ்ச் சங்கத்தார் ஆவர்.

1.12

பெரிய புராணப் பதிப்புகள்

எண், பதிப்பாசிரியர்/உரையாசிரியர், வெளியிட்டவர், ஆண்டு விவரம் முறையே வருமாறு :

1) மழவை மகாலிங்கையர் – சதுரங்கப் பட்டினம் – *1843*. சரஸ்வதி விலாச அச்சுக்கூடம் – *1848*.

(மகாலிங்கையர் *1843*-ஆம் ஆண்டில் பொழிப்புரைப் பதிப்பைத் தொடங்கி *1846*-ஆம் ஆண்டில் முதற்பகுதியை முடித்தார். இரண்டாம் பகுதி *1848*-இல் முடியுமுன் ஐயர் இறைவன் திருவடி நீழல் எய்தியமையின், ஐயர் முடித்து, எஞ்சி நின்ற காரைக்காலம் மையார் பகுதி *50*-ஆம் செய்யுள் முதற் காண்டம் முடிய களத்தூர் வேதகிரி முதலியார் உரை எழுதி வெளியிட்டார். – ''பெரிய புராணப்பதிப்பு வரலாறு''; தி.கு. நாராயணசாமி; தமிழ்ப்பொழில் *(1937-38)*.

இரண்டாம் பகுதி வெளிவந்தமை பற்றிய செய்தி அரங்க. சுப்பையாவின் ''பெரியபுராணப் பதிப்பு வரலாற்றில்'' காணப்படவில்லை. பா. மதிவாணனின் ''பெரியபுராணம் சுவடி வழி ஆய்வுப்பதிப்பிற்கான வாய்ப்பு'' கட்டுரையில் ''இவர் இரண்டாம் பகுதியும் பதிப்பித்திருப்பதாகத் தெரிகிறது. என் பார்வைக்குக் கிட்டவில்லை' என்கிறார்.

2) காஞ்சிபுரம் சபாபதி முதலியார் மூலம் மட்டும்; தேவாரக்குறிப்பு வசனச்

சுருக்கம் – புங்கத்தூர் ம. சபாபதி முதலியார் அச்சுக்கூடம் – 1859 (முதற் காண்டம்), 1862 (இரண்டாம் காண்டம்).

(தகவல் : அரங்க. சுப்பையா ''பெரிய புராணப் பதிப்பு வரலாறு'')

3) திருமயிலை சுப்பராய ஞானியார், மூலம் முழுமையும், திருமுறைக் குறிப்பு, வசனச்சுருக்கம் – பூவாடை வேங்கடராவின் தரங்கிணி அச்சுக்கூடம் – 1870.

(தகவல் : தி.கு. நாராயணசாமி ''பெரிய புராணப்பதிப்பு வரலாறு'')

4) சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை – பிரமாதி வருடம்.

(தி.கு. நாராயணசாமி பிரமாதியை 1879 என்றும், அரங்க. சுப்பையா 1880 என்றும் கொள்கின்றனர்).

5) ஆறுமுக நாவலர் [காரைக் காலம்மையார் புராணம் வரை சூசனத்துடன் வெளியிடப்பட்டது. இரண்டாம் காண்டம் மூலம் மட்டும் 1888-ஆம் ஆண்டில் சதாசிவப் பிள்ளையால் வெளியிடப்பெற்றது. 1889-ஆம் ஆண்டில் என்பார் தி.கு. நாராயணசாமி; 1884 (முதற் காண்டம்), 1889 (2-ஆம் காண்டம்), 1898 (2-ஆம் பதிப்பு), 1905, 1910, 1916, 1923, 1928, 1951, 1993-ஒன்பது பதிப்புகள்.

1993-ஆம் ஆண்டில் வெளியான காந்தளகப்பதிப்பு ஆறுமுகநாவலர் எழுதி விடுபட்ட புராணங்களுக்கு இலங்கை ஏழாலைபண்டிதர் மு. கந்தையா எழுதிய சூசனத்துடன் வெளிவந்தது – அரங்க. சுப்பையா.]

6) திருவண்ணாமலை ஆதீனம் ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் – பார்த்திப, சர்வஜித்து, விகுருதி, விளம்பி.

ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் முதற் காண்டம் முதற்பகுதி 1886, இரண்டாம் பகுதி 1888, மூன்றாம் பகுதி 1891, நான்காம் பகுதி 1898-ஆம் ஆண்டிலும் (ஏயர்கோன் புராணம் 234-ஆவது செய்யுள் வரை) பதவுரையுடன் வெளியிட்டதாக தி.கு. நாராயணசாமியும் 1887, 1890, 1885 (அச்சுப் பிழையாக இருக்கலாம். 1895 என்று இருந்தால் காலவரிசை சரியாக அமையும்) 1898 என்று அரங்க. சுப்பையாவும் எழுதியுள்ளார்கள். தமிழ் ஆண்டை ஆங்கில ஆண்டாக மாற்றுவதில் இந்த வேறுபாடு நிகழ்ந்திருக்கலாம். ஏயர்கோன் புராணம் பாடல் 235-லிருந்து இறுதி வரை சிதம்பரம் ராமலிங்க சுவாமிகள் உரையிட்டு முற்றுவித்தனர்.

7) சூ. சுப்புராய நாயகர் – 1892 முதல் 1896 வரை.

(பொழிப்புரைப் பதிப்பைச் சஞ்சிகை வெளியீடாக 1892-ஆம் ஆண்டில் தொடங்கி முதற்காண்டத்தை 1893-ஆம் ஆண்டிலும் இரண்டாம் காண்டத்தை 1896-ஆம் ஆண்டிலும் முடித்தார். தகவல் : தி.கு. நாராணசாமி)

8) திருமயிலை செந்தில்வேல் முதலியார் – 1903.

9) திரு.வி. கலியாணசுந்தர முதலியார் - அரும்பதக் குறிப்பு - விசேட உரை – வி. உலகநாத முதலியார், அ. சிவசங்கர முதலியார் – 1910, 1934.

முதற்பதிப்பு

(1907 முதல் 1910 வரை சஞ்சிகையாகவும், 1910-ஆம் ஆண்டில் முழுப் பதிப்பாகவும், இரண்டாம் பதிப்பு 1930 முதல் 1934 வரை பகுதி பகுதியாகவும், 1934-ஆம் ஆண்டில் முழுப்பதிப்பாகவும் வெளிவந்தது)

10) காஞ்சி ஆலாலசுந்தரம் பிள்ளை.

முதல் பகுதி – ஆலால சுந்தரம் பிள்ளை பொழிப்புரை, விசேட உரை – மூன்று பகுதிகள் – கா. ஏகாம்பரம் பிள்ளை.

1918.

(முதல்பகுதி ஆலாலசுந்தரம் பிள்ளையால் 1918-ஆம் ஆண்டிலும், ஏனைய மூன்று பகுதிகள் அவரது மகனார்

ஏகாம்பரம் பிள்ளையால் 1923, 1924, 1935-ஆம் ஆண்டுகளிலும் வெளியிடப்பட்டன.

தி.கு. நாராயணசாமி 1916-ஆம் ஆண்டில் அச்சிடத் தொடங்கியதாகக் கூறுகின்றார். தமிழ் நூல் விவர அட்டவணை 1917, 1919, 1920-ஆம் ஆண்டுகளில் வெளிவந்ததாகக் குறிக்கிறது.)

11) சைவசித்தாந்த மகாசமாஜப் பதிப்பு மூலம் மட்டும் – 1934.

12) சி.கே. சுப்பிரமணிய முதலியார் விளக்கவுரை – சி.கே.எஸ் பின்னர் மங்கையர்க்கரசி – 1937 முதல் 1954.

(சி.கே.எஸ்.ஸின் உரை ஏழு பகுதிகளாக வெளிவந்தது. முதற்பகுதி 1937, 1960, 1975 - மூன்று பதிப்புகள்), இரண்டாம் பகுதி (1940, 1968) மூன்றாம் பகுதி - இரண்டு பாகங்கள் (முதல் பாகம் 1943, 1965; இரண்டாம் பாகம் 1946, 1964), நான்காம் பகுதி (1949, 1971), ஐந்தாம் பகுதி (1950, 1973), ஆறாம்பகுதி (1953, 1969), ஏழாம் பகுதி – இரண்டு பாகங்கள் (முதல் பாகம் 1953. இரண்டாம் பாகம் 1954.)

13) திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துப் பதிப்பு – 1950, 1964, 1970, 74, 82, 91, 95, 99. (ஒவ்வொரு பதிப்பும் 3000 பிரதிகள்)

14) சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப்பதிப்பு – 1970.

அரும்பத உரை – 1977.

15) திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பு மூலம் – 1988.

16) வர்த்தமானன் பதிப்பகப்பதிப்பு (ஆறு பகுதிகள்) உரை – அ. மாணிக்கனார் – 1990.

17) சேக்கிழார் ஆராய்ச்சி மையப்பதிப்பு (உரை - அரும்பதம்)

பதிப்பாசிரியர் - அ.ச. ஞானசம்பந்தன் – 1993.

(துணை நூல்கள் :

1) ''பெரிய புராணப்பதிப்பு வரலாறு'' கட்டுரை – தி.கு. நாராயணசாமி ''தமிழ்ப்பொழில்'' (1937-38).

2) ''பெரிய புராணம் சுவடி வழி ஆய்வுப் பதிப்பிற்கானவாய்ப்பு'' – பா. மதிவாணனின் நூல் ''அடிவானம் நோக்கிச் சில அடிகள்''.

3) ''பெரிய புராணப்பதிப்பு வரலாறு'' -நூல் – டாக்டர் அரங்க. சுப்பையா.

4) தமிழ்நூல் விவர அட்டவணை

5) திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தின் பதிப்புகள் – மேலாளர் அனுப்பிய பட்டியல்).

1.13

பெரிய புராணம் ஆங்கில நூல்கள்

(No, Nool/Katturai, Author, Year)

1) "Biography of Thirugnanasambandhar" - S. Sabaratnam - 1920.

2) "St-Sekkizhar's Periya Puranam" Part I - J.M. Nallaswamy - 1924.

3) "Nanda" - G. Ratnam Pillai - 1928.

4) "Thriu Gnanasambandhar" - Longman - 1928.

5) "Nanda the Pariah Saint" - C.S. Rangaswamy Aiyangar

6) "Seven Saints" - Kazhagam

7) "St. Appar-Hislife and teachings" - M.S. Purnalingam Pillai.

8) "A re-edition of item 2 with additions" - J.M. Somasundharam - 1955.

9) "The Saints of India" - T.M.P. Mahadevan - 1961.

10) "Sixty three Nayanmar Saints" - Swami Sivananda - 1962.

11) "The Grand Epic of Tamil Saivism" - Yogi Suddhananda Bharathi - 1970.

12) "Women Saints of Tamil Nadu" - M. Arunachalam - 1971.

13) "Harijan saints of Tamil Nadu" - M. Arunachalam - 1977.

14) "Saints of India" - Anna - 1977.

15) "Glimpses of Tamil Culture Based on Periya Puranam" - Nambi Arooran - 1977.

16) "The Story of Saiva Saints" - K.M. Venkataramaiah - 1979.

17) "A Study of St-Thirugnana Sambandhar" - Dr. P. Soundra - 1979.

18) "Pearls from Periya Puranam" - Venkatesa Natarajan - 1982.

19) "Appar" - G. Vanmikanathan - 1983.

20) "Karaikkal Ammaiyar" - Dr. Sasivalli - 1984.

21) "Periya Puranam" condensed English Version - G. Vanmiganathan - 1985.

22) "The Saiva Saints" - M. Arunachalam - 1985.

23) "Thiru Gnanasambandhar" (Philosophy and Religion) - Dr. P.S. Somasundharam - 1986.

24) "Saint Nandanar" - A. Padmanaban I.A.S - 1986.

25) "G.U. Pope's" "Five Nayanmar" - Ed: T.N. Ramachandran - 1987.

26) "The Vision of Siva in Periya Puranam - Ratna Navaratnam - 1987.

27) "Slaves of the Lord" - Vidhya Dehejia - 1988.

28) "Hinduism" - Ed: O'Flahert - 1989.

29) "Siva Bhakti" - Dr. R. Nagaswami - 1989.

30) "Ten Tamil Saints" - M.S. Purnalingam Pillai - 1989.

31) "Religion and Mysticism in the Periya Puranam" - R. Gopalakrishnan - 1990.

(ஜி. வன்மீகநாதன், மு. அருணாசலம் ஆகியோரின் நூல்களில்தான் பெரிய புராணத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள முடிகிறது)

(**துணை நூல் :** பெரியபுராணம் – டி.என். இராமச்சந்திரன் – 1990).

2

சைவசித்தாந்த சாத்திரங்களின் பதிப்பு வரலாறு

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருபஃது, உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக் கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம், ஆகிய பதினான்கு நூல்களும் சித்தாந்த சாத்திரம் எனப்படும். இதனை மெய்கண்ட சாத்திரம் என்பர். திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் ஆகிய இரண்டும் மெய்கண்டார் காலத்துக்கு முந்தியன.

பதினான்கு சாத்திரங்களையும் (மூலம் மட்டும்) முதலில் அச்சிட்டவர் மதுரை நாயகம் பிள்ளை ஆவார். சாத்திரங்கள் பதினான்கு என்று முதலில் சொன்னவரே இவர். அச்சிட்டு வெளியான ஆண்டு 1866. நான்கு பகுதிகளாக வெளியிட்டார். இவ்வெளியீட்டில் உதவியவர் ஆரணி ஜாகீர் காசி நாராயணசாமி முதலியார் ஆவார்.

1871-ஆம் ஆண்டிலிருந்து சாத்திரங்களைத் தனித்தனியே பழைய உரைகளோடு கொன்றை மாநகரம் சண்முக சுந்தர முதலியார் வெளியிட்டார். சிவஞான சித்தியார் – அறுவர் உரையையும் வெளியிட்டார்.

1897-ஆம் ஆண்டில் காஞ்சி நாகலிங்க முனிவர் (1865-1950) சித்தாந்த சாத்திரங்கள் முழுமையும் உரையுடன் ஒரே தொகுதியாக வெளியிட்டார். இவர் பூவை கல்யாண சுந்தர முதலியாரின் மாணாக்கர் ஆவார். இப்பதிப்பிற்கு நிதி கொடுத்தவர் இராமநாதபுரம் பாஸ்கரசேதுபதி ஆவார். சித்தாந்த சாத்திரங்களுக்கு ''மெய்கண்ட சாத்திரங்கள்'' என்று பெயர் சூட்டியவர் இவரே.

மதுரை நாயகம் பிள்ளையை அடுத்து சாத்திரங்களைப் பதிப்பித்தவர் ஆனூர் சிங்காரவேலு முதலியார் (1855-1931) ஆவார். இவர் அபிதான சிந்தாமணியைத் தொகுத்

தவர். முதன் முதல் உமாபதி சிவாசாரியார் நூல்களை ‘‘சித்தாந்த அட்டகம்’’ என்று பெயரிட்டு வெளி யிட்டவர் இவரே.

1925-ஆம் ஆண்டில் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் மெய்கண்ட சாத்திரம் பதினான்கும் (மூலம் மட்டும்) கா.சு. பிள்ளையின் முன்னுரையுடன் வெளியிடப்பட்டது. 1934-ஆம் ஆண்டில் சைவசித்தாந்த மகா சமாஜ காரியதரிசி மா. பாலசுப்பிரமணிய முதலியார் சாத்திரங்கள் பதினான்கையும் பழைய உரைகளோடு அடக்க விலைப் பதிப்பாக வெளியிட்டார். இவ்வெளியீட்டின் முழுப் பொறுப்பையும் ஏற்றவர்கள் ச. அனவரத விநாயகம் பிள்ளை, எஸ். வையாபுரிப் பிள்ளை ஆவர். ‘‘இவர்கள் பார்வையில் இப்பதிப்பு வெளி வந்தது பெரும்பேறே. இது போன்ற அழகான பதிப்பு இனி ஒரு காலும் கொணர முடியுமா?’’ என்று ஏங்குகிறார் மு அருணாசலம் அவர்கள்.

சிவப்பிரகாசம், திருவருட்பயன், உண்மைநெறி விளக்கம் மூன்றுக்கும் இதுவரை அச்சிடப் பெறாத பழைய உரைகளை எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை ஏட்டுச் சுவடிகளிலிருந்து பிரதி எடுத்துப் போட்டார். உண்மைநெறி விளக்கம் உமாபதி சிவாசாரியார் செய்ய வில்லை என்றும் சீகாழித் தத்துவநாதர் (சிற்றம்பல நாடிகளின் மாணாக்கர்) செய்தார் என்றும், சீகாழிச் சிற்றம்பல நாடிகள் செய்த துகளறுபோதமே பதினான் கில் ஒன்றாக உள்ளது என்றும் கண்டறிந்து சேர்த்தார். மு. அருணாசலம் அவர்களிடம் இருந்த 250 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஏட்டில் பதினான்கு சாத்திரங்களில் ஒன்றாக உண்மை நெறிவிளக்கம் சேர்க்கப்படாமல் துகளறுபோதமே சேர்க்கப்பட்டுள்ளது என்று மு.அ. அவர்களும் எழுதியுள்ளார்கள். 1940-ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பும் 1994-ஆம் ஆண்டில் மூன்றாம் பதிப்பும் வெளி வந்தது. இந்த இரண்டாம் பதிப்பில் உந்திகளிறு இருபா மூன்றுக்கும் வேறு பழைய உரைகளும், சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் பேருரையும் முன்னில்லாமல் இப்போது புதிதாக வெளிவந்தன.

1942-ஆம் ஆண்டில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிகன் சுவாமிகள் காலத்தில் சித்தாந்த சாத்திர மூலப்பதிப்பு வெளிவந்தது. இதற்குக் காரணமாக இருந்தவர் மௌன மடம் ஸ்ரீசோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஆவார். மு. அருணாசலம் அவர்களிடமிருந்த இரண்டு ஏடுகளையும், எஸ். வையாபுரிபிள்ளை யவர்களின் ஏட்டையும் வைத்து ஒப்பு நோக்கிப் பாட பேதங்களும் வெளி யிட்டனர். பின்னர் முத்து சு. மாணிக்க வாசக முதலியார் அவர்களைக் கொண்டும் ஒரு பதிப்பு வெளியிட்டனர். 1956-ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பு வெளி வந்தது.

1950-ஆம் ஆண்டுக்குப்பின் திருவாவடுதுறை ஆதீனத்தார் சாத்திரங்கள் ஒவ்வொன்றும் உரையுடன் வெளியிட்டனர்.

திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்திலிருந்து கு. சுந்தரமூர்த்தி அவர்களின் உரை விளக்கத்தோடு சாத்திரங்கள் பல பதிப்புகளாக வெளிவரலாயின.

திருநெல்வேலி அருள்நந்திசிவம் அருட்பணிமன்றம் 1987-ஆம் ஆண்டிலிருந்து பதினான்கு சாத்திரங்களுக்கும் சி.சு. மணி, கு. சுந்தரமூர்த்தி, ஆ. ஆனந்த ராசன் ஆகியோரின் உரை விளக்கங்களோடு வெளியிட்டு வரலாயிற்று.

2.1

சைவசித்தாந்த சாத்திர உரைகளின் வரலாறு

கி.பி. 13-ஆம்நூற்றாண்டில் மெய்கண்டார் ‘‘சிவஞானபோதம்’’ என்ற சைவசித்தாந்த சாத்திர நூலை எழுதியருளினார். நூலாசிரியர் மெய்கண்டாரே வார்த்திகம் எனப்படும் பொழிப்புரையையும், அதற்கு மேற்கோள் முதலியவற்றைத் தன்னுள் அடக்கிய அதிகரணம் என்ற பகுப்பையும் செய்தார். இவர் செய்த வார்த்திகமாகிய உரைப்பகுதியே முதல் உரை ஆகும். வார்த்திகப் பொழிப்புரை மெய்கண்டார் செய்தது அல்ல; அவர் மாணவர் ஒருவர் செய்தது என்ற கருத்தும் உண்டு.

சிவஞானபோதத்திற்குப் பழைய உரை, சிந்தனை உரை, சம்பிரதாய உரை, தெளிபொருள் விளக்கவுரை, பதவுரை போன்ற உரைகளைச் செய்த அறிஞர்கள் யாவர் என்பது தெரியவில்லை. பெரும் பாலான உரைகள் திருவாவடுதுறை திருமடாலய ஞானாசிரியர்களால் செய்யப் பெற்றன என்பர்.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் பாண்டிப் பெருமாள் எழுதிய உரையே தொன்மை யானது ஆகும். பதவுரை, விருத்தியுரை, இரண்டும் தந்துள்ளார். விருத்தியுரையை முதலில் பதிப்பித்தவர் கொ. சண்முகசுந்தர முதலியார் ஆவார். பின்னர் திருவாவடு துறை ஆதீனத்தில் வெளியிட்டனர்.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தோன்றிய மாதவச் சிவஞான முனிவர் சிவஞான போதத்திற்குச் சிற்றுரையும், மாபாடியம் என்னும் பேருரையும் வழங்கி அருளியி ருக்கின்றார்கள்.

கோ. வடிவேலு செட்டியார், கா. சுப்பிர மணியபிள்ளை, பொ. முத்தையா பிள்ளை, க. வச்சிரவேல் முதலியார் (இதழ்களில் வந்தது) சி. அருணைவடிவேல் முதலியார் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் (இதழ்கள்), இளவழகன் (இதழ்கள்), ஔவை சு. துரைசாமி பிள்ளை ந. ரா. முருகவேள், மார்க்கபந்து சர்மா, ஆ. சிவலிங்கனார் ஆகியோர் பல்வேறு கால கட்டத்தில் உரைகள் எழுதியுள்ளார்கள்.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் சீர்காழித் தத்துவநாதர் என்பவர் இருபா- இருபஃதுக்குச் செய்த உரையும் காலத்தால் முற்பட்டது ஆகும். அடுத்த உரை 15-ஆம் நூற்றாண்டில் மதுரைச் சிவப்பிரகாசர், மதுரை ஞானப் பிரகாசர் ஆகியோர் சிவப்பிரகாசத்திற்குத் தனித்தனியே இரு உரைகள் எழுதினார்கள்.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் நிறைய உரைகள் வெளி வந்தன. அவற்றில் ஒன்று திருக்களிற்றுப்படியாருக்கும், திருவுந்தி யாருக்கும் எழுந்த பொழிப்புரை. ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம். இந்த உரைகள் 1940-ஆம் ஆண்டில் சமாஜம் வெளியிட்ட இரண்டாம் பதிப்பில் இடம் பெற்றுள்ளன.

2.2

சிவஞானபோதம் பதிப்புகள்

1) 1900-ஆம் ஆண்டுக்கு முன் இந்நூலின் ஒரு பகுதி ''தினவர்த்தமானி'' என்ற தமிழ் செய்தித்தாளில் மறைத்திரு. பி. பெர்சிவல் பாதிரியாரால் வெளியிடப் பட்டது – தகவல்; முர்டோக் தொகுப்பு (1900-ஆம் ஆண்டுக்கு முன்).

2) ''Sivagnana botham - J.M. Nallasamy Pillai – (தகவல் – பிரிட்டிஷ் அருங்காட்சியகப் பட்டியல் - முர்டோக் பட்டியல்'') (1895)

3) ''சிவஞானபோதமும் திராவிட மாபாடியமும் உரையும்'' – யாழ்ப் பாணத்து வண்ணை நகர் சுவாமிநாத பண்டிதர், பனிரெண்டு சூத்திரத்திற்கு பொழிப்புரையும், சிவஞான மாபாடியமும் சிற்றுரையும் உள்ளன. சென்னை சைவ வித்தியாநுபாலன யந்திரசாலையினரால் வெளியிடப் பட்டது – (1906).

4) ''சிவஞான போதமூலமும் சிவஞான பாஷ்யமும்'', சுப்பிரமணிய பிள்ளை; மதுரை விவேகபாநு அச்சியந்திர சாலையில் வெளியிடப்பட்டது - (1906).

5) ''சிவஞானபோதம் - மூலமும் உரையும்'', இராஜா ஹரிஹரபுத்திர பிள்ளை; திரிசிரபுரம் ஸ்ரீமட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடத்தில் வெளியிடப்பட்டது – (1906).

6) ''இரௌவர ஆகமத்துள்ள ஸ்ரீ சிவ ஞானபோத சம்ஸ்கிருத மூலமும், வி. குப்புசாமி மகராஜ் இயற்றிய தத்துவப் பிரகாசிகை என்னும் தமிழுரையும்'', தஞ்சை ஸ்ரீவித்தியா விநோதினியந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டது - (1916). (தஞ்சை டி.என்.ஆர். நூலகத் தில் பார்வையிடப்பட்டது)

7) ''சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்'' – பொ. முத்தையா பிள்ளை, சென்னை, பக்கம் 632, சிவ

ஞான சுவாமிகளின் மாபாடியமும், பொ. முத்தைய பிள்ளையின் விளக்கமும் – (1918).

8) ''சிவஞானபோதம்'' - வி.பி. காந்திமதிநாத பிள்ளை, அம்பா சமுத்திரம்; பனிரெண்டு சூத்திரங்க ளின் வார்த்திக உரை வி.பி. காந்திமதி நாத பிள்ளை தந்துள்ளார். சிவஞான போதத்தைச் சொற்பொழிவு வடிவில் தந்து அமைத்துள்ளார் – (1918).

9) சிவஞானபோதமும் திருத்துருத்தி இந்திரவிடம் கரபாத்திர சுவாமிகள் ஆதீனம் ஈசூர். சச்சிதானந்த சுவாமிகள் மாணாக்கர் பழனிச்சாமி சுவாமிகள் இயற்றிய வேதாந்தத் தீபிகை உரையும், மேற்படி சிவஞான போத சம்ஸ்கிருத சுலோகத்திற்கு திருவையாற்றில் இருக்கும் இலட்சியானந்தத்தினால் இயற்றிய உரையும் கொண்டது. கும்பகோணம் ஸ்டார் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

10) ''சிவஞானபோதமும் வார்த்திகப் பொழிப்புரையும் சிவஞான பாடியமும்'' – எம். பால்வண்ணம் பிள்ளை, பெரியகுளம், சென்னை வித்தியாநுபாலனயந்திரசாலை – (1922).

11) ''சிவஞானபோதம்-உரையுடன்'' – கா.மு. சுந்தர முதலியார் உரை; ஆரணி திருநாவுக்கரசு அச்சுக்கூடம் – (1924).

12) ''சிவஞான போதம்-பதவுரை, கருத்து'' – சேகர் பிரிண்டிங் வொர்க்ஸ், சென்னை – (1925).

13) ''சிவஞான போதச்சுருக்கம்'' – கோல்டன் கம்பெனி சென்னை; வாலையானந்த சுவாமிகள் – (1928).

14) ''சிவஞானபோத மூலமும் தெளிபொருள் விளக்கவுரையும்'' – கோ. வடிவேலு செட்டியார் விளக்கஉரை; அப்பாவிலாச புத்தக சாலை, சென்னை அண்டு ம. சண்முக முதலியார் வெளியீடு – (1929).

15) ''சைவ சித்தாந்த சமாஜம் உரை'' – (1934).

16) ''சிவஞானபோதம் – வ.உ.சி. உரை – (1935).

17) ''சிவஞானபோதம் - பாண்டிப் பெருமாள் விருத்தியும், தெளிபொருள் விளக்கமும்'' – திருவாவடுதுறை ஆதீனம் – (1955).

18) ''இளவழகனார் உரை'' – (1960).

19) ''சிவஞான போதம் உரைநடை'' (7, 8, 9, சூத்திரங்கள்) – த.ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை – (1973).

20) ''சிவஞான போதத்திறவு'' (12 சூத்திரங்களும்); க. வச்சிரவேல் முதலியார் உரை; திருவாவடுதுறை ஆதீன வெளியீடு – (1974).

21) ப. இராமநாதம்பிள்ளை உரை - சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் – (1977).

22) ஜி. வரதராஜம்பிள்ளை உரை தெய்வத் தமிழ்மன்றம் மாயூரம்; முதற்பதிப்பு ஆசிரியர் அவர்களால் எழுபதுகளில் வெளியிடப்பட்டது – (1980).

23) சிவஞானபோதத் திருநெறியுரை - சி. அருணைவடிவேல் முதலியார்; பேரூராதீனம் சத்வித்யா சன்மார்க்க சங்கம்; திருமுறை அடிப்படையில் எழுதப்பட்ட உரை – (1992).

24) கு. வைத்யநாதன் உரை; திருவாவடுதுறை ஆதீன நேர்முகபயிற்சி மையம் – (1994).

25) ஆ. ஆனந்தராசன் உரை; அருள் நந்திசிவம் அருட்பணிமன்றம், திருநெல்வேலி – (1994).

26) இரா. இராஜசேகரன்; பத்தினிக் கோட்டப் பதிப்பகம், பூம்புகார் – (1997).

2.3

சிவஞானபோதம் – சிற்றுரை

1) ''ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பதிப்பு ----- 1905.

2) ''சிவஞானபோத வசனாலங்கார தீபம்'' – செந்திநாதையர் – 1916-17.

3) ''சிற்றுரை விளக்கம்'' – பொ. முத்தையா பிள்ளை, தூத்துக்குடி – 1918.

4) ''மெய்கண்ட சாத்திரம்'' (14), காஞ்சி நாகலிங்க முதலியார் – 1922-23.

5) ''மெய்கண்டாரும் சிவஞான போதமும்'' – கா.சு. பிள்ளை – சைவச் சித்தாந்த மகாசமாஜம் – 1932.

6) ''பதினான்கு சாத்திரம் - உரைநடை''; கா.சு. பிள்ளை; தொண்டைமண்டல சைவ சித்தாந்த சபா, காஞ்சிபுரம் – 1938.

7) ''சிவஞானபோதக் கட்டுரைகள்'' – தருமை ஆதீனம் – 1944.

8) ''சிவஞானபோதம் - பாண்டிப் பெருமாள் விருத்தி''; திருவாவடு துறை ஆதீனம் – 1950.

9) ''சிவஞானபோத மூலமும் சிவஞான சுவாமிகள் சிற்றுரையும்''; ஔவை சு. துரைசாமி பிள்ளை பதிப்பு; அண்ணா மலைப் பல்கலைக்கழக வெளியீடு – 1968.

10) ''சிவஞானபோத ஆராய்ச்சி'' மறை மலைஅடிகள்; சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம் – 1958.

11) ''சைவசித்தாந்தத்திறவு''; க. வச்சிர வேல் முதலியார்; மதுரை காமராசர் பல்கலைக்கழகம் – 1980.

(Siva Gnana Mapadiyam - K. Vajravelu Mudaliar - நூலிலிருந்து எடுக்கப் பட்டது).

2.4

சிவஞானமாபாடியம் பதிப்புகள்

பால்வண்ணம்பிள்ளை பதிப்பு, சமாஜப் பதிப்பு, கழகப்பதிப்பு அனைத்துமே சிவஞான முனிவரின் பேருரையினை அப்படியே வெளியிட்டன. இதனைப் புரிந்து கொள்வது பெரிதும் கடினம். 1991-ஆம் ஆண்டில் வெளிவந்த தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பில் சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் தெளிவான முறையில் விளக்கம் தந்துள் ளார்கள். இதனை படித்தால் பேருரையை எளிதில் புரிந்து கொள்ளலாம். ஆனால் இதில் முனிவரின் உரை இடம் பெற வில்லை. எனவே முனிவரின் பேருரை யையும் இதனையும் ஒருங்கு வைத்துப் பார்க்க வேண்டும். 1994-ஆம் ஆண்டில் சி.சு. மணி அவர்கள் முனிவரின் உரையைப் பகுதி பகுதியாக வெளியிட்டு அதன் கீழ் தனது விளக்கவுரையையும் தந்துள்ளார். இந்த இரண்டு நூல்களும் முனிவரின் பேருரையைப் புரிந்து கொள்ள உதவும் பெரும் படைப்புகள் ஆகும். 1985-ஆம் ஆண்டில் க. வச்சிரவேல் முதலியார் எழுதி வெளியான ஆங்கில மொழி பெயர்ப்பும் முனிவர் உரையைப் புரிந்து கொள்ளத் துணை நிற்பது ஆகும். இம்மூன்றும் மாபாடிய விளக்கவுரை வரலாற்றில் பெரும் சாதனை ஆகும்.

2.5

மாபாடியப் பதிப்பு வரலாறு

1) சூரியனார் கோயில் ஆதீனப் பதிப்பு; இலக்கணச்சுவாமிகள் எனப்படும் ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரன் அவர்கள் நெருக்கடியான நிலையில் உடனே திருப்பித் தர வேண்டிய கட்டாயத்தில் ஓர் அறையின் மறை வில் பழங்கால விளக்கின் உதவி யால் மூலப்படியைப் பார்த்து எழுதிய படி ஆகும். இவர்கள் இவ்வாறு செய் திருக்கவில்லையென்றால் மாபாடி யமே நமக்குக் கிடைத்திருக்காது – 1921.

2) யாழ்ப்பாணம் வண்ணை நகர்ச் சுவாமி நாத பண்டிதர் பதிப்பு; மாபாடியத்தை யும், சிற்றுரையையும் சேர்த்துப் பதிப்பித்தார்.

3) சைவசித்தாந்த மகாசமாஜம் – 1936, 2000.

4) சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் – 1936.

5) "Sivagnana Mapadiyam"; K. Vajravelu Mudaliar - Madurai Kamarajar University - 1985.

6) உலகத்தமிழ்க் கல்வி இயக்கம் – 1986.

7) ''சிவஞானபோத மாபாடியப் பொருள் நிலைவிளக்கம்''; சி. அருணைவடிவேல் முதலியார். விளக்க உரை மட்டுமே உள்ளது; முனிவரின் பேருரை இடம்பெற வில்லை. தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு – 1991.

8) பேருரையும், சி.சு.மணியின் விளக்கமும்; முனிவரின் உரையி லிருந்து ஒரு பகுதி, விளக்கம் எனக் கற்போருக்கு உதவியாக உள்ளது. திருநெல்வேலி அருள்நந்திசிவம் அருள்பணி மன்றம் வெளியீடு – முதற்பதிப்பு - 1994, இரண்டாம் பதிப்பு - 2002.

2.6

சிவஞானபோதம் பற்றிய சில நூல்கள்

1) சிவஞான போத வினா விடை; ஆசிரியர் - விருதுநகர் சிவஞான யோகிகள்; வெளியிட்டவர் – சைவப் பிரகாச அச்சகம், தூத்துக்குடி.

2) கருத்துரை விளக்கம்; ஆசிரியர் – காஞ்சிபுரம் ஆலாலசுந்தரம் பிள்ளை; வெளியிட்டவர் – ராஜாராம் செட்டியார்.

3) சிவஞான போத உரை; ஆசிரியர் – சிவகுருநாத பிள்ளை; தூத்துக்குடி. வெளியிட்டவர் – சைவ சித்தாந்த சபை, தூத்துக்குடி – 1930.

4) சிவஞானபோத உரை; ஆசிரியர் – சபா. சிவப்பிரகாசம் பிள்ளை; வெளியிட்டவர் – தில்லை திருமுறைக்கழகம் – 1950.

5) சிவஞானபோத உரை; ஆசிரியர் – சிதம்பரம் சுவாமிகள்; வெளியிட்டவர் – முக்தானந்த சுவாமிகள் – 1955.

6) சிவஞானபோதம்; ஆசிரியர் – சின்மயானந்த சுவாமிகள்; வெளியிட்டவர் – மினர்வா அச்சகம், மதுரை – 1957.

7) சிவஞான போதம்; ஆசிரியர் ஸ்ரீனிவாசாசாரியா; வெளியிட்டவர் – திருவாவடுதுறை ஆதீனம் – 1969, 1972-73.

8) ''சிவஞானபோதத் தெளிபொருள்''; ஆசிரியர் – ந.ரா. முருகவேள்; தருமபுர ஆதீனம் – 1977.

9) ''சிவஞானபோதம் – உரைநடை (நான்கு தொகுதிகள்; ஆசிரியர் – த.ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை; வெளியிட்டவர் – திருவாவடுதுறை ஆதீனம் – 1969, 1972-73.

(துணை நூல்கள் :

1) ''சித்தாந்த சாத்திரங்கள்'' கட்டுரைத் தொடர்; மு. அருணாசலம்; 1982-83-இல் குமரகுருபனில் வெளியானது.

2) ''சித்தாந்த சாத்திர முதல் பதிப்பு'' – மு. அருணாசலம்; ''சித்தாந்தம்'' இதழ், வைகாசி. 1965.

3) ''Sivagnana Mapadiyam: K. Vajravelu Mudaliar; 1985''.

4) ''சிவஞான முனிவர் உரைத்திறன்''; க. விநாயகம்.

5) திருப்பனந்தாள் காசி மட வெளியீட்டுப் பட்டியல்; சிவஞான போதம்'' – கு.சுந்தரமூர்த்தி விளக்கம்.

6) டி.என். இராமச்சந்திரன் நூலகம்.)

2.7

பதினாறாம் நூற்றாண்டில் வெளிவந்த பிற உரைகள்

1) திருக்களிற்றுப்படியார், திருவுந்தியார் - நமச்சிவாயத்தம்பிரான் உரை - ஆண்டு 1677.

2) சிவஞானசித்தியார் - சுபக்கஉரை - மறைஞானதேசிகர்.

3) சித்தியார் உரை - சிவாக்கிரக யோகிகள் - மணிப்பிரவாளத்தில் உள்ள ஒரே உரை.

4) சிவப்பிரகாச உரை - நந்தி சிவாக்கிரக யோகிகள்.

5) சித்தியார் உரை - சுபக்கம் - திருவண்ணாமலை ஞானப்பிரகாசர் - அறுவர் உரையுள் ஒன்று.

6) சித்தியார் சுபக்க உரை - நிரம்ப அழகிய தேசிகர்.

7) திருவருட்பயன் உரை - நிரம்ப அழகிய தேசிகர்.

8) சித்தியார் பரபக்க உரை - திருஒற்றியூர் ஞானப்பிரகாசர்.

9) சங்கற்பநிராகரண உரை - திருஒற்றியூர் ஞானப்பிரகாசர்.

10) சித்தியார் பரபக்க உரை - திருஒற்றியூர் தத்துவப் பிரகாசர்.

■■■

பெரும்பேர் பெட்டகங்கள்

1] பெரியபுராணப் பேருரை
– சி.கே. சுப்பிரமணிய முதலியார் 1937

2] திருமுறை ஒளிநெறி நூல்கள்
– வ.சு. செங்கல்வராய பிள்ளை 1946

3] ''பன்னிரு திருமுறை – உரை''
– ஸ்ரீ தருமையாதீனம் வெளியீடு 1953

4] ''திருமந்திர மாநாட்டு மலர்கள்''
– ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீன வெளியீடு 1954

5] ''ஆடல்வல்லான்'' முதலான மூர்த்த விளக்க நூல்கள்
– ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீன வெளியீடு 1967

6] தமிழ் இலக்கிய வரலாறு
– மு. அருணாசலம் 1969

7] இந்து கலைக் களஞ்சியம்
– இலங்கை அரசு 1990

[மேலே குறிப்பிடப்பட்டுள்ள நூல்கள் அனைத்தும் யாராலும் செய்ய முடியாத மகத்தான படைப்புகள் ஆகும். இவை ஒவ்வொன்றும் பல தொகுதிகளாக வெளிவந்தவை. முதல் தொகுதி வெளிவந்த ஆண்டே இங்கே குறிக்கப்பட்டுள்ளது.]

அணிசேர் அரும் நூல்கள்

1)	திருத்தொண்டர் புராண சூசனம் – ஸ்ரீ ஆறுமுகநாவலர்	1852
2)	மறைமலையடிகள் நூல்கள்	1898
3)	திரு.வி.க. நூல்கள்	1922
4)	ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் – உ.வே. சாமிநாதையர்	1938
5)	பெரியபுராண ஆராய்ச்சி – மா. இராசமாணிக்கனார்	1948
6)	சைவ சமய வளர்ச்சி – மா. இராசமாணிக்கனார்	1958
7)	பன்னிரு திருமுறை வரலாறு [இரண்டு பகுதிகள்] – க. வெள்ளைவாரணனார்	1962
8)	''தமிழ் இலக்கியத்தில் காலமும், கருத்தும்'' – ஆ. வேலுப்பிள்ளை	1969
9)	குன்றக்குடி அடிகளார் நூல்கள்	1973
10)	''பக்தி இலக்கியம்'' – ப. அருணாசலம்	1973
11)	''தமிழர் சமய வரலாறு'' – ஆ. வேலுப்பிள்ளை	1980
12)	''பெரியபுராணம் – ஓர் ஆய்வு'' – அ.ச. ஞானசம்பந்தனார்	1987
13)	''இந்தியச் சிந்தனை மரபு'' – நா. சுப்பிரமணியன்	1993
14)	''சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும்'' – தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்	1997
15)	''திருவாசகம் – சில சிந்தனைகள்'' – ஐந்து தொகுதிகள் – அ.ச. ஞானசம்பந்தனார்	1999

[பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் வெளிவந்த. சைவர்கள் போற்றிப் படிக்கவேண்டிய நூல்களின் பட்டியல்]

இரண்டாம் பகுதி

1. சைவ சமய நூல்கள் - ஆங்கிலம்

19-ஆம் 20-ஆம் நூற்றாண்டு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற் பாதிவரை *(1854)* சைவ சமயம் பற்றிய செய்திகள் வேற்று மொழியினருக்கு – வேற்று நாட்டாருக்குத் (தமிழ்மொழியினைத் தாய்மொழியாகக் கொண்ட இலங்கை, மலேசிய - தென்னாப்பிரிக்கா மக்கள் நீங்கலாக) தெரியாமலேயே இருந்து வந்தன. அதற்குப் பல காரணங்கள் உள. மொழி ஒரு பெரும் தடை. அதனையும் தாண்டித் தமிழ் மொழியைக் கற்று சைவநூல்கள் பற்றித் தெரிந்து கொள்ளலாம் என்று முன்வந்தால் சைவ சித்தாந்தக்கலைச் சொற்களைப் பற்றித் தானாகத் தெரிந்து கொள்ள முடியாது. அவை தனி அர்த்தம் பொதிந்தவை. அவற்றிற்கான அகராதிகளும் அக்காலத்தில் இல்லை. சைவசித்தாந்த அறிஞர்களிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாது. வெளிநாட்டாருக்குச் சைவம் பற்றிச் சொல்ல அக்காலச் சைவர்கள் கடுமையாக மறுத்தனர்; மறைத்தனர்.

சைவம் - சைவசித்தாந்தம் பற்றி முதன் முதலாக தமிழரல்லாதவர்களில் அறிய முன்வந்தவர்கள் வெளிநாட்டைச் சேர்ந்த கிறித்துவப் பாதிரிமார்களே ஆவர். சைவத்தின் மேன்மைக்காக அவர்கள் கற்கவில்லை. தங்கள் சமயத்தைத் தமிழ்நாட்டில் பரப்ப - தமிழ்ச்சூழல், தாய்மொழி, தமிழ் சமயமாகிய சைவம் பற்றி அறிய வேண்டிய கட்டாயம். அப்பொழுது தான் இந்தச்சூழலை எதிர்கொண்டு இதற்கான மறுப்பு வாதங்களை முன் வைத்துத் தங்கள் சமயத்தைப் பரப்ப இயலும். எனவே கிறித்துவப் பாதிரி மார்களின் ஆங்கில நூல்களில் காழ்ப் புணர்ச்சியும் கலந்து இருக்கும். எச்செயலையும் முழுமனதோடு அர்ப் பணித்து செயல்படும் தீவிரமும், ஆங்கிலம் - தமிழ் இருமொழிப் பயிற்சியும் கிறித்துவ பாதிரிமார்களிடம் இருந்தமையால் அவர்களது காழ்ப்புணர்ச்சியைத் தாண்டி அவர்களது மொழி பெயர்ப்புகள் சிறந்து விளங்குகின்றன. ஜி.யூ. போப் போன்ற பாதிரிமார்களும் இதே நோக்கத்தோடு மொழிபெயர்த்தாலும், சைவத்தின் மேன்மை, திருவாசகத்தின் உயர்வு போன்றவைகள் அவர்களை வென்று விட்டன எனலாம்.

19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலத்தில் சைவசித்தாந்த மொழி பெயர்ப்பு நூல்கள் எழுந்த சூழலை திரு. டி.என். இராமச்சந்திரன் தமது நூலில் ("Saiva Siddhantam" - Volume one) இவ்வாறு விளக்குகிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏழு ஆங்கில நூல்களே வெளிவந்தன. *1854*-ஆம் ஆண்டில் Rev Fr. Henry R. Hoisington எழுதிய "The Tattuva Kattalai - Sivagnana Botham and Sivaprakasam" என்ற நூலே ஆங்கிலத்தில் வெளியான முதல் சைவ சித்தாந்த மொழி பெயர்ப்பு நூல் ஆகும்.

இருநூறுக்கும் மேலான ஆங்கில நூல்கள் இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்தன. இதில் *60* நூல்கள் *1981-90* கால கட்டத்தில் வெளியாயின. இக்கால கட்டம் ஆங்கில நூல்களைப் பொருத்தவரை ஒரு பொற்காலம் என்றுகூடக் கூறலாம். *1984*-ஆம் ஆண்டு மே *11,12,13* ஆகிய மூன்று நாட்கள் தருமபுரத்தில் முதல் அனைத்துலகச் சைவசித்தாந்தக் கருத்தரங்கு நடந்ததன் விளைவு என்று கூட இதனைச் சொல்லலாம். இக்கருத்தரங்கினை ஒட்டி தருமபுரத்தில் "The International Institute of Saiva Siddhanta" என்ற நிறுவனமும் தோன்றியது. தொடர்ந்து *1986* -ஆம்

ஆண்டில் கோலாலம்பூரில் 2-ஆவது கருத்தரங்கமும், 1988-ஆம் ஆண்டில் காசியில் 3-ஆவது கருத்தரங்கமும் நிகழ்ந்தன. இக்கருத்தரங்குகளை ஒட்டி முன்னும் பின்னும் ஆங்கில நூல்கள் வெளிவந்தன. புதிதாக தோன்றிய Institute தனது பெயருக்கு ஏற்ப உலகத்தரத்திற் கேற்ற ஆங்கில நூல்களை வெளியிட்டது.

மேலும் இக்காலகட்டத்தில் *(1981-90)* பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம், International Society in California, நியூயார்க் நிறுவனம், Indiana University press, Universita Gregoriana, Roma, Manchester University Press, Princeton University Press, University of Pennsylvania போன்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களும் நிறுவனங்களும் சைவ சமயம் - சைவசித்தாந்தம் பற்றிய ஆங்கில நூல்களை வெளியிட்டன. *1983*-ஆம் ஆண்டில் வெளிவந்த "Experiencing Siva" என்ற நூல் பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் 1973-ஆம் ஆண்டில் நடைபெற்ற கருத்தரங்கத் தொகுப்பாகும். இந்நூலைப் பொன் போல போற்ற வேண்டும் என்பார் திரு.டி.என். இராமச்சந்திரன். இந்நூலின் கட்டுரையாளர்கள் அனைவரும் (வ.ஆ.தேவ சேனாபதி தவிர) மேனாட்டவர்களே. ஆரம்ப காலத்தில் இருந்த காழ்ப்புணர்ச்சி மறைந்து சைவ சமய நூல்களின் மேன்மையை மேனாட்டு அறிஞர்கள் பறைசாற்றும் முறையில் இக்காலகட்ட நூல்கள் அமைந்துள்ளன.

சைவ சமய ஆங்கில வெளியீடுகள் தமிழ்நாட்டிற்கு அடுத்ததாக இலங்கையிலிருந்து நிரம்ப வெளிவந்துள்ளன. மலேசியா, தென்னாப்பிரிக்காவிலிருந்தும் ஆங்கில நூல்கள் வெளிவந்தன. சுவாமி சிவநந்தி (பூர்வாசிரமப் பெயர் ஞான சூரியன்) அவர்கள் இலண்டனில் மெய்கண்டார் ஆதீனம் நிறுவிய பின் இலண்டனிலிருந்தும் ஆங்கில நூல்கள் வெளிவரலாயின.

இந்திய, குறிப்பாகத் தமிழ்நாடு, மற்றும் மேனாட்டுப் பல்கலைகழகங்களுக்கு அடுத்துத் தருமையாதீனம் மற்றும் தருமையாதீனத்தோடு தொடர்புடைய The International Institute of Saiva Siddhanta பல ஆங்கில நூல்கள் (20-க்கும் மேலே) வெளியிட்டன.

தமிழ்நாட்டு அறிஞர்களைப் பொருத்தவரையில் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் திரு.ஜெ.எம். நல்லசாமிப் பிள்ளை அவர்களும் பிற்பகுதியில் திரு. டி.என். இராமச்சந்திரன் அவர்களும் அதிக நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளனர். மற்றும் வ.ஆ. தேவசேனாபதி, மு. அருணாசலம், நல். முருகேச முதலியார், கொ. நீ. சிங்காரவேலு, கே. சிவராமன், கே.எம். பாலசுப்பிரமணியம், கே. வச்சிரவேலு முதலியார் ஆகியோர் 2, 3 அதற்கு மேலும் நூல்கள் வெளியிட்டுள்ளனர்.

வெளிநாட்டு அறிஞர்களைப் பொருத்தவரை Rev Henry Hoisington, G.U. Pope, Stella Kramrisch, Gordon Mathews, John H.Piet, J.W.V. Curtis, Dr. Glenn E. Yocum, Norman Cutler, David Dean Shulman ஆகியோரின் பங்களிப்புகள் கணிசமானவை.

ஆங்கிலத்திற்கு அடுத்து ஜெர்மன் மொழியில் சில நூல்கள் வெளிவந்துள்ளன. ஜெர்மனியில் H.W. Schomerus-ன் "Der Saiva Siddhanta" குறிப்பிடத்தக்க நூல் ஆகும். இவரே சிவஞான சித்தியாரையும், திருவாசகத்தையும் மொழி பெயர்த்துள்ளார். இந்தியிலும் சில மொழி பெயர்ப்புகள் வெளிவந்துள்ளன.

உள்ளடக்கத்தைப் பொருத்தவரை சைவ சித்தாந்தமே முதன்மை வகிக்கிறது. சைவ சித்தாந்தம் என்ற பொதுத் தலைப்பில் 45-க்கும் மேலான நூல்களும், மெய்கண்ட சாத்திர நூல்களின் நேரிடையான மொழி பெயர்ப்பாக 29-க்கும் மேலான நூல்களும் வெளிவந்துள்ளன. மெய்கண்ட சாத்திர நூல்களில் சிவஞானபோதம் மொழி பெயர்ப்பு மட்டும் 10-க்கும் மேலாக வெளி வந்துள்ளன. சிவஞான போதத்திற்கு அடுத்து ''திருவருட்பயன்'' (6-க்கும் மேலான நூல்கள்) அதிகம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

சாத்திரநூல்கள் மொழி பெயர்க்கப் பட்டுள்ள அளவு திருமுறைகள் மொழி பெயர்க்கப்படவில்லை. திருமுறைகள்

அனுபவப் பிழிவு என்பதனால் இருக்கலாம். திருமுறைகளில் திருவாசகம் (5க்கும் மேல்), பெரியபுராணம் (3க்கும் மேல்), திருமந்திரம் (2க்கும் மேல்), திருக்கோவையார் (1) ஆகியவையே முழுமையாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. சுந்தரர் தேவாரம், அப்பர் தேவாரம் காரைக்கால் அம்மையார், பட்டினத்தார் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

இவையல்லாமல் இந்து சமயம் பற்றி பொதுவாகவும், சைவ சமயம், சைவ சமயவரலாறு, விழாக்கள், கடவுளர்கள் எனச் சிறப்பு நிலையிலும் நூல்கள் வந்துள்ளன.

1969-70-ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சிவபுராணம் 4 தொகுதிகளும், 1973-ஆம் ஆண்டில் வெளியான லிங்க புராணம் இரண்டு தொகுதிகளும் அளவிலும் உருவாக்கத்திலும், உள்ளடக்கத்திலும் மகத்தான படைப்புகள் ஆகும். இதன் ஆசிரியர் ஜெ.எல். சாஸ்திரியும், வெளியிட்ட மோதிலால் பனார்சிதாஸ் புத்தக நிறுவனமும் பாராட்டுக்குரியவர்கள் ஆவர்.

இதே போல 1990-ஆம் ஆண்டில் வெளியான ''ஆகமகோஷா'' - 12 தொகுதிகள் சைவர்களின் கண்களைத் திறந்துவிட்டன எனலாம். ஆகமங்கள் வட மொழியில் இருந்தமையால் சைவர்களுக்குத் தெரியாமலேயே இருந்து வந்தன. விற்பனையைப் பற்றிக் கவலைப்படாமல் ஆகமங்கள் பற்றி 12 தொகுதிகள் வெளி வந்தமை ஒரு திருப்பு முனையாகும். இதன் ஆசிரியர் எஸ்.கே. இராமச்சந்திரர் அவர்களும், வெளியிட்ட கல்பதரு ஆய்வுக் கழகத்தாரும் போற்றுதலுக்குரியவர்கள் ஆவார்கள்.

1

The Siddhanta, The Universal Science, Evolution and Religion

R. Shanmugha Mudaliar 1904

சைவசித்தாந்தம் வலியுறுத்தும் முப்பத்தாறு தத்துவங்களை அறிவியல் ரீதியாக ஆசிரியர் விளக்குகிறார்.

முதல் தத்துவம் : பூமி

மண் நீரில் கரைந்து போகிறது. சிலமணி நேரம் தெளிய வைத்தால் மணல் துகள்கள் பாத்திரத்தின் அடியில் சேர்ந்து விடுகின்றன. எனவே மண் இல்லாமல் போவது இல்லை. பருமையான மண் அதனைவிட நுண்மையான நீரில் மறைந்து போகிறது.

சைவ சித்தாந்தத்திலும் ''பூமி'' என்பது முதல் தத்துவம் ஆகும். தத்துவம் என்பது என்றும் உள்ள பொருள் ஆகும். இருக்கும் எந்தப் பொருளும் அழியாது; இல்லாத எந்தப் பொருளும் தோன்றாது.

உயிர்ப்பொருள் (ஜீவராசிகள்) தோன்றுவதற்குமுன் திடப்பொருள் தோன்றி விடுகிறது.

புல், புதர், செடிகள், மரங்கள் ஆகியன தாவர வர்க்கம் ஆகும். மண் இல்லாமல் தாவர வர்க்கம் இல்லை. தாவரங்கள் தோன்றுவதற்கு முதல் காரணம் விதைகள் அல்லது வேர்கள் ஆகும்; மண் அல்ல. விதை உயிர் பெற்றது எவ்வாறு என்று விஞ்ஞானிகளாலும் சொல்ல முடியவில்லை. விதைகள், வேர்கள் Matter-லிருந்து (Earth) உருவானவை, விதைகளும் வேர்களும் ஆன்மாவிற்காக குமிழிகள் (Vesicles) அமைத்துக் கொள்கின்றன.

Matter என்பது முப்பத்தாறு தத்துவங்கள் ஆகும். முப்பத்தாறு தத்துவங்களும் முப்பத்தாறு அடுக்குகள் ஆகும். இந்த அடுக்கில் முதல் தத்துவம் பூமி ஆகும்.

படைப்பு என்பது நுண்மையான பொருளை (Matter) பருமையாகப் பார்வைக்குக் கொண்டு வருவதே.

உயிர்களின் பரிணாம வளர்ச்சியில் முதல் தத்துவமான பூமி தொடக்கம் என்பதினால், இதற்கு முந்தைய நிலையை (பருமை வடிவம் பெறுவதற்கு முன்நிலை) சைவ சித்தாந்தத்தில் ''கேவல நிலை'' (அசைவற்ற நிலை) என்பர். அந்த நிலைக்கு அதிகாரி விநாயகர் ஆவார். பரிணாம வளர்ச்சியைத் தொடக்கி வைக்க தயார் நிலையில் விநாயகர் இருப்பார்.

நிலத்தின் பண்பு மணம்; நீரின் பண்பு சுவை; தீயின் பண்பு ஒளி(காட்சி); காற்றின்

பண்பு தொடு உணர்ச்சி; ஆகாயத்தின் பண்பு ஓசை. நம்முடைய உடம்பு பஞ்ச பூதங்களால் ஆனது.

படைப்பினையே எடுத்துக் கொள்வோம். குழந்தை உருவாகும் முன் முதல் மாதத்தில் நுண்ணிய ஜெல்லி போன்ற வழுவழுப்பான, சிறிது ஒளி புகக்கூடிய, சாம்பல் நிறத்திய திடப் பொருளே குழந்தையாகிறது. இத்திடப் பொருள் முதல் தத்துவமான நிலம் ஆகும்.

தாவர வர்க்கம் கரி இல்லாமல் வளர்ச்சி பெறாது. கரியின் பண்பு மணம். அதுவே முதல் தத்துவமாகிய நிலத்தின் பண்பு.

இரண்டாம் தத்துவம் : நீர்

சுருக்கம் :

ஒவ்வொரு தத்துவத்தையும் ஆசிரியர் விரிவாகவே விவரிக்கிறார். சுருக்கம் மட்டும் இங்கே தரப்பட்டுள்ளது.

1) நிலத்தத்துவத்தை விட நீர் நுண்ணியது.
2) நீர்த்தத்துவத்தில் உயிரின் பரிணாம நிலை சங்குப்பூச்சி (ஈரறிவுயிர்).
3) நீர்த்தத்துவம் நிலத்தைப் பருமையாகவும் நுண்மையாகவும் எல்லாப் பகுதியிலும் ஊடுருவியுள்ளது.
4) சங்குப்பூச்சி தொடு உணர்ச்சியும், சுவையுணர்ச்சியும் உடையது.

விளக்கம் :

நீரைச் சூடுபண்ணினால் ஆவியாகிறது. அதே குடுவையை ஈரத்துணியால் முழுமையாக மூடினால் நீர் மீண்டும் சேகரம் ஆகிறது.

பரிணாம வளர்ச்சியில் ஓரறிவுயிரான தாவர வர்க்கத்திலிருந்து ஈரறிவுயிரான மிருகவர்க்கமாக பரிணமிக்க நீர்த்தத்துவம் செயல்படுகிறது. புரோட்டா பிளாசத்தின் வடிவங்கள் கரி, ஹைட்ரஜன், பிராணவாயு, நைட்ரஜன் ஆகிய மூலகங்களைக் கொண்டு உள்ளன. மிருகங்கள் இத்தகைய புரோட்டா ப்ளாசம்களால் தான் உயிர் வாழ்கின்றன. எனவே கரி, நைட்ரஜன் (நிலத்தத்துவம்), ஹைட்ரஜன், ஆக்சிஜன் (நீர்தத்துவம்) ஆகியன மிருகங்களுக்கு அத்தியாவசியத் தேவை ஆகின்றன. தாவர உயிர்கள் மேன்மையுறச் செய்ய நீர்த்தத்துவம் செயல்படுகிறது. சுவை யுணர்ச்சிக்கான உறுப்பு வளர்ச்சி பெறுகிறது. இதன் உடனடி விளைவு மிருகவர்க்கத்தின் தோற்ற மாம்.

மீண்டும் கரு உருவாகும் உதாரணத்தையே எடுத்துக் கொள்வோம். கரு உற்பத்தியில் ஆறாம் மாதம் வரை குழந்தை வளர்ச்சி தாவர நிலைதான். ஏழாம் மாதத்தில் தான் குழந்தையின் மூக்கு முழு வளர்ச்சி அடைகிறது. குழந்தைக்கு இந்த நிலையில் நுகர் உணர்வும், சுவையுணர்வும் வந்து விடுகின்றன. ஏழாம் மாதத்தில் குழந்தை உயிர் பிழைக்கும் என்பது மருத்துவநூல். உயிர் பிழைக்க மூச்சு விடுதலும், உண்ணுதலும், சுவை யறிதலும் நிகழ வேண்டும். இரண்டுமே கருவிற்கு வந்துவிட்டது. கரு வளர்ச்சியில் நிலத்தத்துவமும், நீர்த்தத்துவமும் செயல்பட ஆரம்பித்து விட்டன. இந்த நிலையில் குழந்தை சங்குப்பூச்சி நிலைக்கு வந்து விட்டது.

நீர்த்தத்துவத்தின் அதிகாரி திருமால் ஆவார். பிரபஞ்சத்தில் பரிணாம வளர்ச்சிக்கு முந்தைய நிலையில் (கரு வளர்ச்சியில் மூலாதாரத்தில்) விநாயகரும், நிலப் பகுதியில் (கரு வளர்ச்சியில் சுவாதிட்டானத்தில்) பிரமனும், நீர்ப் பகுதியில் (கரு வளர்ச்சியில் மணிபூரகத்தில்) திருமாலும் ஆட்சி செய்கிறார்கள்.

மூன்றாவது தத்துவம் : நெருப்பு

சுருக்கம் :

1) நீர்த்தத்துவத்தைவிட நுண்மையான தத்துவம் ''நெருப்பு'' ஆகும்.
2) உயிர்களின் பரிணாம வளர்ச்சியில் நெருப்பு தத்துவத்தில் உள்ள உயிர்களின் வடிவம் நாலறிவுயிரான ''வண்டு'' ஆகும்.
3) நெருப்புத் தத்துவம் நீர்த்தத்துவத்தில் எல்லாப் பகுதியிலும் ஊடுருவி இருக்கின்றது. நீர்த்தத்துவம் மூலமாக நிலத்தத்துவத்திலும் ஊடுருவியுள்ளது.

4) வண்டு தொடு உணர்ச்சி, சுவையுணர்வு, பார்வை கொண்டது.

நெருப்பைக் காற்று அணைக்கும். காற்று நெருப்பை உண்டாக்கும்; போக்கும். எது ஒன்று உருவாக்குதலையும், போக்குதலையும் செய்கிறதோ அது தாய்த்தத்துவம் ஆகும். காற்று தாய்த்தத்துவம் ஆகும்.

குழந்தை நிலையில், குழந்தை பிறந்த நிலை இதுவாகும். குழந்தை பிறந்தவுடன் முதற்செயல் பார்ப்பது ஆகும். நெருப்புத் தத்துவத்தின் செயல்பாட்டில் உருவான கண்ணின் செயல் ஆகும் இது.

நெருப்பு தத்துவத்தின் அதிகாரி உருத்திரன் ஆவார். குழந்தை நிலையில் அனாகத சக்கரம்.

நான்காம் தத்துவம் : காற்று

கடல் அலைகளால் காற்று உருவாகிறது. கடல் அலை ஓயும்பொழுது காற்று எங்கு தங்குகிறது? எங்கு இயங்குகிறது. வெளி இல்லாமல் இயக்கம் இல்லை. எனவே வெளி அல்லது ஆகாயம் காற்றின் அடிப்படைக் காரணமாகவும், காற்று இயங்கவும் அடிப்படையாக உள்ளது. காற்றில் இயக்கம் இருக்கிறது. ஆகாயத்தில் வேகம் இருக்கிறது.

உயிர் வளர்ச்சியில் காற்றின் முக்கியத்துவம் கூறவேண்டுவதில்லை. காற்று இல்லாமல் ஒரு உயிரும் வாழ முடியாது.

காற்றின் தன்மாத்திரை (நுண் மூலம்) தொடு உணர்வு ஆகும். காற்றுத் தத்துவம், நெருப்பு, நீர், நிலத்தில் முழுமையும் வியாபித்துள்ளது. சைவ சித்தாந்தத்தில் பிரபஞ்ச அமைப்பின் மூல காரணம் ஒலி ஆகும். ஒலி ஆகாயத்தில் செயல்படுகிறது. சிதம்பரத்தில் நடராஜர் திருக்கரங்களில் இருக்கும் உடுக்கை ஒலியின் குறியீடு ஆகும். காற்றுத் தத்துவத்தை ஆள்பவர் மகேசுவரன்.

குழந்தை வளர்ச்சியிலும் காற்று இல்லாமல் எதுவும் இல்லை. ஆறாம் மாதத்தில் காற்றுத்தத்துவம் முழுமை அடைகின்றது.

‘குழந்தை நிலையில் காற்றுப் பகுதிக்கு தொடர்புடையது விசுத்தி சக்கரம் ம்.

ஐந்தாவது தத்துவம் : ஆகாயம்

கீழ் அடுக்கில் உள்ள தத்துவங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகியவற்றிற்கான இடத்தைத் தருவது ஆகாயம். ஆகாயத்தின் பண்பு ஓசை. பரப்பிரம்மத்தின் ஒலியை எதிரொலிக்கும் பண்புடையது.

மிருகங்கள், பறவைகள் இதன்கண் அடங்கும். மிருகங்களின் உறுப்பு காது ஆகும்.

நம்முடைய பிரார்த்தனைகள் இறைவனிடம் செலுத்தும் ஊடகம் ஒலி. இதனையே அருளாளர்கள் ‘‘பன்மாலையிலும் சொன்மாலை உயர்வு’’ என்றனர். இறைவனும் ‘‘நாதன்’’ எனப்பட்டான். ஆகாய தத்துவத்தை ஆள்பவன் மகேசுவரன்.

குழந்தை பிறந்தவுடன் ‘‘அழுகிறதா’’ என்று பார்த்தால்தான் உயிர் இருக்கிறது என்று புரியும். இது ஆக்ஞா சக்கரம் ஆகும்.

ஆறாவது தத்துவம் : முகர்தல்

ஏழாவது தத்துவம் : சுவை

எட்டாவது தத்துவம் : பார்வை

ஒன்பதாவது தத்துவம் : தொடுதல்

பத்தாவது தத்துவம் : கேட்டல்

பதினோராவது தத்துவம் : கருவாய்

பனிரெண்டாவது தத்துவம் : எருவாய்

பதின்மூன்றாவது தத்துவம் : கைகள், குழந்தை முதலில் கைகளால் தவழ்கிறது.

பதினான்காவது தத்துவம் : கால்கள், குழந்தை இப்பொழுது நடக்க ஆரம்பிக்கிறது.

பதினைந்தாவது தத்துவம் : வாய். இவை ஐந்தும் செயற் பொறிகள் ஆகும்.

செயற் பொறிகளை விட அறிவுப் பொறிகள் உயர்ந்தவை. எனவே படி நிலையில் அடுத்து அறிவுப் பொறிகள் வைக்கப்பட்டுள்ளன.

பதினாறாவது தத்துவம் : மூக்கு

பதினேழாவது தத்துவம் : நாக்கு

பதினெட்டாவது தத்துவம் : கண்

பத்தொன்பதாவது தத்துவம் : உடம்பு [தோல்]

உடம்புக்கு அடுத்து காது வைப்பானேன்? காது பிரபஞ்சத் தோற்றத்தின் மூல காரணமான ஒலியோடு தொடர்புடையது. எனவே காது 'உடல் தத்துவத்'திற்குத் தாய்தத்துவம் ஆகிறது. மேலும் உடம்பு எலும்புகள், நரம்புகள், பிராணன் போன்ற வாயுக்களால் ஆனது. உடம்பினைத் தாங்கி நிற்கும் தச வாயுக்கள், மூன்று நாடிகள் (மூவகைக் காற்றுப் பாதை) இல்லையானால் உயிர் வாழ முடியாது. காற்று தத்துவமே உயிரைப் பிடித்து நிறுத்துவது. குழந்தை உடல் சுகத்தை மட்டும் விரும்புகிறது. இன்னும் மூளை வளர்ச்சி அடையவில்லை.

இருபதாவது தத்துவம் : காது ஆகும்.

இருபத்தோராவது தத்துவம் : சித்தம்

''சித்'' என்பது அறிவு அல்லது அறியும் திறன். உயிர் ஐம்பொறிகளைக் கொண்டு அறிந்ததை நினைக்கிறது. இது ''சித்தம்'' ஆகும். சித்தம் சேகரித்து பெற்றதை மனம் சரியா, தவறா என்று ஐயுற்று ஆய்கிறது. தனக்குத் தெரியாத புதியவர் வந்தால் குழந்தை அவரிடம் போக மறுக்கிறது. தனக்குப் பிரியமான தாய், தந்தையிடம் போகிறது. அவர்கள் தனக்குப் பிடித்த மானவர்கள் என்று நினைக்கிறது. இது குழந்தையின் ஒரு வயதில் தொடங்குகிறது.

இருபத்து இரண்டாவது தத்துவம் : மனம்

நான் பார்த்தது சரியா? தவறா என்று ஐயுறுவது ''மனம் எனும் தத்துவம்''. கண்ணால் பார்த்து கருத்தில் சேகரிப்பது சித்தம். அதனை ''அதுவாக இருக்குமா? இதுவாக இருக்குமா?'' என்று மீண்டும் மீண்டும் நினைப்பது மனம். மூன்றாவது நிலையில் தான் கண்ட பொருள் இது என்று தவறாக நினைக்கிறது. இது அகங்காரம். நான்காவது நிலையில் காரண காரியங்களோடு ஆராய்ந்து இதுதான் என்று முடிவு கட்டுகிறது. இது புத்தி.

ஒருவன் முதன் முதலாக கப்பலைப் பார்க்கிறான். பார்த்து அதனைப் பற்றி சிந்திக்கிறான். இது சித்தம். அது என்னவாக இருக்கும் என்று மீண்டும் மீண்டும் சிந்திக்கிறான். இது மனம். ஒரு வேளை வீடாக இருக்கும் எனத் தவறாக முடிவு கட்டுகிறான். இது அகங்காரம். நான்காவது நிலையில் கடல், அதன் சூழ்நிலை இவற்றை ஆராய்ந்து ''இது கப்பல்'' என்று சரியாக முடிவு கட்டுகிறான். இது புத்தி.

சிந்தித்தலுக்கு அடுத்து நிகழ்வது ஐயுறுதல். எனவே இது 22-ஆவது தத்துவம்.

இருபத்து மூன்றாவது தத்துவம் : அகங்காரம்

அகங்காரத் தத்துவத்தில் தன் முனைப்பு உருவாகிறது. ''யான், எனது'' உருவாகின்றது. ''நான் செய்தேன்'' ''இது எனது பொருள்'' என்பதெல்லாம் இதில் அடங்கும். இது ஆன்ம வளர்ச்சிக்கு மிகவும் தேவையான ஒன்று. தத்துவங்களிலிருந்து ஆன்மா விடுதலை பெற இது தேவையாகிறது. தத்துவங்களிலிருந்து விடுபட ஆன்மா செம்பொருளை நாட ஆரம்பிக்கிறது.

இருபத்து நான்காவது தத்துவம் : புத்தி

''புத்தி'' - விழிப்படையச் செய்தலை வேர்ச் சொல்லாகக் கொண்டது. சித்தம், மனம், அகங்காரம், புத்தி என்ற நான்கு அந்தக் கரணங்களுக்குத் தலைமை வகித்து ஆன்மாவை விழிப்படையச் செய்து அகங்காரத்திலிருந்து விடுவிக்கிறது. புத்தி காரண காரியத்தை அறியும் கருவி. அகங்காரம் குதிரை; புத்தி குதிரையோட்டி. குதிரை தவறான வழியில் சென்றால் குதிரையோட்டி வழி மாற்றிச் சரியான வழியில் போகச் செய்வான். விரைவான பயணத்திற்குக் குதிரை தேவை. ஆனால் சில சமயத்தில் குதிரை தலைகால் தெரியாமல் ஓட ஆரம்பித்துவிடும். யான், எனது என்பவற்றை வளர்ப்பதற்கு அகங்காரம் தேவையே. இருந்தாலும் கவனத்துடன் கட்டுப்படுத்த வேண்டும். புத்தி அந்த வேலையைச் செய்கிறது.

குழந்தைக்கு 12 வயது வந்து விட்டது. நான், எனது எனும் அகங்காரம் முழு ஆட்சியில் உள்ளது. குழந்தை வளர்ச்சி பெற்று – உலகாயத நிலையில் – உலக இன்பத்தில் உழல ஆரம்பிக்கிறது.

இந்தத் தத்துவத்துடன் அறிவியலின் பங்கு முடிந்து விடுகின்றது. இதற்குப்பிறகு அறிவியலுக்கு வேலை இல்லை.

இருபத்து ஐந்தாவது தத்துவம் : புருடன்

புருடன் என்பது உடம்பில் தன்னை மீண்டும் இருத்திக் கொள்ளும் ஒன்று ஆகும். இதனையே நுண்ணுடம்பு என்றும் சொல்வர்.

ஒவ்வொரு மனிதனும் 'என்னுடைய கை' 'என்னுடைய முகம்' என்று சொல்வான். யார் அந்த 'நான்', 'எனது' என்றெல்லாம் சொல்வது? உடம்பு அல்லாத – புத்தியிலிருந்து நிலம் வரை உள்ள 24 தத்துவங்கள் அல்லாத – ஒன்றாகும் அது. உறக்க நிலையில் அந்தக் கரணங்கள், கர்மேந்திரியங்கள், ஞானேந்தி ரியங்கள் செயல்படுவது இல்லை. மூச்சு மட்டும் இருக்கின்றது. யோக நிலையில் மூச்சும் கட்டுப்படுத்தப்படுகிறது. மூச்சும் கட்டப் பட்ட நிலையில் உடம்பை இயக்கு வது யார் அல்லது எது? அதுவே புருடன்.

புருடன் என்றால் அறிவு. ஆனால் புருடனுடைய அறிவு குறைவுடையது. அறிவித்தால் மட்டுமே அறிவது. அப்படி அறிவிப்பது இறைவன் அல்லது பதி ஆகும்.

நான் ஏன் இந்த உடம்பினைப் பெற்றேன்? நான் ஏன் உலகக் கட்டில் துன்புறுகிறேன்? இவ்வுலகியலுக்கு என்ன காரணம்? இக்கேள்விகள் 'அராகம்' என்ற அடுத்த தத்துவத்தில் விளக்கப்படுகிறது.

இருபத்து ஆறாவது தத்துவம் : அராகம்

அராகம் என்பது விருப்பம் அல்லது ஆசை. இது புருடனில் ஆசையைத் தூண்டுவது ஆகும். இது புருடனின் அறியும் திறனைத் தூண்டுகிறது.

இருபத்து ஏழாவது தத்துவம் : வித்தை

வித்தை – அறிவு; புருடன் உலக பந்தத்தில் கட்டுப்பட்டுள்ளதின் காரணத்தை அறிதல். ஆசை அறிவினைத் தூண்டும். எனவே இருபத்து ஏழாவது தத்துவம். அறிவு செயல்படுத்தும்.

இருபத்து எட்டாவது தத்துவம் : கலை

கலை – அசைவு; கலாதத்துவம் புருடனை அசைத்துச் செயல்படுத்தும்.

இருபத்து ஒன்பதாவது தத்துவம் : நியதி

புருடனின் விருப்பம், அறிவு, செயல் ஒன்றன்பின் ஒன்றாக வளர்ச்சி அடைகின்றது. புருடன் செயல்படுகிற போது செயல்பாட்டின் காரணத்தை அறிய முடிகிறது. செயல்பாட்டின் காரணம் நியதி ஆகும். நியதி என்பது விதி அல்லது செயல்முறையின் நிலைத்த வரிசை. இறைவன் அருளால் எல்லாமே ஒரு ஒழுங்குபட்ட – நிலைத்த விதிமுறைப்படி நடக்கிறது. ஒவ்வொரு புருடனும் தன்னுடைய முந்தைய அறியாமையினால் – செயல்களால் (முற்பிறவி செயல்களும் கூட) – செயல்படுதல் (கருமத்தை நடத்துதல்) வேண்டும். இதுதான் வினைக் கோட்பாடு அல்லது கர்மா கோட்பாடு. நம்முடைய முந்தைய வாழ்க்கையின் செயல்கள் இன்றைய வாழ்வின் செயல்களை உருவாக்கும். இது புருடனுக்கு இறைவனால் நிர்ணயிக்கப் பட்ட நிலையான வரிசைக் கிரமமான செயல் ஆகும். இதுவே நியதி.

ஒவ்வொரு சமயமும் ஒரு குறிப்பிட்ட தத்துவத்தோடு நின்று விடுகிறது.

1) லோகாயதம் – நிலம் முதல் அகங்காரம் ஈறான இருபத்து மூன்று தத்துவங்கள்.

2) பௌத்தம் – புத்தி தத்துவத்தின் பரிணாமம்.

3) ஆருகம் – குணம் அல்லது மூலப்பிரகிருதியின் பரிணாமம்.

4) மாயாவாதம் – புருட தத்துவத்தின் பரிணாமம்.

5) மீமாம்சம் – அராக தத்துவத்திலிருந்து கலா தத்துவம் வரையிலான பரிணாம வளர்ச்சி.

6) பாஞ்சராத்திரம் – மாயா தத்துவத்தின் பரிணாமம்.

முப்பதாவது தத்துவம் : காலம்

காலத் தத்துவம் புருடனின் கர்மாவின் காலத்தை நிர்ணயிக்கிறது. இச்சை, அறிவு, செயல், நியதி, காலம் ஆகிய ஐந்தும் புருடன் தன் கர்ம வாழ்க்கையில் ஈடுபடவும், கர்மாவைத் தொலைக்கவும் இன்றியமையாது தேவைப்படுகிறது. இதனை ''பஞ்சகஞ்சுகம்'' என்பர். (பஞ்ச – ஐந்து; கஞ்சுகம் – சட்டை)

முப்பத்தோராவது தத்துவம் : மாயை

மாயை – அறியாமை; மறப்பதும், மறைப்பதுமாம்.

முப்பத்திரண்டாவது தத்துவம் : சுத்த வித்தை

சுத்த வித்தை – இறைவனைப் பற்றிய தூய அறிவு.

முப்பத்து மூன்றாவது தத்துவம் : மகேசுவரம்

மகேசுவரம் என்றால் தூய செயல். சிவபிரான் ஆன்மாக்களுக்காக படைப்பு முதலான ஐந்தொழில்களையும் செய்ய விருப்பப்படுதல்.

முப்பத்து நான்காவது தத்துவம் : சதாசிவம்

சதாசிவம் – எல்லையற்ற பேரொளி (நிரந்தரம்); பேரின்பம். புருடனுக்குப் பேரின்பம் அளிப்பது.

முப்பத்து ஐந்தாவது தத்துவம் : சக்தி

சக்தி – சிவபிரானின் தூய செயல்.

முப்பத்து ஆறாவது தத்துவம் : சிவம்

சிவம் – பரிவு, அன்பு, ஒளி; அறியாமையில் மூழ்கி இருக்கும் உயிர்களை மேல்நிலைக்கு உயர்த்தும் அன்பு. ''சிவம்'' அனைவர்க்கும் முடிவான குறிக்கோள் – இலட்சியம். அவர்க்கு உதவி சக்தியே. சிவத்தின் உடல் சக்தி. சக்தியும் சிவமும் இணைந்து செயல்படும்பொழுது சதாசிவம் என்கிறோம். சதாசிவத் தத்துவத்திலிருந்து இறைவனின் அனைத்து லீலைகளும் – சிவமும் சக்தியுமாகவே – இணைந்தே செயல்படுகின்றன. இதனை மகேசுவரம் என்பர். அனைத்து வடிவங்களும் தனியாகவோ சேர்ந்தோ இறைவனின் ஐந்தொழில்களைக் குறிக்கின்றன. அதுவே திருவைந்தெழுந்து மந்திரம். நடராஜர் திருவுருவமும் ஐந்தொழில்களைக் காட்டுகின்றன. நடராஜப் பெருமான் இடையறாது ஆடுகின்றார். அது பிரபஞ்ச நடனம். அதுவே உயிரின் பரிணாமம். ஆடல் வல்லானின் முடிவற்ற நடனம் இல்லை என்றால் பிரபஞ்சம் இல்லாது போகும்; பரிணாம வளர்ச்சியும் நின்று போகும். எனவே ஆடல்வல்லானிடம் அன்பு செலுத்துவோம்.

2

Studies in Saiva Siddhanta 1911

(ஆசிரியர் – ஜெ.எம். நல்லசாமிப் பிள்ளை; வெளியீடு – சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் (மறுபதிப்பு); பக்கங்கள் *– 360)*

சைவ சித்தாந்தம் பற்றிய *24* கட்டுரைகளைக் கொண்டது இந்நூல் ஆகும். "Siddhanta Deepika", The Reformer" பத்திரிகைகளில் – இதழ்களில் – வந்த கட்டுரைகளின் தொகுப்பு ஆகும்.

உண்மை விளக்கத்தின் மொழிபெயர்ப்புடன் தொடங்குகிறது. ''பிரும்மவாதி'' என்ற இதழில் வெளிவந்த "Wisdom and Worship" *(5.6.1897)* என்ற கட்டுரையினால் எழுந்த கருத்துக்களை "An another Side" என்ற கட்டுரையில் எழுதுகிறார். அதே இதழில் வெளிவந்த "God and the Brahman" என்ற தலையங்கம் – விவேகானந்தரின் உரை – இவற்றை அடியொற்றி "The Nature and the Divine Personality" என்ற கட்டுரை அமைந்து உள்ளது. மற்ற சமயங்களோடும், தத்துவங்களோடும் ஒப்பிட்டு "The Union of Indian Philosophies", "Saivism in relation to other Systems" என்ற இரு கட்டுரைகள் உள்ளன. அந்த நாளைய சிந்தனைகளோடு இணங்கியும், வேறுபட்டும் உடனுக்குடன் (up to date) ஜெ.எம்.என். தனது கருத்துக்களை வெளியிடுகிறார் என அறியும் பொழுது வியப்பாக இருக்கிறது.

சைவ சித்தாந்தம் கூறும் அத்வைதம் சங்கரரின் அத்வைதத்திலும் வேறுபட்டது என்பது இன்னுமொரு கட்டுரையின் கருப்பொருள் (Advaita according to Saiva Siddhanta), "Svetasvatara Upanishad" பற்றி ஒரு கட்டுரை உள்ளது.

3

Essentials of Hinduism in the light of Saiva Siddhanta 1913

(ஆசிரியர் – S.சபாரத்தின முதலியார், யாழ்ப்பாணம்; பக்கம் – 350)

இலங்கையிலிருந்து வந்த மற்றுமொரு கொடை இந்நூல் ஆகும். ஆசிரியரே முன்னுரையில் கூறுவது போல, இந்நூல் அறிஞர்களுக்கு எழுதப்பட்டது அன்று. சமய உண்மைகளைத் தெரிந்து கொள்ள விரும்பும் அடித்தள மக்களுக்காக எழுதப்பட்டது. *1913*-ஆம் ஆண்டிலேயே இப்படி ஒரு நூல் ஆங்கிலத்தில் எழுத வேண்டும் என்ற எண்ணம் ஒரு யாழ்ப்பாணச் சைவப் பெருமகனார்க்குத் தோன்றியிருக்கிறதே. அதனைப் பாராட்ட வேண்டும்.

இயல் - 1

இந்து சமயத்தின் பொதுநிலை

அரிய கருத்துக்கள் : சைவ சித்தாந்தம் என்றால் Established Truth என்று பொருள் ஆகும். சித்தாந்தம் வேதாந்தத்திற்கு முரண்பட்டது அல்ல. வியாசரின் வேதாந்த சூத்திரங்களுக்கு சித்தாந்த விளக்கம் கொடுத்தார்.

வேதாந்தம் வேதங்களை எடுத்துரைப்பது; சித்தாந்தம் ஆகமங்களை எடுத்துரைப்பது. ஆகமங்கள் வேதங்களின் உரை விளக்கம் ஆகும். சித்தாந்தம் வேதாந்தத்தின் உண்மையான திறவுகோல் ஆகும்.

சங்கரர் வேதத்திற்கு பாஷ்யம் எழுதுவதற்கு முன், ஸ்ரீ நீலகண்ட சிவாச்சாரியார் வேதாந்த சூத்திரங்களுக்கு சித்தாந்த பாஷ்யம் எழுதியுள்ளார்.

சைவ சித்தாந்தத்தின் முக்கிய அம்சங்களை மிக எளிமையாக முன் வைக்கிறார்.

இயல் - 2

அரிய கருத்துக்கள்

பிற சமயக் கடவுளர்கள் : பிற சமயக் கடவுளரை வழிபட்டாலும் தனக்குரிய வழிபாடு என்ற இந்து சமயக் கருத்து தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. வெவ்வேறு சமயத்தவரால் வழிபடப்படும் கடவுளரை எல்லாம் கடவுளாக இந்து சமயம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அந்தக் கடவுளர்க்குச் செய்யப்படும் வழிபாட்டைத் தனக்குச் செய்யப்படுவதாக இந்து சமயக் கடவுள் ஏற்கிறது என்பதே அதன் பொருள்.

ஒரு குழந்தை தனது தாய் அல்லா ஒரு பெண்ணை நோக்கி உணவுக்காக அழுதால் அதற்காக அந்தத்தாய் வருந்தமாட்டாள். தன்னை நோக்கி அழுததாகவே நினைத்து உணவு தருவாள். ஒருவேளை தன்னால் நேரிடையாகத் தர முடியவில்லையானால் அந்தப் பெண் மூலமாகவே தருவாள். இதனால் இரு தாயர் என்று சொல்ல முடியுமா? அதுபோல இறைவனும் மனிதர்கள் வழிபடும் கடவுளர் மூலமாகவே அருள் பாலிப்பான். இதனால் கடவுளர் பலர் என்று ஆகிவிடமுடியாது.

கடவுளின் வடிவங்கள் :

சிவலிங்கம் : கடவுளுக்கு வடிவு இல்லை; உருவம் இல்லை; புலன்களாலும் அறியமுடியாது. மனிதன் கடவுளிடம் பலன் அடைய விரும்புகிறான். அப்படி அடைய விரும்பும்போது அக்கடவுளுக்கு ஒரு வடிவம் தேவைப்படுகிறது.

சைவத்தில் கடவுளுக்கு ஒன்பது வடிவங்கள் கூறப்படுகின்றன. அவை யாவன சிவம், சக்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேஸ்வரன், ருத்ரன், பிரமன், விஷ்ணு. முதல் நான்கும் மறைந்திருப்பன; (அருவம்) இறுதி நான்கும் வெளிப்படையாய் தெரிவன(உருவம்). நடுவிலே உள்ள சதாசிவம் மறைந்தும் மறையாமலும் இருப்பது (அருவுருவம்) இந்த சதாசிவ - சாதாக்கிய வடிவம்தான் அனைத்து திருக்கோவில்களிலும் சிவலிங்க உருவில் வழிபடப்படுவது.

இந்த லிங்கம் சிவபெருமானுடைய உற்பத்தி உறுப்பு என தவறாக கருதப்பட்டு கடவுளின் படைப்பாற்றலைப் போற்றும் இலிங்க வழிபாடு என்று சொல்லப் படுகிறது. இது தவறாகும்.

''லிங்கம்'' என்பது ''லிக'' (Lika) என்ற அடிச்சொல்லிலிருந்து வந்தது. ''வண்ணம் பூசுதல்'' ''உருவங்கள்'' என கொள்ளப் பட்டது. அது கடவுளின் பெயர்களில் ஒன்றாகியது. இறைவனின் சாதாக்கிய வடிவம் மட்டுமல்ல; சிவ பெருமானின் இருபத்தைந்து மகேஸ்வர வடிவங்களும் லிங்கமாகவே கருதப்படுகின்றன. சிவனின் சாதாக்கிய வடிவத்திற்கே பெரிதும் லிங்கம் என்று பெயர் குறிக்கப்படுகிறது.

பல திருக்கோவில்களில் லிங்க வடிவத்தில் சிவபெருமானின் முகம் காணப்படுகிறது. லிங்க வழிபாடு (Phallus worship) அல்ல என்று உறுதிப்படுத்த இது ஒன்றே சான்றாகும். லிங்கம் என்பது பரந்துபட்ட பொருளைக் கொண்ட சொல், ஒரு உறுப்பினுக்கும் பெயராக அமைந்து விட்டமையால் இந்தத் தவறுபட்ட சிந்தனை நிலவி வருகின்றது.

அச்சுறுத்துவதும், பூதாகாரமானதுமான வடிவங்கள்:

பஞ்சமுகவடிவம், ஆறுமுகங்கள் கொண்ட வடிவம், ஆனைத்தலைவடிவம், கபாலமாலை கழுத்தில் கொண்டும், நீறு பூசிய வண்ணமும் உள்ள வடிவம், அச்சுறுத்தும் பார்வையுடன் கூடிய வடிவம் – இப்படி பல வடிவங்கள் உள்ளன.

அழகு வடிவங்களும் அவனே; கொடூர வடிவங்களும் அவனே; எல்லாம் அவனே. எனவே ஏற்க வேண்டிய ஒன்று.

விநோதமானதும், அபூர்வமானதும் கூடிய வடிவங்களாக இருந்தால்தான் ஆன்மாக்களையும், இறைவனையும், வேறுபடுத்திப் பார்க்க முடியும்.

சிவபெருமானுடைய வடிவங்கள் அனைத்தும் அர்த்தம் பொதிந்தனவாகவும், ஆன்மீக உபதேசங்களைக் கொண்ட தாகவும் இருக்கின்றன.

ஐந்துமுகங்கள் – திருவைந்தெழுத்து; இதிலிருந்து தான் பிரணவம் உலகமாகப் பரிணமித்தது.

ஆனைத்தலை – பிரணவம்; அண்டத்தின் விந்து.

ஆறுமுகங்கள் – திருவைந்தெழுத்து – பிரணவம்

கபாலமாலைசூடிய சிவன் – சிவன் ஒருவனே ஆதி, அந்தம் இல்லாதவன். திருமால், பிரமன் உள்பட அனைவரும் அழியக் கூடியவர்கள். அவர்களுடைய கபாலங்களும் எலும்புகளுமே சிவனின் மாலை. உலகமே அழிந்து சாம்பலான பிறகு, பரவெளியில் (அண்டத்தின் இடுகாடு) சம்கார நடனம் ஆடுகையில் சிவனின் மேல் பூசப்பட்டிருப்பதன் அடையளம் திருநீறு.

இடுப்பில் அணிந்துள்ள பாம்பு; குண்டலினி சக்தி அல்லது மாயை. இதிலிருந்துதான் உலகம் தோன்றியது.

தேவாசுர போர்களில் அரக்கர்களை அழிக்க பூதாகாரமான வடிவம் எடுக்க வேண்டி இருந்தது. அவையே வழிபடும் வடிவங்களாக மாறி விட்டன.

கைலாய மலையில் வீற்றிருக்கும் வடிவமே சிவபெருமானின் வடிவங்களி லேயே முதன்மையானதும் முக்கிய மானதும் ஆகும்.

இயல் - 3

ஆன்மாக்கள்

1) ஆன்மாக்களின் இருப்பும் நிலையும்

2) ஆன்மாக்கள் நித்யமானவை

3) உயிருள்ள பொருள்களுக்கு ஆன்மா உண்டு.

மேற்கூறிய மூன்று செய்திகளையும் தர்க்க ரீதியாக – சங்கிலித் தொடராக – எளிமையாக விளக்கி நிறுவுகிறார்.

இயல் - 4

தீமையும், அதன் மூலமும் (Evil and its Origin)

1) பாவத்தின் மூலம்

2) பசு

3) பாசத்தின் மூலம்.

பாவத்தின் மூலம் நமது மூதாதையர்களோ (Adam & Eve)சாத்தானோ (Satan) இல்லை என ஒன்பது வகையான காரணங்களுடன் கிறித்துவக் கொள்கையை மறுக்கிறார். பாவம் (மலம்) பசுவோடு தொடக்கத்திலிருந்து கட்டப்பட்டுள்ளது என்பதனை நிறுவுகிறார்.

இயல் - 5

விமோசனம் (Salvation)

நிரந்தர நரகம் என்ற கிறித்துவக் கொள்கையை மறுக்கிறார். இறையருள் பெறுதலே விமோசனம். அந்த நிலைக்கு உருவாக்குவதே சரியை, கிரியை, யோகம், ஞானம். பாவமன்னிப்பு பெறுதலே விமோசனம் என்ற கிறித்துவக் கொள்கையை மறுத்து, ஆன்மா தூய்மை அடைதலே விமோசனம் என்கிறார்.

இயல் - 6

வழிபாடு

சடங்குகள் ஏன் : அறிவு முதிர்ச்சியுற்றவர்கள், அறிவு முதிராத நிலையில் இருப்பவர்கள் என பலநிலையில் பிரித்து, வழிபாட்டு முறைகள் அதற்கேற்ப பலநிலைப்படும் என்கிறார். அறிவுமுதிரா நிலையில் இருப்பவர்களுக்காகவே - அவர்கள் சிந்திப்பதைவிட செயல் மிக்கவர்கள் - சடங்குகள், விழாக்கள் நடத்தப்படுகின்றன என்கிறார்.

வேதவழிபாடு : வேத வழிபாடு தொன்மையது என்பதினால் ஆதி மனிதனுக்கு ஏற்ற வகையில் இயற்கையின் பல்வேறு வடிவங்களான சூரியன், சந்திரன், அக்னி என வழிபடும் கடவுளர்கள் இடம் பெற்றனர். அதனால் வேத வழிபாடு Secular ஆக உள்ளது.

பலியிடுதல் : பலியிடுதல் வேதவழிபாட்டின் முக்கிய கூறு ஆகும். பலியிடுதல் என்பது தான் எனும் அகந்தையை அழிப்பது ஆகும். மனிதனின் அறியாமை யையும், எளிமையையும் அதேபோல உணர்த்துவன மிருகங்கள் என்பதால் மிருகங்களைப் பலியிடுதல் என அமைத்து இருந்தனர். மனிதனுடைய மிருகப் பண்புகளைப் (பசுத்துவம்) பலியிடுதல் ஆகும்.

மனிதபலி - மிருகப்பண்புகளை அழித்தல்;

குதிரைபலி - மூச்சினை அழித்தல்; பசுபலி - மனித இயற்கையை அழித்தல்

(பசு என்பது ஆன்மாவின் மற்றொரு பெயர்) ஆடு பலி - மனத்தை அழித்தல்

(ஆடு மனித மனத்திற்கு ஒப்பிடப் படுவதுண்டு, துள்ளுமறி).

அது மட்டுமல்ல. மந்திரங்கள் பலியிடப் படும் மிருகங்களை மேல்நிலைக்கு உயர்த்தும் என நம்பப்பட்டது. அப்படிப் பட்ட சக்தி வாய்ந்தவர்கள்தான் பலியிட வேண்டும் என்று இருந்தது. காரண காரியத்தைவிட நம்பிக்கை பிரதானம் பெற்ற தொடக்ககாலம் என்பதும் குறிப்பிடத்தக்கது.பண்பாடு வளர்ந்த நிலையில் இந்தப்பலி தேங்காய் வடிவ மாகவும், சோற்று உருண்டையாகவும் மாறியது. இதனால்தான் திருக்கோயில் களின் முன்னர் பலிபீடம் அமைக்கப் பட்டுள்ளது.

சோமபானம் : சோமபானம் அருந்துதல் என்று வைத்த காரணமே மதுவின் பால் மோகம் உள்ளவர்களையும் ஈர்த்து அவர்களையும் உயர்த்தலே. அதிகக் கட்டுப் பாடுகளை விதித்தால் மக்கள் சமயம் பக்கமே தலை காட்டமாட்டார்கள். சில நிலைகளில் மட்டுமே தலையெடுக்கும் பாவகாரியங்களுக்குச் சமயம் தாராள மாகவே இடம் கொடுத்தது. அனைவரையும் உயர்த்துவதே சமயத்தின் நோக்கம் ஆகும்.

வேத வழிபாடு மனிதனின் வீடு பேறுக்கு வழி வகுத்தாலும், போதுமான அளவு செயல்படுத்த இயலாது. ஆனால்

ஆகமங்கள் வேத அடிப்படையில் இருதிறத்தாரும் [(1) முழுத்தகுதி வாய்ந்தவர்கள் (2) சமய உணர்வு அதிகம் இல்லாத – உலகியலோடு ஒட்டிய – மாந்தர்] வீடு பேறு அடையுமாறு படிநிலைகளில் அமைந்துள்ளன. அவையாவன (1) சரியை (2) கிரியை (3) யோகம் (4) ஞானம்.

இயல் - 7

சமய ஒழுக்கம்

இயல் - 8

மறுபிறப்பு

மறுபிறப்புக் கொள்கையின் தொன்மை : மறுபிறப்புக் கொள்கையைத் தொன்மை எகிப்தியர்கள், அமெரிக்கர்கள், யூதர்கள், சில கத்தோலிக்க பாதிரிமார்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். தத்துவ உலகிலும் இறை உணர்வினரும் (Gnostics) பிளேட்டோனியரும், இத்தாலியரும் இக்கொள்கையை முன்வைக்கின்றனர். புதிய ஏற்பாட்டிலும் இக்கொள்கையின் சாயல் விழுந்துள்ளது.

இயல் - 9

மறுபிறப்பு

பொய்ச் சமாதானங்கள் மறுக்கப்படுதல்

இயல் - 10

மறுபிறப்பு

இந்த மூன்று இயல்களில் மறுபிறப்பு இல்லை என்ற வாதத்தைத் தருக்க ரீதியாக முதலியார் அவர்கள் முறியடிக்கிறார்கள். குறிப்பாக கிறித்துவ சமயத்தின் வாதங்களுக்கு மறுப்பு சொல்வதாக உள்ளது.

இயல் - 11

விதி (ஊழ்வினை)

ஆகாமியம், சஞ்சிதம், பிராருத்துவம் ஆகிய மூன்று வினைகள், பெத்தநிலை, முத்தநிலைகள் – இது போன்ற சைவ சித்தாந்த சொற்களை – கருத்துக்களை (Technical) எளிமையாக விளக்குகிறார்.

இயல் - 12

புனித நூல்கள்

வேதங்கள் மேல் எழுப்பப்படும் குற்றச் சாட்டுக்களை ''வேதங்கள் தனக்கு தெரியாது'' என்றாலும் அழகுற மறுக்கிறார். வேதங்கள் சிவபெருமானையே கூறுகின்றன என்று எடுத்துக்காட்டுகளோடு வெளிப்படுத்துகிறார். ஆகமங் களின் உயர்வை வலியுறுத்துகிறார்.

இயல் - 13

ஜோதிடம்

சோதிடச் சாத்திரம் வெளிநாட்டிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதையும் அறிவியல் ரீதியில் ஒத்துப் போவதையும் விளக்குகிறார்.

இயல் - 14

மூட நம்பிக்கைகள்

ராகு, கேது, மந்திரமலை கடைந்து அமுதம் கிடைத்தல், முதலானவற்றை அறிவியல் கண்கொண்டு விளக்குகிறார்.

இயல் - 15

வருணப்பாகுபாடு

சமுதாயம் தொடர்பான எந்த ஒரு பிரச்னைக்கும் கூட சபாரத்தின முதலியார் விளக்கம் கூறாமல் இல்லை என்பதற்கு இந்தப் பகுதியே சான்றாகும். மிகவும் சிக்கலான பிரச்சினைகளை அழகுடன் அலசுகிறார்.

சமுதாயத்தில் அன்றாட வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதே வருணப்பாகுபாடு என்றும் இப்பாகுபாடு இல்லையென்றால் சமுதாயத்தில் குழப்பமே மிஞ்சும் என்றும் சமயநிலையிலும் சரியை, கிரியை (சமயம் சாராத சமய ஒழுக்கம்)க்கு இப்பாகுபாடு தேவை என்றும், யோகம், ஞானம் (உண்மைச்சமயம் – Religion Proper) என்ற நிலையில் இப்பாகுபாடு தேவையில்லை என்றும் விளக்குகிறார்.

''வருணா நெறி சார் மதத்து அம்மதமெய்ப்
பொருள் உணர்வு ஊடென்று உந்தீ பற''

(Caste ends where religion begins and religion ends where realisation begins)

சபாரத்தின முதலியார் சமுதாயத்தைச் சீர்திருத்தவும் வழிகள் எடுத்துரைக்கிறார். வருணப்பாகுபாட்டில் சிறு சிறு இனப்பிரிவுகள் சுயநல நோக்கால் வந்தன என்பதனால் அவற்றையெல்லாம் இணைத்து சாத்திரங்கள் குறிப்பிட்ட பெரும் பிரிவுகளாக அமைக்க வேண்டும் என்றும், ஒற்றுமையும், பொது நலத்தில் சிரத்தையும் வளர்க்க வேண்டும் என்றும், அற்பவேறுபாடுகள், சொந்த காழ்ப்புகள் நீக்கப்பட வேண்டும் என்றும் முடிவு கட்டுகிறார்.

இயல் - 16

சமய ஆராய்ச்சி

4

Dance of Shiva

1917

(ஆசிரியர் – ஆனந்த குமாரசுவாமி; வெளியீடு – சாகா பதிப்பகம், நியூடெல்லி (1971-ஆம் ஆண்டுப்பதிப்பு) பக்கம் – 175)

‘‘இந்த நூற்றாண்டில் (இருபதாம் நூற்றாண்டில்) புதியதோர் அண்டப் படைப்பின் காட்சியை ஐன்ஸ்டின் தருகின்றார். அவருடைய புதிய கண்டு பிடிப்பின் பயனாக அநுமானிக்கக் கூடிய உண்மைகளை மேற்கொண்ட போதிலும் புதியதோர் உலகில் பிரவேசிப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அண்ட கோடிகளுக்கு ஊடாகச் செல்லும் பிரயாணத்திலே நான் பிரபஞ்சத்தின் தீவுகளைக் காண்கின்றேன்; நட்சத்திரக் கூட்டங்களின் திருகு ஒளிச் சுருள்களைப் பார்க்கின்றேன். எண்ணற்ற ஆகாய கங்கைகளைத் தரிசிக்கின்றேன். காலம் இடமென்ற நியதியிடையே தோன்றும் கோடிக் கணக்கானப் படைப்புகளைப் பார்க்கின்றேன். முடிவில்லா எத்தனை தோரண வளைவுகள் அவற்றைப் பிரகாச மடையச் செய்யும்; எத்தனை சூரியர்கள், அச்சூரியர் களின் கிரணங்கள் ஓயாமல் ஓழியாமல் சுழன்று கொண்டிருக்க, அவை எத்தனை கற்பனைத் தோற்றங்களுக்கு ஒளியூட்டுகின்றன. எத்தனை மாயா புவனங்களை ஒளிமயமாக்குகின்றன. இந்தக் கோள்களின் அசைவினால் உண்டாகும் அண்டத்துப் பேரிசையின் எதிரொலியைக் கேட்கின்றேன். ஒரு கோள் மறைய மற்றொன்று தோன்றும்; அது மறைய வேறொன்று தோன்றும். இவ்வாறு மறைந்து மறைந்து தோன்றும் கோள்கள் எல்லாவற்றுக்கும் தோற்றமும், திதியும், சங்காரமும் வழங்கிச் சீவராசிகளையும் அவற்றிடையே மானிடரையும் தேவரையும் வாழச் செய்கின்ற சக்தியைக் காண்கின்றேன். சாசுவதமான பெரிய நியதியாகிய சங்கார சக்கரத்தைக் காண்கின்றேன். அங்கெல்லாம் சிவனுடைய நடனம் கேட்கின்றது; அண்டத்தின் மத்தியில் பிரபஞ்சத்தின் நடுவிலும் அடியேனுடைய உள்ளத்திலும் அதே நடனச் சிலம்பொலியைக் கேட்கின்றேன்’’.

ரோமெய்ன் ரொலான்(ட்)டுக்கு மட்டுமல்ல; ஆயிரக்கணக்கான மேலை நாட்டவருக்கு சிவனுடைய அந்த நடனச் சிலம்பொலி கேட்டது; இன்றும் கேட்கிறது. இப்படி கேட்க வைத்த பெருமையுடையது ஆனந்த குமாரசாமியின் "Dance of Shiva" என்ற ஆங்கில நூல். சிலம்பொலி மட்டுமா? பிரபஞ்சக் காட்சியையே - இறைக்காட்சியையே ரோமெய்ன் ரொலான்ட் தரிசிக்கிறார். அப்படி அவரைத் தரிசிக்க வைத்த பெருமை ஆனந்த குமாரசாமி அவர்களையே சேரும்.

ரோமெய்ன் ரொலான்ட் இத்தோடு நிறுத்தவில்லை. இதனைப் புரிந்து கொள்ளாத திமிர்பிடித்த ஐரோப்பாவைக் கண்டிக்கிறார். ‘‘திமிர் பிடித்த ஐரோப்பா, ஆசியாவின் தேவை தனக்கு அவசியம் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஐரோப்பா பல நூற்றாண்டாகவே தன் காலடியில் ஆசியாவைப் போட்டு மிதித்து வந்துள்ளது. இந்தியாவும் சீனாவும் ஐரோப்பாவை ஈற்றிலே தோற்கடிக்கும், இஃது ஆன்மார்த்தமாக உண்டாகக் கூடிய வெற்றியாகும். இந்த ஆன்மீக ஆற்றலை விளக்குவதே குமாரசுவாமி எழுதிய இந்நூலின் நோக்கம் ஆகும். அஃதாவது, மன்பதையை உயர்த்த நெறியிலுய்த்து

அதற்கு இன்பம் அளிக்கக்கூடிய ஆன்மீகச் செல்வங்களை எடுத்துக்காட்டுவதே இதன் நோக்கம் என்றுணர்க. பலவகைப்பட்ட பொருள்களானாலும் ஒரே அலங்கார வடிவில் வந்து உருப்பெற்று இந்தியாவின் பரந்த அமைதிமயமான பிரம ஞானத்தை அவை காட்டுகின்றன.

இங்கே வாழ்வைத் துறந்து விடும் கோட்பாடு கிடையாது. அதன் சக்திகளெல்லாம் ஒன்றோடொன்று இசைந்து செல்கின்றன. வாழ்வின் சக்திகளெல்லாம் காட்டிலிருக்கும் மரங்கள் எல்லாவற்றையும் ஒரு சேரக் கருதுவது போலக் கருதித் தொகுதியாக இனப்படுத்தப் பட்டுள்ளன. அக்காட்டிலே அசையும் ஆயிரம் கைகளும் கூத்தப்பிரானான நடராச னுடைய தலைமையில் கைகோத்துக் கொள்கின்றன. ஒவ்வொரு பொருளுக்கும் அங்கே தனியிடமுண்டு; ஒவ்வொரு சீவனுக்கும் கடமையுண்டு, இந்தத் தெய்வீக நடனத்திலே எல்லாரும் கலந்து கொள்கின்றனர். எங்கணும் ஒலிகள்; ஒலி முரண்பாடுகள் கூடக் கெராக்கிரிட்டசின் சொற்றொடார்ப்படி அழகியதோர் இசை இயைபை உண்டாக்குகின்றன. ஆனால், மேலை நாட்டிலே தார்க்கிக முறையை மிக நுட்பமாக அனுசரித்து, வழக்கத்துக்கு மாறானவற்றை, வாழ்வின் எஞ்சிய பகுதிகளிலிருந்து பிரித்துத் தனிப்படுத்தி அடைத்து வைத்துக் கொள்வர். இந்தியாவிலே உயிருக்குயிர் வித்தியாச முண்டு என்பதையும், தத்துவங்கள் தம்முள் வித்தியாசப்படுகின்றன என்பதையும், இந்த இயல்பான வித்தியாசங்களை எல்லாம் ஒன்றோடொன்று இணைத்து நிறைவான ஒற்றுமையை உண்டாக்க வேண்டுமென்பதையும் நன்கு உணர்ந் துள்ளது. முரண்பட்டவற்றைப் புணர்க்கும் போது வாழ்வின் உண்மையான இசை இயைபு புலப்படும். புலன்களால் உண்டாகும் நிலையற்ற சிற்றின்பத்தைக் கண்டு ஆன்மீகத் தூய்மையானது ஒதுங்கிக் கொள்ள மாட்டாது. எல்லை மீறிய காமப்பகுதியிற்றானும் இந்தியர் உயர்ந்த ஞானத்தைக் கண்டார்கள்; சகசநெறி இதற்குச் சிறந்த உதாரணம் ஆகும். இங்கே முரண்பாடான சக்திகள் ஒன்று சேர்கின்றன.

நிறைவாக ரோமெய்ன் ரொலான்ட் மேலைநாடுகளுக்கு அறிவுரை வழங்குகிறார். ''ஐரோப்பியர், ஆசிய மதங்களில் ஒன்றைப் பின்பற்ற வேண்டுமென்று நான் கூறவில்லை; ஆசியா உணர்ந்த இந்த ஆடலின் தத்துவச்சிறப்பை அனுபவிக்கும் படிதான் கேட்கிறேன்; இந்த ஆழமான சிந்தனையின் மந்தமான கருத்துயிர்ப்பைக் கேட்டுச் சுவைக்குமாறுதான் வேண்டுகின்றேன். இதிலிருந்து சாந்தம், பொறுமை, ஆண்மை நிறைந்த நம்பிக்கை, காற்றில்லாத இடத்தில் அசையாத சுடர் விடும் விளக்குப் போன்ற சஞ்சலமில்லாத ஆனந்தம் என்ற பண்புகளை ஐரோப்பாவும் அமெரிக்காவும் பெற்றுக் கொள்ளலாம்'' என்கிறார்.

இந்த நூலில் பதினான்கு கட்டுரைகள் உள்ளன. "Dance of Shiva" என்ற கட்டுரை 13 பக்கங்களே உள்ளன. அந்த ஒரு கட்டுரைதான் உலகவரை ஆடல்வல்லான் பால் ஈர்த்துள்ளது. இக்கட்டுரையில் திருமந்திரம், உண்மை விளக்கம் சான்றுகள் தரப்பட்டுள்ளன. கட்டுரையிலிருந்து சில பகுதிகள் வருமாறு; ''சிவன் அழித்தற் கடவுள். அவனுக்கு உவப்பான இடம் சுடுகாடு; ஆனால் அவன் சங்காரஞ் செய்வது எதை? பிரபஞ்ச ஒடுக்கத்திலே மண்ணையும் விண்ணையும் மாத்திரம் ஒடுக்கவில்லை. ஒவ்வோர் உயிரின் பாசத்தளையையும் அழிக்கிறான். சுடலை எங்கே? சுடலையென்றால் என்ன? மயானமென்பது நமது பிரதேசத்தைச் சாம்பலாக்குமிடமன்று; இறைவனுடைய பக்தரின் உள்ளமே சுடுகாடு. அது பாழ்படுத்தப்பட்ட பாலைநிலமாக வேண்டும். எங்கே அகங்காரம் அழிகிறதோ அங்கே மாயையும் கன்மமும் பொடியாகின்றன. மாயா விகாரமும், வினைத்தொகைகளும் எரிக்கப்படுகின்றன. அதுதான் சுடலை; அதுதான் மயானம்; அங்கேதான் திருக்கூத்தனின் திருநடனம் நிகழும். அதனால் அவன் சுடலையாடியென்ற பெயரையும் பெறுகின்றான். இந்த உவமையிலே சிவனுடைய அருள்மயமான நாதாந்த நடனத்துக்கும், சுடலையில் ஆடிய கோரதாண்டவ நடனத்துக்குமுள்ள சரித்திர ரீதியான தொடர்பைக் காண்கிறோம்.

திருவருட்பயன் ஒன்பதாம் அதிகாரத்து மூன்றாஞ் செய்யுள் திருவாசியென்பது பிரகிருதியின் நடனமான ஊன நடனமென்றும், சிவனுடைய ஆடல் ஞானநடனமென்றும், ஊனநடனத்தில் ஞான நடனம் நடைபெறுகிறது என்றும், நீ ஞான நடனத்தின் உள்ளே பார் என்றும் கூறும். அது வருமாறு :

‘‘ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம்
ஞான நடந்தானடுவே நாடு’’

ஊன நடனம் என்பது பிரகிருதி மாயையின் சுழற்சி; அது சடப்பொருளின் சக்தியையும், தனிப்பட்ட சக்தியையும் குறிப்பிடும். இது திருவாசியைக் குறிக்கும். திருவாசி ஓங்காரம்; அது காளியின் நடனம். மற்றையது சிவ நடனம். இஃது ஓங்காரத்திலிருந்து பிரியாத அட்சரம்.

இதைப் பிரணவத்தின் அர்த்த மாத்திரையென்றும் நாலாம் அட்சரம் என்றும் கூறுவர். இது சதுர்த்தம் எனவும், துரியம் எனவும் வழங்கப்படும். சிவனுடைய சங்கற்பத்தினாலேயே ஊன நடனம் உண்டாகும். சிவன் தனது நடனத்தை ஆரம்பித்தாலே அதுவும் தொடங்கும்.

எனவே, திருவாசி சடப்பொருளான பிரகிருதியை, அஃதாவது இயற்கையைக் குறிப்பிடும். திருவாசிக்குள்ளே நின்று ஆடும் சிவனின் தலையும், கைகளும், பாதமும் திருவாசியைத் தொட்டுக் கொண்டு நிற்கின்றன. அது புருடனின், அஃதாவது இறைவனின் உருவ வியாபகத்தைக் காட்டும், பிரகிருதிக்கும் இறைவனுக்குமிடையே நிற்பது உயிர்.

சிவாயநம என்னும் ஐந்தெழுத்திலே ‘சிவா’வுக்கும் ‘நம’ வுக்குமிடையில் உள்ள யகரமே ஆன்மா.

(துணை நூல் : ‘‘சிவானந்த நடனம்’’ – தமிழாக்கம் நாவலியூர் சோ. நடராசன்).

5

A History of Indian Philosophy (Surendranath Das Gupta)

1922

(ஆசிரியர் : சுரேந்திரநாத் தாஸ் குப்தா; Vol.VI; பக்கம் – 192;)

இந்தியத் தத்துவ வரலாற்றை ஐந்து தொகுதிகளாக டாக்டர் சுரேந்திரநாத் தாஸ்குப்தா ஆங்கிலத்தில் வெளியிட்டார். ஐந்தாம் தொகுதி தென்னாட்டுச் சைவப் பிரிவுகளைப் பற்றியதாகும். இத்தொகுதியில் தென்னாட்டுச் சைவ இலக்கியம், வீரசைவம், ஸ்ரீ கண்டரின் தத்துவம், புராணங்கள் காட்டும் சைவ தத்துவம், சில முக்கிய மூல நூல்களில் சைவ தத்துவம் என ஆய்வினை மேற்கொண்டுள்ளார். வடமொழி, பாலி, பிராகிருதத்தில் உள்ள அனைத்து மூல நூல்களிலிருந்தும், திராவிட மொழிகளுக்கு ஆங்கில மொழிபெயர்ப்புகளிலிருந்தும் செய்திகளைச் சேகரித்துள்ளார். தமக்குத் திராவிட மொழிகள் தெரியாதது என்பதோடு, வடமொழியில் கிடைக்காத குறிப்பிடத்தக்க தத்துவரீதியான செய்திகள் ஏதும் திராவிட இலக்கியத்தில் இல்லை எனக் கருதுகிறார். "There is Hardly anything of value from the Philosophical Point of view in Dravidian Literature Which is unobtainable through Sanskrit" (Pa 149).

இந்த நூலைப் படிக்காமல் சைவ தத்துவத்தைப் பற்றிப் பேசுவது பொருத்தமற்ற ஒன்று. அத்துணைச் செய்திகள் இதில் கொட்டிக் கிடக்கின்றன.

காபாலிகர்கள், காளமுகர்கள் பற்றிக் கூறினாலும், அவர்களது தத்துவச் சிந்தனைக்கான நூல்கள் ஏதும் இல்லை என்கிறார்.

பாசுபத சைவத்தை நன்கு ஆய்கிறார். பாசுபத சூத்திரம், காரவன மகாத்மியம் பற்றியும், பாசுபத சைவத்தின் ஆசாரியரான அத்திரிபற்றியும் விளக்குகிறார். லாகுலிஸா (Lakulisa) பாசுபத சைவத்தின் முதல்வர். சிவபெருமானின் அவதாரமாகக் கருதப்

படுபவர். ஸ்ரீகண்ட தேவரின் தத்துவத்தை அப்பய்ய தீஷிதர் விளக்குகிறார். தாராவைச் சேர்ந்தபோஜ அரசனின் தத்துவப்பிரகாசமும் நமக்குக் கிடைத்து இருக்கும் நூல் ஆகும். மெய்கண்ட தேவரின் சிவஞானபோதமும், வீர சைவ நூல்களும் காஷ்மீர சைவம் எடுத்துரைக்கும் பிரத்ய பிஞ்ஞானம் பற்றியும் இந்நூலில் பேசப்படுகிறது. சிவபெருமானைப் பற்றிய ஒரு விளக்கம், "The word 'Siva' is Supposed to have been derived irregularly from the root, 'Vas Kantan'. This would meen that Siva always fulfils the desires of His devotees".

ஆகம இலக்கியம் விரிவாக இருந்தாலும் அது சமயநெறி கூறுமளவு தத்துவம் பற்றி கூறுவதில்லை. ''சைவாகமம்'' தத்துவம் பற்றி நிரம்பச் சொல்கிறது.

இலிங்க தாரணையும் (Linga Dharanai) சத்-ஸ்தலமும் (Sat-Sthale) வீர சைவத்தின் முக்கிய கூறுகள் ஆகும். ''சித்தாந்த சிகாமணி'' என்ற வீரசைவத் தத்துவத்தை விளக்கும் நூல் ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டது.

பிரும்ம சூத்திரத்திற்கு ஸ்ரீகண்டர் கண்ட பாஷியம் உபநிஷத்தை ஏற்றுக் கொண்டு இருப்பதால், ஸ்ரீகண்டபாஷ்யம் வேதாந்த பரமானது. ஸ்ரீகண்ட பாஷியத்தையும், அதன்மேல் எழுந்த அப்பய்ய தீக்ஷிதரின் விரிவுரையையும் சுரேந்தரநாத் விரிவாக விளக்குகிறார். கடவுள் உலகை ஏன் படைத்தார்? சிலருக்கு மட்டும் மகிழ்ச்சியும், சிலருக்குத் துக்கமும் கொடுப்பானேன்? அப்படியானால் கடவுள் பாரபட்சம் உடையவரா? கொடியவரா? இன்பமும், துன்பமும் அவரவர் செயல்களின் விளைவு எனில் கடவுளே எதற்கு? கடவுள் கருணைமிக்கவர் என்றால், வினையின் பயன்களை உடனேயே கவனித்து, அனைவர்க்கும் வீடுபேற்றின் இன்பத்தைக் கொடுத்து விடலாமே? என்று ஒவ்வொரு கேள்வியாக எழுப்பி ஸ்ரீகண்ட பாஷியம், அப்பய்ய தீக்ஷிதர் உரை ஆகியவற்றின் மூலம் அழகாக சுரேந்திரர் பதில் விளக்கமும் தருகிறார்.

சிவமகாபுராணம், அதிலும் குறிப்பாக 'வாயவீய சம்ஹிதை' (Vayaviya - Samhita) காட்டும் சைவத் தத்துவத்தைத் தனிப் பிரிவாக எடுத்துக் கொண்டு விரிவாக விளக்குகிறார்.

நிறைவுப் பகுதியில் பாசுபத சூத்திரம், திருவாசகம், போஜ அரசனின் சைவ தத்துவக் கொள்கை, ஸ்ரீபதிபண்டிதரின்/ ஸ்ரீகரபாஷியம் – என தனிப்பட்ட நூல்களை எடுத்துக் கொண்டு ஆய்கிறார்.

''புலன்கள் வழி ஆன்மா சென்றால் கடவுளை அடையமுடியாது என்பதற்காக பாசுபதர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் – காலி அறையில் வாழ்வது, மிருகங்கள் படுவது போல துன்பங்களை ஏற்பது, பெரும்பான்மை நேரங்களில் சுடுகாட்டில் தங்குவது (தியானத்திற்கு ஏற்ற இடம்) – எனச்சுட்டிக் காட்டுகிறார். ''இப்படி புலன்களை அடக்கிய ஞானி துன்பத்திலிருந்து விடுதலை பெறுகிறான். அவனுக்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை'' என்று பாசுபத சூத்திரத்தைக் கொண்டு விளக்குகிறார்.

(சுரேந்திரநாத் தாஸ் குப்தா ... பிறப்பு 1885... மறைவு 18.12.1952 பிறந்த இடம்; குஸ்தியா, வங்காளம். உயிர் பிரிந்த கடைசி நாளன்று காலையும், பிற்பகலும் தென்னாட்டுச் சைவத்தின் இறுதி பகுதி யினை எழுதிக் கொண்டு இருந்தார். இறுதிப் பகுதியில் தான் திருவாசகம் பற்றிய பகுதி உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.)

6

Mohenjo - Daro and The Indus Civilisaton

1931

ஆசிரியர் : ஜான் மார்ஷல்; மூன்று பாகங்கள்; வெளியீடு – Asian Education Service. *(1996-ஆம் ஆண்டு வெளியீடு).*

இந்த நூல் இந்திய வரலாற்றையே மாற்றியமைத்த ஒன்று ஆகும். மொகஞ்ச தாரோ – ஹரப்பா அகழ்வாராய்ச்சியின் முடிவுகளைப் படங்களுடன் மிக விரிவாக விளக்கியிருக்கிறார் ஜான் மார்ஷல். ஆரியர் இந்தியா வருவதற்கு முன்பே – வேத காலத்துக்கு முன்பே – இந்தியாவில் சிவ

வழிபாடு இருந்தது என்று ஆதாரபூர்வமாக நிறுவியுள்ளார். இந்த நூலின் முதற்பதிப்பு 1931-ஆம் ஆண்டில் வெளியானது. அகழ் வாராய்ச்சி 1922-ஆம் ஆண்டிலிருந்து 1927-ஆம் ஆண்டு வரை நடந்தது.

7

Studies and Translations Philosophical and Religious 1937

(பக்கம் – 305; வெளியீடு – Dept. of Hindu Affaris Ministry, Columbo)

பொன்னம்பலம் ராமநாதன், பொன்னம் பலம் அருணாசலம் சகோதரர்கள் இலங்கை வரலாற்றிலேயே சிகரத்தைத் தொட்ட தமிழர்கள் ஆவர். முன்னவர் அரசியல் கல்வி, சட்டத் துறையிலும், பின்னவர் அரசு நிர்வாகம், கல்வி, சமுதாய, அரசியல் வாழ்விலும் இரண்டறக் கலந்து இருந்தனர். வழக்கறிஞர்; மாவட்ட நீதிபதி; இலங்கை விடுதலைக்காகப் போராடிய வீரர்; இலங்கை பல்கலைக்கழகக் கல்லூரிக்காகத் தன் வாழ்வின் இறுதிப் பகுதியை முழுமை யாகக் கழித்தவர்; வரலாற்றிலும், சமயத்தி லும் கவனம் செலுத்தியவர்.

"Administrator and educationist, Lawyer and statesman, Savant and patriot, no man in the last hundred years had done, more for the political and social development of the country than Arunachalam".

இப்படி, பல துறைகளிலும் உன்னதமாக விளங்கிய பி. அருணாசலம் அவர்கள், மிக எளிமையாக தாயுமானவர் பற்றியும் திருக்கோவையார் பற்றியும், சிவஞான போதம் பற்றியும் எழுதியது மட்டுமல்லாது மொழி பெயர்த்தும் கொடுத்திருப்பது வியப்பு தருவதாகும். இதனையே சர் சி.பி. இராமசாமி ஐயர் அவர்கள் "The significance and value of his contribution are enhanced by the circumstance that the author was not a cloistered servant,not a recluse but was one who, as a great lawyer and administrator, exemplified in his own life the possibilities of that combination of wordly and other - wordly achievement, the supreme exemplar of which was king Janaka of Mithila" கூறினார்.

"Luminous Sleep"

முதற்கட்டுரை "Luminous sleep" (ஒளி பொருந்திய உறக்கம்)யில் அவர் இந்த உறக்கம் பற்றி விளக்குகையிலேயே திரு அருணாசலம் அவர்களின் சிந்தனைத் தெளிவு புலப்படுகிறது."As there is a sleep of light, a Luminous Sleep, Sleep in which while there is absence of thought, while there is rest and bliss, there is not darkness and oblivion but perfect consciousness" இந்த நினைப்பற நினைத்தல் மேனாட்டு தத்துவ அறிஞர்களுக்குப் புரியாது.

சாக்ரடீஸ் அவர்கள் இந்த நிலைக்கு அடிக்கடி ஆளாவதுண்டு.

ஒரு நிகழ்ச்சியில் நண்பருடன் வந்து கொண்டே இருந்தவர் அப்படியே நின்று விடுவாராம். இதனை "Symposium of plato யில் பார்க்கலாம் "How Strange; Said Agathon, "then you must call him again and keep calling him". "Let him alone", Said Aristodemus, "this is a way he has of retiring at times and standing wherever he may chance. Do not disturb him. He will appear soon, I think".

Agathon, who was reclining alone at the end of the table begged Socrates to take the seat next to him, "that I may touch the stage, "he said" and have the benefit of the wise thoughts which came to you in the portico and is now in your possession, for I am sure you would not have come away without it" (Sympos 174-5)

ஒரு முறை சாக்ரடிஸ் காலையில் ஓரிடத்தில் இருந்து ஆழ்தியானத்தில் இருந்தவர் அடுத்தநாள் சூரியோதயம் வரை அதே நிலையில் இருந்தார். அதனைக் கேள்வியுற்ற அயோனிய மக்கள் இதனைத் தரிசிக்க, பாய்களை எடுத்துக்கொண்டு வந்து அங்கேயே உட்கார்ந்து விட்டனர்.

''பொலன்னருவா செப்புப்படிமங் களும்'' சிவ வழிபாடும் "(Polonnaruva Bronzes and siva worship) என்ற கட்டுரை மிக விரிவாகவும் படங்களோடும் கூடியது.

"The worship of Muruka or Skanda" என்ற கட்டுரையில் கதிர்காமக் கடவுளைப் பற்றிக் கூறுகிறார்.

"A Guide to Muruka" வில் திருமுருகாற்றுப்படையை மொழி பெயர்த்துள்ளார். திருவாசகத்தில் ''கோயில் திருப்பதிகமும்'' ''போற்றித் திருவகவலும்'' மொழி பெயர்த்துத் தந்துள்ளார். ''இன்றெனக்கு அருளி'' மிக அழகாக எளிமையாக மொழி பெயர்த்துள்ளார்.

''இன்றெனக்கு அருளி இருள் கடிந்து
உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற
நினைந்தேன்
நீயலால் பிறிது மற்றின்மை
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து
தேய்ந்து ஒன்றாம்
திருப்பெருந்துறையுறை சிவனே
ஒன்று நீ அல்லை அன்றி ஒன்றில்லை
யாருன்னை அறியகிற்பாரே''

(கோயில் திருப்பதிகம் -7)

"This day in the mercy unto me Thou didst driveaway the Darkness and stand in me heart as the rising sun. Of this way of rising - there being naught else but thou,

I thought without thought. Nearer and nearer to thee I drew, Wearing away atom by, atom, till I was One with Thee, O Siva, Dweller inthe Great holyshrine. Thou art naught in the Universe, Naught in there save Thou. know Thee" இந்த ஒரு மொழிபெயர்ப்புக்கே திரு.பி. அருணாசலம் அவர்களை வணங்கிப் போற்ற வேண்டும்.

தாயுமானவர் பாடல்களை – ''ஆனந்தக் களிப்பு'' உட்பட நூற்றுஎழுபது பாடல்களை – மொழி பெயர்த்துள்ளார். தாயுமானவரின் ஆனந்தக் களிப்பினை – காதல் பாட்டினை – மொழி பெயர்க்கையில் பைபிளுக்கு ஒப்பிட்டுச் சொல்கிறார். "The Maker is thine husband, the lord ofhosts in his name... as the bridegroom rejoiceth over the bride, so shall thy god rejoice over thee," Isaiah 54/5, 62/5 Ephesians 5/23-32. The soul is the female lover and the Lord the beloved. The Soul, cleansed of all taint, rid of like and dislike, rid of "I"and "mine" blends with the Lord long-sought, long-pined for. Transported with bliss, She gives vent to it in song and dance, a Revel in Bliss", ஆனந்தக் களிப்பு as the song is called which she pours forth her supreme happiness of a sympathetic friend.

''ஆதி அனாதியுமாகி – எனக்கு
ஆனந்தமாய் அறிவாய் நின்றிலங்கும்
சோதி மௌனியாய்த் தோன்றி – அவன்
சொல்லாத வார்த்தையைச்
சொன்னாண்டி தோழி''

"The light which is the beginning and without beginning which shineth in me as bliss, as Intelligence, appeared unto me as the silent one (Mouna Guru) and spake, Sister, words not to be Spoken"

இதே நூலில் திருக்கோவையார் 21 பாடல்கள், சிவஞானபோதம் 12 சூத்திரங்கள் கல்லாடம் 9 பாடல்கள் – மொழி பெயர்த்துள்ளார். *(தோற்றம் – 1853; மறைவு – 1924; பிறந்த ஊர் – கொழும்பு).*

8

Grace in Christianity and Hinduism

1964

பேராயர் சபாபதி குலேந்தரன் 1947--இலிருந்து யாழ்ப்பாணப் பிரிவில் (Disoese in Jaffna) பேராயராக இருந்து வருகிறார். ஸெராம்பூர் பல்கலைக் கழகத்தில் Doctor of Divinities பட்டம் பெற்றுள்ளார்.

இயல் –1 முன்னுரை :

"Grace" என்று சொல்லப்படும் அருள் பற்றி இந்து கிறித்துவ சமயக் கருத்துக்களின் அடிப்படையில் எஸ். குலேந்தரன் (S. Kulandran's "Grace in Christianity and Hinduism") போல இந்த அளவு விரிவாக, தெளிவாக, முழுமையாக யாரும் கூறவில்லை. தெய்வநிலையும் (Mysticism), ஒழுக்க நிலையும் (Moralism) அருளுக்கு முரண்பட்டது என்ற கருத்தினையும், மனித

ஆளுமைக்கும் (Human Personality), அறக்கோட்பாட்டுக்கும் (Ethics) அருள் எதிர்நிலை என்ற கருத்தினையும் அழகாக மறுக்கிறார். தெய்வநிலை என்று குறிப்பிட்டால் இறைவனோடு ஒரு வகையில் சமம் என்றாகிவிடும் எனலாம். 'பாவியாகிய எனக்கு அருள் தாரும்' என்று மீண்டும் மீண்டும் குறிப்பிடுவதால் அந்த சமநிலை எண்ணம் தோன்றாது.

ஒழுக்க நிலையை வலியுறுத்தவே 'கர்மா கொள்கை' கீழை நாட்டில் கால காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது, மேலும் அருளை ஒருவன் வேண்டுவது என்பது சாதாரண நிலையில் எழாது. ஒழுக்கத்தின் உச்சியில் இருப்பவன்தான் அருளை வேண்டுவான். எனவே அருள் அறக்கோட்பாட்டுக்கு எதிரானது அல்ல.

இயல் 2 காவிய காலம்; நான்கு முக்கிய நிகழ்வுகள் :

இக்காலத்தைக் காவிய காலம் எனலாம். காவிய காலத்தில் நான்கு முக்கிய நிகழ்வுகள் நிகழ்ந்தன.

1) பிராமணீயம் இந்து சமயமாக உருமாறியது. (மும்மூர்த்தி, ஈஸ்வரன், அவதாரக் கோட்பாட்டால்)
2) பெரும்பான்மை மக்களிடம் சமய உணர்வு பரவியது.
3) மக்கள் சமயத்தின் அங்கங்களான கோயில்கள், படிமங்கள், புனிதத் தலங்கள், யாத்திரை இடம் பெறுதல்.
4) சமயத்தில் அகில இந்தியப் பார்வை நுழைதல்.

பிராமணியத்திலிருந்து இந்து சமயம் :

பிராமணியத்திலிருந்து இந்து சமயம் வந்திருந்தால்கூட இது ஒரு பெரும் புரட்சியே. இந்த மாற்றத்திற்கு முக்கிய காரணம் விஷ்ணு, சிவன் என்ற அமைப்பு முறையே. விஷ்ணு, சிவன் என்ற அமைப்பு தோன்றக்காரணம் கிரேக்க, பாரசீகப் படையெடுப்பு ஆகும். உபநிடதக் கடவுளர் தெளிவற்றும் விளங்காமலும் இருந்தனர். உபநிடதம் காட்டும் பரம் பொருள் தனி மனிதத் தொடர்பு அற்றது. ஆனால் கிரேக்க, பாரசீகக் கடவுளரான மித்ரா (Mithra), அப்போல்லோ (Apollo) மானுடத்தைக் கவர்வன ஆகும். இது ஒரு யூகமே. இதனை முற்றிலும் தள்ள வேண்டியது இல்லை. ஆனால் இந்தப் படையெடுப்பின் தாக்கம் மேற்கு இந்தியாவில் மட்டுமே இருந்தது. நாடு முழுமையும் இச்சமயம் இயல்பாகவே பரவியது. அதற்குக் காரணங்கள் வேறாக இருக்கலாம்.

மஹாயானம் – இந்து சமயத்தாக்கத்தின் விளைவு :

இரண்டு சமய இயக்கங்கள் (பிராமணீயம், பௌத்தம்) ஒரே சமயத்தில் எழும்போது, ஒன்றின் தாக்கம் மற்றொன்றிற்கு இயல்பாகவே வந்து சேரும். அதனால் ஒரு சமயத்தின் பண்பு களை இன்னோரு சமயம் இயல்பாகவே பெற நேரும். இப்படித் தோன்றிய பௌத்த சமயப் பிரிவான மஹாயானம் இந்து சமயத்திலிருந்து வேறுபடுத்திக் காட்ட முடியாத அளவு உள்ளது.

இந்து சமயத்தில் பௌத்த சமயத் தாக்கம் :

இந்து சமயத்தில் பௌத்த சமயத்தின் தாக்கம் இரண்டு விளைவுகளை ஏற்படுத்தியது.

1) தத்துவ நிலையிலே சங்கரர் தோன்றினார். சங்கரரால் பௌத்த சமயம் நாட்டைவிட்டே நீங்கினாலும், இந்து சமயம் பௌத்த சமயத்தையே பல வகையாலும் ஒத்த நிலைக்குக் கொண்டு வரப்பட்டது.

2) மக்கள் பின்பற்றிய சமய நிலையிலே வைணவமும், சைவமும் வியப்பூட்டும் மாற்றங்களாகப் பௌத்த சமயத்தை ஒத்திருந்தன. விடுதலை, சமத்துவம், அகிம்சை, வாழ்க்கையைப் பேணுதல், வீரவழிபாடு, மனிதனைத் தெய்வமாக்குதல், படிமத்தில் ஆர்வம் ஆகிய கோட்பாடுகளில் வைணவம் பௌத்தத்தை ஒத்திருந்தது. தன்னைத் தாழ்மைப்படுத்திக் கொள்ளுதல் (Self-mortification), கட்டுப்பாடுள்ள நெறியான வாழ்வு (austerity) ஆகிய பண்புகளில் சைவம் பௌத்தத்தை ஒத்திருந்தது.

இந்து – பௌத்த சமய அடிப்படை வேறுபாடு :

இந்து சமயத்தின் இரு பிரிவுகளும், பௌத்த சமயமும் பலவகைகளில் ஒத்து இருந்தாலும், அடிப்படையில் வேறுபட்டே உள்ளது. மனிதன் உதவிக்காக யாரையோ, எதையோ எதிர்பார்க்க முடியாது என்பது ஹீனயானக் (தெரவாட பௌத்தம்) கொள்கை என்பதினால் மனிதன் தன்னையே நம்ப வேண்டியுள்ளது. வைணவமும், சைவமும் மேலான பரம்பொருளைக் கடவுளாக முன்நிறுத்துவதால் அக்கடவுளையே முழுதும் நம்ப வழிவகுத்தது.

புத்தரின் செல்வாக்கும், பிராமணியத்தின் வெறுமையும் : இந்த நிகழ்வு எப்படி நேர்ந்தது? வேதத்தில் பல கடவுளர் கூறப்பட்டாலும் எந்தக் கடவுளுக்கும் போதுமான அதிகாரம் இல்லாது இருந்தது. உபநிடதங்கள் பிரமத்தைப் பற்றிச் சொன்னாலும், அந்தப் பிரமம் ஒட்டுமொத்தமான மக்கள் சமுதாயத்திற்கு அர்த்தமற்றதாயிருந்தது. பிரமம் கடவுள் அல்ல; அது முழுப் பொருள்; அதனை வழிபட முடியாது, புத்தருடைய சாந்த சொரூபம் நாடெங்கும் எண்ணற்ற படிமங்களாக வழிபடப்பட்டு (பௌத்த சமயக் கோட்பாட்டுக்கு முரணாக இருந்தாலும்) மக்களை ஈர்த்து மயக்கியது. பௌத்தர்களிடம் புத்தர் பெற்றிருந்த ஏற்றம் பிராமணியத்தின் வெறுமையை உணர்த்தியது.

பிராமணிய வெறுமையும் சிவ, விஷ்ணு உருவங்கள் நுழைதலும் :

இந்த வெறுமையில் விஷ்ணு, சிவனின் உருவங்கள் நுழைந்து பிராமணியத்தை இந்து சமயம் ஆக்கியது. வேத காலத்தில் இருந்த ஆனால் முக்யம் பெறாத சூரிய பகவானே விஷ்ணு ஆவார். வேதம் காட்டும் ருத்ரனே சிவன் ஆவார். ஆனால் சிவ வழிபாடு அதற்கு முன்பே இருந்து வந்தது. எந்த ஒரு முக்கிய தெய்வத்தையும் விட்டு விடக்கூடாது என்ற திட்டத்தில் ஆரியர்கள் சிவனை ருத்ரனோடு ஒன்றுபடுத்தி விட்டார்கள்.

பக்தி இயக்கம் :

இதன் விளைவாகப் பக்தி இயக்கம் தோன்றியது. பக்தி என்பது ஒரு கடவுளைச் சுற்றி வருவது. ஓஸிரிஸ் (Osiris), அடோனிஸ் (Adonis), சைபெலெ (Cybele) சமயங்களில் ஒரு கடவுளில் மையப்படுத்தல் முன்பே இருந்துள்ளது. ஆனால் இந்தியாவில் முதன்முதலாக இரு கடவுளர் தனித்துத் தெளிவாக வேரூன்றினர்.

பகவத்கீதை :

பக்தியைப் பரப்பக்கூடிய நூலாக பகவத்கிதை மலர்ந்தது. பாரம்பரியமான தத்துவக் கருத்துக்களையும் பகவத்கீதை எடுத்துரைத்தமையால் ஆசாரம் நிறைந்த சமயமும் ஏற்றுக்கொள்ள வழி கிடைத்தது. கீதையின் நோக்கமே கிருஷ்ணனை உயர்வுபடுத்துவது ஆகும். அதற்காகக் கீதையின் ஆசிரியர் அனைத்துச் சமயக் கருத்துக்களையும் உள்வாங்கிச் சமரசம் செய்து இந்நூலை இயற்றினார். வேதக் கடவுளரை வழிபடுவது சரி; அவர்களை வழிபட்டால் கிருஷ்ணனை வழிபடுகிறோம். சாங்கியக் கொள்கையான ''பிரகிருதி'' (matter) ''புருஷ்'' (Person) என்பனவும் சரி; ஏனெனில் கிருஷ்ணனே பிரகிருதி; (புருஷோத்தமன்) யோகாவும் சரி; ஏனெனில் அவனே யோகாவின் தலைவன் ஆவான். உபநிடதங்களும் சரி; ஏனெனில் அவனே முழு முதற்பொருள் (The Absolute) ஆவான்.

பகவத் கீதையின் சரமசுலோகம் தீயவர்கள் தன்னை நாடி வரட்டும் என்று சொல்வதோடு நிற்கவில்லை. ''காலகாலமாகக் காத்து வந்த தருமங்கள், வழிமுறைகள் ஒரு பொருட்டல்ல. என்னை அடைவது ஒன்றே போதும்'' என்று சொல்லக்கூடிய அளவிற்குக் கீதை விரிந்துவிட்டது.

அருள் – ஏகான்மவாதம்; முரணை ஏற்றது கீதை :

கீதை அருளைப் பேசுகிறது. அதே சமயம் உபநிடதத்திற்கு ஏகான்ம வாத (monism - உள்பொருள் ஒன்றே) விளக்கம் தருகின்றது. அருளும், ஏகான்மவாதமும்

முன்னுக்குப்பின் முரணாக இருக்கலாம். ஏகான்ம வாதச் சூழலில் கடவுள் வழிபாடு என்ற பாரம்பரியமும் நிலவியது என்பதனை மறுக்க முடியாது. ஏகான்ம வாதத்தைக் கடுமையாகப் பரப்பிய சங்கரரே சிவனைப் பற்றியும், விஷ்ணுவைப் பற்றியும் அரிய பக்திப் பாடல்களைப் பாடினார் என்பதனை நினைவு கூர வேண்டும்.

இயல் – 3 :

சைவம் என்ற இயலில் காஷ்மீர சைவம், வீரசைவம் பற்றிக் கூறுகிறார்.

1) சிவபெருமானிடம் இடையறா பக்தி
2) சைவாகமங்களை ஏற்றுக் கொள்ளுதல்
3) அறுபத்து மூவரை ஏற்றுக் கொள்ளுதல்
4) திருவாசகத்தின் தாக்கம்
5) வீர சைவத்தின் மூன்றுபடி நிலைகளிலும் கடவுளைச் சைவசித்தாந்த அடிப்படையில் பார்த்தல்
6) இரண்டு முறைகளுக்கும் உள்ள தொடர்பு நிலை

சைவ சித்தாந்தம் :

இப்பகுதியில் கீழ்வரும் செய்திகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

''சைவசித்தாந்தம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிற்கு முன்பே வேரூன்றி விட்டது. சைவசித்தாந்தத்தின் மூல நூல்கள் வேதங்களும், ஆகமங்களும் ஆகும்''. திருமுறைகள் – சாத்திரங்கள் – சைவ சித்தாந்தம் வலியுறுத்தும் அத்வைதம் – பசு,பதி,பாசம் – சிவனின் பண்புகள் (அல்லது பண்புகள் அற்றநிலை) – படைப்பு – சரியை, கிரியை, யோகம்.

அடுத்து சைவத்திற்கும், வைணவத்திற்கும் உள்ள வேறுபாட்டை விளக்குகிறார். சைவம், வைணவம் இரண்டும் வேதங்கள், உபநிடதங்களை ஏற்கின்றன. அவற்றோடு வைணவம் பகவத்கீதை, பாதராயணரின் வேதாந்த சூத்திரங்கள், பாஞ்சராத்திர ஆகமங்கள் ஆகியனவற்றையும் ஏற்கிறது. சைவம் சிவபெருமானை முதன்மைப்படுத்துகிறது. வைணவத்தில் விஷ்ணு முதன்மை பெறாமல் கிருஷ்ணனும், இராமனும் முதன்மைப் படுத்தப்படுகின்றனர். சைவத்திலும் வைணவத்திலும் சக்தியின் ஆற்றல் பேசப் பட்டாலும், சைவத்தில் உள்ள அளவு வைணவத்தில் இல்லை. வைணவம் அவதாரம் பற்றிப் பேசுகிறது. சைவம் பேசுவதே இல்லை. இது மிக முக்கிய வேறுபாடு ஆகும்.

சைவசித்தாந்தம் அருளைப்பற்றி விரிவாகச் சொல்கிறது. கர்மாவும், அருளும் இரண்டு இணைகோடுகளாகத் தெரிந்தாலும், சித்தாந்தத்தில் (இந்து சமயத்தின் பிறபிரிவுகள் போல் அல்லாது) ''அருள் கர்மாவை அழிக்காது'' அருளே கர்மாவைத் தூண்டுகிறது'' என்ற கருத்து பேசப் படுகிறது. சிவபெருமான் ஆன்மாக்களிடம் காட்டும் அருள் Francis Thompson இன் "Hound of Heaven ஐப் போன்று உள்ளது என்கிறார் டி.ஐ. தம்பையா. கீதை சில சமயங்களில் கர்மாவைத் தாண்டி உயர்ந்து அருளைப் பேசினாலும், மீண்டும் கர்மாவையே சுற்றிச் சுழல்கிறது. சித்தாந்தம் கர்மாவைத் தாண்டி உயராது, கர்மாவையே சிவபெருமான் ஆன்மாக்க ளிடம் காட்டும் அக்கறையாக – அன்பு வடிவமாகக் காட்டி விடுகிறது.

ஒரு மதிப்பீடு

இயல் 4; கிறித்துவ – இந்து சமய ஒற்றுமைகள் :

கிறித்துவம் அல்லாத சமயங்களில் வைணவம் கிறித்துவத்தோடு மிக நெருங்கி இருக்கிறது என மோனியர் வில்லியம்ஸ் கூறுகிறார். ''கிறித்துவத்திலே விடுதலையின் பயன் இறைவனோடு ஒன்றுதல். வீடுபேறுக்கு வழி அருள். இவற்றையே தான் வைணவம் சொல்கிறது'' என்பார் ருடால்ப் ஒட்டோ (Rudolf Otto) ''புதிய ஏற்பாடு காட்டும் அருளும், சைவ சித்தாந்தம் காட்டும் அருளும் ஒன்றே'' என்பார் ஜெ.எம். நல்லசுவாமிப்பிள்ளை.

''முழுமனத்தோடு அவனிடம் அடைக்கலம் கொள். அவனது அருளால் பூரண அமைதி பெறுவாய்'' என்று பகவத்

கீதையில் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குக் கூறுகிறான். சரமசுலோகத்திலும் அருளைப் பற்றிக் கூறப்படுகிறது. வைணவம் காட்டும் பிரபத்தி நெறியும் இதுவே. சைவ சித்தாந்தத்தில் அருள் அல்லாது சிவன் பேசப்படுவது இல்லை. பக்தர்களுக்கு அருள இறைவன் அவதாரம் எடுக்கிறான். கோபியரோடு கூட அன்றாட வாழ்விலேயே பங்கேற்கிறான். சிவபெரு மான் அவதாரம் எடுக்காவிட்டாலும் பக்தர்களைக் காக்க அவ்வப்பொழுது காட்சி தருகிறான்.

கடவுளை நிருபிப்பது – இந்து சமயம் கடவுளை ஒப்புக்கொள்வது – கிறித்துவம்:

''ஒரு மனிதன் பாவம் செய்து விட்டால், அவனுக்காக இறைவனிடம் முறையிட வழக்கறிஞர் உண்டு' என புதிய ஏற்பாடு கூறுகிறது. இந்து சமயத்தில் சக்தி இதே பணியைத் தான் செய்கிறாள், லக்ஷ்மி இல்லாத விஷ்ணு இல்லை. சைவத்திலும் சக்தி இந்த நிலையில் தான் உள்ளாள்.

இந்து சமயத்திலே உள்ள வேறுபாடுகளும், ஒற்றுமைகளும் :

இந்து சமயம் என்பதே முஸ்லிம் படையெடுப்பிற்குப்பின் வந்த பெயராகும். வேதாந்தம், சைவம், வைணவம், சாக்தம் என்ற பல வேறுபட்ட சமயக் கோட்பாடுகளைக் கொண்டவைகளே இந்நாட்டில் வழங்கி வருகின்றன. ''அறுவகைச் சமயங்கள் இந்தியாவில் இருந்தாலும், மானசரோவர் ஏரிபோல பரந்துபட்ட ஒன்று. ஒவ்வொரு சமயத்தாரும் தத்தமக்கு ஏற்ற கருத்தை முகந்து கொள்ளலாம்'' என்கிறார் மாக்ஸ் முல்லர். இந்த அடிப்படை ஒற்றுமை இருப்பதால்தான் விஷ்ணுவை சிவனாகவும், சிவனை விஷ்ணுவாகவும் பாவிக்க முடிகிறது. இதனால்தான் தத்துவ ஞானி சங்கரர் பக்திக் கவிஞராக முடிகிறது. பக்திக் கவிஞர்கள் சங்கரரின் தத்துவம் பேசுகின்றனர்.

கிறித்துவ சமயத்திற்கும், இந்து சமயத்திற்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகள் :

கடவுள் உண்டு என நிறுவுகிறது சிவஞான சித்தியார். கடவுளை "Personal" என நிறுவுகிறார். ஆனால் பைபிளோ கடவுளை நிரூபிப்பதும் இல்லை; விளக்குவதும் இல்லை. அது கடவுளின் வாழ்வையும் வாக்கையும் கூறுவது. ''தொடக்கத்தில் கடவுள் பூமியையும், விண்ணையும் படைத்தார்'' என்று ஆரம்பித்துத் தொடர்ந்து கடவுளின் செயல்களை விளக்குகிறது. கிறித்துவன் இருக்கின்ற ஒன்றை வைத்துத் துவங்குகிறான். அந்த ஒன்று இல்லை என்று செயல்பட அவனுக்கு உரிமை இல்லை.

''ஒன்றிலிருந்து படைக்கிறான்'' இந்து சமயம் :

இந்து சமயத்தில் கடவுள் உண்மையிலேயே படைப்பாளி இல்லை. ஏதோ ஒன்றிலிருந்துதான் உருவாக்கு கிறான். தங்க விந்துவிலிருந்தோ (ஹிரண்ய கர்ப்பம்), மாயையிலிருந்தோ அல்லது தன்னிடமிருந்தோதான் படைக்கிறான். ''தொடக்கத்தில் கடவுள்'' என்பது பைபிள் தொடக்கத்தில் பதி, பசு, பாசம்'' என்பது சைவ சித்தாந்தம். இந்து சமயத்தில் ஆன்மா கடவுளிடமிருந்து பிரித்துப் பேசப் பட்டாலும், ஏதோ ஒரு விதத்தில் இரண்டும் அத்துவிதமாய்க் கலந்த நிலையிலே உள்ளது.

''மனிதனின் வீழ்ச்சி கிறித்துவம் :

கிறித்துவத்தில் மனிதன் கடவுளைப் போலப் படைக்கப்படுகிறான். ஆனால் அந்நிலையிலிருந்து வீழ்ச்சியடைகிறான். அவனுக்கும், கடவுளுக்கும் உள்ள இடைவெளி பெரிதாகிறது. இப்பொழுது அவன் பாபாத்மா ஆவான். இந்து சமயத்தில் ஆன்மாவிற்கு வீழ்ச்சியே இல்லை. இறப்பு, பிறப்பு அதனை மாற்றுவது இல்லை. தீய செயல்களால் தீவினையும் நற்செயல்களால் நல்வினை யும் பெறலாம். ஆனால் ஆன்மா அவற்றிற்கு அப்பாற்பட்டது. விவேகானந்தர் மனிதனை தெய்வீக மானவன் என்பார்.

"Sin" :

'Sin" என்ற ஆங்கில வார்த்தையை ''பாவம்'' ''மலம்'' என இந்து சமயத்தில் சொல்லப்படுகிறது. இரண்டுமே பொருத்தமன்று. தீய, கொடிய செயல்கள் ''பாவம்''

எனப்படுகிறது. கிறித்துவ சமயத்தில் அயலானுக்குக் கெடுதல் செய்யலாம். கடவுளுக்கே "Sin" செய்ய முடியும். ''மலம்'' என்பது தூய்மையற்றது. மூல மலத்தினால் தனித்தன்மை பெறுகிறது. சம்சாரத்தில் உழலுவதால் ''மாயா மலம்'' என்ற மற்றொரு அழுக்கையும் பெறுகிறது. இந்து சமயத்தில் ''பாவம்'' மனிதனால் செய்யப்படுகிறது. ஆன்மா மனிதன் அல்ல. மனிதனாகயிருப்பது தற்காலிகமானது. மனிதனின் செயல்கள் ஆன்மாவைச் சுற்றி மூடலாம். ஆனால் அந்த அழுக்கு ஆன்மாவைப் பற்றாது. கிறித்துவத்தில் செயலைச் செய்பவனும், ஆன்மாவும் ஒருவனே (ஒன்றே). பாவம் (Sin) செய்த ஆன்மா சாகிறது.

சம்சாரக் கடலிலிருந்து மீட்சி :

பாவம் என்பது ஆன்மாவோடு இணைக்கப்படாததினால், மன்னிப்புக்காகக் கதறி அழுவது இந்து சமயத்தில் அதிகம் இல்லாது போகிறது. மாணிக்க வாசகரும், துகாராமும் விதிவிலக்காக உள்ளனர். அவர்களுடையதெல்லாம் தனி மனித அனுபவங்களாகும். காலகாலமாகப் பேசப்படுவது மீட்சி ஆகும். எதிலிருந்து மீட்சி? சம்சாரக் கடலிலிருந்து மீள்வதே மீட்சி ஆகும். அதுவே வீடுபேறு ஆகும்.

சம்சாரக் கடலிலிருந்து மீள்வது முடிவானது அல்ல. இறைவனை அடைவதே முடிவானது. இறைவனோடு ஒன்றுவதே பேரின்பம். அதனால்தான் பக்திக் கவிஞர்கள் ''உன்னோடு ஒன்றுவது என்று கொல்?'' ''உன்திருமுகமும் காண்பது என்று கொல்?'' என்று பாடுகிறார்கள். அந்தக் கதறல் தலைவனைப் பிரிந்த தொண்டனின் கதறல்; பெற்றோரைப் பிரிந்த குழந்தையின் கதறல்; தலைவனைப் பிரிந்த தலைவியின் கதறல். இறைவனைப் பிரிந்ததினால் வந்ததே சம்சாரத் துன்பம். இந்தப் பிரிவிற்குக் காரணம் மாபெரும் அண்டப்பேரியக்கம். (Cosmic Order) அதனை மீண்டும் பெற சமநிலை இருக்க வேண்டும். அந்தச் சமநிலை அடைவதே இந்து சமயத்தில் இலக்கு ஆகும்.

இறைவனோடு இணக்கம் — (Reconciliation) :

''இந்தப்பிரிவு வெளிச்சக்தியினால் நிகழ்வது அல்ல; மனிதன் தன் தகுதியின்மையினால் தடம் மாறிப் போகிறான்'' என்பது கிறித்துவம். கடவுளால் ஏற்றுக் கொள்ளப்படும் முன், மனிதன் சுத்திகரிக்கப்பட்டு இறைவனோடு இணக்கம் (reconciled) கொள்ள வேண்டும். இந்த இணக்கம் (reconciliation) இந்து சமயத்தில் இல்லை. ஆன்மாவிற்கேன்று சில தகுதிகள் இந்து சமயத்தில் உண்டு. கிறித்துவத்தில் மனிதனுக்கு உள்ள தகுதி எல்லாம் கடவுள் கொடுப்பதே. மனிதனைக் காப்பாற்றி மகனாக ஏற்றுக் கொள்கிறான்.

இந்து சமயத்தில் இறைவனை அடைய இறைவன் அருள் பெற சக்தியின் துணையோ, குருவின் துணையோ தேவைப்படுகிறது.

9

Saiva Siddhantham in Relation to Science 1965

(ஆசிரியர் – எஸ்.எம். முத்தையா; மலேசியா; பக்கம் 132)

ஆக்கக்கூறின் உட்கூறுகள்

ஆக்கக்கூறு (Matter) : பொருள் பல தனிமங்களைக் (elements) கொண்டது. மூலகங்கள் அணுக்களால் ஆனவை. அணுக்கள் புரோட்டான்களாலும், எலக்ட்ரான்களாலும் ஆனவை. அவை நேர் மின்னோட்டத்தின் நேர், எதிர் மின் முனைகள் ஆகும். (positive and negative charges of electricity).

பரமாணுக்கள் : அணு, ஆணவம் என்ற சொல்லினடியாகப் பிறந்தது. கவர்தல் எனும் அர்த்தம் கொண்டது. புரோட்டான்களும், எலக்ட்ரான்களும் நான்கு வகையான பரமாணுக்கள் எனப்படும். நுண் அணுக்களால் ஆனவை ஆகும். மண், நீர், தீ, காற்று என்பன நான்கு வகை பரமாணுக்கள் ஆகும். இப்பரமாணுக்கள் நித்யமானவை. இவை பொருளின் முடிவான உட்கூறுகள் ஆகும்.

மண், நீர் பரமாணுக்கள் இணைந்து புரோட்டான் உருவாகும். தீ, காற்று பரமாணுக்கள் இணைந்து எலக்ட்ரான் உருவாகும். புரோட்டானில் உள்ள மண் பரமாணுவின் ஈர்ப்புச் சக்தி எலக்ட்ரானை ஈர்த்து வெளியேறாமல் தடுக்கின்றது. எலக்ட்ரானில் உள்ள தீ பரமாணுவின் வெப்பம் நீர் பரமாணுவுடன் மோதி எலக்ட்ரான் புரோட்டானுடன் இணைவதைத் தடுக்கிறது. எலக்ட்ரானில் உள்ள காற்று பரமாணுவின் இயக்கத்தின் வேகம் அதை புரோட்டானைச் சுற்றிச் சுழல வைக்கிறது. புரோட்டானைச் சுற்றி வரும் எலக்ட்ரானின் இச்சுழற்சி ஒரு வகையான அதிர்வினை ஏற்படுத்தும். அது சப்தம் ஆகும். தீ பரமாணு அணுவில் ஒளி ஏற்படுத்துகிறது.

அணுவில் உள்ள பரமாணுக்களின் எண்ணிக்கையைக் கூட்ட ஆக்கக்கூறில் பல்வேறு பொருள்கள் (substances) உருவாகும். வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு பண்புகள் (characterestics) பரமாணுக்கள் பல்வகையான எண்ணிக்கையில் இணைவதால் தோன்றும் தரங்கள் ஆகும். பொருள்களின் இப்பண்பினை மனிதன் தன் புலன்களால் உணர்கிறான். ஒவ்வொரு பொறியும் இந்திரியத்தின் ஒரு பண்பினை உணரும் சக்தி கொண்டது. ஒவ்வொரு பொறியும் தன்னிடமுள்ள குறிப்பிட்ட பண்பினை உடைய பரமாணுக்களின் எண்ணிக்கை பெரும் பான்மையே இவ்வாறு உணர்வதற்குக் காரணமாகிறது.

Karmam - The Cosmic Vibration : மேலே விளக்கப்பட்ட காரணம் Cosmic Viberation எவ்வாறு உருவாகிறது என்றும் ஒலி எவ்வாறு உண்டாகிறது என்றும் அதனால் அண்டத்தால் சுழல்வதும் சுற்றுவதும் முடிகிறது என்பதனை உணர்த்துகிறது. ஆக்கக்கூறில் உள்ள வேகத்தினால் (Matter) அது நிலைத்த இயக்கத்திலும் அதிர்விலும் இருக்கிறது. இதனை கர்மம் (படைப்பின் காரணம், பரிணாமம் அல்லது மாற்றம், அழிவு) என்பர்.

ஆகாயம் [வானம்] : ஆகாயம்தான் ஆக்கக்கூறில் நிகழும் அனைத்தையும் தொடர்புபடுத்தும் ஊடகம் (medium) ஆகும் என்று இந்திய ஞானிகள் கண்டறிந்தார். ஆகாயத்தின் பண்பு ஒலி ஆகும். அது நிரந்தரமானது; எல்லையற்றது; முடிவில்லாதது.

Ether - Medium of Transmission : ஒளிக்கதிர்களையும், பல்வேறு கதிர்களையும் பாய்ச்சும் ஊடகம் ஈதர் ஆகும். ஈதர் என்ற ஊடகத்தினால்தான் தொலைவில் உள்ள விண்மீன்களை நம்மால் பார்க்க முடிகிறது. ரேடியோ அலைகள் ஈதர் மூலம் உலகைச் சுற்றுகின்றன. ஈதரின் ஒட்டு மொத்த இயல்பு ஒலி ஆகும்.

நால்வகை ஒலிகள் :

1) சூக்குமை – ஒலியின் எல்லையற்ற நிரந்தர அமைப்பு.

2) பைசந்தி – ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு இயங்குகிற ஒலியின் நிலை.

3) மத்திமை – ஒரு எல்லைக்குட்பட்ட ஒலி அமைப்பு; அதிர்வு மட்டுமே உணர முடியும்.

4) வைகரி – செவிகளுக்குப் புலனாகும் ஒலி.

10
The Siva Purana
1969 -1970

(ஆசிரியர் – ஜெ.எல். சாஸ்திரி; 210 பக்கங்கள்; வெளியிட்டவர்கள் – மோதிலால் பனார்சிதாஸ், புதுதில்லி. நான்கு தொகுதிகள்)

சிவபுராணம் *24000* சுலோகங்களை உடையது.

தொகுதி : *1* – சிவபுராணத்தின் பெருமை; வித்யேசுவர சம்கிதையும், ருத்ர சம்கிதையில் பகுதி *1, 2*-ம் இதில் அடங்கும்.

தொகுதி : *2* – ருத்ரசம்கிதை *3, 4, 5.*

தொகுதி : *3* – சதருத்ர சம்கிதை, கொடி ருத்ர சம்கிதை, உமா சம்கிதையில் ஒரு பகுதி.

தொகுதி : 4 – உமா சம்கிதை (எஞ்சிய பகுதி). கைலாய சம்கிதை, வாயவீய சம்கிதை.

"The Linga Purana"
1973

(ஆசிரியர் – ஜெ.எல். சாஸ்திரி; 809 பக்கங்கள்; வெளியிட்டவர்கள் – மோதி லால் பனார்சிதாஸ்; 2 தொகுதிகள்)

தொகுதி : 1 – 18 அத்தியாயங்கள்; லிங்க வழிபாடு, சடங்குகள், புராணக்கதைகள் உள்ளன.

தொகுதி : 2 – 55 அத்தியாயங்கள்; லிங்க வடிவம், சிவலிங்க தத்துவம், சிவ விரதங்கள், மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

11
Love of God According to Saiva Siddhanta
1971

(ஆசிரியர் – Maraiasusai Dhavamani; வெளியிட்டவர் – Oxford University Press, London; விலை – 4.20 டாலர்; பக்கம் – 402)

பன்னிரு திருமுறைகள் – பதினான்கு சாத்திரங்களிலும் பக்தி பற்றி முழுமையான ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இப்படி ஒரு முழுமையான ஆய்வு தமிழில் கூட இதுவரை வெளிவரவில்லை. நான்கு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

Part - I

Etymology and Semantics of Bhakthi :

I. The Sanskrit term Bhakthi.

''பக்தி'' என்ற சமஸ்கிருத சொல் ''பஜ்'' (Bhaj) என்ற வேர்ச் சொல்லிலிருந்து வந்தது. இதன் பொருள் "to deal out, apportion, divide, share, allot to", "share" என்றால் ஒரு பகுதியை கொடுத்தலும், ஒரு பகுதியை வைத்திருத்தலும் ஆகும். ''பஜ்'' என்ற இதே சொல் அன்பு அடிப்படை யிலும் பல பொருள் தருகின்றது''. to enjoy, possess, enjoy carnally, embrace; to favour, prefer, choose, elect, to honour, worship, adore, revere, esteem; to be attached to, to court; to be devoted; be loyal.

மொழியியல் அடிப்படையில் (etymological) பக்தி என்றால் பிரித்துக் கொடுத்தல், பங்கு பெறல் (distribution, partition, participation, sharing) ஆகும்.

அடுத்து பெற்றோர் – குழந்தைகள் பாசம்; ஆண் – பெண் காதல்; எஜமான் –பணியாள் விசுவாசம்; குருபக்தி பற்றி விளக்குகிறார்.

சமய அடிப்படையில் பக்தி, கடவுளிடம் மரியாதை, சிவ வழிபாட்டில் பக்தி, புற வழிபாடு, கடவுள் பால் அன்பு கொளல், மனிதரிடம் கடவுள் அன்பு என விளக்குகிறார்.

''பக்தி'' என்ற சொல்லாராய்ச்சியில் முழுமையாக ஈடுபட்ட ஆசிரியர் நிறைவாக ''இறையன்பில் முழுச்சரணாகதி'' என்கிறார்.

II. The Tamil Term Anpu :

''அன்பு'' க்கு வேர்ச் சொல்லைக் காணுதல் கடினம் என்கிறார் ஆசிரியர். ''அணி'' (நெருங்கி வரல்), ''அணம்'' (நட்பு, காதல், பாசம்), ''அணு'', காதல், காமம் ஆகியவற்றைச் சங்க இலக்கியங்கள், சமய இலக்கியங்கள் மூலமும் விளக்குகிறார்.

III. The use of Bhakthi in the Epics :

இராமாயண, மகாபாரத இதிகாசங்களில் மனிதர்களுக்கிடையே உறவு நிலைகளில் தோன்றும் அன்பு, இறைவனிடம் உள்ள பக்தி பற்றி விரிவாக மேற்கோள்களுடன் காட்டுகிறார்.

IV. The Use of Bhakthi in the Bhagavad - Gita :

பகவத்கீதையில் 43 இடங்களில் பஜ், பக்தி பயன்பட்டிருப்பதும் கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவைக் குறிப்பது மட்டுமே என்கிறார்.

Part - II

Historical Development of Bhakthi :

I. Vedic Devotion :

வேதக்கடவுளரிடம் (அக்னி, இந்திரன், வருணன், ருத்ரன்) காட்டப்படும் அன்பு குறித்து பல மேற்கோள்கள் காட்டப் பட்டுள்ளன.

II. Upanishadic Theism and Bhakthi :

உபநிடதங்களில் – குறிப்பாக கதோப நிடதம், ஸ்வேதாஸ்வதர உபநிடதம் – வரும் பக்திக் கோட்பாடு பற்றி மேற்கோள் களுடன் விளக்குகிறார்.

III. Siva Bhakti in the Mahabharata :

மகாபாரதத்தில் சிவபெருமான் பெறும் முதன்மையும், பக்தி பற்றியும் குறிப்பிடு கிறார்.

IV. The Gita's teaching on Bhakti :

இறைவனை அடைய பக்தியே சிறந்த வழி என்று முதலில் சொன்ன நூல் பகவத்கீதை; வேத வேள்வியினும், உப நிடதம் கூறும் வீடுபேற்றினும், பக்தியே முதன்மை என்று கூறுவது பகவத்கீதை.

V. Bhakti in the Bhakti sutras :

சாண்டில்யரின் பக்தி சூத்திரமும், நாரதரின் பக்தி சூத்திரமும் பக்தி இயக்கத் தின் உன்னத இலக்கியங்கள் ஆகும். சாண்டில்யரும் நாரதரும் ஞானம், கர்மா, யோகாவைவிட பக்தியே சிறந்தவழி என்று கூறுகின்றன. பக்தி மட்டுமே கடவுளை மையப்படுத்துவது. ஏனைய மூன்றும் சக்தி, தகுதி, வீடுபேறு ஆகியவற்றை முன் வைப்பன. நாரதர் பக்தி நெறியில் 11 படிநிலைகளை முன்வைக்கிறார்.

VI. The Isvara - Gita and Bhakti :

கூர்ம புராணத்தில் உத்தர விபாகையில் முதல் பதினோரு அத்யாயங்களில் இடம் பெற்றுள்ள ''ஈசுவர கீதை'' பக்தி பற்றிக் கூறுவதை விளக்குகிறார்.

VII. The origin of Bhakti :

பக்தி ஆரியர்களுக்கு உரியதல்ல என்றும் மகாபாரதம், பகவத்கீதை ஆகிய நூல்களில் நாராயணபக்தி கூறப்படுவது பற்றியும், கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே வட இந்தியாவில் பாகவத மரபு இருப்பது பற்றிய பேஸ்நகர் கல்வெட்டினைப் பற்றியும், கிறித்து சகாப்தத்தின் ஆரம்ப காலத்திலேயே தென்னிந்தியாவில் பக்தி நெறி பரவியிருந்தது பற்றியும் சான்று களுடன் விளக்குகிறார்.

VIII. The origins of Saivism :

இருக்கு வேத உருத்திரன் அதர்வண வேத பசுபதி – கேனோபநிடத உமா தைத் திரிய சம்கிதையில் உருத்திரன் – பாணினி, பதஞ்சலி, ஸ்வேதாஸ்வதர உபநிடதம் கூறும் உருத்திரன் பற்றி விளக்கமாகக் கூறுகிறார்.

திராவிட சிவன் – மொகஞ்சோதாரோ இலச்சினையில் சிவன் உருவம் – லிங்க வழிபாடு – தொல்காப்பியம் காட்டும் நிலத் தெய்வங்கள் – சேயோன் – எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களில் சிவன் – சிலப்பதி காரம், மணிமேகலை யில் சிவபெருமான் பற்றிக் கூறுகிறார்.

திருக்குறள் உணர்த்தும் கடவுள் உண்மை, அன்பு, பற்றி விளக்குகிறார்.

IX. The Agamic Bhakti

இருபத்தெட்டு சைவ ஆகமங்கள் பற்றியும், மிருகேந்திர ஆகமம் பற்றியும் விரிவாகவும் எழுதுகிறார்.

Part III

Analysis of Tamil Saivite Mystical Texts

I. Bhakti in the Early Thirumurai :

திருமுருகாற்றுப்படை, திருமந்திரம், காரைக்காலம்மையார் பாடல்களில் காணப்படும் பக்தி நெறி பற்றி விளக்குகிறார்.

II. Campantar

III. Appar

IV. Cuntarar

V. Manikkavaccakar.

Part - IV

Analysis of Tamil Saivite Theological texts:

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினையும் 159 பக்கங்களில் விரிவாக ஆய்ந்து அவைகள் உணர்த்தும் பக்தி கோட்பாட்டினை முன்வைக்கிறார்.

Part - V

Synthesis of the doctrine of Bhakti

I. The theological presuppositions :

வேதம், மகாபாரதம், தமிழ் இலக்கியங்கள், சைவ ஆகமங்கள், திருமுறைகள், பதினான்கு சாத்திரங்கள், உணர்த்தும் இறைக்கோட்பாடு, மனிதத் தத்துவம், மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள உறவுநிலை பற்றி விளக்குகிறார்.

II. Bhakti as the way of Salvation :

பக்தியே வீடுபேற்றிற்கான சாதனம் என்பதனை ஸ்வேதாஸ்வதர உபநிடதம் முதல் பதினான்கு சாத்திரங்கள் வரை கூறும் கூற்றுகளை முன் வைத்து நிறுவுகிறார்.

III. The Nature of Salvation :

ஆன்ம விடுதலைக்கு பக்தி வழி மட்டுமன்று; ஆன்ம விடுதலையின் சாரமே பக்தி என்று சான்றுகளுடன் நிறுவுகிறார்.

IV. The life of the mystic (Jivan Mukta in God) :

ஜீவன் முக்தர்கள் நிலை பற்றிச் சான்றுகளுடன் கூறுகிறார்.

12
Nataraja in art, thought and Literature
1974

(ஆசிரியர் – சி. சிவராமமூர்த்தி; வெளியீடு – பதிப்புத்துறை, இந்திய அரசு; பக்கம் – 412; விலை – ரூ. 800)

இந்தியத் துணைக் கண்டத்தில் இன்னும் சொல்லப் போனால் உலகளவில் – எழுந்தருளி உள்ள நடராஜப் பெருமானின் திருவுருவ தரிசனமே இந்நூல். அத்துணைப் புகைப்படங்கள் இந்நூலில் அழகுடன் தரப்பட்டுள்ளன. ஆசிரியர் தன் மும்மொழிப் புலமையால் தமிழ், வடமொழி இலக்கியச் சான்றுகளோடு இந்நூலை ஆங்கிலத்தில் தந்துள்ளார்.

Chapter one : "Nataraja, the Lord of Dance" என்ற கட்டுரையில் நடராஜர் பற்றிய செய்திகளை புராணங்கள், கலித்தொகை முதலிய இலக்கியங்கள் – இரத்னாகரர், காளிதாசர், சூத்ரகர் சங்க காலக் கவிஞர்கள் வாக்குகள் மூலம் வெளிப்படுத்துகிறார்.

Chapter two : "Natya" கட்டுரையில் நாட்டிய சிற்பங்கள், ஓவியங்கள் பற்றியும், பரத முனியின் நாட்டிய சாஸ்திரம் பற்றியும் குறிக்கின்றார். இயற்கையே நடனம் ஆடுவதாகச் சொல்கிறார்.

Chapter Three : "The significance of Siva's Dance"கட்டுரையில் சிவபெருமானுடைய பல்வேறு நாட்டிய நிலைகளை – ஆனந்த நடனம் (சிதம்பரம்), இறைவனின் குணங்களான சர்வவல்லமை (திரிபுராந்தக மூர்த்தி), சர்வ வியாபகம் (அஷ்டமூர்த்தி), முற்றறிவு (தக்ஷிணா மூர்த்தி) ஆகியவற்றை வெளிப்படுத்தும் நடனங்கள் – காலாதீத நடனம் (காலாந்தக மூர்த்தி), படைத்தல், காத்தல் தொழில்களை உருவகிக்கும் நடன மூர்த்தம் (அர்த்த நாரீசுவர மூர்த்தி) – விளக்குகிறார். இதயத் தாமரையில் நடராஜப்பெருமான் ஆடுவதைக் காண்பதே தரிசனம் என்கிறார். ஆடும் சிவபெரு மானையும் அறிதுயிலில் பள்ளிகொண்ட ரெங்கநாதரையும் ஒரே கோட்பாட்டுக்குள் காண்கிறார்.

Chapter four : "Karanas presented in siva's Tandava" என்ற கட்டுரையில் தஞ்சை பெரிய கோயிலில் காணப்படும் நடனச் சிற்பங்களின் 81 கரணங்களையும், பரதரின் நாட்டிய சாஸ்திரத்தோடு இயைபுபடுத்தி (தஞ்சையில் உள்ள 81 கரணங்களையும் படத்துடன் தந்துள்ளார்) அவை சிதம்பரம் கோயிலில் காணப்படும் கரணசிற்பங்களோடு வேறுபடுதல் – ஒன்படுதலையும் சுட்டிக்காட்டுகிறார். 81 கரணங்களுக்கான பரதரின் மேற்கோள்களும் தரப்பட்டு உள்ளன.

Chapter five : "Karanas presented by Vishnu as Krishna" என்ற கட்டுரையில் கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி கோயிலில்

இருக்கும் கரண சிற்பங்களை தஞ்சை, சிதம்பரம் சிற்பங்களுடனும், நாட்டிய சாத்திரத்துடன் ஒப்பிட்டு (படங் களுடன்) விளக்குகிறார். இந்த இரண்டு பகுதிகளும் நாட்டியக் கலைஞர்களுக்கு ஓர் அரிய கருவூலம் ஆகும்.

Chapter six : Ganesa, Dikpalas and Matrikas dance in accompaniment" கட்டுரையில் கணபதி, சாமுண்டி, சந்திகா, சரஸ்வதி ஆகியோர் நடனம் பற்றி விளக்குகிறார்.

Chapter seven : பகுதியில் நடனம், நடராஜர் பற்றி – வேத இலக்கியத்தில் இதிகாசங்களில் – ஆய்கிறார்.

Chapter eight : "Nataraja pictured in Literature" கட்டுரையில் காளிதாசர் (ரகுவம்சத்திலும்), ரத்னாகர் (ஹரவிஜயத்திலும்), மூகர், சூத்ரகர், நீலகண்ட தீட்சதர், க்ஷேமேந்திரர், மங்க்கா (ஸ்ரீகண்ட சரிதத்திலும்), சுபந்து, பாணர், உத்பிரேக்ஷா வல்லபர் ஆகிய வடமொழிக் கவிஞர்கள் சிவபெருமானின் பல்வேறு அழகிய தோற்றங்களை – கங்காதரர், சந்திரசேகரர், மதனாந்தகர், அர்த்தநாரீசுவரர் – வருணிப்பதை மேற்கோள்களோடு சிவராமமூர்த்தி எடுத்துக் காட்டுகிறார்.

இதே கட்டுரையில் ஆங்கிகம், ஆஹார்யம், வாசிகம், சாத்விகம் ஆகிய நான்கு அம்சங்களைக் கொண்டது நடனம் என்கிறார் ஆசிரியர் – ஆஹார்யம் என்பது ஆடை, அணி ஒப்பனை ஆகும். சிவபெருமானுடைய இயற்கை அழகே போதும் என்கிறார் காளிதாசர். ஒப்பனை யற்ற அழகையே போற்றுகிறார் ஹலாயுதர். நடராஜப் பெருமான் நெற்றியில் பூசப்பட்டிருக்கும் திரிபுண்டரம் மூன்று சத்தியங்களை – மனம், வாக்கு, காயம் – குறிக்கின்றது என்கிறார் பாணர். (காதம்பரி) இவரே ஹர்ஷசரித்திரத்தில் சிவபெருமானைப் பாற்கடலாகவும், நர்த்தனமிடும் கரங்களை அலைகளாகவும், கங்கையாற்றைப் பட்டு தலைப்பாகையாகவும் உருவகிக்கிறார்.

திரிவிக்கிரமர் சந்திரனைப் பற்றியும் தண்டிச் சடாமுடி பற்றியும் வருணிக்கிறார்.

கங்கைப்பேரியாறு சிவபெருமானுக்கு அணியாக மட்டும் இல்லை. ஒரு நடன மாது பல்வேறு நிலைகளில் ஆடுவதாக – கபாலங்கள் முத்து தோடுகளாக – கொடியில் பூத்த மல்லிகை மலர்களாக (சடாமுடி, கபாலம்) – தீ வளர்க்கும் ஆகுதியில் (நெற்றிக்கண்) பொரி இடுதலாக பாம்பின் படத்தில் ஜொலிக்கும் இரத்தினமாக – அத்துணையும் இணைந்து எழும்பியும் அடங்கியும் ஆர்ப்பரிக்கும் அலைகளாக – நடகங்கோகர் படம் பிடிக்கிறார்.

முப்புரிநூல் மும்மூர்த்திகளின் ஒற்றுமையைக் குறிக்கிறது. சிவபெருமான் அணிகளான சந்திரன், கங்கையாறு, கபாலம் பற்றி பல இலக்கியச் சான்றுகளைத் தருகிறார்.

சிவபெருமான் சந்தியா தாண்ட வத்தைக் காளிதாசர் வாக்கிலும், கஜாந்தக தாண்டவத்தைப் பாணரின் வார்த்தைகளிலும் எடுத்துரைத்து, எடுத்துக்காட்டாக வழுவூர்ச் சிற்பத்தினையும் படத்துடன் சுட்டி விளக்குகிறார். சிவபெருமானின் பாம்புகள் தவழும், பலவாகிய திருக்கரங்கள் காட்டிற்கு ஒப்பாவதைக் காளிதாசன், சுபந்து, பாணர், (''காதம்பரி'') அனுபவித்துப் பாடியுள்ளார்கள். இக்காவியக் காட்சி பாதாமி, ஐஹோல், பட்டடக்கல், புவனேசுவரச் சிற்பங்களில் வடிக்கப் பட்டிருக்கின்றது. இக்காட்சியை ரத்னாகரர் ''புஜதருவனம்'' என்கிறார்.

சிவதாண்டவத்தால் விண்மீன்கள் சிதறுதலும், திருநீறு வீசி எங்கணும் பரவுதலும், சந்திரன் நிலைகுலைந்து விழுதலும், திருக்கரங்களும் திருவடிகளும் சுழன்று ஆடுதலும் இவற்றின் பின்விளைவு களும் பல கவிஞர்களுக்குக் கவிதைப் பொருள்களாக அமைந்துள்ளன. (''ஹரவிஜயா'', ''நைஷாதிய சரித்திரம்'', ''ஸ்ரீகண்ட சரிதம்'', ''சுபாஷிதரத்ன பாண்டாகாரா'', ''வாசவதத்தா'', ''குட்டனீ மாதா'', ''பிருஹத்கதா மஞ்சரி'', ''குமாரசம்பவம்'', ''சாதுக்திகருணா மிர்தம்'', ''கதாசரித சாகரம்'', ''சிருங்கார பிரகாசம்'' ஆகிய வடமொழி இலக்கியங்கள்). சிவபெருமானை நடனம் ஆடுபவராக மட்டும்

பார்க்காமல் நடன ஆசிரியராக – ரசிகராக இலக்கியங்கள் படம் பிடிக்கின்றன.

Chapter nine : "Nataraja in hymnal literature" கட்டுரையில் சிவதாண்டவ ஸ்தோத்திரம், சிவஸ்துதி, பதஞ்சலியின் தனித்துதிப் பாடல், சங்கரரின் ஸ்வர்ண மாலா சம்போ சதாசிவ புஜங்க பிரயாத ஸ்தோத்திரம், நீலகண்ட தீக்ஷிதரின் சிவாபடான கத்ய ஸ்தோத்திரம் ஆகிய துதிப்பாடல்களில் சிவதாண்டவம் காதுகளுக்கு இனிமை அளிக்கக்கூடியதாக – தாளகதியோடு, மத்தள ஓசைக்கு இணங்க – ஒலிக்கிறது.

சங்கரர் சிவானந்த லகரியிலும் சிவபாதாதிகேசாந்தவர்ணான ஸ்துதியிலும் சிவதாண்டவத்தைக் கவித்துவத்துடன் வருணிக்கிறார். ''கரடுமுரடான மலைப் பகுதியிலே ஆடுகின்றாயே! உன்மலர்ப் பாதம் நோகாதா? இனி இதனைத் தவிர்'' என்கிறார் சங்கரர். பின் அவரே சமாதானமும் சொல்கிறார். என்னுடைய கெட்டிப்பிடித்த – கடினமான – இதயத்தில் ஆடுவதற்காகப் பழகிக் கொள்கிறாயா? என்கிறார் (சிவானந்தலகரி 64, 80).

அப்பய்ய தீக்ஷிதர் தனது இறுதி நாட்களைச் சிதம்பரத்தில் கழித்தார். நடராஜப் பெருமானுக்கு நடைபெறும் சந்தன அபிடேகம் – அதன் குளிர்ச்சி – ஏற்கனவே நீரின் தண்மை – இறைவனுக்கு ஒறுக்குமோ/ என்று அன்பின் மிகுதியில் பதறுகிறார்.

''நின் திருமுடியில் குளிர்கங்கை;
தண்மதியம்
திருவடிகளில் – திருக்கரங்களில்
ஜில்லிட்டிருக்கும் அரவ
அணிகள்
வலப்பாகத்தில் பனிமலையரசன் பயந்த
பாவை,
அவளோ என்றும் ஈரநெஞ்சினள்,
இத்தகு குளிர்நிலையில்,
தண்ணிய சந்தன அபிடேகம்,
பெருமானே!
இத்தகு அதிகுளிர்ச்சியை எங்ஙனம்
தாங்குகின்றனை?
சதா துன்பக் கனலில் கனன்று
கொண்டிருக்கும்
என் இதயம் தவிர உனக்கேது புகலிடம்''
(ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திர
விஜயம்)

சிதம்பரம் நடராஜப் பெருமான் – சிவகாமசுந்தரி பற்றிய தோத்திரப் பாடல்களை எல்லாம் ஆசிரியர் விரிவாக விளக்குகிறார்.

Chapter ten : "Nataraja in Epigraphical literature" கட்டுரையில் தஞ்சை இராஜராஜேஸ்வரர் கோயில் வெளிப்புறச் சுவர்களில் இராஜராஜசோழன், அவனது மனைவியர், அமைச்சர்கள், சகோதரி குந்தவியார் பல திருக்கோயில்களுக்கு நடராஜர் படிமங்கள் வழங்கியமை; நகைகளை நிறுத்துப் பார்க்கும் எடைக் கல்லின் பெயரே ஆடல்வல்லான் என்றிருத்தல்; நடராஜப் பெருமானுக்குக் கூடல் கோப் பெருஞ்சிங்கன் நகை வழங்கியதாகக் கூறும் கி.பி.13-ஆம் நூற்றாண்டைய திருவண்ணாமலைக் கல்வெட்டு, மாறவர்மன் சுந்தர பாண்டியன் தில்லைநடராஜரைப் பார்த்து வியந்த கல்வெட்டு; பராந்தகன் தில்லைக் கோயிலுக்குப் பொன் கூரை வேய்ந்தது; இராஜராஜன் இன்னும் விரிவாகப் பொன்தகடு பரப்பியது ; என தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்களில் நடராஜர் படிமம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

நடராஜரைக் குறிக்கும் வேறு பெயர்களான நாட்டீசுவரர் (குவாலியர்க்கு அருகில் உள்ள நோரோட் கல்வெட்டு), நாட்டீசுவரர் (இவர்க்கு நிரந்தர தீபம் வைப்பதாகக் குறிக்கும் திருநெல்வேலி மாவட்டம் ஆதனூர் கல்வெட்டு), கூத்தப் பெருமானடிகள் (இவர்க்கு நிரந்தர தீபம் வைக்கப் பொன் வழங்குவதைக் குறிக்கும் செங்கல்பட்டு மாவட்ட கயர் சிவன் கோயில் கல்வெட்டு) நர்த்தேசுவரர் (கிழக்கு வங்காளக் கல்வெட்டு) நிருத்யேசு வரர் (இவருக்கு வெள்ளிப்படிமம் அமைப்பதாகக் கூறும் கம்போடியாவில் உள்ள சம்போர்ப்ரேய்க்குக் கல்வெட்டு) நாடகேசுவரர் (இவர்க்குத் தங்கப்படிமம் நிறுவுவதாகக் குறிப்பிடும் கம்போடி யாவில் உள்ள ப்ரசத் தாக்யூ கல்வெட்டு) என பல கல்வெட்டுக்கள் காணக் கிடைக்கின்றன.

சிவ தாண்டவம் தெற்கு ஆசியாவிலும் இந்தியாவில் உள்ளது போலவே பிரபலமாக இருந்தது என்பது முதலாம் சூரியவர்மனின் பிரப்கான் கல்வெட்டின் துதிப் பாடலால் தெரிய வருகிறது. சம்பா நாட்டைச் சேர்ந்த மிஸான் ஸ்டேலே (Mison Steale) யில் உள்ள பிரகாச தர்மனின் கல்வெட்டு சிவபெருமான் சுடுகாட்டில் நடனமாடுவதைக் குறிக்கிறது. கம்போடியாவைச் சேர்ந்த ப்ரீ ரூப் ஸ்டேலே (Pre Rup Stelae) யில் உள்ள ராஜேந்திர வர்மனின் கல்வெட்டு நடராஜரின் நடனத்தால் பிரபஞ்சம் கட்டுக்குள் இருப்பதை விவரிக்கிறது.

சிவபெருமானின் ருத்ர தாண்டவத்தை ஹர்ஷரின் கல்வெட்டு, கலச்சுரி இரணடாம் பிருதிவிண்தேவனின் கோனி கல்வெட்டு, ரனோட் கல்வெட்டு, சுந்தரசோழன் அன்பில் செப்பேடுகள், கஜூராஹோ கல்வெட்டு, குஜராத்தில் உள்ள கதம்பர் கல்வெட்டு குறிக்கின்றன.

கங்கையின் நடனக்கோலம், ஐந்தொழில்கள், திருநீறு என்று பல கல்வெட்டுச் சான்றுகள் தருகின்றார்.

Chapter eleven : "Varieties of Nataraja as described in silpa texts" கட்டுரையில் சகலாதிகாரம் போன்ற ஏழு சிற்பநூல்களிலிருந்தும் மத்ஸ்ய புராணம், கூர்மபுராணம் போன்ற புராணங்களிலிருந்தும், சதுர்வர்க்க சிந்தாமணி போன்ற தருமசாத்திரங்களிலிருந்தும், சிவகௌரி தோத்திரம் போன்ற தோத்திரங்களிலிருந்தும் நடராஜர் படிமம் பற்றிய விளக்கங்களை எடுத்துத் தருகிறார்.

Chapter twelve : "Aesthetic quality of the concept'' கட்டுரையில் நடராஜப் பெருமானுக்கு பிறை, ஜடாபாரம், அரவம் முதலானவை அழகு சேர்க்கும் பாங்கினை விளக்குகிறார்.

Chapter thirteen : "Nataraja form in sculpture and painting" கட்டுரையில் சிவநடனம் பற்றிய விளக்கங்களும் இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் பல்வேறு அரசமரபில் வடிக்கப்பட்ட நடராஜர் சிற்பங்கள் பற்றியும் அவற்றின் தனித் தன்மைகளையும், வேறுபாடுகளையும் ஆசிரியர் விளக்குகிறார்.

ஆடல்வல்லான் கோட்பாடு தொன்மையதாக இருந்தாலும் சிவபெருமானின் நடனம் படிமங்களில் – சிற்பங்களில் – ஓவியங்களில் மத்யகாலத்தில் (Medieval period) தான் வெளிப்படுத்தப்பட்டது.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் குடிமல்லம் சிற்பத்தில் சிவபெருமான் அக்னி ருத்ரனாகவும், யஜமானனாகவும் காட்சியளிக்கிறான். (இதுதான் முதல் சிற்பம்) ஆரம்ப காலங்களில் நாணயங்களில்தான் சிவன் உருவம் வெளிப்படுகிறது.

ஔதும்பரரின் செப்புக் காசுகளில் சிவதாசராக – ருத்ரதாசராக – தரகோஷ்ராக – சிவபெருமான் வெளிப்படுகின்றார். மௌரியர்கள், கோண்டோபாரே காசுகள் குறிப்பிடத்தக்கன.

வாகாடகர், சாளுக்கியர் காலம் : சிவ தாண்டவம் முதலில் வெளிப்படுவது பூமாராவில்தான். அடுத்தது கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குப்தர் காலத்திய நாச்னா சிற்பமே. வாகாடகர்களின் சிவ தாண்டவச் சிற்பங்கள் எல்லோரா விலும், எலிபண்டா குகைகளிலும் காணப்படுகின்றன. எலிபண்டா சிற்பம் இந்தியக் கலையின் பொற்காலத்தின் மணிமுடியாகும். நடராஜா சிற்பம் எல்லோரா சிற்பியின் நெஞ்சைக்கட்டிப் போட்டி இருப்பது ஆகும். மேலைச் சாளுக்கியரின் சிற்பக்கலை பாதாமியிலும் பட்டடக் கல்லிலும் உச்சத்தில் உள்ளது. பட்டடக்கல் விருபாட்சர் கோயிலில் பல அரிய சிற்பங்கள் உள. ஆலம்பூர் கோயில்களிலும் சாளுக்கியக்கலை மிளிர்கிறது. ஆலம்பூர் சிற்பங்களில் தலைசிறந்த நடனக் கோலம் அங்குள்ள காட்சியகத்தில் உள்ளது. வட இந்திய நடராஜர் சிலைகளில் பல கரங்களும், ரிஷபமும் இடம் பெற்றிருக்கும். தென்னிந்தியச் சிற்பங்களில் நான்கு கரங்களும், அபஸ்மார அரக்கன் மீது ஆடுவதாகவும் இருக்கும். முன்னது பாதாமியிலும், பின்னது பட்டடக் கல்லிலும் உள்ளன. இரு வேறுபட்ட சிற்ப வடிவங்களும் இங்கே இணைகின்றன.

பல்லவர் காலம் : பல்லவர் காலத்தில் மகாபலிபுரம் தர்மராஜரதத்தில் அரிய

நடராஜ சிற்பங்கள் காணப்படுகின்றன. இதன் பிறகு ராஜசிம்மேசுவரன் காலத்தில் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் சிவ தாண்டவம் சிற்பங்கள் அணிவகுத்து நிற்கின்றன. கைலாசநாதர் கோயில் காலாந்தகர் சிற்பத்தை ஒட்டி கொடும் பாளூர், தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் சிற்பங்கள் எழுந்தன. பல்லவர் காலத்தில் செப்புப் படிமங்களில் கூரம் நடராஜர் சிலை குறிப்பிடத்தக்கது. இதனை அடுத்து குறிப்பிடப்படவேண்டியவை நல்லூர் செப்புப் படிமமும், கீழக்காடு செப்புப் படிமமும் ஆகும்.

பாண்டியர் : தொடக்கக்காலப் பாண்டியர்களின் சிற்பங்களில் குறிப்பிடத்தக்கன திருமலைப்புரம், திருப்பரங்குன்றம், கழுகுமலை சிற்பங்கள் ஆகும்.

ராஷ்டிரகூடர் : ராஷ்டிரகூட அரசர் முதலாம் கிருஷ்ணராஜன் எல்லோராவில் கட்டிய கோயில் இந்தியக்கலை வரலாற்றில் ஓர் அற்புதம் ஆகும். இதில் உள்ள கயிலாயச் சிற்பம் பட்டடக்கல் சிற்பத்தின் தூண்டுதலால் எழுந்தது. பட்டடக்கல் பாணியோ காஞ்சி கைலாசநாதர் பாணியைப் பின்பற்றியது.

சோழர்கள் : ஆடல்வல்லானைச் சிலையாக வடித்ததில் சோழ அரசர்களே முதன்மை வகிக்கின்றனர். அவர்கள் கற்சிற்பங்கள் பல செதுக்கியிருந்தாலும், அவர்களது செப்புப் படிமங்களே புகழ் பெற்றவை ஆகும். விஜயாலய சோழனின் மரபில் வந்த ஆதித்த சோழனும், பராந்தக சோழனும் சிதம்பரம் நடராசப் பெருமானிடம் அளவு கடந்த பக்தி கொண்டவர்கள் ஆவர். பராந்தகன் சிதம்பரம் கோயிலுக்குப் பொன் வேய்ந்தான். அவன் மகன் கண்டராதித்தர் நடராஜர் மேல் திருவிசைப்பா பாடினார். சிவபாத சேகரனான ராஜராஜ சோழன் உருவாக்கிய செப்புப்படிமங்கள் எண்ணற்றவை ஆகும். அவனை விஞ்சி யவன் அவனது மகனான இராஜேந்திர சோழன் ஆவான். இரண்டாம் குலோத்துங்கனும் சிதம்பரத்தில் திருப்பணிகள் பல செய்திருக்கிறான். அவனது மகனான இரண்டாம் இராஜ ராஜன் தாராசுரம் ஆயிரங்கால் மண்டபத்தைக் கட்டினான். கோனார்க் கோயிலைக் கட்டிய கலிங்க அரசனான அனந்தவர்ம சோட கங்க தேவனே தாராசுரத்திலும், சிதம்பரத்திலும் கோனார்க் பாணியான சக்கரம், குதிரையினை முதன் முதலாக சோழர் கலையில் புகுத்தினான்.

தஞ்சை பிரகதீசுவரர் கோயிலில் உள்ள ஓவியங்களிலும் நடராஜப் பெருமான் சித்தரிக்கப்பட்டுள்ளார். நண்டியில் (ஆந்திர மாநிலம்) உள்ள ஆரம்பகால சோழர்களின் நடராஜர் சிலையில் ராஷ்டிரகூட பாணி பின்பற்றப்பட்டுள்ளது. இங்கு ராஷ்டிரகூட பாணியும் இணைகிறது.

ஆரம்பகால சோழர்களின் நடராஜர் சிலையில் ஒக்கூர் நடராஜர் சிலை குறிப்பிடத்தக்கது. டெல்லி மியூசியத்தில் உள்ள திருவரங்குளம் நடராஜரின் சதுரத் தாண்டவம் தனித்தன்மை உடையது. இத்தாண்டவத்தைச் சித்தரிக்கும் வேறு சிலை கிடையாது. லலித நடனத்தைச் சித்தரிப்பது கொடுமுடி நடராஜர் சிலை ஆகும். சென்னை மியூசியத்தில் உள்ள கி.பி. 1000-ஐச் சேர்ந்த திருவாலங்காடு நடராஜர் சிற்பம் தாளகதியின் அசைவுக்கு முழுவடிவம் எனலாம். ரோடின் என்ற உலகப்புகழ் பெற்ற சிற்பி இவ்வாறு கூறுகிறார். "The most perfect representation of rhythmic Movement in the world"

திருவாலங்காடு ஊர்த்துவ தாண்டவ நடராஜர் (முன்னதற்கு வேறுபட்டது) வழக்கத்திற்கு மாறான ஒன்றாகும்.

தஞ்சையில் கல்லில் செதுக்கப்பட்டிருக்கும் நடராஜர் சிற்பம் செம்பிலோ அல்லது மரத்திலோ செய்யப்பட்டது போல நெளிவு சுளிவுகளைக் கொண்டது ஆகும். கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள நடராஜர் சிற்பங்களும் அவ்வாறே. திருவக்கரை ஊர்த்துவ தாண்டவ சிலையும் வழக்கத்திற்கு மாறாக – ஊர்த்துவ நிலைக்கு முன் நிலையைக் குறிப்பதாக உள்ளது.

பிரபையும், ஜடாமுடியும், கங்கை, சந்திரன், பாம்பு, முயலகன் சிற்பத்திற்குச் சிற்பம் எவ்வாறு மாறுபடுகின்றது என்றும் மாறுபட்டாலும் தன்னளவில் அழகில் எவ்வாறு சிறந்திருக்கின்றது என்றும் ஆசிரியர் கூறுகிறார்.

டெல்லி மியூசியத்தில் உள்ள ஹம்பியில் கிடைத்த நடராஜர் ஊர்த்துவ நடனசிலை பிற்கால சாளுக்கியர் காலத்தது ஆகும். பல கரங்களைக் கொண்டதான வட இந்திய மரபும், காலடியில் அபஸ்மார புருஷன் (முயலகன்) உள்ளதான தென்னிந்திய மரபும் கலந்தது ஆகும். அரால்குப்பே சிவன்கோயில் மண்டப விதானத்தில் உள்ள நடராஜர் சிற்பமே பிற்காலச் சாளுக்கியர்களின் சிற்பங்களில் மகோன்னத மானது ஆகும். சாளுக்கிய வீரர்களின் வீரக்கல்களிலேயே நடராஜர் வெற்றித் தாண்டவம் சித்தரிக்கப்பட்டிருக்கும். அந்த அளவு அந்த வீரர்கள் சிவ பக்தி கொண்டிருந்தனர்.

ஹொய்சளர்கள் : ஹொய்சள சிற்பங்கள் கட்டை குட்டையாக இருக்கும். இருந்தாலும் வேலைப்பாடு மிக்கவை. ஹளபீடு நடராஜ சிற்பங்கள் ஊர்த்துவ தாண்டவத்தையும் பேலூர் சிற்பம் பைரவரின் ஊர்த்துவ தாண்டவத்தையும் சித்தரிக்கின்றன.

நாயக்கர்கள் : நாயக்கர் காலத்தில் தென்காசி சிற்பமும், திருவலஞ்சுழி ஓவியங்களும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

கேரளா : கேரளாவில் நடராஜர் உருவம் உலோக வேலைப்பாடு, ஓவியம் தவிர, அம்மண்ணிற்கே உரித்தான மரப்படிமங்களிலும் பெரிதும் இடம் பெற்றுள்ளது. எட்டமனூர், திருச்சூர், திருப்ராயர், புண்டரிகபுரம், பேராபுரம், பத்மநாபபுர அரண்மனை ஓவியங்கள் கண்ணைக் கவருவன. எட்டுமனூரில் குடக்கூத்து ஆடும் நடராஜர் கல் சிற்பம் குறிப்பிடத் தக்கது ஆகும்.

கொச்சியில் உள்ள மட்டாஞ்சேரி அரண்மனையில் சிவபெருமான் திருவிளையாடல்களின் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.

கீழைக் கங்கர்கள் : ஒரிஸாவில் புவனேசுவரத்தில் உள்ள கீழைக் கங்கர்களின் கோயில்களான சத்ருக்னேசுவரர், பரசுராமேசுவரர், வைட்டால்ட்யூல், முகலிங்கம் ஆகியவற்றில் நடராஜர் இடம் பெற்றிருக்கிறார். முக்தேசுவரத்தில் முகப்பில் மட்டும் அல்லாது எல்லாபக்கங்களிலும் நடராஜர் திருவுருவம் காணப்படுகிறது. சிவனும் சூரியனும் இணைந்த மார்த்தாண்ட பைரவர் படகில் நடன மாடும் (பலவகையில் புதுமை யானது) சிற்பம் கோனார்க் சூரியன் கோயிலில் காணப்படுகிறது.

பாலர் – சேனர் : ரிஷபத்தில் மேல் நின்றாடும் நடராஜர் வங்காளத்தின் தனி முத்திரை ஆகும். பாலர்கள் வடித்த சிவ பெருமான் சிலைகள் ஊர்த்துவலிங்க நிலையில் (ஆடையற்ற நிலை) இருக்கின்றன. இவற்றை டாக்கா அருங்காட்சியகத்தில் காணலாம். வங்காளத்தைச் சேர்ந்த பாலர்களின் அற்புத நடராஜத் திருவுருவத்தினை ராஜேந்திர சோழன் தன்போரின் வெற்றியாகக் கொண்டு வந்து சிதம்பரத்திற்கு அருகில் உள்ள மேலக் கடம்பூர் (தஞ்சை மாவட்டம்) என்ற ஊரில் வைத்திருக்கிறான். உலோகத்தின் அற்புத வெளிப்பாடான இச்சிற்பத்தின் முகவிகசிப்பிலிருந்து இதனை உருவாக்கிய சிற்பியின் மேன்மையை அறிந்து கொள்ளலாம்.

கார்க்கோடர் – உத்பாலர் : காஷ்மீரம் சிவ வழிபாட்டின் உன்னத பீடம் ஆகும். சோமானந்தர், உத்பாலர், அபிநவகுப்தர் காஷ்மீர சைவத்தை விளக்கிப் பல நூல்கள் எழுதியுள்ளனர். அப்படியிருக்கும் பொழுது நடராஜர் பற்றிய அருங்கலைச் செல்வங்கள் காஷ்மீரத்தில் மண்டியிருக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக அனைத்தும் அழிந்து போயின. ஸ்ரீநகர் அருகில் உள்ள பயாரில் உள்ள கோயிலில் நடராஜர் சிலை கிடைத்துள்ளது. இது கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உத்பாலர் மரபினர் காலத்தது ஆகும். லாக்கமண்டல் கோயில் நடராஜர் சிற்பமும் கிடைத்துள்ளது. இவ்விரண்டும் தான் இப்பொழுது உள்ளன.

கூர்ஜர பிரதிஹாரர் : பேரரசராகிய கூர்ஜர பிரதிஹாரர்களும் குப்தர்களின் கலை மரபையே பின்பற்றியிருப்பது வியக்கத் தக்கது ஆகும். இம்மரபின் பேரரசனான போஜன் பல அருஞ்சிற்பங்களைத் தந்துள்ளான். அபநேரீ சிற்பங்கள் இவன் காலத்தவை ஆகும். ஜெய்ப்பூர் மகாராஜா சேகரிப்பில் உள்ள அர்த்தநாரீசுவரர் சிற்பம் மிகச் சிறந்த ஒன்று. குவாலியர் அருங்காட்சி

யகத்தில் உள்ள நடராஜர் சிற்பமும்அரிய படைப்பு ஆகும்.

சாளுக்கியர்கள் : மொதேரா கோயிலில் சாளுக்கிய சிற்பங்களின் மேன்மையைப் பார்க்கலாம். அதே போல பிரபாஸ்பாடா அருங்காட்சியகத்திலும் சில நல்ல சிற்பங்கள் உள்ளன. புகழ் வாய்ந்த தபோய் நுழைவாயில் மத்யகால இந்தியக் கலையின் அற்புதம் ஆகும்.

பரமாரர்கள் : மால்வாவை ஆண்ட பரமாரர்களில் போஜ அரசன் கலை ஆர்வம் மிக்கவன். உதய்பூர் உதயேசுவரர் கோயில் மால்வா அரசர்களின் கலை ஆர்வத்தைப் புலப்படுத்துவது ஆகும். கோயில் முகப்பிலே பதக்கத்தில் இருக்கும் சிவ நடனம் அழகான ஒன்று. உதய்பூர் கோயில் நடராஜர் சிற்பங்கள் பல இடங்களில் உள்ளன. அம்பர்நாத் கோயிலிலும், மார்க்கண்ட கோயிலிலும் நடராஜர் சிற்பங்களைக் காணலாம்.

சண்டெள்ள மரபினர் கஜுராஹோ கோயிலைக் கட்டினர். ஹைஹயர் சோஹாக் பூரில் கட்டியுள்ள விராடேசுவரர் கோயில் சிறப்பு மிக்கது ஆகும்.

ஓவியங்கள் : மத்ய காலத்தின் பிற்பகுதியில் வரையப்பட்ட ஓவியங்களிலும் சிவனார் நடனம் சித்தரிக்கப் பட்டுள்ளது. இவற்றுள் சம்பா பாணி ஓவியமும், காங்ராபாணி ஓவியமும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

இந்தோனேசியா

1) கரணங்கள் – சண்டீப்ராம்பனம் – கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

2) சிவபெருமான் – சண்டீப்ராம்பனம் – கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

பாலி

3) ஓவியம் – Bremen – கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

கம்போடியா

4) காரைக்கால் அம்மையாருடன் – Banteai Srei – கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

5) சிவ நடனம் – Phnom Chisor – கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

6) கஜாந்தகர் – Baset – கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

7) காரைக்கால் அம்மையாருடன் – கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

8) நடராஜர் – Prah pithu – கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

9) சிவநடனம் – Banteai Samre – கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

சம்பா

10) On Apasmare - Mi - Son – கி.பி. 8-ஆம் நூற்றாண்டு

11) On Apasmare - Mi - Son – கி.பி. 8-ஆம் நூற்றாண்டு

12) பதினாறு கரங்களை உடைய சிவ பெருமான் – Phongle – கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

13) இருபத்துநான்கு கைகளை உடைய சிவபெருமான் – Cham Museum – கி.பி. 8-ஆம் நூற்றாண்டு

14) நான்கு கரங்களை உடைய சிவனார் – – கி.பி. 8-ஆம் நூற்றாண்டு

15) சிவ நடனம் – Thubon – கி.பி. 8-ஆம் நூற்றாண்டு

16) ஆறு கரங்கள் – Poklaung – கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

17) ஐந்து கரங்கள் – Cham Museum – கி.பி. 8-ஆம் நூற்றாண்டு

18) சிவ நடனம் – Ponagar – கி.பி. 8-ஆம் நூற்றாண்டு

தாய்லாந்து

19) On Apasmara – ஓவியம்

20) முயலகன் – ஓவியம்

21) நடராஜர் – பாஸ்சார் – கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டு

சாளுக்கியர்கள்

22) ஓவியம் – Tadjkistan – கி.பி. 8-ஆம் நூற்றாண்டு

நேபாளம்

23) பதினாறு கரங்களை உடைய சிவனார் – Patan

24) பதினெட்டு கரங்களை உடைய அர்த்த நாரீசுவரர்

25) சிவபார்வதி நடனத்தைக்காணல் – Patan

இலங்கை

26) நடராஜர் - பொலன்னருவா – கி.பி. 10-ஆம் நூற்றாண்டு

27) நடராஜர் - பொலன்னருவா – கி.பி. 11-ஆம் நூற்றாண்டு

28) உமை - பொலன்னருவா – கி.பி. 11-ஆம் நூற்றாண்டு

29) காரைக்கால் அம்மையார் – கி.பி. 11-ஆம் நூற்றாண்டு

Chapter fourteen : "The Nataraja concept beyond Indian frontiers"என்ற கட்டுரையில் இந்திய சமயமும், கலையும் கடல் தாண்டி வெளிநாடுகளுக்கும் பரவியிருந்ததைக் குறிப்பிடுகின்றார். பேராசிரியர் கோயேட்ஸ் தொகுத்துள்ளதும் பல தொகுதிகளை உடையது மான 'கம்போ டியா கல்வெட்டுகள்' சமஸ்கிருதத் தில் காவிய அழகுடன் இருக்கின்றன. பாலியில் உள்ள மகாபாரதம் தென்னிந்திய வடிவத்தை உடையது. இராமாயணம், கிருஷ்ணலீலைகள், அபிமன்யு அருச்சுனன் வீரச்செயல்கள், ஜாவா இலக்கியம், நாட்டிய – நாடகங்களில் இடம் பெற்றுள்ளன. குன்று ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ள சிவனது பாதம் பற்றிப் பெருமையாக பயஸ் கல்வெட்டு கூறுகின்றது.

இந்தோனேசியா

வெளிநாடுகளில் அகத்தியர் உருவம் இந்திய பண்பாட்டின் வெளிப்பாடாகத் திகழ்கிறது. பிராம்பனத்தில் சிவ, விஷ்ணு, பிர்மாவிற்கும் கோயில்கள் இருக்கிறன. விஷ்ணு பிர்மா கோயில்களில் இராமர், கண்ணன் ஆகியோரின் முழு வரலாறு சிற்ப வடிவில் உள்ளது. சிவன் கோயிலில் நடராஜருக்கே உரிய கரணங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. சிவநடனமும் இக்கோயிலில் இடம்பெற்றுள்ளது.

பாலி :

சிவ நடன ஓவியம் சிதைந்த நிலையில் மேற்கு ஜெர்மனி அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

கம்போடியா :

கம்போடியாவில் சிவபெருமானை நிருத்தேசுவரனாகப் போற்றும் மரபு இருந்து வந்தது. அங்கு கிடைத்துள்ள கல்வெட்டுகள் தரும் செய்திகள் வருமாறு:

1) வித்யாவிசேஷன் சிவலிங்கத்தை நிறுவி தான் எதிர்காலத்தில் எடுக்கும் பிறவிகள் தோறும் சிவ பக்தி பூணுவேன் என்ற வாக்குறுதி (ஈசானவர்மன் கல்வெட்டு. – கி.பி. 627)

2) அரசனுடைய உள்ளத்தில் பிறை சூடன் குடியிருத்தலால் காம இச்சை நுழையாது (இந்திரவர்மன் கல்வெட்டு – கி.பி. 879.)

3) தேவாகீசுவர பண்டிதன் சிவாக மத்தில் புலமை பெற்றவன் (சூரிய வர்மன் கல்வெட்டு கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.)

4) சைவ அறிஞர் ஒருவர் சிவாச்சாரியாராகாவும் ராஜகுருவாகவும் இருந்தார். (சூரிய வர்மன் கல்வெட்டு. கி.பி. 11-ஆம் நூற்றாண்டு)

5) சைவாகமம், சுருதி, ஸ்மிருதி வழி வழிபாடு (ராஜேந்திர வர்மன் கல்வெட்டு கி.பி. 952.)

இந்திர வர்மன் என்ற அரசன் சிவபெருமான், உமை, கங்கை, படிமங்களையும் (இந்திரவர்மன் கல்வெட்டு – கி.பி. 879); யசோவர்மன் நான்கு படிமங்களையும் (யசோவர்மன் கல்வெட்டு – கி.பி. 899) தாங்களே வடித்துள்ளார்கள்.

1) வெள்ளி நிருத்தேசுவரரும், நந்தியும் நிறுவப்படுதல் (ஈசானவர்மன் கல்வெட்டு)

2) பத்து கரங்களை உடைய நாடகேசுவரரின் தங்கப்படிமம் (சூரிய வர்மன் கல்வெட்டு)

3) நடராஜரைப் பற்றிய துதி (சூரிய வர்மன் கல்வெட்டு).

கம்போடியாவில் பாண்டியாய் ஸ்ரேய் (Banteai Srei) காரைக்கால் அம்மையார் சிற்பங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. நாம் சிஸோரில் (Phnom Chisor) உள்ள கோபுரத்தின் உச்சியில் வீணாதரர் ஆக நடராஜரும் அருகில் காரைக்காலம்மையாரும் இருக்கின்றனர்.

இதே கோயிலில் விஷ்ணுவின் சிற்பமும் உள்ளது சிதம்பரம் கோயில் அமைப்பை நினைவுபடுத்துகிறது. மத்திய காலத்தில் கம்போடியாவில் ஹரி ஹரன் திருவுருவம் எங்கும் பரவியிருந்தது.

பிரமன் விஷ்ணுவிற்கு இடையில் ஆடும் சிவனார் ப்ராபிதுவிலும் (Prah Pithu), நடை ஓரத்தில் ஆடும் சிவனார் பான்டியய் சாம்ரியிலும் (Banteai Samri) வேலைப்பாடு மிக்க நடராஜர் சிலை அங்க்கூர் வாட்டிலும் (Angkor vat) பிரமன், விஷ்ணு மத்தியில் ஆடும் சிவனார் சிலை பேங் மீலீயிலும் (Beng Mealea) உமை, கணேசனுடன் ஆடும் சிவனார் அதே ஊரிலும், இரண்டு கரங்களுடன் கூடிய சிவனார் சிலை பான்டியய் சாம்ரியிலும், நடனமாடும் சிவன் நாம் த்பாங்கிலும் (Phnom Thbong) கிடைத்துள்ளன. நடராஜரின் பல செப்பு படிமங்கள் பற்றி பேராசிரியர் கோயடங் குறிப்பிடுகின்றார். சைகானில் உள்ள நான்கு கரங்களை உடைய சிவனாரின் செப்புப்படிமம் பற்றி மல்லேரெட் தெரிவு செய்கிறார்.

கி.பி. 1113-இல் சூரிய வர்ம அரசனின் ராஜகுரு திவாகர பண்டிதர் சிவனாரின் நடன உருவமான சிகாரீசுவரரின் தங்கப் படிமம் பற்றி ப்ரசெட் டகியோ (Prasat Takeo) கல்வெட்டு கூறுகிறது.

கம்போடியாவில் நடராஜர் தென்னிந்திய பாணியில் முயலகன் மேலும் ஆடவில்லை; வடஇந்திய பாணிபடி நந்தி மேலும் நின்று ஆடவில்லை. Bich La, Phong Le, Trakieu, Thu Bon, Po Nagar, De Nhe Trang ஆகிய பல்வேறு இடங்களில் பல நடராஜர் சிலைகள் கிடைப்பது வியப்பினைத் தருகிறது.

சம்பா :

பழங்கால சம்பாவிற்கும் இந்தியாவிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் அரசாண்ட ஸ்ரீ பத்ரவர்மன் மி–சானில் (Mi - son) சிவன் கோயில் ஒன்று கட்டி பத்ரேசுவர சுவாமி என்ற பெயரும் சூட்டினான். கங்கராஜன் தன் இறுதி நாள்களைக் கங்கை நதிதீரத்தில் கழித்தான். சம்புவர்மன் தீயால் பாதிப்புண்ட பத்ரேசுவர சுவாமி கோயிலை மீண்டும் புதுப்பித்தான். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பிரகாசதர்மன் தன் முன்னோர் பெயரால் தெய்வங்களுக்கு அறக்கட்டளைகள் நிறுவினான். ஸ்ரீ ஜெயா இந்திரவர்மன் மகா ராஜாதி ராஜன் சிவபெருமானால் அனுப்பப்பட்டதாக கி.பி. 9-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. மூன்றாம் இந்திரவர்மன் காவியங்களும், சாத்திரங்களும், சைவ ஆகமங்களும் கற்றுத் தேர்ந்தவன் ஆவான். கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பரமேசுவர்மன் சிவன் கோயில்களுக்கு வாரி வழங்கினான்.

கி.பி. 657 -ஐச் சேர்ந்த பிரகாசதர்மனின் மி-சான் (Mi - son) கல்வெட்டு நடனமாடும் சிவனார் பற்றி அழகுற சித்தரிக்கிறது. பல கல்வெட்டுகள் சோழ – பல்லவர் தொடர்பையும், உபமன்யு கதை போன்ற பழஞ் செய்திகளையும் கோயில்களையும் குறிப்பிடுகின்றன.

பத்ரேசுவரசுவாமி கோயில் உள்ள மி-சானில் (Mi - son) பன்னிரண்டு கரங்களை உடைய சிவனார் நடனமாடும் சிலைகள் இரண்டும் Phong Le இல் பதினாறு கரங்களை உடைய சிவனார் நடனமாடும் சிலையும் Kwong - my இல் நந்திமேல் நடனமாடும் இருபத்து நான்கு கரங்களை உடைய சிவபெருமான் சிலையும் Trau-Kieu இல் நான்கு கரங்களை உடைய சிவனார் நடன சிலையும் Thu-bon இல் பல கரங்களைக் கொண்ட சிவன், poklang இல் லலித நடனம் Po Nagar இல் நடனமாடுதல் Quang Tri இல் பத்து கரங்கள் கொண்டிருத்தல் – என நடனமாடும் சிவபெருமான் சிலைகளும் கிடைத்துள்ளன.

தாய்லாந்து :

தமிழ்நாட்டிலிருந்து தாய்லாந்துக்குப் பரவியுள்ள தொல் பழங்கதைகளை பி. நீலகண்டசர்மா ஓவியங்கள் மூலம் வரைந்து வெளியிட்டுள்ளார். அவற்றுள் முயலகன் மேல் நடனமாடும் சிவபெருமான் ஓவியமும், காலாந்தகன் ஓவியமும் இடம் பெற்றுள்ளன. தாய்லாந்தில் கிடைத்துள்ள நடராஜர் சிற்பம் மேலப் பெரும்பள்ளம் நடராஜரை ஒத்து இருந்தாலும் கழுத்து அணிமட்டும் தாய்லாந்துக்கே உரியதாக உள்ளது.

மத்திய ஆசியா :

ரஷ்யாவில் Piandjikentல் உள்ள ஓவியம் சிவ நடனத்தைச் சித்தரிக்கிறது.

நேபாளம் :

நேபாளத்தில் பத்து கரங்களைக் கொண்ட சிவபெருமான் சிலையும், பாடனில் (Patan) பதினாறு கரங்களை உடைய சிவபெருமான் சிலையும் இருக்கின்றன. பதினாறு கரங்களை உடைய அர்த்த நாரீசுவரர் சிலையும் கிடைத்துள்ளது. ஹரிஹரனின் பெண் மறுதலையான நூதன சிற்பமும் காத்மண்டு ராணி பொகாராவில் உள்ளது. பாடன் (Patan) கும்பேசுவரர் கோயிலில் உள்ள சிவ – பார்வதி சிலையில் வானிலிருந்து இழிந்து வரும் கங்கையின் நடனத் தோற்றம் கடினமான ஒன்றாகும்.

இலங்கை :

இலங்கையில் பல கோயில்கள் சோழர்களால் கட்டப்பட்டவை ஆகும். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் சிற்பங்களில் பக்தி ததும்பி நிற்கும். பொலன்னனருவாவில் உள்ள இரண்டு சிற்பங்களும் ஞானசம்பந்தரின் பாடல்களுக்கு விளக்கமாக அமைந்துள்ளன.

இலங்கை சிற்பங்களில் சடாமுடி தனித்து விளங்குகிறது. காரைக்கால் அம்மையார் சிலையும் அண்மையில் கிடைத்துள்ளது.

Chapter fifteen : "Spots specially associated with Nataraja and their importance" என்ற கட்டுரையில் அத்ரிசபை (கைலாயம், ஆதிசித்சபை (திருவெண்காடு) இரத்ன சபை (திருவாலங்காடு), ராஜசபை (வெள்ளியம்பலம் – மதுரை), தாமிர சபை (திருநெல்வேலி), சித்ர சபை (திருக்குற்றாலம்), கனகசபை (சிதம்பரம்) ஆகிய ஏழு சபைகள் பற்றியும் அவற்றுடன் தொடர்பான புராணச் செய்திகளையும் ஆசிரியர் கூறுகிறார். ஸ்கந்த புராணத்தில் சூதசம்கிதை, திருமந்திரம், திருவம்பலச் சக்கரம், திருக்கூத்து தரிசனம், அப்பர், சம்பந்தர், சுந்தரர் பாடல்கள், திருமங்கையாழ்வார், குலசேகர ஆழ்வார் பாசுரங்கள், திருவிசைப்பா, திருத்தொண்டர்புராணம், கோயிற்புராணம், திருப்புகழ், நடேச விஜயம், பதஞ்சலி விஜயம், சிதம்பர மும்மணிக்கோவை, சிவகாமியம்மை இரட்டை மணிமாலை, நந்தனார் சரிதம், சிதம்பர புராணம் ஆகிய நூல்கள் சிதம்பரம் பற்றியும் நடராஜர் பற்றியும் கூறுகின்றன. சிதம்பரத்துடன் – நடராஜர் பூப்பிரதஷணத்துடன் - பொருத்தமாக இந்நூல் நிறைவெய்துகிறது.

13

The Tao of Physics

1975

(Editor - Fritjof Capra) (Flamingo, London; Pages - 412).

நவீனஇயற்பியலையும், கீழை நாட்டு அருளியலையும் இணைத்துக் கண்டறியும் முயற்சியாகும் இந்நூல். *1991*-ஆம் ஆண்டு வரை மூன்று பதிப்புகள் வெளிவந்து பத்து இலட்சம் பிரதிகள் விற்றுள்ளன.

மிகவும் வனர்ந்து விட்ட மேலைநாட்டு இயற்பியல் வளர்ச்சியோடு கீழைநாட்டு அருளியல் மரபுகள் ஒத்துப்போவதை ஃப்ரிட்ஜாப்ஃ காப்ரா வியத்தகு முறையில் இந்நூலில் விளக்குகிறார். காப்ரா இயற்பியல் கோட்பாட்டில் வியன்னா பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். அமெரிக்க, ஐரோப்பிய பல்கலைக் கழகங்களில் உயர்சக்தி இயற்பியலில் ஆய்வுகள் நிகழ்த்தியுள்ளார்.

ஆசிரியரின் (காப்ரா) முன்னுரையே ஆடல்வல்லானைப் பற்றி அமைந்து

விடுகிறது. ''ஒரு மாலைப் பொழுதில் நான் கடற்கரையில் அமர்ந்திருந்த பொழுது ஒரு அழகிய அனுபவம் கிடைத்தது. அவ்வநுபவமே இந்நூலினை எழுதத் தூண்டியது. அலைகள் சுருண்டு வந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் மூச்சுவிடும் தாளகதியை உணர்ந்தேன். என்னுடைய சுற்றுச்சூழல் முழுமையும் மகத்தான பிரபஞ்ச நடனம் நிகழ்த்திக் கொண்டிருப்பதைத் திடீரென அறிந்தேன். நான் ஒரு இயற்பியல் விஞ்ஞானி என்பதினால் என்னைச்சுற்றி இருந்த மணல், பாறைகள், நீர், காற்று அனைத்தும் அதிர்வுடைய மூலக்கூறுகளாலும் (molecules) அணுக்களாலும் உருவானவை என்பதனை அறிவேன். இவை, துகள்கள் ஒன்றோடு ஒன்று செயல்பட்டு அழித்தும் உருவாக்கியும் உருவான துகள்களினால் ஆனவை என்பதனையும் அறிவேன். பிரபஞ்சக் கதிர்களின் பொழிவுகள் பூமியின் சுற்றுப்புறத்தைத் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருக்கின்றன. அதிகச் சக்தி நிரம்பிய அத்துகள்கள் காற்றினை ஊடுருவும் பொழுது பன்முக மோதல்களுக்கு ஆளாகின்றன. இவையெல்லாம் இதுநாள் வரை படங்களாலும், வரைபடங்களாலும், கணிதக் கோட்பாடுகளாலும் மட்டுமே நான் அறிந்திருந்தேன். நான் கடற்கரையில் உட்கார்ந்து இருந்தபொழுது முந்தைய அழகனுபவங்கள் நிகழ்ந்தன. விண்வெளி யிலிருந்து சக்திப் பொழிவுகள் வீழ்வதைப் பார்த்தேன். ஒரேதாள கதியில் துகள்கள் தோன்றுவதும் அழிவதும் நிகழ்ந்தன. இந்தப் பிரபஞ்ச சக்தி தாண்டவத்தில் மூலகங்களின் அணுக்களும் என்னுடைய உடம்பு அணுக்களும் பங்கேற்பதைப் பார்த்தேன். அந்தத் தாளகதியை உணர்ந்தேன். அந்த ஒலியைக் கேட்டேன். இதுவே சிவ தாண்டவம் என்று அறிந்தேன்''

''சீனமொழியில் யங் (Yang) ஆண்மையையும், யின் (Yin) பெண்மையையும் குறிக்கும். நாம் இணைப்புக்குப் பதிலாக தன்முனைப்பையும், சேர்க்கைக்குப் பதிலாகப் பகுத்தலையும், உள்ளொளிக்குப் பதிலாகப் பகுத்தறிவையும், சமயத்திற்குப் பதிலாக அறிவியலையும், ஒத்துழைப்புக்குப் பதிலாகப் போட்டியையும், பராமரித்தலுக்குப் பதிலாக விரிவாக்குதலையும் வலியுறுத்தி வருகிறோம். மனித இயற்கையில் உள்ள ஆண் தன்மையையும் பெண் தன்மையையும் சமநிலைப்படுத்தத் தவறிவிட்டோம்''.

அதன் பின் காப்ரா நியூட்டனின் "Laws of Motion" பற்றி விளக்கிக் கூறி, அது ஐன்ஸ்டினின் "Theory of Relativity" யால் தகர்க்கப்பட்டதை விரிவாக விளக்குகிறார்.

அத்யாயம் ஐந்து இந்து சமயம் பற்றியும், அத்யாயம் ஆறு பௌத்தம் பற்றியும், அத்யாயம் ஏழு சீன சிந்தனைகள் பற்றியும், அத்யாயம் எட்டு தாவோயிசம் பற்றியும், அத்யாயம் ஒன்பது ஜென் பற்றியும் விளக்குகிறது.

அத்யாயம் பதினைந்து ''பிரபஞ்ச நடனம்'' ஆகும்.

அனைத்து வாழ்வும் படைப்பு – அழிவு, பிறப்பு – இறப்பு என்ற மகத்தான ஒத்திசைவான தாளகதியின் ஒரு கூறு ஆகும். சிவ தாண்டவம் முடிவற்ற சுழற்சியான நிரந்தரமான பிறப்பு – இறப்பின் தாளகதியின் குறியீடு ஆகும்.

ஆனந்த குமாரசாமியின் கூற்றுப்படி, ''பிரம ராத்திரியில் இயற்கை அசைவற்று உள்ளது. சிவபெருமான் இச்சையில்லாமல் இயற்கையின் கூத்து நிகழாது. சிவபெருமான் களிப்பிலிருந்து எழுகிறான். அவரது நடனம் ஜடவஸ்துவின் ஊடே விழிப்பூட்டும் ஓசையின் துடிப்பலைகளைச் செலுத்துகிறது. ஜடவஸ்து இறைவனைச் சுற்றிப் பெருமையென குதித்துக் கூத்தாடுகிறது. நடனத்தின் மூலம் ஜடப்பொருளின் பல்வேறு நிகழ்வுகளைச் சிவபெருமான் நிலைநிறுத்துகிறார். கால முழுமையில் சிவபெருமான் தாண்டவத்தால் அனைத்து ரூப நாமங்களை நெருப்பு மூலம் அழித்து ஓய்வு தருகிறார். இது கவிதை; அதே சமயத்தில் அறிவியலும் கூட''.

நடராஜரின் தூக்கிய வலது கரத்தில் உடுக்கை உள்ளது. அது உலகப் படைப்பின் ஆதிநாதத்தைக் குறிக்கிறது. தூக்கிய இடது கரத்தில் நெருப்பு – உலக அழிவைக் குறிக்

கிறது. இரு கரங்களும் ஒரே சமநிலையில் இருப்பது உலகப்படைப்பு – அழிவின் சமநிலையைக் குறிக்கிறது. இரு கரங்களுக்கும் நடுவில் உள்ள நடராஜப் பெருமானின் பற்றற்ற தனித்த சாந்த முகம் இந்தச் சமநிலையை மேலும் வலியுறுத்துகிறது. இந்தச் சமநிலையில் படைப்பு – அழிவு என்ற இருவேறுபட்ட துருவநிலை கரைந்து கடந்த நிலையை அடைகிறது. இரண்டாவது வலதுகரம் அபய முத்திரையைக் காட்டுகிறது. இது காத்தல், நிர்வகித்தல், அமைதி – ஆகியவற்றைக் குறிக்கிறது. இரண்டாவது இடதுகரம் தூக்கிய திருவடியைச் சுட்டும் வகையில் தொங்கிய நிலையில் உள்ளது. இது மாயை யிலிருந்து விடுபடுதலைக் குறிக்கிறது. அரக்கனின் உடல்மேல் நடராஜர் ஆடுவது வீடுபேறுக்கு முன் வெற்றிக் கொள்ளப்பட வேண்டிய மனித அறியாமை இருளைக் குறிக்கிறது.

சிவநடனம் பிரபஞ்ச நடனமே. சக்தியின் எல்லையற்ற பாய்ச்சல் கணக்கிலடங்கா வேறுபட்ட வகைகளில் வெளிப்பட்டு ஒன்றில் மற்றொன்றாய் கலந்து உருகி விடுகிறது.

பிரபஞ்சப் படைப்பு – அழிவின் தாளகதி பருவகாலங்களின் மாறுதலிலும், உயிர்ப் பொருளின் பிறப்பு இறப்பிலும் வெளிப்படுவதோடு, மூலப்பொருளின் – தாதுப் பொருளின் (inorganic matter) – சாரமும் அதுவே என்று நவீன இயற்பியல் காட்டுகிறது. துகள்களின் Quantum கோட்பாடு படி, வஸ்துவின் உட்கூறுகளுக்குள் நடைபெறும் ஒன்றில் ஒன்று செயல்படும் அனைத்து நிகழ்வுகளும் மெய்ம்மையான துகள்களின் வெளிச்சிதறல் மூலமாகவும், உட்கிரகிப்பு மூலமாகவும் நடைபெறு கிறது. அனைத்துப் பொருள்களின் துகள்களும் மெய்ம்மையான துகள்களை (virtual particles) வெளிச்சிதறவிட்டும், உட்கிரகித்தும் ஒன்றினோடொன்று செயல் படுவதால் 'படைப்பு – அழிவு' நடனம் பொருளின் இருப்புக்கே அடித்தளமாகிறது. ஒவ்வொரு துணை அணுவின் துகளும் சக்தி நடனம் நிகழ்த்துவதோடு, அதுவே சக்தி தாண்டவம் படைப்பு, அழிவின் துடிப்பான நிகழ்வாகிறது.

இந்நடனத்தின் பல்வேறு பரிமாணங்கள் ஒவ்வொரு துகளின் இயல்பின் இன்றியமையாக் கூறு ஆகும். துகளின் பல்வேறு குணாம்சங்களை நிர்ணயிக்கிறது. எடுத்துக் காட்டாக, மெய்ம்மைத் துகள்களின் வெளிச்சிதறல் உட்கிரகிப்பில் வெளிப்படும் சக்தியானது ஒரு குறிப்பிட அளவு திண்மைக்குச் (mass) சமம் ஆகும். அந்தத் திண்மை ஒன்றினோடொன்று செயல்படும் துகளின் திண்மை ஆகும். வேறுபட்ட துகள்கள் அவற்றின் நடனத்தில் வெவ்வேறு பரிமாணங்களை வளர்க்கிறது. அதனால் வேறுபட்ட சக்தி அளவு தேவைப்படுகிறது. அதனால் வேறுபட்ட திண்மைப் (mass) பொருளைக் கொண்டிருக்கிறது. முடிவாக மெய்ம்மையான துகள்கள் அனைத்தும் ஒன்றிலொன்று செயல்படுதலிலும் முக்கிய பங்கு வகிப்பதோடு வெற்றிடத்தால் தோற்றுவிக்கவும் அழிக்கவும் படுகின்றன. எனவே பிரபஞ்ச நடனத்தில் பங்கேற்பது பொருள் மட்டுமல்ல; வெற்றிடமும் கூடத்தான். அவை சக்தியின் பரிமாணங்களை முடிவேயில்லாமல் தோற்றுவிக்கவும், அழிக்கவும் செய்கிறது.

தற்கால இயற்பியலாளர்க்கு சிவ நடனமே துணை அணுப்பொருளின் நடனம் ஆகும். இந்து தொன்மம்படி, சிவநடனம் முழுப் பிரபஞ்சத்தையும் ஈடுபடுத்தும் படைப்பு – அழிவின் தொடர்ந்த ஊழித்தாண்டவம். பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய சிற்பிகள் நடராஜர் சிலைகளை பல்வேறு அழகிய படிமங்களாக உருவாக்கியுள்ளனர். பிரபஞ்ச நடனத்தைச் சித்தரிக்க இயற்பிய லாளர்கள் மிகவும் வளர்ச்சி அடைந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இருக்கின்றார்கள். பிரபஞ்சத் தோற்றம் – அழிவின் தொடர்ந்த தாளகதிக்குச் சான்றான ஒன்றிலொன்று செயல்படும் துகள்களின் குமிழி – அறை (bubble-chamber) புகைப்படங்கள் சிவதாண்டவத்தின் உருவங்களே ஆகும். இவை இந்திய சிற்பிகள் வடித்த நடராஜர் சிலைகளின் அழகு வடிவங்களே. எனவே பிரபஞ்ச நடனத்தின் உருவகம் தொன்மம், சமயக் கலை, நவீன இயற்பியல் ஆகிய மூன்றி

னையும் ஒன்றிணைக்கிறது. குமாரசுவாமி கூற்றுப்படி ''இது உண்மையிலேயே கவிதை; அதே சமயத்தில் அறிவியலும் கூட''.

14

அகில உலக இந்து மாநாடு சிறப்பு மலர்

1982

இலங்கை அரசின் ஆதரவில் அந்நாட்டின் இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு எஸ். இராசதுரை *21.4.1982*-ஆம் ஆண்டில் இலங்கையில் நடத்திய அகில உலக இந்து மாநாட்டின் சிறப்பு மலர் ஆகும். இந்நாட்டின் ஜனாதிபதி மாண்புமிகு ஜெ.ஆர். ஜெயவர்தனே இம்மாநாட்டைத் துவக்கி வைத்தார். *25.4.82*-ஆம் ஆண்டில் பிரதம அமைச்சர் மாண்புமிகு பிரேமதாசா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

திரு. டி.எம்.பி மகாதேவன், பி. திருஞானசம்பந்தம், இரத்தின நவரத்தினா, வ.ஆ. தேவசேனாபதி, இரா. நாகசாமி, க. வச்சிரவேலு முதலியார், மு. அருணாசலம் முதலியோரின் *39* ஆங்கிலக் கட்டுரை களும், திருமுருக கிருபானந்த வாரியார், ந.ரா. முருகவேள், கி.வா. ஜகந்நாதன், முதலியோரின் *20* தமிழ்க் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

வேதம், ஆகமங்கள், சைவ சித்தாந்தம், திருவாசகம், திருக்கோவையார் பற்றிய கட்டுரைகளும், இலங்கை, தென் ஆப்பிரிக்கா, மொரீஷியஸ், சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளில் இந்துமதம் பற்றிய கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

15

Shiva and Dionysus

1984

(Alain Danie'olu; பக்கம் – *235*)

1979-ஆம் ஆண்டில் பிரெஞ்சு மொழியில் வெளியிடப்பட்டது. *1984*-ஆம் ஆண்டில் ஆங்கில மொழிபெயர்ப்பு கே.எப்.ஹர்ரி (K.F.Hurry)யால் மொழி பெயர்க்கப்பட்டு அமெரிக்காவில் வெளி யிடப்பட்டது.

1. மூலம்(origin) : நகர்ப்புற நாகரிகம் பரவ ஆரம்பித்தவுடனேயே இருவேறு மாறுபட்ட சமய நிகழ்வுகள் நிகழ்ந்தன. இயற்கை உலகோடு தொடர்புடையது ஒன்று; மற்றொன்று சமுதாய நகரவாழ்வு எனும் அமைப்போடு தொடர்புடையது.

உலகே இறைவனின் வடிவம் என்று கருதுபவர்கள் தங்களை இயற்கையோடு – மரங்கள், மலர்கள், மிருகங்கள் – ஒன்று படுத்திக் கொள்வர். மறுவகைச் சமயம் நகர சமயம் ஆகும். மனித சமுதாயத்திற்குரியது. சமுதாய நடை முறைகளுக்கு இறை யாணையைப் பயன்படுத்துவது. மனிதனை மையப்படுத்துவது. இதில் ஒரு சிக்கல் உள்ளது. இப்படிப்பட்ட சமயநெறி, கடவுளை ஒரு இனத்திற்கு மட்டுமே உரியதாக்கும். இது உண்மைச் சமயத் திற்குப் புறம்பு ஆகும்.

சைவம் இயற்கையோடு இயைந்த சமயம் ஆகும். அதனுடைய மேனாட்டு வடிவமான டையோனிஸியம் போல காடுகளையும் மலை விளங்குகளையும் கொண்ட காட்டுப்புற நெறியாகும். கிரேக்கக் கடவுளான டையோனிஸீஸீம் சிவனைப் போல செடி, கொடி மரங்களின் கடவுள்; காளையின் கடவுள்.

ஆதி சமயங்கள் :

நான்கு சமயங்கள் : இந்தியாவின் நான்கு ஆதி சமயங்கள் நான்கு வேறுபட்ட கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை ஆகும்.

இயற்கையோடு இயைந்த வாழ்வு : முதற்கோட்பாடு இயற்கையை அடிப் படையாகக் கொண்டது (animistic). இயற்கையோடியைந்த வாழ்க்கையில் உயிர்கள் தாங்கள் உயிர் வாழ்வதற்கு என்ன தேவையோ அவற்றை அறிந்திருந்தன. புலன்களுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இருப்பதும் உணர்ந்து இருந்தன. இயற்கை யோடு வாழ்ந்த மனிதன் இறைச்சக்தியினை மலைகளிலும், காடுகளிலும், ஆறுகளிலும்

கண்டான். அனைத்து உயிர்களிலும், பொருள்களிலும் உறைந்திருக்கும் சக்தியை மதிப்பதே சமய, ஒழுக்கத்தின் அடிப்படை என்பதை உணர்ந்திருந்தான். உயிர்வாழ வேட்டையாடுதலே முதன்மை பெற்றிருந்தது. கொடூரமான மிருகங்கள் கூட தன் மகிழ்வுக்காகக் கொலை செய்வதில்லை. அந்த உலகில் இயற்கை நியதியை யாரும் மீறியதில்லை. இந்த அடிப்படையில் தான் முருக வழிபாடு தோன்றியது. முருகன் வழிபாடு, கிரீட்டின் கௌரோஸ் (Kouros in Crete; Kouros the youth) நிகர்க்கும் அவன் குமரன்; அழகன்; போர்க்கடவுள்.

பசுபதி – பார்வதி : கற்காலத்தின் பின் பகுதியிலும், செப்புக் காலத்தின் முற்பகுதியிலும், மிருகங்களின் தலைவனான பசுபதியும், மலையரசியான பார்வதியும் திராவிடப் படையாளிகளின் வாழ்வில் இடம் பெற்றனர். இது பெரும் தத்துவ, சமய இயக்கமாக சைவம் என்ற பெயரெடுத்து, இயற்கையோடு இயைந்த வாழ்வு (animism) எனும் கோட்பாட்டில் மேலெழுந்தது. இதிலிருந்து பல சமயங்கள் தோன்றலாயின. கிரீட்டில் மிருகங்களின் தலைவனாக ஜாக்ரீயஸும் (Zagreus), மலையரசியாக சைபிலியும் (Cybele) திகழ்ந்தனர். இதே வகையான வழிபாடு திராவிட உலகத்தோடு மொழியாலும் பண்பாட்டாலும் தொடர்புடைய அனைத்துப் பிரதேசங்களிலும் பரவி யிருந்தது. லிங்க வழிபாடு, ரிஷபம், நாகம், சற்றுக் குறைந்த அளவில் பெண் தெய்வ வாகனங்களான புலி, சிங்கம் - ஆகியன இத்தகைய வழிபாடுகளில் முதன்மை இடம் பெற்றிருந்தன.

சிவ வழிபாடு – முருக வழிபாடு இணைப்பு : வரலாற்று அடிப்படையில் சைவம் கி.மு. ஆறாயிரம் நூற்றாண்டு எனக் கணிக்கப்படுகிறது. பசுபதி வழிபாடு, முருக வழிபாடு – இரண்டும் இணைந்த ஒன்றாகச் சைவம் திகழ்ந்தது. முருகன் - டயோனிஸீஸ்; பசுபதி - Zan, then Zagreus and later Cretan zeus. அவன் வரலாறும் சிவனும் கந்தனும் இணைந்தது போல டயோனிஸீஸீடன் இணைந்தது.

ஜைன சமயம் : இரண்டாவது சமயம் ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஜைன சமயம் ஆகும், தொடக்க பௌத்தமும் இக்கொள்கையைத் தழுவியது.

வேத சமயம் : ஆரியப் படையெடுப்புக்குப்பின் மத்திய ஆசியாவின் நாடோடி மக்களின் சமயம் இந்தியா விலும், மேலைநாடுகளிலும் பரவியது, இந்தச் சமயத்தின் கடவுளர் எல்லாம் இயற்கைச் சம்பவங்களையும், மனித மேன்மைகளை ஆளுமைப்படுத்து தலையும் பெற்றிருந்தனர். வருணன்–மழைக்கடவுள்; அக்னி–தீ; இந்திரன்–இடி; வாயு–காற்று; சூரியன்; டயஸ்(Dyas)–ஆகாயம்; மித்ரா(Mitra)–ஒற்றுமை; ஆர்யமான்–கௌரவம்; பாகா (Bhaga)–நன்மையைப் பகிர்ந்து கொள்ளுதல்; ருத்திரன்–அழித்தல்; காலம்–மரணம்; ஆரிய சமயம் இயற்கையோடியைந்ததன்று. மனிதனை மையப்படுத்துவது. தன் பாதுகாப்பிற்கும், ஆளுகைக்கும் கடவுளின் துணையை நாடுவது. கி.மு. 2000-ஆம் ஆண்டில் சைவம் ஆரிய வேதசமயத்துடன் கலந்து, ஒருபுறம் இந்து சமயமாகவும் மறுபுறம் மைசீனிய (Mycenaean) கிரேக்க சமயமாகவும் உருவெடுத்தது. இருந்த போதிலும் சைவமும், டயோனிஸீஸீம் இந்த இணைப்பை அவ்வப்பொழுது தடுத்தே வந்தது.

Orphism - Mithraism : Orphism - ஜைன சமயத்தின் தாக்கத்தில் உருவானது. Mithraism - சைவச் சடங்குகளைக் கண்டறிய வீரர்களின் சமுதாயத்தினரின் முயற்சியில் தோன்றியது.

கி.மு. 6000-ஆம் ஆண்டிலிருந்து எங்கும் சிவ சின்னங்கள் ரிஷபம், நாகம், லிங்கம் – பரவ ஆரம்பித்தன.

சைவத்தின் மூலம் : புதைபொருள் ஆராய்ச்சிகளின் முடிவுப்படி கி.மு. 6000-ஆம் ஆண்டிலிருந்துதான் சைவம் நெறிப்படுத்தப்பட்டது. இக்காலத்திலிருந்துதான் ரிஷபவழிபாடு, லிங்கம் நட்சத்திரக்கூட்டம் (நமது கார்த்திகைப் பெண்கள்), நாகம், மலையரசி, ஆனந்தக் கூத்து, ஸ்வஸ்திகா, பலி babyrinth - முதலான சைவச்சடங்குகளும் அடையாளங்களும் இந்தியாவிலும், ஐரோப்பாவிலும் பரவ ஆரம்பித்தன. சைவ சமயத்தின்

தொடக்கம் மனித வரலாற்றின் எல்லை வரை நீளுகிறது. கற்கால (முற்பகுதி) நினைவுச் சின்னங்கள், பாரம் பரியம், விழாக்கள், Legends உலகெங்கும் பரவியிருப்பதால் எங்கு தோன்றியது எனச் சொல்ல முடியவில்லை. டயோனைஸீஸின் இந்திய யாத்திரை பற்றி கிரேக்க நூல்களும் எடுத்துரைக்கின்றன. ஒஸிரிஸின் (Osiris-டையோனைஸீஸீடன் ஒப்பிடப்படுவதுண்டு) இந்திய வருகை பற்றி ஒஸிரிஸின் நினைவுச் சின்னத்தில் இருப்பதாக டயோடோருஸ் (Diodorus) கூறுகிறார்.

இந்தியா முதல் போர்த்துக்கல் வரை சைவ அலை : கி.மு. 6000ஆம் ஆண்டில் இந்தியா முதல் போர்த்துகல் வரை ஒரு மகத்தான பண்பாட்டு அலை வீசியது. இப்பண் பாட்டு அலை சைவம் பரவிய நிலையோடு பெரிதும் தொடர்புடையது. மிருகங்களுக்கு முதன்மை தரும் இயற்கையோடு இயைந்த கலையாக விவரிக்கப்படுகிறது. சைவத்தோடு தொடர்புடைய அனைத்தும் (முன்னர்க் குறிப்பிட்டுள்ளது) ஐரோப்பா, ஆப்பிரிக்கா தென்கிழக்கு ஆசியா வரை பரவியது. நிர்வாண நிலையில் ஆசனத்தில் அமர்ந்த நிலையில் கொம்புகிரீடத்துடன் காட்சியளிக்கும் கடவுளின் உருவம் தொன்மை ஐரோப்பாவில் ஸெஸ்க்லோ (proto sesklo) காலத்திலிருந்து வின்கா காலம் வரை எல்லா நிலைகளிலும் காணப்படுகிறது. ருமேனியாவில் வின்கா காலத்தில் (Vinca period) ரிஷப வழிபாடும், லிங்க வழிபாடும் பரவியிருந்தது.

ஒஸிரிஸ் வழிபாட்டிலும் சீனச் சிந்தனையிலும் சைவ தாக்கம் : முதல் உண்மையான சைவப்படிமங்கள் கி.மு. 6000-ஆம் ஆண்டில் அனடோலியாவில் (Anatolia) உள்ள கடால் ஹொயுக்கில் (Catal Hoyuk) தான் காணப்படுகிறது. எகிப்திய கலாச்சாரத்தின் விடியலில் தான் ஒஸிரிஸ் வழிபாட்டைச் சேர்ந்த ரிஷபம், நட்சத்திரக் கூட்டம் (Ram) வெளிப்படலாயிற்று. எகிப்திய ரிஷப ஒஸிரிஸ் வழிபாடும், நட்சத்திர ஒஸிரிஸ் வழிபாடும் ஏறூர்ந்தானும், கார்த்திகேயனும் இணைந்ததைப் போல் உள்ளது. கி.மு. 5000-ஆம் ஆண்டைச் சேர்ந்த எகிப்தின் ராஜ பாரம்பரிய காலத்தின் முற்பகுதியைச் சேர்ந்த நிர்வாணக் கடவுளான மின் (Min)னின் பிருமாண்ட சிலை தோற்றம் அளிக்கிறது. இந்தக் காலகட்டத்தில்தான் (கி.மு.4500) மினோ மக்கள் கிரீட் மற்றும் அனடோலியா, சைப்ரஸ், மால்டா, ஸான்டோரினிக்கு வர ஆரம்பிக்கின்றனர். யின் (Yin- சீனத்தில் யோனி), யாங் (Yang- சீனத்தில் லிங்கம்) கோட்பாடுகள் – சைவ வழிபாட்டின் தாக்கம் – சீனச் சிந்தனையில் வேரூன்றின.

தென்கிழக்கு ஆசியாவில் சைவக் கூறுகள் : மிருகங்களின் கடவுளாம் ரிஷபக் கடவுளின் படிமங்கள் மொஹெஞ்சோதாராவில் கிடைத்தது போல கெல்ட்டின் முற்பகுதியிலும் (Pre-Celtic) மினோ பாரம்பரியத்திலும் (Minoan tradition) கிடைத்தன. தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த கம்போடியா, ஜாவா, பாலி பகுதிகளிலும் சைவம் தொன்மை நாகரிகத்துடன் நெருங்கிய தொடர்பு பூண்டுள்ளது. பாலியில் இன்றும் சைவத்தின் கூறுகளே தலை தூக்கி நிற்கின்றன. ஜாவாவின் தொன்மைக் கோயில்கள் போல ஆங்க்கூர் (Angkor) கோயில்களும் பெரும்பாலும் சைவச்சார்புடையனவே ஆகும்.

முப்பெரும் நாகரிகங்கள் : கி.மு. 4000-ஆம் ஆண்டில் இந்து சமவெளியில் சைவ நாகரிகம் தோன்றியது. இந்து சமவெளியிலிருந்து வந்தவர்களாகக் கருதப்படும் சுமேரியர்கள் கடல் மூலமாக மெசொபொடேமியா வந்து சேர்ந்தார்கள். அவர்கள் பின்பற்றிய சமயம் மத்திய கிழக்கு, க்ரீட், கிரீஸ் வரை பரவியது. கி.மு. 3000-ஆம் ஆண்டிலிருந்து ஆரியப் படையெடுப்பு வரை, மொஹெஞ் சோதாரோ, சுமேர், க்னோஸ்ஸோஸ் நாகரிகங்கள் இணையாக வளர்ந்து, ஒருபுறம் ஐரோப்பிய கண்டம் வரையும், மறுபுறம் மத்திய, கிழக்கு இந்தியா, தென்கிழக்கு ஆசியாவரை பரவின.

கி.மு. 3000-ஆம் ஆண்டு முடிவு மிக முக்கியமான காலம் ஆகும். அப்பொழுது தான் வரலாற்றுச் சிறப்பு மிக்க பெரு வெள்ளம் நிகழ்ந்தது. சுமேரிய அரச

பரம்பரை வெள்ளத்திற்கு முன் என்றும் வெள்ளத்திற்குப் பின் என்றும் இரண்டாகப் பாகுபடுத்தப்பட்டது. இந்துக் கணக்குப் படியும் கலியுகத்தின் தொடக்கமும் இதுவே. போராட்டயுகம் (Age of Conficts), நவீன யுகம் (Modern Age) அனைத்துக்குமே தொடக்கம் இந்தக் காலகட்டம் தான்.

டயோனைஸீஸின் தோற்றம் : மினோ நாகரிகம் (Minoan) கி.மு. 5000-ஆம் ஆண்டுக்கு முற்பட்டதாகும். (Fifth Millennium) மினோ நாகரிகம், அதன் கிரேக்கப் பாரம்பரியம் – இவற்றிலேதான் சைவ சடங்குகளும், புனைகதைகளும் மேனாட்டுச் சமய வரலாற்றிலே டையோனைஸீஸ் வடிவத்திலே முதல் முதலாகத் தலைகாட்டுகின்றன. கிரீட் நாகரிகம் ஆசிய நாகரிகங்களுடன் தொடர்பு கொண்டது. மினோவின் கிரீட்டில் சைவ சமயக்கூறுகள் – இளம் தெய்வம், மலையரசி, ரிஷபம், மினோடௌர் (Minotaur), நாகம்,சிங்கம், ஆண் ஆடு, தலவிருட்சம், லிங்கத்தூண், ரிஷபபலி, கொரிபான்டிஸ் (Korybantes), கௌரிடிஸ் (Kouretes) (இவர்கள் சிவ கணங்களை ஒத்தவர்), ஆகியோரின் ஆனந்தக்கூத்து – இடம் பெறுகின்றன.

கிரீட் மலையரசி, இளம்தெய்வம் – ஒற்றுமை : கிரீட் பெண்தெய்வம் பற்றி புனைகதைகள் (myths) எல்லாம் சிவன், பார்வதி புனைக்தைளை ஒத்து இருக்கின்றன. இதனுடைய எதிரொலி இஷ்டார் - டாம்முஸ் (Ishtar and Tammus), இஸிஸ்-ஓஸிரிஸ் (Isis-Osiris), வீனஸ்-அடோனிஸ் (Venus and Adonis) புனைகதைகளில் காணப்படுகிறது. மலையரசி ரீயா (Rhea)- பார்வதி ஆகும். டிக்டைன்னா (Diktynna) ஆர்டிமிஸ் மலைகளின் தாய் எனலாம். டிக்டைன்னா டிக்டே மலையிலிருந்து பெறப்பட்ட சொல் ஆகும். பார்வதி இமவான் (இமயமலை) மகள் ஆவார்.

டயோனைஸிஸின் மறு தோற்றம் : இரண்டாம் மினோ காலத்தில்தான் கிரீட் கடவுள் (Cretan god) டயோனைஸீஸ் என்ற பெயர் பெற்றது. கிரீட் சமயம் கணிசமாகவே பரவியிருந்தது. அது மட்டுமல்லாது கிரேக்கச் சிந்தனையிலும் சமயத்திலும் அதன் தாக்கம் அதிகமாகவே இருந்தது. பைலோஸில் (Pylos) உள்ள மைசீனியன் (Mycenan) பட்டயங்களில் (tablets) ஆரியக் கடவுளரோடு டயோனிஸீஸ் பெயரும் காணப்படுகிறது. சைவம் அல்லது டயோனைஸியத்தின் மறு தோற்றம் அடிப்படை சமயத்திற்குத் திரும்பியதையே உணர்த்துகிறது. இவ்வழிபாடு கிரேக்க மண்ணில் ஆழ வேரூன்றிவிட்டது.

சைவம், வைதிக சமயத்தோடு கலத்தல் : இதே கலத்தல் இந்தியாவிலும் நிகழ்ந்தது. சைவம் வைதிக பிராமண சமயத்தோடு பின்னிப் பிணைந்தது. திராவிடக் கூறுகளை நிறையப் பெற்ற ஆரிய சமயம் இது திராவிடம், இது ஆரியம் என்று பிரிக்க முடியாத அளவுக்கு ஆகிவிட்டது. சிவன் ஆரியக் கடவுளர் வரிசையில் முதன்மை வகிக்க ஆரம்பித்து விட்டான்.

டயோனைஸிஸின் இந்தியப் படையெடுப்பு : டயோனைஸிஸ் கீழ்த்திசை நோக்கிப் படையெடுத்தான். இப்படையெடுப்பு இரண்டு ஆண்டுகள் நிகழ்ந்தது. மூன்று ஆண்டுகள் கழித்து டயோனைஸிஸ் திரும்புகையில் வெற்றிவிழாவாகக் கிரேக்க மக்கள் அவனுக்கு பலி முதலான சடங்குகள் நிகழ்த்தினர். தொன்மை ஹீப்ருக்களும் திராவிட, சைவ உலகத்தின் தாக்கம் பெற்றிருந்தனர். சுமேரியர்களின் ''ஊரி''-லிருந்து (Ur) வந்த ஆபிரகாமிற்கு டேவிட் காலம் வரை களியாட்டங்கள் நிகழ்ந்தன.

எகிப்தும், இந்தியாவும் : எகிப்தில் ஓஸிரிஸின் (Osiris) புனைகதைகளும், புராணக் கதைகளும் சைவத்தோடு ஒத்து உள்ளன. ஹெரோடோடுஸீம் (Hero dotus), டயோனைஸீஸீடன் ஒப்பிடுவர். ஓஸிரிஸ் ரிஷபத்தில் ஏறி இந்தியா விலிருந்துதான் வந்தான். தன் படையாகிய ஸடைரை (Satyrs- நமது இந்திய கணங்களை ஒக்கும்) ஆடுநர், பாடுநராக அழைத்து வந்தான். எகிப்திற்கும் இந்தியாவிற்கும் உள்ள தொர்பு மிகத் தொன்மையானது. "Dionysus was already considered by the ancients as a god who was analogous to shiva under one of his main aspects. as evidenced by the practices of left-hand Tantrism" (Julius Evola,"Le Yoga tantrique).

கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த கிரேக்கரான மெகஸ்தனிஸ் சிவவழிபாடு – டயோனைஸீஸ் வழிபாடு இரண்டிற்கும் உள்ள ஒற்றுமையை வெளிப்படுத்துகிறார். சந்திரகுப்தரின் படையெடுப்பு டயோனைஸீஸின் ஊர்வலங்களோடு ஒப்புமைப்படுத்து கிறார். அலெக்சாண்டரின் வீரர்கள் நைஸா (Nysa near modern peshwar.pakistan) என்ற சிவத் தலத்துக்கு வந்தவுடன் டயோனை ஸிஸைச் சேர்ந்த தங்கள் சகோதரர்களைக் கட்டித் தழுவிக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

"According the Cretam myth, Lampros was the son of pandion. This name ... connects with the sun and moon ... The bisexual off-spring of Lampros and Galatea... were like the bisexual creatures that plato identifies birth the sun and moon. The attic festival of the pandia seems to have been celebrated at the time of the full moon. The festival ... derived its name from ... pandion. the eponymn of the tribe pandion's. being held in honour of zeus". ....(R.F. Willeth, Cretal cults and festivals).

பாண்டியர்கள் திராவிட பாரம்பரியத்தைச் சேர்ந்த தொன்மை மரபினர் என்பதும், அவர்களே பாரதப்போரில் ஆரியர்களை எதிர்த்துப் போரிட்ட பாண்டவர்கள் என்பதும் தெரிந்ததே.

கி.மு. 700-ஆம் ஆண்டில் செல்ட் மக்கள் மேலை நாடுகளுக்கு வந்தனர். ஸ்வீடனில் உள்ள ஸ்கேனிஸ் (Skane) உள்ள குன்றில் உள்ள லிங்க ரூபமான கடவுள் கி.மு. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். டென்மார்க்கில் செப்புக்காலம் முதல் இரும்புக் காலம் (Iron Age) தொடக்கம் வரை உள்ள காலகட்டத்தைச் சேர்ந்த மரலிங்கங்கள் இருக்கின்றன.

செல்ட் – இருவகை கடவுளர் : செப்புப்படிமத்திலும், இலக்கியத்திலும் வருணிக்கப்படும் செல்ட்டியரின் (Celtic) கடவுள் இரண்டு தெளிவான வகையைச் சேர்ந்தது ஆகும். முதல்வகை ஐரோப்பாவைச் சேர்ந்ததும், ஸ்வீடன், ஸ்பானிய குன்றுகளில் செதுக்கப்பட்டதும், பழமை கண்டுபிடிக்க முடியாததும் ஆகும். இது செல்டி ஆதிவாசிகளின் லிங்கக் கடவுள் ஆகும். இரண்டாவது வகை கொம்பு உள்ள கடவுள் ஆகும். கைகளிலும், கழுத்திலும் நாகாபரணம் பூண்டிருக்கும்.

நாகாபரணம் பூண்ட கல்லிங்கம், ரிஷப வழிபாடு, பலி, நாக வழிபாடு, ஆனந்தக் கூத்து (ecstatic dances) - ஆகியன இங்கிலாந்து, ஸ்வீடன், இத்தாலி, பிரிட்டானி, கார்ஸிகா (Corsica), கிரீஸ் (Greece), அரேபியா, இந்தியாவில் காணப்படுகின்றன. இளந்தெய்வமான கந்த வழிபாடும், கார்த்திகை பெண்கள் வரலாறும் கூடக் காணப்படுகின்றன.

அனைத்துச் சமய இயக்கங்களும் சைவம் வழங்கும் நற்செய்தி ஆகும்.

சிவன்

1) பிரத்மஜா (Prathamaja) முதலில் தோன்றியவன்
2) தொன்மைக் கடவுள்
3) பாஸ்கரன்
4) காருண்யம் மிக்கவன்; நைஸா (Nysa-ஆசிர்வதித்தல்) விண் கடவுள்.

டையோனைஸீஸ்

1) Protogonos (முதலில் தோன்றியவன்)
2) தொன்மைக் கடவுள்
3) Phanes (ஒளி தருபவன்)
4) டயோனைஸீஸ் என்றால் நைஸாவின் (புனிதமலை) கடவுள்.

டயோனைஸீஸ் என்றால் பைரவன் (பயங்கரம்) Bromios (ஆர்ப்பாட்டம்), ருத்ரன், எரிபோயஸ் (Eribous - கத்துபவன்) என்று பொருள். அவனது பெண் தன்மை மலையரசி ஆகும். (Parvathi or Rhea, or cybele) வெண் மாது (Gowri or leucothea) என்றும் அழைக்கப்படுவாள்.

சிவன் - சங்கரன் (சாந்தப்படுத்துபவன்), ஈசன் (தலைவன்), பசுபதி (மிருகங்களைக் காப்பவன்), காலன் (மரணத்தைச் செய்பவன்), அவனே கந்தன்; அழகன், முருகன், குமரன், கிரீட்டில் கௌரோஸ்

(kouros-குமரன்) என்பர், குகனைக் கிரேக்கத்தில் Hermes (The ancient Greek herald and messenger of the gods) என்பர்.

இரண்டாம் அத்தியாயம்

கடவுளின் புராணங்களும் கூறுகளும்

தக்கன் வேள்வி போலவே டயோனைஸ் மரபிலும் புறக்கணிப்பு நிகழ்கிறது. எடோனிய (Edones) அரசனான லைக்கர்கஸ் (Lycurgus) டயோனைஸை அவமானப்படுத்தி வெளியேற்றுகிறான். மினோவின் தெய்வ நிந்தனையால் கடவுளுக்கு மாடு பலி தர மறுக்கிறான். அதனால் இறைவன் தனது மனைவியாகிய பசிபேயை (paciphae) பைத்தியமாக ஆக்குகிறான். அவன் காளை மேல் அன்பு கொள்கிறான். இப்படிப் பிறந்ததுதன் மினோ டௌர் (Minotaur) என்ற பூதம்.

கடவுளின் பெயர்கள் :

பிரெஞ்சு மொழியின் "dieu" "div" (radiant - ஒளிவீசும்) என்ற சொல்லிலிருந்து வந்தது. ஜெர்மானிய Gott-ம் ஆங்கில "God"-ம் "Go"என்ற இந்தோ - ஐரோப்பிய வேர்ச்சொல்லின் அடியாகப் பிறந்தது. "Go" காளையைக் குறிப்பதாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் ‘‘சிவன்’’ ‘‘ஆன்’’ (Ann) என்று அழைக்கப்பட்டான். இந்த வழக்கு ஹிட்டைட் ஆன் (Hittite Ann), கனானைட் ஆனட் (Canaanite Anat), Celtic Ana ஆகியவற்றுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

முருகன்; இரண்டாம் டயோனைஸீஸ் :

சிவனின் பல்வேறு செயல்களுக்கு ஏற்ப ஆயிரம் நாமங்கள் உண்டு. அதுபோல டயோனைஸீஸீக்கும் பல பெயர்கள் உண்டு. அவையாவன, ரிஷப தேவன், மரணக்கடவுள், குமரக் கடவுள், தாயால் கைவிடப்பட்ட கடவுள், இருபிறப்புடைய கடவுள்.

1) கந்தன் – சிவன் மகன் – இரண்டாம் டயோனைஸீஸ்.
2) அக்னி புத்திரன் – பைரிஜென் (Phyrigenes) அக்னிமகன்.
3) கார்த்திகேயன் – ப்ரைஸீயஸ் (Briseus) கன்னிகளின் மகன்.
4) ஸாரஜன்மா (புதரில் பிறந்தவன்) – லிம்னையாஸ் (Limnaios) சேற்றில் பிறந்தவன்.

லிங்கத் தத்துவம் :

லிங்கத்தைப் போற்றுதல் என்பது மத்தியதரைப் பகுதியிலும் (Mediterranean) மேலை நாட்டின் வட பகுதியிலும் வரலாற்றுக்கு முன்பிருந்து உள்ளது. கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் டையோனைஸீஸ் வழி பாட்டிலும் காணப்பட்டது. செங்குத்தாக நிறுத்தி வைக்கப்பட்ட கல் வடிவத்தில் லிங்கம் வழிபடப்பட்டது. பௌசானியர்களால் (Pausanian) ஈரோஸ் (Eros) என்ற பெயரில் கரடு முரடான கல்வடிவத்தில் போற்றப்பட்டதும் இவ்வழிபாடே ஆகும். மெக்காவில் உள்ள கருப்புக்கல்லும் இதுவே. அமர்நாத்தில் உள்ள ஐஸ் லிங்கம் சுயம்பு உருவம் ஆகும்.

தூணில் லிங்க வழிபாடு :

சில சமயங்களில் உலகு எங்கணும், லிங்கம் தூண் வடிவத்திலும் காணப்படுவதுண்டு. நோஸோஸ் (Knossos), தேப்ஸ் (Thebs) அல்லது மால்டா (Malta)வில் தூணாகப் போற்றப்படுவதும் இந்நிலையே. (நிமிர்ந்து இருத்தல்) டையோனைஸீஸிம் பெரிகியோநியாஸ் (Perikonios) என அழைக்கப்படுகிறது. மினோ (Minoan) தூண்கள் அனைத்தும் கடவுளின் வடிவங்கள் என்பர்.

முகலிங்கம் :

அக்யீயஸ் (Agyieus) கூம்பு வடிவம் கொண்ட தூணாகச் சித்தரிக்கப்படுகிறது. அக்யீயஸ் வழிபாடு அபோலோ (Apollo) வுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. முகம் கொண்ட நிமிர்ந்த லிங்கம் மேலை நாடு முழுமையிலும், கிரீஸிலும், இந்தியாவிலும் காணப்படுகிறது. தென் இந்தியாவில் குண்டிமல்லம் (Gundimallam) லிங்கத்தில் முழு உருவமும் காணப்படுகிறது.

சைவர்களும், ஆதிரோமானியர்களும் கழுத்தில் லிங்கம் அணிவர். பொம்பேயில்

(Pompei) நிரம்ப எடுத்துக்காட்டுகள் உள. டையோனைஸீஸ், ஒஸிரிஸ் ஊர்வலங்களில் லிங்கச் சின்னங்களைத் தூக்கிச் செல்வர்.

அண்மைக் காலம் வரை ஜெர்மானிய, பிரெஞ்சு, இத்தாலிய விவசாயிகள் சர்ச்சுக்கு லிங்க வடிவு கேக்குகளை ஊர்வலமாக எடுத்துச்செல்வதை வழக்கமாக வைத்து இருந்தனர்.

அர்த்த நாரீச்வர வடிவம் :

அக்டிடிஸ் (Agditis) சைபல் (Cybele) பார்வதி ஆக மாற்றப்பட்ட அர்த்த நாரீச்வர வடிவம் ஆகும். சிவபெருமானைப் போலவே, ஆதிமனிதனாகிய ஆதாம் (Adam) ஒரு பகுதி ஆண்பாகமும், மறு பகுதி பெண் பாகமும் உடையவன்.

விநாயகர் :

விநாயகரைப் போலவே ஹெர்ம்ஸீம் (Hermes) நல்லனவே செய்யும் கடவுள் ஆவார்.

கந்தப் பெருமான் :

கந்தப் பெருமான் புதிய டையோனைஸீஸ் போல் தோற்றமளிக்கிறார். இந்த டையோனைஸீஸைத் தான் ஹெர்மஸ் ஆசியாவில் இருந்த நைஸா (Nysa) தெய்வப் பெண்களிடம் ஒப்படைக்கிறார். இது கந்த புராணமே ஆகும். புதிய டையோனைஸீஸ், பைரிஜீன் (Pyrigenes) (நெருப்பால் உருவாக்கப்பட்டவன்) என்றே அழைக்கப்படுகிறான். அவனே ப்ளையேட்ஸ் (Pleiades) ஸின் மகன் நட்சத்திரமாக மாறுகிறான். கார்த்திகேயன் என்ற பெயரைக் கவனிக்கவும்.

சிவபெருமானின் கணங்கள் டையோனை ஸீஸின் கோரி பான்டேக்களுக்கு ஒப்புமை (Korybantes). பக்தர்களைப் பச்சன்ட் களோடு (Bacchants) ஒப்பிடலாம். அசுரர்கள் டைட்டான்கள் (Titans) ஆவார்.

ஆறாம் அத்தியாயம்

ஆண் பெண் கடவுளரின் மிருக தாவர வடிவங்கள்

ரிஷபம் :

ரிஷபம் சிவபெருமானின் வாகனம். ரிஷபமே சிவன். அபிஸ் (Apis-ரிஷபம்) ஒஸிரிஸீடன் (Osiris) இணைக்கப்படுகிறது. ரிஷபம் மினோ காலத்திய புனித மிருகம் ஆகும். நாகரிகத்தின் விடியலில் வழிபடப்பட்ட தொன்மைக் கிரீட் கடவுள் (Cretan god) ஆகும்.

''கோ'' (ரிஷபம்) என்ற வடசொல் God (English). Gud (scandinavian) Gott (German) ஆகிய சொற்களின் மூலம் ஆகும். ஏழாயிரம் ஆண்டுகட்கு முன்னர், அனடோலியாவில் (Anatolia) ஆண் கடவுள் ரிஷப வடிவம் கொண்டு இருந்தது. கிரீட்டில் (Crete) கோர்டைனா (Gortyna) வில் கிடைத்த நாணயங்களில் ரிஷபத்தில் அமர்ந்துள்ள பெண்வடிவம் காணப் படுகிறது. டோலிச் (Doliche) கிராமத்திற்கு அருகில் ஜூபிடர் (Jupiter) ரிஷபத்தில் நிற்பது போலக் காட்சியளிக்கிறது. காகஸஸ் (Caucasus) மலைகளிலிருந்து கிடைத்த காஸ்ஸ்பேக் (Kazbek) புதையலில் லிங்க வடிவங்கள் கிடைத்தன.

அபிஸ் (Apis), ம்நேவிஸ் (Mnevis) எனப்படும் ரிஷபங்கள் ஒஸிரிஸின் (Osiris) வாழும் மானுட வடிவங்களாக எகிப்தியர்களின் சமயத்தில் பெரும்பங்கு வகிக்கிறது. இரண்டாம் டையோனைஸீஸ் ரிஷப வடிவில் உள்ள கடவுள் என்பர்.

மினோக்களின் தொன்மை உருவங்கள் ரிஷபத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது. கிரேக்க தொன்மம்படி ஸீயஸ் (Zeus) ரிஷப வடிவத்தில் ஈரோப்பாவிற்குக் (Europa) காட்சியளித்தது. நந்தி வடிவம் பொறித்த இலச்சினைகள் மொஹெஞ்சோ தாரோவிலும், சுமேர் பகுதியிலும் கிடைத்தன. ரிஷப டையோனைஸீஸ் ரிஷப உருவில் ஆடியவண்ணம் கடலி லிருந்து வெளிவந்து காட்சியளித்தார். நந்தியம் பெருமான் நடனம், இசையும் கற்றுத்தருவதாக சைவ புராணங்கள் கூறும். டையோனைஸீஸ்

ரிஷபக் கடவுள், ரிஷப வடிவத்திலே காட்சியளிக்கிறார். ஒலிம்பி யாவில் (Olympia) கிரீட்டிய ஸீயஸ் (Cretan Zeus) ரிஷப வடிவத்தில் வழிபடப்பட்டு வந்தது.

ஏழாம் அத்தியாயம்

புனித தலங்கள்

மெக்காவில், மகேஸ்வரன், கருங்கல் வடிவில் காணப்படுகிறார்.

சிவனுக்குக் கைலாயமலை; கிரேக்கக் கடவுளுக்கு ஒலிம்பஸ்மலை; டையோனை ஸீஸீக்கு அதோஸ் மலை (Athos).

16

Experiencecing Siva 1985

(பதிப்பாசிரியர் F.W. Clothey and Brucelong; *பக்கம் 218)*

Part - I

"The Religious Experience in Saiva Thought and Literature".

1. Karma and grace in Saiva Siddhanta

சைவ சித்தாந்தத்தின் இருவினைக் கோட்பாடும், அருள் கோட்பாடும்)

(V.A. Devasenapathy; *12 பக்கங்கள்)*

இரு வினையொப்பு, மலபரி பாகம் – இரண்டினையும் தெளிவுற விளக்குகிறார். இறைவன் தந்தையாய், மருத்துவனாய் – நிக்கிரஹம், அனுக்கிரஹம் செய்வதைச் சொல்கிறார். மன்னிக்கும் மனப்பான்மை (Readiness to forgive), உற்ற நோய் நோற்றல் (Readiness to Suffer), பிறர்க்குப் பணிபுரிதல் (Readiness to Serveothers) ஆகிய முப் பெரும் பண்புகளை சைவ சித்தாந்தம் கொண்டு வலியுறுத்துகிறார். இரண்டாம் பகுதியில் இறைவன் அருளை விளக்குகிறார்.

2. "Madness" and Devotion in Manikka vasakar's Tiruvacakam

(மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பித்து நிலையும், பக்தி நிலையும்)

(Glenn E. Yocum; *18 பக்கங்கள்)*

எமிலி டிக்கின்ஸனின் கவிதையோடு (Emily Dickinson) கட்டுரை தொடங்குகிறது

"Much Madness is divinest sense-

To a discerning Eye-

Much sense - the Starkest Madness".

பித்து, உன்மத்தம் என்றெல்லாம் திருவாசகத்தில் பேசப்படுவன நாம் புற உலகில் காணும் பைத்தியக்கார மனிதர்களைக் குறிக்கும் ''பைத்தியம்'' அல்ல. ஆனால் அந்நிலை போல இருக்கும் சாதாரண, பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தனிமனித, உலகியல் கண்ணோட்டத்தில் முற்றிலும் வேறுபட்ட நிலையே மாணிக்கவாசகர் உணர்த்தும் 'பித்து' 'உன்மத்தம்' ஆகும்.

"By 'madness' I do not intend to signify any western psychoanalytic definition of insanity, while on occasion I shall also mention 'hysterical behaviour', I am Using these terms naively, as one meets with them in every day parlance. They do notbear the weight of psychoanalylic technical terms based upon clinical observations.

It does seem to me however, the pittu and unmattiam have roughly the same connotation for Manikkavacakar that 'mad' commonly has for us, namely, **Striking deviation from normal, widely accepted personal and social behavior".**

இதனை விளக்க திருவாசகப் பாடலையே எடுத்து ஆளுகிறார்.

''உளையா அன்பு என்பு உருக ஓலமிட்டு
அலைகடல் திரையின் ஆர்த்து ஆர்த்து
ஓங்கித் தலை தடுமாறி வீழ்ந்து புரண்டு
அலறி பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பும்
கடக்களிறு ஏற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றேன்'' (திரு அண்டப்; *150 - 156)*

பக்தி பித்த நிலையான முழு விடுதலை ஆகும். அந்நிலை உலகியல் பந்தம் பிணிக்காத ஒன்றாகும்.

"Devotional madness, in short, is a state of absolute freedom where one is unconditioned by the structures of ordinary reality".

சிவன் பக்தர்களை ஆட்கொள்ளும் போது பித்த நிலையாக்குவானேன் என்பது அடுத்த கேள்வி. ஒன்றனை உடைமை யாக்கும் பொழுது, அந்த உடைமையே உடையவனாம் தன்மை பெறுகின்றது. சிவனாக மாறும் தன்மையெனில் பித்தனாக மாறும் தன்மையே அல்லவா? சிவனே பித்தன் அல்லவா?

''சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பே
தொழும்பையும் ஈசற்கு என்று
விரிப்பிப்பன் என்னை விடுதி கண்டாய்
விடின் வெம்கரியின்
உரிப்பிச்சன் தோல்உடைப்பிச்சன்
நஞ்சு ஊண்பிச்சன் ஊர்ச்சுடுகாட்டு
ளிப்பிச்சன் என்னையும் ஆளுடைப்பிச்சன்
என்று ஏசுவனே''

(நீத்தல் ... 49)

"In brief, to be possessed is to become like one's possessor: and to become like siva is to become mad".

பைத்தியக்கார உலகிலே ஆன்றோர் பித்தராக இருப்பதில் வியப்பென்ன?

"or to turn the symbol of madness around in a mad world sane men will appear to be crazy".

மாணிக்கவாசகரைச் சிவன் முழுமை யாக ஆட்கொண்ட நிலை ஒரு புறம்; நாயக-நாயகி பாவம் மறுபுறம்; இவ் விரண்டனுக்கும் இடைப்பட்ட குரு – சிஷிய முறையிலுமாக எக்களிப்பும், பித்த நிலையும் மிளிர்ந்து காணப்படுகின்றன.

காரைக்காலம்மையாரின் பேயுருவம், அப்பர் ''பித்தர்'' என்று சொல்வதும் பக்தர்கள் பக்திக்களிப்பில் பித்துபிடித்தாற் போல் அலறும் நிலையைப்பறறித் தாயு மானவர் (தாயு 77, 83) கூறுவதும் ஈண்டு நினைவுகூரத்தக்கது. குலசேக ராழ்வார் பெருமாள் திருமொழியிலும், பாகவத புராணத்திலும் இதே நிலை சித்தரிக்கப்படுகின்றது.

"Everyone mad but the madmen who with tearful eyes and thrilled body, pine for him, and sing and dance and worship Vishnu" (Perumal thirumoli II-9).

"Without the bristling of the hair of the body, without the mind dissolving, without being inarticulate because of tears of joy, without bhakti, how can the heart be purified? He whose voice is stammering (from emoltion) whose thoughts dissolve, who repeatedly weeps and laughs, who shameless, sings and dances such a person. attached by bhakti to me purifies the world" (Bhagavata purana XI 14. 23-24).

சைதன்யர் கீதங்கள் இசைக்கும் பொழுது, உச்சக்கட்டத்திலே மயங்கிக் கீழே வீழ்ந்து, வலிப்பு வந்தவர் போலக் கிடப்பார். ''கிருஷ்ணநாமத்தை விடாமல் உச்சரிக்கும் பொழுது நான் பித்தநிலைக்குத் தள்ளப்பட்டுச் சிரிப்பதும், அழுவதும், ஆடுவதும், பாடுவதும் செய்கிறேன். கிருஷ்ண நாமத்தின் முன்னே பகுத்தறிவு அற்றுப்போகிறது'' சைதன்யர். (Caitanya Caritamrta Adi 7:74)

3. "The theory of the phenomenal world in Manikkavacakar's Tiruvaacakam"

(மாணிக்கவாசகர் திருவாசகத்தில் உலகியற் கோட்பாடு) - Lucella mowry.

மணிவாசகர் காலத்திய தத்துவ, புராண, இலக்கியக் கருத்துக்களை ஆய்கிறார். தத்துவ நிலையில் சங்கரருடைய ஏகான்ம வாதக் கொள்கையையும், சாங்கியத் தத்துவத்தின் உண்மைப் பொருள் புருஷன், பிரகிருதி என்ற இருநிலை கோட்பாட்டை யும் விளக்குகிறார். புராண நிலையில் மும்மூர்த்திகள், சிவனின் முதன்மை, எமலோகம், சிவலோகம், கைலாயம் பற்றி யெல்லாம் எடுத்துரைக்கி றார். இலக்கிய நிலையில் ஐந்திணைக் கோட்பாட்டினை விளக்குகிறார்.

மணிவாசகரின் உலகியல் கோட்பாடு சம்பந்தர், அப்பர், ஆரூரர் ஆகியோரின் கோட்பாடுகளுடன் இயைந்து நிற்பதையும், மெய்கண்டாரின் சிவஞான போதத்திற்கு ஒத்துப்போவதையும் முன்வைக்கிறார். சங்க

இலக்கியம் காட்டும் இயற்கையழகையும் திருவாசகப் பாடல் களில் படம் பிடித்துக் காட்டுகிறார்.

''உலகத்துயர், இயற்கை அழகில் ஈடுபாடு – என்ற இரு வேறுவிதமான மாறுபட்ட கருத்துக்களை மணிவாசகர் எவ்வாறு கையாளுகிறார்? சிவனருள் பெறாத நிலையில் உலக வாழ்வில் அர்த்தம் இல்லை; சிவன் அன்பு பெற்ற பிறகு உலக வாழ்வு அர்த்தமுள்ளதாக – உண்மையானதாக மாறிப்போகிறது''.

"The world, then, without Siv's gracious love, is of no Value and hence unreal, but the world which allows Siva's love to enter into every crevice is the real in the fulest sense of the term".

''இவ்வுலகில் தான் மனிதன் தன் தலைவனைச் சந்தித்துத் தலைவனின் அன்பைப் பெற்று, அதனால் பிறவித் துயர் நீங்கி முழுப்பொருளோடு கலக்க முடியும்''.

"The world, which is Siva's domain, is the place where the Lord and man meet and where if man accepts the Lord's love he will shed unreality to become Reality and this never become entangled again in karmic birth".

''வேற்று விகார விடக்குடம்பின் உள்கிடப்ப ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று போற்றிப் புகழ்ந்து இருந்து பொய் கெட்டு மெய் ஆனார் மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே''

(சிவ புரா; 84-88)

அடுத்து உலகிற்கும், சிவனுக்கும் சமய அடிப்படையிலே உள்ள தொடர்பை ஆய்கிறார். ''சிவன் ஒன்றாகவும் பலவாகவும் இருக்கிறான். ஆண்; பெண்; அலி; தீ; நீர், காற்று; நெருப்பு; வெளி'' ஒன்றாய் இருப்பவன் பலவாய்க் கலப்பது எப்படி என்பதினை உமாதேவியாரைக் கொண்டு விரிவாக விளக்குகிறார். சிவஞான போதத்தின் முதற் சூத்திரம். இரண்டாம் சூத்திரம் – ஆகியவற்றை எடுத்துக்காட்டி விளக்குகிறார். அடுத்து திருமாலும், நான்முகனும் காண்பரிய பேரொளியாம் புராணக் கதையினை விளக்குகிறார்.

மாணிக்கவாசகர் இவ்வுலகினைத் தத்துவக் கண் கொண்டு பார்க்கவில்லை; அருளாளராகப் பார்க்கிறார். இந்த அடிப்படையிலே உலகுண்மையை அவர் பேசுகிறபொழுது சங்கரரின் அத்துவிதக் கோட்பாட்டுக்கு மாறுபடுகிறார். இறைவனுக்கும் உலகிற்கும் உள்ள தொடர்பை, விளக்க நேரின், மாறுதல் செய்யப்பட்ட சாங்கியத்தத்துவம் வேண்டுமானால் சைவக் கொள்கைக்கு ஏற்புடையதாகக் கொள்ளலாம் என்று முடிக்கிறார்.

4. Siddhanta: Siddha and Saiva :

(சைவசித்தாந்தமும், சித்தர் பாடல்களும்) (David C. Buck. *13 பக்கங்கள்)*

சைவசித்தாந்தக் கருத்துக்களை, பாம்பாட்டிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், அகப்பேய்ச் சித்தர், ஔவைக்குறள், சிவவாக்கியர் ஆகியோர் பாடல்களுடன் ஒப்பிடுகிறார்.

"The three ontological realities of the saiva siddhantam - God, souls, and the bondage separating God from the souls - are, in essence at least, accepted in most siddha songs. Arul, or the grace of Siva, is sung of, though its ramifications are likely to be some what different in the two siddhantas. The status of the soul in relation to God, while arrogating some what more prestige in Siddha Siddhanta, is, nonetheless, one of subservience in both traditions. The Siddha's feeling for the soul's relation to the physical body, and that feeling's difference from saiva siddhanta. Ideas are also interesting, particularly in the ambiguities of the questions of immortality-imagery and of poetic language with respect to philosophic. The processes of attainment of release are different, yet not entirely opposed, and the conception of the role of God from the point of view of the individual soul is very similar. Whatever the relations may be on the myriads of comparable points, however, a significant, general difference is thrust and concern can be felt in the opposition of the saiva siddhanti's clear metaphysics, and the siddha's song, in which he celeberately bypasses intellectual clarity and precision, opting rather formotional forcefulness.

மிக அருமையான கட்டுரை. ஒவ்வொரு வரியும் ஆழ்ந்து படிக்க வேண்டும்.

Part - II

The Ritual Experience in Saivism

5. The Role of the Saivagamas in the Saiva Ritual System.

[Jean Filliozat (paris/pondicherry) - *6 பக்கங்கள்*]

சைவ ஆகமங்களைப் பற்றியும், இந்தியா, தென்கிழக்கு ஆசியாவில் உள்ள சைவ சமய வழிபாட்டுமுறை பற்றியும், இந்தோனேஷியா, கம்போடியா, தாய்லாந்து கட்டிடக் (கோயிற்) கலை பற்றியும் விளக்குகிறார்.

6. Space concepts and worship Environment in Saiva Siddhanta.

(J.W.V. Curtis. - *13 பக்கங்கள்)*

நவந்தரு பேதமாகக் கோயில்கள் கட்டப்பட்டிருப்பதனைப் படங்களுடன் விளக்கியிருக்கிறார். அதனை மொழி பெயர்த்தால், ஒரு வார்த்தையை மாற்றி னாலும் பொருள் புரியாது. எனவே நூலினைப் படிக்க வேண்டும்.

7. Rudra As an embodiment of Divine Ambivalence in the satarudriya Stotram.

(J.Bruce Long)

ஸதருத்ரீய ஸ்தோத்திரம் (ருத்ரர் நூற்றுவர்க்குப் புகழஞ்சலி) வாஜஸனேயி சம்ஹிதையில் பதினாறாவது காண்டம் ஆகும். இதுவே தனி உபநிடதமாகக் கருதப்பட்டு வருகிறது. இந்நூல் கி.மு. 1000-ஆம் ஆண்டில் எழுந்தது ஆகும். இன்றும் மகாசிவராத்திரியின் போது கேதாரநாத்திலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள அனைத்துச் சிவாலயங்களிலும் இருபத்து நான்கு மணிநேரமும் இருபத்தேழு முறை ஜபிக்கப்படுகிறது.

இந்நூலின் தான் திருவைந்தெழுத்து முதலில் ஓதப்படுகிறது.

8. The Yaga: A fire Ritual of South India.

(Fred w. Clothey)

திருச்செந்தூர் முருகன் திருக்கோயிலில் கந்த சஷ்டியின் போது நடைபெறும் யாக பூஜையைப் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

Part - III

The life of Sankaracarya

(David N. Lorenzenya)

அருளாளர்களைப் பற்றிய வரலாற்று உண்மைகள் : அருளாளர்களைப் பற்றிய செய்திகள் (அவர்கள் வரலாறு. அவர்கள் மொழிகள் உட்பட – இதனை Hagiography என்பர்.) இல்லாமல் எந்தச் சமயமும் இல்லை. இயேசுபிரான் கௌதம புத்தர், முகமது நபி, கிருஷ்ண பகவான், இராம பிரான் – இவர்களுடைய வரலாறுகள் இல்லாமல் சமயங்கள் இல்லை. இந்தியாவில் ஜைன, பௌத்த சமயங்களை நிறுவியவர்கள், விஷ்ணுவின் அவதாரங்கள் (இவர்களைச் சுற்றி மகத்தான பாரம்பரியம் பின்னிக் கிடக்கிறது.) – இவர்களை விட்டு அடுத்த படிநிலையில் உள்ள சங்கரர், ராமானுஜர், சைதன்யர், கபீர் முதலியோரைப் பற்றி ஆய்வோமானால் பல வரலாற்று – சமய உண்மைகள் புலப்படும்.

புத்தர், மகாவீரர், கிருஷ்ணன் பற்றிய செய்திகள் : வேதங்களிலோ, பிராமணங்களிலோ உபநிடதங்களிலோ கடவுளரைப் பற்றியோ குறிப்பிடத்தக்க செய்திகள் இல்லை எனலாம். முதல் முதலாகக் கிடைப்பதெல்லாம் புத்தர், மகாவீரர், கிருஷ்ணர் ஆகியோரைப் பற்றிய செய்திகளே ஆகும். புத்தரும், மகாவீரரும் கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் முன்பகுதியில் மறைந்திருக்கலாம். கி.மு. இரண்டாம், முதலாம் நூற்றாண்டில் பார்ஹட் (Bharhut), காஞ்சியிலும் எழுப்பப்பட்ட தூண்களிலும், புத்த ஜாதகக் கதைகளிலும் தான் புத்தரைப் பற்றிய செய்திகள் தெரிய

வரலாயின. அதே சமயத்திலேயே ஜைன சமயத்திலும் மகாவீரரை உள்ளிட்ட இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் பற்றிய செய்திகளும் வந்திருக்கலாம்.

கிருஷ்ணனைப் பற்றிய முதல் வரலாற்று செய்தி : இந்துக் கடவுளரில் கிருஷ்ணனைப் பற்றித் தான் முதன் முதலில் செய்திகளோ வரலாறோ வர ஆரம்பித்தது. இந்தோ கிரேக்க அரசனான அகதாகிள்ஸ் (கி.மு. *180-165*) கால கண்டுபிடிப்பில் கிருஷ்ணன் வடிவம் உள்ளது. கி.மு. 500 முதல் கி.மு. 200 வரை உள்ள கால கட்டத்தில் இந்து சமயத்தில் இது போன்ற செய்திகள் (Hagiology) வர ஆரம்பித்தன. பழைய வேதகால ஆரிய சமுதாயக் கட்டமைப்பு குலைந்து போய், புதிய வேதமல்லாத சமுதாய சமய அமைப்புகள் உருவாகலாயின. அவற்றுள் பௌத்தம், ஜைனம், ஆஜீவகம், உபநிடத இந்து சமயம் அடங்கும்.

சங்கரர் – சிவபெருமானின் அவதாரம் : சங்கரரைப் பற்றிய செய்திகள் அனைத்தும் அவரைச் சைவர் என்றே சுட்டுகின்றன. சங்கரர் சிவபெருமான் அவதாரம் என்றும், விஷ்ணு அவருக்குக் கட்டுப்பட்டவர் என்றும் குறிப்பிடுகின்றன. ஆனால் சங்கரர் எதிர்ப்பது எல்லாம் பெரும்பாலும் சைவர்களையே. பாசுபதர்கள் தத்துவத்தையும் காபாலிகரின் சடங்குகளையும் அவர் மறுக்கிறார்.

புத்தராக விஷ்ணு அவதரித்தும் காபாலிகர்களும் மக்களைத் திசை திருப்புகின்றனர் என்ற தேவர்கள் முறையிட, சிவபெருமான் சங்கரராகவும், விஷ்ணு சங்கார்ஷனராகவும், ஆதிசேடன் பதஞ்சலியாகவும், கந்தன் குமரிலபட்டராகவும், பிரமன் மண்டல மிஸ்ரராகவும், இந்திரன் சுதன்வனனாகவும் அவதரித்தனர்.

(மாதவரின் சங்கரதிக்விஜயம்) சங்கரருடைய வரலாறு முழுமையாக எடுத்து உரைக்கப்படுகிறது.

9. Contemporary Saivism and Tamil Identity: An Interpretalition of Kunrakkuti Atikalar

(Charles A. Ryerson)

இக்கட்டுரையில் Robert Bellah வின் "Meaning Modernisation" என்ற நூலிலிருந்து சில பகுதிகளை எடுத்துக் காட்டுகிறார். ''நவீனப்படுத்துதல் என்பது மாற்றம்; மாற்றத்தை பாரம்பரியம் ஏற்காது. மாறாக ஒன்றே நிலைத்தது என்பது பாரம்பரியம். இக்கோட்பாடு இங்கிலாந்து நாட்டிலே சமயவாதிகளால் ஏற்கப்பட்டது. பிரான்சு நாட்டிலே சர்ச் மாற்றத்தை எதிர்த்தது. ஜெர்மானிய நாட்டிலே இதன் விளைவாக romantic nationalist', 'radical socialist' என்ற இரண்டு இலட்சியங்கள் உருவாயின. 'Romantic nationalism' மொழி, இனம் சமயம் ஆகியவற்றின் தொன்மையில் விளைந்த ஒருமைப்பாட்டை வலியுறுத்துவது ஆகும். 'Radicalsocialism' என்பது பாரம்பரியமான சமுதாயத்தில் உருவாகும் ஆழமான மோதல்கள் அடிப்படையில் எழுந்தது ஆகும். இத்தகைய சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டோரும், பாரம்பரியம் கொண்டவரும் இடம் பெறுவர். ஆதிக்க நிறுவனங்களுக்கு எதிர்ப்பு மேலிடும்.

இத்தகைய சூழ்நிலையில் உணர்வு பூர்வமான தொன்மையும், மரபுவழிபட்ட அநீதியைத் தாண்டும் மனப்பக்குவமும் அடிப்படையாகக் கொண்ட தேசிய ஒருமையே சிறந்த தீர்வு ஆகும். அந்த அடிப்படையிலேயே புதிய சமுதாயம் உருவாக வேண்டும்'' இவை அனைத்தும் Bellah வின் கருத்துக்கள் ஆகும்.

இந்த அடிப்படையிலே தமிழகத்தில் எழுந்த திராவிடக் கழகத்தின் சாதி ஒழிப்பு இயக்கமும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தமிழ்ப்பண்பாட்டைப் போற்றும் மரபும், இவற்றையெல்லாம் உளங்கொண்டு மார்க்சியக் கருத்துக்களையும் இணைத்துப் புதிய சமுதாயம் உருவாகப் பாடுபட்டார் குன்றக்குடி அடிகளார்.

10. The Lotus and the lingam: Notes on Saivism in Thailand

(David Swlarer)

கி.பி. முதல் நூற்றாண்டிலேயே தாய்லாந்து நாட்டில் சைவம் பரவ ஆரம்பித்து

விட்டது. நகோர்ன் பிரதோமி மிலிருந்து (Nakaran prathom) சோங்க்லா (Songkhala) வரை பலவகையான லிங்கங்கள் கிடைத்து உள்ளன. மூன்றாம் ஜெயவர்மன் காலத்தில் மகேஸ்வர வழிபாடு அப்பகுதியில் வழக்கமாக இருந்திருக்கிறது. சைவம் அரசர்களின் சமயமாக மாறி சிவபெருமான் தேவராஜாவாகக் கருதப்பட்டார். ஒரு காலகட்டத்தில் விஷ்ணுவை முன்னிலைப்படுத்தும் விஷ்ணுராஜா வழிபாடும் போதிசத்துவரை முன்னிலைப்படுத்தும் 'புத்தராஜா' வழிபாடும் பின்னிப் பிணைந்துவிட்டன. சிவன் கோயில்கள் எழும்பின. சைவக் குருக்கள் பணி புரிந்தனர்.

1975-ஆம் ஆண்டிலும் சென்னையைச் சேர்ந்த பிராமணக் குருக்கள்மார் இருப்பதை ஆசிரியரே நேரில் அறிந்திருக்கிறார். பௌத்த சமயச் சடங்குகள் தொடங்கும் பொழுதும் இந்துக் கடவுளரை வழிபடுவது இன்றும் நடக்கிறது. புத்த பிக்குகளும், இந்துக் குருக்களும் தனித் தன்மையோடு விளங்கினாலும் தாய்லாந்து சடங்குகளில் இணைந்தே செயல்பட்டனர்.

அரச நிகழ்ச்சிகளிலும், விழாக்களிலும் கூட இதே போன்ற இணைப்பு உள்ளது. பாங்காக்கில் ஊஞ்சல் விழா எனப்படும் திருப்பாவை திருவெம்பாவை முக்கிய அரச நிகழ்ச்சியாகும். ஆனால் இப்பொழுது நடைபெறுவது இல்லை. அரசன் இந்திரனோடு ஒப்பிடப்படுகிறான். Funan காலத்தில் அரசன் சிவபெருமானாகக் கருதப்பட்டதின் மாறிய வடிவமாகலாம். அரசனின் முடிசூட்டு விழாவில் அரசன் சிவ விஷ்ணுவின் சொரூபமாகவே கருதப்பட்டார். பாங்காக்கில் உள்ள அரசபிரமன் கோயிலில் சிவ ராத்திரி வழிபாடு நடைபெறுவது உண்டு.

17

The Concept of Rudra Siva Through the Ages

1986

(Mahadev Chakravarti; வெளியீடு – Motilal Banarsdas, New Delhi; பக்கம் 219)

அத்தியாயம் - I

நடராஜர் : ருத்ரசிவனே இசை வல்லுனனாகவும் ஆடல்வல்லானாகவும் சித்தரிக்கப்படுகிறான். நடராஜனின் முன்வடிவம் ஹரப்பா நாகரிகத்தில் தொடங்குகிறது. ரிக் வேதத்தில் ருத்ரனுடன் இசையும், நடனமும், இணைத்துப் பேசப்பட்டாலும் வேதத்திற்கு பிற்பட்ட காலத்தில்தான் முதன்மைப்பட்டது.

பிராமணக் கோவில்களில் சிவவழிபாடு புகுதல் : பலபோராட்டங்களுக்கும், அனுசரித்தல்களுக்கும், பிறகே ஆரியமல்லாதவர்கள் – ஆரியர்கள் கலப்பு ஏற்பட்டது. இந்தியக் கலாச்சாரம் ஆஸ்ட்ரோ – ஆரியர்கள், மங்கோலியர்கள், திராவிடர்கள், ஆரியர்கள் ஆகியோர் கலாச்சாரங்கள் இணைந்தன. ஆஸ்திரியர்களின் லிங்கக்கொள்கை ஜூமோர்பிய தெய்வங்கள் (குறிப்பாக காளை, பாம்பு வழிபாடு) திராவிடர்கள் உயர்தந்தைக் கடவுள், தாய்கடவுட்கொள்கை, யோகம், பூசை, பக்தி நெறிகள், சிறுதெய்வங்கள், வீரவழிபாடு பற்றிய ஆஸ்திரிய திராவிட பாரம்பரிய கதைகள் – என இவ்வாறாக விரிந்த ஆரிய, ஆரியர்க்கு முற்பட்ட பல திறப்பட்ட நம்பிக்கைகளுக்கும் சிவவழிபாடு இடம் கொடுத்தது.

சாலைகள் சந்திக்கும் இடங்களில் ருத்ரனை வழிபடுதல் ஸதபத பிராமணத்தில் சொல்லப்படுகிறது. கிரேக்கப் பெண் தெய்வமான ஹெகடேயும் (Hekate) ஹெர்மே கடவுளரும் (the gods Hermes) தியோவாய் அபோபோம்பய்யாய் (The Apopheoimpaioi) ஜப்பானியர்களின் லிங்கக் கடவுளான ஸருடாஹைகோவும், டோஸோஜினும் (Japanese phallic deity Saruta-hiko or Dosojin) இதுபோல நாற்சந்தி கூடுமிடத்திலே வழிபடப்படுகின்றனர். காலில் மணி கட்டியுள்ள பிட்சாடனமூர்த்தி அந்தணத் தெருவில் நுழைய தம் வருகையைத் தெரிவிக்க அரிசனர்கள் காலில் மணி கட்டி யதை நினைவூட்டுகிறது. பிராமணர்கள் சிவவழிபாட்டை ஏற்கக் காலந்தாழ்த்தியது இதனால் புலப்படுகிறது. ஆரியர்க்கு முற்பட்ட ரிஷப

வழிபாடும், நாக வழிபாடும் சைவத்தில் கலந்து ரிஷபம் சிவனுக்கு வாகனமாகவும், பாம்பு அணியாகவும் மாறியது. இது போலவே சிவனது பிரதிநிதியாக இருந்த பைரவன் சிவவடிவம் பெற்றதும் சிவனோடு மிகத் தொடர்புடைய பழங்குடியின் நிலத் தெய்வமான அய்யனார் சிவ-விஷ்ணு (மோகினி) கலப்பில் உருவான சிவனின் மகன் என அழைக்கப் பெற்றதும், சைவத்தின் பரந்துபட்ட தன்மையை வெளிப்படுத்துகிறது. இதே போல புராதன திராவிடக் கடவுளான முருகன் சிவனின் மகனாகிய கார்த்திகேயன் என அழைக்கப்பட்டதும், ''சிவன்'' ''சம்பு'' என்ற பெயர்கள் செம்மை எனப் பொருள் தரும் தமிழ் ''சிவனி''லிருந்தும் சிவந்த உலோகமான தமிழ் செம்பிலிருந்து வந்ததும் இந்த அடிப்படையில்தான்.

ஆரியர்கள் வருவதற்கு முன் குஷான, ஹமிதிய பழங்குடியினரின் தெய்வமாகச் சிவன் இருந்து வந்தான். ஆரியரல்லாத கோச் பெண்கள் சிவனை வணங்குவது வங்க இலக்கியத்தில் பேசப்படுகிறது. இது கோச் பழங்குடியினரின் தெய்வத்தோடு ஒப்புமைப்படுகிறது.

பிராமண வழிபாட்டு முறையில் சிவன் இடம் பெறவும், ஆரியரல்லாதவர்கள் பிராமணக் கலாச்சாரத்தை அனுசரிக்கவுமாக இந்தோ-ஆரியக் கலப்பு ஏற்பட்டது. இந்த அனுசரித்தலின் வெளிப்பாடே ஹரிஹரன் கோட்பாடும், திருமூர்த்தி கோட்பாடும். அக்கோட்பாட்டின் உச்சியில் சிவன் இருப்பதும் உன்னத சிகரம் ஆகும்.

அத்தியாயம் - II

தொன்மை இந்திய நாணயங்களில் சிவனை ரிஷப வடிவத்தில் முன்னிலைப்படுத்தல் :

ஹரப்பா நாகரிகம் தொட்டு ரிஷபம் வழிபடப்பட்டு வருகின்றது. ருத்ரனை ரிஷபம் என்றே ரிக்வேதம் அழைக்கிறது. தொன்மை இந்திய நாணயங்கள் சிவனின் மிருக, மனித, லிங்க-வடிவம் தாங்கி வெளிவருவது வழக்கமாக இருந்து வந்தது. திமிலுடனோ, திமில் இல்லாமலோ, நின்ற வண்ணமோ அமர்ந்த வண்ணமோ ரிஷபம் காணப்படும். காமதேனு பற்றி முன்பே தெரிந்து இருந்தாலும் பசுவோ, எருமையோ இடம் பெறாதது குறிப்பிடத்தக்கது.

தொன்மை இந்திய வரலாற்றில் ரிஷபம் முதன்மை இடம் பெற்றிருந்ததைச் சான்றுகளுடன் விளக்குகிறார்.

ரிஷப வழிபாடு : ரிஷப வழிபாடு உலக முழுவதிலும் உள்ள தொன்மைச் சமயங்களில் இருந்துள்ளது. தாய்த் தெய்வத்தோடு தொடர்புபடுத்தி (animal paramour of the Great Moher) நாட்டுப்புறக் கதைகள் இருப்பதாக லீச் (Leach), ஃப்ரைடு (Fried), நியூமன் (Newman) குறிப்பிடுகின்றார்கள். ஸெமிட்டிய இனத்தின் 'பால்' (Baal of he Semitic race) ரிஷப வடிவமாகக் கொள்ளப்பட்டது. கிரேக்கர்கள் இபாபஸ் (Epaphus) என்ற பெயரில் ரிஷபத்தை வழிபட்டனர். லிங்கக் கடவுளான பாச்சுஸ் (Bacchus) சிலசமயங்களில் ரிஷபவடிவம் பெற்றது உண்டு. எகிப்திய ரிஷபங்கள் ஆன ஏபிஸ் (Apis) ம்னெவிஸ் (Mnevis) மற்றொரு லிங்கத் தெய்வமான ஒசிரிஸூடன் (Osiris) இணைத்து அறியப்பட்டது. க்ரீடன் மினோடௌர் (Creatan Minotaur) டயனோசியஸீடன் நெருங்கிய தொடர்பு கொண்டு உள்ளது. ரிஷபக் கடவுள் முக்கிய ஹிட்டைட் தெய்வங்களுள் ஒன்றாகும். ஆர்ட்டெமிஸ் (Atemis), தெமிஸ் (Themis), டெமெடெர் (Demeter), ஹெஸ்டியா (Hestia), அபோலோ (Apollo), பொஸிடியன் (Posedion) மற்றும் சில தெய்வங்கள் ரிஷப வடிவத்தில் காணப்பட்டன.

இந்தியாவில் ரிக்வேதத்தில் ருத்ரன் ரிஷபமாகவே கருதப்படுகிறான். ஹரப்பாவில் ரிஷபம் கடவுளாக வழிபடப்பட்டதா அல்லது கடவுளின் உருவமாக பிரதிபலிக்கப்பட்டதா என்பது தெளிவாக இல்லாது இருந்தும், தொன்மைக் காலத்தில் ரிஷபம் சிவனுடன் இணைக்கப்பட்டிருந்தது.

கொம்புகளிலிருந்து திரிசூலம் : சிவனின் திரிசூலம் ரிஷபத்தின் கொம்புகளிலிருந்து வடிவம் பெற்றது என்பார் மார்ஷல். படைத்தல், காத்தல், அழித்தல்

என்ற இறைவனின் முத்தொழில்களைக் குறிக்கிறது. ரௌத்திரர்களும், ஜங்கமர்களும் திரிசூலக்குறியைத் தங்கள் நெற்றியில் பொறித்தனர். அது மட்டுமல்லாது பௌத்தர்களும் ''திரிரத்னம்'' எனச் சொல்லப்படும் மும்மணிகள் என இதனைக் கொண்டனர். மொகஞ்சோதாரோவில் கண்டெடுக்கப்பட்ட சிவன் தலையிலும் கொம்புகள் காணப்படுகின்றன.

கொம்புகளின் வளைந்த வடிவத்திற்கும் பிறைச் சந்திரனுக்கும் தொடர்பு உள்ளதாக (Hahn) ஹான் கூறுகிறார். இக்கருத்து குசானோ - சசானிய (Kusano-Sasanian) நாணயங்களின் மூலம் வலுப்படுகிறது. அக்னியின் கொம்புகளும், பிராமணஸ்பதியின் கொம்புகளும் ரிக்வேதத்தில் கூறப்படுகின்றன. தென் இந்தியாவில் உள்ள கொம்புகள் உள்ள ஐயனார் சிற்பங்கள் இன்று வரை உள்ளன.

ஹிட்டைட் (Hitite) போனீசியன் (Phoenician) தெய்வங்களுக்கும், பாபிலோனிய, கிரேக்க உயர் கடவுளர்க்கும் கொம்புகள் உண்டு.

ரிஷபத்தைப் பலிகொடுப்பது புனிதமாகக் கருதப்பட்டது. அரசர்களும் ரிஷப இலச்சினைகளையே பயன்படுத்தினர்.

ரிஷபமும், லிங்கமும் : ரிஷபம் வீர்யத்தின் வடிவமாக தொன்மைக் காலத்தில் உலகெங்கும் கருதப்பட்டு வந்தது. சிவனின் மறுதலிப்பான ஹெலனிய கடவுளான டையோனிஸியோஸ் (Dinoysios) ரிஷபமாக வழிபடப்பட்டது. சிவசக்தியின் மறுதலிப்பான ஒஸிரிஸ், இஸிஸ், (Osiris, Isis) ரிஷபமாகவும், பசுவாகவும் சித்தரிக்கப் பட்டு ஆண்-பெண் படைப்புக் கொள்கையை வெளிப்படுத்துகின்றன. இந்த புனித ரிஷபத்தி லிருந்து தான் (மனிதனிடமிருந்து அல்ல) லிங்க வழிபாடு தொடங்கியது.

சிந்து சம்வெளியின் ரிஷபக் கடவுள் – ஆரியர்க்கு முற்பட்டு இருந்த ரிஷபக் கடவுள் – இவற்றின் வழிவந்ததே சிவனின் வழிபாடு. சிவனின் உலகியல் வடிவமான – படைப்பின் அடையாளமான – ரிஷபமும், லிங்கமும் பயிர், ஆடுமாடுகள், பெண்கள் வளர்ச்சியோடு தொடர்பு படுத்தப் பட்டுள்ளது. சிவவழிபாடும், லிங்க வழிபாடும் ஹரப்பா நாகரிகத்திலிருந்து வழிவழியாக வந்து கொண்டிருக்கின்றன. கி.மு. 2, 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆர்ஜுனாயனர்கள், யசுதேயர்கள் புழங்கிய நாணயங்களில் ரிஷபமும், லிங்கமும் காணப்படுகின்றன.

ரிஷபம் – வாகனம் : சிவனுக்குப் பக்கத்திலே இருந்த விருஷபம் வாகனமாக சித்திரிக்கப்படத் தொடங்கி விட்டது. வாகனக் கொள்கை மெஸொபொடோமியாவிலும் இருந்து வந்தது. சிவனின் வாகனமே நந்தி, நந்தீசுவரன், அதிகார நந்தி என்றெல்லாம் காவியங்களிலும், புராணங்களிலும் அழைக்கப்பட்டது. விஷ்ணுவின் கருட வாகனம் போல் அல்லாது சிவனது வாகனமான ரிஷபத்திற்கு மனிதவடிவம் கொடுக்கப்பட்டது. மதுரா, பீகார், வாரணாசி சிற்பங்கள், குப்தர் கால சிற்பங்கள் – இவற்றில் சிவன் தனித்தோ பார்வதியுடனோ இருப்பது மட்டும் அல்லாமல் ரிஷபமும் அருகில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

ரிஷபம் சிவனுக்கு வாகனம் என்று மத்ஸ்ய புராணம், குமார சம்பவம், மகாபாரதம், ஸ்கந்த புரணம், லிங்க புராணம், சிவ புராணம் ஆகிய புராணங்கள் சொல்கின்றன.

அத்தியாயம் – III

சிவனும் – லிங்கமும்

தொன்மை இந்தியாவிலும், வெளி நாட்டிலும் லிங்க வழிபாடு : லிங்க வழிபாடு ஆரியர்க்கு முற்பட்டது. ஹரப்பா நாகரிகத்தில் காணப்படுகிறது. சிந்து சமவெளியில் கிடைத்த லிங்க வடிவங்களைப் பற்றி மார்ஷல் கூறுகிறார். ரிக்வேதத்திலும் குறிப்பு காணப்படுகிறது. தொன்மை உலகு முழுதும் லிங்க வழிபாடு பரவியிருந்தது. இந்தியாவில் சிவன்; எகிப்தில் கெம் (Khem), ஒஸிரிஸ் (Osiris), அஸ்ஸிரியாவில் வுல் (Vul), கிரீஸில் பான் (Pan) டையோனிஸியஸ் (Dionysius),

ஸ்காண்டிநேவியாவில் ஃப்ரிக்கா (Fricco), ஸ்பெயினில் ஹோர்டேன்ஸ் (Hortanes), ஃபீனிசியாவில் அடோனிஸ் (Adonis), ஃப்ரைஜியாவில் அட்டிஸ் (Attis).

லிங்கம்–யோனி, தந்தை–தாய்த் தெய்வம் : மேலை நாடுகளில் லிங்கம் ஒரு புறம். பாவத்தின் சின்னமாகவும் – லிங்கக் குறியீடுகளாக மரம், பாம்பு, ஆப்பிள் – (Zoraostrain Aryans) மறுபுறம் போற்றத்தக்க தாகவும் (Semites and the Turanians) இருந்து வந்தது. லிங்க வழிபாடு கடவுளை எவ்வுயிர்க்கும் தந்தையாகவும், யோனி தாய்த்தெய்வமாகவும் ஆரியர்க்கு முற்பட்ட ஹரப்பா நாகரிகத்திலிருந்து கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

ஆதியில் வேளாண்மையும் மனிதப் பிறப்புமே முக்கியத்துவம் பெற்றன : ஆதிமனிதர்களின் கவனம் எல்லாம் உற்பத்தியிலேயே இருந்தது. வேளாண்மையும் (உழவும்) புணர்ச்சியும் உயர்வாகக் கருதப்பட்டதில் வியப்பில்லை. ஆஸ்திரியர்கள் குறிக்கும் லிங்கமும், லாங்கலாவும் (Langala) (உழவு)–சிவனும் வேளாண் கடவுளாகவும், பிறப்புக்குரிய கடவுளாகவும் கருதப்பட்டன.

சிவன்–வேளாண்கடவுள் : சிவன் வேளாண் கடவுளாகவே கருதப்பட்டு வந்தான். தலையிலே கங்கை தாங்கியது செழிப்பினையும் பிறைகூட தண்மை, செழிப்பு ஆகியவற்றைக் குறிப்பதாகவும் கொள்ளப்படுகிறது. கிஸான் பழங்குடியில் மகாதேவனாகவும் கோண்டர்களுக்கு (Gonds) புடாடியோ (Budadeo), கோடோ பென் (Kodopen), லிங்கோ (Lingo)வாகவும், பில்லர்களுக்கு (Bhils) பாபா தேவனாகவும் (Baba Deo) அஹிர்களுக்கு (Ahirs) பிரனாதாகவும் (Biranatha), தென்னாட்டு விவசாயிகளான குன்பிகளுக்கு (Kunbis) பாய்ரோன் அல்லது பூமியாவாகவும் (Bhaviron or Bhuniye) கொச்சி இரவேல்லர் களுக்கு முனியாகவும், இந்தியா முழுமையும் க்ஷேத்ர பாலனாகவும் சிவன் வேளாண் கடவுளாகவே வழிபடப்பட்டு வந்தான்.

உலகெங்கும் தெய்வத் திருமணங்கள் : சக்தியையும், ஜீவஉற்பத்தித் திறனையும் புதுப்பிக்கும் முகத்தான், வேளாண் தெய்வங்களுக்கு ஆண்டுதோறும் திருமணங்கள் நடத்தும் வழக்கம் உலகம் முழுமையும் பரவியிருந்தது. கிழக்கு வங்காளத்தில் க்ஷேத்ரபாலன் – பூமிதேவி; பூதாபூதி; அரன் – கௌரி திருமணங்கள்; மிர்ஜாபூர் மஜ்வார்களின் டிஹ் – டியோஹாரின் (Dihand Deoharin); பீகார்கார்வார்களின் டர்ஹார் – டாகின் (Darhar and Dakin); ராஜஸ்தான் மக்களின் ஏகலிங்கம் – கௌரி; மலையாளியரின் ஸர்வராயம் – காவிரியன்னை திருமணங்கள் இந்தியாவில் காலகாலமாக நடைபெற்று வருகின்றன. கிரீஸின் ஜீயஸ் (Zeus); ஏதென்ஸின் டையோனைஸிஸீம் (Dionysis); அஸ்ஸிரியாவின் நபுவும் (Nabu) திருமணச் சடங்கில் உட்படுத்தப்படுவதுண்டு. ரோமில் டுடுனஸ் (Tutunus)அல்லது முடுனஸ் (Mutunus) லைபர் (Liber) ஆகியவற்றிற்கும் திருமணங்கள் நடத்தப்பட்டு வந்தன.

லிங்க வடிவில் மரம் : தொன்மை இலச்சினைகளில் மரங்கள் காணப் படுகின்றன. தலவிருட்சமாக – உயிர்ப்புள்ள சக்தியாகக் கருதப்பட்டது. சில இலச்சினைகளில் திரிசூலம் காணப் படுகின்றன. திரிசூலம் என்பது ஆலமரக் கிளைகளின் நடுவே வளைந்த நிர்வாண உருவம் ஆகும். இந்துக்களின் புனித மரம் ஆலமரம் ஆகும். புத்த இலக்கியம் போற்றும் போதிமரமும் அதுவே. பைபிள் கூறும் ஈடன் தோடத்தில் உள்ள ஜீவமரம் (Tree of Life in the Garden of Eden) ஆலமரமே. அது ஆண் உற்பத்தித் திறனுக்கு வடிவம் ஆகும். விலக்கப்பட்ட கனியைத் தின்பது ஆண் பெண் கலவிக்கு உருவகப் பொருள் ஆகும்.

உலகளாவிய நம்பிக்கை : ஆதி பிரிட்டனில் ட்ருயிட்ஸ் (Druids) யூஸஸை (Aesus) ஓக் மர வடிவத்தில் வழிபட்டனர். ஆதி ட்யூட்டானியர் (Teutons) ஓக் மரத்தை ஆண்குறியாகக் கருதினார்கள். பைன் மரத்தின் கூம்பு (A part of Pine Cone) பச்சுக்களின் (Bacchus) வழிபாட்டில் சிறப்பிடம் பெறுவதை 'இன்மான்' (Inman) விவரிக்கிறது. கரணையும் (Pestle) காளானும் எப்படி லிங்கத்தைச் சித்தரிக்

கிறதோ அதுபோல பீச்மரம் க்டேயிஸை (Kteis)ச் சித்தரிப்பதாக சீனாவிலும், ஜப்பானிலும் கருதப்பட்டது. ஐரோப்பாவில் மே–கம்பத்தோடு (Maypole- பூக்களாலும், ரிப்பன்களாலும் அலங்கரிக்கப்பட்ட மே தினக் கொண்டாட்டக் கம்பம்) தொடர்புடைய பல்வேறு பழக்கங்களும், சடங்குகளும் லிங்கக் குறியையே சுட்டுகின்றன. ஹேடனில் (Heden) உள்ள ஹோமா அல்லது ஹவோமா (Homa or Havoma) மரத்திலிருந்து தான் முதல் தம்பதியரான மாஸ்சியா (Maschia)வும் மாஸ்சியானாவும் (Maschiana) தோன்றியதாகப் பார்ஸிகளின் புனிதநூல் கூறுகிறது. சாம்பலும், எல்ம் (Elm) மரமுமே முதல் ஆண் (Ask) முதல் பெண் (Embla) என்று ஸ்காண்டினேவிய புராணங்கள் கூறுகின்றன.

திருமணங்களில் மரத்தின் பங்கு : அசையும் இலைகளையும், கிளைகளையும் கொண்ட மரம் இலையுதிர் காலத்தில் மொட்டையாக நிற்பதும், வசந்த காலத்தில் மீண்டும் உயிர்த்து அரும்பி மலர்வதும் வாழ்க்கையைக் குறிப்பது என்பது உலகெங்கணும் ஏற்கப்பட்ட கருத்து ஆகும். வடஇந்தியாவில் திருமணத்திற்கு முன்னதாக மணப்பெண்ணுக்கும் மரத்திற்கும் திருமணம் நடத்தும் வழக்கம் உண்டு. தென் இந்தியதாலி – ஆல இலை வடிவம் போன்ற – லிங்கக் குறியீடு ஆகும்.

முக்கிய சிவலிங்கங்கள் எல்லாம் மரங்களோடு தொடர்பு கொண்டது

சிலுவை : சிலுவை எப்படி வந்தது என்பது இன்றும் பதில் கிடைக்காத கேள்வியே. லிங்கக் குறியீடோடு பிணைப்பது அறிஞர் பலராலும் எதிர்க்கப்பட்டு வருகிறது. கிறித்துவ சமயம் வருவதற்கு முன்பே சிலுவை இருந்து வந்தது. வட்டத்தைத் துளைக்கும் । எண்ணைப் போட நேரான கோடு; வளையத்தினுள் நுழைக்கப்பட்ட குச்சி – இரண்டினையும் பக்கவாட்டில் பார்த்தால் சிலுவை போலவே இருக்கும். விந்து (அதாவது, அனுஸ்வாராவை (Anusvara) பிரதிநிதிப்படுத்தும் எழுத்தின் மேல் உள்ள புள்ளி – சக்தியின் வடிவம்); நாதம் (மூக்கிலிருந்து வெளிப்படும் ஓசை அரைவட்டமாகச் சித்தரிக்கப்படுகிறது – இது சிவம்) ஆகியவற்றின் கலப்பு சிவனின் லிங்கக் குறியீடு ஆகும். ''சிலுவை சமயத்தின் பரிணாம வளர்ச்சி ஆகும். அது காலத்தின் வெளிப்பாடு; போற்றத்தகும் பழமையின் புனிதச் சின்னம். ஒன்றில் தொடங்கி மற்றொன்றில் முடிவது'' என்பார் ஷா ரோக்கோ. ("The Cross bespeaks evolution in religion. It begins with one thing and ends with another" Sha Rocco "The Masculine Cross and ancient Sex Worship'') கிறித்துவத்தின் அடிப்படை இன்றிருக்கும் மற்ற சமயங்களை விட அதிகமாக லிங்கக் குறியீட்டினைக் கொண்டது என்பார் ஜி.எஸ். மார். ("The fundamental basis of Christianity was 'more purely phallic than that of any other religious faith now existing' - G.S. Marr").

கை : கையும் லிங்கக் குறியீடு ஆகும். உலகெங்கணும் தொன்மைக் காலத்தில் லிங்க வழிபாடே இருந்தது. அனைத்துக் கலாசாரத்தினரும் உடலுறவினின்றும் வேறுபடுத்திக் காட்ட முனைந்தனர். மனிதன் எங்கும் ஒரே தன்மையன். எனவே லிங்க வழிபாடும், அது சிவபெருமானை பிரதிநிதிப்படுத்துதல் என்பதும் இந்தியாவின் தனிப்பட்ட நிகழ்வு அல்ல. மனித வரலாற்றின் ஒரு பகுதியே ஆகும்.

ஆண் குறிவடிவ வழிபாடும், சைவமும் : சிவன் கோயில்களில் வழிபடப்பெறுவது சிவலிங்கமே ஆகும். அதனுடைய தொன்மை தெரியவில்லை. கி.பி. 381-ஆம் ஆண்டில் மதுராவில் கிடைத்த குப்தர் கல்வெட்டில் தெரிகிறது. ஹரப்பா நாகரிகத்தில் இலைமறை காயாகத் தோற்றம் தருகின்றது. இந்து சமவெளி நாகரிகத்தின் ரிஷப வழிபாட்டில் இது உறுதிப்படுகிறது. மரத்தோடு கூடிய லிங்கம் கொண்ட தொன்மைக் கால நாணயம் பற்றி ஆலன் குறிப்பிடுகிறார். பாஸாரில் கிடைத்த கோயில் முத்திரையில் கிட்டத்தட்ட லிங்க உருவம் இருப்பதை ஸ்பூனர் (Spooner) கண்டறிகிறார்.

சில கண்டுபிடிப்புகள் : வழுவழுப்பான சிறிய கரும் கல்லினால் ஆன லிங்கம் பெட்டாமுடியத்தில் (Peddamudiyam)

கண்டெடுக்கப்பட்டது. ஸீங்க காலத்திய (Sunga) லிங்க வடிவம் லௌரியா – நந்தன்காரில் (Lauriya - Nandangarh) கண்டெடுக்கப்பட்டது. நாளந்தாவிலும் ராஜ்காட்டிலும் லிங்கம் பொறிக்கப்பட்ட முத்திரை கிடைத்தது. ராஜகிரியில் (Rajgiri) மணியார் மத (Maniyarmathe) சுவர்களில் லிங்க உருவம் காணப்படுகிறது.

குடிமல்லம் சிவலிங்கம் : ரேணி குண்டாவைச் சேர்ந்த குடிமல்லத்தில் (Gudimallam) உள்ள லிங்கம் சிவன் உருவை கொண்டுள்ளது. இது சிவனுக்கும், லிங்க வழிபாட்டுக்கும் உள்ள நெருக்கத்தைக் காட்டுகிறது.

சில முத்திரைகள் : பீடாவில் (Bhita) கிடைத்த முத்திரையில் குன்றின் மேலுள்ளது போல சிவனின் லிங்க இலச்சினை காணப்படுகிறது. இது கி.மு. 2-ஆம் நூற்றாண்டுக் குட்பட்ட காலம் ஆகும். பஸாரில் (Basarh) டி.ப்ளாக் (T. Block) கண்டுபிடித்த முட்டை வடிவ கோயில் முத்திரையும் லிங்கமும், யோனியும் கொண்டது ஆகும்.

பஞ்சமுகலிங்கம் : டிமாபுரில் (Dimapur) உள்ள தூண்கள் வீரர்களுக்கு என எழுப்பப் பட்ட நடுகற்கள் ஆகும். இவை தொடக்கத்தில் லிங்கத்தைக் குறிப்பனவாக இருந்திருக்கலாம் என்று மார்ஷல் கருதுகிறார். கி. மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த பீடாவில் (Bhita) கண்டெடுக்கப் பட்ட (அலகாபாத் அருகில் உள்ளது) சிற்பம் லிங்க வடிவத்திற்கு மிகத் தொன்மையான சான்று ஆகும். இதில் ஐந்து முகங்கள் இருக்கின்றன. ''கஜா ஹீதியின் (Khajahuti) மகன்கள் வழிபட்ட லிங்கம் வாசேத்தியின் (Vasethi) மகனான நாகசிரியால் (Nagasiri) அர்ப்பணிக்கப் பட்டது'' என்று பிராமி எழுத்துக்களால் பொறிக்கப் பட்ட கல்வெட்டும் அதில் உள்ளது. இதனைப் பஞ்சமுகலிங்கம் என்பர் குமாரசுவாமி, கோபிநாத் முதலான அறிஞர்கள்.

ஞானிகள் நினைவாக லிங்க வழிபாடு : கி.பி. 380-ஆம் ஆண்டைச் சேர்ந்த மதுரா கல்தூண் கல்வெட்டு கபிலேஸ்வரா, உபமிதேஸ்வரா என்ற இரு சிவலிங்கங்களைப் பற்றிக் குறிக்கிறது. உதிட்டாசார்யன் (Uditacarya) என்பவன் கபிலர், உபமித்தர் என்ற தனது குருமார்களின் நினைவுக்காக எழுப்பப்பட்டவை ஆகும். தென் இந்தியாவில் ஞானிகள் சமாதிகளில் சிவலிங்கம் எழுப்பப்படுவது நினைவுகூரத் தக்கது ஆகும்.

தொன்மை இந்திய இலக்கியத்தில் இலிங்க வழிபாடு : இலிங்க அடையாளம் வடிவத்தாலும், பெயராலும் ஆஸ்திரிய, ஆஸ்திரேலியா மூலத்தைக் கொண்டது. லிங்கத்திற்கும், லாங்கலத்திற்கும் (Langala) நிறைய தொடர்புகள் உள்ளன. இருக்கு வேதம் மற்ற வேத நூல்களில் லாங்கலம் என்பது 'ஏர்' என்பதற்காகப் பயன்படுத்தப் படும் சொல் ஆகும். கௌஸிக சூத்திரத்தில் லிங்கம் என்ற சொல் பல தெய்வங்களின் தொடர்புள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. தைத்திரிய ஆரண்யகத்தில் சிவ வழிபாட்டோடு இணைத்து இலிங்கம் பேசப் படுகிறது. ஸ்வேதாஸ் வதர உபநிடதத்தில் லிங்கத்தையும், யோனியையும் இணைத்துக் குறிப்பிடப் படுகின்றது. இவையெல்லாம் முடிந்த முடிபுகள் அல்ல. மகாபாரதத்தில் கிருஷ்ண உபமன்னியு சமவாதத்தில்தான் லிங்க வடிவத்தில் சிவவழிபாடு என்ற சான்று தெளிவாகக் கிடைக்கிறது. லிங்க புராணத்தில் லிங்க வடிவில் சிவன் அனைத்துக் கடவுளரினும் மேலாக உயர்த்திச் சொல்லப்படுகின்றது.

தத்துவ விளக்கம் : மூலாதாரம் முதலான ஆறு நிலைகளில் மூலாதாரத்தில் பிரமம் பாம்பு போல் கிடக்கும். அதனைச் சுற்றி குண்டலினி சக்தி இருக்கிறது என்று தத்துவ விளக்கம் கொடுக்கப்படுகின்றது.

அத்தியாயம் – IV

கலையில் சைவம்

தொன்மை இந்தியக் கலையில் சிவன் : கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் ஹரப்பாவில் மான் மீதமர்ந்த யோக நிலையில் உள்ள சிவன் கிடைத்துள்ளது. ஹரப்பாவில் கிடைத்த ஒரு கால் தூக்கி நடனம் செய்யும் ஆடவனின் சிற்பமே நடராஜரின் தொடக்கம் ஆகும். பாட்னா கோட்டையில் கிடைத்த தங்கத் தட்டில் சிவ-பார்வதி

உருவமே நமக்குக் கிடைத்துள்ளது. இது மௌரியர் காலத்தைச் சேர்ந்தது என்கிறார் ஜெயஸ்வால் (Jayaswal). பிக்னபகரியில் (Bhiknapahari near Patna)கிடைத்த, தலையில் பாம்புடன் கூடிய மண்படிம மாகிய யோகீஸ்வர ஊர்த்துவ லிங்க சிவன் மௌரியர்க்கு முற்பட்டது என ஜெயஸ்வால் கருதுகிறார்.

குஷாணர் காலம் : குஷானர்களின் தீவிர ஆதரவினால் காந்தாரக் கலை, மதுராக் கலை என்ற இருபெரும் கலைப்பிரிவுகள் உருவாகின. நந்திமேல் அமர்ந்த நிலையில் வீற்றிருக்கும் ஜடாதாரியான சிவனே காந்தாரக் கலையில் வந்த அரிய வடிவம் . குஷானர் காலத்தில் மதுராக்கலையில் ஊர்த்துவ லிங்கமே பெரிதும் காணப்படுகிறது. மதுரா அருங்காட்சியகத்தில் அர்த்த நாரீசுவர வடிவங்கள் நிரம்ப உள்ளன.

குப்த கால சிற்பங்கள் : பூமரா (Bhumara, Satna, Dist. M.P.) சிவன் கோயிலில் மோன நிலையில் சிவனின் சிற்பம் காணப்படுகிறது. டியோகார் (Deogarh, Jhansi Dist. U.P.) தசாவதார கோயிலில் உள்ள சிவன் சிற்பங்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. அவற்றில் யோக நிலையில் இருக்கும் சிவனின் சிற்பம் இந்தியக் கலையின் உன்னதம் என்பார் வி.ஏ.ஸ்மித். முக்கண்ணனின் சிற்பம் மதுரா அருங்காட்சியகத்தில் உள்ளது. கோஸாமில் (Kosam) கிடைத்த சிவ-பார்வதியின் நின்ற திருக்கோலம் குமாரகுப்தன் I காலத்தியது. திருமணம் நிகழ்ந்த நிலையில் பார்வதியின் தோளில் கை வைத்தவாறு உள்ள சிவனின் சிற்பமும் ஆலிங்கன கோலத்திய சிற்பமும், அர்த்தநாரீசுவர சிற்பமும், ஹரிஹர சிற்பமும் அதே அருங்காட்சி யகத்தில் உள்ளன. இவையெல்லாம் குப்தர் காலத்தியன.

குப்தர்களுக்குப்பின் : டியோ–பாரமார்க்கில் (Deo-Baramark-South West of Arrah) கிடைத்த உமாமகேசுவரனின் சிற்பம் குப்தர்களுக்குப்பின் வந்த கனோஜைச் சேர்ந்த மௌகாரியர் காலத்தைச் சேர்ந்தது ஆகும். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஹர்ஷரின் வருகையோடு இந்த மரபு நின்று போகிறது. அதன்பிறகு இந்தியாவின் மத்திய காலம் (Middle Ages) தொடங்குகிறது.

தென் இந்தியா : தக்கண, தென் இந்தியப் பகுதிகளில் சிவன் அனுக்கிரக நிலையிலும், சம்கார நிலையிலும் மிக உயர்ந்த சிற்பங்கள் கிடைத்துள்ளன.

ஆந்திரக்கலை–பல்லவக்கலை : கிருஷ்ணா–கோதாவரி சமவெளியில் சாதவாகனர்கள் காலத்தில் அமராவதி, நாகார்ஜுன கொண்டா பகுதிகளில் ஆந்திரக்கலை வீறு கொண்டு எழுந்தது. கி.பி. 4-ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. இதிலிருந்து தான் பல்லவக் கலை பிறந்தது எனலாம். மாமல்லபுரம் சிற்பங்களும் காஞ்சி கைலாசநாதர் சிற்பங்களும் நல்ல எடுத்துக்காட்டுக்க ளாகும். அருச்சுனன் தவத்திலே சிவன் காட்சியளிப்பது அற்புதக் காட்சியாகும். கைலாசநாதர் கோயிலில் கஜாசுர சம்காரம், திரிபுராந்தகர், சோமாஸ்கந்தர், தட்சிணா மூர்த்தி ஆகிய மூர்த்தங்கள் சிவன் வடிவமே ஆகும். தென் இந்தியாவில் தட்சிணாமூர்த்தி வடிவம் பெரிதும் இடம் பெற்றது.

சாளுக்கியக் கலை : சாளுக்கியக் கலையைப் பிரதிபலிக்கும் ஐஹோலில் (Aihole) உள்ள சிவனின் வடிவம் தொடக்க ஆந்திரக் கலைக்கும் பின்வரும் பல்லவக் கலைக்கும் ஒரு சங்கிலி ஆகும். சாளுக்கியரின் பாதாமியில் (Badami) உள்ள கற்சுவர்களில் சிவன் முத்தீசுவரனாகவும், அர்த்தநாரீசுவரனாகவும், ஹரிஹரனாகவும் காட்சியளிக்கிறான். பட்டடக்கல் (Pattadakal)லில் உள்ள சங்கமேசுவர, விருபாட்ச, மல்லிகார்ஜுன கோயில்களில் காணப்படும் சிவனின் உருவத்தில் பல்லவ மரபு தெரிகிறது. காஞ்சியில் உள்ள பல்லவர் காலத்திய கைலாசநாதர் கோயிலிலும், சாளுக்கிய காலத்திய எல்லோராவிலும் நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றன. சிவனின் சரிதையை வெளிப்படுத்தும் எல்லோராச் சிற்பங்கள் உலகில் மாபெரும் படைப்பு ஆகும்.

தொடக்க இந்தியக் கலையில் லிங்கம் : ஹரப்பாவில் கிடைத்த பல்வேறு

வண்ணக்கற்கள், எலும்பு, தந்தம், சிப்பி – இவற்றாலான மாலைகள் (பிற்காலத்தில் லிங்காயத்துகள்அணிந்த லிங்கம் போல) அழகாகச் செதுக்கப்பட்டுச் செம்மையாக உள்ளன.

குஷானர் காலம் : குடிமல்லம் (Gudimallam), பீடா (Bhita) ஆகிய ஊர்களில் கிடைத்த லிங்கங்கள் ஹரப்பாவை ஒத்தனவாகக் கொள்ளலாம். கிறித்து சகாப்த ஆரம்ப நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் மதுரா பகுதியில் லிங்க வடிவங்கள் கிடைத்துள்ளன. குஷானர்கள் காலத்தைச் சேர்ந்த இவை மதுரா அருங்காட்சியகத்தில் உள்ளன.

குப்தர் காலம் : ராஜகிரியில் உள்ள மணியார்மடத்தில் கிடைத்த கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த லிங்கம், திருப்பரங் குன்றத்திலும், காஷ்மீரில் படேகரிலும் (Fatehgarh) உள்ள லிங்கங்களை ஒக்கும்.

அஷ்டோத்தர *(108)* லிங்கங்களும், ஸகஸ்ர லிங்கங்களும் *(1000)* திருவொற்றியூரிலும், காஞ்சி ஏகாம்பரேசு வரர் ஆலயத்திலும், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலயத்திலும் உள்ளன.

மானுட லிங்கங்களில் மிகவும் முக்கிய மானது முக லிங்கங்கள் ஆகும். (ஒருமுகம், மும்முகங்கள், நான்கு முகங்கள்).

கர்ப்ப கிருஹத்திற்குப் பின்புறம் செதுக்கப்படும் லிங்கோற்பவ மூர்த்தங்கள் தென் இந்தியாவில் பிரபலம் ஆனவை. இவை காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயி லிலும், அம்பர் மாகாளத்திலும், எல்லோரா தசாவதார குகைகளிலும், தஞ்சை பிரஹதீசுவரர் கோயிலிலும், அஜ்மீர் ராஜபுதன அருங்காட்சியகத்திலும் காணப் படுகின்றன.

வங்காளத்தில் கி.பி. *13*-ஆம் நூற்றாண்டு வரையும் உள்ள ஊர்த்துவ லிங்கங்கள்; ராஷ்டிர கூடர்கள் காலத்திய எல்லோ ராவில் உள்ள கைலாச நாதர் கோயிலில் உள்ள லிங்கத்தைக் கையில் ஏந்திய சிற்பங் கள்; பட்டாடகலில் உள்ள சாளுக்கியர் காலத்திய மல்லிகார்ஜுன, சங்கமேஸ்வர கோயில்களில் லிங்கம் கொண்ட வீணாதர சிற்பங்கள்; லிங்க வடிவத்திற்கு எடுத்துக் காட்டுகள் ஆகும்.

வெளிநாட்டில் சிவனும், லிங்கமும் : இந்தோசைனாவிலும், இந்தோனேசியா விலும் சிவன் இடம்பெற்ற காலம் சரியாகத் தெரியவில்லை. ஜாவாவில் அகத்தியர் சிவகுருவாக வலைங் (Valaing) என்ற பெயரில் வழிபடப்படுகிறார். கம்போடி யாவிலும், ஜாவாவிலும் அகத்தியரும், அவர் மனைவி லோப முத்திரையும் சிவன் – உமாதேவியராகவே கருதப்படுகின்றனர். ஆங்க்கர் வாட் (Angkar Vat) கல்வெட்டில் அகத்தியர் சிவலிங்க வழிபாட்டிற்காக கம்போடியா வந்ததாகப் பொறிக்கப்பட்டு இருக்கின்றது.

ப்யூ–நாமில்:

கௌண்டியர்களின் ஆட்சி : கி.பி. முதல் நூற்றாண்டில் ப்யூ-நாமில் (Fu-nam) கௌண்டின்யன் என்ற பிராமணனால் இந்து சாம்ராச்சியம் நிறுவப்பட்டதாக சீன ஆவணங்கள் குறிக்கின்றன. இங்கிருந்து தான் சைவம் பல திசைகளையும் நோக்கிப் பரவ ஆரம்பித்தது. சிவனுடைய வடிவங் கள் இரண்டு வகையாக உள்ளன. வரலாறு, மரபு, கலை அனைத்து நோக்கிலும் இந்திய முறைப்படியான சிவனின் வடிவங்கள் ஒன்று; மற்றொன்று இந்தியக்கதைகளுக் கேற்ப தங்கள் நாட்டுப்பண்புகளோடு மாறுபட்ட ஆடை அணிகலன்களோடு கூடிய சிவவடிவங்கள் ஆகும். இந்தோ சீனாவில் காம்போஜாவும், காம்பாவும் (Kamboja and Campa) சைவத்திற்குச் சக்திமிக்க மையங்கள் ஆகும்.

காம்போஜம் : தொடக்கத்தில் காம்போஜம் (கம்போடியா) ப்யூ-நானின் அடிமைப்பட்ட நாடாக இருந்தது. பிறகு காம்போஜம் மேல்நிலைக்கு வந்து அதுவே அந்நாட்டின் பெயராயிற்று. முதலில் வந்து குடியேறி னவர்கள் சிவனைப் பின்பற்றி யவர்கள் ஆவர். சிவனே நாட்டுக் கடவுளாகவும், சைவமே நாட்டின் சமயமாகவும் மாறியது.

க்மேர்கலையில் சிவன் : சிவன், ஓளக் சும்னிக் (Aug Chummik) கல்வெட்டுப்படி உள்நாட்டுத்தெய்வம் ஸ்ரீமிராடகேசுவர னாகவும் (Sri-Mratakesvara) ப்ரீயாகேவ்

(Preakev) கல்வெட்டுப்படி ஜலாங்கேசனாகவும் (Jalangesa) காணப்படுகிறான். சாங்க்கல் (Changgal) கல்வெட்டுப்படி மலையில் உள்ள லிங்கமாக ஸ்ரீசிகாரேஸ்வரனாக (Sri-Sikharesvara) இருப்பதுக்மேர் கலையில் (Khmer art) பெரிதும் விரும்பப்படும் அம்சம் ஆகும். அரச குடும்பத்தின் குலதெய்வமான பத்ரேசுவர சிவன் (Bhadresvara) கோயில் லிங்க பர்வதம் என்று அழைக்கப்படும் வாட் பூ குன்றில் (Vat Phu Hill) உள்ளது.

பேயோன் (Bayon) கோயில் : சிவனின் மடியில் பார்வதி அமர்ந்திருப்பது போன்ற சிலை (கி.பி. 613) கிடைத்துள்ளது. பவவர்மனும், உதயாதித்யவர்மனும் சொர்ண லிங்கமும், சூரியவர்மன் காலத்தில் ஒரு துறவி ஸ்படிக லிங்கம் நிறுவியதாகவும் சான்றுகள் கிடைத்துள்ளன. பேயோனில் (Bayon) உள்ள பிரும்மாண்டமான பிரமிடு வடிவமான சிவன்கோயில் ஒரு கலைக் கருவூலம் ஆகும். அதில் உள்ள நாற்பது உயர்ந்த கோபுரங்கள் நான்கு முகங்களையும் நெற்றிக் கண்ணையும் உடைய சிவனின் உருவத்தைக் கொண்டு இருக்கின்றன.

அரசர்களின் பெயரில் சிவன் வடிவங்கள் : அரசர்கள் பெயரிலே சிவன் வடிவம் நிறுவும் பழக்கம் காம்போஜத்தில் காணப்படுகின்றது. ருத்ரவர்மன் என்ற பெயரில் ருத்ரேசுவரன் சிலையும், ஆங்க்குர் தோமில் (Angkaor Thom) உள்ள யசோவர்மன் பெயரில் உள்ள யயோதேசுவர லிங்கமும், இந்திரவர்மேசு வரம் என்ற சிவவடிவமும் (இந்திரவர்ம அரசன்) மஹிபடீசுவரம் என்ற சிலையும் (மஹிபடிவர்ம அரசன்) நல்ல எடுத்துக்காட்டுக்களாகும்.

இந்தியாவிலும் அசோகப் பேரரசன் காஷ்மீரத்தில் சிவ அசோகேசுவரன் என்ற கோயிலை எழுப்பியதாக கல்ஹனரின் குறிப்புகள் கூறுகின்றன. அசோகரின் மகன் ஜலௌகன் சிவ ஜலௌகேசுவரக் கோயிலை எழுப்பியுள்ளான். இதற்குப் பின்னால் கண்டெல்ல (Candella) அரசர்களும் சாளுக்கிய அரசர்களும் பின்பற்றி உள்ளார்கள்.

அனைத்துமே சிவன் : சிவலிங்கமே தேவராஜனாக, அரசர்கள் வழிபடும் தெய்வமாக மாறிவிட்டது. காம்போஜத்தில் சிவனே அனைத்துமாக – அனைத்துமே சிவனாக உருவான நிலை, விபு (Vibhu), ஈசன், ஜகத்பதி, பரமாத்மன் என்ற சொற்கள் பிரயோகத்தால் தெரிய வருகிறது. விஷ்ணுவும், பிரமனும் வழிபடும் நிலையில் உள்ள சிவவடிவங்கள் சிவவழிபாட்டின் ஆதிக்கத்தை உணர்த்துகின்றன. ஆனாலும் சிவ-விஷ்ணு பேதம் இல்லை என்பதை சங்கர நாராயணன், ஹர அச்சுதன், ஹரிசங்கரன், விஷ்ணு சந்திரேசுவரன் என்ற பெயரில் உள்ள சிற்பங்கள் புலப்படுத்து கின்றன.

சிவ–விஷ்ணு லிங்கங்கள் : சிவ-விஷ்ணு பெயரிலேயே லிங்கங்கள் அமைப்பது கம்போடிய சைவத்தின் தனித்தன்மையாகும். ஈசானவர்மன் நிறுவிய சம்பு-விஷ்ணு லிங்கமும், வாட் பிராப்டுஸ் (Vat-Praptus) கல்வெட்டில் சிவ கேசவ லிங்கமும் நல்ல எடுத்துக்காட்டுக்கள் ஆகம்.

தொன்மைக்கலை; மேன்மைக்கலை : காம்போஜக்கலை தொன்மை (Primitive), மேன்மை (Classic) என இருவகைப்படும். ஆங்க்கர் (Angkar) நினைவுச் சின்னங்களும், பேயோன் கோயிலும் மேன்மைக் கலையைச் சேர்ந்தவையாகும். ப்யூ-நானின் தொன்மைக்கலை படி நிலைகளில் க்மேரின் மேன்மைக் கலையாக வளர்ந்தது.

கம்பா (Campa) : இந்தோசீன தீபகற்பத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள கம்பாவிலும் கலையும், சமயமும் காம்போஜத்திற்கு இணையாகவே ஒத்துள்ளன. இன்னும் சொல்லப் போனால் அந்நியப் படையெடுப்பையும் மீறி கம்பாவில் சிவ ஜோதி ஒளிவிட்டுப் பிரகாசித்தது. கம்பா அரசன் ஸ்ரீ மாறன் (கி.பி. 2, 5-ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலம்) சிறந்த சிவபக்தன் ஆவான். தொன்மைக் கால கம்பா முழுமையும் அழகுமிக்க இந்தியப்பாணி கோயில்களாகவே மிளிர்ந்தன. மைசோன் (Myson), டோங் டுவோங் (Dong Duong), போ–நகர் (Po-Nagar) என மூன்று பிரிவுகளாக இருந்தன. இரண்டாவது பிரிவு புத்தருக்கும் ஏனைய இரு பிரிவுகளும் சிவனுக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. சிவன் மனித உருவிலும், பெரும்பான்மையும் லிங்க உருவிலும் வழிபடப்பட்டான்.

கம்பா முகலிங்கங்கள் : கம்பா லிங்கங்கள் பெரும்பாலும் இந்திய லிங்கங்களை ஒத்தனவாகும். கம்பா அரசர்களின் உருவத்தையும் அவர்களது காம் ஆடையையும் (Cam) பிரதிபலிக்கும் முகங்களாகவே முக லிங்கங்களின் படிவங்கள் பிரதிபலிப்பது கம்பா கலையின் தனித்தன்மையாகும். கம்பா முக லிங்கங்கள் கம்பா அரசர்களின் உடற் கூறுகள், கிரீடம், அணிகலன்களைச் சித்தரிப்பதாக உள்ளன. மூன்றாம் பத்ரவர்மனின் ஹோவா – க்யூஸ்டெவே (Hoa-Que Stelae) கல்வெட்டு லிங்கோற்பவ வரலாற்றைப் பிரதிபலிக்கிறது.

கல்வெட்டுச் சான்றுகள் : முதலாம் பத்ரவர்மன் கி.பி. 400-ஆம் ஆண்டில் மைசோன் (Myson) புனித நகரை நிறுவி, தன் பெயரிலேயே பத்ரேசுவர லிங்கத்தை எழுப்பியதாக வடமொழிக் கல்வெட்டு (எண் 2) கூறுகிறது. அது தேசிய யாத்திரைத் தலமாகவும், சைவக்கலையின் மையமாகவும் மாறியது. அவனுடைய வழித்தோன்றல்கள் சிவனுடைய அழகிய சிற்பங்களால் மைசோன் கோயிலை அலங்கரித்தனர்.

எண் 7 கல்வெட்டுப்படி, கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் மைசோன் பத்ரேசுவரர் ஆலயம் எரிந்த பின்னர் சம்புவர்மன் தன் பெயர்களைக் கொண்ட லிங்கத்தை நிறுவினான். (சம்புபத்ரேசுவரர்). எண் 22படி, ஜாவாபோராளிகள் போ-நகரில் (Po-Nagar) உள்ள முகலிங்கத்தைக் கடத்திச் செல்ல, சத்யவர்மன் அதனை மீட்டு முகலிங்கம் என்னும் பெயர் சூட்டினான். இந்திரவர்மனும் (கல்வெட்டு 23) நிகராந்தவர்மனும் தங்கள் பெயர்களில் (கல்வெட்டு 30) மூன்று லிங்கப் படிமங்களை நிறுவினார்கள்.

இன்னும் சில சிற்பங்கள் : ட்ரா கையூ (Tra Kieu)வில் கண்டெடுக்கப்பட்ட ஜடா மகுட சிவன்; டௌரான்ஸில் (Tourance) உள்ள பஞ்ச முகலிங்கம்; நடராஜ சிவன் போக்ளொன் கரை (Po Klaun Garai)யில் உள்ள ஆறுகைகளை உடைய சிவன்; ஆகிய சிவ வடிவங்களும் காணக் கிடைக்கின்றன.

ஆரம்ப கால கம்பா பாணியில் சிவன் துவாரபாலகராக இருந்தான். விரைவில் இந்தப் பாணி மாறி, முக்கண்ணையுடைய, நாகாபரணம் பூண்ட தியான வடிவம் உள்ள சிவனின் வடிவம் கையாளப்பட ஆரம்பித்து விட்டது.

காம்போஜம், போலவே, அர்த்த நாரீசுவர வடிவமும், சங்கர நாராயண வடிவமும் கம்பா பாணியில் இடம் பெறலாயிற்று.

பர்மா : பர்மாவில் சிவனுக்கு பிரதானம் இல்லை. அரகனில் (Arakan) கண்டெடுக்கப்பட்ட சந்திரா அரசர்களின் (Candra) நாணயங்களில் ரிஷபம் உள்ளது. ஹ்மாவ்ஜா (Hmawza) அருகில் உள்ள கலகனோனில் (Kalaganon) உள்ள கல்தூண் லிங்க வடிவமே ஆகும். தாடோனில் (Thaton) கிடைத்து இரங்கூன் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள சிவன் பர்மாவில் கிடைத்த தொன்மைப் படிமம் ஆகும். எண் 3-இல் ஜடாமகு டேசுவரர்; எண் 10/6 உள்ள சிவபார்வதி – இவை யாவும் இரங்கூன் அருங்காட்சி யகத்தில் உள்ளன.

சயாம் : சயாமிலும் சிவ வழிபாடு குறைவே. லவபுரியில் (Lavapuri) உள்ள சிவன் மனித உருக்கொண்டது. பாங்காக்கில் வாட் போ (Wat Poh) கோயில்களில் லிங்கங்கள் உள.

ஜாவா : கி.பி. 732-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டில் காணப்படும் குஞ்சரகுஞ்சடேசர் என்ற பெயர் தென் இந்திய நகரத்தைக் குறிப்பது ஆகும். கண்டி (Candi) என்பது ஜாவாவில் புண்ணியத் தலத்தைக் குறிக்கும் பெயர் ஆகும். மத்ய ஜாவாவில் உள்ள டையேங் (Dieng)கில் கிடைத்த ஆதிகாலத்திய கண்டிகள் சிவ வழிபாட்டுக்குரியன. இப்போது எட்டு கோயில்கள் உள்ள லாரா ஜோங்ராங் (Lara Jonggrang)கில் உள்ள சைவ வளாகத்தில் (ப்ராம்பனம் Prambanam என்றும் கூறப் படுகிறது) சிவன், விஷ்ணு, பிரமனுக்காக ஆறு முக்கிய கோயில்கள் உள்ளன. அதனைச் சுற்றி 200 சிறு கோயில்களும் உள. கண்டி கலைக்கு இவை உன்னத எடுத்துக் காட்டுகள் ஆகும்.

ஒரு கால கட்டத்தில் சிவ-புத்தர் ஜாவாவின் தேசியக் கடவுளாகக் கருதப்பட்டது. பாலி தத்துவப்படி புத்தர் சிவனின் தம்பி ஆவார். இதனை ஒட்டி சிவன் சிலையில் இந்தோனேஷிய ஆடை, அணிகள் இடம் பெறலாயின.

18

Songs of Experience The Poetics of Tamil Devotion

1987

(ஆசிரியர் – Norman Cutler; வெளியிட்டவர் – Judith Berling and Patrick Oliveles, Indiana University Press; பக்கம் – 211).

நார்மன் கட்லர் (Norman Cutler) சிகாகோ பல்கலைக் கழகத்தில் தெற்கு ஆசிய மொழி – பண்பாட்டுத்துறையில் இணைப் பேராசிரியராகப் பணிபுரிகிறார்.

"Gods of flesh / Gods of Stone: The Embodiment of Divinity in India"

என்ற நூலினை Joanne punzo Waghorne உடன் இணைந்து எழுதியுள்ளார். இந்த நூல் கட்லர் சிகாகோ பல்கலைக்கழகத்தில் பி.ஹெச்டி. பட்டத்திற்காகச் செய்யப்பட்ட ஆய்வு ஆகும். கட்லர் 1977 முதல் 79 வரை தமிழகத்தில் இருந்து ஆய்வு மேற்கொண்டார்.

பிரிவு 1 – கவிதைகள், கவிஞர்கள், கவித்துவம்

இயல் 1 ; தமிழ் அருளாளர்கள் கவிதையில் கவிஞர், கடவுள் நுகர்வோர் (Audience):

வைணவத்தில் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் பாசுரங்களையும், சைவத்தில் மாணிக்கவாசகர், காரைக்கால் அம்மையார் பாடல்களையும் எடுத்துக் கொண்டுள்ளார்.

அருட்கவிஞர் கடவுளை நோக்கிய கூற்று, மக்களை நோக்கிய கூற்று, தன் நெஞ்சுடன் பேசுதல், பொதுக்கூற்று – என நான்காகப் பிரித்து திருவாசகத்தில் திருச்சதகத்திலிருந்தும், திருவாய் மொழியிலிருந்தும் எடுத்துக்காட்டுகள் தந்துள்ளார்.

இயல் 2 ; புனிதத் தமிழ்ப்பாசுரங்கள் : பக்தனின் அனுபவம் :

நம்மாழ்வாரின் அருளிப்பாடுகள் மதுரகவி ஆழ்வார் மூலமாக – நாதமுனி நாதமுனிகளின் மருகர்கள், அரயர், ஸ்ரீவைஷ்ணவர்கள் என்று குருபரம்பரை முறையாக – வந்திருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார். இதற்கு இணையாகச் சைவத்தில் சொல்ல வழி இருக்கிறது என்றாலும் வைணவம் போல வழி வழி மரபு கட்டுக்கோப்பாகச் சொல்ல முடியாது என்கிறார்.

வைணவத்தில் 12 ஆழ்வார்கள்; பன்னிருவரும் திருப்பாசுரங்கள் பாடியுள்ளனர். நம்மாழ்வார் முதன்மை வகிக்கிறார். வைணவத்தில் அறுபத்து மூவர் நாயன்மார் ஆவர். அறுபத்து மூவரும் பதிகங்கள் பாடவில்லை. பதிகங்கள் பாடி அருளியவர்கள் அறுபத்து மூன்று நாயன்மாரில் அடங்கவில்லை. மாணிக்கவாசகர் ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆவார். சந்தானாசாரிகளும் சமயாசாரியர்களின் நேரடி வழிவழி பரம்பரையில் வரவில்லை.

''நம்மாழ்வார் தாம் இருந்த இடத்திலேயே திருப்பாசுரங்கள் பாடினார். ஆனால் அவரையே இறைவனாகக் கண்ட மதுரகவி ஆழ்வார் ஊர் ஊராகச் சென்று நம்மாழ்வார் பாசுரங்களைப் பாடியருளினார். வைணவத்தில் மதுரகவி ஆழ்வார் போல சைவத்தில் இல்லை. அப்பர் - சம்பந்தர், சுந்தரர் – சேரமான் பெருமாள் நாயனார் உறவுநிலை இருந்தாலும், சமநிலையில் உள்ளவர்களே. மேலும் தேவார மூவர்கள் தலங்கள் தோறும் சென்று பதிகங்கள் பாடியருளினார்கள்''.

''மறைந்த நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை நாத முனிகள் மீட்டுத் தந்ததைப் போலத் திருமுறைகளை நம்பியாண்டார் நம்பி மீட்டுத்தந்தார்.

இயல் 3 ; பக்தியில் கவித்துவம் :

அருளாளர்களின் கலாசார சூழலில் அவர்தம் கவிதைகளின் இலக்கிய மதிப்பு என்ன என்ற கேள்வியை எழுப்புகிறார். அக்கேள்விக்குப் பதில் அளிக்குமுன் இலக்கியம் என்றால் என்ன என்ற வினாவினை எழுப்புகிறார்.

''இலக்கியம் என்றால் அவல நாடகம் என்பதே முதன்மையும் முக்கியமானதும் ஆகும் என்பார் அரிஸ்டாடில். ''ரசக்'' கோட்பாடு இந்திய இலக்கியக் கொள்கையிலே பெரிதாகப் பேசப்படுவதாகும். வடமொழி நாட்டிய சாஸ்திரத்திலிருந்து தான் ரசக் கோட்பாடு வளர்ந்தது. அதுவே பின்னர் அழகியலுக்கு உயிர்நாடி என வளர்ந்தது. மற்றொரு வடமொழி இலக்கியக் கொள்கையாக அலங்கார சாத்திரம் (Poetic Figures) உருவாகியது. காவியத்தின் இலக்கணமே அலங்காரம் எனில் மிகையில்லை. முடிவாக நாட்டிய சாத்திரத்தையும் அலங்கார சாத்திரத்தையும் ஒன்றாக இணைந்த இலக்கியக் கொள்கையாக த்வனி (Suggestion) கோட்பாட்டாளர் முன் வைக்கிறார்கள்.

வடமொழி நாடகமும் வடமொழி காவியமும் அலங்கார சாத்திரத்தாலும் விளக்க முறுகின்றன.

நாட்டிய சாத்திரம் காம உணர்வு (Rati), நகைச்சுவை (Humor), சோகம் (Soka), சினம் (Kroda), வீர்யம் (Utsaha), அச்சம் (Bhaya), வெறுப்பு (Jugupse), வியப்பு (Vismaya) ஆகிய எட்டு உணர்வுகளை முதன்மைப்படுத்துகிறது. தங்களுடைய உணர்ச்சிகளே ஒரு கலை வடிவத்தில் வெளிப்படுத்தப்படுவதால் ரசிகர்களிடமும் எதிர்விளைவுகள் உண்டாகின்றன. என்றோ நடந்த நிகழ்ச்சிகளின் தாக்கத்தால் விளையும் உணர்ச்சிகள் என்பதினால் இலக்கியத்தில் ஒரு ''தூரம்'' (Distance) இருக்கிறது. இந்தத் தூரமே உணர்ச்சி களைத் தனிமைப்படுத்தி பரு வடிவம் தருகின்றது. இதனால் இந்திய ரசிகன் தூய உலகளாவிய ரசானுபவம் பெறுகிறான். வட மொழிக் கவிஞர்கள் எட்டு உணர்ச்சிகளுக்கு ஏற்ப எட்டு ரசங்களை வெளிப்படுத்துகின்றனர். அவை யாவன : சிருங்காரம், ஹாஸ்யம், காருண்யம், ரௌத்திரம், வீரம், பயம், வெறுப்பு, அற்புதம்.

எந்த ஓர் இலக்கியத்தினால் ஒரு ரசிகன் ரசானுபவம் பெறுகிறானோ, அந்த இலக்கியமே உன்னதப் படைப்பாகும்.

தமிழ் இலக்கியத்தில் கவித்துவம் : வடமொழி 'ரசக்கோட்பாடு' போல தமிழ் இலக்கியத்தில் ரசிகனின் ரசானுபவம் கூர்மையாகக் கைளாளப்படவில்லை. தமிழிலும் எட்டு மெய்ப்பாடுகள் இருந்தாலும் ரசத்திற்கும் பாவத்திற்கும் (Bhava) வடமொழியில் வேறுபாடு உள்ளது போல இல்லை எனலாம். தமிழ் இலக்கியத்தில் மெய்ப்பாடு வெளிவட்டத்தின் மேலாக மட்டுமே உள்ளது. ஆனால் வடமொழியில் ரசம்/பாவம் மையப்படுத்தப்பட்டுள்ளது. வடமொழி இலக்கியம் கதாபாத்திரம் – ரசிகன் தொடர்பில் கவனம் கொள்கிறது. தமிழ் இலக்கியமோ கவிதை படைக்கும் உலகில் பேசுவோர் (கூற்று), கேட்போர் – இருவர் உறவு நிலையில் விளைந்த பயன் என்பதில் மட்டும் கவனம் கொள்கிறது.

வடமொழி நாடகத்தில் கவிஞன் திரைமறைவில் இருக்கிறான். அவன் நேரிடையாகப் பேசுவதில்லை. பாத்திரங்களின் மூலமாகத் தான் அவன் குரல் ஒலிக்கிறது.

தமிழ் அகப்பொருள் இலக்கியத்திலும் கவிஞன் தோன்றுவதில்லை. அவனது குரலும் பாத்திரங்களின் வாயிலாகத் தான் ஒலிக்கிறது.

இரசிப்போனை வைத்துத்தான் இரண்டு இலக்கியங்களிலும் வேறுபாடு காட்ட முடிகிறது. வடமொழியில் ரசிப்போன் கவனிக்கப்பட்டு மையப்படுத்தப்படுகிறான். தமிழ்ப்பாடல்களில் ரசிப்போனைப் பற்றிய சிந்தனையே இல்லை. புறப்பாடல்களில் கவிஞன் கூற்றாகவும், உருவாக்கப்பட்டோர் (தலைவி, தோழி) கூற்றாகவும் அமைந்துள்ளது.

பக்தியில் கவித்துவம் : அருளாளர்களின் அருட்பாடல்கள் சங்ககாலப் புறப்பாடல்களை ஒத்துள்ளன. புறப் பாடல்களில் எங்கெல்லாம் 'அரசன்' என்று வந்துள்ளதோ அங்கெல்லாம் 'இறைவன்' என்று போட்டாலும் பொருள் மாறாது. கடவுளை அரசனாக வருணிப்பதே தமிழ் மரபு ஆகும்.

புறப்பாடல்களை,

(1) (அ) கவிஞன் அரசனுடன் பேசுதல் (அரசனுக்கு முக்கியத்துவம்)

(ஆ) கவிஞன் அரசனுடன் பேசுதல் (கவிஞனுக்கு முக்கியத்துவம் அல்லது கவிஞன் – அரசன் உறவுநிலை)

2) கவிஞன் கேட்பவன் அல்லது வாசகனிடம் பேசுதல் (வாசகன் என்று தெரியும்; ஆனால் இன்னார் என்று இனம் காண முடியாது)

3) கவிஞன் வாசகனிடம் பேசுதல் (வாசகன் இருப்பது தெரியாது)

4) சொல்பவன், கேட்பவன் இருவருமே வெளிப்படையாகத் தெரியாத கூற்று, என நான்கு நிலைகளாகப் பிரிக்கலாம்.

இதே நான்கு நிலைகளாகத் தமிழ்ப் பக்திக் கவிதைகளையும் பிரிக்கலாம்.

பக்திப் பாடல்களிலும் புறப்பாடல்களிலிருப்பதைப் போலவே ஒலிக்கும் குரல் கவிஞர் குரலாகவே உள்ளது. புறப் பாடல்களைப் போலவே அவை பெரும்பாலும் அருட் கவிஞரின் வரலாற்றோடு தொடர்புடையதாகவும் உள்ளது.

அருட்பாடல்கள் பல அகத்துறையாயிற்றே என்ற கேள்வி எழலாம். ஆழ்வார் தம்மையே நாயகியாகப் பாவித்து பாடியருளினமையால் அதுவும் அவர்கள் அருள் அனுபவமாயிற்று.

கருத்துப்பொருள் அளவில் பக்திப் பாடல்களும், புறப்பாடல்களும் வேறுபட்டாலும் அமைப்பு அளவிலே பெரிதும் ஒத்தே இருக்கின்றன.

இரண்டுமே கவிஞர் வாழ்வில் ஏற்பட்ட வரலாற்று உண்மைகளையே சொல்கின்றன. கேட்போன் – ரசிகன் – படிப்போன் (Audience) இரண்டிலும் உட்படுத்தப் படவில்லை. உணர்வும் கவிஞனின் உணர்வுகளே.

இன்றைய தமிழ் உலகில் இந்த ஒற்றுமை பக்திப் பாடல்களைப் பொருத்த வரை மாறியுள்ளது. பக்திப் பாடல்களைப் பாடி அனுபவிப்பவர்கள், அப்படி பாடுகின்ற நேரத்து அளவாவது, தங்களை மறந்து தாங்களே அந்த அனுபவத்தை பெற்றது போல மெய்மறந்து பாடிவருகின்றார்கள். அந்தக் குறுகிய அளவிலே பாடி மகிழ்வோர் கவிஞர் படைப்பிலே பங்கு பெறுகிறார் என்றே சொல்லலாம்.

மேல்நாட்டுத் திறனாய்வாளரும், கவித்துவ பக்தியும் : பார்பரா ஸ்மித் (Barbara Herrnstein Smith) என்பவர் ''இயல்பான கூற்று'' (Natural Discourse), 'புனைகதைக் கூற்று'' (Fictive Discourse) என இருகோட்பாடுகளை வேறுபடுத்திக் காட்டுகிறார். சில குறிப்பிட்ட சூழலில் எதிர்விளைவாக ஒரு குறிப்பிட்ட காலத்தில் உண்மை மனிதர்களின் வாய் மொழியே ''இயல்பான கூற்று'' ஆகும். ஒரு வரலாற்று நிலையில்நிகழ்ந்த மொழியால் விளைந்த சம்பவத்தை உள்ளடக்கிய மொழி கட்டமைப்பே ''புனைகதை கூற்று'' ஆகும்.

("Natural utterances are the verbal acts of real persons in particular occasions in response to particular sets of circumstances ... ... a natural utterance is a historical event: like any other event, it occupies a specific and unique point in time and space." "A fictive ulterance consists entirely of a linguistic structure, which consists of a lingusitic event, occuring in a historical context" ... Barbara smith "On the Margins of Discourse; The Relations of Literature to Language").

கவிதை வரலாற்றுச் சூழலில் பிணைத்து முளையடிக்கப்படாமல் இருந்தால், அக்கவிதை உள்ளுணர்த்தும் பொருள் அதிகரிக்கிறது. அக்கவிதைக்கேற்ற சூழலை படிப்போனின் (audience) கற்பனைக்கேற்ப உருவாக்க உதவுகிறது.

அகத்துறைப் பாடல்கள் எல்லாம் ''இயல்பான கூற்று'' என்கிறார் ஸ்மித். புறப்பாடல்களில் வரும் பாத்திரங்கள், சம்பவங்கள் எல்லாமே வரலாற்றுத் தொடர்புடையவை. இந்த அடிப்படையில் அவை ''இயல்பான கூற்றாக'' இருக்கலாம். ஆனால் அவற்றில் காணப்படும் கூற்றுகள் எல்லாம் உண்மையில் நிகழ்ந்தனவாகச் சொல்லப்படவில்லை. புறப்பாடல்களில் வரலாறு மரபால் (convention) சிதறடிக்கப்படுவதால் புனைகதை

இலக்கியத்திற்கே (fictive literature) உரிய அனைத்துலகத்தன்மை பெற்று விடுகிறது.

தமிழ்ப்பக்திப்பாடல்கள் அமைப்பு ரீதியாக புறப்பாடல்களை நிகர்க்கும். ஆனால் அதே பக்திப்பாடல்களைப் பக்தர்கள் ஓதிக்கண்ணீர் பெருக்குகையில், பக்திப்பாடல்கள் ''இயல்பான கூற்று'' ''புனைகதைகூற்று'' ஆகிய இரண்டின் முக்கியப் பண்புகளைப் பெற்று விடுகிறது.

பிரிவு – 2 தமிழ் செவ்விலக்கியமும், பக்தியும்; முரண்பாடுகளும், ஏற்பும்.

(Tamil classicism and Bhakti: Conflict and Accomodation)

இயல் 4; செவ்விலக்கிய பாணியில் ஒரு பக்திக் கவிதை

சங்க இலக்கியத்துடன் திருக்கோவையாரை அழகுற ஒப்பிடுகிறார். சங்க இலக்கியம் காட்டும் அகப்பொருளும் புறப்பொருளும் திருக்கோவையாரில் இணைகிற காட்சியை பாடல்களுடன் எடுத்து விளக்குகிறார். அகவாழ்வும் புறவாழ்வும் ஒன்றாகிற காட்சி என எடுத்துரைக்கிறார். உள்ளுறைப் பொருள் திருக்கோவையாரில் இருப்பதை விளக்குகிறார். கோவை இலக்கியத்தின் கூறுகள் என்பதனை விளக்குகையில் பாண்டிக் கோவையோடு ஒப்பிடுகிறார். திருக்கோவையாரைப் படித்துணர சங்க இலக்கிய அகக்கூறுகள், புறக்கூறுகள், அகம்–புறம் இரண்டினையும் இணைக்கும் கோவையின் இலக்கணம், சைவ சமய சிந்தனை, புறப்பொருள் இரண்டும் இணையும் பாங்கு – ஆகிய இவை அனைத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று முடிவு கட்டுகிறார். சங்க இலக்கியத்தில் அகம் என்றும், புறம் என்றும் தனித்தனியாக இரு பிரிவுகளாக இருந்தாலும் அடிப்படையில் ஒரே அனுபவத்தைத் தான் காண்கிறோம். சங்க இலக்கியத்தில் அடித்தளத்தில் இருக்கும் இந்த ஒன்றிய அனுபவம் திருக்கோவை யாரில் வெளிப்படையாகத் தெரிகின்றது. கவிதை அமைப்பிலே திருக்கோவையார் அகப்பொருள், புறப்பொருள் இலக்கணத்தை இணைத்துக் கொண்டு உள்ளது. திருக்கோவையாரில் சங்க இலக்கிய தரிசனத்தின் ஒருமை காணப்படுவது மட்டுமல்லாது, சங்க இலக்கியத்தின் முழுப்பார்வையும் சைவ அடிப்படையில் காண்கிறோம்''.

இயல் 5 ; காதல் ஒரு தமிழ் உள்ளுறை :

''திருக்கோவையாருக்குச் சைவர்கள் உள்ளுறைப் பொருள் கொடுத்து வருகின்றனர். அது சிற்றின்பத்தைக் குறிக்கும் நூல் அன்று; பேரின்பத்தைக் குறிக்கும் நூல் என்கின்றனர். அவர்தம் கூற்றுப்படி கிளவித் தலைவன் – உயிர்; தலைவி – சிவம்; தோழி – அருள்... ஆவர். இது வாய்மொழி வழக்கே''.

''இக் கூற்று சரியன்று. பாண்டிக் கோவையும் திருக்கோவையாரைப் போன்ற பிரபந்த வகையைச் சேர்ந்தது தானே! அதற்கு மட்டும் ஏன் உள்ளுறைப் பொருள் தரப்படவில்லை? அப்படியிருந்தால் உரையாசிரியர் பேராசிரியர் அந்த உள்ளுறைப் பொருள் தந்து இருப்பாரே! அதற்குச் சமாதானமாக உரையின் முன்னுரையில் உள்பொருள் அறிஞர்க்கே புரியும் என்பதனால் உலக வழக்கினை மேற்கொண்டேன் என்ற அவர் கருத்தை எடுத்தாளுகின்றனர். ஆனால் முன்னுரையில் உள்ள நடை பேராசிரியரின் நடை போலவே இல்லை. பிற்காலத்தில் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

மேலும் பேராசிரியர் தொல்காப்பியத்திற்கும் உரை எழுதியவர் ஆவார். உரையாசிரியர்களின் காலம் சங்க இலக்கிய மறுமலர்ச்சிக் காலம் என்பார் கமில் ஸுவலபெல். அக்கால கட்டத்தில் இருந்த உரையாசிரியர்கள் இலக்கிய உலகில் கவனம் பெறுகின்றனர். சைவர்கள் மட்டும் புனிதத் தன்மை கெட்டுவிடும் என்பதாலோ என்னவோ திருமுறைகளுக்கு உரை எழுதவில்லை. அந்தப் பின்னணியில் பேராசிரியர் திருக்கோவையாரைப் பக்தி நூலாகக் கொள்ளாமல் இலக்கிய நூலாகவே கருதி உரை எழுதினார் எனக் கொள்ளலாம்.

அடுத்து கட்லர் திருக்கோவையார் முதற் பாடலை எடுத்துக் கொண்டு மகா வித்வான், ச. தண்டபாணி தேசிகரின் சித்தாந்த உரையையும், பேராசிரியரின் நேரடியான

அகப்பொருள் உரையையும் முழுமையாக ஆராய்ந்துள்ளார்.

தொடர்ந்து கட்லர் நம்மாழ்வாரின் அகப்பொருள் பாடல்களை ஆராய்கிறார். விஷ்ணுவைத் தலைவனாகக் கொள்வதினால் அகப்பொருள் கோட்பாடு மீறப்படுகிறது என்று உணர்த்துகிறார். இதனை அடியொற்றி வைணவ உரையாசிரியர்கள் நம்மாழ்வாரையே நாயகியாகக் கொள்வதை எடுத்துரைக்கிறார். ஆழ்வார்களின் வாழ்க்கையனுபவமாகவே அவர்தம் பாடல்கள் கருதப்படுவதையும் பிற ஆழ்வார்களின் பாடல்களைக் கொண்டும் நிறுவுகிறார்.

''சைவத் திருமுறைகளுக்கு உரைகள் எழுதப்படவில்லை என்றாலும், திருவாசகம் மாணிக்கவாசரின் தன் அனுபவமாகவே காலகாலமாகக் கருதப்பட்டு வருகிறது. திருக்கோவையாரில் தான் சிக்கல் வருகிறது. திருக்கோவையாரில் சங்க இலக்கிய மரபு முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டிருப்பதே காரணம் ஆகும். திருக்கோவையாரில் சிவபெருமான் தலைவன் (கிளவித் தலைவன்) இல்லை. திருக்கோவையாரில் சிவபெரு மான் இடம் பெற்றாலும் பாட்டுடைத் தலைவனாக புறப்பொருள் இலக்கணம் கொண்டே இடம் பெறுகிறார். அதிலும் சிவபெருமானின் பங்கு கவிஞரின் வாழ்க்கையோடும் தொடர்புபடுத்தப் படவில்லை''.

பிரிவு – 3 கவிதைகள்.

இப்பிரிவில் காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதியில் 9 பாடல்களையும், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் 2 பாடல்களையும் பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதி யில் 9 பாடல்களையும், பூதத்தாழ்வாரின் இரண்டாம் திருவந்தாதியில் 5 பாடல்க ளையும், பேயாழ்வாரின் மூன்றாம் திருவந்தாதியில் 9 பாடல்களையும், நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் 54 பாடல்களையும், மாணிக்கவாசகரின் திருக்கோவையாரில் 29 பாடல்களையும், திருவாசகத்தில் 47 பாடல்களையும் கட்லர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

19

Siva Bhakti

1989

(ஆசிரியர் – இரா. நாகசாமி)

அப்பர் தேவாரத்தைப் பற்றிய நூல். ''Date of Appar'' என்ற கட்டுரை அப்பர் காலத்தைக் கல்வெட்டுக்கள், செப்பு பட்டயங்களைக் கொண்டு ஆசிரியர் கணிக்கிறார்.

அப்பரின் காலம் ஏழாம், எட்டாம், பத்தாம் நூற்றாண்டு என மூவகைப்பட்ட கருத்துக்களைப் பின் இரண்டு கருத்துக்களில் உள்ள முரண்பாடுகளை எடுத்துக் காட்டுகிறார்.

அப்பரின் வரலாற்றில் அவர் காலத்திய அரசனின் மதமாற்றம் பற்றிய வரலாற்றுச் சான்றுகளை ஆராய்கிறார். அரசனின் மதமாற்றம் பற்றி நான்கு கேள்விகளை எழுப்புகிறார்.

கேள்வி 1 : அரசனின் மதமாற்றத்தோடு தொடர்புடைய இடங்கள் (பாடலிபுரம் என்ற இந்நாள் கடலூர், திருவதிகை) பல்லவ அரசின் ஆளுகையில் இருந்தனவா?

கேள்வி 2 : இப்பகுதிகளில் பல்லவ அரசின் தடயங்கள் எவையேனும் உண்டா?

கேள்வி 3 : மதமாற்றத்தை உறுதி செய்யக்கூடிய தொல்பொருள் ஆய்வு, கல்வெட்டு ஆய்வுகள் உண்டா?

கேள்வி 4 : வேறு தொடர்புடைய செய்திகள் உண்டா?

பாடலிபுரமும் (கடலூர்), திருவதிகையும் பல்லவ ஆளுமைக்கு உட்பட்டிருந்தன என்பதில் ஐயமில்லை. முதலாம் மகேந்திர வர்மனின் (கி.பி. 5-ஆம் நூற்றாண்டு) காலத்திற்கு முன்பேயே பாடலிபுரம் சமணர்களின் கோட்டையாகத் திகழ்ந்தது. கி.பி. 457-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ''லோகவிபாக'' என்ற சமண நூலிலிருந்து இச்செய்தி புலனாகின்றது. மகேந்திரனின் தந்தை சிம்மவிஷ்ணு திருச்சி வரை பல்லவ

எல்லையை விரிவு படுத்தினான் என்று பள்ளன் கோயில் செப்புபட்டயங்கள் கூறுகின்றன. எனவே அப்பர் திருவதிகையில் தங்கியிருந்ததும் சமணர்கள் பல்லவ மன்னனிடம் அவரைப் பற்றி முறையிட்டதும் வரலாற்றோடு பொருந்தியுள்ளன.

திருவதிகை மூலட்டானக் கோயிலில் பல்லவ அரசர்கள் பரமேசுவரவர்மனின் தெள்ளாற்று நந்தி, நிருபதுங்கன் ஆகியோரின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கோயிலின் மேற்கு பிரகாரத்தில் காணப்படும் சதுர்முக லிங்கம் ஏழாம் நூற்றாண்டைய பல்லவ சிற்பம் ஆகும்.

திருவதிகையின் அருகில் உள்ள குணபரேச்சுரம் என்ற கிராமத்தில் உள்ள சிவன் கோயிலில் உள்ள சிவலிங்கம், நந்தி, விஷ்ணு சிலை, சூரியன் சிலை அனைத்தும் பல்லவர் காலத்தியன - ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. மகேந்திர வர்மன் பாணி ஆகும். சாலை ஓரத்தில் உள்ள தீர்த்தங்கரர், இயக்கர் சிற்பங்களும் ஏழாம் நூற்றாண்டைய பல்லவ சிற்பங்கள் ஆகும்.

குணதரேச்சுரம் என்ற சிவன் கோயில் இருப்பும், ஏழாம் நூற்றாண்டைய சிற்பங்களின் இருப்பும் குணதர பல்லவன் பெயரில் சிவன் கோயிலில் உள்ள வரலாற்றுண்மையை தொல்லாய்வு கண்டுபிடிப்பு மூலம் உறுதிப்படுத்தியுள்ளன.

குணதரர் என்ற பட்டப் பெயரினை ஆய்வு செய்தல் வேண்டும். ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் மகேந்திர வர்மனின் பட்டப்பெயர் குணபரன் ஆகும். சேக்கிழார் குணதரன் என்கிறார். ஒரு எழுத்தில் வேறுபாடு. இது ஒன்றும் பெரிதல்ல.

மகேந்திரன் சமண சமயத்தைப் பின்பற்றியவன், சைவத்திற்கு மாறியவன் என்பதனையும் சான்றுகளுடன் நிறுவ வேண்டும். மகேந்திரனின் முன்னோர்கள் சமணச் சார்புடையவர்களா என்பதனை இத்தருணத்தில் ஆராய வேண்டும். திருச்சிராப்பள்ளி குடைவரைக் குகையில் உள்ள கல்வெட்டு மகேந்திரன் மதம் மாறி சைவ சமயம் சார்ந்ததைக் குறிப்பிடுகின்றது.

சிம்மவிஷ்ணு (மகேந்திரனின் தந்தை) வின் தாயார் யாபஹவனீய சங்கத்தைச் சேர்ந்த சமணக் கோயிலுக்கு நிலங்கள் தானமாகக் கொடுத்ததை ஹோஸ்கோட் (Hosekotte) செப்புப்பட்டயங்கள் குறிப்பிடுகின்றன. வஜ்ரநந்தி என்ற சமணத்துறவிக்கு நிலம் கொடுத்ததாக சிம்ம விஷ்ணுவின் மற்றுமொரு பட்டயம் குறிப்பிடுகின்றது. மகேந்திரன் தந்தை வழிப் பாட்டியும், தந்தையும் சமணத்தைப் போற்றி வளர்த்த சூழ்நிலையில் மகேந்திரன் சமண சமயத்தில் சேர்ந்தது ஒன்றும் வியப்பில்லை.

திருச்சி மலைக்கோட்டை குடைவரைக் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டின் வாசகம் வருமாறு :

"Gunabhara namani Rajani
anena lingena lingini Jnanam
Prathatam ciraya loke,
Vipaksharitteh Paravritham"

இதன் பொருள் வருமாறு :

"Through the Sivalinga established here, let it he known in the world for long, that the king named Gunabhara has turned away from hostile faith and that he constantly adores Linga (Siva)".

மகேந்திரன் சைவசமயத்துக்கு மாறினான் என்பதனை இக்கல்வெட்டு தெளிவாகக் கூறுகிறது.

''சமணர்களின் பொய்மையை உணர்ந்த காடவன் பாடலிபுரத்தில் உள்ள சமண மடங்களையும் கோயில்களையும் அழித்து, திருவதிகையில் குணபரேச்சுரம் என்ற சிவன் கோயிலைக் கட்டினான்'' என்கிறார் சேக்கிழார்.

திருவதிகையில் குணதரேச்சுரம் என்னும் சிவன் கோயில் இன்றும் உள்ளது.

இவ்வாறு பல்வேறு சான்றுகளாலும் அப்பர் காலத்தில் வாழ்ந்த மன்னன் மகேந்திரவர்மன் என்பது புலனாகின்றது.

அப்பரும் திருஞானசம்பந்தரும் சமகாலத்தவர்கள் என்பது திருமுறைகள் வாயிலாகத் தெளிவாகத் தெரிகின்றது. நெல்வேலியை வென்ற பாண்டியன் நின்றசீர்

நெடுமாறன் அரசவைக்கு ஞானசம்பந்தர் சென்றார் என்கிறார் சேக்கிழார். வேள்விக்குடி சாசனத்தில் பாண்டியன் நெடுமாறன் நெல்வேலி வென்றவன் என்ற குறிப்பு வருகின்றது. சின்னமனூர் செப்புபட்டயங்களும் நெடுமாறனை நெல்வேலி வென்றவன் என்று குறிப்பிடுகின்றன. மேற்படி செப்புபட்டயங்கள் மூலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்ற பட்டத்தைத் தாங்கிய பாண்டிய அரசன் இருந்தான் என்பது புலனாகிறது. இவ்வரசன் 50 ஆண்டுகள் ஆண்டதாகவும் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் நெல்வேலி வென்ற பாண்டிய நெடுமாறன் என்ற ஒருவனே ஆண்டான் என்பதினால் அவனைப்பற்றி சேக்கிழார் குறிப்பிட்டுள்ளது வரலாற்று அடிப்படையிலும் ஒத்து வருகின்றது. ஞானசம்பந்தர் இக்காலத்தில் தான் வாழ்ந்தார். எனவே சம்பந்தருக்குச் சமகாலத்தவரான அப்பரும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது உறுதியாகிறது.

அப்பர், சம்பந்தரின் காலம் மற்றுமொரு வரலாற்று மூலத்தின் வழியாகவும் உறுதிப்படுகிறது. சிறுத்தொண்ட நாயனார் பல்லவ அரசின் சேனைத்தலைவர் ஆவார். சிறுத்தொண்டர் பல்லவப் படைக்குத் தலைமை ஏற்று சாளுக்கியரின் தலைநகரமான வாதாபியை வென்றார். பல்லவர் கால அனைத்து செப்பு பட்டயங் களும் மாமல்லன் என்ற முதலாம் நரசிம்மனை வாதாபி வென்றான் என்றே அழைக்கின்றன.

வாதாபியில் கிடைத்துள்ள கல்வெட்டும் கி.பி. 664-க்கு ஒத்த சக ஆண்டினைக் குறிக்கின்றது. இந்த வாதாபிப் போரில்தான் சிறுத்தொண்டர் பங்கேற்று வெற்றி பெற்றார். எனவே கி.பி. 664 என்று அறியப்பட்டுள்ள கல்வெட்டுச் செய்தி சம்பந்தர், அப்பர், சிறுத்தொண்டர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தனர் என்பதனை உறுதிப்படுத்துகின்றது.

20

Philosophical Anthropology in Saiva Siddhanta

1989

(ஜயேந்திர ஸோனி, ஆசிரியர் தென் ஆப்பிரிக்காவில் பிறந்தவர். இவர் B.A பட்டம் டர்பன் பல்கலைக்கழகத்திலும், M.A,Ph.D (தத்துவம்) பனாரஸ் இந்து பல்கலைகக்கழகத்திலும் (வாரணாசி), இரண்டாவது Ph.D (Religious Studies) MC Master University, Hamilton, Canada. விலும் பெற்றார். தற்சமயம் (1989) ஆஸ்திரியாவில் Innsbruck, Salzburg பல்கலைக்கழகங்களில் இந்திய சமயம், தத்துவம் கற்பித்து வருகிறார்.)

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவாக்கிரக யோகிகள் தமிழும், வடமொழியும் முற்றும் உணர்ந்தவர் ஆவார். அவர் வடமொழி ''சிவஞான போதத்திற்கு'' உரையாக வடமொழியில் ''சிவாக்கிரபாஷ்யம்'' ''சைவ பரிபாஷை'' என்ற இரு நூல்களை எழுதியுள்ளார். அவ்விரு நூல்களை அடியொற்றி இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் பேராசிரியர் கே. சிவராமன் (கனடா) வழிகாட்டுதலின் பேரில், Mc Master University, Hamilton.இல் "Toward an understanding of Man in Saiva Siddhantha: A study in philosophical Anthropology" சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வினை அடியொற்றி ஆசிரியரால் எழுதப்பட்டது.

''ஆகமங்கள் சைவ சமயத்தின் கருவூலங்கள் ஆகும். வேதங்களுக்குத் தரப்படும் உயர்வு ஆகமங்களுக்குத் தரலாமா என்பது இன்றளவும் வாதிக்கப் பட்டு வருகின்றது. ஆகமங்கள், வேதங்கள் – ஆகிய இரண்டின் அதிகாரத்தையும் சிவாக்கிரக யோகிகள் ஏற்றுக் கொண்டாலும், ஆகமங்கள் வெளிப்படுத்தும் தத்துவக் கோட்பாடுகளையே அவர் வலியுறுத்துகிறார். சங்கரர் பிரம சூத்திரத்திற்கு விளக்கம் தரும் பொழுது, வேதக் குறிப்பாக உபநிடத வாக்கியங்களையே கவனத்தோடு பயன்படுத்தி வேதாந்தத்தை நிறுவுகிறார். அதேபோல

சிவாக்கிரக யோகிகள் சிவஞான போதத்திற்கு விளக்கம் தரும் பொழுது ஆகமங்களை முன்நிறுத்தியே சைவ சித்தாந்தக் கோட்பாட்டை நிறுவுகிறார்.

இயல் 1

முன்னுரை

1) தத்துவார்த்த மனிதத்தில் (Philosophical anthropology) சில அடிப்படைக் கேள்விகள்.
2) இந்திய சிந்தனையில் தத்துவார்த்த மனிதம்.
3) சைவசித்தாந்த தத்துவார்த்த மனிதத்திற்கு ஆதரவான சொல் அமைப்பு.
4) சைவசித்தாந்தத்தில் கர்மா.

முப்பத்தாறு தத்துவங்களையும் விரிவாக இப்பகுதியில் விளக்குகிறார்.

இயல் 2

மனிதன் (ஆன்மா) – விளக்கங்கள்

1) மனிதனும், ஐந்து அறிவு நிலைகளும்.
2) மனிதனைப் பற்றிய பொதுவான விளக்கம்.
3) மனிதனைப் பற்றிய தனிப்பட்ட விளக்கம்

சிவஞான போதத்தில் 3வது, 4வது நூற்பாக்களை சிவாக்கிரகயோகிகளின் விளக்கவுரைகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குகிறார். இப்பகுதியில் உயிரின் ஐந்து அவத்தைகளைப் பற்றியும், ஆன்ம சொரூபம் பற்றியும் சொல்லப் படுகிறது.

இயல் 3

மனிதன் – மெய்யுணர்வாளன்

1) சித்சக்தி – மெய்யுணர்தலின் ஒரே வழி.
2) புலன்கள் அறிதல்
3) அனுமானம்
4) சொற்களால் சான்று அளித்தல்
5) சைவசித்தாந்தக் கோட்பாடு

''மெய்யுணர்தலுக்கு ஒரே வழி சித்சக்தி'' என்பதற்கான மறுப்புகளை மறுத்து வாதிட்டு சிவாக்கிரக யோகிகள் நிறுவுகிறார்.

இயல் 4

மனிதன் – நெறிமுறைகள் (Discipline)

1) மனிதவிடுதலைக்கு மெய்யுணர்தலே ஒரே வழி.
2) கர்மாவிலிருந்து விடுவித்துக் கொள்ளல்.
3) மாயை, ஆணவமலத்திலிருந்து விடுவித்துக்கொள்ளல்.
4) அந்நியமல்லாது இருத்தல்.
5) தச காரியம்
6) மலத்தோடு தொடர்பு அற்றுப்போதல்.
7) ஜீவன் முக்தர்.

21

Agama Kosha
1990

(Twelve Volumes; ஆசிரியர் – எஸ்.கே. இராமச்சந்திர ராவ்; வெளியீடு – Kalpatharu Research Academy, Post Box 1857, Bangalore 560 018)

சைவசமயம் ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டது. சைவ ஆகமங்கள் வடமொழியில் எழுதப்பட்டுள்ளன. எனவே தமிழ்நாட்டில் ஆகமங்களை அறிந்து கொள்ள வாய்ப்பே இல்லை. இந்த நிலையில் சைவ ஆகமங்களைப் பற்றிய பன்னிரண்டு தொகுதிகள் வந்திருப்பது பெரும் சிறப்பு ஆகும்.

Vol 1 : *125 பக்கங்கள்*

Content :

Chapter I - The Agama Content.

Chapter II - Agama Outlook.

Chapter III - Temple Culture

Vol 2 : (Saiva and Sakta Agamas)

Content :

Chapter I - Sectarian development

Chapter II - Worship of Siva

Chapter III - Saivism

Chapter IV - Saiva Siddhanta

Chapter V - Saiva Siddhanta

Chapter VI - Sakta Agama

Vol 4 : (Pancharatra Agama)

Vol 5 : Devyagama ; ஆண்டு 1992; பக்கங்கள் 149.

Vol 6 : "Alaya and Aradhana; 1992; 144 Pages.

Content :

Chapter I - Alaya

Chapter II - Worship in temple

Chapter III - Ritual Requirement

Chapter IV - Daily Ritual

Chapter V - Festivals

Chapter VI - Symbolism of rituals.

Vol 7 : "Preparation for Puja" 1992; 138 Pages.

Content :

Chapter I - The worship rituals

Chapter II - Snana : Ritual bath

Chapter III - fivefold purification

Chapter IV - articles in worship

Vol 9 : Consecration

Content :

Chapter I - concept of consecration

Chapter II - consecration of shirne

Chapter III - consecration of icons.

Vol : 10 Nityarchana

Vol : 12 Source books

22

Ritual in an Oscilating Universe - Worshipping Siva in Medieval India

1991

(ஆசிரியர் – Richard H-Davis; வெளியிட்டவர் – Princeton University Press, 41, William Street, Princeton; New Jersey 08540; பக்கம் – 200)

தனி மனித சிவபூஜை பற்றியும், கோயில் வழிபாட்டு முறை பற்றியும் ஆகமங்களின் அடிப்படையில் – பிரபஞ்ச இயக்கத்தோடு தொடர்புபடுத்தி மிக விரிவாக ஆசிரியர் விளக்குகிறார்.

''சிவபெருமானின் செயலால் சிருஷ்டியும் (தோற்றம்), சம்காரமும் நிகழ்கின்றன. இவற்றை வெளிப்படுதல், ஒடுங்குதல் எனலாம். தினமும் செய்யப்படும் சிவ பூஜை இதனைப் பிரதிபலிக்கிறது'.

ஆசிரியர் சிவபெருமானின் ஐந்தொழில்களையும் முப்பத்தாறு தத்துவங்களையும் விளக்குகிறார்.

''தோற்றம் (Emission) சூக்குமத்திலிருந்து (Subtle) தூலமாதல் (Gross); தூய்மையிலிருந்து தூய்மை அல்லாததற்கு வருதல் ஒடுக்கம் (Reabsorption) என்பது இதன் மறுதலை; தோற்றம் என்பது மையத்திலிருந்து விரிவாதல்; ஒடுக்கம் என்பது மையத்தை நோக்கிச் சுருங்குதல். இது சைவச் சடங்குகளில் முக்கிய இடத்தத்துவம் (Spatial Principle) ஆகும்.

தோற்றத்தையும், ஒடுக்கத்தையும் மிக அழகாக விளக்குகிறார்.

Unity	Differntiation
Integration	Disintegration
Subtle emission	Gross
Pure	Impure
Superior	Inferior
High Reabsorption	Low

Centre	Periphery
Encompassing	Encompassed

''மாயையை சிவன் கலக்குவதால் முப்பத்தோரு தத்துவங்கள் வெளிப்படுகின்றன. முப்பத்தோரு தத்துவங்களின் சேர்க்கையே பிரபஞ்சம். ஒடுங்கும் பொழுது ஒன்றில் ஒன்று ஒடுங்குகிறது''.

''இதே போன்ற தோற்றமும் ஒடுக்கமும் ஆன்மாவிற்கும் நிகழ்கிறது. உயிர்பிரியும் பொழுது உயிரற்ற உடல் நெருப்பில் – யாக வேள்வியில் – சிவனுக்குப் பெரும் படையலாகப் படைக்கப்படுகிறது''.

''உலக வாழ்வில் நாட்டம் கொண்டவர்கள் (புபுக்ஷு), வீடுபேற்றில் நாட்டம் கொண்டவர்கள் (முமுக்ஷு) என சைவர்கள் இருவகைப்படுவர். புபுக்ஷுக்கள் வெளிப்பாட்டு நிலையையும் (Path of emission) முமுக்ஷுக்கள் உள்வாங்கும் நிலையையும் (Path of reabsorption) பின்பற்ற வேண்டும். வெளிப்பாடு – உள்வாங்குதலுக்கான இயக்கம் சைவச் சடங்குகளில் நாள் வழிபாட்டில் காணக்கிடைக்கிறது.

இவ்வாறு வெளிப்பாடும், உள்வாங்குதலும் சடங்குகளில் மேற்கொள்வதால் பிரபஞ்ச இயக்கத்தோடு தொடர்புபடுத்தப்படுகிறது''.

அடுத்து ஆசிரியர் கரநியாஸம் பற்றி விரிவாகக் கூறுகின்றார். மந்திரங்களை உச்சாடனம் செய்து கரங்களையே சிவமாக்குதல் 'கரநியாஸம்' ஆகும்.

''கரநியாஸம் செய்தபிறகு வழிபடுவோன் தன் உடலையே சிவமாக்க வேண்டும். இது இருநிலைகளில் நிகழும். முதலில் தூய்மையாக்கும் சில செயல்களால் உடம்பில் உள்ள அழுக்கினை நீக்கி வெற்றுடம்பாக்க (Empty) வேண்டும். அடுத்துச் சிவபெருமானின் ஆற்றலை ஒருமுகப்படுத்தி மந்திரங்களை உடம்பின் பல்வேறு பாகங்களிலும் உருவேற்ற வேண்டும்''.

சிவ பூஜை செய்பவர்கள் தாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் விரிவான விளக்கத்தை – உள்ளர்த்தத்தை இப்பகுதி மூலம் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். தமிழில் இப்படி ஓர் நூல் விளக்கமாக வந்திருப்பதாகத் தெரியவில்லை.

''சைவ சமயச் சடங்ககளில் மனித உடம்பு எவ்வாறு பிரபஞ்சத் தத்துவத்தோடு பிணைக்கப்பட்டுள்ளதோ, அதேபோல திருக்கோயில் அமைப்பு முறையும் பிரபஞ்சத் தத்துவத்தோடு பிணைக்கப்பட்டுள்ளது. கோயிலின் மையத்தில் சிவலிங்கம் உள்ளது. ஒடுங்கும் காலத்தில் அனைத்தும் சிவலிங்கத்தில் ஒடுங்கும். தோற்ற காலத்தில் அனைத்தும் லிங்கத்திலிருந்து வெளிப்படும்''.

அடுத்து திருக்கோயில்களில் தெய்வங்கள், பரிவார தேவதைகள் இருக்கும் இடங்கள் பற்றிப் பேசுகிறார்.

அடுத்து நித்தியப்படி அபிடேக கலசங்கள் உருவாக்குவது பற்றியும் சுவாமி புறப்பாடு பற்றியும் ஆசிரியர் விளக்குகிறார்.

இது சிவபூஜை செய்பவர்கள், கோயில் வழிபாடு செய்பவர்கள் ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்க வேண்டிய புத்தகம் ஆகும்.

23

Thanjavur Brahadiswara 1995

The monument and the living presence - an architectural study 20 years after Thanjavur - Gangaikondapuram (French)

(ஆசிரியர் – Dr. Pierre Pichard; வெளியீடு – Aryan Book International, New Delhi.)

Brahadiswara temple is not only an architechtural monument but a "living bio-organism", since it continues to serve as the centre of the area of Tanjavur. There is a "one-to-one relationship" between the frozen architechtural program (silpa and vastu) and the sequential carefully designed programme of worship", with the help of Agamic texts, (i.e) the rituals are held in the garbagriha, the Tevaram hymns are sung in the thereshold, the yajna is held in the arthamandapa, the dance performance in the main mandapa, the playing of the music both inside and outside the prakara, the different and diverse artists holding their performance in their specific places. Such a 'living orchestration' has enlivened the 'frozen architechture' of the temple.

In this volume, the first of technical monographs, there is an analysis as well as the "total architechtural, programme of the temple ranging from scale of drawings of plan and elevations, internal architechture, plan of sculpture, paintings.

In support, it has a complete photographic documentation, in black and white colour, including slides, micropiche and a photogrametric in 2D and 3D.

- The Economic Times.

24

Sonic Theology Hinduism and Sacred Sound

1995

(ஆசிரியர் – Guy L.Beck; *பக்கம் – 290; விலை – ரூ.195; வெளியீடு* - Motilal Banarsidas Publishers New Delhi)

இந்து சமயத்தில் நாததத்துவம் மிகவும் உயர்வானது. பிரபஞ்சமே நாதத்தில் தோன்றியது. "Let there be sound" என்பது பைபிள். நாததத்துவத்தைப்பற்றி மிக விரிவாக இந்நூல் ஆய்கிறது.

CONTENT

Chapter 1 : vedic SOund; The Principle of Vak; Manbia.

Chapter 5 : NadaYoga; Sacred Sound as the Energy of Siva; "Saiva Aagama; "Saiva Siddhanta; Kashmir Saivism.

25

The Homage of Dancing Siva - The Traditions of the Hindu Temple in Citambaram

1995

(ஆசிரியர் – Paul Younger, Prof. of Religious studies at Mcmaster University, Ontario, Canada; Oxford University Press; *பக்கம் – 256; விலை – ரூ.445)*

சிதம்பரம் பற்றி தமிழிலும் ஆங்கிலத்திலும் நிரம்ப நூல்கள் வெளி வந்து விட்டன. ஒரு சிறு விவரம் கூட விட்டு விடாமல் தொகுக்கும் – ஆங்கிலேயர்களின் ஆங்கிலம் படித்தவர்களின் - உழைப்பு இந்த நூலிலும் தெரிகின்றது.

Content

Part - I Worship

Story - I The priests and the daily Ritual.

Story - II The worshippers and the festival celebrations.

Part - II Wood and stone

Story III The builders and the Building.

Story IV The donors and their policical connection.

Part - III Writings

Story V The Legend Books and the local traditions.

Story VI The Hymns of the saints and Saiva school.

26

Sri Umapati Sivacarya - His life, works and contribution to Saivism

1996

(பதிப்பாசிரியர் – எஸ்.எஸ். ஜானகி; வெளியீடு – The Kuppuswami Sastri Research Institute, Chennai; *பக்கம் – 300; விலை – ரூ.150)*

1988-ஆம் ஆண்டில் குப்புசாமி சாஸ்திரி ஆய்வு நிறுவனத்தால் நடத்தப்பட்ட ''உமாபதி சிவம்'' பற்றிய ஆய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்பாகும் இந்நூல்.

Research Papers (content)

1) "Sivaprakasam of Umapati" - டி.பி. சித்தலிங்கையா.
2) "Tiruvarutpayan" - க.த. திருநாவுக்கரசு.
3) "Unmai Neri Villakkam" - கே.எ. சபாரத்திரனம் சிவாச்சாரியார்.
4) "Pasu and Pasam in sataratna - Sangraha" - டாக்டர் என்.ஆர்.பட்
5) "Umapai Siva on the pauskara agama" - டாக்டர். எஸ்.பி. சபாரத்தினம்.
6) "Pauskara Bhasya Sangraham" - கே. பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள்.
7) "Koyil Puranam" - ஆர். சுப்பிரமணியன்
8) "Kuncit a nghristava" - எஸ்.எஸ். ஜானகி.

27

The dance of Siva - Religion, art and poetry in South India

1996

(ஆசிரியர் – David Smith, Dept-of Religious studies, Lancaster University; வெளியீடு – Cambridge University Press; பக்கம் – *300*; விலை – ரூ.*495*)

சிதம்பரம் பற்றிய மற்றுமொரு ஆய்வு நூல்.

Contant

(I) The Nataraja Bronze, (II) The Cidambaram, (III) Temple, priests and ritual, (IV) The Hall of consiciousness, the Heart of the universe (V) Saiva Siddhanta and Vedanta, (VI) The Goddess (VIII) Bhiksatanas, (VIII) Bhairava, (IX) Saints, dancing girls and Apasmara, (X) Last words.

28

The Embodiment of Bhakti

1999

(ஆசிரியர் – Karen Pechilis Prentiss; வெளியீடு – Oxford University Press; விலை – ரூ.*55*)

Contant

Part I : Images of Bhakti.

One : Bhakti as devotion

Two : Bhakti as a movement

Part II - Bodies of Poetry.

Three : Pilgrimage and praise

Four : Defining a community

Part III : Contours in song, sculpture and story.

Five : Regional voices through song

Six : Images of Tamil Bhaktas.

Part IV : A Corpus of hymns

Seven : Defining the center of the temple

Eight : The Tamil Saiva Siddhanta.

நூலின் இறுதியில் உமாபதி சிவத்தின் தேவார அருள்முறைத்திரட்டு, திருவருட்பயன் ஆகியவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புகள் இடம் பெற்றுள்ளன.

29

Saiva Siddhanta - An Indian school of Mystical thought

2000

(மூலம் – H.W. Schomerus, Germany; ஆங்கில மொழிபெயர்ப்பு – Mary Law; வெளியீடு – Motilal Banarsidas; பக்கம் – *410*; விலை – *595*)

Contant

One - There are several substances.

Two - The First substance. (கடவுள்)

Three - The third substance (Matter).

Four - The Nature of the soul.

Five - Matter in charge.

Six - Saving the soul from Matter.

Seven - Perfection.

30

Saktivisishtadvaitatottvatraya Vimarsah

(ஆசிரியர் – ஜகத்குரு டாக்டர் சந்திரசேகர சிவாசாரிய மகாசுவாமி; வெளியீடுகள் – Saiva Bhasha sodha pratishthanam, D/35-77, Jangawadi math - Varanasi - 221001; விலை – ரூ.200)

சித்தாந்த சைவம், லகுலிச பாசுபதம், கௌல தரிசனம், பசேசுவரம், நந்திகேஸ்வரம், ஸ்ரீகண்ட விசிஷ்டாத்வைதம், காஷ்மீர சைவம், கிராமதர்சனம், வீரசைவம் ஆகிய சைவ சமயப்பிரிவு களைப் பற்றியும், அவற்றிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் இந்நூல் விளக்குகிறது.

31

Motivations of Temple Architechture in Saiva Siddhanta

(ஆசிரியர் – J.W. Curtis; பக்கம் – 227)

தமிழ்நாட்டுக் கோயிலுக்குள் நுழையும் பொழுது கிழக்கு வாசல் வழியாக நுழைகிறோம். முதலில் பலிபீடத்தைக் காண்கிறோம். பலிபீடம் வட்ட வடிவமாக தாமரை போல அதிக வேலைப்பாடு இல்லாமல் அமைந்துள்ளது. பலிபீடத்தைத் தாண்டி ஒரு சிறிய மேடையிலே கருவறையை நோக்கிய நிலையில் நந்தி அமைந்துள்ளது. நந்திக்கு முன்னால் துவஜஸ்தம்பம் மேல்கூரையைத் தாண்டி வெளியில் காணப்படுகிறது. துவஜஸ்தம்பத்தின் உச்சியில் படுக்கை வசத்தில் கருவறையை நோக்கிய நிலையில் மூன்று வெளிப்பாடுகள் (Projection) காணப்படுகின்றன. இதனைத் தாண்டி இரண்டு மண்டபங்கள் உள்ளன. இரண்டாம் மண்டபத்தை (அர்த்த மண்டபம்) விட முதல் மண்டபம் (மகா மண்டபம்) அளவில் பெரிதாக அமைந்துள்ளது. இந்த அமைப்பின் முடிவில் இறைவன் வீற்றிருக்கும் கருவறை உள்ளது. இதில் சிறுசிறு வேறுபாடுகள் இருக்கலாம்.

32

Mukutagama

(பதிப்பாசிரியர் – டாக்டர் ராமாகோஷ்; வெளியீடு – Saiva Bhasha Sodiva Prathishthanam; D/35-77, Janga wadi maths Varanasi - 221 001; விலை – ரூ. 175)

இந்நூல் மகுடாகமத்தில் கிரியா பாதத்தில் ஐந்து படலங்களையும், சரியா பாதத்தில் 10 படலங்களையும் கொண்டது ஆகும். கிரியாபாதம் சம்பவவரதம் என்ற சிவ வழிபாட்டு முறையைக் கூறுவது ஆகும். பல்வேறு வழிபாட்டு முறை, அவ்வழிபாட்டுக்குப் பயன்படும் பொருள்கள் பற்றி விளக்கிக் கூறுவது. சரியாபாதம் சிவபக்தரின் அந்திமக் கிரியைக்கான சடங்குகளை விளக்கிக் கூறுவது ஆகும்.

■ ■ ■

II

நூல்கள் - பட்டியல்

ஆங்கிலம்

19-ஆம் நூற்றாண்டு

(நூலின் பெயர், ஆண்டு, எழுதியவர், உள்ளடக்கம் அல்லது சிறப்புச் செய்தி)

1) ''தத்துவக் கட்டளை (*24 பக்கங்கள்*), சிவஞான போதம் (*69 பக்கங்கள்*), சிவப்பிரகாசம்'' (*177 பக்கங்கள்*), *1854;* மறைத்திரு ஹென்றி ஹொய்சிங்டன் (Rev Henry R. Hoisington); *222* பக்கங்கள்.

2) ''சிவப்பிரகாசக் கட்டளை'' (The Elements of saiva philosopy; Thomas foulkes); *41* பக்கங்கள்.

3) ''சிவஞான போதம்''; *1895;* ஜெ.எம். நல்லசாமி பிள்ளை; *126* பக்கங்கள்.

4) ''திருவருட்பயன்''; *1896;* ஜெ.எம். நல்லசாமி பிள்ளை; *50* பக்கங்கள்.

5) ''மெய்கண்ட சாத்திரம்'' உரையுடன் – ஆங்கில மொழிபெயர்ப்பு; *1897;* Arringcutt Baulksh and G.U. Pope.

6) "Die Siddhanta oder die Geheimiehre der modernen Sivaismus"; Selbstverlag der; 1897; E-just.

7) "The Gospel of Jesus"; 1898; Sri parananda; முதன் முதலாக இயேசு நாதரின் மறைமொழி சைவசித்தாந்த அடிப்படையில் கூறப்பட்டுள்ளது.

8) ''திருவாசகம்''; *1900;* ஜி.யூ.போப்; *354, 84* பக்கங்கள்; திருவருட்பயன் மொழி பெயர்ப்பும் அடங்கியுள்ளது.

9) ''சித்தாந்தம் – பிரபஞ்ச விஞ்ஞானம், பரிணாமம், சமயம்'' (The siddhanta, the universal science, evolution and religion); *1904;* ஆர்.ஷண்முக முதலியார்; *256* பக்கங்கள்.

10) ''சிவபக்தி – சித்தாந்த தத்துவம் ஒரு ஆய்வு''; *1902;* ஜான் முருடோச் (John Murudoch).

11) ''சிவனும் சக்தியும்'' (Siva and Sakti); *1910;* டி.என். பால்.

12) ''சித்தாந்த ஞான ரத்தினாவளி – ஒரு முன்னுரை'' என்.டி. பால்வண்ண முதலியார்; *28* பக்கங்கள்.

13) "Studies in Saiva Siddhanta"; *1911;* ஜெ.எம். நல்லசாமிபிள்ளை; *360* பக்கங்கள்.

14) "Der Saiva Siddhanta" (German); *1912;* H.W. Schomerus; *444* பக்கங்கள்.

15) ''சிவஞான சித்தியார்'' H.W. Schomerus.

16) ''இந்து சமய சாரம் – சைவசித்தாந்த அடிப்படை'' (The essence of Hinduism in the light of Saiva Siddhanta); *1913;* எஸ். சபாரத்தின முதலியார்; *351* பக்கங்கள்.

17) ''சிவஞான சித்தியார்'' – ஜெ.எம். நல்லசாமிபிள்ளை; . *1913;* *210* பக்கங்கள்.

18) ''சிவசம்கிதை''; *1914-15;* ராவ்பகதூர் ஸ்ரீசா சந்திரவாசு; *87* பக்கங்கள்.

19) ''தத்துவசைவம்'' (Philosophical Saivism); *1917;* எஸ். ஞானப்பிரகாசர்.

20) ''திருஞான சம்பந்தர் வாழ்க்கை''; *1920;* எஸ். சபாரத்தின முதலியார்; *50* பக்கங்கள்.

21) "Hymns of the Tamil saivite saints"; *1921;* F. Kingsbury and G.E. Phillips; *132* பக்கங்கள்; முதல் எட்டு திருமுறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு.

22) "New Light upon Indian philosophy or Swedenborg and Saiva Siddhanta"; *1922;* டி. கோபால் செட்டி; *218* பக்கங்கள்.

23) ''பெரிய புராணம்''; *1924;* ஜெ.எம். நல்லசாமி பிள்ளை; *214* பக்கங்கள்; *45* நாயன்மாரின் வரலாறுளைக் கூறுகிறது.

24) "Psalms of a Saiva Saint"; *1925;* ஐசக் டி. தம்பையா; *34* பக்கங்கள்; தாயுமானவரின் *366* பாடல்களின் மொழிபெயர்ப்பு.

25) ''இந்துக்கோயில்''; *1925;* Stella kramrisch; (இரண்டு தொகுதிகள்); *466* பக்கங்கள்.

26) ''சிவஞானபோதம்''; *1927;* டேவிட் நவமணிநாடார்; *149* பக்கங்கள்; சிவஞான மாபாடியத்தை ஒட்டி எழுதப்பட்டது.

27) ''சைவசமயத்தின் தோற்றமும், தமிழ் நாட்டில் சைவசமயத்தின் வரலாறும்'' (The origin of saivism and its history in Tamilnadu); *1927;* கே.ஆர். சுப்பிரமணியன்; *78* பக்கங்கள்.

28) Longman's saint of India series; "Ramadasa and Manikkavasaga" Grade; *1928.*

29) "The Metaphysics of the Saiva Siddhanta System"; K. Subramania Pillai; *1929; 36* பக்கங்கள்.

30) ''சிதம்பர ரகசியம்''; *1930;* கோபால் செட்டி; *80* பக்கங்கள்.

31) "Shiva or the past of India" 1930; Elizabeth sharpe.

32) ''மொகஞ்சோதாரோவும், சிந்து நாகரிகமும் ("Mohenjo-daro and the Indus civilisation"); *1931;* ஜான்மார்ஷல்; சிவவழிபாடு சிந்து சமவெளி நாகரிகத்தில் இருந்தது என்கிறது. சிவவழிபாட்டின் தொன்மையை வெளிப்படுத்தும் ஆதார நூல்.

33) ''சைவம்–தொன்மை பிரிட்டானியரின் சமயம்'' ("Saivism - the religion of the Ancient Briton"); கோபால் செட்டி; *50* பக்கங்கள்.

34) ''சிவபோக சாரமும், சொக்கநாத வெண்பாவும்''; *1932;* பி.எம். சோமசுந்தரம்; *57* பக்கங்கள்.

35) "Temple Chimes"; *1932;* S.P.Y. Surendranath Voegeli Arya; *104* பக்கங்கள்; தாயுமானவரின் *36* பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு.

36) ''சிவபெருமானின் பேரருள்'' (The grace of Lord Siva); ம. பாலசுப்பரமணிய முதலியார்.

37) "The saiva school of Hinduism"; *1934;* எஸ். சிவபாதசுந்தரம்.

38) "The doctrine of grace in saiva siddhanta"; *1935;* எ.பி. ஆரோக்கியசாமி; *71* பக்கங்கள்.

39) ''தென்னிந்தியாவில் தொடக்க கால சைவம்'' ("Early history of saivism in south India); சி.வி. நாராயண ஐயர்; *457* பக்கங்கள்.

40) "Studies and Translations: Philosophical and religious" *1937; 305* பக்கங்கள்; மாணிக்கவாசகர், தாயுமானவர், நக்கீரர், கல்லாடனார், மெய்கண்டார் ஆகியோரின் அருட்கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு விரவியுள்ள நூல்.

41) "Saiva Siddhanta as expounded in the sivagnana siddhiyar and its commentar-

ies"; 1938; வ.ஆ. தேவசேனாபதி 323 பக்கங்கள்; சென்னைப் பல்கலைக் கழக ஆய்வு.

42) ''சைவ சித்தாந்தம்''; 1938; வயலெட் பரஞ்சோதி; 152 பக்கங்கள்.

43) ''ருத்ர சிவன்''; 1941; என். வெங்கட ரமணய்யா.

44) "The elements of saiva siddhanta - by a science graduate"; 1942; 139 பக்கங்கள்.

45) ''சிவப்பிரகாசம்''; 1945; கா. சுப்பிரமணியபிள்ளை; 96 பக்கங்கள்.

46) "A hand book of saiva religion" 1945; சுப்பிரமணியர் கதிரேசு; 108 பக்கங்கள்.

47) ''சித்தாந்த திரயம்'' – வினா வெண்பா, கொடிக்கவி, உண்மை நெறிவிளக்கம்; 1946; ஜெ.எம். நல்லசாமி பிள்ளை; 45 பக்கங்கள்.

48) ''உண்மை விளக்கம்''; 1946; ஜெ.எம். நல்லசாமிபிள்ளை; 20 பக்கங்கள்.

49) ''இருபாஇருபது''; 1947; ஜெ.எம். நல்லசாமி பிள்ளை; 96 பக்கங்கள்.

50) ''சிவஞான போதம்''; 1948; Gordon Mathews; 82 பக்கங்கள்.

51) ''சிவஞான போதம்''; 1948; Gordon Mathews; 82 பக்கங்கள்.

52) ''சைவசித்தாந்தம் – அறிமுகமும், வரலாறும் (Introduction and history of saiva siddhanta); 1948; ஜி. சுப்பிரமணியபிள்ளை; 139 பக்கங்கள்; 1947-ஆம் ஆண்டில் பனாரஸ் அலகாபாத் பல்கலைக்கழகங்களில் நிகழ்த்திய சொற்பொழிவுகள்.

53) ''சிவஞான சித்தியார் – சுபக்கம்''; 1949; கே. சிவராமன்; 190 பக்கங்கள்.

54) ''சிவ ராஜ்யா''; 1950; 92 பக்கங்கள்.

55) "An outline of sivagnanabodham with a rejoinder to a christian Critic" 1951; எஸ். சிவபாதசுந்தரம்; 55 பக்கங்கள்.

56) ''சைவசித்தாந்த சொற்பொழிவுகள்'' "Saiva Siddhanta Lectures"); 1952; பி. ராமானுஜாச்சாரி; 63 பக்கங்கள்.

57) ''சைவசித்தாந்த சொற்பொழிவுகள்'' 1952; சச்சிதானந்தம் பிள்ளை; 50 பக்கங்கள்; பனாரஸ் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்தப்பட்டவை.

58) "The genesis of the Sivagnana Botham"; 1952; A science graduate.

59) "Glories of Shaivism"; 1953; எஸ். சிவபாத சுந்தரம்; 80 பக்கங்கள்.

60) "Talks on saiva siddhanta"; 1954; எஸ். சச்சிதானந்தம் பிள்ளை; 54 பக்கங்கள்; ரிஷிகேசத்தில் சுவாமி சிவானந்தர் முன் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு.

61) "Collected lectures on Saiva Siddhanta"; 1946 to 1954; 1965-ஆம் ஆண்டில் நூல் வடிவம் பெற்றது; 545 பக்கங்கள்.

62) "Saivasiddhanta" 1954; வி. பரஞ்சோதி.

63) "An outline of the History of Saiva philosophy"; 1954; K.C. Pandey; 278 பக்கங்கள்; உள்ளடக்கம் – Pasupata dualism, Siddhanta Saiva dualism, Dualistic cum non dualistic saivism of Lakulisa pasupata, Visishtadvaita saivism, Vira saivism, Nandikeswara saivism, Rasesvara saivism, Monistic saivism of Kashmir என எட்டு வகை சைவம் பற்றிக் கூறுகிறது. அசோகனின் மகனான ஜலங்கன் சிவ பெருமான் மேல் ஈடுபாடு கொண்டு, புத்த சமயத்தில் வெறுப்புற்று, காஷ்மீரில் பல சிவன் கோயில்களைக் கட்டினான் என்றும் அதில் ஒரு கோயிலுக்கு ''அசோகேசுவரம்'' என்ற பெயரிட்டான் என்றும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

64) "Saiva Siddhantam - The cream of south Indian thought" 1955; 36 பக்கங்கள்.

65) "Saiva Siddhanta"; 1956; கே. நவரத்தினம்.

66) "Hinduism in ceylon"; 1957; Rev James cartman.

67) "A logical presentation of the saiva siddhanta philosophy; 1958; John H. Piet; கொலம்பியா பல்கலைக்கழக தத்துவத் துறை ஆய்வுக்காக எழுதப்பட்டது.

68) "Te christian and Hindu concept of grace" 1958; De Letter. P.

69) "Religion of the Tamils - past and present" 1958; K. Ramachandra.

70) "Special Lectures on saiva siddhanta; 1959; கே.எம். பாலசுப்பிரமணியன்; 187 பக்கங்கள்.

71) "An elucidation of the Tirupasuram"; 1959; A science graduate; 87 பக்கங்கள்.

72) "Study of the great religions of India; Aseminar on saints"; 1960; . ; 456 பக்கங்கள்; இதில் உள்ள 48 கட்டுரைகளில் கே.எ. நீலகண்ட சாஸ்திரி (நந்தனார்), அ.ச. ஞானசம்பந்தன் (ஞானசம்பந்தர்), எம்.எ. துரை அரங்கசாமி (சுந்தரர்), கே.எம். பாலசுப்பிரமணியன் (மாணிக்க வாசகர்), எம். அனந்த நாராயணன் (தாயுமானவர்), கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

73) "Metaphysics of saiva siddhanta: Sivagnana Bodham" 1961; Tirivilankar canakarayar.

74) "The cult of siva or lessons in Sivagnana Botham"; 1961; வி. காந்திமதி நாதபிள்ளை; 173 பக்கங்கள்.

75) "The Message of Tayumanavar"; 1961; கே. இராமச்சந்திரா.

76) "The Saiva Siddhanta theory of Knowledge: 1962; டாக்டர் பொன்னையா; 368 பக்கங்கள்.

77) "Of human bondage and divine grace"; வ.ஆ.தேவசேனாபதி; 114 பக்கங்கள்; 1960-ஆம் ஆண்டில் பனாரஸ் அலகாபாத் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகள்.

78) "Studies in Hinduism"; 1963; கே. நவரத்னம்.

79) "Grace in christianity and Hinduism" 1964; S. Kulandran.

80) "The development of saivism in south India"; 1964; மா. இராசமாணிக்கனார்; 359 பக்கங்கள்; 1950-ஆம் ஆண்டில் சென்னை பல்கலைக் கழக டாக்டர் பட்டத்திற்காகச் செய்யப்பட்ட ஆய்வு.

81) "Cultural history and principles of Hinduism"; 1964; C. Sivaratnam.

82) "Ashort history of Hinduism in ceylon"; 1964; சி.எஸ். நவரத்தினம்.

83) "The Genesis of the Sivagnana Bodham"; A Science graduate.

84) ''சைவ சித்தாந்தம்'' எஸ்.எம். முத்தையா; 106 பக்கங்கள்.

85) "The saiva siddhanta as a philosophy of practical knowledge" 1966; மறைமலை அடிகள்.

86) ''திருவருட்பயன்''; 1966; ஆங்கில மொழிபெயர்ப்பு – ஜெ.எம். நல்லசாமி பிள்ளை; இந்தி மொழி பெயர்ப்பு – ரங்கநாதன்; 139 பக்கங்கள்.

87) "An analysis of the Thirumanthiram"; 1967; A science graduate; 340 பக்கங்கள்.

88) "The relevance of saiva siddhanta philosophy" 1968; நல். முருகேச முதலியார்; 242 பக்கங்கள்; 1963-ஆம் ஆண்டில் பனாரஸ், அலகாபாத் பல்கலைக்கழகங்களில் நிகழ்த்தப் பட்ட சொற்பொழிவு.

89) ''சைவசித்தாந்தம்''; 1968; க. வச்சிரவேலு முதலியார்; 41 பக்கங்கள்; இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டுக்காக வெளியிடப்பட்டது.

90) "Saiva cult and heritages"; 1968; ஜி.எம். முத்துசாமிபிள்ளை; 56 பக்கங்கள்.

91) ''பன்னிரு திருமுறைத் திரட்டு''; 1970; சண்முக சுந்தரர்; தென்னாப்பிரிக்கா வாழ் தமிழர்கள் வழிபாட்டுக்காக எழுதப்பட்டது.

92) "Vishnuism and saivism"; *1970;* ஜெ. கோண்டா; *228 பக்கங்கள்.*

93) "School of saivism"; *1970;* Jadunath sinha.

94) "The concept of Bhakti"; *1971;* பெ. திருஞானசம்பந்தம்; *46 பக்கங்கள்.*

95) "Motivations of temple architecture in saiva siddhanta" J.W. Curtis; *227 பக்கங்கள்.*

96) "Siva agamas and their relationship to vedas"; *1972;* சண்முக முதலியார்; *34 பக்கங்கள்.*

97) "Tamil temple myths"; David Dean shulman; *424 பக்கங்கள்.*

98) "Sataratna sangraha of sri umapati sivacharya" *1973;* பெ. திருஞான சம்பந்தம்; *150 பக்கங்கள்.*

99) "Mystic treasure"; சுத்தானந்த பாரதி; *146 பக்கங்கள்.*

100) "Saivism in philosophical perspective *1973;* சிவராமன்; *635 பக்கங்கள்.*

101) "Bhakti: Hindu and christian"; *1973;* Stephen Neil; *82 பக்கங்கள்.*

102) "Structural approaches to south indian studies" *1974;* Editors - Harry M. Buck and glem E. Yocum; *225 பக்கங்கள்.*

103) "Siva in Medieval Literature"; *1974;* A. Sarkar; *222 பக்கங்கள்;* கல்கத்தா பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற செய்யப்பட்ட ஆய்வு.

104) "The city of the cosmic dance" *1974;* பி. நடராஜன்.

105) "Saivism through the Ages" *1975;* ஆர்.கே. சித்தாந்த சாஸ்திரி.

106) "Grace in saivasiddhanta, vedanta, Islam and christianity" *1975;* Editor - Albrecht Frenz.

107) "The Tao of physics" *1975;* Fritjof Capra; தற்கால இயற்பியலுடன் (Physics) நடராஜத் தத்துவத்தை இணைத்துக் காட்டும் நூல்.

108) "Savism through the Ages" *1975;* prof Rabindrakumara siddhanta shastree; *188 பக்கங்கள்.*

(Content : concept of Rudra, Antiquity of Sivalinga, saivism in kashmir, veera saivam, pasupata saivam)

109) "Iconography of sadashiva"; *1976;* பி.என். ஷர்மா; *98 பக்கங்கள்.*

110) ''சங்கற்ப நிராகரணம்''; *1976;* நல். முருகேச முதலியார்; *136 பக்கங்கள்.*

111) "Tiruvasagam von Manikkavasagar"; *1977;* Albrecht frenz and Nagaraja rao; *276 பக்கங்கள்.*

112) "Voice of Appar"; மு. அருணாசலம்; *108 பக்கங்கள்.*

113) "Perspectives in Saivism"; *1978;* வி. ராமகிருஷ்ணன்; *136 பக்கங்கள்;* சைவசித்தாந்தத்திற்கும் பௌத்தத் திற்கும் உள்ள ஒற்றுமையைப் புலப்படுத்துகிறது இந்நூல்.

114) "Outlines of saivism"; *1978;* மு. அருணாசலம்; *108 பக்கங்கள்.*

115) ''மெய்கண்டார்''; *1978;* நல். முருகேச முதலியார்.

116) "Collected lectures on saiva siddhanta" *(1963-1973);* வெளியிட்ட ஆண்டு – *1978.*

117) "A critical study of saint Tayumanavar" *1978;* டாக்டர் பி. சௌரிராஜன்; *பக்கங்கள் 268.*

118) "Siddhanta saivism in Essence and Manifestation" *1979;* இரத்தின நவரத்னம் அம்மையார்; *155 பக்கங்கள்.*

119) "Origin and Development of saiva siddhanta upto Fourteenth centuries" *1979;* டி.பி. சித்தலிங்கையா; *187 பக்கங்கள்.*

120) "Chidambaram and Nataraja problems and rationalisation" *1979;* பி.ஜி.எல். சாமி.

121) "Siddhanta Chathushtayam" ; (திரு வருட்பயன், வினாவெண்பா

கொடிக்கவி, உண்மைநெறி விளக்கம் மொழிபெயர்ப்பு; *1980;* டி.என். இராமச்சந்திரன்.

122) "A Date with destiny"; *1980;* கே. ஞானசூரியன்; *212* பக்கங்கள்.

123) "The philosophy of saivism"*: 1980;* Frederick Kumar.

124) "Indian philosophical Annual" (Vol 14), University of Madras*: (1980-81); 253* பக்கங்கள்.

125) ''சிவனருள் திரட்டு''; *1981;* வெங்கட ராமையா; *441* பக்கங்கள்; தென் ஆப்பிரிக்க மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட நூல்.

126) "Studies in Jnanamirtham"; *1981;* எஸ். கங்காதரன்; *182* பக்கங்கள்; மதுரைப் பல்கலைக்கழக டாக்டர் பட்ட ஆய்வு.

127) ''குருஞானசம்பந்தர்; *1981;* மு. அருணாசலம்; *125* பக்கங்கள்.

128) "The presence of siva" *1981;* Stella Kramrisch: *514* பக்கங்கள்; ஸ்டெல்லா கிராம்ரிஷ் பிலடெல்பியா அருங் காட்சியகத்தில் இந்தியக் கலைப் பிரிவின் பொறுப்பாளர்.

129) "Unmai Vilakkam - A primer of saiva siddhanta" *1981;* கொ.நீ. சிங்காரவேலு; *86* பக்கங்கள்.

130) "Saiva siddhanta theology - a context for Hindu - christian Dialogue" *1981;* Rohan A. Dunuvila; *176* பக்கங்கள்.

131) "Saivite Hinduism"; *1982;* கே. ஞானசூரியன்; *172* பக்கங்கள்; இலண்டன், நியூயார்க் நகரங்களில் வாழும் 14 வயதுக்குட்பட்ட சைவ இளைஞர்களுக்காக உருவாக்கப்பட்ட நூல்.

132) "The saiva paribasha of Sivagrayogin; *1982;* எஸ்.எஸ். சூரியநாராயண சாஸ்திரி மற்றும், ஆர். பாலசுப்ர மணியன், வி.கே.எஸ்.என். ராகவன்; *361* பக்கங்கள்.

133) "Peeps in to the cultural heritage of Hinduism"; *1982;* மு. அருணாசலம்; *240* பக்கங்கள்.

134) "Hymns to the dancing siva"; *1982;* Dr. Clenn E.Yocum; *238* பக்கங்கள்; திருவாசகம் பற்றிய நூல்; Yocum கலிபோர்னியா Whities college சமயத்துறை பேராசியர் ஆவார்.

135) "Siva in Dance, Myth and Iconography"; *1982;* Anna marie gaston; *242* பக்கங்கள்.

136) "The historical study of the Thevaram hymns" *1982;* அ.மு. பரமசிவானந்தம்; *1947*-ஆம் ஆண்டில் M.Phil ஆய்விற்காக எழுதப்பட்டது.

137) "Experiencing Siva"; *1983;* பதிப்பாசிரியர்கள் – F.W. Clothey and Bruce long; *218* பக்கங்கள்; *1973*-ஆம் ஆண்டில் பென்சில்வேனியாவில் நடைபெற்ற கருத்தரங்கக் கட்டுரை கள்; V.A. Devasenapathi, Glenn E. Yocum, Lucetta Mowry, David C. Buck, Jean filliozat, J.W.V. curtis, BruceLong, F.W. clothey, David N. Lorenzen, and Donald Sweares ஆகியோரின் கட்டுரை களைக் கொண்டது இந்நூல்..

138) "Rhythm and intent: Ritual studies from south India; *1983;* F.W. Clothey; *200* பக்கங்கள்.

139) "The Saivagamas" *1983;* மு. அருணாசலம்; *160* பக்கங்கள்.

140) "Souls are Beginningless"; *1983;* வி.கே. பாலசுந்தரம்; *53* பக்கங்கள்; முப்பொருள் உண்மையை ஏற்காத உறவாய் சைவத்திற்கு மறுப்பாக எழுந்த நூல் இது ஆகும்.

141) "Hinduism and symbol worship" *1983;* B.C. sinha; *192* பக்கங்கள்.

142) "Siva around the world" (His Unique Antiquity) *1983;* வி.ஜி. இராமச்சந்திரன்; *55* பக்கங்கள்; The International society for the investigation of ancient civilisation Sandiego, California வெளியிடப் பட்டது.

143) "There can be only one conclusion in Sai Siddhantam" 1984; டி.என். அருணாசலம்; 98 பக்கங்கள்; ஹவாய் சைவத்திற்கு மறுப்பாக தருமை யாதீனத்திலிருந்து வெளிவந்த நூல் இது.

144) "Grace in saivasiddhanta; A study of Thiruvarut payan; 1984; Rama ghose; வங்கப் பெண் ஒருவரால் டாக்டர் பட்டத்திற்குச் செய்யப்பட்ட ஆய்வு.

145) "Siva and dionysus" 1984; Alain danielou; 250 பக்கங்கள்.

146) "There has always been only a pluralistic saiva siddhanta philosophy" 1984; வி.கே. பாலசுந்தரம்; ‘‘ஹவாய் சைவ வெளியீடான’’ Monism and pluralism என்ற நூலுக்கு மறுப்பு; 59 பக்கங்கள்.

147) "Genealogy of the south Indian gods" 1984; ; 69 பக்கங்கள்; கி.பி. 1713-ஆம் ஆண்டில் இந்நூல் முதலில் ஜெர்மன் மொழியில் வந்தது. சைவம் பற்றி வெளிநாட்டார் அறியாத காலத்தே திருவாசகம், சிவஞானபோதம், சிவகவசம் ஆகிய நூல்கள் சைவர்கள் போற்றும் நூல்கள் எனக்கூறியிருப்பது வியப்பினைத் தரும் செய்தி.

148) "Saiva siddhantam; An explication and assessment by scholars the world over" 1984; பதிப்பாசிரியர் டி.என். இராமச்சந்திரன்.

149) "The concept of God in saiva tantra"; 1984; R.K.Upadhyaya; 63 பக்கங்கள்.

150) "Die metaphysik der shaiva siddhanta systems"; 1984; Nichola pillai Maria saveri; 63 பக்கங்கள்.

151) "Discourses on Siva"; 1984; வெளியீடு – University of Pensylvania; 362 பக்கங்கள்; பென்சில்வேனிய பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கக் கட்டுரைகள்.

152) "The Meaning of life - in saivita hinduism" 1984; கே. ஞானசூரியன்.

153) "Ananda Tandava of siva sadanantha moorthi"; 1985; கமில் சுவலபெல்; 86 பக்கங்கள்.

154) "Saiva siddhanta theology"; 1985; Roshan A. Dhuniwila.

155) "The Saiva saints"; 1985; மு. அருணாசலம்; 240 பக்கங்கள்.

156) "The strength of saivism"; 1986; தேவபூபதி நடராஜா; 41 பக்கங்கள்.

157) "Saiva siddhanta catechism - Part I; 1986; வி.கே. பாலசுந்தரம்; 30 பக்கங்கள்.

158) "Proceedings of the second international saiva siddhanta seminar" 1986; பதிப்பாசிரியர்கள் – தேவபூபதி நடராஜா என்.வி. ஜெயராமன் பக்கம் 203 முதல் 228 வரை ஆங்கிலக் கட்டுரைகள்.

159) "What is saiva siddhanta?" 1986; கே. ஞானசூரியன்; 48 பக்கங்கள்.

160) "Acritique of saiva siddhanta epistemology" ; 1986; என். முருகேச முதலியார் 16 பக்கங்கள்.

161) "Songs of Experience" 1987; Norman Cutler; 211 பக்கங்கள்.

162) "A Rudrakshe Rosary and other poem"1987; Mahanand Sharma; 154 பக்கங்கள்.

163) "Indian philosophical Annual Bicentenary commemoration Volume on Sivagnana Muniar"; 1987; பதிப் பாசிரியர் ஆர். பாலசுப்பிர மணியன்; 89 பக்கங்கள்.

164) "Five Nayanmars by G.U. Pope"; 1987; Editor - T.N. Ramachandran; 60 பக்கங்கள்.

165) "Tiruvarulpayan and arulmurai thirattu" 1987; வ.ஆ. தேவசேனாபதி; 104 பக்கங்கள்.

166) "A study of sivagnana siddhiyar (parabakkam) ; ஆர். கோபால கிருஷ்ணன்; 122 பக்கங்கள்.

167) "What is saiva siddhanta? *1987;* கே.ஞானசூரியன்.

168) "Srimad kandapuranam"; சாமிநாதன்; *216* பக்கங்கள்.

169) "South Indian devotional legends on Lord Siva; எஸ். சுவாமிநாதன்; *101* பக்கங்கள்.

170) "Saivism: A perspective of Grace"; *1988* எஸ். அருள்சாமி; *234* பக்கங்கள்.

171) "Siva temple and rituals"; *1988;* எஸ்.எஸ். ஜானகி; *208* பக்கங்கள்.

172) "Saiva siddhantam - Vol II; *1988;* பதிப்பாசிரியர் டி.என். இராமச்சந்திரன்; *242* பக்கங்கள்.

173) "Pati-pasu-pasam"; *1988;* டி.என். இராமச்சந்திரன்; *60* பக்கங்கள்.

174) "Grace in the saiva siddhanta and in St. Paul"; *1988; 743* பக்கங்கள்; திருவருட் பயனை ஒட்டி எழுதப்பட்டது.

175) "Sarvam siva Mayam"; *1988;* சிவஸ்ரீ பஞ்சாக்ஷர அடிகள் (ஞானசூரியன்; *98* பக்கங்கள்; இலண்டன் மெய்கண்டார் ஆதீன பத்தாம் ஆண்டு விழாமலர்)

176) "Slaves of the Lord - The paths of the Tamil Saints"; *1988;* Vidya dehejia; *206* பக்கங்கள்; சைவ,வைணவ அருளாளர்களைப் பற்றிய நூல்.

177) "Philosophical Anthropology in saiva siddhanta"; *1989;* Jayandra soni; *242* பக்கங்கள்.

178) "Tirukkovaiar *1989;* டி.என். இராமச்சந்தின்; *436* பக்கங்கள்.

179) "The Hymns of the Tamil saints"; *1989;* Indira Viswanathan Peterson; *302* பக்கங்கள்.

180) "The meaning of the siva linga"; *1989;* T. Nadarajah; *30* பக்கங்கள்.

181) "Siva Bhakti"; *1989;* நாகசாமி; அப்பர் தேவாரத்தை பற்றிய நூல்.

182) "The sacred marriage of a Hindu Goddess; *1989;* William P.Harman; *226* பக்கங்கள்; மீனாட்சி திருமணம் பற்றிய நூல்.

183) ''பெரிய புராணம்''; *1990;* டி.என். இராமச்சந்திரன் பகுதி *1; 395* பக்கங்கள்.

184) "Songs of the Harsh devotee; The thevaram of Suntaramoorthy nayanar"; *1990;* David dean shulman; *633* பக்கங்கள் பென்சில்வேனியா பல்கலைக்கழக வெளியீடு.

185) "Saint pattinathar in English"; *1990;* டி.என். இராமச்சந்திரன்; *96* பக்கங்கள்.

186) "Religion and Mysticism in the periyapuranam"; *1990;* ஆர். கோபால கிருஷ்ணன்; *238* பக்கங்கள்.

187) "Prasada Yoga"; Swami Siva Nandi; *112* பக்கங்கள்.

188) "Servants of the goddess; the priests of a south Indian temple; *1991;* C.J. Fuller; *232* பக்கங்கள்.

189) ''திருமந்திரம்''; *1991;* பா. நடராஜன்; *465* பக்கங்கள்.

190) "Guiding star of saivism"; *1991;* எம்.பட்டமுத்து; *40* பக்கங்கள்.

191) "Srimad periya puranam"; *1991;* எஸ். சுவாமிநாதன்; *100* பக்கங்கள்.

192) "The sacred Marriage of Hindu goddess"; *1992;* Wiliam. Pharman; *232* பக்கங்கள்.

193) "Glimpses of saiva siddhanta"; *1992;* கொ.நீ.சிங்காரவேலு; *448* பக்கங்கள்.

194) "Theology of the Tamils"; *1992;* ஆதி. முருகவேள்; *30* பக்கங்கள்.

195) "The hymns of Karaikkal ammaiyar"; *1993;* டி.என். இராமச்சந்திரன்; *103* பக்கங்கள்.

196) "The sivagnanabhoda sangraha of sivagrayogin" *1993;* கே.ஜெயம்மாள்; *158* பக்கங்கள்.

197) "Siva gnana deepam" *1994;* எம். குப்புசாமி; *60* பக்கங்கள்.

198) "Siddhanta traditions philosopher Sages"; *1993;* பேராசிரியர் என்.எம். சவேரி, யாழ்ப்பாணம்; பக்கம் *72.*

199) "Divine grace and Human freedom - Paul tillich and saiva siddhanta"; *1993;* P. Krishnan; பக்கம் *192.*

200) "Seminar papers on third international seminar on saiva siddhantam"; *1994;* Dr. RamaGhose and T.N. Ramachandran; *166* பக்கங்கள்.

201) "Saiva siddhantam: (Anassessment by international scholars); Volume three; *1993;* Editor - T.N. Ramachandran; *228* பக்கங்கள்.

202) "The light of Arunachalswarar"; *1994;* ஈஸ்வரி கமலாபாஸ்கரன்; பக்கம் *316.*

203) "Religion and philosophy" *1994;* எஸ். சசிவல்லி; பக்கம் *380.*

204) "Mathava sivagnana Munivar life and works" *1995;* சி.சு. மணி; பக்கம் *64.*

205) "Sivavazhipadu"; *1995;* கே.எம். வேங்கடராமையா; பக்கம் *192.*

206) "Saivism"*1996;* G.V. Tagarecauthar; பக்கம் *162;* பாசுபதம், காஷ்மீர சைவம், சித்தாந்தசைவம், சிவாத்து விதம், வீரசைவம் பற்றிய செய்திகள்.

207) (i) "Amma Am I Saivita" (குழந்தைகளுக்கான கேள்வி பதில்கள்); (ii) Saivite virtues (Page 24) (iii) Saivite Lessons for children a page a message") பக்கம் 60; டி.என். இராமச்சந்திரன் அவர்கள் உதவியுடன் தென்னாப்பிரிக்க மாணவர்களுக்குச் சைவம் கற்பிக்க மோர்கன் யோகாம் பரம் என்பவரால் எழுதப்பட்ட நூல்கள்; (iv) "Saiva siddhanta" (by. கா. சுப்பிரமணியப்பிள்ளை; பக்கம் 66); ஆண்டு *1997;* தென்னாப்பிரிக்காவில் வெளியிடப் பெற்றவை.

208) "The Philosophysaivaism" *1999;* M. Eliathamby, London; பக்கம் *56;* வெளியீடு – Sydney Murugan temple.

209) "Saiva Siddhanta" *2000;* பதிப்பாசிரியர் – பி.கிருஷ்ணன்; பக்கம் *212;* சென்னைப் பல்கலைக்கழகத்தில் *1998* மார்ச் மாதம் நடைபெற்ற ஆய்வரங்கக் கட்டுரைகள் பதினெட்டின் தொகுப்பு.

(துணை நூல்கள் :

1) Saiva Siddhantam; An explication and assessment - byscholars the world over" - T.N. Ramachandran (1984)

2) "Saiva Siddhantam; An assessmenet" - Three Volumes - T.N. Ramachandran.

3) அனைத்து ஆங்கில நூல்களின் விவரங்கள் டி.என். இராமச்சந்திரன் அவர்கள் நூலகத்திலிருந்து சேகரிக்கப் பட்டவை ஆகும்.)

■■■

மூன்றாம் பகுதி

I

சைவ சமய இதழ்கள்

1802-ஆம் ஆண்டு இலங்கை அரசின் சார்பில் ''அரசாங்க வர்த்தமானி'' என்ற மும்மொழி இதழ் வெளியானது. தமிழில் வெளியான முதல் இதழ் இதுவேயாகும். 1812-ஆம் ஆண்டில் சென்னையில் ''மாசத்தினச் செய்தி'' என்ற தமிழ் இதழ் வெளியானது. தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் தமிழ் இதழ் இதுவேயாகும்.

19-ஆம் நூற்றாண்டில் தமிழில் வெளிவந்த எல்லா இதழ்களிலும் இந்து சமயம் இடம் பெற்றது. தத்துவவிளக்கம், விவாதம், சமயத்தலைவர் வரலாறு என்று கட்டுரைகள் ஒரு சிலபக்கங்களில் வெளியிடப்பட்டன. அவை முழுமையான சமய இதழ்கள் அல்ல. முதல் இந்து சமய இதழ் சென்னையில் 1864-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ''தத்துவபோதினி'' ஆகும்.

கிறித்தவர்களுக்குப் பதில் அளிப்பதே முதலில் இந்து சமய இதழ்களின் நோக்கமாக இருந்தது. பின்பு தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டன. சைவ–வைணவ சமயச் சண்டை; தத்துவங்களை விளக்கு வதில் தர்க்கம் என விரிந்தன.

1882-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ''சைவ உதய பானு'' முதல் சைவ இதழாக இருக்கக்கூடும். இச்செய்தி இன்னும் ஆய்வு செய்யப்பட வேண்டும். நூறு ஆண்டுகளுக்கு மேலாக இன்றும் வெளிவந்து கொண்டிருப்பது ''இந்து சாதனம்'' ஆகும். 1888-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் முதல் இதழ் வெளிவந்தது. தமிழ்நாட்டில் சைவ சித்தாந்தப் பெருமன்றம் என்ற சமாஜம் வெளியிட்டு வரும் ''சித்தாந்தம்'' இதழ் 1912-இல் தொடங்கி இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கின்றது.

சைவம் பற்றிய செய்திகளை உடைய இதழ்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1) சைவத்தைப் பற்றி மட்டுமே வரும் இதழ்கள்.
2) பக்தி இதழ்கள்.
3) மக்கள் ரசனை இதழ்கள் – கதைகளை உடையன.

கல்கி, ஆனந்தவிகடன், குமுதம், குங்குமம், கலைமகள், அமுதசுரபி, இதயம் பேசுகிறது முதலான இதழ்கள் மக்கள் இரசனையைப் பயன்படுத்திக் கொண்டு கதைகள், நகைச்சுவைத் துணுக்குகள், தொடர்கதைகள் என வெளியிட்டு வருகின்றன. இவ்விதழ்கள் தான் ஆயிரக்கணக்கில் – ஒன்றிரண்டு இதழ்கள் இலட்சக்கணக்கில் – விற்பனையாகின்றன. இவ்விதழ்களில் ஒரு சிறு செய்தி வந்தாலும் அச்செய்தி விரைந்து பலமக்களைச் சென்றடையும்.

''குங்குமம்'' இதழை விட்டு விடலாம். குங்குமம் சமயச்செய்திகளை வெளியிடுவதேயில்லை. ''குமுதத்திற்கும்'' இதே நிலைதான். ஆனால் அண்மைக் காலங்களில் பக்தியும் ஒரு வியாபாரப் பொருளாகி விட்ட நிலையில் அதனைப் பயன்படுத்திக் கொண்டு தனது 57 ஆண்டுக்கால நெடிய வரலாற்றில் ப்ரியா கல்யாணராமனின் ''கோயில் சொல்லும் தலங்கள்'' (7.7.2003-ஆம் நாளில் 175-ஆவது கட்டுரை) என்ற நீண்ட தொடரை வெளியிட்டு வருகிறது.

அண்மையில் நின்றுவிட்ட ''இதயம் பேசுகிறது'' இதழும் சமயக்கட்டுரைகளில் அதிகக் கவனம் செலுத்தாவிட்டாலும், பொன்பாஸ்கர மார்த்தாண்டன் போன்றோரின் தலயாத்திரைத் தொடர்களை வெளியிட்டு வந்தது. ''இதயம் பேசுகிறதில்'' வெளியான பாலகுமாரனின் ''உடையார்'' தொடர்கதை சோழர் காலத்திய சைவ நிலையைப் படம் பிடித்துக் காட்டியது. அக்காலத்தில் வாழ்ந்த கருவூர்த்தேவர் போன்ற அருளாளர்கள் பாத்திரங்களாக இடம் பெற்றனர்.

''அமுதசுரபி'' மாத இதழில் சமயக் கட்டுரைகள் ஒன்றிரண்டு மட்டுமே இடம் பெற்றாலும், இவ்விதழின் தீபாவளி மலர்களில் வெளியான கட்டுரைகள், கோபுலு, சுபா, உமாபதி போன்றோர் வரைந்த தெய்வ உருவங்கள், சித்திர மடல்கள் – ஆகியவற்றில் சைவம் இடம் பெற்றிருந்தது.

கலைமகள் தீபாவளி மலர்களிலும் சைவ சமயக் கட்டுரைகளும், வினு, எஸ்.ராஜம், உமாபதி, கோபுலு ஆகியோரின் கவினுனு ஓவியங்களும் திருமுறைகளையும், சைவ புராணங்களையும் படம் பிடித்துக் காட்டின. இதன் ஆசிரியர் கி.வா. ஜகந்நாதன் சிறந்த தமிழறிஞர் என்பதினால் மாத இதழ்களிலும் சைவத் திருமுறைகள் பற்றிய கட்டுரைகள் வெளிவந்தன. கி.வா.ஜ அவர்களின் ''வாருங்கள் பார்க்கலாம்'' என்ற தொடர் நால்வர் பெருமக்களின் வரலாற்றோடு தொடர்புடைய தலங்களைப் பற்றியும், அங்கு நிகழ்ந்த அருள் நிகழ்ச்சிகளைப் பற்றியும் விளக்கியது. எஸ். ராஜம் அவர்களின் ஓவியமும், என். இராம கிருஷ்ணா அவர்களின் புகைப்படங்களும் கருத்தைக் கவர்ந்தன. பெரிய புராணம் பற்றிய அ.ச. ஞானசம்பந்தனாரின் ''தேசிய இலக்கியமும்'' கலைமகளில் தொடராக வெளி வந்தது.

ஆனந்தவிகடன் இதழ்கள் பார்வைக்குக் கிடைக்கவில்லை. சில்பியின் ''தென்னாட்டுச் செல்வங்கள்'' ஒரு அற்புத தெய்வீக அனுபவம். சில்பி ஓவியக் கலைக்குப் புதிய பரிமாணங்களைக் கொடுத்தார். தென்னாட்டுத் திருக்கோயில்களையும், அங்கு எழுந்தருளியிருக்கும் தெய்வத் திருவுருவங்களையும் கோட்டோவியமாகத் தத்ரூபமாகச் சித்தரித்தார். தீபாவளி மலர்கள் வெளிவந்தவரை அறிஞர்களின் கட்டுரைகளும், அழகோவியங்களும் இடம் பெற்றன.

''கல்கி'' தீபாவளி மலர்களை மணியம், வினு, தநுஸீ ஆகியோரின் ஓவியங்கள் அலங்கரித்தன. சைவ, திருமுறைக் கட்டுரைகளும் இடம் பெற்றன. கல்கி வார இதழ்களில் தொ.மு. பாஸ்கரத் தொண்டமான் எழுதிவந்த ''வேங்கடம் முதல் குமரிவரை'' கலை நயமும், பக்தி மணமும் வீசியது. திருமுருக கிருபானந்தவாரியார் ''சிவனருட் செல்வர்'', ''கந்தன் கருணை'' ஆகிய இரு தொடர்களையும், ராஜாஜி, மீ.ப. சோமு ''திருமூலர் தவமொழி'' தொடரையும், ரா.பி. சேதுப்பிள்ளை ''ஆற்றங்கரையினிலே'' தொடரையும் எழுதியிருந்தனர். ரசிகமணி டி.கே.சியும், அ.சீனிவாசராகவனும் எழுதி வந்த இலக்கியத் தொடர்களில் சைவத் திருமுறைகளும் இடம் பெற்றிருந்தன.

தொடர் கதைகளைப் பொருத்தவரையில் ''கல்கி''யில் வந்த வரலாற்றுத் தொடர்கதைகள் சமய உணர்வோடு எழுதப்பட்டு வெளியாயின. ''கல்கி'' வெளியான முதல் ஆண்டிலேயே (1941) கல்கியின் ''பார்த்திபன் கனவு'' வெளி வரலாயிற்று. இத்தொடர் கதையில் சிவனடியார் ஒரு முக்கிய கதாபாத்திரம் ஆவார். 1944-ஆம் ஆண்டிலிருந்து வெளியான ''சிவகாமியின் சபதத்தில்'' பரஞ்சோதி என்ற சிறுத் தொண்டர் முக்கிய பாத்திரம் ஆவார். நாவுக்கரசரும் இடம் பெறுகிறார். 1950-ஆம் ஆண்டில் தொடங்கிய ''பொன்னியின் செல்வனில்'' கதையின் நாயகனான ராஜ ராஜசோழன், கண்டராதித்தர், செம்பியன் மாதேவி, நம்பியாண்டார் நம்பி இடம் பெறுகின்றனர். மீ.ப. சோமுவின் ''கடல் கண்ட கனவு'', நா. பார்த்தசாரதியின் ''பாண்டி மாதேவி'', ''குறிஞ்சி மலர்'', ''மணி பல்லவம்'', ''பொன் விலங்கு'', அகிலனின் ''வேங்கையின் மைந்தன்'', ''வெற்றித் திருநகர்'', ''கயல் விழி'', ஜெகசிற்பியனின் ''பத்தினிக் கோட்டம்'' ஆகிய தொடர் கதைகளில் ஒன்றோ,

பலவோ திருமுறைப் பாடல்கள் இடம் பெற்றன.

ஆனந்த விகடனைப் பொருத்தவரையில் ஜெகசிற்பியனின் ''திருச்சிற்றம்பலம்'' சைவப் பெருங்காவியம் ஆகும். ''ஞான காவியமாக விளங்கும் பெரிய புராணத்தை நோக்கினால் அதன் மீது அன்பு, அறம், தொண்டு, இறைபக்தி, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமரச சன்மார்க்க நெறி முதலியவற்றை உள்ளடக்கிய ஒரு அருள் மயமான ஒளி தந்திருப்பது தெரியவரும். அந்த அருள் ஒளி அதன்மீது எங்ஙனம் படிந்தது? அது அக்காவியம் உருவான காலத்தின் ஒளி. அந்த ஒளியைப் பரப்பியவன் தண்டமிழ்வேந்தன் அநபாயன். அந்த தண்ணொளியைப் போற்றவும், அந்த அருள்கவிஞனை வாழ்த்தவும் துடித்தேன். அத்துடிப்பின் வடிவே இந்தத் திருச்சிற்றம்பலம்'' என்றே ஜெகசிற்பியன் தொடங்குகிறார். நாவல் நெடுகிலும் சைவ மணம் வீசுகிறது. ஜெகசிற்பியன் விகடனில் எழுதிய மற்றொரு தொடர்கதை ''ஆலவாய் அழகன்''.

''ஓம் சக்தி'', மக்கள் ரசனையையும், இலக்கியத் தரத்தையும் சமனாக்கியது. ''ஓம் சக்தி'' தீபாவளி மலர்கள் கலைக் கருவூலங்கள். ஓவியர் மணியத்தின் படங்களை மீட்டுரு தந்தது.

மக்கள் இரசனை இதழ்களையடுத்து நாம் காணவேண்டியது ''பக்தி ஸ்பெஷல்'' ரக இதழ்கள். இவை புராணங்களின் மூன்றாம் பதிப்பு எனலாம். தல புராணங்கள் இரண்டாம் பதிப்பு. புராணக் கதைகள் மக்களுக்கு எப்பொழுதும் பிடித்தமானவை. அந்த மனோதத்துவத்தை நன்கு அறிந்து கொண்டு முதலில் பயன்படுத்தியவர் மணியன் அவர்கள். அவர் வெளியிட்ட இதழ்''ஞானபூமி''. இது ஒரு புதிய பாதையை அமைத்தது. ஞானபூமிக்கு முன்னும் சில இதழ்கள் வெளிவந்து, வணிகரீதியாக வெற்றி பெறாது போயின. ''ஞானபூமி''யில் மணியன் கோயில்களின் தலபுராணங்கள், துறவியர்களின் பேட்டிகள், கேள்விபதில்கள் என்று பல துறைகளில் கட்டுரைகளை வண்ணப் படங்களுடன் வெளியிட்டார். இதழுக்கு இணைப்பாக கங்கை செம்பு, விசுவநாதர் படம், தோத்திரநூல்கள் என்றெல்லாம் முதலில் புகுத்தியவர் மணியன். காலத்துக்கேற்ற தலையங்கங்களும், மெய்ஞ்ஞானத்திற்கு விஞ்ஞான விளக்கங்களும் கிடைத்தன.

இதனை அடியொற்றி ஆன்மீகம் (1995), கோபுரதரிசனம் (1995), ஞான ஆலயம் (1996), இதயதீபம் (1998), வெங்கடேஸ்வர சுப்ரபாதம் (1999), அம்மன் தரிசனம் போன்ற இதழ்கள் வெளிவரலாயின. சில இதழ்கள் மறைந்து போயின. இந்த ரக இதழ்களின் உச்சம் குமுதம் பக்தி ஸ்பெஷல் ஆகும். இதழ் விற்பனையை அதிகரிக்க சக்கரங்கள், நூல்கள், சிறப்புக் கோயில்களின் திருநீற்றுப் பிரசாதங்கள் ஆகியவற்றைப் புகுத்திய பெருமை பக்தி ஸ்பெஷலுக்கு உண்டு. இங்கும் கோயில்கள், புராணங்கள் தான். ஞான பூமியைப் போல தற்கால சிந்தனைகளை இவை வளர்க்கவில்லை. இந்த இதழ்கள் மூலம் பிரபலம் அடைந்த கோயில்கள் அதிகம். அந்த அளவில் இவைகள் பாராட்டப்பட வேண்டியவை ஆகும்.

மக்கள் இரசனை இதழ்களில் வெளியான தொடர்கதைகள் அனைத்தும் நாவல்களாக வெளிவந்தன. அவ்வாறு இதழ்களில் வராமல் தனியாக வெளியான நாவல்களில் முக்கியமானது தி.ம. பொன்னுசாமி பிள்ளையின் நாவல். இந்நாவலில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் தூவப்பட்டுள்ளன.

இனி சைவத்திற்கென்றே வெளிவந்த இதழ்களைப் பற்றிச் சிந்திப்போம். அதற்குமுன் தமிழ்நாட்டின் மற்றுமொரு சமயமான வைணவ இதழ்களைப் பற்றிச் சிறிது சிந்திக்கலாம்.

''ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்'' (1947- ஆசிரியர் - ஸ்ரீ கிருஷ்ணசுவாமி ஐயங்கார்) கனமான கட்டுரைகளைத் தாங்கி வருகிறது – வைணவ தூஷணம் செய்கிற தினமலர் செய்தித்தாளைத் தாக்கித் தலையங்கம் வந்துள்ளது. ''பாகவத தர்மம்'' (1978 - ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள்); ''யதிராஜ பாதுகா'' (1981 - டாக்டர். வி.வி. ராமானுஜன்); ''பாஞ்ச ஜன்யம்'' (1999 - ஸ்ரீ

வைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்); ''ஸ்ரீஹயக்ரீவ ப்ரியா'' (1999 - டி.சி. ஸ்ரீநிவாசன்) தூமணி மாடம் (2001 – டி. வரதராஜன்); ''திருமால்'' (1985 - குமாரவாடி சே. இராமானுஜன்); ''ஸ்ரீ ராமானுஜன்''(2001 - P.B. ரங்கநாதா சாரியர், P.B. ராஜஹம்ஸாசார்யர்); ''திருமாமகள்'' (2001 - தி. பாஷ்ய ராமானுஜதாசன்); ''ஸப்தகிரி'' (1969 - எ.எஸ். ராமமூர்த்தி) ஆகிய இதழ்கள் பார்வையிடப்பட்டன. ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம், பாகவததர்மம், பாங்சஜன்யம், ஸ்ரீ ராமானுஜன், திருமால் ஆகிய இதழ்கள் ஆழமான ஆய்வுகளுடன் வெளி வருகின்றன. வைணவத்திற்கு ஊறு நேருகின்ற பொழுதெல்லாம், ஜுனியர் விகடன், தினமலர் என்றெல்லாம் பாராது கண்டனம் செய்து தலையங்கம் வெளியிடுகின்றார்கள். திருப்பதி கோயில் நிர்வாகத்தில் காஞ்சி சங்கராசார்யார் தலையிடுவதைக் கண்டித்து "Keep of Tirumala Issues" என்றெல்லாம் கண்டனம் செய்து தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. ''ஸ்ரீராமானுஜன்'' என்ற பெயரில் ஸ்ரீ அண்ணங்காராசாரியார் ஸ்வாமி அவர்கள் ஆசிரியராக இருந்து வெளியிட்ட இதழை மீட்டுரு செய்து வெளியிடுகின்றனர்.

சைவ சமயத்திலே ''ஞானசம்பந்தம்'' தொடங்கிய நாளிலிருந்து இன்று வரை ஆழமான கட்டுரைகள் வெளியிட்டு வருகின்றது. காலத்திற்கேற்ற பிரச்சினைகள் குறித்து தலையங்கமும் வந்து கொண்டிருக்கின்றது. திருக்கோயில், சித்தாந்தம், குமரகுருபரன், செந்தமிழ்ச் செல்வி ஆகிய இதழ்களின் ஆரம்பகாலங்களில் மிக உயரிய கட்டுரைகள் சிறந்த அறிஞர்களால் எழுதப்பட்டு வெளிவந்தன. பிறகு அந்த வேகம் குறைய ஆரம்பித்து விட்டது. அந்த ஆரம்பகாலத்தை (1950 - 1980-ஆம் ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலம்) சைவ இதழ்களின் பொற்காலம் எனலாம். ''தொண்டன்'' இதழ் வெளிவந்த காலத்தில் மதமாற்றம், திராவிட இயக்கத்திற்கு நூறு கேள்விகள் என்று அன்றாட பிரச்சினைகளை கடும் சூட்டோடு எதிர்த்து தலையங்கங்கள் வெளியிட்டது. இந்தக் கால கட்டத்தில் ''சிவசிவ'' அந்தப் பணியைச் செய்கிறது. ''சிவசிவ'' காலத்துக் கேற்ற புதுமைகளையும், மரபினை விடாத பழமைகளையும் தாங்கி வருகின்றது. இவையல்லாமல் பல்வேறு நிறுவனங்கள், தனியார் தங்களைச் சுற்றிய வளையத்தில் வளையவிட இதழ்கள் வெளியிட்டு வருகின்றனர். 50, 60களில் உள்ள கனம் அவற்றில் இல்லை.

ஜெ.எம். நல்லசாமி பிள்ளையின் ''சித்தாந்த தீபிகா'' என்ற ஆங்கில இதழ் சைவத்தில் வெளிவந்த இதழ்களிலேயே மிக உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளது. அண்ணங்காராசாரியார் சுவாமிகளின் ''ஸ்ரீராமானுஜன்'' மீட்டுரு செய்யப்படுவது போல இந்த இதழையும் செய்தால் சைவவுலகம் பெரிதும் பயனடையும்.

''இதழ்கள்'' பற்றிய ஆய்வில் அ.மா. சாமியின் ''19-ஆம் நூற்றாண்டுத்தமிழ் இதழ்கள்'', ''இந்து சமய இதழ்கள் – ஓர் ஆய்வு'' ஆகியன பெரிதும் துணைபுரிந்தன. ஸ்ரீ தருமை ஆதீன நூலகம், ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீன நூலகம், ஊரன் அடிகள் நூலகம், திருக்கோயில் அலுவலகம்) மறைமலையடிகள் நூலகம், உ.வே.சாமி நாதையர் நூலகம் – இவற்றின் மூலம் ஞானசம்பந்தம், மெய்கண்டார், குமர குருபரன், சித்தாந்தம், சித்தாந்த தீபிகா, திருக்கோயில் பழைய இதழ்களைப் பார்க்க வாய்ப்பு கிடைத்தது. கலைமகள் அலுவலகம், கல்கி அலுவலகம், அமுதசுரபி அலுவலகம், ரோஜா முத்தையா அலுவலகம், – ஆகியவற்றிலும் பல இதழ்களைப் பார்க்க நேர்ந்தது. அத்துணை பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

1

இந்து சாதனம்

1888

நூறு ஆண்டுகளுக்கு மேலாக சைவசமயச் செய்திகளைத் தாங்கி இன்று வரை வரும் இதழ் ''இந்து சாதனம்'' ஆகும். 1940-ஆம் ஆண்டு ஏப்ரல் இதழ் 52-ஆவது புத்தகம் என்று குறிக்கப்பட்டுள்ளது. எனவே 1888-ஆம் ஆண்டில் முதல் இதழ் வெளிவந்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் வெளியிடப்படுகிறது. நான்கே பக்கங்களை உடையது. வாரம் இருமுறையாக வெளிவருகிறது. ஒன்று அல்லது இரண்டு கட்டுரைகள் சமயம் சார்ந்தவை. அவையல்லாமல் உள்ளூர்ச் செய்திகளைத் தாங்கி வருகின்றது.

1927-ஆம் ஆண்டில் ஆசிரியர் பண்டித சம்பந்தனார். 1937-ஆம் ஆண்டில் ஆசிரியர் ஆட்சிலிங்கம். 1940-ஆம் ஆண்டில் பொன் விழாமலர் 31 கட்டுரைகளைத் தாங்கி வந்தது.

1940-ஆம் ஆண்டிலிருந்து 1943-ஆம் ஆண்டு வரையிலான இதழ்கள் சிலவே பார்வைக்குக் கிடைத்தன. 1940-ஆம் ஆண்டில் திருநீறு, ஆளுடைய பிள்ளையின் அருட்பாட்டு, கந்தபுராணக் கவிநுட்பம், சிவமயம், மாணிக்கவாசகர், உமாபதி சிவம், தொல்காப்பியமும் திருவாசகமும், பெரியபுராண மகத்துவம், கா.சு. பிள்ளையின் ‘‘கிரேக்க தெய்வங்களின் புராணக் கதை’’, ‘‘கந்தபுராணத்து மூன்று கண்கள்’’, பாலகவி வே. இராமநாதஞ் செட்டியாரின் ‘‘இளமை’’ சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியாரின் ‘‘கூத்தாடு தேவர்’’, ‘‘சைவத்தெளிவும் உலக ஒற்றுமையும்’’, சைவமக்களின் கடமை, கலவைப்பந்தி, சைவாலயங்கள், ஸ்ரீஸோம நாதம், மகேசுவரபூஜை, காரைக்காலம்மை யார், மயிலை கிழாரின் ‘‘ஐயடிகளும் கழற்சிங்கரும்’’, சைவசமய விளக்கம், சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியாரின் ‘‘வேலும் மயிலும் துணை’’ ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன. 30.12.1940 இதழ் அகில இலங்கைச் சைவ மாநாட்டுச் செய்திகளுக்காக முழுமையும் ஒதுக்கி விடப்பட்டிருந்தது. ச. சச்சிதானந்தம் பிள்ளையின் தலைமை உரையும், புரிசை முருகேச முதலியாரின் உரையும் இடம் பெற்றிருந்தன.

1941-ஆம் ஆண்டில் ஞானத்தமிழ், உள்ளத்துறவு, சைவசித்தாந்த சமாஜத் தலைமை உரை, சபாநாயகர், சுந்தரமூர்த்தி நாயனார், வேளாளரும் சைவமும், சமய நம்பிக்கை, தக்ஷிணாமூர்த்தி தத்துவார்த்தம், சரித்திரத்துறையும் சைவ சமயமும், தசமீயின் சித்தாந்த சைவம், தசமீயின் ‘‘சிவத்துரோகம்’’, சைவமக்களின் கடமை, சோழர் காலத்திய கோயில்களும் மடங்களும், சைவசமயமும் உருவவழிபாடும், திருநாவுக்கரசு சுவாமிகள், அன்பும் சமயமும், சிவாலயப்பணி, திருவள்ளுவரும் கச்சியப்பரும், விபூதி மகிமை, ரா.பி. சேதுப்பிள்ளையின் ‘‘முருகன் பெருமை’’, மயிலை சீனி வேங்கட சாமியின் ஜைன கண்ணப்பர், குமார சுவாமிக் குருக்களின் ‘‘சிவஞானபோத சூத்திரம் (6) தருமையாதீன மெய்கண்டார் மாநாட்டில் ஈசான சிவாச்சாரியார் தலைமையுரை ஆகியன இடம் பெற்றன.

1942-ஆம் ஆண்டில் சி.கே.எஸ்ஸின் ‘‘மெய்ப்பொருள் அறிவு நிலையும் அப்பர் தேவாரமும்’’, ம. பாலசுப்பிரமணிய முதலியாரின் ‘‘திருநீறு’’ வள்ளுவரும் சிவப்பிரகாசமும், பெரியபுராணமும் பெண்டிரும், தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையில் உலகநாத முதலியார் நிகழ்த்திய தலைமையுரை, இறைபணி நிற்றல் ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன.

1942-ஆம் ஆண்டில் மகோற்சவ விளக்கம், பண்டைத் தமிழரின் சமயம், சு. சிவபாத சுந்தரத்தின் ‘‘வேதம்’’, பண்டைத் தமிழரின் சமயம், சாத்திர விரோதமாக மூர்த்திகளை அலங்காரம் செய்தல், சமயக்கல்வி (மூன்று இதழ்கள் மட்டுமே பார்வைக்குக் கிடைத்தன) ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன.

2

The Siddhanta Deepika 1897

சைவ சித்தாந்தக் கருத்துக்களை ஆங்கிலத்தில் வெளியிட்டு இந்தியா முழுமையும், மேலைநாடுகளிலும் பரப்ப வேண்டும் என்ற விழுமிய எண்ணத்தில் திரு. ஜெ.எம். நல்லசாமி பிள்ளையவர்கள் 21, ஜூன் 1897-ஆம் ஆண்டில் "The Siddhanta Deepika OR The Light of Truth" என்ற ஆங்கில மாத இதழை வெளியிட்டார். இந்த இதழ் மே 1914 -ஆம் ஆண்டு வரை வெளிவந்தது. ஒன்பது ஆண்டுகளும், ஜெ.எம்.என்.

அவர்கள் ஆசிரியராக இருந்தார்கள். இதனை 14 தொகுதிகளாக 1994-ஆம் ஆண்டில் Asian Educational Services, New Delhi. மீட்டும் உருத்தந்து மகத்தான பணியாற்றியிருக்கின்றனர். தொகுதியின் விலை ரூ. 7500/- ஆகும். ஜுன் 1897-ஆம் ஆண்டு முதல் ஜுன் 1909-ஆம் ஆண்டு வரை ஜெ.எம்.என். ஆசிரியராக இருந்தார். 1903-ஆம் ஆண்டு முதல் 1905-ஆம் ஆண்டு முடிய இதழ் வரவில்லை. 1909-ஆம் ஆண்டு முதல் மே 1914-ஆம் ஆண்டு வரை 5 ஆண்டுகள் திரு. வி.வி. இரமணன் அவர்கள் ஆசிரியப் பொறுப்பு ஏற்றார்.

"Our aim is no less than transplant in the Indian soil some of those activities in the field of Indian religion and literature and history which are carried on in far off countries by western savants and to stimulate indigenous talent to work and achieve a moderate share of success in these departments.... we have considered it a shame that we should be coached in our Veda and Vedanta by German professors on the banks of the Rhine and Ouse, and that an American from a far off country should be the first translator of the foremost work in Tamil philosophy and that an Old Oxford professor should sit pouring over the Tamil 'Word' and render it into English verse. All these facts redound greatly to the glory of the European, who could forget for the time being his narrow bit of native land and his own selfish wants and go out to distant lands and to remove antiquities, in search of the diggins of the past any by living laborious days, live to finish the task he had set to himself in a thoroughly universal and truly christian spirit. Noble examples these! may we follow!"

சித்தாந்த தீபிகை – 21.6.1897.

முதல் இதழின் தலையங்கம் அன்றைய நிலைமையை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. நமது வேதங்களை ஜெர்மானியப் பேராசிரியர்களைக் கொண்டு அறிய வேண்டிய நிலை. சைவ சித்தாந்தத்தை ஆங்கிலத்தில் வெளியிட ஒரு அமெரிக்கர் வர வேண்டியுள்ளது. இந்த எண்ணமே ஜெ.எம்.என். அவர்களுக்குப் பெரும் அவமானத்தைத் தந்திருக்கின்றது. எங்கேயோ எட்டாத தொலைவில் இருந்து கொண்டு, மொழியும் தெரியாமல், அரும்பாடுபட்டு எண்ணிய கருமம் முடித்த அந்த மேனாட்டுப் பெரியவர்களின் உழைப்பே அவருக்கு உத்வேகமும் தந்திருக்கின்றது. அதனால்தான் வாய்ப்பு வசதிகளோ, நல்ல நூலகமோ இல்லாத நிலையில், ஆங்கிலத்தில் எழுதுவோரும் நிரம்ப பேர் இல்லாத நிலையில், ஆதரவு பெரிதாகக் கிடைக்காமல் பெரும் பொருளாதார நெருக்கடிக்கிடையே இப்படி ஒரு இதழைக் கொண்டு வரமுடிந்து இருக்கின்றது. அது மட்டுமல்லாது 14 ஆண்டுகள் தொடர்ந்து நடத்தவும் முடிந்திருக்கின்றது.

இந்த நிலையை 1901(ஜுன், ஜுலை) இதழில் தலையங்கமாக எழுதுகிறார். "Still the difficulties of what our people call இடம், பொருள், ஏவல், 'Place, Money and Men' could not be minimised. Besides, Our people have not yet fully learnt to appreciate journals devoted to particular subjects of study, of which there are hundreds in Great Britain and other parts of Europe! And our cause of Tamil is almost a forlorn hope. As the distinguished Veteran scholar said from his bitter experience, 'study of Tamil is the direct road of poverty' The Government of the country is so apathetic that it would not grant even a small sum of money for the search of old Manuscripts. The few lingering Rajahs Who may be said to hold some independent sway are too anglicised to care for their own Vernaculars. Nearly all the Zamindars of the Tamil country are paupers or much worse. About them ... it would be incredibleof it was not painfully true, that among 15 millions of Tamil speaking people an only Journal devoted to their special cause should languish for want of support".

அப்படி ஒன்றும் ஜெ.எம்.என். அவர்கள் முயற்சி முழுமையாக வீணாகவில்லை. சித்தாந்த தீபிகை வெளிவந்ததினால் தமிழகத்திலேயே குறிப்பிடத்தக்க தாக்கம் நேர்ந்துள்ளது. வடமொழியைக் கற்று,

வேதசாத்திரங்களை மேனாட்டுக்கு வெளிப்படுத்திய மாக்ஸ் முல்லர் அவர்கள் பல அன்பர்கள் வலிந்து அறிமுகப்படுத்தியும் தமிழ் இலக்கிய, தத்துவ சாத்திரங்களில் கவனம் செலுத்தாது இருந்தார். சித்தாந்த தீபிகை வர ஆரம்பித்ததும் திராவிட இலக்கியங்களை அறிஞர்கள் கவனம் கொள்ளவில்லை என அவரே தனது இறுதிக் காலத்தில் அங்கலாய்க்கிறார். சித்தாந்த தீபிகையின் பணிகளையும் பாராட்டி எழுதுகிறார்.

"Our labours have not been altogether in vain. We have roused some visible interest for the Tamil Literature and philosophy among our own people and amongst the literati of other countries".

சித்தாந்த தீபிகை ...ஜூலை 1901)

மாக்ஸ் முல்லர் அவர்களின் மாபெரும் படைப்பான "The six systems of philosophy" என்ற நூலிலிருந்து ஒரு பகுதியினையும் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது வருமாறு :

"In the south of India, there exists a philosophical literature which, thought it may show clear traces of Sanskrit influence, contains also original indigenous elements of great beauty and of great importance for historical purposes. Unfortunately, few scholars only have taken up, as yet, the study of the dravidian languages and literature, but young students who complain that there in nothing left to do in sanskrit literature, would I believe find their labours amply rewarded in that field.

But such journals as... The light of truth... have been doing most valuable service". இதுதான் சித்தாந்த தீபிகையின் வெற்றி ஆகும்.

இந்த வெற்றிக்கு ஜெ.எம்.என். செய்தது தான் என்ன? பிற அறிஞர்களோடு, தானும் முதல் இதழிலிருந்து தொடர்ந்து எழுதி வந்தார். முதல் இதழிலிலேயே ஜெ.எம். என்.-இன் ‘‘சிவஞான சித்தியார் ஆங்கில மொழிபெயர்ப்பு வர ஆரம்பித்து 46 இதழ்கள் தொடர்ந்து வந்து நிறைவு பெற்றது. திருமந்திரம் ஆங்கில மொழி பெயர்ப்பு 20 இதழ்களில் வந்தது. அது மட்டுமல்லாது இருபாஇருபஃது, வினா வெண்பா முதலான சாத்திரங்களையும், காரைக்காலம்மையார் பாசுரங்கள், திருமுருகாற்றுப்படை முதலான சமய நூல்களையும் சிலப்பதிகாரம், ஐங்குறுநூறு முதலான இலக்கியங்களையும் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

ஜி.யு. போப் அவர்களின் திருவாசகம், பெரியபுராணம், கபிலர், புறப்பொருள் வெண்பா மாலை, Poets of Tamil land, போன்ற ஆங்கிலக் கட்டுரைகளையும் தீபிகை தாங்கி வந்தது. போப் அவர்களின் புறநானூறு மொழிபெயர்ப்பு 18 இதழ்களிலும் மணிமேகலை மொழி பெயர்ப்பு 7 இதழ்களிலும் வெளிவந்தன.

இராமசாமி ஐயரின் திருமந்திர மொழி பெயர்ப்பு 5 இதழ்களிலும், ஷண்முக முதலியாரின் தாயுமானவர் பாடல்கள் மொழிபெயர்ப்பு 27 இதழ்களிலும், எ. மகாதேவ சாஸ்திரியின் ‘‘ஸ்ரீ கண்ட பாஷ்யம்’’ மொழிபெயர்ப்பு 48 இதழ்களிலும் வெளிவந்தன.

"Poetry of saint Appar" 9 இதழ்களிலும், "Sacred Sport of Siva" 4 இதழ்களிலும் பிற திருமுறைக்கட்டுரைகளுடனும் சிறப்பாக மிளிர்ந்தன. "Lord Sambanda and un Unknown Dravidian prosody'' என்ற டி. வீரபத்ர முதலியாரின் தொடர் தனித்தன்மை வாய்ந்தது. அதில் ஒரு பகுதி வருமாறு :

Final '2' has general Sandhi in Tamil

Final '2' has no Sandhi in Telugu and Sambandha"

‘‘புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தருவது நீறு
உண்மையில் உள்வது நீறு’’

சம்பந்தர்.

தமிழில் இப்படி வராது.

‘‘புன்மை தவிர்ப்பது நீ
றோதத் தருவது நீ
றுண்மையில் உள்ளது நீறு’’

என்று வரவேண்டும். But this is unmetrical.

இப்படியெல்லாம் இன்று யார் சிந்திக்கிறார்கள். தமிழ் படித்தவர்களுக்குத் தெலுங்கு எங்கே தெரிகிறது? மறைமலையடிகள் ஆர்.எஸ். வேதாசலம் என்ற பெயரில் கட்டுரைகளும், ஆனந்த குமார சுவாமியின் உலகப் புகழ் பெற்ற "Dance of Siva'' கட்டுரையும் தீபிகையில் வெளிவந்தன.

சைவசமயம் மட்டுமல்ல. வைணவ இலக்கியமாகிய திருவிருத்தம் மொழி பெயர்ப்பு 9 இதழ்களிலும் கலித்தொகை, மணி மேகலை, பட்டினப்பாலை, மூதுரை, குறள், நம்மாழ்வார் பாசுரங்கள், சூளாமணி, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப் பாட்டு, கம்பராமாயணம், குண்டலகேசி – ஆகிய இலக்கியங்களிலிருந்து ஒன்றிரண்டு மொழி பெயர்ப்புகள் அல்லது கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இதனால் இதழின் சமயப் பொதுமையும், ''எந்நூலும் விலக்கல்ல; தமிழே அடிப்படை'' என்ற தமிழுணர்வும் காணக்கிடைக்கிறது.

ஜூன் 1897-ஆம் ஆண்டு முதல் மே 1914 -ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் நடைபெற்ற சைவசமய நிகழ்வுகளுக்கு ''சித்தாந்த தீபிகை'' சாட்சியாகத் திகழ்கிறது. அக்கால கட்டத்தில் வெளியான நூல்கள், இதழ்கள், ஆன்றோர் பணிகள், சைவ மன்றங்களின் பணிகள் அனைத்துமே தீபிகையில் பதிவாகியுள்ளன. தீபிகை தனது இறுதி ஆறு ஆண்டுகளில் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் Offical organ ஆகவே இருந்தது. சமாஜ ஆண்டு விழா நிகழ்ச்சிகளை விரிவாகவும் சிறப்புரைகளைத் தனியாகவும் வெளியிட்டது.

சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் மேடையாகவும் தீபிகை விளங்கியது. ''திருவாசகத்திற்கு மொழி பெயர்ப்பு தேவைதானா? ஜி.யு. போப் மொழி பெயர்ப்பு ஏற்கத் தக்கதா?'' என்ற கேள்விகளுக்கு முதல் இதழிலிலேயே தீபிகை தீர்வு காணுகிறது. இந்தக் கேள்வியின் அடிப்படையே தவறு என்று கூறிவிட்டு, போப் அவர்களின் மொழி பெயர்ப்பின் ஒரு பகுதியை வெளியிட்டு, ''எவ்வளவு உயர்வானது?'' என்று தீபிகை பாராட்டுகிறது.

"In the first place, it is an honour to our language that its treasures should be brought to the notice of the whole world and which we should duly recognize and properly appreciate. Besides, we will have to consider what great revival in sanskrit learning evenin India has been brought about by the publication of translations".

(சித்தாந்த தீபிகை – ஜூன 1897)

சாத்திரங்கள் எல்லாம் முறையாக தீக்கை பெற்று அதுவும் குரு மூலம் – கற்க வேண்டும் என்ற சிக்கலும் எழுந்தது. ''அதுவும் நடைமுறைக்கு இயலாது'' என்று வாதிட்டு சாத்திரங்களைப் பலரும் அறிய தீபிகை வழிகோலியது.

அடுத்த பிரச்சினை சித்தாந்தக் கருத்திலிருந்தே எழுந்தது. (1) பல்லூழிக் காலம் ஆனாலும் ஆன்மாக்கள் மோட்சத்தை அடையாது; (2) கடவுளின் வடிவம் சுத்த மாயையிலிருந்து வருவது என்பது தூத்துக்குடி பண்டிதர் பி.எம். முத்தையா பிள்ளை அவர்களின் வாதம். இரண்டு கருத்துக்களையும் தூத்துக்குடி சுப்பிரமணிய பிள்ளை என்பார் மறுத்தார். ''ஒவ்வொரு ஆன்மாவும் இறுதியில் வீடுபேறு அடையும்'' என்பதனை இருதரப்பினரும் ஒத்துக் கொள்கின்றனர். ''வீடுபேறடைந்த ஆன்மாக்கள் நீங்கலாக பல ஆன்மாக்கள் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும்'' என்பது முத்தையா பிள்ளையின் கருத்து ஆகும். ''ஆணவம், கன்மம், மலம் நீங்கிய ஆன்மாக்கள் வீடுபேறடையும். ஆனால் காலகாலத்திற்கும் மும்மலங்கள் நீங்காத ஆன்மாக்கள் இருந்து கொண்டே இருக்கும். வீடு பேறடைந்தவர்கள் எண்ணிக்கையும், அடையாதவர்கள் எண்ணிக்கையும், கழிந்த நாட்களும் இனி வர இருக்கின்ற நாட்களும் போலக் கணக்கிட முடியாதவை ஆகும் என்கிறது திருவருட்பயன். காலம் அழிகின்றபோது, அனைவரின் பாவங் களும் ஒரு சேர அழியும் என்கிறார் சோமசுந்தர நாயகர். அது நமக்குத் தெரியாது. எனவே அதனை ஆராய்வதில் பயனில்லை. காலம் உள்ளளவும் ஆன்மாக்களும் உண்டு'' என்று முடிவு சொல்கிறது தீபிகை.

இரண்டாவது சிக்கல்; ''மாயைதான் மலத்தைப் பற்றி'' (41.1) என்ற பாடலுக்கு திரு. முத்தையாபிள்ளை அவர்கள் கருத்து தவறு என்று காரண காரியத்தோடு விளக்கி முடிவு கட்டுகிறது தீபிகை. இதுபோல இரண்டு சித்தாந்த அறிஞர்கள் சித்தாந்தக் கருத்துக்கள் தொடர்பாக முரணுவதும், அதனை ஒட்டித் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவதும், அதற்கு ஒரு இதழ் விரிவான பதில் கொடுப்பதும் இன்று காணமுடியுமா? இதுவே தீபிகையின் வெற்றி ஆகும்.

சுருக்கமாகச் சொன்னால் சித்தாந்த தீபிகை வெளிவந்த 14 ஆண்டுகள் (21.6.1897 முதல் மே 1914 முடிய) சைவ சமய வரலாற்றில் ஒரு பொன்னேடு ஆகும்.

3

ஞானசித்தி

1908

''ஞான சித்தி'' 1908-ஆம் ஆண்டு ஜனவரியில் சி. தாமோதரம் பிள்ளையை ஆசிரியராகக் கொண்டு, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தது. அக்கால இலங்கையில் நிலவிய சூழ்நிலைக்கேற்ப கிறித்தவ மத மாற்றத்தை எதிர்த்துப் பல கட்டுரைகளைத் தாங்கி வந்துள்ளது. 12 பக்கங்களைக் கொண்டது.

Vol.I - No.1 - இல் (1908 ஜனவரி)யில் சைவபரிபாலனம், சைவ சித்தாந்தம் ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன. ''கிறிஸ்த்துவரின் தமிழ் இரண்டாம் புத்தகம்'' கட்டுரையில் கிறிஸ்துவ பள்ளிகளில் இரண்டாம் வகுப்பில் உள்ள பாடப் புத்தகத்தில் ''விக்கிரக வழிபாட்டை'' இழிவு செய்யும் பாடத்தை எடுத்துக்காட்டி, ''இது போன்ற பள்ளிகளில் சேர்க்கிறீர்களே, சைவப்பள்ளிகளில் சேர்க்க வேண்டாமா'' என்று கண்டித்து எழுதப்பட்டுள்ளது.

Vol.I - No. 2 - இல் சிவம், ஆன்மா, வேதத்தின் உற்பத்தி, மறுபிறப்பு வாதம், புண்ணியகாலம் ஆகிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ''சைவ சமய விடுதிப் பெண்பள்ளிக்கூடம்'' என்ற கட்டுரையில் முதன் முதலாக பெண்களுக்காக சைவ சமயப்பள்ளி தொடங்கப்பட்டதைச் சுட்டிக் காட்டி கிறித்துவ பள்ளியில் சேர்த்தால் என்ன விபரீதம் என்று சுட்டிக் காட்டுகிறது. ''கிறிஸ்துவும் யோகோ வாவும் பரிபூரண வஸ்துவா?'' என்ற கட்டுரையில் ''இல்லை'' என்று முடிவு கட்டி ''இவர்களை வணங்க மனம் இசையுமா?'' என்று முடிகிறது.

Vol.I No. 3 - இல் கடவுள் வழிபாடு, ஆன்மா, புண்ணியகாலம், மறுபிறப்பு வாதம் ஆகிய கட்டுரைகளும், பெண்கள் பக்கம், சமாச்சாரம் என்ற செய்திகள் பக்கமும் இடம் பெற்றுள்ளன. ''நித்திய மோக்ஷமும் நித்திய நரகமும்'' கட்டுரையில் கிறிஸ்துவர்கள் நித்திய மோக்ஷம் நித்திய நரகம் உண்டு என்று கூறுவதைக் காரணங்களுடன் மறுக்கிறது. ''மானிப்பாய்க் கிறிஸ்துவ ஆஸ்பத்திரி'' என்று கட்டுரையில் அந்த ஆஸ்பத்திரியில் செய்யப்படும் கிறிஸ்த்துவ பிரசாரம் பற்றிச் சுட்டிக்காட்டி அங்கு செல்லக்கூடாது என்று சொல்லப் பட்டுள்ளது.

Vol. I No. 4 - இல் நீதிவாக்கியங்கள், சிவோபாசனையின் கருத்து என்ன? அத்துவித வாதம், ஆன்மா, சந்தியா வந்தனம், மறுபிறப்பு ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன.

Vol.I No. 5 - இல் சைவக்கிரியைகளின் நோக்கம், திரிசூலம், தீர்த்தஸ்நானம், ஆன்மா, மாயாதத்துவ விளக்கம், ஆன்மா ஒன்றோ? பலவோ?, ஆன்ம இயல்பு, சீவான்மா, கடவுள் வணக்கம் விக்கிர காராதனம் ஆகுமா?, கழகத்திற்கு நற்போதனை ஆகிய கட்டுரைகள் இடம் பெற்று உள்ளன. ''பிராமணர் சிலர் செய்யும் அக்கிரமம்'' கட்டுரையில் சில பிராமணர் சிவபூஜை செய்வதை விட்டுத் தமக்கே தெரியாத சில கிரியைகளை வழுவுறச் செய்வதைக் கண்டிக்கிறது. ''யோசனையில்லாத பத்திராதிபர்'' கட்டுரையில் ஆத்மபோதினி பத்தராதிபர் ''ஆன்மா ஒன்று என்பதே வைதீக சைவசித்தாந்தம்'' என்று கூறுவதை மறுத்து ஆத்மாக்கள் எண்ணிலாதன என்பதே வைதீக சைவசித்தாந்தம் என்று முடிவு கட்டுகிறது.

Vol.I No. 6 - இல் ஆன்ம நிலை, ஆன்மா, மாயாதத்துவவிளக்கம், புண்ணிய காலம் ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ''அரசினர் சட்டமும் கிறிஸ்தவர் பள்ளிக் கூடப்பாடங்களும்'' கட்டுரை அரசினர் சட்டத்தை எடுத்துக்காட்டி, கிறிஸ்துவப் பள்ளிகளில் நடைபெறும் சைவதூவுணத்தைச் சுட்டி அரசுக்கு மக்கள் இத்தூஷணையைத் தெரிவிக்க வேண்டும் என உணர்த்துகிறது, ''சைவக் குருமாருள்ளே சிலர் செய்யும் பெருமோசம்'' கட்டுரை அந்திமக் கிரியையில் ஒருமுறை பயன்படுத்தப்பட்ட தேங்காய் முதலிய பொருள்களை மீண்டும் பயன்படுத்துதல் போன்ற செயல்களைக் கண்டிக்கிறது. ''பாதுகாவலனின் போலி வாசக நிரசனம்'' என்ற கட்டுரையில் இந்து சாதனம் இதழில் வெளியான ''விவிலிய நூலும் திரிபதார்த்த ஆதாரமுடையதே'' என்ற கட்டுரையை மறுத்து எழுதப்பட்டுள்ளது.

Vol.I No. 7 - இல் சைவசமய குரவர்கள், ஆலய வழிபாடு, மாயா தத்துவ வழிபாடு, தேவாலய தரும சொத்துக்களைக் காக்கும் சட்டம், உபதேச மஞ்சரி, கிறிஸ்துவின் வடிவம், பெண்கள் பக்கம், செய்திகள் ஆகியன இடம் பெற்றுள்ளன. ''கோயில்களில் நடக்கும் அநீதி'' என்ற கட்டுரையில் நிவேதனத்திற்காக அரிசி, உளுந்து கொண்டு வந்தால் அதனைச் சாதமாக்கிப் படைக்காமல் காலையிலேயே பட்டை போட்டு அதனையே மொத்தமாகப் படைத்தலைக் கண்டிக்கிறது''. ''ஆத்ம போதினி பத்திராதிபரை வினவும் வினாக்கள்'' கட்டுரையில் 13 வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு வினா ''சங்கராச்சாரியாருடைய மதமும் சைவ சித்தாந்தமும் ஒன்றா? வேறா?''.

Vol.I No. 8 - இல் சைவத்தனியரசு, ஆன்மா, ஆத்மாபிரமம் ஆகுமா? உலகு எதன் காரியம்?, பஞ்சபூத உற்பத்தி, பசுபாசங்களின் அநாதித்துவம், மாயா தத்துவ விளக்கம், இனிச் செய்ய வேண்டியது என்ன? ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன. ''குருட்டுவழி'' என்ற கட்டுரை கிறிஸ்துவர்கள் சைவ சமயத்தைக் குருட்டுவழி என்று கண்டித்து வெளியிட்ட புத்தகத்தை மறுக்கிறது.

Vol.I No. 9 - இல் ''கோயில்களில் உயிர்ப்பலியிடுதல்'' என்ற கட்டுரை யாழ்ப்பாணம் அராவி மாரியம்மன் கோயில் உயிர்ப்பலியைத் தடுத்து வேண்டுகோள் விடுக்கிறது.

Vol.I No. 10 - இல் ''இந்து சாதனத்தில் தோன்றிய சித்தாந்தியின் ஆன்ம நிலை'' கட்டுரையில் ''இந்து சாதனம்'' இதழில் வெளிவந்த கட்டுரையைக் கண்டித்து எழுதப்பட்டுள்ளது.

Vol.I No. 11 -''விவிலிய நூல்''

Vol.I No. 12 -''கிறிஸ்துமத மோக்ஷம்''

Vol.I No. 13 -'விவிலிய நூல்''

Vol.I No. 14 -''வைதிகக்கிரியையும் சைவக்கிரியையும் தம்முள் மாறுபட்டனவா?'' ''கிறிஸ்துவும் அவரது சரித்திரமும்'' ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

Vol.I No. 16 -''ஒரு பாதிரியாருக்கும் சைவருக்கும் நடந்த சம்பாஷணை''

Vol.I No. 19 - *(13.1.1909)* ''திருவாதவூரடிகள் புராண உரை ஆசங்கை'' ''சைவசித்தாந்த பரிபாலனம்'' ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன. இரண்டாவது கட்டுரை வேளாளர் சிலர் வேதாந்தம் படிப்பதாகக் கூறி குளறுபடி செய்வதைக் கண்டிக்கிறது.

Vol.I No.1 - இல் *(12.2.1909)* வெளியான தலையங்கம் இவ்வாறு செல்கிறது. ''இந்த ஒரு வருஷ காலத்தில் இதில் வெளிவந்த விஷயங்களினாலே அந்நிய சமயிகளான மாயாவாதிகள் கிறிஸ்தவர் முதலாயினோர் தலைமடங்கி ஒடுங்கிய செய்தி உலகறிந்த ஒன்றாகும். அப்புறமதவாதிகளாலே சைவ சமயிகள் அறிவில் எழுப்பப்பட்டிருந்த துராக்ஷேபங்கள் பல களையப்பட்டு ஒழிந்தன என்பதும் உண்மையாம்''.

Vol.I No. 2 - இல் ''கிறிஸ்தவ மார்க்கம் குடிபோதல்'', ஆன்ம போதினியின் 'ஆன்மா', இயேசுகிறிஸ்துவின் பரிமாணம்

CC0. In Public Domain. Digitization by eGangotri Gyaan Ngem. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எவ்வளவு? கிறிஸ்தவர் வணங்கும் கடவுள், ஆன்ம போதினியின் 'ஆன்மவிசாரம்', ஐந்தவத்தை, கடவுள் தன்மையும் கிறிஸ்துவின் பிறப்பு இறப்பும், கிறிஸ்துவின் கடவுட்டன்மை, கிறிஸ்து நாமம் எதனால் விசேஷம் ஆகும்?, கிறிஸ்துவினிடத்து கடவுட்டன்மை இருந்ததா? மனிதத்தன்மை இருந்ததா? தசகாரியம் ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன.

17.9.1911 வரையிலான இதழ்கள் பார்வையிடப்பட்டன.

4

சித்தாந்தம்

1912

சென்னை சைவசித்தாந்த மகா சமாஜத்தின் (இன்றைய சைவசித்தாந்தப் பெருமன்றம்) சார்பில் பூவை கல்யாண சுந்தர முதலியார் (மணவழகு) அவர்களை ஆசிரியராகக் கொண்டு நாற்பது பக்க அளவில் 1912 ஜனவரி முதல் ''சித்தாந்தம்'' மாத இதழ் வெளிவரத் தொடங்கி இந்நாள் வரை வெளி வந்து கொண்டிருக்கிறது. வெளியாகியுள்ள கட்டுரைகள் அனைத்தும் சைவசித்தாந்த தத்துவம் பற்றிய கன்மான கட்டுரைகள் ஆகும்.

1912-ஆம் ஆண்டு முதல் 1918-ஆம் ஆண்டு வரை பொ. முத்தையாபிள்ளை, ஜெ.எம். நல்லசாமி பிள்ளை, பால்வண்ண முதலியார், நாகை கோபாலகிருஷ்ணன், சி.எம். ரங்கசாமி நாயகர், ஷண்முக முதலியார், என்.எஸ். வைத்தியலிங்க முதலியார், எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, துடிசை கிழார் அ. சிதம்பரனார், நடேச தேசிகர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், சபாரத்தின முதலியார், பா. கண்ணப்ப முதலியார், சி. சங்கரநாயர், தி.சூ. சீனியாப்பிள்ளை, செந்திநாதையர், வ. சண்முக சுந்தர முதலியார், மோ. கந்தசாமி முதலியார், சுவாமி வேதாசலம், கா. ஆலால சுந்தரம் பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை, காஞ்சி நாகலிங்க முனிவர், கா. சுப்பிரமணிய பிள்ளை ஆகியோர் ஒன்றோ, பலவோ கட்டுரைகள் எழுதியிருந்தனர்.

மணவழகு என்கிற பூவை எஸ். கல்யாணசுந்தர முதலியார் 1912-ஆம் ஆண்டில் மகாவாக்யம், சரபோபநிஷத், 1913-ஆம் ஆண்டில் முண்டோக உபநிஷத்து, மாண்டூகியோபநிஷத்து, ஈசாவாஸ்யோபநிஷத்து, 1915-ஆம் ஆண்டில் கடோபநிஷத்து, ஜாபாலோப நிடதம், மைத்திராயணீயோபநிஷத்து, 1916-ஆம் ஆண்டில் தைத்திரீயோபநிஷத்து, 1917-ஆம் ஆண்டில் சாந்தோக்யோப நிஷத்து, 1918-ஆம் ஆண்டில் சாந்தோக்யோ பநிஷத்து ஆகிய தொடர் கட்டுரைகள் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது ஆகும். 1914-ஆம் ஆண்டில் பொ. முத்தையா பிள்ளை இருக்கு வேதம் பற்றிய தொடர் எழுதியிருந்தார்.

1934-ஆம் ஆண்டு முதல் 1942-ஆம் ஆண்டு வரை மா.வே. நெல்லையப்பப் பிள்ளை, அ.மு. பரமசிவானந்தம், திரு.வி.க, வை. சுந்தரேச வாண்டையார், எஸ். அனவரத விநாயகம்பிள்ளை, ஈ.த. இராஜேசுவரி அம்மாள், ஆறுமுக நாவலர், ம. பாலசுப்பிரமணிய முதலியார், அ. வரதரஞ்சையபிள்ளை, கா.பொ. இரத்தினம், மு. இராகவ ஐயங்கார், ச. சிவகுருநாதபிள்ளை, ச. சச்சிதானந்தம் பிள்ளை, பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார், துடிசை கிழார் அ. சிதம்பரனார், டி.வி. சதாசிவ பண்டாரத்தார், கீ. இராமலிங்க முதலியார், மு. அருணாசலம், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள், ஞானியார் சுவாமிகள், எஸ். வையாபுரி பிள்ளை ஆகியோர் எழுதியிருந்தனர்.

1934, 35, 36 ஆம் ஆண்டுகளில் ஔவை சு. துரைசாமி பிள்ளையின் ''ஞானாமிர்தம்'' தொடரும் 1936-ஆம் ஆண்டில் சிவஞான சித்தியார் தொடரும் வெளிவந்தன.

1951-ஆம் ஆண்டு முதல் 1960-ஆண்டு வரை ஞானியார் சுவாமிகள், கா. பொ. இரத்தினம், ந.ரா. முருகவேள், மா. சிவகுருநாத பிள்ளை, துடிசைகிழார் அ. சிதம்பரனார், எஸ். வையாபுரி பிள்ளை, கீ. இராமலிங்க முதலியார், நல். முருகேச முதலியார், செ. வேங்கடராமச் செட்டியார், சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், முரு. பழ. இரத்தினம் செட்டியார், சி.

அருணைவடிவேல் முதலியார் ஆகியோர் எழுதியிருந்தனர்.

1951, 52, 53-ஆம் ஆண்டுகளில் முத்து சு. மாணிக்க வாசக முதலியாரின் 'சிவப்பிரகாசம் – உரை' தொடராக வெளிவந்தது.

1961-ஆம் ஆண்டு முதல் 1970-ஆம் ஆண்டு வரை ந.ரா. முருகவேள், பாலூர் கண்ணப்ப முதலியார், சி. அருணைவடிவேல் முதலியார், முரு. பழ. இரத்தினம் செட்டியார், ஜி.எம். முத்துசாமி பிள்ளை, மா. இராசமாணிக்கனார், அம்பை சங்கரனார், கொ.நீ. சிங்காரவேலு, நெல்லை ஆர்.எஸ். இராமலிங்கம், பி.மா. சோமசுந்தர முதலியார் ஆகியோர் எழுதியிருந்தனர்.

மு. அருணாசலம் அவர்கள் 1965-ஆம் ஆண்டில் ''வடமொழி சிவஞான போதம் ஏன் வந்தது?'' 1969-ஆம் ஆண்டில் ரௌரவ ஆகமமும் சிவஞான போதமும்'' ஆகிய கட்டுரைகளை எழுதியிருந்தார்.

1971-ஆம் ஆண்டு முதல் 1980-ஆம் ஆண்டு வரையிலான இதழ்களில் பி.மா. சோமசுந்தர முதலியார், ச. கங்காதரன், இரத்தின. நவரத்தினம், மு. அருணாசலம், கொ.நீ. சிங்காரவேலு, சி. அருணைவடிவேல் முதலியார், ஆர்.எஸ். இராமலிங்கம், க. வச்சிரவேல் முதலியார், ந.ரா. முருகவேள், அம்பை சங்கரனார், நல். முருகேச முதலியார், கோ.மு. முத்துசாமி பிள்ளை, சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள், பெ. திருஞானசம்பந்தம், அழகரடிகள் ஆகியோர் எழுதியிருந்தனர்.

1977-ஆம் ஆண்டில் முரு. பழ. இரத்தினம் செட்டியார் ''மூல கன்மம் யாது?'' என்ற கட்டுரையும், 1982-ஆம் ஆண்டில் கு. வைத்யநாதன் ''விருப்பு வெறுப்பு கன்ம மூலமாகுமா?'' விருப்பு வெறுப்புகள் மாயா காரியம் ஆகுமா என்ற கட்டுரையும் எழுதியிருந்தனர்.

1981-ஆம் ஆண்டு முதல் 1990-ஆம் ஆண்டு வரையிலான இதழ்களில் க. வச்சிரவேல் முதலியார், நல் முருகேச முதலியார், க. கலியாணம், க.வெள்ளைவாரணம், அ. நாகலிங்கம், மறை திருநாவுக்கரசு, மா. இராசமாணிக்கனார், கீ. இராமலிங்கனார், பெ. திருஞான சம்பந்தன், சுவாமி வேதாசலம், ச. கங்காதரன், மு.பெ. சத்தியவேல் முருகன், கு. சுந்தரமூர்த்தி, ச. சச்சிதானந்தம் பிள்ளை, தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், வ.ஆ. தேவசேனாபதி, கா.சு. பிள்ளை, சிவக்கவிமணி சி.கே.எஸ், ஆதி முருகவேள் ஆகியோர் எழுதியிருந்தனர்.

மு. அருணாசலம் 1984-ஆம் ஆண்டில் குசராத்தில் சிறுத்தொண்டர், பெரியபுராண விரிவுரையின் காலம் 1985-ஆம் ஆண்டில் பள்ளி கொண்ட சிவபெருமான், கல்வெட்டுகளில் திருவாசகம் ஆகிய கட்டுரைகளையும், முரு. பழ. இரத்தினம் செட்டியார் 1987-ஆம் ஆண்டில் முயற்சிக்கும் ஊழ்தான் காரணமா? கட்டுரையும், 1989-ஆம் ஆண்டில் அ. சோமசுந்தரம் செட்டியார் ''முத்தி நிலையில் ஆணவத்தின் தன்மை'' கட்டுரையும் எழுதியிருந்தார்.

1991-ஆம் ஆண்டு முதல் 2000 -ஆம் ஆண்டு வரையிலான இதழ்களில் மா. அமுதலிங்கனார், ந.ரா. முருகவேள், அம்பை சங்கரனார், கு. வைத்தியநாதன், ஆதிமுருகவேள், மு. அருணாசலம், ஆ. சிவலிங்கனார், ஆ. சுப்பிரமணியன், வை. இரத்தினசபாபதி, கோமதி சூரியமூர்த்தி ஆகியோர் எழுதியிருந்தனர்.

5

சைவம்

1915

''சைவம்'' திங்கள் இதழ் 1915 -ஆம் ஆண்டு ஜனவரி முதல் சென்னை சிவனடியார் திருக்கூட்டத்தார் சார்பில் இருக்கம் ஆதிமூல முதலியார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு பதினாறு பக்கங்களுடன் வெளிவந்தது. 1924-ஆம் ஆண்டு ஏப்ரல் வரையிலான இதழ்கள் பார்வைக்குக் கிடைத்தன. சமயக் கட்டுரைகளோடு பாடசாலையில் சைவ சமய போதனை, உண்மைச் சைவம் உலகத்தில் உண்டா? சைவப் பகைவர் சைவர்களே! போன்ற அன்றாட பிரச்சினைகளைக் கொண்ட தலையங்கங்களையும் கட்டுரைகளையும் தாங்கி சைவ செய்தித்தாளாக ஒரு அளவில் மிளிர்ந்தது.

CC0. In Public Domain. Digitization by eGangotri Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருமாளிகை சீர்காழியில் இப்பொழுது இரட்டைத்தெரு என்று வழங்கும் தெருவில் பதினொன்றாவது எண்ணுள்ள வீடாய்க் குன்றியுள்ளது என்றும், அதில் ஒரு தெலுங்கு பிராமணர் வாழ்கின்றார் என்றும் சச்சிதானந்தம் பிள்ளை குமரன் பத்திரிகையில் எழுதியிருந்ததை 1924-ஆம் ஆண்டு தொகுதியில் மேற்கோள் காட்டப் பட்டுள்ளது. ஞானசம்பந்தர் பரம்பரையில் கடைசியாக வந்தவர் சுமார் 12 வருடங்களுக்கு முன் சிவபதம் எய்தினார் என்றும், அவர் இருக்கும் வரை திருமுலைப்பால் உற்சவத்தின் போது ஞானசம்பந்தர் திருவுருவம் எழுந்தருளப் படும் என்றும், அவருக்குப் பிறகு நின்று விட்டது என்றும் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

Typed 12 years ago?

6

செந்தமிழ்ச் செல்வி

1923

செந்தமிழ்ச் செல்வி திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் 1923-ஆம் ஆண்டு ஜனவரி -பிப்ரவரியிலிருந்து திங்கள் வெளியீடாக இன்று வரை வெளியிடப்பட்டு வருகின்றது. இலக்கியக் கட்டுரைகளையே பெரும்பாலும் தாங்கி வந்தாலும் சைவ சமயக் கட்டுரைகளும் நிரம்ப இடம் பெற்றுள்ளன. கா.சு. பிள்ளை, சச்சிதானந்தம் பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், துடிசை கிழார் அ. சிதம்பரனார், மா.வே. நெல்லையப்ப பிள்ளை, பண்டித மணி மு. கதிரேசஞ் செட்டியார், பா.வே. மாணிக்க நாயகர், மணி. திருநாவுக்கரசு முதலியார் ஆகியோர் முதல் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

1923-ஆம் ஆண்டு முதல் *1955*-ஆம் ஆண்டு வரையிலான இதழ்களில் சீர்காழி பி.எ. முத்து தாண்டவராய பிள்ளை, பா. கண்ணப்ப முதலியார், மா.வே. நெல்லையப்ப பிள்ளை, ச. சச்சிதானந்தம் பிள்ளை, அ. வரத நஞ்சையபிள்ளை, வ.சு. செங்கல்வராய பிள்ளை, சி.கே. சுப்பிரமணியமுதலியார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், இ.மு. சுப்பிரமணியபிள்ளை, சபாபதி நாவலர், மறைமலையடிகள், வெ.பா. சுப்பிரமணிய முதலியார், செப்பறை சிதம்பரசுவாமிகள், ஜெ.எம். நல்லசாமிபிள்ளை, அனவரத விநாயகம் பிள்ளை, கா.சு.பிள்ளை, தி. நீலாம்பிகை அம்மையார், மயிலை சீனி வேங்கடசாமி, எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை, அ.மு. சரவண முதலியார், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், டி.வி. சதாசிவப் பண்டாரத்தார், சோமசுந்தர தேசிகர், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், வை. சுந்தரேச வாண்டையார், மா.இராசமாணிக்கனார், முத்து சு. மாணிக்க வாசக முதலியார், ப. இராமநாதம் பிள்ளை, ஔவை சு. துரைசாமி பிள்ளை, வை. சுந்தரேச வாண்டையார், க. வெள்ளை வாரணனார், சோமசுந்தர நாயகர் ஆகியோர் எழுதியிருந்தனர்.

கா.சு. பிள்ளையின் *(1923-ஆம் ஆண்டில்)* சிவாலயங்களில் சுமார்த்தக் கலப்பால் நிகழும் இடையூறுகள், திருநான்மறை விளக்கம் – *10* கட்டுரைகள், உள்ளிட்ட பல கட்டுரைகளும், வாலையானந்த சுவாமிகளின் *(1926-27-ஆம் ஆண்டுகளில்)* திருவள்ளுவர் சித்தாந்த சைவர் என்ற கட்டுரைத் தொடரும், *(1929-30-ஆம் ஆண்டுகளில்)* மா. பால சுப்பிரமணிய முதலியாரின் சைவ சித்தாந்தமும் மேனாட்டு அறிவியல் நூல்களும் கட்டுரையும், இவையல்லாமல் எந்நாட்டவர்க்கும் இறையே தென்னாடுடைய சிவன் என்ற தனிக்கட்டுரையும் வெளிவந்தன. இவையல்லாமல் தேவார உரை, திருமந்திர உரை, சிவஞானபோதக் கருத்து, தொடர்களை மா.வே. நெல்லையப்பபிள்ளை எழுதினார்கள்.

1926-1927-ஆம் ஆண்டு முதல் இதழாசிரியர் கூட்டத் தலைவராக கா. சு. பிள்ளையும், *1932-33*-ஆம் ஆண்டு முதல் மா.வே. நெல்லையப்பப் பிள்ளையும், *1939-40*-ஆம் ஆண்டு ந.மு. வெங்கடசாமி நாட்டாரும், *1948-49*-ஆம் ஆண்டு ப. சிதம்பரம் பிள்ளையும் பணியாற்றினர்.

1943-ஆம் ஆண்டுக்குப் பிறகு இதழ் சிலகாலம் நின்று மீண்டும் *1947* -ஆம் ஆண்டு செப்டம்பரிலிருந்து வெளி வரலாயிற்று.

1956-57-ஆம் ஆண்டிலிருந்து 1994- 95-ஆம் ஆண்டு வரையிலான இதழ்களில் ப. இராமநாதம் பிள்ளை, வ.சு. செங்கல்வராய பிள்ளை, பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், மறைமலையடிகள், ஔவை சு. துரைசாமி பிள்ளை, மா. சண்முக சுப்பிரமணியன், வீ.ப.கா. சுந்தரம், ஆ. சிவலிங்கனார், அ. ஆனந்தராசன், இரா. கலைக்கோவன், சொ. சிங்கார வேலன், சிவ. மங்கையர்க்கரசி ஆகியோர் எழுதியிருந்தனர்.

1968-69-ஆம் ஆண்டுகளில் அணுவில் ஆனந்தக் கூத்து கட்டுரையும், 1976-ஆம் ஆண்டு முதல் 1979-ஆம் ஆண்டு வரை அழகரடிகளின் சிவஞானபோத ஆராய்ச்சிக் கட்டுரைத் தொடரும், 81-82ஆம் ஆண்டுகளில் குடைவரைக் கோயில்கள் பற்றிய தொடரும், 1986-ஆம் ஆண்டு முதல் இரா. கலைக்கோவனின் கோயில்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் வெளி வந்தன.

7

சிவநேசன்

1927

இதழ் நடத்துவது என்பதே சிரமமான செயல். அதுவும் சமய இதழ் நடத்தினால் வாங்குவோரும் குறைவாகவே இருப்பர். பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக வாரந்தோறும் சமய இதழ் நடத்துவது என்றால் அது பெருஞ்சாதனையே. கட்டுரைகள் பெறுவதும் கடினம், விற்பதும் சிரமம், விநியோகிப்பதும் சுமை. இந்தச் சாதனையை 1927-ஆம் ஆண்டில் நிகழ்த்தியது ''சிவநேசன்'' இதழ் ஆகும்.

''சிவநேசன்'' இதழ் குன்றக்குடிக்கு அருகில் உள்ள பலவான் குடியிலிருந்து பிரபவ ஆண்டு ஆவணிமாதம் பதினைந்தாம் நாளிலிருந்து ஒவ்வொரு திங்கட்கிழமையும் சிவநேசன் திருக்கூட்டத்தின் சார்பில் சிவநேசன் அச்சகத்திலிருந்து வெளிவரலாயிற்று. பனிரண்டு பக்கங்களையும், செய்தித்தாள் (சற்று சிறிய அளவில்) வடிவையும் கொண்டுள்ளது. ஆண்டுச் சந்தா மூன்று ரூபாய் ஆகும். இதன் ஆசிரியர் ஸ்ரீராம். கு. ராம. இராமசாமி செட்டியார் ஆவார்.

1932-ஆம் ஆண்டு முதல் ''சிவநேசன்'' 56 பக்கங்களில் ஆனந்தவிகடன் போல வடிவம் பெற்று மாத இதழாக வெளிவரலாயிற்று. 1937-ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் 1938 -ஆம் ஆண்டு ஜனவரி ஐந்து மாதங்கள் இந்த இதழ் வெளிவரவில்லை.

1942-ஆம் ஆண்டு மே வரை 140 இதழ்களே பார்வைக்குக் கிடைத்தன. இதற்குப் பிறகும் வெளிவந்திருக்கலாம்.

ஒவ்வொரு இதழிலும் தலையங்கம், 2, 3, கட்டுரைகள், மணிவாசகர் சங்க, சிவநேசர் திருக்கூட்ட ஆண்டு விழா உரைகள் ஆகியவற்றை உள்ளடக்கமாக இவ்விதழ் பெற்று வந்தது. காரைக்குடி சொக்கலிங்க ஐயாவின் பல கட்டுரைகள், வாலையானந்த சுவாமிகளின் சித்தாந்தப் பட விளக்கத் தொடர் ஆகியன பல இதழ்களில் வெளி வந்தன. ''குணமும் குறியும் இல்லாக் கடவுளுக்குக் குணமும் குறியும் ஏன்?'' என்று குமரன் இதழ் எழுப்பிய கேள்வி வாதப் பிரதிவாதங்களாகத் தொடர்ந்தன. அதேபோல பெரியாரின் நாத்திகக் கருத்துக்களும் சில இதழ்களில் தொடர்ந்து மறுக்கப்பட்டன. சுருங்கச் சொல்லின் ''சிவநேசன்'' அக்கால கட்ட செட்டி நாட்டுப்பகுதி சைவ சமய வரலாற்றினைக் காட்டும் கண்ணாடி எனலாம்.

8

ஞானசம்பந்தம்

1941

அறுபது ஆண்டுகளாகச் சைவசித்தாந்த சாத்திரங்கள் பற்றியும், திருமுறைகளைப் பற்றியும் அவ்வக்காலகட்டத்தில் வாழ்ந்து வந்த சைவ அறிஞர்களைக் கொண்டு கனமான கட்டுரைகளை இன்றளவும் நீர்த்துப் போகாமல் வெளியிட்டுவரும் இதழ் தருமையாதீனத்திலிருந்து வரும் ''ஞானசம்பந்தம்'' ஆகும்.

1941-ஆம் ஆண்டு டிசம்பரில் முதல் இதழ் வெளிவந்தது. 1941-42ஆம் ஆண்டிலிருந்து 1970-71-ஆம் ஆண்டு வரையிலான இதழ்களில் கே.எம். வெங்கடராமையா, ச. தண்டபாணி தேசிகர், அ. வரதநஞ்சைய பிள்ளை, செப்பறை சுவாமிகள், இராம

கோவிந்தசாமி பிள்ளை, ந. சிவப்பிரகாச தேசிகர், சி.கே. சுப்பிரமணிய முதலியார், பாலகவி வே. இராமநாதஞ் செட்டியார், முத்து சு. மாணிக்கவாசக முதலியார், ஆ. ஈசுவர மூர்த்தி பிள்ளை, ம. பாலசுப்பிரமணிய முதலியார், ஜெ.எம். நல்லசாமி பிள்ளை, சபாரத்தின முதலியார், பொ. முத்தையா பிள்ளை (இத்துணை பேரும் முதல் ஆண்டிலேயே இரண்டுக்கு மேற்பட்ட கட்டுரைகள் எழுதியுள்ளனர்) ஔவை துரைசாமி பிள்ளை, மா. இராசமாணிக்கனார், ஜி. சுப்பிரமணிய பிள்ளை, க. வச்சிரவேல் முதலியார், சுந்தரேச வாண்டையார், சச்சிதானந்தம் பிள்ளை, த.ச. மீனாட்சி சுந்தரம், பு.சி. புன்னைவனநாத முதலியார், குன்றக்குடி அடிகளார், தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், சி. இராமலிங்கம், கண்ணப்ப முதலியார், துரையங்கனார், ரா.பி. சேதுப்பிள்ளை, நா. பார்த்தசாரதி, மு. அருணாசலம், சாமிநாத சிவாசாரியார், தெ.பொ.மீ, கீ. இராமலிங்கனார், சொ. சிங்காரவேலன், ப. சுந்தரேசனார், வெங்கடராம செட்டியார், நல். முருகேச முதலியார், தா.ம. வெள்ளைவாரணம், சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், கு. சுந்தரமூர்த்தி, கி.வா. ஜகந்நாதன், ப. நீலா, வி.சா. குருசாமி தேசிகர், அ. கலிய பெருமாள் ஆகியோர் எழுதியிருந்தனர்.

1941-ஆம் ஆண்டில் சி.த. நாராயண சுவாமியின் தருக்க சங்கிரக விளக்க வினா விடை தொடரும், 1942-ஆம் ஆண்டில் ஜெ.எம்.என் உட்பட 14 அறிஞர்களின் ஆங்கிலக் கட்டுரைகளும், Puranic Rudra and Vedic Rudra கட்டுரையும், 1943-ஆம் ஆண்டில் 4 ஆங்கிலக் கட்டுரைகளும், 1947-ஆம் ஆண்டில் பாலகவி வே. இராமநாதஞ் செட்டியார் ''சோடச கலாப்பிரசாத சட்கம்'' கட்டுரைகளும் 1962, 63, 64, 65-ஆம் ஆண்டுகளில் சுவாமிநாத சிவாசாரியாரின் ஸஹஸ்ரநாமம் கட்டுரைத் தொடரும், 1967, 68, 69, 70, 71-ஆம் ஆண்டுகளில் சிவாகம ஸார ஸர்வஸ்வம் (7 கட்டுரைகள்) தொடரும், 1970, 71, 72-ஆம் ஆண்டுகளில் ஜி. வரதராஜனின் திருமந்திரத் தொடரும், 1970, 71-ஆம் ஆண்டுகளில் திருவருட்பயன் – உரை தொடரும் வெளிவந்தன.

1973-74-ஆம் ஆண்டிலிருந்து 1999-2000-ஆம் ஆண்டு வரையிலான இதழ்களில் கு. சுந்தரமூர்த்தி, எஸ். மகராஜன், சொ. சிங்காரவேலன், ந.ரா. முருகவேள், கி.வா. ஜகந்நாதன், பெ. திருஞானசம்பந்தன், நஜன், இரா. செல்வக்கணபதி, ந. சஞ்சீவி, ப. நீலா, வி.சா. குருசாமி தேசிகர், மு. சிவச்சந்திரன், மு. வைத்தியநாதன், கே. சந்தானராமன், ம. சிவசம்பு, ஆ. ஆனந்தராசன், இரா. கலைக்கோவன், பி.டி.ஆர். கமலதியாக ராஜன், தா.குருசாமி தேசிகர், தேவகி முத்தையா, வி.சா. பாலசுப்பிரமணியம், தெ.ஞானசுந்தரம், என். ராமகிருஷ்ணா, அடிகளாசிரியர், இரா. நாகசாமி, கா. நெடுஞ்செழியன், சிவசம்பு, கோமதி சூரியமூர்த்தி ஆகியோர் எழுதியுள்ளார்.

1973, 74, 75 -ஆம் ஆண்டுகளில் சி. அருணை வடிவேல் முதலியாரின் சிவஞான சித்தியார் உரைத் தொடரும், 1974-ஆம் ஆண்டில் ச. தண்டபாணி தேசிகரின் ''சிவதருமோத்தரம்'' தொடரும், 1979-ஆம் ஆண்டு முதல் 1988-ஆம் ஆண்டு வரை கே. சந்தானராமனின் ''அபிராமி அந்தாதி'' தொடரும், 1989, 90-ஆம் ஆண்டுகளில் ப. நீலாவின் ''மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்'' தொடரும், 1988 -ஆம் ஆண்டு முதல் 2000 -ஆம் ஆண்டு வரை மு. சிவச்சந்திரனின் ''போதமும் சித்தியும்'' தொடரும் வெளிவந்தன. 1978-ஆம் ஆண்டில் சொ. சிங்காரவேலன் ''திருஞானசம்பந்தர் இயற்பெயர் யாது?'' கட்டுரையில் விரிவான ஆய்வுக்குப் பின்னர் ''பிள்ளையார்'' என்று முடிவு கட்டுகிறார். 1984-85-ஆம் ஆண்டில் இதழ்வழி சைவசமயப் பயிற்சிப் பாடமாக வேதம், ஆகமம், புராணம், சித்தாந்த சாத்திரங்கள் பற்றிய கட்டுரைகள் வெளிவந்தன. 1984-85-ஆம் ஆண்டில் என். சேதுராமன் நால்வர் காலத்தையும், திருமுறைகள் வகுத்த காலத்தையும் முடிவு கட்டுகிறார்.

9

தொண்டன்

1946

''தொண்டன்'' இந்துமத சீர்திருத்த மாத வெளியீடு என்ற தலைப்பினைத் தாங்கி

1946-ஆம் ஆண்டில் முதல் இதழ் வெளியானது. ஆசிரியர் நாகர்கோயில் கெ. ஆறுமுக நாவலர்; பக்கம் – 80; விலை 8 அணா.

பொதுவாக இந்து சமயம் பற்றிய கட்டுரைகளைத் தாங்கி வந்தது. பனிரெண்டு கட்டுரைகளில் மூன்று கட்டுரைகள் சைவ சமயக் கட்டுரைகள் ஆகும். பல கட்டுரைகள் காலத்துக் கேற்றவையாகவும், உறங்குகின்ற சைவர்களைத் தட்டி எழுப்புவதாகவும் உள்ளன. இதழாசிரியர் ஆறுமுக நாவலர் (யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் வேறு) செய்து வந்த மதமாற்ற முயற்சிகளும் இடம் பெற்றுள்ளன. தலைப்புக்கேற்ற வாறு உண்மையிலேயே இந்து மத சீர்திருத்த வெளியீடு ஆகும்.

முதல் இதழில் (விய ஆண்டு கார்த்திகை மாதம்) ச. தண்டபாணி தேசிகரின் ''மதம் முன்னேற்ற முட்டுக்கட்டையா?'', சுத்தானந்த பாரதியாரின் ''இந்து மதம்'' கவிதை, சி.எம். இராமச்சந்திரன் செட்டியாரின் ''பகுத்தறிவும் சமய அறிவும்'', சேரமான் பெருமாள் நாடகம், பாலகவி வே. இராமநாதன் செட்டியாரின் ''சமய வாழ்வு'' தமக்கையார் தவம், இந்துமதமும் மந்திரி சபையும், இந்து முஸ்லிம் போர் ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன.

இரண்டாம் இதழில் இந்து மத திருப்பள்ளியெழுச்சி என்ற தலைப்பில் தலையங்கம், படம், கவிதை, வெளி வந்தது. மூன்றாம் இதழில் ஆலயப் பிரவேசமும் அரசாங்க சட்டமும் என்ற தலையங்கமும், சைவ நிலை என்ற கட்டுரையும் வெளிவந்தன. ஏழாம் இதழில் ''சமய சந்தேகத்தெளிவு'', ஒன்பதாம் இதழில் ஔவை சு. துரைசாமி பிள்ளையின் ''இன்னுமா உறக்கம்?'' இதழ் 11இல் ''இந்து மதம் இருப்பதா? இறப்பதா?'' ''வீரசவர்க்காரின் எச்சரிக்கை'', இந்து ஸ்தானத்திற்கு ஏற்பட்ட இழிநிலைகளும் அதற்குக் காரணங்களும்'' ''தமிழ்நாட்டைத் தாழ்த்த இடம் தரமாட்டோம்'', ''பள்ளியில் மதபோதனை'', ''நாம் யார்'', ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன. இதழ் 12இல் ''தமிழ்நாட்டுச் சமயத்திற்குத் தற்காப்பு யார்?'' என்ற கட்டுரையில் திராவிட கழகத்தினரைத் தாக்கி எழுதப்பட்டுள்ளது. ''வீர இந்துக்களே ஒன்றுபடுங்கள்'' என்ற அறைகூவல் வேறு தனியாக வந்துள்ளது.

மலர் 2 இதழ் 1-இல் (1.3.1948) ''மறுபடியும் தோன்றிடுவாய்'' மா. இராசமாணிக்கனாரின்''சமயவளர்ச்சி'', மிஷினரி அவசியம்'', பெண்கள் முன் வர வேண்டும்'' கட்டுரைகளும், மலர் 2 இதழ் 2-இல் ''திரைப்படத்தில் தெய்வ நிந்தனை'', 2, 3-இல் ''இப்படியானால் சமயம் எப்படி வாழும்?'' இந்து மக்களுக்கோர் எச்சரிக்கை'', 2.4-இல் ''மறுமதமாற்றம்'' ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன. மலர் 2 இதழ் 5-இல் (1.7.1948) எஸ். சச்சிதானந்தம் பிள்ளையின் ''சைவத்தின் மறுமலர்ச்சி'', ''திராவிட ஸ்தானா'', ''சமயத்திற்கு நேர்ந்திருக்கும் கொள்கை நோய்கள்'' ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன. ''திராவிடநாடு வினாக்கட்கு விடை'' என்று தொண்டன் ஆறுமுக நாவலர் 81 கேள்விகளுக்கு விடை தந்துள்ளார். மலர் 2 இதழ் 12-இல் ''இந்து மதத்திற்கு வந்தது விபத்து'' என்ற கட்டுரை வெளிவந்தது.

மலர் 4 இதழ் 8-இல் (17.9.1950) ''சுதந்திர நாட்டில் இந்து மதத்திற்கு மாத்திரம் தானா சுதந்திரம் இல்லை'', ''நெடுஞ்செழியனார் நினைவுக்கு'' ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன.

தொண்டன் இதழ்களில் ''சிவஞான முனிவர், திருநாவுக்கரசர் பெரிய புராணம் போன்ற கட்டுரைகளும் இடம் பெற்று உள்ளன. அக்கட்டுரைகள் பிற சைவ இதழ்களிலும் வரக்கூடியவையே, ''தொண்டனின்'' தனித்தன்மையை முதன்மைப் படுத்தவே விழிப்புணர்வுக் கட்டுரைகளைப் பற்றி மட்டும் ஈண்டு எடுத்துரைக்கப்பட்டது.

10

குமரகுருபரன்

1950

''குமரகுருபரன்'' இதழ் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் வெளியீடாக 1.1.1950 -ஆம் ஆண்டிலிருந்து வெளிவரலாயிற்று. ''ஞானசம்பந்தம்'' இதழ் தத்துவ விளக்கமாக அமைய ''குமரகுருபரன்''

இலக்கியக் களஞ்சியமாக மலர்கிறது. குறிப்பாக ஸ்ரீ காசிமட குரு முதல்வரான குமரகுருபரனின் நூல்களை விளக்குவ தாகவும் அமைந்துள்ளது. கட்டுரை ஆசிரியர்களின் பெயரை ஒரு முறை பார்த்தாலே (டி.கே.சி, மகராஜன், தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்) இதழின் போக்கு புரியும்.

1950-ஆம் ஆண்டு முதல் 1969-ஆம் ஆண்டு வரையிலான இதழ்களில் டி.கே. சி.எஸ். மகராஜன், க. சிவராமன், பட்டுச் சாமி ஓதுவார், முத்து சு. மாணிக்கவாசக முதலியார், தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், ஜி. சுப்பிரமணிய பிள்ளை, ஔவை சு. துரைசாமி பிள்ளை, மு. அருணாசலம், கிருபானந்த வாரியார், கி.வா. ஜகந்நாதன், அ.ச. ஞானசம்பந்தன், கே.எம். பாலசுப்பிரமணியன், வ.சு. செங்கல்வராய பிள்ளை, பாலகவி வே. இராமநாதஞ் செட்டியார், தெ.பொ.மீ, வை. சுந்தரேச வாண்டையார், பாலூர் கண்ணப்பமுதலியார், கு. சுந்தரமூர்த்தி, ச. சச்சிதானந்தம் பிள்ளை, வ. ஆ. தேவசேனாபதி, டி.பி. சித்தலிங்கையா, தா.ம. வெள்ளை வாரணன், இ.எஸ். வரதராஜையர், பெ. திருஞானசம்பந்தம், சொ. சிங்காரவேலன், ஆகியோர் எழுதியிருந்தனர்.

1951,52, 53-ஆம் ஆண்டுகளில் பண்டார மும்மணிக்கோவை, 1953,54,55,56,57-ஆம் ஆண்டுகளில் சிதம்பர மும்மணிக் கோவை, 1957,58,59,60,61,62,63,64-ஆம் ஆண்டுகளில் சிதம்பரச் செய்யுட்கோவை, 1965-ஆம் ஆண்டுகளில் தில்லைச் சிவகாமி இரட்டை மணிமாலை தொடர்களை முத்து சு. மாணிக்கவாச முதலியாரும், 1953, 54-ஆம் ஆண்டுகளில் நாவுக்கரசரும் நமச்சிவாயமும், 1959, 60-ஆம் ஆண்டு களில் திருக்கோவையார் ஆங்கில மொழி பெயர்ப்பு தொடர்களை ஜி. சுப்பிரமணிய பிள்ளையும், 1953-ஆம் ஆண்டு திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ், 1954-ஆம் ஆண்டில் பரிபாடலில் செவ்வேள் தொடர்களை கே.எம். வெங்கடராமை யாவும், 1957-ஆம் ஆண்டில் திருவாரூர் நான்மணி மாலை, 1958-ஆம் ஆண்டில் கந்தர் கலிவெண்பா, 1960,61-ஆம் ஆண்டு களில் மீனாட்சி பிள்ளைத்தமிழ், 1962-ஆம் ஆண்டில் மதுரைக் கலம்பகம், 1964-ஆம் ஆண்டில் நீதிநெறி விளக்கம், 1965,66, 67-ஆம் ஆண்டுகளில் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் ஆகிய தொடர்களை பாலகவி வே. இராமநாதஞ் செட்டியாரும், 1959-ஆம் ஆண்டு முதல் 1971-ஆம் ஆண்டு வரை ‘‘திருமந்திரம்’’ – ஆங்கில மொழி பெயர்ப்பு தொடரை பா. நடராஜனும், 1959, 60-ஆம் ஆண்டுகளில் ‘‘திருக்கோவையார்’’ – ஆங்கில மொழி பெயர்ப்பு தொடரை ஜி. சுப்பிரமணிய பிள்ளையும், 1961-ஆம் ஆண்டு முதல் 1971-ஆம் ஆண்டு வரை "Hymns of Saivite Saints" தொடரை Kingsburyம், 1965,66-ஆம் ஆண்டில் ‘‘சுந்தரர் அற்புதத் திருப்பதிகங்கள் – ஆங்கில மொழி பெயர்ப்பு’’ தொடரை டி.வி. சித்தலிங்கை யாவும் எழுதியுள்ளனர்.

மலர் 11 இதழ் 6-இல் (1960) சபாபதி சுவாமிகள் ‘‘மக்கீச்சுரம்’’ என்ற கட்டுரையில் குடந்தையில் வீரசைவ ஞானபீடத்தில் ஏறிய மல்லேசர் என்பவர் சிவத்தல யாத்திரை செய்து மக்கா நகரை அடைந்தார். அது சிவத்தலமே என்று வீரசிங்காதன புராணம் கூறுகிறது. ஞானசம்பந்தர் தேவாரத்திலும் ‘‘நாடக மாடிடம்’’ என்ற பாடல் (1.7.18) மக்கீச்சுரம் பற்றி குறிப்பிடு கின்றது என்று எழுதி யுள்ளார்.

‘‘பூருவந் தன்னின் மக்க ஈச்சுரம் எனப் பொலிந்தே
மேரு ஒப்பென விளங்கிடும் கோயில் பன்வியதாய்ச்
சாருமால் இது சான்று நம் தம்பிரான் சபைமுன்
பாரிதாமணி தூக்கிடப்பட்டுறுபரிவால்’’

(வீரசிங்காதன புராணம் – மழைய மல்லேசுரக்சருக்கம் – 84-ஆம் செய்யுள்)

மெக்கா மசூதியில் சிவலிங்கம் இருப்பதாக அஸ்ஸாம் பாராளுமன்ற உறுப்பினர் பி.ஸி. பருவா லோக்சபாவில் தெரிவித்த செய்தி வந்துள்ளது. இதுவல்லாமல் இலண்டன் செயின்ட்பால் கதீட்ரலில் சிவலிங்கம் இருப்பதாக "Rajput" இதழில் வெளிவந்த செய்தியும் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

இந்த இருபது ஆண்டுகளும் 96 பக்க அளவில் பொங்கல் மலர்கள் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

1970-ஆம் ஆண்டு முதல் 2000-ஆம் ஆண்டு வரையிலான இதழ்களில் பாலகவி வே. இராமநாதன் செட்டியார், கிருபானந்த வாரியார், பா.நடராஜன், கே.எம். வேங்கடராமையா, கு.சுந்தரமூர்த்தி, டி.பி. சித்தலிங்கையா, அ.ச.ஞானசம்பந்தன், ச. தண்டபாணி தேசிகர், க. வச்சிரவேல் முதலியார், ந.ரா. முருகவேள், சா. கணேசன், எஸ். ராமநாதன், கி.வா. ஜகந்நாதன், கீரன், மு. அருணாசலம், அருணை வடிவேல் முதலியார், சொ.சொ.மீ. சுந்தரம், கோமதி சூரிய மூர்த்தி, ஞானாகுலேந்திரன், ஆனந்தராசன், தமிழண்ணல், தெ. முருகசாமி, பனசை சாமிநாதன், வி.சா. பாலசுப்பிரமணியன், டி.என். அருணாசலம், தா. குருசாமி தேசிகர், மு. சுந்தரேசம் பிள்ளை, தா. ஈசுவரபிள்ளை ஆகியோர் எழுதியிருந்தனர்.

அலங்காரம் காட்டும் அழகு, சிதம்பரச் செய்யுள் கோவை, மணிவாசகர் உவமை, மதுரையின் மாண்பு, திருமந்திரம், பண்டார மும்மணிக் கோவை *(1970)*, காசிக்கலம்பகம், திருமந்திரம், திருமுறைச் சொல் விளக்கம், Hymns of Saivite Saints *(1971)*, அருள் மொழியமுது, அலங்கார நாயகன், மூன்றாம் திருமுறையில் முதல் திருப்பாடல்கள் (தா.ம. வெள்ளை வாரணம்) திருவுந்தியார் (பாலகவி வே. இராமநாதஞ் செட்டியார்), *(1974)*, சேக்கிழாரின் சொற்றிறம், திருமுருகாற்றுப்படை, குமரகுருபரர் சரித்திரம் *(1975)*, சேக்கிழாரும் சேயிழையார்களும் *(1976)*, 1978-ஆம் ஆண்டில் திருவிளையாடற் புராணம் உரைநடை, திருத்தலயாத்திரை (தா.ம. வெள்ளைவாரணம்), சகலகலா வல்லி மாலை (கி.வா. ஜகந்நாதன்), திருக்களிற்றுப்படியார் (கு. சுந்தரமூர்த்தி), சிதம்பரச் செய்யுட் கோவை (கே.எம். வேங்கடராமையா), 1980-ஆம் ஆண்டில் இலக்கியச் சோலை (கி.வா.ஜ), போற்றிப் பஃறொடை (கு. சுந்தரமூர்த்தி), 1981-ஆம் ஆண்டில் நெஞ்சுவிடு தூது, சிவப்பிரகாசம் (கு.சுந்தரமூர்த்தி), 1982-ஆம் ஆண்டில் சங்கற்ப நிராகரணம் (கு. சுந்தரமூர்த்தி), திருமந்திரம் (சொ.சொ.மீ. சுந்தரம்), 9,10,11-ஆம் திருமுறைகள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை (கே.எம்.வேங்கட ராமையா), 1983-84-ஆம் ஆண்டுகளில் தலத்துக்கொரு தேவாரம் (தா.ம. வெள்ளைவாரணம்) ஆகிய தொடர்கள் வெளிவந்தன.

16.12.1977 ''குமரகுருபரன்'' இதழ் நிறுத்தப்பட்டு *18.10.1978*-ஆம் ஆண்டு முதல் மீண்டும் வெளிவரலாயிற்று.

18.12.1978-ஆம் ஆண்டில் விடையரங்கம் பகுதி தொடங்கப்பட்டு வாசகர்கள் கேள்விகளுக்கு அருணை வடிவேல் முதலியார், க. வச்சிரவேல் முதலியார், சித்தலிங்கையா, தண்டபாணி தேசிகர், சா. கணேசன், அ.ச. ஞானசம்பந்தன், கா.ம. வேங்கடராமையா, கி.வா. ஜகந்நாதன், கீரன், கிருபானந்த வாரியார் ஆகியோர் அவ்வப்பொழுது பதில்கள் அளித்திருந்தனர்.

81-82-ஆம் ஆண்டுகளில் (தொகுதி4) மு. அருணாசலம் அவர்கள் எழுதியுள்ள ''சித்தாந்த சாத்திரங்கள் வரலாறு'' என்ற தொடர் சாத்திரப் பதிப்புகள் வெளிவந்த ஆண்டுகள் மற்றும் பல அரிய தகவல்களைத் தாங்கி வந்தது. *82-83*ஆம் ஆண்டுகளில் (தொகுதி *-5*) அ.ச. ஞானசம்பந்தனின் ''சைவத் திருமுறைகளும் சமுதாய நெறிமுறைகளும்'' தொடரும் *83-84*-ஆம் ஆண்டுகளில் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் ''திருத்தொண்டர் புராணமும் சமுதாயமும்'' என்ற தொடரும் வெளிவந்தன.

11

திருக்கோயில்

1958

தமிழக அரசின் ஆளுகைக்கு உட்பட்ட இந்து சமய அறநிலையத் துறையின் வெளியீடாக 1958-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் ந.ரா. முருகவேள் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ''திருக்கோயில்'' திங்கள் இதழ் வெளிவரலாயிற்று. இவ்விதழில் சைவ, வைணவ சமயக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

1960-ஆம் ஆண்டு முதல் 1985-ஆம் ஆண்டு வரையிலான இதழ்களில் மா. இராச மாணிக்கனார், சி.எம். இராமச் சந்திரஞ் செட்டியார், சுந்தரேச வாண்டையார், சி. அருணைவடிவேல் முதலியார், பாலகவி வே. இராமநாதஞ் செட்டியார், கிருபானந்த வாரியார், சுத்தானந்த பாரதியார், இராய. சொக்க லிங்கம், குன்றக்குடி அடிகளார், சுந்தர சுவாமிகள், எஸ். மகராஜன், வ.ஆ. தேவசேனாபதி, கி.வா. ஜகந்நாதன், இரா. நாகசாமி, ஜி. வரதராஜன், பெ. திருஞான சம்பந்தம், தெ.பொ.மீ, டி.எம்.பி. மகாதேவன், ம.பொ.சி, அ.ச. ஞானசம்பந்தன், ஏ.வி. ஜெயச்சந்திரன், எஸ்.என். கந்தசாமி, ச. கங்காதரன், ராதா தியாகராஜன், டி.பி. சித்தலிங்கையா, கலைக்கோவன், சுப. அண்ணாமலை, வ.சுப. மாணிக்கம், ஊரன் அடிகள் ஆகியோர் எழுதியுள்ளனர்.

1960-ஆம் ஆண்டில் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் (க. வச்சிரவேல் முதலியார்), நாயன்மார் வரலாறு, 62-63-ஆம் ஆண்டுகளில் திருநாவுக்கரசு நாயனார் (சி.. அருணைவடிவேல் முதலியார்), கல்வெட்டுக்கள் (மா.இராச மாணிக்கனார்), கல்வெட்டுக்கள் (சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார்), சிவஞான போதம் (வச்சிரவேல் முதலியார்), 78-79-ஆம் ஆண்டுகளில் கந்தபுராணக் காப்பியநலம் (க.. திருநாவுக்கரசு), 82-83, 83-84-ஆம் ஆண்டுகளில் திருமந்திரம் (சுத்தானந்த பாரதியார்), ஆகமங்கள் (மு.அருணாசலம்) ஆகிய தொடர்கள் வெளிவந்தன.

ந.ரா. முருகவேள் 1962-63-ஆம் ஆண்டுகளில் அப்பரும் காந்தியடிகளும் உள்ளிட்ட 46 கட்டுரைகள், 63-64-ஆம் ஆண்டுகளில் திருவாசகத்தில் அறிவியல், திருவெழு கூற்றிருக்கை உள்ளிட்ட 39 கட்டுரைகள், 64-65-ஆம் ஆண்டுகளில் இளங்கோ அடிகளும், சேக்கிழார் அடிகளும், மாலைமாற்றுப்பதிகம் உள்ளிட்ட பல கட்டுரைகள், 65-66-ஆம் ஆண்டுகளில் சங்கற்ப நிராகரணம், சமயமும் விஞ்ஞானமும், திருஇயமகப் பதிக உரை, திருஎழு கூற்றிருக்கை உரை, சித்திர விளக்கம், மாலைமாற்றுப்பதிகம் உள்ளிட்ட 76 கட்டுரைகள், 66-67-ஆம் ஆண்டுகளில் திருவாசகமும் சங்கநூல் களும் உள்ளிட்ட 87 கட்டுரைகள், 67-68-ஆம் ஆண்டுகளில் (57), 68-69-ஆம் ஆண்டுகளில் (ஞானாமிர்தம் உள்ளிட்ட 62), 71-72-ஆம் ஆண்டுகளில் (42), 72-73-ஆம் ஆண்டுகளில் (52-மறைமலை அடிகள், ஞானியார் அடிகள், கச்சியப்பர், திருவாசகத்தில் அறிவியல், சைவ சித்தாந்தம், அறுவகைச் சமயம், திருமந்திரம், சிவஞானசித்தியார், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், தஞ்சை மாவட்டக் கோயில்கள்), 1976-ஆம் ஆண்டில் (36), 1977-ஆம் ஆண்டில் (47-திருக்கோவையார்), 1978-ஆம் ஆண்டில் (57-திருக்கோவையார் தொடர்), இந்தியத் தத்துவ ஞானிகள், செங்கல்பட்டு கோயில்கள், சிவஞான போதம்), 1979-ஆம் ஆண்டில் (18), 1980-ஆம் ஆண்டில் (29), 1981-ஆம் ஆண்டில் (17), 1982-ஆம் ஆண்டில் (27), 1983-ஆம் ஆண்டில் (26-ஆறு தரிசனங்கள், சிவஞானபோதம்), 1984-ஆம் ஆண்டில் (22) – கட்டுரைகள் எழுதியுள்ளார்.

1986-ஆம் ஆண்டில் த. அமிர்தலிங்கம் ஆசிரியர் ஆகிறார். 1986-ஆம் ஆண்டு முதல் 2000-ஆம் ஆண்டு வரையிலான இதழ்களில் (1989-98 இதழ்கள் கிடைக்கவில்லை) அ.ச. ஞானசம்பந்தன், இரா.நாகசாமி, த. அமிர்தலிங்கம், வெள்ளை வாரணனார், கிருபானந்தவாரியார், கலைக்கோவன் குன்றக்குடி அடிகளார், ஊரன் அடிகள், மு.அருணாசலம், நடன காசிநாதன், சத்தியவேல் முருகன், செல்வக் கணபதி, கா.பெ. சந்திரசேகரன் ஆகியோர் எழுதியிருந்தனர்.

12

அருளோசை

1972

தமிழ்நாடு தெய்விகப் பேரவை ஜூலை 1972, மணி 1, ஓசை 1.

பதிப்பாசிரியர் : அ. நாராயணசாமி

1) திருவளர் செல்வனுக்கு (பிற சமயங்கள் சைவத்தத்துவம் – அடிகளார்.)

2) திருக்கோவில்கள்
3) திருவுருவ உண்மை – ந.ரா. முருகவேள்
4) சமய ஞானியர் வரலாறு – சி. இராமபிள்ளை
5) மெய்ப்பொருள் காண்பது அறிவு (வள்ளுவர்) – வை. இரத்தினசபாபதி
6) இறைவணக்கப்பாடல்
7) வள்ளுவர் வழியில் – அடிகளார்
8) சந்தானக்குரவர் வரலாறு – சொ. சிங்காரவேலன்

இந்த எட்டு கட்டுரைகளும் தொடராக வெளிவந்தன.

13

மெய்கண்டார்

1982

''மெய்கண்டார்'' திங்கள் இதழ் *1982*-ஆம் ஆண்டு டிசம்பர் முதல் திருவாவடுதுறை ஆதீன வெளியீடாக வரலாயிற்று.

1982-83-ஆம் ஆண்டு முதல் *95-96*-ஆம் ஆண்டு வரையிலான இதழ்களில் மா. சிவகுருநாதபிள்ளை, ந.ரா. முருகவேள், கு.சுந்தரமூர்த்தி, சொ. சிங்காரவேலன், சு. நாராயணசுவாமி, எம். பட்டமுத்து, பி.மா. சோமசுந்தரனார், எம். நாராயணசாமி, கோமதி சூரியமூர்த்தி, ஆ. ஆனந்தராசன், ஆ. ஞானம், தா.ம. வெள்ளைவாரணம், என். சேதுராமன், ச. தண்டபாணி தேசிகர், இரா. நாகசாமி, அகரமுதல்வன், ப.நீலா, ச. இரத்னவேலன், சுவர்ண காளீச்சுரன், பழ. முத்தப்பன், க. வெள்ளைவாரணனார், இரா. கலைக்கோவன், கு. வைத்யநாதன், த. விசுவநாதன், கே. செல்லப்பன், சிவ. திருச்சிற்றம்பலம், தா.ஈசுவரபிள்ளை, கா.மீனாட்சி சுந்தரம் ஆகியோர் எழுதியிருந்தனர்.

சிவஞானசித்தியார் (மு. சுந்தரேசம் பிள்ளை – *1983*), சிவஞானசித்தியார் – பரபக்கம் (இராமச்சங்கு பாண்டியன் – *83,84,85*), சைவக்கிரியைகள் (*85, 86*), மெய்கண்டசாத்திரங்கள் (*85, 86*), திருமந்திரம் – ஆங்கிலம் (எஸ். வேதரத்தினம் – *86,87, 88*), திருவருட்பயன் (ஆதிமுருகவேள் – *86,87*), பன்னிரு திருமுறை – ஒரு சிற்றாய்வு (தா.ம. வெள்ளை வாரணம்), சிவபரத்துவ மாட்சி (ஆங்கிரச வெங்கடேச சர்மா – *91,92*), தேவாரங்களின் பொருளடைவு (*92*), திருமந்திர உரை (*92,93,94,95*), துறைசைத் தமிழ் அகராதி (*92* முதல் *96* வரை) ஆகிய தொடர்கள் இடம் பெற்றுள்ளன.

14

சைவ உலகம்

1993

இது உலகச் சைவப்பேரவைக்காக இலண்டனிலிருந்து வெளிவரும் ஆங்கிலம், தமிழ் இரண்டும் கலந்த காலாண்டுச் செய்தி மடல் ஆகும். உலகளவில் நடக்கும் சைவ நிகழ்ச்சிகளும், உலகளாவிய சைவ அறிஞர்கள் எழுதி வரும் கட்டுரைகளும் இதில் இடம் பெறுகின்றன. உலக சைவப் பேரவை இலண்டன் அருள் திரு சிவநந்தி அடிகளாரால் நடத்தப்பெறுகிறது.

14.4.1993 (2-ஆம் இதழ்) : Saivism Outsite India

11.7.1993 : தென் ஆப்ரிக்காவில் சைவமும் தமிழும், பௌத்தத்திற்கு முந்திய ஈழத்து மதம், Jung and Meikandar ஏப்ரல் *1994* : சுமேரு இலக்கியத்தில் கொற்றவையும் சிவபெருமானும் Vol.3 No - 2 *(1995)*.

Thiru Murugan in Sumerian Literature and Tolkappiyam (K.Loganathan) Vol.3 No - 3&8 (1995); The Mantrayaneof Thirumular and its Sumerian Beginnings (Dr. K. Loganathan) Sept 1996;

செப்டம்பர் *1996*; சுமேருவே குமரிநாடு, Hinduism in South Africa;

Vol.5 No - 1 : Why Saivites decline?

2) Contribution of Tamil Saivism to Global Peace and Prosperity: Vol.7 No - 3 Dec 1998

1) சுமேரு தமிழில் திருக்கோயில் வழிபாடு

2) Rejuvenation of Saivism in the 21st Century

3) Phsycology and Saiva Siddhanta; September 1999: Saivism in Orissa

Vol.31 : *1)* இங்கிலாந்திலுள்ள சைவத் திருக்கோயில்களில் நான்காணும் திருத்தக் கூடிய தவறுகள்

2) கோலாலம்பூரில் குருபூசை, இல்ல வழிபாடு Vo.32 : What is Conversion?

15

சிவ சிவ

1999

''சிவ சிவ'' சூரியனார்கோயில் ஆதீனத் திங்களிதழாக தி. திருநாவுக்கரசு அவர்களை ஆசிரியராகக் கொண்டு ஆகஸ்டு 1999ஆம் ஆண்டிலிருந்து வெளி வருகின்றது.

சைவ மூதறிஞர் திரு.மா. சிவகுருநாத பிள்ளை, சைவப் பேராசிரியர் திரு.சிவ. திருச்சிற்றம்பலம், இதழாசிரியர் தி. திருநாவுக்கரசு என மூன்று தலைமுறைகள் ''சிவசிவ''இதழுக்குப் பின்னணியாக இருப்பதனால் – மரபு வழியான, பாரம்பர்யமுடைய, பலருக்கும் தெரியாத செய்திகள், விவரங்கள், நூல்கள், ஆன்றோர்கள் பற்றிய தகவல்கள் ஒருபுறம்; சிறுகதை, ஹைகூ, சைவ சமயம் அன்றாடம் சந்திக்கும் சிக்கல்கள் பற்றிய ஆசிரியர் உரை என புதுமை மணம் மறுபுறம், இரண்டும் இணைந்து இருத்தலால் – இதழ் சிறிய அளவிலே அண்மைக் கால வெளியீடாக இருந்தாலும் காரம் கூடுதலாகவே – மிகக் கூடுதலாகவே உள்ளது. சர்வ ஞானோத்தர ஆகமம் – தமிழ் மொழிபெயர்ப்பு தொடராகவும், சித்தாந்த மரபு, சித்தாந்த மரபு கண்டனம், சித்தாந்த மரபு கண்டன கண்டனம், உற்சவ விளக்கம், சிவபுண்ணியத்தெளிவு, உபதேசகாண்டம், சிவதருமோத்தரம் போன்ற யாருக்கும் கிடைக்காத பல பழைய நூல்களைப் பற்றிய புதிய அறிமுகம்; திருமயிலை சுப்பராய ஞானியார், காஞ்சிபுரம் சபாபதி முதலியார், சைவத் தமிழ் உரையாசிரியர்கள் என சைவத் தமிழுலகம் நினைக்க மறந்த சான்றோர்களைப் பற்றிய செய்திகள், சனி நீராடு, மாக்கோலம் போடுதல், துளசியின் மகிமை போன்ற மறைந்து வரும் மரபுகள்: அற்புதச் சிவவடிவங்கள், வழிபாட்டுப் பொருள்களின் தத்துவம், புராண வரலாறு உணர்த்தும் தத்துவங்கள், சிவ மூர்த்தங்கள், சைவத்தமிழ் அகராதி என என்றும் உள்ள தெரிந்த செய்திகளைப் பற்றிய தெரியாத விவரங்கள் – இக்கட்டுரைகள் சைவ சமயத்தின் பழமையையும் மேன்மையையும் எடுத்துரைக்கின்றன.

நாட்டுப்புற இலக்கியங்களில் சிவன், நாட்டுப்புற மொழிகளில் சைவம், நாட்டுப்புறச் சொலவடைகளில் சைவம், திரைப்படப்பாடல்களில் தில்லைக்கூத்தன் போன்ற கட்டுரைகள் : இன்றைய போக்கிலே அறிஞர்கள் மத்தியிலே பெரிதும் ஆயப்பட்டுவரும் நாட்டுப் பாடல்களைப் பற்றிய விவரங்கள்; பரிணாமமும் படைப்பியலும் என்ற தற்காலத்துக்கேற்ற அறிவியல் கண்ணோட்டத்துடன் கூடிய கட்டுரைத் தொடர் : பின்னை புதுமையின் பெற்றினைப் பறைசாற்றுகின்றன.

ஒவ்வொரு இதழிலும் ஒரு பக்கக் கதையும் உண்டு. கவிதைகளும் காலத்துக்கேற்ற கோலம் பெற்றுள்ளன. ஹைக்கூ கவிதைகளும் உண்டு என்றால் கேட்கவா வேண்டும்?

ஹைக்கூ – கவிதைகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு

''ஞானப்பால் வேண்டாம்
சூலைநோய் போதும்''

இறையியல் கவிதைகள்

நிலையாமை

''இளமை முதுமை
தோற்றம் மரணம்
நம்பிக்கை''

''மகளிர் தினம்
தொழிலாளர் தினம்
பக்தி நிதம்''

''ஆசிரியர் உரை'' என்ற தலையங்கப் பகுதி சைவ உலகம் அன்றாடம் எதிர்

கொள்ளும் பிரச்சினைகளை அலசி ஆராய்கிறது. 40,50 ஆண்டுகளுக்கு முன் நாகர்கோயில் ஆறுமுக நாவலர் தனது ''தொண்டன்'' இதழ் மூலம் செய்த பணியினை நினைவூட்டுகிறது. தல யாத்திரையில் வருகிற இடர்கள், ஒதுக்குப் புறமான இடங்களைப் பாழடித்தல், ஆலயத்தூய்மை, மார்கழி அலங்கோலங்கள் – கல் மாவும், வண்ணமுமா? சினிமாப் பாடல்களில் அலங்கோலம், சைவர் அழைப்பிதழில் வெங்கடசலபதி படம், கோயில் சுவர்களில் கிறுக்குதல், சூப்பர் மார்க்கெட் – ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு மாதிரியான விளம்பர அட்டை (உதாரணமாக துன்பம் தீரவேண்டுமா? நெடுங்களம். ஏன் பிற தலங்களில் எழுந்தருளியுள்ள பெருமானை வழிபட்டால் துன்பம் தீராதா?), மத மாற்றத்தடைச் சட்டம் என தனிமனிதப் பிரசினையிலிருந்து அரசு இயற்றும் சட்டம் வரை இப்பகுதி ஆய்கிறது.

சைவத்திற்கு இத்தனை பரிணாமங்களா? என்று வியக்கவைக்கிறது. பழமையும், புதுமையும் இணைந்து கைகோர்த்து அற்புதம் விளைக்கும் மூன்று தலைமுறைக் குடும்பத்தையும் அவர்கள் தொண்டுக்கு அருளாசி வழங்கும் சூரியனார்கோயில் சுவாமிகளையும் இருகரம் குவித்து வணங்கவே தோன்றுகிறது.

* * *

II

சைவ இதழ்கள் - சில குறிப்புகள்

1

சைவ உதய பானு

1882

(கிழமை இதழ்) (வார இதழ்)

(பார்வைக்கு கிடைத்தது. புத்தகம் 4; இலக்கம் 8. பார்த்திப ஆண்டு வைகாசித் திங்கள் 8.5.1885).

ஆசிரியர்: சு. சரவண முத்துப்பிள்ளை. யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சைவப் பிரகாச யந்திர சாலையில் எஸ். பொன்னம் பலம் என்பவரால் அச்சிட்டு வெளிப் படுத்தப் பட்டது. அளவு : 43/28 செ.மீ; பக்கம் 4; ஆண்டுக் கையொப்பம் இலங்கைக்கு ரூபா ஒன்று. இந்தியாவுக்கு இரண்டு ரூபா அறுபது சதம். தனியிதழ் 9 சதம்.

இவ்விதழ் சைவசமய வளர்ச்சிக்கெனத் தோன்றிப் பணி புரிந்தது. அந்நாளில் கிறித்துவ முழக்கம் ஈழத்தில் அதிகமாக இருந்ததைக் கண்டு அதனைத் தொலைக்க இவ்விதழினை வெளியிட்டனர் (இராம சாமிப்புலவர்).

2

ஞானாமிர்தம்

1888

(திங்களுக்கு இருமுறை)

சென்னை சித்தாந்த வித்தியாநுபாலன அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியாகி உள்ளது. அளவு செ.மீ.43/28; பக்கம் 4

இவ்விதழ் சைவசமய வளர்ச்சியை நாடி வெளியாகியது. இவ்விதழில் வைதீக சித்தாந்தப் பிரகரணம், பரமபதம் பிரகரணம் முதலிய கட்டுரைகள் வெளியாகி உள்ளன. (இராமசாமிப்புலவர் நூல்)

3

ஞானபானு

1894

(திங்கள் இதழ்)

(பார்வை :மலர் 1; இதழ் 5. 1894, ஆகஸ்டு)

ஆசிரியர் : கா. ஆலால சுந்தரம் பிள்ளை

அளவு : 25/15½ செ.மீ பக்கம் 16

ஆண்டுக்கையொப்பம் ரூபாய் 1; தனி இதழ் 2 அணா.

ஆசிரியர் : சைவசித்தாந்தப் புலமை வாய்ந்தவர்.

4

சித்தாந்த தீபிகை

1897

(திங்கள் இதழ்)

(பார்வை மலர் 1; இதழ் 1. 21.6.1897)

இவ்விதழ் சமய ஞானம், தத்துவ ஞானம், கலைஞானம், பூதபௌதிக சாத்திர ஞானம் ஆகியவைகளை மக்களுக்கு உணர்த்தத் தோன்றியது. வைதீக சைவ சித்தாந்த சண்ட மாருதம் சூளை சோமசுந்தர நாயகர், அட்டாவதானம் பூவை கல்யாண

சுந்தர முதலியார், திருமணம் செல்வக் கேசவராய முதலியார் வேலாயுத தேசிகர், பூ. முருகேச பண்டிதர் முதலிய அறிஞர்கள் இவ்விதழில் கட்டுரை வரைந்துள்ளார்கள்.

5

விவேகபாநு

1900

1900-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தூத்துக்குடி ஸ்ரீமத் வள்ளிநாயக சுவாமிகளால் தொடங்கப்பட்டு மாதப் பத்திரிகையாக ஒரு வருடம் வெளிவந்தது. 1902-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து மதுரையிலிருந்து எம்.ஆர். கந்தசாமிக் கவிராயரால் நடத்தப்பெற்று வெளி வந்தது.

விலை – அணா மூன்று; பக்கம் – 32.

டிசம்பர் 1902-ஆம் ஆண்டு முதல் அக்டோபர் 1905-ஆம் ஆண்டு வரை 13 இதழ்கள் பார்வையிடப்பட்டன.1902-ஆம் ஆண்டில் எஸ். பால்வண்ண முதலியாரின் ''ஞானாமிருதம்'' தொடர், சுப்பிரமணிய பிள்ளையின் ''சைவசித்தாந்தம்'' தொடர், சௌந்தர பாரதிகளின் ''திருவிளையாடற் புராண உரை'' ஆவணி மூலமகோற்சவச் சிறப்பு, திருவாசக உள்ளக்கிடை ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன.

6

சைவபோதினி

1901

(திங்கள் இதழ்)

(பார்வை : மலர் 1; இதழ் 3 (25.8.1901)

ஆசிரியர் : சி.சி. குழந்தை வேலுப் பிள்ளை. ஆசிரியரால் திருநெல்வேலி ஆரியப் பிரகாசினி அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அளவு 18/12 செ.மீ. பக்கம் 16

ஆண்டுக் கையொப்பம் ரூபா 1; தனி இதழ் 2 அணா

சைவசமாச போதமெனப் பொருள் கொண்ட ஞானசம்பந்த சபாவின் ஆதரவில் வெளிவந்த இவ்விதழில் சைவசமயக் கட்டுரைகள் வெளி வந்தன.

7

ஞானசாகரம்

1902

(பார்வை : பதுமம் 1 இதழ் 12. 1902)

ஆசிரியர் : நாகப்பட்டினம் வேதாசலம் பிள்ளை.

சென்னை சி.என். அச்சுக்கூடத்தில் முத்திரீகரிக்கப்பட்டது.

ராயல் அளவு : பக்கம் 48

ஆண்டுக் கட்டணம் ரூபா 3.

மறைமலையடிகளாரால் தமிழ் வளர்ச்சி கருதி வெளியிடப்பட்டது. சுன்னாகம் அ. குமாரசாமிப்பிள்ளை, மாகறல் கார்த்திகேய முதலியார் ஆகியோர் எழுதியுள்ளனர்.

8

திருநாவுக்கரசு

1904

(திங்கள் இதழ்)

(பார்வை : புத்தகம் 2; இலக்கம் 10. 1905 நவம்பர்)

ஆசிரியர் : தி.பா. சிவராம பிள்ளை, திரவியம் பிள்ளை என்பவர்களால் திருநெல்வேலி சூரியபிரகாசினி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அளவு : 33/20½ செ.மீ பக்கம் 8; 2 அணா.

இதழை வெளியிடத் தொடங்கியவர் திருநாவுக்கரசரிடத்தில் பேரன்பு கொண்டமையால் அவர் பெயரில் தமிழ், சமயத் தொண்டு செய்ய வெளியிட்டார்.

குறையிரந்து நிற்றல், சமயாபிவிருத்தி முதலிய கட்டுரைகள் இவ்விதழில் வெளியாகியுள்ளன.

9

ஞானசித்தி

1908

(திங்களுக்கு இருமுறை)

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகியது.

அளவு : 28/22 செ.மீ.

சைவசித்தாந்தத்தைப் பரப்பும் நோக்கத்தோடு இவ்விதழ் வெளியாகியுள்ளது. ஆணவமலம், முப்பொருளும் அநாதிஎனல் முதலிய கட்டுரைகள் வந்தன. (இராமசாமி)

10

ஞானப்பிரகாசம்

1910

(திங்கள் இதழ்)

(பார்வை : புத்தகம் 1; இலக்கம் 8. 1911 ஏப்ரல்)

ஆசிரியர் : ஆ. சண்முகரத்தினசர்மா

யாழ்ப்பாணம் கணேச அச்சகத்தில் அச்சிட்டு ஆசிரியரால் வெளியிடப்பட்டது.

அளவு : 25½/17½ செ.மீ. பக்கம் – 16; ஆண்டுக்கையொப்பம் ரூபா 2 (இல) ரூ 2 1/4 (இந்தியா), தனியிதழ் 20 காசு.

உள்ளடக்கம் : சைவசமயம், தமிழ்

கட்டுரை : பிரணவம், கிறித்துவமத கண்டனம், சிவபரத்துவம்.

11

சைவப்பிரகாசம்

1916

சைவப்பிரகாசம் 1916-ஆம் ஆண்டில் ஆகஸ்டில் பேரூரிலிருந்து அ. கந்தசாமி பிள்ளையை ஆசிரியராகக் கொண்டு 32 பக்கங்களில் வெளிவந்த மாத இதழ் ஆகும். 5 இதழ்கள் பார்வையிடப்பட்டன. சைவசமய மேம்பாடு, வேதமும் ஆகமமும் அரதத்தர் சகல சாஸ்திர சங்கிரகம், சேக்கிழார், சைவ சமய விளக்கம் ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன.

12

சைவபரிபாலனம்

1922

(திங்கள் இதழ்)

(பார்வை : 7-ஆவது ஆண்டு பதிப்பு, 1.10.28)

ஆசிரியர் : கந்தசாமித் தம்பிரான், திருச்சிராப்பள்ளி ஸ்ரீ நிலையம் அச்சகத்தில் அச்சிட்டுக் கரூரில் இருந்து வெளிப்படுத்தியது.

அளவு : 28 /22 செ.மீ; பக்கம் 12;

ஆண்டுக் கையொப்பம் 2½ ரூபாய்

சைவசமயக் கொள்கைகளைப் பரப்பத் தோன்றியது. குடியரசு, திராவிடர் முதலிய இதழ்களில் வெளிவந்த சைவசமயப் பழிப்புக் கட்டுரைக்கு மறுப்பெழுதியது.

13

மெய்கண்டான்

1923

(திங்கள் இதழ்)

(பார்வை : மலர் 1 இதழ் 8. 1923, ஆகஸ்டு)

மெய்கண்டான் ஆண்டு 701; ஆசிரியர் : த. ஆறுமுகநயினார். கொழும்பு மெய்கண்டார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அளவு : 22/14 செ.மீ. பக்கம் – 16. ஆண்டு கையொப்பம் – ரூபாய் 1½.

சைவசித்தாந்தத்தைப் பரப்பத் தோன்றியது. ந.சி. கந்தையா, அ. நாறும்பூநாத தேசிகர் முதலியோர் சைவ சித்தாந்த கட்டுரைகள் எழுதியுள்ளனர். முழுமையும் சைவ சித்தாந்த கட்டுரைகளே.

14

சரஸ்வதி

1927

(திங்கள் இதழ்)

(பார்வை : மலர் 1, இதழ் 4. 1927 சூலை)

ஆசிரியர் : தெரியவில்லை.

கொழும்பு சிந்தும் பட்டித்தெரு பத்மநாப ஐயர் என்பவரால் கொழும்பு ஆனந்தா பிரிண்டிங் ஒர்க்ஸில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

அளவு: 21½ / 13½ செ.மீ பக்கம் 52.

ஆண்டுக் கையொப்பம் ரூபாய் 2.

நோக்கம் : கல்வி அறிவைப் பரப்புவது.

உள்ளடக்கம் : தில்லைத்திருநடனம், சேக்கிழார், திருநீற்றின் பெருமை

15

வீரசைவம்

1928

1928-ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்தது. 1930-ஆம் ஆண்டில் தமிழ்நாடும் வீரசைவமும், ஸ்ரீபசவேசர் விஜயம், மெய்யுணர்தல், வீரசைவ மதத்தின் உண்மைநிலை ஆகிய கட்டுரைகள் வெளிவந்தன.

16

விவேகபாநு

1928

(திங்கள் இதழ்)

ஆசிரியர் : க.கு. கோவிந்தசாமிப் பிள்ளை.

17

சைவசாஸ்திர பரிபாலனம்

1936

சைவ சாஸ்திர பரிபாலனம் யாழ்ப்பாணம் அச்சுவேலி ச. குமார சுவாமிக் குருக்களை ஆசிரியராகக் கொண்டு 1936-ஆம் ஆண்டில் 36 பக்கங் களுடன் வெளி வரலாயிற்று. 1941-ஆம் ஆண்டில் செப்டம்பர் – அக்டோபர் இதழில் சிவஞானபோத முதல் நூல் என்ற கட்டுரையும், 1941 நவம்பர் - டிசம்பர் இதழில் சிவாகமக்கிரியாதிகார விளக்கம் என்ற கட்டுரையும் வெளிவந்தன.

18

சிவாகம வித்யா

1938

''சிவாகம வித்யா'' கொங்கு மண்டல ஆதிசைவப் பிராம்மண கோஜன சங்கத்தால் கே.பி. சுப்பிரமணிய சிவாச்சாரி யாரை ஆசிரியராகக் கொண்டு பேரூரி லிருந்து 1938-ஆம் ஆண்டில் வெளிவந்தது. 16 பக்கங்களை உடையது. மூன்று இதழ்கள் பார்வையிடப்பட்டன. சிவாகமக் கிரியா விளக்கம், ஆகமசேகரம், சிவாகமப் பிரயோக சந்திரிகா, சைவபரிபாஷா மஞ்ஜரீ ஆகிய கட்டுரைகள் மலர் 2 இதழ் 1-லும், ஓங்காரமான உயர் பொருள், பதிவாக்கியத் தானவியம், சைவபரி பாஷாமஞ்ஜரீ மலர் 3 இதழ் 4-லும் (1.2.1941), சைவாசார்ய குருபரம் – பராஸ்தவம், சைவபாஷ்யகாரர் ஸ்துதி, சைவபரிபாஷா மஞ்ஜரீ மலர் 2-லும் வெளிவந்தன.

19

நாவரசு

1952

(பார்வை : அரசு 1; மொழி 3. 1952 நவம்பர்)

ஆசிரியர் : திருத்தேவர் பழனியப்ப கவுண்டர் மதுரை பொன்மணி அச்சகத்தில் சிவனாண்டித்தேவாரால் பதிப்பிக்கப்பட்டு ஆசிரியரால் வெளியிடப்பெற்றது.

அளவு : டிம்மி; பக்கம் 44; ஆண்டுச் சந்தா ரூபாய் 5.

ஆசிரியர் சென்னை திருவெற்றியூரான் வடமொழிக் கல்லூரியில் வடமொழி கற்றுத் தேர்ந்தவர். தமிழ் மொழியிலும் புலமை உடையவர். வேதாந்தக் கொள்கை யைச் சைவசமயத் தொடர்போடு ஒன்று படுத்தி மக்களுக்குப் போதித்து மக்களைச் சிவபக்தி உடையவர்களாகவும் அதே போக்கில் வேதாந்திகளாகவும் செய்ய வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு இவ்விதழைத் தொடங்கினார். இரண்டோராண்டுகள் நடந்து இதழ் மறைந்தது. ஆசியரும் மறைந்தார்.

முதல் இரண்டு இதழ்களில் அ. வரதநஞ்சையனாரின் ''திருநாவுக்கரசரும், சேக்கிழாரும்'', வெ.ரா.கந்தசாமி அடிகளின் ''திருக்கோவை யார்?'' கோவையும் பயனும், ஆசிரியரின் திருமந்திரம், ஸ்ரீலஸ்ரீ ராமசாமியடிகளின் தேவாரம் என்ற கனமான கட்டுரைகள் வெளிவந்தன.

20

கடவுள்

1974

''கடவுள்'' ப. இராமசாமியை ஆசிரியராகக் கொண்டு *1947*-ஆம் ஆண்டு நவம்பரில் வெளி வந்தது. விலை ரூ. *1.00*; பக்கம் *48*; கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார், கி.வா. ஜகந்நாதன், சுத்தானந்த பாரதியார், கிருபானந்த வாரியார், பாரதியார், சித்பவானந்தா, வி. நடேசனார் முதலியோரின் சைவசமயக் கட்டுரை களைத் தாங்கி வந்தது.

21

உழவாரம்

1984

ஜூலை *1984*; மலர் *1*; இதழ் *1*.

ஆசிரியர் : எம். கண்ணப்ப செட்டியார்

திங்கள் இதழ்

(1) தலம், *(2)* பதிகம் – உரை, *(3)* வழிபாடு, *(4)* சைவமன்றங்கள் செய்திகள் என்ற முறையில் தொடர்ந்து வெளிவருகிறது.

22

தெய்வச் சேக்கிழார்

1991

காஞ்சிபுரத்திலிருந்த ச.மீனாட்சி என்பவரால் வெளியிடப்படும் திங்கள் இதழ் ஆகும். தனிப்பிரதி ரூ.*4/-* திரு முறைக் கட்டுரைகளைத் தாங்கி வருகிறது.

23

சிவசாந்தலிங்கர்

1995

கோவை பேரூர் ஆதீனத்தின் சார்பில் டாக்டர் வையாபுரி அவர்களை ஆசிரியராகக் கொண்டு திங்கள் தோறும் வெளி வருகிறது. ''அடிகள் அருளமுதம்'' என்ற பேரூர் சுவாமிகளின் மடல் அரிய செய்திகளைத் தாங்கி வருகிறது. சிவப்பிரகாசர், திருவாசகத்தில் பக்திநெறி, பேரூர் திருக்கோயில் என்று கனமான கட்டுரைகளைத் தாங்கி வருகிறது.

24

அற்புத ஆலயமணி

1995

துரை. சுப்பிரமணியர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு காஞ்சிபுரத்திலிருந்து வெளி வருகிறது. அனைத்துக் கட்டுரைகளும் ஒருபக்கக்கட்டுரைகளாய் அமைந்திருப்பது இவ்விதழின் தனிச் சிறப்பு ஆகும்.

25

மாணிக்கவாசகர்

1999

கூனம்பட்டி ஆதீனத்தின் சார்பில் இராஜலிங்க மாணிக்கவாசக சுவாமிகளை ஆசிரியராகக் கொண்டு வெளி வருகிறது. ஆதீனச் செய்திகளைத் தாங்கி வருகிறது. கட்டுரைகள் ஒன்றிரண்டு மட்டுமே வெளி வருகின்றன.

26

கௌமார அமுதம்

2001

கௌமார மடத்தின் சார்பில் திங்கள் இதழாக வெளியிடப்படுகிறது. கந்தமுனி போற்றும் கவின் மிகுதலங்கள், திருஞான சம்பந்தர் தேவாரத்தில் அகப்பொருள் மரபு, பெரியபுராணமும் குருபரம்பையும் என அரிய செய்திகளைத் தாங்கி வருகிறது.

27

தமிழ்வேதம்

ஆசிரியர் : கி.ஆ. பக்தவத்சலம்; 5,6 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. திருமுறைக்கட்டுரைகள் இடம் பெறுகின்றன

■■■

III

சைவ இதழ்கள் - கால வரிசை

1) ''சைவ சம்போதினி''; உடுவில் வைத்தீசுவரன், யாழ்ப்பாணம் – (1881).
2) ''தேவாரப்பதிகத் திருமுறைகள்'', கண்டலம்பாலசுந்தரம் வாசுதேவன், சென்னை. – (1881).
3) ''திருவிளையாடற் புராணம் ''; இரத்தினவேலு, சென்னை – (1883).
4) ''ஞானாமிர்தம்'' சபாபதி நாவலர்; யாழ்ப்பாணம் – (1883).
5) ''பெரியபுராணம் உரையுடன்''; ஆறுமுகத்தம்பிரான்; சென்னை – (1883).
6) ''சிவாபிமானி'' யாழ்ப்பாணம் – (1884).
7) ''பெரியபுராணம் உரை - விளக்கங்களுடன்'', சென்னை – (1884).
8) ''சித்தாந்த இரத்தினாகர அர்ச்சதீபம்''; சூளை சோமசுந்தரம்; சென்னை – (1885).
9) ''சிவஞானபோதம்''; சி. சண்முகசுந்தரம்; சென்னை – (1886).
10) ''சிவ இரகசிய காண்டம்''; ஆனந்த வைத்யநாத சிவன் – (1890).
11) ''நாகை நீலலோசினி''; சதாசிவம்; நாகப்பட்டினம் – (1890).
12) ''சிவபக்தி சந்திரிகை''; ஆனந்த வைத்தியநாதசிவன்; தஞ்சை – (1890).
13) ''பெரியபுராணம்''; சுப்பராயன்; சென்னை – (1891).
14) ''சைவாபிமானி''; வ.பொ.ஞானசபாபதி, யாழ்ப்பாணம் – (1894).
15) ''சிவமகாபுராணம்''; இரத்தின வேலு; சென்னை – (1897).
16) ''சிவஞானசித்தியார்''; நல்லசாமி; சென்னை– (1897).
17) ''சித்தாந்த ஞானபோதினி''; மறைமலையடிகள், சென்னை – (1898).
18) ''சிவார்ச்சனாதீபிகை''; சத்திய சதாசிவன், கும்பகோணம் – (1900).
19) ''சித்தாந்த ரத்னாகரம்''; அப்பாவு செட்டியார்; சென்னை – (1905).
20) ''சிவாச்சார தீபிகை''; சிவப்பிரகாச அய்யர், சென்னை – (1908).
21) ''விசுவகர்மன்''; மு. அருணாசல ஆசாரியார்; யாழ்ப்பாணம் – (1912).
22) ''சித்தாந்தம்''; பி.கல்யாணசுந்தர முதலியார், சென்னை – (1913).
23) ''திருநீலகண்டன்''; வி.ஏ. கனகசபாபதி; நாகப்பட்டினம் – (1914).
24) ''சைவவித்யா''; கயப்பாக்கம் சதாசிவம், சென்னை – (1918).
25) ''காமிகா ஆகமம்'' – (1919).
26) ''திருவாசக உரை'; சென்னை சைவ பரிபாலனசபை – (1920).
27) ''சிவதர்மபோதினி''; கொழும்பு – (1920).
28) ''தமிழர் போதினி''; கு. விஜயரத்தினம்; யாழ்ப்பாணம் – (1923).
29) ''சைவ சித்தாந்தபானு''; பண்டித நடராசா; யாழ்ப்பாணம் – (1924).

30) ‘‘கலைமகள்’’; .....; திருக்குறள் பயிற்சிக்கழக வெளியீடு; கொழும்பு – *(1923).*

31) ‘‘வீரசைவம்’’; வி. வரதநஞ்சைய பிள்ளை; முசிறி – *(1929).*

32) ‘‘தமிழன்’’; வீ.சாரங்கபாணி; யாழ்ப்பாணம் – *(1930).*

33) ‘‘திருவிளையாடற் புராணம்’’; திரு.வி.க. சென்னை – *(1933).*

34) ‘‘திருத்தொண்டர்புராணம்’’; சி.கே. சுப்பிரமணிய முதலியார் – *(1935).*

35) ‘‘சிவத்தொண்டன்’’; கே.கே. நடராசன்; சிவத்தொண்டன் நிலைய வெளியீடு, யாழ்ப்பாணம் – *(1937).*

36) ‘‘சிவாகம வித்யா’’, கே.பி. சுப்பிரமணிய சிவாச்சாரியர்; கோவை – *(1938).*

37) ‘‘சைவசாஸ்திரபரிபாலனம்’’; ச. குமாரசாமிக்குருக்கள்; அச்சுவேலி யாழ்ப்பாணம் – *(1939).*

38) ‘‘நாவலன்’’; சி. கனகசுந்தரம்; திருநெல்வேலி (யாழ்ப்பாணம்) – *(1947).*

39) ‘‘ஆறுமுக நாவலர்’’; ச. குமாரசாமிக் குருக்கள்; சைவ சித்தாந்த சபை வெளியீடு; யாழ்ப்பாணம் – *(1949).*

40) ‘‘நாவலன்’’; நா. கணேசலிங்கம்; யாழ்ப்பாணம் – *(1959).*

41) ‘‘சிவாயவாசி’’; எம்.வடிவேல்; கொழும்பு – *(1961).*

42) ‘‘சைவக்காவலன்’’; ச. குமாரசாமிக் குருக்கள்; யாழ்ப்பாணம் – *(1964).*

43) ‘‘சைவ ஆலயம்’’; எஸ். அருணாசலம்; கடலூர் – *(1965).*

44) ‘‘ஞான தீபம்’’; க.வை.ஆ. சர்மா; யாழ்ப்பாணம் – *(1961).*

45) ‘‘அருளொளி’’; ச.மு. விவேகானந்தன்; கொழும்பு – *(1967).*

46) ‘‘திருநெறிய தமிழ்’’; கே. பாலசுப்ரமணியபிள்ளை; பன்னிரு திருமுறை வெளியீடு – *(1968).*

47) ‘‘நல்லை நாவலன்’’; கொழும்பு ஆறுமுக நாவலர் சபை வெளியீடு – *(1969).*

48) ‘‘சிவசக்தி’’, சாய்தாசன் விக்கிரமாதித்தன்; திருவரங்கம் – *(1970).*

49) ‘‘இந்து’’; ஜெ.நாகேஸ்வரன்; நல்லூர் – *(1971).*

50) ‘‘ஞானவேல்’’; ம. சிவசம்பு; பாளையங்கோட்டை – *(1972).*

51) ‘‘சேக்கிழார்’’; பி.வி. சம்பந்தன்; சேக்கிழார் கல்வி, பண்பாட்டுக் கழக வெளியீடு, சென்னை – *(1973).*

52) ‘‘சிவஞானபேரிகை’’; என். சுப்பிரமணிய சிவாச்சாரியார்; சங்கரன் கோயில் – *(1978).*

53) ‘‘சிவசாமி’’; இணுவில் இந்து மகாசபை வெளியீடு; இணுவில் (யாழ்ப்பாணம்) – *(1980).*

54) ‘‘சிவஞான பூஜாமலர்’’, எஸ். வெங்கடேச சர்மா; சென்னை – *(1981).*

55) ‘‘மெய்கண்டார்’’; பருத்தித்துறை (யாழ்ப்பாணம்) மெய்கண்டார் ஆதீன வெளியீடு – *(1982).*

56) ‘‘சிவநெறி’’; ஆதிமுருகவேள்; திருச்சி – *(1984).*

57) “Journal of the International Institute of Saiva Siddhantha”; தருமபுர ஆதீன வெளியீடு – *(1985).*

58) ‘‘வீரசைவ முரசு’’; ஆ. திருவாசகன்; (வீரம் 9; வெற்றி 3) – *(1986).*

59) ‘‘நமது சைவ வினாவிடை’’; சு. கிருஷ்ணசாமி, கரூர் – *(1992).*

60) ‘‘தெய்வச்சேக்கிழார்’’; அண்ணா சச்சிதானந்தம்; காஞ்சிபுரம் – *(1992).*

61) ‘‘சைவசிந்தனை’’; டி. கார்த்திகேயன், சென்னை – *(1994).*

62) ‘‘சிவசாந்தலிங்கர்’’; பேரூர் ஆதீன வெளியீடு; பேரூர் – *(1996).*

63) ‘‘மங்கையர்க்கரசி’’; கோவை சேக்கிழார் நிலைய வெளியீடு.

■■■

iv

மக்கள் இரசனை இதழ்கள்

1

கல்கி

1941

மலர் 1, இதழ் 1: ''ஹரதத்தரின் சிவ பக்தி'' (உ.வே.சாமிநாதையர்); ஆகஸ்டு 16, *1941:* கல்கியின் ''பார்த்திபன் கனவு'' தொடங்குகிறது. சிவனடியார் என்ற ஒரு பாத்திரம் கதை நெடுக வருகிறது.

1.1.1944 : கல்கியின் ''சிவகாமியின் சபதம்'' தொடங்குதல். பின்னால் சிறுத் தொண்டர் என்று அழைக்கப்பட்ட ''பரஞ்சோதி'', இந்நாவலில் முக்கியமான பாத்திரம் ஆகும். திருநாவுக்கரசரும் இந்நாவலில் வருகின்றார். சிவகாமியின் நடனம் மற்றும் பல இடங்களில் தேவாரப் பாடல்கள் இடம் பெறுகின்றன.

29.10.1950 : கல்கியின் ''பொன்னியின் செல்வன்'' தொடங்குதல். தஞ்சைப் பெரிய கோயிலை எழுப்பிய அருள்மொழி என்ற ராஜராஜ சோழன் இக்கதையின் தலைமகன். மற்றும் திருமுறைப் பாடல்களை இயற்றிய கண்டராதித்தன், திருமுறைகளைத் தொகுத்த நம்பி யாண்டார் நம்பி, பல சிவாலயங்களை எழுப்பித்த செம்பியன்மாதேவி ஆகியோர் முக்கிய பாத்திரங்களாக இடம் பெற்று உள்ளனர். இத்தனை பெரிய காவியத்தில் திருமுறைப் பாடல்கள் இடம் பெறாமலா இருக்கும்? *1953*-ஆம் ஆண்டில் டி.கே.சியின் ''இலக்கியக் களஞ்சியம்'' வெளி வந்தது. அவ்வப்போது பல்வேறு இலக்கியங்களுடன் சைவ இலக்கியங்களும் இடம் பெற்றன.

16.1.1956 : இந்த ஆண்டில் தொடங்கி *1.4.1956*-ஆம் ஆண்டு முடிய ரா.பி. சேதுப்பிள்ளை ''ஆற்றங்கரையினிலே'' என்ற திருக்கோயில்களைப் பற்றிய தொடரினை எழுதியுள்ளார். அவற்றில் பல தலங்கள் சிவத்தலங்கள் ஆகும். ஓவியர் சந்திராவின் ஓவியங்கள் தொடருக்கு அழகு சேர்த்தன.

11.3.1956 : சிவராத்திரியை முன்னிட்டு ஓவியர் மணியத்தின் ''சிவபெருமான்'' ஓவியம் அட்டையில் இடம் பெற்றது.

15.4.1956 : இந்த ஆண்டில் தொடங்கிய மீ.ப. சோமுவின் ''கடல் கண்ட கனவு'' தொடர் கதையிலும் திருமுறைப்பாடல்கள் இடம் பெற்றிருந்தன. இதே இதழில் ஓவியர் எஸ். ராஜத்தின் ''திருமூலர்'' எட்டுபக்க சித்திரக்கதை இடம் பெற்றது.

7.10.1956 : இந்த ஆண்டில் அ. சீனிவாசராகவனின் ''இலக்கியச் செல்வம்'' என்ற தொடர் தொடங்கி டிசம்பர் 1957-ஆம் ஆண்டில் நிறைவு பெற்றது.

29.12.1957 : அட்டையில் நடராஜர் ஓவியம்; ''ஆதியும் அந்தமும்'' என்ற திருவெம்பாவைப் பாடல் விளக்கம். இதே இதழில் உள்ளேயும் ''முன்னைப்'' என்ற திருவெம்பாவைப் பாடலும் அப் பாடலுக்கான மணியத்தின் ஓவியமும் இடம் பெற்றுள்ளது.

6.7.1958 : இந்த ஆண்டில் நா. பார்த்தசாரதியின் ''பாண்டி மாதேவி'' தொடங்கியது. முதல் அத்தியாயத்திலேயே விலாசினி திருவாசகப்பாடலுக்கு நடனம் ஆடுகிறாள்.

5.7.1959 : இந்த ஆண்டில் அகிலனின் ''வேங்கையின் மைந்தன்'' தொடர்கதை தொடங்குகிறது. கங்கைகொண்ட சோழ புரத்தில் கங்கை கொண்ட சோளீச்சரம் என்ற சிவபெருமான் திருக்கோயிலை எழுப்பிய இராஜேந்திர சோழன் இந்நாவலின் கதைத்தலைவன் ஆவான். முதல் அத்தியாயத்திலேயே ராஜேந்திர சோழன் திருவாரூர் திருக்கோயிலில் தியாகராஜரின் சன்னிதியில் வழிபாடு நிகழ்த்தி ''தென்னாடுடைய சிவனே போற்றி'' எனப் பாடி மகிழ்கிறான். கதைத் தலைவி அருள்மொழி ''வாள்தடங்கண் மடமங்கை நல்வீர்'' என்ற திருப்பொற் சுண்ணப்பாடலைப்பாடிக் கொண்டு மருந்து அரைக்கின்றாள். ''நினையப் பிறருக்கு அரிய நெருப்பை'', ''நெக்கு நெக்குருகி'' என்ற திருமுறைப்பாடல்களைப் பாடியவாறு இருநடனமகளிர் கொடும்பாளூர் அரசகுடும்பத்தார் முன் ஆடுவதாக உள்ளது.

தொ.மு. பாஸ்கரத் தொண்டமானின் ''வேங்கடம் முதல் குமரிவரை'' என்ற திருத்தலப் பயணமும் இவ்விதழில் தொடங்குகிறது.

17.1.1960 : இந்த ஆண்டில் தமிழ் இலக்கியத்தை நன்கு ஆழ்ந்து படித்த நா. பார்த்தசாரதியின் ''குறிஞ்சி மலர்'' தொடங்கியது. முதல் அத்யாயத்திலேயே கதைத்தலைவி பூரணி நடராஜருக்கு மாலை அணிவிக்கும் காட்சி அட்டையில் இடம் பெற்றுள்ளது. முதல் அத்தியாயத்தில் பூரணியின் தம்பி திருவண்டப்பகுதியைப் படித்துக் கொண்டிருக்கிறான். தொடர்கதையின் தலைப்புப் பாடல்கள் பல அத்தியாயங்களில் திருமுறைப் பாடல்களாக அமைந்துள்ளன. சைவ மணம் கமழ்ந்த ''குறிஞ்சி மலர்'' 25.9.1960-ஆம் ஆண்டில் நிறைவுற்றது.

1960-ஆம் ஆண்டிலும் தொடர்ந்த ''வேங்கையின் மைந்தனில்'' மூன்றாம் பாகம் முதல் அத்யாயம் ''கல்லோ கவிதை அதன் சொல்லோ கடவுள்'' ஆகும். இவ்வத்யாயத்திற்கான முழுப்பக்கப் படமாக வினுவின் ''சண்டீசப் பதம் தரும் சிற்பம்'' ஓவியம் இடம் பெற்றுள்ளது. இத்தொடர்கதை 28.8.1960-ஆம் ஆண்டில் நிறைவுற்றது.

15.1.1961 : இந்த ஆண்டில் நா. பார்த்தசாரதியின் ''மணிபல்லவம்'' தொடர்கதை தொடங்கியது.

16.4.1961 : இந்த ஆண்டில் ராஜாஜி சோமு ஆகியோர் இணைந்து எழுதிய ''திருமூலர் தவமொழி'' கட்டுரைத் தொடர் தொடங்கியது.

7.6.1962 : இதில் மணியத்தின் ''சிவபெருமான் நின்ற கோலம்'' அட்டையை அலங்கரித்தது.

2.9.1962 : இந்த ஆண்டில் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமானின் ''வேங்கடத்துக்கு அப்பால்'' திருத்தலப் பயணக் கட்டுரைத் தொடர் தொடங்கியது. இதே இதழில் ஜெகசிற்பியனின் ''பத்தினிக் கோட்டம்'' தொடர்கதை தொடங்கியது. முதல் அத்யாயத்தில் ''சொற்றுணை வேதியன்'' தேவாரப் பாடலை ஒரு இளந்துறவி பாட அதனை உத்தமசீலி கேட்கிறாள். இத்தொடர்கதை 19.1.1964- ஆம் ஆண்டில் ''பரமேசுவர கிருகம்'' என்ற அத்யாயத்துடன் நிறைவுற்றது.

14.1.1963 : இந்த ஆண்டில் நா. பார்த்தசாரதியின் ''பொன்விலங்கு'' தொடர்கதை தொடங்கியது.

14.4.1963 : இந்த ஆண்டில் (தமிழ்ப் புத்தாண்டு சிறப்புமலர்) மணியம் ஓவியங்களுடன் ''திருக்கோவையார்'' சித்திரமடல் இடம் பெற்றது. 28.4.1963-ஆம் ஆண்டில் ஓவியர் மணியத்தின் ஓவியம் (உமா தேவியார் சிவபெருமான் கண்ணை மூடுதல்) அட்டையில் இடம் பெற்றது.

12.4.1964 : இந்த ஆண்டில் அகிலனின் ''கயல்விழி'' தொடர்கதை தொடங்கியது. முதல் அத்யாயத்தில் ''வானில் பொலிவெய்தும்'', ''மயில்புல்குதண் பெடையுடன்'' ஆகிய பாடல்களைச் சுந்தரபாண்டியன் பாடுகிறான். இத்தொடர்கதை 11.4.65-ஆம் ஆண்டில் நிறைவுற்றது.

8.11.1964 : இந்த ஆண்டில் திருமுருக கிருபானந்தவாரியரின் ''கந்தன் கருணை'' என்ற கந்தபுராண வரலாறு தொடங்கி

6.2.1966-ஆம் ஆண்டில் நிறைவுற்றது. *20.11.64*-ஆம் ஆண்டில் அட்டையில் மணியத்தின் ''சிவபெருமான் ஓவியம்'' இடம் பெற்றது. *1965* அக்டோபரில் அகிலனின் ''வெற்றித்திருநகர்'' தொடங்கியது. *17.4.1966*-ஆம் ஆண்டில் திருமுருக கிருபானந்த வாரியாரின் ''சிவனருட் செல்வர்'' என்ற பெரியபுராண வரலாறு தொடங்கி *30.7.1967*-ஆம் ஆண்டில் நிறைவுற்றது. *17.4.1966*-ஆம் ஆண்டில் அட்டை ''சேக்கிழார் யானைமேல் பவனி வருதல்'' மணியம் ஓவியத்தால் அழகூட்டப்பட்டது.

கல்கி

தீபாவளிமலர்கள்

1943

கட்டுரைகள் : ஞானத்தமிழ் (திருப்புகழ்மணி), கல்லும் சொல்லாதோ கவி (தொ.மு. பாஸ்கரத் தொண்டமான்), மடாலயத் தொண்டு.

ஓவியம் : பொன்வேய்ந்த பராந்தகன் (வர்மா), பூசலார் (வர்மா)

1944

ஓவியம் : எல்லோராச் சிற்பங்கள் (மணியம் – *4* பக்கங்கள்)

1946

ஓவியம் : சிவானந்த நடனம் (கனுதேசாய்), தஞ்சை சித்திரங்கள் – சுந்தரர் (மணியம், சந்திரா – *4* பக்கங்கள்) திரிபுர சம்காரம் (மணியம், சந்திரா)

1950

ஓவியம் : ஆனந்த நடனம் – பட்டினத்தார் பாடல் (ஸ்ரீமதி – வண்ண ஓவியம்)

1952

ஓவியம் : ''தேனாடு கொன்றை'' – திருவாசகப்பாடல் (மணியம் – அட்டைப் படம் – வண்ண ஓவியம்), காஞ்சி கைலாசநாதர் சிற்பம் (மணியம்).

1953

ஓவியம் : ''அடிபேரில் பாதாளம் பேரும்'' – காரைக்காலம்மையார் பாடல் (மணியம் – வண்ணப்படம்).

1955

ஓவியம் : இசைக்கு அருளும் பெருமான் – இராவணன் வீணை மீட்டல் (மணியம்) மீனாட்சி திருமணம் (மணியம் – வண்ணம்), ஆடல்வல்லான் (மணியம் – வண்ணம்)

1956

ஓவியம் : ''பித்தாபிறைசூடி'' (கனு தேசாய் – வண்ணம்)

1957

ஓவியம் : ''தெய்வத் திருமணம்'' – தடாதகைப் பிராட்டி (எஸ். ராஜம் – வண்ணம்), பார்வதியின் தவம் (ரத்னம் – ஓவியம்)

1958

ஓவியம் : சிவன் – பார்வதி (மணியம்- அட்டைப்படம்; வண்ணம்); மங்கையர்க்கரசி – கதைச்சித்திரம் (வினு – *4* பக்கங்கள்).

1959

ஓவியம் : சிவ பார்வதி நடனம் – ஆவுடையார் கோயில் சிற்பம் (வினு – வண்ணம்) சோமாசிமாறர் (வினு), நால்வர் வாழ்வுக்காட்சிகள் (வினு – *4* பக்கங்கள்)

1960

ஓவியம் : குமாரசம்பவம் – சிவபெருமான் பார்வதிதவம், பார்வதி செடிக்கு நீர்ஊற்றுதல், சிவபெருமானைச் சந்தித்தல், முருகன் தோற்றம் (*4* பக்கங்கள் – வண்ணம்); யோகபோகீஸ்வரர், கஜசம்காரர், திரிபுராந்தகர் (வினு – வண்ணம்)

1964

ஓவியம் : ஹரிஹரன் (*1*) அரன்மணம் – அரிதாரை வார்த்தல் (*2*) மாமனாகிய திருமால் முருகனுக்கு அபிடேகம் செய்தல் (*3*) ஹரன் – ஹரி (மனைவி) முருகனைக் கொஞ்சுதல் (*4*) அன்னபூரணி (*5*)

ஹரிஹரன் விற்போர் (6) ஹரிஹரனை வழிபடுதல் (7) ஹரன் விஷ்ணுவை வழிபடுதல் (8) திருமால் அடிதேடுதல் (வினு – 8 படங்கள் – வண்ணம்)

1965

ஓவியம் : திருஆனைக்கா தலக்காட்சிகள் (வினு – வண்ணம் – 4 பக்கங்கள்)

1966

ஓவியம் : கிருபானந்தவாரியார்

ஓவியம் : திருவக்கரைக் காட்சிகள் (வினு – 4 பக்கங்கள்)

1967

ஓவியம் : கலிங்கத்துக் காட்சிகள் (வினு – 6 பக்கங்கள்), கோனாரக்

1968

கட்டுரைகள் : கிருபானந்தவாரியார், கி.வா. ஜகந்நாதன்

ஓவியம் : ''விளையாடலும் திருவிளையாடலும்''

(1) திருப்பொற்சுண்ணம், (2) திருத்தெள்ளேணம், (3) திருப்பூவல்லி, (4) திருவுந்தியார், (5) திருத்தோணோக்கம், (6) திருப்பொன்னூசல் (எஸ். ராஜம் – வண்ணம் – 6 பக்கங்கள்) எல்லோரா திரிமூர்த்தி (மணியம்)

2

கலைமகள்

1934 : ''சில தமிழ் நூல்கள் காலக் குறிப்புகள்'' (எஸ். அனவரத விநாயகம் பிள்ளை), ''சைவர்'' (ந.மு. வேங்கடசாமி நாட்டார்), திருவிசயமங்கை (சுந்தரேச வாண்டையார்), வலிவல மும்மணிக் கோவை – தொடர், (உ.வே. சா குறிப்புரை)

1935 : ''மங்கையர்க்கரசியார்''

1939 : ''திருக்குற்றாலச் சிலேடை வெண்பா'' – குறிப்புரை

1941 : ''தில்லையின் புராதனக் கல்வேட்டுகள்'' (எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்), ''திருக்கேதீச்சுரம்''; ''திருநீலகண்ட நாயனார் சரித்திரம்'' (கோபால கிருஷ்ண பாரதியார்– 5 கட்டுரைகள்)

1950 : அ.ச. ஞானசம்பந்தனின் ''தேசிய இலக்கியம்'' தொடராக வந்தது; நவம்பர் – தீபாவளி மலர் – ''ஞானக்குழந்தை'' (த.நா. குமாரஸ்வாமி), ''பிறவாப் பெருமையும் இறவாப் புகழும்'' (தொ.மு. பாஸ்கரத் தொண்டமான்), கங்காதரர் (வி.துரைஸ்வாமி ஆச்சாரியார் – வண்ண ஓவியம்)

1952 : (தீபாவளி மலர்) ''சேக்கிழார் வரலாறு, (எஸ். ராஜம் – ஓவியம்)

1954 : மாணிக்கவாசகர் காலம் (கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை)

1955 : ''வாருங்கள் பார்க்கலாம்'' என்று பின்னால் நூலாக வந்தது. கி.வா. ஜகந்நாதன் நால்வர் பெருமக்களோடு தொடர்புடைய தலங்களின் சிறப்புகளைப் பயணக் கதையாகக் கூறும் தொடர். மாயூரம் என். ராமகிருஷ்ணாவின் புகைப்படங்களுடனும், எஸ். ராஜம் அவர்களின் ஓவியங்களுடனும் வெளி வந்தது.

1955 : ஜனவரியிலிருந்து 1956 டிசம்பர் வரை வெளி வந்தது.

1963 : ''நவதாண்டவம்'' – (தொ.மு. பாஸ்கரத் தொண்டமான்)

1965 : சிற்பத்தில் சிவலீலைகள் (வி. இராமமூர்த்தி)

1971 : ''பட்டினத்து அரசு'' (இரா. நாகசாமி), ''திருவஞ்சைக்களம்'', ''திருநல்லம்.

1973

கட்டுரை : கிருபானந்தவாரியார்

ஓவியம் : சிவசயனம் (வினு – வண்ணம்); திருப்பாச்சிலாச்சிரமம் நடராஜர்.

1982

ஓவியம் : திருக்குறுங்குடி சிற்பங்கள் (மணியம் செல்வன் – 8 பக்கங்கள் – வண்ணம்)

1983

கட்டுரை : கோவிலூர் காட்சிகள் – ஆனந்தி (வண்ணப்படங்களுடன் – மணியம் செல்வன் – பக்கம் 4)

ஓவியம் : ஊர்த்துவ தாண்டவமூர்த்தி, கங்காளநாதர், காலசம்கார மூர்த்தி (லதா – வண்ணம்) தக்ஷிணாமூர்த்தி, தகப்பன்சாமி

1985

கட்டுரை : திருவாசகம் (கி.வா. ஜகந்நாதன்)

1986

ஓவியம் : தக்கயாகப்பரணி – சிவபெருமான் கண்ட தேவி தரிசனம் (வினு – அட்டை)

1987

கட்டுரை : கிருபானந்தவாரியார்

ஓவியம் : காசி விசுவநாதர் (வண்ண புகைப்படங்கள்)

1988

கட்டுரை : கிருபானந்தவாரியார்; ஞானக்கவிஞர்களின் காதற்கவிதை

1) ''ஆகாத நஞ்சுண்ட அந்தி வண்ணன்''
2) ''கோயில் பூத்தவர்''
3) ''வெள்ள நீர்ச்சடையனார்''
4) ''சேற்றெழுந்த''
5) ''வெந்தநீறு மெய்யிற்பூசுவர்''
6) ''ஏரார் இளங்கிளியே''
7) ''நெக்கு நெக்கு உள்ளுருகி'' – மீ.ப. சோமு; கோபுலுவின் வண்ண ஓவியங்கள் - வண்ணம் - ஆறுபக்கம்)

(கோபுலுவின் ஓவியங்கள் – வண்ணம் – ஆறுபக்கம்) ''திருவாரூர் தியாகராஜர் ஆனந்தி (தநுஸுவின் வண்ண ஓவியம் – ஓவியங்கள்)

ஓவியம் : நடராஜர் (அட்டை – புகைப்படம்)

1989

கட்டுரை : ''மனம் கவரும் மல்லி கார்ஜுனர்'' – ஆனந்தி (ஓவியம் – தநுஸு – 4 பக்கங்கள்)

1990

கட்டுரை : ''சம்பந்தர் அவதரித்த சீர்காழி'' – ஆனந்தி (ஓவியம் – தனுஸு – 4 பக்கங்கள்)

1991

கட்டுரை : ''சிக்கல் காட்சிகள்'' – ஆனந்தி (ஓவியம் – தனுஸு)

ஓவியம் : ''ரிஷபாரூடர்'' (என். அமிர்தம் – வண்ணம்)

1992

கட்டுரை : ''மருந்தளிக்கும் மருந்தீசர்'' – ஆனந்தி (ஓவியம் – தநுஸு – 4 படங்கள்) – ஒன்று வண்ணப்படம்

ஓவியம் : ''திரிபுரசுந்தரி'' (தநுஸு – வண்ணம்)

கலைமகள் தீபாவளி மலர்கள்

1964 : குடந்தைக் கீழ்க்கோட்டம் (தொ.மு. பாஸ்கரத் தொண்டமான்), ஆலாலசுந்தரர் (எம்பார் விஜயராகவாச்சாரியார்), கண்ணப்ப நாயனார் (சுகப்பிரமம்)

1955 : தென்பால் உகந்தாடும் கூத்து (பிஸ்ரீ); பார்வதிபரிணயம் (சித்ரலேகா – வண்ண ஓவியம்)

1966 : ஓர் அரிசி (கிருபானந்தவாரியார்) தாயுமானவர் காதல் (மு. வரதராசனார்), மணிவாசகர் கண்ட தில்லை (தொ.மு. பாஸ்கரத் தொண்டமான்) திருஅதிகை வீரட்டானம் (இரா. நாகசாமி)

1967 : ஞானசம்பந்தர், மெய்கண்டார், குமரகுருபரர் (வினு – ஓவியம்)

1968 : நான்கு நாயன்மார் – இளையான் குடிமாறர், மெய்ப்பொருள், குங்குலியக் கலயர், கோச்செங்கட்சோழன் (எஸ். ராஜம் – ஓவியம்)

1969 : சுந்தரர் – தாராசுரம் சிற்பங்கள் (புகைப்படம் – பக்கம் 4).

1970 : ''அற்புதவாழ்க்கை'' – காரைக் காலம்மையார் (உமாபதி – ஓவியம் – பக்கம் – 8) திருநீலகண்டர், மங்கையர்க் கரசியார் (ஜி.கே.மூர்த்தி – வண்ண ஓவியம்)

1971 : ''பூம்பாவை'' (கோபுலு – வண்ண ஓவியம் – பக்கம் 4)

1972 : ''சிறையில் எழுந்த கவிதை'' – தருமி, நக்கீரன் வரலாறு (ஓவியம் – பக்கம் 8) அருளிச்செயலில் சிவபெருமான் (அ. சீனிவாச ராகவன்)

1973 : குங்குலியக்கலயர் (ஓவியம் – பக்கம் 4)

1974 : ''தியாகராஜா'' (கிருபானந்த வாரியார்)

1975 : ''சிவவேடனும் தவவேடனும்'' – அருச்சுனன் (கோபுலு – வண்ண ஓவியம் – பக்கம் 6), ''கீர்த்தன சுந்தரராஜா'', (புகைப்படம் – பக்கம் 4)

1978 : ''பழைய மன்றாடி'', அமரநாதர் (புகைப்படம்)

1979 : ''திருமுறைகளின் கதை'' (உமாபதி – வண்ண ஓவியம் – பக்கம் 40

1980 : ''பார்வதி திருமணம் (வண்ண ஓவியம்)

1981 : ''ஜோதிர்லிங்கம்'' (மூவண்ணம்)

1984 : ''குருஞானசம்பந்தர்'' (சௌந்தரா கைலாசம் – கவிதை)

1985 : ''பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்'' (கிருபானந்தவாரியார்)

1986 : தஞ்சை பெரிய கோயில் (இராம. வீரப்பன்), திருக்கயிலாயர் தரிசனம் (கட்டுரை – வண்ணப்புகைப்படம்)

1989 : ''நடமாடும் கோயில்'' (மாண்பமை எஸ். மோகன்), ''கோலங்களும் கோல விழித் தேவியர்களும்'' – சிவபெருமான் ஒன்பது தாண்டவம் (மணியன் செல்வன் – வண்ண ஓவியம் – பக்கம் 8)

1990 : ''தமிழ்வளர்த்த வள்ளல்'' – திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை (உமாபதி – ஓவியம் – பக்கம் 8)

1991 : சிவநெறி (கிருபானந்தவாரியார்) திருவாரூர் தியாகேசர் (சௌந்தரா கைலாசம் கவிதை)

1992 : சிவசக்தி (வாரியார்) மண்ணுலக மாண்பு (சௌந்தரா கைலாசம்), அருளின் தன்மை (டி.வி. வெங்கடராமன்), தாயுமானவர் காதல் (மு. வரதராசனார்) தாயுமானவர் (ஜி.கே.மூர்த்தி – வண்ண ஓவியம் – பக்கம் 4), திருவிடைமருதூர் (கட்டுரை – சில்பி ஓவியம்)

1993 : ''ஆனந்தவல்லி அகத்தீசுவரப் பெருமான்'' (பத்மவாசன் – வண்ண ஓவியம் – பக்கம் 4), முதல் திருமுறையில் ஆடல் (இரா. கலைக்கோவன்)

1994 : ''வள்ளலார் கோயில் தட்சிணா மூர்த்தி'' (தநுஸு – வண்ண ஓவியம்) வன்தொண்டர், அருணகிரி, அருணந்தி தேவர், கச்சியப்பர் (லதா – வண்ண ஓவியம்) ''திருவாரூர் குறவஞ்சி'' (வண்ணப்புகைப்படம் – பக்கம் 6) ''சிவனருட்செல்வர் தீட்சிதர்'' (ஜி.கே. மூர்த்தி – பக்கம் 4), ''பக்திக்கடிமை பரமன்'' – பசவண்ணர் (ராமு – வண்ண ஓவியம் – பக்கம் 4), சிதம்பரம் நடராஜர் (வண்ணப்படம்)

1995 : ''காலடிக்குப்பாவடி'' (வேதா – வண்ண ஓவியம் – பக்கம் 4)

1996 : ''நால்வர்'' (ஜி.கே.மூர்த்தி – வண்ண ஓவியம் – பக்கம் 4)

1997 : ''கௌமார மடாலயம்'' (வண்ணப் படங்களுடன் கட்டுரை), ''இராமலிங்கர்'' (உமாபதி – ஓவியம் – பக்கம் 8)

1998 : ''சந்தான குரவர்கள்''

1999 : ''முருகனின் வித்தியாசமான திருக்கோயில்கள்'' (சசி – வண்ண ஓவியம் – பக்கம் 4)

3

ஓம் சக்தி

1983

''ஓம் சக்தி'' அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்களின் சக்தி சுகர்ஸ் நிறுவனத்திலிருந்து 1983 பிப்ரவரியிலிருந்து திங்கள் வெளியீடாக இன்று வரை வெளி வந்து கொண்டிருக்கிறது. இலக்கிய, சமூக முன்னேற்ற மற்றும் நாட்டின் பொதுப் பிரச்சினைகளைப் பற்றிய கட்டுரைகளைத் தாங்கி வந்தாலும் சைவசமயக் கட்டுரைகளும் இடம் பெற்று வருகின்றன.

ஆசிரியர் நா. மகாலிங்கம்

1983-ஆம் ஆண்டு மார்ச் இதழ் (மலர் 1 இதழ் 2) மதுரைச் சிறப்பிதழாக மலர்ந்தது. மணியம் செல்வனின் மீனாட்சி திருமணம் வண்ண ஓவியம் அட்டையை அலங்கரித்தது. இதழுக்குள்ளும் மணியம் செல்வனின் கோட்டோவியம் இடம் பெற்றுள்ளது. இதழ் 4-இல் மணியம் செல்வனின் ''தட்சிணாமூர்த்தி'', ''இழைத்த இடையார் – சம்பந்தர்'', ''பொன்னைக் கடந்திலன் – திருமூலர்'' ஆகிய ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. ஐந்தாம் இதழில் மணியம் செல்வனின் ''மீனாட்சி திருமணம்'', ''சோமசுந்தரர்'' இருவண்ண ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. எட்டாம் இதழில் திருக்குற்றாலம் பற்றிய கட்டுரையும், சில்பியின் ஓவியங்கள் இரண்டும் இடம் பெற்றுள்ளன. பத்தாம் இதழில் வி.சி. இராமச்சந்திரன் அவர்களின் ''உலகெங்கும் பரவிய வழிபாடு'' கட்டுரை இடம் பெற்றுள்ளது. இதழ் 11-இல் ராஜியின் ''சிவபெருமான் நடனம்'' ஓவியமும், சந்திரநாத்தின் ''ராமேசுவரம்'' கட்டுரையும் இடம் பெற்றன. பனிரெண்டாம் இதழில் இடம் பெற்ற ராஜியின் ''வீணாதரர்'' ''சிவபார்வதி'' ஓவியங்கள் மிக்க அழகு வாய்ந்தவை ஆகும்.

1984

மலர் 2 இதழ் 2-இல் ராஜியின் ''பிக்ஷாடனர்'' ஓவியம் இதழ் 3-இல் மணியம் செல்வனின் ''நடராஜர்'' ஓவியமும் இடம் பெற்றன. இதழ் 6-இல் காஞ்சி, முத்து தாண்டவர் கட்டுரைகளும், சிவபெருமான் ஓவியமும் இடம் பெற்றன. மலர் 2 இதழ் 7-இல் சந்திரநாத்தின் ''பெருவுடையார் கோயில்'' மா. வைத்திய லிங்கத்தின் ''மாரி முத்தா பிள்ளை'' கட்டுரைகளும் இடம் பெற்றன. தஞ்சை கோயில் வண்ணப் பொலிவுடன் அட்டை யை அலங்கரித்தது. பின் அட்டையில் ஓவியர் மணியத்தின் சிவபெருமானின் வண்ண ஓவியம் அழகுற இடம் பெற்றுள்ளது. உள் அட்டையில் மணியம் செல்வனின் ''நடராஜர் – மாணிக்கவாசகர்'' ஓவியம் இடம் பெற்று உள்ளது 1984 – 85-இல் குறிப்பிடத்தக்க சைவ சமயக் கட்டுரைகள் ஏதும் இடம் பெற வில்லை.

1986-87

பிப்ரவரி 1986(மலர் 4:இதழ் 1)இல் மணியத்தின் ஞானசம்பந்தர் ஓவியமும், மலர் 4 இதழ் 11இல் பிக்ஷாடனர் வண்ண ஓவியமும் இடம் பெற்றுள்ளன. மலர் 4 இதழ் 4இல் ''காபாலிகம்'' படங்களுடன் கட்டுரையும் மலர் 4 இதழ் 5இல் ''சூரியனே சிவன்'' என்ற கட்டுரையும் இடம் பெற்றன.

1987-88

மலர் 5 இதழ் 3இல் ''ஜோதிர்மய மகாலிங்கம்'' கட்டுரையும் சில்பியின் படங்களுடன் இடம் பெற்றுள்ளன.

1988-89

செப்டம்பர் இதழில் மணியத்தின் மயில்மேல் ஏறிவரும் முருகன் அட்டையில் வண்ணத்துடன் காட்சி யளிக்கிறது. நவம்பரில் வெளிவந்த தீபாவளி மலரில் சிவபார்வதி (அட்டை),

ஆடல்வல்லான், பிக்ஷாடனர் (உள் அட்டை) வண்ணத்துடன் இடம் பெற்று உள்ளது. ''தர்மஸ்தலா'' கட்டுரையும் படங்களுடன் வந்துள்ளது.

1989-90

மலர் 7 இதழ் 2இல் குமரகுருபரர் பற்றிய கட்டுரையும், அட்டையில் முழு வண்ண ஓவியமும் அமைந்துள்ளன. ''திருநெல்வேலி'' பற்றிய கட்டுரையும் வெளி வந்துள்ளது. மலர் 7 இதழ் 4இல் ''பேரூர்'' பற்றிய கட்டுரை புகைப்படங்களுடன் வெளியானது. சித்ரலேகாவின் திருத்தொண்டர் அறுபத்துமூவரின் 63 ஓவியங்கள் ஒரு கருவூலம்.

1990-91

அக்டோபர் 90 தீபாவளி மலரில் திருக்கடையூர் பற்றிய கட்டுரை வெளி வந்திருந்தது.

1992-93

மலர் 10 இதழ் 1இல் சித்திரப் பெரிய புரணம், திருவாசகத்தொடர், திருமந்திரம் இடம் பெற்றுள்ளன. 10.2இல் சிவசைலம் பற்றிய கட்டுரை வெளிவந்தது.

1993-94

ல. சண்முகசுந்தரத்தின் குற்றாலக் குறவஞ்சி தொடர் வெளிவந்தது. 11.9இல் (அக் 93) அட்டையில் திருவாரூர் தியாகராஜர் இடம் பெற்றிருந்தார். பட்டீஸ்வர துர்க்கை பற்றிய கட்டுரையும் இடம் பெற்றிருந்தது. 11.10இல் தீபாவளி மலரில் குன்றக்குடி பெரிய பெருமாளின் ''நகரத்தார் நவ திருக்கோயில்கள்'' என்ற கட்டுரை வண்ண ஓவியங்களுடன் இடம் பெற்றிருந்தது. மணியம் அவர்களின் நான்கு வண்ண ஓவியங்களுடன் ''குமார சம்பவம்'' என்ற கட்டுரை இடம் பெற்றிருந்தது. 11.11இல் சித்திரப் பெரியபுராணத் தொடர் – எண் 28 வண்ண ஓவியங்களுடன் இடம் பெற்று இருந்தது.

1994-95

சுவாமி சரவணானந்தாவின் ''சைவ சித்தாந்தத்தில் சாகாக்கலை'' கட்டுரையும் (பிப் 94) ''கருநாடக இசையின் அடிப்படை'' ''தேவார இசைக்கலை நிகழ்ச்சிகள்''; ஆகஸ்ட் 94-ஆம் ஆண்டில் சித்திரப் பெரியபுராணத்தொடர், பகீரதனின் ''திருவடிப்புகழ்ச்சி'' (எண் 16) தொடர் இடம் பெற்றிருந்தன. நவம்பர் 94 (12.10) தீபாவளி மலரில் அட்டையில் சிவ பெருமான் பார்வதி சதுரங்கம் ஆடுதலை அழகான வண்ண ஓவியமாகத் தீட்டியுள்ளார் மணியம். ஜலகண்டேசுவரர், கோவிலூர் ஆண்டவர், தாடிக்கொம்பு ஆகிய கட்டுரைகளும், புகைப்படங்களுடன் வெளி வந்துள்ளன. டிச 94இல் (12.11) திருக்கொடுங்குன்றம் என்ற கட்டுரை வெளி வந்தது. ஜன 95-ஆம் ஆண்டில் (12.12) அட்டையில் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரின் வண்ண ஓவியத்தை மணியன் வடித்திருந்தார். குன்றக்குடி பெரியபெருமாளின் ''திருமெய்யம்'' கட்டுரை படங்களுடன் இடம் பெற்றிருந்தது.

1995-96

பிப் 95இல் (13.1) காளையார் கோயில், ராஜராஜீசுவரம் கட்டுரைகளும் ஏப் 95-ஆம் ஆண்டில் தாடிக்கொம்பு, திருப்பூவணம் கட்டுரைகளும், மே 96-ஆம் ஆண்டில் குன்றக்குடி அடிகளாரின் ''சைவ சித்தாந்தமும் மார்க்சியமும்'' கட்டுரையும், அட்டையில் மணியத்தின் ''சிவ பெருமான்'' ஓவியமும், ஜூன் 95-ஆம் ஆண்டில் திருவண்ணாமலை கட்டுரை, ஜூலை 95 – கலியாணசுந்தரர் – அட்டையில் மணியத்தின் வண்ண ஓவியம்; செப் 95-ஆம் ஆண்டில் கலிவலம் வந்த நல்லூர் கட்டுரை இடம் பெற்றிருந்தன. நவ 95-ஆம் ஆண்டில் தீபாவளி மலரில் அட்டையில் மணியத்தின் முருகன் தந்தைக்கு உபதேசம் செய்யும் காட்சி வண்ண ஓவியமாக அழகுடன் மிளிர்கிறது. திருமுருக கிருபானந்தவாரியார் ''சிவானுபூதிச் செல்வர்'' என்ற கட்டுரை எழுதியிருந்தார்.

1996-97

மே 1996 சைவத்தின் சரித்திரம், சீர்காழி திருமுலைப்பால்விழா, அவிநாசி, திருக்கோளக்குடி, ஜூலை 96 ... முதல்

திருமுறையில் ஆடல் குறிப்புகள் (இரா. கலைக்கோவன்) திருநனிபள்ளி, குன்றக்குடி; செப் 96 ... திருவீழிமிழலை

1996-97-ஆம் ஆண்டில் தஞ்சை (ஜூன்-97) மயிலாப்பூர் (செப்), திருவண்ணாமலை, பட்டமங்கலம் (டிச) ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன. நவம்பர் தீபாவளி மலரில் தனுஷ்கோடி ராமசாமியின் ''குன்றக்குடிக்கு வழி'' என்ற சிறுகதை அடிகளார் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருந்தது.

1997-ஆம் ஆண்டு நவம்பர் தீபாவளி மலரில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின் ''சமயவாழ்வு'' ''திருபுவனம் – சிற்பக்கருவூலம்'', ''ஒருமைப்பாட்டுக்கு ஒரு திருத்தலம் இராமேச்சுரம்'', நீதியரசர் ஆர். செங்கோட்டு வேலனின் ''சேக்கிழாரும் கம்பரும்'' ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன.

1998-99

கோவிலூர் (பிப் 98) வைத்தீஸ்வரன் கோவில் (ஏப்) ஆவுடையார் கோயில், ரமலான் சைவம் கிருஸ்தவம், மாணிக்க வாசகர் சிவ அவதாரம், வயலூர் ஆகிய கட்டுரைகள், அட்டையில் திருக்கயிலாயம் (மே), மதுரைச்சிறப்பிதழ்; மதுரைக் கோயில்கள், மதுரை ஆதீனம், அருளாளர்களும் ஆன்றோர்களும், அருள்நெறி அமைப்புகள் (ஜூன்); வரகுணதேவர், தமிழ்கேட்க ஓடிய எம்பெருமானும் சிவபெருமானும், மயேந்திரப்பள்ளி, பேரூர் சுவாமிகள் பேட்டி, மேலூர் சோமேச்சுவரர், விசயலாய சோளிச்சுவரர் கோயில் (டிச).

1999-ஆம் ஆண்டில் பயிரவர், அப்பரும் ஐந்தும் (ஜன); திருச்சி சிறப்பிதழ்; அட்டை மலைக்கோட்டை, சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி, தமிழ்வேதச் சோதி; திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபை (பிப்); பேரூர் அடிகளார் கும்பாபிஷேகம் செய்யலாமா? மதமாற்றம், நவகோள்கள் வழிபாடு தேவையா? சோமாஸ்கந்தர், (மார்); பிச்சாடனமூர்த்தி, சுந்தரரின் காதல் வாழ்வியல், பெரியபுராணம் ஒரு சமூகப்பார்வை, வடக்காலத்தூர் கல்யாண சுந்தரர் அட்டைப் படமும் கட்டுரையும் (ஏப்); பிரதோச வழிபாடு (ஜூன்) கொல்லிமலை அறப்பளீசர், திருநெடுங்களம் திருக்கோயில் (ஜூலை); முருகனின் முதல் கற்கோயில் (செப்) பட்டீஸ்வரம் (அட்டை), தவத்துறை, யானைத்தோல் போர்த்த அண்ணல், தேவாரப் பண்ணிசையின் தெய்வீகச்சிறப்பு (அக்) அரச மாதேவி கட்டிய கோயில், இன்னிசை பாடும் இனியதிருக்குளம் (டிச). 1999-ஆம் ஆண்டில் நவம்பர் தீபாவளி இதழில் பிரமீளா குருமூர்த்தியின் ''தியாகய்யரின் சிவ பரமான கீர்த்தனைகள்'', குடவாயில் பாலசுப்பிரமணியனின் ''நிலத்திலிருந்து நெடுவான் வரை'' (தஞ்சை பெரிய கோயில்), துரை நமசிவாயத்தின் ''புதுமை பழமையை விழுங்கலாமா?'', ''கலைக்கோயில் கஜூரஹோவின் 1000-ஆவது ஆண்டு'', ''நித்தம் தவம் செய்யும் குமரி அன்னை'' ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

2000-ஆம் ஆண்டில் திருமீயச்சூர் திருக்கோயில்கள், குட்டித்திருவாசகம் (ஜன), காலகாலன், தேவிகாபுரம், திருமுறைகளின் தனித்தன்மைகள், திருவருள் கொழிக்கும் திருவாவடுதுறை (பிப்); வேடனுக்கு முத்திகொடுத்த சிவராத்திரி, பூமேகம் தீர்த்த பெருமான், திருக்கோயில் வழிபாடு, தில்லையாடி, உத்தமர்கோயில் (மார்); ராமப்ப சிவனார் கோயில் (ஏப்) வாழவைப்பன் வைக்கத்தப்பன், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் (மே); அட்டை-அமர்நாத் பனிலிங்கம், கட்டுரை, பவானி கோயில் திருக்குடமுழுக்கு விழா, துலாவூர் ஆதீனத் திருமடம் (அக்); நினைக்க அருள்பொழியும் அருணாசலம், பாவைப் பாட்டு, பிரதோஷ வழிபாடு (டிச); நவம்பர் தீபாவளி மலரில் மார்கரெட் பாஸ்டினின் ''காரைக் காலம்மையார்'', பிரமீளா குருமூர்த்தியின் ''கோபால கிருஷ்ண பாரதியின் நந்தனார் சரித்திரம்'' ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

4

அமுதசுரபி தீபாவளி மலர்கள்

1976 : ''பார்வதி – முருகன்'' (கோபுலு – அட்டை – வண்ண ஓவியம்)

1978 : ''தெய்வ ஞானம் வெற்ற பிள்ளையன்'' (கோபுலு – அட்டை– வண்ண ஓவியம்), ''வாதாபி'' (விக்கிரமன் – படக்கட்டுரை – சுபாவின் ஓவியம்), தமிழக தரிசனம்'' (புகைப்படம்)

1979 : ''சிவசக்தி'' (ஜயேந்திரர்)

1980 : ''மும்மூர்த்திகளுக்கு ஒரு திருக்கோயில்'' (தாமரைக்கண்ணன்), பாரத நாட்டுக்கலைத்தூண்கள் (புகைப் படம்), சுந்தரர் கதை (உமாபதி – சித்திரமடல்)

1981 : ''பல்வேறு நடராஜர் சிற்பங்கள்'' (புகைப்படம் – பக்கம் 6)

1982 : ''ஊசலாட்டு'' (கி.வா. ஜகந்நாதன்), ''தேவிகாபுரம்'' (தாமரைக்கண்ணன்)

1983 : ''பாரதம் கண்ட கட்டிடக்கலை'' – மொகஞ்சோதாரோ முதல் ஆங்கிலேயர் காலம் வரைத் ''திருச்செங்கோடு செங்கோட்டு வேலர்'' (தாமரைக்கண்ணன்)

1984 : ''நந்திகேசுரர்'' (இரா.நாகசாமி), ''பாலா நடராசன்'' – கடம்பூர்க்கோயில் (இரா. கலைக்கோவன்), ''சேந்தமங்கலம் வாணிலை கண்ட ஈசன்'' (தாமரைக்கண்ணன்)

1986 : சிவனும் ராமரும் ஒருவரே'' (சாயிமாதா சிவபிருந்தாதேவி)

1987 : ''ஒட்டக்கூத்தரும் தக்கயாகப் பரணியும்'' (சி. பாலசுப்பிரமணியம்) ''வளவர் கோன் பாவை'' (லட்சுமி ராஜரத்தினம்) ''திருக்கோயில்நாதர்'' (குன்றக்குடி அடிகளார்) ''கரணக்காவியங்கள்'' (இரா.கலைக்கோவன்)

1988 : ''சிவன்–பார்வதி–கந்தன்'' (கோபுலு – அட்டை வண்ண ஓவியம்) ''திருமந்திரம் அருமந்திரம் (ச.மோகன்), (பழுவூர்ப் புதையல்கள்)'' (இரா. கலைக்கோவன்)

1989 : ''பெரியபுராணம் பெருநிதியம்'' (சிவபிருந்தாதேவி) நால்வர் தந்த தமிழ் அமுதம் (ஸுபா-ஓவியம்)

1990 : ''திருவாசகத்தேனமுதம்'' (சாயி மாதா சிவபிருந்தா தேவி) ''மதுராந்தகம் திருவெண்காடுடையார்'' (தாமரைக்கண்ணன்) ''சிவனின் கண்கள்''

1991 : ''தாளவேந்தர் ஞானசம்பந்தர்'' (நா. மகாலிங்கம்)

1993 : ''கங்காதரமூர்த்தி'' (வினு-ஓவியம்) ''வைத்தீஸ்வரன் கோயில் வைத்தியநாதர்'' (தாமரைக்கண்ணன் கட்டுரை – சில்பி ஓவியம்)

1994 : ''கண்கண்ட தெய்வம் கபாலீஸ்வரர்'', ''வல்லம் குடைவரை களும் புதிய கல்வெட்டுகளும்'' (இரா.கலைக்கோவன்)

1995 : ''உமை கவிதை சொல்கிறாள்'' (அட்டை) ''செஞ்ஞாயிறு சேக்கிழார்'' (ச.மோகன்) ''திருமந்திரம் உருவானது'' குன்றக்குடி பொன்னம்பலம் அடிகளார்) திருக்கச்சூர் திருஆலக்கோயில்

1997 : ''ஆரூர் திருக்கோயில் ராஜ கோபுரங்கள்'', ''திருவதிகை வீரட்டானம்'' (தாமரைக் கண்ணன்) ''திருஆலவாயிலில் ஒருநாள்'' (குன்றக்குடி பெரியபெருமாள்) ''கண்டறியாதன காட்டும் கயிலாயநாதர்'' (இரா. கலைக்கோவன்)

1998 : ''திருவிடைமருதூரில் ஒரு திலகவதியார்'', ''நாவுக்கரசர் பார்வையில் ''ந'' – குடவாயில் பாலசுப்பிரமணியன்.

■■■

நான்காம் பகுதி

I

1900-ஆம் ஆண்டுவரை வெளியான நூல்கள்

ஜான் முர்டோச்சின் தொகுப்பு

ஜான் முர்டோச் என்பவர் தான் முதன்முதலில் *1900* வரை தமிழில் வெளிவந்த அச்சிடப்பட்ட நூல்களைத் தொகுத்துப் பட்டியலிட்டு தந்தார். "Tamil Printed Books" என்று அந்நூலுக்குப் பெயர் ஆகும். இந்நூலின் முதற்பதிப்பு *1865*-ஆம் ஆண்டில் Tamil Development and Research Council, Govt. of India வினரால் வெளியிடப் பட்டது. *1968*-ஆம் ஆண்டில் மறுபதிப்பு வெளியானது. ஜான் முர்டோச் *22.7.1819*-ஆம் ஆண்டில் கிளாஸ்கோவில் பிறந்தவர். *1904*-ஆம் ஆண்டில் மறைந்தார். அவருடைய நூலிலிருந்து ''சைவசமய நூல்கள்'' மட்டும் பட்டியலிட்டு இங்கு தரப்பட்டுள்ளது.

(நூலின் பெயர் : ஆசிரியர்/பதிப்பித்தவர்; ஆண்டு; பக்கம்; பொருளடக்கம்)

அ. இந்து சமய மறுப்பு

1) Test of Religions *(சமய பரீட்சை)*; Rev R. Brew; 1851; *465 பக்கம்*; இந்து சமயம்; – கிறித்துவ சமய வேறுபாடுகள்.

2) Dialogue between a Christian and Casi Pandaram; V.F. Thomas; 1859; *666* பக்கம்.

3) Brilliant Lamp; *(சுப்பர தீபம்)*; D.Carroll; 1857; *66 பக்; யாழ்ப்பாண* சைவர்களின் கிறித்துவ எதிர்ப்புக்கு மறுப்பு.

4) Lactures on the Vedantic Poet Tayumanavar; ஜான் அறிவானந்தம் பிள்ளை; *1865*; பக்கம் *33*.

ஆ. இந்துசமய மறுப்பு
(கவிதை நூல்கள்)

1) The Blind Way (குருட்டு வழி); வேதநாயக சாஸ்திரி, Rev Dr. Winslow; 1833; உருவ வழிபாட்டை சாடி மேற்கோள்கள்.

2) சாஸ்திரிக்கும்மி; வேதநாயக சாஸ்திரி; *1840*; *125* பக்கம்; இந்துக்களின் மூட நம்பிக்கைகளைச் சாடி நையாண்டி கவிதைகள்.

3) விதிவிலக்கு; வேதநாயக சாஸ்திரி; *1852*; 62 பக்.

இ. சிவனைப் பற்றிய நூல்கள்

1) அம்பை கனகம்; அப்பாவு முதலியார்; 19-ஆம் நூற்றாண்டு; சிவன் புகழ்ச்சி.

2) அப்பர் சுவாமி தேவாரம்.

3) அப்பர் சுவாமி பதிகம்; காசி விசுவநாத முதலியார்; *19*-ஆம் நூற்றாண்டு; 7 பக்.

4) அருணாசல புராணம் (உரையுடன்); *158* பக்கம்.

5) அருணை கலம்பகம்; பக்கம் *21*; பள்ளிகளுக்குப் பயன்படுத்த.

6) அருணகிரி அந்தாதி; பக்கம் *16*.

7) அருணாசல கீர்த்தனை; R. Tiranapulavar; 19-ஆம் நூற்றாண்டு. பக்கம் 260.

8) அருணாசல சதகம்.

9) அருணாசலர் மாலை; மதுரை முத்து செட்டியார்; *19*-ஆம் நூற்றாண்டு; *13* பக்கம்.

10) அறுபத்துமூவர் உச்சவ வழிநடைத் தரு; அஷ்டாவதான சபாபதி முதலியார்; 19-ஆம் நூற்றாண்டு; 16 பக்கம்.

11) ஆத்திசூடி புராணம்; 377 பக்கம்; ஆத்திமாலை அணிந்த 64 சிவபக்தர்களின் கதைகள் Large circulation.

12) ஏகாம்பரநாதர் பஞ்சரத்தினம்; 19-ஆம் நூற்றாண்டு.

13) ஏகாம்பரநாதர் சரித்திரம்; 19-ஆம் நூற்றாண்டு.

14) ஏகாம்பரநாதர் உலா.

15) ஏகாம்பரநாதர் விருத்தம்.

16) கண்ணப்பநாயனார் சரித்திரக் கீர்த்தனை;

17) கபாலீசுரர் வழிநடைப்பதம்; வெங்கடாசல முதலியார்; 19-ஆம் நூற்றாண்டு; 8 பக்கம்.

18) கபாலீசுரர் பதிகம்; முருகேச முதலியார்; 19-ஆம் நூற்றாண்டு 6 பக்கம்.

19) கச்சபாலய ஈஸ்வரர் கீர்த்தனைகள்; தியாகராஜ கவிராயர்; 19-ஆம் நூற்றாண்டு; 9 பக்கம்.

20) கச்சப்பையீஸ்வரன் விருத்தம்; 19-ஆம் நூற்றாண்டு; 15 பக்கம்.

21) கச்சி மாலை; 18 பக்கம்.

22) காரைக்கால் அம்மை அந்தாதி

23) காசி காண்டம்.

24) காசிக் கலம்பகம்; 25 பக்கம்.

25) காசி சரித்திரம்; வீராசாமி ஐயர்;

26) கயிலைபாதி காளத்திபாதி வெண்பா; 18 பக்கம்.

27) கேதாரி நாதர் விரதம்; 20 பக்கம்.

28) கும்பகோண சேத்திர கும்பேசுரர் சரித்திரம்; 90 பக்கம்.

29) குருநாத சதகம்; கருணையானந்த சுவாமிகள்; 16 பக்கம்.

30) குயில் பாடல்; கந்தசாமி கவிராஜ பண்டிதர்; பக்கம் 8; 63 சிவபக்தர்களைப் புகழ்ந்து பாடியது.

31) மல்லிகேசுவரர் பஞ்சரத்தினம்; சிங்கார வேலுமுதலியார்; 19-ஆம்நூற்றாண்டு; பக்கம் 8.

32) மதுரை பதிற்றுப்பத்தந்தாதி; பக்கம் 16;

33) மதுரை வெண்பா; பக்கம் 92.

34) மெய்ஞ்ஞான சுவாமி கீர்த்தனை; சிவனைப் புகழுதல்.

35) முத்துத்தாண்டவர் கீர்த்தனை; பக்கம் 64.

36) மூவர் அம்மானை; பக்கம்; சிவன், விஷ்ணு; முருகனைப் பற்றியது.

37) நடேசர் கீர்த்தனம்; மார்க்கண்ட முனி சாமி நாவலர்; 19-ஆம் நூற்றாண்டு; பக்கம் 112.

38) நமசிவாய மாலை; பக்கம் 20.

39) நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி.

40) நவமணித்தீபம்; அருணாசலமுதலியார்.

41) நால்வர் ஆனந்தக் களிப்பு; சபாபதி முதலியார்.

42) நால்வர் நான்மணி மாலை; பக் 16.

43) ஞானகிரீசர் பதிகம்; ஏகாம்பர முதலியார்; பக்கம் 8.

44) பட்டினத்தார் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை பக்கம் 30.

45) பட்டினத்தார் கோயில் நான்மணி மாலை; பக்கம் 23.

46) பழமலை அந்தாதி; பக்கம் 14;

47) பஞ்சாதிகார விளக்கம்.

48) பரசமயப்பிள்ளைத் தமிழ்; அங்கப்ப நாவலர்; பக்கம் 33; சிவபக்தரின் வரலாறு.

49) பரமரகசிய மாலை; குரு நமசிவாயம்; பக்கம் 15; சிதம்பர ரகசியம் பற்றியது.

50) பெரியபுராணம் உரையுடன்; பக்கம் 802.

51) பெரியபுராண சாரம்.

52) பெரியபுராண கீர்த்தனை; கேசவ முதலியார்; 19-ஆம் நூற்றாண்டு பக்கம் 94.
53) பெரியபுராண வசனம்; ஆறுமுக நாவலர்; 19-ஆம் நூற்றாண்டு; பக்கம் 235; படங்களுடன்.
54) பிரமோத்திர காண்டம்.
55) பொன்வண்ணத்து அந்தாதி; பக்கம் 15.
56) போற்றிக்கலி வெண்பா; பக்கம் 8; 64 திருவிளையாடல்களைப் பற்றியது.
57) புஷ்பவிழி; ஞானப்பிரகாச சுவாமிகள்; பக்கம் 16.
58) சடைமலை அந்தாதி.
59) சம்பந்த சுவாமி தேவாரம்; பக்கம் 572.
60) சம்பந்தசுவாமி கீர்த்தனை; சபாபதி முதலியார்; 19-ஆம் நூற்றாண்டு; பக்கம் 8.
61) சம்பந்தசுவாமி பதிற்றுப்பத்தந்தாதி; மீனாட்சி சுந்தரம்பிள்ளை; பக்கம் 16.
62) சம்பந்தசுவாமி திருத்தாலாட்டு; 19-ஆம் நூற்றாண்டு; பக்கம் 11.
63) சைவசமய சந்திரோதயம்.
64) சைவசமய விளக்க வினாவிடை – C.S. சபாபதி முதலியார், S. சதாசிவ முதலியார்; 19-ஆம் நூற்றாண்டு; 180 பக்கம்.
65) சேக்கிழார் புராணம்; பக்கம் 22.
66) சேத்திரக் கோவை;
67) சிவநாம சங்கீர்த்தனம்; சுந்தர முதலியார்; பக்கம் 14 (68) சிவநாமா வளி (69) சிவ பராக்கிரமம்; பக்கம் 29 (70) சிவானந்த லகிரி (71) சிவானந்த மாலை.
72) சிவஞானசாஸ்திரம் (73) சிவநெறிப் பிரகாசம்.
74) சிவபஜனை; சபாபதி முதலியார்; பக்கம் 66.
75) சிவபூஜாமஞ்சரி (76) சிவபுண்ணியத் தெளிவு; பக்கம் 22) (77) சீவகாருண்ணியத் தெளிவு (78) சோண சைல மாலை; பக்கம் 66;
79) சுந்தரமூர்த்தி தேவாரம்; பக்கம் 152
80) சுந்தரமூர்த்தி கீர்த்தனை (81) சுந்தரர் வேடுபறி (82) சுந்தரசேகரர் இரட்டை மணிமாலை.
83) சூதசங்கிதைபுராணம்.
84) தேவாரப் பதிகம்; 40 பக்கம்.
85) தில்லைநடராஜ சதகம்; அய்யாத்துறை பிள்ளை; 19-ஆம் நூற்றாண்டு. பக்கம் 28.
86) தில்லை பதிற்றுப் பத்தந்தாதி (87) திருக்கழுகுன்றபுராணம்; பக்கம் 310.
87) திருக்கழுகுன்றமாலை.
88) திருக்கழுகுன்ற புராண சரித்திரம்
89) திருக்கருவைக் கலித்துறை அந்தாதி; பக்கம் 13
90) ’ திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்ததி; பக்கம் 13
91) திருக்கருவை வெண்பா அந்தாதி; பக்கம் 14
92) திருக்குற்றாலக் குறவஞ்சி; 53 பக்கம்.
93) திருமேனிமாலை
94) திருமுல்லைவாயில் மாசிலாமணிப் பதிகம்; அருணாசல முதலியார்
95) திருப்புகலூர் அந்தாதி; நெற்குன்ற வாண முதலியார்; பக்கம் 15
96) திருப்புலியூர் வெண்பா; மாரிமுத்து பிள்ளை; 19-ஆம் நூற்றாண்டு பக்கம்14
97) திருப்புலியூர் சரித்திரம்
98) திருச்சிதம்பர புராணம் அல்லது கோயிற்புராணம்.
99) சிதம்பர புராண சுருக்கம்
100) சிதம்பர புராண சரித்திரம்
101) திருச்சிற்றம்பலக் கோவை
102) திருச்சிற்றம்பல இரகசியம்
103) திருச்சிற்றம்பலக் கலித்துறை
104) திருச்சிற்றம்பலமாலை; ஞானசுந்தர ஐயர்; 19-ஆம் நூற்றாண்டு; பக்கம் 20.

105) திருச்சிற்றம்பலநாதர் பதிகம்; கருணை ஐயர்; 19-ஆம் நூற்றாண்டு; பக்கம் 8
106) திருத்தில்லை யமக அந்தாதி; மீனாட்சி சுந்தரம் பிள்ளை; 19-ஆம் நூற்றாண்டு; பக்கம் 15.
107) திருத்தொண்டத் தொகை; பக்கம் 6;
108) திருவண்ணாமலை வெண்பா பக்கம் 15
109) திருவாசகம்; பக்கம் 122
110) திருவாதவூர்ப் புராணம்; பக்கம் 118
111) திருவெண்காட்டுப் புராணம்; பக்கம் 106
112) திருவிளையாடற்புராணம்; பக்கம் 456.
113) திருவிளையாடற் புராண சரித்திரம்; பக்கம் 30
114) திருவிளையாடல் அம்மானை
115) திருவிசைப்பா; பக்கம் 44
116) திருவொற்றியூர் மும்மணிக் கோவை
117) திருவொற்றியூர் அந்தாதி; 19-ஆம் நூற்றாண்டு; பக்கம் 15.
118) திருவொற்றியூர் மூவர் தமிழ்; பக்கம் 11.
119) திருவொற்றியூர் நடன சரித்திரம்; பக்கம் 10.
120) துறைசை வெண்பா.
121) வன்னிவனமாலை; தியாகராஜா கவிராயர்; 19-ஆம் நூற்றாண்டு; பக்கம் 16; ஆற்காட்டிற்கு அருகில் உள்ள சிவன் கோயில் மேல் பாடியது.
122) வேங்கை கோவை; பக்கம் 64; திருச்சிக்கு அருகில் உள்ள சிவன் கோயில் மேல் பாடியது.
123) வேதகிரி ஈஸ்வரர் ஆசிரிய விருத்தம்; சிதம்பர சுவாமி; 19-ஆம் நூற்றாண்டு; பக்கம் 7.
124) வேதகிரி ஈஸ்வரன் பதிகம்; பக்கம் 5.
125) விரிஞ்ச புராணம்.
126) விருத்தாசல புராணம்; ஞானக்கூத்த சுவாமிகள்; பக்கம் 154.
127) விசுவநாத தரிசனம்.
128) விசுவநாதர் திருவருட்பா.

பார்வதி

1) அகிலாண்டவல்லி ஆசிரிய விருத்தம்.
2) அகிலாண்டீஸ்வரி பிள்ளைத் தமிழ்.
3) அம்பிகைமாலை.
4) அபிராமியந்தாதி.
5) காமாட்சி அம்மன் பதிகம்.
6) காமாட்சியம்மன் பிள்ளைத்தமிழ்.
7) காமாட்சி அம்மன் விருத்தம்.
8) கேதாரி கௌரி திருவருட்பா.
9) கொடியிடை மாலை.
10) குயிலம்மை மாலை.
11) மரகதவல்லியம்மன் ஆசிரிய விருத்தம்.
12) மீனாட்சியம்மன் அகவல்.
13) மீனாட்சி அம்மன் கலிவெண்பா
14) மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ்.
15) பெரியநாயகியம்மன் ஆசிரிய விருத்தம்
16) பெரியநாயகியம்மன் பதிகம்.
17) சாவித்திரி அம்மன் கொப்பிப்பாட்டு
18) சிவகாமி அம்மை ஆசிரிய விருத்தம்
19) சௌந்தரிய லகரி
20) சுகந்தகுந்தள நாயகி பதம்
21) திரிபுர சுந்தரி மாலை
22) திருக்கலைசைச் சிலேடை வெண்பா.
23) உலகம்மை அந்தாதி.
24) வடிவுடையம்பாள் ஆசிரிய விருத்தம்.
25) வடிவுடையம்மன் கும்மிப்பாடல்.
26) வடிவுடையம்மன் நவரத்தினம்.
27) வடிவுடையம்மன் பஞ்சரத்தினம்.

28) வராகி மாலை.

சைவ சித்தாந்தம்

1) அறிவானந்த சித்தியார்; பக்கம் 48.
2) அறிவு விளக்கம்.
3) பட்டணத்துப் பிள்ளை பாடல்; பக்கம் 46.
4) பட்டணத்துப் பிள்ளை மெய்ஞ் ஞானப் புலம்பல்; பக்கம் 48.
5) பதி பசு பாச விளக்கம்; பக்கம் 26; சங்கராச்சாரியார் பாடிய 10,000 பாடல்களின் சுருக்கம்.
6) பத்திரகிரியார் புலம்பல்; பக்கம் 24.
7) பாடுதுறை; தத்துவராயர்; பக்கம் 248.
8) பாலையானந்த சுவாமிகள் பாடல்.
9) பிரபோத சந்திரோதயம்.
10) போற்றிமாலை.
11) போகர் பூஜாவிதி.
12) ராஜயோக சாரம்.
13) சங்கற்ப நிராகரணம்.
14) சித்தாந்த தீபிகை.
15) சிவஞான போதம்; இந்நூலின் ஒரு பகுதி ''தினவர்த்தமானி'' என்ற தமிழ் செய்தித்தாளில் மறைத்திரு P. பெர்சிவல் பாதிரியாரால் வெளியிடப் பட்டுள்ளது.
16) சிவஞானதீபம்; பக்கம் 47.
17) சிவப்பிரகாசம்;
18) சிவப்பிரகாசக் கட்டளை; பக்கம் 18; மறைத்திரு T. Foulker ஆல், மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
19) சிவப்பிரகாச வெண்பா
20) சிவபோக சாரம்; பக்கம் 23
21) சைவ தத்துவாமிர்தக் கட்டளை;
22) சிவ விவேகம்
23) தத்துவக் கட்டளை
24) தத்துவ விளக்கம்
25) தாயுமானவர் பாடல்; பக்கம் 182
26) தேவிகாலோத்தரம்; சரவண தேசிகர்; பக்கம் 12; பார்வதி சிவபெருமானிடம் பெற்ற உபதேசம்
27) திருஞான தாழிசை
28) தோத்திர மாலை; சிதம்பர சுவாமிகள்; பக்கம் 19

இந்து சமயம் – முரண்பாடுகள்; இந்துசமயத்தைத் தாக்குதல் சித்தர் மரபு

1) அகப்பேய் சித்தர் பாடல்; பக்கம் 16;
2) ஞானம் நூறு
3) இடைக்காட்டுச் சித்தர் பாடல்; பக்கம் 24
4) கடுவெளிசித்தர் பாடல்; பக்கம் 8;
5) கபிலதேவர் அகவல்; பக்கம் 16;
6) கபிலர் சதகம்
7) கொங்கணர் ஞானம்; பக்கம் 20
8) குதம்பை சித்தர் பாடல்; பக்கம் 6.
9) பாம்பாட்டி சித்தர் பாடல்; பக்கம் 30
10) ரோமரிஷி பாடல்
11) சிவவாக்கியம்; பக்கம் 23

சைவத்தை எதிர்த்து வைணவ நூல்கள்

1) பரப்பிரமம் விவேகம்; பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்; 14-ஆம் நூற்றாண்டு; பக்கம் 10.
2) பாஷண்டசம் வாதம்; நாராயணசாமி நாயகர்; 19-ஆம் நூற்றாண்டு
3) இலிங்கமத கண்டனம்; அப்பாவு முதலியார்; 19-ஆம் நூற்றாண்டு.
4) இருசமய விளக்கம்; அரிதாசர்; 17-ஆம் நூற்றாண்டு.

வைணவத்தை எதிர்த்து சைவநூல்கள்

1) துர்ப்போத சம்வாதம்; பராங்குச மல்லையர்; 19-ஆம் நூற்றாண்டு; பக்கம் 20;

2) மூடமதி கண்டனம்;

3) பொன்னபிள்ளை; 19-ஆம் நூற்றாண்டு; பக்கம் 18.

3) இருசமய விளக்க ஜோதி; பொன்னம்பல சுவாமிகள்; 19-ஆம் நூற்றாண்டு; பக்கம் 72.

கிறித்துவ சமயத்திற்கு எதிரான நூல்கள்

இந்துக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விடவும், கிறித்துவ சமயத்தை எதிர்க்கவும் பல சம்பவங்கள் நிகழ்ந்தன. Lex Loei சட்டம் மதம் மாறியவர்களுக்கு இருந்த சட்டக் குறைபாடுகளை நீக்கியது. பல இந்துக்கள் தங்கள் சமயம் விட்டுப் பிரிந்தனர். "The Blind Way", "The Hindu Triad" என்ற கனல் பறக்கும் கிறித்துவ இதழ்கள் பெரும்பான்மை மக்களிடையே வரவேற்பு பெற்றிருந்தன. "The Sacred Ashes Society" என்ற அமைப்பு உருவாகி, கண்டித்துப் பேச ஏஜண்டுகளை உருவாக்கியது. கிறித்தவ சமயத்தைக் Missionaries' கண்டித்துப் பலதுண்டுப் பிரசுரங்கள் வெளிவந்தன. அவற்றில் பல கிடைக்கவில்லை. கிடைத்த சிலவற்றின் விவரங்கள் வருமாறு:

1) கிறிஸ்து கண்டனம்; சி. சபாபதி முதலியார்; பக்கம் 18

2) கிறிஸ்து மத அஸ்திவாரப் பழுது

3) கிறிஸ்து மதவேதவிகல்பம்;

4) பொன்னம்பலம் முதலியார்

4) கிறிஸ்து மத திமிர பானு; கதிர்வேலு கவிராயர்

5) கிறிஸ்து மத சம்வாதம்

6) கிறிஸ்துமத கண்டன கலம்பகம்

7) பாதிரி ஞான கும்மி

8) கிறிஸ்து மத திரஸ்காரம்; அப்பாவு முதலியார்

9) கிறிஸ்துமத நிராகரணம்

10) கிறிஸ்துமத கண்டன அந்தாதி

11) கிறிஸ்துமத கண்டன சதகம்

12) கிறிஸ்துமத கண்டன மாலை

13) கிறிஸ்து மத கண்டன குடார வாக்கியம்

14) சைவ தூஷண பரிகாரம்; சைவப் பிரகாச சமாசியார்; பக்கம் 94.

கவிதை

